தேசிய அளவில் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும்
'அகோரன்' நூலாசிரியரிடம் இருந்து மற்றுமொரு வெற்றிப் படைப்பு

விகாரவன்

நயவஞ்சகமாக வீழ்த்தப்பட்ட துரியோதனனின் காவியம்

முதல் பாகம் - உருண்டன பகடைகள்

ஆனந்த் நீலகண்டன்

தமிழில் : நாகலட்சுமி சண்முகம்

Tamil translation of the National Bestseller - Anand Neelakantan's AJAYA - Book I

கௌரவன்

கௌரவன்

நயவஞ்சகமாக வீழ்த்தப்பட்ட துரியோதனனின் காவியம்

ஆனந்த் நீலகண்டன்

தமிழில்:
நாகலட்சுமி சண்முகம்

மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

First published in India by

Manjul Publishing House Pvt. Ltd.
• 2nd Floor, Usha Preet Complex,
42 Malviya Nagar, Bhopal 462 003 - India
• 7/32, Ground Floor, Ansari Road, Daryaganj, New Delhi 110 002
Email: manjulomanjulindia.com Website: www.manjulindia.com

Distribution Centres:
Ahmedabad, Bengaluru, Bhopal, Kolkata, Chennai,
Hyderabad, Mumbai, New Delhi, Pune, Thiruvananthapuram

Originally published in India in English by Platinum Press
an imprint of Leadstart Publishing Pvt Ltd

© Story: Anand Neelakantan, 2013
© Illustrations: Leadstart Publishing 2013

Tamil translation of
Ajaya - Epic of the Kaurava Clan - Book I

This edition first published in 2014

Copyright © Anand Neelakantan 2013

ISBN 978-81-8322-485-7

Translation by Nagalakshmi Shanmugam
Editing and Layout by PSV Kumarasamy

All rights reserved. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted, in any form, or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise) without the prior written permission of the publisher. Any person who does any unauthorized act in relation to this publication may be liable to criminal prosecution and civil claims for damages.

என் மனைவி அபர்ணாவுக்கும்
எங்கள் குழந்தைகள்
அனன்யா மற்றும் அபினவுக்கும்

ஆனந்த் நீலகண்டன்

நூலாசிரியர்

கேரள மாநிலத்திலுள்ள கொச்சி நகரின் புறநகர்ப் பகுதியில் அமைந்த திருப்பூணித்துறை எனும் பழமையான சிறிய கிராமத்தில் நான் பிறந்தேன். எர்ணாகுளத்திற்குக் கிழக்கே வேம்பனாடு ஏரிக்குக் குறுக்காக அமைந்த இக்கிராமம், கொச்சி ராஜ வம்சம் கோலோச்சிய இடம் என்ற தனித்துவமான சிறப்பைப் பெற்றுள்ளது. ஆனாலும், இக்கிராமம் தனது நூற்றுக்கணக்கான கோவில்களாலும், இங்கு பிறந்த பல்வேறு கலைஞர்களாலும், தனது இசைப் பள்ளியாலும் பெருமை பெற்றுள்ளது. அக்கோவில்களிலிருந்து வந்த மிக மெல்லிய செண்டை ஒலியையும், இசைப் பள்ளியின் கரடுமுரடான சுவர்களைக் கடந்து காற்றில் மிதந்து வந்த புல்லாங்குழலின் இனிய இசையையும் கேட்டபடியே பல மாலைப்பொழுதுகளை நான் செலவிட்டது என் நினைவில் உள்ளது. வளைகுடாப் பணமும், மிக வேகமாக விரிவடைந்து கொண்டிருக்கும் கொச்சி நகரமும், அந்தப் பழங்கால வசீகரத்தின் எச்சசொச்சங்களை முற்றிலுமாகத் துடைத்தெறிந்துள்ளன. இந்தியா நெடுகிலும் இருப்பதைப்போலவே, இந்தக் கிராமமும், குறிப்பிடத்தக்க அம்சம் ஏதுமற்ற ஒரு வழக்கமான புறநகர் நரகக் குழியாக மாறியுள்ளது.

தேவைக்கு அதிகமாகவே கோவில்கள் இருந்த ஒரு கிராமத்தில் நான் வளர்ந்து வந்ததால், இந்தியப் புராணங்களும் இதிகாசங்களும் எனக்கு பிரமிப்பூட்டியதில் வியப்பேதும் இல்லை. இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், இந்தியக் காவியங்களின் எதிர்நாயகர்கள்தான் என்னைப் பெரிதும் கவர்ந்தனர். அவர்களுடைய மாயாஜால உலகைப் பற்றி நான் வியந்தேன். அவர்கள் குறித்து நான் கொண்டிருந்த ஈர்ப்பு, பல வருடங்களாக என்னுள் தொடர்ந்து உறங்கிக் கிடந்து வந்துள்ளது. எங்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுகூடும் நேரங்களில் மட்டும், சமயப் பற்றுக் கொண்ட என் அத்தைமார்கள் மற்றும் சித்திமார்களுக்கு எரிச்சலும் கோபமும் ஏற்படுத்தும் விதத்தில் அது அவ்வப்போது தலைதூக்கும். வாழ்க்கை தன் போக்கில் சென்று கொண்டிருந்தது. நான் ஒரு பொறியியல் வல்லுனராக ஆனேன்; பிறகு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் வேலைக்குச் சேர்ந்தேன்;

பெங்களூருக்குக் குடிபெயர்ந்தேன்; அபர்ணா என்ற அன்பான பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன்; என் மகள் அனன்யாவுக்கும் என் மகன் அபினவுக்கும் தந்தையானேன். ஆனால் இக்கதைகளில் வந்த எதிர்நாயகர்கள் என்னைத் தனியாக விடுவதாக இல்லை. அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் வஞ்சகமாக வீழ்த்தப்பட்டவர்களின் கதைகளை எடுத்துரைக்க வேண்டும் என்ற தணியாத தாகம் என்னைத் தூங்கவிடவில்லை. நாம் நம்முடைய இதிகாசங்கள் குறித்து அறிவுப்பூர்வமாகக் கேள்வி கேட்காமல் அவற்றை மௌனமாக ஏற்றுக் கொண்ட மனப்போக்கின் காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ராவணன், துரியோதனன் போன்ற உண்மையான கதாநாயகர்களை உயிர்த்தெழ வைத்து, அவர்கள் என் வழியாகத் தங்கள் கதைகளை எடுத்துரைக்க நான் அனுமதித்தேன்.

இது என்னுடைய இரண்டாவது புத்தகம். ராவணனின் வீரகாவியத்தை 'அசுரன்' என்ற என்னுடைய முதல் புத்தகத்தில் நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

என் புத்தகங்கள் குறித்த உங்களுடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள நான் மிகவும் ஆவலாக உள்ளேன். பின்வரும் மின்னஞ்சல் முகவரியில் நீங்கள் என்னைத் தொடர்பு கொள்ளலாம்: mail@asura.co.in

நாகலட்சுமி சண்முகம்

மொழிபெயர்ப்பாளர்

நாகலட்சுமி மிகச் சிறந்த ஊக்குவிப்புப் பேச்சாளர். மக்களிடம் பரிபூரண மாற்றம் கொண்டுவரும் கருத்தரங்குகளை இவர் நடத்தி வருகிறார். அவர் முழுநேரப் பேச்சாளராக ஆவதற்கு முன்பு, பத்து வருடங்கள் கணினித் துறையில் தலைமைப் பொறுப்பு உட்படப் பல பதவிகளை வகித்தார்.

தமிழ் நாடகத் துறையின் முன்னோடி மேதைகளான டி.கே.எஸ் சகோதரர்களில் ஒருவரான திரு.முத்துசாமி அவர்களின் பேத்தியான நாகலட்சுமியிடம் இருக்கும் இயல்பான தமிழ் ஆர்வம், தமிழ் மொழிபெயர்ப்புத் துறைக்கு அவரை இழுத்து வந்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் முப்பத்தைந்து புத்தகங்களை அவர் மொழிபெயர்த்துள்ளார். அவருடைய மொழிபெயர்ப்பு நூல்களில் ரோன்டா பைர்ன், டாக்டர் ஜோசப் மர்ஃபி, ஜான் மேக்ஸ்வெல், டாக்டர் ஸ்பென்சர் ஜான்சன், நார்மன் வின்சென்ட் பீல், ஜான் கிரே, கேரி சேப்மேன், ஜாக் கேன்ஃபீல்டு, மார்க் விக்டர் ஹான்சன், பிரையன் டிரேசி, ஸ்டீபன் ஆர். கவி, ராபர்ட் கியோஸாகி, டேல் கார்னகி போன்ற சர்வதேச அளவில் கொண்டாடப்படுகின்ற தலைசிறந்த நூலாசிரியர்களின் நூல்களும் அடங்கும்.

நாகலட்சுமி தன் கணவருடனும் தன் குழந்தைகள் இருவருடனும் தற்போது மும்பையில் வசித்து வருகிறார்.

நன்றியுரை

என் முதல் நன்றி என் வாசகர்களாகிய உங்களுக்குத்தான். ‘அசுரன்’ என்ற என் முதல் புதினத்திற்கு நீங்கள் கொடுத்த ஆதரவும் ஊக்குவிக்கும் விமர்சனமும் இல்லாமல், ஒரே வருடத்திற்குள், நம்முடைய இதிகாசங்களின் மற்றொரு மாபெரும் ‘எதிர்நாயகனைப்’ பற்றி எழுதுவதற்கு என்னால் கடுமையாக உழைத்திருக்க முடியாது. என்னுடைய முதல் புத்தகம் குறித்தத் தங்கள் கருத்துக்களை எனக்கு எழுத்து மூலம் தெரிவித்த என் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றி.

‘அசுரன்,’ ‘கௌரவன்’ ஆகிய இரண்டு நூல்களுக்கும் என் நண்பராகவும் வழிகாட்டியாகவும் இருந்ததற்காக ஸ்வரூப் நந்தாவிற்கு என் நன்றி.

என் படைப்புத் திறனை வெளிப்படுத்துவதற்குப் போதிய அளவு சுதந்திரத்தைக் கொடுத்து, நான் சிறப்பாக எழுதுவதற்கு என்னை வழிநடத்தியதோடு மட்டுமன்றி, என் கையெழுத்துப் பிரதிகளைப் பொறுமையாகப் படித்துத் திருத்தம் செய்து கொடுத்த என் பதிப்பாசிரியர் சந்திரலேகா மைத்ராவிற்கு என் நன்றி.

‘கௌரவன்’ என்ற என்னுடைய இரண்டாவது நூலையும் பிரசுரித்து என்மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியதற்காக என் பதிப்பகமான லீட்ஸ்டார்ட் பப்ளிஷிங் நிறுவனத்திற்கு என் நன்றி. அர்ப்பணிப்புடன்கூடிய தங்கள் உழைப்பின் மூலம் என்னுடைய முதல் புத்தகத்தை வெற்றி பெறச் செய்து, அதே உற்சாகத்தை என்னுடைய இந்த இரண்டாவது புத்தகத்திற்கும் காட்டிய பிற குழு உறுப்பினர்களான பிரீத்தி, இஃப்திகார், ராஜேஷ், ராமு, சலீம், மற்றும் பலருக்கும் என் நன்றி.

தொன்மவியல் உலகிற்கு என்னை அறிமுகப்படுத்தியதற்காக, என் தாயார் திருமதி. செல்லம்மா அவர்களுக்கும், காலம் சென்ற என் தந்தை திரு. நீலகண்டன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளில் காட்டிய தொடர்ச்சியான ஆதரவுக்காகவும் அளப்பரிய அன்பிற்காகவும் என் மனைவி அபர்ணாவுக்கு என் நன்றி. அபர்ணா, உன் அன்பிற்கு நான் தகுதியானவன்தானா என்று அடிக்கடி

நீ என்னை வியக்க வைக்கிறாய்.

ஒவ்வோர் இரவும் மேலும் மேலும் அதிகமான கதைகளைக் கேட்டு, எனக்குள் இருக்கும் கதை கூறுபவனை உயிர்த்துடிப்போடு வைத்திருப்பதற்காகவும், எந்தவொரு நூலாசிரியரும் பயப்படுகின்ற விமர்சகர்களாக இருப்பதற்காகவும் என் மகள் அனன்யாவுக்கும் என் மகன் அபினவுக்கும் என் நன்றி.

என் சகோதரி சந்திரிகா, அவருடைய கணவர் பரமேஸ்வரன், என் சகோதரர் லோகநாதன், அவருடைய மனைவி மீனா, என் மற்றொரு சகோதரர் ராஜேந்திரன், அவருடைய மனைவி ராதிகா ஆகியோருக்கு என் நன்றி. என் சகோதர சகோதரிகளின் குழந்தைகளான திலீப், ராகி, தீபா ஆகியோருக்கும், என் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் நாம் செலவிட்ட அற்புதமான அந்த நாட்களுக்காக என் நன்றி.

சோம்பல் முறிப்பதற்காக நான் எப்போதாவது என் கணினியின் விசைப்பலகையிலிருந்து என் கைகளை லேசாக நகர்த்தினால்கூட, உடனே சத்தமாகக் குரைத்து, என் சோம்பேறித்தனத்திற்குத் தண்டனையாகத் தன்னை வெளியே காலார நடத்திச் செல்வதற்கு என்னைக் கட்டாயப்படுத்துகின்ற என் செல்லப் பிராணியான ஜாக்கிக்கு என் நன்றி.

பலப்பல வருடங்களுக்கு முன்பு, பல மாலை வேளைகளில், இந்தியத் தத்துவத்தையும் மகாபாரதத்தையும் பற்றி அனைவருமாகச் சேர்ந்து கலந்து பேசி விவாதித்தற்காக சந்தோஷ் பிரபு, சுஜித் கிருஷ்ணன், ராஜேஷ் ராஜன் ஆகியோருக்கு என் நன்றி. அந்த விவாதங்கள்தான் என்னுடைய இந்தப் புதினத்திற்கான விதையை என்னுள் விதைத்தன. என் படைப்புதிறனைத் தூண்டியுள்ள பல அஞ்சல்களை எனக்கு அனுப்பியதற்காக ராஜீவ் பிரகாஷுக்கும் ஷெவ்லின் செபாஸ்டியனுக்கும் என் நன்றி. பல புதுமையான யோசனைகளை எனக்குக் கொடுத்ததற்காகப் பிரேம்ஜீத்துக்கு என் நன்றி. தன் உள்நோக்குகளை எனக்குக் கொடுத்து உதவிய ஜிஎம்பி நாயக் அவர்களுக்கு என் நன்றி. எனக்கு மாபெரும் ஆதரவு காட்டியதற்காக எஸ்.ஆர். பிரசாந்த் குமார் அவர்களுக்கு என் நன்றி.

வெவேறு கருத்துக் கண்ணோட்டங்களைச் சகித்துக் கொள்வதற்காகவும், நம் வரலாறு மற்றும் தொன்மவியலின் செழுமைக்காகவும் என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் என் நன்றி.

என் சொந்த ஊரான திருப்பூணித்துறையின் செழிப்பான பாரம்பரியங்களுக்கும் கொச்சியின் வரலாற்றுக்கும் என் நன்றி.

மாபெரும் எழுத்தாளரான வியாசருக்கு என் நன்றி.

நான் உங்கள் அனைவருக்கும் மிகவும் கடன்பட்டுள்ளேன்.

தவறுதலாக நான் இங்கு பெயர் குறிப்பிடாமல் விட்டுவிட்டிருக்கக்கூடிய இன்னும் பலருக்கும் நான் கடன்பட்டுள்ளேன்.

உள்ளே...

துரியோதனன் எப்படி என் கதாநாயகன் ஆனான்

இக்கதையில் வலம் வரும் முக்கியக் கதாபாத்திரங்கள்

நுழையுமுன்

1 குட்டி இளவரசன்

2 ஆசானின் வருகை

3 காட்டின் குழந்தை

4 தேரோட்டியின் புதல்வன்

5 மரபுகளை மதிக்காத பிராமணன்

6 ஓர் அலியின் சவால்

7 படிப்பினை

8 பலராமன்

9 காட்டுவிலங்கு

10 நாகர்கள்

11 நிழலின் மடியில்

12 விசாரணை

13 தர்மவீரன்

14 குருதட்சணை

15 தர்மன்

16 கர்ணனின் மறுபிரவேசம்

17 தேடப்பட்டவன்

18 பட்டமளிப்பு விழா

19 ஒரு பிராமணனின் பழிவாங்கல்
20 அரக்கு மாளிகை
21 சுயம்வரம்
22 திருமணம்
23 நாகரீகத்தின் பிரவேசம்
24 சபிக்கப்பட்ட நகரம்
25 ராஜசூய யாகம்
26 வீழ்ச்சி
27 உருண்டன பகடைகள்

துரியோதனன் எப்படி என் கதாநாயகன் ஆனான்

ஆனந்த் நீலகண்டன்

பல வருடங்களுக்கு முன்பு, ஒரு விந்தையைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என் வாசகர்களில் பலர் அந்த விந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்கள். அன்று ஒரு மாபெரும் கொண்டாட்டம் அரங்கேறிக் கொண்டிருந்தது. சுள்ளென்று சுட்டெரித்துக் கொண்டிருந்த பகலவனால்கூட அங்கு நிலவிய உற்சாகத்தை எள்ளளவும் குறைக்க முடியவில்லை. அந்த ஊர்வலத்தைக் காண்பதற்கும் அங்கிருந்த கோவிலில் வீற்றிருந்த தெய்வத்தை வழிபடுவதற்கும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அங்கு கூடியிருந்தனர். இந்த பக்தர்கள் பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களிடமிருந்து வெளிப்பட்ட உற்சாகக் களிப்பு, காண்போரின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொள்வதாக இருந்தது. ஆனால் இதில் ஓர் வினோதமான விஷயம் என்னவென்றால், இந்த பிரம்மாண்டமான திருவிழா, வெகுசிலர் மட்டுமே பார்த்து பிரமிக்கின்ற ஒரு நபராக நான் எப்போதும் நம்பி வந்திருந்த ஒருவனுக்கு மரியாதை செலுத்துவதற்காக நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. கேரள மாநிலத்திலுள்ள பொருவழி கிராமத்தில் அமைந்திருக்கும் மலைநடைக் கோவிலில் அமைந்துள்ள இச்சிலை, இந்தியாவின் மாபெரும் இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தில் மிக அதிகமாகத் தூற்றப்பட்டு வந்துள்ள துரியோதனனின் சிலைதான். துரியோதனுக்காகக் கொண்டாடப்படும் இந்தத் திருவிழா, மகாபாரதக் காலகட்டத்திலிருந்தே ஒரு மரபாக இருந்து வந்துள்ளதாக இக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூறுகின்றனர்.

மிகவும் சுவாரசியமான ஒரு கதை இக்கோவிலுடன் பின்னிப் பிணைந்துள்ளது: நாடுகடத்தப்பட்டிருந்த பாண்டவர்களைத் தேடி

துரியோதனன் இக்கிராமத்திற்கு வந்தான். தாகத்தால் தொண்டை வறண்டு போயிருந்த அவன், ஒரு மூதாட்டியிடம் தண்ணீர் கேட்டான். அப்பெண்மணியும் சிறிதுகூட யோசிக்காமல் தன்னிடமிருந்த கள்ளை அவனுக்குக் கொடுத்தாள். துரியோதனன் அதை மிகவும் ருசித்துப் பருகினான். ஆனால் அவன் ஒரு சத்திரிய வீரன் என்பதை அந்த மூதாட்டி அப்போதுதான் கவனித்தாள். தன்னைப் போன்ற தீண்டத்தகாத ஒரு குறத்திப் பெண்ணிடமிருந்து கள்ளை வாங்கிப் பருகிய காரணத்தால் துரியோதனன் தன் சாதியை இழக்கக்கூடும் என்பதை அவள் உணர்ந்தாள். தான் செய்திருந்த காரியத்தை நினைத்துப் பெரிதும் பயந்து போன அப்பெண்மணி, இந்த உண்மையை அந்தச் சத்திரிய இளவரசனிடம் தான் கூறினால் நிச்சயமாக அவன் தன்னைக் கொன்றுவிடுவான் என்று உறுதியாக நம்பினாள். ஆனாலும், தன்னை நம்பிய ஒருவனை ஏமாற்ற விருப்பமின்றி, தன் உயிரைப் பணயம் வைத்து, தன்னுடைய 'குற்றத்தை' அவனிடம் அவள் ஒளிவுமறைவின்றிக் கூறினாள். பிறகு தன் தண்டனைக்காக அவள் காத்திருந்தாள். ஆனால், துரியோதனனோ, "தாயே, பசிக்கும் தாகத்திற்கும் சாதி எதுவும் கிடையாது. உன் உயிருக்கு இருந்த ஆபத்தை அலட்சியப்படுத்திவிட்டு, தாகத்தால் தவித்த ஒருவனுடைய நலனுக்கு முன்னுரிமை கொடுத்த நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்," என்று கூறி அவளைப் பெரும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினான்.

தங்களைத் தண்டிப்பதற்கும் புழுக்களைப்போலக் கருதிக் கீழ்த்தரமாக நடத்துவதற்கும் மட்டுமே வந்த, அகந்தையும் தலைக்கனமும் பிடித்த உயர்ச்சாதியினரிடமிருந்து மிகவும் வேறுபட்டிருந்த இந்த உயர்குலத்தோனைக் காண்பதற்குப் பொருவழி கிராம மக்கள் விரைந்து வந்தனர். வழிபாட்டுச் சிலை எதுவும் இல்லாத ஒரு கோவிலைக் கட்டியெழுப்புவதற்குச் சுற்றுவட்டாரத்திலிருந்த கிராமங்களைத் தான் பரிசளிப்பதாக அஸ்தினாபுர இளவரசனான துரியோதனன் அம்மக்களிடம் அறிவித்தான். தீண்டத்தகாத, குறவர் இனத்தைச் சேர்ந்த ஒருவர்தான் அக்கோவிலின் அர்ச்சகராக இருக்க வேண்டும் என்றும் அவன் கூறினான். இன்றுவரை, அந்தக் குறத்திப் பெண்ணின் தலைமுறையினர்தான் இக்கோவிலில் அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனர். இங்கு எந்தவிதமான தெய்வச் சிலைகளும் இல்லை. மாறாக, துரியோதனின் சிலைதான் இங்கு கொலுவீற்றிருக்கிறது. உடனிருக்கும் பிற சிறிய சிலைகள், அவனுடைய மனைவி பானுமதி, அவனுடைய தாயார் காந்தாரி, அவனுடைய நண்பன் கர்ணன் ஆகியோருடையவை. ஏழைகளையும் பலவீனமானவர்களையும் காப்பாற்றுவதற்காக துரியோதனின் ஆவி

இங்கு குடியிருப்பதாக மக்கள் நம்புகின்றனர். ஆதரவற்றவர்கள், நோய் மற்றும் ஏழ்மையால் துன்புறுபவர்கள், தங்களைவிட வலிமையானவர்களின் பிடியில் சிக்கி அல்லலுறுபவர்கள் ஆகியோரின் வேண்டுதல்களை அவன் நிறைவேற்றி வைப்பதாக மக்கள் நம்புகின்றனர். பலவீனமானவர்களையும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களையும் காக்கும் காவல் நாயகனாக அவன் அங்கு கம்பீரமாக வீற்றிருக்கிறான்.

இக்கதையை நான் முதன்முதலில் கேள்விப்பட்டபோது, அதை என்னால் நம்ப முடியவில்லை. நாட்டின் வடமூலையில் அமைந்த அஸ்தினாபுரத்திலிருந்த ஓர் இளவரசன், 3,000 கிலோமீட்டருக்கும் அதிகமாகப் பயணித்து, நாட்டின் தென்முனையில் அமைந்துள்ள ஒரு கிராமத்திற்கு ஏன் வர வேண்டும்? அதுவும் ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு? அக்கேள்விக்கு எனக்குக் கிடைத்த விடை என் முகத்தில் அறைந்தாற்போல இருந்தது. 32 வயதுவரை மட்டுமே வாழ்ந்த ஆதிசங்கரர், தன்னுடைய குறைந்த வாழ்நாளில், கேரளத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து கேதார்நாத்திற்கோ அல்லது பத்ரிநாத்திற்கோ ஏன் பல முறை பயணித்திருந்தார் என்று அக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் கேட்டார். இதையடுத்து, பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற எழுத்தாளர்களுக்கு உத்வேகம் கொடுத்து வந்துள்ள மகாபாரத இதிகாசத்தை மீண்டும் புரட்டிப் பார்ப்பதற்காக நான் என் வீட்டிற்கு விரைந்தேன். பொருவழி கிராம மக்களின் கண்ணோட்டத்தில் கௌரவ இளவரசனான துரியாதனனை நான் பார்க்கத் துவங்கியதும், அவனைப் பற்றிய ஒரு வித்தியாசமான காட்சி என் மனத்தில் உருவாகத் துவங்கியது. பிரபலமான தொலைக்காட்சித் தொடர்கள், வழிவழியாக மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள கதை வடிவங்கள் ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டுள்ளதுபோல, சதி செய்கின்ற, காட்டுக்கூச்சல் போடுகின்ற, ஆணவச் செருக்குக் கொண்ட ஒரு கொடியவனின் முகம் என் மனத்தில் தோன்றவில்லை. மாறாக, துணிச்சல் கொண்ட, தன் நிலையில் உறுதியாக இருந்த, தன்னுடைய நம்பிக்கைகளுக்கு ஆதரவாகப் போராடத் தயங்காத, முற்றிலும் நேர்மையான ஓர் இளவரசனின் உருவம்தான் என் மனக்கண்முன் தோன்றியது. பாண்டவச் சகோதரர்கள் தெய்வீகமானவர்கள் என்பதில் துரியோதனனுக்கு ஒருபோதும் நம்பிக்கை இருந்ததில்லை. நவீன மக்களைப் பொறுத்தவரை, பாண்டவர்களின் தெய்வீகம் குறித்த மிதமிஞ்சிய முழக்கம், எளிதில் ஏமாறக்கூடிய மக்களை முட்டாளாக்குவதற்குச் செய்யப்படும் தற்கால அரசியல் பிரச்சாரங்களைப்போலத் தோன்றக்கூடும்.

கர்ணன் தன் குலத்தின் காரணமாக எல்லோர் முன்னிலையிலும் அவமானப்பட்டு நிற்கும் நேரத்தில், துரியோதனன் அவனை அங்க நாட்டிற்கு அரசனாக முடிசூட்டும்போது, துரியோதனின் ஆளுமை உயிர்த்தெழுகிறது. தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த ஒருவனை ஓர் அரசனாக ஆக்குவதன் மூலம் கௌரவ இளவரசன் பழமையியத்திற்குச் சவால் எழுப்புகிறான். அதுவும், எந்தவிதமான தன்னல நோக்கங்களும் இல்லாமல் அவன் அவ்வாறு செய்கிறான். ஏகலைவனைத் துரியோதனன் நடத்திய விதம், பாண்டவர்களை அவன் துணிவோடு எதிர்த்து நின்றது, சுபத்திரைக்காகப் போராட மறுத்தது, தன் நண்பர்கள்மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருந்தது போன்ற அனைத்துமாகச் சேர்ந்து, ஒரு வெறுக்கத்தக்க எதிர்நாயகன் என்பதைவிட, ஒரு தலைசிறந்த கதாநாயகனாக அவனை ஆக்குகின்றன. திரௌபதியைத் தான் நடத்திய விதத்தை அவன் ஒருபோதும் நியாயப்படுத்த முயற்சிக்கவில்லை. தங்களுடைய செயல்களை நியாயப்படுத்துவதற்காக, தர்மம், அதிசயம், தெய்வீகம் ஆகியவற்றால் தங்களை முக்காடிட்டுக் கொள்கின்ற பிற கதாநாயகர்களிடம் இருந்து துரியோதன் வேறுபட்டு நிற்கிறான். அவனுடைய குறைகள்தான் அவனை ஒரு சாதாரண மனிதனாகவும் நம்பத்தக்கவனாகவும் ஆக்குகின்றன. பாண்டவர்கள் மற்றும் கிருஷ்ணனின் நடவடிக்கைகளைப் புகழ்ந்து பல படைப்புகள் எழுதப்பட்டுள்ளன. கர்ணனைப் பற்றியும் திரௌபதியைப் பற்றியும் மாபெரும் நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. பீமன், அர்ச்சுனன், குந்தி ஆகியோரைப் பற்றி இந்திய மொழிகளில் பல இலக்கியப் படைப்புகள் உலா வருகின்றன. துரியோதனின் கடைசிக் கணங்களைப் பற்றி எடுத்துரைக்கின்ற, செம்மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதத்தில் 'ஒருபங்கா' என்ற நாடகத்தை எழுதிய பாசாவையும், 'கதாயுதா' என்ற மாபெரும் கவிதைப் படைப்பை நல்கிய, வரலாற்றின் இடைக்காலத்தில் வாழ்ந்த, ரன்னா என்ற கன்னடக் கவிஞரையும் தவிர, அஸ்தினாபுர இளவரசனின்மீது வேறு எந்தவொரு நூலாசிரியரோ அல்லது கவிஞரோ எந்தவிதமான பரிவும் காட்டவில்லை.

மகாபாரதப் போரில் தோற்றுப் போனவர்களின் கண்ணோட்டத்திலிருந்து அந்த இதிகாசத்தைப் பார்ப்பதற்கான ஒரு முயற்சிதான் இந்நூல். துரியோதனன் என்ற வார்த்தைக்கு, 'வெல்லப்பட முடியாதவன்' என்ற ஒரு பொருளும் உண்டு. துரியோதனின் கதையில், கர்ணன், அசுவத்தாமன், ஏகலைவன், பீஷ்மர், துரோணர், சகுனி, மற்றும் பலருடைய கதைகளும் அடங்கியுள்ளன. தங்களுடைய நோக்கத்தில் இருந்த நியாயத்தின்மீது மட்டுமே நம்பிக்கைக் கொண்டு, தெய்வீகக்

குறுக்கீடு எதையும் எதிர்பாராமல் சண்டையிட்ட ‘எதிர்நாயகர்களின்’ கதை இது. தோற்கடிக்கப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, மிதித்து நசுக்கப்பட்டவர்களின் கதை இது. வெயில் கொளுத்திய அந்த மதிய நேரத்தில், பொருவழி கிராமத்தின் பசுமையான நெல் வயல்களின் ஊடாக துரியோதனனின் ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது, “துரியோதனன் ஒரு தீயவன் என்றால், பீஷ்மர், துரோணர், கிருபர் போன்றோரும், கிருஷ்ணனின் ஒட்டுமொத்தப் படையும் போரில் ஏன் அவனுக்கு ஆதரவாகச் சண்டையிட்டனர்?” என்ற தன் எளிய கேள்வியின் மூலம் என்னைத் திணறடித்த அந்தக் கிராமத்து மனிதனுக்கு, ‘கௌரவன்,’ நான் காலம் தாழ்த்திக் கொடுத்த பதிலாக இருக்கலாம்.

இக்கதையில் வலம் வரும் முக்கியக் கதாபாத்திரங்கள்

குரு வம்சம்: அஸ்தினாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வரும் ஒரு பேரரசு. விந்திய மலைக்கு வடக்கே இருக்கும் பெரும்பாலான சிற்றரசுகள் இதற்குக் கப்பம் கட்டிக் கொண்டு, இதன் அடிமை ராஜ்யங்களாக இருக்கின்றன.

பீஷ்மர்: கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களின் தாத்தா. அவருடைய இயற்பெயர் கங்காதத்தன் தேவவிரதன். கங்கை அவருடைய தாயார், சாந்தனு அவருடைய தந்தை. கங்கை இறந்ததும், மீனவப் பெண்ணான சத்தியவதியை சாந்தனு மணமுடிக்க விரும்புகிறார். ஆனால் தன் குழந்தைகளே அரசாள வேண்டும் என்ற நிபந்தனையை அவள் விதிக்கிறாள். தந்தையின் ஆசைக்குக் குறுக்கே நிற்க விரும்பாத பீஷ்மர், திருமணம் செய்து கொள்ளாமல் தன் வாழ்நாள் முழுதும் ஒரு பிரம்மச்சாரியாக வாழ்வதென்று சபதம் பூணுகிறார். தன் தம்பி விசித்திரவீரியனின் மகனான திருதராஷ்டிரன் குரு வம்சத்தின் மன்னனாக ஆனவுடன், பார்வையற்ற அவனுக்கு உதவி செய்யும் பொருட்டு ஆட்சிப் பொறுப்பாளராக அவர் பதவியேற்கிறார்.

திருதராஷ்டிரன்: பீஷ்மரின் தம்பி விசித்திரவீரியன் குழந்தைப்பேறு இல்லாமல் இறந்துவிடுவதால், ராஜவம்சம் வாரிசு இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காக விசித்திரவீரியனின் மனைவி அம்பிகா, வியாசர் மூலம் பெற்றுக் கொள்கின்ற குழந்தைதான் திருதராஷ்டிரன். அவன் பிறவியிலேயே பார்வையில்லாமல் இருப்பதால், அவனுடைய தம்பியான பாண்டுவிற்கு அரச பதவி கிடைக்கிறது. பாண்டு இளவயதிலேயே மரணமடைவதால், திருதராஷ்டிரன் அரசனாகி, பீஷ்மரின் உதவியுடன் ஆட்சி புரிகிறான்.

காந்தாரி: காந்தாரத்தின் இளவரசி. பீஷ்மர் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வலுக்கட்டாயமாக அவளைக் கொண்டு வந்து தன் தம்பி மகனான திருதராஷ்டிரனுக்கு மணமுடித்து வைக்கிறார். தன் கணவன் பார்வையில்லாமல் இருப்பதால், தானும் தன் கண்களை எப்போதும் ஒரு துணியால் கட்டிக் கொண்டிருப்பதை அவள் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாள். பட்டத்து இளவரசன் துரியோதனனும் பிற கௌரவர்களும் அவளுடைய குழந்தைகள். சகுனி அவளுடைய தம்பி.

பாண்டு: திருதராஷ்டிரனின் தம்பி. பீஷ்மரின் தம்பி விசித்திரவீரியன் குழந்தைப்பேறு இல்லாமல் இறந்துவிடுவதால், ராஜவம்சம் வாரிசு இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காக விசித்திரவீரியனின் இரண்டாவது மனைவியான அம்பாலிகா, வியாசர் மூலம் பெற்றுக் கொள்ளும் குழந்தைதான் பாண்டு. அவனுடைய அண்ணன் திருதராஷ்டிரன் பிறவியிலேயே பார்வையில்லாமல் இருப்பதால், பாண்டு அரசனாகிறான். குந்தியும் மாதுரியும் அவனுடைய இரண்டு மனைவியர். பாண்டு ஆண்மையற்றவனாக இருப்பதால், அவனுடைய மனைவியர் இருவரும் அந்நியர்களுடன் கூடிப் புணர்ந்து ஐந்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். குந்திக்கு மூன்று குழந்தைகள், மாதுரிக்கு இரண்டு குழந்தைகள். பாண்டு உண்மையிலேயே அக்குழந்தைகளுக்குத் தகப்பனாக இல்லாமல் இருந்தும், அவர்கள் 'பாண்டுவின் புதல்வர்கள்,' அதாவது, பாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டனர். பாண்டு இறந்தவுடன் அவனுடைய இரண்டாம் மனைவியான மாதுரி உடன்கட்டை ஏறுகிறாள். குந்தி பாண்டவர்கள் ஐவரையும் வளர்க்கிறாள்.

குந்தி: பாண்டுவின் முதல் மனைவி. அவளுடைய புதல்வர்களான தர்மன், பீமன், அர்ச்சுனன் ஆகியோரைத் தவிர, முறை தவறிப் பிறந்த ஒரு குழந்தையும் அவளுக்கு உண்டு. அவள் தன் மூத்த மகனான தர்மனைக் குரு வம்சத்தின் அரியணையில் அமர்த்தியே தீர்வதென்று வெறியாக இருக்கிறாள். அதற்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு அவள் தயாராக இருக்கிறாள்.

மாதுரி: பாண்டுவின் இரண்டாவது மனைவி.

விதுரன்: திருதராஷ்டிரன் மற்றும் பாண்டுவின் சகோதரன். வியாசருக்கும் ஒரு வேலைக்காரிக்கும் பிறந்தவன். அவன் ஒரு பெரிய அறிவாளி. கண்ணியம் மிக்கவன். ஆனால் தாழ்ந்த சாதியைச்

சேர்ந்தவன். குரு நாட்டின் பிரதம மந்திரி அவன்.

பார்ஷவி: விதுரனின் மனைவி.

கௌரவர்கள்: திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் பிறந்தவர்கள். குரு வம்சத்தின் அதிகாரப்பூர்வமான வாரிசுகள். பட்டத்து இளவரசன் துரியோதனனும் அவனுடைய சகோதரர்களும் சட்டப்பூர்வமாகத் தங்களுக்குச் சொந்தமான அரசுரிமைக்காகப் போராடுவதில் உறுதியாக இருக்கின்றனர்.

துரியோதனன்: குரு வம்சத்தின் பட்டத்து இளவரசன். கௌரவர்களில் மூத்தவன். அவன் தன் பிறப்புரிமையான அரசுரிமைக்குப் போராடுவதையே இந்நூல் எடுத்துரைக்கிறது. ராமாயணத்தின் ராவணனுக்குப் பிறகு, இந்தியக் காவியங்களில், மிகவும் கொடியவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ள ஒரு கதாபாத்திரம் இவனாகத்தான் இருக்கும். ஆனால் இந்நூலில், அவ்வப்போது திமிர் பிடித்தவனாகவும் முரடனாகவும் அவன் காட்டப்பட்டிருந்தாலும், மொத்தத்தில் பெருந்தன்மைமிக்க, விசுவாசமுள்ள ஒருவனாகவே அவனை நாம் காண்கிறோம். அவன் நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்கிறான். பழமைவாதக் கோட்பாடுகளுக்கு ஆதரவாக வைக்கப்படும் வாதங்களையும், மதரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ள விஷயங்களையும் எதிர்க்கும் மனப்போக்கைக் கொண்டவன் அவன்.

பானுமதி: துரியோதனனின் மனைவி. பிரஜ்யோதிஷ நாட்டு மன்னன் பாகதத்தனின் புதல்வி.

துச்சாதனன்: துரியோதனனின் தம்பி.

துச்சலை: கௌரவர்களின் ஒரே சகோதரி.

பாண்டவர்கள்: பாண்டுவின் ஐந்து புதல்வர்கள்.

தர்மன்: குந்தியின் மூத்தப் புதல்வன். பட்டத்து இளவரசன் துரியோதனனைவிட ஒரு நாள் முன்னதாகப் பிறந்தவன் அவன். அதைக் காரணம் காட்டி, அரியணைக்குச் சொந்தம் கொண்டாடுபவன்.

பீமன்: குந்தியின் இரண்டாவது புதல்வன். துரியோதனனின் பரம எதிரி. உடல் வலிமைக்குப் பெயர் பெற்றவன் அவன். அவன் சாப்பாட்டு

ராமனும்கூட.

அர்ச்சுனன்: குந்தியின் கடைசிப் புதல்வன். அவன் மிகச் சிறந்த வில்லாளி. கௌரவர்களை வெல்வதற்கு தர்மன் அவனைத்தான் மலைபோல நம்புகிறான்.

நகுலன் & சகாதேவன்: மாதுரியின் இரட்டைக் குழந்தைகள்.

திரௌபதி: பாண்டவர்கள் ஐவரும் பங்கு போட்டுக் கொள்ளும் மனைவி. பாஞ்சால நாட்டு அரசன் துருபதனின் புதல்வி. திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் அவளுடைய சகோதரர்கள்.

வியாசர்: பெரிய கல்விமான். மீனவப் பெண்ணான சத்தியவதி, சாந்தனுவைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு பராசரனுடன் கொண்டிருந்த தகாத உறவின் மூலம் பிறந்தவர். திருதராஷ்டிரன், பாண்டு, மற்றும் விதுரனின் உண்மையான தந்தை. கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களின் தாத்தா.

பரசுராமன்: துரோணர், கிருபர், மற்றும் கர்ணனின் குரு. பீஷ்மரின் நண்பராக இருந்து எதிரியாக மாறியவன். தென்னக ராஜ்யங்கள் கூட்டமைப்பின் ராஜகுரு. வெறித்தனமான பிராமணன். அக்காலகட்டத்தில் இருந்தவர்களிலேயே மிகச் சிறந்த போர் வீரன். குரு அரசாட்சியைத் தோற்கடித்து பரதகண்டம் முழுமையையும் தன் அதிகாரத்தின்கீழ் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருப்பவன். பல வருடங்களுக்கு முன்பு பீஷ்மருடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைக்காகத் தன்னை நொந்து கொண்டு இருப்பவன். என்றேனும் ஒருநாள் அவருடன் ஒரு பெரிய யுத்தத்தைத் துவக்கச் சரியான தருணத்திற்காகக் காத்திருப்பவன்.

கிருபர்: மதரீதியான மரபுகளை மதிக்காமல் அவற்றை எள்ளி நகையாடும் மகா புத்திசாலியான ஒரு பிராமணர். சாதிப் பாகுபாடுகளில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவருடைய சகோதரியைத்தான் துரோணர் மணமுடித்திருக்கிறார். துரியோதனனின் பக்கம் நியாயம் இருப்பதாக கிருபர் நம்புகிறார். யாருக்கும் பயப்படாமல் வெளிப்படையாகப் பேசும் அவருடைய போக்கு அவரை ஓர் ஆணவக்காரராகச் சித்தரிக்கிறது. ஆனால் அவர் மென்மையான இதயம் கொண்டவர். அறிவை எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் அவர்.

துரோணர்: பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் குருநாதர். அர்ச்சுனனை உலகத்திலேயே தலைசிறந்த வில்லாளனாக ஆக்குவதற்கு எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பவர். அவருக்குத் தன் மகன் அசுவத்தாமன் மேல் அளவு கடந்த பாசம் இருந்தாலும், அர்ச்சுனன்மீது அதைவிட அதிகப் பாசம் கொண்டவர். கடைந்தெடுத்தப் பழமைவாதி. தன் பிராமண சாதிதான் உயர்ந்த சாதி என்றும், பிற சாதியினருக்கு அறிவைக் கற்றுக் கொடுக்கக்கூடாது என்றும் ஆணித்தரமாக நம்புபவர்.

கர்ணன்: கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒரு தேரோட்டியின் மகன். அவன் உன்னதமான ஒரு வீரனாக உருவாவதற்காகத் தென்னாட்டிற்குப் பயணம் செய்து, பரசுராமனிடமிருந்து ஆயுதக் கலையைக் கற்றுக் கொள்கிறான். அவன் பெருந்தன்மையானவன். கொடையாளி. மிகச் சிறந்த திறமைசாலி. அவன் தன் கீழ்ச்சாதிப் பிறப்பிற்காக இகழப்படும்போதும், திரௌபதியால் ஏளனம் செய்யப்படும்போதும், துரியோதனன் அவனுக்கு ஒரு தூண்போலப் பக்கத்துணையாக இருக்கிறான்.

அசுவத்தாமன்: துரோணரின் ஒரே புதல்வன். துரியோதனனின் ஆத்ம நண்பன். பழைய மரபுகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற மறுப்பவன். துரியோதனனின் பக்கம் நியாயம் இருப்பதாக நம்புகிறவன். அதனால் தன் தந்தைக்கு எதிராகக்கூடப் போராடத் துணிபவன்.

பலராமன்: யாதவர்களின் தலைவன். தன் மக்களுக்கு முன்னேற்றத்தையும் பெரும் வளத்தையும் கொண்டுவரக் கனவு காணும் லட்சியவாதி. எல்லா மக்களும் சமம் என்று நம்புபவன். வேளாண்மை மற்றும் வர்த்தகத்தில்தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் இருப்பதாகக் கருதுபவன். அடிப்படையில் அகிம்சாவாதியான அவன், பரதகண்டத்தின் மேற்குக் கரையோரம் தன் கனவு நகரத்தை நிர்மாணித்து அதில் தன் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியவன். தன் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் ஒருவனால் ஆட்சி செலுத்த முடியும் என்று நிரூபிக்கத் துடிப்பவன். கிருஷ்ணன் அவனுடைய தம்பி. சுபத்திரை அவனுடைய தங்கை. பலராமன் துரியோதனனின் குருவும் வழிகாட்டியும்கூட. சமுதாயரீதியாக மக்களை அடக்கி ஒடுக்கி வைக்க முனையும் சாதி அடுக்கதிகார அமைப்புமுறை விதிக்கும் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுமாறு கர்ணன் போன்றவர்களை ஊக்குவிப்பவன்.

கிருஷ்ணன்: யாதவ இளவரசன். பலராமனின் தம்பி. குந்தி அவனுடைய அத்தை. அவன் அர்ச்சுனனின் மைத்துனனும் வழிகாட்டியுமாக இருக்கிறான். நிகழவிருக்கும் மாபெரும் போரை, எல்லாத் தடுமாற்றங்களுக்குமான ஒரு தவிர்க்க முடியாத தீர்வாகவே அவன் கருதுகிறான். தான் தர்மம் என்று கருதும் ஒன்றைத் தூக்கி நிறுத்தவும் அவன் முனைகிறான். துரியோதனன், ஜராசந்தன், கர்ணன், ஏகலைவன், சார்வகன் போன்றோர் அவனுடைய முயற்சிகளுக்குப் பெரும் சவாலாக விளங்குகின்றனர்.

சுபத்திரை: பலராமன் மற்றும் கிருஷ்ணனின் சகோதரி. துரியோதனனின் முதல் காதலி. பின்னர் அவள் அர்ச்சுனனின் மனைவியாகிறாள்.

தட்சகன்: கலகக்கார நாகர்களின் தலைவன். சூத்திரர்களும் தீண்டத்தகாதவர்களும் ஆட்சியைப் பிடிக்கவும், உயர்ச்சாதியினர் அவர்களுடைய கொத்தடிமைகளாக ஆகவும் உதவக்கூடிய ஒரு புரட்சியை அவன் விரும்புகிறான்.

வாசுகி: மணிமகுடம் பறிக்கப்பட்ட நாகர்குல அரசன். அவனுக்கு அதிக வயதாகியுள்ளபோதிலும், தான் எப்படியாவது மீண்டும் அரசனாக வேண்டும் என்று தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பவன். தட்சகன் தன் மக்களைப் புதைகுழிக்குள் தள்ளிக் கொண்டிருப்பதாக உறுதியாக நம்புபவன்.

ஜயத்ரதன்: சிந்து நாட்டுச் சிற்றரசன். துரியோதனனின் ஆத்ம நண்பன். துச்சலையை மணப்பவன்.

ஜராசந்தன்: மகத நாட்டின் அரசன். அவனுடைய நாட்டில் திறமைதான் கோலோச்சுகிறது, சாதி அல்ல.

இரணியதனுசு: மகத நாட்டின் படைத்தளபதி. ஏகலைவனின் தந்தை. அவன் மிகத் தாழ்வான சாதியில் பிறந்திருந்தாலும், தன் திறமையால் படைத்தளபதி பதவியை அடைகிறான்.

மயாசுரன்: மிகச் சிறந்த கட்டடக்கலை நிபுணன். அசுர குலத்தைச் சேர்ந்தவன்.

இந்திரன்: ஒரு சமயம் பெரும் கீர்த்தியோடு இருந்த தேவ

சாம்ராஜ்யத்தின் கடைசி அரசன். அவன் பரம ஏழையாக ஒரு காட்டில் வசிக்கிறான். அர்ச்சுனனின் உண்மையான தந்தை அவன்.

தௌமியன்: தீவினைக்கு அஞ்சாத, பேராசைகள் கொண்ட ஒரு புரோகிதன். அஸ்தினாபுரத்தில் குரு வம்சத்தின் அரண்மனை அரசவையில் இருக்கும் அவன், பரசுராமனின் கண்ணாகவும் செவியாகவும் ரகசியமாகச் செயல்படுகிறான். பிராமணர்கள் சொல்வதைச் சட்டமாகக் கீழ்ப்படிந்து மற்றவர்கள் நடக்கும் ஒரு சமுதாயத்தை நிறுவ வேண்டும் என்பது அவனுடைய நோக்கம். குந்திக்கும் தர்மனுக்கும் முதன்மை ஆலோசனையாளன் அவன்.

புரோச்சனன்: ஓர் ஊழல் பெருச்சாளி. ஆனால் ஒரு திறமையான அதிகாரி. சகுனியுடன் சேர்ந்து சதியில் ஈடுபடுபவன் அவன்.

துர்ஜயன்: அஸ்தினாபுரத்தின் கொள்ளைக்கூட்டத் தலைவன். கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற மாபாதகங்களுக்கு அஞ்சாதவன். கலவரங்களைத் தூண்டிவிடுவதில் கைதேர்ந்தவன். சகுனியிடம் பணம் வாங்கிக் கொண்டு பல சதி வேலைகளில் ஈடுபடுபவன்.

ஏகலைவன்: கீழ்ச்சாதியான வேடுவ குலத்தைச் சேர்ந்தவன். ஒரு போர்வீரனாக ஆக வேண்டும் என்பதில் குறியாக இருப்பவன். தன் சாதியைச் சேர்ந்த மக்கள் சிறிதளவாவது கண்ணியத்தைப் பெறுவதற்காகத் தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பவன்.

ஜரன்: அவலட்சணமான ஒரு பிச்சைக்காரன். தூசும் புழுதியும் குப்பைக் கூளங்களும் அலங்கரிக்கும் பரதகண்டத்தின் தெருக்களில் தன் குருட்டு நாயான தர்மனுடன் வலம் வருபவன். படிப்பறிவற்றவன். தீண்டத்தகாதவன். ஒட்டுமொத்தச் சமுதாயமும் அவனை எட்டி உதைத்தாலும், அற்பப் புழுவாக நடத்தினாலும், வாழ்க்கை அவனுக்கு அளித்துள்ள ஆசீர்வாதங்களில் திளைப்பவன். வாழ்க்கையைக் கொண்டாடுபவன்.

சகுனி: காந்தாரியின் தம்பி. காந்தாரத்தின் இளவரசன். கௌரவர்களின் மாமா. தன் தந்தையையும் தன் சகோதரர்களையும் கொன்று, தன் நாட்டைச் சூறையாடி, தன் சகோதரியைக் கவர்ந்து சென்ற குரு வம்ச அரசையும் பிற பரதகண்ட அரசுகளையும் நிர்மூலமாக்குவதுதான் அவனுடைய ஒரே லட்சியம். பகடையாட்டத்தில் நிபுணன் அவன். அவனுடைய பகடைகள் அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டன.

நுழையுமுன்

காந்தாரம்

படைத்தளபதி அந்த அரண்மனைக்குள் நுழைந்தபோது பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. கொட்டிக் கொண்டிருந்த மழையின் மந்தமான தாளத்தைத் தவிர, அந்த அரண்மனை, வழக்கத்திற்கு மாறாக மிகவும் அமைதியாக இருந்தது. அத்தளபதி அங்கிருந்த மரப் படிக்கட்டுகளை எட்டியபோது, திடீரென்று நின்றார். அவர் மனம் முழுதும் பயத்தால் நிரம்பியிருந்தது. அவருடைய பாதங்களின் அருகே பல வினோதமான வடிவங்களில் செந்நிற நீர்க் குட்டைகள் உருவாயின. குவளை மலர்களின் வெண்மையைக் கொண்டிருந்த, அரண்மனையின் குளிர்ந்த பளிங்குத் தரைகளின்மீது, அச்செந்நிற நீர்க் குட்டைகள் பிரகாசமாகப் பளிச்சிட்டன. தன்னுடைய கவச உடையைச் சரி செய்து கொண்ட அத்தளபதி, தன் உடலைத் துளைத்துச் சென்ற வலியால் முகம் சுளித்தார். அவருடைய உடலில் ஏற்பட்டிருந்த ஏராளமான காயங்களிலிருந்து ரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தபோதிலும், அவர் அந்த வலியைப் பொருட்படுத்தாமல், தன் உயரமான, மிடுக்கான உருவத்தை நேராக வைத்துக் கொண்டார். தொலைவில் இருந்த பனி படர்ந்த மலைகளிலிருந்து வீசிய மிகக் குளிர்ந்த காற்று அவருடைய நீண்ட, கருமையான தாடியைக் கலைத்துச் சென்று, கூரிய கண்ணாடிச் சில்லுகளைப்போல அவருடைய உடலை ஊடுருவியது. கரடுமுரடான மலைப் பகுதிகளுக்கும் பனிபடர்ந்த கணவாய்களுக்கும் பழக்கப்பட்டிராத அவர், அந்தக் கடுங்குளிரில் உறைந்து போயிருந்தார். கிழக்கில் அமைந்த கங்கைச் சமவெளியைச் சேர்ந்தவர் அவர். அவர் தன் கையில் இறுகப் பற்றியிருந்த வாள், கடந்த ஒரு மணிநேரத்தில்

எண்ணற்ற வீரர்களைக் கொன்று குவித்திருந்தது.

அவரிடமிருந்து ஒருசில அடிகள் தள்ளி அவருடைய வீரர்கள் மரியாதையோடு நின்றனர். மழையின் சீற்றம் குறைந்து, இப்போது அது வெறுமனே லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. கூரையிலிருந்து சொட்டிய மழை நீர், ஓடைகளின் வழியாக ஓடிச் சென்று, மலைப்பகுதியை நோக்கி வேகமெடுத்து, தொலைவிலிருந்த புழுதியான சமவெளியின் ஊடாகப் பாய்ந்து, இறுதியில் கடலை நோக்கிச் சென்ற நீரோடு கலந்து கொண்டது. கூடவே, ஒருசில மணிநேரத்திற்கு முன்பு, காந்தாரம் எனும் மலை நகரைப் பாதுகாத்து நின்று கொண்டிருந்த, ஊர்பேர் தெரியாத எண்ணற்ற வீரர்களின் சதையையும் ரத்தத்தையும் அது உடன் சுமந்து சென்றது.

படைத்தளபதி ஆடாமல் அசையாமல் விறைப்பாக நின்றார். மேற்தளத்தில் இருந்து வந்து கொண்டிருந்த லேசான தேம்பல் ஒலிகளைக் கேட்டு அவர் தன் நெற்றியைச் சுருக்கினார். எங்கோ ஓரிடத்தில் ஒரு சேவல் கொக்கரித்தது. அதைத் தொடர்ந்து பல கோழிகள் ஒலியெழுப்பின. கோட்டைச் சுவர்களுக்கு வெளியே, கைவண்டிக்காரன் ஒருவன் தன் பொருட்களைக் கூவிக் கூவி விற்றுக் கொண்டிருந்தான். ஓர் எருமை மாட்டு வண்டியும் மணியோசை எழுப்பியவாறே கடந்து சென்று மறைந்தது. படைத்தளபதி தயக்கத்தோடு ஓரடி முன்னே எடுத்து வைத்து மாடிப்படியில் கால் வைக்க முற்பட்டார். பிறகு மீண்டும் நின்றார். கீழே கிடந்த ஏதோ ஒன்று அவருடைய பார்வையைக் கவர்ந்திருந்தது. அவர் தன் வலியைப் பொறுத்துக் கொண்டு குனிந்து அதை எடுத்தார். உடைந்து போன ஒரு சக்கரத்துடன்கூடிய ஒரு மர வண்டி அது — ஒரு சிறுவனின் விளையாட்டுப் பொருள். அதன் உடைந்த பகுதியில், காய்ந்து போன ரத்தக் கறை ஒன்று இருந்தது. அவர் பெருமூச்செறிந்தவாறு படிகளில் ஏறத் துவங்கினார். படிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுபோல முனகின. அப்போது, சொல்லி வைத்தாற்போல, மேற்தளத்தில் தேம்பல்கள் திடுதிப்பென்று நின்றன.

அந்த நீண்ட தாழ்வாரம், ஒரு கணிசமான தூரம் நீட்டி முழக்கி, நிழலுக்குள் மாயமாய் மறைந்தது. அப்போது பனி பெய்யத் துவங்கியது. தாழ்வாரத்தின் ஓரம் நெடுகிலும் போடப்பட்டிருந்த மர பெஞ்சுகளின்மீது வெண்பனிச் செதில்கள் விழுந்து, வினோதமான வடிவங்களை உருவாக்கின. மாண்டு கிடந்த வீரர்களின் உடல்கள்மீது மிதித்துவிடாமல், அத்தளபதி, எச்சரிக்கையாகவும் மெதுவாகவும் நடந்தார். தன் இடது கையில் அந்த உடைந்த மர வண்டியையும், தன் வலது கையில் தன் வளைவான வாளையும் அவர் பிடித்திருந்தார்.

பனியையும் மலைகளின் கடுங்குளிரையும் அவர் வெறுத்தார். வெயில் காய்ந்த தன் சொந்த ஊரை நினைத்து அவர் ஏங்கினார். இந்த ஒரே ஒரு வேலையை முடித்துவிட்டு, மீண்டும் கங்கை நதிக்கரைக்குத் திரும்பிச் செல்ல அவர் விரும்பினார். ஏதேனும் சத்தம் வந்ததா என்று பார்ப்பதற்காக அவர் சிறிது நேரம் நின்றார். ஆடைகள் சரசரக்கும் ஓசை அவருக்குக் கேட்டது. அறைக்குள் தனக்காக யாரோ காத்துக் கொண்டிருந்ததை அவர் உணர்ந்தார். காயப்பட்ட அவருடைய உடல் பதற்றமடைந்தது. அவருடைய கையில் இருந்த மர வண்டி, அவருக்கு ஒரு சுமையாக ஆனது. "நான் ஏன் இதை எடுத்தேன்?" என்று அவர் வியந்தார். ஆனால் அதைத் தூக்கி எறிய அவருக்கு இப்போது மனமிருக்கவில்லை. தன் வாளின் முனையைக் கொண்டு, பாதி திறந்திருந்த அறைக் கதவை மெதுவாகத் தள்ளிவிட்டு, அவர் அந்த அறைக்குள் நுழைந்தார். அவருடைய உயரமான, அகலமான உருவம், மங்கலாக இருந்த அந்த அறைக்குள் நிழலுருவங்களை ஏற்படுத்தியது. அந்த இருட்டிற்கு அவருடைய கண்கள் பழக்கப்பட்டவுடன், அவர் அவளைப் பார்த்தார். அந்த அறையைச் சூழ்ந்திருந்த நிழல்கள் அவளைப் பாதி மறைத்திருந்தன. தன் கண்கள் தரையைப் பார்க்க, தன் கைகள் தன் கால் மூட்டுக்களைச் சுற்றியிருக்க, அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள். தன் தலைவிதி என்னவென்று தெரிந்து கொள்வதற்காகக் காத்திருந்ததில் அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். அத்தளபதி சோர்வாகப் பெருமூச்செறிந்தார். அவருடைய இறுக்கமான தசைகள் சற்றுத் தளர்ந்தன. "நல்லவேளை, இன்று இதற்குமேல் ரத்தப் பெருக்கு இல்லை," என்று அவர் நினைத்தார்.

மூலையில் எரிந்து கொண்டிருந்த ஒரு சிறிய எண்ணெய் விளக்கு, ஒரு சிறிய வட்ட வடிவத்தில் மங்கலான வெளிச்சத்தை ஏற்படுத்தியது. அவ்விளக்கின் பலவீனமான வெளிச்சம், அதன் வீச்சிற்கு அப்பாலிருந்த இருளை மேலும் மிகைப்படுத்த மட்டுமே உதவியது. அத்தளபதி அவ்விளக்கின் திரியை உயர்த்தினார். ஒரு பொன்னிற வெளிச்சம், நேர்த்தியான அழகுடன் திகழ்ந்த அப்பெண்ணின்மீது விழுந்தது. அத்தளபதி திடீரென்று கோபம் கொண்டு, "இத்தகைய அழகான தெய்வீகப் படைப்புகளுக்கு வருத்தத்தைக் கொண்டு வருவதுதான் என் தலையெழுத்துப் போலும்!" என்று தன் மனத்திற்குள் குமுறினார். தன் தந்தையின் வேட்கையைத் திருப்திப்படுத்துவதற்காக பிரம்மச்சரியத்தைக் கடைபிடிப்பதென்று தான் திடீரென்று உறுதிமொழி மேற்கொண்ட நாளை அவர் சபித்தார். அவருடைய வாழ்வில் இடம்பெற்றிருந்த அனைத்துப் பெண்களுக்கும் இது மகிழ்ச்சியின்மையைக் கொண்டு வந்திருந்தது. சில பெண்களின்

வாழ்க்கையை அது சீரழித்தும் இருந்தது. "இன்று அப்பட்டியலில் மற்றுமொரு பெண்ணை நான் சேர்க்கவிருக்கிறேன்," என்று விரக்தியில் தன் மனத்திற்குள் அங்கலாய்த்துக் கொண்டே, திடீரென்று, தன்னைப் போன்ற ஒரு பிரம்மச்சாரி, பெண்களைத் துரத்திச் சென்று வேட்டையாடி, அவர்களுக்காகத் தன் ரத்தத்தைச் சிந்த வேண்டியிருந்த வேடிக்கையான தலைவிதியை நினைத்து அவர் வருத்தத்துடன் சிரித்தார்.

தன்னுடைய இருண்ட எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, தன் முன்னே இருந்த அழகிய பெண்ணின் முன்னால் அவர் தாழ்மையாகத் தலை வணங்கிவிட்டு, "மகளே, என் பெயர் கங்காதத்த தேவவிரதன். அஸ்தினாபுரத்தின் அரசாட்சிப் பொறுப்பாளர் நான். பீஷ்மர் என்ற என்னுடைய இன்னொரு பெயரை நீ கேள்விப்பட்டிருக்கக்கூடும். அஸ்தினாபுர இளவரசனும் என் தம்பி மகனுமான திருதராஷ்டிரனுக்கு உன்னை மணமுடிப்பதற்காக உன்னை நாடி வந்துள்ளேன்," என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து நிலவிய கனத்த மௌனத்தில், கோபத்தில் தகதகத்துக் கொண்டிருந்த அப்பெண்ணின் அழகான சாம்பல்நிறக் கண்களை நேருக்கு நேர் எதிர்கொள்ளாமல், பீஷ்மர் வேறு பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டார். பீஷ்மரின் வார்த்தைகளைக் கேட்ட அவள், மனத்தைக் கசக்கிப் பிழியும்படி ஓர் ஓலமிட்டாள். பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு, தரையிலிருந்து எழுந்து நின்று, தலையை உயர்த்தி, மிடுக்கான கண்ணியத்துடன், "அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரே, காந்தாரம் உங்களை உபசரிக்கத் தவறிவிடவில்லை என்று நான் நினைக்கிறேன். உங்களை வரவேற்பதற்கு என் தந்தையார் இங்கு இல்லை என்பது குறித்து உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். காந்தார இளவரசி காந்தாரியான நான், அவர் சார்பாக உங்களை வரவேற்கிறேன்," என்று கூறினாள்.

அவளுடைய குரலில் இருந்த கடுமை பீஷ்மரை ஒட்டுமொத்தமாக முடக்கிப் போட்டது. அவளிடம் ஒளிவுமறைவின்றி எல்லாவற்றையும் கூறிவிட வேண்டும், தன் பேரரசிற்காகத் தான் செய்திருந்த செயல்களை நியாயப்படுத்த வேண்டும் என்ற ஒரு வினோதமான தூண்டுதல் அவருக்குள் முளைத்தது. இவ்வளவு சீரழிவுகள் நடந்த பிறகும்கூட, இத்தகையை கண்ணியத்துடனும் அமைதியுடனும் நடந்து கொண்டிருந்த அந்த இளம்பெண்ணிற்கு முன்னால் பீஷ்மர் மிகவும் சிறுமையாகவும் நியாயமற்றவராகவும் உணர்ந்தார். தான் ஒரு கொடுமைக்காரன் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. தன்னுடைய

கோபம் மட்டும் தன்னிடம் திரும்பி வந்தால் நன்றாக இருக்கும் என்று அவர் ஏங்கினார். அப்படி வந்தால், அவளை வலுக்கட்டாயமாகத் தூக்கித் தன் குதிரையின்மீது அமர்த்தி, அஸ்தினாபுரத்திற்குக் கூட்டிச் சென்றுவிடலாம் என்று அவர் நினைத்தார். ஆனால் அவரால் அது முடியவில்லை. ஏனெனில், அவர் மரபுவிதிகளைப் பேணும் ஒரு வீரர், வீரப்பெருந்தகையாளர்.

"இங்கு எனக்கு வேறு என்ன வழி இருக்கிறது? அஸ்தினாபுரத்தின் அரசாட்சிப் பொறுப்பாளர் தன் தம்பி மகனுக்கு மணமுடிப்பதற்கு எந்தக் கன்னிப் பெண்ணைத் திருடிச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தப் பிறகு, மாபெரும் பரதகண்டத்தின் எல்லைகளில் வாழ்கின்ற எங்களைப் போன்றவர்களுக்கு என்ன விருப்பத்தேர்வு இருக்கிறது? உங்களை வீணாக வருத்திக் கொள்ளாதீர்கள் . . . எங்கள் எதிர்ப்பு முடியும் தருவாயில் உள்ளது. உங்கள் விருப்பம்போலக் காந்தாரம் உங்களுக்குச் சொந்தமாகிவிட்டது. நான் உங்கள் கைதி. குருடனான உங்கள் தம்பி மகனின் மனைவியாக ஆவதற்கு நான் உங்களுடன் வருகிறேன்."

பீஷ்மர் வாயடைத்து நின்றார். தொலைவில் தெரிந்த மலைகளின் பனி படர்ந்த சரிவுகளை அவர் வெறித்துப் பார்த்தார். அவளுக்கு முதுகு காட்டி நின்ற தன்னை, இக்கணமே ஒரு குத்துவாளை எடுத்து விரைவாகத் தன்னுடைய முதுகில் குத்தி அவளால் தன்னைக் கொல்ல முடியும் என்பதை அவர் அறிந்தார். ஆனாலும் அவளை எதிர்கொண்டு, அவளுடைய சாம்பல்நிறக் கண்களைப் பார்க்க அவர் விரும்பவில்லை. வறண்டு போயிருந்த தன் வாழ்க்கையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்த அழகான பெண்ணின் கையால் தான் குத்துப்படுவது ஒரு சிறந்த வழியாக இருந்திருக்கும் என்று அவர் நினைத்தார். ஏனெனில், உலகில் இத்தகைய அழகான பெண்கள் இருந்தனர் என்று தெரிந்தும்கூட, தகுதியற்ற அல்லது ஆண்மையற்றத் தன் தம்பி மகன்களுக்கோ, அல்லது அஸ்தினாபுரத்தின் அரியணையில் கொலுவேறிய ஏதோ ஒரு மூடனுக்கோ அவர்களைத் திருடிச் செல்ல மட்டுமே அவரால் முடிந்தது. தொடர்ச்சியான போராட்டங்கள், நயவஞ்சகம், அரசியல், சூழ்ச்சி ஆகியவையே அவருடைய வாழ்க்கையாக இருந்து வந்திருந்தன. இது அவருக்குக் களைப்பையும் சலிப்பையும் ஊட்டியது. தன் தந்தை, தன் நாடு, தன் சகோதரர்கள், அவர்களுடைய மகன்கள் என்று எப்போதும் மற்றவர்களுக்காகவே அவர் வாழ வேண்டியிருந்தது. தனக்காக ஒருபோதும் அவர் வாழவில்லை. இவை அனைத்தும் அவருக்கு விரக்தியை ஏற்படுத்தின. ஆனாலும், அஸ்தினாபுரத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரிடம் சவால்விடுவதற்கு ஒட்டுமொத்த பரதகண்டத்தில் ஓர் அரசன்கூட

இருக்கவில்லை.

காந்தாரி ஒரு குத்துவாளால் தன் முதுகில் குத்தக்கூடும் என்ற பாதி எதிர்பார்ப்புடன் பீஷ்மர் அங்கிருந்து நடக்கத் துவங்கினார். ஆனால் அவள் வெறுமனே பணிவோடு தன்னைப் பின்தொடர்ந்து வந்ததைக் கண்டதும் அவர் ஏமாற்றமடைந்தார். அவர்கள் தாழ்வாரத்தை அடைந்தபோது, திடீரென்று வீசிய கடுமையான குளிர்க் காற்று பீஷ்மரின் முகத்தைத் தாக்கியதில், அவர் உடல் வெடவெடத்துப் பின்னால் திரும்பினார். அப்போது, தன் கையில் இருந்த உடைந்த மர வண்டியை அவள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை அவர் கண்டதும், அவர் மிகவும் தர்மசங்கடமாக உணர்ந்தார். அதைத் தூக்கி எறியவோ அல்லது அவளுடைய பார்வையிலிருந்து மறைக்கவோ அவர் விரும்பினார். அப்போது ஒரு தேம்பல் ஒலி கேட்டது. அது தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்த அழகான பெண்ணிடமிருந்து வரவில்லை. மாறாக, சற்று முன்பு தனக்காக அவள் எந்த அறையில் காத்துக் கொண்டிருந்தாளோ, அந்த அறையின் இருண்ட ஆழங்களில் எங்கிருந்தோ வந்தது. அச்சத்தம் பீஷ்மரின் காதுகளில் விழுந்துவிட்டிருந்ததைக் கண்ட காந்தாரியின் முகத்தில் பயமும் வெறுப்பும் பிரதிபலித்தன. பீஷ்மர் வேகமாக அந்த அறையை நோக்கி நடந்தார். காந்தாரி அவருடைய கையை இறுக்கமாகப் பிடித்து, அவருடைய முதுகைத் தன் நகங்களால் கீறி, அவரைத் தடுத்து நிறுத்த முயற்சித்தாள். பல ஆண்டுகளாகத் தன்னுள் அடக்கி வைத்திருந்த கோபமும் வெறுப்பும் ஒருசேர வெளிப்பட, திடீர் ஆவேசத்தில் அவர் அவளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அந்த அறைக்குள் நுழைந்தார். காந்தாரி நிலை தடுமாறிக் கீழே விழுந்தாலும், கண்ணிமைக்கும் நேரத்தில் சமாளித்து எழுந்து அவர் பின்னால் ஓடிச் சென்று, அவருடைய வேகத்தைக் குறைக்கும் முயற்சியில் தன் கூரிய நகங்களால் அவரை மீண்டும் கீறினாள், அவரைக் கடித்தாள். ஆனால் அவற்றால் எந்தப் பலனும் இருக்கவில்லை.

தேம்பல் சத்தம் படுக்கைக்கு அடியிலிருந்து வந்தது. பீஷ்மர் கீழே குனிந்தார். ஆனால் எதிர்பாராத விதத்தில் ஏதேனும் ஒரு கூரிய ஆயுதம் தன் முகத்தைக் கிழித்துப் பதம் பார்த்துவிடாமல் இருப்பதற்காக, அவர் தன் வாளைத் தனக்கு முன்னால் நீட்டிப் பிடித்திருந்தார். அவருடைய கையில் இருந்த பொம்மை வண்டிக்காக ஒரு சிறிய கை நீண்டது. பிறகு அது மின்னல் வேகத்தில் மறைந்துவிட்டது. ஆனால் பீஷ்மர் அச்சிறிய கையை இறுக்கமாகப் பிடித்து வெளியே இழுத்தார். அவன் ஒரு சிறுவன். அவனுக்கு ஐந்து வயதுகூட இருக்காது. அவனை வெளிச்சத்தில் பார்ப்பதற்காக, பீஷ்மர் அவனைத் தாழ்வாரத்திற்குத்

தூக்கிச் சென்றார். அவன் உடல் முழுவதும் ரத்தத்தில் தோய்ந்திருந்தது. ஆனால் அவனுடைய இடது காலில் ஏற்பட்டிருந்த ஒரு காயத்தைத் தவிர அவன் உடலில் வேறு எந்தக் காயமும் இருக்கவில்லை. அவனுடைய பெரிய, விலங்குக் கண்கள் பீஷ்மரைப் பார்த்தன. தன் இளம் வாழ்வில் அவன் சேகரித்திருந்த பகைமை அனைத்தும் அவன் பார்வையில் தெறித்தது. போர்க்களத்தில் அவரால் ஓராயிரம் அம்புகளை எதிர்கொள்ள முடியும், ஆனால் இச்சிறுவனின் கண்கள் அவருடைய கவசத்தையும் ஊடுருவி, அவருடைய இதயத்தின் ஆழத்தைத் துளைத்தன. பாரபட்சமின்றி இச்சிறுவனைக் கொன்றுவிடுமாறு அவருடைய ஆலோசனையாளர்கள் அவருக்கு அறிவுறுத்தியிருப்பார்கள். ஒருவன் ஒரு நாட்டைக் கைப்பற்றும்போது, எல்லா ஆண்களையும் கொன்றுவிட்டு, எல்லாப் பெண்களையும் சிறையெடுத்துச் செல்வதுதான் புத்திசாலித்தனமான செயலாக இருக்கும். தன் வாளை அச்சிறிய இதயத்திற்குள் செருகிவிடுமாறு தன் தந்தையின் குரல் தன்னைத் தூண்டியதுபோல பீஷ்மரின் காதுகளில் கேட்டது.

அவர் மிக மெதுவாக அவனைக் கீழே இறக்கினார். ஆனால் அவனுடைய கால் பலமாகக் காயப்பட்டிருந்ததால், நிற்க முடியாமல் நிலை குலைந்து அவன் கீழே விழுந்தான். “யார் இவன்?” என்று பீஷ்மர் காந்தாரியிடம் கேட்டார்.

“இவன் பெயர் சகுனி. காந்தார நாட்டின் இளவரசன். நீங்கள் அவனைக் கொன்றுவிடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். சத்திரியர்களின் நியாயம் அதுதானே? போர் வீரர்களின் நெறிமுறைகளைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். ஆனால் என் கண் முன்னால் அதைச் செய்ய வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவன் என் தம்பி . . . தயவு செய்து அவன்மீது இரக்கம் காட்டுங்கள் . . .” என்று காந்தாரி கெஞ்சினாள்.

பீஷ்மர் தர்மசங்கடத்துடன் எழுந்து நின்றார். கடுந்துயரத்தில் இருந்த அந்த ஆணவக்கார இளவரசியையோ அல்லது தன் பாதங்களில் மூச்சிரைப்புடன் விழுந்து கிடந்த அச்சிறுவனையோ அவரால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. அவருடைய வாள் அவருடைய கைகளில் நடுங்கியது. அவர் மெதுவாக மண்டியிட்டு அமர்ந்து, தன் கையிலிருந்த மர வண்டி பொம்மையை அவனுக்கு அருகே வைத்தார். அவன் அதை வெடுக்கென்று எடுத்துத் தன் மார்போடு இறுக்கமாக அணைத்துக் கொண்டான். பீஷ்மரின் கண்கள் குளமாயின. தன் பலவீனத்தைக் கண்டு அவருக்கே தன்மீது எரிச்சல் ஏற்பட்டது. அவர் உடனே அச்சிறுவனை விலக்கித் தள்ளினார். சகுனி வலியில் அலறினான். “நான்

அவனைக் கொல்லப் போவதில்லை. அவனை நீ எவ்வளவு தூரம் நேசிக்கிறாய் என்பதை என்னால் பார்க்க முடிகிறது. இவனையும் உன்னுடன் அஸ்தினாபுரத்திற்குக் கூட்டி வா. இவன் அங்கு ஒரு 'குரு வம்ச' இளவரசனாக வளரட்டும்," என்று பீஷ்மர் கூறினார். தான் இவ்வளவு தூரம் இறங்கி வந்தது குறித்து அவர் ஒவ்வொரு கணமும் தன்னை வெறுத்தார்.

தன் சகோதரன் உயிர் பிழைத்தது குறித்து நிம்மதியடைந்த காந்தாரி பலமாகப் பெருமூச்செறிந்தாள். பீஷ்மர் அவர்கள் இருவரையும் பார்த்தார். காற்று வலுவடையத் துவங்கியிருந்தது. சகுனி குளிரில் நடுநடுங்கினான். காந்தாரி அவனைத் தன் கைகளில் தூக்கிக் கொண்டாள். ஆனால் அவனுடைய எடை தாங்காமல் அவள் தடுமாறினாள். பீஷ்மர் அவனை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டார். அஸ்தினாபுரத்தின் அரசாட்சிப் பொறுப்பாளர் அவனைத் தூக்கியபோது, அவன் தன் பகைமையுணர்வு முழுவதையும் ஒன்றுதிரட்டி அவருடைய முகத்தில் உமிழ்ந்தான். தன் முகத்தில் தெறித்த ரத்தம் தோய்ந்த எச்சிலைத் தன் புறங்கையால் துடைத்துவிட்டு, பீஷ்மர் தொடர்ந்து நடந்தார். அவருடைய முகம் ஒரு கருங்கல்லைப்போல இறுகிப் போயிருந்தது.

* * *

அவர்கள் அனைவரும் மீண்டும் கங்கைச் சமவெளிகளுக்குக் குதிரைகளின்மீது பயணித்தனர். யானைகளின் நகரம் என்று அழைக்கப்பட்ட, இந்தியாவின் புகழ்பெற்றத் தலைநகரமான அஸ்தினாபுரத்தில் அமைந்த அரண்மனைக்கு அவர்கள் சென்றனர். மாபெரும் வீரரான பீஷ்மரின் குதிரையின்மீது சகுனி சோர்ந்து போய்க் கிடந்தான். காந்தாரத்தின் அழகிய இளவரசி, அவர்களுக்குப் பின்னால் ஒரு குதிரையின்மீது ஒய்யாரமாக வந்தாள். அந்தப் பயணம் நெடுகிலும், தன் தம்பியின் மற்றொரு மகனான பாண்டுவிற்கு ஒரு மணப்பெண்ணைத் தேடுவது பற்றிய எண்ணங்களில் பீஷ்மர் மூழ்கிப் போயிருந்தார். பெரும் பட்டறிவு வாய்ந்த வீரரான அவர், அந்த எண்ணங்களில் மட்டும் தொலைந்து போகாமல் இருந்திருந்தால், தான் தன்னோடு கூட்டிச் சென்று கொண்டிருந்த அச்சிறுவனின் கண்களில் தகதகவென்று எரிந்து கொண்டிருந்த பகைமையுணர்வைக் காண அவர் ஒருபோதும் தவறியிருக்க மாட்டார். குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரான அவர், தன்னுடைய நீண்ட, ஒளிமயமான வாழ்க்கையில் செய்த ஒரு மாபெரும் தவறு அது.

1

குட்டி இளவரசன்

“துரியோதனா, நீ எந்தக் குழியில் பதுங்கிக் கொண்டிருந்தாலும் சரி, நான் உன்னைக் கண்டுபிடித்து வெளியே இழுத்து வரத்தான் போகிறேன். கோழையே! வெளியே வா! உன் தந்தையைப்போல நான் ஒரு குருடனல்ல. நான் உன்னைக் கண்டுபிடித்து உன்னைத் துவைத்தெடுக்கப் போகிறேன் . . .” பீமனின் பெருங்குரல் அஸ்தினாபுர அரண்மனையின் தாழ்வாரம் நெடுகிலும் எதிரொலித்தது.

அச்சிறுவன் பயத்தில் நடுங்கியபடி, அங்கிருந்த பெரிய மரக் கட்டிலின் அடியில் போய்ப் பதுங்கிக் கொண்டான். பரந்து விரிந்த அந்த அறையின் வெறுமை அவனைத் திணறடித்தது. தன் தந்தையின் படுக்கைக்குக் கீழே புழுக்கமான இருட்டில் தன்னை ஒளித்துக் கொண்டிருந்த அவன், தனக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த பீமன் தன்னைக் கண்டுபிடிக்க மாட்டான் என்று நம்பினான். தன் தந்தையை எப்போதும் சூழ்ந்திருந்த ஒரு லேசான கஸ்தூரி வாசனையை அவருடைய படுக்கைக்கு அடியில் அவனால் நுகர முடிந்தது. அவர் சீக்கிரம் திரும்பி வர மாட்டாரா என்று அவன் ஏங்கினான். கடந்த ஆறு மாதங்களாக இப்படித்தான் இருந்து வந்திருந்தது: அவனுடைய சிற்றப்பாவின் மகனான பீமன் அவனை எப்போதும் துரத்திக் கொண்டே இருந்தான். இவன் அவனிடமிருந்து ஓடி ஒளிந்து கொண்டே இருந்தான். தன் எதிரியான பீமன் தன்மீது ஆர்வமிழந்து, தன்னைத் தேடும் முயற்சியைக் கைவிடுவதற்காக, படபடக்கும் இதயத்துடன்,

பயத்தில் தன் தந்தையின் கட்டிலுக்கு அடியில் இவன் ஒளிந்து கொண்டான். பீமன் இவனுக்கு ஒரு வயது சிறியவன் என்றாலும்கூட, வெளிறிய, ஒல்லியான தோற்றத்தைக் கொண்டிருந்த துரியோதனனைவிட அவன் ஓரடி உயரமாக இருந்தான். தான் பலவீனமாகக் கருதிய எவரொருவரிடமும் கொடூரமாக நடந்து கொள்வதில் பீமன் பேரின்பம் கொண்டான். அவன் ஒரு முரடன். மூளையில் தனக்கு இருந்த பற்றாக்குறையைத் தன் உடல் வலிமையால் அவன் ஈடு செய்தான்.

* * *

தன்னையும் தன் சகோதரனையும் தேடிக் கொண்டு, குண்டோதரன் பீமன், அரண்மனைத் தாழ்வாரங்களில் அங்குமிங்கும் தட்டழிந்து கொண்டிருப்பான் என்பதை துரியோதனன் அறிந்திருந்தான். "துச்சாதனன் அவனிடம் சிக்கிக் கொள்ளக்கூடாது," என்று அவன் தன் மனத்திற்குள் வேண்டிக் கொண்டான். துச்சாதனன் மிகவும் சுறுசுறுப்பானவன். அவனால் எந்தவொரு மரத்தின்மீதும் சுலபமாக ஏறிவிட முடியும். மரத்தின்மீது அமர்ந்தபடி, கீழே நின்று கொண்டிருந்த குண்டோதரனைப் பார்த்துக் கேலி செய்த அவன்மீது வெறுமனே கற்களை மட்டுமே அந்தக் குண்டனால் எறிய முடிந்தது. குறி வைத்துத் தாக்குவதைப் பொறுத்தவரை, பீமன் திறமையற்றவன். அவன் எரிந்த கற்கள் பல முறை ஏதேனும் ஒரு சன்னலைப் பதம் பார்த்திருந்தன. மிகவும் கண்டிப்பான அவர்களுடைய தாத்தாவான பீஷ்மர் அவனைப் பல முறை கடிந்து கொண்டிருந்தார். தன் சகோதரி துச்சலையின்மீது துரியோதனன் மிகுந்த பாசம் கொண்டிருந்ததை அறிந்திருந்த பீமன், அவளுடைய சகோதரர்களின் முன்னிலையில் அவளை அழ வைத்துப் பார்ப்பதில் பெரும் மகிழ்ச்சி கொண்டான். இது தொடர்பாக துரியோதனனும் துச்சாதனனும் அந்த குண்டோதரனுடன் ஒரு சண்டையில் ஈடுபடுவார்கள். இச்சண்டை ரத்தக்களரியாக மாறுவதிலிருந்து தடுத்து நிறுத்துவதற்கு யாரேனும் பெரியவர்கள் அங்கு இல்லை என்றால், குண்டோதரனான பீமனின் மற்ற நான்கு சகோதரர்களும் அவனோடு சேர்ந்து கொள்ள, இச்சிறு பூசலானது ஒரு பெரிய சண்டையாக உருவாகிவிடும்.

காலம் சென்ற தன் சிற்றப்பாவான பாண்டுவின் ஐந்து மகன்களில், பீமனைவிட, மூத்தவனான தர்மனைத்தான் துரியோதனன் மிக அதிகமாக வெறுத்தான். அவனைக் கண்டுதான் துரியோதனன் மிக அதிகமாக பயந்தான். மிகுந்த கடவுள் பற்றுக் கொண்ட தர்மனைப் பற்றி துரியோதனின் மாமாவான சகுனி பல முறை அவனை

எச்சரித்திருந்தான். சுவீகாரம் மற்றும் அரசியல் விவகாரங்களைப் பற்றி சகுனி அவனிடம் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான். சிறுவனான துரியோதனனுக்கு இவை எதுவும் புரியாவிட்டாலும்கூட, கிட்டத்தட்டத் தன் வயதை ஒத்திருந்த, பத்து வயது நிரம்பிய தர்மனின் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' நடத்தையை அவன் மிகவும் வெறுத்தான். உலகிலேயே தான்தான் மிகவும் கீழ்ப்படிதல் கொண்ட, கடவுள் பற்றுக் கொண்ட, சூதுவாதற்றச் சிறுவன் என்பதுபோல தர்மன் நடந்து கொண்டான். ஆனால், சண்டைகளின்போது அவன்தான் அதிக வன்முறையோடு செயல்பட்டான். பீமனின் காட்டுமிராண்டித்தனத்தை துரியோதனனால் புரிந்து கொள்ள முடிந்தது, ஆனால் தர்மனின் மூர்க்கத்தனம் அவனைக் குழப்பியது. தங்கள் வீட்டுப் பெரியவர்களின் முன்னிலையில், தர்மன் தன் பெரியப்பாவின் மகன்களுடன் எப்போதும் இனிமையாகவும் அன்பாகவும் நடந்து கொண்டான். எனவே, குழந்தைகள் தனியாக இருந்தபோது வெறுக்கத்தக்க விதத்தில் அவன் நடந்து கொண்டது அக்குழந்தைகள் அனைவருக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

பல முறை, தன் தாயார் குந்தியோ அல்லது தன் பெரியம்மா காந்தாரியோ இருந்தபோது, துரியோதனன் அல்லது துச்சாதனின் கன்னத்தில் தர்மன் பாசமாக முத்தமிட்டான். காந்தாரியால் அதைப் பார்க்க முடியாது என்பது வேறு விஷயம். தன் கணவனைப்போலவே தானும் பார்வையற்றவளாக இருப்பதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு தன் கண்களைக் கட்டிக் கொண்டவள் அவள். இந்த விஷயமும் சிறுவனான துரியோதனனை மிகவும் குழப்பியது. பார்வையற்ற ஒருவனைத் தனக்கு வலுக்கட்டாயமாக மணமுடித்து வைத்த பீஷ்மருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான ஓர் அடையாளமாக அவள் இவ்வாறு செய்ததாக அவனுடைய மாமன் சகுனி அவனிடம் ஒருமுறை கூறியிருந்தான். ஆனால் இவ்வார்த்தைகள் துரியோதனுக்கு அதிகக் குழப்பத்தைத்தான் ஏற்படுத்தின. இவ்வார்த்தைகளுக்கு என்ன பொருள்? அரசனான தன் தந்தை திருதராஷ்டிரனைத் தன் தாயார் நேசிக்கவில்லையா? எதிர்ப்பின் ஓர் அடையாளச் சின்னமாக நிரந்தரமான இருளை அவர் தேர்ந்தெடுத்திருந்ததாகத் தன் மாமன் சகுனி கூறியது சரிதானா என்று அவன் ஒருமுறை தன் தாயாரிடம் நேரடியாகவே கேட்டிருந்தான். ஆனால் அவள் வெறுமனே சிரித்துவிட்டு, பாசத்தோடு அவனுடைய தலையைக் கோதிவிட்டாள். காந்தாரி அவனுடைய கேள்விக்கு பதில் கூறியிருக்கவில்லை. ஆனால் அவளுடைய கண்களை மூடியிருந்த வெள்ளைப் பட்டுத் துணியின்மீது ஈரம் படிந்ததை துரியோதனன் பார்த்திருந்தான். தன் தாயார் அழுது

கொண்டிருந்தாரா என்று அவன் வியந்தான்.

தான் ஒர் எளிய குடிமகனின் மகனாகப் பிறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று துரியோதனன் அடிக்கடி ஏங்கினான். துரியோதனனின் தந்தைவழிச் சிற்றப்பாவான விதுரன் ஒர் அரண்மனை வேலைக்காரியின் மகன் என்றும், அரசன் திருதராஷ்டிரன் மற்றும் அவனுடைய சகோதரன் பாண்டுவின் தந்தைதான் விதுரனுக்கும் தந்தை என்றும் சகுனி துரியோதனனிடம் கூறியிருந்தான்.

"அதனால் என்ன?" என்று அவன் சகுனியிடம் குழப்பத்தோடு கேட்டதற்கு, அவன் வளர்ந்து பெரியவனானபோது அவனுக்கு அது புரியும் என்று சகுனி பதிலளித்திருந்தான். "நான் எப்போது வளர்ந்து பெரியவனாவேன்?" என்று ஒரு பரிதாபமான ஏக்கத்துடன் துரியோதனன் கேட்டான். தனக்குத் தொல்லை கொடுத்தவனைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு அப்போது தனக்குப் போதிய வலிமை இருக்கும் என்று அவன் நினைத்தான். இப்போதைக்கு, அந்தக் குண்டோதரன் பீமன் தன்னைக் கண்டுபிடித்துவிடக்கூடாது என்று மனதார வேண்டிக் கொண்டு, தன்னந்தனியாக இருட்டில் அவன் ஒளிந்து கொண்டிருந்தான்.

* * *

"உன் தந்தையின் கட்டிலுக்கு அடியில் நீ ஒளிந்து கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். குருட்டுக் கபோதியின் மகனே! உன் பரங்கித் தலையை எட்டி மிதிக்க இதோ வருகிறேன் பார் . . ."

"ஐயோ! அவன் என்னைக் கண்டுபிடித்துவிட்டான். அவன் இப்போது என்னைப் பிடித்துவிடுவான்." துரியோதனின் இதயம் கிட்டத்தட்ட அவனுடைய வாய்க்கு வந்துவிட்டிருந்தது. மறைந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனின் மங்கலான வெளிச்சத்திற்கு எதிராகத் தோன்றிய பீமனின் அசுர உருவம், எதிரிலிருந்த சுவரின்மீது ஒரு நீண்ட நிழலைத் தோற்றுவித்தது. துரியோதனனால் பீமனின் கால்களை மட்டுமே பார்க்க முடிந்தது, ஆனால் அவனை அச்சுறுத்துவதற்கு அதுவே போதுமானதாக இருந்தது. அவன் பெரிதாகக் கூப்பாடு போட விரும்பினான், ஆனால் யாரும் தன் உதவிக்கு வரப் போவதில்லை என்பதை அவன் அறிந்திருந்தான். தனக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருந்த இந்தக் கொடூரமான உலகில் தான் தனித்து விடப்பட்டிருந்ததுபோல அவன் உணர்ந்தான். சுவரின்மீது இப்போது மற்றுமொரு நிழல் படிந்தது. பீமனின் இளைய சகோதரனான அர்ச்சுனனின் உருவமா அது? வேடிக்கையில் பங்கு

கொள்ள அவன் வந்திருந்தானா? துரியோதனன் தன் தந்தையின் கட்டிலுக்கு அடியில் இருட்டிற்குள் இன்னும் ஆழமாகச் சுருண்டு கொண்டான்.

"பீமா, நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று பெரியவர் ஒருவருடைய குரல் கேட்டது. துரியோதனன் எச்சரிக்கையோடு வெளியே எட்டிப் பார்த்தான். யார் அது? அந்திச் சூரியன் அந்தக் கதவிற்குப் பின்னால் இருந்த அனைத்தையும் ரத்தச் சிவப்பாக மாற்றியிருந்தான். அசையாத ஒரு கரிய நிழல்போல அந்நபர் நின்று கொண்டிருந்தார்.

இந்தக் குறுக்கீட்டால் ஆச்சரியமடைந்த பீமன் தன் தலையைத் திருப்பிப் பார்த்தான். அவனுடைய முகத்தில் கோபம் பளிச்சிட்டதை துரியோதனன் கண்டான்.

"நீங்கள் ஏன் எப்போதும் என் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறீர்கள்? நான் என் அம்மாவிடம் கூறிவிடுவேன்." பீமன் தன் குரலை உயர்த்தியிருந்தபோதிலும், அதில் சிறிது சந்தேகம் தொக்கி நின்றது. தான் ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து துரியோதனன் மெதுவாக வெளியே வரத் துவங்கினான்.

"குட்டி இளவரசனை நீ துரத்திக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். எப்போதும் ஏதாவது குறும்பு செய்வதே உன் வேலை என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நான் உன் பின்னால் வந்தேன்."

"ஆனால் நாங்கள் வெறுமனே விளையாடிக் கொண்டிருந்தோம் . . ."

"இதற்குப் பெயர் விளையாட்டு அல்ல."

"சிற்றப்பா, நீங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? உங்களைப் போன்றவர்கள் இந்த இடங்களுக்கு வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று உங்களுக்குத் தெரியும், இல்லையா?" என்று பீமன் தன் சிற்றப்பா விதுரனைப் பார்த்துக் கேட்டான். பீமனின் குரலில் நம்பிக்கை அதிகரித்திருந்தது. தாக்குதல்தான் சிறந்த தற்காப்பு என்று அவன் தீர்மானித்திருந்தான். இந்தக் குதர்க்கப் பேச்சு எவ்வளவு தூரம் தன் சிற்றப்பாவைக் காயப்படுத்தும் என்பதை அவன் நன்றாகவே அறிந்திருந்தான்.

தன் சிற்றப்பாவின் தோள்கள் தளர்ந்ததை துரியோதனன் பார்த்தான். "நான் மீண்டும் கட்டிலுக்கு அடியில் சென்று மறைந்து கொள்ள வேண்டுமோ?" என்று அவன் யோசித்தான்.

விதுரன் சுற்றுமுற்றும் பார்த்தான். வேறு யாரும் அங்கே இல்லை என்பதை உறுதி செய்து கொள்வதற்காக அவன் அவ்வாறு செய்ததுபோலத் தோன்றியது. பிறகு அவன் பீமனை நெருங்கினான்.

பீமன் ஒருசில அடிகள் பின்வாங்கினான். “பீஷ்மரின் முன்னிலையில் இதை நாம் முடிவு செய்யலாம்,” என்று விதுரன் கூறினான்.

“சிற்றப்பா, என்னை மன்னித்துவிடுங்கள்! நான் இங்கிருந்து போய்விடுகிறேன்,” என்று கூறிவிட்டு, வெறுப்புக் கலந்த ஒரு பார்வையை துரியோதனனை நோக்கி வீசிவிட்டு, விதுரனின் உடல் லேசாகக்கூடத் தன்மீது பட்டுவிடாதபடி அவனிடமிருந்து விலகிச் சென்று, பீமன் அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

துரியோதன் தன் சிற்றப்பாவை நன்றிப் பெருக்குடன் பார்த்தான். அவன் நேராக விதுரனை நோக்கி ஓடிச் சென்று, அந்த உயரமான, கரிய உருவத்தைக் கட்டியணைத்துக் கொண்டான். ஒரு கணம் விதுரன் திடுக்கிட்டான். பிறகு அவன் துரியோதனனை மெதுவாகத் தன்னிடமிருந்து விலக்கினான். துரியோதனன் தன் முகத்தில் வேதனை தென்பட, தன் சிற்றப்பாவைப் பார்த்தான்.

“இளவரசே, நீங்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் என்னைத் தொடக்கூடாது. குறிப்பாக, நீங்கள் ஏற்கனவே குளித்து முடித்துவிட்டுள்ள நிலையில், நீங்கள் என்னைத் தீண்டவே கூடாது. நீங்கள் மாலைநேர வழிபாடுகளுக்குத் தயாராக வேண்டும்,” என்று விதுரன் துரியோதனனிடம் கூறினான்.

“ஆனால் நீங்கள் என் சிற்றப்பா. நான் ஏன் உங்களைத் தொடக்கூடாது?” என்று கேட்டபடியே குட்டி இளவரசன் அழுதான். தன்னுடைய மிக மோசமான எதிரியிடம் இருந்து அவர் தன்னைக் காப்பாற்றியிருந்தார் என்று அவன் தன் சிற்றப்பாவிடம் கூற விரும்பினான்.

விதுரன் பேசியபோது, அவனுடைய எளிய வார்த்தைகளுக்குப் பின்னால் மறைந்திருந்த வேதனையைச் சிறுவனான துரியோதனனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. “மகனே, நான் உன் சிற்றப்பாவாக இருந்தாலும்கூட நீ என்னைத் தொடக்கூடாது.” கரிய, வசீகரமான தோற்றத்தைக் கொண்ட விதுரன், அந்தி வேளைக்குள் ஊடுருவிப் பார்த்தபடி நின்றான்.

“ஆனால் நான் ஏன் உங்களைத் தொடக்கூடாது?”

“போதும், நிறுத்து! நான் இங்கே இருக்கக்கூடாது,” என்று கூறிவிட்டு, விதுரன் அங்கிருந்து நடக்கத் துவங்கினான்.

துரியோதனன் தன் சிற்றப்பாவின் பின்னால் ஓடிச் சென்று, அவனுடைய கையைப் பிடித்து இழுத்தான். விதுரன் அவசர அவசரமாகத் தன் கையை வெடுக்கென்று இழுத்துக் கொண்டான்.

“ஏன் என்று எனக்குக் காரணம் கூறுங்கள்.”

“துரியோதனா, அது உனக்கு இப்போது புரியாது. நீ வளர்ந்து

பெரியவனாக ஆகும்போது நீ புரிந்து கொள்வாய். இப்போது என்னைப் போக விடு.” விதுரன் அங்கிருந்து திரும்பி, அந்த நீண்ட தாழ்வாரத்தின் வழியாக வேகமாக நடந்து சென்றான்.

வருத்தமும் குழப்பமும் தன் மனத்தையும் இதயத்தையும் பிழிந்தெடுக்க, துரியோதனன் தன் சிற்றப்பா போவதைப் பார்த்தபடி நின்றான். பகலவன் மறைந்துவிட்டிருந்தான். அஸ்தினாபுரம் நெடுகிலும் இருள் தன் போர்வையைப் பரப்பியிருந்தது. உணர்ச்சியால் தன் உடல் நடுநடுங்க, சிறுவனான துரியோதனன் அங்கு சிலைபோல நின்றான். மீண்டும் தன் தந்தையின் அறைக்குச் செல்ல அவன் திரும்பியபோது, தன் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்த, பெரியவர்கள் அனைவரும் தட்டிக் கழித்த அனைத்துக் கேள்விகளுக்குமான பதில்களைக் கண்டுபிடிப்பதற்காகத் தான் வேகமாக வளர்ந்து பெரியவனாக ஆக வேண்டும் என்று அவன் ஏக்கம் கொண்டான். பிறகு தன் சிற்றப்பாவின் கண்களில் தென்பட்ட வேதனையை அவன் நினைவுகூர்ந்தான். ஒருவேளை, வளர்ந்து பெரியவனாவது அவ்வளவு நல்லதொரு விஷயம் இல்லை போலும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

பீமனைப் பற்றித் தன் மாமன் சகுனியுடன் கண்டிப்பாகப் பேசியே ஆக வேண்டும் என்று துரியோதனன் பரிதவித்தான். சகுனி அரசவையில் இருக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். துரியோதனன் பாண்டவர்கள் ஐவரையும் அடியோடு வெறுத்தான். துரியோதனனின் சிற்றப்பாவான பாண்டு இறந்து ஆறு மாத காலம் ஆகியிருந்தது. தங்களுக்கு ஏற்பட்டத் துயரத்திற்காகப் பாண்டுவின் மகன்கள் இப்போதும் இரங்கல்களையும் பரிவையும் பெற்றுக் கொண்டிருந்தனர். அது அவர்களை அதிக இனிமையற்றவர்களாகவும் வெறுக்கத்தக்கவர்களாகவும் ஆக்கியது. அவர்களுடைய தாயார் முன்பு எப்போதையும்விட இப்போது அதிக அதிகாரத்தைக் கொண்டிருந்ததால், அவர்கள் இப்போது கூடுதல் சலுகைகளை அனுபவித்தனர். பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாதுரி, தன் கணவனின் சிதையில் தீக்குளித்துத் தானும் மாண்டு போனதால், குந்தி தன்னுடைய மூன்று மகன்களோடு கூடவே மாதுரியின் இரட்டைக் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்துவிட்டிருந்தாள்.

அரசவைக்குச் செல்லும் யோசனையை துரியோதனன் விரும்பவில்லை. சமீப மாதங்களில் இரண்டு முறை நடந்திருந்ததைப்போல, காரசாரமான விவாதங்கள் எதுவும் இப்போது அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கக்கூடாது என்று அவன் வேண்டிக் கொண்டான். விதுரனைப் பிரதம மந்திரியாக ஆக்குவதென்று

அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர் தீர்மானித்தபோது முதல் விவாவதம் எழுந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த அறிவிப்பை அவர் வெளியிட்டபோது, துரியோதனன் தன் மாமன் சகுனியுடன் அரசவையில் அமர்ந்திருந்தான்.

"அஸ்தினாபுரத்திற்கு இன்று ஒரு சிறப்பான நாள். அறிவுக்கூர்மை கொண்ட, கற்றறிந்த அறிஞரான விதுரனை, மாண்புமிகு அரசர் திருதராஷ்டிரனின் ஒப்புதலுடன், அஸ்தினாபுரத்தின் பிரதம மந்திரியாக நான் நியமிக்கிறேன்," என்று பீஷ்மர் அறிவித்தபோது, அரசவையில் திடீரென்று ஒரு பெருங்கூச்சல் எழுந்தது.

தௌமியன் என்ற ஓர் இளம் புரோகிதன் எழுந்து நின்று, "ஆனால், அரசே, அவன் ஒரு சூத்திரன். ஓர் அரண்மனை வேலைக்காரியின் மகன்!" என்று ஆவேசக் கூச்சலிட்டான். துரியோதனன் தன் மாமன் சகுனியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். சகுனியின் முகத்தில் ஓர் அற்பத்தமான பெருமிதப் புன்னகை படர்ந்திருந்தது. அவனுடைய கைகள் தன்னுடைய கால்மூட்டுக்களை வருடிக் கொண்டிருந்தன.

அப்போது பீஷ்மர் தன் கைகளை உயர்த்தினார். முணுமுணுப்புகள் உடனடியாக நின்றன. "தௌமியா, மாண்புமிகு அரசர் திருதராஷ்டிரனையும் காலம் சென்ற அரசர் பாண்டுவையும்போல, விதுரனும் என் தந்தை சாந்தனுவின் பேரன்தான் என்பதை நான் உனக்கு நினைவுபடுத்த வேண்டுமா?"

"ஆனால், ஐயா . . ."

"அரசரின் பாட்டியான சத்தியவதி, சத்திரியரான என் தந்தையை மணமுடித்த ஒரு மீனவப் பெண் என்பதையும் நான் உனக்கு நினைவுபடுத்த வேண்டுமா? அவருடைய மகனான விசித்திரவீரன் தனக்கு ஒரு வாரிசை விட்டுச் செல்லாமல் காலமானபோது, இதே மீனவப் பெண்தான், உன்னைப் போன்ற ஆண்களின் வார்த்தைகளை மீறி, நியோகம் என்ற பண்டைய வழக்கத்திற்கு ஏற்ப, தன்னுடைய இன்னொரு மகனான வியாசரை அழைத்து வந்து, கணவனை இழந்து கைம்பெண்களாக நின்ற தன் மருமகள்களைக் கருத்தரிக்கச் செய்யுமாறு அவரிடம் கூறி ஒரு துணிச்சலான காரியத்தைச் செய்தார் என்பதையும் நான் உனக்கு நினைவூட்ட வேண்டுமா?"

"ஐயா, நியோகம் என்பது . . ."

"தௌமியா, உன் பிரசங்கங்களை உன்னோடு வைத்துக் கொள். வியாசர் யார் என்று கூறு பார்க்கலாம்." இக்கேள்வியைச் செவிமடுத்த அந்த இளம் புரோகிதன் நெளிந்தான். "உண்மையைப் பேசுவதற்கு நீ ஏன் இவ்வளவு சங்கடப்படுகிறாய்? என்னுடைய சிற்றன்னையான சத்தியவதிக்கு, சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த மகன்தான் வியாசர்.

என் சிற்றன்னை என் தந்தையைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு, பராசர முனிவருடன் பெற்றுக் கொண்ட மகன்தான் வியாசர். ஒரு மீனவப் பெண்ணுக்கு மகனாகப் பிறந்த அவர்தான், திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோரின் தந்தை. அப்படியென்றால், விதுரன் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்?" என்று பீஷ்மர் கேட்டார். வழக்கமாகக் கண்டிப்பை வெளிப்படுத்திய அவருடைய முகத்தில் இப்போது ஒரு குறும்புத்தனமான புன்னகை விரிந்திருந்தது.

"பீஷ்மர் தெளமியனைச் சரியாக மடக்கிவிட்டார்!" என்று சகுனி தன் மருமகன் துரியோதனின் காதில் கிசுகிசுத்தான். துரியோதனன் ஒரு விளக்கத்தை எதிர்பார்த்துத் தன் மாமனைப் பார்த்தான். அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர், தெளமியனின் சொந்த வாதங்களை எடுத்து அவனுக்கு எதிராக அவற்றைத் திருப்பி, அவற்றைக் கொண்டு அவனை அழகாகக் கட்டிப் போட்டுவிட்டிருந்ததாக சகுனி அந்த இளம் சிறுவனிடம் விளக்கினான். விதுரனின் தாயாரின் குலம் காரணமாக விதுரன் ஒரு சூத்திரன் என்று அந்த இளம் புரோகிதன் கூறினால், பிறகு ஒட்டுமொத்தக் குரு வம்சாவழியினரும் சூத்திரர்கள் என்று பொருள்படும். ஏனெனில், அவர்களுடைய பாட்டி ஒரு மீனவப் பெண். விதுரனின் குலம் குறித்துக் கேள்வி எழுப்புவது அரசனின் தலைமுறையினரின்மீது கேள்வி எழுப்புவதைப் போன்றது.

தான் வீழ்த்தப்பட்டிருந்ததை அறிந்த தெளமியன், தொங்கிப் போன முகத்துடன் தன் இருக்கையின்மீது அமர்ந்ததை துரியோதனன் பார்த்தான். பிறகு, புதிய பிரதம மந்திரியான விதுரன், தான் இறக்கும்வரை தன் பேரரசுக்குக் கடமை வழுவாமல் சேவை செய்வதற்கு உறுதிமொழி எடுத்துக் கொண்டான்.

அன்று புதிய பிரதம மந்திரியைத் தன் மாமன் சகுனி உணர்ச்சிகரமாகப் பாராட்டியிருந்தாலும்கூட, அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆழமாக வெறுத்தனர் என்பதை துரியோதனன் எப்படியோ உணர்ந்து கொண்டான்.

அரசவையில் நிகழ்ந்த இரண்டாவது விவாதமும் துரியோதனனுக்கு விலாவாரியாக நினைவிருந்தது. இறந்து போன பாண்டுவின் மனைவியான குந்தி, அரசவை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளத் தன்னை அனுமதிக்குமாறு பீஷ்மரைக் கேட்டுக் கொண்டதிலிருந்துதான் அனைத்தும் துவங்கின. பீஷ்மர் தன் தீர்மானத்தை அறிவித்தபோது, அரசவை நிகழ்வுகளில் பெண்கள் பங்கு கொள்வது வழக்கத்திற்கு மாறான ஒன்று என்று தெளமியன் கோபத்தோடு அதற்கு மறுப்புத் தெரிவித்தான். விதவைகள் பொது இடங்களில் தலைகாட்டக்கூடாது என்பதற்கு ஆதரவாகப் பலவேறு இந்துமத விதிகளை அந்தப்

பழமைவாத பிராமணன் மேற்கோள் காட்டினான்.

பழமைவாதத்திற்கு எதிரான இந்தப் போராட்டத்தில் பீஷ்மர் விதுரனை முன்னிலையில் வைத்தார். விதுரனும் தன் பங்கிற்குச் சொற்திறத்துடன் வேதங்களிலிருந்து மேற்கோள் காட்டி, பண்டைய காலங்களிலிருந்தே நாட்டின் விவகாரங்களில் விதவைகள் உட்படப் பெண்கள் முக்கியமான பாத்திரங்களை வகித்து வந்திருந்ததற்கான எடுத்துக்காட்டுகளால் கற்றறிந்த பிராமணர்களைத் திணறடித்தான். அறிவுப்பூர்வமான விவாதம் இங்கு பலனளிக்காமல் போனபோது, வேதங்களைப் படிப்பதற்கு விதுரனுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும், புனித நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசுவதற்கு அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் கூறி, அந்தப் புரோகிதன், விதுரனை இழிவுபடுத்தத் துவங்கினான். அப்போது விதுரன் அனுபவித்த வேதனையை துரியோதனனால் இன்னும் உணர முடிந்தது.

நாடு முழுதும் பயணம் செய்திருந்த மாபெரும் வேத விற்பன்னரான வியாசர், அன்று அரசவைக்கு வருகை தந்தது புதிய பிரதம மந்திரியான விதுரனின் அதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். அந்த மாபெரும் முனிவரின் பாதங்களைத் தொட்டு வணங்குவதற்காக பீஷ்மரும் அரசன் திருதராஷ்டிரனும்கூடத் தங்கள் இருக்கைகளைவிட்டு எழுந்தனர். இந்த நுட்பமான கேள்வி குறித்து வியாசரின் அறிவுரையை பீஷ்மர் நாடியபோது, அரசவையில் அப்போது நடந்தேறிக் கொண்டிருந்த வார்த்தைப் போரை, தன்னுடைய இயல்பான நகைச்சுவை உணர்வாலும் அறிவாலும் வியாசர் அமைதிப்படுத்தினார். அனைத்து வேதங்களிலும் உச்சகட்ட வல்லுனராகக் கருதப்பட்ட அவர், பரதகண்டத்தின் பண்டைய வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, வகைபடுத்தி ஒழுங்கமைத்து, அவற்றைப் பதிவு செய்வதற்கான வேலையில் ஈடுபட்டிருந்தார். விதுரன் கூறியது சரிதான் என்று அவர் அங்கிருந்த புரோகிதர்களிடம் கூறினார்.

“வேதங்களிலிருந்து மேற்கோள் காட்டுவதற்கு ஒரு சூத்திரனுக்கு என்ன உரிமை இருக்கிறது? குருவே, விதுரனுடன் உங்களுக்கு இருக்கின்ற தனிச்சிறப்பான உறவின் காரணமாக நீங்கள் அவனுக்காகப் பச்சாதாபப்படுகிறீர்கள் என்று நினைக்கிறேன்,” என்று கூறிவிட்டு, தெளமியன், தன் ஆதரவாளர்களைப் பார்த்து ஏளனமாகப் புன்னகைத்தான்.

அந்தப் புரோகிதன் அவ்வாறு குறிப்பிட்டதற்கு என்ன பொருள் என்று துரியோதனன் தன் மாமனிடம் கேட்டபோது, அமைதியாக இருக்குமாறு சகுனி அவனிடம் கூறினான். ஆனால் அங்கு நிலவிய

இறுக்கத்தை துரியோதனனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. சகுனி அந்த முனிவரையே தீவிரமாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

தெளமியனின் குத்தல் பேச்சிற்குப் பதிலளிக்கும் விதமாக வியாசர் நமுட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். "நீ என்ன கூற வருகிறாய் என்பதை நேரடியாகக் கூற நீ ஏன் தயங்குகிறாய்? நான் ஒரு சூத்திரன். அதோடு, திருமண உறவிற்கு வெளியே பிறந்தவன். கரிய நிறத் தோலைக் கொண்ட ஒரு மீனவப் பெண்ணுக்கும் கற்றறிந்த ஒரு பிராமணனான பராசரனுக்கும் இடையேயான ஒரு தகாத உறவின் மூலம் பிறந்தவன் நான். என் தந்தை எனக்கு வேதங்களைக் கற்றுக் கொடுத்தபோது, என் சாதியைப் பற்றி ஒரு கணம்கூட யோசிக்கவில்லை."

அந்தப் புரோகிதர்கள் அவர் முன்னால் சங்கடத்துடன் நெளிந்தபடி நின்றனர்.

"என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்த அறிவோடு, என் பயணங்களின் மூலமாகவும், இந்நாடு நெடுகிலுமுள்ள துறவிகள் மற்றும் அறிஞர்களோடு நான் உரையாடியதிலிருந்தும் நான் கைவரப் பெற்ற அறிவும் சேர்ந்துள்ளது. இந்த மாமேதைகளில் ஒருவர்கூட என் சாதி என்னவென்று என்னிடம் ஒருபோதும் கேட்கவில்லை. இமயமலையிலிருந்து தொடங்கி, மூன்று கடல்கள் ஒன்றுகூடும் புனித நகரம்வரை நான் பயணித்துள்ளேன். வீட்டில் நான் என்ன மொழி பேசினேன் அல்லது எது என் வட்டார வழக்கு என்று எந்தவோர் அறிஞரும் என்னிடம் கேட்டதில்லை. அவர்கள் பல்வேறு பிரிவுகள் மற்றும் சமயங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் எண்ணங்களில் மாறுபடிருந்தாலும், மனிதகுலம் குறித்த அன்பு எனும் உலகளாவிய மொழியை அவர்கள் அனைவருமே பேசினர். அவர்கள் நகரங்களிலிருந்து வெகு தொலைவில் வாழ்ந்தனர். உலகின் வசதிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, காடுகளின் அமைதியை அவர்கள் நாடினர். பிறப்பின் காரணமாக அவர்கள் எந்தவோர் அதிகாரத்தையோ அல்லது மேன்மையான பதவியையோ உடும்புபோலப் பற்றிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இந்துமத விதிகளை எழுதவுமில்லை, அவற்றை நம்பவுமில்லை. ஆனால் இங்கு நீங்கள் உங்களுடைய அறிவையும் மேதமையையும் பயன்படுத்தி, சாதி, சமயம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைப் பிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையான மாபெரும் மனிதர்கள் ஒட்டுமொத்த உலகின் நலனை மட்டுமே விரும்பினர். இங்குதான் உங்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. உண்மையைப் புரிந்து கொள்வதற்கான அறிவைக் கடவுள் உங்களுக்குக் கொடுக்க

வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன். பரசுராமனைப் போன்றவர்கள் தொடர்ந்து நீடித்தால், இப்புனித பூமியில், எதிர்காலத்தில் ரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடும் என்பதை என்னால் தெளிவாகப் பார்க்க முடிகிறது."

அரசவையில் ஒரு கனத்த மௌனம் நிலவியது. சகுனியின் கை தன்னுடைய தோளை இறுக்கிப் பிடித்திருந்ததால் ஏற்பட்ட வலியில் துரியோதனன் துடித்தான். அந்தப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவன் முயன்றான். ஆனால் அவன் தன் மாமனின் முகத்தைப் பார்த்தபோது, திடீரென்று அவனுக்கு பயம் ஏற்பட்டது. சகுனி அந்த முனிவரை வெளிப்படையான பகைமையுணர்வுடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவன் தன் மருமகனைப் பார்த்தான். சகுனி தன் பிடியைத் தளர்த்திக் கொண்டபோது, அவனுடைய முகமும் ஆசுவாசமடைந்தது.

"குந்தி அரசவைக்கு வரலாம்," என்று அரசாட்சிப் பொறுப்பாளர் அறிவித்தபோது, ஆங்காங்கே சில கைதட்டல்கள் எழுந்தன.

சகுனி தோரணையாக எழுந்து நின்று, "மேன்மை பொருந்தியவரே, அரசவைக்கு வருவதற்கு என் சகோதரி காந்தாரியும் தகுதி வாய்ந்தவள்தான், இல்லையா?" என்று கேட்டான்.

பீஷ்மர் அவனை நீண்ட நேரம் வெறித்துப் பார்த்துவிட்டு, இறுதியில், "இதிலென்ன சந்தேகம்? இது நாம் முன்னோக்கி எடுத்து வைக்கின்ற ஒரு நேர்மறையான அடி. பண்டைய காலப் பெண்களைப்போல, காந்தாரியும் குந்தியும் தங்கள் ஞானத்தால் நம் அரசவையை ஆசீர்வதிக்கட்டும்," என்று கூறினார்.

சகுனி துரியோதனனைப் பார்த்துக் கண்ணடித்தவாறே தன் இருக்கையின்மீது அமர்ந்தான். வியாச முனிவர் இதை நம்ப முடியாதவராகத் தன் தலையை ஆட்டிக் கொண்டே அங்கிருந்து வெளியேறினார். துரியோதனன் அன்றைய தினம் குறித்து இன்னும் பின்வருத்தம் கொண்டிருந்தான். காந்தாரிக்குத் தன் குழந்தைகளுடன் செலவிடுவதற்கு நேரம் இருக்கவில்லை. குந்தியின் ஒவ்வோர் அசைவிற்கும் பதிலடி கொடுப்பதற்கே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது. தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்திற்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த, சக்திவாய்ந்த அந்த இரண்டு பெண்களிடம் சூழ்ச்சியும் சதியும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. வெறும் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோதிலும்கூட, அரண்மனையில் நிலவிய இறுக்கம் துரியோதனுக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால், அவ்விரு பெண்களுக்கும் இடையே நடந்து கொண்டிருந்த கடுமையான

சண்டையைப் பற்றித் தங்களுக்கு எதுவுமே தெரியாது என்பதுபோல அரச குடும்பத்தினர் அனைவரும் நடந்து கொண்டனர்.

"அந்தப் புரோகிதர்கள் உன் தாயாரைவிடக் குந்திக்குச் சாதகமாக எப்படிப் பேசுகின்றனர் என்று பார்," என்று ஒரு தருணத்தில் சகுனி துரியோதனனுக்குச் சுட்டிக்காட்டியிருந்தான். ஒருசில வாரங்களுக்கு முன், இதே புரோகிதர்கள்தான் குந்தி அரசவை நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். துரியோதனனின் குழப்பத்தைக் கண்ட சகுனி வேடிக்கையாகச் சிரித்தான். "உன் சித்தி அந்தக் கிறுக்கர்களுக்கு மிகவும் பிரியமானவளாகத் தன்னை ஆக்கிக் கொண்டாள். தெளமியனைவிட அதிகப் பழமையான கண்ணோட்டங்கள் அவளிடம் உள்ளன. நீ எச்சரிக்கையாக இல்லை என்றால், என்றேனும் ஒருநாள் அவர்கள் உன்னையும் உன் சகோதரர்களையும் பிச்சைக்காரர்களைப்போல இங்கிருந்து தூக்கி வெளியே எறிந்துவிடுவர். உன் பெற்றோருக்கும் இதே கதிதான் ஏற்படும்."

"ஆனால் மாமா . . ." சகுனியின் விஷமப் புன்னகையை துரியோதன் தன் வெகுளித்தனமான கரிய கண்களால் ஏறிட்டுப் பார்த்தான்.

"துரியோதனா, நீ கவலைப்படாதே. நான் உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்," என்று கூறிவிட்டு, சகுனி அவனுடைய தலையைப் பாசத்துடன் வருடிக் கொடுத்தான்.

பீமனிடமிருந்து மயிரிழையில் தப்பிய பிறகு, துரியோதனன் சகுனியிடம் தஞ்சம் புக விரும்பினான். சகுனியுடன் இருந்தபோது அவனுக்குத் தெம்பாக இருந்தது. அவன் அந்த நீண்ட தாழ்வாரத்தின் வழியே நடந்து சென்றான். சுவர்கள்மீது பொருத்தப்பட்டிருந்த எண்ணெய் விளக்குகளை வேலைக்காரர்கள் ஏற்றிக் கொண்டிருந்தனர். பிரம்மாண்டமான அரசவையிலிருந்து சத்தங்கள் வந்து கொண்டிருந்ததை அவனால் கேட்க முடிந்தது. நன்றாக ஒளியூட்டப்பட்டிருந்த அரசவைக்குள் அவன் நுழைந்தபோது, கதவருகே நின்ற காவலர்கள் அவன் முன்னால் குனிந்து வணங்கி, அவனுடைய வரவை அங்கீகரித்தனர். விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட, அழகான வேலைப்பாடுகளுடன்கூடிய அரியணையின்மீது அஸ்தினாபுர அரசனான திருதராஷ்டிரன் வீற்றிருந்தான். விலை மதிப்பிட முடியாத அவனுடைய மணிமகுடம், அழகான கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த, படிகத்தால் ஆன சரவிளக்குகளிலிருந்து வந்த பொன்னிற ஒளியைப் பிரதிபலித்தது. திருதராஷ்டிரனுக்கு அருகில், அதே போன்ற சம அளவு அற்புதமான ஒரு நாற்காலியின்மீது குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர் அமர்ந்திருந்தார்.

சகுனியை எங்கும் காணவில்லை.

தன்னுடைய தாத்தாவான பீஷ்மர் மும்முரமாகக் கடிதங்களை எழுதிக் கொண்டிருந்ததையும், அரசவைக்குத் தன் அறிவுரை தேவைப்பட்டபோது மட்டுமே அவர் குறுக்கிட்டுப் பேசியதையும் துரியோதனன் கவனித்தான். பிரதம மந்திரியான விதுரன் அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். தன் சிற்றப்பாவான விதுரனைத் துரியோதனன் மிகவும் விரும்பினான். ஆனால் தன் சொந்தப் பெற்றோர் உட்பட, அனைவரும் ஏன் அவரை ஒருவிதமான வெறுப்போடு நடத்தினர் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. துரியோதனன் காந்தாரியின் கவனத்தைக் கவர முயற்சித்தான். ஆனால் பீஷ்மர்தான் அவனைக் கண்டுகொண்டு, தன் மடியின்மீது வந்து உட்காருமாறு அவனை அழைத்தார். மற்றவர்களின் மடியின்மீது உட்காரும் அளவுக்குத் தான் சிறு பிள்ளை அல்ல என்று துரியோதனன் நினைத்தான். ஆனாலும் அந்தப் பெரியவருடைய விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு ஒருசில நிமிடங்கள் அவன் அவருடைய மடிமீது உட்கார்ந்தான். பீஷ்மர் வற்புறுத்தியதால் அவருடைய கன்னத்தில் தர்மசங்கடத்துடன் வேகவேகமாக ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு, பிறகு அவருடைய மடிமீதிருந்து கீழே குதித்து வேகமாக அங்கிருந்து ஓடினான். இதைக் கண்டு சிரித்த அரசவையினரின் சிரிப்பொலி அவனுடைய காதுகளில் ஈயம்போலப் பாய்ந்தது. அவன் உடனடியாகத் தன் மாமன் சகுனியைப் பார்க்க விரும்பினான்.

2

ஆசானின் வருகை

தொடுவானத்தில் மூன்று கரிய நிழலுருவங்களை துரியோதனன் பார்த்தான். அந்த உருவங்கள் மெல்ல மெல்லப் பெரிதாகி அஸ்தினாபுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. அது அதிகாலை நேரம். ஒரு மெல்லிய மாமரக் கிளையில் அவன் தொங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய தம்பி துச்சாதனன் ஏற்கனவே இன்னும் அதிக உயரத்திற்கு ஏறி, மாம்பழங்களைப் பறித்துக் கீழே எறிந்து கொண்டிருந்தான். அவர்களுடைய சகோதரி துச்சலை தன் பாவாடையை விரித்தபடி அங்குமிங்கும் ஓடிச் சென்று அந்த மாம்பழங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தாள். அணில்கள் தமக்கு ஏற்பட்ட இந்த இடையூறைக் கண்டு கோபத்தில் சத்தமிட்டன.

அதிகாலைப் பொழுதாக இருந்தபோதிலும், அந்தக் கோடை நாள் அதிக வெப்பமாகவும் அதிகப் புழுதியாகவும் ஆகிக் கொண்டிருந்தது. ஆனால் மற்றக் குழந்தைகளைப்போலவே, இம்மூவரும் வெப்பத்தைப் பொருட்படுத்தவில்லை. இனிய மாம்பழங்களின் பழுத்த நறுமணம், கோடையின் வேதனைகளைவிட அதிக வலிமையானதாக இருந்தது. மேலும், குரு கிருபரின் பயிற்சி வகுப்பு விரைவில் தொடங்கவிருந்தது. பிறகு கோட்டைக்கு வெளியே இருந்த மாந்தோப்புகளுக்கு யாருக்கும் தெரியாமல் செல்வது சிரமமாகிவிடும். இந்தக் குறிப்பிட்ட மாமரத்தைக்கூட நேற்று மாலையில்தான் ஒரு செங்குத்துப் பாறையின் விளிம்பில் தற்செயலாக அவர்கள் கண்டுபிடித்திருந்தனர். சாப்பாட்டு

ராமனான பீமன் மாங்காய்களைக்கூட விட்டு வைக்கவில்லை. துரியோதனனும் அவனுடைய உடன்பிறப்புகளும் மாந்தோப்பின் அருகே சென்றால்கூட அவன் அவர்களை ஈவு இரக்கமின்றிப் புரட்டியெடுத்தான். உண்மையான அதிகாரம் எங்கே இருந்தது என்பதையும், யாருடைய மனத்தைக் குளிரச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருந்த அரண்மனைக் காவலர்கள் வழக்கமாகத் தங்கள் முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொண்டனர்.

பாண்டவச் சகோதரர்கள் ஐவரும் செங்குத்துப் பாறையின் கீழே வெகு தொலைவில் இருந்ததைக் கண்ட துரியோதனன் அந்த முட்டாளிடமிருந்து பாதுகாப்பாக உணர்ந்தான். மரக்கிளையிலிருந்து துரியோதனனால் அவர்களைப் பார்க்க முடிந்தது. மூத்தவனான தர்மன் சம்மணமிட்டு அமர்ந்து ஆழ்ந்து தியானித்துக் கொண்டிருந்தான். அவனிடம் தென்பட்டத் தீவிரம் அவனுடைய வயதுக்கு மீறியதாக இருந்தது. பீமன் ஒரு கலப்பின நாயைத் துரத்திக் கொண்டிருந்தான். அர்ச்சுனன் வில் வித்தையைப் பயிற்சி செய்து கொண்டிருந்தான். அவன் எந்தவிதமான கவனச்சிதறலோ அல்லது தடுமாற்றமோ இன்றித் தன் இலக்கைக் குறி வைத்தான். ஆனால் அவன் எதைக் குறி வைத்துக் கொண்டிருந்தான் என்பதைக் கவனித்தபோது துரியோதனன் நடுநடுங்கினான். அர்ச்சுனன் ஒரு பறவையின் கூட்டைக் குறி வைத்திருந்தான். அக்கூட்டில் ஒரு தாய்ப் பறவை தன் குஞ்சுகளுக்கு இரையூட்டிக் கொண்டிருந்தது. துரியோதனன் சத்தம் போட்டு அவனை எச்சரிக்க விரும்பினான். ஆனால் அதற்குள் அர்ச்சுனன் தன் அம்பை எய்திருந்தான். அதிர்ஷ்டவசமாக, அந்த அம்பு தன் இலக்கைத் தவறவிட்டது. அர்ச்சுனன் கோபத்தில் நிலத்தின்மீது ஓங்கி மிதித்தான். இரட்டையர்களான நகுலனும் சகாதேவனும் ஒரு துணிப் பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

முன்பு துரியோதனன் பார்த்த மூன்று உருவங்களும் ஒரு பிராமணர், அவருடைய மனைவி, மற்றும் அவருடைய மகன்தான். அச்சிறுவன் சுமார் எட்டு வயது கொண்டவன்போலத் தோன்றினான். நீண்ட கருந்தாடியுடனும் பொன்னிறத்துடனும் நெடுநெடுவென்று இருந்த அந்த பிராமணர், அர்ச்சுனனை நெருங்கியதை துரியோதனன் கவனித்தான். அந்த பிராமணருக்குப் பின்னால் நின்ற அவருடைய மனைவி, இளைத்த உடலுடன் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டாள். அவள் எக்கணத்திலும் நிலை குலைந்து விழுந்துவிடுவாள்போலத் தோன்றியது. அவர்களுடன் வந்த சிறுவன் ஒல்லியான உடல்வாகுடனும் பொன்னிறத் தோலுடனும் இருந்தான். அவன் தன் கரிய கண்கள் முழுக்க வியப்புடன் அசையாமல் நின்றான். பீமன் தன்

கண்களை உருட்டிக் கொண்டு, அச்சுறுத்தும் விதத்தில் அச்சிறுவனை நோக்கி நடந்தான். அச்சிறுவனனின் தந்தை அர்ச்சுனனோடு பேசிக் கொண்டிருந்ததால் இதைப் பார்க்கவில்லை. பீமன் பெரிதாகப் பல்லிளித்துக் கொண்டு தன்னைச் சுட்டிக்காட்டியதைக் கண்டு பயந்து போன அச்சிறுவன், தன் தாயின் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். பாறையிலிருந்து கீழே இறங்கிச் சென்று பீமனோடு சண்டையிட வேண்டும்போல துரியோதனனுக்குத் தோன்றியது. ஆனால் பீமனைத் தன்னால் வெற்றி கொள்ள முடியாது என்பதையும், அவன் தன்னையும் தன் தம்பியையும் துவைத்துப் போட்டுவிடுவான் என்பதையும் துரியோதனன் அறிந்திருந்தான். ஆனால் அந்த நோஞ்சான் சிறுவன் அவனிடமிருந்து தப்பிப்பதற்காவது அது ஒரு வாய்ப்பைக் கொடுக்கும் என்று அவன் எண்ணினான்.

துச்சாதனனும் பீமனைப் பார்த்திருந்தான். அங்கு இருந்ததிலேயே மிகப் பெரிய மாம்பழம் ஒன்றைத் தன் கையில் எடுத்து, மரத்தின் மேலேயிருந்து அதை பீமனை நோக்கி எறிவதற்கு அவன் தயாராக நின்றான். அந்த மாம்பழம் பீமனின் முகத்தின்மீது பட்டுத் தெறிப்பதைக் கற்பனை செய்து பார்த்து துரியோதனன் புன்னகைத்தான்.

நகுலனும் சகாதேவனும் உற்சாகமாக ஓடி வந்து எதையோ கூறினர். காற்று அவர்களுடைய குரல்களைப் பாறையின் உச்சிக்குச் சுமந்து வந்தது. அவர்கள் தங்களுடைய துணிப் பந்தை ஒரு கிணற்றில் தொலைத்துவிட்டிருந்ததாக துரியோதனின் காதுகளில் லேசாக விழுந்தது. பீமன் அந்த பிராமணச் சிறுவன்மீது ஆர்வமிழந்து, கிணற்றை நோக்கி ஓடினான். பீமனை நோக்கி ஏற்கனவே அந்த மாம்பழத்தை எறிந்திருந்த துச்சாதனன், ஒரு புதரை நோக்கி உருண்டான்.

“அண்ணா, நம்மிடம் இருந்த மிகச் சிறந்த மாம்பழத்தை நீ எறிந்துவிட்டாய்,” என்று துச்சலை சிணுங்கினாள்.

“வாயை மூடு!” என்று துச்சாதனன் அவளைப் பார்த்துச் சீறினான். உதட்டைப் பிதுக்கிக் கொண்டிருந்த தன் சகோதரியைப் பார்த்து துரியோதனன் புன்னகைத்தான்.

இதற்கிடையே, தர்மன் தன்னுடைய தியான நிலையிலிருந்து வெளியே வந்து, அந்த பிராமணரிடம் மரியாதையோடு பேசிக் கொண்டிருந்தான். அவன் அவர் முன்னால் பணிந்து, அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினான். தர்மனிடம் குடி கொண்டிருந்த, ஓர் அடிமை போன்ற இந்த நடத்தையை துரியோதன் வெறுக்கத் துவங்கியிருந்தான். பீமன் அந்தக் கிணற்றின் தாழ்வான சுவர்மீது சாய்ந்து கொண்டிருந்தான். அக்கிணற்றின் வெகு ஆழத்தில் இருந்த தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த தங்கள் துணிப் பந்தை அந்த

இரட்டையர்கள் இருவரும் சுட்டிக்காட்டினர்.

“துரியோதனா, அந்த குண்டோதரனை அந்தக் கிணற்றுக்குள் என்னால் தள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்,” என்ற் துச்சாதனன் பரிதாபமான ஏக்கத்துடன் கூறியதைக் கேட்டதும் துரியோதனன் கிட்டத்தட்ட வாய்விட்டுச் சிரித்துவிட்டான்.

தர்மன் அந்த பிராமணரைக் கிணற்றின் அருகே அழைத்துச் சென்றான். அர்ச்சுனன் தன் கையில் தன் அம்பை இறுக்கமாகப் பிடித்தபடி அவர்களுக்குப் பின்னால் சென்றான். அந்த நலிவுற்றப் பெண்ணும் அவர்களைப் பின்தொடர்ந்தாள். இரண்டு காவலர்கள் கோட்டைக் கதவருகே காவல் நின்றனர். அவர்களுடைய முகங்களில் சலிப்புத் தென்பட்டது. அந்த உயரமான பிராமணர் அக்கிணற்றுக்குள் எட்டிப் பார்த்து, தன் தோளின்மீது சுமந்து கொண்டிருந்த வில்லைத் தாழ்த்திப் பிடித்தார். பிறகு தன் அம்பறாத்தூணியில் இருந்து ஓர் அம்பை எடுத்து, அதன் மழுங்கிய முனையில் தன் அங்கவஸ்திரத்தைக் கட்டினார். தன் உடமைகளைச் சேர்த்து மூட்டையாகக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து, அதை அந்த அங்கவஸ்திரத்தின் மறுமுனையோடு இறுக்கி முடிச்சிட்டார். பிறகு, ஆபத்தான விதத்தில் அந்தக் கிணற்றின்மீது சாய்ந்து கொண்டு, கவனமாகக் குறி பார்த்து, அந்த அம்பை அக்கிணற்றின் இருண்ட ஆழங்களுக்குள் விடுவித்தார். பாண்டவச் சகோதரர்களிடமிருந்து எழுந்த மகிழ்ச்சிக் கூக்குரல்களிலிருந்து, அந்த பிராமணர் தன் இலக்கைச் சரியாகத் தாக்கியிருந்ததை துரியோதனன் தெரிந்து கொண்டான்.

துரியோதனன் தன் தம்பியைப் பார்த்தான். கீழே நடந்தேறிக் கொண்டிருந்த காட்சியை துச்சாதனன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். ஓர் இருண்ட கிணற்றில் முப்பதடி ஆழத்தில் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த ஒரு பந்தைக் குறி வைத்துச் சரியாகத் தாக்குவது என்னவோர் அற்புதமான சாதனை என்று அவன் அதிசயித்தான். அந்த பிராமணர் அந்தப் பந்தை வெளியே எடுத்து, தன் அம்பின் கூரிய முனையிலிருந்து அதை விடுவித்து, பாண்டவச் சகோதரர்களில் கடைக்குட்டியான சகாதேவனிடம் அதைக் கொடுத்தார். அர்ச்சுனன் அவருடைய பாதங்களில் விழுந்து பணிந்தான். அந்த பிராமணர் தன் மென்மையான கைகளால் அவனைத் தொட்டுத் தூக்கினார். அதில் அர்ப்பணிப்பின் சாயல் தெரிந்தது.

அந்த பிராமணர் பாண்டவர்களுடன் எதைப் பற்றியோ கலந்தாலோசித்துக் கொண்டிருந்ததை துரியோதனன் கண்டான். தர்மன் உற்சாகமாக அரண்மனையைச் சுட்டிக்காட்டினான். அங்கே என்ன நடந்து கொண்டிருந்தது என்று புரிந்து கொள்ளக் கடுமையாக

முயற்சித்தபடி திருதிருவென்று விழித்துக் கொண்டு பீமன் அங்கு நின்றான். துரியோதனனின் கண்கள் அங்குமிங்கும் அலைபாய்ந்து, தன் பெற்றோரிடமிருந்து ஒருசில அடிகள் தள்ளி நின்ற அந்த பிராமணச் சிறுவனின்மீது நிலைத்தன. சுற்றுமுற்றும் பார்த்த அச்சிறுவனின் கண்களில், பகலவனின் ஒளியில் பளபளப்பாக மின்னிக் கொண்டிருந்த மாம்பழம் தென்பட்டது. அவன் ஆசையோடு அதைப் பார்த்துவிட்டு, பிறகு அதை நோக்கி ஓடினான். அவன் அதைத் தன் கையால் தொடவிருந்த நேரத்தில், கரிய உருவத்தைக் கொண்ட ஒரு சிறுவன் ஒரு புதருக்குப் பின்னாலிருந்து திடீரென்று அவன் முன்னால் வந்து குதித்து, தரையில் கிடந்த மாம்பழத்தை வெடுக்கென்று எடுத்து, திடுக்கிட்டு நின்ற அந்த பிராமணச் சிறுவனின் மேலாகப் பாய்ந்து சென்று, தன் உயிரைக் காத்துக் கொள்ளும் வேகத்துடன் ஓடினான். ஒரு கணம் வாயடைத்துப் போன அந்த பிராமணச் சிறுவன் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினான். பழத்தைத் தட்டிப் பறித்தச் சிறுவன், தனக்குப் பின்னால் தன்னைத் துரத்தி வந்து கொண்டிருந்தவனைப் பார்ப்பதற்காகத் திரும்பியபோது, தன் வழியில் குறுக்கே நின்ற பீமனின் பெரிய உருவத்தைப் பார்க்கவில்லை. அச்சுறுத்தும் விதத்தில் அந்த குண்டோதரன் தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கடைசிக் கணத்தில்தான் அவன் கவனித்தான். பீமன் சண்டைக்குத் தயாராக நின்றான். அவன் அச்சிறுவனின் தலையை நோக்கி ஓங்கி ஒரு குத்துவிட்டான். ஆனால் அச்சிறுவன் லாவகமாகக் குனிந்து அவனை ஏய்த்துவிட்டு, தன் ஓட்டத்தை நிறுத்தாமல், கண்ணிமைக்கும் நேரத்தில் பீமனின் கால்களைக் கடுமையாக வாரிவிட்டு வேகம் பிடித்தான். பீமன் தன் முகம் குப்புறத் தரையின்மீது விழுந்தான்.

துரியோதனனாலும் துச்சாதனனாலும் இதற்கு மேலும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர்கள் வயிறு குலுங்கச் சிரித்ததில் அவர்களுக்கு வயிற்று வலியே வந்துவிட்டது. துச்சலையும் அவர்களோடு சேர்ந்து கொண்டு, உற்சாகமாகத் தன் கைகளைத் தட்டியபடி மேலும் கீழும் குதித்தாள்.

என்ன அமளி என்று பார்ப்பதற்காகத் திரும்பிய அந்த பிராமணர், பிரச்சனைக்குரிய அந்த மாம்பழத்தைத் தன் கையில் பிடித்தபடி இளவரசர்களுக்கு நடுவே நின்று கொண்டிருந்த அந்த ஏழைச் சிறுவனைப் பார்த்தார். அவருடைய சொந்த மகன் ஒருசில அடிகள் தள்ளி நின்று கொண்டிருந்தான். ஆதரவற்று நின்ற அந்த ஏழைச் சிறுவனைப் பாண்டவ இளவரசர்கள் ஐவரும் நெருங்கினர். அந்த பிராமணர் அவர்களை முன்னின்று வழிநடத்தினார்.

கோட்டை வாசலருகே காவலுக்கு நின்ற உருவங்களைப் பார்த்து,

“காவலர்களே!” என்று அவர் கத்தினார்.

சலிப்போடு இருந்த இரண்டு காவலர்கள் வேண்டா வெறுப்பாக அக்கூட்டத்தினரை நோக்கி மெல்ல நடை போட்டனர். கோடைக் கதிரவன் இப்போது ஒவ்வோரு புல்லையும் சுட்டெரித்துக் கொண்டிருந்ததான். நிழலில் ஒதுங்கியிருந்த தங்களை வெயிலுக்கு வரவழைத்த அந்த அன்னியனை அக்காவலர்கள் தங்கள் மனத்திற்குள் அமைதியாகச் சபித்தனர். தன்னைக் கோபத்தோடு பார்த்துக் கொண்டிருந்த இளவரசர்களையும் அந்த பிராமணரையும் கண்ட அந்த ஏழைச் சிறுவன் பயத்தில் நடுங்கியபடி நின்றான். பீமனின் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது. கீழே விழுந்ததால் ஏற்பட்ட அவமானம் இன்னும் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. காற்று இப்போது திசை மாறி வீசிக் கொண்டிருந்ததால், கீழே நடந்த உரையாடல், துரியோதனனுக்கும் துச்சாதனனுக்கும் துச்சலைக்கும் மிகத் தெளிவாகக் கேட்டது.

பீமன் அச்சிறுவனை நோக்கி நகர்ந்தான். ஆனால் அந்த பிராமணர் உடனடியாக, “அவனைத் தொட்டு நீ உன்னைக் கறைபடுத்திக் கொள்ளாதே,” என்று பீமனிடம் கூறிவிட்டு, அந்த ஏழைச் சிறுவனைப் பார்த்து, “நீ எந்த சாதியைச் சேர்ந்தவன்?” என்று கேட்டார். இதைக் கேட்ட பீமன் குழப்பத்தோடு அந்த பிராமணரைப் பார்த்தான்.

அக்கேள்வி தன்னிடம்தான் கேட்கப்பட்டது என்பதை உணர்ந்த அச்சிறுவன் தலைகுனிந்து நின்றான். ஒருவனுடைய பெயரைக் கேட்பதற்கு முன்பு எப்படி ஒருவரால் அவனுடைய சாதியைப் பற்றிக் கேட்க முடிந்தது என்று அவன் வியந்தான். அவன் எதையோ முணுமுணுத்தான். மரத்தின்மீது இருந்த கௌரவ இளவரசர்களுக்கு அது சரியாகக் கேட்கவில்லை.

“என்ன! அஸ்தினாபுரத்தின் முக்கியக் கோட்டைக் கதவிற்கு இவ்வளவு அருகே ஒரு வேடுவ குலத்தவனா? தீண்டத்தகாத ஒருவன் அரச வீதியில் நடந்து செல்வதா? அரசன் இப்படித்தான் இங்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறானா? ஒரு குருடனிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? தர்மம் இங்கு வரம்பு மீறப்படுவதில் எந்த வியப்பும் இல்லை,” என்று அந்த பிராமணர் பிதற்றினார். பிறகு அவர் தர்மனிடம் திரும்பி, “குரு வம்சத்தின் பேரரசில் இத்தகைய அத்துமீறல்களைச் செய்யும் கயவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படுகிறது?” என்று கேட்டார்.

பாண்டவர்கள் தர்மசங்கடத்துடன் இருந்ததுபோலத் தெரிந்தது. என்ன பதில் கூறுவதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். “என்னால் அவனுடைய

தலையை உடைக்க முடியும்," என்று பீமன் தானாக முன்வந்தான். தன்னில் பாதி உருவத்தைக் கொண்டிருந்த, வேடுவ குலத்தைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுவன், தன்னைக் கீழே தள்ளி அவமானப்படுத்தியதை இன்னும் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"அமைதி!" பீமனின் முகம் வெளிறிப் போனது. அந்த பிராமணர் மீண்டும் தர்மனிடம் திரும்பி, "நீதான் அடுத்த அரசனாக ஆகப் போகிறாய். இந்தக் கயவனை எவ்வாறு கையாள வேண்டும் என்று நீயே கூறு. என் மைத்துனன் கிருபன் உனக்கு என்ன கற்றுக் கொடுத்திருக்கிறான் என்று நான் பார்க்கட்டும்," என்று கூறினார்.

தர்மன் சரியான பதிலை நினைவுகூர முயற்சித்துப் பதற்றமடைந்தான். 'கிருபரின் மைத்துனரா? இவர் துரோணரா? புகழ்பெற்ற இந்த குருவிற்காகத்தான் நாங்கள் அனைவரும் காத்திருந்தோமா?' என்று அவன் வியந்தான்.

ஆச்சரியத்தில் கண்கள் அகலமாக விரிய, துரியோதனன் வேகமாக மரத்திலிருந்து சறுக்கிக் கீழே இறங்கி வந்து, அமளி நடந்து கொண்டிருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அவனுடைய சகோதரனும் சகோதரியும் அவனைப் பின்தொடர்ந்தனர். தர்மனிடம் துரோணர் கூறிய ஏதோ ஒன்று அவனுடைய மனத்தை அரித்தது: 'அடுத்த அரசன்.' 'தர்மனால் எப்படி அஸ்தினாபுரத்தின் அடுத்த அரசனாக ஆக முடியும்? தற்போது ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் அரசரான திருதராஷ்டிரனின் முதல் மகன் நான்தானே?' என்று துரியோதனன் தனக்குள் வியந்தான். 'என் தந்தைக்குப் பார்வையில்லாத காரணத்தால், அவருடைய சார்பில், என் சிற்றப்பாவான பாண்டு ஆட்சி புரிந்தார். ஆனால், நேரம் வரும்போது, பாண்டுவின் மகன் அஸ்தினாபுரத்தின் அடுத்த அரசன் ஆவான் என்று அதற்குப் பொருளில்லை,' என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான். துல்லியமாக இந்த வகையான சூழ்ச்சியைப் பற்றித்தான் அவனுடைய மாமன் சகுனி அவனை எச்சரித்திருந்தான்.

துரியோதனன் தன் சகோதரனோடும் சகோதரியோடும் தங்களை நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்ட அந்த பிராமணச் சிறுவன், அவர்களை பயத்தோடு பார்த்துவிட்டுத் தன் தாயாரிடம் ஒட்டிக் கொண்டான். நன்றாகச் செதுக்கி வடிவமைப்பட்டிருந்ததுபோலக் காணப்பட்ட அச்சிறுவனின் முகத்தை இளவரசன் துரியோதனன் பார்த்தான். அச்சிறுவனின் சுருட்டை முடி அவனுடைய தோள்கள்மீது புரண்டு கொண்டிருந்தது. அவனுடைய வளைவான வாயும் அலகு போன்ற மூக்கும் சூதுவாதின்மையையும் உள்ளார்ந்த அழகையும் எடுத்துரைத்தன. அவனைக் கடந்து சென்றபோது துரியோதனன்

அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

“அசுவத்தாமா, இங்கே வா,” என்று அந்த பிராமணர் அச்சிறுவனை அழைத்தார். அவன் சந்தேகத்துடன் தன் தந்தையை நோக்கி நடந்தான். “இந்தக் கயவனுக்குரிய முறையான தண்டனை எது?”

அசுவத்தாமன் அதற்கு பதிலளிப்பதற்கு முன்பாக, அந்த ஏழைச் சிறுவன் அங்கிருந்து தலைதெறிக்க ஓட்டமெடுத்தான். தன் கையிலிருந்த மாம்பழத்தைப் பாதி வழியில் தவறவிட்ட அவன், சிறிய உருவத்தைக் கொண்டிருந்த அசுவத்தாமனின் மேலாகத் தாண்டிக் குதித்து, தன்னைச் சிறைப்பிடித்தவர்களிடமிருந்து தப்பித்துக் காட்டை நோக்கி ஒரு குரங்கைப்போல வேகமாக ஓடினான். மண்ணில் விழுந்து கிடந்த மாம்பழத்தை எடுப்பதற்காக அசுவத்தாமன் விரைந்தான். அவன் அதைத் தொடுவதற்கு முன்பாக, அவனுடைய தந்தை அவனைத் தடுத்து நிறுத்தினார். பிறகு, “போய் அந்தச் சிறுவனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்!” என்று அவர் கத்தினார்.

யாரும் அங்கு அசையவில்லை. அந்த ஏழைச் சிறுவன், இலை தழைகள் அங்குமிங்கும் அசைந்தாட, காட்டிற்குள் ஓடி மறைந்தான். ஒரு கணத்திற்குப் பிறகு அவற்றின் அசைவும் நின்றது. அரச வீதியை மாசுபடுத்திவிட்டு, அரச நிலங்களிலிருந்து திருடத் துணிந்த அந்த வேடுவனைக் கோட்டைக் காவலர்கள் தயக்கத்தோடு தேடிச் சென்றனர். இப்படிப்பட்டச் சிறிய அத்துமீறல்களைக் கோட்டைக் காவலர்கள் வழக்கமாக அவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொண்டதில்லை என்பதை துரியோதனன் அறிந்திருந்தான். ஏனெனில், ஏழைகள் எப்போதும் அரண்மனை வாசலுக்குப் படையெடுத்து வந்து, மிச்சம் மீதிகளை எடுத்துச் சென்றனர். அரச வீதியில் அரச குடும்பத்தினர் இருந்தால் தவிர, சாதி விதிமுறைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட ஓர் அற்பக் குற்றத்திற்காக இந்த வேகாத வெயியில் ஒரு சிறுவனைத் துரத்திச் செல்வது அக்காவலர்களுக்குத் தேவையற்ற முயற்சியாகப் பட்டது. அச்சிறுவனைத் தேடுவதுபோல அக்காவலர்கள் நன்றாகவே பாசாங்கு செய்தனர். தாங்கள் பாதியில் விட்டுவிட்டு வந்திருந்த பகடையாட்டத்தைத் தொடர்வதற்கு அந்த பிராமணர் தங்களை அமைதியாக விட்டுவிட்டுச் சென்றுவிட்டால் நன்றாக இருக்கும் என்று அவர்கள் கடவுளிடம் வேண்டிக் கொண்டனர். ஆனால் அந்த பிராமணர் அவர்களை விடுவதாக இல்லை. தகுதியற்ற அந்த அஸ்தினாபுரக் காவலர்கள் அந்தக் கயவனைச் சிறைப்பிடித்து வருவதற்காக, சுட்டெரித்த வெயிலையும் பொருட்படுத்தாமல் அவர் உறுதியாக நின்றார்.

“துரோணரா, என்னவோர் ஆச்சரியம்!” இளவரசர்களின் குருவான

கிருபரின் குரல் ஓங்கி ஒலித்து, அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தது. உடனடியாக, எல்லா இளவரசர்களும் தங்கள் குருவைப் பணிந்து வணங்கினர். அவர் அவர்களிடம், "வெயிலில் விளையாடுவதைவிட நீங்கள் செய்வதற்கு வேறு எதுவும் உங்களுக்குக் கிடைக்கவில்லையா? நேற்று நான் உங்களுக்குக் கொடுத்த வீட்டுப் பாடங்களைச் செய்து முடித்துவிட்டீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம் குருவே," என்று அர்ச்சுனன் கூறினான். வீட்டுப் பாடத்தைத் தான் மறந்துவிட்டது குறித்து துரியோதனன் தன்னைத் தானே அமைதியாக நொந்து கொண்டான்.

"நீங்கள் அனைவரும் சென்று நேற்றைய பாடங்களை மீண்டும் பயிற்சி செய்யுங்கள். நான் என் மைத்துனரை பீஷ்மரிடம் அழைத்துச் செல்கிறேன்," என்று கூறிவிட்டு, அவர் துரோணரை நோக்கித் திரும்பி, "பயணம் எப்படி இருந்தது?" என்று கேட்டார். பிறகு, தன் தாயாருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த அச்சிறுவனைப் பிடிக்க முயற்சித்தபடியே, "அடேய் அசுவத்தாமா, நீ நன்றாக வளர்ந்துவிட்டாய். இப்போது கிட்டத்தட்ட என் உயரத்திற்கு வந்துவிட்டாயே," என்று கூறினார்.

"கிருபா, அவனைத் தொடாதீர்கள்! அவன் ஒரு வேடுவச் சிறுவனைத் தொட்டுவிட்டான்," என்று துரோணர் கூறினார்.

"என்ன? துரோணா, இதெல்லாம் வெறும் அபத்தம்," என்று கூறிய கிருபர், கீச்சிட்டுக் கொண்டிருந்த அசுவத்தாமனின் இடுப்பைப் பிடித்து இழுத்து, அவனை உயரே தூக்கிப் போட்டுப் பிடித்தார்.

கிருபரின் சகோதரியும் அசுவத்தாமனின் தாயுமான கிருபி, சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்தியதற்காகத் தன் சகோதரனை நன்றியுடன் பார்த்தபடி மலர்ச்சியான முகத்துடன் நின்றாள். அவளுடைய கணவர் இன்னும் அக்காவலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் கிருபர் தன் மருமகன் அசுவத்தாமனைத் தன் பரந்த தோள்களின்மீது அமர்த்திக் கொண்டு அரண்மனையை நோக்கி நடக்கத் துவங்கியிருந்தார். பாண்டவ இளவரசர்களும் கிருபியும் அவரைப் பின்தொடர்ந்தனர். துரோணர் தயக்கத்தோடு திரும்பினார். பரதகண்டத்தின் மாபெரும் பேரரசு தறிகெட்டு ஆளப்பட்டுக் கொண்டிருந்த விதத்தை அவர் தன் மனத்திற்குள் குறித்துக் கொண்டார். சாதி விதிமுறைகளை இப்படி வெளிப்படையாக மீறுவது குறித்து, குரு வம்சத்தின் ஆட்சிப் பொறுப்பாளரிடம் தான் பேசப் போவதாக அவர் தீர்மானித்துக் கொண்டார். 'மழைக் கடவுள்கள் கோபம் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த நிலத்தில் தங்கள் ஆசீர்வாதங்களைப் பொழிய மறுத்துள்ளதில் வியப்பேதும் இல்லை,'

என்று அவர் நினைத்துக் கொண்டார்.

அக்குழுவினர் அனைவரும் கோட்டைக் கதவுகளுக்குப் பின்னால் பாதுகாப்பாகச் சென்று மறைந்தபோது, கிருபரின் தோள்கள்மீது அமர்ந்திருந்த அச்சிறுவன், தாங்கள் வென்றெடுத்த மாம்பழங்களை எண்ணிக் கொண்டிருந்த துரியோதனனையும் துச்சாதனனையும் துச்சலையையும் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான். துரியோதனன் அவனைப் பார்த்துச் சிரித்தான். தங்கள் வாழ்வில் பின்னால் நிகழவிருந்த விஷயங்கள் குறித்து அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

* * *

முன்பு புதர்களுக்குள் சென்று மறைந்திருந்த அந்த வேடுவர் குலச் சிறுவன், தான் தவறவிட்டிருந்த, யாரும் எடுக்காமல் விட்டுச் சென்றிருந்த மாம்பழத்தை எடுப்பதற்காக இப்போது திரும்பி வந்தான். துச்சாதனன் அவனுடைய குறுகலான இடையைப் பிடித்து இழுத்தான், ஆனால் துரியோதனன் முன்னுக்கு வந்தபோது அவன் தன் பிடியை விடுவித்தான். துரியோதனனைக் கண்ட அச்சிறுவன், 'நான் தன்னுடைய பாதங்களில் விழ வேண்டும் என்று இவன் எதிர்பார்க்கிறானா?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். தன்னுடைய கந்தலான ஆடைகளில் தன்னால் முடிந்த அளவுக்கு கண்ணியத்தை வரவழைத்துக் கொள்ள முயற்சித்து, அது முடியாமல் போனதால் தன் கண்களில் பெருக்கெடுத்தக் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அவன் போராடினான். கீழே கிடந்த மாம்பழத்தை எடுத்து துரியோதனன் அவனிடம் கொடுத்தான். அந்த ஏழைச் சிறுவன் அதிர்ச்சியடைந்தான். பிறகு, விலை மதிக்க முடியாத அந்தக் கனியைப் பிடுங்கிக் கொள்வதற்காக அவன் தன் கையை நீட்டினான். 'இளவரசே, நீங்கள் ஏன் ஆச்சரியமாகப் பார்க்கிறீர்கள்? அது சரி, பசியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?' என்று அவன் தன் மனத்திற்குள் நினைத்துவிட்டு, ஒரு காட்டு விலங்கைப்போல அந்தக் கனியைக் கடித்துக் கிழித்தான். துரியோதனன் தன் சகோதரியைத் தன் பக்கமாக இழுத்து, அவளுடைய எதிர்ப்புகளை அலட்சியப்படுத்திவிட்டு, அவள் தன் பாவாடையில் சேகரித்திருந்த மாம்பழங்கள் அனைத்தையும் எடுத்து அந்த வேடுவனின் முன்னால் கொட்டிவிட்டுப் பின்னால் தள்ளி நின்றான்.

பசியால் வாடிக் கொண்டிருந்த தன் குடும்பத்தினருக்கு உணவு தேடித்தான் அரச நிலங்களுக்குள் அச்சிறுவன் நுழைந்திருந்தான். பசி அவனை இதற்குக் கட்டாயப்படுத்தியிருந்தது. காவலர்கள் அவனைப் பிடித்துவிடக்கூடும் என்று அவனுடைய சித்தி பயந்து போயிருந்தாள்.

தாங்கள் சிறப்பாக இருந்த காலகட்டங்களில், திருடுவதைப் பற்றி அவன் ஒருபோதும் யோசித்திருக்கவே இல்லை. ஆனால் ஏழ்மை நல்லொழுக்கத்தோடு போட்டிக்கு வந்தபோது, எது ஏற்றுக் கொள்ளத்தக்கது, எது ஏற்றக் கொள்ளப்பட முடியாதது ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளி எப்படியோ மாயமாய் மறைந்து போயிருந்தது. தன்னுடைய ஒன்றுவிட்டச் சகோதரர்களோடு தன் சித்தி ஒரு புதருக்குப் பின்னால் மறைந்திருந்து இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பாள் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்கள் இரண்டு நாட்களாக எதுவும் சாப்பிட்டிருக்கவில்லை. அவன் அவளிடம் தன் திட்டத்தைப் பற்றிக் கூறியபோது, முதலில் அவள் சிறிது எதிர்ப்புக் காட்டினாள். கண்ணிமைக்கும் நேரத்தில் தான் மேற்கொண்ட தீர்மானத்தை நினைத்து இப்போது அவன் வருந்தினான். அஸ்தினாபுரக் காவலர்கள், காண்டவக் காட்டிற்கு அருகே இருந்த சிறைக்குத் தன்னை இழுத்துச் செல்லப் போவதாக அவன் உறுதியாக நம்பினான்.

“இந்த மாம்பழங்கள் உனக்குத்தான்,” என்று இளம் துரியோதனன் அச்சிறுவனிடம் கூறினான்.

அச்சிறுவன் ஒரு கணம் குழம்பிப் போய் நின்றான். பிறகு, இளவரசன் தன் மனத்தை மாற்றிக் கொள்வதற்கு முன்பாக, ஆர்வத்தோடு அவற்றை வேகவேகமாகப் பொறுக்கினான். அவனுடைய கைகளில் ஒருசில மாம்பழங்களுக்கு மட்டுமே இடமிருந்தன. அவனுடைய பிடியிலிருந்து தவறிக் கீழே விழுந்த பழங்களை எடுப்பதற்காக துரியோதனன் நகர்ந்தான். அந்த வேடுவச் சிறுவன் அப்பழங்களைத் தன் மார்பின் அருகே இறுக்கமாகப் பிடித்துத் தாங்கிக் கொண்டான். இளவரசன் துரியோதனன் மீதிப் பழங்களை அவற்றின்மீது ஒவ்வொன்றாக எடுத்து வைத்தான்.

பிறகு, சொக்கட்டான் விளையாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்த அரண்மனைக் காவலர்களைச் சுட்டிக்காட்டி, “அவர்கள் உன்னைப் பார்ப்பதற்கு முன் இங்கிருந்து விரைவாகப் போய்விடு,” என்று துரியோதனன் கூறினான்.

அச்சிறுவன் தன் சித்தியை நோக்கி ஓடினான். அவள் தன் மூச்சைப் பிடித்துக் கொண்டு இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அக்காட்டிற்குள் நுழையவிருந்த நேரத்தில், துரியோதனன் அவனை அழைத்தபோது, அச்சிறுவனின் இதயம் ஒரு கணம் நின்றது. இளவரசன் தன் பரிசை மீண்டும் தன்னிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப் போகிறானோ என்று நினைத்த அவனுடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. கோபமும் வெறுப்பும் அவனை ஆட்கொண்டன.

அந்த வேடுவன் அப்படியே நின்றான். அவன் திரும்பிப்

பார்த்தபோது, இளவரசன் புன்னகைத்தபடி அவனை நோக்கித் தன் கையை அசைத்துக் கொண்டிருந்தான். "ஏய், உன்னுடைய பெயர் என்ன?" என்று துரியோதனன் உரத்தக் குரலில் கேட்டான்.

வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. தன் பாதங்களுக்குக் கீழே இருந்த நிலம் வெப்பம் தாங்காமல் உருகிக் கொண்டிருந்ததுபோல அச்சிறுவனுக்குத் தோன்றியது. அவன் ஆழமாக சுவாசித்துவிட்டு, "என் பெயர் ஏகலைவன்," என்று திருப்பிக் கத்தினான். தன்னுடைய துணிச்சலைக் கண்டு தானே வியந்தவனாக, இளவரசன் அடுத்து என்ன கூறவிருந்தான் என்பதைக் கேட்கக்கூடக் காத்திருக்காமல் காட்டில் இருந்த பாதுகாப்பை நோக்கி அவன் ஓடினான்.

வேகாத வெயிலில் மதியம் முழுதும் வகுப்புத் தொடர்ந்தது. ஏகலைவனின் பசியையும் களைப்பான முகத்தையும் பற்றி நினைத்தவாறே துரியோதனன் அமர்ந்திருந்தான். அரச நிலங்களுக்குள் அத்துமீறி நுழையும் அளவுக்கு அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த ஏழ்மையைப் பற்றியும் அவன் யோசித்தான். வேதங்களில் தனக்கு இருந்த புலமையை வெளிப்படுத்தித் தன்னுடைய புதிய குருவிடம் நல்ல பெயர் எடுப்பதற்குக் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்த அர்ச்சுனனின் உற்சாகமான சத்தங்களைப் புறக்கணித்துவிட்டு, அந்த வேடுவ குலச் சிறுவன்மீதே துரியோதனனின் மனம் நிலைத்திருந்தது. 'அவனைப் பற்றியும் அவனுடைய மக்களைப் பற்றியும் நான் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்,' என்று இளவரசன் துரியோதனன் நினைத்தான். சரியாக அக்கணத்தில், துரோணரின் அருகே அமர்ந்திருந்த அசுவத்தாமனின் பார்வையும் இவனுடைய பார்வையும் சந்தித்துக் கொண்டன. அவர்களுடைய வயதிற்கே உரிய விதத்தில், வகுப்பு எவ்வளவு சலிப்பூட்டுவதாக இருந்தது என்பது பற்றி, அவர்கள் இருவருக்கும் இடையே பார்வையின் மூலம் கருத்துப் பரிமாற்றங்கள் அமைதியாக நிகழ்ந்தன.

"துரியோதனா, பகற்கனவு காண்பதை நிறுத்திவிட்டுப் பாடத்தில் கவனம் செலுத்து!" குரு துரோணரின் கோபக் குரல், வகுப்பில் நிலவிய சலிப்பைக் கலைத்து, துரியோதனை அவனுடைய வாழ்க்கையிலிருந்தும் அவனுடைய கனவுகளிலிருந்தும் பிரித்தெடுத்து, வேதங்கள் எனும் வறண்ட உலகிற்கு இழுத்து வந்தது.

வேதங்களை ஒப்பிப்பதற்கு அர்ச்சுனனும் தர்மனும் ஒருவரோடு ஒருவர் போட்டிப் போட்டுக் கொண்டிருந்தனர். துரியோதனன் தான் தூங்கிவிடாமல் இருக்கக் கடுமையாக முயற்சித்தான். வெளியே, மறைந்து கொண்டிருந்த கதிரவனின் தங்க நிற ஒளியில் பூமி குளித்துக் கொண்டிருந்தது. அரண்மனையிலிருந்து வெகு தொலைவில்,

களைப்பான, கரிய வேடுவப் பெண் ஒருத்தியும் அவளுடைய ஐந்து மகன்களும் தங்களுடைய நீண்ட உண்ணாவிரதத்தை முடித்துவிட்டு மனநிறைவோடு தூங்கினர். அவர்களிடமிருந்து ஒருசில அடிகள் தள்ளி, அந்த வேடுவக் குடும்பத்தினர் தூக்கி வீசியிருந்த மாங்கொட்டைகளைக் கரும்பியவாறு இன்னொரு சிறுவன் அமர்ந்திருந்தான்.

3

காட்டின் குழந்தை

கௌரவ இளவரசன் ஏன் இவ்வாறு நடந்து கொண்டான் என்று ஏகலைவனுக்குத் தெரியவில்லை. மாம்பழங்களைத் திருடுவதற்காக அரச நிலங்களுக்குள் நுழைந்தது ஒரு பொறுப்பற்றச் செயல்தான். ஆனாலும், பசி அவனுடைய பயத்தை வென்றிருந்தது. காவலர்களிடம் பிடிபட்டிருந்தால், அவர்களிடம் நன்றாக உதைபடுவதற்கு அவன் தயாராக இருந்திருந்தான். ஆனால், விலையுயர்ந்த பட்டாடைகளை அணிந்து நின்ற இளம் இளவரசனின் வினோதமான நடத்தை அவன் எதிர்பாராத ஒன்றாக இருந்திருந்தது. இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி நிச்சயமாக இருந்தாக வேண்டும் என்று அவன் நினைத்தான். உயர்ந்த குலத்தில் பிறந்த எவரொருவரும் இதுபோல நடந்து கொண்டதில்லை. ஒரு சிங்கம் பணிவாகவும் புல்லைத் தின்பதாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு வினோதமானதோ, இதுவும் அவனுக்கு அதே அளவு வினோதமாக இருந்தது. மாம்பழங்களில் விஷம் ஏற்றப்பட்டிருந்ததா என்று ஏகலைவன் தன் சித்தியிடம் கேட்டான். அவை அவனுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டிருந்ததால், அவற்றைத் தொடுவதற்கு அவன் பயந்து போயிருந்தான். ஆனால் பசியில் துடிதுடித்த அவனுடைய சகோதரர்கள் அவனுடைய கைகளிலிருந்து அப்பழங்களைப் பிடுங்கிக் கொண்டனர். எனவே, விஷத்தையும் இளவரசனையும் பற்றி மறந்துவிட்டு, சுவையான அந்தப் பழங்களுக்காகச் சண்டையிட அவன் தயாரானான். ஆனால்

அவனுடைய சித்தி இதில் குறுக்கிட்டு, மிகச் சிறந்த பழங்களைத் தன் குழந்தைகளுக்குக் கொடுத்தாள். அவ்வளவாகப் பழுக்காத பழங்கள் ஏகலைவனுக்குக் கிடைத்தன. இந்த ஓரவஞ்சனை ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல என்றாலும், அது அவன் மனத்தைக் காயப்படுத்தியது. இப்படிப்பட்ட விஷயங்களுக்காக அழக்கூடாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான். அவனுக்கு இப்போது பத்து வயது. அவன் ஓர் ஆண் சிங்கம். வளர்ந்தவர்கள் இது போன்ற அற்பமான விஷயங்களுக்காக அழுவதில்லை என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

ஏகலைவனுக்கு நினைவு தெரிந்தவரை, அவனுடைய சித்தியும், அவளுடைய ஐந்து மகன்களும், அவனும் பரதகண்டம் நெடுகிலும் நடந்து வந்திருந்தனர். இவர்களைப் போன்ற மக்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல. தனக்கு ஒரு தாய் இருந்த நினைவே அவனுக்கு இருக்கவில்லை. அவனுடைய தந்தையோ, அவனுடைய சித்தி சில சமயங்களில் அவனிடம் கூறிய கற்பனைக் கதைகளில் மட்டுமே வலம் வந்தான். ஏகலைவன் பிறந்த அன்றே அவனுடைய தாய் இறந்துவிட்டாள். இதனால் மனமொடிந்து போன அவனுடைய தந்தை அவனைத் தன் சகோதரனின் பொறுப்பில் விட்டுவிட்டு எங்கோ சென்றுவிட்டிருந்தான். ஏகலைவனின் சித்தி சில சமயங்களில் அவனுடைய தந்தையைப் பற்றிக் கூறியபோது, அவன் கிழக்கில் எங்கோ ஓர் இளவரசனாகவோ அல்லது ஓர் அரசனாகவோ இருந்ததாகவும், என்றேனும் ஒருநாள் தங்கள் அனைவரையும் ஏழ்மையிலிருந்து அவன் மீட்டெடுப்பான் என்றும் கூறினாள். ஆனால் பெரும்பாலான நேரங்களில், அவன் தன் மகனைக் கைவிட்டுவிட்டுச் சென்றதற்காக அவள் அவனைச் சபித்தாள். ஏகலைவன் ஓர் அனாதை என்பதை அவள் அவனுக்கு அடிக்கடி நினைவுபடுத்தினாள்.

தான் ஒரு சிறு குழந்தையாக இருந்தபோது தன்னைச் சுமந்து திரிந்த ஒரு மனிதனின் லேசான நினைவு ஏகலைவனுக்கு இருந்தது. அவன் அப்போது அந்த மனிதனின் தொடை உயரத்திற்கு மட்டுமே இருந்தான். அந்த மனிதனிடம்தான் அவனுடைய தந்தை அவனை விட்டுவிட்டுச் சென்றிருந்தான். ஆனால் அந்த மனிதன் இப்போது மத்திய இந்தியாவின் ஆழமான காடுகளில் எங்கோ புதைக்கப்பட்டுக் கிடந்தான். அவன் ஏதோ ஒரு பண்ணையிலிருந்து முட்டைகளைத் திருடியபோது பிடிபட்டு, அதற்காக அடித்துக் கொல்லப்பட்டிருந்தான். அவர்கள் அனைவரும் பசியால் வாடியபோதெல்லாம், அவனுடைய சித்தி தன் கணவனின் பெயரைச் சொல்லி அழைத்தாள். அவன் உயிரோடு இருந்திருந்தால், தன் மகன்கள் அனைவரும்

இளவரசர்களைப்போல வாழ்ந்திருப்பார்கள் என்று அவள் அடிக்கடி ஒப்பாரி வைத்தாள். அது உண்மையல்ல என்று புரிந்து கொள்ளும் அளவுக்கு ஏகலைவன் பெரியவனாக ஆகியிருந்தான். ஒரு மாபெரும் நாகரீகத்தின் நிழல்களில் வாழ்ந்து கொண்டு, தங்களைவிட மேன்மையானவர்களுக்கு முன்னால் பணிந்து போயும், தங்களைப் போன்ற சக துரதிர்ஷ்டசாலிகளிடம் மூர்க்கத்தனமாகப் போட்டிப் போட்டுக் கொண்டும் கொடூரமாக நடந்து கொண்டும் இருந்த தங்களைப் போன்ற பலரை அவன் பார்த்திருந்தான்.

தன் சித்தியின் மகன்களை ஏகலைவனால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் இன்னொரு சிறுவன் அவர்கள் பின்னாலேயே தடம் பிடித்து வந்து கொண்டிருந்தான். அவன் இவர்கள் அனைவரைவிடவும் மிகவும் அழுக்காக இருந்தான். அவனுடைய பற்கள் மிகவும் மோசமாக இருந்தன. அவனுடைய கால்களில் சீழ் ஒழுகிக் கொண்டிருந்த புண்கள் இருந்தன. அவனுடைய விலா எலும்புகள், ஆங்காங்கே வெடித்துப் போயிருந்த அவனுடைய கரிய தோலுக்குக் கீழே தெளிவாகத் தெரிந்தன. அவனுடைய தொப்புள் ஒரு காளானைப்போல, அவனுடைய பருத்த வயிற்றிலிருந்து வெளியே துருத்திக் கொண்டிருந்தது. ஏகலைவனின் குடும்பத்தார் அவனை அடிக்கடித் துரத்தியடித்தனர். ஆனால் அவன் சற்றும் சளைக்காமல் மீண்டும் மீண்டும் அவர்களையே பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். ஏகலைவனின் சித்தி அச்சிறுவனின்மீது கற்களை வீசியெறிந்தாள். ஆனால் அவர்கள் சாப்பிட்டுவிட்டுப் போட்ட மிச்சங்களைப் பொறுக்கிக் கொண்டும் உணவிற்காகக் கெஞ்சிக் கொண்டும் அவன் ஒரு நாயைப்போல அவர்கள் பின்னாலேயே வந்தான். தன்மீது எறியப்பட்டக் கற்களை லாவகமாகச் சமாளித்துக் கொண்டு, அவன் மீண்டும் அவர்களைப் பின்தொடர்ந்தான். ஏகலைவனின் சித்தி சில சமயங்களில் அச்சிறுவன்மீது இரக்கம் கொண்டு, தங்களிடம் மிச்சமிருந்ததை அவனோடு பகிர்ந்து கொண்டாள். அவன் தன் இரண்டு கைகளாலும் அதைப் பிடுங்கி, பசியோடு இருந்த ஒரு காட்டு விலங்கைப்போல அதைக் கபளீகரம் செய்தான். ஆனால் இது அரிதாகவே நிகழ்ந்தது. ஏனெனில், தங்கள் பசியைப் போக்கிக் கொள்வதே அவர்களுக்கு எப்போதும் போராட்டமாக இருந்து வந்திருந்தது.

எது எப்படியோ, அச்சிறுவன் அவர்களை விடுவதாக இல்லை. ஏகலைவனின் சிற்றப்பா எந்தக் கிராமத்தில் அடித்துக் கொல்லப்பட்டிருந்தாரோ, அந்தக் கிராமத்தில் அவன் அவர்களைப் பார்த்திருந்தான். அச்சமயத்தில் இன்னொருவனும் திருடிக் கொண்டிருந்தான். அவனையும் அக்கிராம மக்கள் கையுங்களவுமாகப்

பிடித்து அடித்துக் கொன்றனர். அசைவற்றுக் கிடந்த தன் தந்தையின் உடலின் அருகே அமர்ந்து அழுது கொண்டிருந்த அச்சிறுவனை ஏகலைவனின் சித்தி கண்டாள். தன்னுடைய சொந்தத் துயரத்தைப் பொருட்படுத்தாமல், ஆதரவற்று நின்ற அச்சிறு குழந்தையின்மீது அவள் பச்சாதாபம் கொண்டாள். அன்று அவளுக்குச் சாப்பிட மனமிருக்கவில்லை. தன்னுடைய பங்கை அவள் அவனுக்குக் கொடுத்துவிட்டிருந்தாள். ஆனால் அது எப்பேற்பட்டத் தவறு என்பதை அவள் விரைவிலேயே தெரிந்து கொண்டாள். இப்போது, ஒரு சாபத்தைப்போல, அச்சிறுவன் அவர்களைப் பின்தொடர்ந்தான். சில நாட்கள் அவர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. ஏதேனும் ஒரு வணிகன், தான் செழிப்பாக இருப்பதற்காகக் கடவுள்களுக்குக் காணிக்கைச் செலுத்தும் விதமாக ஏழைகளுக்கு உணவளித்தான். அத்தகைய சமயங்களில் தன் சித்தி சற்று தாராளமாக நடந்து கொண்டதை ஏகலைவன் கவனித்தான். அச்சமயங்களில், அவள் அச்சிறுவனுக்கு வெறும் மிச்சச்சொச்சங்களைக் கொடுக்காமல், கூடுதலாகச் சிறிது உணவைக் கொடுத்தாள். அவள் அவனிடம் அன்பாகவும் பேசினாள். அத்தகைய அரிய உரையாடல்களில் ஒன்றின்போதுதான், அச்சிறுவனின் பெயர் ஜரன் என்பதை ஏகலைவன் தெரிந்து கொண்டான்.

பசியோடு தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ஜரனை உதாசீனப்படுத்திவிட்டு, இப்போது ஏகலைவன் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான். தான் தின்றுவிட்டுத் தூக்கியெறியவிருந்த மாங்கொட்டைக்காக அவன் காத்துக் கொண்டிருந்தான் என்பதை ஏகலைவன் அறிந்திருந்தான். இறுதியில், மாம்பழத்தில் எதுவும் மிச்சமிருக்கவில்லை என்பது உறுதியாகத் தெரிந்ததும், ஏகலைவன் அதன் கொட்டையை வீசியெறிந்தான். ஒரு வேடுவன் மிச்சம் வைத்ததை உண்ணும் அளவுக்குத் தரம் தாழ்ந்து போன ஒருவனை அவன் வெறுத்தான். அதே நேரத்தில், பசியோடு இருந்த ஒரு சிறுவனிடம் தான் இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டது குறித்து ஏகலைவனுக்குத் தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. எதிர்த்துச் சண்டையிடுவதற்கான அறிகுறி எதுவும் அச்சிறுவனிடம் தென்படவில்லை. அவன் ஒரு நாயைப்போல நடந்து கொண்டான். வெறுப்பில் ஏகலைவன் காரி உமிழ்ந்தான். ‘நன்றாகச் சவைக்கப்பட்டு, சுத்தமாக உறிஞ்சப்பட்டு, பிறகு தூக்கி எறியப்படுகின்ற மாங்கொட்டைகளைப்போல இருக்கிறது நம் வாழ்க்கை!’ என்று அவன் விரக்தியோடு நினைத்துக் கொண்டான்.

தான் வீசியெறிந்த மாங்கொட்டையை அச்சிறுவன் பொறுக்கிக் கொண்டிருந்ததை ஏகலைவன் பார்த்தான். ஜரன் மகிழ்ச்சியில்

ஊளையிட்டச் சத்தத்தைக் கேட்டு அவனுடைய கண்களில் திடீரென்று கண்ணீர் நிரம்பியது. ஏற்கனவே சுத்தமாக வழித்துத் துடைக்கப்பட்டிருந்த மாங்கொட்டையை ஜரன் ஓர் எலியைப்போலக் கரும்பிக் கொண்டிருந்தான். தனக்கு மாம்பழங்களை தாராளமாகக் கொடுத்திருந்த இளவரசனைக் கொல்ல வேண்டும் என்று ஏகலைவன் தன் இதயத்தின் ஆழத்தில் விரும்பினான். இளவரசர்கள் மற்றும் வணிகர்களின் தயவைத் தான் சார்ந்திருக்க வேண்டியிருந்தது அவனுக்கு வேதனை ஊட்டியது. 'நான் இப்போது ஓர் ஆண்மகன். என் குடும்பத்திற்கு உணவளிக்கக்கூடிய திறன் எனக்கு இருந்தாக வேண்டும்,' என்று அவன் நினைத்தான். அவன் ஒரு வேடுவன். வளர்ந்த ஆண்கள் யாரேனும் அவனுடைய குடும்பத்தில் உயிரோடு இருந்திருந்தால், அவர்கள் அவனுக்கு வேட்டையாடக் கற்றுக் கொடுத்திருப்பார்கள். ஆனால் வேடுவப் பழங்குடியினர் வாழ்ந்த விந்திய மலையிலிருந்து ஏகலைவனும் அவனுடைய குடும்பத்தாரும் வெகு தொலைவு வந்துவிட்டிருந்தனர். தூங்கிக் கொண்டிருந்த தன் சித்தி மற்றும் அவருடைய ஐந்து மகன்களின் முகங்களை ஏகலைவன் பார்த்தான். திடீரென்று, ஒரு பச்சாதாப உணர்வும் கையாலாகாத்தன உணர்வும் அவனை ஆட்கொண்டது.

தன் சித்தியும் அவளுடைய மகன்களும் தூங்கிய பிறகு சாப்பிடுவதற்காக ஒரு குண்டு மாம்பழத்தை ஏகலைவன் தன் இடைக் கச்சைக்குள் ஒளித்து வைத்திருந்தான். அவன் கொண்டு வந்த மாம்பழங்களிலேயே அதுதான் மிகச் சிறந்தது. அதை மட்டும் தன் சித்தி பார்த்திருந்தால், நிச்சயமாக அதைத் தன் குழந்தைகளுக்குக் கொடுத்திருந்திருப்பாள் என்பதை அவன் அறிந்திருந்தான். அதைத் தான் மட்டுமே தனியாகச் சாப்பிட அவன் விரும்பினான். எதிர்பார்ப்பில் ஜரனின் கண்கள் மலர்ந்தன. புதர்கள் சூழ்ந்த அந்தத் தாழ்வான மலையின்மீது நிலவு உதயமாகி, புவியை வெள்ளியால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. ஏகலைவன் ஜரனைப் பார்த்தான். தன்னிடமிருந்த மாம்பழத்தை அவனிடம் வீசலாமா என்பது பற்றி அவன் யோசித்தான், ஆனால் அந்த நல்ல மாம்பழத்தை வீணாக்குவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. பிறகு, அந்தக் கனியில் அவன் தன் பற்களை மென்மையாகப் பதித்து அதை உறிஞ்சினான். ஜரன் எச்சில் விழுங்கினான். இதைக் கண்டு வெறுப்படைந்த ஏகலைவன், தான் பாதிச் சாப்பிட்டிருந்த அந்தப் பழத்தை அவனிடம் வீசியெறிந்தான். ஜரன் அதை வெடுக்கென்று பிடித்துக் கொண்டான்.

ஏகலைவன் அங்கிருந்து எழுந்தபோது, குதிரைக் குளம்பொலி அவனுக்குக் கேட்டது. தொலைவில், முட்புதர்களுக்கு நடுவே,

குதிரையின்மீது சிலர் வந்து கொண்டிருந்ததை அவனால் பார்க்க முடிந்தது. நாகர்கள்! ஏகலைவன் பயத்தில் ஊமையாகி, தான் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றான். நாகர்கள், எல்லோரும் பார்த்து அஞ்சி நடுங்கும் பழங்குடியினராக இருந்தனர். யார் கண்ணிலும் படாதபடி, இருட்டின் துணையோடு அரண்மனையை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்தனர். நிலவொளியில் அக்குதிரைகளின் கரிய பிடரி மயிர் ஒளிர்ந்து கொண்டிருந்ததை ஏகலைவனால் பார்க்க முடிந்தது. ஓர் உயரமான, கரிய உருவம் அவர்கள் அனைவரையும் முன்னின்று வழிநடத்திச் சென்று கொண்டிருந்ததை அவன் கண்டான். நிலா வெளிச்சம் அந்த நபரின் உடலைத் தழுவிச் சென்று, ஓர் அச்சுறுத்தும் வெள்ளி நிற உருவமாக அவனை மாற்றியது. ஜரன் இன்னும் சத்தமாகத் தன் மாம்பழத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தான். நாகர்கள் இந்தச் சத்தம் கேட்டு என்னவென்று விசாரிக்க வந்துவிடுவார்களோ என்று ஏகலைவன் பயந்தான்.

ஆனால் அந்த ஏழைச் சிறுவர்கள்மீது நாகர்களுக்கு எந்த ஆர்வமும் இருக்கவில்லை. நாகர் கூட்டத்தின் தலைவன் தன் குழுவினரிடம் எதையோ கிசுகிசுத்தான். திடீரென்று அவர்கள் அனைவரும் அரண்மனையை நோக்கி வேகமாகப் பயணித்தனர். ஏகலைவன் அவர்கள் பின்னால் ஓடத் துவங்கினான். ஜரன் அவனைப் பின்தொடர்ந்து ஓடினான். தான் செய்து கொண்டிருந்தது சுத்த முட்டாள்தனம் என்பதை அறிந்திருந்தும்கூட, ஏகலைவன், நாகர்கள் எங்கே போய்க் கொண்டிருந்தார்கள் என்று பார்க்க விரும்பினான். அவர்கள் அஸ்தினாபுரத்தைக் கைப்பற்றி, தன்னைப் போன்ற தீண்டத்தகாதவர்களை மேட்டுக்குடியினர் எவ்வாறு இழிவாக நடத்தினரோ, அதேபோல நாகர்கள் அவர்களை நடத்த வேண்டும் என்று ஏகலைவனின் மனத்தின் ஒரு மூலையில் ஒரு பெருவிருப்பம் முளைத்தது. ஆனால் இவை சாத்தியமற்றக் கனவுகள் என்று அவன் நினைத்தான். அஸ்தினாபுரம் அதிக வலிமை மிக்கதாக இருந்தது. யாராலும் எதிர்த்து நிற்க முடியாத அந்நகரத்தை, நாகர்களைப் போன்ற ஒழுங்குமுறையற்ற ஒரு குழுவால் நிச்சயமாக வெற்றி கொள்ள முடியாது. ஆனாலும் அவர்களுடைய தலைவனான தட்சகன், பரதகண்டத்தின் மாபெரும் நகரங்கள்மீது தீவிரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருந்தான். தட்சகன்! ஏகலைவன் அந்த இளம் நாகர் தலைவனை இப்போது அடையாளம் கண்டுகொண்டான். அஸ்தினாபுரத்தின்மீது அவன்தான் இந்த மறைவான தீவிரவாதத் தாக்குதலை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தான். அதைக் கண்டு ஏகலைவனின் மனம் குதூகலமும் சுவாரசியமும் அடைந்தது. எலும்பும்

தோலுமாக இருந்த தன்னுடைய ஒல்லியான கால்களால் எவ்வளவு வேகமாக ஓட முடிந்ததோ, அவ்வளவு வேகமாக அவன் அவர்கள் பின்னால் ஓடினான். ஒரு நாய்க்குட்டியைப்போல, ஜரனும் அவனுக்கு இணையாக வேகமாக ஓட முயற்சித்தான்.

அன்றிரவு மிகவும் அமைதியாக இருந்ததால், குதிரைகளின் குளம்பொலிகள் போர் முழக்கம்போலக் கேட்டன. உலகின் மிக அதிக சக்திவாய்ந்த நகரங்களில் ஒன்றின்மீது தாக்குதல் நடத்த முனைந்தபோது இவ்வளவு அதிகச் சத்தத்தை ஏற்படுத்தியது நாகர்களின் முட்டாள்தனம் என்று ஏகலைவன் நினைத்தான். 'அஸ்தினாபுரத்தின் காவலர்கள் இந்த இருபத்து நான்கு நபர்களையும் ஒருசில நிமிடங்களில் சவைத்துத் துப்பிவிடுவார்கள். அவர்களுடைய திட்டத்திலிருந்த தவறு ஒரு பத்து வயதுச் சிறுவனான எனக்குக்கூடப் புரிகிறது. அவர்கள் உண்மையிலேயே அவ்வளவு பெரிய முட்டாள்களா?' என்று ஏகலைவன் வியந்தான். ஆனால் என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, தட்சகன் வெற்றி பெற வேண்டும் என்று அவன் விரும்பினான். 'கோட்டையில் உள்ள பல அப்பாவிகள் இன்று மடிந்து போவார்கள். இல்லை, அவர்கள் அப்பாவிகள் இல்லை. அவர்கள் என்னைப் போன்றவர்கள் இல்லை. அவர்கள் மனிதத்தன்மை அற்றவர்கள். என்னைப் போன்ற மக்களை அவர்கள் வெறுப்புடன் நடத்துகின்றனர்,' என்று அவன் நினைத்தான். பத்து வருடங்களாக, தீண்டத்தகாத ஒரு வேடுவன் என்ற முறையில் அவனுக்குக் கிடைத்திருந்த அனுபவம், வாழ்க்கையைப் பற்றியும் மனித இயல்பைப் பற்றியும், சரியான சாதியில் பிறப்பதற்கு அதிர்ஷ்டம் செய்திருந்த பல வயதான நபர்கள் கற்றுக் கொண்டதைவிட அதிகமாக அவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது.

மேட்டுக்குடியினரின் பகைமையுணர்வையும் வெறுப்பையும் ஏகலைவனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஏனெனில், அவனும் அவர்கள்மீது அதே பகைமையுணர்வையும் வெறுப்பையும் கொண்டிருந்தான். இன்னும் அதிகமாக வெறுக்கப்பட்ட, வேடுவர்களைவிடத் தாழ்ந்த சாதிகளில் பிறந்த ஜரனைப் போன்றவர்களிடத்திலும் அவன் அதே பகைமையுணர்வையும் வெறுப்பையும் வெளிப்படுத்தினான். ஒருவேளை நாகர்கள் அஸ்தினாபுரத்தை வெற்றி கொண்டுவிட்டால், விஷயங்கள் வித்தியாசமாக இருக்கலாம், அல்லது, அப்படி இல்லாமலும் போகலாம் என்று அவன் நினைத்தான். ஆனாலும், சக்திவாய்ந்தவர்களும் மேட்டுக்குடியினரும் வீழ்வதைக் காண்பதில் நிறைவு இருக்கத்தான் செய்தது. "சிவபெருமானே, தட்சகன் இன்று வெற்றி பெறுவதற்கு

வழிகாட்டு!” என்று ஏகலைவன் பிரார்த்தனை செய்தான். ஆனால் இளவரசன் துரியோதனனின் முகம் அவனை விடாமல் துரத்தியது. இளவரசன் ஏன் தன்னிடம் அன்பாக நடந்து கொண்டிருந்தான் என்று அவன் வியந்தான். உயர்ந்த சாதியில் பிறந்தவர்கள் அன்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. இவை அனைத்தும் அவனுக்கு மிகவும் குழப்பமூட்டுவதாக இருந்தது. ‘ஒருவேளை நான் ஏதேனும் செய்ய வேண்டும் என்று இளவரசன் விரும்பினான் போலும். அவனைப் போன்ற உயர்குலத்தோர் எவரும் நம்மிடம் ஒருபோதும் அன்பாக நடந்து கொண்டதில்லை. ஆனால், தீண்டத்தகாத ஒரு வேடுவச் சிறுவனிடமிருந்து அஸ்தினாபுரத்தின் இளவரசனால் எதைப் பெற முடியும்? அவர்கள் எல்லோரும் நெருப்பில் வெந்து மடியட்டும். அவர்கள் எல்லோருமே ஒரே மாதிரியானவர்கள்தான். தட்சகன் இன்று வெற்றி பெற்றுவிட்டால், அரண்மனை எரிந்து சாம்பலாவதை நம்மால் பார்க்க முடியும்,’ என்று ஏகலைவன் நினைத்துக் கொண்டான்.

தன் சிந்தனையில் தன்னை மறந்திருந்த ஏகலைவன், தட்சகனும் வேறு நான்கு வீரர்களும் முக்கியமான தாக்குதல்காரர்களிடமிருந்து தனியாக விலகிச் சென்றதை கவனிக்கத் தவறிவிட்டிருந்தான். முக்கியப் படையினர், அரண்மனையின் முன்வாசலில் காவலுக்கு நின்ற வீரர்களுடன் மோதினர். கோட்டை மணிகள் அதிர்ந்து ஒலித்து எச்சரிக்கை எழுப்பத் துவங்கின. மணியோசை, குதிரைகளின் கனைப்பொலி, வாள்களின் மோதல் சத்தம் ஆகியவற்றுக்கு இடையே, தட்சகனும் அவனுடைய ஆட்களும் கோட்டைச் சுவரின் நிழல்கள் ஊடாக நகர்ந்தனர். நூற்றுக்கணக்கான குரு வம்ச வீரர்கள், நெடிதுயர்ந்திருந்த கோட்டைச் சுவர்களிலிருந்து கயிற்று ஏணிகள் வழியாகக் கீழே இறங்கி வந்து, நாகர்களுடன் சண்டையில் ஈடுபட்டனர். அஸ்தினாபுர வீரர்களை எதிர்த்துச் சண்டையிட்ட இருபது நாகர்களால் அந்தப் பெரும் எண்ணிக்கையைச் சமாளிக்க முடியவில்லை.

ஜரன் ஏகலைவனின் கையைப் பிடித்து இழுத்து, கோட்டைக் கதவின் இடதுபக்கமாகச் சுட்டிக் காட்டியபோதுதான், ஏகலைவன் அதைப் பார்த்தான். அங்கு ஒரு கயிற்று ஏணி தொங்கிக் கொண்டிருந்தது. தட்சகனும் அவனுடைய ஆட்களும் அதன் வழியாகக் கோட்டைச் சுவரின்மீது வேகமாக ஏறிக் கொண்டிருந்தனர். அவர்கள் உச்சியை அடைந்தபோது, மேகங்களுக்குப் பின்னால் மறைந்து போயிருந்த நிலவு, திடீரென்று வெளியே வந்தது. அப்போது சுவரின்மீது ஒரு கரிய உருவம் நின்றதை ஏகலைவன் பார்த்தான். நாகர்களின் தலைவன் கோட்டைக்குள் நுழைவதற்கு அவன்தான் உதவிக் கொண்டிருந்தான். ஏகலைவனுக்குள் ஒரு சாகச உணர்வு

தலைதூக்கியது. தட்சகன் அஸ்தினாபுரத்தின்மீது முழுமையான தாக்குதலில் ஈடுபட்டிருந்தான். தன் கதாநாயகன் சண்டையிட்டதை ஏகலைவன் நேரடியாகக் காணப் பரிதவித்தான். எப்படியாவது அங்கே நுழைந்து, என்னதான் நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைப் பார்த்தே ஆக வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். ஜரன் அவனைத் தடுத்து நிறுத்த முயற்சித்தான். ஆனால் ஏகலைவன் அச்சிறுவனை விலக்கித் தள்ளிவிட்டு வேகமாக ஓடினான். ஜரன் ஒரு கணம் தயங்கினான். பிறகு தன் தோள்களைக் குலுக்கிவிட்டுக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தான்.

* * *

ஏகலைவன் வேகமாக அந்தக் கயிற்று ஏணியின் வழியாக ஏறினான். அவனுக்கு வலப்பக்கத்தில் ஒருசில நூறு அடிகள் தள்ளி, சண்டை சூடுபிடித்திருந்தது. சுறுசுறுப்பாக ஏறிக் கொண்டிருந்த ஏகலைவனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க ஜரன் கடுமையாக முயற்சித்தான். தட்சகனுடன் சென்ற நான்கு நாகர்களும், அரண்மனைக்குள் இருந்து அவர்களுக்குத் துப்புக் கொடுத்த நபரும், நிழல்களுக்குள் தங்களை மறைத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததை ஏகலைவன் பார்த்தான். தனக்குப் பின்னால் கேட்டச் சத்தம் என்னவென்று பார்ப்பதற்காக ஏகலைவன் திரும்பியபோது, கயிற்று ஏணியின் கடைசி ஒருசில படிகளை ஏறுவதற்கு ஜரன் முயற்சித்துக் கொண்டிருந்ததை அவன் கண்டான். அந்தப் படிகள் ஜரனால் ஏற முடியாத அளவுக்கு மிகவும் உயரமாக இருந்தன. ஏகலைவன் அவனைச் சபித்துக் கொண்டே கீழே குனிந்து, ஜரனை மேலே இழுத்தான்.

“நீ ஏன் இங்கே வந்தாய்?” என்று ஏகலைவன் அவனைப் பார்த்துச் சீறினான். ஆனால் பதிலுக்கு அச்சிறுவன் ஒரு முட்டாள்தனமான சிரிப்பை மட்டுமே உதிர்த்தான். ஏகலைவன் மீண்டும் அவனைச் சபித்துவிட்டுச் சுவரோரமாக ஓடினான். ஆனால் அதற்குள் அந்த நாகர்கள் மாயமாய் மறைந்துவிட்டிருந்தனர். ‘அவர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் அரண்மனைக்குள் நுழைவதற்கு அவர்களுக்கு உதவிய நம்பிக்கைத் துரோகி யார்?’ என்று ஏகலைவன் குழம்பினான். வெளியே சத்தம் குறையத் துவங்கியிருந்தது. போர் முடிந்துவிட்டதா? வழக்கம்போல, அஸ்தினாபுரத்தின் பெரும் எண்ணிக்கையிலான வீரர்கள் நாகர்களின் வீரத்தைத் தவிடுபொடி ஆக்கியிருப்பர் என்று அவன் நினைத்தான். இது ஒரு தற்கொலை முயற்சி என்பதை அறிந்திருந்தும், தங்கள் தலைவன் எந்தப் பிரச்சனையுமின்றிக்

கோட்டைக்குள் நுழைவதற்கு உதவும் விதத்தில் கோட்டைக் காவலர்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகத் தங்கள் உயிர்களைக் காவு கொடுப்பதற்கு அந்த நாகர்கள் தயாராக இருந்திருந்தனர். எல்லோரையும் அச்சுறுத்திய நாகர்கள்மீது ஏகலைவன் கொண்டிருந்த பிரமிப்பு மேலும் அதிகரித்தது. 'ஆனால் நாகர்களின் தலைவன் எங்கே காணாமல் போனான்? இந்த முட்டாள் ஜரன் மட்டும் என்னைத் தாமதப்படுத்தாமல் இருந்திருந்தால், அவர்கள் வேகத்திற்கு நானும் ஓடியிருப்பேன். இந்த முட்டாளைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன்,' என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

திடீரென்று, அவன் மீண்டும் அவர்களைப் பார்த்தான். அவர்கள் நிழல்களின் பாதுகாப்பிலிருந்து விடுபட்டு, அரண்மனையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். காவலர்கள் அதிகப்படியான தீப்பந்தங்களை ஏற்றிக் கொண்டிருந்தனர், ஆனால் நாகர்கள் எந்தப் பக்கத்திலிருந்து அரண்மனையை அணுகிக் கொண்டிருந்தனரோ, அது இன்னும் நிழலில்தான் இருந்தது. அவர்கள் கிட்டத்தட்ட அரண்மனையை அடைந்திருந்த நேரத்தில், பருவ வயதின் துவக்கத்தில் இருந்த ஒரு சிறுவன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். தட்சகன் அவனுடன் சண்டையிட்டு அவனைத் தாண்டிச் செல்ல முயன்றான். ஆனால் அச்சிறுவன் அவனை மீண்டும் தடுத்தான். தட்சகனின் வாள் வீச்சைக் கீழே குனிந்து சமாளித்துக் கொண்டு, அதே நேரத்தில் அவன் தன்னுடைய வாளை அந்த நாகர் தலைவனின் மினுமினுப்பான உடலுக்குள் செருக முயன்றான். கோட்டையின் முதற்தளத்தில் ஒரு கதவு திறந்தது. அங்கிருந்து வெளிப்பட்ட ஒரு வயதான மனிதர், துணிச்சலாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த அச்சிறுவனைத் திரும்பி வருமாறு அழைத்துக் கொண்டே, குழப்பம் நடந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி ஓடினார். ஏகலைவன் இதைப் பெரும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான். அங்கு நடந்தேறிக் கொண்டிருந்த நாடகம் அவனுக்கு சுவாரசியமூட்டுவதாக இருந்தது. அந்த முதியவர் அவர்களை நெருங்கியபோது, நாகர்களில் ஒருவன் அவரை எட்டி உதைத்தான். அவர் ஒரு மரக்கட்டையைப்போலக் கீழே விழுந்தார். அந்தப் பருவ வயதுச் சிறுவன், தன்மீது விழுந்த கீறல்களைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து தாக்குப் பிடித்தான். இதற்கிடையே, கோட்டைக்குள் நுழைவதற்கு நாகர்களுக்கு உதவியவன், இருட்டோடு இருட்டாகச் சென்று மறைந்துவிட்டான். எல்லாப் பக்கங்களிலிருந்தும் வீரர்கள் அவர்களை நோக்கி ஓடி வந்தபோது, அவன் அங்கிருந்து மாயமாய் மறைந்ததை ஏகலைவனையும் ஜரனையும் தவிர வேறு யாரும் பார்க்கவில்லை.

ஓர் உயரமான, வாட்டசாட்டமான உருவம், அந்தப் பருவ வயதுச் சிறுவனை விலக்கித் தள்ளிவிட்டு, நாகர் தலைவனுடன் மிகக் கடுமையான சண்டையில் ஈடுபட்டது. அன்று காலையில் தான் எவரிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தோமோ, அதே பிராமண குருதான் அவர் என்பதை ஏகலைவன் அடையாளம் கண்டுகொண்டான். தட்சகன் வெற்றி பெற வேண்டும் என்று அவன் கடவுளிடம் வேண்டினான். அம்புகள் வரிசையாகவும் வேகமாகவும் பாய்ந்தன. அவை ஏற்கனவே இரண்டு நாகர்களின் உயிர்களைப் பலி வாங்கியிருந்தன. துரோணரை அடையாளம் கண்டுகொண்ட வீரர்கள், தவறுதலாக ஏதேனும் ஓர் அம்பு அவரைத் துளைத்துவிடக்கூடாது என்று நினைத்து, அம்பு எய்வதை நிறுத்தினர். தட்சகனும் உயிரோடு இருந்த மற்ற இரண்டு நாகர்களும் அந்த குருவுடன் சண்டையிட்டுத் திணறிக் கொண்டிருந்தனர். துரோணருக்கு உதவுவதற்காக ஒருசில வீரர்கள் ஓடி வந்தனர். ஆனால் அவர் தன் கையசைப்பின் மூலம் ஏளனமாக அவர்களைத் தடுத்து நிறுத்தினார். இந்தக் காட்டுமிராண்டிகளுக்குத் தான் ஒருவனே போதும் என்பதுபோல அவர் நடந்து கொண்டார். துரோணர் தன் அற்புதமான வாள்வீச்சின் மூலமும் வேகத்தின் மூலமும், தட்சகன் உட்பட, அந்த மூன்று நாகர்களையும் திறமையாகத் தடுத்து நிறுத்தினார். அவருடைய வாள் அவர்கள் மூவரின் உடல்களையும் பல முறை பதம் பார்த்திருந்தது. தட்சகன் இப்போது சுவரோடு சுவராக ஒட்டி நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தான்.

குரு வம்சத்தின் ஆட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரின் உயரமான உருவம் அரண்மனையின் மேல்மாடங்களில் ஒன்றில் தோன்றியது. அவர் தன் வீரர்களுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். உருவிய வாள்களுடன் வீரர்கள் நாற்புறங்களிலிருந்தும் ஓடிக் கொண்டிருந்ததை ஏகலைவனால் பார்க்க முடிந்தது. இந்த அமளியைச் செவிமடுத்த துரோணர், பின்னால் திரும்பி, தனக்கு எந்த உதவியும் தேவையில்லை என்று கத்தினார். தட்சகனுக்கு இந்தக் கண நேர இடைவெளி போதுமானதாக இருந்தது. துரோணரின் கவனம் தடுமாறிய அச்சிறு கணத்தில், தட்சகன், தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை நோக்கி ஓடி, கோட்டைச் சுவரின்மீது பாய்ந்தான். துரோணர் கோபத்தில் உறுமிவிட்டு, தப்பியோடிக் கொண்டிருந்த நாகர் தலைவனைப் பிடிக்க முயன்றார். ஆனால், மற்ற இரண்டு நாகர்களும் ஒருசில நிமிடங்கள் அவரை முன்னேறவிடாமல் தடுத்தனர். அவை மிகவும் பொன்னான கணங்கள். துரோணர் தன் ஓட்டத்தைச் சிறிதுகூட நிறுத்தாமல் அவர்கள் இருவரின் தலைகளையும் கொய்துவிட்டு, தட்சகனைக் கிட்டத்தட்டப் பிடித்துவிட்டிருந்தார். அவருடைய வாள்

தட்சகனின் வலது பாதத்தை ஒருசில அங்குலங்களில் தவறவிட்டது. துரோணர் வெறுப்பில் முனகினார். தனக்காகக் காத்துக் கொண்டிருந்த குதிரையைக் கண்டுபிடிக்கத் தட்டழிந்து, கோட்டைச் சுவரோரமாகத் தப்பியோடிக் கொண்டிருந்த நாகர் தலைவனை நோக்கிக் காவலர்கள் அம்புகளை எய்தனர். ஓரிரு அம்புகள் தட்சகனின் உடலைத் துளைத்தன. அவன் தன் ஓட்டத்தை நிறுத்தாமல், தன் தொடையிலிருந்தும் தன் தோளிலிருந்தும் அம்புகளைப் பிடுங்க முயற்சித்துக் கொண்டிருந்ததை ஏகலைவன் கண்டான். நாகர் தலைவனைத் துரத்திச் சென்ற துரோணரும், மடிந்து கிடந்த வீரர்களை மிதித்துவிடாமல் அவர்களை லாவகமாகத் தாண்டிச் சென்று, கோட்டைச் சுவரோரமாக ஓடினார்.

தட்சகன் தப்பிப்பதைப் பார்க்க ஏகலைவன் விரும்பினான். ஆனால், துரோணரின் அற்புதமான மாவீரத்தையும் ஆற்றலையும் கண்ட அவனுக்கு அவர்மீதான நன்மதிப்பு அதிகரித்தது. 'ஒரு மனிதரால் எப்படி இவ்வளவு சிறப்பாகச் சண்டையிட முடியும்? என்னவொரு நேர்த்தி! என்னவொரு சுறுசுறுப்பு! எப்பேற்பட்ட சக்தி மற்றும் உத்தி! நானும் அவரைப்போலச் சண்டையிட விரும்புகிறேன்,' என்று ஏகலைவன் ஆசையோடு நினைத்த நேரத்தில் ஓர் அலறல் கேட்டது. ஈயம் தடவப்பட்ட முனையைக் கொண்ட ஓர் அம்பு துரோணரின் இடது பாதத்தைத் துளைத்திருந்தது. அவர் நிலை தடுமாறித் தடாலென்று கீழே விழுந்தார். குப்புறக் கிடந்த அவரை நோக்கிக் காவலர்கள் ஓடினர். தட்சகன் நிற்காமல் ஓடினான். அவனிடமிருந்து வெளிப்பட்ட ஒரு மென்மையான சீட்டியொலியைக் கேட்டு, ஒரு கனைப்போடும் துள்ளலோடும் அவனுடைய குதிரை அவனை நோக்கி ஓடி வந்ததை ஏகலைவன் பார்த்தான்.

"அவனைப் பிடியுங்கள், அவனைப் பிடியுங்கள் . . ." என்று கத்திக் கொண்டே துரோணர் எழுந்து நிற்க முயன்றார். தன்னுடைய ஒரு கையில், தன் பாதத்திலிருந்து பிடுங்கியிருந்த அம்பை அவர் தாங்கிப் பிடித்திருந்தார். ஈரமான, ரத்தம் தோய்ந்த அதன் முனை, நிலா வெளிச்சத்தில் மின்னியது. காவலர்கள் தட்சகனை நோக்கி விரைந்தபோது, சுவரின் ஒரு மூலையில் அவன் மாயமாய் மறைந்து போனான். "அவனைத் துரத்திச் செல்லுங்கள் . . . முட்டாள்களே, அவன் தப்பிச் சென்று கொண்டிருக்கிறான்," என்று துரோணர் கத்தினார்.

கீழே கோட்டைக் கதவுகள் திறந்தன. நூற்றுக்கணக்கான வீரர்கள், குதிரைகளின்மீது அமர்ந்து, நாகர்களின் தலைவனைத் தீவிரமாகத் துரத்திச் சென்றனர்.

துரோணர் நொண்டிக் கொண்டே கோட்டைக்குள் திரும்பி நடந்தார். விஷயங்கள் நடந்திருந்த விதம் குறித்து அவர்

வெறுப்படைந்திருந்தார். பீஷ்மர் தன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு, உணர்ச்சியற்ற முகத்துடன் நின்றார். மெல்லிய காற்று அவருடைய நீண்ட வெண்தாடியைக் கலைத்துச் சென்றது. அவருடைய அகன்ற நெற்றியின்மீது லேசான ஒரு சுருக்கம் தோன்றியது. சற்று அசௌகரியமாகத் தோன்றிய விதுரன் அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். பீஷ்மரைப் பார்த்த துரோணர், ஒரு கணம் திகைப்புற்றார். பின்னால் திரும்பி, அரண்மனைக் காவலர்களின் உயிரற்ற உடல்களைப் பார்த்தார். பிறகு, மாபெரும் அரசாட்சிப் பொறுப்பாளரின் பெருமிதம் பொங்கிய முகத்தையும் பார்த்தார்.

"மேன்மை பொருந்தியவரே, இங்குள்ள வீரர்கள் தகுதியும் திறமையும் அற்றவர்கள். நாகர்களின் தலைவன் இன்று இங்கிருந்து தப்பிச் சென்றதற்குக் காரணம், முறையான பயிற்சி இவர்களுக்கு இல்லாததுதான். அந்தக் கயவன்மீது அம்பெறிவதற்குப் பதிலாக அவர்கள் என்மீது அதை எய்துவிட்டனர்," என்று கூறிய துரோணரின் குரல் குற்றம் சாட்டுவதுபோல இருந்தது. ஆனால், தீவிரவாதிகளின் தலைவன் தப்பிச் சென்றது தொடர்பாகத் தன்னைத் தற்காத்துக் கொள்ளவே அவர் முயற்சித்துக் கொண்டிருந்தார் என்பதை விதுரன் புரிந்து கொண்டான்.

பீஷ்மர் துரோணரை நேருக்கு நேர் பார்த்தபோது, துரோணர் தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார். இறுதியில், பீஷ்மர் பேசினார்: "இளவரசர்களுக்குப் பயிற்சியளிப்பதில் மட்டும் நீங்கள் கவனம் செலுத்துவது புத்திசாலித்தனமான காரியமாக இருக்கும். அரண்மனையின் பாதுகாப்பை வீரர்களிடம் விட்டுவிடுவது நல்லது. உங்களுடைய வாள்வீச்சுத் திறமையை நான் மிகவும் மெச்சுகிறேன். ஆனால் உங்கள் வீரப்பிரதாபத்தை நிரூபிப்பதற்கான உங்கள் ஆர்வத்தில் எனக்கு விருப்பமில்லை. விதுரா, குருவிற்கு அவருடைய அறையைக் காட்டிக் கொடு. அவருக்கு ஓய்வு தேவை."

துரோணரின் பொன்னிற முகம் கோபத்திலும் அவமானத்திலும் சிவந்தது. விதுரன் அவருடைய பார்வையைத் தவிர்த்தான். தனக்கு ஏற்பட்ட அவமதிப்பை எண்ணி துரோணர் உள்ளூரக் கொதித்தார். தன்னை வேலைக்கு அமர்த்தியவர், ஒரு சூத்திரனின் முன்னிலையில் தன்னை அவமானப்படுத்தியிருந்ததை துரோணரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினார், ஆனால் பின்விளைவுகளை நினைத்து அவர் மிகவும் பயந்தார். அவருக்கு இந்த வேலை மிகமிகத் தேவையாக இருந்தது. இந்த வேலை கிடைக்கும்வரை, அவர் ஒரு கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்திருந்தார். ஒவ்வொரு கிராமமாக, ஒவ்வொரு பேரரசாக மீண்டும்

வேலை தேடி அலைவது குறித்த எண்ணம் அவரை நடுநடுங்கச் செய்தது. அவர் அந்தத் துயரங்கள் அனைத்தையும் அனுபவித்திருந்தார். அவருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே, ஏழ்மை அவருடைய நிரந்தரத் தோழனாக இருந்து வந்திருந்தது. அவரை நம்பி ஒரு குடும்பம் இருந்தது. அவருக்குள் இருந்த வீரன், பீஷ்மரை ஒற்றைக்கு ஒற்றைச் சண்டைக்கு அழைத்துச் சவால்விட விரும்பினான். பீஷ்மர் ஒருவேளை துரோணரைத் தோற்கடிக்கக்கூடும். பீஷ்மரின் எதிரிகள் அவரைக் கண்டாலே பயமும் வியப்பும் கொண்டனர். அவருடைய கைகளால் மடிவதுகூட மிகப் பெரிய மரியாதையாகக் கருதப்பட்டது. துரோணர் தன் இளம்பருவத்தில் இப்படிப்பட்ட ஒரு மரணத்தை விரும்பியிருந்தார். கட்டுக்கோப்பான மரியாதையுடனும் நிமிர்ந்த தலையுடனும்தானே வீரர்கள் மடிய விரும்பினர்? பிறகு அசுவத்தாமனின் சூதுவாதற்ற முகம் அவருடைய மனக்கண்ணில் தோன்றியது. தன்னைவிடச் சிறப்பான ஒரு வாழ்க்கை தன் மகனுக்கு வாய்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார். 'அவன் அதற்குத் தகுதியானவன். என் மகனுக்காக நான் என் கர்வத்தை விழுங்கியாக வேண்டும். இதுதான் ஒவ்வொரு தகப்பனின் தலைவிதி,' என்று அவர் தன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டார்.

பிறகு அவர் விதுரனிடம் திரும்பி, "எனக்கு யாருடைய துணையும் தேவையில்லை," என்று கூறிவிட்டு, அங்கிருந்து வேகமாகத் தன் அறையை நோக்கி நடந்தார்.

துரோணரின் வேதனையைப் புரிந்து கொண்ட விதுரன், அவர் தன்னை ஏளனம் செய்ததைக் கண்டுகொள்ளாமல் மௌனமாக நின்றான். தளர்ந்து போன தோள்களுடன் துரோணரின் உருவம் அங்கிருந்து மறைந்ததை அவன் கண்டான். பீஷ்மர் சில சமயங்களில் அடுத்தவருடைய மனத்தைப் புண்படுத்தும் விதமாக நடந்து கொள்ளத்தான் செய்தார் என்று அவன் நினைத்தான்.

"தட்சகன் பிடிபட்டதும் எனக்குத் தகவல் அனுப்பு. ஆனால் அதற்கான சாத்தியம் மிகவும் குறைவு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது," என்று கூறிய பீஷ்மர், பெருமூச்செறிந்துவிட்டு அங்கிருந்து அகன்றார்.

சுயநினைவின்றித் தரையில் விழுந்து கிடந்த ஒரு நபரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒரு சிறுவன் அமர்ந்திருந்ததை விதுரன் அப்போதுதான் பார்த்தான். விதுரன் அச்சிறுவனிடம் சென்று, "அவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதா?" என்று கேட்டான்.

அழகாக உடையணிந்திருந்த அந்த நபரை ஆச்சரியத்தோடு ஏறிட்டுப் பார்த்த அச்சிறுவன், "எனக்குத் தெரியவில்லை ஐயா," என்று கூறினான்.

“பயமின்றித் தட்சகனைத் தடுத்து நிறுத்த முயற்சித்தச் சிறுவன் நீதானே? மகனே, உன் பெயர் என்ன?” என்று விதுரன் கேட்டான்.

“ஐயா, என் பெயர் வாசுசேனன். இது என் தந்தை அதிரதன். இவர் ஒரு தேரோட்டி. என்னைக் கர்ணன் என்ற பெயரிலும் அழைப்பார்கள். என் தந்தையை எங்கள் குடிசைக்குக் கொண்டு செல்வதற்குத் தயவு செய்து எனக்கு உதவுங்கள். என் தாயார் கவலையோடு இருப்பார்.”

விதுரன் மறுபேச்சுப் பேசாமல், குப்புறக் கிடந்த அந்த நபரின் தோள்களைப் பிடித்துத் தூக்கினான். கர்ணன் தன் தந்தையின் கால்களைப் பிடித்துத் தூக்க முயற்சித்தான். ஆனால் அது அவனுக்கு மிகவும் கனமாக இருந்தது.

“நாம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைக்கிறேன்,” என்று ஜரன் ஏகலைவனிடம் கூறினான். அவர்கள் இருவரும் இன்னும் மறைவில்தான் நின்று கொண்டிருந்தனர். ஏகலைவன் தடுப்பதற்கு முன்பாக, ஜரன் அவர்களை நோக்கி வேகமாக ஓடினான்.

ஏகலைவன் அந்த முட்டாளைச் சபித்தான். “எல்லாவற்றையும் பாழாக்கிவிட்டான்! இப்போது நாங்கள் பிடிபட்டு அடிபடப் போகிறோம். முட்டாள் ஜரன்!” என்று கோபத்தோடு அவன் முணுமுணுத்தான். இப்போது வேறு வழி இருக்கவில்லை. யாரேனும் அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு, ஜரனை இழுத்துக் கொண்டு அவன் அங்கிருந்து ஓடிப் போயாக வேண்டும். எனவே அவன் ஜரனை வேகமாகத் துரத்திச் சென்று, அச்சிறுவனின் முடியைப் பிடித்து இழுக்க முயற்சித்தான். இந்தச் சத்தம் அங்கிருந்த காவலர்களின் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் எச்சரிக்கைக் குரல்களை எழுப்பினர். இந்தச் சத்தம் கேட்டு ஏறிட்டுப் பார்த்தக் கர்ணனும் விதுரனும் இரண்டு வேடுவச் சிறுவர்கள் தங்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்ததைக் கண்டனர். கர்ணனும் விதுரனும் தங்கள் ஆச்சரியத்திலிருந்து மீள்வதற்கு முன்பாகவே, ஜரன் அதிரதனின் உடலைத் தொட்டு அவனைத் தூக்கத் துவங்கியிருந்தான். ஏகலைவன் மூச்சிறைத்தபடியே ஒருசில அடிகள் தள்ளி அப்படியே நின்றுவிட்டான்.

ஜரன் விதுரனைத் தன் அகன்ற கண்களால் பார்த்துக் கொண்டே, “ஐயா, நாங்கள் உங்களுக்கு உதவி செய்வதற்காக வந்தோம்,” என்று கூறினான்.

ஜரனின் ஒல்லியான நோஞ்சான் உருவத்தைக் கண்ட பிரதம மந்திரி வாய்விட்டுச் சிரித்தார். இதற்கிடையே, இச்சிறுவர்களைத் துரத்தி வந்த வீரர்கள் ஏகலைவனை நெருங்கி, அவனைப் பிடித்தனர். ஆனால் விதுரன் தன் கையை உயர்த்தி, “அவனை விட்டுவிடுங்கள் . . . இவர்கள் இருவரும் கிராமத்திலிருந்து வந்திருக்கும் என்னுடைய

சொந்தக்காரர்கள்," என்று கூறினார்.

இப்போது அந்த வீரர்களைவிட ஏகலைவன் அதிக ஆச்சரியமடைந்தான். அவர்கள் ஏகலைவனைத் தங்கள் பிடியிலிருந்து விடுவித்துவிட்டு, பிரதம மந்திரியைப் பணிந்து வணங்கிவிட்டு, அங்கிருந்து அகன்றனர். ஒரு வார்த்தைகூடப் பேசாமல், சுயநினைவின்றி விழுந்து கிடந்த அதிரதனை அவனுடைய குடிசைக்குக் கொண்டு செல்வதற்கு ஏகலைவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். கோட்டையின் மிகத் தாழ்வான தளத்தில், குதிரை லாயங்களுக்கு அருகே அந்தக் குடிசை இருந்தது.

குடிசையின் வாசலில் ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள். "இது என் தாயார் ராதா," என்று கர்ணன் கூறினான்.

அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து அதிரதனை அங்கிருந்த ஒரே கட்டிலின்மீது மெதுவாகக் கிடத்தினர். சிறிது தண்ணீரும், ஒருசில துளசி இலைகளும், சமையலறையில் இருந்து சில மூலிகைகளும் கொண்டு வருமாறு விதுரன் அந்தப் பெண்ணிடம் கூறினான். பிரதம மந்திரி தங்களை என்ன செய்யப் போகிறாரோ என்று பயந்து போய், ஏகலைவனும் ஜரனும் ஒரு மூலையில் ஒடுங்கி நின்றனர். அவர் ஏன் தங்களை அந்த வீரர்களிடமிருந்து காப்பாற்றியிருந்தார் என்று ஏகலைவன் யோசித்துக் குழம்பினான். அவனுடைய கண்கள் அச்சிறிய குடிசையை நோட்டமிட்டன. குடிசை சிறியதாக இருந்தாலும் மிகவும் சுத்தமாக இருந்தது. இவர்கள் ஏழ்மையில் வாழ்ந்தனர். ஆனாலும், ஏகலைவனுக்கு அவர்கள்மீது பொறாமையாக இருந்தது. அவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள். அவர்களுக்கென்று ஒரு வீடாவது இருந்தது. திறந்த வெளியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த தன் சித்தி மற்றும் தன் சகோதரர்களின் முகங்கள் அவன் கண்முன்னே தோன்றின. அவனுடைய இதயத்தில் வெறுப்பு நிரம்பியது.

பிரதம மந்திரி தான் தயாரித்தக் கஷாயத்தைக் காயப்பட்ட அந்த மனிதனின் காய்ந்த உதடுகளில் வைத்து உட்செலுத்திக் கொண்டிருந்தபோது, அப்பெண் தன் கணவனை மிகுந்த அக்கறையோடு கவனித்துக் கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அதிரதன் கண்விழித்தான். அவனுடைய மனைவி தன் கண்ணீரின் ஊடாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். விதுரன் அங்கிருந்து விடைபெற்றுக் கொள்வதற்காக எழுந்தான். ஏதேனும் சாப்பிடாமல் அவர்கள் அங்கிருந்து போகக்கூடாது என்று ராதா அன்போடு எதிர்ப்புத் தெரிவித்தாள். தன் கணவனின் உயிரைக் காப்பாற்றியதற்காக அவள் விதுரனுக்கு மனதார நன்றி கூறினாள். இது ஒரு சிறிய காயம்தான் என்றும், அவளுடைய கணவனின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை

என்றும் விதுரன் அவளுக்கு விளக்கினான். தங்களுடைய எளிய வீட்டில் அவர்கள் ஏதேனும் சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டும் என்று அந்தத் தேரோட்டியும் பிரதம மந்திரியிடம் கெஞ்சினான். இறுதியில், அவர்களுடைய மனம் புண்படக்கூடாது என்பதற்காக விதுரன் அதற்கு ஒப்புக் கொண்டான். விதுரன் அந்தத் தேரோட்டியை பிரமிப்புடன் பார்த்து, "உன் மகன் துணிச்சல்காரன். இவனுக்கு மட்டும் ஆயுதப் பயிற்சி அளித்தால், அஸ்தினாபுரத்திற்கு இவன் ஒரு மாபெரும் சொத்தாக ஆவான்," என்று கூறினான்.

"ஐயா, தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த ஏழைகள் நாங்கள். எங்கள் மகனுக்கு யார் கற்றுக் கொடுப்பார்கள்? நான் என் சொந்தத் தொழிலை இவனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நாட்டிலேயே மிகச் சிறந்த தேரோட்டியாக இவனை நான் உருவாக்குவேன். ஆனால் ஆயுதங்களைக் கையாளக் கற்றுக் கொள்வது எங்கள் சாதிக்கும் தகுதிக்கும் மீறிய ஒன்று."

தான் அனுபவித்துக் கொண்டிருந்த அவமானத்தை யாரும் கவனித்துவிடக்கூடாது என்பதற்காகத் தன் கண்களை நிலத்தின்மீது நிலைப்படுத்திய அந்தத் தேரோட்டிக் குலச் சிறுவனை ஏகலைவன் பார்த்தான். "அவனால் ஒரு வீரனாக ஆக முடியும் என்றால், என்னாலும் முடியும்," என்று நினைத்த ஏகலைவன், ஜரனை நோக்கித் திரும்பியபோது, அடுப்பின்மீது கொதித்துக் கொண்டிருந்த பானையையே கண்ணிமைக்காமல் அவன் பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்தான். சாப்பிடுவதற்கு ஏதேனும் கொடுக்கும்படி ஜரனின் கண்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன.

விதுரன் நீண்ட நேரம் மௌனமாக நின்றான். "ம்ம்ம் . . . அதிரதா, என்னால் என்ன செய்ய முடியும் என்று நான் பார்க்கிறேன். என் யோசனை பலனளிக்குமா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் நிச்சயமாக முயற்சித்துப் பார்க்கிறேன். துரோணர் ஒரு நல்ல மனிதர், ஒரு தலைசிறந்த ஆசிரியர். தட்சகனின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் உன் மகன் இன்றிரவு இந்நாட்டிற்கு மிகப் பெரிய சேவையைச் செய்திருக்கிறான். உன் மகனைத் தன்னுடைய மாணவர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வதற்கு நான் அவரிடம் வேண்டுகோள் விடுக்கப் போகிறேன். ஆனால் அவர் ஒரு பழமைவாதி. உன் குல . . . உன் குலத்தைச் சேர்ந்த ஒருவனுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கக்கூடும். துரோணரிடம் இது குறித்துப் பேசுமாறு மேன்மை பொருந்திய பீஷ்மரிடம் நான் கேட்டுக் கொள்ளப் போகிறேன். ஒருவேளை . . . சரி, பார்க்கலாம்."

விதுரனின் குரலில் சந்தேகம் தொனித்தது, ஆனால் அதிரதன்

உற்சாகமடைந்தான். அவனுடன் பேசிக் கொண்டிருந்தது அந்நாட்டின் பிரதம மந்திரி. எனவே அவன் உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைந்ததில் வியப்பில்லை. தன் மகனின் எதிர்காலம் இப்போது பாதுகாப்பாக இருந்ததாக அவன் நினைத்தான்.

ஏகலைவன் பொறாமையால் உள்ளூர எரிந்து கொண்டிருந்தான். சிலருக்கு வாழ்க்கை எவ்வளவு சுலபமானதாக இருக்கிறது! தனக்கும் வில் வித்தையைக் கற்றுக் கொடுக்குமாறு துரோணரிடம் பிரதம மந்திரி பரிந்துரைப்பாரா என்று அவன் கேட்க விரும்பினான். ஆனால் தனக்கும் கர்ணனுக்கும் இடையே சமூக நிலைகளில் இருந்த இடைவெளி மிகவும் அதிகமாக இருந்ததால், விதுரனிடம் அவன் தன் விருப்பத்தை முன்வைக்கத் துணியவில்லை. அவன் வெறுமனே தன் உதட்டைக் கடித்துவிட்டு, மிகவும் தாழ்த்தப்பட்ட ஒரு குலத்தில் தன்னைப் பிறக்கச் செய்த தன் தலைவிதியை நினைத்துக் கோபம் கொண்டு, பொறாமையில் குமுறினான்.

"யாருக்கு வேண்டும் ஒரு குரு? உலகம்தான் என்னுடைய குரு. இந்தக் கேடுகெட்ட அதிர்ஷ்டக்காரனைவிட மிகச் சிறந்த ஒரு வில்லாளனாக என்னால் உருவாக முடியும்," என்று ஏகலைவன் நினைத்துக் கொண்டான். அந்த எளிய குடிசையில் நிலவிய கொடூரமான மகிழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத அவன், அங்கிருந்து ஓடிவிட விரும்பினான். ஜரன் அவனுடைய விரல்களைப் பிடித்து இழுத்தான். எரிச்சலடைந்த ஏகலைவன், அமைதியாக இருக்கும்படி அவனைக் கடிந்து கொண்டான். ஜரன் தன் வயிற்றைத் தடவிக் கொடுத்துத் தன் பசியை அவனுக்குச் சுட்டிக்காட்டினான். ஜரனின் மனத்தில் அந்த ஒரே ஓர் எண்ணம் மட்டும்தான் இருந்தது. இளவரசன் துரியோதனனிடமிருந்தும் இந்த முக்கியமான நபரிடமிருந்தும் ஏகலைவன் அனுபவித்திருந்த அன்பும் பரிவும் அவனைத் தடுமாறச் செய்தன. அவன் தொடர்ந்து பதற்றமாகவும் அமைதியாகவும் இருந்தான்.

ஜரனின் பசிப் பார்வையை ராதா கவனித்திருந்தாள். சுத்தமான தரையின்மீது மூன்று வாழை இலைகளை விரித்து வைத்து, சாப்பிட வருமாறு தன் விருந்தினர்களை அவள் அழைத்தாள். இவ்வளவு முன்னதாகவே சாப்பிட்டுத் தனக்குப் பழக்கமில்லை என்றும், காலைநேரக் குளியலைக்கூடத் தான் இன்னும் முடித்திருக்கவில்லை என்றும் கூறி, விதுரன் அவளுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தான். ராதா பரிமாறியிருந்த அனைத்தையும் சாப்பிட ஏகலைவன் விரும்பினான். ஒரு நாயின் பசி அவனிடம் இருந்தது. மாம்பழத்தைத் தவிர அவன் வேறு எதையும் சாப்பிட்டிருக்கவில்லை. ஆனால் தான்

பசியோடு இருந்ததை இந்த அன்னியர்களிடம் அவன் வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. எனவே, அவன் மிகவும் நிதானமாகச் சாப்பிட்டான். ராதா இன்னொரு முறை அவனுக்குப் பரிமாற வந்தபோது, வேண்டாம் என்று கூறி அவன் மறுத்துவிட்டான். ராதா கொடுத்த எல்லாவற்றையும் ஜரன் வயிறு புடைக்க உண்டான். இதற்கு மேல் எந்த உணவும் தன் பக்கம் வராது என்பதை அவன் கண்டபோது, வேண்டா வெறுப்பாக அங்கிருந்து எழுந்தான். தன் விரல்களை நக்கி, கடைசிப் பருக்கைவரை ஒன்றுவிடாமல் உண்டு களித்தான். ஜரன் அந்த இடத்தை அலங்கோலமாக ஆக்கியிருந்ததைக் கண்டு ஏகலைவன் வெறுப்படைந்தான். கொல்லைப்புறத்தில் அவர்கள் இருவரும் தங்கள் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தபோது, ஜரனின் முகம் பெரிதாக மலர்ந்திருந்தது. வயிறு நிறையச் சாப்பிட்டதில் அவன் மிகவும் நிறைவாகக் காணப்பட்டான். அவனுடைய நடத்தைக்காக ஏகலைவன் அவனைக் கடிந்து கொள்வதற்கு முன்பாக, அதிரதன் மற்றும் அவனுடைய குடும்பத்தாரிடமிருந்து விடைபெற்றுக் கொள்வதற்காக விதுரன் அவர்கள் இருவரையும் அழைத்தான்.

* * *

"நீங்கள் இருவரும் யார்? கோட்டைக்குள் நீங்கள் எப்படி நுழைந்தீர்கள்?" என்று கேட்ட விதுரனின் முகம் இப்போது தீவிரமாக இருந்தது.

ஏகலைவன் பயத்தில் நடுங்கினான். இறுதியில் இந்த மனிதன் தன்னுடைய உண்மையான நிறத்தைக் காட்டிக் கொண்டிருந்தான் என்று அவன் நினைத்தான். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்த ஒருவனிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நடத்தைமுறை இவன் மூலமாக மீண்டும் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருந்ததில் ஏகலைவன் ஒரு வினோதமான மனநிறைவை அனுபவித்தான். "நாங்கள் வேடுவர்கள். அருகிலுள்ள காட்டில் நாங்கள் தங்கியிருக்கிறோம். தட்சகனும் அவனுடைய கூட்டத்தினரும் கோட்டையை நோக்கித் தங்கள் குதிரைகளில் விரைந்து கொண்டிருந்ததை நாங்கள் பார்த்தோம்," என்று கூறிய கணத்தில், தான் ஒரு மாபெரும் தவறைச் செய்துவிட்டிருந்ததை ஏகலைவன் உணர்ந்தான்.

"அவன் பெயர் தட்சகன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டப் பிரதம மந்திரியின் உணர்ச்சியற்ற முகம் கல்லில் செதுக்கப்பட்டிருந்ததுபோலத் தோன்றியது.

"காட்டிலுள்ள எல்லோருக்கும் அவனுடைய பெயர் தெரியும்," என்று ஜரன் கூறினான். "அவன் சில சமயங்களில் காட்டிற்கு வந்து

எங்களுக்கு உணவு கொடுப்பான். என்றேனும் ஒருநாள் உங்கள் அனைவரையும் கொல்லப் போவதாகவும், பிறகு இந்த இடம் வேடுவர்களுக்கும், காட்டில் வசிக்கின்ற நாகர்கள், கிராதர்கள் போன்ற பிறருக்கும் சொந்தமாகிவிடும் என்றும் அவன் கூறினான்."

முன்பின் யோசிக்காமல் படபடவென்று ஜரன் பேசிய வார்த்தைகளைக் கேட்டதும், தங்கள் வாழ்க்கை முடிந்துவிட்டதாக எண்ணி ஏகலைவன் அஞ்சினான். விதுரன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். ஏகலைவனின் கால்கள் நடுங்கத் துவங்கின.

இறுதியில் விதுரன் பேசினான். "தட்சகன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதைக் கண்காணித்து நீங்கள் எனக்குத் தகவல் கொடுத்தால், உங்களுக்கு வெகுமதி வழங்கப்படும்."

ஜரன் தன் கண்கள் மலர, "எங்களுக்குச் சாப்பாடு கிடைக்குமா?" என்று கேட்டான்.

"சாப்பாடும் கிடைக்கும், அதற்கு அதிகமாகவும் கிடைக்கும்," என்று கூறிய விதுரன், இரண்டு செப்பு நாணயங்களை அவர்களை நோக்கி வீசினான்.

"இவை என்ன?" என்று ஜரன் கேட்டான். பணத்தை அவன் ஒருபோதும் பார்த்திருக்கவோ அல்லது பயன்படுத்தியிருக்கவோ இல்லை.

"உன்னுடைய சகோதரனிடம் கேள். இவற்றைக் கொடுத்து எவ்வாறு உணவைப் பெறுவது என்று அவன் உனக்குக் கூறுவான். தட்சகனைப் பற்றி அதிகமான தகவல்களை நீ எனக்குத் தெரிவித்தால், இன்னும் அதிகமான பணம் உனக்குக் கிடைக்கும்."

விதுரனின் கரிய கண்கள் ஏகலைவனைத் துளைத்தன. ஏகலைவன் விதுரனின் பார்வையைத் தவிர்த்தான். ஜரன் தன் வாயை மூடிக் கொண்டு இருந்தால் நன்றாக இருக்கும் என்று அவன் நினைத்தான். ஆனால் அது நடக்கவில்லை.

"உங்களைப்போலவே நன்றாக உடையுடுத்தியிருந்த ஒருவனை நாங்கள் பார்த்தோம் . . . தட்சகன் இக்கோட்டைக்குள் நுழைவதற்காக அவன் ஒரு கயிற்றைக் கீழே போட்டான் . . ." என்று கூறிய ஜரன், ஏகலைவன் தன்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் தன் பேச்சை நிறுத்தினான்.

"யார்? யார் அவன்?" விதுரனின் கண்கள் கோபத்தில் சிவந்தன.

ஜரன் வேறு எதையேனும் கூறித் தங்களைப் பிரச்சனைக்கு ஆளாக்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, ஏகலைவன் அவனை முந்திக் கொண்டு, "ஐயா, அவன் பெயர் என்னவென்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் அவனை மீண்டும் பார்த்தால்,

அவனை எங்களால் அடையாளம் காட்ட முடியும்," என்று கூறினான். பிறகு, பிரதம மந்திரி தங்களை அங்கிருந்து போக அனுமதிப்பாரா என்று வியந்து கொண்டே அவன் அமைதியாக நின்றான்.

"ம்ம்ம் . . . இப்போது நீங்கள் போகலாம்," என்று விதுரன் அமைதியாகக் கூறினான்.

ஏகலைவன் ஜரனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அரண்மனைக் கதவுகளை நோக்கி நடந்தான். விதுரனின் கண்கள் தங்களைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது. அவர்கள் உண்மையிலேயே பிரதம மந்திரியின் உறவினர்களா என்று கேட்பதற்காகக் காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அவர்களுக்கு விடையளிப்பதற்காக ஏகலைவன் தன் வாயைத் திறப்பதற்கு முன்பே, "இல்லை," என்று கூறி ஜரன் அதை மறுத்தான். விதுரனின் பார்வைக்கு எட்டாத தூரத்தில் தாங்கள் இருந்ததை உறுதி செய்து கொண்ட காவலர்கள், அவ்விரு சிறுவர்களையும் சோதனையிட்டு, ஜரனின் கையிலிருந்த செப்பு நாணயத்தைக் கண்டெடுத்தனர். அவர்கள் அதை அவனிடமிருந்து பறித்தபோது, பிரதம மந்திரி அதைத் தனக்குக் கொடுத்திருந்ததாகக் கூறி அவர்களை எதிர்த்த ஜரனை அவர்கள் கண்மூடித்தனமாக அடித்தனர். அடி வாங்க விரும்பாத ஏகலைவன் தன்னிடமிருந்த மற்றொரு நாணயத்தை வெறுப்பில் அவர்களுடைய பாதங்கள்மீது தூக்கி வீசினான். அதைப் பொறுக்குவதற்காகக் கீழே குனிந்த ஒரு காவலாளி, அதைக் கையில் எடுப்பதற்கு, வேடுவனான தன்னுடைய பாதங்களைக் கிட்டத்தட்டத் தொட வேண்டியிருந்ததைக் கண்டு ஏகலைவன் சிறிதளவு நிறைவு கொண்டான். ஏகலைவனின் முகத்தில் படர்ந்த ஏளனப் புன்னகையைக் கண்ட மற்றொரு காவலாளி, அவனுடைய முகத்தில் ஓங்கி அடித்தான்.

விதுரன் பெரும் கவலை கொண்டான். எல்லோரையும் வரிசையாக நிற்க வைத்து, தட்சகனைக் கோட்டைக்குள் நுழைய அனுமதித்த நம்பிக்கைத் துரோகியை அச்சிறுவர்கள் அடையாளம் காட்டுவதற்கு அவனால் ஏற்பாடு செய்ய முடியும். ஆனால் தன்னுடைய குட்டு வெளிப்பட்டுவிட்டதைக் கண்டதும் அந்த உளவாளி எச்சரிக்கையாகிவிடக்கூடும். அவன் உண்மையிலேயே முக்கியமான ஒருவனாக இருந்தால், இரண்டு வேடுவச் சிறுவர்களின் வாக்குமூலத்தைக் கொண்டு அவன்மீது குற்றம் சுமத்துவது சிரமமானதாக ஆகிவிடும். எனவே, பொறுத்திருந்து பார்ப்பதுதான் நல்லது என்று விதுரன் தீர்மானித்தான். அந்த நம்பிக்கைத் துரோகி, மேலும் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்துவதற்கு முன்பாகத் தான் அவனைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே

விதுரன் திரும்பியபோது, அரண்மனையின் முதற்தளத்தில் இருந்த மேல்மாடங்களில் ஒன்றின்மீது ஓர் உயரமான உருவம் நின்று கொண்டிருந்ததை அவன் பார்த்தான். மேல்மாடத்தில் இருந்தவன் மேற்கு நோக்கி நின்றான். பிரார்த்தனை செய்வதைப் போன்ற ஒரு தோரணையில் அவனுடைய தலை கவிழ்ந்திருந்தது. கிழக்கில் உதிக்கும் கதிரவனை நோக்கி எல்லோரும் வழிபடுகின்ற இந்த நிலத்தில், அவன் மேற்கு நோக்கி நின்று கொண்டிருந்தான். அது யாரென்று தெரிந்து கொள்ள விதுரன் விரும்பினான். ஆனால் அந்த மனிதன் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டான். இறுதியில் அவன் திரும்பியபோது, காலைக் கதிரவனின் கீற்றுகள் அவனுடைய முகத்தின்மீது விழுந்தன. அவன் காந்தார நாட்டு இளவரசனான சகுனி என்பதைக் கண்ட விதுரன் பதற்றமடைந்தான். அவர்கள் இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டன. சகுனியின் கரிய கண்களின் தீய ஆற்றலை வெகு தொலைவிலிருந்துகூட விதுரனால் உணர முடிந்தது. "அந்த நம்பிக்கைத் துரோகி யாரென்று நான் கண்டுபிடித்துவிட்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது," என்று விதுரன் நினைத்தான். ஆனால் அதற்கு எந்தச் சான்றும் இருக்கவில்லை. அவன் பொறுமையாகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

* * *

பீஷ்மர் காந்தாரத்தின்மீது படையெடுத்து வந்து, அதை அடக்கி ஒடுக்கித் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, ஏதோ ஒரு தனிப்பட்டச் சொத்துப்போலக் கருதித் தன் சகோதரியைக் கூட்டிச் சென்று, ஒரு கைப்பாவை அரசனாக இருந்த ஒரு குருட்டு முட்டாளுக்கு அவளை மணமுடித்து வைத்தபோது, ஐந்து வயதுச் சிறுவனாகத் தனக்குத் தானே சூளுரைத்துக் கொண்ட வார்த்தைகளை அரண்மனை மேல்மாடத்தில் நின்று கொண்டு இளவரசன் சகுனி மீண்டும் தனக்குத் தானே கூறிக் கொண்டான். மேற்கில் இருந்த தன் நேசத்திற்குரிய காந்தார நாட்டைச் சகுனி ஏக்கத்தோடு பார்த்தான். மற்ற ஒவ்வொரு நாளையும் போலவே, அவன் தன் தலையைக் குனிந்து, பரதகண்டத்தை அழிக்கப் போவதாகத் தான் மேற்கொண்டிருந்த சபதத்தை மீண்டும் வலியுறுத்திக் கொண்டான். நேற்றைய செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. ஆனால் அவன் மீண்டும் முயற்சிப்பதென்று தீர்மானித்தான். நேர்மையற்ற, குழப்பமான சாதி அமைப்புமுறை இருந்தும்கூட, பரதகண்டத்திற்கென்று வலிமைகள் இருந்தன. வெளியிலிருந்து ஒருவன் வந்து பரதகண்டத்தை அழிப்பது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. இவ்வேலை இந்நாட்டிலுள்ள

மக்களாலேயே செயல்படுத்தப்பட்டாக வேண்டும். சகுனியின் இந்தப் பகடையாட்டத்தில் தட்சகன் ஒரே ஒரு காய் மட்டுமே. நேர்த்தியாகத் திட்டமிட்டு நகர்த்தப்பட வேண்டிய நபர்கள் இன்னும் பலர் இருந்தனர். இவர்களில் மிகவும் முக்கியமானவன், அரண்மனைக்கு உள்ளே இருந்தான். இளவரசன் துரியோதனனின் அறையை நோக்கிச் சென்ற சகுனி தனக்குத் தானே புன்னகைத்துக் கொண்டான். இளவரசனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கான நேரம் வந்துவிட்டிருந்தது என்று அவன் தனக்குள் கூறிக் கொண்டான்.

4

தேரோட்டியின் புதல்வன்

ஒரு வில்லாளனாக ஆக வேண்டும் என்ற தன்னுடைய ரகசிய விருப்பத்தைக் கர்ணன் ஒரு முறை தன் பெற்றொரிடம் வெளிப்படுத்தியிருந்தான். அதன் பிறகு பல நாட்கள் அவனுடைய தந்தை மௌனமாக இருந்து வந்திருந்தார். அவனுடைய தாயார் இது பற்றித் தன் கணவனிடம் பல முறை பேச வந்தபோதும், முறைப்புகளும் முணுமுணுப்புகளும் மட்டுமே அவனிடமிருந்து பதிலாக வந்தன. தன் தந்தை இதற்குச் சம்மதிக்க வேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டு, தன் இதயம் படபடக்க, கர்ணன் பொறுமையாகக் காத்திருந்தான். பிறகு திடீரென்று ஒருநாள், தன்னுடன் கோவிலுக்கு வருமாறு அதிரதன் கர்ணனை அழைத்தான். அவர்கள் தாழ்ந்த சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்ததால், கோவிலின் கருவறை அருகே செல்வதற்கு அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக, வெளிப்புறப் பிரகாரத்தில் நின்று பிரார்த்தனை செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கிருபர் ஓர் ஆலமரத்தின் அடியில் ஒரு மேடையின்மீது அமர்ந்து கொண்டு தன் நண்பர்களோடு விவாதித்துக் கொண்டிருந்தார். பகடை விளையாட்டு ஒன்று முழு வீச்சில் நடந்தேறிக் கொண்டிருந்தது. கிருபர் தன் நண்பர்களில் ஒருவனைத் தோற்கடிக்கும் நிலையில் இருந்தபோது, அதிரதனும் அவனுடைய மகன் கர்ணனும் அவரை அணுகினர்.

அதிரதன் மரியாதை நிமித்தமாகத் தன் தோளின்மீது இருந்த துண்டை எடுத்துத் தன் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டு, கிருபரிடமிருந்து ஒருசில அடிகள் தள்ளி, தன் கண்களை நிலத்தின்மீது நிலைப்படுத்தியபடி நின்றான். ஒரு பிராமணனிடம் பேச விரும்பிய ஒரு சூத்திர இனத்தவன் இப்படி மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பது அக்காலத்திய வழக்கமாக இருந்தது. கர்ணன் பதற்றத்தோடு தன் தந்தையின் பின்னால் காத்திருந்தான். கிருபர் தன் விவாதங்களை நிறுத்திவிட்டு, அதிரதனை ஆச்சரியத்தோடு பார்த்தார். ஒரு தேரோட்டிக்கு இங்கு என்ன வேலை என்று அவர் யோசித்தார்.

"சாமி, ஒரு பணிவான கோரிக்கை . . ."

"நானே நொடிந்து போயிருக்கிறேன். உனக்குக் கடன் கொடுப்பதற்கு என்னிடம் நயா பைசா கிடையாது. அப்படி என்னிடம் இருந்திருந்தால், மதுவகத்தில் இன்னும் ஒருசில கோப்பைகள் மதுவை வாங்கி நான் மகிழ்ச்சியாகப் பருகிக் களித்திருந்திருப்பேன்," என்று கூறிவிட்டு, கிருபர் காட்டுத்தனமாகச் சிரித்தார்.

கிருபர் ஒரு வினோதமான, தான்தோன்றித்தனம் நிறைந்த, வழக்கத்திற்குப் புறம்பாக நடந்து கொண்ட ஒரு பிராமணர் என்பதையும், சமூக விதிமுறைகளையும் நன்னடத்தை நெறிமுறைகளையும் பற்றிக் கவலைப்படாதவர் என்பதையும் கர்ணன் அறிந்திருந்தான். இப்போது துரோணர் இங்கு வந்திருந்த நிலையில், கிருபர் அதிகக் கல்வியறிவு கொண்டவராகவும் ஆயுதக் கலையில் கைதேர்ந்தேர்ந்தவராகவும் இருந்தும்கூட, இளவரசர்களின் ஆசான் என்ற பதவியிலிருந்து அவர் நீக்கப்படவிருந்ததாக அரண்மனையில் சில வதந்திகள் வலம் வந்து கொண்டிருந்தன. ஆனால் கிருபரோ, உலகில் எதைப் பற்றியும் தனக்குக் கவலை இல்லை என்பதுபோல நடந்து கொண்டார். நாள்தோறும் அதிகாலையில், அவருடைய சாதியைச் சேர்ந்த மற்ற அனைவரும் தங்கள் காலைச் சடங்குகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது, இவர் மட்டும் தன் நம்பிக்கைக்குரிய நண்பர்களோடு சேர்ந்து கொண்டு மதுவகத்தில் கொட்டமிட்டுக் கொண்டிருந்தார். பழமைவாத பிராமணச் சமூகம் இவருடைய மேதமையைத் தங்களுடைய சமூகத்திற்கான ஓர் அச்சுறுத்தலாகப் பார்த்தது. இதில் இன்னொரு பிரச்சனை என்னவென்றால், அவர்கள் அனைவரையும்விட இவர்தான் வேதங்களில் மிகச் சிறந்தவராகத் திகழ்ந்தார். தன்னிடம் சவால்விடத் துணிந்த எவனொருவனோடும் ஒரு விவாதத்தையோ அல்லது ஒரு சண்டையையோ தொடங்க அவர் எப்போதுமே தட்டழிந்து கொண்டிருந்தார். வேதங்களைப் பற்றி இவர் கேட்டக் கேள்விகள் எதற்கும் அவர்கள் யாரிடமும் விடையேதும்

இருக்கவில்லை. சாதி விதிமுறைகளை உதாசீனப்படுத்தியதன் மூலம் அவற்றை அவர் வெளிப்படையாகவே கேலி செய்தார். பிறகு, தன் நடத்தையை நியாயப்படுத்துவதற்காக வேதங்களிலிருந்து அவர் மேற்கோள் காட்டினார். இந்தக் கிறுக்கன் தனக்கு உதவுவான் என்று தன் தந்தையிடம் ஒரு நப்பாசை இருந்ததைக் கர்ணன் அறிந்திருந்தான்.

"சாமி, நான் உங்களிடம் யாசகம் கேட்டு வரவில்லை. இது என் மகன் கர்ணன். இவன் ஒரு போர் வீரனாக ஆக விரும்புகிறான். இவன் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறான்."

"என்ன, இவன் ஒரு போர் வீரனாக ஆக விரும்புகிறானா?" என்று கேட்டுவிட்டு, கிருபர் தன் மேடையைவிட்டு இறங்கி, கர்ணனை நோக்கி விரைந்தார். கர்ணனிடமிருந்து ஒருசில அங்குலங்கள் தள்ளி நின்று கொண்டு, அவர் அவனுடைய கண்களுக்குள் உற்றுப் பார்த்தார். கர்ணன் உடனடியாக ஒருசில அடிகள் பின்வாங்கினான். அந்த பிராமணரைத் தவறுதலாகத் தொட்டு, சாதி விதிமுறைகளைத் தான் மீறிவிடக்கூடும் என்று அவன் பயந்தான். தன் தந்தையின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியை அவன் பார்த்தான். தங்களுக்கு இவ்வளவு அருகில் வந்ததன் மூலமாகக் கிருபர் ஏற்கனவே சாதி விதிமுறைகளை மீறியிருந்தார். கோவில் அர்ச்சகன் இக்காட்சியைத் தொலைவில் ஒரு கதவின் அருகே நின்று கவனித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தின்மீது ஒரு வெறுப்பு ரேகை படர்ந்தது. கிருபர் கர்ணனை வேகமாகத் தள்ளினார். கர்ணன் நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். பிறகு அவர் அவனுடைய நீண்ட தலைமுடியைப் பிடித்து, ஒற்றைக் கையால் அவனைத் தூக்கி, கர்ணனின் முகத்தின்மீது ஓங்கி அறைந்துவிட்டு, தன் வலிமையான இடது கையால் அவனுடைய வயிற்றில் வேகமாகக் குத்தினார். கர்ணன் வலியில் துடித்தான், ஆனால் சத்தம் போட்டு அழ மறுத்தான்.

"ஐயா . . . ஐயா . . . அவனை அடிக்காதீர்கள்," என்று அதிரதன் மன்றாடினான்.

"முட்டாளே! இவன் அடி வாங்கிக் கொண்டிருப்பதாக நினைக்கிறாயா? உன் மகனிடம் துணிச்சல் உள்ளது. முறையாகப் பயிற்சி பெற்றால், இவனால் ஒரு சிறந்த போர் வீரனாக ஆக முடியும். இவனால் வலியைத் தாங்கிக் கொள்ள முடிகிறது," என்று கூறிய கிருபர், கர்ணனை விடுவித்துவிட்டு, வேகமாக மீண்டும் தன் மேடையின்மீது ஏறிக் குதித்து அமர்ந்தார். அவருடைய விரல்கள் அவருடைய நீண்ட வெண்தாடியை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தன.

"ஐயா, நீங்கள் இவனுக்குக் கற்றுக் கொடுப்பீர்களா?" மகிழ்ச்சியால் துளிர்த்தக் கண்ணீரை அதிரதனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

“ஏன் முடியாது?” என்று கூறிய கிருபரின் தடித்த உதடுகளின்மீது ஒரு குறும்புத்தனமான புன்னகை தோன்றியது.

“ஐயா, இவன் ஒரு சூத்திரன் . . . நான் என்ன கூற வருகிறேன் என்றால் . . . நாங்கள் தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்தவர்கள்.”

“அவன் ஒரு வேடுவனாகவோ, ஒரு நாகனாகவோ, அல்லது ஒரு கிரேக்கனாகவோ இருக்கலாம். அதைப் பற்றி எனக்கு என்ன அக்கறை? அவன் ஒரு நல்ல வீரனாக ஆவான்,” என்று பதிலளித்தக் கிருபர், பெருமிதத்தாலும் மகிழ்ச்சியாலும் ஒளிர்ந்து கொண்டிருந்த கர்ணனைப் பார்த்தார்.

அதிரதன் தன் கைகளைக் கூப்பிக் கொண்டு, தலை தாழ்த்தி நின்று, “ஐயா, அவன் எப்போது வர வேண்டும்?” என்று கேட்டான்.

“ஆயிரம் தங்க நாணயங்களை நீ ஏற்பாடு செய்தவுடன் அவன் என்னை வந்து பார்க்கலாம்,” என்று தன் முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றிக் கிருபர் கூறினார்.

“ஐயா . . .” தான் செவிமடுத்ததை அதிரதனால் நம்ப முடியவில்லை. தன் அறுபதாவது வயதுவரை அஸ்தினாபுர அரசாங்கத்தில் சேவை செய்தாலும்கூட, அவனால் ஒருபோதும் ஆயிரம் தங்க நாணயங்களைச் சம்பாதிக்க முடியாது. “ஐயா, நாங்கள் ஏழைகள் . . .”

“என் இனிய நண்பனே, அது என் தவறு அல்ல. உன் மகன் எந்த சாதியைச் சேர்ந்தவன் என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. பணத்தின்மீது மட்டும்தான் நான் அக்கறை கொண்டிருக்கிறேன். மது மிகவும் விலையுயர்ந்தது. அதேபோல, வாழ்வில் உள்ள அனைத்து நல்ல விஷயங்களும் அதிக விலை கொண்டவைதான். என் ஆயுதத் திறமையோடு ஒப்பிடும்போது, என் சூதாட்டத் திறமை மிகவும் மட்டம்தான். உன்னால் பணம் கட்ட முடியும்போது உன் மகனை என்னிடம் அனுப்பி வை. பரதகண்டத்திலேயே மிகச் சிறந்த போர் வீரனாக நான் அவனை உருவாக்குகிறேன். இல்லையென்றால், உன்னைப்போல ஒரு தேரோட்டியாக ஆவதற்கு அவன் கற்றுக் கொள்ளட்டும்.”

“ஆனால் . . .”

“மூடனே! உன்னிடம் நின்று பேசி வீணடிப்பதற்கு என்னிடம் நேரமில்லை. என் நண்பர்கள் பொறுமையிழந்து கொண்டிருக்கின்றனர். பணத்தோடு என்னை வந்து பார். அதன் பிறகு நாம் பேசலாம்,” என்று கூறிவிட்டு, கிருபர் தன் நண்பர்களுடன் பகடை விளையாட்டைத் தொடர்ந்தார்.

தந்தையும் மகனும் மௌனமாக நின்றனர். அவர்கள் இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. கதிரவன் வானின் உச்சியை

அடைந்திருந்தான். சமவெளிகளிலிருந்து வந்த வெப்பக் காற்றில் புழுதி சுழன்றது. இக்காட்சியைக் கண்காணித்துக் கொண்டு நின்ற அர்ச்சகன், காணிக்கைகளோடு வந்த ஒரு பணக்கார வணிகனை அழைத்துக் கொண்டு கோவிலுக்குள் சென்றான். கர்ணனால் தன் தந்தையின் முகத்தை எதிர்கொள்ள முடியவில்லை. கிருபரிடமிருந்து அவனுக்குக் கிடைத்திருந்த அடி உதைகளும் குத்துக்களும் இப்போது வலிக்கத் துவங்கியிருந்தன. கிருபர் வெறுமனே ஒரு சூத்திரனுக்குக் கற்றுக் கொடுக்க மறுத்துவிட்டுப் பேசாமல் இருந்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்தக் கர்ணன், அவமானத்தில் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அதிரதன் ஒரு கையகைக் கர்ணனின் தோளின்மீது போட்டான். கர்ணன் ஏறிட்டுப் பார்த்தபோது, தேங்கி நின்ற கண்ணீரால் தன் தந்தையின் கண்களும் மின்னிக் கொண்டிருந்ததைக் கண்டான். அக்கணத்தில் கர்ணனுக்குத் தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. தன்னால் ஏன் தன் சாதியைச் சேர்ந்த, தன் வயதை ஒத்தச் சிறுவர்களைப்போல இருக்க முடியவில்லை என்றும், ஒரு போர் வீரனாக ஆக வேண்டும் என்ற ஆசை தனக்கு ஏன் வந்தது என்றும் அவன் தன்னைத் தானே கேட்டு மனம் நொந்தான். தான் ஒரு தேரோட்டியின் மகனாக இருந்ததால், தன் சாதிக்குரிய வேலையைக் கற்றுக் கொண்டு, பரதகண்டத்திலேயே மிகச் சிறந்த தேரோட்டியாக உருவாகித் தன் தந்தையைப் பெருமைப்படுத்தப் போவதாகக் கர்ணன் அக்கணத்தில் உறுதியெடுத்துக் கொண்டான்.

“கர்ணா, கவலைப்படாதே. நாம் இதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்கலாம். நீ தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் என்று கூறி அவர் உனக்குக் கற்றுக் கொடுக்க மறுக்கவில்லை என்பது நல்ல விஷயம்தானே? என் தேரையும் நம்முடைய குடிசையையும் விற்றால் ஒருசில நூறு நாணயங்கள் நமக்குக் கிடைக்கும். நான் வேறு ஏதேனும் ஒரு வேலையைத் தேடிக் கொள்கிறேன். நாம் நிச்சயமாக இதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்துவிடலாம்.”

“அப்பா, நான் ஒரு போர் வீரனாக ஆக விரும்பவில்லை. நாம் அதைப் பற்றி மறந்துவிடலாம். அது ஒரு முட்டாள்தனமான கனவு.”

“கர்ணா, நான் கூறுவதைக் கவனமாகக் கேள் . . .”

“அப்பா, ஒரு போர் வீரனாக ஆவதில் இனிமேலும் எனக்கு விருப்பமில்லை. எப்படித் தேரோட்ட வேண்டும் என்று எனக்குக் கற்றுக் கொடுங்கள். எனக்காக உங்கள் தேரையும் நம் வீட்டையும் விற்கப் போவதாக இனி ஒருபோதும் கூறாதீர்கள்,” என்று கூறிய கர்ணனின் உடல் கோபத்தாலும் அவமானத்தாலும் நடுங்கியது.

அவர்களைக் கடந்து சென்றவர்கள் அவர்களையே பார்த்துக் கொண்டு சென்றனர். குழப்பச் சத்தத்தைக் கேட்டக் கிருபர் திரும்பிப் பார்த்தார். கர்ணனின் இதயம் ஒரு கணம் தன் துடிப்பை நிறுத்தியது. ஒருவேளை கிருபர் தங்களிடம் வேடிக்கைக்காக இப்படி நடந்து கொண்டிருக்கக்கூடும் என்றும், இப்போது அவர் தங்களை அழைத்து, விளையாட்டிற்காகத்தான் ஆயிரம் தங்க நாணயங்களைத் தான் கேட்டதாகக் கூறி, மறுநாளிலிருந்து தான் அவருடைய வகுப்பில் கலந்து கொள்ளலாம் என்று தங்களிடம் தெரிவிக்கப் போவதாகவும் கர்ணன் நினைத்தான்.

"கயவர்களே, இங்கிருந்து போய்விடுங்கள். நீங்கள் இங்கு எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியுமா? காட்டுக்கூச்சல் போடும் மக்களால் கவனம் சிதறடிக்கப்படாமல் ஒரு பகடை விளையாட்டைக்கூட விளையாட முடியவில்லை," என்று கூறிவிட்டு, தரக்குறைவான வார்த்தைகளால் அவர் அவர்களை வசை பாடினார்.

அதிரதனும் கர்ணனும் தங்கள் குடிசைக்குத் திரும்பிச் செல்லத் துவங்கியபோது கோவில் மணி ஒலித்தது. கைவிடப்பட்ட நிலையில், புழுதி படிந்த தெருக்களின் ஊடாக நடந்து சென்ற அவர்களிடம், காகங்களின் கரைதல் ஒலியும், கிருபரின் கூட்டத்தினரிடமிருந்து வந்த சிரிப்பொலியும் கூச்சல்களும் காற்றில் மிதந்து வந்தன. அவர்கள் தங்கள் வீட்டை அடைந்தபோது, கர்ணன் எதுவும் பேசாமல், வீட்டின் பின்புறத்திலிருந்த கிணற்றை நோக்கிச் சென்றான். அதன் ஆழத்தில் இருந்த இருண்ட நீரில் தன்னுடைய வசீகரமான முகத்தின் தடுமாற்றமான பிரதிபலிப்பை அவன் பார்த்தான். கிணற்றுக்குள் குதித்து எல்லாவற்றையும் ஒரேயடியாக முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று ஒரு கணம் அவனுக்குச் சபலம் ஏற்பட்டது. அப்போது தன் தாயின் தேம்பல்களும் தன் தந்தையின் வேதனைக் குரலும் அவனுக்குக் கேட்டன. அவன் தன் பற்களை நறநறவென்று கடித்தவாறு, "என் பெற்றோருக்குச் சேவை செய்ய வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கிறது," என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான். தன் வாழ்நாள் முழுவதும் தான் ஓர் எளிய தேரோட்டியாக மட்டுமே இருக்க வேண்டியதை நினைத்து அவனுடைய இதயம் சுக்குநூறானது. தன் பெற்றோர்கள்மீது அவன் கொண்டிருந்த அன்புதான், அன்று அந்தக் கிணற்றின் இருண்ட நீரில் அவன் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வதிலிருந்து அவனைக் காப்பாற்றியது.

* * *

கர்ணனுக்குக் கற்றுக் கொடுக்குமாறு துரோணரிடம் தான் பரிந்துரைக்கப் போவதாக விதுரன் கூறும்வரை, அதிரதனோ அல்லது கர்ணனோ, கிருபருடனான நிகழ்வைப் பற்றி மீண்டும் ஒருபோதும் பேசியிருக்கவே இல்லை. ஒரு போர் வீரனாக ஆவது பற்றிய நம்பிக்கையகைக் கர்ணன் முழுவதுமாகத் தொலைத்துவிட்டு, தன் வாழ்நாள் முழுவதும் அடிமை வேலை செய்வதற்கு மனத்தளவில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால் இப்போது அவனுடைய மனத்தில் ஒரு புதிய நம்பிக்கை துளிர்விட்டது. இறுதியில், சூத்திர இனத்தைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுவனுக்கு சிவபெருமான் கருணை காட்டியிருந்தார்.

கர்ணன் அதிகாலையில் வெகு முன்னதாகவே எழுந்து தன் காலைக் கடன்களை எல்லாம் முடித்தான். அவனால் தன் உற்சாகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன் வீட்டின் மண் தாழ்வாரத்தில் அவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். காகங்களின் கடுமையான கரைதல் சத்தம்கூட அவனுடைய காதுகளுக்கு இசையாக இனித்தது. அதிகாலையில் துயிலெழும் பழக்கத்தைக் கொண்டிருந்த ஒருசிலர், ஆற்றை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். மல்லிகையின் நறுமணமும், தொலைவில் இருந்த கோவிலில் ஒலித்த மணியின் லேசான சத்தமும், குளிர்ந்த தென்றல் காற்றில் மிதந்து வந்தன. ராதா வெளியே வந்து, ஒரு குவளைப் பாலைக் கர்ணனிடம் கொடுத்தாள். அவன் அதைப் பொறுமையின்றிக் குடித்துவிட்டு, அந்தப் பித்தளைக் குவளையைத் தரையின்மீது ஒரு பலத்தச் சத்தத்துடன் வைத்தான். ராதா அவனுடைய தலையையும் காதணிகளையும் தடவிக் கொடுத்தாள்.

தன் தாயாரிடமிருந்து வந்த பாசமான கவனிப்புகளிலிருந்து விடுபட முயற்சித்தக் கர்ணன், "அப்பா எங்கே?" என்று கேட்டான். அவள் புன்னகைத்ததை அவன் கண்டான். தானும் தன் தந்தையும் தங்கள் வீட்டைவிட்டு வெளியே காலெடுத்து வைத்த மறுகணம், தங்களுக்குக் கிடைத்திருந்த அதிர்ஷ்டத்தைப் பற்றி அண்டைவீட்டாரிடம் கூறுவதற்குத் தன் தாய் ஓடிக் கொண்டிருப்பாள் என்பதை அவன் அறிந்தான். ஒருவழியாக அவனுடைய தந்தை தன் பிரார்த்தனை அறையிலிருந்து வெளியே வந்தார். கர்ணன் தாழ்வாரத்திலிருந்து குதித்துத் தெருவிற்குள் ஓடினான்.

"கர்ணா, கொஞ்சம் பொறுமையாக இரு. நீ பிரார்த்தனை செய்துவிட்டாயா?" என்று அதிரதன் கேட்டான்.

கர்ணனுக்கு எரிச்சல் வந்தது. இவை எல்லாவற்றையும் அதிகாலையிலேயே அவன் செய்து முடித்திருந்தான். ஆனால் இந்த நேரத்தில் தன் தந்தையுடன் அவன் ஒரு விவாதத்தைத் தொடங்க

விரும்பவில்லை. எனவே, அவன் கிழக்கு நோக்கித் திரும்பி, காவி நிறத்திற்கு மாறிக் கொண்டிருந்த வானத்தை நிமிர்ந்து பார்த்தான். கதிரவன் கருணையோடு ஒளிர்ந்து கொண்டிருந்தான். அந்த அழகான காட்சியைப் பிடித்துத் தன் மனத்திற்குள் நிலைப்படுத்துவதுபோலக் கர்ணன் தன் கண்களை மூடிக் கொண்டான். பிரார்த்தனைகள் எதுவும் அவன் நினைவிற்கு வரவில்லை. அவன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு இருந்தான். ஒளிர்ந்து கொண்டிருந்த கதிரவனுடன் மானசீகமாக அவன் ஒன்றரக் கலந்தான். அதன் ஒளி அவனை வருடியதில், அவன் இதமாகவும் நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்தான். அதிரதனின் கை அவனுடைய தோளின்மீது விழுந்தபோது, கர்ணன் தன் மயக்க நிலையிலிருந்து வேண்டா வெறுப்பாக விடுபட்டான். அவன் தன் தந்தையைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, அரண்மனையை நோக்கி வேகமாக நடக்கத் துவங்கினான். தன் கண்களில் கண்ணீருடன் தங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த தன் மனைவியை அதிரதன் திரும்பிப் பார்த்தான். தன் கண்களில் துளிர்த்தக் கண்ணீரை அவள் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக அவன் உடனடியாகத் தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான். கர்ணன் ஏற்கனவே பல அடி தூரம் முன்னே சென்றிருந்தான். உற்சாகத்தோடும் ஆற்றலோடும் துள்ளலோடும் சென்று கொண்டிருந்த தன் மகனின் வேகத்திற்கு ஈடு கொடுப்பதற்காக அதிரதன் விரைவாக நடந்தான். அவர்கள் மீண்டும் அந்தக் கோவிலையும் அங்கிருந்த ஆலமரத்தையும் கடந்து சென்றபோது, கிருபரும் அவருடைய நண்பர்களும் தங்களுடைய பகடை விளையாட்டில் மூழ்கிப் போயிருந்ததை அவர்கள் கண்டனர். கிருபர் அதிரதனை உரத்தக் குரலில் அழைத்தார். ஆனால் அவர் பேசுவதைக் கேட்க அந்தத் தேரோட்டிக்கோ அல்லது அவருடைய மகனுக்கோ நேரம் இருக்கவில்லை. அவர்கள் அக்கூட்டத்தினரைக் கடந்து சென்றபோது, அந்தத் தரங்கெட்ட பிராமணரின் உரத்தச் சிரிப்பொலி அவர்களுடைய காதுகளில் ஒலித்தது.

கோட்டையின் உட்கதவில் காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அவர்கள் தங்கள் வருகையின் நோக்கத்தை அக்காவலர்களிடம் எடுத்துரைத்தனர். காவலர்களின் தலைவன் சிறிது நேரம் அவர்களைச் சந்தேகத்தோடு பார்த்துவிட்டு, பிறகு ஒரு வீரன் மூலமாக அரண்மனைக்குச் செய்தி அனுப்பினான். சிறிது நேரத்திற்குப் பிறகு அவ்வீரன் திரும்பி வந்து, விதுரன் பீஷ்மருடன் ஒரு சந்திப்பில் ஈடுபட்டிருந்ததாகத் தகவல் கொண்டு வந்தான். அதிரதனும் கர்ணனும் காத்திருக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் கதவிற்கு வெளியே நீண்ட நேரம் காத்திருந்தனர். நேரம் செல்லச் செல்ல

வெயிலும் அதிகரித்து, இறுதியில் அவர்களுடைய நிழல்கள் குறுகி அவர்களுடைய பாதங்களைச் சுற்றி இருண்ட குளங்களைப்போலக் காட்சியளித்தன. ஒவ்வொரு கணமும் அவர்களுடைய கவலை அதிகரித்தது. ஒரு வீரன் அரண்மனையிலிருந்து வெளியே வந்த ஒவ்வொரு முறையும் அவர்களுடைய இதயங்கள் வேகமாகத் துடித்தன. இறுதியில், பிரதம மந்திரி தன் வார்த்தைகளை மறந்துவிட்டதாக நினைத்து அவர்கள் கிட்டத்தட்ட நம்பிக்கை இழந்திருந்த நேரத்தில், அவர்களுக்கு அழைப்பு வந்தது. அரண்மனைத் தோட்டங்களின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த விதுரனைக் காவலர்கள் அவர்கள் இருவருக்கும் சுட்டிக்காட்டினர். வாள்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் சத்தமும், துரோணர் உரத்தக் குரலில் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த சத்தமும் அவர்களுக்குக் கேட்டது.

விதுரன் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, தாமதத்திற்கு வருத்தம் தெரிவித்தான். விதுரன் இவ்வளவு பணிவாக நடந்து கொண்டதைக் கண்ட கர்ணனால், அவன் ஒரு கபடதாரியா அல்லது உண்மையிலேயே ஒரு மாபெரும் மனிதனா என்று தீர்மானிக்க முடியவில்லை. அவர்கள் மூவரும் கோட்டையின் உட்கதவுகளையும் வெளிக்கதவுகளையும் கடந்து சென்று, அரண்மனைப் பழத்தோட்டங்களுக்குள் நுழைந்தனர். பயிற்சித் திடலை அவர்கள் நெருங்கியபோது, இளவரசன் துரியோதனனும் அவனுடைய தம்பி துச்சாதனனும், அவமானத்தில் தலை கவிழ்ந்து, ஒரு மூலையில் மண்டியிட்டு நின்று கொண்டிருந்ததைக் கர்ணன் கவனித்தான். பாண்டவ இளவரசர்களில் மூன்றாவதான அர்ச்சுனனின் குறியைத் திருத்துவதில் துரோணர் மூழ்கியிருந்தார். துரோணரின் சாயலில் இருந்த ஒரு பிராமணச் சிறுவன், இளவரசர்கள் எய்த அம்புகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். அவர்களில் மிகவும் குண்டாக இருந்த சிறுவன் தண்டாயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தான். மற்றச் சிறுவர்கள், அர்ச்சுனன் தன் வில்லை வளைப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அர்ச்சுனன் எய்த அம்பு தன் இலக்கை மிகக் குறுகலாகத் தவறவிட்டது. இதைக் கண்ட துரோணர் எரிச்சலில் தலையசைத்தார். ஆனால் அவனுடைய திறமையைக் கண்ட கர்ணன் பிரமித்தான். அர்ச்சுனன் ஒரு கைதேர்ந்த வீரனைப்போல அம்பைத் தொடுத்தான். துரோணர் அவர்களுக்குப் பயிற்சியளிக்கத் துவங்கி ஒருசில வாரங்கள் மட்டுமே ஆகியிருந்தன. “என்றேனும் ஒருநாள் என்னாலும் இதேபோல அம்புகளைத் தொடுக்க முடியும்,” என்று அந்தத் தேரோட்டியின் மகன் நினைத்துக் கொண்டான்.

“குருவே,” என்று விதுரன் துரோணரை மரியாதையுடன்

அழைத்தான்.

ஒரு நீண்ட நிமிடம், துரோணர் அவர்கள் அங்கு இருப்பதைக் கண்டுகொள்ளவில்லை. அவர் ஒருவழியாகத் திரும்பியபோது, அவருடைய முகத் தோரணையைக் கண்டு கர்ணன் லேசாக அதிர்ந்தான். அடுத்து என்ன வரவிருந்தது என்பதை அவன் உடனடியாக அறிந்து கொண்டான்.

துரோணர் தன் மாணவர்களைத் தன் சைகையால் அமைதியாக இருக்கும்படிப் பணித்துவிட்டு, "பிரதம மந்திரியாரே, உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இவன் கர்ணன்." விதுரன் கர்ணனை அவனுடைய தந்தையின் பின்னாலிருந்து முன்னுக்கு இழுத்தான். "என் நண்பன் அதிரதனின் மகன் இவன்."

"பிரதம மந்திரியாரே, என் வகுப்பு இன்னும் முடிவடையவில்லை."

"குருவே, கர்ணன் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறான் . . ."

பிரதம மந்திரியின் குரலில் தொனித்த நம்பிக்கையின்மையைக் கர்ணனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. துரோணர் நீண்ட நேரம் மௌனமாக இருந்தார். கர்ணனின் இதயம் கிட்டத்தட்ட நின்று போனது. அவன் விறைப்படைந்தான்.

"நான் அரச குடும்பத்திற்கு மட்டுமே கற்றுக் கொடுக்கிறேன்," என்று துரோணர் இறுதியாகக் கூறினார்.

"நேற்று இச்சிறுவன் நம் பேரரசுக்கு ஒரு மிகப் பெரிய சேவையைச் செய்தான். நான் அவனுக்கு வாக்குக் கொடுத்திருந்தேன் . . ."

"பிரதம மந்திரியாரே, இந்த வகுப்புகள் இளவரசர்களுக்கு மட்டுமே உரியவை என்று நான் மீண்டும் உங்களிடம் வலியுறுத்த விரும்புகிறேன்," என்று கூறிய துரோணர், தன் கைகளைத் தன் மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு வேறு பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

"அரசாட்சிப் பொறுப்பாளரான மேன்மைமிகு பீஷ்மரிடம் நான் இது பற்றிப் பேசினேன். உங்களுக்குச் சம்மதம் என்றால், இச்சிறுவனை உங்கள் வகுப்பில் சேர்த்துக் கொள்வதில் தனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று அவர் கூறினார். உண்மையில், அஸ்தினாபுரத்திற்கு அதிகமான வீரர்கள் தேவை என்று அவர் கூறினார்."

"மரியாதைக்குரிய பிரதம மந்திரியாரே, நான் கூறப் போவதை நான் உண்மையில் கூற விரும்பவில்லை. ஆனால் என் வாயிலிருந்து வலுக்கட்டாயமாக வார்த்தைகளை நீங்கள் வரவழைக்கிறீர்கள். அவன் எந்த சாதியைச் சேர்ந்தவன் என்று அவனிடம் கேளுங்கள்."

“ஆனால் அதைப் பற்றி என்ன . . .”

“நீங்களும் இவர்களில் ஒருவர் என்பதால் இவர்கள் குறித்து நீங்கள் கொண்டுள்ள அனுதாபத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இவன் ஒரு சூத்திரன். மிகவும் தாழ்ந்த தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்தவன். நான் ஒரு பிராமணன். நான் இவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?”

விதுரனின் முகம் அவமானத்தாலும் தர்மசங்கடத்தாலும் சிவந்தது. அரசவையின் அடுக்கதிகாரத்தில் அவன் துரோணரைவிட உயர்ந்த நிலையில் இருந்தான். ஆனால் அவன் தன்னைவிட உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவனை எதிர்கொண்டபோது, அவனிடம் தன்னம்பிக்கை இருக்கவில்லை. மீதி விவாதத்தைக் கேட்கக் கர்ணன் விரும்பவில்லை. எல்லாம் முடிந்துவிட்டிருந்ததை அவன் அறிந்தான். அதிரதன் அவனை இறுக்கிப் பிடித்தான், ஆனால் கர்ணனால் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

துரோணர் விதுரனை நோக்கி ஆவேசமாகத் திரும்பி, “நீங்கள் இங்கு வந்து, தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒரு சிறுவனை என்னுடைய மாணவனாக ஏற்றுக் கொள்வதற்கு என்னைக் கட்டாயப்படுத்தலாம் என்று நினைத்துவிடாதீர்கள். பிரதம மந்திரி என்ற முறையில், என்னை என் வேலையிலிருந்து உங்களால் நீக்க முடியும். நீங்கள் ஆணையிட்டால், நான் என் மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரத்தைவிட்டுப் போய்விடுவேன். நான் பட்டினி கிடக்கக்கூடும். அல்லது, பிராமணர்களை மதித்து, தங்கள் நம்பிக்கைக்கு எதிராக நடந்து கொள்ளும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தாத வேறொரு ராஜாங்கத்தில் நான் ஒரு வேலையைத் தேடிக் கொள்ளக்கூடும். ஒரு சூத்திரனிடமிருந்து உத்தரவுகளைப் பெறுவதைவிடப் பட்டினி கிடப்பது எவ்வளவோ மேல். உங்களுக்கும் பீஷ்மருக்கும் என்ன விருப்பமோ, அதைச் செய்து கொள்ளுங்கள். ஆனால் நான் இந்தத் தாழ்ந்த சாதிச் சிறுவனுக்கு ஒருபோதும் கற்றுக் கொடுக்க மாட்டேன்,” என்று கூறினார்.

மண்டியிட்டு நின்ற இளவரசன் துரியோதனன் எழுந்து நின்றான். துரோணர் அதைப் பார்த்துவிட்டார். “மூடனே! என் வகுப்பில் இப்படி அகங்காரத்தோடு நடந்து கொள்வதற்கு உனக்கு எவ்வளவு துணிச்சல்! நான் கட்டளையிட்டதுபோல மீண்டும் மண்டியிட்டு நில்,” என்று அவர் கத்தினார். துரியோதனன் தன்னிடம் கூறப்பட்டபடியே செய்தான்.

“துரோணா, நீ இந்த நாட்டையும் இந்நாட்டின் வாரிசு இளவரசனையும் உன் கடுமையான வார்த்தைகளால் அவமானப்படுத்திவிட்டாய்! எதற்கும் ஓர் எல்லை உண்டு . . .” என்று

கூறியபடியே விதுரன் தன் வாளை உருவினான்.

"தாழ்ந்த குலத்தில் பிறந்த நீ என்னை அச்சுறுத்துகிறாயா? பிரதம மந்திரியாக ஒரு சூத்திரன், அரசனாக ஒரு குருடன், திமிர் பிடித்த ஓர் இளவரசன்! ஒரு வீரனாக ஆவதற்கு ஒரு சூத்திரன் ஆசைப்படுவதில் வியப்பேதும் இல்லை. அடுத்து, என் மாணவனாக ஆவதற்கு ஒரு வேடுவன் விண்ணப்பிப்பான்!"

கர்ணன் தன்னைவிடப் பிரதம மந்திரிக்காக அதிகமாக வேதனைப்பட்டான். விதுரன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்ததை அவன் பார்த்தான்.

"மாண்புமிகு பீஷ்மரிடமிருந்து உங்களுக்குச் செய்தி வரும்," என்று கூறிவிட்டு, விதுரன் வேண்டுமென்றே மிகவும் குனிந்து பணிந்து, மரியாதையை வலியுறுத்தினான்.

அவன் இவ்வாறு கேலி செய்தது துரோணருக்கு உண்மையான சாட்டையடியைவிட மிகவும் மோசமாக இருந்தது. "நீ . . . நீ . . . ஒரு பிராமணனை இழிவுபடுத்துவதற்கு உனக்கு என்ன துணிச்சல்? அஸ்தினாபுரம் ஒரு பிராமணனின் குரலுக்குச் செவிசாய்க்கிறதா அல்லது ஒரு சூத்திரனின் குறைகளை மட்டும் செவிமடுக்கிறதா என்று நான் பார்த்துவிடுகிறேன். இப்போது என் பயிற்சித் திடலைவிட்டு வெளியேறிவிடு, இது சத்திரியர்களுக்கு உரிய இடம். உன்னைப் போன்றவர்களுக்கு இங்கு எந்த வேலையும் இல்லை. இந்தத் தேரோட்டியையும் உனக்குச் சமமானவர்களையும் இங்கிருந்து கூட்டிக் கொண்டு போய்விடு. குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளருக்கு நான் பதில் கூறிக் கொள்கிறேன்."

மறுபேச்சுப் பேசாமல் விதுரன் அங்கிருந்து போய்விட்டான். கர்ணன் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தான். அதிரதன் மட்டும் அங்கு சிறிது நேரம் நின்றுவிட்டு, பிறகு ஒரு கனத்த இதயத்துடன் அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

* * *

துரோணர் அந்த ஏழைத் தேரோட்டியை எதிர்கொள்ள விரும்பவில்லை. ஒரு மாபெரும் வீரனாக உருவாவதற்கான அனைத்துத் திறமைகளும் அவனுடைய மகனிடம் இருந்ததை அவர் அறிந்திருந்தார். தட்சகன் அஸ்தினாபுரக் கோட்டைக்குள் தாக்குதல் நடத்திய இரவில், கோட்டையைப் பாதுகாப்பதற்கு அச்சிறுவன் சண்டையிட்ட விதத்தை அவர் பார்த்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக, அவன் தவறான சாதியில் பிறந்துவிட்டான். தன் மகனின் குறிக்கோள்களை நிறைவேற்ற விரும்பிய ஒரு தகப்பன் குறித்து, ஒரு மனிதன் என்ற முறையில்

துரோணரால் பரிவு கொள்ள முடிந்தது. ஆனால் அவருடைய குருவான பரசுராமன், சாதியின் புனிதத்துவத்தின்மீது நம்பிக்கைக் கொள்வதற்கு அவரைப் பயிற்றுவித்திருந்தான். அந்த விதிமுறைகளை மீறும் துணிச்சல் துரோணருக்கு இருக்கவில்லை. அவர் தன் மைத்துனரான கிருபரிடமிருந்து வேறுபட்டிருந்தார். உண்மையில், துரோணர் அவரை வெறுத்தார், அவரைக் கண்டு பயந்தார். கிருபர் ஒரு மாபெரும் அறிஞர், துரோணரைவிடச் சிறந்த வீரர். ஆனால், அவர் நம்பகத்தன்மையற்றவர், விதிமுறைகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டவர். விதிமுறைகளை வேண்டுமென்றே மீறுவதில் அவர் பெருமகிழ்ச்சிக் கொண்டார். துரோணரால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அவருடைய பொருளாதார நிலைமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. தன் கண்களில் பாசம் ஒளிவீச, அவர் தன் மகன் அசுவத்தாமனைப் பார்த்து, 'இவனை வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது,' என்று தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டார். ஆனால் அசுவத்தாமனின் கண்கள், அங்கிருந்து சென்று கொண்டிருந்த தேரோட்டியின் மகனின்மீது நிலைத்திருந்தன. 'கயவனான துரியோதனனைச் சந்திக்கும்வரை என் மகன் இனிமையானவனாக இருந்தான். துரியோதனன் என் மகனைக் கெடுத்துவிட்டான்,' என்று துரோணர் ஆழ்ந்த கோபத்தோடு தன் மனத்திற்குள் பொருமினார். ஆனால் அஸ்தினாபுரம் தன் ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்தது. விதுரன் பீஷ்மரின் மனத்தில் விஷமேற்றி, தன்னை வேலையிலிருந்து தூக்கி எறிந்துவிடுவானோ என்ற கவலை இப்போது அவரைப் பற்றிக் கொண்டது. 'நான் மீண்டும் ஏழ்மை நிலைக்குச் சென்றுவிடுவேனா? என் மகனின் நிலைமை என்னவாகும்? தன் தகுதிக்கு மீறி ஆசைப்பட்ட ஒரு முட்டாள் தேரோட்டியால் ஏற்பட்டக் குழப்பம் இது,' என்று அவர் நினைத்தார்.

துரியோதனன் துரோணருக்கு அவருடைய மைத்துனன் கிருபரை நினைவுபடுத்தினான். துரியோதனனுக்கு அதிகமாக மன உறுதி இருந்ததுதான் அவர்கள் இருவருக்கிடையே இருந்த ஒரே வேறுபாடு. துரியோதனன் எல்லாவற்றைக் குறித்தும் கேள்வி கேட்டான். அவனுடைய சந்தேகங்கள் பெரும்பாலும் விடையளிக்கப்பட முடியாதவையாக இருந்தன. அவனைக் கண்டபோதெல்லாம், தான் போதுமான அளவு தகுதி படைத்தவன் அல்ல என்ற உணர்வு துரோணருக்குள் எழுந்தது. எனவே, தனக்குப் பிடிக்காத மாணவர்களிடம் ஓர் ஆசிரியர் எப்படி முரட்டுத்தனமாக நடந்து கொள்வாரோ, அதே முரட்டுத்தனத்துடன் துரோணர் துரியோதனனிடம் நடந்து கொண்டார். அவன் அகங்காரம் பிடித்தவன் என்று அவர்

நினைத்தார். எனவே, எங்கே தாக்கினால் அவனுக்கு அதிகமாக வேதனை ஏற்பட்டதாக அவர் நினைத்தாரோ, அங்கு அவர் அவனைத் தாக்கினார். அதாவது, அவனுடைய திறமையையும் அறிவையும் பாண்டவர்களுடன் அவர் ஒப்பிட்டார். முடிந்தபோதெல்லாம் அவர் அவனைச் சிறுமைப்படுத்தினார். துரியோதனனின் கீழ்ப்படியாமைக் குணத்தை அடக்கி ஒடுக்கி, அவனைப் பக்குவப்படுத்தி, சமூகத்திற்குப் பொருத்தமானவனாக அவனை ஆக்க அவர் விரும்பினார். அதிகாரம் படைத்த ஒரு மனிதனிடம் இப்படிப்பட்டக் கீழ்ப்படியாமைக் குணம் இருப்பது பேரழிவை மட்டுமே கொண்டு வரும் என்பதை துரோணர் உள்ளுணர்வுப்பூர்வமாக அறிந்திருந்தார். துரியோதனனிடம் இருந்த முரட்டுத்தனத்தைக் கட்டுப்படுத்தி அவனை அடக்காவிட்டால், அவன் இந்நாட்டையே உலுக்கி, தன்னுடைய விருப்பத்தை அதன்மீது வலுக்கட்டாயமாகத் திணித்துவிடுவான் என்று அவர் பயந்தார். ஓர் ஆசான் என்ற முறையில், தன் மாணவர்களைப் பக்குவப்படுத்தி, சமூகத்திற்குள் அவர்களைப் பொருத்துவதைத் தன் கடமையாக துரோணர் கருதினார். கற்பித்தல் என்பது, நிலைப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளுக்குச் சவால்விடுத்து, அவற்றை மாற்றுகின்ற போராளிகளை உருவாக்குவது அல்ல. இப்படிப்பட்டக் கலகக்காரர்களை அடக்கி ஒடுக்கி, அவர்களை மண்ணோடு மண்ணாகப் புதைத்துவிடுவதுதான் கடவுள்கள் மற்றும் துறவிகள் உட்பட அனைவருடைய வேலை என்று அவர் உறுதியாக நம்பினார். இந்நாட்டின் வரலாறு அவருக்கு அதைத்தான் கற்றுக் கொடுத்திருந்தது. மகாபலி, ராவணன், வாலி போன்றோரின் எழுச்சியும் வீழ்ச்சியும் இதற்கான மறுக்க முடியாத சாட்சியங்கள். சமூகம் நிலையானது, ஒருபோதும் மாறாதது. இப்படிப்பட்ட ஒரு நாட்டில் கலகக்காரர்களும் சீர்திருத்தவாதிகளும் செல்வதற்கு ஒரே ஓர் இடம்தான் இருந்தது. இப்படிப்பட்டக் கலகக்காரர்களை மண்ணோடு மண்ணாகப் புதைப்பதற்குத்தான் கடவுள்கள் பல அவதாரங்களை எடுத்தனர். அதுதான் தர்மம். அந்த தர்மத்தைக் காப்பதற்காகத்தான் அவர்கள் மனிதப் பிறவிகளை எடுத்தனர்.

துரியோதனன் சிறு தவறுகள் செய்தால்கூட, துரோணர் அவனை அடித்தார், இழிவான தண்டனைகளைக் கொடுத்தார். பிடிவாதக்கார இளவரசனின் கண்களில் கண்ணீரை வரவழைக்க இவை போதுமானவையாக இல்லாமல் போன நாட்களில், அவர் தன் உச்சகட்டத் தண்டனையைப் பயன்படுத்தினார். அவர் அவனையும் அவனுடைய சகோதரர்களையும் குருடனின் மகன்கள் என்று அழைத்து, அவர்கள் தங்கள் தந்தையைப்போலவே, சரி எது, தவறு எது என்று

பிரித்துப் பார்க்க முடியாதவர்கள் என்று கூறி அவர்களை அவமானப்படுத்தினார். இது ஒரே ஒரு நாளுக்கு மட்டும் இளவரசனை ஊமையாக்கியது. துரியோதனையும் அவனுடைய சகோதரர்களையும் பற்றித் தங்கள் குரு கூறிய விமர்சனங்களைக் கேட்டுப் பாண்டவர்கள் ஐவரும் பெரிதாகச் சிரித்தனர். துரியோதனனிடம் இருந்த இந்த பயங்கரமான போர்க்குணத்தை ஒடுக்கப் போவது தான் ஒருவன் மட்டுமல்ல என்றும், தனக்குப் பிறகு தன் மகன் அசுவத்தாமன் அரச குருவின் பதவியை சுவீகரித்து, அரச குடும்பத்தின் எதிர்காலச் சந்ததியினரின் ஆலோசனையாளராக ஆவான் என்றும் அவர் கடுகடுப்புடன் நினைத்தார். இந்த அழகான உலகத்தில் விதுரனைப் போன்ற சூத்திரர்களுக்கு எந்த இடமும் இருக்காது என்று அவர் தனக்குள் கூறிக் கொண்டார்.

அசுவத்தாமன் துரியோதனனிடம் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது, துரோணர் தன் பொறுமையை இழந்து, தன் கையில் வலி ஏற்பட்டவரை தன் மகனை அடித்துப் புரட்டியெடுத்தார். தன் ஏழ்மை, விதுரனுடனான தனது காரசாரமான விவாதம், தன்னுடைய பயங்கள், தாழ்வு மனப்பான்மைகள் போன்றவை குறித்து அவர் தனக்குள் தேக்கி வைத்திருந்த கோபம் முழுவதையும் தன் மகனின் சிறிய உடலின்மீது கொட்டித் தீர்த்தார். வலியில் கூப்பாடு போட்ட அவனைப் பாண்டவர்களின் பக்கமாகத் தள்ளி, தனக்கு மிகவும் பிரியமான மாணவனான அர்ச்சுனனுக்கு அருகில் வலுக்கட்டாயமாக அவனை அமரச் செய்தார். தன் குருவின் மகனின் நிலைமையைக் கண்டு தனக்குள் எழுந்த ஒரு புன்னகையை அர்ச்சுனன் மறைத்தான். துரோணர் துரியோதனனிடம் கத்திக் கொண்டிருந்தபோது, பீமன் அசுவத்தாமனை இரண்டு முறை கிள்ளிவிட்டு, அவனைக் கோழை என்று கூறி ஏளனம் செய்தான். இதனால் அசுவத்தாமன் இன்னும் சத்தமாக அழுதான். துரோணர் அவனை மீண்டும் அடித்தார்.

மாமரங்களின் அடர்த்தியான, பசுமையான இலைகளின் ஊடாக இரண்டு ஜோடிக் கண்கள், தம் முன்னே விரிந்து கொண்டிருந்த இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. துரோணர் தன் மகனை அடித்துக் கொண்டிருந்தபோது, ஜரன் ஏகலைவனிடம், “அவர் இப்போது உனக்குக் கற்றுக் கொடுப்பார் என்று நீ நினைக்கிறாயா? கர்ணனைப் போன்ற ஒரு சிறுவனுக்குக் கற்றுக் கொடுக்கக்கூட அவர் தயாராக இல்லை. நாம் வேடுவர்கள். சூத்திரர்களைவிடத் தாழ்ந்த சாதியினர்,” என்று கூறினான்.

“முட்டாளே, வாயை மூடு! நீ அளவுக்கதிகமாகப் பேசுகிறாய். நான் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளத்தான் போகிறேன். அந்தப்

பரிதாபகரமான துரியோதனனைப்போல, இங்கிருந்தபடியே நம்மால் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள முடியும். அர்ச்சுனனுக்கு அவர் என்ன கற்றுக் கொடுக்கிறார் என்பதை நாம் பார்த்துக் கற்றுக் கொள்ளலாம். நான் துரோணரிடமிருந்து கற்றுக் கொள்வதை, அவர் உட்பட, யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. என்றேனும் ஒருநாள், அவருடைய பிரியமான மாணவனான அர்ச்சுனனைத் தோற்கடித்து நான் அவரை ஆச்சரியப்படுத்தப் போகிறேன்," என்று கூறிய ஏகலைவன், தன்னுடைய இந்த மாபெரும் கனவுகளைக் கேட்டு வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டிருந்த ஜரனை ஓங்கி மிதித்தான்.

* * *

"என்ன, இன்றும் இவ்வளவு நேரமாகிவிட்டதா?" என்று கேட்டப் பார்ஷவி, தன் கணவன் விதுரனின் முன்பு ஓர் எளிய உணவை வைத்துவிட்டுத் தானும் கீழே அமர்ந்தாள்.

விதுரன் வெறுமனே அவளைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, வேண்டா வெறுப்பாகச் சாப்பிடத் துவங்கினான். பார்ஷவி இரண்டாவது முறையாக அவனுக்குப் பரிமாற முற்பட்டபோது, "போதும்," என்று கூறிவிட்டு அவன் எழுந்தான். ஈரக் கைகளைத் துடைப்பதற்காகத் தன் மனைவி கொடுத்தத் துவாலையை வாங்கிக் கொண்டே, "குழந்தைகள் தூங்கிவிட்டார்களா?" என்று அவன் அவளிடம் கேட்டான்.

"இது ஏதோ வழக்கத்திற்கு முரணானது என்பதுபோல நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள் பல இரவுகள் வீட்டிற்கே வருவதில்லை. நீங்கள் உங்கள் அலுவலகத்திலேயே தூங்கிவிடுகிறீர்கள். அப்படியே தப்பித் தவறி நீங்கள் வீட்டிற்கு வந்தாலும், சிறிது நேரத்திலேயே மீண்டும் வேலைக்குக் கிளம்பிவிடுகிறீர்கள். நீங்கள் ஏன் இவ்வளவு கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"பார்ஷவி, நான் எவ்வளவு அழுத்தத்திற்கு இடையே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று உனக்குத் தெரியாது. பீஷ்மருக்காக நான் வருந்துகிறேன். இந்த ஒட்டுமொத்த நாட்டின் சுமையையும் அந்த முதியவர் தனியொருவராகத் தன் தோள்களின்மீது சுமந்து கொண்டிருக்கிறார். அது என் கடமை . . ."

"உங்கள் குடும்பத்திற்கென்று நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை எதுவும் இல்லையா? உங்கள் மகன்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை மாபெரும் அறிஞரான உங்களுக்கு நான் நினைவுபடுத்த வேண்டுமா? நீங்கள்தான் பிரதம மந்திரி, ஆனால் நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று பாருங்கள். நமக்கென்று சொந்தமாக ஒரு

வீடுகூட இல்லை. வீட்டில் வேலைக்காரர்களை வைத்துக் கொள்வதில் உங்களுக்கு விருப்பமில்லை. உங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள ரதத்தை உங்கள் அலுவலக வேலைகளுக்காக மட்டுமே நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். உங்கள் அலுவலகத்திற்கு நடந்து போவதிலும் வருவதிலும் நீங்கள் செலவிடும் நேரத்தை மிச்சப்படுத்தி, அதை எங்களோடு நீங்கள் கழிக்கலாம். நீங்கள் ஏழ்மையை மகிழ்ச்சியாக அனுபவிப்பதுபோலத் தெரிகிறது. நம் அண்டைவீட்டார் நம்மைப் பார்த்து எள்ளி நகைக்கின்றனர். இளநிலை அரசாங்க அதிகாரிகள்கூட நம்மைவிடச் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் அரசரின் சகோதரர். ஆனால் நாம் வாழும் விதத்தைப் பாருங்கள். பீஷ்மருக்கு இது பற்றித் தெரியுமா?"

"பார்ஷவி, நாம் பல முறை இதைப் பற்றிப் பேசிவிட்டோம்," என்று கூறிய விதுரன், இரட்டையர்களான தன்னுடைய மகன்கள் தூங்கிக் கொண்டிருந்த அறைக்கு விரைந்தான். பிறகு, தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தைகளின் முகங்களை அமைதியாகப் பார்த்தபடி அவர்களுக்கு அருகே அவன் அமர்ந்தான்.

"நாம் இவர்களைப் பற்றிச் சிந்தித்தாக வேண்டும். காலம் நிச்சயமற்றதாக இருக்கிறது. நம்முடைய மகன்கள் நல்ல மாணவர்கள்தான். ஆனால் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக ஆகும்போது அவர்களுக்கு வேலை இருக்குமா? எல்லாப் பதவிகளும் பிராமணர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. நம் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி நினைத்தால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது."

"பார்ஷவி, கடவுள்மீது நம்பிக்கை வை. நாம் யாருக்கும் எந்தத் தவறும் செய்யவில்லை. மக்களிடம் உள்ள நல்லவற்றின்மீது நம்பிக்கை வை. எதிர்காலத்தைப் பற்றி நீ அளவுக்கதிகமாகக் கவலைப்படுவது கடவுள்மீது உனக்கு நம்பிக்கை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது."

"அப்படியென்றால், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நீங்களும் பீஷ்மரும் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? அதையும் ஏன் நீங்கள் கடவுளிடம் விட்டுவிடக்கூடாது?" தன் கணவனுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இவ்வாறு கூறியவுடனேயே, அது குறித்துப் பார்ஷவி வருந்தினாள். தன் நாட்டைப் பற்றி விதுரன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டான். அவன் எதுவும் பேசாமல் அங்கிருந்து எழுந்து, தங்கள் படுக்கையறையை நோக்கிச் சென்றான்.

பார்ஷவி தன் வேலைகளை எல்லாம் முடித்துவிட்டுத் தங்கள் படுக்கையறைக்குள் நுழைந்தபோது, விதுரன், சுவருக்கு முகம் காட்டிப் படுத்துக் கொண்டிருந்தான். அவள் அப்படுக்கையின் விளிம்பில்

உட்கார்ந்து கொண்டு, தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த இறுக்கத்தைத் தளர்த்துவதற்கான சரியான வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தாள்.

விதுரன் திடீரென்று அவள் பக்கமாகத் திரும்பி, "என்னுடைய கடின உழைப்பு முழுதும் உண்மையிலேயே எதற்காவது பயன்படுகிறதா என்று சில சமயங்களில் எனக்கு சந்தேகம் எழுகிறது," என்று கூறினான்.

அவள் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"குறிப்பாக எதுவும் நடக்கவில்லை. ஓர் ஏழைச் சிறுவனுக்கு ஏதோ ஒரு நல்லது செய்ய நான் விரும்பினேன். ஆனால் குருவால் ஏளனம் செய்யப்பட்டு நான் என் முகத்தைத் தொலைத்துவிட்டேன். இந்த நாட்டில் கடைசியில் எல்லாமே சாதியைப் பற்றியதாகத்தான் இருக்கிறது."

எப்போது மௌனம் காக்க வேண்டும் என்பதைப் பார்ஷவி அறிந்திருந்தாள். விதுரன் ஆழமாக சுவாசித்துக் கொண்டிருந்ததைக் கேட்டபடியே அவள் உட்கார்ந்திருந்தாள். பொழுது கிட்டத்தட்ட விடிந்துவிட்டிருந்தது.

"நாம் நம் சொந்த வீட்டைக் கட்டத்தான் போகிறோம். நீ கூறுவது சரிதான். நம் காலம் முடிந்த பிறகு, தலைக்கு மேலே ஒரு கூரையையாவது நம் குழந்தைகளுக்காக நாம் விட்டுச் செல்ல வேண்டும்." விதுரனின் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகள், காதுகளுக்குக் கேட்காதபடி மிக மென்மையாக இருந்தன.

பார்ஷவி எதுவும் கூறவில்லை. தாங்கள் தங்கள் சொந்த வீட்டைக் கட்டப் போவதாக விதுரன் கூறி அவள் பல முறை கேட்டிருந்தாள். ஆனால் தன் கணவனுடன் அவள் மீண்டும் விவாதிக்க விரும்பவில்லை. மாறாக, அவள் அமைதியாகத் தன் போர்வைக்குள் நுழைந்து, அவனுடைய மார்பின்மீது தன் கையை வைத்தாள். அவனுடைய இதயத் துடிப்பைத் தன் விரல்களுக்குக் கீழே உணர்ந்தவாறே, அவள் ஆழ்ந்த உறக்கத்திற்குள் நுழைந்தாள்.

* * *

கர்ணன் தன் குடிசையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு, இருட்டிற்குள் வெறித்துக் கொண்டிருந்தான். என்றேனும் ஒருநாள் அர்ச்சுனனுக்குச் சவால்விடுவது பற்றி அவன் கனவு கண்டுகொண்டிருக்கவில்லை. துயரம் நிறைந்த, மதிப்பற்ற இந்தச் சூத்திர வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சிறந்த வழியைப் பற்றித்தான் அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

5

மரபுகளை மதிக்காத பிராமணன்

தன்னைத் தொந்தரவு செய்து கொண்டிருந்த கொசுக்களைக் கிருபர் சபித்தார். சூதாட்டத்தில் அவர் மீண்டும் தன் பணத்தை இழந்திருந்ததால், வீட்டிற்குச் சென்று தன் சகோதரி கிருபியின் முகத்தைப் பார்க்க அவர் விரும்பவில்லை. பல இரவுகளின்போது நிகழ்ந்ததைப்போலவே, அந்த ஆலமரத்திற்கு அடியிலேயே படுத்துத் தூங்கிவிடுவதென்று அவர் தீர்மானித்தார். வேளைகெட்ட வேளைகளில் வீட்டிற்கு வருவது அவருடைய வழக்கமாக ஆகியிருந்தபோதிலும், தன் சகோதரி தனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள் என்பதை அவர் அறிந்திருந்தார். துரோணருக்கு அவளை மணமுடித்துக் கொடுத்தது ஒரு தவறு என்று அவர் நினைத்தார். அவர் தன் மைத்துனரை வெறுக்கவில்லை, ஆனால் தான் கேட்காமலேயே ஆசையோடு அவர் அள்ளி வீசிய அறிவுரைகளைக் கிருபர் வெறுத்தார். துரோணரிடம் இருந்த 'தனக்கு எல்லாம் தெரியும்' என்ற மனப்போக்கை அவர் மிகவும் வெறுத்தார். அன்றிரவு மிகவும் சூடாகவும் ஈரத்தன்மையோடும் இருந்தது. நட்சத்திரங்களற்ற, ஈரம் தோய்ந்த ஒரு வானம் ஓர் ஈரக் குடையைப்போல அவருக்கு மேலாகப் பரவியிருந்தது. வெட்டுக்கிளிகள் பேய்த்தனமாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன. தவளைகளும் அவற்றுடன் சேர்ந்து கொட்டமிட்டன. மழையின் வாசனையை அவரால் உணர முடிந்தது. ஆற்றில் நீர் பெருகிக் கொண்டிருந்ததையும் அவரால் கேட்க முடிந்தது. மழை பெய்தால், அவர் கட்டாயமாகத் தன் வீட்டிற்குச்

செல்ல வேண்டியிருக்கும். கிருபருக்கு இந்த யோசனை சுத்தமாகப் பிடிக்கவில்லை.

மழையை எதிர்பார்த்துக் காத்திருந்த நிலத்தின்மீது முதல் ஒருசில மழைத் துளிகள் விழுந்தன. அது என்ன சத்தம்? யாரோ ஒரு முட்டாள், ஆற்றில் குதித்து மூழ்கிக் கொண்டிருந்தான். இறப்பதற்கு அந்தக் கயவன் வேறு ஏதேனும் நேரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடாதா? இறந்து போவதற்கு அவனுக்கு இன்றுதான் நாள் கிடைத்ததா? கிருபர் ஆற்றை நோக்கி ஓடினார். வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த ஆற்று நீரில், ஒரு தலை, உள்ளே மூழ்குவதும் வெளியே வருவதுமாக இருந்தது. வேளை கெட்ட வேளையில் ஆற்றுக்குள் குதிக்க அவர் விரும்பவில்லை. எப்படியிருந்தாலும் அந்த முட்டாள் நிச்சயமாக மடியத்தான் போகிறான். கிருபர் ஒரு வலிமையான நீச்சல்காரர். ஆனால் அந்த முட்டாளைத் தன்னால் கரைக்கு இழுத்து வர முடியுமா என்று அவருக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஒரு லேசான தயக்கத்திற்குப் பிறகு, அவர் தன் தொடைகள்மீது ஓங்கி அடித்துவிட்டு, ஆற்றுக்குள் குதித்தார்.

தன்னை விழுங்கிக் கொண்டிருந்த தண்ணீரில் கிருபர் மூச்சுத் திணறினார். நீரோட்டத்தின் வேகத்தைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்தார். அவர் எதிர்பார்த்திருந்ததைவிட நீர் அதிகக் குளிராக இருந்தது. ஆற்று நீர் ஓர் இரும்புக் கரத்துடன் தன்னை வேகமாக உள்ளிழுப்பதுபோல அவருக்குத் தோன்றியது. மழை இப்போது ஒரு திடீர்ப் புயலாக மாறி, பலமாகக் கொட்டிக் கொண்டிருந்தது. அந்த முட்டாள் எங்கே? அது ஆணா அல்லது பெண்ணா? பிறகு, முந்நூறு அடிகள் தள்ளி, அவனுடைய தலையை அவர் பார்த்தார். ஒருவேளை அவன் ஏற்கனவே இறந்து போயிருக்கக்கூடும் என்று அவர் நினைத்தார். பிறகு, ஒருசில கெட்ட வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, தன் வலிமை முழுவதையும் ஒன்றுதிரட்டி, மூழ்கிக் கொண்டிருந்த அந்த உருவத்தை நோக்கி அவர் வேகமாக நீந்தினார். ஒரு நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, அவர் அந்த நபருடைய தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, கரையை நோக்கி நீந்தத் துவங்கினார். மிகவும் களைத்துப் போயிருந்த அவர், மூர்ச்சையடைந்திருந்த அந்த உருவத்தைக் கரையின்மீது இழுந்துப் போட்டார். கோவிலிருந்து ஒரு மைல் தள்ளி அவர்கள் இருந்தனர். மயங்கிக் கிடந்தவனை எட்டி உதைத்து, அவனிடம் கத்த வேண்டும்போல அவருக்குத் தோன்றியது. பிறகு, அந்த எண்ணத்தை ஓரங்கட்டி வைத்துவிட்டு, அவனுடைய வயிற்றை அழுத்தி, அவன் குடித்திருந்த நீரை வெளியேற்றத் துவங்கினார். நீண்ட, வேதனையான காத்திருப்பிற்குப் பிறகு, கிருபர் தன் முயற்சியைக் கைவிடவிருந்த

நேரத்தில், திடீரென்று அவனுக்கு சுயநினைவு திரும்பி வந்தது.

முழுவதுமாக நனைந்து போயிருந்த அவனுடைய முகத்தின்மீது ஓங்கி அறைந்து, "மூடனே, யார் நீ?" என்று கிருபர் கேட்டார். அவன் தேம்பி அழத் தொடங்கினான்.

"என்னை மன்னித்துவிடுங்கள்."

கிருபர் ஆச்சரியமடைந்தார். அவனுடைய குரல்கூட இன்னும் உடைந்திருக்கவில்லை. அவர் எதிர்பார்த்திருந்ததுபோல அவன் ஒரு குடிகாரன் அல்ல. அவன் ஒரு சிறுவன். தன் முன்னால் கிடந்த தளர்ந்து போன உருவத்திற்காகக் கிருபர் வருந்தம் கொண்டார். ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு ஒரு தீவிரமான செயலில் இறங்குவதற்கு, தன் குறுகிய வாழ்நாளில் இச்சிறுவன் எவ்வளவு வேதனையை அனுபவித்திருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார்.

"மகனே, உனக்கு என்ன நேர்ந்தது? நீ ஏன் உன் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்தாய்?" என்று கேட்டக் கிருபர், அவனுடைய தலையைத் தாங்கிப் பிடித்து, அவன் யாரென்று அடையாளம் காண முயற்சித்தார்.

"ஐயா, நான் ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன். நான் ஒரு சூத்திரன். ஒரு தேரோட்டியின் மகன். யாரும் எனக்கு எதையும் கற்றுக் கொடுக்க விரும்பவில்லை."

சூத்திரன்! தேரோட்டி அதிரதனின் மகன் இவன். அவர்கள் தன்னை நாடி வந்த நாளையும், தான் அவர்களை நடத்தியிருந்த விதத்தையும் கிருபர் நினைத்துப் பார்த்தார். 'நான் அவர்களுடன் சமசரம் செய்து கொள்ள முயற்சித்தேன், இல்லையா? அவர்கள் இன்று என்னைக் கடந்து சென்றபோது, நான் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகக் கூறுவதற்காக நான் அவர்களை அழைத்தேன், இல்லையா? ஆனால் நான் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்க நேரமில்லாத அளவுக்கு அவர்கள் அவசரத்தில் இருந்தனர்,' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு, அவர் தன் செயல்களுக்கு நியாயம் கற்பிக்க முயற்சித்தார். ஆனால் தான் ஒரு காட்டுமிராண்டியைப்போல அவர்களிடம் நடந்து கொண்டிருந்ததை அவர் அறிந்தார். அதை மறுப்பதற்கில்லை. மனம் தளர்ந்திருந்த அச்சிறுவனைப் பார்த்து, "எனக்கு உன் பெயர் மறந்துவிட்டது. ஆனால் நீயும் உன் தந்தையும் என்னிடம் வந்தது எனக்கு நினைவிருக்கிறது. நான் கிருபர்," என்று அவர் கூறினார்.

"கிருபரா? ஐயா, நீங்கள் ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்? மதிப்பற்ற ஒரு சூத்திரனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் ஏன்

உங்கள் உயிரைப் பணயம் வைத்தீர்கள்?"

"உன் பெயர் என்ன?"

"குருவே, என் இயற்பெயர் வாசுசேனன். ஆனால் எல்லோரும் என்னைக் கர்ணன் என்று அழைப்பர்."

"கர்ணா, முட்டாளே! நான் கூறுவதைக் கவனமாகக் கேள். நீ தாழ்ந்த சாதியில் பிறந்தவன் என்று கூறுவதை உடனடியாக நிறுத்து. யாரும் உயர்ந்தவர்களோ அல்லது தாழ்ந்தவர்களோ இல்லை. நீ ஒரு தாழ்ந்த சாதிக்காரன் என்பதை நீ ஒப்புக் கொண்டால், உலகம் உன்னை அப்படித்தான் நடத்தும்."

"ஆனால் நான் ஒரு தேரோட்டியின் மகன்."

"ஒன்றும் அறியாதவன் நீ. நான் கூறுவதை மட்டும் வாயை மூடிக் கொண்டு கவனமாகக் கேள். அது உன் வாழ்வில் உனக்குப் பெரிதும் உதவும். நான் இதை ஒரே ஒரு முறை மட்டும்தான் உன்னிடம் கூறப் போகிறேன். ஏனென்றால், இந்த அறிவுரையை நான் உனக்கு இலவசமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நியாயப்படி, இந்த அறிவுரைக்காக நான் உன்னிடம் கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால் நான் இப்போது உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மரணத்திலிருந்து உன்னைக் காப்பாற்றுவதற்கு நீ என்னை அனுமதித்தாய். அது என்னைப் பற்றி ஒரு நல்ல உணர்வை என்னுள் தோற்றுவித்துள்ளது. நான் உனக்கு ஏதேனும் ஒன்றை இலவசமாகக் கற்றுக் கொடுக்கிறேன். ஆனால் அதற்கு முன், இந்த நேரத்தில் ஆற்றில் குதிப்பதற்கு எது உன்னைத் தூண்டியது என்று கூறு."

மழை சற்றுக் குறைந்திருந்தது. கர்ணன் அசையாமல் உட்கார்ந்து கொண்டு, தன்னுள் ஏராளமானவற்றை ஒளித்து வைத்திருந்த ஆற்றையே வெறித்துப் பார்த்தான்.

"நீ என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். உனக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் விஷயங்களுக்காக நீ உன்னைக் குறைகூறிக் கொண்டிருக்கிறாய். நான் இதயமற்றவன் என்றும், இவ்வுலகம் கொடூரமானது என்றும் நீ நினைக்கிறாய். ஏழையாகப் பிறந்தது குறித்து உன்னை நீயே சபித்துக் கொண்டிருக்கிறாய். ஒரு சாதாரணத் தேரோட்டி உன் தந்தையாக இருப்பது குறித்து நீ புலம்பிக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய சிதிலடைந்த குடிசையைப் பார்த்துவிட்டு, ஒரு பணக்கார வீட்டில் பிறந்திருந்தால் எவ்வளவு அருமையாக இருந்திருக்கும் என்று நீ நினைக்கிறாய்."

"ஐயா, அப்படியில்லை . . ." கர்ணன் அந்த பிராமணரின் முகத்தைப் பார்க்க விரும்பவில்லை. ஆறு அதிக ஆறுதலளிப்பதாக இருந்தது.

"இப்படிப்பட்டச் சிந்தனைகளில் எந்தத் தவறும் இல்லை. வாழ்வில்

அதிகக் கடினமாக முயற்சிப்பதற்கு அவை உன்னைத் தூண்டும். உன் கனவுகளை அடைவதற்கு அவை உன்னை ஊக்கப்படுத்தும். ஆனால் உன் கோபத்தையும் விரக்தியையும் எப்படி முறையாக வழிநடத்த வேண்டும் என்பதை நீ அறிந்திருக்க வேண்டியது முக்கியம். வாழ்க்கை ஒரு சூதாட்டம். பகடைகள் எப்படி விழும் என்று உனக்குத் தெரியாது. ஆனால் அவை விழுந்தவுடன், உன் காய்களை நீ எவ்வாறு நகர்த்துகிறாய் என்பது உன் கைகளில்தான் உள்ளது. நீ ஒரு சத்திரியனாகவோ அல்லது ஒரு பிராமணனாகவோ பிறக்காதது வெறும் தற்செயலான நிகழ்வுதான். நீ ஒரு வேடுவனாகவோ அல்லது நாகனாகவோ பிறந்திருக்கலாம். அப்படி நிகழ்ந்திருந்தால், சூத்திரனாகிய உன்னுடைய வீடு உனக்கு ஓர் அரண்மனையைப்போலத் தோன்றியிருக்கும். பகடை உருட்டப்பட்டுவிட்டது. இப்போது அது குறித்து உன்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் ஒரு பிராமணனாகவோ, ஒரு சத்திரியனாகவோ, ஒரு வேடுவனாகவோ, அல்லது நீ விரும்புகின்ற எதுவாகவோ வேண்டுமானாலும் ஆவதை உன்னால் தேர்ந்தெடுக்க முடியும்.”

கர்ணனின் குழப்பத்தைக் கண்டு கிருபர் புன்னகைத்தார். “நான் பேசும்போது என் முகத்தைப் பார். வேறு எதுவாகவோ ஆவது எப்படிச் சாத்தியமாகும் என்று நீ வியந்து கொண்டிருக்கிறாய். பிறப்பு எனும் விபத்தில் நம்பிக்கைக் கொள்வதற்குச் சமூகம் உன்னைப் போன்ற முட்டாள்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. நீ ஒரு பிராமணனாகப் பிறந்தால் மட்டுமே நீ ஒரு பிராமணனாக இருக்க முடியும் என்று புரோகிதர்கள் உன்னிடம் கூறியுள்ளனர். உன் பெற்றோர்கள் பறையர்களாக இருந்தால், நீ என்றென்றைக்கும் மற்றச் சாதியினரிடம் ஓர் அடிமையாகவே இருப்பாய். நம் நாட்டிலுள்ள மக்களை ஏமாற்றுவது மிகவும் சுலபம்.”

“ஆனால் . . . வேதங்களின் கூற்றுப்படி . . .”

“இது போன்ற முட்டாள்தனமான எதையும் வேதங்கள் கூறவில்லை. நம் மக்களில் பெரும்பாலானவர்கள் வேதங்களைப் படித்ததுகூடக் கிடையாது. யார் ஒரு பிராமணன் என்று எனக்குக் கூறு.”

“கிருபர் . . . நீங்கள் ஒரு பிராமணர் . . . ”

“நாம் வேதங்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருந்தால், பிரம்மனைத் தேடிக் கண்டுபிடிப்பவன்தான் ஒரு பிராமணன். தான் கைவரப்பெற்ற அறிவின் மூலமாகத் தனக்குள்ளும் தன் எண்ணங்களிலும் கடவுளைக் கண்டுகொண்டவன் அவன். துரோணரோ அல்லது நானோ கடவுளைத் தேடிக் கண்டுபிடித்துள்ள நபர்களைப்போலவா தோன்றுகிறோம்? பெரும்பாலான நாட்களில் என்

வீட்டிற்கான வழியைக்கூட என்னால் கண்டுபிடிக்க முடிவதில்லை. தன் கடமையைச் செய்வதன் மூலம் தன் செயல்களில் கடவுளைக் கண்டுகொண்டவன்தான் ஒரு சத்திரியன். செல்வத்தைக் குவிப்பதன் மூலம் வர்த்தகத்தில் கடவுளைக் கண்டுகொண்டவன் ஒரு வைசியன். சமூகத்திற்குச் சேவை செய்வதன் மூலம் அன்பில் கடவுளைக் கண்டுகொண்டவன் ஒரு சூத்திரன். இவற்றுக்கும், ஒருவன் எங்கு அல்லது யாருக்குப் பிறக்கிறான் என்பதற்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. நீ ஒரு பிராமணத் தகப்பனுக்குப் பிறந்த ஓர் சூத்திர மகனாகவோ அல்லது ஒரு சூத்திரத் தந்தைக்குப் பிறந்த ஒரு பிராமண மகனாகவோ இருக்கக்கூடும். அந்த அற்பத்தனமான புரோகிதர்கள் என்ன கூறினாலும் சரி, கடவுளைக் கண்டுபிடிப்பதற்கான மேற்கூறப்பட்ட வழிகளில், ஒன்று மற்றொன்றைவிட அதிகச் சிறப்பானது என்று எந்தவொரு வேதத்திலும் எழுதப்படவில்லை. கடவுளைக் கண்டுகொள்வது அவ்வாறு செய்யாமல் இருப்பதைவிடச் சிறந்தது என்றுகூட வேதங்கள் கூறவில்லை. வேதச் சிந்தனையைக் கொண்டுள்ள மனங்கள், படைப்பு மற்றும் பிரபஞ்சத்தின் மர்மங்கள் குறித்து வியக்கின்றன. ஆனால், முழுமையான உண்மையின் குரலில் அது பேசுவதில்லை.

“குருவே, நீங்கள் கூறுவது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் நாம் வாழ்கின்ற சமூகத்தைப் பற்றி வேதங்கள் என்ன கூறுகின்றன?”

“சமூகத்தைப் பற்றி வேதங்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. சமூகம் சமநிலையுடன் இருக்க வேண்டும் என்றால் நான்கு குலப் பிரிவுகள் தேவை. அறிவு, எண்ணம், வழிகாட்டுதல், செயல், அதிகாரம், தலைமைத்துவம், செல்வம், பணம், கலை, அன்பு ஆகியவை உடலின் உறுப்புகளைப் போன்றவை. இவற்றில் ஒன்றே ஒன்றுதான் முக்கியம் என்று யாராலும் கூற முடியாது. அதனால்தான், நான்கு குலப் பிரிவுகளும் பிரம்மனின் நான்கு பாகங்கள் என்று கூறப்படுகிறது. பிராமணர்கள் பிரம்மனின் தலையிலிருந்தும், சத்திரியர்கள் அவனுடைய கைகளிலிருந்தும், வைசியர்கள் அவனுடைய தொடைகளிலிருந்தும் வெளிவந்தவர்கள் என்று போலி பிராமணர்கள் மார்தட்டிக் கொள்வதை நீ செவிமடுத்திருக்கக்கூடும்,” என்று கூறிய கிருபர், ஒரு கணம் அமைதியாக இருந்துவிட்டு, கர்ணனைப் பார்த்துப் புன்னகைத்தார். “சூத்திரர்கள் . . .”

கர்ணன் அந்த பிராமணரை நேருக்கு நேர் பார்த்து, “என்னைப் போன்ற சூத்திரர்கள் கடவுளின் பாதங்களிலிருந்து முளைத்தனர்,” என்று கூறினான்.

“கர்ணா, அது குறித்து நீ வருத்தப்படுகிறாய், இல்லையா?” என்று கூறிச் சிரித்தக் கிருபர், தனக்கே உரிய பாணியில் தன் ஒரு புருவத்தை உயர்த்தினார். “ஒவ்வொரு குலப் பிரிவும் சம அளவில் முக்கியமானது என்று காட்டுவதற்காகத்தான் நம் வேதங்கள் இந்த உருவகக் கதையைப் பயன்படுத்தின. ஆனால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று பார்த்தாயா? தான் மட்டுமே முக்கியம் என்று தலை முழக்கமிடுகிறது. எப்பேற்பட்ட முட்டாள்தனம்! இதயம் இல்லையென்றால், தலை மடிந்துவிடும். கைகள் இல்லையென்றால், உடலால் செயல்பட முடியாது. தொடைகள் இல்லாமல், கால்களால் உடலோடு இணைந்திருக்கவோ அல்லது அசையவோ முடியாது. எந்தப் பயிற்சியிலும் ஈடுபடாததால் தலை அழுகிப் போயுள்ளது. மாறாக, கால்களுக்குத் தேவையான ரத்த ஓட்டத்தைத் துண்டிக்குமாறு தலையானது இதயத்திற்குக் கட்டளையிட்டுள்ளது. எனவே, எங்கும் செல்வதற்கான திறனைச் சமூகம் இழந்துவிட்டது. கைகள் வெறுமனே அங்குமிங்கும் அசைந்தாடிக் கொண்டு, அவ்வப்போது ஒன்றையொன்று அடித்துக் கொள்கின்றன. சில சமயங்களில், அவை இரண்டும் ஒன்றையொன்று தட்டிக் கொண்டு உரத்தச் சத்தங்களை ஏற்படுத்துகின்றன. தலை சில மத விதிமுறைகளைப் படைக்கிறது. அவை எதற்கும் பயன்படாத வெறும் தத்துவரீதியான ஊகங்கள் மற்றும் சடங்குகளே அன்றி வேறு எதுவும் இல்லை. மனிதகுலத்திற்குப் பயன்படக்கூடிய எதையும் உருவாக்குவதை அது நிறுத்திவிட்டது. தொடைகளுக்கும் கைகளிடமிருந்து எந்தப் பாதுகாப்பும் கிடைப்பதில்லை. ஏனெனில், கைகள் இரண்டும் ஒன்றையொன்று அடித்துக் கொள்வதில் மும்முரமாக இருக்கின்றன. அதோடு, தொடைகளுக்குத் தலையிடமிருந்து அறிவும் கால்களிடமிருந்து அசைவும் கிடைப்பதில்லை. அவை வெறுமனே ஒரே இடத்தில் இருந்து, வெறுமனே குண்டாகவும் அசிங்கமாகவும் வளர்ந்து, பாதங்களுக்கான ரத்த ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துகின்றன. இதுதான் இன்றைய நம் சமூகத்தின் முழுப் படம். தலை என்று தங்களைக் கூறிக் கொள்கின்ற பிராமணர்கள், பாதங்களான சூத்திரர்கள் தங்களுக்குத் தேவையில்லை என்று கூறுகின்றனர். பாதங்கள் இல்லாமல் அவர்கள் எங்கே போவார்கள்? இருந்த இடத்திலேயே இருந்து அவர்கள் அழுகிப் போவார்கள்.”

“ஆனால் குருவே, நம் நாடு பல தலைசிறந்த சிந்தனையாளர்களை உருவாக்கியுள்ளது. நீங்கள் கூறுவது உண்மையாக இருந்தால், எப்படி . . .”

“கர்ணா, நீ கடந்தகாலத்தைப் பற்றிப் பேசுகிறாய். எதிர்காலத்தின்

நிலை என்ன? மேற்கத்திய உலகைச் சேர்ந்த காட்டுமிராண்டிகள் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். நாம் நம்முடைய அனுகூலத்தை இழந்து போயிருக்கிறோம். வேதங்களில் தாங்கள் வல்லவர்கள் என்ற பொய்யான முழக்கத்தின் மூலம், நம் மக்களில் பெரும்பான்மையினருக்குக் கல்வியின் பலன்களை நாம் தொடர்ந்து மறுத்து வந்தால், காட்டுமிராண்டிகள் நம்மை ஆள்வதை ஒருநாள் நாம் நிச்சயமாகப் பார்ப்போம். நாம் யாரை மிலேச்சர்கள் என்று வெறுப்போடு அழைக்கிறோமோ, அவர்கள் நம் நாட்டைச் சூழ்ந்து கொண்டு, காந்தாரத்தின் எல்லைகளிலிருந்தோ அல்லது தெற்குக் கடற்கரையோரத்திலிருந்தோ நம்மைத் தாக்குவார்கள். ஆனால் நம் நாகரீகத்தின் காலியான கூட்டை மட்டுமே அவர்கள் கண்டுபிடிப்பார்கள். ஏனெனில், அதன் மையப் பகுதி ஏற்கனவே அழுகிப் போயுள்ளது. அவர்கள் வெறுமனே அக்கூட்டை லேசாகத் தள்ளினால் போதும், அது நிலைகுலைந்து நொறுங்கிவிடும். பிறகு, முட்டாள்களான நம் அனைவரையும் அவர்கள் ஆள்வார்கள். பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய அனைவரையும் அவர்கள் நசுக்கிக் கொன்றுவிடுவார்கள். இவை எல்லாமே வேதங்களில் எழுதப்பட்டுள்ளன என்றும், இது கலியுகத்தின் துவக்கம் என்றும் சில அபத்தமான கருத்துக்களை, கிணற்றுக்குள் இருக்கும் நம் தவளைகள் கூறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்." கிருபர் தன் பேச்சை நிறுத்திவிட்டு, மேகங்களால் சூழப்பட்டிருந்த வானத்தை அமைதியாகப் பார்த்தார்.

"ஆனால் ஐயா, ஒருவன் தன்னுடைய குல தர்மத்தைச் செய்வதன் மூலமாக மட்டுமே அவனால் முக்தி அடைய முடியும், இல்லையா?" கிருபரின் வார்த்தைகளால் உணர்ச்சிவசப்பட்டிருந்த கர்ணன், மழையைப் பற்றி முற்றிலுமாக மறந்து போயிருந்தான். இப்படிப்பட்டத் தீவிரமான விஷயங்களைப் பற்றிப் பெரியவர்கள் அவனிடம் அரிதாகவே பேசினர்.

"இது இன்னொரு தவறான விளக்கம். முக்தி என்றால் என்ன? வாழ்வில் மகிழ்ச்சியைக் கண்டுபிடிப்பதுதான் அது. மீதி எல்லாம் வெறும் ஊகம் மட்டுமே. நீ என்னுடைய நண்பன் சார்வகனைச் சந்திக்க வேண்டும். விஷயங்களை அவன் என்னைவிட அதிகச் சிறப்பாக விளக்குவான். ஒரு போர் வீரனாக ஆவதன் மூலமாக மட்டுமே வாழ்வில் மகிழ்ச்சியை உன்னால் கண்டுபிடிக்க முடியும் என்று நீ நினைத்தால், பிறகு அது குறித்துத்தான் நீ கடுமையாக முயற்சிக்க வேண்டும். உன் மனத்தில் எள்ளளவு சந்தேகம்கூட இருக்கக்கூடாது. உன் இலக்குகளை அடைவதற்காகப் போராடுவதில் நீ உறுதியாக இருந்தால், எந்தவொரு

குருவாலோ அல்லது வேதத்தாலோ உன்னைத் தடுத்து நிறுத்த முடியாது.”

கிருபர் கர்ணனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, ‘இதற்குரிய வலிமை இவனிடம் இருக்கிறதா?’ என்று அவர் உள்ளூர வியந்தார்.

“ஆனால் என் சாதியின் காரணமாக யாரும் எனக்குக் கற்றுக் கொடுக்க மாட்டார்கள் . . .” தனக்குத் தெரிந்த, அசைக்க முடியாத ஒரே நம்பிக்கையைக் கர்ணன் வெளிப்படுத்தினான்.

“ஆஹா, கர்ணா! என்மீது நீ குற்றம் சுமத்துவதுபோலத் தெரிகிறது. உன்னுடைய சாதியைக் காரணம் காட்டி நான் உனக்குக் கற்றுக் கொடுக்க மறுக்கவில்லை. நான் என் கட்டணத்தைக் கேட்டேன். அதைக் கொடுக்க நீ தயாராக இல்லை. பணத்தைப் பற்றி நான் அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. அந்த ஆலமரத்திற்கு அடியில் உள்ள ஆறடி மண்ணும், அம்மரத்தின் கிளைகளின் ஊடாகத் தெரியும் வானமும் மட்டும் எனக்குப் போதும். ஆனால், வாழ்வில் உள்ள அனைத்திற்கும் ஒரு விலை உண்டு என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே. உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ, அதை எடுத்துக் கொண்டு நாளை என்னை வந்து பார். பரதகண்டத்திலேயே மிகச் சிறந்த வீரனாக ஆவதற்கு உனக்கு நான் கற்றுக் கொடுக்கிறேன்.”

“ஆனால் என் தந்தையிடம் அவ்வளவு பணம் இல்லை . . .” கர்ணனின் இதயம் படபடத்தது.

“உன்னிடம் இருப்பதைக் கொண்டு வா. ஆனால் ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக் கொள். மற்ற அனைத்தையும்போலவே, நீ பெறவிருக்கும் கல்வியறிவு, அதற்கு நீ கொடுக்கத் தயாராக இருக்கும் விலைக்கு ஏற்பவே இருக்கும். எனவே, கர்ணா, நீ அதற்கு என்ன விலை கொடுக்கத் தயாராக இருக்கிறாய்?”

இது அவனுக்கான ஒரு சோதனை என்று அவர் நினைத்தார்.

“நான் உங்களுக்காக வேலை செய்கிறேன்.”

கிருபர் வாய்விட்டுச் சிரித்தார். “உன்னைப் போன்ற ஒரு சிறுவனால் எனக்காக என்ன வேலை செய்துவிட முடியும்? உன் கல்விக்காக நீ எந்தவொரு விலையையும் கொடுக்கத் தயாராக இல்லை என்பதுபோலத் தெரிகிறது. நான் கொடுமைக்காரன்போல நடந்து கொள்வதாக நீ நினைக்கக்கூடும். ஆனால் நான் வெளிப்படையாகப் பேசுகிறேன். மறைமுகமான நோக்கம் எதுவும் என்னிடம் இல்லை. உன்னிடமிருந்து பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமல் பலவற்றை உனக்குக் கொடுக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு நீ பயப்பட வேண்டும். ஏனெனில், உனக்கு மிகவும் அசௌகரியமான வேளைகளில் அவர்களுடைய எதிர்பார்ப்புகள்

உன்னிடம் வரும். இறுதியில், நான் கேட்டக் கட்டணம்தான் மிகவும் மலிவானது, அதிகத் தீங்கு விளைவிக்காதது என்பதை நீ கண்டறிவாய். உன்னைப் போன்றவர்கள் என்னைப் போன்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புவதில்லை. வாழ்க்கை எனும் மிகக் கடினமான ஆசான், தன்னுடைய கடுமையான பாடங்களை உனக்குக் கற்றுக் கொடுக்கப் போவதாகத் தீர்மானிக்கும்போது மட்டுமே நீ கற்றுக் கொள்வாய். உன்னுடைய தந்தையை திவாலாக்க நீ தயாராக இல்லாததாலும், எனக்குக் கொடுப்பதற்குப் பயனனுள்ள எதுவும் உன்னிடம் இல்லாததாலும், அதே அளவு பயனற்ற ஒன்றை நான் உனக்குக் கொடுக்கிறேன். உன்னிடம் உள்ள சில்லறையோடு காலையில் என்னிடம் வா. ஒரு பிராமணரைப்போல எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் உனக்குக் கற்றுக் கொடுக்கிறேன்."

"ஆனால் நான் ஒரு புரோகிதனாக ஆக விரும்பவில்லை," என்று கர்ணன் சீற்றத்தில் குதித்தான்.

"இளம் மூடனே! கவனமாகக் கேள். இந்தியாவில் வாழ்கின்ற தலைசிறந்த வீரன் யார் என்று உனக்குத் தெரியுமா? அது துரோணரோ, குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரோ, அல்லது நானோ அல்ல. நாட்டின் தென்பகுதியில் வெகு தொலைவில் ஒரு பிராமணக் குலத்தினர் சிலர் வசித்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, மாபெரும் அசுரப் பேரரசனான மகாபலி ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை ஆட்சி புரிந்தான். வாமன விஷ்ணு அவனைத் தோற்கடித்து, பிராமண ஆட்சியை அங்கு நிலைப்படுத்தினான். பின்னாளில், மாபெரும் அசுர அரசனான ராவணன், இந்த சாம்ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்து, இக்குழுவினரை வெளியே தூக்கிப் போட்டான். தன் சகோதரன் விபீஷணனின் நம்பிக்கைத் துரோகத்தால் போரில் ராவணன் மாண்டு போனபோது, பிராமணர்கள் மீண்டும் கூடினர். இதே விபீஷணனின் ஆதரவுடன், கோகர்ணத்திலிருந்து கன்னியாகுமரிவரையிலான நிலம் அவர்களுடைய ஆட்சியின் கீழ் வந்தது. அந்த நேரத்திலிருந்து, சுமார் ஆயிரம் வருடங்களாக, அசுரர்களின் நிலத்தை அவர்கள் ஓர் இரும்புக் கையுடன் ஆண்டு வந்துள்ளனர். அசுரக் குழுவின் தலைவர்களை அவர்கள் தங்களுடைய கைப்பாவகைளாக மாற்றினர். இதற்கிடையே, உன்னால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மனிதத்தன்மையற்றச் சாதி அமைப்புமுறையை அவர்கள் வலுக்கட்டாயமாகத் திணித்தனர். ஒரு சூத்திரனாகப் பிறப்பது ஒரு குறைபாடு என்று நீ நினைக்கிறாய். பரசுராமனின் பூமியில் பறையர்களின் நிலைமையை நீ பார்க்க வேண்டும். உண்மையிலேயே

குறைபாடு என்றால் என்னவென்று அப்போது நீ புரிந்து கொள்வாய். அது ஓர் அழகான புமி, ஆனால் இவ்வுலகிலுள்ள பல அழகான விஷயங்களைப்போலவே, அந்த நிலமும் அதிக விஷத்தன்மை கொண்டது."

"பரசுராமர்! ஆனால் அவர் அஸ்தினாபுரத்தின் எதிரியல்லவா? என்னால் எப்படி . . ."

"கர்ணா, நீ கற்றுக் கொள்ள விரும்பும்போது, மிகச் சிறந்த ஆசானிடமிருந்து கற்றுக் கொள். தென்னகக் குழுவினரின் தலைவனான பரசுராமர்தான் இன்று பரதகண்டத்திலேயே மிகச் சிறந்த வீரர். யாராலும் எதிர்க்க முடியாத ஒருவர் அவர். நம்முடைய வரலாற்றின் துவக்கத்திலிருந்தே, பரசுராம குலத்தவர்கள், பின்விளைவுகளைப் பற்றி அக்கறை கொள்ளாத வீரர்களாக இருந்து வந்துள்ளனர். தங்களுடைய மதத்தையும் சட்டத்தையும் திணிப்பதற்காக வடக்கத்தியப் பேரரசுகளின்மீது அவர்கள் மீண்டும் மீண்டும் படையெடுத்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர். ராமன் மட்டும் அவர்களை ஒருமுறை தோற்கடித்திருக்கவில்லை என்றால், கங்கை மற்றும் யமுனைச் சமவெளிகளிலிருந்து அனைத்துச் சத்திரியர்களையும் அவர்கள் துரத்தியடித்திருப்பர். அவர்களுடைய கடைசிப் படையெடுப்பு, காசி இளவரசியான அம்பையை பீஷ்மருக்குத் திருமணம் செய்து வைக்கின்ற ஒரு சாக்குப்போக்கில் நிகழ்ந்தது. அது இன்றைய சமரச ஒப்பந்ததில் வந்து முடிந்தது. ஆனால் பரசுராமன் அப்போது ஒட்டுமொத்த உத்தராஞ்சனபாதத்தைக் கிட்டத்தட்டக் கைப்பற்றியிருந்தான். ஓராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பரதகண்டத்தின் அனைத்து ஆட்சியாளர்களுக்கும் அவர்கள் ஓர் அச்சுறுத்தலாக இருந்து வந்துள்ளனர். நம்முடைய சாதி அமைப்புமுறை போதுமான அளவு உறுதியாக இல்லை என்றும், நம்முடைய மதம் போதுமான அளவு தூய்மையாக இல்லை என்றும் அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். எனக்கும் துரோணருக்கும் பரசுராமர்தான் குரு. அவர் பிராமணர்களுக்கோ அல்லது தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த இளவரசர்களுக்கோ மட்டுமே கற்றுக் கொடுப்பார்." இதைக் கேட்டுக் கர்ணனின் இளம் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியைக் கண்டு கிருபர் சிரித்தார்.

"நான் ஒரு பிராமணனும் அல்ல, ஒரு சத்திரியனும் அல்ல. என்னால் எப்படி . . ."

"ஒரு பிராமணனைப்போல எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நான் உனக்குக் கற்றுக் கொடுக்கிறேன். பிறகு நீ அவருடைய இடத்திற்குச் சென்று, அந்த மாபெரும் வீரரிடமிருந்து கற்றுக்

கொள்ளலாம். இதிலுள்ள சிறப்பு என்னவென்றால், அவர் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை. எனக்குக் கட்டணம் செலுத்துவதைத் தவிர்த்துவிட்டு, உன் தந்தையின் நோஞ்சான் குதிரையையும் வண்டியையும் பாதுகாப்பதில் நீ குறியாக இருப்பதால், இந்த ஏற்பாடு உனக்குச் சரிப்பட்டு வரும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் உன்னை எச்சரிக்க விரும்புகிறேன்: இறுதியில் நீ அவருக்கு ஒரு மிகப் பெரிய விலையைக் கொடுத்தாக வேண்டியிருக்கும். ஆனால் அதற்கும் பணத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. ஆனாலும் அது பற்றி எனக்குக் கவலையில்லை. உன் தகுதிக்கு இதைவிடச் சிறப்பாக எதுவும் கிடைத்துவிடாது."

"ஆனால் அது அவரை ஏமாற்றுவதைப்போல ஆகிவிடாதா?"

"பரசுராமர் செய்து கொண்டிருப்பதுதான் ஏமாற்று வேலை. வேதங்கள் குறித்த அவருடைய வடிவம் மிகவும் குறுகலானது. என் நண்பன் சார்வகன் அதைச் செவிமடுத்தால், அவனுக்கு மாரடைப்பே வந்துவிடும். கர்ணா, என்றேனும் ஒருநாள், பரசுராமரோ அல்லது அவருடைய சீடர்களில் ஒருவனோ இந்த ஒட்டுமொத்த நாட்டையும் கைப்பற்றி, தங்களுடைய ஆட்சியை நம்மீது திணிக்கத்தான் போகிறார்கள். எனக்கு இந்தக் கனவு அடிக்கடி வரும் அளவுக்கு நம் சமுதாயம் மிகவும் சீரழிந்து போயுள்ளது. ஒருவேளை, என்றேனும் ஒரு நாள், மனிதனின் நிலைமை குறித்து இரக்கம் கொண்டு, தன் அரண்மனை வாழ்க்கையைப் புறக்கணித்துவிட்டு, ஞானோதயத்தைத் தேடி ஒரு மரத்தின் அடியில் வாழ்கின்ற ஓர் இளவரசனை நாம் கண்டுபிடிக்கக்கூடும். சுய அழிவிலிருந்து நம் சமுதாயத்திற்கு அவன் சிறிது ஓய்வு கொடுக்கக்கூடும். ஆனால், பரசுராமரின் சீடர்கள், ஒரு போர் வீரனின் வாளுடனோ அல்லது ஒரு பிச்சைக்காரனின் கைத்தடியுடனோ நிச்சயமாக பரதகண்டத்தின் நான்கு மூலைகளுக்கும் பயணிக்கத்தான் போகின்றனர். அந்தக் கயவர்கள், ஈகைக் குணம் கொண்ட இளவரசர்கள் உருவாக்கி வைத்துள்ள மனிதத்தன்மை அனைதையும் ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டு, நிரந்தரமான சீரழிவைக் கொண்டு வருவர்."

"ஐயா, தட்சகன்தான் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருந்ததாக நான் நினைத்தேன்," என்று கர்ணன் கூறினான்.

கர்ணனின் கண்ணோட்டத்தையும் புத்திசாலித்தனத்தையும் கண்டு மகிழ்ந்த கிருபர் புன்னகை புரிந்தார். "கர்ணா, தட்சகனும் பரசுராமரும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். பொதுமக்களாகிய நாம் இத்தகைய பைத்தியக்காரர்களுக்கு இடையே மாட்டிக் கொள்வோம். பரசுராமர்களும் தட்சகர்களும் மடிவதில்லை. பல்வேறு

காலகட்டங்களில் பல்வேறு பெயர்களில் அவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு தாக்குதல் நிகழும்போது, சாதி வேறுபாடின்றி, அஸ்தினாபுரத்திற்கு அனைத்து வீரர்களும் தேவைப்படுவார்கள். நீ செய்யும் காரியத்தை, நீ நம் அனைவருக்காகவும் செய்யப் போகிறாய். காலையில் என்னை வந்து பார். காயத்திரி மந்திரத்துடன் நாம் துவக்கலாம். ஒரு சூத்திரனை ஒரு பிராமணனாக மாற்ற என்னால் முடியுமா என்று பார்த்துவிடுகிறேன்." வேகமாகப் பாய்ந்தோடிக் கொண்டிருந்த ஆற்றின் அருகே, தொப்பலாக நனைந்திருந்த கர்ணனைத் தனியாக விட்டுவிட்டுக் கிருபர் அங்கிருந்து நடந்தார்.

6

ஓர் அலியின் சவால்

“இந்தப் போக்கிரி இன்று என்ன குற்றம் செய்தான்?” தன்னுடைய கண்டிப்பான பார்வையை துரியோதனன்மீதிருந்து அகற்றாமல் பீஷ்மர் விதுரனிடம் கேட்டார்.

விதுரன் பதிலளிப்பதற்கு முன்பாக, தௌமியன் மற்றும் ஒருசில புரோகிதர்கள் புடைசூழ, குந்தி அந்த அறைக்குள் புயலென நுழைந்தாள். மரியாதையற்ற இந்தத் திடீர்க் குறுக்கீட்டால் பீஷ்மர் எரிச்சல் அடைந்ததை விதுரனால் பார்க்க முடிந்தது. பீஷ்மரை அவன் முன்கூட்டியே எச்சரித்திருக்க வேண்டும். தௌமியனின் தலைமைத்துவத்தின்கீழ், அந்தப் புரோகிதர்கள் குந்தியிடம் சென்றிருந்ததை விதுரன் அறிந்திருந்தான். ஆனால் அவள் அவர்களைக் கூட்டிக் கொண்டு நேராக பீஷ்மரைப் பார்க்க வருவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

கிருபருக்கு எதிரான தன் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தௌமியன் அவிழ்த்துவிட்டான். பொறுமையிழந்து கொண்டிருந்த பீஷ்மர், கடுகடுப்போடு அவற்றைச் செவிமடுத்தார். இறுதியில், “இது ஒரு சுதந்திர நாடு. தாங்கள் எதை நம்ப விரும்புகிறார்களோ, அதை நம்புவதற்கான உரிமையும் அதைப் போதிப்பதற்கான உரிமையும் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. வியாசரைப் போன்ற ஒரு மாபெரும் அறிஞர் கிருபரையும் சார்வகனையும் மெச்சினார் என்றால், அவர்களை வேறு விதமாகச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு பீஷ்மராகிய நான்

தகுதியில்லாதவன். புரோகிதர்களாகிய நீங்கள் வேண்டுமானால் கிருபரிடம் நேராகச் சென்று, நீங்கள் கற்றுக் கொடுக்கின்ற சாதி, உருவ வழிபாடு, சடங்குகள், பிராமண வழிபாடு மற்றும் இது போன்ற விஷயங்களுக்கு வேதங்களிலிருந்து சான்று பகர்ந்து, உங்களுடைய வாதங்கள் சரியானவையே என்று அவரை ஒப்புக் கொள்ளச் செய்யுங்கள்," என்று பீஷ்மர் கூறினார்.

இந்தத் திறமையான பதிலைக் கேட்டு விதுரனின் உதடுகளில் ஒரு புன்னகை மலர்ந்தது. இது குந்திக்கு அதிகச் சீற்றத்தை ஏற்படுத்தியது. "பிதாமகரே, நீங்கள் குறிப்பிட்ட நபர்கள் நம்முடைய தர்மத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றனர்," என்று அவள் ஆவேசத்தோடு கூறினாள்.

பீஷ்மர் இப்போது தன் பார்வையைக் குந்தியின்மீது நிலைப்படுத்தினார். "மகளே, நம்முடைய தர்மம் என்றும் நிலைத்திருக்கக்கூடியது. இதை அவர்களால் ஒருபோதும் அழிக்க முடியாது. எந்தவொரு மனிதனாலும் இதை அழிக்க முடியாது. அவர்கள் நம் காலகட்டங்களுக்கு ஏற்ப அவற்றை மறுவரையறை செய்து கொண்டிருக்கின்றனர். பல்வேறு காலகட்டங்களில் வாழும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப தர்மம் தொடர்ந்து பரிணாம வளர்ச்சி அடைகிறது. தர்மத்தின் சங்கை நெறித்து, நம் வேதங்களுக்குத் தவறாகப் பொருள் விளக்கமளிப்பதன் மூலம் நம்முடைய சொந்தப் புரோகிதர்களில் சிலரே தர்மத்தை அழித்துக் கொண்டிருப்பதாகச் சிலர் கூறக்கூடும். ஆனாலும், வியாசர், கிருபர், அல்லது சார்வகனைப்போல நான் ஓர் அறிஞன் அல்ல. நான் ஒரு போர் வீரன் மட்டும்தான். என்னுடைய மட்டுப்படுத்தப்பட்ட ஞானத்தையும் பொது அறிவையும் வைத்துப் பார்க்கும்போது, நான் கிருபரோடு உடன்படுகிறேன். ஆனால் சார்வகனோடு என்னால் ஒத்துப் போக முடியாது. இது என்னுடைய தனிப்பட்ட நம்பிக்கை. இதை நான் வேறொருவர்மீது திணிப்பதில்லை. உனக்கு விருப்பமான எதை வேண்டுமானாலும் நம்புவதற்கு உனக்கும் உரிமை இருக்கிறது. உன் உரிமைகளைப் பறிப்பதற்கு நான் யாரையும் அனுமதிக்க மாட்டேன். கிருபர் தன் பகுத்தறிவுரீதியான சொற்பொழிவுகள் மூலமாக, புரோகிதர்களுக்குக் காணிக்கைகள் கொடுப்பதிலிருந்து மக்களைத் தடுக்கிறார் என்றால், அது குறித்து என்னால் எதுவும் கூற முடியாது. ஏனெனில், புரோகிதர்களான நீங்களும் தாராளமாக மக்களிடம் சென்று, கிருபரின் போதனைகளை உதாசீனப்படுத்துவதற்கு அவர்களை ஒப்புக் கொள்ள வையுங்கள். அவர்கள் மீண்டும் உங்களிடம் வருவதை உறுதி செய்து கொள்ளுங்கள். இது உங்களுக்கும் கிருபருக்கும் இடையேயான பிரச்சனை. கோவிலுக்குச் செல்வதிலிருந்து மக்களை அவர்

கட்டாயமாகத் தடுத்தால் என்னிடம் வாருங்கள். அஸ்தினாபுரத்தில் வீரர்களும் சிறைச்சாலைகளும் இருப்பதற்கான காரணம் என்னவென்று அப்போது அவர் தெரிந்து கொள்வார். இது உங்கள் அனைவருக்குமே பொருந்தும். கிருபரையோ அல்லது சார்வகனையோ யாரேனும் காயப்படுத்தினால், இதே விதிமுறைகள் அவர்களுக்கும் பொருந்தும்."

"ஆனால் பிதாமகரே . . ." குந்தி எதிர்ப்புக் காட்டத் துவங்கினாள். விதுரன் பீஷ்மரின் மேசையின்மீது இருந்த பனை ஓலைகளை வேகமாக ஒழுங்குபடுத்தத் துவங்கினான். தன்னுடைய புன்னகையைக் குந்தி பார்ப்பதை அவன் விரும்பவில்லை. அடுத்து என்ன வரவிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான்.

"குந்தி, இத்தகைய அற்பமான விஷயங்களுக்காக உன் நேரத்தையும் என் நேரத்தையும் வீணாக்காதே. நீ வளர்ப்பதற்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர். உனக்கு அரசியலில் ஆர்வம் இருந்தால், ஆட்சி செய்வதில் உன் கணவனின் சகோதரனுக்கு நீ ஏன் உதவி செய்யக்கூடாது? நல்ல கண்பார்வையுடன்கூடிய ஒருவனுக்கே இந்த நாட்டை ஆள்வது அவ்வளவு சுலபமானதல்ல."

குந்தியும் ஒழுங்குமுறையற்ற அந்தப் புரோகிதர்களும் கோபத்துடன் அங்கிருந்து வெளியேறினர்.

தன் கோபத்தையும் அவமானத்தையும் மறைக்க முயன்று கொண்டு, தன் பார்வையை நிலத்தின்மீது பதித்தவாறு ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்த துரியோதனை பீஷ்மர் பார்த்தார். "மகனே, உண்மை எப்போதுமே மேலோங்கி நிற்கும். அதை நேருக்கு நேர் எதிர்கொள்."

சிறிது நேரத்திற்கு முன்புதான் விதுரன் துரியோதனை பீஷ்மரிடம் இழுந்து வந்திருந்தான். பாண்டவ இளவரசர்களில் இரண்டாமவனான பீமன், குரு வம்ச இளவரசனான விகர்ணனின் வலது கையை உடைத்திருந்தான். விகர்ணன் பீமனைக் 'குண்டோதரன்' என்று கேலி செய்திருந்ததால் அவன் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. விகர்ணனின் வேதனைக் கூக்குரல், துரியோதனனையும் துச்சாதனனையும் அந்த இடத்திற்கு அழைத்து வந்திருந்தது. இது ஒரு கைகலப்பில் போய் முடிந்தது. பீமன் அவர்கள் இருவரையும் புரட்டியெடுத்துவிட்டான். சிறிது நேரம் கழித்து, இருட்டில் மறைந்து நின்ற துரியோதனனும் துச்சாதனனும் பீமனைத் திடீரென்று பிடித்துக் கொண்டனர். விதுரன் மட்டும் அங்கு வந்து அவர்கள் இருவரையும் பீஷ்மரிடம் இழுந்து வந்திருக்கவில்லை என்றால், அவர்கள் பீமனைக் கொன்றிருப்பார்கள். குந்தி தன் மகனை அங்கிருந்து இழுத்துச் சென்றிருந்தாள்.

இப்போது பீஷ்மர் தன் கவனத்தைத் தன் பேரக்குழந்தைகளின்

பக்கம் திருப்பினார். “என்ன பிரச்சனை?”

அவமானத்தோடு நின்று கொண்டிருந்த துரியோதனை விதுரன் கண்டிப்பான முகத்துடன் பார்த்தபடி, “இளவரசன் துரியோதனனை நான் தடுத்திருக்காவிட்டால், தன் சகோதரனான பீமனைக் கொன்றதற்காக நாம் இவனை இப்போது குற்ற விசாரணை செய்து கொண்டு இருந்திருப்போம்,” என்று கூறினான்.

“தாத்தா, நாங்கள் வெறுமனே விளையாடிக் கொண்டிருந்தோம். நாங்கள் அவனை . . .”

“துரியோதனா, யார் உன் எதிரிகள், யார் உன் நண்பர்கள் என்று புரிந்து கொள்ளும் அளவுக்கு நீ பெரியவனாகிவிட்டாய். பீமனை அடித்துக் கொல்ல முயற்சிப்பது என்ன விளையாட்டு?”

துரியோதனனின் முகம் வெளிறியது. பீஷ்மரின் முன்னால் அவன் பயத்தில் நடுநடுங்கி நின்றான். “வாயைத் திறந்து பதில் கூறு!” என்று பீஷ்மர் உறுமினார்.

“தாத்தா, வெறும் வேடிக்கைக்காக நாங்கள் அப்படிச் செய்தோம். நாங்கள் வெறுமனே பேசிக் கொண்டிருந்தோம் . . .” பீஷ்மரின் நிலையான பார்வையின் முன்னால் துரியோதனனால் தொடர்ந்து பேச முடியவில்லை.

“வேடிக்கைக்காக ஒருவனைக் கொல்லத் திட்டமிட்டுக் கொண்டிருந்தாயா? பீமன் உன் சகோதரன். என் பார்வையில் நீங்கள் இருவரும் சமமானவர்கள். சத்திரியர்கள் என்ற முறையில் போட்டி மனப்பான்மை இருப்பது நல்லதுதான். ஆனால் கொலை செய்யும் அளவுக்குக் கோபம் வருவது நல்லதல்ல.”

“தாத்தா, அவர்கள் எப்போதும் எங்களையும் எங்கள் சகோதரியையும் கோபப்படுத்திக் கொண்டும் துன்புறுத்திக் கொண்டும் இருக்கின்றனர். வேலைக்காரர்களிடம் அவர்கள் கொடூரமாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் சுயநலக்காரர்கள். அவர்கள் என் தந்தையைக் குருடன் என்று அழைக்கின்றனர் . . .”

இந்த உணர்ச்சி வெளிப்பாட்டைக் கண்ட பீஷ்மர் தொடர்ந்து உறுதியாக இருந்தார். “இருட்டில் மறைந்து நின்று கொண்டு ஒருவனைத் தாக்குவதற்கு எந்தக் காரணமும் இருக்க முடியாது. நீ ஒரு சத்திரியனாக இருந்தால், ஓர் ஆண்மகனைப்போலச் சண்டையிடு. மனத்தளவிலும் உடலளவிலும் வலிமையானவனாக நீ உருவாக வேண்டும்.”

துரியோதனன் அவமானத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமைதியாக நின்றான். பீஷ்மராலும் விதுரனாலும் தான் பாதிக்கப்பட்டிருந்ததாக அவன் உணர்ந்தான். பீமனைப் பழிக்குப் பழி

வாங்குவதற்குத் தனக்கு உரிமை இல்லையா என்று அவன் கொதித்தான்.

"துரியோதனா, நான் கூறுவதைக் கவனமாகக் கேள்," என்று கூறிய பீஷ்மரின் குரலில் கோபம் தணிந்து, பரிவின் சாயல் தொனித்தது. "ஒருநாள் நீ இந்த நாட்டை ஆளப் போகிறாய். உன் எதிரிகளையும் உன் நண்பர்களையும் நீ தெரிந்து வைத்திருக்க வேண்டும். நீ உன் வீட்டுப்பாடங்களைச் செய்வதில் தவறிக் கொண்டிருக்கிறாய் என்றும், வகுப்பில் பகற்கனவு கண்டுகொண்டிருக்கிறாய் என்றும் எனக்குத் தகவல்கள் வருகின்றன. துரோணர் உன் நடத்தையைப் பற்றி ஏராளமாகக் குறைகூறுகிறார். தெருக்களில் சுற்றிக் கொண்டு, வருவோர் போவோரிடமெல்லாம் பேசிக் கொண்டிருப்பதை நிறுத்து. ஓர் இளவரசனைப்போல நடந்து கொள். சாதி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்களின் வீடுகளுக்கு நீ போவதற்கு உனக்கு எந்தக் காரணமும் இல்லை. நீ ஒரு சத்திரியன். அதற்கு ஏற்றாற்போல நடந்து கொள். பிராமணர்களிடத்திலும் அறிஞர்களிடத்திலும் மரியாதையை வெளிப்படுத்து. சார்வகன் மற்றும் கிருபரைப் பற்றிப் பேசுவதை நிறுத்து. அவர்களுடைய கருத்துக்கள் உனக்கு எந்த விதத்திலும் உதவாது. ஓர் அரசன் எல்லோர் கூறுவதையும் காது கொடுத்துக் கேட்க வேண்டும். ஆனால் மிதமிஞ்சிய யோசனைகளால் அவன் தடுமாறிவிடக்கூடாது. துரோணரின் அறிவுரையை மரியாதையோடு ஏற்றுக் கொண்டு, நாட்டிற்கும் சமூகத்திற்கும் எது நல்லதோ அதற்கேற்ப நடந்து கொள். பேசப்படும் அனைத்து விஷயங்களும் உண்மையல்ல. உண்மை மாறிக் கொண்டே இருக்கும். இதைப் புரிந்து கொள்வதில்தான் ஞானம் அடங்கியுள்ளது. அப்போதுதான் ஒரு நல்ல ஆட்சியாளனாக உன்னால் உருவாக முடியும்."

"ஆனால் தாத்தா, வெளியில் ஏராளமான துயரம் இருக்கிறது. நீங்கள் ஞானத்தோடு ஆட்சி புரிந்து வந்திருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது, நம் ஆட்சியில் ஏன் பலர் பன்றிகளைப்போல வாழ்கின்றனர்?"

விதுரன் கிட்டத்தட்ட மூர்ச்சையடைந்தான். துரியோதனின் துடுக்குத்தனம் எரிச்சலூட்டுவதாக இருந்தது. பீஷ்மருடன் இத்தனை ஆண்டுகாலமாகத் தான் பணியாற்றி வந்திருந்த பிறகும்கூட, இந்தக் கேள்வியைக் கேட்பதற்குத் தனக்கு ஒருபோதும் துணிச்சல் இருந்திருக்காது என்று விதுரன் நினைத்தான்.

பீஷ்மர் துரியோதனை நீண்ட நேரம் முறைத்துப் பார்த்தார். பிறகு, அந்த முதியவரின் முகத்தில் ஒரு புன்னகை உதித்தது. "துரியோதனா,

இப்படிப்பட்டப் பேச்சினால் என்றேனும் ஒருநாள் நீ காயப்படக்கூடும். நான்தான் இத்தகைய சமுதாயத்தை உருவாக்கினேன் என்று நீ நினைக்கிறாயா? நான் இதை வெறுமனே சுவீகரித்தேன், அவ்வளவுதான். நான் என் கர்மாவைச் செய்து கொண்டிருக்கிறேன். ஒரு சத்திரியன் என்ற முறையில் நான் என் கடமையைச் செய்து கொண்டிருக்கிறேன். ஒரே நாளில் உலகத்தை மாற்றுவது குறித்த கற்பனைக் கனவுகள் எதுவும் எனக்கு இல்லை. ஒரு விதையை விதைத்துவிட்டு, ஒரே இரவில் அது ஒரு மரமாக வளர்ந்துவிட வேண்டும் என்று உன்னால் எதிர்பார்க்க முடியுமா? நீ அதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும், அதைப் பராமரிக்க வேண்டும், சூரிய ஒளியையும் மழையையும் உரத்தையும் அதற்குக் கொடுக்க வேண்டும். பிறகு அது மெல்ல மெல்ல வளரும். அடக்குமுறை, பாகுபாடு, ஒருசிலருக்குச் சலுகைகள் போன்றவை நாகரீகம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன. சாதி அமைப்புமுறை நான் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நன்றாக வேரூன்றிப் போயிருந்தது. அதை ஒரே நாளில் என்னால் பிடுங்கி எறிய முடியாது. நான் ஒரு சமூகச் சீர்திருத்தவாதியும் அல்ல. ஏழைகளும் பிறப்பால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களும் மேலும் அதிகமாகத் துன்புறாமல் இருப்பதை மட்டுமே நான் உறுதி செய்கிறேன். அதிகார போதை மேற்தட்டு மக்களின் தலைகளுக்கு ஏறிவிடாமல் இருப்பதை என்னால் உறுதி செய்ய முடியும். உன் தந்தைதான் அரசன். ஆனால் ஆட்சிச் சுமையை, களைத்துப் போன என் தோள்கள் பல ஆண்டுகளாகச் சுமந்து வந்துள்ளன. இது ஒரு சுலபமான வேலை என்று நீ நினைக்கிறாயா? ஆட்சி செய்வது என்றால் என்ன என்பது குறித்து உன் தந்தையும் உன் சித்தியான குந்தியும் கொண்டிருக்கும் யோசனை உண்மையில் தவறு. அதிகாரத்தின் நன்மைகளை மட்டுமே அவர்கள் பார்த்திருக்கின்றனர். பொறுப்புகளை நான் மட்டுமே சுமந்து வந்திருக்கிறேன்.

“ரத்தம் இளமையாக இருக்கும்போது, ஏழ்மையையும் துயரத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவது போன்ற சாத்தியமற்றக் கனவுகள் வரத்தான் செய்யும். ஆனால் நம் வாழ்வில் பின்னிப் பிணைந்து, அதைச் சிக்கலாக்கிவிடுகின்ற ஒரு மோசமான பழக்கம் கனவுகளுக்கு இருக்கிறது. இக்கணத்தில் நீ ஒரு மாணவன். கற்றுக் கொள்வது மட்டும்தான் உன் கடமை. நீ தொடர்ந்து கனவு காணலாம், ஆனால் உன் பாதங்கள் நிலத்தின்மீது உறுதியாக ஊன்றப்பட்டிருக்க வேண்டும். சார்வகன், கிருபர் போன்றோரின் தாக்கத்திற்கு ஆளாகிவிடாதே. சகுனியிடமிருந்து விலகியே இரு. உன்னை ஒரு குருடனின் மகன் என்று யாரேனும் அழைத்தால், அவனை மன்னித்துவிடு. வேறு எந்த வழியிலும்

அவர்களால் உன்னைப் பழி வாங்க முடியாது என்பதால் அவர்கள் அப்படிக் கூறுகின்றனர். அதை ஒரு பாராட்டாக எடுத்துக் கொள். இப்போது இங்கிருந்து சென்று, துரோணர் உனக்குக் கற்றுக் கொடுக்கின்ற எல்லாவற்றையும் கவனமாகக் கற்றுக் கொள்," என்று கூறிய பீஷ்மர், துரியோதனை அங்கிருந்து போகும்படிப் பணித்தார்.

பீஷ்மர் சன்னலுக்கு வெளியே பார்த்தபடி நின்றார். தொலைவில், ஆற்றங்கரையை ஒட்டி அமைந்த பசுமை வயல்களுக்கும் கிராமங்களுக்கும் குறுக்காக, மலைகளின் மங்கலான உருவத்தை அவரால் பார்க்க முடிந்தது. பாலவனம் அமைந்திருந்த மேற்கில் ஒரு புழுதிப் புயல் உருவாகிக் கொண்டிருந்தது. அந்த முதியவரின் நெற்றியில் தோன்றிய ஆழமான கவலை ரேகைகளை விதுரன் கரிசனத்துடன் பார்த்தான். இந்தப் பேரரசை ஆட்சி செய்வது அவர்கள் இருவருக்குமே மிகவும் சோர்வூட்டுவதாக ஆகிக் கொண்டிருந்தது. அற்பச் சச்சரவுகளும் உட்பூசல்களும், சிறு சிறு காரணங்களுக்காகத் தங்கள் குடும்பத்தாருக்கிடையே அடிக்கடி ஏற்பட்ட வாய்ச்சண்டைகளும் அவர்கள் இருவரையுமே வருத்தமுறச் செய்தன. நாடு உள்ளுக்குள்ளிருந்து நொறுங்கிக் கொண்டிருந்தது.

பீஷ்மர் தன் பிரதம மந்திரியிடம் திரும்பி, ஒருவிதமான நகைச்சுவையுணர்வு தொனிக்க, "மகனே விதுரா, நீ ஏன் இப்படிக் கவலையோடு இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா, சகுனி நம் குழந்தைகளைக் கெடுத்துக் கொண்டிருக்கிறான். அவனை நாம் காந்தாரத்திற்குத் திருப்பி அனுப்பாவிட்டால், அவன் நிச்சயமாக நம் நாட்டைச் சீரழித்துவிடுவான்."

"நீ அவனுக்கு அளவுக்கதிகமாக மதிப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறாய். மலைகளில் அமைந்துள்ள அவனுடைய சின்னஞ்சிறிய ராஜ்யத்தால் இந்த மாபெரும் பேரரசை என்ன செய்துவிட முடியும்? நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற உள்ளார்ந்த ஆபத்துக்களைப் பற்றித்தான் நான் அதிகமாகக் கவலைப்படுகிறேன். நாம் மாபெரும் விலையைக் கொடுத்துப் பரசுராமனிடமிருந்து அமைதியை வாங்கினோம். ஆனால் அது குறித்து நான் இப்போது வருந்திக் கொண்டிருக்கிறேன். அப்போது நமக்கு வேறு வழி இருக்கவில்லை, சரிதானே? நான் அதைத் தேர்ந்தெடுத்திருக்காவிட்டால், நான் என் பிரம்மச்சரிய உறுதிமொழியை மீறி, காசி அரசனின் மூத்த மகளைத் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும் . . . அவள் பெயர் என்ன?" பீஷ்மரின் பார்வை, சன்னலுக்கு வெளியே இருந்த உலகத்திற்கு மீண்டும் திரும்பியது.

இப்போது மௌனம் காப்பது புத்திசாலித்தனமான செயல்

என்பதை விதுரன் அறிந்திருந்தான். பெரும்பாலான நாட்கள், பீஷ்மரின் உரையாடல், தன் வாழ்வின் அந்தச் சூறாவளி நாட்களைத் தொட்டுச் சென்றது. பீஷ்மர் பண்டைய காசிப் பேரரசை வெற்றி கொண்டு, அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூன்று அழகிய இளவரசிகளையும், தன் மாற்றாந்தாயின் மகனான விசித்திரவீரனுக்கு மணமுடிப்பதற்காக அஸ்தினாபுரத்திற்குக் கொண்டு சென்றார். ஆனால் அம்பை ஏற்கனவே சால்வ இளவரசன்மீது காதல் வயப்பட்டிருந்தாள். பீஷ்மர் இதைக் கேள்விப்பட்டபோது, அவனிடம் திரும்பிச் செல்வதற்கு அவளை அனுமதித்தார். ஆனால் அம்பையை பீஷ்மர் கவர்ந்து செல்வதைத் தடுத்து, அவளை அவரிடமிருந்து காப்பாற்றுவதற்காக வேறு வழியின்றி அவருடன் சண்டையிட்டு மிக மோசமாகத் தோற்றுப் போனபோது, சால்வ இளவரசனின் பெருமை காயப்பட்டிருந்தது. பீஷ்மரின் அனுமதியுடன் அம்பை அவனிடம் வந்தபோது, அவன் அவளை அலட்சியப்படுத்தி அனுப்பினான். எனவே அவள் அஸ்தினாபுரத்திற்குத் திரும்பி வந்து, தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு பீஷ்மரிடம் மன்றாடினாள். காலம் சென்ற தன் தந்தைக்குத் தான் கொடுத்திருந்த பிரம்மச்சரிய உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டிருந்த பீஷ்மர், காசி இளவரசியைத் திருமணம் செய்து கொள்ள மறுத்தார்.

இந்தக் கதையை பீஷ்மரும் மற்றவர்களும் பல முறை கூறியிருந்தனர். தான் பிறப்பதற்கு முன்பு நிகழ்ந்த இந்த நிகழ்வுகளைத் தான் உண்மையிலேயே நேரில் கண்டது போன்ற உணர்வு விதுரனுக்கு அடிக்கடி ஏற்பட்டது. தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு பிடிவாதக்கார பீஷ்மரிடம் கெஞ்சிய காசி இளவரசியின் வருத்தம் தோய்ந்த, ஆவேசமான முகத்தை விதுரனால் தன் மனத்தில் காட்சிப்படுத்திப் பார்க்க முடிந்தது. தன்னுடைய சாபங்களோ அல்லது இதயப்பூர்வமான கெஞ்சல்களோ குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளர்மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாததைக் கண்ட அவள், தன் தந்தையின் அரண்மனைக்குச் சென்றாள். அங்கும் அவள் மறுக்கப்பட்டாள். அப்போதுதான் பரசுராமனின் ஒற்றர்கள் அவளைக் கண்டுபிடித்தனர். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மாபெரும் மத்தியச் சமவெளி நாடுகளின்மீது படையெடுக்கும் திட்டத்தைத் தயாரித்தனர்.

“சமரச உடன்பாட்டிற்கு நான் ஒத்துக் கொண்டிருக்கக்கூடாது.” பீஷ்மர் இவ்வாறு புலம்பியதை விதுரன் எண்ணற்ற முறை கேட்டிருந்தான். “சாதி தன் கொடிய கரங்களை இந்தப் புனித பூமியின்மீது பரப்பிக் கொண்டிருக்கிறது. பரசுராமனுடன் கடைசிவரை

நான் போரிட்டிருக்கவில்லை என்பதை நினைத்து நான் வெட்கப்படுகிறேன். அவனும், பாழாய்ப் போன அவனுடைய வீரர்களும் நம் நாட்டைச் சின்னாபின்னமாக ஆக்கியுள்ளனர். முன்பொரு காலத்தில் மிகவும் கர்வத்தோடு இருந்த அசுரர்கள் எவ்வாறு அவனைப் பொறுத்துக் கொள்கின்றனர்? அந்தப் பண்டையப் பேரரசுகள் எப்படி பிராமணர்களின் பிடிக்குள் சிக்கின? ஒரு சமயத்தில் மகாபலியின் ஆட்சியின்கீழ் அனைத்து மக்களும் சமம் என்று முழங்கி, பெருமையும் புத்திசாலித்தனமும் கொண்ட ராவணனை வளர்த்தெடுத்த அதே அசுரர்கள்தானே இவர்கள்? தோல்வியானது மக்களிடத்தில் என்னவெல்லாம் செய்துவிடுகிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, அது எனக்கு வியப்பூட்ட ஒருபோதும் தவறுவதில்லை. வரலாறு ஒரு கசப்பான ஆசான். ராவணனின் ஆட்சியின்கீழ் இருந்த கடைசி அசுரப் பேரரசைத் தான் தோற்கடித்தபோது, தென்னகத்தைச் சேர்ந்த ஏழை மக்களுக்குத் தான் இழைத்துக் கொண்டிருந்த துயரத்தை ராமனால்கூடக் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது. தென்பகுதியை விபீஷணனுக்கும் பரசுராம குலத்திற்கும் கொடுத்ததன் மூலம் ராமன் நம் அனைவருக்கும் மிகப் பெரிய தீங்கு இழைத்துவிட்டான். ராமன் நேரடியாக ஆட்சி செய்திருந்தாலாவது, தீமையை அவன் களைந்திருக்கக்கூடும். பல நூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்தது இப்போது அம்மக்களுக்கு எதைக் கொண்டு வந்திருக்கிறது என்று பார்.”

விதுரன் அவருடைய கண்களைத் தவிர்த்தான். அஸ்தினாபுரமும் அப்படித்தான் இருந்தது என்று அவன் கருத்துக் கூற விரும்பினான். தேரோட்டியான அதிரதனின் மகனைத் தான் பரிந்துரைத்தபோது, துரோணர் தன்னை இழிவுபடுத்தியது இன்னும் விதுரனுக்கு வேதனையளித்துக் கொண்டிருந்தது.

பீஷ்மர் தன் பிரதம மந்திரியின் கண்களுக்குள் உற்றுப் பார்த்துப் புன்னகைத்தார். “நீ என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். அஸ்தினாபுரத்திலும் மக்களின் நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது என்று நீ நினைக்கிறாய். நான் என் கருத்தை வலியுறுத்துவதற்காக இதைச் சொல்ல வேண்டியிருப்பதற்கு என்னை மன்னித்துவிடு. நீ என் சகோதரனின் மகன். ஆனாலும் உன் தாய் ஒரு வீட்டு வேலைக்காரி என்பதால் நீ ஒரு சூத்திரனாக இருக்கிறாய். உனக்கு அறிவும் திறமைகளும் இருந்தும்கூட, உன் சாதியின் காரணமாக இங்கு நீ இகழப்படுகிறாய். குந்தியும் அவளுடைய பிராமண ஆலோசனையாளர்களும் உன்னை வெறுக்கின்றனர். எனவே வாழ்க்கை உனக்குக் கடினமாக இருப்பதாக நீ கருதுகிறாய்.

பரசுராமனின் சட்டங்கள் ஆட்சி செலுத்துகின்ற பேரரசுகளில் ஏதேனும் ஒன்றில் நீ இருந்திருந்தால், தலைநகரத்திலிருந்து வெகு தொலைவில் நீ வாழ்ந்து கொண்டிருப்பாய். தீண்டத்தகாத ஒருவனாக, அணுகப்பட முடியாத ஒருவனாக, படிப்பறிவற்ற, அறியாமைமிக்க ஒருவனாக நீ இருந்திருப்பாய். ஒரு பன்றியைவிடக் கீழான வாழ்க்கைதான் உனக்குக் கிடைக்கும். அதுதான் சாதிக் கொடுமை. இங்கு இருக்கும் பொறாமைக்கார மக்களிடமிருந்து உன்னை நோக்கி வரும் சிறு சிறு ஏளனப் பேச்சுக்களுக்குப் பெயர் சாதிக் கொடுமை இல்லை. என் தலைநகரம் அஸ்தினாபுரத்திற்குப் பதிலாக முசிறியாகவோ அல்லது மதுரையாகவோ இருந்திருந்தால், உன்னுடைய பாதங்களால் அசுத்தமாகியுள்ள என் அரண்மனையை இந்நேரம் நான் பசுவின் சாணத்தாலும் சிறுநீராலும் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருப்பேன். தங்கள் வரையறைப்படியான வேதங்களை நாம் பின்பற்றுவதில்லை என்றும், இப்படிப்பட்ட விதிமுறைகளை நம் மக்கள்மீது நாம் வலுக்கட்டாயமாகத் திணிப்பதில்லை என்றும்தான் பரசுராமனும் அவனைப் பின்பற்றுபவர்களும் நம்மீது கோபமாக இருக்கின்றனர்.”

அரசாட்சிப் பொறுப்பாளரின் வார்த்தைகளைக் கேட்டு விதுரன் முகம் சிவந்தான். தன்னுடைய பிறப்பைப் பற்றி நினைவுபடுத்தப்பட்டது அவனுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. வேதங்கள், புனித நூல்கள், கணிதம், வானவியல், சோதிடம், இசை ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதற்குத் தான் கடினமாக உழைத்திருக்கவில்லையா என்றும், அர்ப்பணிப்போடும் பக்தியோடும் தன் தாய்நாட்டிற்குத் தான் சேவை செய்திருக்கவில்லையா என்றும், தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த பெருமைமிக்க மனிதருக்குத் தான் விசுவாசமாக இருக்கவில்லையா என்றும் அவன் வியந்தான். குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளர்கூடத் தன் அன்பை ஓர் ஏழைச் சூத்திரச் சிறுவனுக்கு ஓர் உபகாரமாகத்தான் அளித்தார் என்றும், தன்னுடைய திறமையும் அறிவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் நினைத்த விதுரன், ஒருவேளை தான் இங்கு இருந்ததுகூட, தான் பரந்த மனம் கொண்டவர் என்று உணர்வதற்கு பீஷ்மருக்கு உதவியது போலும் என்று நினைத்தான். அறிவும் வசீகரமும் கொண்ட ஒரு பரிசு நாயைப் போன்றவன்தான் தான் என்று விதுரன் நினைத்தான். அறிவோ அல்லது வசீகரமோ, எப்படியிருந்தாலும் தான் ஒரு நாய்தான் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டபோதெல்லாம், விதுரன் தன் வேலையையும் தன் எஜமானையும் சமமாக வெறுத்தான்.

“பரசுராமனின்கீழ் இருந்த தென்னகக் குழுவினருடன் நாம் மேற்கொண்ட போர், காசி இளவரசியை நான் நிராகரித்ததைப்

பற்றியது அல்ல. ஆனால் அந்தக் கயவன் பரசுராமன் இந்த விவகாரத்தை ஒரு பிரச்சாரமாகப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டான். இந்த விவகாரத்தைக் கொண்டு அவன் நம் எதிர்களை நடுநிலையாக்கினான். விந்திய மலையின் கொடூரமான காடுகளில் நாங்கள் சண்டையிட வேண்டியிருந்தது. மனித உயிர் அங்கு எவ்வளவு மலிவாகக் காவு கொடுக்கப்பட்டது என்பதை நினைத்தால் என் உடல் நடுங்குகிறது. பரசுராமன் கட்டவிழ்த்துவிட்டக் காட்டுமிராண்டித்தனமான, திட்டமிடப்பட்டப் படுகொலைகள், அந்தக் காடுகளில் காலங்காலமாக அமைதியாக வாழ்ந்து வந்த எண்ணற்ற நாகர்கள், வேடுவர்கள், கிராதர்கள், வானரர்கள் ஆகியோரின் உயிர்களைப் பலி வாங்கியது. அவர்கள் தீண்டத்தகாத, அழுக்கான, அசுத்தமான சாதிகளில் பிறந்திருந்ததால், அவர்களுடைய உயிர்களுக்கு எந்த மதிப்பும் இருக்கவில்லை. எனக்கு வேறு என்ன வழி இருந்தது? அவன் அவர்கள் அனைவரையும் தீர்த்துக் கட்டியிருப்பான். அவனுடைய நிபந்தனைகளுக்கு உடன்படுவதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை. எனக்கென்று எந்த விருப்பத்தேர்வும் அங்கு இருக்கவில்லை . . .”

தொலைவிலிருந்த தொடுவானத்தில் ஒரு மணற்புயல் உருவாகிக் கொண்டிருந்தது. விதுரனால் அதைக் காற்றில் உணர முடிந்தது. ‘நீங்கள் அம்பையைத் திருமணம் செய்து கொண்டு, பரசுராமனின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கலாம்,’ என்று விதுரன் நினைத்தான். ஆனால் அதைக் கூறுவதற்கான துணிச்சல் அவனுக்கு இருக்கவில்லை.

“என்னால் அந்தப் பெண்ணை ஒருபோதும் மணமுடித்திருக்க முடியாது. நான் பிரம்மச்சரிய உறுதிமொழியை மேற்கொண்ட பிறகுதான் பீஷ்மர் என்ற பெயரை நான் பெற்றேன். இல்லையென்றால், நான் வெறும் கங்காதத்தனாக இருந்திருப்பேன். எல்லாப் பெருமையும் என் பிரம்மச்சரியத்தைத்தான் சேரும். இல்லை, எனக்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை. சமரச உடன்படிக்கை எட்டப்பட்டிருந்தது. பரசுராமனின் கல்வி நிலையங்களும் அவனுடைய பிராமணக் கழகங்களும் நம் ராஜாங்கத்திற்குள் நுழைவதற்கு நான் அனுமதித்தேன். இப்போது நாம் எங்கு இருக்கிறோம் என்று பார். மறைந்து கொண்டிருந்த சாதிப் பழக்கங்கள் வலிமையோடு திரும்பி வந்தன. என் தந்தை ஒரு மீனவப் பெண்ணை மணமுடித்தபோது முணுமுணுப்புகள் எழுந்தன. ஆனால் யாரும் அவளைக் கேலி செய்யத் துணியவில்லை. அவளும் அப்படிப்பட்ட அபத்தங்களைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டாள். என் சிற்றன்னையான சத்தியவதியைப்போல மன உறுதி

படைத்த வேறு எந்தவொரு பெண்ணையும் நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவள் ஒரு மாபெரும் பெண்மணி. ஒட்டுமொத்தக் குரு வம்சமும் ஒரு மீனவப் பெண்ணின் கருவறையிலிருந்து முளைத்தெழுந்தது என்ற உண்மை பரசுராமனுக்கு அதிர்ச்சி அளிக்கக்கூடும். ஓர் அரசர் ஓர் எளிய மீனவனின் மகளைத் திருமணம் செய்து கொள்வதா? அதை இப்போது நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? காலங்கள் மாறியுள்ளன, ஆனால் மோசமாக மாறியுள்ளன. அதில் எனக்கும் ஒரு பங்கு இருக்கிறது. அதுதான் ஒவ்வொரு நாளும் என் இதயத்தைக் கசக்கிப் பிழிகிறது."

ஒரு வறண்ட காற்று அங்கு தொங்கிக் கொண்டிருந்த பட்டுத் திரைச்சீலைகளைக் கலைத்துவிட்டுச் சென்றது. கூடவே, சிறிதளவு பாலைவனப் புழுதியையும் அந்த அறைக்குள் தூவிச் சென்றது. சிறுவர்கள் விளையாடும் சத்தம் கீழே இருந்த தோட்டங்களிலிருந்து அந்த அறைக்குள் நுழைந்தது.

"நான் இன்னும் ஒருசில வேடுவர்கள் மற்றும் நாகர்களின் உயிர்களைப் பலி கொடுத்துப் போரைத் தொடர்ந்திருக்க வேண்டும். ஆனால் நான் சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டதன் மூலம் ஏழைகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டிருந்தேன் என்றும், அந்த உடன்படிக்கை நம் பேரரசின் எல்லைகளில் வாழ்ந்த பழங்குடி இன மக்களின் துயரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என்றும் நான் நினைத்தேன். பரசுராமன் தன்னுடைய படையினரைக் கூட்டிக் கொண்டு திரும்பிச் சென்று, நம்மை நிம்மதியாக வாழ விட வேண்டும் என்று நான் விரும்பினேன். பரசுராமனின் படையினரால் முற்றிலுமாக அழிக்கப்படுவதிலிருந்து பழங்குடியினரை நான் பாதுகாத்துக் கொண்டிருந்ததாக நான் நினைத்தேன். சமரசத்திற்குப் பிறகு, பரசுராமன் தான் கொடுத்த வாக்கின்படி, தென்மேற்குக் கடற்கரையில் அமைந்த தன்னுடைய சாம்ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்றான். ஆனால் தன் பெயர் சொல்லும்படி அவன் விட்டுச் சென்ற கடுமை இன்றும் விடாப்பிடியாக நம்மைத் துரத்திக் கொண்டிருக்கிறது. தட்சகன் எனும் தீமையின் பிறப்பிற்கு அவன்தான் காரணம்."

தட்சகனின் பெயர் விதுரனைத் தன் சொந்தச் சிந்தனையிலிருந்து மீட்டுக் கொண்டு வந்தது. "தட்சகன் மேற்கொண்ட தாக்குதல் . . . எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. ஐயா, அன்றிரவு அவன் நம் கோட்டைக்குள் நுழைவதற்கு அவனுக்கு உதவியது யார் என்று எனக்குத் தெரியும்."

ஆனால் பீஷ்மர் தொடர்ந்து சன்னலுருகே நின்று கொண்டு, தொலைவில் இருந்த மலைகளையும் கோதுமை வயல்களின் ஊடாகப்

பாம்புபோல வளைந்து நெளிந்து சென்ற ஆற்றையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். கதிரவன் மேற்குத் தொடுவானத்திற்குள் தரையிறங்கிக் கொண்டிருந்தான். வழக்கம்போல, விதுரன் தன் மதிய உணவைத் தவறவிட்டிருந்தான். வேலை அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. பீஷ்மர் விதுரன்மீது சுமத்திய பொறுப்புகளிலிருந்து அவனுக்கு எள்ளளவும் ஓய்வு கிடைக்கவில்லை. "தட்சகனின் அந்தத் துணிகரத் தாக்குதலுக்கு இளவரசன் சகுனி உதவியதாக நான் நினைக்கிறேன்," என்று அவன் கூறினான்.

பீஷ்மர் விதுரனிடம் திரும்பி, "சகுனியா? அந்த உருப்படாதவனா? நீ அப்படி நினைப்பதற்கு என்ன காரணம்? அதை என்னால் நம்ப முடியவில்லை," என்று கூறினார்.

விதுரனிடம் அப்போதைக்கு எந்த ஆதாரமும் இருக்கவில்லை. பீஷ்மர் தன்னை வார்த்தைகளால் வறுத்தெடுத்துவிடுவார் என்று தெரிந்தும்கூட, தான் சந்தேகித்தவனின் பெயரை முன்பின் யோசிக்காமல் பட்டென்று கூறிவிட்டதற்காக விதுரன் தன்னைத் தானே சபித்துக் கொண்டான். "அவன் மேற்குத் திசையை நோக்கிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததை நான் பார்த்தேன்," என்று கூறிய விதுரன், பீஷ்மரின் முகத்தில் தோன்றிய வியப்பைக் கண்டவுடன் தன் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினான்.

"சகுனி மேற்குத் திசையைப் பார்த்துப் பிரார்த்தனை செய்ததால், அவன் ஒரு நம்பிக்கைத் துரோகி என்று நீ முடிவு கட்டிவிட்டாயா? அப்படியென்றால், கிழக்கு நோக்கி வழிபடுவதுதான் நாட்டுப்பற்றின் அடையாளச் சின்னமா? இதுதான் உன் கோட்பாடா? இது ஒரு சுதந்திர நாடு. மக்கள் எந்தத் திசையில் வேண்டுமானாலும் வழிபடலாம். சிலர், நிர்வாணச் சாமியார்கள் அல்லது அகோரிச் சாமியார்களைப்போலத் தலைகீழாக நின்றும் வழிபடுகின்றனர். சார்வகனைப் போன்றவர்கள் பிரார்த்தனை செய்வதே இல்லை. இவர்கள் எல்லோரும் நம்பிக்கைத் துரோகிகள் என்று நீ கூறுகிறாயா? விதுரா, உன்னிடமிருந்து சிறிது அறிவார்ந்த விளக்கத்தை நான் எதிர்பார்த்தேன்."

"என் சந்தேகத்திற்கு அது மட்டும் காரணமல்ல. அன்றிரவு, கீழே விழுந்து கிடந்த நாகர் இன வீரன் ஒருவனுக்கு அவன் உதவியதையும் நான் பார்த்தேன். அப்போது சகுனியின் முகத்தில் வெளிப்பட்டத் தோற்றம் எனக்கு அறவே பிடிக்கவில்லை." இதைக் கேட்ட பீஷ்மரின் முகத்தில் வியப்புப் பிரதிபலித்ததை விதுரன் கண்டான். அவனுடைய பாதுகாப்பின்மை உணர்வுகள் அனைத்தும் பல தலைகளைக் கொண்ட ஒரு நாகத்தைப்போலத் தம் தலைகளை உயர்த்தின. தன்னைத் தானே முட்டாளாக்கிக் கொண்டிருந்தது குறித்து விதுரன் தன்னை நொந்து

கொண்டான். “தட்சகன் நடத்திய தாக்குதலுக்குப் பின்னால் சகுனியின் கைவண்ணமும் இருந்தது என்று என் உள்ளுணர்வு கூறுகிறது.”

பீஷ்மர் தன்னுடைய விசுவாசமான பிரதம மந்திரியின் அருகே சென்று, அவனுடைய தோள்களைச் சுற்றித் தன் கையைப் போட்டுக் கொண்டு, “மகனே விதுரா, உனக்குச் சிறிது ஓய்வு தேவை என்று நான் நினைக்கிறேன். உனக்கு பிரமை ஏற்படத் துவங்கியுள்ளது. தட்சகன் யார் என்பதையும், அவனுடைய நோக்கம் என்ன என்பதையும் புரிந்து கொள்வதற்கு நீ எப்போதேனும் முயற்சித்திருக்கிறாயா?” என்று கேட்டார்.

“அவன் ஒரு தீவிரவாதி.”

“அவர்கள் தீவிரவாதத்தைப் பயன்படுத்துகின்றனர், ஆனால் அவர்கள் தீவிரவாதிகள் அல்ல. நாகர்கள் காட்டிய எதிர்ப்பு, பலவீனமானவர்களையும் கீழ்நிலையில் உள்ள மக்களையும் நாம் பாதுகாக்கத் தவறியதற்கு அவர்கள் ஆற்றிய எதிர்வினைதான். தட்சகன் அந்தத் தோல்வியின் ஒரு உருவாக்கம். வலிமையானவர்களால் அடக்கி ஒடுக்கப்படுவதிலிருந்து பலவீனமானவர்களைக் காப்பதுதான் நாட்டின் கடமை. ஒரு விதத்தில் பார்த்தால், பரசுராமனுடன் நான் செய்து கொண்ட சமரசம்தான் தட்சகனின் எழுச்சிக்கு வழிவகுத்தது என்று கூற வேண்டும். அவன் அப்படியே பரசுராமனின் துல்லியமான பிரதிபலிப்பாக இருக்கிறான்.”

“ஐயா . . . ஆனால் அது . . .”

“அது சரியானதாகப் படவில்லை, அப்படித்தானே? விதுரா, நன்றாகச் சிந்தித்துப் பார். பரசுராமனின் விருப்பம் என்ன? முழுமையான பிராமண மேலாதிக்கமும், நம்முடைய வேதங்கள் குறித்து அவன் வகுத்துள்ள வரையறைகளும் ஆண்டாண்டு காலமாக நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய விருப்பம். முழுமையான அதிகாரம் தன்னிடம் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். பரசுராமனின் குலம் மற்றச் சாதியினருக்கு எதிராக எப்போதுமே போர் தொடுத்து வந்துள்ளது. குறிப்பாக, பிராமணர்களுக்கென்று ஒரு கச்சிதமான சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்காக, சத்திரியர்களுக்கு எதிராக ஆயிரம் ஆண்டுகளாக அவர்கள் சண்டையிட்டு வந்துள்ளனர். ஒட்டுமொத்தத் தென்னகமும் இந்த சாதித் தீவினையை வெறுத்தது. ஆனால், வடநாட்டின் மாபெரும் சமவெளிகளில் தோன்றிய சாதிக் கொடுமை, இப்போது தென்னகத்தில்தான் அதிகமாகப் பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. என் தந்தை சாந்தனு மற்றும் என் சிற்றன்னை சத்தியவதி ஆகியோரின் அறிவார்ந்த ஆட்சியாலும், வியாசரைப் போன்ற முனிவர்களின் முயற்சிகளாலும், நம்முடைய

பேரரசு மெல்ல மெல்லத் தன் மனித முகத்தைத் திரும்பப் பெற்று வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தட்சிணஜனபாதத்தில் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து கொண்டிருக்கிறது. கலாச்சாரம், ஞானத் தெளிவு, சிந்தனை, செழிப்பு ஆகியவற்றில் நாடுகள் தேய்வதும் வளர்வதுமாக உள்ளன. தென்னகத்தின் மாபெரும் பேரரசுகளைப் பரசுராமன் சீரழித்துள்ளான். அவற்றை நம்முடைய பேரரசுடன் ஒப்பிடுகையில், இப்போது அவை வெறும் குட்டைகளாக மட்டுமே உள்ளன."

"ஆனால் தட்சகன் மற்றும் அவனுடைய வீரர்களின் எழுச்சிக்கும் இதற்கும் என்ன தொடர்பு?"

"நாகர் இனத்தின் பரசுராமன்தான் தட்சகன். ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்குபவர்களாக ஆகின்ற ஒரு கச்சிதமான உலகத்தைத்தான் அவனும் விரும்புகிறான். சமத்துவத்தைப் பற்றி அவன் பேசுவது எல்லாம் வெறும் கண்துடைப்பு மட்டுமே. அவன் வெற்றி பெற்றுவிட்டால், பரசுராமனைப்போல அவனும் ஒரு கொடுங்கோலனாகத்தான் இருப்பான். பிறகு, பிராமணர்களையும் சத்திரியர்களையும் வைசியர்களையும் அவன் வேட்டையாடுவான். பிற சூத்திரர்களைக்கூட அவன் விட்டுவைக்க மாட்டான். ஏனெனில், அவர்கள் போதுமான அளவுக்குக் கீழ்நிலையில் இல்லை என்று நாகர்கள் கருதுகின்றனர். இது பரசுராமனின் ஆட்சியைவிட மிக மோசமாக இருக்கும். ஏனெனில், பரசுராமனின் குறுகிய கொள்கைகளை எல்லா பிராமணர்களும் ஏற்றுக் கொள்வதில்லை. பரசுராமன் வெற்றி பெற்றுவிட்டால், கிருபர், சார்வகன் போன்ற பிராமணர்கள் அவனுடைய கொள்கைகளை எதிர்த்து, தியாகிகளாக மடியக்கூடும். தட்சகனின் விஷயத்தில், பேராற்றல் வாய்ந்த அஸ்தினாபுரத்தைத் தவிர, அவனுக்கு வேறு எந்த எதிர்ப்பும் இல்லை. சாப்பிடுவதற்கு எதுவுமே இல்லாத, இழப்பதற்கும் எதுவும் இல்லாத ஏழை வேடுவர்களையும் நாகர்களையும், ஒரு துணிச்சலான புதிய உலகத்தை வழங்கப் போவதாக ஆசை காட்டுவதன் மூலம் மூளைச் சலவை செய்து அவர்களை முட்டாளாக்குவது அவனுக்கு மிகவும் சுலபம். தன்னுடைய நோக்கத்திற்காக இப்படிப்பட்ட மக்களை மடியச் செய்வது அவனுக்கு மிகமிக சுலபம். ஏனெனில், தட்சகன் யாரையெல்லாம் தன் கருவிகளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறானோ, அவர்கள் அனைவரும் நெடுங்காலத்திற்கு முன்பு நாம் கைவிட்டவர்களே. அவர்களுடைய பசியை நாம் கண்டுகொள்ளவில்லை. நாம் அவர்களுடைய விளைநிலங்களை அபகரித்துக் கொண்டு, அவர்களைத் தங்கள் காடுகளிலிருந்து துரத்திவிட்டோம். நம்முடைய ராஜ வீதிகளிலிருந்தும் நாம் அவர்களைத்

துரத்திவிட்டோம். எனவே, நாகர்களின் தலைவனை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு எந்தப் புகலிடமும் இல்லை. நம்முடைய பிராமண ஆசிரியர்கள், பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் தவிர வேறு யாருக்கும் கற்றுக் கொடுக்கத் தயாராக இல்லாததால், தட்சகனின் லட்சியத்திற்காகச் சண்டையிட்டு மடியத் தயாராக இருக்கக்கூடிய படிப்பறிவற்றவர்களையும் அறியாமை மிக்கவர்களையும் பெரும் எண்ணிக்கையில் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நம் குழந்தைகள் எவற்றையெல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டுமோ, அவற்றை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு நம் பள்ளிகள் தவறிவிடும்போது, மற்றப் பள்ளிகள் அவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டு, நமக்கு விருப்பமில்லாத பல்வேறு பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. நாம் நம்முடைய சொந்தச் சிதையைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்."

தனக்குக் கிடைத்திருந்த கல்வி இப்போது எந்தவொரு சூத்திரச் சிறுவனுக்கும் கிடைப்பது சாத்தியமில்லை என்று சிந்தித்தவாறே விதுரன் அமைதியாக நின்றான். இந்நாட்டில் விஷயங்கள் மிக மோசமாக மாறியிருந்தன. தன்னைப்போல, தாழ்ந்த சாதி எனும் சுமையைச் சுமந்து கொண்டிருந்த எவரொருவராலும் அரசாங்கத்தில் ஓர் எழுத்தராகச் சேர்வதற்குக்கூட ஆசைப்பட முடியாது என்று அவன் நினைத்தான். தகுதியை யாரும் இப்போது கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு பதவியும் சாதியின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

"விதுரா, அந்தத் துணிச்சல்காரச் சிறுவனுக்கு என்ன நிகழ்ந்தது?"

கர்ணனைப் பற்றி பீஷ்மர் நினைவுபடுத்தியதும், விதுரனின் கோபமும் வெறுப்பும் மீண்டும் அவனிடம் திரும்பி வந்தன. துரோணரின் இகழ்ச்சி அவனுக்கு இன்னும் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தது. "அவன் ஒரு பிராமணனோ அல்லது சத்திரியனோ அல்ல, மாறாக, அவன் ஒரு சூத்திரன் என்று கூறி, துரோணர் அவனுக்குக் கற்றுக் கொடுக்க மறுத்துவிட்டார்."

"அதை நான் அறிவேன். ஆனால் அவன் இப்போது கிருபனிடம் கற்றுக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன்."

"ஆமாம், ஆனால் அவர் அவனுக்கு ஆயுதங்களைப் பற்றிக் கற்றுக் கொடுக்கவில்லை என்று நான் நினைக்கிறேன்."

"ஆமாம், அதுதான் எனக்குச் சற்று வினோதமாகத் தோன்றுகிறது. அந்த பிராமணனை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு பிராமணன் மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய சடங்குகளை அவன் ஏன் கர்ணனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறான்? கர்ணன் ஒரு

புரோகிதனாக ஆனால், இந்நாடு ஒரு மாபெரும் வீரனை இழந்துவிடும். அவனுடைய பிறப்பைக் கருத்தில் கொள்ளும்போது, எந்தவொரு கோவிலும் அவனுக்கு ஒரு வேலையைக் கொடுக்காது என்று நான் நினைக்கிறேன். கோவிலுக்கு அருகே வரக்கூட அவர்கள் அவனை அனுமதிக்க மாட்டார்கள். ஆக, கிருபன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"ஐயா, நீங்கள் துரோணரிடம் பேசி . . ."

"விதுரா, அவர் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார். அவர் என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போகின்ற ஒரு சூழ்நிலையை நான் உருவாக்க விரும்பவில்லை. அவர் ஒரு மாபெரும் ஆசான், ஒரு தலைசிறந்த வீரர். அவர் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டால், நான் அவரை வேலையிலிருந்து துரத்த வேண்டியிருக்கும். பிறகு அவர் நம்முடைய எதிரிப் பேரரசுகளில் ஏதேனும் ஒன்றுடன் போய்ச் சேர்ந்து கொள்ளக்கூடும். அவர் பரசுராமனின் சீடர். அவர் மீண்டும் அவனிடம் போய்விட்டால், அது நமக்குப் பெரும் சீரழிவாக ஆகிவிடும். பயிற்சி பெற்றிராத சிறுவனான கர்ணனைவிட, ஒரு கைதேர்ந்த வீரரான துரோணர்மீது பந்தயம் கட்ட நான் தயாராக இருக்கிறேன். துவக்கத்தில் பெரும் திறமைகளை வெளிப்படுத்திவிட்டு, பிற்காலத்தில் வெற்றுவேட்டுக்களாக ஆன எத்தனைச் சிறுவர்களை நாம் பார்த்திருக்கிறோம். துரோணரை இழப்பதன் மூலம் நமக்கு நாமே ஏன் ஒரு சவாலான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்? கர்ணனைப் போன்றவர்களுக்கு நம் அமைப்புமுறையில் இடமில்லாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதுதான். ஆனால் வாழ்க்கை எப்போதுதான் நியாயமாக இருந்திருக்கிறது?"

'இந்த உரையாடல் உருப்படியாக எதையும் சாதிக்கப் போவதில்லை,' என்று விதுரன் நினைத்தான். தான் பெரிதும் மதித்த பீஷ்மர்கூட உள்ளூரப் பழமைவாதியாகவே இருந்தார் என்று விதுரன் நொந்து கொண்டான். அவர் அந்த பிராமண குருவுக்கு வெளிப்படையாகச் சவால்விட்டு, ஒரு கலகத்தை உருவாக்கத் துணியவில்லை. வெளிப்படையான எதிர்ப்பைத் தவிர்ப்பது யதார்த்தமான அறிவாகப் பட்டாலும்கூட, அது இன்னும் காயப்படுத்தியது.

"சகுனியை என்ன செய்வது?" என்று விதுரன் கேட்டான்.

"அவனைக் கண்காணி. நீயும் நானும் உட்பட, யாருமே சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. மனம் ஆபத்தான ஒன்று. அது எந்த நேரத்திலும் மாறக்கூடும். சகுனியின்மீதும், கிருபன் மற்றும் கர்ணனின்மீதும் எப்போதும் ஒரு கண் வைத்திரு. அந்த ஆணவக்கார

பிராமணன் என்ன விஷமத்திற்கு அடி போடுகிறான் என்று தெரிந்து கொள். என்றேனும் ஒருநாள், நான் அவனையும் அவனுடைய நண்பனான சார்வகனையும் பைத்தியக்காரர்கள் என்று கூறி சிறையில் அடைக்கப் போகிறேன். சூத்திர இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு காயத்திரி மந்திரத்தைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் புரோகிதர்களை அவன் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவன் அச்சிறுவனுக்கு அதைக் கற்றுக் கொடுக்க விரும்பினால், அதை எல்லாப் புரோகிதர்களுக்கும் தெரியும் விதத்தில் இப்படி வெளிப்படையாகச் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன? கிருபனைப் பற்றிக் குறைகூறுவதற்கு ஒவ்வொரு நாளும் தன் புரோகிதப் படையினருடன் என் முன்னால் தோன்றும் குந்தியிடம் பேசுவதற்கு இனி நான் அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும்."

விதுரன் பீஷ்மர் முன்னால் குனிந்து பணிந்துவிட்டு அங்கிருந்து விடைபெறுவதற்காகத் திரும்பியபோது, அவருடைய குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது. "அம்பை . . . ஆம், அவளுடைய பெயர் இப்போது என் நினைவிற்கு வருகிறது . . . அம்பை . . . பரசுராமனின் நம்பிக்கைகளுக்காகவும் என்னுடைய உறுதிமொழிக்காகவும் அவள் பலி கொடுக்கப்பட்டுவிட்டாள்! அவள் பாஞ்சாலத்தில் தஞ்சம் புகுந்து, அங்கு துயரத்தில் மடிந்துவிட்டாள். அது மிகவும் வருத்தமான செய்தி. அவளுடைய மகன் எப்படி இருக்கிறான் என்று நான் வியந்து கொண்டிருக்கிறேன்."

விதுரன் அமைதியாக இருந்தான். பீஷ்மர் இறுதியில் காசி இளவரசியின் பெயரை நினைவுகூர்ந்ததைக் கண்டு தன் முகத்தில் தோன்றிய ஒரு வேடிக்கையான புன்னகையை மறைக்க அவன் மிகவும் சிரமப்பட்டான். அவன் இக்கதையைப் பல முறை கேட்டிருந்தான். ஆனால் பீஷ்மர் தன் கதையைக் கூறிவிட்டு, தன் கண்களை மூடிக் கொண்டு தன் சொந்த உலகில் தன்னை மறந்து இருந்த ஒவ்வொரு முறையும், வாய் திறந்து எதுவும் கூறாமல் அமைதியாக நிற்க விதுரன் கற்றுக் கொண்டான். அவன் இப்போது பீஷ்மரை வணங்கிவிட்டு அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டான். அவனுக்கு மிகவும் பசித்தது. சமையற்காரர்கள் தனக்குத் தனியாக அனுப்பி வைத்திருந்த உணவை உண்பதற்காக அவன் தன் அறைக்குத் திரும்பினான். அப்போது திடீரென்று, பெரிதாக உருவாகிக் கொண்டிருந்த இன்னோர் அச்சுறுத்தலைப் பற்றி பீஷ்மரிடம் தெரிவிப்பதற்குத் தான் மறந்துவிட்டிருந்தது அவனுடைய நினைவுக்கு வந்தது. அலட்சியப்படுத்தப்பட்ட அம்பையின் மகன் இப்போது வேகமாக வளர்ந்து கொண்டிருந்ததாகவும், யாராலும் எதிர்க்க முடியாத ஒரு

வீரனாக அவன் உருவாகிக் கொண்டிருந்ததாகவும் விதுரனின் உளவாளிகள் அவனிடம் தெரிவித்திருந்தனர். பல வருடங்களாக மனச்சோர்வுடன் போராடிய பிறகு, அம்பை இறுதியில் தன் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் தன் மகனின் மனத்தை பீஷ்மருக்கு எதிரான பகைமையுணர்வைக் கொண்டு நிரப்பியிருந்தாள். பாஞ்சால நாட்டின் அரசனான துருபதனின் அரண்மனையில் அவள் அடைக்கலம் புகுந்து, தன் மகனை அங்கு அவள் பெற்றெடுத்திருந்தாள். ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியாக்கிவிட்டு, சமரசம் என்ற பெயரில், பரசுராமர், பீஷ்மர் போன்ற மாபெரும் மனிதர்கள் தங்களுக்கிடையே சலுகைகளைப் பரிமாற்றம் செய்து கொண்டபோது, எந்தப் பெண் அந்தப் போருக்குக் காரணமாக இருந்திருந்தாளோ, அவளை அவர்கள் சௌகரியமாக மறந்துவிட்டிருந்தனர். பரசுராமன் தான் விரும்பியதைப் பெற்றுக் கொண்டான். பீஷ்மர் அம்பையைத் திருமணம் செய்து கொள்ளாததன் மூலம் தன்னுடைய பிரம்மச்சரிய உறுதிமொழியை மீறுவதைத் தவிர்த்தார். அம்பை தன்னுடைய காதலனால் கருவுறச் செய்யப்பட்டிருந்தது பின்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அவள் பீஷ்மரையும் தன் தலைவிதியையும் சபித்துக் கொண்டு, பத்து வருடங்களைப் பாஞ்சால நாட்டில் அவலமான நிலையில் கழித்திருந்தாள். அவள் மாடிப்படிகளின் கைப்பிடிச் சுவரைத் தாண்டிக் குதித்து, வானவில் வளைவுகளைப்போல எழுந்த நீரூற்றுக்கள் அமைந்த குளிரான பளிங்கு வரவேற்பறையில் வந்து விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டபோது, அவளுடைய வாழ்க்கைக்காகவும் மரணத்திற்காகவும் பழிக்குப் பழி வாங்கப் போவதாக அவளுடைய மகன் தீர்மானித்தான்.

பீஷ்மரின் எண்ணற்ற எதிரிகளோடு இப்போது இன்னுமோர் எதிரியும் சேர்ந்து கொண்டிருந்தது விதுரனுக்குக் கவலையளிக்கவில்லை. ஆனால் பாஞ்சால நாட்டு அரசனான துருபதனால் தத்தெடுக்கப்பட்டு, ஓர் இளவரசனாக வளர்க்கப்பட்டு வந்திருந்தவன் உண்மையில் ஓர் ஆண்மகனே அல்ல. அவன் சிகண்டி என்ற பெயர் கொண்ட ஓர் அலி. என்றேனும் ஒருநாள் பீஷ்மரைத் தான் கொல்லப் போவதாக அவன் தனக்குத் தானே சபதம் செய்திருந்தான். குரு வம்சப் படைகளின் புகழ்மிக்கத் தளபதியான பீஷ்மருக்கு, ஓர் அலியால் சவால்விடப்படுவதைவிட மிகப் பெரிய அவமானம் வேறு எதுவும் இருக்க முடியாது என்று விதுரன் நினைத்தான். இச்செய்தியை அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரிடம் எவ்வாறு தெரிவிப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை.

7

படிப்பினை

பயமும் கோபமும் உள்ளூரத் தாண்டவமாட, துரியோதனன் துரோணரைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் இந்த வகுப்புகளை வெறுத்தான். மாறாக, பறவைகளையும் பட்டாம்பூச்சிகளையும் பார்த்துக் கொண்டு, காட்டில் மகிழ்ச்சியாகச் சுற்றித் திரிய அவன் விரும்பினான். கடந்த நான்கு வருடங்களும் ஒவ்வொரு நாளும் அவனுக்கு ஒரு சித்தரவதையாகவே இருந்து வந்திருந்தது. இத்தனைக் காலமும் ஒரு முட்டாளைப்போல உணர்ந்து கொண்டு, முகத்தில் உணர்ச்சி ஏதுமின்றிக் கல்லாக அமர்ந்து கொண்டு, துரோணர் தன்மீது அள்ளி வீசிக் கொண்டிருந்த அவச் சொற்களைச் சகித்து கொண்டு வந்திருந்ததுதான் அவனுடைய நினைவில் நிலைத்திருந்தது. துவக்கத்தில், அவன் தன் குருவிடம் பல்வேறு விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்டிருந்தான். துரோணர் வருவதற்கு முன்னால் இளவரசர்களின் குருவாக இருந்த கிருபர், அவனுடைய எந்தவொரு கேள்விக்கும் ஒரு புன்னகையோடு பதிலளிப்பதற்கு எப்போதுமே தயாராக இருந்தார். ஆனால் துரோணர் வந்தபோது எல்லாமே தலைகீழாக மாறியது.

பல இடங்களுக்கும் பயணித்துக் கொண்டிருந்த துறவியான சார்வகன், கிருபரைச் சந்திக்க வந்த வேளைகள்தான் மிகச் சிறந்த பொழுதுகளாக இருந்தன. அவர்களுடன் துரியோதனன் செலவிட்ட மாலைநேரங்கள் மாயாஜாலமானவையாக இருந்தன. பின்னால் ஆறு

வேகமாகக் கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்க, ஆலமரத்தின் கீழே அமர்ந்து எப்போதும் ஒரு தோழமையான முறையில் விவாதித்து வந்த அவ்விரு நபர்களின் நகைச்சுவை உணர்வையும் பரிகாசங்களையும் துரியோதனனும் அசுவத்தாமனும் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டனர். தம் கூட்டிற்குத் திரும்பிய காகங்கள், மரத்தின்மீது கூட்டமாக அமர்ந்து கொள்ளும். ஆண்களும் பெண்களும் தங்கள் வேலை முடிந்து அவசர அவசரமாக வீடு திரும்பிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் தங்கள் மாட்டு வண்டிகளில் தங்கள் கிராமங்களை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பார்கள். பக்தர்கள் கோவிலுக்கு நடந்து சென்று கொண்டிருப்பார்கள். கோவிலில் அர்ச்சகர்கள் மந்திரங்களை உச்சரித்துக் கடவுள்களைப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள். கோவில் வாசலில் காத்துக் கொண்டிருக்கும் யாசகர்கள், கடவுள்களுக்கும் அர்ச்சகர்களுக்கும் காணிக்கைகளைக் கொண்டு வரும் பக்தர்களிடமிருந்து யாசகம் பெறுவதற்காக அவர்களிடம் மிக மோசமான முறையில் நடந்து கொண்டிருப்பர். மல்லிகை மலர்கள், இனிப்புகள், வேக வைத்தக் கடலைகள் ஆகியவற்றை விற்றுக் கொண்டிந்த வியாபாரிகள், மக்கட்கூட்டங்களுக்கு இடையே புகுந்து சென்று, தங்களுடைய பொருட்களை விற்றுக் கொண்டிருப்பர். சார்வகனும் கிருபரும் விவாதித்துக் கொண்டிருந்த கோட்பாடுகள்மீது வாழ்க்கை ஒருபோதும் அக்கறை காட்டவில்லை. கடவுள்கள், தத்துவங்கள், மனிதர்களின் எண்ணங்கள் ஆகிய எதையும் பொருட்படுத்தாமல், வாழ்க்கை தொடர்ந்து ஓடிக் கொண்டுதான் இருந்தது. ஆனால், அவ்விரு ஆசான்களும் ஒருவரோடு ஒருவர் விவாதித்ததைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவர்கள் உணர்ந்த மகிழ்ச்சியை இது அவர்களிடமிருந்து பறித்துவிடவில்லை. துரியோதனனும், அசுவத்தாமனும், சற்றுக் குறைவான புத்திசாலித்தனத்தைக் கொண்ட துச்சாதனனும்கூட, துரோணரின் பல வகுப்புகளிலிருந்து கற்றுக் கொண்ட விஷயங்களைவிட அதிகமான விஷயங்களை இந்த அற்புதமான மாலைப் பொழுதுகளில் இவ்விரு மனிதர்களுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்களிலிருந்து கற்றுக் கொண்டனர்.

* * *

துரியோதனின் தலையின்மீது விழுந்த ஒரு பலமான அடி அவனைத் தன் கனவுலகிலிருந்து நிஜ உலகிற்கு மீட்டுக் கொண்டு வந்தது. அவனுடைய சக மாணவர்களின் பலத்தச் சிரிப்பு அவனுடைய காதுகளைக் கொதிக்கச் செய்தது.

“முட்டாளே, நான் கேட்டக் கேள்விக்கு விடையென்ன?” என்று துரோணர் குரைத்தார்.

அவருடைய கேள்வி துரியோதனனின் காதுகளில் விழுந்திருக்கவில்லை. அவன் தன் நண்பன் அசுவத்தாமனைப் பரிதவிப்புடன் பார்த்தான். ஆனால், கெஞ்சிக் கொண்டிருந்த இளவரசனின் கண்களைச் சந்திப்பதை அசுவத்தாமன் தவிர்த்தான். மாறாக, அவன் தன் பார்வையை நிலத்தின்மீது உறுதியாக நிலைப்படுத்தியபடி உட்கார்ந்திருந்தான். தன் தந்தையின் நடத்தைக் குறித்து அவமானப்பட்டுத்தான் தன் நண்பன் அப்படி உட்கார்ந்திருந்ததாக துரியோதனன் ஒரு கணம் நினைத்தான். ஆனால் அசுவத்தாமனின் உதடுகள் இறுக்கமாக இருந்ததையும், அவன் தன் சிரிப்பை அடக்க முயற்சித்துக் கொண்டிருந்ததையும் கண்ட துரியோதனன், அப்படி என்ன வேடிக்கை நிகழ்ந்து கொண்டிருந்தது என்று வியந்தான். “குருவே, உங்கள் கேள்வி என் காதுகளில் விழவில்லை,” என்று துரியோதனன் கூறியதைக் கேட்டு மற்ற மாணவர்கள் இன்னும் பலமாகச் சிரித்தனர்.

“நீ ஒரு மூடன் என்பதும், உன் தந்தையைப்போல, எது சரி, எது தவறு என்று உன்னால் பார்க்க முடியாது என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் உனக்குக் காதுகூடக் கேட்காதா?” என்று கேட்டுவிட்டு துரோணர் புன்னகைத்தார். ஆனால் அவருடைய கண்கள் அவரிடமிருந்த கெடுநோக்கை வெளிச்சம் போட்டுக் காட்டின. தனக்கு ஏற்பட்ட அவமானத்தாலும் மனக்காயத்தாலும் தனியாக நின்று கொண்டிருந்த துரியோதனனைப் பார்த்து அவனுடைய சக மாணவர்கள் மேலும் ஏளனமாகச் சிரித்தனர்.

“சார்வகன், கிருபன் போன்ற உருப்படாத பிராமணர்களுடன் நீ தொடர்ந்து சுற்றிக் கொண்டிருக்கிறாய். புரோகிதர்களைக் கேலி செய்கிறாய். ஆலமரத்தின் கீழே அந்தக் கயவர்களுடன் சேர்ந்து நீ உன் நேரத்தைச் செலவிடுகிறாய். நீ என்னுடைய மகனையும் கெடுத்து வைத்திருக்கிறாய். தடை செய்யப்பட்டுள்ள சமூக வழக்கங்களைப் பற்றியோ அல்லது எல்லோரையும் தொடுவதால் ஏற்படும் மாசுபாட்டைப் பற்றியோ கவலைப்படாமல் நீ தெருவில் அலைந்து திரிகிறாய். நீ சூத்திரர்களோடு சேர்ந்து உணவருந்துகிறாய். சேரியில் வாழும் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுகிறாய். சூத்திரச் சிறுவனான கர்ணன் ஒரு பிராமணனாக ஆவதற்கு உன் நண்பன் கிருபன் அவனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்பது உனக்குத் தெரியுமா? ராமா . . . ராமா . . . கலியுகம் நெருங்கிவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. சூத்திரர்கள் காயத்திரி மந்திரத்தைக்

கற்றுக் கொள்வதும் கல்வியறிவு பெறுவதும் அதைத்தான் உணர்த்துகிறது. அதிர்ஷ்டவசமாக பிராமணர்களாகப் பிறந்த கிருபன், சார்வகன் போன்றவர்கள், எல்லோருக்கும் வேதங்களைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் தங்களுடைய நல்ல கர்மாவைத் தூக்கியெறிந்து கொண்டிருக்கின்றனர். துரியோதனா, நீ ஆயுதங்களைக் கையாளத் தெரியாதவன், நீ ஒரு முட்டாள் . . . உன் மூதாதையர்களுக்கும் அஸ்தினாபுரத்திற்கும் நீ அவமானத்தை மட்டுமே கொண்டு வருகிறாய்."

இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு கனத்த மௌனம் நிலவியது. ஆனால் துரியோதனன் தன் குருவின் கண்களை நேராகப் பார்த்து, "குருவே, நான் வெட்கித் தலைகுனிவதற்கு எந்தக் காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என் இதயம் கூறுவதைத்தான் நான் செய்துள்ளேன்," என்று கூறினான்.

"துரியோதனா, எல்லோருமே தங்கள் விருப்பம்போலச் செயல்பட்டால், சமுதாயம் விரைவில் நிலைகுலைந்துவிடும். அதனால்தான் விதிமுறைகள் இருக்கின்றன. அதனால்தான் சில வழக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. வேதங்கள் இதைத்தான் நிலைப்படுத்தியுள்ளன. இதுதான் நம்முடைய தர்மம்." மேலும் கீழும் நடந்தவாறே, துரோணர், பல நூறு முறை தன் மனத்தில் ஒத்திகை பார்த்திருந்த இந்தச் சொற்பொழிவைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"துரியோதனா, உன்னிடமிருந்து ஒரு விடையைப் பெறுவதற்கு இவ்வுலகம் அழியும்வரை நான் காத்திருக்க வேண்டுமா? வேறு யாருக்கு இக்கேள்விக்கான விடை தெரியும்?" துரோணர் பாண்டவர்களை நோக்கித் திரும்பினார். அவர்கள் தங்கள் கைகளை ஆர்வத்தோடு உயர்த்தினர்.

"தர்மா, இக்கேள்விக்கான விடை என்ன?"

தர்மன் வேதங்களிலிருந்து மிகத் திறமையாகவும் சுலபமாகவும் மேற்கோள் காட்டத் துவங்கினான். அவன் கூறியதை துரோணர் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தார். ஆனால் துரியோதனனுக்கு இது எதுவும் காதில் விழவில்லை. துரோணர் தன் வெறுப்பை எப்போதும் தன்மீது மட்டுமே காட்டியது குறித்து அவன் மிகவும் எரிச்சலடைந்து இருந்தான். அவன் கிருபரும் சார்வகனும் விவாதிப்பதைக் கேட்க விரும்பினான். தெருவோர நடைமுறை வாழ்க்கைக்காக அவன் மிகவும் ஏங்கினான். நீண்டகாலமாக மறக்கப்பட்டுவிட்ட இந்த மந்திர ஓதல்களாலும் பயனற்றச் சடங்குகளாலும் என்ன பயன் என்று அவன் நினைத்தான்.

மாணவர்கள் அனைவரும் அங்கிருந்து எழுந்து, காட்டில் இருந்த ஒரு வெற்றிடத்தை நோக்கிச் சென்றனர். அசுவத்தாமன் துரியோதனனின் கையை இறுக்கமாகப் பிடித்தான். ஆனால்

துரியோதனன் அவன்மீது ஒரு கடுமையான பார்வையை மட்டுமே வீசினான். துரோணர் தன்னை ஏளனம் செய்து கொண்டிருந்தபோது, அவருடைய மகனான அசுவத்தாமன் வெளியே தெரியாதபடி சிரித்ததை துரியோதனன் மறந்திருக்கவில்லை.

“துரியோதனா, தயவு செய்து அதை மறந்துவிடு. நான் அந்த அர்த்தத்தில் அப்படிச் செய்யவில்லை.” அசுவத்தாமன் இளவரசன் துரியோதனனின் தோளைச் சுற்றித் தன் கையைப் போட முற்பட்டான், ஆனால் துரியோதனன் அதை உதறிவிட்டு நடந்தான்.

துரோணர் காட்டை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தார். பாண்டவர்கள் உற்சாகத்துடன் அவரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தனர். துரியோதனன் துச்சாதனனைத் தேடினான். ஆனால், கத்திக் கொண்டும் ஒடிக் கொண்டும் இருந்த சிறுவர்களுக்கு இடையே துரியோதனனால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லா இடங்களிலும் புழுதி சுற்றிக் கொண்டிருந்தது. வெயிலும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

“துரியோதனா, நீ நினைக்கும் அளவுக்கு என் தந்தை அவ்வளவு மோசமானவரல்ல,” என்று பின்னாலிருந்து அசுவத்தாமன் கூறினான்.

“அதைப் பற்றி எனக்கு என்ன? அசுவத்தாமனிடமிருந்து தப்பிப்பதற்காக துரியோதனன் மேலும் வேகமாக நடந்தான். ஆனால் தன்னுடைய சிறந்த நண்பன்மீது தன்னால் நீண்ட நேரம் கோபத்துடன் இருக்க முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான். துரியோதனன் திடீரென்று தன் நடையை நிறுத்திவிட்டு, “குரு இப்போது என்ன செய்யத் திட்டமிட்டுள்ளார்?” என்று கேட்டான். தன் அருகே வந்து நின்ற அசுவத்தாமனிடமிருந்து இறுக்கம் தளர்ந்து கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது.

“இது அவருடைய செய்முறைப் பாடங்களில் ஒன்றாக இருக்கக்கூடும்" என்று அசுவத்தாமன் பதிலளித்தான். இரண்டு சிறுவர்களுமே ஒருவரையொருவர் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டனர். இத்தகைய பாடங்கள் குறித்து அவர்கள் எப்போதுமே பயந்து நடுங்கினர். ஏனெனில், பாண்டவர்களுடனான ஒப்பீடு அங்கு உடனடியாகத் தொடங்கிவிடும். அர்ச்சுனன் ஒரு திறமையான வில்லாளியாக உருவாகிக் கொண்டிருந்தான். ஆனால், எவ்வளவு கடினமாக முயற்சித்தும்கூட, மற்ற எந்தவொரு மாணவனாலும் அவனுடைய திறமைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. துரோணர் தன் சொந்த மகனைப் புகழ்வதில் கருமித்தனமாக நடந்து கொண்டார். ஆனால் அர்ச்சுனனின் விஷயத்தில் அவர் மிகவும் தாராளமாக நடந்து கொண்டார்.

துரியோதனனும் அசுவத்தாமனும் வந்து சேர்வதற்குள், மற்ற மாணவர்கள் அனைவரும் ஏற்கனவே கீழே அமர்ந்திருந்தனர். துரோணர் ஒரு புதிய சோதனையைத் தயார் செய்து கொண்டிருந்தார். சிறுவர்களின் அரட்டையும் மதிய வெயிலும் சேர்ந்து துரியோதனனுக்குக் களைப்பூட்டின. ஆனால் பாடம் முடியும்வரை அங்கிருந்து தப்பிப்பதற்கு அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. அவன் அந்த இடத்தைச் சுற்றி நோட்டம் விட்டபோது, காட்டில் ஏதோ நகர்ந்து கொண்டிருந்ததை அவன் பார்த்தான். தாங்கள் அமர்ந்திருந்த வெற்றிடத்தின் மறுகோடியில் இருந்த புதர் ஒன்று, ஓர் அசாதாரணமான முறையில் குலுங்கியது. காற்று வீசிய திசையில் அதன் இலைகள் பறக்கவில்லை. துரியோதனன் அதை நீண்ட நேரம் கண்ணிமைக்காமல் பார்த்தான். புதருக்குப் பின்னால் எது நகர்ந்து கொண்டிருந்தது என்பதைப் பார்க்க அவன் காத்திருந்தான். தும்பிகள் அங்கு வட்டமிட்டு, புல்லின்மீது வந்து அமர்ந்து, பிறகு திடீரென்று அங்கிருந்து பறந்தோடின. அந்தப் புதருக்குப் பின்னால் மற்றுமோர் அசைவு துரியோதனனின் பார்வையில் பட்டது. தங்களை முற்றுகையிடுவதற்காக நாகர் இன வீரன் எவனாவது அப்புதருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தானா என்று துரியோதனன் யோசித்தான். தன் தந்தை செய்து கொண்டிருந்த விஷயத்தின்மீது கவனம் செலுத்துமாறு அசுவத்தாமன் துரியோதனின் காதில் கிசுகிசுத்தான். இளவரசன் அப்புதரிலிருந்து தன் பார்வையை உடனடியாக விலக்கிக் கொண்டான்.

தான் வரைந்திருந்த ஒரு சிறிய வட்டத்திற்குள் துரோணர் நின்று கொண்டிருந்தார். "அமைதி!" என்று கூறியபடி துரோணர் தன் கைகளை உயர்த்தினார். மாணவர்கள் உடனடியாகத் தங்கள் அரட்டையை நிறுத்தினர். "நான் இன்று ஒரு முக்கியமான சோதனையை நடத்தப் போகிறேன். இதற்கு யார் முன்வருகிறீர்கள்?"

யாரும் தங்கள் இடத்தைவிட்டு அசையவில்லை. எல்லாச் சிறுவர்களுக்கும், தங்கள் பாதங்களுக்குக் கீழே இருந்த நிலத்தின்மீது திடீரென்று ஆர்வம் அதிகரித்தது. அவர்கள் அனைவரும் கீழே பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

"யாரும் முன்வரத் தயாராக இல்லையா? சரி, அப்படியென்றால் நானே தேர்ந்தெடுத்தாக வேண்டும்." துரோணரின் கண்கள் தன் வகுப்பை நோட்டமிட்டன. குரு தன்னைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று ஒவ்வொரு மாணவனும் தன் மனத்தில் வேண்டிக் கொண்டான். "அசுவத்தாமா!" அசுவத்தாமன் பதற்றத்தோடு எழுந்தபோது, அங்கு ஓர் ஒட்டுமொத்த நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. "இங்கு வந்து இந்த வட்டத்திற்குள் நில். உன்னுடைய வில்லையும் அம்புகளையும் கொண்டு

வர மறந்துவிடாதே.”

அசுவத்தாமன் கீழே குனிந்து தன் வில்லையையும் அம்பறாத்தூணியையும் மெதுவாக எடுத்தபோது, உறுதியளிக்கும் விதமாக துரியோதனன் அவனைப் பார்த்துத் தலையாட்டினான். அசுவத்தாமன் தன் தந்தை வரைந்திருந்த வட்டத்திற்குள் போய் நின்றான்.

தொலைவில் இருந்த ஒரு மாமரத்தை அவனுக்குச் சுட்டிக் காட்டிய துரோணர், “அங்கே பார். அங்கு உனக்கு என்ன தெரிகிறது?” என்று கேட்டார்.

இக்கேள்வியில் ஏதேனும் ஒரு புதிரோ அல்லது சவாலோ ஒளிந்திருந்ததா என்று அசுவத்தாமன் வியந்தான். அவனுடைய இதயம் அவனுடைய விலா எலும்புக்கூட்டில் எகிறிக் குதித்தது. ஒரு மாமரத்தைத் தவிர, பார்ப்பதற்கு அங்கு வேறு என்ன இருந்தது என்று அவன் யோசித்தான்.

“அது ஒரு மாமரம்.”

“நீ ஒரு குருடனின் மகனோடு நட்புறவாடினால், உன்னால் வேறு எதைப் பார்க்க முடியும்? உன் இடத்திற்குத் திரும்பிப் போ.”

துரியோதனனைப் பார்க்காமல் இருக்க முயற்சித்துக் கொண்டே அசுவத்தாமன் தன் இடத்தில் போய் அமர்ந்தான்.

துரியோதனன் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தான். ‘பார்வையற்ற என் தந்தையை இவர் ஏன் எல்லாவற்றுக்குள்ளும் வம்புக்கு இழுக்கிறார்? என் தந்தை பார்வையற்றவராக இருப்பது அவர் செய்த குற்றமா? அது சிவபெருமானின் விருப்பமல்லவா? குரு இப்போது எதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்? நாகர் இன வீரன் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்த புதரை அவர் பார்த்துவிட்டாரா?’ என்று யோசித்த துரியோதனன், அந்த மாமரத்தின்மீது ஒருமித்தக் கவனம் செலுத்த விரும்பினான். அந்த மரத்தில் அப்படி என்னதான் சிறப்பு இருந்தது என்று அவன் வியந்தான்.

“பீமா.”

பருத்த உடலைக் கொண்ட அந்தப் பாண்டவன் தன்னுடைய வழக்கமான யானை நடை நடந்து வந்து, அந்த வட்டத்தைச் சென்றடைந்தான். துரோணர் ஒரு கேள்விக்குறியோடு தன் புருவத்தை உயர்த்தினார்.

“அந்த மரத்தில் ஒருசில மாம்பழங்கள் இருப்பதை நான் பார்க்கிறேன்,” என்று பீமன் கூறினான். மற்ற மாணவர்கள் உரத்தக் குரலில் சிரித்தனர்.

“என் குட்டி இளவரசனுக்குப் பசிக்கிறது என்று நான்

நினைக்கிறேன்.” குருவின் வார்த்தைகளைக் கேட்ட பீமன் ஒரு புதுமணப் பெண்ணைப்போல முகம் சிவந்தான். “மகனே, உன் இடத்தில் போய் உட்கார்ந்து கொள்.”

பாண்டவச் சகோதரர்களையும் தன்னுடைய சகோதரர்களையும் துரோணர் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக அழைத்துக் கொண்டிருந்தபோது, அந்த மாமரத்தில் அப்படி என்னதான் சிறப்பு இருந்தது என்று பார்ப்பதற்கு துரியோதனன் கடினமாக முயற்சித்தான். யாருடைய பதிலும் குருவிற்கு மனநிறைவைக் கொடுக்கவில்லை. இறுதியில், குரு தன் பெயரைக் கூறி அழைத்தது துரியோதனனின் காதுகளில் விழுந்தது. அவன் எழுந்து, நேராக அந்த வட்டத்தை நோக்கி நடந்தான். அவன் அதை நெருங்கியபோது, மரத்தின் உச்சியில் இருந்த ஒரு கிளையின்மீது இரண்டு பறவைகள் உட்கார்ந்து கொண்டிருந்ததை அவன் பார்த்தான். அது வசந்தகாலம் என்பதால், காற்றில் அன்பு மிதந்து கொண்டிருந்தது. காதல் வயப்பட்டிருந்த அப்பறவைகள், தமக்கு வரவிருந்த ஆபத்தைப் பற்றி அறியாமல் இருந்தன. துரியோதனன் அவற்றைப் பார்த்தபோது, குரு தன்னை என்ன செய்யச் சொல்லவிருந்தார் என்பதை உணர்ந்து குலை நடுங்கினான்.

“உனக்கு என்ன தெரிகிறது?”

“நான் அன்பைப் பார்க்கிறேன்.”

“யார் நீ? ஒரு கவிஞனா? உன்னுடைய வில்லை வளைத்து, நீ என்ன பார்க்கிறாய் என்று என்னிடம் கூறு.”

“குருவே, நான் வாழ்க்கையைப் பார்க்கிறேன். அன்பில் ஒன்றுகூடியுள்ள இரண்டு ஆன்மாக்களை நான் பார்க்கிறேன். அவற்றின் கண்களில் மகிழ்ச்சியைப் பார்க்கிறேன், அவற்றின் குரலில் கொண்டாட்டத்தைக் கேட்கிறேன். அவற்றிற்கு மேலே நீலவானம் ஒரு குடைபோல விரிந்துள்ளதை நான் பார்க்கிறேன். அவற்றின் இறகுகளை லேசாகப் படபடக்க வைத்துச் செல்கின்ற தென்றலை நான் உணர்கிறேன். மாம்பழங்களின் நறுமணத்தை நான் நுகர்கிறேன் . . .”

பளார்! துரியோதனனின் கன்னம் எரிந்தது. அவன் நிலைகுலைந்து, கிட்டத்தட்டக் கீழே விழுந்துவிட்டான். துரோணர் தன்னை அடித்திருந்தார் என்பதை உணர்ந்து கொள்ள அவனுக்கு ஒரு கணம் ஆனது. “முட்டாளே! ஒன்றுக்கும் உதவாத கயவனே! நீ என்னைக் கேலி செய்கிறாயா? நீ ஓர் இளவரசனாக இருப்பதால், ஓர் ஏழை பிராமணனைக் கோபப்படுத்தலாம் என்று நீ நினைக்கிறாயா? நான் உன்னை ஒரு வீரனாக ஆக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீயோ, ஒரு பெண்ணைப்போலப் பிதற்றிக் கொண்டிருக்கிறாய். என் பார்வையிலிருந்து ஓடிப் போய்விடு!”

துரியோதனன் அவமானத்தில் தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பி நடந்தான். குருவின் அன்பற்ற வார்த்தைகள் அவனை முள்ளாகக் குத்தியெடுத்தன. அவன் தன் ஆசிரியரை எந்தவிதத்திலும் ஏளனப்படுத்த நினைத்திருக்கவில்லை.

"ஒரு பெண்!" பீமன் சத்தம் போட்டுக் கூறினான். இதைக் கேட்ட மற்றச் சிறுவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

துரியோதனன் அந்த குண்டோதரனை நையப் புடைக்க விரும்பினான். ஆனால் அவன் அசைவதற்குள், துரோணர் கடைசிச் சிறுவனை அழைத்தார். "அர்ச்சுனா!"

பாண்டவ இளவரசர்களில் மூன்றாமவன் தன் இடத்தைவிட்டு எழுந்து, அந்த வட்டத்தை நோக்கி நடந்தான். வட்டத்திற்குள் நுழைவதற்கு முன்பு தன் குருவின் பாதங்களைத் தொட்டு வணங்கிய தன் பிரியமான மாணவனைப் பார்த்துத் துரோணரின் முகம் ஒளி வீசியது. துச்சாதனன் ஒரு சாபத்தை முணுமுணுத்தான். கௌரவச் சகோதரர்களில் ஒருசிலர் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர். துரோணர் அவர்களைப் பார்த்து முறைத்தார். உடனடியாக அங்கு அமைதி ஏற்பட்டது. தன் வில்லில் நாணேற்றித் தயாராக நின்று கொண்டிருந்த அர்ச்சுனனிடம் துரோணர் திரும்பினார். மறைந்து கொண்டிருந்த மாலைக் கதிரவன் அர்ச்சுனனின் அம்பின் முனையில் முத்தமிட்டு, அதை ரத்தச் சிவப்பாக ஒளிரச் செய்தான். "மகனே, உன் கண்களுக்கு என்ன தெரிகிறது?"

"நான் ஒரு பறவையின் கண்ணைப் பார்க்கிறேன். அதுதான் என் இலக்கு."

"அருமை! மிகவும் அருமை! இப்போது உன் அம்பைத் தொடு!"

"அம்பை எய்யாதே . . ." என்று துரியோதனன் கத்தினான். ஆனால் அதற்குள் அர்ச்சுனனின் அம்பு வேகமாகப் பறந்து போயிருந்தது. அது அப்பறவையின் கண்ணையும் மூளையையும் துளைத்து, அப்பறவையை ஒருசில அடிகள் மேலே தூக்கி எறிந்தது. பிறகு அந்த அம்பு அப்பறவையோடு தரையின்மீது வந்து விழுந்தது.

அர்ச்சுனனின் இந்தச் சாதனையைக் கண்ட பாண்டவர்கள் உற்சாகமாகக் கைதட்டினர். துரோணர் மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்துவிட்டு, தன்னுடைய பிரியமான மாணவனைக் கட்டியணைத்தார். இறந்து போன பறவையின் துணைப் பறவை எழுப்பிய ஓலம் விண்ணை நிறைத்தது. அப்பறவை அந்த மாமரத்தைச் சுற்றி மீண்டும் மீண்டும் வட்டமிட்டுவிட்டு, கீழே விழுந்து கிடந்த தன் காதல் பறவையின் அருகில் வந்து அமர்ந்தது. தன் இழப்புக் குறித்த வேதனையில் அது கீச்சிட்டது. மடிந்து கிடந்த தன் துணையை அது தன்

அலகால் தட்டியது. ஆனால் ஒரு குருடனின் மகனைத் தவிர, அந்தப் பறவையின் துயரத்தைப் பார்ப்பதற்கு அங்கு வேறு எந்தக் கண்களும் இருக்கவில்லை. அர்ச்சுனனின் குறி பார்த்து எய்யும் திறமையையும், அவனுடைய அர்ப்பணிப்பையும், இலக்கை மட்டுமே பார்த்த அவனுடைய கண்ணையும் புகழ்ந்து துரோணர் ஒரு பாராட்டுச் சொற்பொழிவாற்றினார். தடுமாற்றமின்றித் தன் இலக்கைக் குறி பார்க்கும் திறமையும், எந்த விலை கொடுத்தாவது வெற்றியடைவதற்கான மன உறுதியும், முக்கியமானதை மட்டுமே பார்ப்பதும்தான் ஒரு போர்வீரனின் முக்கியமான பண்புநலன்கள் என்று அவர் கூறினார். தன்னுடைய மூத்த அதிகாரிகள் தன்னிடம் காட்டிய இடத்தில் அம்பை எய்வதுதான் ஒரு வீரனின் தர்மமே தவிர, அது குறித்துக் கேள்வி கேட்பது அல்ல என்று அவர் விளக்கினார்.

துரியோதனன் இவை எதையும் செவிமடுக்கவில்லை. தன்னுடைய குருவின் கோபக் குரலைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், விழுந்து கிடந்த பறவையின் அருகே அவன் சென்றான். அவன் அதை நெருங்கியபோது, உயிரோடு இருந்த அதன் துணைப் பறவை அவனை ஐயத்தோடு பார்த்துக் கீச்சொலி எழுப்பியது. அது தன்னைச் சபித்துக் கொண்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. துரியோதனனால் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அச்சிறிய பறவை, அந்தப் பருவ வயதுச் சிறுவனின் வேதனையை உணர்ந்து கொண்டதுபோலத் தோன்றியது. சரி அல்லது தவறு போன்ற எண்ணங்களால் மாசுபட்டிராத உயிரினங்களுக்கு இயற்கை அளித்துள்ள அறிவைக் கொண்டு, அச்சிறிய பறவை, துரியோதனன் தனக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க வரவில்லை என்பதை உணர்ந்து கொண்டு, தர்மத்தின் வீரர்களால் கொல்லப்பட்டத் தன் துணையின் அருகே அமர்ந்தபடி, தன் இழப்புக் குறித்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதனிடமிருந்து ஒருசில அடிகள் தள்ளி அஸ்தினாபுர இளவரசன் தன் கனத்த இதயத்துடன் மண்டியிட்டு அமர்ந்தான். இறந்து கிடந்த பறவையின் இறகுகளைத் தென்றல் காற்று வருடிச் சென்றது. அப்பறவையிடம் உயிர் எஞ்சியிருக்கும் என்ற நம்பிக்கையில் துரியோதனன் அதை உற்றுப் பார்த்தான். ஆனால் மரணம் தான் எடுத்துக் கொண்டதை ஒருபோதும் திருப்பித் தருவதில்லை என்பதை அவன் உணர்ந்தான். தன் துணையை இழந்த பறவை இதை முதலில் புரிந்து கொண்டு தன் அழுகையை நிறுத்தியது. ஆனால் இளவரசனோ, மரணம் என்பது உடைகளை மாற்றிக் கொள்வதைப் போன்றது என்பதையும், ஆன்மா ஒருபோதும் இறப்பதில்லை என்பதையும் தெரிந்து கொள்ளப் போதுமான அளவுக்கு வேதங்களைப் படித்திராத ஒரு முட்டாளாக

இருந்தான். மடிந்து கிடந்த அப்பறவை எப்படியாவது உயிர்ப்பெற்று எழுந்துவிடும், அதைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று மீண்டும் அதன் ஆரோக்கியத்தை மீட்டெடுத்துவிடலாம் என்று அவன் நம்பினான். அவனுக்குப் பின்னால், ஒரு மகிழ்ச்சியான ஆசானும் அவருடைய பிரியமான மாணவர்களும் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். தர்மம் எனும் பாடம் மாணவர்கள் மனத்தில் வலிமையாகப் பதிக்கப்பட்டிருந்தது. குறைந்தபட்சம், பாண்டவர்களின் மனங்களில் அது நன்றாகவே பதிவாகியிருந்தது.

மாண்டு கிடந்த பறவையை துரியோதனன் தொடவிருந்த நேரத்தில், யாரோ ஓடிய சத்தம் கேட்டு அவன் திடுக்கிட்டான். கருநிறத் தோலைக் கொண்ட இரண்டு சிறுவர்கள் ஒரு புதருக்குப் பின்னாலிருந்து ஓடி வந்து அப்பறவையை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடினர். மறைந்து கொண்டிருந்த அந்த இரண்டு வேடுவச் சிறுவர்களின் உருவங்களைப் பார்த்து, "ஏய்!" என்று கத்திக் கொண்டே துரியோதனன் தன் வாளை உருவினான். பிறகு ஒரு கணம் தயங்கிவிட்டு, அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த தன்னுடைய சகோதரர்களையும் பாண்டவச் சகோதரர்களையும் திரும்பிப் பார்த்தான். வேடுவர்களைப் பின்தொடர்ந்து செல்வது ஆபத்தானது என்பதை அவன் உணர்ந்தான். காட்டில் நாகர் இன வீரர்கள் நிரம்பி வழிந்தனர். அஸ்தினாபுரத்தின் எதிர்கால மன்னன் அவர்கள் கைகளில் மாட்டிக் கொண்டால் அது ஒரு பெரிய சீரழிவாக அமைந்துவிடும். அது மடத்தனமானது, பொறுப்பற்றது. ஆனால், இறந்து போன தன் துணையின் உடலுக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருந்த பறவையின் வேதனைக் குரல், இளவரசனை அச்சிறுவர்களைப் பின்தொடர்ந்து செல்ல வைத்தது. "பாதுகாப்பாவது மண்ணாங்கட்டியாவது," என்று நினைத்துக் கொண்டே, துரியோதனன் அக்காட்டின் இருட்டில் மூழ்கினான்.

* * *

துரியோதனின் தலைக்கு மேலே பல நூறு அடிகள் உயரத்திற்கு வளர்ந்து நின்ற மரங்கள், மறைந்து கொண்டிருந்த மாலைநேர வெளிச்சத்தை முற்றிலுமாகத் தடுத்தன. வெட்டுக்கிளிகளின் வினோதமான சத்தமும் தவளைகளின் கடூரமான ஒலியும் அவனுக்கு மேலும் அசௌகரியத்தைக் கொடுத்தன. பறவையைத் திருடிச் சென்ற சிறுவர்களை எங்கும் காணவில்லை. படர்க்கொடிகள் அடங்கிய இருண்ட புதிர்க்கட்டத்திற்குள் அவர்கள் காணாமல் போயிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, தான் தன் வழியைத்

தொலைத்துவிட்டிருந்ததை உணர்ந்த இளவரசன், தான் மடத்தனமாக அச்சிறுவர்களைப் பின்தொடர்ந்து வந்திருந்ததை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டான். வழியில் இருந்த அடர்த்தியான புதர்களை வெட்டிச் சாய்த்தபடி, திக்குத் தெரியாமல் அவன் முன்னோக்கிச் சென்றான். சில சமயங்களில், துயரத்தில் ஓலமிட்டுக் கொண்டிருந்த பறவையின் குரலைச் செவிமடுத்ததன் மூலம் அவன் தன் வழியைக் கண்டுபிடித்தான். அவன் ஒரு வழியாக ஒரு வெற்றிடத்திற்கு வந்து சேர்ந்தபோது, மிகவும் இருட்டிப் போயிருந்தது. தன் இழப்பை ஏற்றுக் கொண்ட பறவை, இரவிற்குள் சென்று மறைந்து போயிருந்தது.

அந்த வெற்றிடத்தில் ஒரு சிறிய நெருப்பு மூட்டப்பட்டிருந்தது. பல்வேறு வயதைக் கொண்ட ஏழு குழந்தைகளுடன் ஒரு பெண் அந்த நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்தாள். அசைந்தாடி எரிந்து கொண்டிருந்த நெருப்பு அவர்களுடைய கருநிற முகங்களின்மீது ஒரு பேய்த்தனமான வெளிச்சத்தைத் தோற்றுவித்தது. அந்த நெருப்பின் மேலே, இறந்து போன அந்தப் பறவை வறுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கு அமர்ந்திருந்த குழந்தைகள் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். துரியோதனன் அதிர்ச்சியடைந்தான். என்ன காட்டுமிராண்டித்தனம் இது! என்ன கொடுமை இது! இப்படிப்பட்ட ஒரு செயலை எந்தப் பேய்கள் செய்யும்? அவன் அவர்கள் அனைவரையும் அஸ்தினாபுரத்திற்கு இழுத்துச் சென்று தண்டிக்க விரும்பினான். ஆனால் அவன் எதுவும் செய்வதற்கு முன்பு, அவனுடைய தோளின்மீது விழுந்த ஒரு கை அவனைத் தடுத்து நிறுத்தியது. துரியோதனன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். "அசுவத்தாமா!" அவனுடைய குரலைக் கேட்டதும், அக்கூட்டத்தில் இருந்த மூத்தச் சிறுவன் அவர்கள் இருவரையும் நோக்கித் திரும்பினான். அசுவத்தாமன் துரியோதனனை விரைவாக ஒரு புதருக்குப் பின்னால் கீழே தள்ளிவிட்டு, அமைதியாக இருக்கும்படி அவனுக்குச் சைகை காட்டினான். அந்த வேடுவச் சிறுவன் ஒருசில கணங்கள் அத்திசையில் பார்த்துவிட்டு, பிறகு அங்கிருந்து எழுந்து, அந்தப் பறவை நன்றாக வறுபட்டுவிட்டதை உறுதி செய்து கொண்டு, அதைப் பல துண்டுகளாக வெட்டி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தான்.

"ஏகலைவா, நான்தான் அப்பறவையைக் கண்டுபிடித்தேன். எனக்கு ஒரு பெரிய துண்டைக் கொடு," என்று ஒரு சிறுவன் கத்தினான்.

"ஜரா, அயோக்கியப் பயலே! இவ்வளவு பெரிய வயிற்றை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?" என்று திட்டிவிட்டு, ஒரு சிறிய துண்டை ஜரனின் கையில் ஏகலைவன் திணித்தான். ஜரன் அதை வேகமாகப் பிடுங்கி, பசியோடு இருந்த ஒரு நாயைப்போல அவசர

அவசரமாகச் சாப்பிட்டான்.

அந்த வேடுவக் குடும்பத்தினர் அந்தப் பறவையை மிகவும் ருசித்துச் சாப்பிட்டதை துரியோதனன் திகிலோடு பார்த்தான். அவர்கள் தங்கள் கைகளைச் சுத்தமாக வழித்து நக்கிக் கொண்டிருந்தபோது, அந்தப் பெண்மணி ஏகலைவனிடம், "உன்னுடைய வேட்டைத் திறமைகள் மேம்பட்டுள்ளது நல்ல விஷயம். இது ஒரு சிறிய பறவைதான். ஆனாலும் ஒன்றுமில்லாமல் இருப்பதைவிட இது மேலானது. என் மகன்கள் பசியால் துவண்டு கிடந்தனர். நாளைக்கு இன்னும் பெரிதாக ஏதேனும் கிடைக்கிறதா என்று பார்," என்று கூறினாள்.

ஏகலைவன் பதிலளிப்பதற்குள் ஜரன் அவனை முந்திக் கொண்டு, "ஆனால் அவன் அப்பறவையை . . ." என்று கூறத் துவங்கியபோது, ஏகலைவனிடமிருந்து அவனுக்குக் கிடைத்த ஒரு பேய்த்தனமான உதை ஜரனை அமைதிப்படுத்தியது.

"எப்பேர்ப்பட்ட விலங்கு அவன்!" என்று துரியோதனன் தன் மறைவிடத்திலிருந்து சீறினான்.

"இளவரசே, அவர்களை எடைபோட்டுப் பார்க்காதீர்கள். அப்பெண்மணி கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? அவர்கள் பல நாட்களாக எதுவுமே சாப்பிட்டிருக்கவில்லை. பசி இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்ய மக்களைத் தூண்டுகிறது. அர்ச்சுனனுக்கு அப்பறவை வெறும் ஓர் இலக்கு மட்டுமே; உனக்கு அது அழகு மற்றும் அன்பு; ஆனால் இவர்களுக்கு அது உணவு," என்று அசுவத்தாமன் கூறினான்.

துரியோதனன் நீண்ட நேரம் மௌனமாக இருந்தான். இறுதியில், அந்த வேடுவக் குடும்பத்தினர் அனைவரும் உறங்கி, அங்கிருந்த நெருப்பு முற்றிலுமாக அணைந்த பிறகு, அவன் தன் மறைவிடத்திலிருந்து எழுந்தான். அவனும் அசுவத்தாமனும் தங்கள் வழியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அசுவத்தாமன் தன் அருகில் இருந்ததால், முன்பு தான் தனியாக வந்தபோது ஏற்பட்ட அசௌகரிய உணர்வு இப்போது துரியோதனனுக்கு ஏற்படவில்லை. நிலா வெளிச்சம் அக்காட்டின் தரையில் புள்ளிக் கோலம் இட்டது. தங்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்ற வழியில், நிலா வெளிச்சம் பட்ட இடங்களின்மீது கால் பதித்துச் செல்வதற்கு அவர்கள் இருவரும் போட்டியிட்டபோது, துரியோதனன், "நம் பேரரசில் இந்தப் பழங்குடியினரின் நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு உண்பதற்கு எதுவுமே இல்லை என்பதைப் பார்க்கும்போது அவமானமாக இருக்கிறது. தீண்டத்தகாதவர்கள் வாழும் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது.

உலகில் ஏன் இவ்வளவு நியாயமின்மை நிலவுகிறது? பீஷ்மர் தாத்தா ஏன் இது குறித்து எதுவும் செய்வதில்லை? தடை செய்யப்பட்டுள்ள சமுதாய வழக்கங்களையும் சாதி விதிமுறைகளையும் நான் வெறுக்கிறேன்," என்று கூறினான்.

"துரியோதனா, ஏழ்மை உன் வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பாக, கதவைத் தட்டி உன் சாதி என்ன என்று உன்னிடம் கேட்கிறதா? என் தந்தைக்கு இந்த வேலை கிடைப்பதற்கு முன்பு நாங்கள் எவ்வளவு ஏழ்மையில் இருந்தோம் என்று உன்னால் கற்பனை செய்ய முடியாது. இங்கு வருவதற்கு முன்பு, பாலை நான் என் வாழ்வில் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. முன்பொரு முறை, தோசை மாவைப் பால் என்று கூறி என் நண்பர்கள் என்னை ஏமாற்றினர். பால் அப்படித்தான் ருசிக்கும் என்று நினைத்துக் கொண்டு நான் அதைக் குடித்தேன். கீழ்ச் சாதியினரின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்பது உண்மைதான் என்றாலும், ஒவ்வொரு சாதியிலும் மிக மோசமான ஏழ்மை இருக்கிறது. ஒருசில மக்களிடம்தான் செல்வமும் அதிகாரமும் சலுகைகளும் உள்ளன. பெரும்பாலான மக்கள் துன்புற்றுக் கொண்டிருக்கின்றனர்."

"இவை எல்லாவற்றையும் நான் வெறுக்கிறேன்."

"எனவே, நண்பனே, உன் மனத்தைத் தேற்றிக் கொள். எப்படியிருந்தாலும், என்றேனும் ஒருநாள் நீ அரசனாக ஆகப் போகிறாய். இதே உணர்வும் உற்சாகமும் அப்போதும் உன்னிடம் இருக்கும் என்று நான் நம்புகிறேன். கொள்கைப் பிடிப்புடன் வாழ்கின்ற மக்களைக்கூட அதிகாரம் கெடுத்துவிடுகிறது."

"நான் அரசனாக ஆகும்போது, இந்த ஒட்டுமொத்த அமைப்புமுறையையும் மாற்றப் போகிறேன். நான் . . . ஏய், யாரது? அசுவத்தாமா, நீ பார்த்தாயா?"

ஒரு தனியான உருவம் அவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் விரைவாக ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர். மேகங்கள் நிலவை மறைத்திருந்ததால், அவனுடைய முகத்தை இருட்டில் அவர்களால் பார்க்க முடியவில்லை. அவன் அவர்களை நெருங்கியபோது, அவர்கள் இருவரும் தங்கள் வாள்களை உருவிக் கொண்டு வெளியே குதித்து, "நில்!" என்று கத்தினர்.

கண்ணிமைக்கும் நேரத்தில், மற்றவனும் தன் வாளை உருவியிருந்தான். அக்கணத்தில், நிலவு, மேகங்களின் பிடியிலிருந்து விடுபட்டு வெளியே தலை காட்டியது. "ஏய்! நீ அந்தத் தேரோட்டியின் மகன்தானே?" அவனை இங்கு கண்டதில் துரியோதனன்

ஆச்சரியமடைந்தான்.

"இளவரசே, நீங்கள் கூறுவது சரிதான். நான் கர்ணன், என் தந்தை உங்கள் தந்தையிடம் தேரோட்டியாகச் சேவை செய்து கொண்டிருக்கிறார். என் தந்தையின் பெயர் அதிரதன், தாயின் பெயர் ராதை."

"இந்த வேளை கெட்ட வேளையில் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"நான் . . . நான் . . . தெற்கில் உள்ள புனித இடங்களுக்கு ஒரு பயணம் மேற்கொண்டுள்ளேன்."

"புனிதப் பயணமா? ஒரு புனிதப் பயணம் செல்லும் அளவுக்கு உனக்கு வயதாகிவிட்டதா? சரி, தெற்கில் நீ எந்த இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறாய்?"

கர்ணன் அவர்கள்மீது பார்வையை நிலைப்படுத்தியபடி, "ம்ம்ம் . . . ராமேஸ்வரம், கோகர்ணம், முசிறி, மதுரை, ஸ்ரீ சைலம், காளஹஸ்தி . . . நான் பயணம் செய்ய வேண்டும் என்று என் குரு எனக்கு அறிவுறுத்தியுள்ளார்," என்று கூறினான்.

"நீ புனிதப் பயணம் போக வேண்டும் என்று உன்னுடைய குருவான கிருபர் உனக்கு அறிவுறுத்தியிருப்பது வினோதமாக உள்ளது. நண்பனே, உன் பயணம் இனிதாக அமைய என் வாழ்த்துக்கள். நீ திரும்பி வந்தப் பிறகு என்னை வந்து பார்," என்று துரியோதனன் கூறினான்.

கர்ணன் குனிந்து பணிந்தான். பிறகு, பின்னால் திரும்பிப் பார்க்காமல் அவன் அங்கிருந்து நடந்தான். அவன் போய்ச் சேர வேண்டியிருந்த இடம் வெகு தொலைவில் இருந்தது. அவனுடையது மிக நீண்ட பயணாமாக இருந்தது. பரசுராமனின் ராஜ்யம் பரதகண்டத்தின் தென்மேற்கு முனையில் இருந்தது. வெப்பம் மிகுந்த பாலைவனங்கள், அச்சுறுத்திய மலைகள், சுழன்றடித்துப் பாய்ந்து சென்ற ஆறுகள் ஆகியவற்றைச் சிரமப்பட்டுக் கடந்து அவருடைய இடத்தைச் சென்று அடைவதற்கு எவரொருவருக்கும் ஆறு மாத காலம் பிடித்தது. யட்சர்கள், கிராதர்கள், வேடுவர்கள், நாகர்கள், காந்தர்வர்கள், வானரர்கள் போன்ற பயங்கரமான பழங்குடியினர், வழியில் இருந்த அடர்ந்த காடுகளில் வசித்தனர். பருவ வயதுச் சிறுவன் ஒருவன் தன்னந்தனியாகச் செல்வதற்கு இது மிகவும் ஆபத்தான சாகசப் பயணமாக இருந்தது. இவ்வுலகில் இருந்த எதுவாலும் கர்ணனைத் தடுத்து நிறுத்த முடியாது என்று துரியோதனனுக்குத் தோன்றியது. அஸ்தினாபுரத்தின் எதிர்கால மன்னனும் அசுவத்தாமனும் கர்ணன் மரங்களின் ஊடாகச் சென்று மறைந்ததைப் பார்த்தனர்.

“அசுவத்தாமா, அவன் திரும்பி வந்துவிடுவான் என்று எனக்குத் தோன்றுகிறது. அவன் ஒரு புரோகிதனாக ஆக மாட்டான். பெருமிதமும் தன்னம்பிக்கையும் பொங்கி வழிகின்ற அவனுடைய தோற்றத்திலும் நடையிலும் என்னால் அதைப் பார்க்க முடிகிறது. இது கிருபரின் வேடிக்கைகளில் ஒன்று என்று நினைக்கிறேன். என் வார்த்தைகளைக் குறித்துக் கொள். அவன் நிச்சயமாகத் திரும்பி வரத்தான் போகிறான். அவன் வந்த பிறகு, இங்கு எல்லாமே மாறப் போகிறது.”

“நண்பனே, நீ தொடர்ந்து கனவு கண்டு கொண்டே இரு,” என்று கூறி அசுவத்தாமன் சிரித்தான். “நாம் இப்போது சிறிது உடற்பயிற்சி செய்யலாம். ஓர் இளவரசனின் கால்கள் ஓர் ஏழை பிராமணனின் கால்கள் அளவுக்கு வலிமையாக இருக்கின்றனவா என்று பார்த்துவிடலாம்.” அசுவத்தாமன் ஊளையிட்டுக் கொண்டும் கத்திக் கொண்டும், தொலைவில் இருந்த அரண்மனையை நோக்கி வேகமாக ஓட்டம் பிடித்தான். இந்தச் சத்தத்தைக் கேட்டு, தூங்கிக் கொண்டிருந்த பறவைகள் பயந்து கண்விழித்து உரக்கக் கத்தி ஒலியெழுப்பின. துரியோதனன் பெரிதாகப் புன்னகைத்துக் கொண்டே அவனைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

8

பலராமன்

கர்ணன் ஒரு வணிகர் குழுவுடன் சேர்ந்து, குளிர்காலத்திற்குள் பாலைவனத்தைக் கடந்து, பிரபாசம் என்ற பண்டைய புனித நகரைச் சென்றடைந்திருந்தான். பிராமணச் சடங்குகள் குறித்துக் கிருபர் அவனுக்குக் கொடுத்திருந்த பயிற்சி கர்ணனுக்கு நன்மை பயத்தது. தங்கும் விடுதிகள் மற்றும் கோவில்களின் கதவுகள் அவனுக்கு மாயாஜாலமாகத் திறந்தன. அவன் அணிந்திருந்த பூணூல், நிரந்தரமான இலவச உணவிற்கான ஓர் அனுமதிச்சீட்டாக அமைந்தது. பணக்கார வணிகர்களும் இளவரசர்களும் அவனைப் பணிந்து வணங்கினர். தன்னுடைய ஏமாற்று வேலை குறித்து அவன் அசௌகரியமாக உணர்ந்தான். மற்றவர்கள் நினைத்ததுபோலத் தான் ஒரு பிராமணன் அல்ல, மாறாக, தீண்டத்தகாத ஒரு சூத்திரனே என்று சத்தம் போட்டுக் கூறப் பல முறை அவன் முற்பட்டான். ஆனால், உணவுப் பற்றாக்குறை இருந்தது. அவன் உண்மையைப் பேசியிருந்தால், யாரும் அவனுக்கு ஒரு வேலையைக் கொடுத்திருக்க மாட்டார்கள். அவன் எப்படியாவது பரசுராமனின் இடத்தை அடைந்தாக வேண்டியிருந்தது. வெறுமனே ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறப்பவன் ஒரு பிராமணன் அல்ல, மாறாக, அறிவை நாடுகின்றவனே ஒரு பிராமணன் என்று கிருபர் தன்னிடம் கூறியிருக்கவில்லையா? தானும் உண்மையிலேயே அறிவைத் தேடிச் சென்று கொண்டிருந்ததால், தன்னை ஒரு பிராமணன் என்று அழைத்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை என்று கர்ணன் நினைத்தான். ஒரு

தேரோட்டியின் மகனான அவன், தன்னுள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த மனசாட்சியை அமைதிப்படுத்துவதற்காகத் தன் ஆசிரியரின் வார்த்தைகளைத் தனக்குத் தானே நினைவுபடுத்திக் கொண்டான்.

அவன் ஒருசில வாரங்கள் பிரபாச நகரில் தங்கியிருந்தபோது, இடையர் இனத்துப் பழங்குடியினர் சிலர் யமுனைச் சமவெளிகளிலிருந்து வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்து கொண்டிருந்ததைக் கவனித்தான். மகத நாட்டின் சக்தி வாய்ந்த அரசனான ஜராசந்தன், பண்டைய சாம்ராஜ்யமான மதுராவின்மீது படையெடுத்து, அதை வெற்றி கொண்டதைத் தொடர்ந்து, அங்கிருந்து தப்பியோடிக் கொண்டிருந்த யாதவர்கள் அவர்கள். பிரபாச நகரில், பண்டைய கோவிலான சோமநாதர் கோவிலுக்கு வெகு அருகே முகாமிட்டிருந்த அவர்கள், இப்போது அங்கிருந்து குடிபெயரத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். யாதவர்களின் தலைவன் அக்கோவிலில் கொடுக்கவிருந்த ஒரு விருந்தில் கலந்து கொள்ள வருமாறு மற்ற பிராமணர்களுடன் கூடவே கர்ணனும் அழைக்கப்பட்டான். தான் ஓர் ஏமாற்றுக்காரன் என்று மற்றவர்கள் கண்டுபிடித்துவிடுவார்களோ என்று பயந்து கொண்டு, அங்கு போவதற்கு முதலில் அவன் தயங்கினான். தான் ஒரு சூத்திரன் என்பதும், தன்னைவிட உயர்ந்த குலத்தோரான பிராமணர்களுடன் சமமாக அமர்ந்து உணவருந்த அவன் துணிந்திருந்தான் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால், தனக்கு மரணம் நிச்சயம் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனாலும், அந்த அழைப்பைப் பணிவோடு மறுத்துரைப்பதற்கு எந்தவொரு வழியையும் அவனால் கண்டுபிடிக்க முடியாததால், அவன் வலுக்கட்டாயமாக அங்கு செல்ல நேர்ந்தது.

யாதவர்கள் பிராமணர்களின் பாதங்களை கழுவிச் சுத்தம் செய்ய வந்தபோது, மற்றவர்களின் கவனத்தைக் கவராமல் இருப்பதற்குக் கர்ணன் தன்னால் முடிந்த அளவுக்கு முயற்சித்தான். பிராமணர்களின் பாதங்களைக் கழுவிய தண்ணீர் புனிதமானதாகக் கருதப்பட்டு, அங்கிருந்த பார்வையாளர்களின்மீது தெளிக்கப்பட்டது. பிறகு, அந்த பிராமணர்கள் ஓர் அரங்கிற்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு வாழை இலைகளின்மீது விருந்து பரிமாறப்பட்டிருந்தது. நுற்றுக்கணக்கான பிராமணர்களுடன் சேர்ந்து கர்ணனும் மந்திரத்தை உச்சரித்தபோது, தன்னைவிட ஒருசில வருடங்கள் வயதில் மூத்த, கருநிறம் கொண்ட ஓர் இளைஞனை அவன் பார்த்தான். அவன் தன்னுடைய சுருட்டை முடிக்குள் ஒரு மயிலிறகைச் செருகியிருந்தான். சாமந்திப் பூக்களால் ஆன ஒரு மாலையையும் அவன் தன் கழுத்தைச்

சுற்றி அணிந்திருந்தான். மொத்தத்தில் அவன் ஒரு வசீகரமான தோற்றம் கொண்டவனாக இருந்தான். அவனுடைய மஞ்சள் நிற ஆடைகளும், தன் இடைக்கச்சையில் எல்லோருக்கும் தெரியும் விதத்தில் அவன் செருகி வைத்திருந்த, மூங்கிலால் ஆன ஒரு புல்லாங்குழலும், அவனுடைய மிடுக்கான நடையும் அவனுடைய வசீகரத்திற்கு அழகு சேர்த்தன. கர்ணன் அவன் முன்னிலையில் அசௌகரியமாக உணர்ந்தான். அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருந்த அந்தக் கருநிற இளைஞனிடமிருந்து தன்னால் எதையும் மறைக்க முடியாது என்பதுபோல அவனுக்குத் தோன்றியது. ஆபத்தான ஒருவனின் முன்னிலையில் தான் இருந்ததாகக் கர்ணன் உணர்ந்தான். அந்த அறையில் இருந்தவர்களில் தான் ஒருவன் மட்டுமே அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. அந்த இளைஞன் தன் இனிமையான இயல்பாலும் நகைச்சுவை உணர்வாலும் எல்லோரையும் கவர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் மக்கள் உன்னிப்பாகக் கவனித்தனர். அவனுடைய நகைச்சுவைகளைக் கேட்டு அவர்கள் சத்தமாகச் சிரித்தனர். "நான் ஒரு ரகசியத்தை மறைத்து வைத்துள்ளதால்தான் குற்ற உணர்வை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் போலும்," என்று கர்ணன் நினைத்தான். இந்தக் கடுமையான சோதனை விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்று அவன் பிரார்த்தனை செய்தான்.

கர்ணனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தவன், "நண்பனே, உனக்கு ஏன் இவ்வளவு வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது?" என்று கேட்டான். கர்ணனோடு சில நாட்களாகப் பயணித்து வந்திருந்த ஒரு வயதான பிராமணன் அவன். அவன் தன் மேற்துண்டால் கர்ணனுக்கு விசிறிவிட்டான். கர்ணனுக்குக் காய்ச்சல் இருந்ததா என்று பரிசோதிப்பதற்காக அந்த பிராமணன் அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"ஒன்றுமில்லை ஐயா," என்று கர்ணன் வேகவேகமாக பதிலளித்தான். அந்த வயதான பிராமணன் தன்மீது காட்டிய பரிவு குறித்து அவன் குற்ற உணர்வு கொண்டான். தன் தலையில் மயிலிறகைச் செருகியிருந்த அந்த இளைஞன் தங்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்ததைக் கர்ணன் கவலையோடு பார்த்தான். தன் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது.

அந்த இளைஞன் ஒருசில அடி தொலைவில் இருந்தபோது, தன்னுடைய குட்டு வெளிப்பட்டுவிட்டதாகக் கர்ணன் நினைத்த நேரத்தில், ஒரு பிரம்மாண்டமான குரல் அந்த அறையை நிரப்பியது.

“கற்றறிந்த சான்றோர்களே, வணக்கம்! உங்கள் வருகையை எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய மரியாதையாக நாங்கள் கருதுகிறோம்.”

கூப்பிய கைகளுடன் அந்த அரங்கின் வாசலில் நின்று கொண்டிருந்த உயரமான மனிதனை நோக்கி எல்லோருடைய கண்களும் திரும்பின. அவன் வெள்ளை நிற ஆடையை அணிந்திருந்தான். அவனுடைய பரந்த தோள்களில் தசைகள் விம்மிப் புடைத்துக் கொண்டிருந்தன. அவன் தன்னுடைய நீண்ட தலைமுடியைத் தன் நெற்றியின் வலப்பக்கத்தில் ஓர் இறுக்கமான கொண்டையாக அள்ளி முடித்திருந்தான். அவனிடமிருந்து அதிகாரமும் சக்தியும் நேர்த்தியும் வெளிப்பட்டன. ஆனால் எல்லாவற்றையும்விட மேலாக, அவனுடைய புன்னகைதான் அந்த அறையிலிருந்த மற்ற அனைவரிடமிருந்தும் அவனைத் தனித்துவப்படுத்திக் காட்டியது. உற்சாகத்தால் மின்னிய அவனுடைய கண்களில் தெறித்தப் பரிவையும் நல்லுணர்வையும் கர்ணன் வேறு எவரிடத்திலும் அதுவரை கண்டிருக்கவில்லை.

“கிருஷ்ணா, நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இங்கு வந்து, நம்முடைய விருந்தினர்களுக்கு உணவு பரிமாறுவதற்கு எனக்கு உதவு,” என்று அவன் கூறினான். அக்குரலைக் கேட்டு, அந்தக் கருநிற இளைஞன், புதிதாக அங்கு வந்தவனை நோக்கிப் போனான். அவனுடைய முகத்தில் ஒரு கேள்விக்குறியுடன்கூடிய புன்னகை மலர்ந்திருந்தது. ஆனால் அவனுடைய கண்கள் மட்டும் கர்ணனைவிட்டு ஒருபோதும் அகலவில்லை. கர்ணனின் பசி அவனிடமிருந்து விடைபெற்றுப் போய் இப்போது வெகுநேரம் ஆகியிருந்தது. அவன் தன் உணவை அப்படியே இலையில் விட்டுவிட்டு அங்கிருந்து எழுந்தான். பிறகு அவன் தன் கைகளைக் கழுவச் சென்றபோது, கிருஷ்ணன், தன் கைகளைத் தன் மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு, முகத்தில் ஒரு புன்முறுவலுடன் தன்னருகே நின்று கொண்டிருந்ததைக் கர்ணன் கண்டான். தன்னுடைய குட்டு வெளிப்பட்டிருந்ததாக நினைத்தக் கர்ணன், அதன் பின்விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருந்தான்.

“சகோதரனே, யார் நீ?” என்று கிருஷ்ணன் இனிமையாகக் கேட்டான்.

“வாசுசேன கர்ணன்.”

“ம்ம்ம் . . . உன் சாதி என்ன?”

கர்ணன் எதுவும் கூறவில்லை. மாறாக, அவன் சத்தம் போட்டுக் கத்த விரும்பினான். ‘நான் என்ன சாதியாக இருந்தால் என்ன?’ என்று அவன் தன் மனத்திற்குள் பொருமினான். தனக்குப் பரிச்சயமான விரக்தி

தன்னுள் பொங்கிக் கொண்டிருந்ததை அவன் உணர்ந்தான். அவனுடைய எல்லா முயற்சிகளும் வீணாகியிருந்தன. தன்னுடைய கடுமையான முயற்சிகளும், கடின உழைப்பும், கிருபர் கற்றுக் கொடுத்த காயத்திரி மந்திரத்தையும் வேதங்களையும் கற்பதற்காக கங்கையின் குளிர்ந்த நீரில் தான் நடுங்கிக் கொண்டே நின்ற அந்தக் காலைப் பொழுதுகளும் எதற்கும் பயன்படாமல் போய்விட்டிருந்ததாக அவன் நினைத்தான். அவனுக்குத் திறமை இருந்தது. மற்ற எவரொருவரையும்விட மிகக் கடினமாக உழைப்பதற்கு அவன் தயாராக இருந்தான். ஆனால் இவை எதுவும் இங்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

தான் வெறும் சூத்திரனே என்று கர்ணன் பதிலளிக்க முற்பட்டபோது, இப்போது தனக்குப் பரிச்சயமாகிவிட்டிருந்த அந்த உரத்தக் குரலை அவன் செவிமடுத்தான். "கிருஷ்ணா, நீ இங்கே நின்று அரட்டையடித்துக் கொண்டா இருக்கிறாய்? எனதருமைச் சகோதரன் தன் புல்லாங்குழலை இசைப்பதைக் கேட்பதற்கு எல்லோரும் ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த பிராமண அறிஞனை உபசரிக்கும் பெருமை எனக்குக் கிடைக்கட்டும்."

"ஆனால் பலராமா . . . "

கிருஷ்ணன் மேலும் மறுப்புத் தெரிவிப்பதற்கு முன்பாக, பலராமன் கர்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து நடக்கத் துவங்கினான். கர்ணன் அந்த யாதவர் தலைவனான பலராமனின் வேகத்திற்கு ஈடு கொடுக்கப் போராடினான். பலராமன் கிருஷ்ணனைத் திரும்பிப் பார்த்து, "உனக்கு எதில் திறமை இருக்கிறதோ, அதில் நீ கவனம் செலுத்து. ஆட்சிப் பொறுப்பை யாதவக் குழுமத்திடம் விட்டுவிடு. இப்போது இங்கிருந்து போ," என்று கூறினான்.

தன் சகோதரன் கர்ணனைத் தன் அறையை நோக்கி இழுத்துச் சென்றதைக் கண்டு ஆச்சரியத்தில் தலையாட்டிபடி, கிருஷ்ணன் ஒருசில கணங்கள் அங்கேயே நின்றான். தான் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது பலராமனுக்கு உண்மையிலேயே தெரிந்திருந்ததா என்று வியந்த அவன், 'இறுமாப்புக் கொண்ட இத்தகைய இளைஞர்கள் சமூகத்தையும் நாட்டையும் அழித்துவிடுவார்கள்,' என்று வருத்தத்தோடு நினைத்தான். 'தங்கள் அறிவால் அன்றித் தங்கள் உணர்ச்சிகளால் வழிநடத்தப்படுகின்ற உணர்ச்சிமயமான ஆண்களும் பெண்களும் எல்லோருக்கும் சீரழிவைக் கொண்டு வருகின்றனர். நான்கு குலப் பிரிவுகளில் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் தமக்கென்று ஓர் இடம் இருப்பதுதான் சமுதாயம் நிலையாகவும் உறுதியாகவும் இருப்பதற்குக் காரணம்,' என்று அவன் நினைத்தான்.

* * *

ஒரு நிலையான சமுதாயத்திற்காக உருவாக்கப்பட்ட மிகவும் ஆற்றல்வாய்ந்த ஓர் அமைப்புமுறையைக் கிருபர், சார்வகன் போன்றவர்கள் ஏன் எதிர்த்தனர் என்பதைக் கிருஷ்ணன் புரிந்து கொள்ளத் தவறினான். நான்கு குலப் பிரிவுகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மனிதனும் தன் குலத்தையும் தர்மத்தையும் அறிந்திருந்தான். எனவே தன்னுடைய வாழ்க்கைப் பாதையையும் அவன் அறிந்திருந்தான். ஒரு தேரோட்டியாகப் பிறந்த ஒருவன், தான் ஒரு சிறந்த தேரோட்டியாக ஆவதற்குத் தன்னால் முடிந்த அளவுக்குச் சிறப்பாகப் பயிற்சி பெற்று, அத்தொழிலில் திறமை மிக்கவனாகத் திகழ்ந்தான். அவன் இத்தொழிலைத் தன் குழந்தைப்பருவத்தில் இருந்தே கற்றுக் கொண்டான். தனக்குப் போட்டியாளர்கள் உருவாகிவிடுவார்களோ என்று அவன் பயப்பட வேண்டியிருக்கவில்லை. அவன் உயிர் வாழ்வதற்குத் தேவையான பணத்திற்கு அவனுக்கு உத்தரவாதம் கிடைத்தது. வர்த்தகம், புரோகிதம், மருத்துவம் போன்ற பிற தொழில்களின் விஷயத்திலும் இது உண்மையாக இருந்தது. ஆண்களும் பெண்களும் தங்களுக்கு எந்தவிதத்திலும் பயன்படாத திறமைகளைக் கற்றுக் கொள்வதில் தங்கள் பொன்னான வருடங்களை வீணாக்கவில்லை. மாறாக, தங்கள் குல தர்மத்தில் அவர்கள் கைதேர்ந்தவர்களாக ஆயினர்.

வேறென்ன வழி இருந்தது? ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமானதைக் கற்றுக் கொண்டு, உயிர் பிழைத்திருப்பதற்காக விலங்குகளைப்போல ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொள்வதா? அப்படிப்பட்டச் சமுதாயங்கள் நிலைகுலைந்து போக மட்டுமே செய்யும். சமுதாய ஒழுங்கின் பாதுகாவலர் என்ற முறையில் விஷ்ணு பகவானே நான்கு குலப் பிரிவுகளை உருவாக்கியிருந்தார். 'இவ்வுலகில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காகவே நான் பிறந்திருப்பதாக நான் ஏன் எப்போதுமே கனவு காண்கிறேன்? ஒருவேளை நான் விஷ்ணுவின் அவதாரமாக இருக்கக்கூடும். நீண்டகாலத்திற்கு முன்பே சாதுக்கள் கணித்திருந்த அந்த அவதாரம் நானாக இருக்கக்கூடும்,' என்று கிருஷ்ணன் நினைத்தான். அந்த எண்ணம் அவனுடைய முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்தது. 'நான்தான் விஷ்ணு, பிரபஞ்சத்தின் பாதுகாவலன். கேட்பதற்கு இது நன்றாக இருக்கிறது. ஏன் இருக்கக்கூடாது? உலகத்தில் தர்மத்தைப் பாதுகாப்பதற்காக நான் வந்திருக்கிறேன். நாம் நம் குல தர்மத்தைப் பின்பற்றியபோது நம் ஆயர்குல வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருந்தது. ராதா! என் முதல் காதலி. நீ இப்போது எங்கே இருக்கிறாய்?' கிருஷ்ணன்

இவ்வார்த்தைகளைக் கிட்டத்தட்ட வாய்விட்டுக் கூறிவிட்டான். பிறகு ஒரு வேடிக்கையான புன்னகை அவனுடைய உதடுகளில் அரும்பியது. 'நான் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருக்கிறேனா? ஒருபோதும் இல்லை! பிறப்பு, இறப்பு, அன்பு, போர், அமைதி போன்ற எல்லாச் சூழல்களிலும் எல்லா நேரங்களிலும் அமைதியாக இருப்பதுதான் ஒரு கச்சிதமான மனிதனின் நோக்கம். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், வெற்றி அல்லது தோல்வியைப் பற்றி அக்கறை கொள்ளாமல், தன் கடமையைச் செய்வதைப் பற்றி மட்டுமே சிந்தித்து, ஒரு தாமரை இதழின்மீது இருக்கும் ஒரு துளி தண்ணீரைப்போல வாழ வேண்டும். அதுதான் வாழ்வின் பொருள்!' என்று அவன் தனக்குள் கூறிக் கொண்டான்.

தர்மத்திற்காகச் சிலர் மடிய வேண்டியிருந்தது துரதிர்ஷ்டவசமானது. அவர்களில் சிலர் நல்லவர்கள், ஆனால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள். அஸ்தினாபுர இளவரசனான துரியோதனன், சாதிப் பிரிவினைகளை எதிர்த்தன் மூலம், சமுதாய ஒழுங்கை ஆட்டம் காணச் செய்து கொண்டிருந்த, பரந்த இதயம் படைத்த ஒரு முட்டாள் என்று கிருஷ்ணன் நினைத்தான். தான் இன்று சந்தித்திருந்த இளம் 'பிராமணன்,' தவறாக வழிநடத்தப்பட்டிருந்த இளைஞனுக்கான இன்னோர் எடுத்துக்காட்டு என்று உறுதியாக நம்பிய கிருஷ்ணன், அந்த முட்டாள் இளைஞனால் ஒரு நிமிடம்கூடத் தன்னை ஏமாற்ற முடியவில்லை என்பதை நினைத்துத் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். கர்ணனைப் பற்றி அவனுக்கு எல்லாம் தெரிந்திருந்தது. மிகச் சிறந்த சூத்திரனாக ஆவதோடு கர்ணன் மனநிறைவு அடைந்திருக்க வேண்டும், மாறாக, அவன் வேறு எதுவாகவோ ஆக விரும்பினான். அவன் நிச்சயமாக ஏகப்பட்டப் பிரச்சனையை உருவாக்கவிருந்தான் என்று கிருஷ்ணன் நினைத்தான். என்னவொரு வீணான வாழ்க்கை! பீஷ்மரும் ஓர் உன்னதமான மனிதர்தான். ஆனால் அவரும் தவறாக வழிநடத்தப்பட்டிருந்தார். அமைப்புமுறையை எதிர்த்துச் சண்டையிட அவர் விரும்பினால், சாதிகளைக் கலப்பதற்குப் பதிலாக, குலங்களின் சமத்துவத்திற்காக அவர் சண்டையிட வேண்டும். சாதிகளை ஒன்றோடொன்று கலப்பது பெரும் குழப்பத்திற்கு மட்டுமே இட்டுச் செல்லும். தன் சொந்தச் சகோதரனான பலராமன்கூட, யாதவர்களை, பசுக்களை வளர்த்தல் என்ற தங்கள் குல தர்மத்திலிருந்து விலக்கி, விவசாயம் மற்றும் வர்த்தகத்தை நோக்கி அழைத்துச் சென்றதன் மூலம், நிலைப்படுத்தப்பட்டிருந்த சமுதாய ஒழுங்கைச் சீர்குலைப்பதற்குத் தன்னாலான அனைத்தையும் செய்து கொண்டிருந்ததாகக் கிருஷ்ணன் நினைத்தான். 'இது ஒரு சீரழிவில்தான்

போய் முடியப் போகிறது. போர் மட்டுமே இதற்கு ஒரே விடையாக இருக்கக்கூடும்,' என்று கிருஷ்ணன் வருத்ததோடு நினைத்தான். 'போர் வெறுமனே மரணத்தையும் அழிவையுமே கொண்டு வரும். ஆனால் வேறு எந்த வழியும் இருக்கவில்லை. வாழ்க்கை! மரணம்! ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் அவை. மரணம் என்ற ஏதேனும் இருக்கிறதா? ஆன்மா மடிந்து போகிறதா? நிச்சயமாக ஆன்மா நிரந்தமானது. அது தொடக்கமோ அல்லது முடிவோ அற்றது. ஆன்மா! மேன்மையான பிரபஞ்ச ஆன்மாவான பரமாத்மாவில் என் பங்கு அது!'

வாழ்க்கை என்பது அந்த மேன்மையான ஆன்மாவின் உயிர்த்துடிப்புடன்கூடிய வெளிப்பாடுதான். உயிரற்ற ஒன்றாக அது மாறுவதுதான் மரணம். ஆன்மா எப்போதுமே நிலைத்திருக்கிறது. பிரபஞ்சத்தின் தாளத்திற்கு ஏற்ப அதன் வடிவங்கள் மட்டுமே மாறுகின்றன. உயிரற்ற நிலையிலிருந்து உயிர்த்துடிப்புள்ள நிலை, மரணத்திலிருந்து வாழ்க்கை, வாழ்க்கையிலிருந்து மரணம் என்று ஆற்றல் நடனமாடுகிறது. இதுதான் நிரந்தரமான சுழற்சி! என்றென்றும் நிலைத்திருக்கின்ற, துவக்கமும் முடிவுமற்ற இந்தப் பரந்த அண்டத்தில் ஒருசிலர் மடிந்தால் என்ன, வாழ்ந்தால் என்ன? ஒருவர் வாழ்ந்தாலோ அல்லது மடிந்தாலோ அது அக்கறை கொள்ளப் போகிறதா? அப்படியென்றால், மக்கள் ஏன் மரணத்தையும் போரையும் கண்டு அஞ்சுகின்றனர்? பிரபஞ்சத்தில் ஒரு சீரான தாளம் இருப்பதுபோலவே சமுதாயத்திலும் வாழ்க்கையிலும் ஒரு சீரான தாளம் இருக்க வேண்டும். தாளத்தில் ஏற்படும் தவறுகளைப்போல, துரியோதனனைப் போன்றவர்கள் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இந்த இளைஞன் இன்னொரு தலைவலியாக ஆகவிருந்தான். இது வருத்தத்திற்குரிய விஷயம். ஆனால் ஒருசிலர் மடிந்துதான் ஆக வேண்டும். எல்லோரையும், எல்லாவற்றையும் ஆட்கொள்கின்ற ஒரு போர் தேவைப்படும். 'அது என்னுடைய சுமை. அது என்னுடைய கடமையாகவும் என்னுடைய தர்மமாகவும்கூட இருக்கக்கூடும். பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் நான் அதைச் செய்துதான் ஆக வேண்டும்,' என்று கிருஷ்ணன் நினைத்தான்.

'கர்ணா, நீ எங்கே ஓடிக் கொண்டிருக்கிறாய்? இறுதியில் நீ என்னை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.' தன்னுடைய அந்த எண்ணம் கிருஷ்ணனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

"கிருஷ்ணா, அவையினர் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்," என்று கூறியபடி ஒரு யாதவ முதியவர் அவனருகே வந்து அவனுடைய தோளைத் தொட்டார்.

கிருஷ்ணன் அவரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டு, தன்

இடைக் கச்சையில் இருந்து தன் புல்லாங்குழலை எடுத்துக் கொண்டு, அவையை நோக்கி நடந்தான். அவன் அவைக்குள் நுழைந்தபோது, ஒட்டுமொத்த அவையினரும் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவன் அவர்கள் முன்னால் நின்று, தங்கள் மிருதங்கங்களைத் தட்டித் தன்னை வரவேற்ற இசைக் கலைஞர்களைப் பார்த்துப் புன்னகைத்தான். விரைவில், அவனுடைய இசையின் மாயாஜாலம் அந்த ஒட்டுமொத்த அவையையும் வேறோர் உலகிற்குக் கூட்டிச் சென்றது. அங்கு அழகும் அன்பும் மட்டுமே நிலை கொண்டிருந்தன. யதார்த்த உலகம் ஒருமித்தக் கவனத்துடன் ஆடாமல் அசையாமல் நின்றது.

* * *

இதற்கிடையே, தன் இருக்கையின்மீது அமர்ந்திருந்த யாதவத் தலைவனின் முன்னால் கர்ணன் நடுங்கியபடி நின்றான். தான் ஒரு பிராமணனாக நடித்ததால், அந்த யாதவத் தலைவன் தனக்கு மரண தண்டனை வழங்கி உத்தரவிட்டால், அவனுடன் சண்டையிடுவதென்று கர்ணன் தீர்மானித்தான். அவையிலிருந்து வந்த இசை லேசாக அவனுடைய காதுகளில் ஒலித்தது. அவன் அதைத் தடுக்க முயன்றான்.

பலராமன் ஓர் இருக்கையைச் சுட்டிக்காட்டி, "நண்பனே, உட்கார்," என்று கூறினான்.

அவனுடைய குரலில் வெளிப்பட்டப் பரிவைக் கேட்டுக் கர்ணன் ஆச்சரியமடைந்தான். 'இவன் தன்னுடைய தம்பியைப்போல அவ்வளவு கவனமானவன் இல்லைபோலும். இவன் என்னுடைய ஏமாற்றுத்தனத்தைக் கண்டுபிடிக்கவில்லை,' என்று நினைத்தக் கர்ணன், இனியும் தொடர்ந்து நடிக்க விரும்பவில்லை. "ஐயா, நீங்கள் நினைப்பதுபோல நான் ஒரு பிராமணன் இல்லை. நான் ஒரு சூத்திரன், தாழ்ந்த சாதிக்காரன். பறையர்கள் மற்றும் பிற தீண்டத்தகாதவர்களுக்குச் சிறிது மேலான சாதி என்னுடையது," என்று அவன் கூறினான்.

"ஓ! ஒரு சூத்திரன் என்பவன் யார்? அவன் ஏன் ஒரு பிராமணனைவிடத் தாழ்ந்தவனாகவும் ஒரு பறையனைவிட உயர்ந்தவனாகவும் இருக்கிறான்? நான் அறியாமை மிக்க ஒரு ஒரு சாதாரண விவசாயி. என் கேள்விக்கான பதிலை எனக்குப் புரியும்படி விளக்கு," என்று பலராமன் கூறினான்.

பலராமனின் கேள்வியில் இருந்த புன்னகையைக் கர்ணன் உணர்ந்தான். அது அவனைக் கோபப்படுத்தியது. இந்த ஏமாற்று வேலைக்குத் தான் ஒருபோதும் உடன்பட்டிருக்கக்கூடாது என்றும்,

அஸ்தினாபுரத்திலேயே தங்கியிருந்து தன் தந்தைக்கு உதவியிருக்க வேண்டும் என்றும் அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான். 'கங்கையில் மூழ்கி ஒரேயடியாக என் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தால் அதைவிடச் சிறப்பாக இருந்திருக்கும். கிருபர் மட்டும் என்னைக் காப்பாற்றுவதில் பிடிவாதமாக இருந்திருக்காவிட்டால் நிச்சயமாக அது நடந்திருக்கும். இந்த வேடிக்கை விளையாட்டெல்லாம் கிருபரின் கிறுக்குத்தனமான யோசனைதான்,' என்று அவன் நினைத்தான். "என் தந்தை ஒரு தேரோட்டி, அவர் ஒரு சூத்திரர். பறையர்கள் என்போர் . . ." தான் கூறிய அந்த வெறுக்கத்தக்க வார்த்தைகளைக் கேட்டு அவனே அதிர்ச்சியடைந்தான். இப்படிப்பட்ட வார்த்தைகள் தன் வாயிலிருந்து வெளிப்பட்டதே, தானும் சாதிப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டவன் அல்ல என்பதைத்தான் அவனுக்குக் காட்டியது.

பெருமிதம் மிக்க அந்த இளைஞன், தன்னுடைய சொந்த வார்த்தைகளைக் கேட்டுச் சங்கடமாக நெளிந்து கொண்டிருந்ததை பலராமன் வெகுவாக ரசித்தான். "மற்றவர்கள் எந்த வார்த்தைகளால் உன்னைப் பழித்துரைப்பதாக நீ நினைத்துக் கொண்டிருந்தாயோ, அதே வார்த்தைகளை உன்னாலும் பயன்படுத்த முடிகிறது என்பதை நீ உணர்ந்து கொள்ளும்வரை, பிராமணர்களைப் பற்றி நீ மோசமாக நினைத்திருக்கக்கூடும். நீ பிராமணர்களோடு சேர்ந்து பயணம் செய்திருக்கிறாய். தனிநபர்கள் என்ற முறையில் அவர்கள் எவ்வளவு தூரம் வெறுக்கத்தக்கவர்கள் என்று நீ கருதுகிறாய்?"

கர்ணன் மௌனம் சாதித்தான். நிமிடங்கள் கரைந்து செல்லச் செல்ல, அவன் தன்னைப் பற்றி அதிக அவமானமாக உணர்ந்து கொண்டிருந்தான். தன்னுடைய பெரும்பான்மையான பயணத்தின்போது தனக்குத் துணையாக இருந்து, தன்னை ஒரு மகன்போல நடத்தி வந்திருந்த அந்த வயதான பிராமணனைப் பற்றி அவன் நினைத்துப் பார்த்தான். கர்ணன் அதுவரை சந்தித்திருந்ததிலேயே மிக அதிகமாகக் கற்றறிந்திருந்த ஒருவனாக அந்த முதியவன் திகழ்ந்தான். எல்லோரும் அவனைப் பெரிதும் மதித்தனர். கர்ணன் ஒருமுறை நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவனுக்காக ஒரு மருத்துவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, எழுபது வயதைக் கடந்திருந்த அந்த முதியவன், மூன்று மணிநேரம் மலைப்பாதையில் நடந்து சென்றிருந்தான். 'நான் ஒரு பிராமணன் அல்ல, மாறாக ஒரு சூத்திரனே என்பதை அவன் அறிந்திருந்தால், ஒருவேளை அவன் அவ்வாறு செய்யாமல் போயிருக்கக்கூடும்,' என்று கர்ணன் வெறுப்போடு நினைத்தான்.

“உன்னுடைய அக்குழுவில், உன்னதமான நடத்தையைக் கொண்ட சிலரையும், போலி மருத்துவர்கள் சிலரையும் நீ பார்த்திருக்கக்கூடும். அதேபோல அக்குழுவில் பெரும்பாலானவர்கள், மற்ற அனைவரும் எதைச் செய்து கொண்டிருக்கின்றனரோ, எந்தக் கேள்வியும் கேட்காமல் அதை அப்படியே பின்பற்றுபவர்களாக இருப்பதையும் நீ பார்த்திருக்கக்கூடும். எந்தவொரு மக்கட்குழுவை எடுத்துக் கொண்டாலும், இதே விஷயத்தைத்தான் நீ கண்டறிவாய். அவர்களும் சமுதாய அமைப்புமுறைக்குப் பலியாகியுள்ளவர்கள்தான் என்பதை நினைவில் வைத்துக் கொள். சாதி விதிமுறைகளைப் பணிவாகக் கடைபிடிக்கின்ற மக்கள், உண்மையில் அவ்விதிமுறைகளை மீறுவதற்குப் பயப்படுகின்ற எளிய மக்கள்தான். அவர்கள் கோழைகளேயன்றி, கொடூரமானவர்கள் அல்ல. அவர்களைப் புரிதலோடு நடத்த வேண்டுமே தவிர, ஏளனப்படுத்தக்கூடாது. எதிர்காலம் உன்னைப் போன்ற இளைஞர்களின் கைகளில்தான் உள்ளது. உன்னைப் போன்றவர்கள்தான் மாற்றத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும். நம் நாட்டிற்கு ஒரு சிறந்த அமைப்புமுறை தேவைப்படுகிறது. நீ ஏழைப் பறையர்களைவிட மேலானவனோ அல்லது பிராமணன், சத்திரியன், வைசியன், அல்லது வேறு எந்தவொரு சாதி அல்லது குலத்தைச் சேர்ந்தவனைவிடத் தாழ்ந்தவனோ இல்லை. நீ யார் என்று நீ நினைக்கிறாயோ, அதுதான் நீ. கிருபர் இந்நேரம் அதை உனக்குக் கற்றுக் கொடுத்திருப்பார் என்று நான் நம்பியிருந்தேன்.”

தன்னுடைய குருவின் பெயரைச் செவிமடுத்ததும் கர்ணன் அதிர்ச்சியடைந்தான். பலராமன் சிரித்தான். “நீ ஏன் இவ்வளவு அதிர்ச்சி அடைகிறாய்? அவரும் நானும் பழைய நண்பர்கள். நீ அஸ்தினாபுரத்தைவிட்டுப் புறப்பட்ட உடனேயே அவர் உன்னைப் பற்றி எனக்குக் கடிதம் எழுதினார். உண்மையில், நீ பிடிபட்டுவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கு உன் குரு இன்னும் ஒருபடி மேலே சென்றுள்ளார். சில சடங்குகளில் உனக்கு அவ்வளவாகப் பயிற்சி இல்லை என்பதை அவர் அறிந்துள்ளதால், உன் குழுவில் மிகச் சிறந்த கல்வியறிவு பெற்ற ஒரு பிராமணனின் பொறுப்பில் அவர் உன்னை ஒப்படைத்தார். உன்னுடன் பயணம் செய்து, ஒரு முறை உனக்குச் செவிலியைப்போலச் சேவகம் செய்த அந்த முதியவன்தான் கிருபரின் கோரிக்கையின் பேரில் உன்னைப் பாதுகாப்பவனாகவும் உன்னுடைய வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளான்.”

சிறிது நேரத்திற்கு முன்பு அந்த முதியவனைப் பற்றித் தான் மிக மோசமாக எண்ணியதை நினைத்துக் கர்ணன் அவமானத்தால் உள்ளூர எரிந்தான். கர்ணன் ஒரு சூத்திரன் என்பதை அப்பயணம் நெடுகிலும்

அவன் அறிந்திருந்தாலும், பொதுவாகத் தன்னைவிட உயர்ந்த சாதியினரிடம் இருப்பதாகக் கர்ணன் கருதிய பாரபட்சத்தையோ அல்லது வெறுப்பையோ அந்த முதியவன் ஒருபோதும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

"கர்ணா, வாழ்வில் ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக் கொள். ஒரு குழுவினரோடு எந்தத் தீமையையும் ஒருபோதும் தொடர்புபடுத்தாதே. அவர்களுடைய பாவங்களை நீ வெறுப்பதில் தவறில்லை, ஆனால் அந்த மக்களை வெறுக்காதே. தாளார மனப்பான்மையுடன் இரு. மற்றவர்களுக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இரு. அப்போது அதற்குக் கைமாறாக இவ்வுலகம் பன்மடங்கில் உனக்குத் திருப்பிக் கொடுக்கும். உன்னைப் போன்ற இளைஞர்கள் என்னைப் போன்ற வயதானவர்களிடமிருந்து அறிவுரை பெறுவதை விரும்புவதில்லை என்பதை நான் அறிவேன். எனவே, நான் மேலும் அறிவுறுத்தி உனக்குச் சலிப்பை ஏற்படுத்த மாட்டேன். நீ முசிறிக்குப் போகவிருப்பதால், உனக்கு விருப்பமிருந்தால், என்னுடைய கப்பல்களில் ஒன்றில் நீ பயணம் செய்யலாம். நீ போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு அது வேகமாக உன்னைக் கூட்டிச் செல்லும். உன் வயதில் இருக்கும் இளைஞர்களுக்குக் கப்பல் பயணம் மிகவும் குதூகலமூட்டுவதாகவும் சாகசம் நிறைந்ததாகவும் இருக்கும். புரோகிதர்கள் ஆணையிட்டுள்ள சமுதாய வழக்கம் ஒன்றை மீறுவதற்கு நான் உன்னைத் தூண்டுகிறேன் என்று எனக்குத் தெரியும். கடல் வழியாகப் பயணம் செய்யும் எல்லோருமே தங்கள் சாதியை இழந்துவிட்டால், நமக்கு நிகழக்கூடிய சிறந்த விஷயம் அதுவாகத்தான் இருக்கும். நம்முடைய நாகரீகம் கடந்தகாலத்தில் பல மாபெரும் சாகச வீரர்களையும் கடலோடிகளையும் உருவாக்கியது. புகழ்மிக்க அந்த நாட்களை நான் திரும்பக் கொண்டு வர விரும்புகிறேன். அதனால்தான் என்னுடைய கனவு நகரமான துவாரகையை நான் கடல் வழியாக உருவாக்குவதைத் தேர்ந்தெடுத்துள்ளேன். முன்பொரு காலத்தில் தெற்கே அசுரர்களின் பெருமையாக இருந்த ஒன்றை, ஒட்டுமொத்த பரதகண்டத்திற்கும் நான் கொண்டு வர விரும்புகிறேன். நான் இந்தப் பரந்த நிலத்தின் கிழக்கு மற்றும் மேற்குக் கரைகள் நெடுகிலும் நகரங்கள் பலவற்றை உருவாக்குவேன். நம்முடைய சக்திவாய்ந்த நதிகளையொட்டிப் பெரிய துறைமுகங்களை அமைத்து, அவற்றின் மூலம் அந்த நகரங்களை நான் ஒன்றோடொன்று இணைப்பேன்."

பலராமன் ஏதோ ஒன்றால் ஆட்கொள்ளப்பட்டவன்போல மேலும் கீழும் நடந்தான். யாதவர்களின் விந்தையான தலைவன் தன் சொந்த இனத்திற்காக மட்டுமன்றி, இந்த ஒட்டுமொத்த பரதகண்டத்திற்குமான

தன்னுடைய முன்னோக்கை வெளிப்படையாகக் கூறியதைக் கர்ணன் பிரமிப்புடன் பார்த்தான். "நான் என் மக்களுக்கு இவ்வுலகைத் திறந்துவிட விரும்புகிறேன். அவர்கள் வெறுமனே பசுக்களை மேய்த்துக் கொண்டு, சுயநலம் கொண்ட புரோகிதர்களால் வழிநடத்தப்பட்டு, பண்டைய சடங்குகள் மற்றும் அர்த்தமற்ற உளறல்களில் சிக்கிக் கொண்டு அறியாமையில் உழலக்கூடாது. ஆட்சி செய்பவர்கள் தங்களுக்கு விருப்பமான ஆயுதங்களைச் சுமந்து கொண்டு சுற்றித் திரிவதை நீ பார்த்திருப்பாய். அவர்கள் அனைவரும் தலைவர்கள். ஏனெனில், வேட்டையாடுவதற்கும் கொல்வதற்கும் உருக்குலைப்பதற்குமான அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களிடம் உள்ள வாள்மீது உள்ள அச்சம்தான் அவர்களுக்கு மற்றவர்களின் மதிப்பைப் பெற்றுக் கொடுக்கிறது. நானும் இளைஞனாக இருந்தபோது என்னுடைய உருட்டுக்கட்டையைக் கொண்டு என் மக்களின் மதிப்பைப் பெற்று வந்தேன். ஆனால் அறிவு என் தலைக்குள் மெல்ல மெல்ல இறங்கியுள்ளதால், என்னுடைய செயல்கள் மூலம் மக்களின் மதிப்பைப் பெறுவதுதான் உண்மையான தலைமைத்துவம் என்று நான் நம்பத் துவங்கியுள்ளேன். எனவே என்னுடைய உருட்டுக்கட்டையைத் தூக்கியெறிந்துவிட்டு, இப்போது ஓர் ஏரைச் சுமந்து திரிகிறேன். இது வெறுமனே விவசாயத்திற்கான ஒரு கருவி மட்டுமல்ல. முன்னேற்றத்திற்கான ஓர் அடையாளமாக நான் இதைச் சுமக்கிறேன். விவசாயம் தழைக்க வேண்டும், வர்த்தகம் பெருக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிருபர், பீஷ்மர், விதுரன், சார்வகன் ஆகியோரைப்போலவே எனக்கும் இக்கனவு இருக்கிறது. கர்ணா, நீ இவ்வளவு ஆச்சரியப்படத் தேவையில்லை. எங்கள் எல்லோருக்குமே ஒரே கனவுதான் இருக்கிறது. ஆனால் எங்களுடைய வழிகள் மட்டும் வித்தியாசமானவை. இந்நாட்டிலிருந்து பசியை முற்றிலுமாக ஒழித்துக்கட்டி, விலங்குகளைப்போல வாழ்கின்ற மக்களுக்கு அவர்களுக்குரிய கண்ணியத்தைக் கொடுப்பதற்கான எங்கள் கனவு எங்கள் வாழ்நாட்களில் நிறைவேறாமல் போகக்கூடும். ஆனால், அறிவைத் தேடி ஆயிரக்கணக்கான மைல்கள் பயணிக்கத் துணிச்சல் கொண்டுள்ள உன்னைப் போன்ற இளைஞர்கள் இருக்கும்போது நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

கர்ணனுக்குத் தொண்டை அடைத்தது. இந்த ஏழைச் சூத்திரன்மீது இதற்கு முன்பு யாரும் ஒருபோதும் நம்பிக்கை வைத்ததில்லை, அவனை சமமாக நடத்திப் பேசியதில்லை. இது அவனுக்கு உற்சாகமூட்டுவதாக இருந்தது. என்றேனும் ஒருநாள் தானும் ஒரு மாபெரும் வீரனாக ஆகக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. இதுவரை அது ஒரு

சுயநலமான கனவாக இருந்திருந்தது. ஆனால் இப்போது, அதனோடு ஒரு மாபெரும் குறிக்கோள் இணைந்து கொண்டிருந்தது. ஒரு போர்வீரனாக ஆவது வெறுமனே ஏழ்மையிலிருந்து தப்பிப்பதற்கான ஒரு வழியாக மட்டும் இருக்காது. அது சுய அறிதல் குறித்த ஒரு யாத்திரையாக, ஒரு சாகசப் பயணமாக இருக்கும். அது ஓர் அற்பமான நோக்கத்தைவிட மிகப் பெரிய லட்சியமாக இருக்கும். அவனுடைய கனவு இப்போது அவனுடைய தலைவிதியாக மாறியிருந்தது.

"கர்ணா, நீ பரசுராமனின் இடத்தை அடையும்போது, உனக்குக் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தக்கூடிய பல விஷயங்களை அங்கு நீ காண்பாய். பெருமிதம் கொண்ட ஓர் இனம், சாதி அடுக்கதிகாரமுறையால் கட்டுப்படுத்தப்பட்டு, மதம் விதித்துள்ள அர்த்தமற்றத் தடைகளின்கீழ் நாய்களைப்போல வாழ்ந்து கொண்டிருப்பதை நீ பார்ப்பாய். நீ மனக்குழப்பம் கொண்டு, கோபத்தில் அவசரப்பட்டு முட்டாள்தனமாக ஏதாவது செய்துவிடாதே. நீ அங்கு ஒரு நோக்கத்திற்காகப் போகிறாய். இந்த ஒட்டுமொத்த பரதகண்டத்தில், பீஷ்மர் மற்றும் துரோணர் உட்பட, பரசுராமனின் திறமைக்கு இணையான திறமை கொண்ட ஒருவர்கூடக் கிடையாது. உன்னால் முடிந்த எல்லாவற்றையும் அவனிடமிருந்து கற்றுக் கொள். என்றேனும் ஒருநாள் அந்தத் திறமையை ஒரு மாபெரும் குறிக்கோளுக்காக நீ பயன்படுத்த வேண்டிய நேரம் நிச்சயமாக வரும். பரசுராமன் கேட்கும்போது நீ ஒரு பிராமணன் என்று கூறத் தயங்காதே."

பலராமனின் கடைசி சில வார்த்தைகள் கர்ணனை யதார்த்த உலகிற்கு அழைத்து வந்தன. தன்னை அச்சுறுத்தும் அக்கேள்வியைப் பரசுராமன் கேட்கும்போது எப்படித் தான் விடையளிக்கப் போகிறோம் என்று அவன் பயந்தான். தன் வாழ்நாளில் அவன் ஒரு பொய்யைக்கூடக் கூறியிருந்ததில்லை. இப்போது தன் லட்சியத்தை அடைவதற்காக அவன் பொய்யுரைக்க வேண்டியிருந்தது. அது திருடுவதைப் போன்றது இல்லையா என்று அவன் நினைத்தான்.

"கர்ணா, பரசுராமன் உன்னுடைய சாதியைப் பற்றிக் கேட்கும்போது தர்மசங்கடமாக உணராதே. அவனுடைய கண்களுக்குள் உற்றுப் பார்த்து, நீ ஒரு பிராமணன் என்று துணிச்சலோடு கூறு. அவன் தனக்கே உரிய குறுகிய வழியில் உன்னிடம் கேட்பான், ஆனால் உன்னுடைய புனித நூல்களில் உறைந்துள்ள உண்மையுடன் நீ அவனுக்கு பதில் கூறு. நீ அறிவைத் தேடிச் செல்கிறாய். அந்த விதத்தில் பார்த்தால், நீ உண்மையிலேயே ஒரு பிராமணன்தான். நீ பரசுராமனைவிட மிகச் சிறந்த பிராமணன். நீ ஒரு போர்வீரனாக ஆகி உன் சமுதாயத்திற்காக உழைக்கும்போது, பலவீனமானவர்களைப்

பாதுகாக்கின்ற ஒரு சத்திரியனாக நீ ஆவாய். உன்னுடைய வேலையின் மூலமாக மக்களுக்கு நீ செழிப்பைக் கொண்டு வரும்போது, நீ ஒரு வைசியனாக ஆவாய். உன்னுடைய அன்பு, பரிவு, சேவை ஆகியவற்றின் மூலம் மக்களுக்கு நீ மகிழ்ச்சியைக் கொண்டு வரும்போது, நீ ஒரு சூத்திரனாக ஆவாய். நீ இந்த நான்கு வர்ணங்களாகவும் அதற்கு மேலாகவும் இருப்பாய். நீ மனிதத்தன்மை கொண்ட ஒரு மனிதனாக இருப்பாய். அதைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை."

கடல் நீரின் உவர்ப்புச் சுவையைச் சுமந்து வந்த ஒரு மெல்லிய காற்று, அந்த அறையிலிருந்த திரைச்சீலைகளைப் படபடக்கச் செய்தது. சரக்குகளை ஏற்றுமாறு பணியாட்களுக்கு யாரோ உத்தரவிட்டுக் கொண்டிருந்த சத்தம் வெளியிலிருந்து கேட்டது. கர்ணன் பணிவாகத் தலை குனிந்து வணங்கி, அந்த யாதவத் தலைவனின் பாதங்களைத் தொட்டான். பலராமன் தன் மாணவனை ஆசீர்வதித்துவிட்டு, தன் இடையிலிருந்து ஒரு சுருக்குப் பை நிறையத் தங்க நாணயங்களை எடுத்துக் கர்ணனிடம் அவற்றைக் கொடுத்தான். "உன்னுடைய செலவுகளுக்கு இது உனக்கு உதவும். என்னுடைய முதல் சரக்குக் கப்பல் இப்போது இங்கிருந்து எந்த நேரத்திலும் புறப்பட்டுவிடும். இந்தப் புனித நகரமான பிரபாசத்திலிருந்து நான் அதைத் துவக்கி வைக்க விரும்பினேன். அங்கே பார், பாய்மரங்கள் இறக்கிவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சோமனாதக் கடவுளின் கருணைமிக்கக் கண்கள் உன்னை எப்போதும் பின்தொடரட்டும். கர்ணா, வாழ்வில் மிகச் சிறந்தவை உனக்குக் கிடைக்க என் வாழ்த்துக்கள். என்னுடைய சரக்குகள் குறித்தச் சில விபரங்களை இப்போது நான் பார்வையிட வேண்டியுள்ளது. ஆனால் வேறு ஏதேனும் ஒருநாள் அதிக ஓய்வான சூழல்களில் நாம் சந்திக்கலாம். என் இளம் நண்பனே, நம்முடைய அடுத்தச் சந்திப்பிற்குள், பரதகண்டத்திலேயே மிகச் சிறந்த வீரனாக நீ ஆகிவிடுவாய். நீ எங்களுடைய கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கிறாய் என்பதை நினைவில் வைத்துக் கொள். நீ உன்னுடைய இலக்கை அடையும்போது, இந்த நாட்டின் ஒவ்வொரு புல்லுக்கும் நீ திருப்பிச் செலுத்த வேண்டிய கைமாற்றை மறந்துவிடாதே. கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்டும்."

பலராமன் வேறு பக்கமாகத் திரும்பித் தன்னுடைய ஆழமான உணர்ச்சியை மறைக்க முயற்சித்துக் கொண்டிருந்ததைக் கர்ணன் பார்த்தான். தன் கண்களில் கண்ணீருடன் அந்த யாதவத் தலைவன் அந்தச் சூத்திரச் சிறுவனைக் கடந்து சென்றான். கர்ணன் உத்வேகம் பெற்றிருந்தான். அவனுடைய சுய சந்தேகங்கள் மறைந்து போயிருந்தன.

பத்து மாதங்களில் கிருபர் கற்றுக் கொடுக்க முடியாததை, பலராமன் பத்தே நிமிடங்களில் சாதித்திருந்தான். சிறிது நேரத்திற்கு முன்பு தன் ஏமாற்றுத்தனத்தின் சுமை தாங்காமல் அந்த யாதவனின் அறைக்குள் நுழைந்திருந்த கர்ணன், இப்போது முற்றிலும் வித்தியாசமானவனாக ஆகியிருந்தான். இப்போது தன் தலைவிதி குறித்த ஒரு முன்னோக்கு அந்த இளைஞனிடம் இருந்தது. யாராலும் அவனுடைய வழியில் இனி குறுக்கிட முடியாது. ஆனால் கர்ணன் அந்த அறையைவிட்டு வெளியேறி, ஒளிமயமான மதிய வேளைக்குள் காலெடுத்து வைத்தபோது, கிருஷ்ணனின் கரிய வடிவம் தன் வழியில் நின்று கொண்டிருந்ததை அவன் கண்டான்.

"நீ யார்?" என்று கிருஷ்ணன் கேட்டான்.

கர்ணன் புன்னகைத்தான். "ஐயா, நான் யாருமில்லை."

"புத்திசாலித்தனமான பதில்! ஆனால் எனக்கு ஒரு நேரடியான பதிலைக் கொடு. நீ யார்?"

"நான் எல்லோராகவும் இருக்கிறேன்," என்று கூறிய கர்ணன், சத்தம் போட்டுச் சிரித்துவிட்டு, பலராமனின் சகோதரனைத் தன் வழியிலிருந்து மென்மையாக விலக்கித் தள்ளினான்.

கிருஷ்ணன் அவனைத் தடுத்து நிறுத்த விரும்பினான். ஆனால் ஒருசில அடிகள் தள்ளித் தன் சகோதரன் பலராமன் தங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்ததை அவன் கவனித்தான். எனவே, கர்ணன் அங்கிருந்து நகர்ந்தபோது அவன் மௌனமாக நின்றான்.

பணியாளர்கள் பலராமனின் கப்பலை இப்போது நீருக்குள் தள்ளியிருந்தனர். அலைகளின்மீது அக்கப்பல் மென்மையாக மேலும் கீழுமாக ஆடிக் கொண்டிருந்தது. கர்ணன் அதனுள் நுழைந்தபோது பாய்மரங்கள் பரிசோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவனுடைய மூட்டையை ஒரு மூலையில் வைக்குமாறு கப்பற்தலைவன் கர்ணனுக்கு உத்தரவிட்டான். வானுயரத்திற்கு உயர்ந்து நின்ற சோமனாதர் கோவிலின் மினுமினுப்பான கோபுரத்தையும், பரந்து விரிந்த பிரபாச நகரத்தையும் பார்த்தபடி, கர்ணன் நெடுநேரம் அமர்ந்திருந்தான். மறைந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனின் ஒளியில் கடல் காவி நிறத்திற்கு மாறி, கடல் புறாக்களின் சத்தங்கள் காற்றில் எதிரொலித்தபோது, அக்கப்பல் அங்கிருந்து நகரத் துவங்கியதைக் கர்ணன் உணர்ந்தான். நங்கூரம் உயர்த்தப்பட்டிருந்தது. கப்பலைப் பெருங்கடலுக்குள் கொண்டு செல்வதற்காக, வரிசையாக அமர்ந்திருந்த பலர் வேகவேகமாகத் துடுப்புப் போட்டுக் கொண்டிருந்தனர். காற்றைப் பிடிப்பதற்காகப் பாய்மரங்கள் இறக்கிவிடப்பட்டன. கப்பல் நிதானமடைவதற்கு முன்பு லேசாக ஆடியபோது, தான்

விழுந்துவிடாமல் இருப்பதற்காகக் கர்ணன் அக்கப்பலின் தடுப்புக் கைப்பிடியை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். மாலைக் கதிரொளியில் கோவில் கோபுரங்கள் மங்கலாக ஒளிர்ந்து கொண்டிருந்ததையும் மேற்கு வானம் சிவந்து கொண்டிருந்ததையும் கர்ணன் பார்த்தான்.

"தெற்கே திருப்பு!" என்று யாரோ கத்தியவுடன், அக்கப்பல் திரும்பி வேகம் பிடித்தது.

தன்னுடைய கருநிறத் தலைமுடி காற்றில் பறக்க, வானில் சுக்கிரன் எழுந்து கொண்டிருக்க, பயமும் நம்பிக்கையும் மாறி மாறித் தன் மனத்திற்குள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க, கர்ணன் மௌனமாக நின்று கொண்டிருந்தான். கடல் வழியாகப் பயணம் செய்து கொண்டிருந்ததன் மூலம் அவன் தன் சாதியை இழந்திருந்தான். இது அவனுக்கு ஒரு வினோதமான மகிழ்ச்சியைக் கொடுத்தது. பகலவனின் கடைசிக் கீற்றுகள் அவனை ஆசீர்வதிப்பதுபோல அவனுடைய வலிமையான உடலைத் தழுவி சென்று, பிறகு கடலின் ஆழங்களுக்குள் மூழ்கின. காற்றில் அசைந்தாடிக் கொண்டும், துடுப்புப் போட்டுக் கொண்டிருந்தவர்களின் பாடலின் சீரான தாளத்திற்கு ஏற்ப நகர்ந்து கொண்டும், அந்தக் கப்பல், அந்த இளைஞனையும் அவனுடைய சுமையான தலைவிதியையும் கடவுள்களின் ஆபத்தான பூமிக்குச் சுமந்து சென்றது.

9

காட்டுவிலங்கு

பறவைகளின் கீச்சொலி கேட்டுக் காடு தன் உறக்கத்திலிருந்து மெல்லக் கண் விழித்தது. மிருதுவாக இருந்த புல்வெளிப் படுக்கையைவிட்டு எழுவதற்கு ஜரனுக்கு மனமிருக்கவில்லை. மரங்கள் கொடுத்த நிழலில் படுத்துக் கொண்டு, நாணப்பட்டு நின்ற பூமியிலிருந்து மெதுவாக மேலெழும்பிய பனிமூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது சுகமான அனுபவமாக இருந்தது. வானளாவ உயர்ந்து நின்ற மரங்களைக் கதிரவனின் ஒளிக் கற்றைகள் துளையிட்டன. மர உச்சிகளில் குரங்குகள் தங்கள் புத்திசாலித்தனமான சேட்டைகளைத் துவக்கியிருந்தன. காரணம் ஏதுமின்றி அவை ஒன்றையொன்று பார்த்துக் கத்தியபடியே கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்தன. ஏகலைவன் ஒரு வில்லைத் தயாரிப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்ததை ஜரன் தன் ஓரக்கண்ணால் பார்த்தான். ஆர்வம் சோம்பேறித்தனத்தை ஓரங்கட்ட, ஜரன் தன் புல்வெளிப் படுக்கையைவிட்டுத் துள்ளி எழுந்து, நேராக ஏகலைவனை நோக்கி ஓடிச் சென்று, அம்பறாத்தூணியிலிருந்து ஓர் அம்பை வெளியே எடுத்தான்.

ஏகலைவன் தன் தலையைக்கூட நிமிர்த்திப் பார்க்காமல், "மூடனே, அதைத் தொடாதே!" என்று கத்தினான். வில்லைப் பளிச்சூட்டுவதில் அவன் மும்முரமாக இருந்தான். பகலவனின் ஒளியில் அது ஒளிரத் துவங்கியிருந்தது.

"நீ ஒரு வில்லாளி ஆவதில் உண்மையிலேயே மிகத் தீவிரமாக

இருக்கிறாயா?" என்ற ஜரனின் கேள்விக்கு ஏகலைவனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. 'ஏகலைவன் வில் வித்தையைக் கற்றுக் கொண்டால், நாம் சாப்பிட ஏராளமானவை நமக்குக் கிடைக்கும்,' என்று ஜரன் தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டே, தன்னுடைய ஒரு விரலைக் கொண்டு ஓர் அம்பின் கூரிய முனையைத் தடவினான்.

"ஆஆஆ!" என்று ஜரன் பெரிதாக ஊளையிட்டான். ஏகலைவன் குறி பார்த்து எறிந்திருந்த ஒரு கல், ஜரனின் கால் மூட்டு ஒன்றைப் பதம் பார்த்துவிட்டு, ஒருசில அடிகள் உருண்டோடிச் சென்றது.

சிணுங்கிக் கொண்டிருந்த ஜரனை நோக்கித் தன் விரலை நீட்டியபடி, "அதைத் தொடாதே என்று நான் கூறினேன் இல்லையா?" என்று ஏகலைவன் உறுமினான்.

ஏகலைவனிடமிருந்து வந்த வழக்கமான பரிகாசம் அல்ல அது என்ற உணர்வு ஜரனுக்கு ஏற்பட்டது. இரவோடு இரவாக ஏகலைவனுக்கு அதிக சக்தியும் அதிக அதிகாரமும் கிடைத்திருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. ஏகலைவன் தன் வில்லை நாணேற்றி, அதை இரண்டு முறை சுண்டியிழுத்துப் பரிசோதித்ததை ஜரன் கண்டான். பிறகு மிகுந்த பெருமிதத்துடன் அவன் ஓர் அம்பை எடுத்து, அந்த அம்பு நேராக இருந்ததா என்று தன் ஒரு கண்ணை மூடிப் பரிசோதித்து, பிறகு அதைத் தன் வில்லில் வைத்துக் குறி பார்த்தான். கிட்டத்தட்டப் பதினைந்தடி விட்டம் கொண்ட ஒரு பெரிய அத்தி மரத்தின் அடிமரத்தின்மீது அவன் ஒரு வட்டத்தை வரைந்திருந்தான். ஜரன் மூச்சுவிட மறந்து காத்திருந்தான். நீண்டநேரம்போலத் தோன்றிய காத்திருப்பிற்குப் பிறகு, ஏகலைவன் தன் அம்பை விடுவித்தான். அது காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது. ஆனால் அந்த அத்தி மரத்தின் அடிமரத்தின்மீது எந்த அம்பும் குத்திட்டு நிற்கவில்லை. ஏகலைவன் தன் குறியைத் தவறவிட்டிருந்தான். உண்மையில், அவன் அந்த ஒட்டுமொத்தப் பெரிய மரத்தையே தவறவிட்டிருந்தான்! ஜரன் உரக்கச் சிரித்து அவனைக் கேலி செய்தபடியே உற்சாகத்தில் குட்டிக்கரணம் போட்டான். ஏகலைவன் அவனை எட்டி உதைத்தான், ஆனால் ஜரன் அவனைச் சமாளித்துக் கொண்டே தொடர்ந்து சிரித்தான். ஏகலைவனால் இனி தன்மீது எந்த அதிகாரமும் செலுத்த முடியாது என்பதை ஜரன் புரிந்து கொண்டான். இனி தான் அவனைக் கண்டு பயப்படத் தேவையில்லை என்பதை அவன் கண்டுகொண்டான். அவன் தனித்துவமானவன் அல்ல என்பதையும், அவனும் தன்னைப்போல ஒரு சாதாரணப் பிறவிதான் என்பதையும் ஜரன் புரிந்து கொண்டான். ஏகலைவன் எறிந்த அம்பைத் தேடி ஜரன் உற்சாகமாக ஓடினான். அது அந்த மரத்தின் வலப்புறமாகப் பத்தடி தள்ளிக் கீழே கிடந்ததைக் கண்டபோது அவன் மகிழ்ச்சியில்

உரக்கக் கத்தினான். அந்த அம்பு நிலத்தைக்கூடத் துளைத்திருக்கவில்லை. உண்மையில், அது எதையுமே தாக்கியிருக்கவில்லை. அது ஏதோ மந்திரத்திற்குக் கட்டுப்பட்டதுபோல வெறுமனே விழுந்து கிடந்தது. ஒரு கூரிய முனையைக் கொண்ட ஏதோ ஒரு காய்ந்த மரத்துண்டைப்போல அது கேட்பாரற்றுக் கிடந்தது.

தன்னுடைய தொடர்ச்சியான பரிகாசம் ஏகலைவனைக் கோபமூட்டிக் கொண்டிருந்தது ஜரனுக்கு நன்றாகவே தெரிந்தது, ஆனால் அது மிகவும் குதூகலமூட்டுவதாக இருந்ததால் அவனால் அதை நிறுத்த முடியவில்லை. ஏகலைவன் தன்னைக் கிட்டத்தட்ட நெருங்கும்வரை காத்திருந்துவிட்டு, ஜரன் ஓர் ஆலமரத்தை நோக்கி ஓடிச் சென்று, அதன்மீது விறுவிறுவென்று ஏறினான். உயரத்தில் இருந்த ஒரு கிளையின்மீது அமர்ந்து கொண்டு, அவன் தன் குச்சிக் கால்களை ஆட்டியபடி ஏகலைவனைப் பார்த்து ஒரு குரங்கைப்போலக் கத்தினான். ஏகலைவன் அவன்மீது அம்புகளை எறிய முயற்சித்தான். ஆனால் அவற்றால் அவ்வளவு உயரத்தில் இருந்த ஜரனை நெருங்கக்கூட முடியவில்லை. இது ஜரனுக்கு மேலும் உற்சாகமூட்டியது. அவன் ஏகலைவன்மீது மரக்குச்சிகளை எறியத் துவங்கினான். ஒருசில குச்சிகள் ஏகலைவனைச் சரியாகத் தாக்கின. இது ஏகலைவனுக்கு மேலும் கோபமூட்டியது. ஜரனால் அதிக உயரத்திற்கு ஏறிச் சென்று, ஒரு குரங்கைப்போல மரத்திற்கு மரம் தாவக்கூட முடிந்தது. தன்னைவிட வயதில் மூத்தவனான ஏகலைவனால் தன்னைத் தொட முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான். இறுதியில், ஏகலைவன் தன் முயற்சியைக் கைவிட்டுவிட்டு, அஸ்தினாபுரத்தை நோக்கி நடக்கத் துவங்கினான். ஜரன் மரத்திலிருந்து கீழே இறங்கி, சிறிது தூர இடைவெளியில் ஏகலைவனைப் பின்தொடர்ந்தான்.

ஒரு மணிநேரம் நடந்த பிறகு, அவர்கள் இருவரும் ஒரு வெற்றிடத்தை வந்தடைந்தனர். துரோணர் அங்கு இளவரசர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏகலைவன் ஒரு புதருக்குப் பின்னால் மறைந்து கொண்டான். இன்னொரு புதருக்குப் பின்னால் ஜரனும் மறைந்து நின்றதைப் பார்த்த அவன், மௌனமாகத் தன் மனத்திற்குள் திட்டினான். ஜரன் அவனைப் பார்த்துக் கையசைத்துவிட்டுத் தன் நாக்கை வெளியே துருத்தி அவனுக்கு மேலும் எரிச்சலூட்டினான். எந்த இடத்தில் தங்களுக்கு இரையாக ஒரு கிளி கிடைத்ததோ, அதே இடத்திற்குத் தாங்கள் வந்திருந்தது குறித்து ஜரன் மகிழ்ந்தான். அந்த தாடிக்கார ஆசிரியர், இன்று தன் மாணவர்களை ஒரு மானைக் குறி வைத்துத் தாக்கும்படி கூறக்கூடும் என்று அவன் நினைத்தான். தாங்கள் அந்தக் கிளியைத் திருடியதைப்போலவே அந்த

மானையும் இன்று தங்களால் கைவசப்படுத்த முடிந்தால், பல நாட்களுக்குத் தாங்கள் உணவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிருக்காது என்று அவன் நினைத்துக் கொண்டான்.

துரோணர் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்ததைப் பல மணிநேரம் கவனித்தப் பிறகு, தான் எல்லாவற்றையும் தவறாகச் செய்து வந்திருந்ததை ஏகலைவன் கண்டறிந்தான். வில்லைத் தான் பிடித்திருந்த விதம், தான் நின்ற விதம், குறி பார்த்தபோது தன் தலையைத் தான் தாங்கி நின்ற விதம் — இவை எல்லாமே தவறாக இருந்திருந்ததை ஏகலைவன் உணர்ந்தான். இவற்றையெல்லாம் இளவரசர்கள் எவ்வாறு செய்தனர் என்பதை அவன் தன் மனத்திற்குள் குறிப்பெடுத்துக் கொண்டான். வசீகரமான தோற்றத்தைக் கொண்ட ஒரு பருவ வயதுச் சிறுவனிடம் துரோணர் அளவுக்கதிகமான இனிமையோடு நடந்து கொண்டார். அம்புகளை எய்வதில் அவன் வெளிப்படுத்திய வேகமும் திறமையும் ஆச்சரியமூட்டுவதாகவும் பிரமிப்பூட்டுவதாகவும் இருந்தன. முன்பு அந்தக் கிளியை அதன் கண்ணின் ஊடாக அம்பு எய்து கொன்று தங்கள் வயிற்றுப் பசிக்கு உணவளித்த அதே சிறுவன்தான் அவன் என்பதை ஏகலைவன் கண்டுகொண்டான். 'நான் இவனைவிடச் சிறந்த வில் வீரனாக ஆவேன்,' என்று ஏகலைவன் தன் மனத்திற்குள் உறுதி பூண்டான். தனக்குக் கற்றுக் கொடுக்க முடியுமா என்று அந்த குருநாதரிடம் சென்று கேட்பதற்கு அவனுக்குள் ஓர் உந்துதல் எழுந்தது. முயற்சித்துப் பார்ப்பதில் என்ன தவறு என்று அவன் நினைத்தான். கிருபர் ஒரு தேரோட்டிச் சிறுவனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்ததாக நிலவிய வதந்திகளை அவன் கேள்விப்பட்டிருந்தான். சாதி அடுக்கதிகார அமைப்புமுறையில் தேரோட்டிகள் வேடுவர்களைவிடப் பல மடங்கு உயர்ந்தவர்கள்தான் என்றாலும், முயற்சித்துப் பார்ப்பதில் என்ன தவறு என்று அவனுக்குத் தோன்றியது. 'ஆனால் அவர் என்னை ஏளனப்படுத்திவிட்டால், பிறகு நான் என்ன செய்வது?' என்று அவன் யோசித்தான். முன்னுக்குப் பின் முரணான எண்ணங்கள் அந்த வேடுவச் சிறுவனின் மனத்தை அலைக்கழித்துச் சித்தரவதைப்படுத்தின. நிராகரிப்புக் குறித்து அவன் பயந்தான், ஆனால் அவனுடைய மனத்தில் கொழுந்துவிட்டு எரிந்த லட்சிய வெறி அவனால் அலட்சியப்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் வலிமையானதாக இருந்தது. மாலைப் பொழுது நெருங்கியபோது, ஒருமுறை முயற்சி செய்து பார்த்துவிடுவதென்று அவன் தீர்மானித்தான்.

ஏகலைவன் துரோணரை அணுகியபோது, மாலைக் கதிரவன், தொலைதூரத்தில் இருந்த மலைகளுக்குப் பின்னால் மெதுவாக மறைந்து கொண்டிருந்தான். சிறுவர்கள் வரிசையில் அமர்ந்திருந்தனர்.

துரோணர் ஒரு மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் சலிப்போடு அதைத் திருப்பிக் கூறினர். தான் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியுடன் தன் துணிச்சல் கரைந்து கொண்டிருந்ததை ஏகலைவன் கண்டான். அவன் திரும்பி ஓடிச் சென்று புதர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள விரும்பினான், ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது. தனக்குப் பின்னால் ஏதோ காலடிச் சத்தம் அவனுக்குக் கேட்டது. பாழாய்ப் போன அந்த ஜரன் தன்னைப் பின்தொடர்ந்து வந்திருந்ததை அவன் அறிந்தான். அவர்கள் துரோணரை நெருங்கியபோது, தீண்டத்தகாத அச்சிறுவர்களை அவர் ஆச்சரியத்தோடும் அதிர்ச்சியோடும் பார்த்தார். கல்லிலிருந்து வடிக்கப்பட்ட ஒரு சிலைபோல நின்ற அவர், தீண்டத்தகாத அச்சிறுவர்களால் தனக்குத் தூய்மைக் கேடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, இந்துமத விதிகளின்படி, தனக்கும் அவர்களுக்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்க வேண்டும் என்று தன் மனத்திற்குள் அளவிட்டுக் கொண்டிருந்தார். அவர் தன் கைகளைத் தன்னுடைய தசை செறிந்த மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, தன் புருவங்களை உயர்த்தி நின்றார். ஏகலைவன் நடுநடுங்கினான். ஒவ்வொரு நாளும் இளவரசர்கள் துரோணரின் பாதங்களைத் தொட்டு வணங்கியதைப் பார்த்திருந்த அவன், தானும் அவ்வாறு அவருடைய பாதத்தைத் தொட்டு பணிவதற்காக ஓரடி முன்னால் எடுத்து வைத்தான்.

"நில்!"

துரோணரின் கட்டளையைக் கேட்ட ஏகலைவன் உறைந்து நின்றான். 'நான் ஏன் இங்கே வந்தேன்?' என்று அவன் வியந்தான்.

"நீ ஏன் இங்கே வந்திருக்கிறாய்?"

ஏகலைவனுக்கு நா எழும்பவில்லை. "ஐயா . . . நான் . . . நான் . . . உங்களுடைய மாணவனாக ஆக விரும்புகிறேன்," என்று அவன் தட்டுத்தடுமாறிக் கூறி முடித்தான்.

"நான் இதற்கு முன்பு உன்னை எங்கோ பார்த்திருக்கிறேன். பொறு, சட்ட ஒழுங்கற்ற இந்த நாட்டிற்கு நான் முதன்முதலில் வந்தபோது மாம்பழங்களைத் திருடிச் சென்ற வேடுவச் சிறுவன் நீதானே?" என்று துரோணர் கேட்டார்.

ஏகலைவன் அங்கிருந்து திரும்பி ஓடிவிட விரும்பினான். தான் இங்கு வந்திருக்கவே கூடாது என்றும், தன்னைப் போன்ற தீண்டத்தகாதவர்களுக்கான இடம் இதுவல்ல என்றும் அவன் நினைத்தான்.

அரச குடும்பத்தினரின் குருவான துரோணர், பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த வேடுவச் சிறுவனைத் துளைத்துவிடுவதுபோலப்

பார்த்தார். பிறகு அவர் துரியோதனனிடம் திரும்பி, "உன் தந்தை என்ன செய்து வைத்திருக்கிறார் என்று பார். இப்படிப்பட்ட அற்பப் புழுக்களெல்லாம் எழுந்து நின்று, பாடம் கற்றுத் தரும்படி பிராமணர்களிடம் கேட்பதற்கு அவர் அனுமதித்திருக்கிறார். இந்த நாடு எவ்வளவு தூரம் சீரழிந்து போயிருக்கிறது என்று பார். இது போன்ற ஒரு நிலை ஏற்படும் என்று முன்பே எனக்குத் தெரியும். குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரிடம் இது குறித்து நெடுங்காலத்திற்கு முன்பே நான் எச்சரித்தேன். ஒரு சூத்திரனைப் பிரதம மந்திரியாக ஆக்குவது; தகுதியற்றவர்களுக்கு அனைத்து விதமான சுதந்திரத்தையும் கொடுப்பது. வெட்கக்கேடு! முதலில், ஒரு தேரோட்டியின் மகன் என் மாணவனாக ஆக விரும்பினான். பிரதம மந்திரியே அவனுக்காக என்னிடம் பரிந்துரைத்தார். இப்போது, தீண்டத்தகாதவர்கள் வில் வீரர்களாக ஆக விரும்புகின்றனர். கலியுகம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. துரியோதனா, விஷயம் இப்போது இப்படி இருக்கின்ற நிலையில், நீ இந்த நாட்டின் அரசனாக ஆகும்போது இன்னும் என்னென்ன அட்டூழியங்களெல்லாம் நிகழுமோ? ஆனால் நீ அரசனாக ஆவதற்கான வாய்ப்பு இல்லை," என்று சீறினார்.

துரியோதனின் கண்கள் கோபத்தில் சிவந்தன. ஆனால் அவன் தன் வாயைத் திறப்பதற்கு முன், துரோணர் அந்த வேடுவச் சிறுவனை நோக்கித் திரும்பினார். அச்சிறுவன் அவமானத்தில் தன் தலையைத் தொங்கப் போட்டு நின்று கொண்டிருந்தான்.

தனக்குப் பின்னால் ஜரன் சிரித்துக் கொண்டிருந்ததை ஏகலைவனால் உணர முடிந்தது. இளவரசன் துரியோதனன் ஜரனை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கண்டான். துரோணரும் அந்தப் பரிதாபகரமான உருவத்தைப் பார்த்தார். ஜரனின் பாதங்கள் புண்பட்டிருந்தன. அவனுடைய கரிய, சுருண்ட, அழுக்கான தலைமுடி ஒரு கொண்டையாக அள்ளி முடியப்பட்டிருந்தது. அவனுடைய நோஞ்சான் கால்களும், பானை வயிறும், சொறி பிடித்த அவனுடைய தோலும் சேர்ந்து துரோணரை வெறுப்பின் உச்சிக்கே கொண்டு சென்றன. அவருடைய கண்களில் தென்பட்ட ஆவேசத்தையும் அவருடைய முகத்தில் தாண்டவமாடிய கோபத்தையும் கண்ட ஏகலைவனின் இதயம் ஒரு கணம் தன் துடிப்பை நிறுத்தியது.

"தீண்டத்தகாதவனே! இங்கு வந்து இந்த இடத்தை மாசுபடுத்துவதற்கு உனக்கு எவ்வளவு துணிச்சல்?"

குருநாதர் தன்னைத்தான் அவ்வாறு கேட்டதாக ஏகலைவன் முதலில் நினைத்தான். ஆனால் குருநாதரின் கோபம், தனக்குப் பின்னால் பல்லிளித்து நின்று கொண்டிருந்த ஜரனை நோக்கி

ஏவப்பட்டிருந்ததை உணர்ந்து கொள்ள அவனுக்கு ஒருசில கணங்கள் ஆனது. 'சிவபெருமானே! இந்த மூர்க்கன் ஏன் என்னைப் பின்தொடர்ந்து வந்து என்னுடைய வாய்ப்புகளைக் கெடுக்கிறான்? இவன் இங்கு வராமல் இருந்திருந்தால், குருநாதர் இவ்வளவு கோபமடைந்திருக்க மாட்டார்,' என்று அவன் தனக்குள் நொந்து கொண்டான்.

ஜரன் ஆடாமல் அசையாமல் நிற்க முயற்சித்தான், ஆனால் அவனுடைய தோலில் ஏற்பட்ட அரிப்பு அவனைச் சித்தரவதைப்படுத்தியது. எனவே, சமயப்பற்றுக் கொண்ட ஒரு பிராமணனும் விலையுயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து நின்ற இளவரசர்களும் தன் முன்னால் இருந்ததைப் பொருட்படுத்தாமல், தீண்டத்தகாத அவன், தன் நகங்களால் தன் உடல் முழுதும் சொறியத் தொடங்கினான். அதை ஈடுகட்டும் விதமாக, வெளியே துருத்திக் கொண்டு நின்ற தன் முன்னம்பற்கள் தெரிய ஒரு பெரிய புன்னகை ஒன்றை அவன் உதிர்த்தான்.

"இங்கிருந்து ஓடிப் போய்விடு!" என்று துரோணர் கத்தினார். அவருடைய நெஞ்சு கோபத்தால் விரிவடைந்தது. அவருடைய மாணவர்கள் இக்காட்சியைக் கண்டு வாய் கொள்ளாமல் சிரித்தனர். ஜரன் என்ற இச்சிறிய குரங்கின் சேட்டை, இளவரசர்களில் பலருக்கு வேடிக்கையாகவும் சுவாரசியமூட்டுவதாகவும் இருந்தது. கௌரவ இளவரசர்களில் ஒருவன் மென்மையாகச் சீட்டியடித்தான். துரியோதனனும் துச்சாதனனும் அசுவத்தாமனும் சிரித்துக் கொண்டிருந்தனர். பீமனும் கௌரவச் சகோதரர்களுடன் சேர்ந்து இந்த வேடிக்கையை ரசித்தான், ஆனால் தன் மூத்தச் சகோதரனின் பார்வையைக் கண்டதும் சரியான நேரத்தில் தன் சிரிப்பை நிறுத்திக் கொண்டான். தன்னுடைய மற்றப் பாண்டவச் சகோதரர்களைப்போலவே, அவனும் ஒரு தீவிரமான முகத்துடன் நின்றான். தீண்டத்தகாத அவ்விரு சிறுவர்களும் தங்கள் குருநாதருக்கு இழைத்துக் கொண்டிருந்த அவமதிப்புக் குறித்துத் தான் மிகுந்த சினம் கொண்டிருந்தது போன்ற ஒரு தோற்றத்தை அவன் வெளிப்படுத்தினான்.

"அமைதி!" துரோணரின் கோபம் இப்போது கௌரவ இளவரசர்களின் பக்கம் திரும்பியது. அங்கு நிலவிய குதூகலமும் மகிழ்ச்சியும் அடங்கியவுடன், துரோணர் மீண்டும் தன் கோபத்தை அவ்விரு சிறுவர்களின்மீது திருப்பினார். ஜரன் அவருடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டவன்போல, உடனடியாகப் பின்வாங்கினான். அவனுடைய முகத்தில் படர்ந்திருந்த

முட்டாள்தனமான புன்னகை மறைந்து, கவலை அதனிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. துரோணர் ஏகலைவனை நோக்கி ஓரிரு அடிகள் முன்னே எடுத்து வைத்தார். "சிறுவனே!" துரோணரின் குரல் தன் கடுமையை இழந்திருந்தது. ஏகலைவன் ஆச்சரியத்தோடு ஏறிட்டுப் பார்த்தான். இறுதியில் சிவபெருமான் தன்மீது கருணை மழை பொழிந்துவிட்டார்போலும் என்று அந்த வேடுவச் சிறுவன் நினைத்தான். ஆனால் ஜரன் இன்னும் ஒருசில அடிகள் பின்னால் சென்றான். "என்னால் உன்னுடைய ஆசிரியராக இருக்க முடியாது. இளவரசர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்குத்தான் அரசாங்கம் எனக்குச் சம்பளம் கொடுக்கிறது. ஒரு வேடுவச் சிறுவனை ஒரு மாணவனாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நீ காட்டிற்குத் திரும்பிச் சென்று, உன் மக்களோடு சேர்ந்து வாழ்ந்து, உன் குலத் தொழிலைச் செய். என்னால் உனக்கு எதையும் கற்றுக் கொடுக்க முடியாது," என்று துரோணர் ஏகலைவனிடம் கூறினார்.

ஏகலைவனின் இதயம் சுக்குநுறாக நொறுங்கியது. தோல்வியில் அவனுடைய பார்வை நிலத்தின்மீது பதிந்தது.

"ஆனால் சில முக்கியமான அறிவுரையை என்னால் உனக்குக் கொடுக்க முடியும்," என்று துரோணர் தொடர்ந்தார். அறிவுரை மலிவானது. அதை எல்லோராலும் எல்லோருக்கும் இலவசமாகக் கொடுக்க முடியும் என்று நினைத்த ஏகலைவன், துரோணர் ஜரனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டான். ஜரன் இன்னும் ஒருசில அடிகள் பின்னால் சென்றான். "தீயவன்போலத் தோன்றுகின்ற இச்சிறுவன் யார்?" என்று துரோணர் ஏகலைவனிடம் கேட்டார்.

ஏகலைவன் ஜரனை வெறுப்போடும் கோபத்தோடும் பார்த்தான். "இவன் ஓர் அனாதை. சில காலமாக இவன் எங்களோடு ஒட்டிக் கொண்டு எங்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறான்."

"ம்ம்ம் . . . எனக்கு அப்படித்தான் தோன்றியது. இவன் இவ்வளவு அட்டைக்கரியாக இருப்பதால் இவனால் வேடுவ இனத்தைச் சேர்ந்தவனாகக்கூட இருக்க முடியாது என்று நான் நினைத்தேன். அவன் எந்த சாதியைச் சேர்ந்தவன்?"

இந்த உரையாடல் எங்கே போய்க் கொண்டிருந்தது என்று ஏகலைவன் வியந்தான். ஜரனின் சாதியைப் பற்றி அவன் ஒருபோதும் நினைத்திருக்கவே இல்லை. "எனக்குத் தெரியாது," என்று அவன் முணுமுணுத்தான்.

துரோணர் இம்முறை ஜரனைப் பார்த்து, "உன் சாதி என்ன?" என்று கேட்டார். ஜரன் திருதிருவென்று விழித்தான். தான் எந்த சாதி என்று அவனுக்குத் தெரியவில்லை. யாரும் அவனிடம் அது பற்றிக்

கூறியிருக்கவில்லை. யாரும் அவனிடம் அக்கேள்வியைக் கேட்டிருக்கவும் இல்லை. துரோணர் ஏகலைவனைப் பார்த்து, "சிறுவனே, சாதியற்ற இவனிடம் எச்சரிக்கையாக நடந்து கொள். இவன் ஒரு தீயவன். இவன் உனக்கு துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வருவான். இவனை உன்னிடமிருந்து துரத்திவிடு. உனக்காவது ஏதோ ஒரு சாதி இருக்கிறது. அது ஒரு தாழ்ந்த சாதியாக இருக்கலாம், ஆனால் ஏதோ ஒன்று உனக்கு இருக்கிறது. உன் சாதிக்குரிய ஒரு தொழில் உனக்கு இருக்கிறது. ஆனால் இவனுக்கு எதுவுமில்லை. வாழ்வில் இவனுக்கென்று எந்த மதிப்பீடுகளும் இல்லை. இவன் எவ்வளவு வேண்டுமானாலும் தரம் தாழ்ந்து போவான். இவனுக்கும் ஒரு மிருகத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தீவினை தெறிக்கும் அவனுடைய முகத்தைப் பார். அவன் உன்னுடன் இருக்கும்வரை, வாழ்வில் உனக்கு எந்த அதிர்ஷ்டமும் வாய்க்காது. இப்போது காட்டிற்குத் திரும்பிச் சென்று, உன் குலத்திற்கு ஏற்றத் தொழிலைச் செய்து ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து கொள். ஒரு நல்ல வேடுவனாக நடந்து கொள். அப்போது அடுத்தப் பிறவியில் நீ ஓர் உயர்ந்த சாதியில் பிறப்பாய். மெல்ல மெல்ல, பல பிறவிகளின் ஊடாக, உன் குலத் தொழிலைச் சிரத்தையுடன் கடைபிடிப்பதன் மூலம், உன்னுடைய மறுபிறவிகளில் ஏதேனும் ஒன்றில் நீ ஒரு பிராமணனாக ஆவாய். இப்பிறவியை நீ ஒரு வேடுவனாகக் கழிக்க வேண்டும் என்று கடவுள்கள் விதித்துள்ளனர். உனக்கு விதிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள். சாதியற்ற இவனைப் போன்ற சிறுவர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்வதன் மூலம் அதைப் பாழாக்கி, மேலும் தாழ்ந்த சாதிக்குள் உன்னை நீயே தள்ளிவிட்டுவிடாதே," என்று கூறிவிட்டுப் பின்னால் திரும்பி அரண்மனையை நோக்கி நடந்தார். இளவரசர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர்.

கதிரவன் கிட்டத்தட்ட மறைந்துவிட்டிருந்தான். அந்தி வெளிச்சம் உலகம் நெடுகிலும் தன் போர்வையைப் படரவிட்டு, இன்னொரு நாளை முடிவுக்குக் கொண்டு வந்து கொண்டிருந்தது. முன்பு தனக்கு மாங்கனிகளைக் கொடுத்த இளவரசனின் கண்கள் தன்னைத் துளைத்துக் கொண்டிருந்ததை ஏகலைவன் உணர்ந்தான். ஆனால் அவன் இளவரசனின் கண்களைச் சந்திக்க விரும்பவில்லை. தன்னுடைய ஒட்டுமொத்த உலகமும் முடிவுக்கு வந்துவிட்டிருந்தது போன்ற உணர்வு அவனுக்குள் எழுந்தது.

* * *

அந்த வேடுவச் சிறுவனைத் தொலைவிலிருந்து கண்காணித்த

துரியோதனன், தன் நண்பன் அசுவத்தாமனின் காதில், "மிகவும் பணிவாகக் கூற வேண்டும் என்றால், உன் தந்தையின் நடத்தை இகழத்தக்கதாக இருந்தது," என்று கிசுகிசுத்தான். வெளிப்படையாகத் தெரிந்த அந்த விஷயத்தைத் தன்னுடைய சிறந்த நண்பன் தனக்குச் சுட்டிக்காட்டியதைக் கண்ட அசுவத்தாமனின் இதயம் சோர்ந்து போனது.

"துரியோதனா, அவர் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. வீட்டில் அவர் ஒரு கண்டிப்பான தந்தையாக நடந்து கொண்டாலும், அவர் என்மீது வைத்துள்ள அன்பை என்னால் எப்போதும் உணர முடிகிறது. அவர் அப்போது ஒரு வித்தியாசமான நபராக இருக்கிறார். என்னுடைய தாயாரையும் அவர் அன்போடும் பாசத்தோடும் நடத்துகிறார். தான் கடினமாக உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தில் சிறிதளவைத் தனக்குத் தெரியாமல் தன் மனைவி தன்னுடைய சகோதரர் கிருபருக்கு ரகசியமாகக் கொடுப்பதும் அவருக்கு நன்றாகவே தெரியும். கிருபர் அந்தப் பணத்தைக் கொண்டு சூதாடுவதும், அல்லது அஸ்தினாபுரத்தின் சேரிப் பகுதிகளில் உள்ள ஏழைகளுடன் சேர்ந்து பணியாற்றும் தன் நண்பன் சார்வகனிடம் அதைக் கொடுப்பதும்கூட என் தந்தைக்குத் தெரியும். சில சமயங்களில் அவர் என்னை ஈவு இரக்கமின்றி அடிப்பார். ஆனால் நள்ளிரவில், நான் தூங்கிவிட்டதாக நினைத்துக் கொண்டு, அவர் என்னருகே வந்து என் கன்னத்தில் மென்மையாக முத்தமாரிப் பொழிவார். அவர் தன் அன்பால் என் இதயத்தை நொறுக்கிவிடுவாரோ என்றுகூட எனக்குத் தோன்றும். அவரைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். எங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர் தன் சொந்த ஊரையும் எங்கள் உறவினர்கள் அனைவரையும் விட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறார். சத்திரியர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாக அவருக்கு எந்த நன்மையும் விளையப் போவதில்லை என்றும், குரு வம்ச இளவரசர்களுக்கு ஆயுதக் கலையைக் கற்றுக் கொடுப்பது பிராமண குலத்திற்கு அவர் செய்யும் நம்பிக்கைத் துரோகம் என்றும் அவருடைய குருவான பரசுராமன் அவரை எச்சரித்திருந்தார். துரியோதனா, என் தந்தை தன்னுடைய நம்பிக்கைகளுக்கும் தன்னுடைய அடிப்படை நல்லியல்புக்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த இழுபறியில், என்றேனும் ஒருநாள் அவருடைய நல்லியல்பு வெற்றி பெறும் என்றும், பரசுராமனின் தத்துவத்தை அவர் ஒதுக்கித் தள்ளிவிடுவார் என்றும் நான் நம்புகிறேன். அப்போதுதான் நல்ல காலம் பிறக்கும்."

தன் குருநாதரின் மகனுடன் தன் சகோதரன் மேற்கொண்டிருந்த

உரையாடலைத் துச்சாதனன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் அப்பட்டமான கேலிச் சிரிப்பை உதிர்த்தவாறே, "கோழை பிராமணச் சிறுவனே, உன்னுடைய தந்தையின் நடத்தையை நியாயப்படுத்தும் விதமாக நீ கூறும் அனைத்து விளக்கங்களும் அவரைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை மாற்றப் போவதில்லை. அவர் ஒரு பைத்தியக்காரர். வெறித்தனமான யோசனைகளைக் கொண்ட ஒரு கிறுக்கர் அவர். அர்ச்சுனனிடம் நல்ல பெயர் எடுப்பதற்கு அவர் எதை வேண்டுமானாலும் செய்வார். உன்மீது அவர் காட்டும் பாசம் எல்லாம் வெறும் பாசாங்குதான். நீ அவருடைய மகனா அல்லது அந்தப் பாண்டவன் அவனுடைய மகனா என்று சில சமயங்களில் நான் வியக்கிறேன். நல்லியல்பாம் நல்லியல்பு!"

அசுவத்தாமன் துச்சாதனனின் முகத்தில் ஓங்கிக் குத்த முயற்சித்தபடியே, "பெருந்தீனிக்காரனே, நீ உன் ஓட்டை வாயை மூடிக் கொள்ளாவிட்டால், உன்னுடைய அழுக்கான மஞ்சள் நிறப் பற்களை நான் பெயர்த்துவிடுவேன்," என்று கத்தினான். துரியோதனன் மட்டும் குறுக்கிட்டிருக்காவிட்டால், துச்சாதனனின் பற்கள் நிச்சயமாக எகிறியிருக்கும்.

துரோணர் தன் பின்னால் திரும்பிப் பார்த்து, வெகுதூரம் தள்ளி நடந்து வந்து கொண்டிருந்த தன் மகனிடம், "வேகமாக வா," என்று கத்தினார்.

அந்த மூன்று பருவ வயதுச் சிறுவர்களும் ஆடியசைந்து நடந்து வந்தபோது, வீட்டிற்குச் சென்றவுடன், அந்தப் பாவப்பட்ட வேடுவச் சிறுவனிடம் தன் தந்தை நடந்து கொண்ட விதம் குறித்து அவரிடம் நேரடியாகக் கேட்கப் போவதாக அசுவத்தாமன் தீர்மானித்தான். அவருடைய பெருங்கோபத்தை எதிர்கொள்ள அவன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான்.

அந்தப் பரந்த வெளியின் மேலாக, விண்மீன்கள் அள்ளித் தெளிக்கப்பட்ட வானம் பரந்து விரிந்திருந்தது. அரண்மனை விளக்குகள், தென்வானத்தைப் பொன்னிறத்தில் ஒளிரச் செய்தன. காட்டின் இருளிலிருந்து ஒரு பறவை உரத்தக் குரலில் கிறீச்சிட்டது. அது, காட்டின் மைந்தனான அந்த வேடுவச் சிறுவனைத் தன் வீட்டிற்குத் திரும்பி வருமாறு அழைத்ததுபோல இருந்தது. அரட்டையடித்துக் கொண்டே சென்ற மாணவர்களின் உருவங்கள் தூரத்து இருட்டில் வெறும் புள்ளிகளாக மறைந்து போனவுடன், ஏகலைவன் சிலிர்த்தான். அவனுடைய இதயம் கோபத்தாலும் வெறுப்பாலும் நிரம்பியிருந்தது. 'எல்லாவற்றுக்கும் காரணம் ஜரன்தான். சாதியற்ற, அழுக்கான, நாற்றம் பிடித்த அவன்தான் இதற்கெல்லாம் காரணம். அவன் துரதிர்ஷ்டத்தின்

அறிகுறி என்று குருநாதர் கூறியது சரிதான். இந்தத் தீயவன் தன் முகத்தைக் காட்டியபோதுதான் நான் என் பெற்றோரை இழந்தேன். இந்த மூர்க்கன் என் குடும்பத்தில் அடியெடுத்து வைத்தபோதுதான் என் சிற்றப்பா இறந்து போனார். என் சித்தியையும் அவருடைய ஐந்து குழந்தைகளையும் பாதுகாக்கும் பொறுப்பும் அப்போதுதான் எனக்கு வந்தது. இவனால்தான் குருநாதர் என்னை நிராகரித்தார். அவனுடைய இந்த அசிங்கமான முகத்தைப் பார்; அவனுடைய அழுக்கான, நாற்றம் பிடித்த உடலைப் பார்; அவனுடைய அழுக்கான நகங்களையும் அவனுடைய கால்களில் உள்ள சீழ் வடியும் புண்களையும் பார். இவன் ஏன் துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வருகிறான் என்பதை எவரொருவராலும் புரிந்து கொள்ள முடியும்,' என்று அவன் தன் மனத்திற்குள் புழுங்கினான்.

ஏகலைவனின் இந்த இக்கட்டான சூழ்நிலை குறித்துப் பரிகாசம் செய்வதற்கு ஜரன் அக்கணத்தைத் தேர்ந்தெடுத்தது அவனுடைய துரதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். அவன் ஒரு குரங்கைப்போல ஊளையிட்டுக் கொண்டு, ஏகலைவனின் முறிந்து போன கனவுகள் குறித்து மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான். "ஹா ஹா ஹா . . . நான்தான் ஏற்கனவே உன்னிடம் கூறினேனே! உனக்கு இது தேவைதான். நீ என் பேச்சைக் கேட்கவில்லை. ஒரு முக்கியமான நபருடைய பரிந்துரையுடன் வந்த ஒரு தேரோட்டிச் சிறுவனுக்குக் கற்றுக் கொடுக்க மறுத்திருந்த அவர் உன்னுடைய அசிங்கமான முகத்தை ஏற்றுக் கொள்வார் என்று எப்படி நீ நினைத்தாய்? நல்ல வேடிக்கை!"

ஒரு கல் அவனுடைய மூக்கைப் பதம் பார்த்தது. ஜரன் கத்தினான். அதைத் தொடர்ந்து மேலும் பல கற்கள் சரமாரியாக அவனைத் தாக்கியபோது, அவனுடைய ஆச்சரியக் கத்தல், கொடூரமான ஓலங்களாக மாறியது. ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்த தன் மூக்கைப் பிடித்தபடியே ஜரன் அங்கிருந்து வேகமாக ஓடினான். ஏகலைவன் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினான். பிறகு ஒரே பாய்ச்சலில், பயத்தில் நடுங்கிப் போயிருந்த அந்த அட்டைக்கரியனை ஏகலைவன் பிடித்திழுத்துக் கீழே சாய்த்தான். தன் கோபமும் வெறுப்பும் ஒருசேர ஏகலைவன் அவனைப் புரட்டியெடுத்தான். அவனைத் துவைத்தெடுத்ததில் தன் கால்களில் ஏற்பட்ட வலியைத் தன்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போனபோதுதான் ஏகலைவன் அவனை எட்டி உதைப்பதை நிறுத்தினான். ரத்தத்தில் நனைந்து போயிருந்த அந்தச் சிறுவனை ஒரு தெரு நாயைப்போல அங்கே மடிய விட்டுவிட்டு, காட்டின் இருளில் அவன் தஞ்சம் புகுந்தான்.

வானம் மேக மூட்டத்தால் இருண்டு, மழை பெய்யத் துவங்கியது.

ஆனாலும் ஜரன் துளிகூட அசையவில்லை. மழை அந்தச் செந்நிற பூமியை ஒருசில மணிநேரம் வெளுத்து வாங்கியது. பிறகு விடியலுக்குச் சற்று முன்பு அது லேசான தூறலாக மாறியது. கிழக்கில் வானம் லேசான சாம்பல் நிறத்திற்கு மாறியபோது, ஒரு துணிமூட்டைபோலச் சுருண்டு கிடந்த அந்த துரதிர்ஷ்டக்காரச் சிறுவன் தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான். காட்டின் ஏதோ ஒரு மூலையில், ஒரு காட்டு விலங்கு, முடிந்து போன இரவு குறித்து துக்கம் அனுசரிப்பதுபோலப் பெருங்குரலெடுத்து ஊளையிட்டது. அஸ்தினாபுரத்தின் தெரு நாய்களும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஊளையிட்டு அக்குரலுக்கு பதிலளித்தன. ஜரன் தன் பலவீனமான கால்களில் எழுந்து நின்றான். நீரில் கலந்த ரத்தம் அவனுடைய பாதங்களைச் சுற்றி ஓர் அழுக்கான குளம்போலத் தேங்கிக் கிடந்தது. அவன் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த தன் உடலைப் பார்த்தான். அவனுடைய தொண்டையிலிருந்து ஒரு விலங்கின் ஓலம் வெளிப்பட்டது. அக்கணத்தில், அச்சிறுவன் மடிந்து போனான். அந்த இடத்தில் ஒரு காட்டு விலங்கு பிறந்தது. தனக்கும் தன் பசிக்கும் இடையே எந்தவொரு புனித நூலும் எந்தவொரு சாதி விதிமுறையும் இனி குறுக்கே வரப் போவதில்லை என்று அவன் தீர்மானித்தான். தான் உயிரோடு இருப்பதிலிருந்து எந்தக் கடவுளாலும் தன்னைத் தடுத்து நிறுத்த முடியாது என்று அவன் உறுதி பூண்டான்.

நாகர்களின் ரகசியப் படைகள் பதுங்கியிருந்த காட்டை ஜரன் உற்றுப் பார்த்தான். தன்னுடைய கதாநாயகனான தட்சகன், என்றேனும் ஒருநாள் அஸ்தினாபுரத்தை முற்றுகையிடுவதற்காக அக்காட்டிற்குள் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்ததை அவன் அறிந்திருந்தான். தங்கள் வசீகரமான தலைவனின் தலைமையின்கீழ் தங்களுடைய லட்சியத்தின் பெருமைக்காகச் சாவதற்குத் தயாராக இருந்த எண்ணற்ற மக்களைப் பற்றி அவன் நினைத்தான். பிறகு, பிரம்மாண்டமான மாளிகைகளையும் இருண்ட சேரிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த, பரந்து விரிந்த தலைநகரைப் பார்த்தான். அங்கு அவனைப்போலவே, உயிர் பிழைத்திருப்பதற்காகத் தாங்கள் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்து கொண்டிருந்த எண்ணற்ற மக்கள் இருந்தனர். விதி அவன் தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு விஷயங்களை அவன்முன் வைத்தது — தட்சகனின் தலைமையின்கீழ் ஒரு புகழ்மிக்க மரணமும் பெருமையும்; அல்லது அஸ்தினாபுரச் சேரிகளில் வெறுமனே பிழைத்திருத்தல். கதிரவனின் முதல் கீற்றுகள் அந்த ஈர மண்ணைத் தொட்டு, காட்டில் பறவைகளின் இரைச்சல் வெடித்துக் கிளம்பியபோது, ஜரன் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான். புகழ்மிக்க மரணத்திற்குப் பதிலாக வெறுமனே பிழைத்திருப்பதை அவன் தேர்ந்தெடுத்தான். பிறகு

அஸ்தினாபுரத்தை நோக்கி அவன் நடக்கத் துவங்கினான்.

* * *

அடுத்த நாள் அதிகாலையிலேயே ஏகலைவன் பயிற்சித் திடலுக்குத் திரும்பினான். ஜரனிடம் தான் நடந்து கொண்ட விதம் குறித்து அவன் மனச்சோர்வும் குற்றவுணர்வும் கொண்டிருந்தான். ஜரனை நிராதரவாகத் தான் விட்டுச் சென்ற இடத்தை அவன் அடைந்தான், ஆனால் அச்சிறுவன் அங்கிருந்து போய்விட்டிருந்தான். அந்த முட்டாளுக்கு என்ன நிகழ்ந்திருக்கக்கூடும் என்று யோசித்தபடியே ஏகலைவன் அந்தப் புல்லின்மீது அமர்ந்தான். பொழுது நன்றாக விடிந்தபோது, இளவரசர்கள் பின்தொடர, தொலைவில் துரோணர் வந்து கொண்டிருந்ததைப் பார்த்த அவன், ஓடிச் சென்று காட்டிற்குள் மறைந்து கொண்டான். அவன் தன் மறைவிடத்தில் இருந்தபடி, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த பயிற்சியைப் பார்த்தான். தான் விரும்பிய அறிவைக் கைவசப்படுத்துவதற்கு இது இன்னொரு வழி என்று அவன் நினைத்தான்.

அதுதான் தொடக்கம். அன்றிலிருந்து, அவன் காட்டில் மறைந்திருந்தபடி, வெறும் கண்காணிப்பின் மூலமாகத் தனக்கு வேண்டியதைக் கற்றுக் கொண்டான். வகுப்புகள் முடிந்து, இளவரசர்கள் தங்களுடைய வசதியான உறைவிடங்களுக்குத் திரும்பிச் சென்ற பிறகு, காட்டின் மைந்தனான அவன், தான் கவனமாகப் பார்த்திருந்தவற்றைப் பயிற்சி செய்தான். ஒருசில மாதங்கள் அர்ப்பணிப்புடன் கடினமாக உழைத்தப் பிறகு, அர்ச்சுனனைப்போலவே தன்னாலும் தன் இலக்கைத் துல்லியமாகத் தாக்க முடிந்ததை அவன் கண்டான். ஓர் அம்பு மிகத் திறமையாக விடுவிக்கப்பட்டபோது, வில்லைப் பிடித்திருந்தது ஒரு தீண்டத்தகாதவனின் கையா அல்லது ஓர் இளவரசனின் கையா என்று அது கேட்கவில்லை. அந்த அம்புகள் எந்தப் பாரபட்சமும் இன்றித் தம் இலக்குகளைத் துளைத்தன. ஒவ்வோர் இரவும் அவன் செய்த பயிற்சி, அரசகுலத்தைச் சேர்ந்த தன்னுடைய போட்டியாளனைவிட இந்த வேடுவச் சிறுவனுக்கு ஒரு சிறந்த அனுகூலத்தைக் கொடுத்தது. இருட்டில்கூடத் துல்லியமாகக் குறி பார்த்து அம்பு எய்யும் அளவுக்கு, வில் வித்தையில் மிகவும் திறம்படைத்த ஒருவனாக அது அவனை ஆக்கியது. ஏகலைவன் ஏதோ ஒன்றால் ஆட்கொள்ளப்பட்டவன்போல நடந்து கொண்டான். விடிவதற்கு முன்பு ஒருசில மணிநேரம் அவன் தூங்கியிருந்தால் அதிகம் என்று கூறலாம்.

அறிவைக் கைவசப்படுத்துவதிலும், தான் பார்த்தவற்றை அயராமல் பயிற்சி செய்வதிலும் அவனுடைய நாட்கள் கழிந்தன. முதலில், ஜரனின்

துணைக்காக அவன் ஏங்கினான். ஆனால் விரைவில் அவன் அதிலிருந்து மீண்டான். ஒரு வருடத்திற்குப் பிறகு, ஜரனைப் பற்றி அவன் மறந்தே போனான். ஜரன் தன் வாழ்விலிருந்து மறைந்ததும், ஏகலைவனின் அதிர்ஷ்டம் திரும்பி வந்ததும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. தன்னைப் பரிகசிக்கவோ அல்லது தீண்டத்தகாத ஒருவனால் ஒரு மாபெரும் வீரனாக ஆவது சாத்தியமில்லை என்று கூறவோ யாரும் இல்லாத நிலையில், ஏகலைவனின் இயல்பான தன்னம்பிக்கை மீண்டும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. விரைவில் அவன் யாராலும் எதிர்க்க முடியாத ஒரு சிறந்த வேடுவனாக உருவானான். அவன் ரகசியமாக மறைந்திருந்து விலங்குகளை மிகத் திறமையாக வேட்டையாடியதால் உணவுக்குப் பஞ்சமிருக்கவில்லை. அதன் பிறகு அவனுடைய குடும்பத்தார் நீண்டகாலம் பசியை எதிர்கொள்ள வேண்டியிருக்கவில்லை.

* * *

நகர சுகாதாரத்தின் தலைமை ஆய்வாளனான புரோச்சனன், ஒரு கைக்குட்டையைத் தன் மூக்கின்மீது அழுத்திப் பிடித்தான். நாற்றம் குடலைப் புரட்டுவதாக இருந்தது. நறுமணப் பொருட்களின் வாசனை நிரம்பியிருந்த அரண்மனையிலிருந்து வெளியேறி, துர்நாற்றம் வீசிய ஓர் உலகிற்குள் அவன் இப்போது நுழைந்திருந்தான். தெருக்கள் புழுக்களைப்போல ஒன்றோடொன்று பின்னிச் சுருண்டு கிடந்தன; திறந்த கழிவுநீரோடைகள் நிரம்பி வழிந்தோடின; குறுகலான நடைபாதைகள் குப்பை மேடுகளாகக் காட்சியளித்தன. அஸ்தினாபுரத்தின் ஆட்சியாளர்கள் தங்கள் ராஜாங்கம் எப்படி இருந்ததாக நம்ப விரும்பினார்களோ, இந்த யதார்த்த உலகம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்ததைப் புரோச்சனன் அறிந்திருந்தான். ஆடம்பரமான மாளிகைகள், நிழல் கொடுத்த மரங்களுடன்கூடிய விசாலமான தெருக்கள், பொற்கோவில்கள், வைரங்களையும் பட்டாடைகளையும் விற்ற வசீகரமான கடைகள் ஆகியவற்றையும், மேட்டுக்குடி ஆண்கள் மற்றும் அழகான பெண்களையும் கொண்ட மற்றோர் அஸ்தினாபுரம் வேறொரு கிரகத்தில் அமைந்திருந்துபோலத் தோன்றியது. ஆனால் அந்த இருண்ட, துர்நாற்றம் வீசிய, இனிமையற்றப் பகுதியில்தான் பெரும்பான்மையான மக்கள் வாழ்ந்தனர். இன்னொன்று வெறும் ஒரு பாசாங்கு மட்டுமே. ஆட்சியில் இருப்பவர்கள் மக்களுக்குக் கொடுக்கும் போலியான வாக்குறுதிகளைப் போன்றது அது.

மக்கள், தள்ளுவண்டிகள், வியாபாரிகள், பன்றிகள், பசுக்கள்,

ஆடுகள், குதிரைகள் ஆகிய அனைத்தும் தத்தம் இடத்திற்காகப் போராடின. தள்ளுவது, இழுப்பது, கிறீச்சிடுவது, எக்காளமிடுவது, ஏய்ப்பது என்று, தெருக்களுக்கென்று சொந்தமாக ஒரு வாழ்க்கை இருந்தது. அவை தம்முடைய சீரான தாளத்திற்கு ஏற்ப இயங்கின. புரோச்சனன் தன் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, தான் பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே உடைந்து போயிருந்த ஒரு விளக்குக் கம்பத்தின்மீது சாய்ந்து மூச்சு வாங்கினான். எலிகள் அவனுடைய பாதங்களின்மீது வேகமாக ஏறி ஓடின. பயத்தில் அவன் துள்ளினான். ஓர் அழுக்கான சிறுவன் புரோச்சனனின் அசௌகரியத்தைப் பார்த்துப் பல்லிளித்தான். தெரு நாய் ஒன்றும் அவனைப் பார்த்துக் குரைத்தது. எதிரே வந்த தள்ளுவண்டிகளைச் சமாளித்து, தன்னை நோக்கிக் கைகளை நீட்டிய பிச்சைக்காரர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டபடியே புரோச்சனன் மீண்டும் தன் நடையைக் கட்டினான். தங்களுடைய விற்பனைப் பொருட்களை அவனுடைய முகத்திற்கு நேரே மூர்க்கத்தனமாக நீட்டிய வியாபாரிகளை அவன் சபித்தான். பிறகு தன்னுடைய தோள்களையும் கைகளையும் பயன்படுத்தி அந்த மனிதக்கூட்டத்தின் ஊடாக அவன் நீந்திச் சென்றான். தங்கள் கண்களை மூடிக் கொண்டு தெருவோரச் சுவர் ஒன்றின்மீது சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த ஓரிரு நபர்களிடமிருந்து அவன் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். ஒருசில அடிகள் தள்ளி, நாட்பட்ட எண்ணெயில் பொறிக்கப்பட்டுக் கொண்டிருந்த காரசாரமான பலகாரங்களுக்காக மக்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

புரோச்சனன் இந்தத் தெருக்கள் வழியாகப் பல முறை நடந்திருந்தான், ஆனால் அவை எப்போதுமே அவனைக் குழப்பின. யாரையும் நிறுத்தி வழி கேட்கக்கூட அவனால் முடியவில்லை. இன்று அவன் வந்திருந்த நோக்கம் மிகவும் ஆபத்தானதாக இருந்தது. அவன் சற்று நிதானித்து, தான் செல்ல வேண்டியிருந்த திசையை நினைவுகூர முயற்சித்தான். அவனுடைய இடதுபுறமாக எங்கோ ஓரிடத்தில் ஒரு கோவில் மணி ஒலித்தது. அங்கு உச்சரிக்கப்பட்ட மந்திரங்களின் லேசான ஒலி, காற்றில் அவனிடம் தவழ்ந்து வந்தது. இல்லை, இந்த வழி இல்லை என்று நினைத்த அவன், வலதுபுறமாகத் திரும்பி, சந்தையின் குறுக்காக நடந்து சென்றான். கணக்கர்கள், வேலைக்காரர்கள், சுமை தூக்குபவர்கள், தள்ளு வண்டிக்காரர்கள், கைவினைஞர்கள், கொத்தனார்கள், குயவர்கள், தோட்டக்காரர்கள், மற்றும் பலர், காலையிலிருந்து மாலைவரை அந்தத் தெருக்களை நிரப்பி, பேரப் பேச்சுப் பூசல்களில் ஈடுபட்டனர், தங்களுடைய அன்றாட

முக்கியத்துவமற்றப் போராட்டங்களில் மூழ்கினர். புரோச்சனன் தன் வேலையில் நீடித்ததற்கு இவர்கள்தான் காரணம். இவர்கள் மட்டும் இல்லையென்றால், சிறப்பாகப் பராமரிக்கப்பட்ட அஸ்தினாபுரத் தெருக்கள், அழுக்கான மற்றும் அருவருப்பான பொதுச்சாலைகளாக உருமாறியிருக்கும். சீராகப் பராமரிக்கப்பட்டத் தோட்டங்களும் பெரிய வீடுகளும் என்றோ மறைந்து போயிருக்கும்.

பணக்காரர்களின் விருந்துகளில் கலந்து கொள்வதற்குப் புரோச்சனனுக்கு எப்போதேனும் அழைப்பு வந்தது. அத்தகைய நேரங்களில், தங்கள் நகரத்தைப் பற்றியும் அரசாங்க ஊழியர்களைப் பற்றியும் மேட்டுக்குடியைச் சேர்ந்த சீமாட்டிகள் குறைகூறியதை அவன் செவிமடுத்திருந்தான். 'அரசாங்கம் ஏன் சேரிகளை அப்புறப்படுத்துவதில்லை? அவற்றைப் பார்க்கச் சகிக்கவில்லை.' தன்னுடைய கழுத்தைச் சுற்றி மினுமினுத்த வைர அட்டிகையை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு சீமாட்டியிடமிருந்து வந்த ஒரு புலம்பல் அது. 'திமிர் பிடித்தவளே, சேரி மட்டும் இல்லையென்றால், நீ கொடுக்கின்ற அற்பச் சம்பளத்தைக் கொண்டு உன் தேரோட்டியோ அல்லது தோட்டக்காரனோ எப்படிப் பிழைத்திருப்பான்? சேரிகள் மறைந்துவிட்டால், உனக்கு ஒரு வேலைக்காரி எங்கிருந்து கிடைப்பாள்?' என்று புரோச்சனன் அவளுக்கு பதிலடி கொடுக்க விரும்பினான்.

ஆனால் அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அனுதாபம் காட்டுவதுபோல அவன் வெறுமனே தன் தலையை மட்டும் ஆட்டினான். செல்வாக்குப் படைத்த நபர்களின் மனைவியரிடம் தேவையில்லாமல் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை. இந்தப் பணக்கார ஆண்கள் இன்னும் மோசமானவர்கள். தங்கள் சமுதாயத்தில் இருந்த இக்கறையை முற்றிலுமாகத் துடைத்தெறிவதற்கான பல்வேறு வழிமுறைகளைப் பற்றி அவர்கள் பேசினர். இரண்டு சுற்று மதுவிற்குப் பிறகு தங்களுக்குத் தோன்றிய ஞானம் ஏன் அரசாங்கத்திற்கு ஒருபோதும் தோன்றவில்லை என்று அவர்கள் வியந்தனர். தனியான நேரங்களில் தங்கள் நாட்டை வெறுத்த, பீஷ்மரையும் தங்கள் அரசனையும் சபித்த இந்த மக்களைப் பற்றி நினைத்தபோது புரோச்சனன் தனக்குள் சிரித்துக் கொண்டான். தங்கள் நாகரீகத்தைக் கீழே இழுத்துத் தள்ளியதற்காக, தங்கள் அரசியாக இருந்த அந்த அயல்நாட்டுப் பெண்மணியையும் சில சமயங்களில் அவர்கள் சபித்தனர். அதே நேரத்தில், வெளிநாட்டவர்கள் தங்கள் நாட்டின் மகத்துவத்தையும் மதத்தின் சிறப்பையும் விமர்சித்தபோது, அதற்காக இவர்கள் வெறித்தனமாகவும் முட்டாள்தனமாகவும்

வக்காலத்து வாங்கினர். இந்தப் புராதன நாட்டின் ஏழ்மையையும் செல்வச்செழிப்பையும் கண்டு ஆச்சரியத்தில் கண்களை அகல விரிக்கும் அயல்நாட்டவரைப் பார்த்தால் இவர்கள் எளிதில் புண்பட்டுவிடுகின்றனர். பௌதீகப் பொருட்களை மட்டுமே நாடிய, கலாச்சாரமற்ற அந்தக் காட்டுமிராண்டிகள் ஏன் இந்த நாட்டின் அழகான கோவில்கள் மற்றும் அரண்மனைகளின்மீது கவனம் செலுத்துவதோடு மட்டும் நிறுத்திக் கொள்வதில்லை என்று அவர்கள் வியந்தனர். அயல்நாட்டவருக்குக் குடும்ப மதிப்பீடுகள் அவ்வளவாகக் கிடையாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அவர்கள் ஒழுக்கமற்றவர்கள், தூய்மையற்றவர்கள் என்பதைத் தனியாகக் கூறத் தேவையிருக்கவில்லை. மகத்துவத்திற்கான ஒரு சான்றிதழை அவர்களிடமிருந்து அஸ்தினாபுர மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், இந்த அயல்நாட்டவர்கள், இந்த நாட்டின் இசையிலும் கலையிலும் பொதிந்து கிடந்த ஆன்மீகத்தைப் பார்க்காதது குறித்தும், இங்கு கடைபிடிக்கப்பட்டச் சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் பின்னால் இருந்த அறிவியல் அடிப்படையைப் புரிந்து கொள்ளாதது குறித்தும் இந்த மேட்டுக்குடி மக்கள் பெரும் எரிச்சல் கொண்டனர். இந்த நாற்றம் பிடித்தச் சேரிகள்மீதும் அதில் வாழ்ந்த சூத்திரர்கள்மீதும் இவர்கள் ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டினர்? இவர்களுக்கு அப்படியென்ன பெரிய அக்கறை?

இப்படிப்பட்ட உன்னதமான எண்ணங்கள் அஸ்தினாபுர மக்களுக்கு மட்டும் உதிக்கவில்லை. காசியானாலும் சரி, அல்லது காஞ்சிபுரம், முசிறி, அல்லது துவாரகையானாலும் சரி, ஆடைகள், மொழிகள், பேச்சின் ஒலியழுத்தங்கள் ஆகியவை மாறுபட்டிருந்தாலும், மேட்டுக்குடியினர் மற்றும் பணக்காரர்களின் யோசனைகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. அயல்நாட்டவர் என்ன நினைத்தாலும் சரி, பரதகண்டத்தின் வேற்றுமை மேம்போக்கானது. அதன் மையத்தில் எண்ணத்திலும் செயலிலும் ஓர் ஆச்சரியகரமான ஒற்றுமை இருந்தது. புரோச்சனன் வாய்விட்டுச் சிரித்தான். இதைவிட மோசமான ஓர் உலகமும் இருந்தது என்று அந்த அதிகார வர்க்கத்தினன் நினைத்தான். தோட்டத்திலிருந்து ஒரு கனமான கல்லைத் தூக்கினால் அதனடியில் ஒருவன் எதைப் பார்ப்பானோ, அதை ஒத்த, கண்ணுக்குப் புலப்படாத ஓர் உலகம் அது. தன்னுடைய சுற்றுப்புறங்களைப் பற்றி அக்கறையின்றி, அதனடியில் ஒரு வாழ்க்கை ஊற்றெடுக்கிறது. ஒட்டுண்ணிகள், புழுக்கள், அட்டைப்பூச்சிகள், எறும்புகள் என்று சகல உயிரினங்களும் அங்கு தழைக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை எந்தத் தீங்கும் இழைக்காத உயிரினங்களாகும். தாம் உயிர் வாழ்வதற்கு

நள்ளிரவிற்குப் பின்னால்தான் அவை வெளியே வருகின்றன. அவ்வப்போது, விஷக் கொடுக்கைக் கொண்ட ஒரு தேளும் அவற்றுக்கிடையே இருக்கும்.

சகுனி புரோச்சனனுக்குத் தெளிவான அறிவுறுத்தல்களைக் கொடுத்திருந்தான். அப்படிப்பட்ட ஒரு விஷக் கொடுக்கைக் கொண்ட ஒரு தேளைச் சந்தித்து வரும்படிதான் புரோச்சனனிடம் அவன் கூறியிருந்தான். ஒரு காலத்தில், அந்தப் பெயரைச் செவிமடுத்தவர்களிடையே அது அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது. அஸ்தினாபுரத்தின் புழுதியான தெருக்களில் இருந்து பணக்காரர்களின் ஆடம்பரமான வீடுகள்வரை, துர்ஜயன் என்ற அந்தப் பெயர் எல்லோரையும் குலை நடுங்கச் செய்தது. தான் ஓரிடத்தில் இல்லாமலேயே அந்த இடத்தில் மயான அமைதியைக் கொண்டு வரும் திறன் அவனுக்கு இருந்தது. மனிதப் புழுக்களின் ராஜாங்கத்தை ஒரு காலத்தில் துர்ஜயன் ஆண்டிருந்தான். அவன் ஒரு கொடுங்கோலன். பிச்சைக்காரர்கள், விலைமாந்தர்கள், திருடர்கள் போன்றோர் அடங்கிய சாம்ராஜ்யத்திற்கு அவன் அதிபதியாக இருந்தான். அஸ்தினாபுரத்தின் கொள்ளையர் கூட்டத் தலைவன் அவன். குற்றம் அவனுடைய ஆயுதமாகவும் துயரம் அவனுடைய பாதுகாப்புக் கேடயமாகவும் இருந்தன. கள்ளச்சாராயம் காய்ச்சுவது, சிறுநேரத் திருடர்க் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது, தொழில்முறைப் பிச்சைக்காரர்களை நிர்வகிப்பது, விபச்சாரத் தொழிலை நடத்துவது ஆகியவற்றிலிருந்து ஓரளவுக்கு மட்டுமே சம்பாதிக்க முடியும் என்பதை அவன் விரைவில் கண்டுகொண்டான். வாழ்வில் மிகப் பெரிய விஷயங்கள் குறித்து அவன் ஆசைப்பட்டான். ஒருசில வருடங்களுக்கு முன்பு, அஸ்தினாபுரத்தின் சிறப்புக் காவலர்கள் அவனுடைய இருண்ட ராஜாங்கத்தைக் கிட்டத்தட்ட அழித்துவிட்டிருந்தனர். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்புடனான ஒரு பெரும் போரில் அஸ்தினாபுரம் ஈடுபட்டிருந்த ஒரு குழப்பமான நேரத்தில் துர்ஜயன் மீண்டும் தன் வலிமையைத் திரும்பப் பெற்றான். ஆனாலும், பரசுராமனுடன் ஓர் அமைதி உடன்படிக்கையைக் கையெழுத்திட்டப் பிறகு, பீஷ்மர் தன் கவனத்தை மீண்டும் தன் ராஜ்யத்தின்மீது திருப்பினார். துர்ஜயனைப் போன்றவர்களுக்கு மீண்டும் கஷ்டகாலம் துவங்கியது. பீஷ்மர் தனிப்பட்ட முறையில் நகரின் இந்த அழுக்கான தெருக்களில் முகாமிட்டு, இந்தக் கயவனின் ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். துர்ஜயன் தப்பியோடி ஒளிந்து கொண்டு, தனக்கான நேரம் வரும்வரை காத்திருந்தான்.

அந்தத் தேளை வெளிக் கொணர்ந்து, அதன் கொடுக்கிற்கு அதிக

விஷமேற்றுவதுதான் புரோச்சனனின் குறிக்கோளாக இருந்தது. இதுதான் துர்ஜயனுடைய வீடா? குண்டோதரனான புரோச்சனன் தயங்கினான். பிறகு அவன் தன் தலைப்பாகையைச் சரி செய்து கொண்டு, நேராக நிமிர்ந்து நின்றான். தன் இடைக் கச்சையில் தான் மறைத்து வைத்திருந்த குத்துவாள் பத்திரமாக இருந்ததா என்று ஒரு முறை அவன் சோதித்துக் கொண்டான். துர்ஜயன் தன்னைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் இந்தக் குத்துவாளால் தனக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்காது என்பதைப் புரோச்சனன் நன்றாகவே அறிந்திருந்தான். தன்னுடைய உப்பிய உடல், கங்கைக் கரையோரமாக நாணல்களில் சிக்கிக் கிடந்தது போன்ற ஒரு காட்சி அவனுடைய மனத்தில் ஒரு கணம் பளிச்சிட்டது. இத்தகைய அபசகுனமான எண்ணங்களை அவன் உடனடியாக ஒதுக்கித் தள்ளினான். அவன் பதற்றமின்றி நடந்து கொள்ள வேண்டியிருந்தது. அந்த வீட்டின் சிதிலடைந்த கதவின்மீது அவன் மென்மையாகத் தட்டினான். சிறிது நேரம் கழித்துக் கிறீச்சென்ற சத்தத்துடன் அக்கதவு திறந்தது. யாரோ தன்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததைப் புரோச்சனனால் காண முடிந்தது. பாதி திறந்திருந்த கதவின் வழியாக வெளியேறிய துர்நாற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக அவன் தன் வாயால் சுவாசிக்க வேண்டியதாயிற்று. “என் பெயர் புரோச்சனன். நகர சுகாதாரத்தின் தலைமை ஆய்வாளன் நான்,” என்று அவன் அதிகாரமாகக் கூறினான்.

கதவு உடனே பட்டென்று ஓங்கி மூடப்பட்டது. அதன் விளைவாக அந்த ஒட்டுமொத்தக் கட்டடமும் குலுங்கியது. என்ன செய்வதென்று தெரியாமல் புரோச்சனன் அத்தெருவில் நின்றான். அவன் அங்கிருந்து திரும்பிச் செல்லத் தீர்மானித்த நேரத்தில், அக்கதவு மீண்டும் திறந்தது. ஒரு தொழுநோயாளியின் வளைந்து நெளிந்த கையொன்று சிறிது பணத்தைப் பிடித்தபடி வெளியே நீண்டது. முதல் சுற்றில் புரோச்சனன் வெற்றி பெற்றிருந்தான். கைக்கூலி கொடுக்கும் அளவுக்கு அந்த முட்டாள் பயந்து போயிருந்தான். புரோச்சனன் தன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, ஏதோ ஓர் உபகாரம் செய்வதுபோல அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு, “துர்ஜயனின் அதிர்ஷ்டம் மாறப் போகிறது என்று அவனிடம் போய்ச் சொல். நான் அவனைப் பார்த்தாக வேண்டும்,” என்று கூறினான். கதவு மீண்டும் மூடப்பட்டது. ஆனால் விரைவில் தான் உள்ளே அனுமதிக்கப்படுவோம் என்று புரோச்சனன் உறுதியாக நம்பினான். அவனுடைய நம்பிக்கை வீணாகவில்லை.

துர்ஜயனை நேரில் பார்த்தபோது, புரோச்சனன் ஏமாற்றமடைந்தான். துர்ஜயன் ஒரு மென்மையான மீசையுடனும்

கருத்தத் தலைமுடியுடனும் மிகச் சிறியவனாகவும் சாதாரணமானவனாகவும் இருந்தான். புரோச்சனன் ஓர் ஆஜானுபாகுவான நபரை எதிர்பார்த்திருந்தான். சிலந்தி வலைகள், உடைந்த நாற்காலிகள், கிழிந்த பாய்கள் ஆகியவற்றுடன், சிதிலமடைந்து போயிருந்த அந்த இடத்தின் பரிதாபகரமான நிலையை அவன் கண்டான். அஸ்தினாபுரத்தின் கொள்ளையர் கூட்டத் தலைவன் இப்படிப்பட்ட ஒரு பாழடைந்த வீட்டிலா வாழ்ந்தான் என்று புரோச்சனன் வியந்தான். அந்த இடம் நெடுகிலும் ஓர் ஊசல் நாற்றம் வீசியது. புரோச்சனன் புன்னகைத்தான். தன் வேலை தான் நினைத்திருந்ததைவிட அதிக சுலபமாக இருக்கப் போவதாக அவனுக்குத் தோன்றியது.

"உன்னால் ஏற்றுக் கொள்ள மறுக்க முடியாத ஒரு வாய்ப்போடு நான் இங்கு வந்திருக்கிறேன்," என்று புரோச்சனன் பெருமையாகக் கூறிவிட்டுக் காத்திருந்தான்.

துர்ஜயன் ஓர் உணர்ச்சியற்ற முகத்துடன் அங்கு தொடர்ந்து அமர்ந்திருந்தான். புரோச்சனனின் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்தது. கண்ணாடி போன்ற அவனுடைய கண்களை உற்றுப் பார்த்தது தன் தவறு என்று புரோச்சனன் தன்னைத் தானே நொந்து கொண்டான். அவன் அங்கிருந்து வெளியேறி மீண்டும் தன் அலுவலகத்திற்குச் சென்றுவிட விரும்பினான். அயல்நாட்டவனான சகுனியையும் அவனுடைய முட்டாள்தனமான திட்டங்களையும் அவன் சபித்தான்.

"நீ எனக்குக் கொண்டு வந்துள்ள வாய்ப்பு என்னவென்று கூறு," என்று துர்ஜயன் வெறுமனே கூறினான்.

தான் கூற வந்திருந்த விஷயம் புரோச்சனனுக்கு மறந்து போனது. "ம்ம்ம் . . . நீ மேற்கு நோக்கிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். நீயும் உன் ஆதரவாளர்களும் . . ." என்று உளறிக் கொட்டிய புரோச்சனன், தன்னைத் தானே மோசமான வார்த்தைகளால் தன் மனத்திற்குள் திட்டிக் கொண்டான். அது அவன் கடைசியாகக் கூற வேண்டியிருந்த விஷயம். துர்ஜயன் தான் செவிமடுத்திருந்ததை நம்ப முடியாதவனாகத் தன் கண்களை அகல விரித்தான். தான் வெளியே தூக்கி எறியப்படுவதற்கு முன்பாக, புரோச்சனன் சுதாரித்துக் கொண்டு உட்கார்ந்தான். அவன் நிதானமாகத் தன் கால்மேல் கால் போட்டுக் கொண்டு, தன் கைகள் நடுங்காமல் இருப்பதற்காக அவற்றைத் தன் மடியின்மீது வைத்தான். தான் இனி கெஞ்ச வேண்டிய நிலையில் இல்லை என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

"நீ உன்னுடைய சாம்ராஜ்யத்தை மீண்டும் கட்டியெழுப்ப விரும்புகிறாயா? காந்தாரத்திலிருந்து ஆயுதங்களையும் போதை

மருந்துகளையும் கடத்தி வந்து நாகர்களுக்கு விற்பதில் உனக்கு ஒரு பங்கு வேண்டுமா? துர்ஜயா, இந்நாட்டில் மக்களை மிகவும் அச்சுறுத்துகின்ற ஒருவனாக நீ மீண்டும் உருவெடுக்க விரும்புகிறாயா?" என்று கேட்டுவிட்டு, அந்தக் கொள்ளையர் தலைவனின் முகத்தில் ஏதேனும் மாற்றம் தென்பட்டதா என்று புரோச்சனன் பார்த்தான்.

துர்ஜயனின் உதடுகள்மீது மெதுவாக ஒரு புன்னகை அரும்பியது. "நீ குடி போதையில் உளறுகிறாயா அல்லது உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? ஒரு சாதாரண நகர ஆய்வாளனான உன்னால் எப்படி இந்த விஷயங்களையெல்லாம் செய்வதற்கு எனக்கு உதவ முடியும்? உன்னுடைய கைக்கூலியை எடுத்துக் கொண்டு இங்கிருந்து ஓடிப் போய்விடு," என்று கூறிவிட்டு, துர்ஜயன் தன் உடைந்த நாற்காலியிலிருந்து எழுந்தான்.

புரோச்சனனும் எழுந்து நின்றான். ஆனால் துர்ஜயன் அங்கிருந்து நடக்கத் துவங்கியபோது, அவன், "துர்ஜயா, நீ மிகவும் அவசரப்படுகிறாய். சகுனியைப் பற்றி நீ ஒருபோதும் கேள்விப்பட்டதில்லையா?" என்று கேட்டான்.

அக்கேள்வி துர்ஜயனை ஆணியடித்தாற்போல நிற்க வைத்தது. "காந்தார இளவசரனா?" என்று துர்ஜயன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

புரோச்சனனின் பயம் கரைந்து போனது. துர்ஜயன் மதுபானத்திற்கு ஏற்பாடு செய்தான். ஒரு சிறுவன் ஒரு குடம் நிறைய மதுவோடு வந்தான். துர்ஜயனும் புரோச்சனனும் கோப்பைக் கோப்பையாக மதுவைப் பருகிக் கொண்டே விலாவாரியாகக் கலந்து பேசினர். மதுவும் நொறுக்குத் தீனியும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன.

தங்களுக்கு மதுவை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்த அச்சிறுவனை, புரோச்சனன் போதை மயக்கத்தில் பார்த்தபடியே, "நான் இவனை வேறு எங்கேயோ பார்த்திருக்கிறேன்," என்று கூறினான்.

"அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட மக்களுக்கு நான் வேலை வாய்ப்பைக் கொடுக்கிறேன். நான் கனவுகளை விற்பவன்," என்று துர்ஜயன் கூறினான். இத்தனைச் சுற்றுக்கள் குடித்தப் பிறகும் துர்ஜயனின் பேச்சு இன்னும் தெளிவாக இருந்தது. "உன்னைப் போன்ற அரசாங்க ஊழியர்களுக்கு இவர்கள்மீது எந்த அக்கறையும் இல்லை. மக்களுக்கு நான் உடனடி நியாயம் வழங்குகிறேன். ஆனால் நீங்களோ, ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்குப் பல வருடங்களை எடுத்துக் கொள்கிறீர்கள். ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வியை நீங்கள் மறுக்கிறீர்கள். இப்படிப்பட்டச் சிறுவர்கள் இறந்து போய்விடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். இந்தச் சிறுவனான ஜரனைப் போன்ற முட்டாள்கள் எண்ணற்றோர், என்றேனும் ஒருநாள் ஒரு தங்க ரதத்துடன்

தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லும் கனவுடன் இந்நாட்டின் இருண்ட கோடிகளிலிருந்து, செல்வச் செழிப்பு மிக்க இந்த நகரத்தை நோக்கி ஓடி வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வண்டி நிறைய வேலைக்காரர்களோடு தங்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்று, கிராமத்தைவிட்டு வெளியேறத் துணிந்திராத முட்டாள்களின் பொறாமையைக் கிளறிவிட விரும்புகின்றனர். நான் அவர்களுடைய கனவுகளுடன் விளையாடுகிறேன்," என்று கூறிவிட்டு, துர்ஜயன் பெரிதாகச் சிரித்தான்.

"இளம்பெண்களை நீ எப்படிக் கையாள்கிறாய்?" என்று புரோச்சனன் விஷமத்தனமாகக் கேட்டான்.

"ஹா ஹா . . . இளம்பெண்கள்! அவர்கள் வித்தியாசமானவர்கள். நண்பனே, இது கனவுகளின் நகரம். மக்கள் இங்கு தங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ள வருகின்றனர். பெண்கள் தங்கள் ஏழ்மையிலிருந்து தப்பித்து, கலையும் நடனமும் கவிதையும் பொங்கி வழியும் அஸ்தினாபுரத்தின் அழகை நோக்கி ஓடி வருகின்றனர். என்னவோர் அழகான அபத்தம் இது! இளவரசர்கள் அல்லது பணக்கார வணிகர்களின் மாளிகைகளில் விலைமாதுக்களாக ஆகும் கனவுடன் அப்பெண்கள் இங்கு வருகின்றனர். அவர்களில் ஒருசிலர் மட்டுமே தங்கள் கனவுகளில் வெற்றி பெறுகின்றனர். மற்றவர்கள் எங்களைப் போன்ற கும்பல்களுடன் வந்து ஐக்கியமாகிவிடுகின்றனர். அல்லது, தங்களுடைய ஒரே சொத்தைத் தெருக்களில் விற்கின்றனர். அவர்கள் முதுமை அடையும்போது, பிச்சைக்காரர்களாக ஆகிவிடுகின்றனர். பிறகு என்றேனும் ஒருநாள் கீழே விழுந்து இறந்து போகின்றனர். புரோச்சனா, ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்னிடம் ஏராளமான வேலை இருக்கிறது. பாழாய்ப் போன சூத்திரனான அந்த விதுரன் தன்னுடைய காவலர்களை என்மீது ஏவுவதற்கு முன்புவரை என்னுடைய கும்பலில் ஏராளமானவர்கள் இருந்தனர்."

"நண்பனே, இப்போது எல்லாமே மாறப் போகிறது," என்று கூறிய புரோச்சனன், கொள்ளைக் கூட்டத் தலைவனான துர்ஜயனின் கண்கள் ஒளிர்ந்ததைக் கண்டு மனமகிழ்ந்தான்.

துர்ஜயன் மதுவில் தன்னை முழ்கடித்துக் கொண்டிருந்தபோது, அந்த அறைக்குள் வருவதும் வெளியே போவதுமாக இருந்த அச்சிறுவனைப் புரோச்சனன் கவனமாகக் கண்காணித்தான்.

10

நாகர்கள்

ஒருநாள், ஏகலைவனின் வேட்டையாடல், காட்டினுள்ளே வெகு தூரம் அவனை அழைத்துச் சென்றது. அவன் அதற்கு முன்பு ஒருபோதும் கால் வைத்திராத ஒரு பகுதி அது. ஒரு மங்கலான நிலவு அக்காட்டின் மேலாக லேசாக ஒளி வீசி, தரையின்மீது கிடந்த இலைகளில் பிரதிபலித்தது. ஏகலைவன் ஒரு மலை நீரோடையை அடைந்தபோது, ஒரு மெல்லிய விசில் சத்தம் அவனுக்குக் கேட்டது. அவன் உடனடியாக எச்சரிக்கையானான். அது ஓர் எச்சரிக்கை ஒலிபோலவும் ஒரு சமிக்கையைப்போலவும் சந்தேகத்திற்கிடமான ஒன்றுபோல ஒலித்தது. ஏகலைவன் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து நின்று கவனித்தான். ஆனால் எதுவும் அசையவில்லை. அவன் கவலையோடும் பதற்றத்தோடும் காத்திருந்தான். எந்த அசைவும் அவனுக்குத் தென்படாவிட்டாலும்கூட, ஏதோ ஆபத்து நிகழவிருந்ததை அவனுடைய அனைத்து உள்ளுணர்வுகளும் சுட்டிக்காட்டின. யாரோ தன் அருகில் இருந்தது போன்ற ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. யாரோ ஒருவன் அல்லது ஏதோ ஒன்று தன்னைக் கண்காணித்துக் கொண்டிருந்ததுபோல அவன் உணர்ந்தான். அதைத் தன் ஒவ்வொரு நரம்பிலும் அவனால் உணர முடிந்தது. காட்டின் இருளில் யார் மறைந்து நின்று கொண்டிருந்தார்களோ, அவர்கள் முதலில் அசைவதற்காக அவன் காத்திருந்தான். ஆனால் ஓர் இலைகூட அங்கு அசையவில்லை.

‘ஒருவேளை நான் தேவையில்லாமல் பதற்றமடைகிறேன் போலும்,’

என்று நினைத்த ஏகலைவன் தன் மறைவிடத்திலிருந்து வெளியே வருவதென்று தீர்மானித்தான். ஆனால் அவனுடைய உள்ளுணர்வுகளின் வேகத்திற்கு அவனுடைய உடல் வளைந்து கொடுக்கவில்லை. இரண்டு அடிகள் எடுத்து வைத்த உடனேயே, தான் ஒரு பொறியில் சிக்கிக் கொண்டதை அவன் கண்டான். நிலத்திலிருந்து பத்தடி உயரத்தில் தலைகீழாக அவன் தொங்கிக் கொண்டிருந்தான். அவன் தன் கால்களை விடுவிக்க முயற்சித்தபோது, எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்களுடன் ஏராளமான ஆண்கள் தன்னைச் சுற்றிக் கீழே நின்று கொண்டிருந்ததை அவன் கண்டான்.

கரிய உருவத்தையும் நடுத்தர வயதையும் கொண்ட ஒருவன் அவனை அணுகி அவனுடைய கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான். அந்த நபரின் முகத்தில் அம்மைத் தழும்புகள் இருந்தன. அவனுடைய நெற்றியின்மீது ஓர் அசிங்கமான வடு இருந்தது. அவனுக்கு ஒரே ஒரு கண் மட்டுமே இருந்தது. அவன் கெந்திக் கெந்தி நடந்தான். "நாகர்களின் உலகம் உன்னை வரவேற்கிறது," என்று அவன் ஒரு புன்னகையோடு கூறினான். நச்சுப்பற்களைப்போல இருந்த அவனுடைய கூரிய முன்னம்பற்களுக்கு இடையே ஒரு பெரிய இடைவெளி தெரிந்தது. அவனுடைய நீண்ட, மெல்லிய முகமும், கண்ணாடிபோலப் பளபளத்த இடது கண்ணும், ஒரு நாகத்தின் தோற்றத்தை அவனுக்குக் கொடுத்தன. "அவனை வெட்டிக் கீழே இறங்குங்கள்," என்று அவன் கட்டளையிட்டான்.

வெலவெலத்துப் போன ஏகலைவன், இதுதான் தன் முடிவு என்று நினைத்துக் கொண்டு, தன்னைத் துளையிடவிருந்த வாளுக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். அக்கூட்டத்தில் இருந்த ஒருவன், தலைகீழாக அவனைப் பிடித்திருந்த கயிற்றை வெட்டினான். ஏகலைவன் தலை குப்புறத் தரையில் வந்து விழுந்தான். அவன் எழுந்து நிற்க முயற்சித்தபோது, சிரிப்புச் சத்தம் அவனுக்குக் கேட்டது. அவனுடைய உடல் நெடுகிலும் வலி ஊடுருவிச் சென்றது. அவனுடைய முகத்தில் ரத்தம் வழிந்தது. வலிமையான கைகள் அவனைத் தூக்கின. அவன் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றபோது, அவர்கள் அனைவரும் சிரித்தனர். தீப்பந்தங்கள் விட்டுவிட்டு எரிந்ததில், நிழல்கள் அவற்றைச் சுற்றி நடனமாடி, அங்கிருந்த சிறிய வெற்றிடத்தில் கோரமான வடிவங்களை ஏற்படுத்தின. அக்கூட்டத்தினரில் சிலர் அவனை இழுத்துச் சென்று, அங்கிருந்த நீரோடைக்குள் தள்ளினர். எரிந்து கொண்டிருந்த அவனுடைய தோலின்மீது அந்தத் தண்ணீர் பனிக்கட்டிபோலக் குளிராக இருந்தது. அவர்கள் அவனை வெளியே இழுத்தபோது, அவன் தன் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, தன்னைச்

சிறைப்பிடித்தவர்களுக்கு நடுவே ஒரு செங்குத்தான மலையின்மீது நடந்து சென்றான். அவர்களில் ஒருவன் தன்னுடைய கூர்மையான அரிவாளால் கீழே இருந்த புதர்களை வெட்டிச் சாய்த்து வழி ஏற்படுத்தினான். மற்றவர்கள் ஒரே வரிசையில் ஒருவர் பின் ஒருவராக அவனைப் பின்தொடர்ந்தனர்.

யாரும் எதுவும் பேசவில்லை. அந்த அமைதி ஏகலைவனுக்கு மேலும் மேலும் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தது. அவன் ஒருவழியாகத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, "யார் நீங்கள்?" என்று கேட்டான்.

"அஸ்தினாபுரத்தின் அரசன்," என்று அந்த ஒற்றைக் கண் தலைவன் பதிலளித்தான். அதைக் கேட்டு அவனுடைய தோழர்கள் காட்டுத்தனமாகச் சிரித்தனர். "எனக்கு ஒரு கண்ணில் மட்டுமே பார்வையில்லை. எனவே நான் ஒரு பாதி அரசன் மட்டும்தான்," என்று அவன் மேலும் கேலி செய்தான். பயம் ஒருபுறம் இருந்தாலும், ஏகலைவனால் இந்த வேடிக்கையைக் கண்டு புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை. "மகனே, எல்லோரையும் நடுங்க வைக்கின்ற காளிங்கன் நான்தான். என்னைப் பற்றிய கதைகளை நீ கேள்விப்பட்டிருக்கக்கூடும். நான் கிருஷ்ணனால் தோற்கடிக்கப்பட்டேன். ஆயிரம் தலைகளைக் கொண்ட ஒரு பாம்பை அவன் தோற்கடித்தது குறித்து அவனுடைய வீரத்தைப் பலர் புகழ்ந்து பாடுகின்றனர். அந்தப் பாம்பு நான்தான்," என்று காளிங்கன் கூறினான்.

அவர்கள் தொடர்ந்து நடந்தனர். தூரத்தில் ஒரு வெற்றிடம் தெரிந்தது. தட்சகன் அங்கு நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஏகலைவனின் இதயம் துள்ளிக் குதித்தது. ஆக்ரோஷமான நாகர் உடைகளில் சுமார் பன்னிரண்டு வீரர்கள் தட்சகனைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். அங்கு மூட்டப்பட்டிருந்த நெருப்பின் அருகே ஒரு முதியவன் அமர்ந்திருந்தான். அந்த நெருப்பைச் சுற்றிப் பல குடிசை வீடுகள் இருந்தன. பெண்கள் அங்கு ஒரு குழுவாக அமர்ந்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். சிலர் தங்கள் குழந்தைகளைத் தாலாட்டிக் கொண்டிருந்தனர். கைக்குழந்தைகள் அழுது கொண்டிருந்தனர். சிறுவர்களும் சிறுமியரும் கத்திக் கூச்சலிட்டுக் கொண்டு அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். சில இளைஞர்கள் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும், இன்னொரு குழுவில் அமர்ந்திருந்த இளம்பெண்களைக் கவர முயற்சித்துக் கொண்டிருந்தனர். மற்ற ஆண்கள் புகை பிடித்துக் கொண்டும் இறைச்சியை வறுத்துக் கொண்டும் இருந்தனர். எல்லோரையும் குலை நடுங்கச் செய்த போராளியான தட்சகனின் முகாமைப்போல அது காட்சியளிக்கவில்லை.

தன்னை நெருங்கிக் கொண்டிருந்த கூட்டத்தினரைக் கண்ட தட்சகன் எழுந்து நின்றான். காளிங்கன் அவனைக் கண்டதும் தலை வணங்கினான். தட்சகன் முன்னால் குனிந்து வணங்க வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிக்க முடியாமல் ஏகலைவன் சிலையாக நின்றான். இறுதியில் அவன் தன் தலையைத் தாழ்த்தி வணங்கினான். நாகர் தலைவனின் வசீகரமான முகத்தில் ஒரு புன்னகை பளிச்சிட்டது. "சிவபெருமானே! என்ன ஆச்சரியம்! ஏகலைவா, நாகர்களின் பணிவான வசிப்பிடத்திற்கு உன்னை வரவேற்கிறேன்," என்று அவன் தன் வாயெல்லாம் பல்லாக ஏகலைவனை வரவேற்றான்.

நெருப்பின் அருகே அமர்ந்திருந்த முதியவன் ஏகலைவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, பிறகு தன் தலையை ஆட்டியவாறே வேகமாக வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான். தட்சகன் புன்னகைத்துவிட்டு, இறுக்கமாக நின்ற ஏகலைவனைக் ஆரத் தழுவுவதற்காக ஒருசில அடிகள் முன்னால் வந்தான்.

"என்னை ஏன் இங்கே கூட்டி வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்ட ஏகலைவனின் குரலில் பயத்தைவிட அதிக எரிச்சல் தொனித்தது.

"ஏனெனில், நீ இருக்க வேண்டிய இடம் இதுதான். ஏகலைவா, உன் இல்லத்திற்கு உன்னை நான் வரவேற்கிறேன்." தட்சகனின் புன்னகை ஒரு பெரிய சிரிப்பாக விரிந்தது.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஒருசில குழந்தைகளுக்குத் தங்கள் விளையாட்டைவிட இந்தப் புதிய விருந்தாளி அதிக சுவாரசியமானவனாகத் தெரிந்தான். எனவே அவர்கள் அவனைச் சுற்றி நின்று ஆர்வத்தோடு பார்த்தனர். ஒருசில துணிச்சல்காரச் சிறுவர்கள் ஏகலைவனைக் கிள்ளிவிட்டு, அவன் தர்மசங்கடமாகவும் எரிச்சலோடும் நின்றதைக் கண்டு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தனர்.

"காளிங்கா, இவனைப் பிடிப்பது சிரமமாக இருந்ததா? எத்தனை நாட்களாக நீங்கள் இவனைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறீர்கள் . . . பதினைந்து நாட்களா . . . அல்லது இருபது நாட்களா?"

காளிங்கன் ஏகலைவனை முறைத்துப் பார்த்தான். "தட்சகா, ஒரு மாதத்திற்கும் மேலாக நாங்கள் இவனைப் பின்தொடர்ந்து வந்துள்ளோம். இவன் ஓர் இயல்பான வீரன். எப்போதுமே எச்சரிக்கையாக இருப்பவன் இவன். தொடர்ந்து மறைந்திருப்பது எங்களுக்குக் கடினமாக இருந்தது. ஓரிரு முறை இவன் கிட்டத்தட்ட எங்களைக் கண்டுபிடித்துவிட்டிருந்தான். அவனுடைய வில் திறமை மிகவும் பிரமிப்பூட்டுவதாக உள்ளது. ஒரு தலைசிறந்த வீரனாக உருவாவதற்கு இவனை நம்மால் பயிற்றுவிக்க முடியும்." நெருப்பின் அருகே அமர்ந்திருந்த முதியவன் இப்போது சிறிது ஆர்வம் காட்டத்

துவங்கியிருந்தான்.

“நான் ஏன் இங்கே இழுத்து வரப்பட்டிருக்கிறேன் என்று யாரேனும் கூற முடியுமா?” ஏகலைவனின் பொறுமை கரைந்து கொண்டிருந்தது. ஆனால் அவனுடைய குரலில் இருந்த கடுமை அக்கூட்டத்தினர்மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஒருசிலர் தங்கள் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தனர், இன்னும் சிலர் ஏகலைவனுடைய முதுகில் குத்தி அவனைச் சீண்டினர்.

“காலம் வரும்போது உனக்கு எல்லாம் தெளிவாகப் புரியும். பொறுமையாக இரு. நீ இங்கே ஒரு குறிக்கோளுக்காகக் கூட்டி வரப்பட்டிருக்கிறாய். உனக்காக நான் மாபெரும் திட்டங்களை வைத்திருக்கிறேன். வில்லை நீ திறமையாகக் கையாள்வதை நான் பார்த்திருக்கிறேன். மேலும், நீ எங்களில் ஒருவன். நாங்கள் ஒரு மாபெரும் லட்சியத்திற்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். உன்னைப் போன்ற வலிமையான இளைஞர்கள்தான் இந்தப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்,” என்று கூறிய தட்சகன், அந்த முதியவனின் பார்வையை எதிர்கொண்டபோது தன் சொற்பொழிவைத் திடுதிப்பென்று நிறுத்திவிட்டு, “அசுவசேனா,” என்று அழைத்தான். ஓர் இளைஞன் ஓரடி முன்னால் வந்து குனிந்து வணங்கினான். “ஏகலைவா, இவன் அசுவசேனன். இப்போதைக்கு உன்னுடைய தேவைகளை இவன் கவனித்துக் கொள்வான். எதிர்காலத்திலும் உனக்கு இவன் உதவியாக இருக்கக்கூடும்.”

அந்தக் கிராமத்தின் எல்லையில் நிகழ்ந்த ஏதோ ஒரு குழப்பம் அவர்களுடைய உரையாடலை இடைமறித்தது. நாக வீரர்கள், ஒரு சிறு கூட்டத்தினரைக் கயிற்றால் பிணைத்து இழுத்து வந்து கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைக் காண அந்த ஒட்டுமொத்தக் கிராமமும் திரண்டு வந்தது. இழுத்து வரப்பட்டவர்களில், மேல்தட்டைச் சேர்ந்தவர்களைப்போல இருந்த ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தினரைப்போலத் தெரிந்தனர். அவர்கள் அனைவருமே கற்பனை வளமற்றக் கடின உழைப்பாளிகள், நேர்மையான நகரவாசிகள். வீட்டிற்குள் கொடுங்கோலர்களாகவும் வெளியே அடங்கிப் போவோராகவும் இருந்தவர்கள் அவர்கள். அவர்களுடைய கண்களில் கடுமையான பயம் தென்பட்டது. அந்தக் கிராமத்து மக்கள் அவர்களை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளினர். இழுத்து வரப்பட்டிருந்தவர்களில் இருந்த துரதிர்ஷ்டக்காரப் பெண்களின் தலைமுடியை, கிராமத்துப் பெண்கள் பற்றி இழுத்தனர். குழந்தைகள் அக்கூட்டத்தினரை மகிழ்ச்சியாகக் குத்திச் சீண்டி விளையாடினர். தெரு நாய்கள் குரைத்துக் கொண்டு அங்குமிங்கு ஓடி,

மேலும் குழப்பமூட்டின. சிறைப்பிடிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணிடமிருந்து யாரோ ஒருவன் அவளுடைய கைக்குழந்தையைப் பிடுங்கினான். சிறிது நேரத்திற்கு அக்குழந்தை அக்கூட்டத்தைச் சுற்றி அங்குமிங்கும் பந்தாடப்பட்டது. பயந்து போன அப்பெண்ணின் வேதனைக் கத்தல்கள் அக்கூட்டத்தினருக்கு ஆவேசத்தை ஏற்படுத்தின.

தட்சகனும் அசுவசேனனும் அக்கூட்டத்தினரை நோக்கி ஓடினர். ஏகலைவன் அவர்களைப் பின்தொடரவிருந்த நேரத்தில், நெருப்பின் அருகே அமர்ந்திருந்த முதியவன் அவனுடைய கையை இறுகப் பற்றினான். "இப்போது இங்கிருந்து தப்பிச் சென்றுவிடு! இது ஓர் ஆபத்தான இடம். இவன் ஒரு பைத்தியக்காரன். இவன் எங்களுடைய மக்களைப் பைத்தியக்காரர்களாக ஆக்கி வைத்திருக்கிறான். இப்போது நீ இங்கிருந்து வெளியேறாவிட்டால், எதிர்காலத்தில் உன்னால் ஒருபோதும் இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாது. நீயும் இதற்குள் உறிஞ்சப்படுவதற்கு முன் இங்கிருந்து ஓடிப் போய்விடு," என்று எச்சரித்தான்.

ஏகலைவன் அந்த முதியவனை ஆச்சரியத்தோடு பார்த்தான். அந்த முதியவனுடைய பெரும்பான்மையான பற்கள் காணாமல் போயிருந்தன. ஒருசில நரைமுடிக் கற்றைகள் அவனுடைய நெற்றியின்மீது விழுந்திருந்தன. அவன் நோஞ்சான்போலக் காட்சியளித்தான். ஆனால் அது அவனுடைய வயதின் காரணமாக ஏற்பட்ட பலவீனம் அல்ல, மாறாக வாழ்க்கையில் ஏற்பட்டச் சோர்வின் காரணமாக ஏற்பட்டிருந்த பலவீனம்தான். "ஐயா, நீங்கள் யார்? தட்சகனுடன் சேர்ந்து கொள்வதிலிருந்து நீங்கள் ஏன் என்னைத் தடுக்க விரும்புகிறீர்கள்?" என்று ஏகலைவன் கேட்டான்.

"மகனே, நெருப்போடு விளையாடாதே. பகைமை எனும் நஞ்சு உன் மனத்தை ஊடுருவி, கோபம் உன்னைக் குருடனாக ஆக்குவதற்கு முன்பு இங்கிருந்து போய்விடு. தட்சகன் பூதாகாரப்படுத்திக் காட்டுகின்ற அளவுக்கு இவ்வுலகம் அவ்வளவு மோசமானதல்ல. அவன் அரசனாக ஆனாலும் இவ்வுலகம் உடனே ஒரு சொர்க்கமாக மாறிவிடாது. நீ வளர வேண்டியவன். சாத்தியமற்றக் கனவுகளுடன் சுற்றித் திரிகின்ற இவனைப் போன்றவர்களிடம் நீ மயங்கிவிடாதே. இப்போதே இங்கிருந்து வெளியேறிவிடு!"

"ஐயா, நீங்கள் யார்?" என்று ஏகலைவன் மீண்டும் கேட்டான். ஆனால் அந்த முதியவன் மௌனமாக இருந்தான்.

இதற்கிடையே, அக்கூட்டத்தினர் கட்டுப்படுத்தப்பட்டு, கைதிகள் அக்கிராமத்தின் மையப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மூங்கிலால் ஆன ஒரு மேடையின்மீது தட்சகன் அமர்ந்திருந்தான்.

ஒருசில அடிகள் தள்ளி, சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் கயிறுகளால் பிணைக்கப்பட்டு நின்று கொண்டிருந்தனர். அங்கு ஏதோ ஒரு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்ததுபோலத் தெரிந்தது. கிராம மக்கள் அனைவரும் கீழே அமர்ந்திருந்தனர். உற்சாகமடைந்திருந்த ஒருசில நபர்கள் மோசமான வார்த்தைகளை அள்ளி வீசினர். ஏகலைவனின் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டிருந்த இளம் நாகனான அசுவசேனன், அக்கூட்டத்தின் ஊடாக ஏகலைவனை நோக்கி ஓடி வந்தான்.

மீண்டும் அந்த முதியவன், "முட்டாளே, உனக்கு அறிவு ஏதும் இல்லையா? இங்கிருந்து ஓடிப் போ! இப்போது நீ ஓடாவிட்டால், உன் வாழ்க்கை என்றென்றைக்குமாக மாறிவிடும்," என்று சீறினான்.

ஏகலைவன் செய்வதறியாமல் விழித்தான். அந்த முதியவனின் அறிவுரையைப் பின்பற்றுமாறு அவனுடைய மனத்தின் ஒரு பகுதி அவனிடம் கூறியது. ஆனால் நிமிடங்கள் செல்லச் செல்ல, ஆர்வம் அவனை இழுத்துப் பிடித்துக் கொள்ளத் துவங்கியது.

அசுவசேனன் ஏகலைவனின் அருகில் வந்து நின்று, களைப்பாலும் உற்சாகத்தாலும் மூச்சிரைத்தான். "வா, நம்பிக்கைத் துரோகிகள் விசாரிக்கப்படுவதை நீ பார்க்க வேண்டும் என்று நம் தலைவர் விரும்புகிறார்," என்று அவன் கூறினான்.

ஏகலைவன் ஒரு கணம் தயங்கிவிட்டு, நம்பிக்கை இழந்தவனாகத் தன் தலையை அசைத்தபடி அமர்ந்திருந்த அந்த முதியவனைப் பார்த்தான். பிறகு, அம்முதியவனின் அறிவுரையை ஒதுக்கித் தள்ளுவதென்று அவன் தீர்மானித்தான். ஒருவேளை அந்த முதியவன் மனநிலை சரியில்லாதவனாக இருக்கக்கூடும் என்று நினைத்த அந்த வேடுவச் சிறுவன், விசாரணையைப் பார்ப்பதற்காக அசுவசேனனைப் பின்தொடர்ந்து சென்றான். "அசுவசேனா, யார் அந்த முதியவர்?" என்று அவன் தன் தோழனிடம் கேட்டான்.

"ஓ, அவரை நீ கண்டுகொள்ள வேண்டாம். அவர் ஒரு பைத்தியக்காரர். முன்பொரு காலத்தில் அவர் நாகர்களின் அரசனாக இருந்தார். அவருடைய பெயர் வாசுகி. நம்முடைய மரபுரிமையைத் தவறவிட்டு, நம் ராஜ்யத்தைத் தொலைத்த ஒரு முட்டாள் அவர். அமைதியைப் பற்றியும் அது போன்ற பிற விஷயங்களைப் பற்றியும் அவர் தொடர்ந்து பிதற்றிக் கொண்டே இருப்பார். நம் தலைவரின் கருணை உள்ளம்தான் அவரை உயிரோடு விட்டு வைத்திருக்கிறது. நம்முடைய லட்சியத்திற்காக நாம் போராடத் தயாராக இல்லாவிட்டால், நாகர்களுக்கு என்ன நேரும் என்பதற்கு அவரை ஓர் எடுத்துக்காட்டாக நம் தலைவர் வைத்திருக்கிறார். வாசுகி ஒரு நகைச்சுவைப் பாத்திரம்.

அவருடைய உளறல்களை நீ தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.”

விசாரணை நடக்கவிருந்த இடத்தை அவர்கள் இருவரும் சென்றடைந்தனர். ஏற்கனவே சிலர் அமர்ந்திருந்த ஒரு மரக்கட்டையின்மீது உட்காருமாறு தட்சகன் ஏகலைவனுக்குச் சமிக்கைக் காட்டினான். ஏகலைவனுக்கு இடம் கொடுப்பதற்காக அவர்கள் சற்று நகர்ந்தனர். காளிங்கன் தன்னுடைய வாளைத் தன் வலது தோளில் தொங்கவிட்டபடி ஒரு புன்னகையோடு நின்றான். அந்த நாகனின் கண்களில் தென்பட்ட இன்பக் களிப்பைக் கண்ட ஏகலைவனுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

நடுத்தர வயதைக் கொண்ட ஒருவன் அக்கூட்டத்திலிருந்து ஒருசில அடிகள் முன்னால் வந்தபோது, திடீரென்று அங்கு ஒரு பெரும் அமைதி சூழ்ந்தது. அவன் தட்சகனையும் ஏகலைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்திருந்த ஆண்களையும் பார்த்து வணங்கிவிட்டு, “மரியாதை மிக்க மக்கள் மன்றத்தினரே, நம்முடைய மாபெரும் லட்சியத்திற்குத் துரோகம் இழைத்தவர்கள் கைது செய்யப்பட்டு இங்கு நம்மிடையே நிற்கின்றனர். அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்காகவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். இங்கு வலது கோடியில் நிற்பவன்தான் நம்முடைய லட்சியத்திற்கு மாபெரும் தீங்கை இழைத்திருக்கிறான். மரியாதைக்குரிய நீதிமான்களே, அஸ்தினாபுரத்தின் புறநகரங்களில் ஒன்றான சூரியநகரத்தைச் சேர்ந்த நம்பிக்கைத் துரோகியான பிராமணன் சிவராமன் இவன்,” என்று கூறினான்.

அப்போது வயோதிகன் ஒருவன் முன்னால் பிடித்துத் தள்ளப்பட்டான். உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்த அவன் பெருமையோடு தலை நிமிர்ந்து நின்றான். அவனுடைய கண்களில் எந்தவிதமான பயமும் தென்படவில்லை. மாறாக, அவன் தட்சகனை வெறுப்போடு வெறித்துப் பார்த்தான்.

“மக்கள் மன்றத்தின் முன்னால் குனிந்து வணங்கு,” என்று ஒரு காவலாளி உரக்கக் குரைத்தான். ஆனால் அந்த முதியவன் அதை அலட்சியப்படுத்திவிட்டு நின்றபோது, அவன் தன் வாளின் கைப்பிடியைக் கொண்டு அவனைத் தாக்கினான். தன் நெற்றியிலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தையும் பொருட்படுத்தாமல் அந்த வயோதிகன் அசையாமல் நின்றான்.

“இவன் தன்னுடைய தன் குலத் தொழிலைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, தன் அறுபதாவது வயதுவரை ஓர் ஒழுக்கக்கேடான வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளான். அவன் தன் மூதாதையரிடமிருந்து

ஏகப்பட்ட ஏக்கர் விளைநிலங்களை சுவீகரித்தான். அவனுடைய மூதாதையர், ஒருசில தலைமுறைகளுக்கு முன்பு, அந்நிலங்களை நாகர்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து வஞ்சகமாகக் கைப்பற்றியிருந்தனர். இவன் தன் வேலைக்காரர்களிடம் எப்போதும் கொடுமையாக நடந்து கொண்டான். அவர்களைப் பழித்துரைத்தான். அவனுடைய தொழிலாளிகள் அவனுடைய கொடுங்கோன்மையிலிருந்து தப்பி, நம்முடைய மதிப்பிற்குரிய தலைவரான நகுஷரின் தலைமையின்கீழ் முதல் படையை உருவாக்கினர். நாம் வெற்றி பெற்றுக் கொண்டிருந்ததைப் புரிந்து கொண்ட இந்தக் கொடுங்கோலன், கடந்த பதினைந்து வருடங்களாக, இப்புவியிலேயே தான்தான் மிகவும் உன்னதமானவன் என்பதுபோல நடித்து வந்துள்ளான். யாதவ இனத்தைச் சேர்ந்த பலராமனுடன் சேர்ந்து சதி செய்து, தன்னுடைய கிராமங்களில் பல்வேறு கைவினைப் பயிற்சி மையங்களை இவன் துவக்கியுள்ளான். கைவினைக் கலைகள் மற்றும் வர்த்தகத்தின் பக்கம் நம் மக்களைக் கவர்ந்திழுப்பதன் மூலம், நம்முடைய லட்சியத்திலிருந்து அவர்கள் விலகிச் செல்வதற்கு இவன் அவர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறான். அரசாங்கம் இவனுக்குக் கணிசமான மானியங்களை வழங்கி வந்துள்ளது. இது அவனுடைய சதியை மேலும் நிரூபிக்கிறது.

“எல்லா மனிதர்களுக்கும் இவன் சம அளவிலான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறான் என்பது இன்னொரு வினோதமான விஷயம். ஆனால் நம் எதிரிகளின் உண்மையான இயல்பை நாம் புரிந்து கொண்டோமேயானால், இது அவ்வளவு வினோதமான விஷயமாக நமக்குத் தோன்றாது. மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நபர்களின் பட்டியல் உண்மையிலேயே வியப்பூட்டுவதாக உள்ளது. ஒரு துறவியைப்போல நடந்து கொள்கின்ற பலராமன்; குரு வம்சத்தின் அகங்காரம் பிடித்த அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர்; பைத்தியக்கார பிராமணனான கிருபன்; சமய நம்பிக்கையற்றச் சார்வகன்; நம்பிக்கைத் துரோகம் செய்யும் நாகர்கள் என்று இந்த வினோதமான பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. நம்மிடையே நிற்கும் இந்தக் கைதி, தன் சாதியைச் சேர்ந்தவர்களின் உறுதியான எதிர்ப்பையும் மீறி இவை அனைத்தையும் செய்திருக்கிறான். இவனுக்கு எந்தவிதமான கொள்கைகளும் இல்லை, எந்தவிதமான நெறிமுறைகளும் இல்லை என்பதையே இது நிரூபிக்கிறது. இது நமக்கு ஒரு படிப்பினையும்கூட. பொதுமக்களின் லட்சியத்தைத் தோற்கடிப்பதற்கு, நம் எதிரிகள் மிகவும் தரம் தாழ்ந்து போய், எதிர்பாராத கூட்டணிகளை உருவாக்குவார்கள்

என்பதை இது அப்பட்டமாக நிரூபிக்கிறது.”

பேசிக் கொண்டிருந்தவன் தன் பேச்சை நிறுத்திவிட்டிருந்ததை உணர்ந்து கொள்வதற்கு ஏகலைவனுக்கு ஒரு கணம் பிடித்தது. அங்கு நடந்தேறிய அறிவுக்குப் புறம்பான விவாதம் அவனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஆனால் அவனைத் தவிர அங்கிருந்த வேறு யாருக்கும் அந்த விவாதம் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. அந்த வயோதிக பிராமணன் தலை நிமிர்ந்து நின்றான். அவனுடைய கரடுமுரடான முகம் நெடுகிலும் வெறுப்பு எழுதி ஒட்டப்பட்டிருந்தது. சிறைப்பிடிக்கப்பட்டவர்களிடையே நின்ற, செல்வச் செழிப்பு நிறைந்தவன்போலத் தோன்றிய மற்றுமொருவன் தேம்பத் துவங்கினான். அவனுடைய பருத்த உடல் நடுங்கத் துவங்கியது. மற்ற ஆண்களும் பெண்களும் ஓலமிடத் துவங்கினர். ஆனால் சிறிது நேரத்திற்கு முன்பு அவர்கள் செவிமடுத்திருந்த நீண்ட சொற்பொழிவு அவர்கள் யாருக்கும் நிச்சயமாகப் புரிந்திருக்கவில்லை என்று ஏகலைவன் உறுதியாக நம்பினான். தாங்கள் எதற்காகப் போராடிக் கொண்டிருந்தோம் என்பது அங்கு கூடியிருந்த போராளிகளில் பலருக்குப் புரிந்திருக்காது என்றும் அவன் உறுதியாக நம்பினான்.

தட்சகன் தன் இருக்கையைவிட்டு எழுந்து, மேலும் கீழும் நடக்கத் துவங்கினான். மக்கள் எதிர்பார்ப்புடன் அவனைப் பார்த்தனர். அவர்களிடையே முதலில் எழுந்த லேசான முணுமுணுப்பு, விரைவில் ஒரு பெரும் இரைச்சலாக மாறியது. அது கட்டுக்கடங்காமல் போகவிருந்த நேரத்தில், தட்சகன் தன் கைகளை உயர்த்தினான். கூட்டம் உடனே அமைதியானது. “இவன் நம் மக்களின் எதிரி. இப்படிப்பட்ட எதிரிகள் அனைவரையும் ஒவ்வொருவராகச் சிறைப்பிடித்து, நாம் ஒழித்துக் கட்ட வேண்டும். நம்முடைய யுத்தம், மக்களின் யுத்தம். மதம், செல்வம், இனம், மொழி, தோலின் நிறம், மற்றும் சாதியின் அடிப்படையில் காட்டப்படும் பாகுபாட்டிற்கு எதிராகத் தொடுக்கப்படும் யுத்தம் அது. இந்த முதியவன் ஒருசில ஏழை மக்களுக்குக் கல்வியறிவைக் கொடுத்தான் என்றும், மக்களுக்கு மருந்துகளை வினியோகம் செய்த சில மருத்துவமனைகளை நிறுவுவதற்குச் சிறிதளவு பணம் கொடுத்தான் என்றும், அற்பமான கைவினைப் பொருட்களை உருவாக்குவதற்கு ஒருசிலருக்குக் கற்றுக் கொடுத்தச் சில பள்ளிகளைத் துவக்கினான் என்றும், அதனால் இவன் ஒரு நல்ல மனிதன் என்றும் நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் விஷயங்களின் உண்மையான இயல்பை நீங்கள் புரிந்து கொள்ளாததுதான் அதற்குக் காரணம்.

“இப்படிப்பட்ட எதிரிகள் நம்முடைய லட்சியத்தை

பலவீனப்படுத்துகின்றனர். இவன் வழங்கிய கல்வியானது குலங்களைப் பற்றியும் சாதியைப் பற்றியும் பேசியது. இவனைப் போன்றவர்களிடம் நம் மக்கள் எப்போதும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்காக இப்படிப்பட்ட யோசனைகளை இவன் அவர்களுடைய மனத்தில் விதைக்க விரும்புகிறான். இவன் மருத்துவமனைகளைத் துவக்கியதற்குக் காரணம், இவனுடைய தொழிலாளர்கள் ஆரோக்கியமாக இருந்து, இவனுக்காகக் கடினமாக உழைத்துப் பணம் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான். இவன் கைவினைப் பயிற்சி மையங்களைத் துவக்கியதற்குக் காரணம், அதில் பயிற்சி பெரும் மக்கள் இலவசமாகத் தயாரிக்கும் கைவினைப் பொருட்களைக் கொழுத்த வணிகர்களிடம் விற்று இவன் தன்னுடைய பணப் பெட்டகங்களை நிரப்புவதுதான். இக்கைவினைஞர்களின் முதல் உற்பத்தியை வாங்கியது யார்? அதோ அழுது கொண்டு நிற்கிறானே, அந்தக் கொழுத்த வணிகன்தான். அவனிடமிருந்து பொருட்களை வாங்கியது யார்? பலராமன். பிறகு அவன் அவற்றை அயல்நாட்டவரிடம் அதிகப் பணத்திற்கு விற்றான். பிராமணர்கள் கடல்வழிப் பயணத்திற்குத் தடை விதித்துள்ளனர். ஆனாலும் இவர்கள் அதை மீண்டும் துவக்கியுள்ளனர். பணத்திற்காக எந்தவொரு விதிமுறையையும் மீற அவர்கள் தயாராக இருக்கின்றனர். பலராமன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று பாருங்கள். கடலின் அருகே அவன் ஒரு பொன் நகரத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறான். அவனும் அவனுடைய மக்களும் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் வாழ்வார்கள். ஆனால் உழவர்கள் மற்றும் காட்டின் மைந்தர்களான நம்மைப் போன்றவர்கள் ஏழ்மையில் உழன்று கொண்டிருப்போம். அவர்கள் தங்களுடைய வெள்ளித் தட்டுகளில் இனிய பலகாரங்களை உண்டு களிக்கும்போது, நாம் மரங்களின் வறண்ட வேர்களைச் சவைத்துக் கொண்டிருப்போம். அவர்கள் பட்டாடைகளில் பகட்டாக வலம் வரும்போது, நம்முடைய பெண்களிடம் தங்கள் மானத்தைக் காப்பதற்கு வெறும் கந்தல் துணிகளே இருக்கும். அவர்களிடம் ஆடம்பரமான மாளிகைகளும் படுத்துறங்குவதற்கு மென்மையான படுக்கைகளும் இருக்கும். ஆனால் நாம் நம்முடைய களைத்துப் போன தலைகளைச் சாய்ப்பதற்கு, துர்நாற்றம் வீசும் குகைகளும் கடினமான பாறைகளுமே இருக்கும்.”

தன்னைச் சுற்றி அமர்ந்திருந்த மக்கள்மீது தான் ஏற்படுத்திக் கொண்டிருந்த தாக்கத்தை மகிழ்ச்சியாக ரசித்து அனுபவிப்பதற்காகத் தட்சகன் தன் பேச்சைச் சற்று நிறுத்தினான். அவர்கள் மேலும் மேலும் கொதிப்படைந்து கொண்டிருந்ததைக் கவனித்த அவன் தன் பேச்சைத் தொடர்ந்தான். “ஆனால் யார் அவர்களைப் பணக்காரர்களாக

ஆக்கியது? யார் அந்த அரண்மனைகளையும் தோட்டங்களையும் தேர்களையும் நடைபாதைகளையும் பரந்த வீதிகளையும் தனித்துவமாகச் செதுக்கப்பட்டக் கோவில்களையும் உருவாக்கியது? நம்மைப் போன்றவர்கள்தான். நம்முடைய வியர்வையும் ரத்தமும்தான் அவர்கள் அனுபவிக்கின்ற ஆடம்பரங்களைச் சாத்தியமாக்கின. உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் நம் எதிரிகளின் கைகளை வலுப்படுத்துகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்களுடைய பணப் பெட்டகங்களில் நீங்கள் கொட்டிக் குவிக்கின்ற ஒவ்வொரு நாணயத்தையும் தங்கள் நலனுக்காக உங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் பயன்படுத்துவர். என் சக நாகர்களே, வானரர்களே, யட்சர்களே, கின்னரர்களே, காந்தர்வர்களே, அசுரர்களே — போர் இப்போதுதான் துவங்கியுள்ளது!"

தட்சகன் பேசப் பேச, கூட்டத்தினரின் கோபம் தொடர்ந்து அதிகரித்ததை ஏகலைவனால் உணர முடிந்தது. இறுதியில் தட்சகன் தன் பேச்சை நிறுத்திவிட்டு, உச்சக் குரலில், "இந்தக் கயவர்கள் நம்மை அடிமைகளாக வைத்திருப்பதற்கு நாம் அனுமதிக்க வேண்டுமா?" என்று கத்தினான்.

"கூடாது . . ." என்று கூட்டம் ஒரே குரலில் திருப்பிக் கத்தியது.

"நம்மைத் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கின்ற இந்தப் பணக்காரப் பன்றிகள் ஆடம்பரத்தில் மூழ்கி முத்தெடுக்கும்போது, நம்முடைய சகோதரிகள் நிர்வாணமாகவும், நம் குழந்தைகள் பசியோடும், நம் மக்கள் வீடுவாசலின்றியும் இருக்க வேண்டுமா?"

"கூடாது, கூடாது . . ."

"இந்த நம்பிக்கைத் துரோகிகளை நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டத் தட்சகனின் குரல் பட்டுத் துணியைப்போல மென்மையாக மாறியது. ஆனால் அடுத்தக் கணம், "தோழர்களே, இப்போது நாம் இந்த நம்பிக்கைத் துரோகிகளை என்ன செய்யலாம்?" என்று அவன் மீண்டும் உரக்கக் கத்தினான்.

"அவர்களைக் கொல்லுங்கள்! அவர்களைக் கொல்லுங்கள்!" என்று கூட்டம் திருப்பிக் கத்தியது. "அவர்களைக் கொல்லுங்கள்! அவர்களைக் கொல்லுங்கள்!" என்ற முழக்கம் உச்சஸ்தாயியை எட்டியது.

குற்றம் சுமத்தப்பட்டவர்களை நோக்கித் தட்சகன் திரும்பினான். "மக்கள் மன்றம் உங்களை விசாரித்துத் தன் தீர்ப்பைக் கூறிவிட்டது. அவர்களுடைய விருப்பம் நிறைவேற்றப்படும்," என்று அவன் கூறினான்.

ஆதரவற்று நின்ற அந்த ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்து

எழுந்த அழுகையால் அக்கூட்டத்தினரின் ஆவேசத்தை நீர்த்துப் போகச் செய்ய முடியவில்லை. அவர்கள் அந்த வயோதிக பிராமணனைக் கீழே தள்ளி மண்டியிடச் செய்தனர். காளிங்கன் தன் வாளை உயர்த்தியபோது, அந்த முதியவன் சில பிரார்த்தனைகளை முணுமுணுத்தான். ஒரே சீவில், காளிங்கன் அவனுடைய தலையைத் துண்டித்தான். தலையற்ற அவனுடைய உடலிலிருந்து ரத்தம் பீறிட்டுத் தெறித்தது. துண்டிக்கப்பட்டத் தலை நிலத்தின்மீது உருண்டோடி, ஏகலைவனின் பாதங்களுக்கு அருகே வந்து நின்றது. இந்த பயங்கரத்தைக் கண்டு நடுங்கிய ஏகலைவன் பயத்தில் துள்ளினான். அந்த வயோதிகனின் உயிரற்றக் கண்கள் அந்த வேடுவச் சிறுவனை வெறித்துப் பார்த்தன. அக்கண்கள் அவனை நெடுநாட்கள் துரத்தவிருந்தன. உயிரற்ற அந்த மனிதனின் உடல் சிறிது நேரம் துடிதுடித்தது. இறுதியில் யாரோ ஒருவன் அதன்மீது ஓங்கி மிதித்து அதன் துடிப்பை அடக்கினான்.

“வெல்க மக்கட்புரட்சி!” என்று காளிங்கன் சத்தமாக முழங்கினான்.

ஓராயிரம் குரல்கள் பதிலுக்கு முழங்கின. சிறைப்பிடிக்கப்பட்டவர்களை இகழ்ந்து கொண்டிருந்த அக்கூட்டத்தினர், அவர்களை ஒவ்வொருவராக முன்னால் தள்ளத் தள்ள, காளிங்கனும் அவனுடைய வீரர்களும் அவர்களை ஈவு இரக்கமின்றி வெட்டிச் சாய்த்தனர். இறுதியில், அந்தக் கொழுத்த வணிகன் மட்டுமே எஞ்சியிருந்தான். அவனையும் வெட்டிச் சாய்ப்பதற்காகக் காளிங்கன் அவனை முன்னால் இழுத்தான். ஆனால் கருணை காட்டுமாறு அந்த வணிகன் கெஞ்சினான். தன்னை உயிரோடு விட்டுவிட்டால், தனக்குச் சொந்தமான அனைத்தையும் தட்சகனுக்குத் தருவதாக அவன் கூறினான். அந்த வணிகனின் மரண தண்டனையைக் கடைசிக் கணத்தில் தட்சகன் நிறுத்தி வைத்தான். அப்போது அங்கு ஒரு மயான அமைதி நிலவியது. “தோழர்களே, நம் ஏழைகளை ஏமாற்றித் தான் சம்பாதித்துள்ள செல்வத்தைக் கொடுக்க அவன் முன்வந்திருக்கிறான். அவனுக்கு உயிர்ப்பிச்சை அளித்துவிட்டு, அவனுடைய செல்வத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டுமா?” என்று அவன் கேட்டான்.

“வேண்டாம் . . .” என்று கூட்டத்தினர் கத்தினர். ஆனால் அவர்களுடைய குரல்களில் ஒருவிதமான சந்தேகம் தொனித்தது.

ஒரே ஒரு குரல் மட்டும், “வேண்டும்!” என்று கூறியது. யார் அவ்வாறு கூறியது என்று பார்ப்பதற்காக எல்லாத் தலைகளும் திரும்பின.

“வேண்டுமா?” என்று தட்சகன் கேட்டான். “வேண்டும் என்று கூறியது யார்? முன்னால் வா. நான் அவனைப் பாராட்ட விரும்புகிறேன்.”

பயத்தில் அக்கூட்டத்தினர் மௌனமாக நின்றனர். யாரும் அசையவில்லை. காளிங்கன் குழப்பத்தோடு நின்றான். பிறகு அவர்களிடையே முணுமுணுப்புகள் எழுந்தன. அப்போது தட்சகன் பேசினான். "நம்முடைய போருக்கு ஆயுதங்களும் ஆட்களும் பிற பொருட்களும் தேவை. யார் இவற்றையெல்லாம் நமக்குக் கொடுப்பார்கள்? தங்கள் வர்த்தகத்திற்காக நம்முடைய மக்களைச் சுயநலமாகப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்துக் கொழுத்துப் போயுள்ளவர்களைத் தவிர வேறு யார் அவற்றை நமக்குக் கொடுப்பார்கள்? இந்த வணிகர்களும் தொழிலதிபர்களும் தங்களுடைய மக்களின் எதிர்ப்பையும் மீறி நம்முடைய போருக்குத் தேவையான பணத்தை வழங்குவார்கள். நாம் அவர்களுடைய பணத்தைப் பயன்படுத்திச் சண்டையிடுவோம். இந்தக் கயவனை நாம் பிணைக் கைதியாக வைத்திருக்கப் போகிறோம். இவனிடமுள்ள ஒவ்வொரு காசையும் நாம் பயன்படுத்தப் போகிறோம். பிறகு இவனும் நம்மைப்போல ஓர் ஓட்டாண்டியாக ஆனவுடன் நம் மக்கள் மன்றம் இவனுக்கான தீர்ப்பை வழங்கும். இவனை இப்போது இங்கிருந்து இழுத்துச் செல்லுங்கள். மக்கள் மன்றம் இத்துடன் நிறைவு பெறுகிறது."

தட்சகன் தான் அமர்ந்திருந்த மேடையிலிருந்து கீழே குதித்தான். எட்டி உதைத்துக் கொண்டும் கத்திக் கொண்டும் இருந்த அந்த வணிகனைக் காளிங்கனின் ஆட்கள் தரதரவென்று இழுத்துச் சென்று ஒரு குடிசைக்குள் சிறை வைத்தனர். தட்சகன் ஏகலைவனைக் கடந்து சென்றபோது, அவனுடைய தோளின்மீது தட்டிவிட்டுப் புன்னகைத்தான். ஆனால் ஏகலைவனால் பதிலுக்குப் புன்னகைக்க முடியவில்லை. அங்கு நிகழ்ந்திருந்த வன்முறை அவனை அதிர்ச்சிக்கு ஆளாக்கியிருந்தது. காதல் ரசனைமிக்கக் கதாநாயகனான தட்சகன் மடிந்து போய், அவனுடைய இடத்தில் ஒரு பேய் ஆட்சி செய்யத் துவங்கியிருந்தது.

ஏகலைவன் தட்சகனைப் பின்தொடர்ந்து செல்லவிருந்த நேரத்தில் ஒரு பலவீனமான குரல் அவனை அழைத்தது. ஏகலைவன் திரும்பிப் பார்த்தபோது, ஒருசில அடிகள் தள்ளி, தன்னுடைய நலிந்த உடலை ஒரு கைத்தடியின் உதவியுடன் தாங்கிப் பிடித்தபடி, நாகர்களின் பழைய அரசனான வாசுகி நின்று கொண்டிருந்தான். "மகனே, இப்போது நீ உன் பாடத்தைக் கற்றுக் கொண்டிருப்பாய் என்று நான் நம்புகிறேன். தப்பிச் சென்றுவிடு! இந்த இடம் உன்னை ஓர் அரக்கனாக ஆக்கிவிடும். இப்போதே தப்பி ஓடிவிடு. இந்த முதியவனின் அறிவுரையைக் கேள்," என்று அவன் கெஞ்சினான்.

பன்னிரண்டு வயதுகூட நிரம்பியிராத ஒரு சிறுவன் வாசுகியின்

கைகளிலிருந்த தடியை எட்டி உதைத்தான். வாசுகி தடுமாறிக் கீழே விழுந்தான். இதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அச்சிறுவன் அங்கிருந்து ஓடிவிட்டான். ஏகலைவன் அந்த முதியவனுக்குக் கை கொடுத்து அவனைத் தூக்கி விட்டுவிட்டு, அவனுடைய கைத்தடியை அவனிடம் திருப்பிக் கொடுத்தான். "தப்பிச் சென்றுவிடு," என்று அந்த முதியவன் மீண்டும் முணுமுணுத்தான்.

அப்போது யாரோ ஒருவன், "ஏகலைவா! அந்தப் பைத்தியக்காரனுடன் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? தலைவர் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்," என்று கத்தினான்.

'பைத்தியக்காரனா? இந்த ஒட்டுமொத்தக் கிராமத்தில் இந்த முதியவன் மட்டும்தான் புத்தியுள்ள ஒரே நபராகத் தெரிகிறான்,' என்று தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்ட ஏகலைவன், ஒரு கணம் தயங்கினான். அவனை அழைத்தவன் வேறு யாரோ ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தான். அவனுடைய கவனம் இப்போது ஏகலைவன்மீது இருக்கவில்லை. ஏகலைவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஆழமாக சுவாசித்துவிட்டு, அங்கிருந்து ஓட்டமெடுத்தான்.

"ஏய் . . . " என்று யாரோ கத்தினார்கள். கிராம மக்கள் தன்னைத் துரத்திக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்த சத்தம் ஏகலைவனின் காதுகளில் விழுந்தது. அவன் தட்சகனின் முகாமிற்கு எதிர்த் திசையில் வேகமாக ஓடிச் சென்று, காட்டிற்குள் நுழைந்து, கீழே விழுந்து புரண்டு, மீண்டும் எழுந்து, பாறைகள்மீது முட்டி மோதி, தடுமாறிக் கீழே விழுந்து, மீண்டும் எழுந்து ஓடினான். அவனைத் துரத்தி வந்து கொண்டிருந்தவர்கள் எய்த அம்புகள் ஆபத்தான விதத்தில் அவனுக்கு மிக நெருக்கமாகப் பாய்ந்து சென்று பலத்தச் சத்தத்துடன் மரங்களில் குத்திட்டு நின்றன. ஏகலைவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தலைதெறிக்க ஓடினான். சில நாய்கள் குரைத்துக் கொண்டே அவனைத் துரத்தின. அவை தன்னை நெருங்கிக் கொண்டிருந்ததை ஏகலைவனால் உணர முடிந்தது. ஏகலைவன் தன்னுடைய உடலில் வழிந்த ரத்தத்தையும் தன் கால்களில் இருந்த பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் தன்னால் இயன்ற அளவுக்கு வேகமாக ஓடினான். அவனுடைய கால்கள் பயத்தால் நடுங்கின. அவன் ஒரு மலை முகட்டின்மீது ஓடினான். அந்த நிலப்பகுதி திடீரென்று கீழ்நோக்கிச் சரிந்தது. அவனுக்கும் கங்கை நதிக்கும் இடையே ஒருசில அடிகள் இடைவெளி மட்டுமே இருந்தது. அந்நதி நுரையை உமிழ்ந்து கொண்டும், தன்னைத் தடுத்து நிறுத்த முயன்ற பாறைகளின்மீது ஆவேசமாக மோதிக் கொண்டும் ஒரு குறுகிய பள்ளத்தாக்கின் வழியாக வேகமாகப் பாய்ந்து சென்றது. என்ன செய்வதென்று தீர்மானிப்பதற்கு

ஏகலைவனுக்கு ஒருசில நொடிகள் மட்டுமே இருந்தன. தன்னைக் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டிருந்த நாகர்களின் கைகளில் அகப்பட்டுக் கொண்டால் தன் மரணம் நிச்சயம் என்பதையும், ஆற்றில் குதித்தால் தான் உயிர் பிழைப்பதற்கு ஒரு வாய்ப்பாவது இருந்தது என்பதையும் அவன் அறிந்தான். மங்கலான நிலவொளியில் அந்த ஆறு மிகவும் ஆபத்தான ஒன்றாகத் தெரிந்தது. தம் இரையின்மீது பாய்ந்து தாக்குவதற்குத் தயாராக இருந்த சிறுத்தைகளைப்போல, ஆற்றில் மாபெரும் பாறைகள் ஆங்காங்கே துருத்திக் கொண்டு நின்றன. நூறு அடிகளுக்குக் கீழே ஓடிக் கொண்டிருந்த அந்த ஆற்றுக்குள் குதிப்பதற்காக ஏகலைவன் துணிச்சலை வரவழைத்துக் கொள்ள முயற்சித்தான். மலைகளுக்கு மேலே எங்கோ இடிகள் முழங்கின. ஏகலைவன் அந்தச் செங்குத்துப் பாறையின் முனையை நோக்கி ஓடியபோது, அங்கிருந்த மரத்திலிருந்து இரண்டு ஆக்ரோஷமான நாக வீரர்கள் அவன் முன்னால் குதித்து அவனை வழி மறித்தனர். அவர்களுடைய வாள்களின் கூரிய முனைகள் நிலா வெளிச்சத்தில் பளபளத்தன. அவர்கள் எச்சரிக்கையோடு அவனை நெருங்கினர். அவர்களுடைய முதல் வீச்சை ஏகலைவன் எப்படியோ சமாளித்தான், ஆனால் நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். அப்போது ஓர் அம்பு அவனை வேகமாகக் கடந்து சென்றது. அவன் கீழே விழுந்திருக்காவிட்டால், அது நிச்சயமாக அவனுடைய மார்பைத் துளைத்திருக்கும். இன்னோர் அம்பு அவனுடைய தோளுக்கு அருகே வந்து குத்திட்டது. அந்த இரண்டு வீரர்களில் ஒருவன் தன்னுடைய வாளின் முனையை ஏகலைவனின் தொண்டையை நோக்கிப் பாய்ச்சினான். ஆனால் அது சற்றுக் குறி தவறி, நிலத்தைத் துளைத்து நின்றது. ஏகலைவன் தனக்குக் கிடைத்த இந்தக் கண நேரத்தைப் பயன்படுத்தி, ஒருசில அடிகள் உருண்டு சென்று, ஒரு கல்லை எடுத்து அந்த வீரனின் முகத்தை நோக்கி வேகமாக எறிந்தான். அது சரியாக அவனுடைய முகத்தைத் தாக்கியதில் வலி தாள முடியாமல் கூப்பாடு போட்டுக் கொண்டே அந்த வீரன் கீழே விழுந்தான். அதே கணத்தில் ஓர் அம்பு ஏகலைவனின் இடது தோளை லேசாக உரசிச் சென்றது. அவன் தட்டுத்தடுமாறி எழுந்து, செங்குத்துப் பாறையை நோக்கி ஓடினான். அம்புகள் அவனைச் சுற்றி எல்லா இடங்களிலும் பறந்து கொண்டிருந்தன. வானம் இடி முழக்கத்துடன் தொடர்ந்து இருட்டிக் கொண்டு வந்தது. தொடர்ச்சியான மின்னல் வெட்டுக்கள் அந்தக் காட்டைப் பகலைப்போல ஒளிமயமாக்கின. ஆற்றின் சீற்றமும் உறுமலும் அதிகரித்தன. அதிக எண்ணிக்கையிலான கரிய முகங்கள் தன்னை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்ததை ஏகலைவனால் பார்க்க

முடிந்தது.

இரண்டாவது நாக வீரன் ஏகலைவனைப் பின்னாலிருந்து தாக்கினான். அவனுடைய வாள் ஏகலைவனின் தொடையைத் துளைத்தது. வலியில் துடித்தபடி ஏகலைவன் கீழே விழுந்தான். அவன் உருண்டபோது, அந்த வீரன் உயரே எம்பிக் குதித்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவன் அதிர்ச்சியடைந்தான். அந்த வீரன் தன்னுடைய வாளை ஏகலைவனின் மார்புக்கு நேராகச் செங்குத்தாகப் பிடித்தபடி, ஆச்சரியமூட்டும் வேகத்தில் கீழே வந்து கொண்டிருந்தான். அது உள்ளுணர்வோ அல்லது வெறும் அதிர்ஷ்டமோ — ஏகலைவன் தன்னுடைய காயப்பட்டக் காலை உயர்த்தி, தன்னைத் தாக்க வந்து கொண்டிருந்த நாகனைத் தன் வலிமை முழுவதையும் ஒன்றுதிரட்டி ஓங்கி மிதித்தான். ஏகலைவன் உருண்டோடித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வானே தவிர, தன்னை எதிர்த்துத் தாக்குவான் என்று அந்த வீரன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய கால்களுக்கு இடையே ஏகலைவன் எட்டி உதைத்ததில், அவன் அந்தச் செங்குத்துப் பாறையின் மேலாகச் சென்று காணாமல் போனான். அவனுடைய அலறல் சத்தம் தொலைவில் கேட்டது. பின் அந்தச் சத்தமும் நின்று போனது.

இன்னும் அதிகமான அம்புகள் ஏகலைவனைச் சுற்றி விழுந்து கொண்டிருந்தன. தன்னை நெருங்கிக் கொண்டிருந்த நாகர்களின் கூச்சலை ஆற்றின் சத்தத்தையும் மீறி ஏகலைவனால் கேட்க முடிந்தது. அவன் தன் தொடையிலிருந்து எழுந்த மட்டற்ற வேதனையைப் பொருட்படுத்தாமல் மிகவும் சிரமப்பட்டு எழுந்து, கடைசி ஒருசில அடிகளை நொண்டிக் கொண்டே கடந்தான். அவன் அங்கிருந்து ஆற்றினுள் குதிக்க முயன்றான், ஆனால் அவனால் முடியவில்லை. கல்லெறி வாங்கிய முதல் வீரன் எப்படியோ சுதாரித்து எழுந்து, ஏகலைவனைப் பிடித்து இழுக்க முயன்றான். ஒரு கணம் அந்த நாகனும் ஏகலைவனும் அந்தச் செங்குத்துப் பாறையின்மீது தொங்கினர். மற்ற வீரர்கள் அவர்களை நெருங்கியபோது, தான் இனி தாமதித்தால் தன் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதை உணர்ந்த ஏகலைவன், காயப்பட்டத் தன் காலை அந்தப் பாறையின்மீது அழுத்தியவாறு, வலியிலும் பயத்திலும் அலறிக் கொண்டே, கங்கை நதிக்குள் தன்னைத் தூக்கி வீசினான். ஏகலைவனைப் பிடித்திருந்த நாகன் தன்னுடைய பிடியை விடாததால், அவனும் அந்த ஆற்றினுள் வீசியெறியப்பட்டான். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து அந்தச் சீற்றமிகு ஆற்றுக்குள் விழுந்தனர். ஒருசில நொடிகள் கழித்து அந்தச் செங்குத்துப் பாறைக்கு வந்த எண்ணற்ற நாகர்கள், ஆற்றினுள் குதித்த இருவரையும் கோபத்தோடு பார்த்தனர். கடவுளின் சக்திதான் ஏகலைவனைக்

காப்பாற்றியது. அவனுடன் சேர்ந்து விழுந்தவன், துருத்திக் கொண்டிருந்த ஒரு பாறையின்மீது மோதி உடனடியாக மாண்டு போனான். காட்டின் மைந்தனை கங்கை தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

* * *

ஏகலைவன் தப்பிவிட்டச் செய்தியை நாக வீரர்கள் நடுங்கிக் கொண்டே தட்சகனிடம் தெரிவித்தபோது மழை வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தது. தட்சகன் உணர்ச்சிவசப்படாமல் அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டான். ஆச்சரியமடைந்த காளிங்கன், ஏகலைவன் தப்பித்தது குறித்துத் தட்சகன் ஏன் கவலைப்படவில்லை என்று தட்சகனிடமே கேட்டான். ஏனெனில், ஏகலைவனை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துப் போராளிகள் முகாமிற்குக் கூட்டி வருவது குறித்துத் தட்சகன் விடாப்பிடியாக இருந்திருந்தான். தட்சகன் புதிராகப் புன்னகைத்துவிட்டு, "ஏகலைவன் இன்னும் இளையவன். இந்த உலகத்தை அவன் அளவுக்கதிகமாக நம்புகிறான். காளிங்கா, தான் எப்படிப்பட்ட உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அவன் பார்த்தப் பிறகு, அதிகப்படியான கோபத்துடன் அவன் நிச்சயமாக நம்மிடம் திரும்பி வருவான்," என்று கூறினான்.

காளிங்கனுக்குத் தட்கசன் கூறியது புரியவில்லை. ஆனால் அவன் வெறுமனே அதை ஏற்றுக் கொண்டு தன் தோள்களைக் குலுக்கிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான். வியூகம் தட்சகனின் பொறுப்பு, அதைச் செயல்படுத்துவது தன்னுடைய பொறுப்பு என்பதைக் காளிங்கன் அறிந்திருந்தான். ஆனால் ஏகலைவனை எப்படியோ அவனுக்குப் பிடித்துப் போயிருந்தது. அந்தச் சீற்றமிகு ஆற்றிலிருந்து அவன் எப்படியாவது தப்பிப் பிழைத்திருக்க வேண்டும் என்று காளிங்கன் வேண்டிக் கொண்டான்.

11

நிழலின் மடியில்

அரசியாரின் அறை வாசலில் சகுனி கவலையோடு நின்று கொண்டிருந்தான். சகுனியின் குழந்தைப்பருவம் முதலாகவே காந்தாரி ஒரு தாயாக இருந்து அவனைக் கவனித்து வந்திருந்தபோதிலும், தன் சகோதரியுடனான சந்திப்புகளை அவன் மிகவும் வெறுத்தான். பலப்பல வருடங்களுக்கு முன்பு, காந்தாரத்தின் மலைகளிலிருந்து வெயில் கொளுத்திய அஸ்தினாபுரச் சமவெளிகளுக்குத் தாங்கள் மேற்கொண்டிருந்த பயணம் அவனுக்கு விலாவாரியாக நினைவிருந்தது. அந்தப் பயணத்தின்போது, பெரும்பான்மை நேரம், குரு வம்சத்தின் அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர் அவனைத் தன் குதிரையில் வைத்துச் சுமந்து வந்திருந்தார். தனித்துவமான அழகு படைத்த அவனுடைய சகோதரி அவர்களுக்குப் பின்னால் மௌனமாக இன்னொரு குதிரையின்மீது பயணித்தாள். கோபக்காரத் துறவிகள் மற்றும் வேடிக்கையான வானுலக ஜந்துக்களைப் பற்றிய கதைகளைக் கூறியதன் மூலம் பீஷ்மர் அவனைச் சிரிக்க வைக்க முயற்சித்திருந்தார். அவனும் ஓரிரு முறை ஒப்புக்குச் சிரித்து வைத்தான். அந்த ஐந்து வயதில்கூட, ஏமாற்றுவது அவனுக்கு இயல்பாக வந்தது. அவனுடைய புன்னகைக்குப் பின்னால் உண்மையிலேயே என்ன இருந்தது என்பதைப் பலரால் பார்க்க முடியவில்லை.

காந்தார நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் தான் இழைத்திருந்த குற்றங்கள் குறித்து வருந்திய பீஷ்மர், சகுனியை மிகவும் நேசித்து

வந்திருந்தார். சகுனி தன் இனிமையான வழிகளாலும் ஆயுதங்களைக் கையாள்வதில் தனக்கு இருந்த திறமையாலும் அந்தக் கண்டிப்பான முதியவரின் பாசத்தை வென்றிருந்தான். பீஷ்மர் தானே அந்த இளம் காந்தார இளவரசனுக்குப் பயிற்சியளித்திருந்தார். சகுனி புத்திசாலியாகவும் திறமை படைத்தவனாகவும் விரைவாகக் கற்றுக் கொள்பவனாகவும் இருந்தான். தன் சகோதரி ஒருத்தியைத் தவிர மற்ற அனைவரையும் அவனால் கையாள முடிந்தது. அவள் தன் கண்களைக் கட்டிக் கொண்டிருந்தாலும்கூட, அந்தப் பட்டுத் துணியின் ஊடாகவும் அவளால் சகுனியைத் துளைத்துப் பார்க்க முடிந்தது. வெறுமனே தன்னுடைய லேசான தலையசைப்பின் மூலம் அவனுடைய ஆன்மாவை அவளால் தோலுறித்துப் பார்க்க முடிந்தது.

அரசியின் அறையிலிருந்து ஒரு பணிப்பெண் வெளியே வந்து, சகுனியின் முன் குனிந்து பணிந்துவிட்டு, அவன் உள்ளே நுழையலாம் என்று அவனிடம் தெரிவித்தாள். அவன் அந்த அறைக்குள் அடியெடுத்து வைத்தபோது, சந்தனத்தின் நறுமணம் அவனைத் திணறடித்தது. அந்த அறையின் பிரம்மாண்டமும் பகட்டும் அவனுடைய குழந்தைப்பருவத்தின் அருவருப்பான நினைவுகளை மீண்டும் அவனிடம் கொண்டு வந்தன. அவன் தன் தொண்டையைச் செருமித் தன் வரவை அறிவித்துவிட்டு, தன் சகோதரி ஏன் தானாகவே பார்வையின்மையைத் தேர்ந்தெடுத்திருந்தாள் என்று ஆயிரமாவது முறையாக வியந்தான். அவள் அப்படிச் செய்தது வெறுப்பினாலா அல்லது அன்பினாலா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. சக்தி வாய்ந்த நபர் ஒருவர் ஆதரவற்ற ஓர் இளவரசிக்குச் செய்து வைத்தக் கட்டாயத் திருமணம் அது. 'பீஷ்மா! என்றேனும் ஒருநாள் நான் உன்னைப் பழி வாங்கியே தீருவேன்,' என்று சகுனி தன் மனத்திற்குள் பொருமினான். மேற்கில் வெகுதூரம்வரை பரந்து விரிந்த சமவெளிகள் திடீரென்று தொலைதூர மலைகளின் பனிமூட்டமான வரைகோட்டிற்குப் பின்னால் மாயமாய் மறைந்தன. 'என் தாய்நாடு அதற்கு அப்பால் உள்ளது,' என்று ஓர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய சகுனி, ஓர் அமைதியான பிரார்த்தனையைக் கூறினான்.

"சகுனி, உட்கார்."

சகுனி வசதியாக அமர்ந்து கொண்டான். கூறுவதற்குச் சரியான வார்த்தைகளை அவனால் சிந்திக்க முடியவில்லை. தன் சகோதரியின் கம்பீரமான தோரணையைக் கண்டு வியந்த அவன், ஓர் ஆழ்ந்த பெருமூச்செறிந்தான். இந்த ஒட்டுமொத்தத் துணைக்கண்டத்திலும் அவள்தான் மிக அதிக சக்திவாய்ந்த பெண்ணாக இருந்தாள். அந்தக் குருட்டு அரசனுக்குப் பின்னால் உண்மையில் அதிகாரம் செலுத்தியது

அவள்தான். அவளுடைய தீர்மானங்களை பீஷ்மர்கூட மாற்றவோ அல்லது மறுக்கவோ முயற்சிக்கவில்லை. சக்திவாய்ந்த அந்த அரசாட்சிப் பொறுப்பாளரிடம், மரியாதையின்மையை வெளிப்படுத்தாத ஒரு தொனியில் எதிர்த்துப் பேசக்கூடிய ஒரே ஒரு நபர் அவள் மட்டுமே. அவள் தன் கருத்தை அமைதியாக, ஆனால் ஆணித்தரமாக எடுத்துரைப்பதில் வல்லவளாக இருந்தாள். அவள் தன் மூத்த மகனான துரியோதனனிடம் மிகுந்த பாசம் கொண்டிருந்தாள். அவள் குந்தியுடன் தன் சொந்தப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தது எல்லோரும் அறிந்த ரகசியம்தான். ஏனெனில், குந்தி தன்னுடைய மகனான தர்மனைப் பட்டத்து இளவரசனாக ஆக்குவதற்காகக் காந்தாரியின் முதுகிற்குப் பின்னால் சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தாள்.

"சகோதரா, நான் நேராக விஷயத்திற்கு வருகிறேன்," என்று காந்தாரி அமைதியாகக் கூறியபோது, சகுதியின் பதற்றம் அதிகரித்தது. அவள் தன்னைச் 'சகோதரா' என்று அழைத்தபோதெல்லாம், அங்கு ஏதோ ஒரு பெரிய பிரச்சனை இருந்தது என்பதை சகுனி நன்றாகவே அறிந்திருந்தான். "சகுனி, என் மகன்களிடமிருந்து விலகி இரு," என்று அவள் கூறினாள். காந்தாரியின் கட்டப்பட்டக் கண்கள் அவளுடைய சகோதரனை நோக்கித் திரும்பின.

சகுனி எழுந்து ஒரு சன்னலை நோக்கி நடந்தான். கட்டப்பட்ட அவளுடைய கண்களுக்கு முன்னால் அமர அவன் விரும்பவில்லை. அவன் தன்னோடு எப்போதும் சுமந்து திரிந்த பகடைகளை வருடிக் கொடுத்தான். அவை ஒன்றையொன்று உரசின. எலும்புகள் ஒன்றோடொன்று உரசிய அந்தத் துல்லியமான சத்தத்தைக் கேட்டுக் காந்தாரி திடுக்கிட்டாள்.

"சகோதரி, நான் அவர்களுக்கு வெறுமனே ஒரு நல்ல மாமனாக இருக்கிறேன், அவ்வளவுதான்," என்று கூறிய சகுனியின் பார்வை இன்னும் மேற்குத் திசையிலேயே நிலைத்திருந்தது. மாலைக் கதிரவன் ஒரு புழுதி மண்டலத்திற்குள் மறைந்து கொண்டிருந்தபோது வானம் வண்ணக் கலவையாகக் காட்சியளித்தது. காந்தாரத்தில் எவ்வளவு குளுமையாகவும் இனிமையாகவும் இருக்கும் என்று சகுனி ஏக்கத்துடன் நினைத்தான். தன் சகோதரியுடனான இந்தச் சந்திப்பை விரைவாக முடிவுக்குக் கொண்டு வர அவன் விரும்பினான். அவனுடைய பிரார்த்தனைக்கு நேரமாகிக் கொண்டிருந்தது.

"நீ ஏன் காந்தாரத்திற்குத் திரும்பிச் சென்று அதன் ஆளுனராகப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடாது? அரசாட்சிப் பொறுப்பாளர் இந்தச் சலுகையை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். உண்மையில் நீதான் அதன் அரசனாக இருப்பாய். உனக்கு முழு அதிகாரமும் இருக்கும். நீ

ஏன் இன்னும் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?”

சகுனி நீண்டநேரம் மௌனமாக இருந்தான். பிறகு அவன் திரும்பி, தன் பகடைகள் இரண்டையும் அருகிலிருந்த ஒரு மேசையின்மீது வேகமாக வீசினான். அவை உருண்டோடிச் சென்று நின்றன. அவை ஒவ்வொன்றிலும் ஆறு புள்ளிகள் இருந்த பகுதி மேல்நோக்கி இருந்தது. கச்சிதமான பன்னிரண்டு புள்ளிகள்! சகுனி ஒரு திருப்தியுடன் லேசாகக் கனைத்தான்.

பகடைகள் உருண்ட சத்தம் வந்த திசையை நோக்கிக் காந்தாரி தன் தலையைச் சாய்த்து, “அந்தப் பகடைகளைத் தூக்கித் தூர எறி. அவை மாபெரும் சீரழிவைக் கொண்டு வரும்!” என்று வெடுக்கென்று கூறினாள்.

“நான் அந்தப் பகடைகளைத் தூக்கியெறிய வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? காந்தாரி, உனக்கு மறந்து போய்விட்டதா? இவை சாதாரணப் பகடைகள் அல்ல. கொல்லப்பட்ட நம் தந்தையின் தொடை எலும்பிலிருந்து செய்யப்பட்டவை இவை. அதிர்ஷ்டவசமாக, இறந்தவர்களை நம் மக்கள் வெறுமனே புதைக்கின்றனர். நீ சுவீகரித்துள்ள நாட்டில் உள்ள நாகரீகமற்ற மக்கள் செய்வதைப்போல அவர்களை எரிப்பதில்லை. நம் தந்தையின் ஆன்மா இந்தப் பகடைகளில் வாழ்கின்றது. இப்பகடைகள் என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. நான் ‘நான்கு!’ என்று அழைத்தால், அவை இரண்டும் கச்சிதமான நான்கு புள்ளிகளாக விழுகின்றன. நான் ‘எட்டு’ என்று அழைத்தால், அவை கச்சிதமான எட்டுப் புள்ளிகளாக விழுகின்றன. அவற்றின் மாயாஜாலத்தைப் பார். இவற்றை நான் தூக்கியெறிய வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? உனக்கு பயமாக இருக்கிறதா? உனக்கு எல்லாம் மறந்து போய்விட்டதா? நம் அன்புக்குரிய காந்தாரத்தை அவர்கள் அழித்ததுபோல, பாழாய்ப் போன இந்த நாடும் அழிக்கப்பட வேண்டும் என்று நான் சிறுவனாக இருந்தபோது நீதானே அடிக்கடிக் கூறினாய்?”

“சகுனி, அது நெடுங்காலத்திற்கு முந்தைய கதை. அப்போது நான் வயதில் சிறியவளாக இருந்தேன். அஸ்தினாபுர மக்கள் குறித்து என் மனம் முழுக்க வெறுப்பு நிரம்பியிருந்தது. ஆனால் இப்போது இது என் நாடு, என் நிலம், என் மக்கள். என் கணவர் இங்கு ஆட்சி புரிகிறார். நாளை என் மகன் துரியோதனன் அரசனாக ஆவான். தயவு செய்து நீ காந்தாரத்திற்குத் திரும்பிச் சென்று, நம்முடையை மூதாதையரின் நிலத்தை ஆட்சி செய். நீ இங்கு என் மகன்களை நாசம் செய்துவிடாதே.”

“நாசமா? நான் ஏன் என் சொந்த மருமகன்களை நாசம் செய்யப் போகிறேன்? தர்மனைப் பட்டத்து இளவரசனாக ஆக்குவதற்குக் குந்தி

திட்டமிட்டுக் கொண்டிருப்பது உனக்குத் தெரியாதா? அப்போது உன் மகன்கள் எங்கே போவார்கள்? நீயும் உன் குருட்டுக் கணவனும் எங்கே போவீர்கள்?"

"குந்தியா? ஒரு பரிதாபகரமான விதவையால் என்னை என்ன செய்துவிட முடியும்? அவளுடைய மகன்கள் யாரும் பாண்டுவின் உண்மையான மகன்கள் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? அரியணைக்குப் போட்டியிடுவதற்கு அவர்கள் யாருக்கும் எந்தத் தகுதியும் கிடையாது. பாண்டு ஆண்மைத்தன்மையற்றவனாக இருந்ததால், வேறு ஆண்களின் வாயிலாக அவள் அந்த மகன்களைப் பெற்றெடுத்தாள், குந்தியின் மகன்களுக்கு அஸ்தினாபுரத்தின் அரியணையில் அமர்வதற்கு என்ன தகுதி இருக்கிறது? சகோதரனே, உன்னுடைய செப்படி வித்தைகளை என்னிடம் காட்ட முயற்சிக்காதே. உன்னுடைய வித்தைகளைக் கண்டு ஏமாறக்கூடியவள் நானல்ல."

சகுனி அந்த மேசையின்மீதிருந்து தன் பகடைகளை எடுத்து அவற்றை வருடிக் கொடுத்தான். "சகோதரி, நீ மிகவும் அப்பாவியாக இருக்கிறாய். குந்தி ஏன் பிராமணர்களிடமும் புரோகிதர்களிடமும் மிகவும் மரியாதையாக நடந்து கொள்கிறாள்? அவர்களுடைய அதிகாரக் குழுக்களை அவள் ஏன் பீஷ்மரிடமும் விதுரனிடமும் அழைத்துச் செல்கிறாள்? அவள் ஓர் ஆபத்தான விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறாள். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீ அறிந்து கொள்வதற்கு முன்பாகவே உன் பாதங்களுக்குக் கீழேயிருந்து கம்பளத்தை அவள் உருவிவிடுவாள். கிருபன் ஏன் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டான்? பழமைவாதியான துரோணனுக்கு ஏன் ராஜ குரு பதவி கொடுக்கப்பட்டது? துரோணன் பாண்டவர்களைப் புகழ்ந்து தள்ளுவதை நீ பார்த்ததில்லையா? பரசுராமனின் கை இதில் காய்களை நகர்த்தி, நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவது உனக்குத் தெரியவில்லையா? தௌமியன் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான்? அந்தத் தந்திரக்கார யாதவ இளவரசனான கிருஷ்ணனுடன் அவர்கள் ஏன் இவ்வளவு நெருக்கமாக இருக்கின்றனர்? என் அன்புக்குரிய சகோதரியே, நீ ஏன் இவ்வளவு வெகுளியாக இருக்கிறாய்?"

காந்தாரி மௌனமாக இருந்தாள். அவளுடைய உதடுகளின்மீது ஒரு மெல்லிய புன்னகைக் கீற்று ஒளிர்ந்தது. சகுனி பேசி முடித்தபோது, அவள் மெதுவாக எழுந்து அவனுக்கு அருகில் வந்தாள். "என்னைப் பார்," என்று அவள் கூறினாள். சகுனி தயக்கத்துடன் அவளுடைய முகத்தை நோக்கித் திரும்பினான். அவளுடைய கட்டப்பட்டக்

கண்களிடமிருந்து தன் பார்வையை விலக்கி, அவன் நிலத்தைப் பார்த்தான். "குந்தியை என்னால் கையாண்டு கொள்ள முடியும். ஆனால் விஷயங்களை நீ மேலும் சிக்கலாக்காதே. மீண்டும் ஏதேனும் ஒரு தீய திட்டத்தை நீ உருவாக்கிக் கொண்டிருக்கிறாயா? என் மகன் தன் சொந்த உரிமைப்படி இந்த நாட்டின் அரசனாக ஆவான். அவனுடைய நற்பெயருக்கு எந்தக் களங்கமோ அல்லது கறையோ ஏற்படுவதை நான் விரும்பவில்லை. உன்னுடைய திட்டங்களையும் சூழ்ச்சிகளையும் என் மகன்களிடமிருந்து தள்ளி வை. குறிப்பாக, நம் தந்தையின் தொடை எலும்பிலிருந்து செய்யப்பட்டதாக நீ முழங்குகின்ற அந்தப் பகடைகளை அவர்களிடமிருந்து விலக்கி வை. கடந்தகாலத்தைப் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை. எனக்கு என் மகன்கள்மீதும் என் கணவர்மீதும்தான் அதிக அக்கறை உள்ளது. இந்த நாடு என்னைத் தன் மருமகளாக ஏற்றுக் கொண்டுள்ளது. நீ இன்றே காந்தாரத்திற்குத் திரும்பிப் போய்விடு. சகோதரா, நான் கூறுவது உனக்குப் புரிகிறதா அல்லது இன்னொரு முறை நான் அதை உனக்குக் கூற வேண்டுமா?"

சகுனி எதுவும் பேசவில்லை. அவன் தன் சகோதரிக்கு முதுகு காட்டி நின்று, மறைந்து கொண்டிருந்த கதிரவனைப் பார்த்தான். காந்தாரி தன் குரலை உயர்த்தி, "சகுனி, நீ இன்றே காந்தாரத்திற்குப் புறப்படுவதாக எனக்கு உறுதி கூறுவாயா?" என்று மீண்டும் அவனிடம் கேட்டாள்.

"நான் பீஷ்மருடன் கலந்து பேசிவிட்டு உனக்குத் தெரியப்படுத்துகிறேன்."

காந்தாரி சீறினாள். "பீஷ்மர் . . . ம்ம்ம் . . . அவர் என்ன கூறுவார் என்று எனக்குத் தெரியும். அவர் உன்னைப் பெரிதும் நேசிக்கிறார். உன் குழந்தைப்பருவத்தில் தான் உனக்குத் தவறு இழைத்துவிட்டதாக ஒரு மாயையில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நீ விரும்பும்வரை நீ அஸ்தினாபுரத்திலேயே தங்கிக் கொள்ளலாம் என்று அவர் கூறுவார்."

"சகோதரி, அவர் அப்படிக் கூறினால், நான் தேர்ந்தெடுப்பதற்கு எனக்கு வேறு எதுவும் இருக்காது. அரசாட்சிப் பொறுப்பாளரே அவ்வாறு விரும்பினால் . . ." என்று கூறியபடியே சகுனி அந்த அறையின் கதவை நோக்கி நடந்தான். ஒரு கோணலான புன்னகை அவனுடைய உதடுகளின்மீது அரும்பியது.

"சகுனி, நான் உன்னை மீண்டும் எச்சரிக்கிறேன். என் குழந்தைகளிடமிருந்து விலகி இருந்து கொள். இல்லையென்றால், நீ அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டியிருக்கும்!" அந்த அறையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த உருவத்தைப் பார்த்துக் காந்தாரி சத்தமாகக் கூறினாள்.

'சகோதரி, ஏன் நான் மட்டும் விலை கொடுக்க வேண்டும்?

காந்தாரத்திற்கு இழைக்கப்பட்டக் கொடுமைகளுக்காக இந்த ஒட்டுமொத்த நாடே விலை கொடுக்கும்படி நான் செய்வேன்,' என்று சகுனி தனக்குள் மென்மையாக முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து வெளியே நடந்தான். தாழ்வாரத்தில் பிரதம மந்திரியை அவன் எதிர்கொண்டான். "ஆஹா, அரசியாரின் அறைக்குள் நுழைவதற்கு இப்போது சூத்திரர்களுக்கும் அனுமதி கிடைத்துவிட்டதா? இந்த நாடு வேகமாகத்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது!" என்று சகுனி பரிகாசம் செய்தான்.

விதுரன் வெறுமனே அந்தக் காந்தார இளவரசனை வெறித்துப் பார்த்தான். இறுதியில் சகுனி அவனுடைய கண்களைத் தவிர்த்தான். சகுனியின் குதர்க்கப் பேச்சிற்கு பதிலளித்து விதுரன் அதற்கு மதிப்புக் கொடுக்க விரும்பவில்லை. சகுனி திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து நடந்தான். விதுரன் ஒருசில கணங்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். விதுரனின் நெற்றியின்மீது கவலை ரேகைகள் படர்ந்தன. பிறகு, சகுனியைப் பின் தொடர்வதென்று அவன் தீர்மானித்தான். தாழ்வாரங்கள் தீப்பந்தங்களால் ஒளியூட்டப்பட்டிருந்தன. அத்தீப்பந்தங்களிலிருந்து எழுந்த கரும்புகை அந்த இடத்திலிருந்த காற்றை ஒரு புகை மண்டலமாக ஆக்கியது. சகுனி வேகமாக நடைபோட்டுச் சென்றதை விதுரனால் அதன் ஊடாகப் பார்க்க முடிந்தது. தோலினால் செய்யப்பட்ட, சத்தம் எதையும் ஏற்படுத்தாத காலணிகளைச் சகுனி அணிந்திருந்தான். மறுபுறம், தான் நடந்து சென்றபோது பெரும் சத்தத்தை ஏற்படுத்திய தன்னுடைய பாரம்பரிய மரக் காலணிகளை விதுரன் சபித்தான். அவன் கீழே குனிந்து, அமைதியாக அவற்றைத் தன் கால்களிலிருந்து கழற்றிவிட்டு, வெற்றுக் கால்களுடன் சகுனியை வேகமாகப் பின்தொடர்ந்தான்.

சகுனி துரியோதனின் அறைக் கதவை மெதுவாகத் தட்டிவிட்டு, அனுமதிக்குக் காத்திருக்காமலேயே உள்ளே நுழைந்தான். அவர்கள் பேசுவதைக் கேட்பதற்காக விதுரன் அக்கதவின் அருகே சென்றான். யாரேனும் வேலைக்காரனோ அல்லது காவலாளியோ அந்த வழியாக வந்துவிடக்கூடாது என்று அவன் பிரார்த்தித்துக் கொண்டான். பிரதம மந்திரியான அவனிடம் யாரும் துணிந்து எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள் என்றாலும், அவன் இவ்வாறு ஒளிந்து நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததற்கான காரணத்தை விளக்குவது அவனுக்கு மிகவும் தர்மசங்கடமாகப் போய்விடும். இருந்தாலும், விதுரனிடமிருந்து ஒருவரால் வேறு எதை எதிர்பார்த்துவிட முடியும் என்று கூறுவதற்கு, ஊர்வம்பு பேசுபவர்களுடைய வாய்க்கு இது இன்னொரு பிடி அவலாக ஆகிவிடும்.

* * *

தங்கள் படுக்கையின்மீது அமர்ந்திருந்த துரியோதனனும் துச்சாதனனும் தங்கள் மாமனைக் கண்டதும் மரியாதையின் காரணமாக உடனடியாக எழுந்து நின்றனர். சகுனி துச்சலையின் ரோஜா நிறக் கன்னங்களைக் கிள்ளிவிட்டு, அவள் தன் தாயாரைப் போலவே மிகவும் அழகான ஒரு பெண்ணாக வளர்ந்து கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டான். அந்தச் சிறுமி வெட்கப்பட்டுக் கொண்டே அந்த அறையைவிட்டு வெளியே ஓடினாள். விதுரன் அங்கு நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டாள். ஆனால் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அவள் அங்கிருந்து போய்விட்டாள். விதுரன் மீண்டும் தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டான்.

"ம்ம்ம், இந்த அறையில் ஏதோ ஒரு விதமான மனச்சோர்வு நிலவுவதுபோலத் தெரிகிறதே! என் மருமகன்களுக்கு என்னவாயிற்று?" என்று கேட்டுவிட்டு, படுக்கையருகே இருந்த நாற்காலியின்மீது சகுனி அமைதியாக உட்கார்ந்தான்.

"பீமனின் அட்டகாசத்தை இனியும் எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. என்றேனும் ஒருநாள் நான் அவனைக் கொல்லப் போகிறேன்," என்று துரியோதனன் வெடித்தான்.

"என்ன நிகழ்ந்துவிட்டது? அந்த குண்டோதரனுக்குக் கூர்மையான நாக்கு, சற்றுக் கடினமான மண்டை, வலிமையான கைகள் — இது ஓர் ஆபத்தான கூட்டணி," என்று கூறிய சகுனி, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான்.

"குருநாதர் துரோணர் துரியோதனனை ஒரு முட்டாள் என்று அழைத்து இன்று மீண்டும் ஏளனம் செய்தார். நாங்கள் அவருடைய வகுப்புகளை வெறுக்கிறோம். அர்ச்சுனனை அல்லது பீமனை அவர்களுடைய வீரத்திற்காகவும், தர்மனை அவனுடைய அறிவிற்காகவும், நகுலன் மற்றும் சகாதேவனை அவர்களுடைய புத்திசாலித்தனத்திற்காகவும் புகழ்வதற்கு மட்டுமே அவர் தன் நாக்கைப் பயன்படுத்துகிறார். மற்றவர்கள் அனைவரையும் முட்டாள்களைப்போல அவர் நடத்துகிறார். எங்களால் இதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியாது," என்று துச்சாதனன் குறைகூறினான்.

"துரோணர் உங்களை முட்டாள்கள் என்று அழைத்ததற்காகவா நீங்கள் பெண்களைப்போலச் சிணுங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று சகுனி பரிகாசம் செய்தான். இது துரியோதனனுக்குக் கோபமூட்டும் என்பதை அவன் நன்றாக அறிந்திருந்தான்.

"மாமா, எங்களைப் பட்டப் பெயர்களைச் சொல்லி அழைப்பதற்கும் பார்வையற்ற எங்கள் பெற்றோரை எள்ளி நகையாடுவதற்கும் இங்கு

ஏராளமானவர்கள் இருக்கின்றனர். நீங்களும் இவர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டியதில்லை.”

“மருமகனே, பீமன் உன்னை மீண்டும் அவமானப்படுத்தியிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன், சரிதானே?” என்று சகுனி மீண்டும் உசுப்பேற்றினான்.

துரியோதனன் தன் பற்களை நறநறவென்று கடித்தான். அங்கிருந்த ஒரு மலர்ச்சாடியை வெறுப்பில் அவன் எட்டி உதைத்தான். அது அந்த அறையின் பளிங்குத் தரையின்மீது விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது. சகுனி உரத்தக் குரலில் சிரித்தான். “அவன் உன்னைக் ‘குருட்டு அரசனின் மகன்’ என்று அழைத்தானா? அவன் உன் பெற்றோரின் ஆதரவற்ற நிலையைக் கேலி செய்தானா?”

துரியோதனன் பதிலேதும் கூறவில்லை. அவனுக்கு பதிலாக துச்சாதனன் பேசினான். “அவர்கள் எல்லா நேரமும் அதைத்தான் செய்கின்றனர். குருநாதர் துரோணர்கூட எங்களையும் எங்கள் பெற்றோரையும் பரிகசிக்கிறார். வேதங்களில் நாங்கள் எதையேனும் மறந்துவிட்டாலோ அல்லது ஏதேனும் ஒரு தவறு செய்தாலோ, அவர் தனக்குப் பிரியமான பாண்டவர்களை அழைத்து, தங்களுடைய மேன்மையான புத்திக்கூர்மையை வெளிப்படுத்தும்படி அவர்களிடம் கூறுவார். பிறகு அவர் எங்களைப் பார்த்து, ‘குருடனின் குழந்தைகளிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?’ என்று கூறுவார். இது மிகவும் கொடுமை. தர்மன் அரசனாக ஆவதுதான் நம் நாடு உருப்படுவதற்கான ஒரே வழி என்று அவர் தொடர்ந்து கூறிக் கொண்டே இருக்கிறார்.”

“மருமகன்களே, உங்களை இவ்வளவு தூரம் பரிகசிக்கின்ற அந்தப் பாண்டவர்கள் யாரும் உண்மையிலேயே உங்கள் சிற்றப்பாவான பாண்டுவின் மகன்கள் அல்ல என்று யாரேனும் உங்களிடம் கூறியிருக்கிறார்களா?”

துரியோதனன் ஆச்சரியத்தில் தன் கண்களை அகல விரித்தவாறே தன் மாமனை நோக்கித் திரும்பினான். “நீங்கள் கூறுவதற்கு என்ன பொருள்?” என்று அவன் கேட்டான். துச்சாதனனும் இப்போது சகுனியின் அருகே வந்து நின்று கொண்டான்.

“அவர்கள் வேசி மகன்கள்!” என்று கூறிவிட்டுச் சகுனி எக்காளமாகச் சிரித்தான். “முட்டாள்களைப்போல என்னை அப்படி முறைத்துப் பார்க்காதீர்கள். உங்கள் சிற்றப்பா பாண்டு ஆண்மைத்தன்மையற்றவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். உங்கள் சித்தியான குந்தி, உங்கள் சிற்றப்பாவின் வற்புறுத்தலின் பேரில், பல காதலர்களுடன் கூடிக் குழந்தைகளைப்

பெற்றுக் கொண்டாள். பாண்டுவின் சிதையில் தானும் தீக்குளித்து உயிர் நீத்த உங்கள் இன்னொரு சித்தியான மாதுரியை உங்களுக்கு நினைவிருக்கிறதா? பிற ஆண்களுடன் கூடிப் புணர்ந்து குழந்தைகளைப் பெற்றுத் தருமாறு பாண்டு அவளையும் கட்டாயப்படுத்தினான். நகுலனும் சகாதேவனும் அப்படிப் பிறந்தவர்கள்தான். தர்மன் ஏதோ ஒரு பிராமணனின் மகன். அர்ச்சுனன் இந்திர வம்சத்தைச் சேர்ந்த ஏதோ ஓர் சிறிய இளவரசனுக்குப் பிறந்தவன். பீமன் ஒரு காட்டுவாசிக்குப் பிறந்தவன். வேறு வார்த்தைகளில் கூறினால், உங்களுடைய சிற்றாப்பாவின் மகன்கள் அனைவருமே வேசி மகன்கள்."

தன் மருமகன்கள் இருவர்மீதும் தான் ஏற்படுத்திக் கொண்டிருந்த தாக்கத்தைப் பார்ப்பதற்காக சகுனி தன் பேச்சைச் சற்று நிறுத்தினான். ஏதோ மின்னல் தாக்கியதுபோல அச்சிறுவர்கள் அதிர்ச்சியுடன் காணப்பட்டனர். ஆனால் துச்சாதனனின் முகத்தில் மெல்ல மெல்ல ஒரு புன்னகை படரத் துவங்கியது. தான் கேட்டதை நம்ப முடியாதவனாக துரியோதனன் தன் தலையை அங்குமிங்கும் ஆட்டினான். "துரியோதனா, இது நீ நினைப்பதைவிட அதிக மோசமானது. உன்னுடைய சித்தி குந்தி தன் பருவ வயதில் சூரிய வம்சத்து இளவசரன் ஒருவனுடன் ஒரு தகாத உறவு வைத்திருந்ததாக உறுதிப்படுத்தப்படாத வதந்திகள் உள்ளன. அந்த உறவின் விளைவாக அவள் ஒரு மகனைப் பெற்றாள். ஆனால் இது தனக்கு ஒரு பெரிய அவதூறாக ஆகிவிடும் என்று பயந்து, அவள் அவனைக் கைவிட்டுவிட்டாள். அக்குழந்தை பிறந்தவுடனேயே அவள் அவனைக் கொன்றுவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். மற்றவர்கள், அவன் வேறு ஏதோ ஒரு வீட்டில் ஒரு தத்துப் பிள்ளையாக வளர்ந்து கொண்டிருப்பதாக நினைக்கின்றனர். உண்மையில், நான் அந்தச் சிறுவனைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அவன் இன்னும் உயிரோடு இருந்தால், உங்களைவிட ஓரிரு வயது மூத்தவனாக இருப்பான்."

"மாமா, துரியோதனன் நீங்கள் கூறும் எதையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை," என்று துச்சாதனன் கத்தினான். பிறகு அவன் தன் சகோதரனின் தோள்களைப் பிடித்துக் குலுக்கிவிட்டு மகிழ்ச்சிக் கூச்சலிட்டான். "துரியோதனா, நம் மாமன் கூறுவதன் பொருள் உனக்குப் புரிகிறதா? அஸ்தினாபுரத்தின் அரியணையில் அமர்வதற்கு தர்மனுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவன் ஒரு வேசி மகன், தகாத உறவின் மூலம் பிறந்தவன், ஓர் ஒழுக்கங்கெட்டப் பெண்ணுக்குப் பிறந்தவன்."

சகுனி தன் தொடைகளில் உற்சாகமாகத் தட்டிக் கொண்டே வயிறு குலுங்கச் சிரித்தான். துரியோதனன் அவர்கள் இருவரையும்

அமைதியாகப் பார்த்தான்.

அந்த அறைக்கு வெளியே, விதுரன் மனம் தளர்ந்து போய்த் தன் தலையை ஆட்டினான். குந்தியைப் பற்றிய வதந்திகள் அவனுக்குத் தெரிந்திருந்தபோதிலும், தன்னுடைய ஒழுக்க நெறிமுறைகளின்படி அவன் ஒருபோதும் மற்றவர்களைச் சீர்தூக்கிப் பார்த்திருக்கவில்லை. அவனைப் பொறுத்தவரை, ஒழுக்கம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட விஷயம். குந்தியும் அவளுடைய கணவனும் செய்தது மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாதது. தர்மனுக்கு அஸ்தினாபுரத்தின் அரியணையின்மீது அதிகாரம் இருந்தது என்ற எண்ணம் விதுரனின் மனத்திற்குள் ஒருபோதும் நுழைந்திருக்கவே இல்லை. இளைய இளவரசனான பாண்டுவின் மகன் அவன். துரியோதனனோ, தற்போது ஆண்டு கொண்டிருந்த அரசனான திருதராஷ்டிரனின் மூத்த மகன். திருதராஷ்டிரனுக்குப் பிறகு துரியோதனன் அரசனாக ஆவான் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருந்தனர். தர்மன் ஒரு வேசி மகன் என்பதால் அரியணையைக் கைப்பற்றுவதற்கு அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று சகுனி கூறியபோது, அது விதுரனை ஒரு மின்னல்போலத் தாக்கியது. தன்னைச் சுற்றி வலுத்துக் கொண்டிருந்த அரண்மனைச் சூழ்ச்சி குறித்துத் தான் எப்படி எதுவும் தெரியாதவனாக இருந்துவிட்டோம் என்று வியந்த அவன், மேலும் அதிகப் பிரச்சனைகள் வரவிருந்ததை உணர்ந்தான். திருதராஷ்டிரனுக்குப் பிறகு தர்மன் அரசனாக ஆக வேண்டும் என்று தங்கள் விருப்பங்களை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொண்டிருந்த துரோணர், புரோகிதர்கள், குந்திக்கு நெருக்கமான மேன்மக்கள் போன்றோரை அவன் கவனமாகக் கண்காணித்திருக்கவில்லை. முன்பு தான் எந்த முக்கியத்துவமும் கொடுத்திராத சில குறிப்பிட்ட மேன்மக்களின் பொருத்தமற்ற உரையாடல்களும் தீங்கற்றதுபோலத் தோன்றிய கருத்துக்களும், தர்மன் எல்லாப் புரோகிதர்களிடமும் காட்டிய விலாவாரியான பணிவன்பும், இன்னும் பிற சிறிய விஷயங்களும் இப்போது ஒரு கட்டமைப்பிற்குள் கச்சிதமாகப் பொருந்தியதை விதுரன் கண்டான். அதிகாரமும் அறிவுக்கூர்மையும் கொண்ட யாரோ ஒருவன் திறமையாகத் தன் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தான். இந்த ஆபத்தான விளையாட்டைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது பரசுராமனாக இருக்குமோ? தன் சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த விதுரன், அசுவத்தாமன் துரியோதனனின் அறைக்குள் நுழைந்ததைக் கடைசி நிமிடத்தில்தான் பார்த்தான். துரோணரின் மகன் தன்னைப் பார்த்திருக்கக்கூடாது என்று அவன் வேண்டிக் கொண்டான்.

அசுவத்தாமனின் வருகை அவனுடைய நண்பர்களுக்குக்

கொண்டாட்டத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. ஆனால் துரோணரின் மகனைப் பார்த்தவுடன் சகுனி முகஞ்சுளித்தான். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. எனவே அவன் அசுவத்தாமன்மீது எச்சரிக்கையாகக் கண் வைத்துக் கொண்டே, "துரியோதனா, அடுத்த முறை பீமன் உன்னைக் குருட்டு அரசனின் மகன் என்று அழைக்கும்போது, அவனுக்கு எப்படி பதிலடி கொடுக்க வேண்டும் என்று இப்போது உனக்குத் தெரியும், இல்லையா?" என்று கேட்டான்.

துரியோதனன் தொடர்ந்து மௌனமாக இருந்தான். ஆனால் துச்சாதனன் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான். "மாமா, பீமனின் முரட்டுத்தனமான வலிமையைக் கண்டு என் சகோதரன் பயப்படுகிறான். நானோ அல்லது துரியோதனனோ பீமனுடன் சண்டையிட்ட ஒவ்வொரு முறையும், பீமன் எங்களைத் துவைத்தெடுத்திருக்கிறான்."

துரியோதனனின் கண்கள் கோபத்தில் சிவந்தன, ஆனால் சகுனி புன்னகைத்தான். அசுவத்தாமன் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் அமைதியாக இருந்தான். ஆனால் அவனுடைய கண்கள் சகுனியை ஊடுருவிப் பார்த்தன. "மகனே, பீமனுக்குச் சவால்விடும் அளவுக்கு நீ போதுமான வலிமை கொண்டவன் அல்ல என்று எனக்குத் தெரியும். ஆனால் அவனை ஒழித்துக் கட்டுவதற்கு வேறு வழிமுறைகள் இருக்கின்றன." பிறகு சகுனி தன் குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு, ஒரு கிசுகிசுப்பான குரலில், "ஒருசில வருடங்களுக்கு முன்பு காந்தாரத்தில் எங்கள் பகைவர்களை நாங்கள் எப்படி ஒழித்துக் கட்டினோம் என்று நான் உன்னிடம் கூறினேன். உன் எதிராளி வலிமையானவனாக இருக்கும்போது, அவனுடனான போரில் வெற்றி பெறுவதற்கு வீரம் தேவையில்லை, புத்திசாலித்தனம்தான் தேவை," என்று கூறினான். இதைக் கேட்டத் துரியோதனன் திடுக்கிட்டான்.

காந்தார இளவரசன் தீட்டிக் கொண்டிருந்த சதித் திட்டத்தைக் கேட்டுக் கொண்டிருந்த விதுரன், அந்த அறைக்குள் நுழைந்து அந்தச் சந்திப்பை ஒரு முடிவுக்குக் கொண்டு வர உந்தப்பட்டான். ஆனால் துரியோதனன் அதை எவ்வாறு எதிர்கொண்டான் என்று அவனுக்குத் தெரிய வேண்டியிருந்தது. துரியோதனன் தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, தன் முஷ்டியை மடக்குவதும் நீட்டுவதுமாக அந்த அறையில் மேலும் கீழும் வேகமாக நடந்தான்.

இறுதியில், அவன் தன் தலையை உயர்த்தி, தன் நண்பன் அசுவத்தாமனின் கண்களைச் சந்தித்தான். அசுவத்தாமன் ஒரு புரியாத

விதத்தில் தன் தலையை ஆட்டினான். துரியோதனனும் பதிலுக்குத் தலையாட்டினான். “மாமா, நீங்கள் கூறும் உத்திகளுக்கு என்னால் உடன்பட முடியாது. நான் ஒரு சத்திரியன், ஒரு வீரன். வாள் வீச்சிலோ அல்லது வில் வித்தையிலோ நான் ஒரு நிபுணனாக இல்லாமல் போகலாம், ஆனால் அது என்னிடம் உள்ள குறை. என் திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு நான் கடினமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். என் குருநாதர் என்னிடம் காட்டும் வெளிப்படையான வெறுப்பு, நான் கற்றுக் கொள்வதை மேலும் கடினமாக்குகிறது. பீமனைப் பார்க்கும் கணத்தில் என் தன்னம்பிக்கை அப்படியே கரைந்து போவதை நான் உணர்கிறேன். அவனும் அவனுடைய சகோதரர்களும் எங்களையும் தங்களைவிட பலவீனமானவர்களையும் நடத்தும் விதத்தை நான் வெறுக்கிறேன். ஆனால் அவர்களைத் தோற்கடிப்பதற்கு நியாயமற்ற வழிமுறைகளைக் கையாள்வதற்கு என்னால் ஒருபோதும் உடன்பட முடியாது. கடின உழைப்பு மற்றும் பயிற்சியின் மூலம் என்றேனும் ஒருநாள் நான் பீமனைவிட மிகச் சிறந்த வீரனாக ஆவேன். அதுவரை நான் அவனுடைய கொடுங்கோன்மையைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று சிவபெருமான் விதித்திருக்கிறார். நான் இன்னும் அதிகக் கடினமாக முயற்சிக்க வேண்டும் என்பதற்குக் கடவுள் எனக்குக் கொடுத்துள்ள ஓர் ஊக்குவிப்பாக இதை நான் கருதுகிறேன். என் சிற்றப்பாவின் மகன் எவ்வளவு தீயவனாக இருந்தாலும் சரி, அவனுக்கு விஷம் வைத்துக் கொல்லுமாறு தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்,” என்று துரியோதனன் சகுனியிடம் கூறினான்.

விதுரன் நிம்மதிப் பெருமூச்செறிந்தான். சகுனி துரியோதனனோடு விவாதித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட அவன், குறுக்கிடுவதற்கான நேரம் வந்துவிட்டிருந்ததாகத் தீர்மானித்தான். அவன் அந்த அறைக்குள் நுழைந்து, தன் கைகளைத் தன் மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு வாசலில் நின்றான். துரியோதனனும் துச்சாதனனும் விதுரனைத் தங்கள் அறையில் பார்த்ததும் திடுக்கிட்டனர். சகுனியும் அசுவத்தாமனும்கூடத் திடுக்கிட்டுப் போனது அவர்களுடைய முகங்களில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒரு சிறு புன்னகை சகுனியின் முகத்தில் விளையாடியது. அசுவத்தாமன் வெறுமனே தன் கைகளைக் குவித்து விதுரனைப் பார்த்துக் குனிந்து வணங்கினான். விதுரன் லேசாகத் தலையசைத்து அந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, பட்டத்து இளவரசனை நோக்கி நடந்தான். “இந்தக் கேளிக்கை விருந்து எதற்காக என்று நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று அவன் துரியோதனனிடம் கேட்டான்.

ஆனால் சகுனிதான் அதற்கு விடையளித்தான். “எங்களுடைய

கேளிக்கை விருந்துகளில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்களைச் சேர்த்துக் கொள்வதென்று நாங்கள் முடிவு செய்யும்போது உங்களுக்கு நாங்கள் ஓர் அழைப்பு அனுப்புவோம்.”

“அரசவையில் அரசாட்சிப் பொறுப்பாளருடன் நாளைக்கு இது பற்றி நாம் கலந்து பேசலாம். கொலை செய்யத் திட்டமிடுகின்ற மேன்மக்களின் கேளிக்கை விருந்தில் கலந்து கொள்வதற்கு ஒரு சூத்திரனுக்கு என்ன தகுதி வேண்டும் என்பது பற்றி பீஷ்மர் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கக்கூடும்,” என்று விதுரன் சகுனியைப் பார்க்காமல் பதிலளித்தான். விதுரனின் கண்கள் துரியோதனைத் துளைத்தன. துரியோதனனோ தன் பாதங்களை முறைத்துப் பார்த்தபடி நின்றான்.

சகுனி விதுரனை நெருங்கிக் கொண்டே, “இந்த இடத்திலிருந்து உடனடியாக வெளியேறி உனக்குச் சொந்தமான இடத்திற்குச் சென்றுவிடு. இது அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனின் அறை. இந்த இடத்தை மாசுபடுத்தாதே,” என்று கூறினான்.

விதுரன் சகுனியை நோக்கி அமைதியாகத் திரும்பி, “இது நான் உன்னிடம் பேச வேண்டிய வசனம் என்று நினைக்கிறேன். அந்தியனே, என் நாட்டிலிருந்து வெளியேறி உனக்குச் சொந்தமான இடத்திற்குச் சென்றுவிடு. இது அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனின் அறை. உன் வருகையால் இந்தப் புனித பூமியை மாசுபடுத்தாதே,” என்று கூறினான்.

சகுனி துரியோதனனையும் துச்சாதனனையும் பார்த்தான். ஆனால் அவர்கள் அவனுடைய கண்களைச் சந்திக்க மறுத்தனர். எனவே அவன் விதுரனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, “ஐயா, நான் வெறுமனே நகைச்சுவையாகக் கூறினேன். இதை ஏன் நீங்கள் இவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொள்கிறீர்கள்? எங்களை மன்னித்துவிடுங்கள். நாங்கள் உண்மையில் எந்த அர்த்தத்திலும் அப்படிக் கூறவில்லை,” என்று கூறினான்.

அசுவத்தாமன் சத்தம் போட்டுச் சிரித்தான். ஆனால் விதுரன் தன்னை முறைத்துப் பார்த்ததைக் கண்டவுடன் அவன் தன் சிரிப்பை நிறுத்தினான். சகுனி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அங்கிருந்து நடந்தான். அதைத் தொடர்ந்து ஒரு கனத்த மௌனம் நிலவியது. சகுனி அந்த அறையிலிருந்து வெளியேறியபோது துரியோதனனுக்குச் சொந்தமான ஒரு வெள்ளைப் பட்டுச் சால்வையைத் தன்னுடன் எடுத்துச் சென்றதை அங்கிருந்த யாரும் கவனிக்கவில்லை. மென்மையான பட்டின்மீது இளவரசன் துரியோதனன் பெரும் மோகம் கொண்டிருந்தான். அழகான வெள்ளைச் சால்வைகளை அணிவது

அவனுடைய வழக்கம் என்பது எல்லோருக்குமே தெரியும். பட்டத்து இளவரசன்மீது விதுரனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது. துரியோதனனின் பரந்த தோள்களைச் சுற்றி அவன் ஆதரவாகக் கை போட்டுக் கொள்ள விரும்பினான், ஆனால் அந்த எண்ணத்தை உடனே கைவிட்டான். தன்னுடைய தாழ்ந்த சாதியைப் பற்றி சகுனி கூறியது அவனுக்கு நினைவுக்கு வந்ததால், இளவரசனைத் தொடுவதிலிருந்து ஏதோ ஒன்று அவனைத் தடுத்து நிறுத்தியது. சகுனி தன்னைத் தரக்குறைவாகப் பேசியபோது, உயர்ந்த குலத்தில் பிறந்திருந்த இந்தச் சிறுவர்களில் ஒருவன்கூடத் தனக்கு ஆதரவாகப் பேச முன்வராதது குறித்து அவனுக்கு எரிச்சலும் வந்தது. "நீங்கள் உங்களைக் குறித்து வெட்கப்பட வேண்டும் . . ." என்று அவன் தன் பேச்சைத் துவக்கினான்.

அசுவத்தாமன் அவனை இடைமறித்தான். "ஐயா, நாங்கள் எதைக் குறித்தும் வெட்கப்பட வேண்டியதில்லை. துரியோதனன் சகுனிக்கு மரியாதையுடன் பதிலளித்தான். அவன் தன் இதயத்திற்கு உண்மையாக நடந்து வந்திருக்கிறான். நினைவு தெரிந்த நாள் முதலாகப் பாண்டவர்கள் ஒட்டுமொத்தக் கௌரவ வம்சத்தினருக்குத் தொல்லை கொடுத்து வந்துள்ளபோதிலும், நயவஞ்சகமாக நடந்து கொள்ளும் அளவுக்குத் தான் தரம் தாழ்ந்து போகப் போவதில்லை என்று துரியோதனன் தெளிவாகக் கூறிவிட்டான். யாரேனும் வெட்கித் தலைகுனிய வேண்டும் என்றால், அது அந்தப் பாண்டவச் சகோதரர்களும், தங்கள் சொந்த லாபங்களுக்காக இந்த நாட்டைச் சீரழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்ற புரோகிதர்களும் துறவிகளும்தான். பாண்டவர்களுக்கு இந்த அரண்மனையில் எந்த இடமும் இருக்கக்கூடாது என்பது தெருவில் உள்ள ஒவ்வொருவருக்கும்கூடத் தெரியும். உங்களையும் என்னையும்போல அவர்களும் இந்த நாட்டிற்கு அன்னியர்கள்தான். உங்களுடைய திறன்களின் காரணமாக நீங்கள் உங்கள் பதவியில் நீடிக்கிறீர்கள். நான் இளவரசனுடனான நட்பின் காரணமாக இங்கு இருக்கிறேன். ஆனால் பாண்டவர்கள் இங்கு இருப்பதற்கான ஒரே காரணம், ஒருசில புரோகிதர்களின் நயவஞ்சகமும் ஒரு சூழ்ச்சிக்காரத் தாயாரும்தான்."

விதுரன் அதற்கு பதிலளிக்கவில்லை. யாரும் எதுவும் பேசவில்லை. இரவுநேரப் பறவை ஒன்று தோட்டத்திலிருந்து அவ்வப்போது கூவி அழைத்துக் கொண்டிருந்தது. அதன் வருத்தமான அழைப்பு அங்கு நிலவிய அசௌகரியமான அமைதியை மேலும் அதிகரிப்பதாகவே இருந்தது. இறுதியில், விதுரன், "துரியோதனா, நாளைக்கு நாம் பீஷ்மரைச் சந்திக்கலாம். உன்மீது குற்றம் சுமத்துவதற்கான சந்திப்பு அல்ல அது. ஆனால் அவர் கொடுக்கக்கூடிய சில அறிவுரைகள் நமக்கு

உதவும் என்று நான் நினைக்கிறேன். நாளை காலையில் பீஷ்மரின் சந்திப்பு அறையில் நீங்கள் மூவரும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்," என்று கூறினான்.

அசுவத்தாமன் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முயன்றான், ஆனால் துரியோதனன் ஒரு சைகையின் மூலம் அவனைத் தடுத்தான். "சிற்றப்பா, நான் அங்கு இருப்பேன். இவர்கள் இருவரும்கூட அங்கு இருப்பார்கள். பீஷ்மரின் பேச்சைக் கேட்பது எப்போதுமே ஓர் இனிமையான அனுபவம்தான்," என்று கூறிவிட்டு, துரியோதனன் விதுரன் முன்னால் தலை வணங்கினான்.

இளவரசன்மீதான ஓர் அளப்பரிய பாசம் விதுரனை ஆட்கொண்டது. அவன் தன் முன்னால் குனிந்து நின்ற துரியோதனனின் தலையின்மீது தன் கையை வைத்து ஆசீர்வதித்தான். அசுவத்தாமனின் முகத்தில் தென்பட்ட ஆச்சரியத்தைக் கண்டுகொண்ட விதுரன் நாணத்தால் முகம் சிவந்தான். அவன் தன் தர்மசங்கடத்தை மறைத்தபடி, ஒரு முரட்டுக் குரலில், "இளைஞர்களே, இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. நாம் நன்றாகத் தூங்கி எழுவது நல்லது. நாம் காலையில் சந்திக்கலாம்," என்று கூறினான்.

விதுரன் துரியோதனனின் அறையைவிட்டு வெளியேறி, தாழ்வாரத்தில் நீண்ட நேரம் தனியாக நின்றான். இளவரசனுக்காக அவன் பயந்தான். துரியோதனன் இப்போது வெளிப்படுத்திய உன்னதமான நடத்தை, காலப்போக்கில் அவனிடமிருந்து காணாமல் போய்விடக்கூடும் என்று அவன் அஞ்சினான். துரியோதனனுக்கு நாளுக்கு நாள் சுமை கூடிக் கொண்டிருந்தது. பழமைவாதிகள் மெல்ல மெல்ல அதிக முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஒரு நீண்ட போருக்கான எல்லா அறிகுறிகளும் தென்பட்டன. மர்ம எதிரியான பரசுராமன் ஒரு திறமையான வியூகவாதி. சமுதாயத்தின்மீது அவனுக்கு இருந்த, கண்ணுக்குப் புலப்படாத பிடிப்பு மேலும் இறுக்கமடைந்து கொண்டிருந்தது.

அரண்மனைத் தோட்டத்திலிருந்து கூவி அழைத்துக் கொண்டிருந்த அந்த இரவுப் பறவையின் குரல் இப்போது அரண்மனைக்கு வெகு அருகே கேட்டது. அதன் துணைப் பறவை, அருகில் எங்கோ ஓரிடத்திலிருந்து பதிலுக்குக் கூவியது. அது கூடலுக்கான ஓர் அழைப்பாக இருந்திருக்கலாம், ஆனால் விதுரனின் மனத்தில் உறங்கிக் கொண்டிருந்த பயங்களை அது தட்டி எழுப்பியது. தன்மீது பாய்ந்து தாக்கத் தயாராக, தீவினை ஒன்று இருட்டில் காத்துக் கொண்டிருந்தது போன்ற ஒரு முன்னுணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அந்தப் பறவையின் அழைப்பு அதற்கான ஒரு சகுனம் என்று அவன் நினைத்தான். அவன்

நடுங்கிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தான். ஏதேனும் வித்தியாசமாக இருந்ததா என்று அவன் நோட்டம் விட்டான். வெளியே மிகவும் இருட்டாக இருந்தது. தீப்பந்தங்கள் விட்டுவிட்டு எரிந்து அணையத் துவங்கின. விதுரனைக் கவலை ஆட்கொண்டது. அவனுடைய கவலைகள் அவனுடைய மனத்திற்குள் ஒரு சிக்கலை உருவாக்கிக் கொண்டிருந்தன. வினோதமாகவோ அல்லது வித்தியாசமாகவோ எதுவும் அவன் பார்வைக்குத் தென்படவில்லை. வழக்கத்திற்கு மாறான சத்தங்கள் எதுவும் அவனுக்குக் கேட்கவில்லை. 'ஒருவேளை எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது போலும். அல்லது பீஷ்மர் மிகவும் பிரியமாகக் கூறுவதுபோல, வேலையில் உள்ள அழுத்தம் என்னை விழுங்கிக் கொண்டிருக்கிறது போலும்,' என்று நினைத்த விதுரன், களைப்பில் பெருமூச்செறிந்தான். 'இன்றுகூட வேலையின் காரணமாக என்னால் வீட்டிற்குப் போக முடியவில்லை. என் குடும்பத்தோடு சேர்ந்து செலவிடுவதற்கு எனக்கு எப்போது நேரம் கிடைக்கும்? என் மகன்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் கடினமாக உழைத்துவிட்டு, என் மகன்களுடன் போதுமான நேரத்தைச் செலவிடாமல் இருப்பது குறித்துக் குற்ற உணர்வு கொள்வதுதான் என் தலைவிதியாக உள்ளது,' என்று தனக்குத் தானே புலம்பிய அவன், தன் மனைவி மற்றும் மகன்களின் உருவங்களைத் தன் மனத்திலிருந்து அப்புறப்படுத்த முயற்சித்தான். சிந்தனையில் மூழ்கியிருந்த அவன், தனக்கு இடப்பக்கமாகத் திரும்பி, தூண்களுடன்கூடிய அந்த நீண்ட தாழ்வாரத்தின் ஊடாக நடந்து சென்றான். அன்றிரவு இடப்பக்கமாகத் திரும்புவதற்குப் பதிலாக அவன் வலப்பக்கமாகத் திரும்பியிருந்தால், இந்நாட்டின் வரலாறு வேறு விதமாக இருந்திருக்கக்கூடும்.

* * *

மேலும் ஒரு மணிநேரம் கழித்துத்தான் அசுவத்தாமன் தன் வீட்டிற்குப் புறப்பட்டான். அரண்மனையிலிருந்து நடந்து சென்றால் பதினைந்து நிமிடங்களில் அடைந்துவிடும் தூரத்தில் அவனுடைய வீடு இருந்தது. துச்சாதனனும் தன் அறைக்குத் திரும்புவதற்கு முன் சிறிது நேரம் அங்கேயே உலவிக் கொண்டிருந்தான். ஒருசில கணங்கள் கழித்து, ஓர் அகலமான கற்தூணுக்குப் பின்னாலிருந்து ஒரு குண்டான உருவம் வெளிவந்தது. இவ்வளவு பெரிய உருவத்தைக் கொண்டிருந்த அவனுடைய முகம் ஆச்சரியமூட்டும் விதத்தில் மிகவும் ஒடிசலாக இருந்தது. அவன் தலை கிட்டத்தட்ட வழுக்கையாக இருந்தது. அம்மைத் தழும்புகள் நிறைந்த அவனுடைய நெற்றியின்மீது ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஒரு சுருக்கம் அவனுடைய முகத்தில்

நிரந்தரமாக நிலை கொண்டுவிட்டது. அவன் மென்மையான தோலால் ஆன காலணிகளை அணிந்திருந்ததால், விதுரனுக்கு எதிர்த்திசையில் ஓசைபடாமல் அவனால் நடந்து செல்ல முடிந்தது. தாழ்வாரம் நெடுகிலும் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஏற்றப்பட்டிருந்த தீப்பந்தங்கள் ஏற்படுத்திய சிறு சிறு வெளிச்சத் தீவுகளுக்குள் தவறுதலாகக் கால் பதித்துவிடாமலும், தூங்கிக் கொண்டிருந்த காவலர்களைத் தேவையில்லாமல் சத்தம் போட்டு எழுப்பிவிடாமலும் அவன் எச்சரிக்கையாகப் பதுங்கிப் பதுங்கி நடந்தான். நிழல்களின் உலகிற்குச் சொந்தமானவன் அவன்.

அரண்மனையின் வடக்குப் பகுதியில் அமைந்திருந்த சிறிய அறைகளில் ஒன்றின் அருகே அவன் வந்து நின்றான். அவன் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. அந்த அறைக் கதவு அமைதியாகத் திறந்தது. காந்தார இளவரசன் வெளியே எட்டிப் பார்த்தான். ஒரு லேசான தலையசைப்பின் மூலம், பருத்த உடலைக் கொண்ட அந்த மனிதனை உள்ளே வருமாறு அவன் அழைத்தான். அந்த அறையின் ஒரு மூலையில் இருந்த ஒரு சிறிய மேசையின்மீது ஓர் எண்ணெய் விளக்கும் ஒருசில பனை ஓலைச் சுவடிகளும் இருந்தன. சகுனி அந்த ஓலைச் சுவடிகளிலிருந்து ஒன்றை எடுத்து அந்த நபரிடம் கொடுத்தான். "புரோச்சனா . . ." சகுனியின் குரல் கம்மியது. ஆனால் அந்த குண்டனின் முகத்தில் தென்பட்ட அதிர்ச்சியைக் கண்டதும் சகுனி தன் பேச்சை நிறுத்தினான். அவன் தன் தவறை உணர்ந்தான். உளவு மற்றும் சூழ்ச்சி அடங்கிய பயங்கரமான விளையாட்டில் பெயர்களைக் கூறுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சகுனி, 'அதனால் என்ன, புரோச்சனன் என்னிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கும் ஒரு வேலைக்காரன்தானே? நான் அவனுடைய முதலாளி,' என்று நினைத்துக் கொண்டான். ஆனால் புரோச்சனனின் கொடூரமான கண்களைப் பார்த்தபோது, அவனுக்குள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. 'எதிர்காலத்தில் நான் அதிகக் கவனமாக இருக்க வேண்டும்,' என்று அவன் நினைத்துக் கொண்டான்.

சகுனி கொடுத்த ஓலைச் சுவடியைப் பெற்றுக் கொண்ட புரோச்சனன், "அந்த பிராமணச் சிறுவனும் துச்சாதனனும் தூங்கப் போவதுப்போலவே தெரியவில்லை. இளவரசனின் அறையைச் சுற்றியே அவர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்," என்று கூறினான். எப்போதுமே தீவிரமாக இருந்த அவனுடைய முகத்தில், அந்தச் சுவடியில் எழுதப்பட்டிருந்ததைப் படித்து முடித்தவுடன் ஒரு புன்னகை விரிந்தது. அது தட்சகனுக்கான செய்தி. அதில் வெறுமனே, "மூட்டை இன்றிரவு உன்னிடம் ஒப்படைக்கப்படும்," என்று எழுதப்பட்டிருந்தது.

“என்னுடைய அறிவுறுத்தல்களை இம்மி பிசகாமல் அப்படியே பின்பற்ற வேண்டும் என்று அவனிடம் கூறு. பேராசைப்பட்டு முட்டாள்தனமான திட்டங்கள் எதையும் அவன் தீட்டக்கூடாது என்று அவனிடம் திட்டவட்டமாகக் கூறிவிடு,” என்று சகுனி கூறினான்.

“அன்னியரான உங்களிடமிருந்து அவன் எந்த உத்தரவையும் ஏற்றுக் கொள்ள மாட்டான்,” என்று புரோச்சனன் கூறினான்.

“ஏன் ஏற்றுக் கொள்ள மாட்டான்? அவன் நான் கொடுக்கும் பணத்தை எடுத்துக் கொள்கிறான் என்றால், நான் கூறுவதையும் அவன் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும்.”

“அப்படி நடந்தால் நல்லது.” புரோச்சனன் லேசாகப் பணிந்து வணங்கிவிட்டு மீண்டும் இருளுக்குள் ஐக்கியமானான். வாசலில் நின்ற காவலாளிகளை அவன் கடந்து சென்றாக வேண்டும். ஏற்கனவே நேரம் ஆகிவிட்டிருந்தது. நள்ளிரவுக்குப் பிறகு முதல் மூன்று மணிநேரம் காவலர்கள் ஆழ்ந்து உறங்கினர். ஏற்கனவே முதல் ஒரு மணிநேரம் கடந்துவிட்டிருந்தது. அவன் அங்கிருந்து தப்பிச் சென்று, ஆற்றைக் கடந்து, காளிங்கனைச் சந்தித்து, தன்னுடைய செய்தியை அவனிடம் தெரிவித்துவிட்டு, குளித்து முடித்து, நகர சுகாதார ஆய்வாளனாகத் தன் அலுவலகத்திற்குத் திரும்பி வருவதற்கு, பொழுது விடிவதற்கு முன்பாக ஒருசில மணிநேரமே அவனுக்கு இருந்தது. சகுனியின் ‘மூட்டை’ நாகர்களிடம் ஒப்படைக்கப்படும்போது, அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும். இந்தச் சதித் திட்டம் பல மாதங்களுக்கு முன்பே தீட்டப்பட்டிருந்தபோதிலும், துல்லியமான தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. சரியான நேரத்திற்காகச் சகுனி காத்திருந்தான். இன்று நேரம் கைகூடி வந்திருந்தது. பீமனுக்கும் துரியோதனனுக்கும் இடையேயான சண்டை மிக மோசமானதாக ஆகியிருந்தது. ஆஜானுபாகுவான அந்தப் பாண்டவன் துரியோதனனைச் சுலபமாகத் துவம்சம் செய்திருந்தான்.

புரோச்சனன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற ஒருசில கணங்களுக்குப் பிறகு, சகுனி தன்னுடைய அலமாரியைத் திறந்து ஒரு மது பாட்டிலை வெளியே எடுத்தான். காந்தாரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட, மேன்மக்களின் மனங்கவர்ந்த ஒரு சிறப்பு வகையான மது அது. சகுனி அந்த அலமாரியிலிருந்து ஒரு சிறிய மரப்பெட்டியையும் வெளியே எடுத்தான். அதைத் தன் இடுப்புக் கச்சையின் மடிப்புகளில் மறைத்து வைத்தான். வெளியே ஏதேனும் நடமாட்டம் இருந்ததா என்று அவன் எட்டிப் பார்த்தான். ஒரு நாயின் ஊளைச் சத்தத்தையும் சில வெட்டுக்கிளிகளின் இரைச்சலையும் தவிர அங்கு வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. துரியோதனனின்

அறையிலிருந்து முன்பு தான் எடுத்து வந்திருந்த வெள்ளை நிறப் பட்டுச் சால்வையை அவன் அணிந்து கொண்டு, அரண்மனையின் வடக்குத் திசையை நோக்கி வேகமாக நடந்தான். அங்கிருந்த அறைகளில் ஒன்றில்தான் பீமன் தூங்கினான் என்பதை அவன் அறிந்திருந்தான். சகுனி பீமனின் அறைக் கதவின்மீது மூன்று முறை பலமாகத் தட்டினான். சிவந்த கண்களுடன் பீமன் கதவைத் திறந்தான்.

"யார் இந்த நள்ளிரவில் . . ." என்று எரிச்சலோடு கேட்ட பீமன், சகுனி தன் கண் முன்னால் ஆட்டிக் கொண்டிருந்த பாட்டிலைக் கண்டதும் அப்படியே சிலையாக நின்றான்.

"தயவு செய்து உள்ளே வாருங்கள் . . ." என்று அவன் சகுனியை அழைத்தான். அந்த பாட்டிலுக்குள் இருந்த பொருள் அவனை ஆட்டுவித்துக் கொண்டிருந்தது.

"இந்தப் புழுக்கமான அறையிலா? இந்தச் சிறப்பு வகை மதுவைத் திறந்த வெளியில் வைத்துத்தான் ரசித்துக் குடிக்க வேண்டும். வா, நாம் மலைகள் பக்கமாகச் சென்று, காந்தாரத்திலிருந்து வந்திருக்கும் இந்த அழகைப் பருகி மகிழலாம்."

"இந்த நேரத்தில் மலைகள் பக்கமாகவா?" என்று கேட்ட பீமன், சந்தேகத்தோடு இருட்டிற்குப் பின்னால் உற்றுப் பார்த்தான். ஆற்றின் அருகே செல்வதற்கு உகந்த நேரம் அதுவல்ல என்பதை அவன் அறிந்திருந்தான். பல ஆண்டுகளாக அவன் சேகரித்து வந்திருந்த மூடநம்பிக்கைகளும் பயங்களும் இப்போது அவனுடைய மனத்தில் காட்டுக்கூச்சல் போட்டன.

பீமனின் எண்ணங்களைத் துல்லியமாகப் படம்பிடித்த சகுனி, "ஏன்? இருட்டைக் கண்டு நீ பயப்படுகிறாயா?" என்று ஒரு புன்னகையுடன் கேட்டான்.

சகுனியின் வார்த்தைகள் பீமனை உசுப்பேற்றின. "என்னைப் பார்த்தால் இருட்டைக் கண்டு பயப்படும் ஓர் இளைஞனைப்போலவா உங்களுக்குத் தெரிகிறது? வாருங்கள், நாம் போகலாம்," என்று கூறிவிட்டு அவன் தன் அறையைவிட்டு வேகமாக வெளியேறினான்.

சகுனி தன் உதடுகளில் ஒரு புன்முறுவலுடன் அவனைப் பின்தொடர்ந்தான்.

* * *

அடுத்த நாள் காலையில், துரியோதனன் தன் வகுப்பில் வழக்கத்திற்கு மாறாக எதையும் பார்க்கவில்லை. பீமன் அங்கு இல்லாததை அவன் கவனித்தான். ஆனால் வகுப்பிற்கு அவன் அடிக்கடித் தாமதமாக வருவது வழக்கமாக இருந்தது. முன்னனுமதி

இல்லாமல் வகுப்பிற்கு வராமல் இருப்பது துரோணருக்குப் பிடிக்காவிட்டாலும்கூட, அவர் அதை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் தானோ அல்லது தன்னுடைய சகோதரர்களோ இப்படிப்பட்ட எதையேனும் செய்ய முயற்சித்திருந்தால், விஷயம் வேறு விதமாகக் கையாளப்பட்டிருக்கும் என்று துரியோதனன் நினைத்தான். மாலை நேரம் நெருங்கியும்கூட, பீமனை எங்கும் காணவில்லை. மெல்ல மெல்ல, பாண்டவர்களைக் கிலி சூழ்ந்து கொள்ளத் துவங்கியது. அந்த முட்டாள் எங்கே மாயமாய் மறைந்து போனான் என்று துரியோதனனும் வியந்தான். ஒருவேளை நன்றாகக் குடித்துவிட்டு அவன் எங்கேனும் விழுந்து கிடக்கக்கூடும். இந்த எளிய, மிகவும் நம்பத்தக்க விளக்கத்தைக் கொடுத்தவன் துச்சாதனன். அசுவத்தாமன் எதுவும் பேசவில்லை, ஆனால் அவன் கவலையோடு காணப்பட்டான். பொழுது சாய்ந்தபோது, மக்கள் தன்னை ஒரு வினோதமான விதத்தில் பார்க்கத் துவங்கியிருந்ததைத் துரியோதனன் கவனித்தான். பீமனுக்கான தேடல் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. காணாமல் போன பாண்டவ இளவரசனை வீரர்கள் நகரம் முழுக்க வலை வீசித் தேடத் துவங்கினர்.

இரண்டாவது நாள் காலையில், அரசாங்கக் காவலர்களின் முதன்மை அதிகாரி வந்து துரியோதனனை எழுப்பினான். அவன் துரியோதன் முன்னால் குனிந்து வணங்கவில்லை, அவனுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்க்கவும் இல்லை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதுபோல, அவன், "இளவரசே, ஒரு கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் நான் உங்களைக் கைது செய்கிறேன். உங்களை அழைத்து வரும்படி அரசவை எனக்கு உத்தரவிட்டுள்ளது," என்று பட்டென்று கூறினான்.

"கொலை . . . என்ன கொலை . . .?" துரியோதனன் எதிர்ப்புக் காட்ட முயற்சித்தான். ஆனால் கோபக் கனல் கண்களில் தெறிக்க அந்த அதிகாரியின் பின்னால் நின்று கொண்டிருந்த விதுரனை அவன் கண்டபோது, தன்னுடைய விவாதம் வீணானது என்பதை அவன் அறிந்து கொண்டான்.

பட்டத்து இளவரசனான அவனைக் காவலர்கள் அந்த அரண்மனையின் பளபளப்பான தாழ்வாரங்களின் வழியாகவும், பூத்துக் குலுங்கிய மலர்களுடன் பசுமையாக இருந்த முற்றங்களைக் கடந்தும் நடத்தி அழைத்துச் சென்றனர். பல சன்னல்கள் வழியாகத் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த நுற்றுக்கணக்கான கண்களைக் கண்டு துரியோதனன் அவமானம் கொண்டான். தான் என்ன குற்றம் இழைத்திருந்தோம் என்று அவன் வியந்தான். பீமனைக் கொலை செய்த

குற்றத்திற்காகத் தான் விசாரிக்கப்படவிருந்தோம் என்பது விரைவில் அவனுக்குத் தெரியவிருந்தது.

12

விசாரணை

காவலர்கள் துரியோதனனுடன் அரசவைக்குள் நுழைந்தபோது, ஒட்டுமொத்த அவையிலும் கோப முணுமுணுப்புகள் வெடித்துக் கிளம்பின. அரசன் திருதராஷ்டிரனின் முகம் வெளிறிப் போயும் கவலையோடும் இருந்தது. காந்தாரியின் முகம் கல்லில் வடிக்கப்பட்டிருந்ததுபோல இருந்தது. துரியோதனன் தன்னைச் சுற்றி எல்லோர் கண்களிலும் வெறுப்பை மட்டுமே பார்த்தான். தனக்குள் கோபம் கொப்பளிக்கத் துவங்கியிருந்ததை அவன் உணர்ந்தான். இது எதைப் பற்றியது? கொலைக்கான விசாரணையா? எவன் எவனைக் கொலை செய்தான்? திடீரென்று அவனுக்குப் பொறி தட்டியது. அவர்கள் பீமனைப் பிணமாகக் கண்டுபிடித்திருந்தனர் என்றும், தனக்கும் பீமனுக்கும் இடையேயான பகைமை நாடறிந்த ரகசியமாக இருந்ததால், அவனைக் கொன்றது குறித்துத் தன்மீது முதல் சந்தேகம் விழுந்திருந்தது என்றும் அவன் நினைத்தான். இரண்டு நாட்களுக்கு முன்பு சகுனியிடம் தான் என்ன கூறியிருந்தோம் என்று அவன் நினைவுகூர முயற்சித்தான். அவன் தன்னைச் சுற்றிலும் பார்த்தபோது, பாண்டவர்களின் கண்களில் பகைமையுணர்வு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்ததைக் கண்டான். அர்ச்சுனன் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தான். ‘பீஷ்மரும் மற்றப் பெரியவர்களும் மட்டும் அப்போது அங்கு இல்லாமல் போயிருந்தால், எந்தக் கேள்வியும் கேட்காமல் அவன் என்னைத் தீர்த்துக் கட்டியிருப்பான்,’ என்று துரியோதனன் நினைத்தான்.

குந்தி எழுந்து நின்று, வருத்தத்தோடும் நிதானமாகவும், "அவன் என் மகனைக் கொன்றுவிட்டான். இந்த நாட்டில் நீதி நியாயம் எதுவும் கிடையாதா? ஒரு பாவப்பட்ட விதவையால் உங்கள் சாம்ராஜ்யத்தில் நிம்மதியாக வாழ முடியாது. என் மகன் எப்போதுமே இனிமையானவனாகவும் அன்பானவனாகவும் இருந்தான். இளவரசன் துரியோதனனால் அவனுடன் நேருக்கு நேராகச் சண்டையிட்டு அவனை வெற்றி கொள்ள முடியவில்லை. எனவே கீழ்த்தரமான வழிமுறைகளை அவன் தேர்ந்தெடுத்திருக்கிறான். என் மகன் இறந்துவிட்டான். என் பீமன் இறந்துவிட்டான். பீஷ்மரே . . . இந்த அநியாயம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? துரியோதனன் ஏன் அவனைக் கொலை செய்தான்? என் மகன் பீமன் ஓர் அப்பாவி . . ." என்று கூறி உணர்ச்சிவசப்பட்டாள்.

"குந்தி, உன் மகனை நாங்கள் நிச்சயமாகக் கண்டுபிடித்துவிடுவோம். அவன் இறந்து போகவில்லை. அவன் காணாமல் போயிருக்கிறான். அவன் கொலை செய்யப்பட்டுள்ளான் என்பதற்கு நம்மிடம் எந்த ஆதாரமும் இல்லை. தயவு செய்து உன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள் . . ."

குந்தி பீஷ்மரின் ஆதரவான வார்த்தைகளை இடைமறித்து, "பிதாமகரே, இறந்து போயிருப்பது என் மகன். நான் உணர்ச்சிவசப்பட்டுள்ளதுபோல உங்களுக்குத் தோன்றினால், தயவு செய்து என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள். தயவு செய்து நியாயத் தீர்ப்புக் கூறி, குற்றவாளிக்குத் தண்டனை வழங்குங்கள்," என்று கூறினாள்.

இளம் பிராமணனான தௌமியன் எழுந்து நின்று, "நாம் ஒரு விதவைக்கு நியாயத்தை மறுக்கக்கூடாது. ஒரு விதவையின் சாபம் சக்திவாய்ந்தது. அவள் தன் மகனைப் பறி கொடுத்திருக்கிறாள். துரியோதனன் பீமனைக் கொலை செய்திருக்கிறான். ஒருவனின் நடத்தையைப் பற்றி நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும்போது, அவனுக்குத் தண்டனை வழங்குவதற்கு எந்த ஆதாரத்திற்காகவும் நாம் காத்திருக்க வேண்டியதில்லை. ஆதாரம் இல்லை என்பது ஒரு கொலையாளி தப்பிப்பதற்கான ஒரு காரணமாக அமைந்துவிடக்கூடாது. மாறாக, நாம் அவனுடைய கடந்தகால நடத்தையைக் கருத்தில் கொள்ள வேண்டும். துரியோதனன் எப்போதுமே ஒழுங்கற்றவனாகவும் பிடிவாதக்காரனாகவும் இருந்து வந்துள்ளான். அவனுடைய குருநாதர் இதற்கு ஒப்புதல் வாக்குமூலம் வழங்குவார்," என்று கூறினான்.

தான் செய்திராத ஒரு குற்றத்திற்காகத் தன்னை எல்லோரும்

இழித்துரைத்ததால் ஏற்பட்ட அவமானத்தின் சுமை தாங்காமல், துரியோதனன் மனம் தளர்ந்து போய் அந்த அவையின் நடுவில் நின்றான். இத்தனைப் பேர் தன்னை வெறுக்கும் அளவுக்குத் தான் என்ன செய்துவிட்டிருந்தோம் என்று அவன் வியந்தான். 'தூய்மையான பிறப்பு' போன்ற அவர்களுடைய அபத்தமான மற்றும் கேலிக்கூத்தான யோசனைகளுக்கு அவன் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் தான் ஒரு மாறுபட்டக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த ஒரே காரணத்திற்காக அவர்கள் தன்னை இவ்வளவு தூரம் வெறுப்பார்கள் என்று அவன் ஒருபோதும் நினைத்திருக்கவே இல்லை.

"இந்த இளைஞன் ஆணவம் பிடித்தவன். நம்முடைய புனித வேதங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் இவன் பின்பற்றுவதில்லை. தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்தவர்களுடன் சுற்றித் திரிந்து, அவன் இந்த அரண்மனையை மாசுபடுத்துகிறான். அவன் எப்போதும் எதற்கெடுத்தாலும் வீணாக விவாதிக்கிறான். எல்லாவற்றைக் குறித்தும் அவனுக்கு ஒரு முன்னபிப்பிராயம் இருக்கிறது. தன்னுடைய முட்டாள்தனமான யோசனைகளில் அவன் பிடிவாதமாக இருக்கிறான். அவன் தன்னுடைய சுண்டைக்காய் அறிவை வைத்துக் கொண்டு, அறிஞர்களுடன் விவாதிக்க முயற்சிக்கிறான். பண்டிதர்களுக்குத் தன்னால் கற்றுக் கொடுக்க முடியும் என்ற நினைப்பு அவனுக்கு இருக்கிறது. கோவிலுக்குள் நுழைவதற்கு முன்பாக, நம்முடைய புனித இடங்களில் கூடி அவற்றை மாசுபடுத்துகின்ற அழுக்கான பிச்சைக்காரர்களுக்கு இவன் பணமும் உணவும் கொடுக்கிறான். பல முறை, பல்வேறு கோவில்களின் அர்ச்சகர்களிடமிருந்து எனக்குப் புகார்கள் வந்துள்ளன. இந்தப் பிச்சைக்காரர்களுக்கு உதவுவது ஒரு மிகப் பெரிய பாவம் என்று கூறுகின்ற அர்ச்சகர்களைப் பார்த்து அவன் சிரிக்கிறான். ஏழைகளுக்கு உதவ முற்படுவதன் மூலம், கர்மவினையின் விதிகளோடு தான் குறுக்கிடுகிறோம் என்பதை அவன் புரிந்து கொள்வதில்லை. மக்கள் ஏழைகளாகவோ அல்லது பணக்காரர்களாகவோ இருப்பதும், பிராமணர்களாகவோ அல்லது பறையர்களாகவோ பிறப்பதும், தங்கள் முந்தைய பிறவிகளில் அவர்கள் செய்த கர்மவினையின் விளைவுதான் என்பது அவனுக்குப் புரிவதில்லை."

"தெளமியா, நீ எதைப் பற்றிப் பிதற்றிக் கொண்டிருக்கிறாய்?" என்று பீஷ்மர் இடைமறித்தபோது, ஒட்டுமொத்த அவையும் அதிர்ச்சியடைந்தது. ஏனெனில், ஒரு பிராமணனின் பேச்சில் யாரும் ஒருபோதும் குறுக்கிட்டதில்லை. பீஷ்மருக்கு வயது ஏற ஏற, எரிச்சலும்

அதிகரித்துக் கொண்டிருந்தது.

"மேன்மை பொருந்தியவரே, நான் என்னுடைய கருத்தை முன்வைப்பதற்கு நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்," என்று கூறிய தௌமியன், பீஷ்மரைக் கோபத்தோடு பார்த்தான்.

"இது கோவில் சொற்பொழிவு மண்டபம் அல்ல. உன்னுடைய பிரசங்கங்களை எங்கே வைத்துக் கொள்ள வேண்டுமோ, அங்கே வைத்துக் கொள். இங்கு அவை தேவையில்லை. இது அஸ்தினாபுரத்தின் அரசவை. இங்கு கொலைக் குற்றம் ஒன்றைத் தீர விசாரிப்பதற்காக நாம் கூடியிருக்கிறோம். குற்றம் சாட்டப்பட்டுள்ளவன் பட்டத்து இளவரசன். நமக்குத் தேவை ஆதாரங்களும் சாட்சியங்களும்தானே தவிர, துரியோதனன் உன்னுடைய வகையான சிந்தனைக்கு உடன்படவில்லை என்பதைப் பற்றிய உன்னுடைய புகார்கள் அல்ல. இந்த அரசவையைப் பொறுத்தவரை . . ."

"புனித நூல்களின்படி, ஒருவனுடைய நடத் . . ." பீஷ்மரின் அனல் வீசிய பார்வை, தௌமியனைப் பாதியிலேயே தன் பேச்சை நிறுத்திக் கொள்ளச் செய்தது.

"தௌமியா, நீ ஒரு மிகச் சிறந்த அறிஞன். புனித நூல்கள் மற்றும் வேதங்களில் உனக்கு இருக்கும் அறிவுக்காக நாங்கள் உன்னை மதிக்கிறோம். ஆனால் இரண்டு விஷயங்களை நான் உனக்குத் தெளிவுபடுத்தியாக வேண்டும். முதலாவது, நான் பேசிக் கொண்டிருக்கும்போது, எக்காரணம் கொண்டும் நீ என் பேச்சில் குறுக்கிட உனக்கு அனுமதி இல்லை. இரண்டாவது, புனித நூல்களில் என்ன எழுதப்பட்டிருந்தாலும் சரி, இந்த அரசவை, ஆதாரத்தின் அடிப்படையிலேயே செயல்படும். அரசவையில் இப்படித்தான் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது ஒரு பாவம் என்றால், என்னுடைய மோசமான கர்மாவிற்கான விலையை இந்தப் பிறவியிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு பிறவியிலோ கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். நான் உன்னிடம் கேட்கும் கேள்வி இதுதான்: துரியோதனன் பீமனைக் கொன்றுவிட்டான் என்பதை நிரூபிப்பதற்கு உன்னிடம் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இந்த அரசவைக் கூட்டமே சற்று அவசரப்பட்டுக் கூட்டப்பட்டுள்ளதாக நான் நினைக்கிறேன். பீமன் இறந்துவிட்டான் என்று இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இரண்டு நாட்களாக அவன் காணாமல் போயிருக்கிறான். அவன் ஒன்றும் சிறு குழந்தையல்ல. அவனுக்குக் கிட்டத்தட்டப் பதினெட்டு வயதாகிறது. அந்த வயது இளைஞர்களின் மனத்தைப் புரிந்து கொள்வது கடினம். உலகைச் சுற்றிப் பார்த்து வருவதற்காக அவன் இங்கிருந்து ஓடிப் போயிருக்கக்கூடும்."

குந்தி கோபமாக எழுந்து நின்றாள். “பிதாமகரே, நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? எனக்கு ஒருபோதும் நியாயம் கிடைக்கப் போவதில்லை. இங்கு புனித நூல்களுக்கும் எந்த மதிப்பும் இல்லை, தௌமியனைப் போன்ற மாபெரும் அறிஞர்களுக்கும் எந்த மரியாதையும் இல்லை. ஆனால் இது ஏன் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது? பீஷ்மரே, நீங்கள் ஒரு பாறையைப்போலக் கடினமாக ஆகியிருக்கிறீர்கள். ஒரு தாயின் உணர்வை உங்களால் புரிந்து கொள்ளவே முடியாது. நீங்கள் ஒருபோதும் திருமணம் செய்து கொண்டதில்லை. எனவே, பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்று உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.”

அரசவையில் கனத்த அமைதி நிலவியது. மேல்மாடத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த பல பெண்கள் தங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்ததைத் துரியோதனனால் பார்க்க முடிந்தது. சிற்றப்பா விதுரன் ஏன் இதில் குறுக்கிடவில்லை என்று அவன் வியந்தான். துரியோதனன் அவனுடைய கவனத்தைக் கவர முயற்சித்தான், ஆனால் விதுரன் சகுனியைக் கண்காணித்துக் கொண்டிருந்தான்.

இப்போது தர்மன் எழுந்து நின்றான். முதலில் அரசவைக்கும், பிறகு தௌமியனுக்கும் துரோணருக்கும், அதன் பிறகு அவையிலிருந்த பிராமணர்களுக்கும் அவன் தன் பணிவான வணக்கத்தைத் தெரிவித்தான். அந்த பிராமணர்கள் அவனை ஆசீர்வதித்தனர். பிறகு அவன் அரசனையும் அரசியையும் பணிந்து வணங்கினான். அவன் இவ்வாறு நீட்டி முழக்கித் தன் மரியாதையை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததைக் கண்டு பீஷ்மர் எரிச்சலடைந்தார். பாண்டவர்களில் மூத்தவனான தர்மன் ஓர் அமைதியான குரலில் பேசினான். இவ்வழியில், எல்லோரும் தன் பேச்சைக் கவனமாகச் செவிமடுத்ததை அவன் உறுதி செய்தான். அவன் மிகவும் மென்மையாகப் பேசியதால், அவன் பேசியதை எல்லோரும் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருந்தது. எந்தவொரு லட்சியமும் இல்லாத ஓர் எளிய மனிதனைப்போல அவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். “என் பெரியப்பாவின் மகனான துரியோதனன், என் சகோதரன் பீமனின் கொலையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதைக் காண எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. துரியோதனனை நான் எப்போதுமே நேசித்து வந்துள்ளேன். அவன் ஒரு மரியாதையான மனிதன் என்று நான் நினைத்தேன். அவன் செய்துள்ள இந்தப் படுபயங்கரமான காரியத்திற்கு எந்தச் சாட்சியும் இல்லாமல் போயிருந்தால், இப்படிப்பட்ட ஒரு

குற்றத்தை இவனால் செய்திருக்க முடியும் என்பதை நான் நம்ப மறுத்திருப்பேன். ஆனால் அவன் இந்தக் குற்றத்தைச் செய்ததைப் பார்த்த ஒருவன் இருக்கிறான். மேன்மை பொருந்திய நீங்கள் அனுமதித்தால், அந்தச் சாட்சியை இந்த அரசவைக்குக் கூட்டி வர முடியும்."

துரியோதனன் ஆச்சரியத்தில் தன் தலையை உயர்த்தினான். சாட்சியா? என்ன இது?

"உன்னிடம் சாட்சி இருந்தால், அவனை உடனே இங்கே அழைத்து வா. இன்னும் ஏன் நாம் காத்துக் கொண்டிருக்கிறோம்?" என்று பீஷ்மர் எரிச்சலோடு கேட்டார்.

"அந்த சாட்சி . . . ம்ம்ம் . . . அவன் ஒரு தீண்டத்தகாதவன். அவனால் இந்த அரண்மனைக்குள்ளும் அரசவைக்குள்ளும் நுழைந்து சாட்சியம் வழங்க முடியாது," என்று தர்மன் முணுமுணுத்தான்.

"தர்மா, நான் உன்னைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். இந்த விஷயத்தில் சாதி ஏன் குறுக்கிட வேண்டும்?"

"ஐயா, அவன் இங்கு வந்தால் இந்த அரண்மனையும் அரசவையும் மாசுபட்டுவிடும். மிகத் தாழ்ந்த சாதியான வேடுவ சாதியைச் சேர்ந்தவன் அவன். அரண்மனைக்கான பாதையில் நடந்து வரக்கூட அவர்களுக்கு அனுமதி கிடையாது. அவனால் எப்படி இங்கே வந்து சாட்சியம் வழங்க முடியும்?" என்று தெளமியன் சத்தமாகக் கேட்டான். அங்கிருந்த மற்ற பிராமணர்களும் அதை ஆமோதித்துத் தலையசைத்தனர்.

"உன்னால் வேறு எந்த ஆதாரத்தையும் காட்ட முடியாது என்றால், உன்னுடைய சொந்தச் சாட்சி இந்த அரசவைக்குள் நுழைய உன்னால் அனுமதிக்க முடியாது என்றால், இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, இளவரசன் துரியோதனன் நிரபராதி என்றும் அப்பாவி என்றும் பிரகடனம் செய்வதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்காது. என்னால் . . ." பீஷ்மர் பாதியிலேயே தன் பேச்சை நிறுத்தினார். மீண்டும் பேசுவதற்காக எழுந்து நின்ற தெளமியனை அவர் எரிச்சலோடு பார்த்தார்.

"நாங்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் கலந்து பேசிவிட்டோம். ஒரு முக்கியமான வழக்கில் ஒரு தீண்டத்தகாதவனை அனுமதிப்பதில் தவறில்லை என்று கற்றறிந்த சான்றோர்கள் கருதுகின்றனர். சாத்திரங்களில் அதற்கான அனுமதி இருக்கிறது. ஆனால் இந்தப் பாவத்திற்காக அரசர் பரிகாரம் செய்தாக வேண்டும். ஓராயிரம் பிராமணர்களுக்கு அவர் உணவளிக்க வேண்டும். அவர்களுக்குப் பரிசுகள் கொடுக்க வேண்டும் . . ."

"அரசர் அப்படிப்பட்ட எதையும் செய்ய மாட்டார்," என்று பீஷ்மர்

சீறினார். அவருடைய குரல் கோபத்தில் நடுங்கியது. "நீ ஒரு சாட்சியை முன்வைக்க விரும்பினால், எந்தவிதமான நிபந்தனையுமின்றி அதைச் செய் . . ."

குந்தி எழுந்து அங்கிருந்து வெளியேறத் துவங்கினாள். "என் செல்வ மகன்களே, இதில் இனி எந்த அர்த்தமும் இல்லை. நமக்கு இங்கே ஒருபோதும் நியாயம் கிடைக்கப் போவதில்லை." அவளுடைய நான்கு மகன்களும் எழுந்து அவளோடு சேர்ந்து கொண்டனர்.

கண்களில் கோபம் கொப்பளிக்க, பீஷ்மர் வெகுண்டெழுந்தார். ஆனால் அவர் தன் வாயைத் திறப்பதற்கு முன், அரசன் திருதராஷ்டிரன் ஒரு மென்மையான குரலில் பேசினான். "பரிகாரத்திற்கு நான் உடன்படுகிறேன். பிராமணர்கள் கேட்கும் எதையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். உண்மை வெளியே வரட்டும். என் மகன் உண்மையிலேயே இந்தக் கொலையைச் செய்திருந்தால், அவனை நான் விட்டு வைக்க மாட்டேன்."

பீஷ்மர் களைத்துப் போய் உட்கார்ந்துவிட்டு, சாட்சியை அழைத்து வரும்படி அங்கிருந்த காவலாளிகளுக்குச் சைகை காட்டினார். சுமார் பதினேழு வயது நிரம்பிய ஒரு கரிய நிறச் சிறுவனை அவர்கள் இழுத்து வந்தனர். அவனுடைய வயதுக்கு அவன் மிகவும் சிறியவனாக இருந்தான். அவனுடைய விலா எலும்புகள் அவனுடைய தோலின் ஊடாகத் தெளிவாகத் தெரிந்தன. அவன் சுருண்ட தலைமுடியையும் தடிமனான உதடுகளையும் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய விகாரமான உருவம்தான் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. அவனுடைய உடல் மற்றும் முகத்தின் இடது பக்கம் முழுவதும் எரிந்து போய், தோல் முழுவதும் சுருக்கங்களுடன் மஞ்சள் நிறத்தில் இருந்தது. அவனுடைய எஞ்சிய உடல் முழுவதும் கருப்பு நிறத்தில் இருந்தது. அவன் பீதியோடு அரசவையைச் சுற்றித் தன் பார்வையை ஓடவிட்டான். தன்னைச் சூழ்ந்திருந்த ஆடம்பரம் அவனைத் திக்குமுக்காட வைத்தது. யார் அரசன் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டு மிகத் தாழ்வாகக் குனிந்து வணங்கினான்.

"பயப்பட வேண்டாம். இங்கு யாரும் உனக்கு எந்தத் தீங்கும் செய்ய மாட்டார்கள். என்னுடைய கேள்விகளுக்கு நேர்மையாக விடையளித்துவிட்டால், நீ விரைவில் இங்கிருந்து போய்விடலாம். உன் பெயர் என்ன?" என்று பீஷ்மர் கேட்டார்.

"ஜரன்," என்று அந்த இளைஞன் முணுமுணுத்தான். அப்போது ஒரு காவலாளி தன் தடியைக் கொண்டு அவனைக் குத்திவிட்டு, உயர்ந்த சாதியினரிடம் பேசும்போது அவன் தன் கைகளால் தன் வாயை மூடிக்

கொண்டு பேச வேண்டும் என்று அவனுடைய காதில் கோபமாகக் கிசுகிசுத்தான். ஜரனின் கைகள் உடனடியாக அவனுடைய தடித்த உதடுகள்மேல் போய் நின்றன. அவன் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"ஜரா, கைகளை விலக்கிவிட்டு நேராக நிமிர்ந்து நின்று எனக்கு பதில் கூறு," என்று பீஷ்மர் உரத்தக் குரலில் கூறினார்.

ஜரன் தனக்குக் கட்டளையிடப்பட்டதுபோலத் தன் கைகளை விலக்கிவிட்டு நிமிர்ந்து நின்றான். அரசவை நெடுகிலும் கோப முணுமுணுப்புகள் எழுந்தன. ஆனால் பீஷ்மர் அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு மேலும் தொடர்ந்தார். "மகனே, நீ என்ன பார்த்தாய்? தெளிவாக விளக்கிக் கூறு."

"ஐயா, இரண்டு நாட்களுக்கு முன் . . . ஆற்றின் அருகே உள்ள பாறையின்மீது அமைந்துள்ள கோவிலின் அருகே நான் இருந்தேன் . . ."

உடனடியாக அந்த அரசவையில் குழப்பம் வெடித்தது. ஒரு வேடுவன் எப்படித் துணிச்சலாக ஒரு கோவிலின் அருகே சென்றான் என்று கேட்டுச் சில பிராமணர்கள் கத்தினர். மற்றவர்கள், தர்மம் மடிந்து கொண்டிருந்ததாகவும் கலியுகம் நெருங்கிக் கொண்டிருந்ததாகவும் கூப்பாடு போட்டனர். தான் ஏற்படுத்தியிருந்த குழப்பத்தைக் கண்டு ஜரன் முற்றிலும் வெலவெலத்துப் போனான்.

அரசவையில் ஏற்பட்டிருந்த கூச்சல் அடங்குவதற்காக பீஷ்மர் காத்திருந்துவிட்டு, பிறகு ஜரனிடம், "நீ பயப்பட வேண்டியதில்லை. நீ தவறு எதுவும் செய்திருக்கவில்லை. நீ ஏன் கோவிலின் அருகே சென்றாய்?" என்று கேட்டார்.

"ஐயா, நான் அங்கு உணவிற்காகச் சென்றேன். அந்தக் கோவிலில் தினமும் ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியும். ஐயா, அவர்கள் தங்களுக்குப் பரிமாறப்படும் அனைத்தையும் சாப்பிட்டு முடிப்பதில்லை. அவர்கள் ஏராளமான உணவை வீணாக்குகின்றனர். அப்படி மிஞ்சிப் போன உணவால் குப்பைத் தொட்டிகள் நிரம்பி வழிகின்றன. உண்மையிலேயே ருசியான உணவுதான் தூக்கியெறியப்படுகிறது. பெரும்பாலான இரவுகளில் நான் அங்கு செல்வேன். சில சமயங்களில் என்னைப் போன்ற வேறு சிலரும் அங்கு வருவர். பிறகு, மீந்து போன அந்த உணவிற்காக எங்களுக்குள் அங்கு ஒரு பெரிய சண்டையே நடக்கும். நாய்களும் எலிகளும்கூட அந்தச் சண்டையில் கலந்து கொள்ளும். எனக்கு எப்போதும் பசி எடுத்துக் கொண்டே இருக்கும். எனவே எல்லோரும் தூங்கப் போன பிறகு, மீதமிருக்கும் உணவிற்காக நான் அங்கே செல்வேன். ஐயா, அன்றிரவு நான் தனியாக இருந்தேன்."

ஜரன் தன் பேச்சை நிறுத்திவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனால் தங்களுக்கு அசுத்தம் ஏதும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பலர் தங்கள் முகங்களைத் திருப்பிக் கொண்டனர். மற்றவர்கள் தங்கள் கைகளால் தங்கள் வாய்களைப் பொத்திக் கொண்டனர்.

"என்னவொரு வெறுக்கத்தக்க உருவம்!" என்று தௌமியன் முகஞ்சுளித்தான். தன்னை ஒரு புழுவைப்போலப் பார்த்த அந்த மனிதனை நோக்கி ஜரன் தன் கருப்புப் பற்கள் தெரியப் பெரிதாகப் புன்னகைத்தான்.

பீஷ்மர் ஜரனைப் பார்த்துத் தலையசைத்து, தொடர்ந்து பேசுமாறு சைகை காட்டினார். "நல்ல உயரமான ஒருவன் அந்தக் கோவிலின் அருகே . . . அந்த ஆற்றின் அருகே இருந்த இன்னொரு பாறையின்மீது உட்கார்ந்திருந்தான். அவன் நல்ல ஆஜானுபாகுவான உடற்கட்டைக் கொண்டிருந்தான். அவனுடன் இன்னொருவனும் உட்கார்ந்திருந்தான். அவன் ஒரு வெள்ளைச் சால்வையை அணிந்திருந்தான். அவர்கள் இருவரும் குடித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, பெரிய உருவத்தைக் கொண்டவன் ஒரு கொடூரமான குரலில் பாடத் துவங்கினான். அவன் அந்தப் பாறையின் விளிம்பில் ஆபத்தான விதத்தில் உட்கார்ந்திருந்தான். சால்வை அணிந்திருந்தவன் அவனை அந்த ஆற்றுக்குள் தள்ளிவிட்டான். நான் தொடர்ந்து அங்கு இருப்பதற்கு பயந்தேன். ஏனெனில், நான் இருக்கக்கூடாத ஓர் இடம் அது. வெள்ளைச் சால்வையை அணிந்திருந்தவன் என்னைப் பார்த்துவிட்டால், என்னையும் கொன்றுவிடுவான் என்று நான் பயந்தேன். ஐயா, அப்போது காவலாளிகள் என்னைப் பிடித்துவிட்டனர். கோவிலிலிருந்து நான் ஓடிக் கொண்டிருந்ததைப் பார்த்த அவர்கள் என்னை ஒரு திருடன் என்று நினைத்துவிட்டனர். கடந்த இரண்டு நாட்களாக அவர்கள் என்னை அடித்துச் சித்தரவதை செய்துள்ளனர்," என்று ஜரன் கூறி முடித்தான்.

அவையின் நடுவே நின்ற துரியோதனன் இவற்றையெல்லாம் கேட்டு அதிர்ச்சியில் உறைந்தான். மற்ற எந்தவொரு நாளையும்போலவே அன்றும் அவன் ஒரு வெண்ணிறச் சால்வையை அணிந்திருந்தான். அவன் குற்றவாளி என்று நுற்றுக்கணக்கான கண்கள் ஏற்கனவே தீர்ப்பு வழங்கிவிட்டிருந்தன. அரசன் பேயறைந்ததுபோல ஆனான். அரசி காந்தாரி தன்னுடைய கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். தன்னுடன் கலந்து பேசுவதற்காக பீஷ்மர் விதுரனை அழைத்தார். அரசவையில் இருந்த மற்றவர்களும் அவசர அவசரமான உரையாடலில் ஈடுபட்டனர்.

விதுரன் தன் இடத்தைவிட்டு அசைவதற்கு முன்பாக, தௌமியன்

எழுந்து நின்று, "அரசே, இதற்கு மேலும் வேறு ஆதாரம் வேண்டுமா?" என்று கேட்டான்.

பீஷ்மர் மீண்டும் ஜரனைப் பார்த்து, "வெள்ளைச் சால்வை அணிந்திருந்த அந்த மனிதன் யாரென்று உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

ஜரன் அக்கூட்டத்தினரை மெதுவாக நோட்டமிட்டான். சகுனியின் முகம் பயத்தில் வெளிறிப் போனது. எல்லாம் திட்டப்படி சென்று கொண்டிருந்தது. தட்சகன் இப்போது எக்கணத்திலும் அந்த மூட்டையைத் திருப்பிக் கொடுத்துவிடுவான். பீமனைக் கொல்லும் எண்ணத்துடன் சகுனி அவனை ஆற்றுக்குள் தள்ளியிருக்கவில்லை. அது அவனுக்குச் சுலபமானதாக இருந்திருக்கும். ஆனால் அதைவிடப் பெரிய லாபம் ஒன்றிற்காக அவன் தன் காயை நகர்த்திக் கொண்டிருந்தான். தன் சகோதரியின் மகன்களுக்கும் பாண்டுவின் மகன்களுக்கும் இடையேயான பகைமையை எல்லோரும் அறிந்திருக்குமாறு செய்ய அவன் விரும்பினான். அந்தத் தீண்டத்தகாதவன் தன்னை அடையாளம் காட்டிவிட்டால், தன் திட்டங்களெல்லாம் தவிடுபொடியாகிவிடும் என்று சகுனி பயந்தான். துரியோதனனின் சால்வையைப் பயன்படுத்தும் எண்ணம் கடைசி நிமிடத்தில் அவன் தன் திட்டத்தில் சேர்த்துக் கொண்டதுதான். ஏனெனில், தான் அந்தச் சால்வையை அணிந்து கொண்டு இருட்டில் பீமனுடன் நடந்து சென்றால், இரவுப் பணியில் இருந்த காவலாளிகள், துரியோதனன்தான் பீமனுடன் காலாற நடந்து கொண்டிருந்ததாக நினைத்துத் தங்களைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவார்கள் என்று சகுனி நினைத்திருந்தான். உண்மையில், 'துரியோதனனும்' பீமனும் அந்த நள்ளிரவு நேரத்தில் அரண்மனையைவிட்டு வெளியே போவதை யாரேனும் ஒரு காவலாளி நிச்சயமாகப் பார்க்க வேண்டும் என்று சகுனி நினைத்தான். ஆனால் ஜரனைப் போன்ற ஒரு சாட்சியை அவன் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கவில்லை.

ஜரனின் கண்கள் துரியோதனனின்மீதும் அவனுக்கே உரிய வெண்ணிறச் சால்வையின்மீதும் நிலைத்தன. ஒட்டுமொத்த அரசவையும் மூச்சடக்கிக் காத்திருந்தது. பீஷ்மர் விதுரனைப் பார்த்தார். விதுரன் மனச்சோர்வுடன் தன் தலையை அசைத்தான். பீஷ்மரின் வார்த்தைகளுக்காக அரசவை எதிர்பார்ப்புடன் காத்திருந்தது. அக்கணத்தில், அரசவையின் மறுகோடியில் ஏதோ ஓர் அமளி ஏற்பட்டது. எல்லோருடைய தலைகளும் அரசவை வாசற்கதவின் பக்கமாகத் திரும்பின. அலைமோதிய கூட்டத்தை ஒருசில காவலாளிகள் விலக்கித் தள்ள முயற்சித்துக் கொண்டிருந்தனர். ஆனால்,

காவலாளிகளுக்கு நடுவே நின்று கொண்டு, அகல விரிந்த கண்களுடனும் ஓர் அசட்டுத்தனமான புன்னகையுடனும் அரசவையை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த பீமனின் பெரிய உருவம்தான் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது.

"இது என்ன . . ." தௌமியன் தன் நாக்கின் நுனியில் நின்ற கெட்ட வார்த்தையைத் தன் உதடுகளைக் கடித்துத் தடுத்து நிறுத்தினான்.

குந்தி தன் மகனை நோக்கி ஓடிச் சென்று, அவனைக் கட்டித் தழுவினாள். அவள் அவனைத் தன் பிடியிலிருந்து விட மாட்டாள்போலத் தோன்றியது. பீமன் மகிழ்ச்சியாகக் காணப்பட்ட அதே சமயத்தில், தர்மசங்கடமாகவும் உணர்ந்தான். அங்கு நிலவிய குழப்பம் அடங்கியவுடன், பீஷ்மர் மீண்டும் பேசினார். பீமன் இரண்டு நாட்களாக எங்கே போயிருந்தான் என்று அவர் அவனிடம் கேட்டார்.

பீமன் அரசவையையும் தன்னைச் சுற்றி எல்லா இடங்களிலும் வெறித்துக் கொண்டிருந்த பகைமை நிறைந்த கண்களையும் பார்த்து நடுங்கினான். கடந்த இரண்டு நாட்களாக அவனுக்கு அருமையான அனுபவங்கள் கிடைத்து வந்திருந்தன. ஆனால் அவை உண்மையான அனுபவங்களா அல்லது போதையால் ஏற்பட்டிருந்த கனவு மயக்கமா என்று அவனுக்கு உறுதியாகத் தெரியவில்லை. அவன் பேசத் துவங்கினான். அவன் கூறிய நம்புதற்கரிய கதையை அந்த அவையின் மேன்மக்கள் ஒருவிதமான வியப்போடும், சந்தேகத்தோடும், இறுதியில் களிப்போடும் கேட்டனர். பீமன் தன் வாயைத் திறந்த நேரத்திலிருந்தே அவன் போதையின் இரும்புப் பிடியில் இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. நாகர்களின் அற்புதமான உலகத்தைப் பற்றி அவன் பேசினான். பிறகு, "இரண்டு இரவுகளுக்கு முன்பு, ஒரு காந்தர்வன் என் கனவில் வந்து, கங்கையின் மேலாகப் பறந்து செல்வதற்கு என்னை அழைத்தான். அவன் எனக்கு ஒரு சிறப்புத் திரவத்தைக் கொடுத்து, அது எனக்கு மாயாஜால சக்திகளைக் கொடுக்கும் என்று கூறினான். நான் அதைக் குடித்தபோது, அந்தக் காந்தர்வன் என்னை ஆற்றுக்குள் தள்ளிவிட்டான். நான் சிறிது நேரம் கங்கையின் மேலாகப் பறந்து சென்று, இறுதியில் பாலும் தேனும் நிறைந்த ஒரு கடலுக்குள் போய் விழுந்தேன். நறுமணம் வீசிய அமுதத்திலிருந்து நாகர்கள் என்னைக் காப்பாற்றித் தங்களுடைய மாயாஜால உலகிற்கு அழைத்துச் சென்றனர். அங்கு நாக அரசனான தட்சகனை நான் பார்த்தேன். அவன் ஓர் அற்புதமான மனிதன். நாகர்கள் உலகில் நான் பல அற்புதமான பெண்களைச் சந்தித்தேன். என் பொழுது இனிமையாகக் கழிந்தது," என்று கூறிய பீமன், அங்கு அப்பெண்களுடன் தான் நடத்திய சல்லாப நாடகங்களைப் பற்றி விலாவாரியாக விவரிக்கத் துவங்கியபோது

பீஷ்மர் பொறுமையிழந்து, கோபத்தில் தன் கைகளைத் தன் இருக்கையின் கைப்பிடிகளின்மீது ஓங்கி அறைந்தார். அது பீமனின் கற்பனைப் பயணத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அவனை நிஜ உலகிற்குள் இழுத்து வந்தது.

பிராமணர்களின் கண்கள் தன்னை நோக்கி எதிர்ப்பை வெளிப்படுத்தியதைப் பார்த்துவிட்டு, தான் என்ன தவறு செய்துவிட்டிருந்தோம் என்று பீமன் வியந்தான். அவனுடைய சகோதரன் தர்மன் அவமானத்தில் தலை கவிழ்ந்து நின்றான். அர்ச்சுனனும் அவனுடைய மற்ற இரு சகோதரர்களும் அவ்வாறே தலை குனிந்து நின்றனர். துச்சாதனன் மற்றும் அசுவத்தாமனின் முகங்களில் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. துரியோதனன் அவர்களை நிம்மதியோடும் பரிதாபத்தோடும் வெறுப்போடும் பார்த்தான். குந்தி தன் உதடுகளைப் பதற்றத்தோடு கடித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று காந்தாரி சிரிக்கத் துவங்கினாள். திருதராஷ்டிரனும் அவளோடு சேர்ந்து கொண்டான். பிறகு அந்த ஒட்டுமொத்த அரசவையும் சிரிப்பில் குலுங்கியது. பீமனின் உதடுகளில் ஒரு புன்னகை மெல்ல அரும்பியது. பிறகு, தௌமியனின் முகம் அவமானத்தில் சிவந்து போனதை அவன் கண்டபோது, அவனுடைய முகம் தீவிரமடைந்தது. விதுரனின் முகம் இன்னும் இறுக்கமாகவே இருந்தது. அவன் சகுனியின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். காந்தார இளவரசனின் முகத்தில் வெளிப்பட்ட நிம்மதி அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்த ஏய்ப்பு நாடகத்தில் இந்த அன்னிய நாட்டவனுக்கு ஏதோ ஒரு பயங்கரமான பங்கு இருந்தது என்று விதுரன் உறுதியாக நம்பினான்.

“பிதாமகரே, என் மகன் களைத்துப் போயிருக்கிறான். தனக்கு ஏற்பட்ட அனுபவங்களால் அவன் அதிர்ச்சியடைந்து இருக்கிறான்,” என்று குந்தி மன்றாடினாள்.

“குந்தி, நீ கூறுவதை நான் ஒத்துக் கொள்கிறேன். அவன் இயல்பு நிலையில் இல்லை,” என்று பீஷ்மர் ஒரு பரிகாசமான நகைச்சுவையுணர்வோடு கூறினார். அரசவையில் இருந்த சிலர் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் வயிறு குலுங்கச் சிரித்தனர். விதுரனின் முகத்தில்கூடச் சிறிது இறுக்கம் குறைந்தது.

தௌமியன் குறுக்கிட்டு, “ஐயா, பீமன் சாவின் விளிம்புவரை சென்று வந்திருக்கிறான். துரியோதனனைக் கண்டு அவன் பயப்படுகிறான். இந்த வழக்கு விசாரணையை நாம் நாளைக்கு வைத்துக் கொண்டால், உண்மைகளை நம்மால் வரவழைக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,” என்று கூறினான்.

விதுரன் அங்கிருந்த மந்திரிசபை உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் ஓலைச் சுவடிகளைப் பெற்றுக் கொண்டு, அவை ஒவ்வொன்றின்மீதும் ராஜ முத்திரையைப் பதித்து, அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரிடம் அவற்றை ஒப்படைத்தான். அவர் அவற்றை ஒவ்வொன்றாகப் பொறுமையாகப் படித்தார். அவற்றில் எட்டுச் சுவடிகளை அவர் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, மீதி இரண்டு சுவடிகளை வேறொரு பக்கம் வைத்தார். பிறகு நிமிர்ந்து பார்த்து, "தௌமியா, பீமன் எந்த போதை மருந்தை உட்கொண்டுள்ளானோ அதற்கான முறிமருந்து இப்போது அவனுக்குத் தேவை. போதை தலைக்கேறியுள்ள ஒருவன் கூறும் கற்பனைக் கதைகளைக் கேட்பதற்கு அரசவைக்கு இப்போது நேரமில்லை. நாளைக்கு எந்த விசாரணையும் நடைபெறப் போவதில்லை. நான் இப்போதே தீர்ப்பு வழங்குகிறேன். நான் கொடுக்கும் அறிவுரையின் பேரில், நம்முடைய மாண்புமிகு அரசர், பொருத்தமான நடவடிக்கை எடுப்பார். இளவரசன் துரியோதனன் அப்பாவி என்று மந்திரிசபை உறுப்பினர்கள் எட்டுக்கு இரண்டு என்று வாக்களித்துவிட்டனர். துரியோதனன்மீது சாட்டப்பட்டுள்ள அனைத்துக் குற்றங்களும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அரசவை இத்துடன் கலையலாம். அரசாங்க விவகாரங்களைப் பற்றி விவாதிப்பதற்காக இச்சபை மீண்டும் நாளை கூடும்."

"அப்படியே ஆகட்டும்," என்று அரசன் திருதராஷ்டிரன் கூறிவிட்டு அரியணையிலிருந்து எழுந்தான். பார்வையற்றத் தம்பதியர் தங்கள் மேடையைவிட்டு இறங்குவதற்கு உதவுவதற்காக அவர்களுடைய உதவியாளர்கள் விரைந்தனர்.

பிராமணர்களிடமிருந்து கோபத்துடன்கூடிய எதிர்ப்புக் கிளம்பியது, ஆனால் தௌமியன் உணர்ச்சிவசப்படாமல் இருந்தான். எப்போது அடக்கி வாசிக்க வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் நேராகப் பாண்டவர்களிடம் நடந்து சென்றான். ஆயிரம் பிராமணர்களுக்கு உணவளிப்பது குறித்து அரசனுக்கு நினைவுபடுத்துவதற்காக ஒருசில பிராமணர்கள் அரசனைப் பின்தொடர்ந்து சென்றனர். களைத்துப் போயிருந்த அரசன் சலிப்போடு அதை ஒத்துக் கொண்டு, தன் மனைவியுடன் தன் அறையை நோக்கி நடந்தான்.

* * *

துச்சாதனனும் அசுவத்தாமனும் துரியோதனனை நோக்கி ஓடிச் சென்று, இளவரசனை மகிழ்ச்சியாகக் கட்டியணைத்தனர். அரசவை காலியானபோது, விதுரன் துரியோதனனின் தோளைத் தட்டி, பீஷ்மர்

அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததாகக் கூறினான். தன் தாத்தா பீஷ்மரிடமிருந்து தனக்குக் கிடைக்கவிருந்த திட்டுக்களை வாங்கிக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு, இளவரசன் துரியோதனன், சோர்ந்து போன இதயத்துடன் விதுரனைப் பின்தொடர்ந்தான். அவன் பீஷ்மரின் தனிப்பட்ட அறைக்குள் நுழைந்தபோது, அங்கு ஒரு விருந்தாளி இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அந்த விருந்தாளி கிட்டத்தட்ட முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தவன்போலத் தோன்றினான். ஆனால் அவனுடைய மிடுக்கும் தன்னம்பிக்கையும் சாந்தமும் அவனுடைய வயதுக்கு மீறியவையாக இருந்தன. பீஷ்மர் அவனை நடத்திக் கொண்டிருந்த விதம், தான் ஒரு முக்கியமான நபரின் முன்னிலையில் இருந்தோம் என்பதை துரியோதனனுக்கு எடுத்துரைத்தது.

இளவரசனைக் கண்டதும் அந்த விருந்தினன் ஒரு புன்னகையுடன் எழுந்து நின்றான். பீஷ்மரும் துரியோதனனை நோக்கித் தன் வலது கையை உயர்த்தி அவனை ஆசீர்வதித்து அவனுடைய வரவை அங்கீகரித்தார். துரியோதனன் பீஷ்மரின் முன் குனிந்து பணிந்துவிட்டு மரியாதையோடு நின்றான். விதுரன் பீஷ்மரின் வலது பக்கம் சென்று நின்று கொண்டான். பீஷ்மர் புன்னகைத்துவிட்டு, "துரியோதனா, இவன் பலராமன். யாதவர்களின் தலைவன். இவன் என்னுடைய நெருங்கிய நண்பன். பேரறிவும் தனித்துவமும் மிக்கவன் இவன். நான் இவனை இங்கு ஒரு வேலையாக வரவழைத்திருக்கிறேன்," என்று கூறினார்.

"ஐயா, உங்களுடைய அன்பான வார்த்தைகளால் நீங்கள் என்னைத் தர்மசங்கடப்படுத்துகிறீர்கள்," என்று பலராமன் ஒரு புன்னகையோடு கூறினான். அவனுடைய புன்னகை அந்த ஒட்டுமொத்த அறையையும் ஒளியூட்டுவதாக இருந்தது. "துரியோதனா, நான் உன்னைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். நான் வெறும் இடையன்தான். நான் ஓர் அரசனல்ல. யாதவர்களிடையே அரசர்கள் யாரும் கிடையாது. எங்களுடையது ஒரு குடியரசு அமைப்பு. மக்கள் என்னைத் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். மக்களின் விருப்பத்தின் பேரில் நான் இப்பதவியில் இருக்கிறேன்."

துரியோதனன் தர்க்கரீதியாக அன்றி, உணர்ச்சிரீதியாகத்தான் மக்களிடம் எப்போதும் நடந்து கொண்டான். யாதவத் தலைவனான பலராமனை அவனுக்கு உடனடியாகப் பிடித்துப் போனது. பலராமனைக் கண்டு இப்போது அவன் ஒளிர்ந்தான்.

"துரியோதனா, காசிக்குச் செல்லும் வழியில் பலராமன் அஸ்தினாபுரத்தைக் கடந்து செல்லவிருந்ததாக விதுரன் என்னிடம்

கூறியபோது, உனக்காக இந்த உதவியை அவனிடம் கேட்கலாம் என்று நான் நினைத்தேன். உனக்குத் தன்னம்பிக்கை இல்லாததும், அதிகாரம் படைத்தவர்களுடன் நீ அடிக்கடிப் பிரச்சனையில் மாட்டிக் கொள்வதும், உன்னுடைய சிற்றப்பாவின் மகன்களுடன் நீ எப்போதும் சண்டையிடுவதும் எனக்குச் சிறிது கவலையளிக்கின்றன. துரோணருக்கும் உன்னை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நீ கட்டுக்கடங்காதவன் என்றும், நீ தன்னை மதிப்பதில்லை என்றும் அவர் கூறுகிறார். துச்சாதனன்மீது இப்படிப்பட்டப் புகார்கள் கூறப்பட்டால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் உன் விஷயத்தில் அது சாத்தியமில்லை. எதிர்காலத்தில் ஒருநாள் நீ இந்த நாட்டை ஆளப் போகிறாய். இப்படிப்பட்டப் பழக்கங்கள் உன்னை ஒரு நல்ல அரசனாக ஆக்காது," என்று பீஷ்மர் வழக்கம்போல விஷயத்திற்கு வந்தார்.

ஓர் அன்னியனின் முன்னால் தான் இவ்வாறு மதிப்புக் குறைவாக நடத்தப்பட்டது குறித்து இளவரசன் துரியோதனன் எரிச்சலடைந்தான். ஆனால் பலராமன் புன்னகைத்துவிட்டு, பீஷ்மரிடம், "ஐயா, நீங்கள் மிகவும் கடுமையாகப் பேசுகிறீர்கள். பல இடங்களுக்கும் பயணம் செய்யும் பாடகர்கள் என்னுடைய புதிய நகரமான துவாரகைக்கு வந்தபோதுதான் முதன்முதலாக நான் துரியோதனனைப் பற்றிக் கேள்விப்பட்டேன். மூன்றாவது பாண்டவ இளவரசனான அர்ச்சுனனின் சிறப்பைப் பற்றி அவர்கள் பாடினர். இப்போது மிகவும் பிரபலமாக இருக்கும் குருநாதர் துரோணர் தன் மாணவர்களின் வில் திறமையைச் சோதிப்பதற்காக நடத்திய சோதனையைப் பற்றி அவர்கள் விவரித்தனர். ஒரு மரத்தின்மீது இருந்த ஒரு கிளியிடம் மாணவர்கள் எதைப் பார்த்தனர் என்று துரோணர் அவர்களிடம் கேட்டதைப் பற்றி அந்தப் பாடகர்கள் கூறினர். தான் அந்தப் பறவையின் கண்ணை மட்டுமே பார்த்ததாக, அதாவது, தன் இலக்கை மட்டுமே பார்த்ததாக அர்ச்சுனன் கூறிய பதில் பிரமிப்பூட்டுவதாக இருந்ததாக எல்லோரும் கூறினர். ஓர் உண்மையான வீரனின் பேச்சு அது. அப்பாடகர்கள் அதை வெகுவாகப் புகழ்ந்தனர். இந்தியாவே பார்த்து பிரமிக்கவிருக்கின்ற ஓர் இளம் வீரன் இறுதியில் நம்மிடையே தோன்றியுள்ளதாக என் சகோதரன் கிருஷ்ணன் எங்கள் அவையில் அறிவித்தான். ஆனால், தான் அந்தக் கிளியின் கண்களில் அன்பைப் பார்த்ததாகக் கூறி அப்பறவையைக் கொல்ல மறுப்புத் தெரிவித்து துரியோதனன் கூறிய பதிலை அந்தப் பாடகர்கள் பரிகாசம் செய்தனர். நான் இந்தக் கதையைக் கேள்விப்பட்டபோது, அர்ச்சுனன் வேண்டுமானால் இந்நாடு விரும்பிய ஒரு மாபெரும் வீரனாக இருக்கலாம், ஆனால் துரியோதனன்தான் இந்நாட்டிற்குத் தேவையானவன் என்று நினைத்தேன்," என்று கூறினான்.

இந்த அசாதாரணமான மனிதனைக் கண்டு துரியோதனன் வெட்கத்தில் முகம் சிவந்தான். துரோணருக்கு அவன் அளித்திருந்த பதில் அவனிடமிருந்து இயல்பாக வந்திருந்தது. ஆனால் அதன் விளைவாக அவன் மற்ற மாணவர்கள் மற்றும் வயதில் மூத்தவர்களின் பரிகாசப் பேச்சிற்குப் பெரிதும் ஆளாக வேண்டியதாயிற்று. அக்கேள்வி தன்னிடம் மீண்டும் கேட்கப்பட்டால் அதே பதில்தான் தன்னிடமிருந்து வரும் என்பதில் அவன் உறுதியாக இருந்தாலும், அந்த நிகழ்வு மறக்கப்பட்டுவிட்டால் நன்றாக இருக்கும் என்று அவன் ஏங்கினான்.

பீஷ்மர் தன் புன்னகையை அடக்க முயற்சித்தார். "பலராமா, இவனை என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. சில சமயங்களில், நான் இளமையில் எப்படி இருந்தேனோ அப்படி நான் அவனில் என்னைப் பார்க்கிறேன். அவன் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகள், அவன் காட்டுகின்ற பரிவு போன்ற குணநலன்கள் என்னைப் பெரிதும் பிரமிக்க வைக்கின்றன. ஆனால் உணர்ச்சிகள் என் அறிவைக் கட்டுப்படுத்த நான் ஒருபோதும் அனுமதித்ததில்லை. நான் பருவ வயதினனாக இருந்தபோதுகூட அதை நான் அனுமதிக்கவில்லை. ஏழைகள் எப்போதுமே அடக்குமுறையால் துன்புறுவர். ஆனால் தங்களைவிட நல்ல நிலையில் இருப்பவர்கள் தங்கள்மீது அனுதாபம் கொண்டிருப்பதுபோல நடிப்பதை அவர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். தரும காரியங்கள் எந்தவொரு விஷயத்தையும் மாற்றாது என்பதையும், நம் அமைப்புமுறையைப் படிப்படியாகத்தான் மாற்ற முடியுமே அன்றி அவசரப்பட்டு அதைக் கவிழ்த்துவிடக்கூடாது என்பதையும் அறிந்து கொள்ளும் அறிவுத் தெளிவு எனக்கு இருந்தது. சாதி அமைப்புமுறையை நான் எப்போதும் வெறுத்து வந்துள்ளேன். ஆனால் விஷயங்களை ஒரு சமநிலையான கண்ணோட்டத்தில் பார்ப்பதில் நான் எப்போதுமே எச்சரிக்கையாக இருந்து வந்துள்ளேன். இவன் உணர்ச்சிவசப்படுபவனாகவும் திருத்தப்பட முடியாதவனாகவும் இருக்கிறான். இவன் சரியான காரணங்களுக்காகத் தவறான மக்களிடம் சண்டையிட்டு, சக்திவாய்ந்த எதிரிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். இது இப்படியே தொடர்வதற்கு என்னால் அனுமதிக்க முடியாது. இவன் அன்பான இதயம் கொண்ட ஒரு முட்டாளாக வளர்ந்து கொண்டிருக்கிறான்.

"பலராமா, இவனை நான் உன்னுடைய கைகளில் ஒப்படைக்கிறேன். இந்த முட்டாளை ஒரு மனிதனாக மாற்றுவதற்கு ஒரு மாதகாலத்தை உன்னால் இவனுக்காகச் செலவிட முடியும் என்று நான் நம்புகிறேன். துரோணர் துரியோதனனிடம் கேட்டக் கேள்வியை என்னிடம் கேட்டிருந்தால், நானும் இவனைப்போலவே

பதிலளித்திருப்பேன். ஆனால் அதோடு நின்றுவிடாமல், அந்தப் பாவப்பட்டக் கிளியின்மீது குறி பார்த்து ஓர் அம்பை எய்து அதன் துன்பத்தை வேகமாக முடிவுக்குக் கொண்டு வந்திருப்பேன்." இவ்வாறு கூறிவிட்டு, பீஷ்மர் அந்த அறையைவிட்டு வெளியேறினார். அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான விதுரன் அவரைப் பின்தொடர்ந்தான்.

மனமகிழ்ந்து போயிருந்த பலராமன் தலையசைத்தபடி அங்கு நின்றான். அதைத் தொடர்ந்து நிலவிய மௌனம் அசௌகரியமூட்டுவதாக இருந்தது. தன்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்த அன்னியனிடம் என்ன கூறுவதென்று தெரியாமல் இளவரசன் துரியோதனன் விழித்தான். 'நான் ஒரு முட்டாள் அல்ல,' என்று அவன் மறுப்புத் தெரிவிக்க விரும்பினான். ஆனால் அது முற்றிலும் உண்மையா என்று அவனுக்கே உறுதியாகத் தெரியவில்லை. அவனுடைய பார்வை, அரண்மனைக்கு வெளியே இருந்த ஒரு முக்கிய வீதியை நோக்கிச் சென்றது. அங்கு ஒருசில வீரர்கள் ஒரு கருப்பு மனிதனை ஒரு காளையை விரட்டுவதைப்போல விரட்டிக் கொண்டிருந்தனர். மக்கள் பயந்து நடுங்கி அவர்களுக்கு வழிவிட்டனர். அவ்வீரர்கள் அந்த மனிதனை ஒரு பிரம்பால் அடித்து வேகமாக நடக்கும்படி கூறினர். அவர்கள் அவனை நெடுஞ்சாலையிலிருந்து விரைவாக அப்புறப்படுத்த விரும்பினர். பரிதாபமான அந்த மனிதன் வலியில் துடித்து அழுதான். "கிருஷ்ணா . . . கிருஷ்ணா . . . என்னைக் காப்பாற்று," என்று கதறினான். வீதியில் இருந்த மக்கள் அவனுடைய வேதனையைக் கண்டு மனமிரங்காமல், அந்தத் தீண்டத்தகாதவன் தவறுதலாகத் தங்களைத் தீண்டி மாசுபடுத்திவிடுவானோ என்று பயந்ததைக் கண்ட துரியோதனன் அதிர்ச்சி அடைந்தான். ஒரு விலங்கைப்போல நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அந்த நபர், தனக்கு எதிராகச் சாட்சியுரைக்க வந்த ஜரன்தான் என்பதை துரியோதனன் அடையாளம் கண்டுகொண்டான்.

"அவன் என் சகோதரன்." தனக்குப் பின்னாலிருந்து வந்த பலராமனின் குரலைக் கேட்டு துரியோதனன் திடுக்கிட்டான். அந்த யாதவத் தலைவனும் துரியோதனன் பார்த்துக் கொண்டிருந்த அதே காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். துரியோதன் ஆச்சரியத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தான். "நான் கூறியது அந்தப் பாவப்பட்டப் பிச்சைக்காரனை அல்ல. அவன் என் சகோதரன் கிருஷ்ணனை வேண்டிப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறான். கிருஷ்ணன் எல்லோரையும் எளிதில் மயக்கக்கூடியவன். சமீபத்தில் அவன் தன்னை ஒரு கடவுள்போலக் காட்டிக் கொள்ளத் துவங்கியுள்ளான். புனித

நூல்களில் கூறப்பட்டுள்ள அவதாரம் அவன் என்று பலர் நம்புகின்றனர்.”

“நீங்கள் அதை நம்புகிறீர்களா?” என்று துரியோதனன் ஆச்சரியத்துடன் கேட்டான். தங்கள் இருவருக்கும் இடையே எப்படியோ ஓர் உரையாடல் துவங்கியிருந்தது குறித்து அவன் நிம்மதியடைந்தான்.

“என்ன . . . என் சகோதரன் கடவுளா? ஹா ஹா! வேடிக்கையாக நடந்து கொள்வது அவனுக்குப் பிடிக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இன்னொரு நிலையிலிருந்து பார்த்தால், ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு கடவுள் இருப்பதாக நான் நம்புகிறேன். எனவே, தான் கடவுள் என்று ஒருவன் கூறிக் கொள்வது பொய்யானது என்று கூறுவதற்கில்லை. அது போகட்டும், பீஷ்மர் உன்னைப் பற்றிக் கூறிய புகார்களில் ஏதேனும் உண்மை இருக்கிறதா?”

பலராமன் இப்படி நேரடியாகக் கேட்டது துரியோதனனைத் தடுமாறச் செய்தது. பலராமனை நம்பலாம் என்று அவனுடைய உள்ளுணர்வுகள் கூறின. துரியோதனனின் மனத்தில் அடைந்து கிடந்த அனைத்து விஷயங்களும் அணையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தன. வன்முறையைத் தான் எதிர்ப்பதாகவும், அது எவ்வாறு தன்னை ஓர் அக்கறையற்ற வீரனாக ஆக்கியிருந்தது என்பது பற்றியும் அவன் பலராமனிடம் கூறினான். மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிப்பதில் பெருமை எதுவும் இருந்ததாகத் தனக்குத் தெரியவில்லை என்று அவன் கூறினான். பாண்டவச் சகோதரர்கள்மீது தான் கொண்டிருந்த வெறுப்பைப் பற்றி அவன் உணர்ச்சிகரமாகப் பேசினான். அவர்கள் இறந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று அவன் மேலும் கூறினான். இது வன்முறைக்கு எதிரான அவனுடைய பேச்சிற்கு முரணாக இருந்தபோதிலும், பலராமன் அதைக் கவனித்ததுபோலத் தெரியவில்லை. துரியோதனன் ஒருவழியாகத் தன் புலம்பலை முடித்துவிட்டு அமைதியாக நின்றான்.

பலராமன் நீண்டநேரம் எதுவும் பேசாமல் இருந்தான். பிறகு அவன் மெதுவாக, “துரியோதனா, உன் பயம்தான் பேசுகிறது. அதை நீ பரிவு என்றும், வன்முறை எதிர்ப்பு என்றும் தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறாய். உன் சிற்றப்பாவின் மகன்களுடைய மேம்பட்டத் திறமைகளையும் உன்னுடைய சொந்தத் தோல்வியையும் கண்டு நீ பயப்படுகிறாய். உன் இதயம் அன்பானது. நீ ஒரு புத்திசாலி. ஆனால் வாழ்வில் பிழைத்திருப்பதற்கும் வெற்றி பெறுவதற்கும் அவ்விரண்டும் மட்டும் போதாது. பாண்டவர்கள் குறித்து உனக்குள் ஏற்பட்டிருக்கின்ற பகைமையுணர்வு உன்னை விழுங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவனுடைய செயல்கள் எவ்வளவுதான் முரண்பட்டவையாக

இருந்தாலும், யாரையும் வெறுக்கத் தேவையில்லை. ஒருவன் செய்யும் செயலை வெறுக்கலாம், ஆனால் அதைச் செய்பவனை வெறுக்காதே. நவீன காலத்தில் நிலவுகின்ற அர்த்தமற்றப் போட்டியை நீ வெறுப்பதாகக் கூறுவது சரியானதுதான். மனிதநேயத்தைக் காவு கொடுத்து பௌதீகச் செல்வங்களைத் தேடி ஓடுகின்ற வாழ்க்கை, உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் துரதிர்ஷ்டவசமாகக் கீழ்மட்டத்தில் இருக்கும் சக மனிதர்கள்மீது காட்டும் அக்கறையின்மை, சாதி, பிரதேச மனப்பான்மை, ஆண் பெண் பாகுபாடு, வன்முறை, வெறி, ஊழல், பொய்யான புகழ்ச்சியின் மூலம் ஆதாரம் தேடுதல், தன் இனத்தாருக்குச் சிறப்புச் சலுகைகள் அளித்தல், தீவிரவாதம் போன்ற, மக்களை இரும்புப் பிடியாகப் பிடித்திருக்கும் விஷயங்களை ஒருவன் கண்டிப்பாக வெறுக்கத்தான் வேண்டும். ஆனால் அது குறித்து நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நீயும் உன்னைப் போன்றவர்களும் சொகுசான அறைகளில் உட்கார்ந்து கொண்டு, விஷயங்கள் மோசமாக இருப்பதாகக் குறைகூறுகிறீர்கள். நீங்கள் ஒப்புக்கு வெறுமனே ஒருமுறை சேரிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஏழைகளுக்கு நீங்கள் ஆதரவு கொடுப்பதாக நினைத்துக் கொள்கிறீர்கள். சமுதாயத்தில் நிலவும் இந்தத் தீமைகள் குறித்து நீ கொண்டுள்ள வெறுப்பைப் பிரகடனப்படுத்தி ஒருசில அறிக்கைகளை வெளியிட்டு, பொது இடங்களில் சிறிது கூச்சல் போட்டு, நீ உண்மையிலேயே நாட்டு நலனுக்காகப் போராடுபவன் என்று உன்னை நீ காட்டிக் கொண்டால் என்ன? சமுதாய அமைப்புமுறையை மாற்றுவதற்கு நீ ஏதேனும் ஒரு திட்டவட்டமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டுவிட்டு, பலராமன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். துரியோதனன் முன்பைவிட அதிகமாகக் குழப்பமடைந்து இருந்ததுபோலக் காணப்பட்டான்.

"இளவரசே, என் பேச்சு உங்களுக்குப் புரியவில்லை, அப்படித்தானே? நான் ஒரு நல்ல பேச்சாளனோ அல்லது குருவோ அல்ல. எனவே நான் எளிமையான வார்த்தைகளில் கூறிவிடுகிறேன். என் வாழ்வில் எனக்கென்று ஒரு குறிக்கோள் இருக்கிறது. விவசாயம் மற்றும் வர்த்தகத்தின் மூலமாக எங்கள் பூமியை மீண்டும் செழிப்படையச் செய்வதுதான் அது. மாபெரும் கடலோடிகளான அசுரர்களின் பாரம்பரியங்களை நாம் தொலைத்துவிட்டோம். நிலத்தை உழுது, மண்ணைப் பொன்னாக மாற்றிய விவசாயிகளான நாகர்களின் பாரம்பரியங்களை நாம் தொலைத்துவிட்டோம். வேட்டையாடுபவர்களாகவும் வெறுமனே ஆடுமாடுகளை மேய்ப்பவர்களாகவும் ஒரு சாதாரணமான வாழ்க்கை நடத்துவதிலிருந்து

என் மக்களை வெகுதூரம் வழிநடத்திச் சென்று, நாம் தொலைத்துள்ள அந்தப் பெருமைகளை நான் மீட்டெடுக்க விரும்புகிறேன். சமூகத் தடைகளும் மதமும் நம் கைகளுக்கு விலங்கிட்டுள்ளன. நான் அந்த விலங்கை உடைத்தெறிய விரும்புகிறேன். ஒரு தனி மனிதனால் எப்படி இவற்றையெல்லாம் செய்ய முடியும் என்று நீ வியக்கக்கூடும். ஆனால் துல்லியமாக நான் அதைத்தான் விரும்புகிறேன். என்னைவிட பிரம்மாண்டமான ஓர் இலக்கு எனக்கு இருக்கிறது. வாழ்வதற்கும் சாதிப்பதற்குமான ஓர் ஆழ்விருப்பத்தால் அது என்னை நிரப்புகிறது. நான் என் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் ரசித்து அனுபவிக்கிறேன். ஒவ்வொரு நொடியும் நான் எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் அடியும் என் குறிக்கோளை நோக்கியே இருப்பதை நான் உறுதி செய்கிறேன். நான் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற அழகான துறைமுக நகரத்திற்கு நீ வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். துவாரகை என் கனவு நகரம்! உனக்கு அப்படிப்பட்ட ஒரு கனவு இருக்கிறதா? உன்னைவிட மிகப் பெரிதான ஒரு கனவு; சாத்தியமற்றதுபோலத் தோன்றுகின்ற அல்லது நினைத்துப் பார்க்கவே நகைப்பிற்கிடமாகத் தோன்றுகின்ற ஒரு கனவு உனக்கு இருக்கிறதா?”

இந்தக் கேள்விக்கு எப்படி பதிலளிப்பது என்று துரியோதனனுக்கு உறுதியாகத் தெரியவில்லை. தனக்கு உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒரு கனவு இருந்ததா என்று அவன் வியந்தான். அவனுடைய யோசனைகள் தெளிவற்றவையாக இருந்தன. அவனுடைய நடவடிக்கைகள் உணர்ச்சிகளால் தூண்டப்பட்டவையாக இருந்தன. குருநாதர் கூறியவற்றையும் புனித நூல்களில் கூறப்பட்டவற்றையும் பற்றி முதலில் கேள்வி எழுப்பாமல் அவற்றைப் பின்பற்ற அவன் மறுத்தான். ஆனால் தன்னை முழுவதுமாக ஆட்கொண்ட ஓர் ஆழ்விருப்பம் தனக்கு இருந்ததா என்று அவனுக்குத் தெரியவில்லை.

இளவரசனின் முகத்தில் தென்படக் குழப்பத்தைக் கண்ட பலராமன் மேலும் தொடர்ந்தான். “துரியோதனா, உனக்கு அப்படிப்பட்ட ஒரு கனவு இருக்கிறதா என்று உனக்கு உறுதியாகத் தெரியாமல் போகக்கூடும். ஆனால் நிச்சயமாக உனக்கு ஒரு கனவு இருக்கிறது. ஆனால் அது என்னவென்று கண்டுபிடிப்பதற்கு உனக்கு வயது போதாது. உன் இதயத்திற்குள் ஒளிந்திருக்கும் அந்தக் கனவைக் கண்டுபிடிப்பதற்கு நான் உனக்கு ஒரு வழிமுறையைக் கொடுக்கிறேன். எது ஒரே நேரத்தில் உனக்கு ஆழ்விருப்பத்தையும் கோபத்தையும் எரிச்சலையும் விரக்தியையும் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் ஏற்படுத்துகிறது? எது உன்னைத் துடிப்பாக உணரச் செய்கிறது?”

துரியோதனன் உடனடியாக, “இன்று அரசவைக்குக் கொண்டு

வரப்பட்ட அந்தத் தீண்டத்தகாதவனைக் கண்டு எனக்குக் கோபமும் எரிச்சலும் மகிழ்ச்சியும் வருத்தமும் ஏற்பட்டது. அவனுடைய நிலைமை எனக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. அவன் எனக்கு எதிராகச் சாட்சி கூறியது எனக்கு எரிச்சலூட்டியது. அவனைப் போன்றவர்கள் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் அவன் மற்றவர்களின் சூழ்ச்சிக்கு இரையாகியிருந்தது எனக்கு வருத்தமளித்தது. எங்களுடைய அழுக்கான வீதிகளையும், நாற்றம் பிடித்தப் பன்றிகளைப்போல அவற்றில் வாழ்கின்ற மக்களையும் பார்க்கும்போது அதே உணர்வுகள் எனக்குள் எழுகின்றன. மக்கள் தொடர்ந்து அவ்வாறு வாழும்படி வைத்திருக்கின்ற எங்கள் அமைப்புமுறையையும் சம்பிரதாயங்களையும் கண்டு நான் கோபம் கொள்கிறேன். மக்கள் விழித்தெழுந்து தங்களுக்காகச் சண்டையிடாமல் இருப்பதைக் கண்டு நான் எரிச்சலடைகிறேன். அதே நேரத்தில், சிரமங்களிலிருந்து விரைவாக மீண்டெழும் அவர்களுடைய திறனைக் கண்டு நான் பிரமிக்கிறேன். எதுவுமே இல்லாத நிலையிலும்கூட, வாழ்வதற்கு ஒரு வழியை எப்படி அவர்களால் தேடிக் கொள்ள முடிகிறது என்பதைக் கண்டு நான் வியக்கிறேன். ஆனால் இது குறித்து என்னால் எதுவும் செய்ய முடியாதது எனக்கு விரக்தியளிக்கிறது. என்னுடைய நாட்டில் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான மக்கள் துயரத்தில் உழன்று கொண்டிருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன்," என்று கூறினான்.

பலராமன் புன்னகைத்துவிட்டு, துரியோதனனின் தோளை ஆதரவாகத் தொட்டான். "இது ஒரு துவக்கம்தான். இந்த உரையாடல் உன் வாழ்க்கையை மாற்றப் போவதில்லை. ஆனாலும், நீ ஓர் ஒளிக் கீற்றைக் கண்டுபிடித்திருக்கிறாய். அது குறித்துச் செயல்படு. துயரமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உன் கனவு உண்மையிலேயே மிகப் பெரிய கனவுதான். அது நகைப்புக்கிடமானதும்கூட. வாழ்வில் அது உனக்கு ஒரு குறிக்கோளைக் கொடுக்கும். தலைசிறந்தவர்கள் பலர் இதற்கு முயற்சித்துத் தோற்றுப் போயுள்ளனர். சாத்தியமற்ற ஏதோ ஒன்றைக் குறித்துக் கனவு காணத் துணியும் மக்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பிறக்கின்றனர். அவர்கள் கச்சிதமான மனிதர்களோ அல்லது கடவுளின் அவதாரங்களோ அல்ல. நிறைகுறைகளோடு கூடிய சாதாரண மனிதர்கள்தான் அவர்கள். முயற்சி செய்த பலர், மயிரிழையில்தான் தோற்றனர். ஆனால் அது அவர்களுடைய சாதனைகளின் பெருமையை மழுங்கடித்துவிடவில்லை. கனவு காண்பதற்கு நானும் என்னைப் பயிற்றுவித்திருக்கிறேன்.

பீஷ்மரும், கடவுள் நம்பிக்கையற்றச் சார்வகனும்கூட அதேபோலத் தங்களைப் பயிற்றுவித்துள்ளனர். எங்களுடைய வழிகள் வெவ்வேறானவை, ஆனால் எங்கள் குறிக்கோள் ஒன்றுதான். எந்தப் பாதை சரி என்று யாருக்குத் தெரியும்? சமாதானம், தியானம், என் மனசாட்சியை வழிநடத்துவதற்கு உதவும் ஓர் உயர்ந்த சக்தியின்மீதான நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய என்னுடைய பாதை சரியானதாக இருக்கலாம். அல்லது, மாற்றம் மெதுவாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், தேவைப்பட்டால் வன்முறையைப் பயன்படுத்துவதில் தவறு இல்லை என்றும் யதார்த்தமாக நடந்து கொள்கின்ற பீஷ்மரின் வழி சரியானதாக இருக்கலாம். அல்லது, கடவுள் இல்லை என்ற சார்வகனின் நம்பிக்கை சரியானதாக இருக்கலாம். மனிதர்கள் ஒருவரையொருவர் நேசித்து மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டு வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற அவருடைய வழி சரியானதாக இருக்கலாம். அல்லது எங்கள் மூவரின் வழிகளுமே தவறானவையாக இருக்கலாம். அது ஒரு பொருட்டே அல்ல. கனவுதான் இங்கு முக்கியம்.”

“நீங்கள் சமாதானத்தைப் பற்றியும் அகிம்சையைப் பற்றியும் பேசுகிறீர்கள். ஆனால் இவ்வுலகில் எல்லா இடங்களிலும் வன்முறை தலைவிரித்தாடுகிறது. அகிம்சைதான் சரியான வழி என்று நானும் நினைக்கிறேன். ஆனால் நான் வன்முறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பீமன் ஒவ்வொரு நாளும் என்னைத் துன்புறுத்துகிறான். நான் ஆயுதங்களை வெறுப்பதால், என்னைத் தற்காத்துக் கொள்ளும் அளவுக்கு அவற்றைப் பயன்படுத்துவதில் நான் போதுமான திறமையை வளர்த்துக் கொண்டிருக்கவில்லை,” என்று பொரிந்து தள்ளிய துரியோதனன், தன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் குறித்து உடனடியாக வருந்தினான். பலராமன் பெரும் ஆர்வத்தோடு கூறியிருந்ததோடு ஒப்பிடுகையில், தான் கூறியிருந்தது சாதாரணமானதுபோலத் தோன்றியதை அவன் உணர்ந்தான்.

பலராமன் அவனைப் பார்த்துப் புன்னகைத்தான். “நாம் வெளியே போகலாம். உன் சகோதரன் துச்சாதனனைக் கூப்பிடு. அசுவத்தாமனையும் கூப்பிடு. ஆயுதங்களில் உனக்கு ஓர் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு பீஷ்மரின் வேண்டுகோள்களில் ஒன்று,” என்று கூறிவிட்டு, பலராமன் அந்த அறையின் கதவை நோக்கி நடக்கத் துவங்கினான்.

இந்தத் திடீர்க் கட்டளையால் துரியோதனன் எரிச்சலடைந்தான். பலராமன் அவனுடைய கேள்விகளுக்கு விடையளித்திருக்கவில்லை. ஆனால் துச்சாதனனும் அசுவத்தாமனும் வெளியே காத்துக்

கொண்டிருந்தனர். துரியோதனன் பலராமனிடம் அவர்களை அறிமுகப்படுத்தியபோது, அவர்கள் உடனடியாக அந்த யாதவத் தலைவன் முன்னால் குனிந்து வணங்கினர்.

"இளைஞர்களே, போய் நல்ல கனமான தண்டாயுதங்களைக் கொண்டு வாருங்கள்," என்று பலராமன் அவர்களுக்கு உத்தரவிட்டான். துச்சாதனன் அவற்றை எடுத்து வருவதற்குப் பெரும் உற்சாகத்துடன் அங்கிருந்து வேகமாக ஓடினான்.

துச்சாதனனும் ஒரு காவலனும் பல்வேறு அளவுகளிலான தண்டாயுதங்கள், ஒருசில வாள்கள் மற்றும் குத்துவாள்கள், சில வில்கள் மற்றும் அம்புகளுடன் திரும்பி வந்தபோது, எல்லோருமாகப் பயிற்சித் திடல்களை நோக்கி நடந்தனர். பலராமன் ஒவ்வோர் ஆயுதத்தையும் தூக்கி அவற்றின் எடையையும் வடிவமைப்பையும் பரிசோதித்துவிட்டு, அஸ்தினாபுரத்தின் ஆயுதங்களின் மேன்மையான கைவேலைப்பாட்டைப் புகழ்ந்தான். பிறகு அவன் ஒரு கனமான தண்டாயுதத்தை எடுத்து இளவரசன் துரியோதனனிடம் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, தன்னுடன் சண்டையிடுமாறு துரியோதனனை அழைத்தான். அதன் பிறகு அவன் விரைவாகத் தன் ஆடைகளைக் களைந்துவிட்டு வெறும் இடுப்புக் கச்சையுடன் நின்றான். துரியோதனனையும் அவன் அவ்வாறு செய்ய வைத்தான். பலராமன் ஒரு காளையைப் போன்ற உறுதியான, கட்டுக்கோப்பான உடலைக் கொண்டிருந்ததையும், தசைகள் அவனுடைய உடல் முழுவதிலும் புடைத்து நின்றதையும் துரியோதனன் கவனித்தான். துச்சாதனனும் அசுவத்தாமனும் பலராமனின் உடற்கட்டைக் கண்ட பிரமிப்பில் மூச்சுவிட மறந்து நின்றனர். பலராமன் தன் கால்களை விரித்து, தன் தண்டாயுதத்தை உயர்த்தி, சண்டைக்குத் தயார் நிலையில் நின்றான். பிறகு, எந்த முன்னறிவிப்புமின்றி, அரண்டு நின்ற துரியோதனனைத் தாக்கினான்.

"முட்டாளே, உன்னைத் தற்காத்துக் கொள்! திருப்பித் தாக்கு! கையைத் தூக்கு . . ." குழம்பிப் போய் நின்ற இளவரசனைப் பார்த்து அந்த யாதவத் தலைவனான பலராமன் கத்தினான். துரோணரிடமிருந்து தான் கற்றிருந்த அனைத்துப் பாடங்களையும் துரியோதனன் நினைவுகூர முயற்சித்தான். ஆனால் பலராமன் தன் தண்டாயுதத்தைக் கொண்டு ஒரு சூறாவளியைப்போல ஈவு இரக்கமின்றி அவனைத் தாக்கினான். ஒரு நிமிடத்திற்குள்ளாகவே, பலராமன் தன் வலிமையான கால்களால் துரியோதனனைத் தரையோடு தரையாகச் சாய்த்துவிட்டிருந்தான். பிறகு அவன் வேடிக்கையாகத் தன் ஆயுதத்தைத் தன் தலைக்கு மேல் உயர்த்தி, அதை மெதுவாகக் கீழே கொண்டு வந்து

துரியோதனனின் தலையின்மீது மென்மையாக வைத்தான். பிறகு அவன் அசுவத்தாமனையும் துச்சாதனனையும் பார்த்தான். ஒரு சிதறுண்ட தலையைக் குறிக்கும் விதமாக அவர்கள் தங்கள் கைகளால் சைகை காட்டிவிட்டு, "டமால்!" என்று உரக்கக் கத்தினர். துரியோதனன் கோபத்துடன் பலராமனின் வலது பாதத்தின்கீழே சிக்கி நெளிந்து கொண்டிருக்க, அவர்கள் தாராளமாகச் சிரித்தனர்.

துரியோதனன் அவர்களைக் கோபமாகப் பார்த்துவிட்டு, அவர்களைச் சபிக்க வாயெடுத்தபோது, அவனுடைய இதயம் கிட்டத்தட்ட அவனுடைய வாய்க்குள் துள்ளிக் குதித்தது. அது பிரமையா அல்லது தான் பார்த்தது உண்மையிலேயே நிஜமானதா என்று அவனுக்கு உறுதியாகத் தெரியவில்லை. அசுவத்தாமனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு, தன்னுடைய நிலைமையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த இளம்பெண்ணை அவன் கண் கொட்டாமல் பார்த்தான். இப்படிப்பட்ட அழகு இந்த உலகத்தில் இருந்ததா என்று அவன் வியந்தான். அவளுடைய கச்சிதமான பற்களையும், ஒளி வீசிய கண்களையும், லேசாக மேல்நோக்கி வளைந்திருந்த சிறிய மூக்கையும், அவளுடைய ரோஜா நிறக் கன்னங்களையும், கச்சிதமான உடலையும் அவன் கவனித்தான். அவனுடைய இதயம் தளர்ந்து போனது. அவளுக்குத் தன்மீது ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படும் அளவுக்குத் தான் அந்தத் திடலில் திறமையாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கவில்லை என்பதை துரியோதனன் உணர்ந்தான். அவளுடைய கண்கள் அவனுடைய கண்களைச் சந்தித்தன. பிறகு, வெட்கத்தில் அவை வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டன.

"துரியோதனா, வன்முறையை நீ வெறுப்பதில் எந்த வியப்பும் இல்லை. வன்முறையின்மைதான் கோழைகளின் முதல் தற்காப்பு," என்று பலராமன் கூறியபோது மற்றவர்கள் சிரித்தனர். "பீமன் ஏன் ஒவ்வொரு முறையும் உன்னைத் தோற்கடிக்கிறான் என்று உனக்குத் தெரியுமா? ஏனெனில் அவன் ஓர் ஆழ்விருப்பத்தோடு சண்டையிடுகிறான். அவனுடைய ஆழ்விருப்பம் சுயநலமானதாக இருக்கலாம், அல்லது அவன் உன்னை வெற்றி கொள்ள விரும்பக்கூடும், அல்லது தன் உயர்வான திறமையை நிரூபிக்க விரும்பக்கூடும். எது எப்படியோ, அவன் ஆழ்விருப்பத்தோடு சண்டையிடுகிறான். நீ அவனை வீழ்த்த விரும்பினால், அவனைவிட அதிகமான ஆழ்விருப்பத்துடன் நீ சண்டையிட வேண்டும். உன் ஆழ்விருப்பம் எவ்வளவு அதிகமானதாக இருக்கிறதோ, நீ அவ்வளவு அதிகச் சிறப்பாகச் சண்டையிடுவாய். நான் உனக்கு ஒரு 'மந்திரத்தை'க் கொடுக்கிறேன். இன்று அந்தத் தீண்டத்தகாத ஏழையைப் பார்த்தபோது

நீ எவ்வாறு உணர்ந்தாய் என்று நீ என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தாய் அல்லவா? நீ ஏதாவது ஒன்றைச் செய்யும் ஒவ்வொரு முறையும், அவனுடைய முகத்தைக் கற்பனை செய்து கொள். அந்த ஏழையின் முகம் உன்னுடைய சாத்தியமற்றக் கனவை உனக்கு நினைவுபடுத்தட்டும். நீ ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்கு முன்பும், அது அந்த ஏழையையும் அவனைப் போன்ற எண்ணற்றோரையும் எவ்வாறு பாதிக்கும் என்று சிந்தித்துப் பார். புகழுக்காகச் சண்டையிடுவது என்பதும் ஓர் ஆழ்விருப்பம்தான். ஆனால் அதிகாரமற்ற, பேசுவதற்கு உரிமையில்லாத, சூதுவாதற்ற, ஏழைகளுக்காகச் சண்டையிடுவது உன் நரம்பு நாளங்களிலெல்லாம் நெருப்பை வார்த்து, உன்னுடைய தசைகளுக்கு அளப்பரிய சக்தியைக் கொடுக்கும். பிறகு நீ தனியாக இருக்க மாட்டாய். இந்த ஒட்டுமொத்த உலகமும் உன் உதவிக்கு வரும். அப்போது யாரால் உன்னைத் தடுக்க முடியும்? இப்போது எழுந்து நின்று ஓர் ஆண்மகனைப்போலச் சண்டையிடு," என்று கூறிய பலராமன், துரியோதனனின் மார்பின்மீதிருந்து தன் காலை உயர்த்தி, அவன் எழுந்திருப்பதற்கு உதவினான். துரியோதனனைப் பார்த்து அந்த இளம்பெண் ஒரு லேசான சிரிப்பை உதிர்த்தாள். துரியோதனன் வெட்கத்தில் முகம் சிவந்தான். "இப்போது இதைத் தடுத்து நிறுத்து!" என்று கத்திக் கொண்டே, பலராமன் துரியோதனை வேகமாகத் தாக்கினான். துரியோதனன் நிலைதடுமாறி மீண்டும் கீழே விழுந்தான்.

இப்போது அவனுடைய நண்பர்களும் அந்தப் பெண்ணும் வயிறு குலுங்கச் சிரித்தனர். தன் ரத்தம் அவமானத்தால் கொதித்ததை துரியோதனன் உணர்ந்தான். அவனுடைய கண்கள் அப்பெண்ணின் கண்களைச் சந்தித்தபோது, தன்னுள் ஆவேசம் நுழைந்திருந்ததை அவன் அறிந்தான். பலராமனின் அடுத்த அடியை அவன் விரைவாகத் தடுத்துத் தங்கள் இருவரையுமே ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினான். பலராமன் புன்னகைத்துவிட்டுத் தன் உத்திகளை மாற்றினான். துரியோதனன் ஆழ்விருப்பத்தோடு சண்டையிட்டு, அந்தப் பெண்ணின் மனத்தைக் கவர்வதில் தீவிரம் காட்டினான். மீண்டும் அவனைத் தரையோடு தரையாகச் சாய்ப்பதற்கு அந்த யாதவத் தலைவனுக்குக் கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்கள் பிடித்தது. இப்போது பலராமன் களைத்துப் போய் மூச்சிறைத்துக் கொண்டிருந்தான். சிறப்பாகச் செதுக்கப்பட்டிருந்ததுபோலக் காணப்பட்ட அவனுடைய உடலின்மீது வியர்வை முத்துக்கள் ஒளிர்ந்தன. துரியோதனன் அவனுடைய சக்திவாய்ந்த பாதத்திற்கு அடியில் புழுவாக நெளிந்து கொண்டு விழுந்து கிடந்தான்.

“துரியோதனா, இம்முறை நீ முன்பைவிடச் சிறப்பாகச் சண்டையிட்டாய். ஆனால் உன்னுடைய ஆழ்விருப்பத்திற்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தது உன்னுடைய பெரிய கனவுதானா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. எழுந்து வா! என் சகோதரி சுபத்திரையை நான் உனக்கு அறிமுகப்படுத்தி வைக்க விரும்புகிறேன். சுபத்திரா, இது அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனான துரியோதனன். தயவு செய்து உன்னுடைய குறும்புத்தனத்தை இவனிடம் வைத்துக் கொள்ளாதே. இவன் பிழைத்துப் போகட்டும்.” பலராமன் துரியோதனனின்மீதிருந்து தன் பாதத்தை அகற்றிவிட்டு, தன் சகோதரியின் அழகான தலைமுடியின்மீது பாசத்தோடு தன் பெரிய கையை வைத்தான்.

‘உலகிலேயே மிகவும் அழகான பெண்ணிடம் அறிமுகப்படுத்தி வைக்கப்படுவதற்கு எப்பேர்ப்பட்ட ஒரு நிலை இது!’ என்று துரியோதனன் நொந்து கொண்டே, தான் இருந்த தாறுமாறான நிலையிலிருந்து எழுந்தான். வெறும் இடுப்புக் கச்சையுடன் இருந்த அவன், புன்னகைத்தபடியே, முடிந்த அளவுக்குத் தன்னைச் சிறப்பாகக் காட்டிக் கொள்ள முயற்சித்தான். கிட்டத்தட்ட நிர்வாணமாக இருந்த அவன், அந்தப் பெண்ணின் முன்னால் கூச்சத்தோடு நின்றான். அவனுடைய சகோதரனும் நண்பனும் முட்டாள்களைப்போலப் பல்லிளித்தபடி நின்று கொண்டிருந்ததும் அவனுக்கு எந்த விதத்திலும் உதவவில்லை. அவனுடைய தோளில் ரத்தம் கட்டிப் போயிருந்தது. அவன் தன் காயத்தைத் தொட்டுப் பார்க்க விரும்பினான், ஆனால் அது ஆண்மைக்கு அழகல்ல என்று அவள் நினைத்துவிடுவாளோ என்று அவன் யோசித்தான். அவள் அவனை நோக்கி வரத் துவங்கியபோது, ஒளி வீசிய அவளுடைய கண்களை அவன் வாய் பிளந்து பார்த்து நின்றான்.

சுபத்திரை அவனுடைய காயப்பட்டத் தோளை மென்மையாகத் தொட்டுவிட்டு, “என் சகோதரன் ஒரு முரடன். அண்ணா, இந்தப் பாவப்பட்ட இளவரசனை நீ என்ன செய்து வைத்திருக்கிறாய் என்று பார்,” என்று கூறினாள்.

துரியோதனன் உச்சிமுதல் உள்ளங்கால்வரை வெட்கப்பட்டான். அவனுடைய தொண்டை வறண்டு போனது.

“துரியோதனா, அவளிடம் எச்சரிக்கையாக இருந்து கொள். அவள் ஒரு மாயக்காரி. இப்போது நீங்கள் எல்லோரும் இங்கிருந்து செல்லுங்கள். பீஷ்மருடன் நான் சில முக்கியமான விஷயங்களைக் கலந்து பேச வேண்டியுள்ளது. நாளைக்கு இதே நேரத்தில் நாம் நம் பயிற்சியைத் தொடரலாம்,” என்று கூறிய பலராமன் தன் ஆடைகளை

அணிந்து கொண்டே அசுவத்தாமனையும் துச்சாதனனையும் பார்த்து, "உங்களுக்கு விருப்பமிருந்தால் நீங்களும் எங்களோடு சேர்ந்து கொள்ளலாம்," என்று கூறினான். பிறகு தன் அழகான சகோதரியை அந்த மூன்று இளைஞர்கள் மத்தியில் விட்டுவிட்டு அங்கிருந்து நடந்தான்.

துரியோதனன் தர்மசங்கடத்துடன் நின்றான். அவனுடைய இயல்பான கூச்சம் அவனுடைய இதயத்தில் ஏற்பட்டிருந்த இனிமையான உணர்வுடன் போராடிக் கொண்டிருந்தது. சாதாரணப் பேச்சில் துரியோதனனுக்கு அவ்வளவு அனுபவம் இருக்கவில்லை. துச்சாதனன் அவளுடைய கையைப் பிடித்து, "அழகான வளையல்கள்!" என்று கூறினான்.

"என்னைத் தொடாதே!" என்று சுபத்திரை வெடுக்கென்று கூறினாள். ஆனால் அவள் தன்னுடைய முகத்தில் தோன்றிய புன்னகையை மறைப்பதற்கு முன்பு துரியோதனன் அதை எப்படியோ பார்த்துவிட்டான்.

துச்சாதனன் ஒரு கணம் செய்வதறியாமல் தடுமாறினான். பிறகு வழக்கம்போல அவன் அதிலிருந்து மீண்டான். பெண்களைக் கவர்வதில் அவன் மிகவும் திறமை படைத்தவனாக இருந்தான். நிராகரிப்பு என்ற சொல் அவன் அகராதியிலேயே இருக்கவில்லை. அசுவத்தாமன் ஒரு வில்லையும் அம்பையும் எடுத்து, தூரத்தில் இருந்த ஒரு மரத்தைக் குறி பார்த்தான். மிகத் திறமையான வில் வித்தைக்காரனான அவன் கச்சிதமாகத் தன் இலக்கைக் குறி பார்த்துத் தாக்கிவிடுவான் என்பதை துரியோதனன் அறிந்திருந்தான். இப்படிப்பட்ட ஒரு திறமைக்கு எந்தவொரு பெண்ணாலும் மயங்காமல் இருக்க முடியாது என்பதை உணர்ந்த துரியோதனன் மனம் தளர்ந்தான். தன்னுடைய எதிரிகளுக்குத் தான் எந்த விதத்திலும் இணையானவன் அல்ல என்பது அவனுக்குத் தெரியும். என்ன கொடுமை! இந்தப் பெண்ணை ஒருசில நிமிடங்களுக்கு முன்னால்தான் தான் சந்தித்திருந்தோம், ஆனால் அதற்குள் தன் சகோதரனையும் தன்னுடைய சிறந்த நண்பனையும் தன்னுடைய எதிரிகளாகத் தான் கருதிக் கொண்டிருந்தோம் என்பதை அவன் உணர்ந்தான்.

"துச்சாதனா, அசுவத்தாமா, நான் இளவரசன் துரியோதனனுடன் ஒருசில விஷயங்களைப் பற்றிக் கலந்து பேச வேண்டியுள்ளது. நீங்கள் இருவரும் இங்கிருந்து போகலாம்," என்று எந்தப் பதற்றமும் இன்றிக் கூறிவிட்டு, சுபத்திரை, துரியோதனனின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து நகரத் துவங்கினாள்.

துரியோதனன் மயக்கத்தில் இருந்தவன்போல அவளுடன் ஒருசில

அடிகள் எடுத்து வைத்தான். பிறகு திடீரென்று, தான் இன்னும் வெறும் இடைக்கச்சையோடு மட்டுமே இருந்ததை அவன் உணர்ந்தான். வெட்கத்தில் அவன் அப்படியே நின்றுவிட்டான். சுபத்திரை ஒரு கேள்விக்குறியோடு தன் அழகான புருவங்களை உயர்த்தினாள். துரியோதனன் தன்னுடைய ஆடைக் குவியலை ஏக்கத்தோடு பார்த்தான். அவள் வாய்விட்டுச் சிரிக்கத் துவங்கினாள். துரியோதனன் தன் ஆடைகளை எடுக்க வேகமாக ஓடினான், ஆனால் அசுவத்தாமனும் துச்சாதனனும் ஒருவரையொருவர் பார்த்துவிட்டு, அந்தக் குவியலின்மீது முதலில் பாய்ந்தனர். ஆனால் துரியோதனனுடைய தேவை அதிகத் தீவிரமானதாக இருந்ததால், அவன் அவர்களை முந்திக் கொண்டு, எப்படியோ தன் வேட்டியைப் பற்றினான். ஆனால் அசுவத்தாமன் அவனுடைய சால்வையை எடுத்துக் கொண்டான்.

சுபத்திரை லேசாகத் தலையாட்டிவிட்டு, "துரியோதனா, அவற்றை விட்டுவிட்டு என்னோடு வாருங்கள்," என்று கூறினாள்.

அவளைப் பார்ப்பதா அல்லது பல்லிளித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த தன் சகோதரனையும் நண்பனையும் எதிர்கொள்வதா என்று ஒரு முடிவுக்கு வர முடியாமல், துரியோதனன் தன் வேட்டியைத் தாறுமாறாக அணிந்தான். அது எங்கேயாவது அவிழ்ந்து கீழே விழுந்து மீண்டும் தனக்கு மானக்கேட்டை உருவாக்கிவிடாமல் இருக்கும் விதத்தில் இறுதியில் ஒருவழியாக அதை இறுக்கிக் கட்டினான். பிறகு சுபத்திரையை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினான். அசுவத்தாமனிடமிருந்து ஒரு லேசான விசில் சத்தம் வந்தது. துச்சாதனன் தன் கண்களை உருட்டினான். துரியோதனன் ஒரு மாயக்கட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தவன்போல சுபத்திரையைப் பின்தொடர்ந்து சென்றபோது, அசுவத்தாமன் துச்சாதனனிடம், "வெறும் இரண்டு நிமிடங்களுக்குள்ளாகவே தன் தோழர்களான நம்மை அவன் மறந்துவிட்டான். அவன் ஒரு மோசக்காரன்," என்று கூறியது அவனுடைய காதுகளில் விழுந்தது.

"முட்டாள்!" என்று துச்சாதனன் தன் சகோதரனைப் பார்த்து வெறுப்போடு கூறினான்.

அவர்களுடைய குரல்களில் தொனித்தப் பொறாமையைக் கேட்டு துரியோதனன் புன்னகைத்தான். அவன் சுபத்திரையின் அழகான முகத்தைப் பார்த்தான். பிறகு அவனுடைய பார்வை தானாகவே அவளுடைய உடல் நெடுகிலும் பரவிப் படர்ந்தது. இப்படிப்பட்ட ஓர் அழகு வடிவத்தை அவன் கோவில் சிலைகளில் மட்டுமே பார்த்திருந்தான். தன் கையைப் பிடித்திருந்த அவளுடைய நீண்ட விரல்களும், அவளுடைய வழுவழுப்பான தோள்களும், நீண்ட கூந்தலும்

அவனைக் கிறங்கடித்தன. துரியோதனன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். முதல் காதல் இவ்வளவு இனிமையாக இருக்கும் என்று அவன் ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

13

தர்மவீரன்

காற்று மிகவும் சூடாகவும் ஈரத்தன்மையுடனும் இருந்தது. ஆனால் சுற்றிச்சூழ இருந்த, மனத்தைக் கிறங்கடிக்கும் அழகை அது எவ்விதத்திலும் குறைக்கவில்லை. கிழக்கில், நெடிதுயர்ந்த பிரம்மாண்டமான நீல மலைகள் வானத்தை முத்தமிட்டன. பச்சைப் பசேலென்றிருந்த பள்ளத்தாக்குகள் தம் பனிப்போர்வைக்குள் உறங்கிக் கிடந்தன. ஒரு குறுகலான நிலப்பரப்பின்மீது வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கிக் கிடந்த விதம், இயற்கை தன்னுடைய தாய்மைத் திறனைக் கொண்டாடிக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. உயரமான தென்னை மரங்கள், வளைந்து சென்ற ஆறுகளுக்கும் வசீகரமான கழிமுகங்களுக்கும் பக்கத்தில் காவலர்களைப்போல மிடுக்காக நின்றன. அடர்ப்பச்சை நிறக் கடல் ஒன்று, கதிரவனின் ஒளிக்கற்றைகள் முத்தமிட்டக் கடற்கரைகளைத் தொட்டுத் தழுவியது. மெல்லிய தென்றல் காற்று அசுரத்தனமான மரங்களின் குளுமையான நிழலில் கண்ணாமூச்சி விளையாடியது.

பரந்து விரிந்த பண்டைய துறைமுக நகரமான முசிறி விழாக்கோலம் பூண்டிருந்தது. விந்திய மலைத்தொடர்களுக்குத் தெற்கே இருந்த நிலங்களை ஆண்ட மாபெரும் அசுர அரசர்கள் அனைவரும் ஒரு மாபெரும் நிகழ்விற்காக இங்கு கூடியிருந்தனர். எல்லோரும் பெரும் பொக்கிஷமாகக் கருதிய தர்மவீரன் என்ற பட்டத்தை யார் வெல்வார்கள் என்பது அன்று தீர்மானிக்கப்படவிருந்தது. தற்காப்புக் கலைகளில்

தனித்துவமாகத் திகழ்ந்தவனுக்கு அந்தப் பட்டம் வழங்கப்பட்டது. அந்தப் பட்டத்தைப் பெறுவதற்கு முன், போர்க்கலையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு கடுமையான போட்டிக்கு அவன் உட்பட்டாக வேண்டும். பிராமணச் சமுதாயத்தையும் சத்திரிய சமுதாயத்தையும் சேர்ந்த வீரர்கள், ஆறு வருடத்திற்கு ஒருமுறை, பூரண நதிக்கரையின்மீது அமைந்த பிரம்மாண்டமான திடலில் ஒன்றுகூடி, தங்களிடையே யார் மிகவும் ஆற்றல் வாய்ந்த வீரன் என்பதைத் தீர்மானித்தனர். பரதகண்டம் நெடுகிலும் இருந்த அனைத்துப் பேரரசுகளிலிருந்தும் வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டபோதிலும், பரசுராமனின் சீடர்கள்தான் ஒவ்வொரு முறையும் அந்தப் பட்டத்தை வென்றனர்.

விந்திய மலைகளின் தெற்கே அமைந்த அனைத்துப் பேரரசுகளுக்கும் பரசுராமன்தான் ஆன்மீக குருவாக இருந்தான். அவன் ஓர் அரசன் அல்ல, ஆனால் அவன்தான் யார் அரசனாக வேண்டும் என்பதைத் தீர்மானித்தான். மத விஷயங்களிலும் அரசியல் விவகாரங்களிலும் அனைத்து அசுர அரசர்களும் அவனுடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். அனைத்துத் துயரங்களுக்கும் அவனுடைய குடும்பம்தான் காரணம் என்று கூறினால் மிகையாகாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பரசுராமனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பேராற்றல் வாய்ந்த அசுரப் பேரரசைத் தரைமட்டமாக்கியிருந்தனர். மகாபலி மற்றும் ராவணனின் வீழ்ச்சிக்குப் பிறகு, முதல் பரசுராமன், முன்பொரு காலத்தில் பெருமிதத்தோடு வாழ்ந்த அசுர இனத்தின் உத்வேகத்தையும் உற்சாகத்தையும் சுக்குநூறாக நொறுக்கியிருந்தான். இப்போது அசுர அரசர்கள் பார்கவ பரசுராமன் மற்றும் அவனுடைய ஆட்களுக்கு முன் மண்டியிட்டனர். காலப்போக்கில், பரசுராமன்கள், பரதகண்டம் நெடுகிலும் அமைந்த பல பேரரசுகளுக்குள் புகுந்து சுமார் அறுபத்து நான்கு அதிரடித் தாக்குதல்களை நடத்திச் சூறையாடியிருந்தனர். தங்களுக்குக் கீழ்ப்படியாத அரசர்களின் தலைகளை அவர்கள் வெட்டிச் சாய்த்தனர். ரத்தக்களரியில் முடிந்த இந்தத் தாக்குதல்களின் விளைவாக, மக்கள் கூட்டங்கூட்டமாகக் கொன்று குவிக்கப்பட்டதோடு, பல இனங்களும் வேரோடு அழிக்கப்பட்டன. தேவர்கள், அசுரர்கள், நாகர்கள், காந்தர்வர்கள், மற்றும் பலர், பரசுராமனின் கொடுங்கோன்மையை எதிர்கொண்டிருந்தனர். பரதகண்டம் நெடுகிலும் தங்களுடைய மதத்தைப் பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்ட தற்போதைய பரசுராமனும் அவனுக்கு அடிபணிந்து நடந்து கொண்ட அசுர அரசர்களும், தேவகுலத்தைச் சேர்ந்த இந்திரனைக்கூட ஆட்சியிலிருந்து

தூக்கியெறிந்திருந்தனர். தேவகுலத்தின் கடைசி இந்திரன் ஒரு பலவீனமான அரசனாக இருந்தான். மேல் கங்கையின் கரைகளின்மீது அமைந்த ஒரு சிறிய பகுதியை அவன் ஆண்டு வந்தான். இப்போது பரசுராமனின் பெயர் குறிப்பிடப்பட்டாலே எல்லோரும் அஞ்சி நடுங்கி, அடங்கி ஒடுங்கினர். பரதகண்டத்திலேயே தான்தான் மிகச் சிறந்த வீரன் என்றும், மிகச் சிறந்த தளபதி என்றும் எல்லோரும் தன்னை அங்கீகரிக்க வேண்டும் என்பதே பரசுராமனுக்கு முக்கியமானதாக இருந்தது.

ஆனால் சாதி அமைப்புமுறையின் பிடி தளர்வதையும் பரவலான மாற்றத்தையும் தன்னுடைய இனத்தின் சார்பில் அவன்தான் முதன்முதலில் பார்க்க வேண்டும் என்று அவனுக்கு விதிக்கப்பட்டிருந்தது. தன்னுடைய மூதாதையர்தான் ஒழுங்கங்கெட்டத் தெற்கத்திய மக்களுக்குக் கலாச்சாரத்தையும் மதத்தையும் கொண்டு வந்து, நான்கு குலங்கள் மற்றும் இந்துமத விதிகளின் மதிப்பை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர் என்று அவன் பெருமிதம் கொண்டிருந்தான். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், தெற்கு மெல்ல மெல்ல அவனுடைய கட்டுப்பாட்டின்கீழ் வந்து கொண்டிருந்தபோது, வடக்கு அவனுடைய பிடியிலிருந்து நழுவிச் செல்லத் துவங்கியது. வடக்கில் கோலோச்சத் துவங்கியிருந்த சீர்த்திருத்தங்களை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. முன்பொரு காலத்தில் தன்னுடைய வகுப்பில் சக மாணவனாகவும் தன் நண்பனாகவும் இருந்த பீஷ்மரை அவன் வெறுத்தான். தாங்கள் மாணவர்களாக இருந்தபோது, தன் தந்தை தங்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்த கொள்கைகளை பீஷ்மர் நிராகரித்துவிட்டது குறித்து அவன் கடுங்கோபம் கொண்டான். பீஷ்மர் கீழ்ச்சாதியைச் சேர்ந்த விதுரனை அஸ்தினாபுரத்தின் பிரதம மந்திரியாக ஆக்கியிருந்ததை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அஸ்தினாபுரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த மாற்றங்கள் குறித்தத் தகவல்கள் எப்போதும் தன்னை வந்தடைவதற்குப் பரசுராமன் ஏற்பாடு செய்திருந்தான். அவனுக்குக் கிடைத்தத் தகவல்கள் பல இரவுகள் அவனைத் தூங்கவிடாமல் செய்தன. சீர்த்திருத்தங்களால் பிராமணர்கள் இழந்து கொண்டிருந்ததை மீட்டெடுப்பதற்கு அவன் தன்னுடைய மிகச் சிறந்த மாணவனான கிருபனை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பி வைத்திருந்தான். ஆனால் கிருபன் ஒரு நம்பிக்கைத் துரோகியாக மாறியிருந்தான். புரோகிதர்களின் அறிவுரையைச் செவிமடுக்கவும் தங்கள் மதத்திற்கு மரியாதை கொடுக்கவும் தயாராக இருந்த அரசர்களை துரோணராவது உருவாக்குவார் என்று அவன் ஒரு லேசான நம்பிக்கைக் கொண்டிருந்தான். ஆனால் அவன் துரோணரையும் முழுமையாக

நம்பவில்லை. பரசுராமனின் உளவாளியான தௌமியன் அவனுக்குத் தவறாமல் தகவல்களை அனுப்பி வந்தான். சமீப காலமாக அவனுக்குக் கிடைத்து வந்திருந்த தகவல்கள் அவனை மேலும் மேலும் கவலைக்கு உள்ளாக்கின. அஸ்தினாபுரத்திற்குப் பிறகு, வடக்கில் இருந்த இன்னொரு சிறிய அரசு அவனுடைய பிடியிலிருந்து நழுவிக் கொண்டிருந்தது. அவனுடைய செல்வாக்கு அங்கு ஆட்டம் காணத் துவங்கியிருந்தது. யாதவர்களின் இளம் தலைவனான பலராமன் ஒரு பெரிய தலைவலியாக மாறிக் கொண்டிருந்தான். புரோகிதர்களின் கட்டளைகளைத் துணிந்து ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கடல்வழி வாணிகத்தை அவன் மீண்டும் துவக்கியிருந்தான். துவாரகை நகரம் முசிறியை வேகமாகப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இத்துணைக்கண்டத்தின் மிக முக்கியமான துறைமுக நகரமாக ஆகிக் கொண்டிருந்தது. பரசுராமனின் போர்த்தளவாடங்கள் பலவீனமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இழப்பதற்குத் தங்களிடம் எதுவும் இல்லாத ஏழைகளையும் தாழ்ந்த சாதியினர் அனைவரையும் கவர்ந்திழுத்தத் தட்சகனின் போராளிகளைப் பரசுராமன் முற்றிலும் வெறுத்தான். அவர்கள் ஒரு தொந்தரவாக அமையக்கூடும், ஆனால் அஸ்தினாபுரத்தின் பேராற்றல்மிக்கப் படைகளுக்கும் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் பேராற்றல்மிக்கப் படைகளுக்கும் தட்சகனின் கீழ்ச்சாதிக் கொள்ளையர் கூட்டம் ஒருபோதும் இணையாகாது என்பதை அவன் அறிந்திருந்தான்.

பாண்டவச் சகோதரர்கள் பிராமணர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தபோதிலும், அரியணையைக் கைப்பற்றுவதற்கான அவர்களுடைய தகுதி மிகவும் பலவீனமாக இருந்தது. பட்டத்து இளவரசனான துரியோதனன் இன்னொரு பீஷ்மராக ஆவதற்கான அனைத்து அறிகுறிகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய பொறுப்பற்றத் தன்மையும் அசட்டுத் துணிச்சலும் அவனை அதிக ஆபத்தானவனாக ஆக்கிக் கொண்டிருந்தன. கடவுள் தனக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருந்ததாகவும், தன்னுடைய மூதாதையர் பல தலைமுறைகளாக மிகக் கடினமாகப் போராடி உருவாக்கியிருந்த அனைத்தையும் தொலைத்த ஒரு மனிதனாகத் தன் பெயர் வரலாற்றில் தங்கிவிடும் என்றும் பயந்த பரசுராமன் தனிமையில் கடவுளிடம் புலம்பினான். தன் நேசத்திற்குரிய பூமியை, பீஷ்மர், பலராமன் போன்ற சீர்திருத்தவாதிகளின் கைகளில் ஒப்படைப்பது பெரும் சீரழிவாக அமையும் என்று அவன் பயந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லாததும் இந்த நேரத்தில் அவனுக்கு உதவவில்லை. அவனுடைய

வம்சத்தை அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்ல அவனுக்கு ஒரு வாரிசு இருக்கவில்லை. எல்லாவற்றையும் இழப்பதற்கு முன்பாக அஸ்தினாபுரத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றுவது அவனுக்கு முக்கியமானதாக இருந்தது. விளையாட்டை மாற்றியமைக்கக்கூடிய ஒருவன் அவனுக்குக் கண்டிப்பாகத் தேவைப்பட்டான்.

பரசுராமனின் முன்னால் நின்று கொண்டிருந்த வசீகரமான இளைஞன்தான் இப்போது அவனுடைய ஒரே நம்பிக்கையாக இருந்தான். அந்த இளைஞனின் முகம், காலையில் உதயமாகிக் கொண்டிருக்கும் சூரியனைப்போல ஒளி வீசுவதாக இருந்தது. அவனுடைய பொன்னிற வடிவத்தையும், பரந்த தோள்களையும், பளபளப்பான காதணிகளையும், அவன் அணிந்திருந்த மார்புக் கவசத்தையும் பரசுராமனின் கண்கள் நோட்டமிட்டன. அந்த இளைஞன் எப்படிப் பார்த்தாலும் ஒரு வீரனைப்போல இருந்தான். அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த ஓர் ஏழை பிராமணச் சிறுவனால் எப்படி ஒரு வீரனைப்போல இருக்க முடியும் என்று வியந்த அவன், 'இளமையில் ஒருவேளை நான்கூட இப்படித்தான் இருந்தேன் போலும்,' என்று நினைத்துத் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான். கிருபர், துரோணர், மற்றும் பல வீரர்களுக்கு அவன் பயிற்சியளித்திருந்தான். ஆனால் இந்த இளைஞன் அளவுக்குத் திறமையான அல்லது தணியாத விருப்பம் கொண்ட எவரையும் பரசுராமன் அதுவரை பார்த்திருக்கவில்லை. பிராமணர்களால் மட்டுமே இப்படிப்பட்டத் தனித்துவமான ஆண்மக்களைப் படைக்க முடியும் என்று பரசுராமன் நினைத்தபோது, அவனுடைய நெஞ்சு பெருமிதத்தால் விம்மியது. 'அந்த முட்டாள்தனமான சீர்திருத்தவாதிகள் அனைவரும், ஆண்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்ற, என் முன்னால் நின்று கொண்டிருக்கின்ற இந்த இளைஞனைப் பார்க்க வேண்டும். சாதி அடுக்கதிகார அமைப்புமுறையில் எந்த அர்த்தமும் இல்லை என்று அதன் பிறகு அவர்கள் ஒருபோதும் கூற மாட்டார்கள்,' என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

பரசுராமன் அவனுக்கு எட்டு வருடங்களாகக் கொடுத்து வந்திருந்த தீவிரமான பயிற்சியின் உச்சகட்டம் அது. இந்த இளைஞனை ஒரு சிறுவனாகத் தன் காவலாளிகள் முதன்முறையாகத் தன் அரண்மனைக்குக் கொண்டு வந்திருந்த நாள் இன்றும் பரசுராமனுக்கு நன்றாக நினைவிருந்தது. கப்பல் பட்டறைக்கு அருகே அச்சிறுவன் இலக்கின்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தபோது பரசுராமனின் காவலாளிகள் அவனைப் பார்த்திருந்தனர். அவன் ஒரு பிராமணன் என்பதைக் கண்ட அவர்கள் அவனை நேராகப் பரசுராமனிடம் கூட்டிச்

சென்றனர். அவனுடைய பேச்சின் ஒலியழுத்தத்திலிருந்து, அச்சிறுவன் வடக்கிலிருந்து இவ்வளவு தூரம் நடந்தே வந்திருந்தான் என்று பரசுராமன் அனுமானித்திருந்தான். தான் ஒரு குருவைத் தேடி வந்திருந்ததாகக் கூறிய அச்சிறுவன், கிருபனின் பரிந்துரைக் கடிதத்தைப் பரசுராமனிடம் காட்டினான். கிருபனின் பெயரைக் கேட்டதும் வெறுப்பில் பரசுராமன் முகஞ்சுளித்தான். ஆனால் சோதிக்காமல் ஒரு பிராமணனை அவன் ஒருபோதும் நிராகரித்ததில்லை. வேதங்கள், மந்திரங்கள், இந்துமத விதிகள் ஆகியவற்றில் தனிப்பட்ட முறையில் பரசுராமனே அச்சிறுவனின் அறிவைச் சோதித்தான். அவனுடைய ஆழமான கல்வியறிவைக் கண்டு பரசுராமன் பிரமித்தான். ஆயுதங்களைக் கையாள்வதில் அவனுக்குத் திறமை இருக்கவில்லை, ஆனால் ஒரு பிராமணனிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதைவிட அதிகத் துணிச்சல் அச்சிறுவனிடம் இருந்ததை அவன் கண்டான். எனவே அவனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்பதென்று தீர்மானித்தப் பரசுராமன், பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு அவனுக்கு அனுமதியளித்தான். பண்டைய அசுரத் தற்காப்புக் கலை வடிவமான களறி உட்பட, ஆயுதங்களிலும் உத்திகளிலும் உலகம் நெடுகிலும் ஏற்பட்டிருந்த பல புதிய அறிவியல் வளர்ச்சிகள்வரை அனைத்தும் அங்கு கற்றுக் கொடுக்கப்பட்டன. இத்தகைய பயிற்சிதான், அவனுடைய வீரர்களை, இந்தத் துணைக்கண்டத்தில் எல்லோரையும் நடுநடுங்க வைத்தவர்களாகவும், யாராலும் எதிர்த்து நிற்க முடியாதவர்களாகவும் ஆக்கியது.

தன்னுடைய புதிய கண்டுபிடிப்புக் குறித்துப் பரசுராமன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். துவக்கத்திலிருந்தே அச்சிறுவன் எல்லோரையும் ஆச்சரியப்படுத்தி வந்திருந்தான். அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த இந்த பிராமணச் சிறுவன், தான் தேடிக் கொண்டிருந்த ‘விளையாட்டை மாற்றி அமைக்கக்கூடிய’ நபராக இருக்கக்கூடும் என்று பரசுராமன் நினைத்தான். பாண்டவ இளவரசர்களுக்கு ஆதரவாக இருப்பதற்காக அவன் இச்சிறுவனுக்குப் பயிற்சி அளிப்பதென்று தீர்மானித்தான். பீஷ்மருக்கு வயதாகிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு வழியில் மூத்தப் பாண்டவனான தர்மனை அஸ்தினாபுரத்தின் அரசனாக ஆக்கி, இச்சிறுவனை அவனுக்கு உதவியாளனாகவும் ஆக்கிவிட்டால், பீஷ்மரிடம் தான் தொலைத்திருந்த அனைத்தையும் தன்னால் திரும்பப் பெற முடியும் என்று அவன் நினைத்தான். வடக்கில்கூட மக்கள் மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்பி, சாதியை மதிக்கத் துவங்குவர் என்று அவன் கணக்குப் போட்டான்.

“வாசுசேனா, நீ தயாராகிவிட்டாய்,” என்று கூறிய பரசுராமன்,

கர்ணனைக் கண்டு மலர்ந்தான். கர்ணன் மரியாதையாகக் குனிந்து தன் குருவின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். "வாசுசேனா, வா, போகலாம்." பரசுராமன் கர்ணனின் பரந்த தோள்களின்மீது தன் கைகளை வைத்து அவனைத் தன் மார்போடு சேர்த்து அணைத்தான். பிறகு அவர்கள் இருவரும் அங்கிருந்து நடந்து சென்றபோது, காவலாளிகள் தலை வணங்கினர். உற்சாகமடைந்திருந்த கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சூரிய ஒளி கர்ணனின் கண்களைக் கூசச் செய்தது. அவன் தன் கண்களைச் சுருக்கினான். பிறகு அவன் சூரியக் கடவுளுக்கு ஓர் அமைதியான பிரார்த்தனையைக் கூறிவிட்டு, நிலத்தைத் தன் கைகளால் தொட்டுத் தன் நெற்றியில் ஒற்றிக் கொண்டான். பிறகு, உற்சாகமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த கூட்டத்தினரை நோக்கித் தலை வணங்கினான். அந்த மாபெரும் அரங்கில் கூடியிருந்த அனைவரும் மகிழ்ச்சிக் குரல் எழுப்பி அவனை உற்சாகப்படுத்தினர். தாளத்தோடு இசைக்கப்பட்டச் செண்டைகள் அங்கு மேலும் சுவை கூட்டின. பல்வேறு ராஜ்யங்களின் கொடிகள் எல்லா இடங்களிலும் பட்டொளி வீசிப் பறந்தன. இளம் வீரர்கள் பரசுராமனின் பயிற்சிப் பள்ளியிலிருந்து பட்டம் பெற்ற நாள் அது. அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண முசிறி நகரின் மக்கள் அனைவரும் அங்கு கூடியிருந்தனர். தொலைதூர இடங்களிலிருந்துகூடப் பலர் அங்கு வந்திருந்தனர்.

உற்சாகமடைந்திருந்த அறிவிப்பாளன், அந்த அரங்கில் நிலவிய பேரிரைச்சலைக் கடந்து தன் குரல் கேட்கும்படி செய்வதற்குப் போராடிக் கொண்டிருந்தான். அன்று தங்கள் ஆயுதத் திறமைகளை வெளிக்காட்டவிருந்த இளவரசர்கள் மற்றும் பிராமண வீரர்களின் பெயர்களை அவன் அறிவித்துக் கொண்டிருந்தான். தன்னுடைய பெயர் அறிவிக்கப்பட்டபோது அந்த அரங்கில் எழுந்த பலத்தக் கைதட்டல்களைக் கேட்டுக் கர்ணன் சிலிர்த்தான். திடலின் நடுவே அமைக்கப்பட்டிருந்த மேடையைத் தெளிவாகப் பார்ப்பதற்கு ஏற்றாற்போன்ற ஓர் இருக்கையை அவன் தனக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். படைவீரர்கள் மிடுக்கான அரேபியக் குதிரைகளின்மீது வலம் வந்து, கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தனர்.

தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த சில இளவரசர்களும் ஒருசில பிராமண வீரர்களும் தங்கள் குதிரையேற்றத் திறமையால் கூட்டத்தினருக்குக் களிப்பூட்டினர். குதிரைகள் அங்கு வைக்கப்பட்டிருந்த தடைகளை நளினமாகத் தாண்டிக் குதித்து, அந்தத் திடலின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குப் புயல் வேகத்தில் பாய்ந்து சென்றன. பளபளப்பான கவசங்களை அணிந்திருந்த வீரர்கள்

தங்களுடைய வாள்களையும் தண்டாயுதங்களையும் கொண்டு சண்டையிட்டு, தங்கள் வேகத்தாலும் சுறுசுறுப்பாலும் பார்வையாளர்களுக்கு ஆச்சரியமூட்டினர். பல்வேறு தெற்கத்திய ராஜ்யங்களின் அரசர்கள் ஒவ்வொருவராக அந்த அரங்கிற்குள் நுழைந்தனர். தங்களுடைய சொந்த இளவரசர்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்துவதற்காக அவர்கள் தங்கள் இசைக் குழுக்களுடனும் மேளக்காரர்களுடனும் அங்கு வந்திருந்தனர். அங்கு கூடியிருந்த அரசர்கள் மற்றும் அரசியரிடையே பெருமிதத்துடன் பல பெற்றோர்கள் இருந்தனர்.

முசிறியையும் மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளையும் ஆண்டு கொண்டிருந்த சேர அரசன், பரசுராமனின் பாதங்களில் விழுந்து பணிந்து அவனுடைய ஆசீர்வாதத்தைக் கோரினான். மதுரைப் பாண்டியர்கள், காஞ்சிபுரத்தின் பல்லவர்கள், மற்றும் பிற அரசர்கள் சேர அரசனைப் பின்தொடர்ந்தனர். பிறகு அசுர அரசர்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து கொண்டு, தங்கள் இளம் இளவரசர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துவதைக் காண மிகுந்த ஆவலோடும் எதிர்பார்ப்போடும் காத்திருந்தனர். விலையுயர்ந்த முத்துக்களையும் வைரங்களையும் அணிந்த அரசியர், ஒருவரையொருவர் ஒப்புக்கு நலம் விசாரித்துவிட்டு, தங்கள் சொந்த மகன்களின் வெற்றிக்காக ரகசியமாகப் பிரார்த்தித்தனர். அன்றைய நிகழ்ச்சியின் முடிவில், எல்லாப் போட்டிகளிலும் மிகச் சிறப்பாகத் திகழ்ந்த தலைசிறந்த வீரனுக்கு, தர்மவீரன் என்ற பட்டத்தைப் பரசுராமன் வழங்கவிருந்தான். தர்மவீரன் என்பதற்கு, நம்பிக்கையையும் மதத்தையும் பிராமணர்களையும் பசுக்களையும் தர்மத்தையும் காப்பவன் என்று பொருள். அது எல்லோரும் மிகவும் விரும்பிய ஒரு பட்டம். அப்பட்டத்தை வென்ற வீரன், தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் மிகவும் அங்கீகரிக்கப்பட்டத் தலைவர்களில் ஒருவனாக ஆவான்.

பாரம்பரியத்தையும் மதத்தையும் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பரசுராமன் ஒரு சிறிய உரையாற்றினான். பிறகு அவன் ஒரு சங்கை முழங்கி, அன்றைய நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தான். கர்ணன் பரசுராமனிடம் நடந்து சென்று, நளினமாகக் குனிந்து அவனுடைய பாதங்களைத் தொட்டு வணங்கி அவனுடைய ஆசியைப் பெற்றான். பிறகு அவன் தன்னுடைய ஆயுதங்கள் பக்கம் சென்றான். அவன் தன் அம்புகளின் கூர்மையைப் பரிசோதித்துவிட்டு, அவற்றைத் தன் அம்பறாத்தூணிக்குள் வைத்தான். பிறகு அவன் தன்னுடைய வில்லின் நாணையும் வாள்களையும் குத்துவாள்களையும் பரிசோதித்தான். திருப்தியடைந்த அவன், அங்கு காத்திருந்த

உதவியாளனிடமிருந்து தன்னுடைய பிரியமான குதிரையை வாங்கிக் கொண்டு, அதன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அதன்மீது ஒய்யாரமாகத் தாவி ஏறி அமர்ந்தான். அவன் தன் வாளை உயர்த்தி, கூட்டத்தினரின் ஆரவாரமான கைதட்டல்களுக்கு இடையே, வேகமாகத் திரும்பித் தன் சக போட்டியாளர்களை நோக்கித் தன் குதிரையைச் செலுத்தினான். அவனுக்கு இடப்பக்கமாக இருந்தவன்தான் அவனுடைய மிக வலிமையான போட்டியாளன். உள்ளூர்வாசிகளுக்கு மிகப் பிரியமான சேர இளவரசன் உதயன்தான் அவன். கர்ணனுக்கு வலப்பக்கமாக இருந்தது தண்டாயுதத்தில் வல்லவனாக விளங்கிய காளஹஸ்தி இளவரசன். பயத்தில் தன் வயிற்றில் எழுந்த அழுத்தத்தைக் கர்ணனால் உணர முடிந்தது. குதிரையேற்றப் போட்டிதான் முதலில் நடைபெறவிருந்தது. வாதாபி இளவரசனை அதில் தோற்கடிப்பது மிகவும் கடினமாக இருக்கும் என்பதைக் கர்ணன் அறிந்திருந்தான். அறிவைத் தேடித் தன்னைப் போலவே நீண்ட தூரம் பயணித்துக் கலிங்கத்திலிருந்து வந்திருந்த பிராமண வீரனைக் கண்டும் அவன் பயந்தான்.

குதிரையேற்றப் போட்டிக்கான அழைப்பு மணி ஒலித்தபோது, கர்ணன் சற்று மெதுவாகச் செயல்பட்டுவிட்டான். கர்ணனின் குதிரை அவ்விடத்திலிருந்து பாய்வதற்கு முன்பாகவே அவனுக்கு இடப்புறமும் வலப்புறமும் இருந்த இளவரசர்கள் புயலெனப் பாய்ந்து சென்றுவிட்டிருந்தனர். கலிங்க நாட்டு இளவரசன் முன்னணியில் இருந்தான். அவனைத் தொடர்ந்து வாதாபி இளவரசன் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். முன்னால் செல்வதில் தன் கவனம் முழுவதையும் குவித்தக் கர்ணனின் தலைக்குள் ரத்தம் வேகமாகப் பாய்ந்தது. சேர இளவரசன் அவனை மறித்து, அவனுடைய பாதையைத் தடுத்துக் கொண்டே இருந்தான். தன் இடதுபக்கத்தில் வந்து கொண்டிருந்த கோகர்ண இளவரசனின் குதிரையின் வியர்வை வாசனையைக் கர்ணனால் நுகர முடிந்தது. குதிரையேற்றப் போட்டி முடிவதற்கு இன்னும் ஒரே ஒரு சுற்று இருந்தபோது, கர்ணன் ஐந்தாவது நிலையில் இருந்தான், சேர இளவரசன் நான்காவது நிலையில் இருந்தான். கலிங்கத்திலிருந்து வந்திருந்த பிராமண வீரன் மிகச் சௌகரியமாக முன்னணியில் இருந்தான். வாதாபி இளவரசன், கோகர்ண இளவரசன், சேர இளவரசன், கர்ணன் ஆகியோர் இரண்டாவது இடத்திற்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் சேர இளவசரன், தான் இரண்டாவது இடத்தைப் பெற முயற்சிப்பதைவிட, கர்ணனை வெற்றி பெறவிடாமல் தடுப்பதில்தான் அதிக ஆர்வமாக இருந்தான். கூட்டம் ஒரு சீற்றமிகு கடலைப்போலக்

கொதித்தது. வீரர்கள் கடைசித் திருப்பத்தை அடைந்தபோது, கர்ணன் திடீரென்று தன் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து, வாதாபி இளவரசன் தன்னை முந்திச் செல்ல அனுமதித்தான். கர்ணன்தான் தன்னை முந்திச் செல்ல முயற்சித்துக் கொண்டிருந்ததாக நினைத்தச் சேர இளவரசன் தன் குதிரையை இடப்பக்கமாகச் செலுத்தினான். அவன் இவ்வாறு செய்வான் என்று வாதாபி இளவரசன் எதிர்பார்த்திராததால், அவன் சேர இளவரசன்மீது மோதினான். அவர்கள் இருவரும் தங்கள் குதிரைகளோடு சேர்ந்து கீழே விழுந்து மோதினர். கர்ணன் அந்தக் குவியலின் மேலாகத் தாண்டிச் சென்று, கோகர்ண இளவரசனுக்கு அடுத்தபடியாகத் தன் எல்லைக்கோட்டைச் சென்றடைந்தான். சேர இளவரசன் உதயன் அவனை ஆழ்ந்த வெறுப்போடு வெறித்தான்.

தேரோட்டப் போட்டி, யானைகளைக் கட்டுப்படுத்தும் போட்டி, மல்யுத்தம், வில்வித்தை, கைச்சண்டை, குத்துவாள் போட்டி, தடிகள் மற்றும் தண்டாயுதங்களைக் கொண்ட சண்டை, மற்றும் பல போட்டிகள் நடைபெற்று, அங்கு கூடியிருந்த பார்வையாளர்களை மணிக்கணக்கில் உற்சாகப்படுத்தவிருந்தன. பல்வேறு போட்டிப் பிரிவுகளில் பல தனிப்பட்ட வெற்றியாளர்கள் இருந்தனர். ஆனால் நாளின் முடிவில், சேர இளவரசனுக்கோ அல்லது கர்ணனுக்கோதான் தர்மவீரன் பட்டம் போய்ச் சேரும் என்பது தெளிவாகத் தெரிந்தது. மாலைக்குள், அவ்விருவரும் சம நிலையில் இருந்தனர். கர்ணன் வில்வித்தையில் மிகச் சிறப்பாகத் தன் திறமையை வெளிப்படுத்தியிருந்தான், ஆனால் தேரோட்டப் போட்டியில் பொன்னான மதிப்பெண்களை இழந்துவிட்டான். தன்னுடைய குலத்தொழில் எதுவோ, அதில் தான் மிக மோசமாகச் செயல்பட்டிருந்தது குறித்து அவன் வருந்தினான். சேர இளவரசன் வாள்வீச்சில் மிகச் சிறந்த திறமையை வெளிப்படுத்தியிருந்தான். கூட்டத்தினர் இப்போது இரண்டு முகாம்களாகப் பிரிந்திருந்தனர். கர்ணனின் ஆதரவாளர்கள் மற்றும் உதயனின் ஆதரவாளர்களுக்கு இடையே கைகலப்புகள் வெடித்தன.

* * *

அரங்கிற்கு வெளியே, பரசுராமனிடம் தான் கண்டிப்பாகப் பேசியே ஆக வேண்டும் என்று வலியுறுத்திய, களைத்துப் போன ஒரு பிராமணனைக் காவலாளிகள் தடுத்து நிறுத்தினர். அவர்கள் அவனுடைய கந்தலான ஆடையையும் வெற்றுப் பாதங்களையும் பார்த்து அவன் முக்கியமானவன் அல்ல என்று முடிவு செய்துவிட்டு, காத்திருக்கும்படி அவனிடம் கூறினர். அந்த பிராமணன் நீண்ட தூரம் பயணித்து வந்திருந்தான். அஸ்தினாபுரத்திலிருந்து அவன் கொண்டு

வந்திருந்த செய்தி அவ்வளவு முக்கியமானதாக இருந்திருக்காவிட்டால், வழியில் ஏதேனும் ஒரு சத்திரத்தில் ஓரிரு நாட்கள் அவன் தூங்கி ஓய்வெடுத்திருக்கக்கூடும். பரசுராமனுக்கு மிகவும் பிரியமான மாணவனின் உண்மையான அடையாளத்தை தௌமியன் கண்டுபிடித்திருந்தான். எனவே, அந்த பிராமணத் தூதுவன் தௌமியனிடமிருந்து சுமந்து வந்திருந்த செய்தி ஒரு பூதாகாரமான விளைவை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

கர்ணனின் பரம்பரையைப் பற்றி விசாரிக்குமாறு, சேர அரசன், பரசுராமனுக்குத் தெரியாமல் தௌமியனுக்குச் செய்தி அனுப்பியிருந்தான். தர்மவீரன் பட்டத்தைப் பெறுவதில் தன் மகன் உதயனுக்கு இருந்த ஒரே உண்மையான போட்டியாளன் கர்ணன் மட்டும்தான் என்று சேர அரசனின் உளவாளிகள் அவனுக்குத் தெரிவித்திருந்தனர். அஸ்தினாபுரத்திலிருந்து வந்திருந்த பிராமணச் சிறுவன் உண்மையிலேயே ஒரு பிராமணன் அல்ல என்ற ஒரு சந்தேகம் அரசனின் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. அவன் ஓர் இயல்பான வீரனாக இருந்ததால் அவன் நிச்சயமாக ஒரு சத்திரியனாகத்தான் இருக்க வேண்டும் என்று அரசன் நம்பினான். அதை மட்டும் தன்னால் நிரூபிக்க முடிந்தால், ஒரு பிராமணனாக நடித்துக் கொண்டிருந்த அவனை வெளியே தூக்கியெறிவதைத் தவிர பரசுராமனுக்கு வேறு வழி இருக்காது என்று அரசன் நினைத்தான். தனக்கு அதிர்ஷ்டம் இருந்தால், அவன் பீஷ்மரின் உளவாளி என்றுகூடத் தன்னால் நிரூபிக்க முடியும் என்று அவன் நினைத்தான். தர்மவீரன் பட்டம் தன் மகனுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்கு அவனுக்கு இதுதான் ஒரே வழியாகத் தெரிந்தது. ஆனால் இது குறித்து தௌமியனுக்கு அவன் அனுப்பியிருந்த செய்திக்கு அவனுக்கு எந்தப் பதிலும் வந்திருக்காததால், போட்டியைத் தொடர்வதைத் தவிர அரசனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

வடக்கிலிருந்து வந்திருந்த அந்த பிராமணத் தூதுவன் சேர அரசனையோ அல்லது பரசுராமனையோ சந்திப்பதற்குக் காவலாளிகள் அவனை அந்தப் போட்டி அரங்கிற்குள் அனுமதித்திருந்தால், விஷயம் வேறு விதமாக அமைந்திருக்கும். ஆனால் தங்களுடைய இளவரசனுக்கும் அஸ்தினாபுரத்தின் பிராமண வீரனுக்கும் இடையேயான இறுதிச் சண்டையைப் பார்க்க ஆவலாக இருந்த காலவாளிகள், ஒரு முக்கியமற்ற நபரின்மீது தங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. பிராமணர்களுக்கு தினமும் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கப்பட்ட ஓர் அரசாங்க உணவு விடுதிக்கு அவர்கள் அவனை அனுப்பி வைத்தனர். பிறகு, இறுதிச் சண்டையைப் பார்க்க

அவர்கள் விரைந்தனர். கடைசிச் சண்டை தாங்கள் பயந்திருந்ததுபோல வில்வித்தைப் போட்டியல்ல, மாறாக வாள்வீச்சுப் போட்டியே என்பதைக் கண்டு அவர்கள் நிம்மதி அடைந்தனர். கர்ணன்தான் மிகச் சிறந்த வில்லாளன் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆனால் உள்ளூர்க்காரனான சேர இளவரசன் வாள்வீச்சில் வல்லவனாக இருந்தான். தங்கள் இளவரசனை உற்சாகப்படுத்திக் கொண்டும் கர்ணனை ஏளனப்படுத்திக் கொண்டும் இருந்த கூட்டத்தினரின் பக்கமாக அவர்கள் இருவரும் சென்று அமர்ந்து கொண்டனர். கர்ணனை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த பிராமணக் கூட்டத்தினரைக் கண்டு சேர அரசன் எரிச்சலடைந்தான். ஆனால் அவன் புத்திசாலித்தனமாகத் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தன்னுடைய தூதுவன் சரியான நேரத்தில் வந்து, கர்ணன் ஒரு சத்திரியன் என்பதையும், அவன் பீஷ்மரின் உளவாளி என்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று அவன் பிரார்த்தனை செய்தான்.

அந்த விழாவை முன்னின்று அறிவித்துக் கொண்டிருந்தவன் கர்ணனையும் சேர இளவரசனையும் திடலின் நடுவே இருந்த மேடைக்கு அழைத்து வந்தான். சேர இளவரசன் இறுதியாக வாள்வீச்சுக்குத் தனக்கு விடுத்த சவாலைத் தான் ஏற்றுக் கொண்டது குறித்துக் கர்ணன் தன்னைத் தானே நொந்து கொண்டிருந்தான். வாள்வீச்சில் தன் எதிராளியின் அளவுக்குத் தான் திறமை படைத்தவன் அல்ல என்பதைக் கர்ணன் அறிந்திருந்தான். அவன் இப்போது ஒரு பலவீனமான நிலையில் இருந்தான். மேலும் அவன் அங்கு ஓர் அன்னியன். பிராமணர்களின் ஆதரவு மட்டுமே அவனுக்கு இருந்தது. உள்ளூர்வாசிகள் தங்கள் இளவரசனை உற்சாகப்படுத்தினர். தன் கையிலிருந்த வாள் ஆயிரம் கிலோ எடை கொண்டதுபோல இருந்ததாகக் கர்ணனுக்குத் தோன்றியது. ஆனால் அவனுடைய எதிராளி, அது ஏதோ லேசான மரத்தால் செய்யப்பட்டதைப்போல அதை மிக எளிதாகக் கையாண்டான். மேடைக்கு அழைத்து வரப்பட்டக் கர்ணனும் சேர இளவரசனும் குனிந்து பணிந்துவிட்டு, தங்களுடைய ஒரு கால்மூட்டு நிலத்தின்மீது ஊன்றியிருக்க, தங்கள் கேடயங்களும் வாள்களும் ஒன்றோடொன்று தொட்டுக் கொண்டிருக்கும்படி நின்றனர். மீண்டும் ஒருமுறை மணி ஒலித்தபோது, கூட்டத்தினரிடமிருந்து எழுந்த பலத்த விசில் சத்தமும் மேளச் சத்தமும் கைதட்டல் ஒலியும் விண்ணைப் பிளந்தது. வீரர்கள் இருவரும் பின்னால் துள்ளிக் குதித்து, தங்களுடைய எதிராளிகளை மதிப்பிட்டுவிட்டு, ஒருவர்மீது ஒருவர் பாய்ந்தனர். வாள்களும் இரும்புக் கேடயங்களும் முரட்டுத்தனமான வேகத்தில் மோதிக் கொண்டன. அவர்கள் தங்கள் வாள்களை வீசிய விதமும்,

ஒருவரையொருவர் ஏய்த்த விதமும் சமாளித்த விதமும் கண்ணைக் கவர்வதாக இருந்தது. காற்றில் ஆறடி உயரத்திற்கு எம்பிக் குதித்து, பிறகு நிலத்தில் லாவகமாக வந்திறங்கி, மீண்டும் துள்ளி, சண்டைக்கோழிகள்போல அவர்கள் சண்டையிட்டனர். உரக்க ஒலித்த மேளதாளச் சத்தம் கூட்டத்தினரை உற்சாகத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது.

* * *

தெளமியனிடமிருந்து வந்த தூதுவன், உணவு விடுதியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பல நாட்களுக்குப் பிறகு அன்றுதான் முதன்முறையாக அவன் வயிறாரச் சாப்பிட்டான். கூட்டத்தினரின் காட்டுக்கூச்சலைக் கேட்ட அவன், எதற்காக இந்த ஆர்ப்பரிப்பு என்று வியந்தான்.

* * *

பாரம்பரிய வாள்களுடனான சண்டைக்குப் பிறகும் யார் சிறந்த வீரன் என்று நிர்ணயிக்க முடியாமல் போனதால், அசுரர்களின் ஆயுதமான உறுமியைக் கொண்டு போட்டியாளர்களின் திறமையைச் சோதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அது ஒரு பயங்கரமான வாள். கர்ணன் அதில் அவ்வளவாகத் பயிற்சி பெற்றிருக்கவில்லை. சேர இளவரசனின் முகத்தில் மலர்ந்த புன்னகையைக் கண்டு அவன் நடுங்கினான். உறுமி வாளானது, உலோகத்தால் செய்யப்பட்ட, பன்னிரண்டு அடி நீளம் கொண்ட, ஓர் ஒல்லியான, தட்டையான, வளைவுத்தன்மை கொண்ட ஆயுதம். சுருள் பட்டாக்கத்தி என்ற பெயரும் அதற்கு உண்டு. அனுபவம் வாய்ந்த வீரர்கள் அதைத் தங்கள் இடுப்பில் ஓர் இடைவாரைப்போல அணிந்திருப்பர். மிகத் திறமையான வீரனின் கைகளில், அந்த ஆயுதம் பயங்கரமானதாக இருக்கும். அது தன் விருப்பப்படி காற்றைக் கிழித்துச் சென்று, எதிராளியின் கழுத்தையோ அல்லது கையையோ ஒரு மலைப்பாம்பைப்போலச் சுற்றிக் கொள்ளும். பிறகு அதை வேகமாகப் பிடித்து இழுத்தால், அது அவனுடைய தலையைக் கொய்துவிடும் அல்லது கையைத் துண்டாக்கிவிடும். ஒருவன் இந்த வாள்வீச்சில் திறமை பெறுவது மிகவும் கடினம். ஒரு கேடயத்தைக் கொண்டு இதிலிருந்து அவன் தன்னைத் தற்காத்துக் கொள்வது அதைவிடக் கடினம்.

அந்த வாள் தன்னிடம் கொடுக்கப்பட்டபோது, கர்ணன் ஆழமாக சுவாசித்தான். வழக்கப்படி அவர்கள் இருவரும் வேகமாகக் குனிந்து வணங்கினர். போட்டியின் முடிவு தெரிவதற்கு ஆவலாக இருந்த

கூட்டத்தினர் பொறுமையிழந்து கொண்டிருந்தனர். கர்ணனும் உதயனும் மீண்டும் மோதினர். ஆனால் இம்முறை அவர்கள் சண்டையிட்டதைக் காண்பது அதிகக் குழப்பமூட்டுவதாகவும் அச்சுறுத்துவதாகவும் இருந்தது. வளைவுத்தன்மை கொண்ட அந்த வாள்கள் வெள்ளிப் பாம்புகளைப்போலக் காற்றைக் கிழித்துச் சென்று, அந்தரத்தில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, எதிராளியின் உடலைத் தேடின. உறுமிகள் கிட்டத்தட்ட உயிரோடு இருந்ததுபோலவும், இரண்டு வீரர்களுக்குப் பதிலாக அங்கு நான்கு வீரர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததுபோலவும் தோன்றியது. தன் கைகள் துண்டிக்கப்படுவதிலிருந்து கர்ணன் இரண்டு முறை மயிரிழையில் தப்பினான். ஒருமுறை அவன் சேர இளவரசனின் தலையைக் கிட்டத்தட்டக் கொய்துவிட்டான். வெறும் போட்டியாகத் தொடங்கிய அந்நிகழ்வு, ஒரு பயங்கரமான சண்டையாக மாறியிருந்தது. கூட்டத்தினருக்கு இப்போது ரத்த வெறி பிடித்திருந்தது.

திடீரென்று, உதயனின் உறுமி வாள், கர்ணனின் கவசத்தில் ஒரு கணம் சிக்கிக் கொண்டது. தன் வாளை விடுவிக்கச் சேர இளவரசன் கடுமையாக முயற்சித்தான். அந்தக் கணநேர இடைவெளி கர்ணனுக்குப் போதுமானதாக இருந்தது. உதயனின் கண்களில் தென்பட்ட பயத்தை அவன் பார்த்தான். சேர இளவரசன் கர்ணனின் கழுத்திற்கு வைத்தக் குறி எப்படியோ தப்பி, அவனுடைய உறுமி வாள் கர்ணனின் கவசத்தில் மாட்டிக் கொண்டது. இதுவே கர்ணனின் வாள் அவனுடைய கவசத்தில் சிக்கியிருந்தால், தன்னுடைய வாளைக் கொண்டு கர்ணனின் தலையைக் கொய்ய அவன் தயங்கியிருக்க மாட்டான். கர்ணனின் உறுமி தன் கழுத்தைச் சுற்றி வளைத்து, ஒரு கணத்தில் தன் தலையைத் துண்டிக்கவிருந்ததை நினைத்து அவன் காத்திருந்தான். கூட்டம் அதிர்ச்சியில் உறைந்தது. சேர அரசன் அக்காட்சியைப் பீதியோடு பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது கர்ணனின் உறுமி வாள் காற்றைக் கிழித்துச் சென்று, உதயனின் உடலை விட்டுவிட்டு அவனுடைய உறுமியைச் சுற்றிக் கொண்டது. பிறகு அவன் அதைப் பிடித்து இழுத்தபோது, சேர இளவசரனின் உறுமி வாள் அவனுடைய கையிலிருந்து எகிறியது.

போட்டி முடிந்துவிட்டது. கர்ணன்தான் புதிய தர்மவீரன். அந்த ஒட்டுமொத்த அரங்கமும் அதிர்ந்தது. சங்குகள் முழங்கப்பட்டன, செண்டை மேளச் சத்தம் விண்ணைப் பிளந்தது, உற்சாகக் கத்தல்கள் வெடித்தன. சேர இளவரசன் அவமானத்தால் கூனிக் குறுகினான். அஸ்தினாபுர வீரனை அவன் ஆழமான வெறுப்போடு பார்த்தான். அவன் கடினமாகப் போராடித் தோற்றுப் போயிருந்தான். இப்போது

எல்லோரும் அவனை மறந்துவிடுவர். மறதிநிலைதான் தோல்விக்கான வெகுமதி. அவனுடைய கண்கள் சேர அரசனின் கண்களைச் சந்தித்தன, ஆனால் அரசன் வேறு பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவனுடைய மகன் அவனுடைய நம்பிக்கையைத் தகர்த்துவிட்டிருந்தான். சண்டையில் கர்ணன் உதயனைக் கொன்றிருந்தால்கூட அது அவனுடைய தந்தைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்திருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் உதயன் வீரமரணமாவது எய்திருப்பான். ஒரு பிராமணன் தன் தயாள குணத்தால் கொடுத்த உயிர்ப்பிச்சையைப் பெற்றுக் கொண்டு, உதயன் இப்படி அவனுக்குக் கடன்பட்டிருக்க வேண்டிய தேவை எழுந்திருக்காது. சேர அரசனின் மூதாதையர்களில் ஓர் அரசன் ஒரு குறிப்பிட்டப் போரில் வெற்றி பெற்றப் பிறகும்கூட, தன் முதுகில் ஏற்பட்டிருந்த ஒரு காயத்தால், தன்னை ஒரு கூரிய ஆயுதத்தைக் கொண்டு குத்தித் தற்கொலை செய்து கொண்டிருந்தான். அவன் தன் படையினரை வெற்றிகரமாக முன்னடத்திச் சென்று, சிறப்பாகப் போர் புரிந்திருந்தும்கூட, தன் முதுகில் ஏற்பட்டக் காயத்தால் தன் மதிப்பும் மரியாதையும் பறி போய்விட்டிருந்ததாகக் கருதினான். அவனுடைய முதுகில் காயம் ஏற்பட்டிருந்ததால், எதிரியைக் கண்டு பயந்து அரசன் புறமுதுகிட்டு ஓடினான் என்று அதற்கு அர்த்தமாகிவிடும். இப்போது வடக்கிலிருந்து வந்திருந்த ஒரு சாதாரண வீரனுக்கு உதயன் கடன்பட்டுவிட்டான். களைத்துப் போன அரசன் இத்தகைய எண்ணங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டான். அவன் தன் மகனுக்காக வருந்தினாலும், அவன் ஆற்ற வேண்டிய சில கடமைகள் இருந்தன. இந்த மாபெரும் நிகழ்ச்சி அவனுடைய ஆதரவில்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விருந்தினர்களை அவனால் காக்க வைக்க முடியாது. அறியாமல் நிகழும் சிறு மரியாதைக் குறைவுகூட ஒரு மோசமான போருக்கு வழிவகுக்கக்கூடும். அசுரர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட ஓர் இனத்தவர். உண்மையிலேயே மரியாதைக் குறைவு ஏற்பட்டிருந்தாலும் சரி, அல்லது மரியாதைக் குறைவு ஏற்பட்டிருந்ததாக அவர்கள் கருதினாலும் சரி, அதிலிருந்து தங்கள் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் எப்போதும் தயாராக இருந்தனர். அற்ப விஷயங்களுக்குக்கூட முட்டாள்களைப்போல அவர்கள் சண்டையிட்டனர்.

மேடையின்மீது நின்ற தன்னுடைய தலைசிறந்த மாணவனைப் பரசுராமன் கட்டித் தழுவி, 'தர்மவீரன் கர்ணன்' என்று முழங்கியபோது, அந்த அரங்கில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. ஆயிரக்கணக்கான குரல்கள் 'தர்மவீரன் கர்ணன்' என்று குதூகலமாக எதிரொலித்தன.

பிராமணர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தியவாறே நடனமாடினர். அசுர இளவரசர்களின் அகங்காரத்திற்கு சவால்விடுவதற்குக் கடைசியில் அவர்களுக்கு ஒரு வீரன் கிடைத்துவிட்டான். பல வருடங்களுக்கு முன்பு இந்தப் பட்டத்தைக் கிருபரும் துரோணரும் வென்றதற்குப் பிறகு, வேறு எந்தவொரு பிராமண வீரனும் வெற்றியை நெருங்கக்கூட இல்லை. இன்று கொண்டாட்டத்திற்கான ஒரு நாள். பிராமணர்கள் கல்வி கற்பதிலும் சடங்குகளிலும் மட்டுமல்லாமல், ஆயுதக் கலையிலும் தலைசிறந்தவர்கள் என்பதை நிரூபித்த ஒரு பொன்னான நாள் இது. அவர்கள் ஒருவரையொருவர் மகிழ்ச்சியில் ஆரத் தழுவிக் கொண்டனர். அவர்களுடைய நெஞ்சங்கள் பெருமிதத்தால் விரிந்தன.

* * *

அஸ்தினாபுரத்திலிருந்து வந்த பிராமணத் தூதுவன் அரங்கினுள்ளே நுழைந்து அரசனையோ அல்லது பரசுராமனையோ சந்திப்பதற்குப் பரிதவித்தான். ஆனால் காவலர்கள் அவனை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். நிகழ்ச்சி முடிந்தவுடன் மேன்மக்கள் வேறொரு பாதை வழியாக அரண்மனைக்குத் திரும்பிச் செல்வார்கள் என்பதை அறியாதவனாக, அரசனும் பரசுராமனும் வெளியே வரும்போது எப்படியாவது அவர்களைப் பிடித்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் அவன் அந்த அரங்கிற்கு வெளியே காத்திருந்தான். அவன் நின்று கொண்டிருந்த வாசல் பொதுமக்களுக்கானது. எனவே அவன் பல மணிநேரம் கால்கடுக்க நின்றுவிட்டு, இறுதியில், அரசனைச் சந்திப்பதற்கான தன் அனுமதி குறித்துக் காவலர்களுக்கு நினைவுபடுத்துவதென்று தீர்மானித்தான். அவனை முற்றிலும் மறந்து போயிருந்த அவர்கள், அரண்மனைக்குச் சென்று அரசனைச் சந்திக்குமாறு அவனுக்கு அறிவுறுத்தினர். எனவே அந்த பிராமணன் அரண்மனையை நோக்கி நடந்தான். அரசன் தன் விருந்தினர்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்ததால், அரண்மனைக்குள் நுழைவதற்கு அந்த பிராமணனுக்கு அனுமதியளிக்க அரண்மனைக் காவலர்கள் மறுத்துவிட்டனர். மாறாக, அரசாங்க விருந்தினர் மாளிகைக்கு அவனை ஓய்விற்காக அவர்கள் அழைத்துச் சென்றனர். அவன் காட்டிய எதிர்ப்புகள் எதற்கும் அவர்கள் மசிந்து கொடுக்கவில்லை. அந்த பிராமணன் கொண்டு வந்த துரதிர்ஷ்டமான செய்தி மறுநாள் காலையில்தான் இளவரசன் உதயனை எட்டியது.

* * *

மேன்மக்களும் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின்

அரசர்களும் புதிய தர்மவீரனைப் பரிசு மழையில் குளிப்பாட்டினர். அந்த அரங்கில் இருந்தவர்கள் மெல்ல மெல்லக் கலைந்து சென்றனர். பெருமகிழ்ச்சி கொண்டிருந்த பிராமணர்கள் பரசுராமனையும் அவனுடைய மாணவனையும் அரண்மனைக்குச் சுமந்து சென்றனர். புதிய தர்மவீரனுக்கு மரியாதை செய்வதற்காக அரசன் அங்கு மிகப் பெரிய விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தான். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கியமான நபர்களுடன் கர்ணன் அந்த இரவைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கழித்தான். சேர அரசன் தன் மகனின் தோல்வியால் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை வெளியே காட்டாமல் நேர்த்தியாக அதைத் தன்னுள் மறைத்துக் கொண்டு, கர்ணனுக்குப் பல பரிசுகளையும் பட்டங்களையும் வழங்கி மரியாதை செய்தான். சேர இளவரசன் அந்த விருந்து நெடுகிலும் மௌனமாக இருந்தான். பிறகு நள்ளிரவில் அவன் அந்த அரங்கைவிட்டு வெளியேறினான். ஆனால் விருந்து அதிகாலைவரை தொடர்ந்தது. கர்ணன் தன் குருநாதரின் உறைவிடத்தைச் சென்றடைந்தபோது மிகவும் களைத்துப் போயிருந்தான். ஆனால் தோட்டத்தின் திறந்த வெளியில் படுத்துறங்குவதற்குப் பரசுராமன் விருப்பம் தெரிவித்தபோது, கர்ணன் மனமுவந்து அதற்குப் பணிந்தான். தேரோட்டியின் மகனான கர்ணனின் தொடை ஒன்றின்மீது பரசுராமன் தன் தலையைச் சாய்த்துப் படுத்தான். உலகிலேயே மிகச் சிறந்த பிராமண வீரனுக்குத் தான் பயிற்சியளித்திருந்தது குறித்த ஆழ்ந்த திருப்தியுடன் அவன் உறங்கினான்.

காலைக் கதிரொளி அங்கிருந்த பனை ஓலைகள்மீது பட்டு அவற்றின் முனைகளைப் பொன்னிறமாக மாற்றியபோது, கர்ணனின் கால்கள் மரத்துப் போயிருந்தன. குருவின் தூக்கத்தைக் கலைத்துவிடக்கூடாது என்பதற்காக அவன் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். அமைதி தவழ்ந்த அவருடைய முகத்தை அவன் பார்த்துவிட்டு, இவர் ஏன் பிராமணர் அல்லாதோர்மீது இவ்வளவு வெறுப்பைச் சுமந்து கொண்டிருந்தார் என்று வியந்தான். கடந்த எட்டு வருடங்களில், கர்ணன் பரசுராமன்மீது நேசத்தையும் மரியாதையையும் வளர்த்துக் கொண்டிருந்தான். அந்த முதியவன் தன்மீது பொழிந்த பாசத்தால் கர்ணன் திக்குமுக்காடிப் போயிருந்தான். பரசுராமன் ஓர் அன்பான இதயமும் தாராள மனப்பான்மையும் கொண்டவன் என்ற முடிவுக்கு அவன் வந்திருந்தான். சாதி விதிமுறைகள் ஒழுங்காகக் கடைபிடிக்கப்பட்டது தனக்கு உறுதியாகத் தெரிந்தவுடன், பரசுராமன், தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசர்கள் நியாயமாக ஆட்சி செய்யும்படி பார்த்துக் கொண்டான். அவனுக்கென்று எந்தத்

தனிப்பட்டச் சொத்தும் இருக்கவில்லை. அவன் ஒரு துறவியைப்போல வாழ்ந்தான். அவன் ஓர் அரண்மனையை சுவீகரித்திருந்தபோதிலும், தான் எதிர்கொண்ட ஏழை பிராமணர்கள் ஒவ்வொருவரும் வந்து தங்கிக் கொள்வதற்காக அவன் அதைக் கொடுத்தான். அவன் வெறுமனே ஒரு சிறிய அறையில் ஒரு சிறிய கட்டிலில் தஞ்சம் புகுந்து கொண்டான். அவனிடமிருந்து கற்றுக் கொள்வதற்காக பரதகண்டம் நெடுகிலுமிருந்து வந்த பிராமணர்களால் அந்த அரண்மனை நிரம்பி வழிந்தது.

அஸ்தினாபுரத்தோடு ஒப்பிடுகையில், பரசுராமனைத் தங்கள் குருவாக ஏற்றுக் கொண்டிருந்த நிலங்களைச் சேர்ந்த மக்கள் அதிக ஒழுங்குடன் இருந்தனர். இந்த ராஜ்யங்களில் பொதுமக்களுக்கான வசதிகள் சிறப்பாகச் செயல்பட்டன. ஊழலும் மிகக் குறைவாகவே இருந்தது. கீழ்ச்சாதியினர் இங்கு விலங்குகளைப்போல நடத்தப்பட்டு, கொடூரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தபோதிலும், பஞ்சம் ஏற்பட்டு யாரும் பசியால் வாடிவிடாமல் நிர்வாகம் பார்த்துக் கொண்டது. முக்கியமான பதவிகள் அனைத்தும் பிராமணர்களுக்காக ஒதுக்கப்பட்டன. ஆனால் ஊழல்கள் இல்லாமலும், வேண்டப்பட்டவர்களுக்குத் தனிச் சலுகைகள் கிடைக்காமலும் இருந்ததைப் பரசுராமன் உறுதி செய்தான். பெண்கள் அடிமைகளைப்போல நடத்தப்பட்டனர். ஆனால் நள்ளிரவில்கூடத் தனியாகச் செல்லும் அளவுக்குத் தெருக்கள் அவர்களுக்குப் பாதுகாப்பானவையாக இருந்தன. சட்ட ஒழுங்குத் துறை சிறப்பாகச் செயல்பட்டது. அந்த ஆட்சி, நல்ல விஷயங்களும் மோசமான விஷயங்களும் நிறைந்த ஒரு வினோதமான கலவையாக இருந்தது. ஒரு பருவ வயதுச் சிறுவனாக முதன்முதலில் முசிறியில் வந்து இறங்கியபோது கர்ணனுக்கு ஏற்பட்ட வெறுப்பு மெல்ல மெல்ல மறைந்து, பல விஷயங்கள் குறித்து ஒரு மரியாதையும், மற்ற விஷயங்கள் குறித்து ஒருவிதமான மனச்சோர்வும் அவனுள் ஏற்பட்டன. பரசுராமனே ஒரு புரியாத புதிராக இருந்தான். அவன் கீழ்த்தரமானவனாகவும், வெறியனாகவும், பழமைவாதியாகவும், ரத்த வெறி பிடித்தவனாகவும், பிடிவாதக்காரனாகவும், தாராள மனப்பான்மை கொண்டவனாகவும், கற்றறிந்தவனாகவும், துணிச்சல்காரனாகவும், அன்பான இதயம் படைத்தவனாகவும், கொள்கைவாதியாகவும், அர்ப்பணிப்புக் கொண்டவனாகவும், உறுதியானவனாகவும் இருந்தான். அனைத்து விதமான பண்புநலன்களும் அவனிடம் குடிகொண்டிருந்தன. எட்டு வருடங்கள் அவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததில், அவனைப் பற்றி ஒரே ஒரு விஷயம் கர்ணனுக்கு உறுதியாகத் தெரிந்தது: அந்த

வெறித்தனமான பிராமணத் தலைவன் தன்னை ஒரு மகன்போல நேசித்தான் என்பதுதான் அது.

கர்ணன் தன் குருவின் அமைதியான முகத்தைப் பார்த்துவிட்டுப் பெருமூச்செறிந்தான். முந்தைய நாள் நடைபெற்றப் போட்டிகளாலும், இரவில் நடைபெற்ற விருந்துக் கொண்டாட்டங்களாலும், தூக்கமின்மையாலும் அவனுடைய கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. வெற்றிக் களிப்பு மறைந்து, எட்டு வருடங்களாகத் தான் வெற்றிகரமாக ஏமாற்றி வந்திருந்தது குறித்த பயம் அவனுடைய இதயத்தை நிரப்பியது. அவன் இப்போது பிரபலமாகியிருந்ததால், அவனுடைய குட்டு வெளிப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகமாக இருந்தது. அவ்வாறு நிகழ்வதற்கு முன்பாக அவன் சேர நாட்டிலிருந்தும் தெற்கிலிருந்தும் வெளியேறிச் சென்றுவிட விரும்பினான். உண்மை தெரிந்துவிட்டால் தன் குருநாதர் எவ்வாறு நடந்து கொள்வார் என்று அவனுக்குத் தெரியவில்லை.

மரங்களில் பறவைகள் கூவத் துவங்கியிருந்தன. தன் குருநாதர் துயிலெழுந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று கர்ணன் ஏங்கினான். உண்மையை எப்படியாவது அவரிடம் கூறிவிட வேண்டும் என்ற ஒரு மிகப் பெரிய உந்துதல் அவனை ஆட்கொண்டது. தன்னை ஒரு மகன்போல நடத்தியிருந்த ஒருவனைத் தொடர்ந்து ஏமாற்ற அவனால் முடியவில்லை. அவனுடைய பெற்றோரைத் தவிர, வேறு யாரும் இந்த அளவுக்கு அவன்மீது அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை. பரசுராமன் அவனுக்கு ஒரு தந்தையைப்போல இருந்திருந்தான். 'நான் அவரிடம் உண்மையைக் கூறினால் என்னவாகும்?' என்று கர்ணன் தன் மனத்திற்குள் விவாதித்தான். தன் குருநாதர் நிச்சயமாகக் கோபப்படுவார், ஆனால் மீண்டும் சாந்தமாகிவிடுவார் என்று அவன் தனக்குத் தானே உறுதியளித்துக் கொண்டான். 'நான் ஒரு பிராமணன் என்பதற்காக அவர் என்னை நேசிக்கவில்லை, மாறாக, ஒரு மனிதன் என்ற முறையில்தான் அவர் என்னை நேசிக்கிறார். நான் ஒரு தேரோட்டியின் மகன் என்பது அவர் என்மீது கொண்டிருக்கும் அன்பை மாற்றிவிடுமா? இப்போது இங்கிருந்து சென்றுவிட நான் தீர்மானித்துவிட்ட நிலையில், உண்மையை எப்படி என்னால் மறைக்க முடியும்?' என்று அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

கர்ணனின் மனத்தில் கடும்புயல் வீசியது. குழப்பத்தில் இருந்த அவன், தன் வேட்டி மடிப்புகளுக்குள் ஒரு வண்டு நுழைந்ததைக் கவனிக்கத் தவறினான். தன் தொடையில் ஏதோ குறுகுறுத்த உணர்வு அவனுக்கு ஏற்பட்டது, ஆனால் அவன் அதை அலட்சியப்படுத்திவிட்டு

மீண்டும் தன் கவலைகளுக்குள் மூழ்கினான். தன் வேட்டிக்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்தது ஒரு வண்டு என்பதை அவன் உணர்ந்தபோது, அதைத் தன் கைகளில் பிடிக்க முயற்சித்தான். திடீரென்று அவனுடைய தொடையின் ஊடாக ஒரு கடுமையான வலி பரவியது. அந்த வண்டு அவனைக் கடித்துவிட்டிருந்தது. கர்ணன் தன் பற்களை நறநறவென்று கடித்தான். அந்த வலி வேகமாகப் பரவி மிகவும் தீவிரமடைந்தது. அவனுடைய உதடுகளிலிருந்து ஒரு மெல்லிய முனகல் ஒலி வெளிப்பட்டது. ஆனால் அவன் தன் கைகளால் தன் வாயை மூடிக் கொண்டு, தன் உடலை வதைத்துக் கொண்டிருந்த வேதனையைப் பொறுத்துக் கொள்வதற்காகத் தன் விரல்களையும் பிறகு தன் நாக்கையும் கடித்தான். அவனுடைய தசைகள் முறுக்கிக் கொண்டன. தொடர்ந்து அசையாமல் இருப்பதற்கு அவன் பெரிதும் போராடினான். அவனால் தன் குருநாதரின் உறக்கத்தில் குறுக்கிட முடியவில்லை. அவனுடைய விரல்கள் தம்மைத் தாமே மண்ணுக்குள் புதைத்துக் கொண்டன. தொலைவில் தெரிந்த நீல மலைகளின் மேலாக உதயமாகிக் கொண்டிருந்த கதிரவனைப் பார்த்து, அவன் வலிமை கேட்டுப் பிரார்த்தனை செய்தான். தன் குருநாதரின் தூக்கத்திற்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக, அந்தத் தேரோட்டி மகன், தன்னிடமிருந்த ஒவ்வொரு துளி மன உறுதியையும் ஒன்றுதிரட்டி ஆடாமல் அசையாமல் இருந்தான். ஆனால் தன்னுடைய கண்ணீரை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

கர்ணனின் வேதனைக் கண்ணீர் பரசுராமனின் முகத்தின்மீது விழுந்தபோது பரசுராமன் கண் விழித்தான். அவன் எழுந்து உட்கார்ந்து, கர்ணனின் நெற்றியின்மீது தன் உள்ளங்கையை வைத்து, அவனுக்குக் காய்ச்சல் இருந்ததா என்று பரிசோதித்துவிட்டு, "மகனே, என்ன நடந்தது?" என்று கேட்டான்.

கர்ணன் தன் வேட்டிக்குள் ஒரு கையைவிட்டு, அந்த வண்டை வெளியே எடுத்து, தன் விரல்களால் நசுக்கினான். பிறகு கண்ணீருக்கிடையே தன் குருவை ஏறிட்டுப் பார்த்தான். தன்னுடைய தியாகத்தைத் தன் குருநாதர் அங்கீகரிப்பார் என்று தன் மனத்தின் எங்கோ ஒரு மூலையில் எதிர்பார்த்திருந்த அவன், பரசுராமனின் முகத்தில் வெளிப்பட்ட உணர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தான்.

"நீ யார்?" பரசுராமனின் குரலில் ஓர் அச்சுறுத்தல் தொக்கி நின்றது.

அக்கணத்தில், தன் ஏமாற்று வேலை தன் முகத்தில் வெளிப்பட்டிருந்ததைக் கர்ணன் உணர்ந்தான். "நான் . . . நான் . . ." உண்மையை எப்படிச் சொல்வதென்று தெரியாமல் அவன் தடுமாறினான். வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வர மறுத்தன. தான்

மிகப் பெரிய அளவில் ஏமாற்றியிருந்தது அவனுடைய தொண்டையை அடைத்தது.

"நீ ஒரு பிராமணன் அல்ல. அது எனக்கு உறுதியாகத் தெரிகிறது. எந்தவொரு பிராமணனாலும் இவ்வளவு வலியைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நீ ஒரு சத்திரியனாகத்தான் இருக்க வேண்டும் . . . கயவனே . . . சூழ்ச்சிக்காரனே . . . நீ என்னை ஏமாற்றிவிட்டாய்! நீ எங்கள் சாதியைச் சேர்ந்தவன் அல்ல. ஏமாற்று வேலையின் மூலம் நீ அறிவைக் கைவசப்படுத்தியுள்ளாய். எந்த சாதி என்னுடைய ஜென்மப் பகையோ, நீ அந்த சாதியைச் சேர்ந்தவன். சத்திரியர்களுடன் என் குடும்பம் அறுபத்து நான்கு முறை சண்டையிட்டுள்ளது. இப்போது ஒரு சத்திரியன் என்னிடமிருந்து அறிவைத் திருடத் துணிகிறானா?" என்று பரசுராமன் இடியென முழங்கினான்.

கர்ணன் தன் குருவின் பாதங்களில் விழுந்தான். "ஐயா . . . என்னை மன்னித்துவிடுங்கள் . . . நான் ஒரு சத்திரியன் அல்ல . . ." கர்ணன் பரசுராமனின் பாதங்களைப் பிடித்துக் கொண்டே அழுதான்.

"பொய்யனே! நீ ஒரு சத்திரியன் அல்ல என்று கூறுகிறாயா? சிறிதுகூட வேதனையை வெளிப்படுத்தாமல், ஒரு வண்டுக் கடியை வேறு யாரால் பல மணிநேரம் தாங்கிக் கொள்ள முடியும் . . . ஒரு பிராமணனாலா? நான் அதை நம்ப வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? நான் ஒரு முட்டாள் என்று நீ நினைத்துவிட்டாயா? நான் உன்னைச் சபிக்கிறேன்," என்று கூறி, பரசுராமன் கர்ணனின் கைகளை எட்டி உதைத்தான்.

கர்ணன் தொடர்ந்து மண்டியிட்டபடி அமர்ந்திருந்தான். "ஐயா . . . நான் உங்கள் மகன் . . . என்னைச் சபித்துவிடாதீர்கள் . . . நான் ஒரு சத்திரியன் அல்ல . . ."

"மோசக்காரனே! நீ பொய்மேல் பொய்யாகக் கூறுகிறாய். உன் ஏமாற்று வேலையின் மூலமும் பொய்களின் மூலமும் என்னிடமிருந்து நீ கற்றுக் கொண்டுள்ள அனைத்து விஷயங்களும் உன் வாழ்வின் மிக நெருக்கடியான கணத்தில் உனக்கு மறந்து போய்விடும் என்று நான் உன்னைச் சபிக்கிறேன். என்னை நயவஞ்சகமாக ஏமாற்றி நீ பெற்றுள்ள அறிவு உனக்கு மிகவும் தேவையான நேரத்தில் உனக்குப் பயன்படாமல் போகும். என் கண் முன்னாலிருந்து ஓடிப் போய்விடு!" பரசுராமன் வெறுப்பில் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான்.

"ஐயா . . . நான் ஒரு சத்திரியன் அல்ல. நான் இங்கிருந்து போய்விடுகிறேன், ஆனால் நான் உங்களுக்கு ஒரு மகனைப்போலச் சேவை செய்திருக்கிறேன் . . . ஐயா, தயவு செய்து என்னைச் சபிக்காதீர்கள்."

“அவன் உண்மையைத்தான் கூறுகிறான். அவன் ஒரு சத்திரியன் அல்ல.” பரசுராமனும் கர்ணனும் ஆச்சரியத்தில் தங்கள் தலைகளைத் திருப்பினர். சேர அரசனும் இளவரசன் உதயனும் ஒரு பிராமணனும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். உதயனின் உதடுகளில் ஓர் ஏளனப் புன்னகை தாண்டவமாடியது.

கர்ணன் மனம் தளர்ந்து தன் கண்களை மூடிக் கொண்டான். அந்த பிராமணன் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த ஒரு புரோகிதன் என்பதை அவன் அடையாளம் கண்டுகொண்டான். கிருபர் தனக்கு வேத பாடங்களைக் கற்றுக் கொடுக்கக்கூடாது என்று மறுப்புத் தெரிவித்தவன் அவன்தான். அடுத்து வரவிருந்தது கர்ணனுக்கு நன்றாகத் தெரிந்தது. மரணம்! சாதி முதன்மையாகக் கோலோச்சிய, மதத்திற்காக மக்கள் மடியத் தயாராக இருந்த தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் மையத்தில் தான் நின்று கொண்டிருந்தோம் என்பதை அவன் அறிந்தான். தர்மவீரன் பட்டத்தை வென்றதன் மூலம், பெருமிதம் கொண்ட அசுர அரசர்களை அவன் முட்டாளாக்கியிருந்தான். தேரோட்டி இனத்தைச் சேர்ந்த ஒருவன் தர்மவீரனா? இச்செய்தி வெளியே கசிந்துவிட்டால், பரதகண்டம் முழுவதும் பரசுராமனையும் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பையும் பார்த்துக் கை கொட்டிச் சிரிக்கும்.

“ஒருவன் சத்திரியனா இல்லையா என்பதை முதல் பார்வையிலேயே என்னால் கண்டுபிடித்துவிட முடியும்,” என்று பரசுராமன் கூறினான்.

அந்த பிராமணத் தூதுவன், முன்னால் அடியெடுத்து வைத்துப் பரசுராமனை நோக்கிக் குனிந்து வணங்கியபோது, சேர அரசன் ஏராளமாகப் புன்னகைத்தான். “ஐயா, நான் அஸ்தினாபுரத்திலிருந்து வருகிறேன். இந்த இளைஞனை அவனுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்குத் தெரியும். இவன் வாசுசேன கர்ணன். அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த அதிரதன் மற்றும் ராதா இணையரின் மகன் இவன். இந்தச் செய்தியை உங்களிடம் தெரிவிக்கத்தான் நான் இங்கு வந்துள்ளேன்,” என்று கூறிவிட்டு அந்த பிராமணன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். அந்த பிராமணனின் வாயிலிருந்து அடுத்து என்ன வார்த்தைகள் வருமோ என்று பயந்தபடி, கர்ணன் அவமானத்தில் தலை கவிழ்ந்து நின்றான்.

பரசுராமனின் முகம் கோபத்தில் சிவந்தது. “இவனுடைய சாதி என்ன?”

அந்த பிராமணன் சேர அரசனைப் பார்த்தான். அரசன் பொறுமையின்றித் தலையசைத்தான். “ஐயா, தாழ்ந்த குலமான சூத்திர

குலத்தைச் சேர்ந்தவன் இவன். . . இவன் ஒரு தேரோட்டியின் மகன்.”

பரசுராமன் சிலையாக நின்றான். பிறகு அவன் தன் கண்கள் செருக, நிலைகுலைந்து மல்லாக்க விழுந்தான். அனைவரும் அவனை நோக்கி விரைந்தனர். தான் ஒரு காட்டு நாயைப்போல வேட்டையாடப்படுவோம் என்பதைக் கர்ணன் அறிந்தான். தெற்கத்தியப் படையினர் அனைவரும் முசிறி நகரில் குழுமியிருந்தனர். சண்டையிட்டு மடிவதை அவனால் தேர்ந்தெடுக்க முடியும், ஆனால் அவனுக்கு வயதும் அனுபவமும் போதாது. அறிவுப்பூர்வமாக யோசிப்பதில் துவக்கத்தில் கிருபர் தனக்குக் கொடுத்திருந்த பயிற்சி அவனுக்கு நினைவுக்கு வந்தது. கர்ணன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

விழுந்து கிடந்த பரசுராமனின்மீதே எல்லோருடைய கவனமும் இருந்ததால், கர்ணன் அங்கிருந்து நழுவியதை யாரும் பார்க்கவில்லை. அவன் அங்கு இல்லாததைச் சேர அரசன் கவனித்தபோது, கர்ணன் ஏற்கனவே துறைமுகத்தை அடைந்திருந்தான். தப்பியோடிய குற்றவாளியை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துத் தன்னிடம் கொண்டு வருமாறு உதயன் தன் காவலாளிகளைப் பார்த்துக் கத்தினான். வீரர்கள் அரண்மனையிலிருந்து தன்னை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்ததைக் கர்ணன் பார்த்தான். ஒரு கப்பல் அந்தத் துறைமுகத்தில் தன் பாய்மரங்களை விரித்துவிட்டுக் கொண்டிருந்தது. துறைமுகத்திற்கும் கப்பலுக்கும் இடையே இருந்த மரப் பாலம் உயர்த்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, அக்கப்பல் அங்கிருந்து நகரத் துவங்கியது. பெரிதாகிக் கொண்டிருந்த இடைவெளியைக் கர்ணன் தாண்டிக் குதித்து, எப்படியோ கப்பலில் வந்து விழுந்தான்.

“ஏய்! யார் நீ?” என்று ஒரு குரல் உறுமியது.

அழுக்கான மஞ்சள் நிறத் தலைமுடியுடன் ஓர் உயரமான காட்டுமிராண்டி அந்தக் கப்பலின் முன்புறத்தில் நின்று கொண்டிருந்ததைக் கர்ணன் பார்த்தான். அந்த நபரின் தோல் ஒரு பேயைப்போல வெளிறிப் போய் இருந்தது. ‘அந்நியன்,’ என்று கர்ணன் நினைத்தான். அவனுடைய பேச்சின் ஒலியழுத்தத்தைக் கவனித்தக் கர்ணன், அவன் கிரேக்க நாட்டைச் சேர்ந்த காட்டுமிராண்டியாக இருப்பான் என்று ஊகித்தான். அந்தப் பெரிய உருவத்துக்காரன் கர்ணனை நெருங்கி வந்து உற்றுப் பார்த்தான். “ஏய், நேற்றைய போட்டியில் மிகச் சிறந்த வீரனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன்தானே நீ? தர்ம . . . என்ன பட்டம் அது?” என்று கொச்சைத் தமிழில் கேட்டான்.

“ஐயா . . . இந்தக் கப்பல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?” என்று கர்ணன் கிரேக்க மொழியில் சரளமாகக் கேட்டான்.

“நீ என்னுடைய மொழியைப் பேசுகிறாயே? நீ எங்கள் நாட்டைச் சேர்ந்தவனா? . . . இல்லை, அப்படி இருக்க முடியாது . . . உன் தோலின் நிறம் கருப்பாக இருக்கிறது. நான் இந்தக் கப்பலின் தலைவன். நாங்கள் மிளகையும், சமையலுக்கான பிற வாசனைப் பொருட்களையும் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறோம்,” என்று அவன் பதிலளித்தான். தங்கள் கப்பலுக்குள் அத்துமீறி நுழைந்திருந்தவனை விசாரிப்பதற்காக வந்த மற்றவர்களை அவன் அங்கிருந்து விரட்டினான்.

சேர வீரர்கள் கடற்கரையில் அணிவகுத்துக் கொண்டிருந்ததையும், இளவரசன் உதயன் தன் வில்லாளிகளை நிலைப்படுத்திக் கொண்டிருந்ததையும் கர்ணன் கவனித்தான். நிலையான காற்றில் கப்பல் வேகம் பிடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஏன் தன்னைத் துரத்திப் பிடிப்பதற்குப் படகுகள் எதையும் அனுப்பவில்லை என்று கர்ணன் வியந்தான். கடற்கரையில் நின்ற அசுர வீரர்கள் குழப்பமடைந்தனர். ஆனால் தப்பியோடிக் கொண்டிருந்த ஆள்மாறாட்டக்காரனைப் பிடிப்பதற்கு, இளம் இளவரசனான உதயன், நூறடி நீளம் கொண்ட பாம்புப் படகுகளை அனுப்பி வைக்க விரும்பினான். பாம்புப் படகுகள் மிக வேகமான போர் இயந்திரங்கள். ஒவ்வொரு படகிலும் நூறு நபர்கள் துடுப்பிடும் விதத்தில் அது அமைக்கப்பட்டிருந்தது. ஒரே ஒரு பாம்புப் படகு இந்த மந்தமான கப்பலை முந்திச் சென்று தடுத்து நிறுத்துவதற்கு அதிக நேரம் பிடித்திருக்காது. ஆனால் கடலைக் கடந்தால் சாதியை இழக்க நேரிடும் என்று பரசுராமன் ஆணையிட்டிருந்தான். ஒரு சூத்திரனைப் பிடிப்பதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒரு தீண்டத்தகாதவனாக வாழ அவர்கள் யாரும் தயாராக இருக்கவில்லை. பரசுராமன் ஒருவனால் மட்டுமே அவர்களுக்கு அனுமதியளிக்க முடியும். ஆனால் அவனோ ஆழ்மயக்க நிலையில் உணர்விழந்து கிடந்தான். வெறுப்படைந்த இளவரசன், அந்த அன்னிய நாட்டுக் கப்பல்மீது அம்புகளை எறியுமாறு தன் வில்லாளர்களுக்கு உத்தரவிட்டான். அந்த அம்புகளால் கப்பலை நெருங்க முடியாததைக் கண்ட கர்ணன் நிம்மதிப் பெருமூச்செறிந்தான்.

“என்ன கொடுமை இது! அவர்கள் ஏன் நம்மீது அம்புகளை எறிகின்றனர்? அவர்கள் ஏன் உன்னைத் துரத்துகின்றனர்?” என்று கப்பல் தலைவன் கர்ணனிடம் கேட்டான்.

முந்தைய நாள் தனக்குப் பரிசளிக்கப்பட்டத் தங்கச் சங்கிலிகளில் ஒன்றைக் கழற்றி, கர்ணன் அந்தக் கிரேக்க நாட்டவனின் கைகளில் வைத்தான். “ஐயா . . . நான் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்தவன். நான் ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன். தயவு செய்து என்னைப் பிரபாச நகரிலோ அல்லது துவாரகையிலோ இறக்கி விட்டுவிடுங்கள்.

அங்கிருந்து நான் என்னுடைய நகரத்திற்கான வழியைக் கண்டுபிடித்துச் சென்றுவிடுவேன். தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள். என் வாழ்வு உங்கள் கையில்தான் இருக்கிறது."

கப்பல் தலைவன் அந்த உயரமான இளைஞனைக் குழப்பத்தோடு பார்த்தான். நேற்று இவனைக் கதாநாயகனாக உள்ளூர் மக்கள் கொண்டாடினர். ஆனால் இன்று அதே மக்கள் அவன்மீது ஏன் அம்புகளை எய்து கொண்டிருந்தனர்? இறுதியாக அவன், "நான் உன்னை துவாரகையில் இறக்கிவிடுகிறேன். அங்கிருந்து பருத்திகளை ஏற்றிக் கொள்வதற்காக நாங்கள் அங்கு எப்படியும் நிற்க வேண்டியுள்ளது. எல்லோரையும் விட்டுவிட்டு உன்னை ஏன் அவர்கள் கொல்ல விரும்புகிறார்கள்? நேற்று நீ மிகச் சிறப்பாகப் போட்டியிட்டாய். நீ அவர்களுடைய கதாநாயகன்."

"நான் ஒரு சூத்திரன். நான் தாழ்ந்த சாதியில் பிறந்தவன். ஆயுதக் கலையைக் கற்பதற்கு எனக்கு அனுமதி இல்லை. கற்றுக் கொண்ட குற்றத்திற்காக அவர்கள் என்னைக் கொல்ல விரும்புகின்றனர்."

"என்ன! கற்றுக் கொள்வது உங்கள் நாட்டில் ஒரு குற்றமா? நீங்களெல்லாம் நாகரீகம் அற்றவர்கள். இளைஞனே, நான் உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். நீ என்னுடைய நாட்டிற்கு வந்து, நேற்று நீ வெளிப்படுத்திய திறமையில் பாதி திறமையை மட்டும் அங்கு வெளிப்படுத்து. நீ ஒரு தலைசிறந்த வில்லாளன். என்னுடன் வந்து, உன் திறமைக்காக நீ எவ்வாறு கௌரவிக்கப்படுகிறாய் என்று பார். அங்கு நீ உன்னுடைய திறமையை வெளிப்படுத்தினால், ஒரு மாநிலத்தின் ஆளுனராகக்கூட உன்னால் ஆக முடியும். உன் நாட்டினர் உன்னைக் கொல்ல விரும்புகின்றனர். மாறாக, நீ என்னுடன் வந்துவிடு."

சேர சாம்ராஜ்யத்தின் அழகான, மனத்தை மயக்கிய கடற்கரைகளில் நின்று கொண்டு தன்னைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்த தென்னக வீரர்களைக் கர்ணன் திரும்பிப் பார்த்தான். கடுஞ்சீற்றமும் பாரபட்சமும் அவர்களுடைய கண்களை மறைத்துக் கொண்டிருந்தன. தான் ஒரு தாழ்ந்த சாதியில் பிறந்திருந்த ஒரே காரணத்திற்காக, ஒரு திறமையைக் கற்றுக் கொண்டு, அதை எல்லோர் முன்னிலையிலும் வெளிப்படுத்தி, அவர்களுடைய சொந்த விளையாட்டில் தான் அவர்களைத் தோற்கடித்திருந்ததற்காக அவர்கள் தன்னைக் கொல்ல விரும்பியதை அவன் எண்ணிப் பார்த்தான். 'இதுதான் என் நாட்டிலுள்ள நிலைமை. கனவு காணத் துணிந்த ஓர் ஏழைச் சூத்திரனை, ஒரு தேரோட்டியின் மகனை அவர்கள் எவ்வளவு மோசமாக நடத்துகின்றனர் பார்,' என்று கர்ணன் வெறுப்போடு நினைத்தான். கண்ணீர்த் துளிகள் அவனுடைய கண்களை மறைத்தன. தென்னக ராஜ்யங்களின்

கூட்டமைப்பின் வெறியர்களிடமிருந்து தான் இப்போதைக்கு வேண்டுமானால் தப்பியிருக்கக்கூடும், ஆனால் தன் தாய்நாட்டில் தனக்கு என்ன நிகழுமோ என்று எண்ணி அவன் பயந்தான். அவனுடைய ஏமாற்று வேலை பற்றிய செய்தி விரைவில் அங்கு சென்றடைந்துவிடும். ஒரு சத்திரியனாக மாற விரும்பிய ஒரு தரோட்டியை மக்கள் பரிகசிப்பார்கள். சரியான பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறப்பதற்கான அதிர்ஷ்டம் ஒருவனுக்கு இல்லையென்றால், அறிவாலும் திறமையாலும் என்ன பயன்? இனி ஒரு தேரோட்டியாகக்கூடத் தனக்கு வேலை கிடைக்குமா என்ற சந்தேகம் அவனுக்கு முளைத்தது. எதிர்காலம் இருட்டாகத் தெரிந்தது. 'நான் ஒரு தீண்டத்தகாதவன் என்று என் நாடு கருதுகிறது. கூட்டமைப்பின் பேராற்றல்மிக்க அரசர்கள் அனைவரும் என்னைக் கொல்லத் துடிக்கின்றனர். இந்த நிலையில், நாகரீகமற்றக் காட்டுமிராண்டி என்று நான் கருதிய ஓர் அன்னியன், மகத்துவத்தை ஒரு தங்கத் தட்டின்மீது வைத்துத் எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறான்,' என்று அவன் நினைத்தான்.

கர்ணனின் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரைக் கண்ட அந்தக் கப்பல் தலைவன், அவனுடைய கையை மென்மையாகத் தொட்டு, "இளைஞனே, ஏதாவது பிரச்சனையா?" என்று கேட்டான்.

கர்ணன் அந்த கிரேக்கனை நோக்கித் திரும்பினான். "ஐயா, நீங்கள் எனக்குக் கொடுத்த வாய்ப்பிற்கு நன்றி. ஆனால் இது என் நாடு, என் கலாச்சாரம், என் மதம். நீங்கள் எனக்கு வழங்கிய வாய்ப்பை ஏற்றுக் கொள்ள என் மனத்தின் ஒரு மூலையில் சபலம் ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் இந்நாட்டில் என்னைப் போன்ற கோடிக்கணக்கானவர்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளனர். ஆனால் இந்த உலகிலுள்ள எதற்காகவும் என்னால் என் நாட்டைவிட்டு வர முடியாது. சாதி எனும் குறுகிய வட்டத்திற்கு அப்பால் சிந்திக்க முடியாத அரசர்கள் அனைவருக்கு இடையேயும், சாதியைப் பற்றிக் கவலைப்படாமல் திறமையை அங்கீகரித்து மக்களை மனிதர்களாக நடத்துகின்ற சிலர் இருக்கத்தான் செய்வார்கள். ஒருவேளை அப்படி யாரும் இல்லையென்றால், ஒரு கொடூரமான சாதி அமைப்புமுறையின் கோரப் பிடிகளில் சிக்கி மாண்டு போன பலரைப்போல நானும் மடிவேன். ஆனால் என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, நான் என் தாய்நாட்டைவிட்டு வர மாட்டேன். என் தலைவிதி இங்கேதான் இருக்கிறது."

தன்னுடைய வசீகரமான முகத்தில் வழிந்தோடத் துவங்கியிருந்த கண்ணீரைக் கண்டு அவமானம் கொண்டு, தொலைவில் ஒளிவீசிக்

கொண்டிருந்த கதிரவனை நோக்கிக் கர்ணன் தன் பார்வையைத் திருப்பினான். கப்பல் தலைவன் இவை எதையும் நம்ப முடியாதவனாகத் தன் தலையை ஆட்டிவிட்டு, இப்படிப்பட்ட ஒரு பின்தங்கிய நாட்டால் எப்படி இவனைப் போன்ற இளைஞர்களை உருவாக்க முடிந்தது என்று வியந்தான். பலராமன் வலியோடும் கனவுகளோடும் கட்டியெழுப்பியிருந்த புதிய நம்பிக்கை நகரமான துவாரகையை நோக்கி அக்கப்பல் பயணிக்கத் துவங்கியிருந்தது.

14

குருதட்சணை

செங்குத்துப் பாறையின்மீதிருந்து ஆற்றில் குதித்த ஏகலைவன் பிழைத்துக் கொண்டான். ஆனால் அவன் முழுமையாக நலமடைவதற்கு இரண்டு நீண்ட மாதங்கள் ஆயின. நாகர்களின் முகாமிலிருந்து அவன் அதிர்ஷ்டவசமாகத் தப்பி வந்த பிறகு, மீண்டும் காட்டினுள்ளே நெடுந்தூரம் செல்லாமல் இருப்பது குறித்து அவன் எச்சரிக்கையாக இருந்தான். மாறாக, இளவரசர்களுக்கான பயிற்சித் திடலின் எல்லையோரமாக இருந்த ஒரு மரத்தின்மீது ஏறி அவன் அமர்ந்து கொண்டான். துரோணர் தன் மாணவர்களைப் பயிற்றுவித்ததை அவன் இந்த இடத்திலிருந்து கவனித்தான். பயிற்சி முடிந்து மாலையில் அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு துரோணர் அங்கிருந்து சென்றவுடன், ஏகலைவன் மரத்திலிருந்து கீழே இறங்கி, தான் பார்த்திருந்தவற்றைப் பயிற்சி செய்யத் துவங்கினான். அவனுடைய திறமைகள் மெல்ல மெல்ல மேம்பட்டன. அவன் ஒரு மிகச் சிறந்த வேடுவனாக உருவானான். அவனுடைய சித்திக்கும் அவளுடைய குழந்தைகளுக்கும் பசி ஒரு கடந்தகால விஷயமாக ஆகிப் போனது.

ஒருநாள் மாலையில் ஒரு மானை வேட்டையாடி அவன் தன் சித்தியிடம் கொண்டு கொடுத்தான். விண்மீன்கள் நிரம்பிய வானத்திற்குக் கீழே, நெருப்பின்மீது அந்த மான்கறி வறுபட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினர். ஏகலைவனின் ஒன்றுவிட்டச் சகோதரர்கள் வளர்ந்து கொண்டிருந்தனர்.

தான் கைவசப்படுத்தியிருந்த திறமைகளில் சிலவற்றை ஏகலைவன் அவர்களுக்கு மகிழ்ச்சியாகக் கற்றுக் கொடுத்தான். தொலைந்து போன சிறுவன் ஜரனைப் பற்றியும் அவர்கள் பேசினர். அந்த முட்டாள் எங்கே ஓடிப் போயிருக்க முடியும் என்று அவர்கள் வியந்தனர். அவனை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து மீண்டும் தங்கள் குடும்பத்திற்குக் கூட்டி வருவதென்று ஏகலைவன் ஏற்கனவே தீர்மானித்திருந்தான். அவர்கள் இன்னும் ஏழைகளாகத்தான் இருந்தனர். ஆனால் கூடுதலாக ஒருவனுக்கு உணவளிக்கக்கூடிய வசதி அவர்களுக்கு இருந்தது. ஏகலைவனின் பசியாறிய வயிறு, அவனுள் இருந்த தாராள குணத்தைத் தூண்டியது.

நாட்டிலிருந்த எந்தவொரு வில்லாளனையும் எதிர்த்துப் போட்டியிடக்கூடிய அளவுக்கு ஏகலைவன் ஒருமித்தக் கவனக்குவிப்புடன் வில் வித்தைத் திறமைகளைக் கைவசப்படுத்தினான். இளவரசர்களின் பட்டமளிப்பு விழாவிற்கான நாள் அறிவிக்கப்பட்டிருந்தது பற்றிய வதந்திகள் அவனுடைய காதுகளை எட்டின. அந்த நாளில் இளவரசர்களின் திறமைகளைச் சோதிப்பதற்கான போட்டிகள் நடைபெறும் என்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். தன்னால் அப்போட்டிகளில் கலந்து கொள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவன் ஏங்கினான். வில் வித்தையில் அர்ச்சுனனோடு போட்டியிட்டு அவன் தன் திறமைகளை வெளிப்படுத்தத் துடித்தான். அர்ச்சுனனை அவனுடையை சொந்த விளையாட்டில் தோற்கடித்து, துரோணரைத் தன்னால் ஆச்சரியப்படுத்த முடியும் என்று அவன் நினைத்தான். குருநாதர் துரோணர் தன்னைக் கட்டித் தழுவி, தன்னுடைய திறமையை முன்பே அங்கீகரிக்காமல் போனது தவறு என்று கூறித் தன்னிடம் வருத்தம் தெரிவிக்கின்ற நாளைப் பற்றி அந்த வேடுவச் சிறுவன் கனவு கண்டான்.

ஏகலைவன் களிமண்ணில் துரோணரின் சிலை ஒன்றைச் செய்து, அதை ஒரு வெற்றிடத்தில் வைத்தான். ஒவ்வொரு நாளும் காலையில் முதல் வேலையாக அவன் அந்தச் சிலையை வழிபட்டுவிட்டு, பிறகு மூன்று மணிநேரம் பயிற்சி செய்தான். அதன் பிறகு, திடலில் நடைபெற்றப் பயிற்சியைக் கவனிக்கச் சென்றான். ஏகலைவன் துரோணரைத் தான் ஒருபோதும் அறிந்திராத ஒரு தந்தையாகத் தன் மனத்தில் வரித்தான். அவர் தன்னை நடத்தியிருந்த விதம் குறித்து அவனுக்குக் கோபம் இருந்தாலும்கூட, அந்த மாபெரும் வீரர்மீது அவன் கொண்டிருந்த பிரமிப்பு அர்ப்பணிப்பாக மாறியது. அவன் அர்ச்சுனனைக் கண்டு பொறாமை கொண்டான். துரோணரின் ஒட்டுமொத்த அன்பையும் அவன் ஒருவனே கைவசப்படுத்தியிருந்ததாக

ஏகலைவன் நினைத்தான். துரோணரும் அந்த மூன்றாவது பாண்டவ இளவரசனின்மீதுதான் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அர்ச்சுனனைத் தவிர, துரோணர் அக்கறை காட்டிய ஒரே நபர் அவருடைய மகன் அசுவத்தாமன் மட்டும்தான் என்று ஏகலைவன் நினைத்தான். ஆனால் அவர்கள் இருவரில் அர்ச்சுனன்தான் அவருக்கு மிகவும் பிடித்தமானவன் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அர்ச்சுனனின் தன்னம்பிக்கையும் அகங்காரமும் அசுவத்தாமனிடம் இல்லாமல் இருந்ததை ஏகலைவன் பார்த்தான். துரோணர் அசுவத்தாமனை அடிக்கடிச் சிறுமைப்படுத்திப் பேசினார். அவன் அர்ச்சுனனுடன் போட்டியிட்டபோதெல்லாம், அர்ச்சுனனின் திறமைகளோடு அவனுடைய திறமைகளை ஒப்பிட்டு, அவனுடைய திறமைகளை அவர் தரம் தாழ்த்திப் பேசினார். அசுவத்தாமன் தன் தந்தையின் பாராட்டிற்காக ஏங்கினான், ஆனால் அது அவனுக்கு அரிதாகவே கிடைத்தது.

ஒருநாள் அதிகாலையில், ஏகலைவன், இளவரசன் துரியோதனனைத் தற்செயலாகப் பார்த்தான். முந்தைய நாள் பயிற்சியில் இளவரசர்களால் பயன்படுத்தப்பட்டு, பயிற்சித் திடலில் சிதறிக் கிடந்த அம்புகளைத் தன் சொந்தப் பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் அவற்றைச் சேகரிப்பதற்காக ஏகலைவன் அந்தப் பயிற்சித் திடலுக்கு வந்திருந்தான். வலுவான தசைகளுடன்கூடிய ஓர் உயரமான மனிதனும் ஓர் அழகான பெண்ணும் ஏற்கனவே அங்கு இருந்ததைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். அவர்கள் இருவரும் இளவரசன் துரியோதனனுடனும், அவனுடைய சகோதரன் துச்சாதனனுடனும், நண்பன் அசுவத்தாமனுடனும் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் ஏகலைவனுக்கு முன்பாகவே அங்கு வந்து, தண்டாயுதத்தைக் கொண்டு பயிற்சி செய்து கொண்டிருந்தனர். சுவாரசியமடைந்த ஏகலைவன், அடுத்த நாளிலிருந்து அதிகாலையிலேயே பயிற்சித் திடலுக்கு வரத் தொடங்கினான். கிட்டத்தட்ட ஒரு மாதமாக, அந்த உயரமான மனிதன், ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் துரியோதனனுக்கும் துச்சாதனனுக்கும் அசுவத்தாமனுக்கும் பயிற்சியளித்தான். அவனுடன் வந்த இளம்பெண் கண்களுக்கு விருந்தாக அமைந்தாள். அவள் தன் தலையைத் திருப்பிக் காட்டின் திசையில் பார்த்தபோதெல்லாம், ஏகலைவனின் இதயம் வேகமாகத் துடித்தது. அந்த உயரமான மனிதன் யாதவ இனத்தின் தலைவன் பலராமன் என்பதையும், அப்பெண் அவனுடைய சகோதரி சுபத்திரை என்பதையும் அவன் தெரிந்து கொண்டான்.

துரியோதனனிடத்திலும் அவனுடைய சகாக்களிடத்திலும் ஒரு

மாற்றத்தை ஏகலைவன் பார்த்தான். அது என்னவென்று முதலில் அவனுக்குப் புலப்படவில்லை. ஆனால் அந்த மாதக் கடைசியில் எல்லோருக்கும் அது வெளிப்படையாகத் தெரிந்தது. பட்டத்து இளவரசன் துரியோதனன், வகுப்பில் பீமனுடனான சண்டைப் பயிற்சியில், அவனை நன்றாகச் சமாளித்துத் தாக்குப்பிடித்தான். துச்சாதனனும் அசுவத்தாமனும்கூட பீமனைச் சிறப்பாகச் சமாளித்தனர். வலிமையும் துணிச்சலும் நிரம்பிய கிணறு ஒன்றை அவர்கள் தங்களுக்குள் கண்டுபிடித்திருந்ததுபோலவும், தங்கள் விருப்பப்படி அவர்கள் அதிலிருந்து இறைத்துக் கொண்டிருந்ததுபோலவும் தோன்றியது. காற்று இப்போது மெல்ல மெல்லத் திசை மாறி வீசத் துவங்கியிருந்தது. இது துரோணருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. துரியோதனன் முதன்முறையாக பீமனைத் தோற்கடித்தபோது, ஏகலைவன் தான் மறைந்திருந்த இடத்திலிருந்து மகிழ்ச்சிக் கூச்சலிட விரும்பினான். துரியோதனன் சாதித்திருந்த விஷயம் அவனை உத்வேகப்படுத்தியது. பீமனின் அளவில் பாதி அளவே இருந்த இளவரசன் துரியோதனன், பேராற்றல் வாய்ந்த அந்தப் பாண்டவ இளவரசனோடு தன் தண்டாயுதத்தைக் கொண்டு சண்டையிட்டது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. துரியோதனன் நேர்த்தியாகவும் விரைவாகவும் செயல்பட்டான். ஆனால் பீமனிடம் முரட்டுத்தனமான வலிமையும் சக்தியும் இருந்தன. வேகமாக ஓடி வந்த ஒரு யானையைப்போல பீமன் தாக்கினான். ஆனால் துரியோதனனிடம் ஒரு புலியின் நளினம் குடிகொண்டிருந்தது. துரியோதனனுக்கும் பீமனுக்கும் இடையேயான போட்டிகளில் துரியோதனன் வெற்றி பெறத் துவங்கியிருந்தது பாண்டவர்களுக்குக் கவலையை ஏற்படுத்தியது. தங்கள் வாழ்க்கை இனி முற்றிலுமாக மாறவிருந்ததை அவர்கள் அறிந்தனர்.

துரியோதனன் பீமனை முதன்முறையாக வீழ்த்திய நாள் ஏகலைவனின் மனத்தில் எப்போதுமே தெள்ளத் தெளிவாக நிலைத்திருந்தது. கிட்டத்தட்ட ஒரு மாதம் கடந்துவிட்டிருந்தது. யாதவத் தலைவனான பலராமன் அஸ்தினாபுரத்திலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. காட்டினுள்ளே வெகுதூரத்தில் அமைந்திருந்த ஒரு குளுமையான நீரோடைக்குள் கால்களை மூழ்கடித்துக் கொண்டு துரியோதனனும் சுபத்திரையும் இவ்வுலகை மறந்து அரட்டையடித்துக் கொண்டிருந்ததை ஏகலைவன் பார்த்தான். அவனுக்குப் பொறாமையாக இருந்தது. ஆனால் அவன் ரகசியமாக அவர்களைப் பின்தொடர்ந்தான். யாரும் பார்த்துவிடாதபடி காட்டின் இலை தழைகளுக்கு நடுவே தன்னை எவ்வாறு மறைத்துக்

கொள்வது என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் சுபத்திரையைப் பார்த்துப் பெருமூச்செறிந்தான். இப்படிப்பட்ட அழகு அவனுக்கு எட்டாக் கனியாக இருந்தது. அவன் வெறும் வேடுவன். அவளும் அந்த இளவரசனும் ஒரு வேறுபட்ட உலகைச் சேர்ந்தவர்கள். தன் கைகளில் தாங்கிப் பிடிப்பதற்கு அவளைப் போன்ற ஒரு பெண் தனக்குக் கிடைப்பாளா என்று அவன் வியந்தான். அவன் தன்னுடைய கருப்பான உடலைப் பார்த்துவிட்டு, பிறகு சுபத்திரையின் பொன்னான முகத்தைப் பார்த்தான். தனக்கு அது ஒருபோதும் வாய்க்கப் போவதில்லை என்று அவன் முடிவு செய்தான்.

திடீரென்று, இளவரசன் அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றான். "அன்பே, என்னை மன்னித்துவிடு. நாம் இங்கு செய்து கொண்டிருப்பது சரியல்ல. என் குருவான பலராமனுக்கு என்னால் நம்பிக்கைத் துரோகம் செய்ய முடியாது," என்று கூறிய அவனுடைய ஆழமான குரலில் வேதனையும் விரக்தியும் எதிரொலித்தன.

"என் சகோதரனுக்கும் இதற்கும் என்ன தொடர்பு?"

"சுபத்திரா, நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உன் சகோதரனிடம் முறையாக உன்னைப் பெண் கேட்பதுதான் மரியாதையான செயல். நான் அவ்வாறு செய்யட்டுமா?"

சுபத்திரையின் கோபம் மறைந்து, அவளுடைய முகம் நாணத்தால் சிவந்தது. நட்சத்திரங்களைப்போல ஒளிவீசிய கண்களுடன் இளவரசனை அவள் ஏறிட்டுப் பார்த்துவிட்டு அவனை இறுக்கமாகக் கட்டியணைத்தாள். துரியோதனன் அவளுடைய இதழ்களின்மீது மென்மையாக முத்தமிட்டான்.

புதர்களுக்கு இடையே மறைந்து நின்ற ஏகலைவன் தன்னைக் குறித்து அவமானம் கொண்டான். தெருவில் சென்ற பெண்களை இழுத்துத் தங்கள் காம வெறியைத் தணித்துக் கொண்ட அரசர்களையும் இளவரசர்களையும் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் இங்கு, தன் காதலி தன்னைக் கொடுக்கத் தயாராக இருந்தும்கூட, இளவரசன் துரியோதனன் அவளுடைய கௌரவத்தைப் பாதுகாக்க விரும்பினான்.

சுபத்திரை இளவரசனை விலக்கித் தள்ளினாள். "துரியோதனா, நம் காதல் நிறைவேறாமல் போய்விடுமோ என்று நான் பயப்படுகிறேன். என் சகோதரனை நினைத்தால் எனக்கு பயமாக இருக்கிறது . . ."

"ஏன் பயப்படுகிறாய்? பலராமன் நம் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை."

"இல்லை, இல்லை . . . நான் இங்கு பலராமனைப் பற்றிப்

பேசவில்லை. என்னுடைய இன்னொரு சகோதரன் கிருஷ்ணனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவன் உன்னை வெறுக்கிறான்."

"அவன் என்னை வெறுக்கிறானா? நான் அவனைப் பார்த்ததுகூட இல்லை. அவனுடைய அழகான சகோதரியைக் காதலிப்பதைத் தவிர, அவனுடைய வெறுப்பைச் சம்பாதிக்கும் அளவுக்கு நான் அப்படியென்ன செய்துவிட்டேன்?" துரியோதனனின் உதடுகளில் ஒரு குறும்புத்தனமான புன்னகை மலர்ந்தது.

"அது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த பயம் எப்போதும் எனக்கு இருக்கிறது. நீ ஒரு தீயவன் என்றும், நீ உன் நாட்டையும் மதத்தையும் அழிப்பதற்காகப் பிறந்துள்ளவன் என்றும் அவன் கூறுகிறான். ஒருசில புரோகிதர்களும் துறவிகளும் அடங்கிய குழு ஒன்று அவனைச் சுற்றி இருக்கிறது. உன்னைப் பற்றிய மோசமான விஷயங்களை மட்டுமே அவர்கள் அவனிடம் எப்போதும் கூறுகின்றனர்."

"என்ன மாதிரியான விஷயங்கள்? நான் எப்படிப்பட்டத் தீயவன் என்றா? சுபத்திரா, என்னை நன்றாக உற்றுப் பார். என்னுடைய தலையில் கொம்புகள் துருத்திக் கொண்டிருப்பதை உன்னால் பார்க்க முடிகிறதா?" என்று கேட்டுவிட்டு, துரியோதனன் வாய்விட்டுச் சிரித்தான்.

"சிரிக்காதீர்கள் இளவரசே. குறிப்பிட்ட சில வட்டங்களில் நீங்கள் எப்படிப்பட்டப் பெயரைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. உங்களைப் பற்றிய மோசமான கதைகளைக் கேள்விப்பட்டிருந்த நான், உங்களை நேரில் பார்ப்பதற்காகத்தான் இங்கு வந்தேன். தன் ஒன்றுவிட்டச் சகோதரனை விஷம் வைத்துக் கொல்ல முயற்சித்து அந்தக் குற்றத்திலிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டவர் நீங்கள் என்றும், புனித நூல்கள் பற்றி எந்த அக்கறையும் இல்லாத ஆணவக்காரர் நீங்கள் என்றும், நீங்கள் பிராமணர்களை மதிப்பதில்லை என்றும் உங்களைப் பற்றிப் பல கதைகள் உலா வருகின்றன. துரியோதனா, உங்கள் புராணம் நீண்டு கொண்டே போகிறது. உண்மையைக் கூறினால், உங்களைப் பற்றிக் கூறப்பட்ட விஷயங்களைத் தொடர்ந்து கேட்டு வந்த நான், உங்களால் ஈர்க்கப்பட்டேன். நாம் சந்திப்பதற்கு முன்பாகவே நான் உங்கள்மீது காதல் கொள்ளத் துவங்கியிருந்தேன். உங்களைக் காதலித்து உங்களைத் திருத்துவதுபோல நான் கற்பனை செய்து வைத்திருந்தேன். ஆனால் உங்களை அவர்கள் உருவகப்படுத்தி வைத்திருந்த அளவுக்கு நீங்கள் அவ்வளவு மோசமான பேயாக இல்லாததைக் கண்டு நான் ஏமாற்றமடைந்தேன். ஆனால் நீங்கள் ஒரு முட்டாள் — அதுதான் உங்களைப் பற்றிய சரியான விவரிப்பு. எல்லாம் கச்சிதமாக இருக்க

வேண்டும் என்று விரும்புகிற நீங்கள், இவ்வுலகில் வாழ்வதற்கு ஏற்றவர் அல்ல. இளவரசே, கற்றறிந்த மக்கள் வடித்து வைத்துள்ள கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் நீங்கள் ஏன் மீறுகிறீர்கள்?" என்று கேட்ட சுபத்திரை அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அன்பிற்கும் பயத்திற்கும் இடையே அவளுக்குள் நடந்து கொண்டிருந்த போராட்டம் அவளுடைய முகத்தில் தெரிந்தது.

"சுபத்திரா, அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. நீ கூறியது சரிதான். நான் ஒரு முட்டாள். நான் அகங்காரம் பிடித்தவன் என்பதாலோ, எல்லோரையும்விட எனக்கு அதிகமாகத் தெரியும் என்பதாலோ நான் யாரோடும் சண்டையிடுவதில்லை. நான் சிலருடன் சண்டையிடுவதற்குக் காரணம், மரியாதை கொடுக்கும் அளவுக்கு அவர்களிடம் எதுவும் இல்லாமல் போவதுதான். கிருபர், பீஷ்மர், வியாசர், விதுரர் போன்றோரிடம் நான் ஒருபோதும் சண்டையிட்டதில்லை. ஆனால் தௌமியனையும் அவனுடைய கூட்டாளிகளையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது."

"நம்முடைய உறவு தெரிய வந்தால், கிருஷ்ணன் எப்படி நடந்து கொள்வானோ என்று எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது." துரியோதனன் இதற்கு எந்த பதிலும் கூறாமல், அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

நீரோடைக்கு அருகே இருந்த சிறிய வெற்றிடத்தை நோக்கி யாரோ நடந்து வந்து கொண்டிருந்த சத்தத்தைக் கேட்டு ஏகலைவன் எச்சரிக்கை அடைந்தான். அசுவத்தாமனும் துச்சாதனனும் பின்தொடர, பலராமன் அந்த இடத்தை நெருங்கிக் கொண்டிருந்ததை அவன் கண்டான். அவர்கள் அங்கு வந்தடைந்தபோது, துச்சாதனனாலும் அசுவத்தாமனாலும் தங்கள் சிரிப்பை அடக்க முடியவில்லை. சுபத்திரை திடுக்கிட்டுக் கத்தினாள். அப்போதுதான் துரியோதனன் அவர்களைப் பார்த்தான். மிகவும் தர்மசங்கடமாக உணர்ந்த அவன், தகுந்த வார்த்தைகளுக்காகப் போராடினான். பலராமன் தன் கைகளைத் தன் மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு நின்றான்.

சிரித்துக் கொண்டிருந்த தன் நண்பர்களை துரியோதனன் பதற்றத்தோடு பார்த்தான். "நான் . . . என்னை . . . மன்னித்துவிடுங்கள் . . ." பலராமன் அவனை முறைத்துப் பார்த்தபடி நின்றான். "நான் உங்கள் சகோதரியை மணமுடிக்க விரும்புகிறேன் . . ."

"நீ என் சகோதரியை மணமுடிக்க விரும்புவது குறித்து என்னிடம் மன்னிப்புக் கேட்கிறாயா?" என்று பலராமன் ஒரு தீவிரமான முகத்துடன் கேட்டபோது எல்லோரும் சிரித்துவிட்டனர். "துரியோதனா, நாங்கள் இன்று காசிக்குப் புறப்படுகிறோம். மழைக்காலம் முடிந்த பிறகு நாங்கள்

துவாரகைக்குத் திரும்புவோம். நீ உன் குடும்பத்துப் பெரியவர்களுடன் துவாரகைக்கு வா. முறைப்படி நாம் நிச்சயதார்த்தம் செய்து கொள்ளலாம்."

துரியோதனனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. தன்னைச் சுற்றிலும் தெரிந்த மகிழ்ச்சியான முகங்களை அவன் பரவசத்தோடு பார்த்தான். துணிச்சல்காரப் பெண்ணான சுபத்திரை, இப்போது வெட்கப்பட்டுக் கொண்டு நின்றது ஒரு கணம் அவனைத் தடுமாறச் செய்தது. அவன் அவளைப் பிடித்து இழுத்து முத்தங்களால் அவளைக் குளிப்பாட்ட விரும்பினான். மற்றவர்கள் அங்கிருந்து மாயமாய் மறைந்து, தங்கள் காதலைக் கொண்டாடுவதற்குத் தங்களைத் தனியாக விட்டுவிடக்கூடாதா என்று ஒரு கணம் அவன் ஏங்கினான்.

"துரியோதனா, இப்போதைக்கு உன் படிப்பில் கவனம் செலுத்து. ஒருசில மாதங்களில் பட்டமளிப்பு விழா வரவிருக்கிறது. அஸ்தினாபுர மக்களின் முன்னிலையில் நீ உன்னை ஒரு முட்டாளாக்கிக் கொள்வதை நான் விரும்பவில்லை. உனக்கு எந்தவிதமான கவனச்சிதறலும் ஏற்படாமல் இருப்பதற்காக நான் உன் காதலியை என்னுடன் காசிக்கு அழைத்துச் செல்கிறேன். சுபத்திரா, துரியோதனனிடமிருந்து விடைபெற்றுக் கொள். நாம் இன்று மதியம் புறப்படவிருக்கிறோம்," என்று பலராமன் அந்த இளம் ஜோடியிடம் கூறினான்.

விடைபெற்றுக் கொள்வதற்கு அவ்வளவாக நேரம் இருக்கவில்லை. சுபத்திரை தன் கண்ணீர்க் கண்களுடன் துரியோதனனைப் பார்த்தபோது, அவன் உள்ளம் உருகியது. அழுவது ஆண்களுக்கு அழகல்ல என்பதால் அவன் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் போராடினான். அவளிடம் கூற அவனுக்கு ஓராயிரம் விஷயங்கள் இருந்தன, ஆனால் எந்த வார்த்தையும் அவன் உதடுகளை எட்டவில்லை. சுபத்திரை வெடுக்கென்று தன் கைகளை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு அங்கிருந்து நடந்தாள். சகோதரனும் சகோதரியும் அரண்மனையை நோக்கி நடந்து சென்றதை துரியோதனன் ஒரு தளர்ந்து போன இதயத்துடன் பார்த்தபடி நின்றான்.

"காதல் இளவரசனே, போதும் நிறுத்து! பயிற்சிக்கு நேரமாகிவிட்டது," என்று அசுவத்தாமன் கூறியபோதுதான் துரியோதனன் இவ்வுலகிற்குத் திரும்பி வந்தான்.

"பலராமனை நீங்கள்தான் இங்கே அழைத்து வந்தீர்களா?" துரியோதனன் தன் நண்பர்களின் தலைகளை ஒன்றோடொன்று மோத விரும்பினான்.

"ஆமாம், இந்தப் பைத்தியக்காரனின் யோசனைதான் அது," என்று துச்சாதனன் சிரித்துக் கொண்டே கூறினான். அசுவத்தாமன்

தர்மசங்கடமாகச் சிரித்தான்.

“முட்டாள்! நாங்கள் இருவரும் நெருக்கமாக . . .” தான் அதிகமாகப் பேசிவிட்டிருந்ததை உணர்ந்த துரியோதனன் தன் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினான்.

“நெருக்கமாக என்ன . . .?” என்று கேட்டுவிட்டு, அசுவத்தாமன் துச்சாதனனைப் பார்த்துக் கண்ணடித்தான்.

“நெருக்கமாக உட்கார்ந்து சிவபுராணத்தைப் படித்துக் கொண்டிருந்தார்கள், வேறென்ன?” என்று துச்சாதனன் பதிலளித்தான். பிறகு அவ்விரு இளைஞர்களும் உரக்கச் சிரித்தனர். துரியோதனனாலும் தன் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“கோமாளியே! நான் பலராமனை இங்கு அழைத்து வந்திருக்காவிட்டால், அவர்கள் இருவரும் இங்கிருந்து புறப்பட்டுப் போன பிறகு, நீ உன்னுடைய கரகரப்பான குரலில் சோகப் பாட்டுக்களைப் பாடித் திரிந்து கொண்டிருப்பாய். அவள் வேறு யாரேனும் ஓர் இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டிருப்பாள். நான் பலராமனை இங்கு அழைத்து வந்ததற்காக நீதான் எனக்கு ஒரு விருந்து கொடுக்க வேண்டும். ஆனால் உனக்கு என் ஆசிகளை வழங்க மறுக்கும் அளவுக்கு நான் அகங்காரம் பிடித்தவன் அல்ல. உன்னுடைய ஆழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்காக நீ என் பாதங்களில் விழுந்து வணங்கினாலும் அதை நான் பொறுத்துக் கொள்வேன்,” என்று அசுவத்தாமன் மிகவும் உன்னதமானவன்போலக் கூறினான்.

துரியோதனன் அவன்மீது பாய்ந்து, பரிகாசம் செய்து கொண்டிருந்த அவனுடைய முகத்தின்மீது ஓங்கிக் குத்தினான். சிறிது நேரத்தில் அந்த மூன்று நண்பர்களும் சிரித்துக் கொண்டும், பாடிக் கொண்டு, ஆடிக் கொண்டும், தங்களை முட்டாள்களாக்கிக் கொண்டும் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்களுடைய குதூகலக் கொண்டாட்டம் அவர்கள் அங்கிருந்து போன பிறகும்கூட அந்தக் காட்டில் நீண்டநேரம் எதிரொலித்தது. ஏகலைவன் தன் மறைவிடத்திலிருந்து வெளியேறி, அந்த வெற்றிடத்திற்கு வந்தான். சுபத்திரை பூசியிருந்த வாசனைத் திரவியத்தின் நறுமணம் காற்றில் இன்னும் நிறைந்திருந்தது. இவ்வளவு மகிழ்ச்சியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பரிவு கொண்ட இளவரசன்மீது அவனுக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டது. துரியோதனன் அந்த யாதவ இளவரசியுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று அவன் விரும்பினான். ஆனால் ஏகலைவன் ஒரு வேடுவன். வாழ்க்கையை அதன் நிறைகுறைகளோடு இளவரசனைவிட மிக நெருக்கமாகப் பார்த்திருந்தான். துரியோதனன் ஒரு நல்ல மனிதன்.

அவன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஏகலைவன் எப்போதுமே விரும்பினான். இப்படிப்பட்ட மகிழ்ச்சியும் உண்மையான வாழ்க்கையும் ஒருபோதும் இணைந்து சென்றதில்லை என்பதை அவன் அறிந்திருந்தான். ஒரு நல்ல மனிதன் நீண்டகாலம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு, சுயமதிப்புக் கொண்ட எந்தக் கடவுளும் அனுமதிக்க மாட்டார் என்று அவன் நினைத்தான். மக்கள் மகிழ்ச்சியின்றி இருந்தால்தான் கடவுளுக்கு அங்கு வேலை இருக்கும்.

ஏகலைவனின் மனத்தை இன்னோர் எண்ணம் ஆட்கொண்டதால், இளவரசனின் காதல் வாழ்க்கையைப் பற்றி அவன் மறந்து போனான். பலராமன் பட்டமளிப்பு விழாவைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தான். ஏகலைவன் அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள மிகவும் விரும்பினான். துரோணரைத் தன் திறமைகளால் பிரமிக்க வைத்தால், வாழ்க்கையில் தனக்கு ஒரு நல்ல திருப்புமுனை ஏற்படக்கூடும் என்று அவன் நினைத்தான். ஆனால் அது சாத்தியமற்றக் கனவு என்பதை அவன் அறிந்திருந்தான். ஒரு பார்வையாளனாக வேண்டுமானால் அவனால் அதில் கலந்து கொள்ள முடியும். ஆனால் அந்த அரங்கில் அவன் வேறு எங்கும் அனுமதிக்கப்பட மாட்டான். ஆனாலும் கனவு காண்பதில் எந்தத் தவறும் இல்லை என்று அவன் நினைத்தான்.

“கடவுளே! எனக்கு ஒரே ஒரு வாய்ப்புக் கொடு!” என்று அவன் கத்தினான். அவனுடைய வேண்டுகோள் அவனைச் சுற்றி எதிரொலித்தது. அவன் அந்த வார்த்தைகளை மீண்டும் உரக்கக் கூறினான். மீண்டும் அந்தக் காடு அவற்றை எதிரொலித்தது. சிறிது நேரம் இந்த விளையாட்டுத் தொடர்ந்தது. பிறகு அவன் களைத்துப் போய், புல்லின்மீது படுத்துக் கொண்டு, வானில் மென்மையான மேகங்கள் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டிருந்ததை கவனிக்கத் துவங்கினான். ‘எனக்கென்று ஒரு நாள் வரும்,’ என்று அவன் தனக்குத் தானே நினைவூட்டிக் கொண்டான். ஒரு மெல்லிய காற்று அவனை வருடிச் சென்றது. அவன் தன் கண்களை மூடிக் கொண்டான். கூட்டத்தினரின் இரைச்சலையும் கைதட்டல்களின் சத்தத்தையும் அவனால் கேட்க முடிந்தது. அரசனின் முன்னால் தான் பணிவாகக் குனிந்து வணங்கியதை அவன் தன் மனக்கண்ணில் பார்த்தான். தன் குருவின் முகம் மகிழ்ச்சியாக ஒளிர்ந்து கொண்டிருந்ததை அவனால் கற்பனை செய்ய முடிந்தது. நாள் கரைந்து செல்லச் செல்ல, அந்த வேடுவனின் கனவுகள் மேலும் மேலும் வண்ணமயமாக ஆயின. கைதட்டல்களின் சத்தமும் அதிகரித்துக் கொண்டே போனது. பொழுது சாய்ந்து, மரங்களின் நிழல்கள் பெரிதாக வளர்ந்து கிழக்கு நோக்கி நடைபோடத் துவங்கியபோது, அவன் இன்னும் புல்லின்மீது படுத்தபடி

வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். வாழ்க்கை அவனுக்கு ஒரு வாய்ப்பை மட்டுமல்ல, அவன் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு விருப்பத்தேர்வையும் விரைவில் கொடுக்கும் என்பதை அவன் அறியவில்லை.

அன்று ஓர் அற்புதமான நாள். ஏகலைவன் இயற்கையோடு ஒன்றிப் போயிருந்தான். அவன் புத்துணர்ச்சியோடும் உயிர்த்துடிப்போடும் இருந்தான். காடு தன்னுடைய பசுமையான இலைதழைகளால் அவனை வருடிக் கொடுத்தது. பறவைகளின் ஒலி அவனுடைய செவிகளைக் குளிரச் செய்தது. இன்று தன் வாழ்வில் ஒரு முக்கியமான நாளாக அமையவிருந்ததாக ஏதோ ஒன்று அவனிடம் கூறியது. அவன் ஒரு குளிர்ந்த நீரோடைக்குள் குதித்தான். அவன் மனம் திறந்து மகிழ்ச்சியாகப் பாடினான். அப்போது ஒரு குயில் கூவியது. அவனும் ஒரு குயிலைப்போலக் கூவி அதைக் கேலி செய்து குழப்பினான். பிறகு அவன் தன்னுடைய குருவிடம் பிரார்த்தனை செய்து அவரை வழிப்பட்டுவிட்டு, தன் வில்லையும் அம்புகள் நிறைந்த அம்பறாத்தூணியையும் கையிலெடுத்தான்.

இளவரசர்கள் அனைவரும் பயிற்சித் திடலில் குழுமிக் கொண்டிருந்ததை ஏகலைவன் பார்த்தான். பிறகு அவன் தன்னுடைய வழக்கமான மறைவிடத்திற்குச் சென்று தன்னை நிலைப்படுத்திக் கொண்டான். இளவரசர்கள் பயிற்சியில் மும்முரமாக இருந்தனர். அவர்களுடைய திறமைகள் குறிப்பிடத்தக்க அளவு மேம்பட்டிருந்தன. துரோணர் அந்த இளைஞர்களுக்கிடையே அங்குமிங்கும் நடந்து, கட்டளைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஓர் இளவரசன் தன் வில்லைப் பிடித்திருந்த விதத்தை அவர் திருத்தினார். இன்னொருவன் தன் பார்வையைத் தன் இலக்கின்மீது வைக்காதது குறித்து அவர் அவனைப் பார்த்துக் கத்தினார். நண்பகலுக்குப் பிறகு, அக்குழுவினர் பல சிறு குழுக்களாகப் பிரிந்து உணவருந்தச் சென்றனர். நான்கு பாண்டவ இளவரசர்களும் ஒரு மூலையில் கூடியிருந்ததை ஏகலைவன் பார்த்தான். துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் அரண்மனையை நோக்கிச் சென்றனர். குருநாதரின் ஓய்வு நேரம் அது. ஓரிரு மணிநேரத்தில் அவர்கள் அனைவரும் மீண்டும் அந்தத் திடலுக்குத் திரும்பி வந்துவிடுவர்.

ஏகலைவன் அர்ச்சுனனைப் பொறாமையோடும் வியப்போடும் தொடர்ந்து கவனித்தான். அந்தப் பாண்டவ இளவரசன் மற்றவர்களைப்போல ஓய்வெடுத்துக் கொண்டிருக்கவில்லை. அவன் தன்னுடைய அம்புகளைக் குறி பார்த்து எய்து தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டிருந்தான். ‘எனக்கு ஒரே ஒரு வாய்ப்புக் கிடைத்தால் போதும்.

இவனை என்னால் வெல்ல முடியும் என்று நான் நிரூபித்துவிடுவேன்,' என்று நினைத்த ஏகலைவனின் இதயம் கனத்தது. அவன் மூங்கிலால் ஆன தன் வில்லையும் கரும்புத் தண்டால் ஆன அம்புகளையும் பார்த்தான். தன்னுடைய மிக ஆழமான விருப்பம், துயரம் நிறைந்த அழிவுகரமான பின்விளைவுகளுடன் மெய்யாகவிருந்ததை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

நகரிலிருந்து வந்த சொறி பிடித்த நாய்க்குட்டி ஒன்று, பயிற்சித் திடலின் மறுகோடியினுள் நுழைந்தது. அது வழக்கம்போலத் தன் உணவைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. எலும்பும் தோலுமான உடலுடனும் குச்சிக் கால்களுடனும் இருந்த அந்த நாய்க்குட்டிக்குச் சாப்பாடு கிடைப்பதில் அவ்வளவு அதிர்ஷ்டம் இருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. கருப்பு நிறத்தில் இருந்த அந்த நாய்க்குட்டி, தன் உடல் முழுக்கப் புண்களுடன், காண்போருக்கு வெறுப்பூட்டுவதாக இருந்தது. வாழ்வின் சவால்களுக்கான ஒரு துணிச்சலான விடையாகவும் அது இருந்தது. எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்ற உறுதி மட்டுமே அந்த நாய்க்குட்டிக்கும் அதன் மரணத்திற்கும் இடையே நின்ற ஒரே விஷயம். ஆனால் விரைவில் இதற்கும் ஒரு சவால் எழவிருந்தது. திடலில் இருந்த இளைஞர்களை அந்த நாய்க்குட்டி சந்தேகத்தோடு பார்த்துவிட்டு ஒரு கணம் நிதானித்தது. அதன் காதுகள் துருத்திக் கொண்டன. காட்டிற்குள் ஓடிச் சென்று பதுங்கிக் கொள்ளுமாறு அதன் உள்ளுணர்வுகள் கூச்சலிட்டன. ஆனால் இறுதியில் அதன் வயிற்றுப் பசி வெற்றி பெற்றது. அந்த நாய்க்குட்டி மெதுவாக ஓரடி முன்னால் வந்து, அந்தக் குழுவினரின் ஊடாக விரைவாக ஓடிச் சென்றுவிடுவதற்கான ஒரு வாய்ப்பிற்காகக் காத்திருந்தது.

அர்ச்சுனன் அந்த நாய்க்குட்டியைப் பார்த்தவுடன், தன் வில்லையும் அம்பையும் எடுத்து, அதன் வலது கண்ணைக் குறி பார்த்தான். ஏகலைவன் பதற்றத்தோடு அதைக் கவனித்தான். அந்த நாய்க்குட்டி ஓரளவு தொலைவில்தான் இருந்தது. அர்ச்சுனனின் குறி நிச்சயமாகத் தவறிவிடும் என்று அவன் உறுதியாக நம்பினான். ஆனால் அவனுடைய நம்பிக்கை தவறாகப் போனது. அர்ச்சுனனின் அம்பு அவ்வளவு தூரத்தைக் கடந்து சென்று அந்த நாய்க்குட்டியின் வலது கண்ணைத் துல்லியமாகத் துளைத்தது. ஒரு கணம் அங்கு மயான அமைதி நிலவியது. அந்த நாய்க்குட்டி வேதனையால் துடித்தது. குருடாக்கப்பட்ட அதன் வலது கண்ணிலிருந்து ரத்தம் பீறிட்டு வந்து கொண்டிருந்தது. அந்த நாய்க்குட்டி, வலி தாளாமல் தரையில் உருண்டு புரண்டது. என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்று பார்ப்பதற்காக ஒவ்வொரு தலையும்

திரும்பியது. தொலைவில், துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் குழப்பத்தோடு பார்த்தனர். ஏதோ தவறு நடந்திருந்ததை உணர்ந்த பட்டத்து இளவரசன் துரியோதனன், தன் குழுவினரோடு சேர்ந்து அந்த இடத்தை நோக்கி நடந்தான்.

ஏகலைவனால் தன் பிரமிப்பை மறைக்க முடியவில்லை. அர்ச்சுனனின் அம்பு தன் இலக்கைக் கச்சிதமாகத் தாக்கியிருந்தது. அர்ச்சுனனைப் பாராட்டுவதற்காகப் பாண்டவ இளவரசர்கள் ஒன்றுகூடினர். துரோணர் மலர்ந்த முகத்துடன் தன்னுடைய தலைசிறந்த மாணவனைப் பார்த்தார். குருவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்ட ஏகலைவன், தன் நேரம் வந்துவிட்டிருந்ததாகத் திடீரென்று தீர்மானித்தான். அவன் நீண்டகாலம் காத்திருந்துவிட்டான். அர்ச்சுனன், கச்சிதமான குறியுடன், சுமார் எழுபது அடி தொலைவிலிருந்து அந்த நாய்க்குட்டியை வீழ்த்தியிருந்தான். ஏகலைவன் இந்த மேன்மக்களைக் கவர்ந்து, அவர்கள் தன்னைக் கண்டு பிரமிக்கும்படி செய்ய வேண்டும் என்றால், அவன் அர்ச்சுனனைவிடச் சிறப்பாகச் செயல்பட்டாக வேண்டும். அவன் சுமார் நூறடி தொலைவில் மறைந்திருந்தான். அந்த நாய்க்குட்டி, அர்ச்சுனன் அம்பு எய்தபோது அசையாமல் நின்றதைப்போல இப்போது நிற்கவில்லை. வலி தாளாமல் அது தரையில் புரண்டது, பிறகு அங்குமிங்கும் ஓடியது, பிறகு மீண்டும் கீழே விழுந்தது. தன் கண்ணில் குத்தியிருந்த அம்பை எடுப்பதற்கு அது தவியாய்த் தவித்தது.

ஏகலைவன் தன்னுடைய அம்பை எடுத்துக் குறி பார்த்தபோது, பதற்றத்தில் அவனுடைய கைகள் நடுங்கின. அவன் ஓர் அமைதியான பிரார்த்தனையைக் கூறிவிட்டு, மீண்டும் தன் கவனத்தை ஒருமுகப்படுத்தினான். பிறகு அந்த வேடுவன் கச்சிதமாகக் குறி பார்த்து, போராடிக் கொண்டிருந்த நாய்க்குட்டியைத் தன் அம்பால் துளைத்தான். அவன் எய்த அம்பு, பாண்டவ இளவரசர்களைக் கடந்து வேகமாகப் பாய்ந்து சென்று, அர்ச்சுனனின் கழுத்தை ஒருசில அங்குலங்களில் தவறவிட்டு, அந்த நாய்க்குட்டியின் இடது கண்ணைத் துளைத்து நின்றது. பிறகு ஏகலைவன் தன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தபோது நேரம் நின்றுவிட்டிருந்தது. அவன் துரோணரின் முன்னால் குனிந்து வணங்கினான். துரோணர் தன்னை நிச்சயமாகப் பாராட்டுவார் என்று உறுதியாக நம்பிய அவன், அவருடைய பாராட்டு வார்த்தைகளுக்காகக் காத்திருந்தான். அவர் தன்னை ஆரத் தழுவி, மகிழ்ச்சிக் கண்ணீர் வடிப்பதற்காகவும், தன்னுடைய சாதியைக் காரணம் காட்டித் தனக்குப் பயிற்சி அளிக்க மறுத்தது ஒரு தவறு என்று அவர் தன்னிடம் ஒப்புக் கொள்வதற்காகவும் அவன் காத்திருந்தான். அனைத்து

இளவரசர்களும் தன்னைக் கைதட்டிப் பாராட்டுவதற்காகவும், அர்ச்சுனனே தன்னிடம் வந்து தன்னைத் தொட்டு, தன்னை அவனுக்குச் சமமானவனாகவும் அவனது நண்பனாகவும் ஏற்றுக் கொள்வதற்காகவும் ஏகலைவன் காத்திருந்தான். அதன் பிறகு தான் எல்லோரையும் பெருந்தன்மையோடு மன்னித்துவிட்டு, சாதி விதிமுறைகளை உடைத்தெறிந்து அஸ்தினாபுரப் படையில் சேர்ந்த முதல் வேடுவ சாதிக்காரன் என்ற பெயரைப் பெறப் போவதாக ஏகலைவன் பெருமகிழ்ச்சியுடன் நினைத்தான். ஓர் ஒளிமயமான எதிர்காலமும், புகழும் பெருமையும் நிறைந்த ஒரு தொழில்வாழ்க்கையும் தம் கதவுகளை அகலத் திறந்து வைத்துத் தன்னை வரவேற்பதற்காகக் காத்திருந்ததாக அவன் நினைத்தான்.

"குருவே, இந்தக் கேடுகெட்ட வேடுவன் என்னை ஏளனப்படுத்திவிட்டான்," என்று அர்ச்சுனன் கத்தினான்.

ஏகலைவன் அதிர்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் தன் தலையை நிமிர்த்தினான். துரோணர் தன் சொந்த எண்ணங்களில் மூழ்கி அமைதியாக நின்றார். துரியோதனனும் தன் மகனும் காயப்பட்ட நாய்க்குட்டிக்கு உதவிக் கொண்டிருந்ததை அவர் பார்த்தார். ஆச்சரியமூட்டும் விதமாக, அந்த நாய்க்குட்டி சாகவில்லை. துரியோதனன் அதைத் தொட்டபோது அது குலுங்கியது. அதை நிலையாக அழுத்திப் பிடிப்பதற்கு அசுவத்தாமன் முயற்சித்துக் கொண்டிருந்தான். 'முட்டாள்! நாய்களைப் போன்ற அழுக்கான உயிரினங்களைத் தொடுவது அசுத்தம் என்பதை இவன் எப்போதுதான் புரிந்து கொள்ளப் போகிறான்? ஒரு பிராமணன் என்ற முறையில், அவன் அவற்றிடமிருந்து ஒதுக்கியிருக்க வேண்டாமா?' என்று துரோணர் நினைத்தார்.

"குருவே . . . குருவே . . . இந்த அநீதியைப் பாருங்கள்!"

அர்ச்சுனனின் கத்தல்கள் துரோணரின் சிந்தனையைக் கலைத்து, கையிலிருந்த பிரச்சனையின்மீது அவர் மீண்டும் தன் கவனத்தைக் குவிக்கும்படி செய்தன. ஒரு வீரர் மற்றும் ஆசிரியர் என்ற முறையில், அந்த வேடுவனின் திறமை துரோணரை பிரமிக்க வைத்திருந்தன. அந்த வேடுவன் எவ்வாறு இவ்வளவு சிறப்பாக அம்பு எய்யக் கற்றுக் கொண்டான் என்று அவர் வியந்தார்.

"மகனே, யார் உன்னுடைய குரு?" துரோணர் தன் குரலில் கடுமையைக் காட்ட விரும்பினாலும், அவரால் தன் பிரமிப்பை மறைக்க முடியவில்லை.

அர்ச்சுனனும் அதை கவனித்துவிட்டு, கோபத்தில் தன் உதடுகளை இறுக்கமாக அழுத்தினான். ஏகலைவன் துரோணரைப் பார்த்து,

“நீங்கள்தான் என் குரு. நான் கற்றுக் கொண்டுள்ள அனைத்திற்கும் நீங்கள்தான் காரணம்,” என்று கூறினான்.

“குருவே . . . இவன் பொய் கூறுகிறான்,” என்று அர்ச்சுனன் கத்தினான். “இது அநியாயம். என்னை உலகிலேயே மிகச் சிறந்த வில்லாளனாக ஆக்கப் போவதாக அனைத்து பிராமணர்கள் மற்றும் பண்டிதர் தௌமியன் முன்னிலையில் என் தாயாருக்கு நீங்கள் வாக்குக் கொடுத்தீர்கள். நீங்கள் அதை மறந்துவிட்டீர்களா? நீங்கள் இந்த அஸ்தினாபுரத்தின் உப்பைத் தின்றிருக்கிறீர்கள். ஆனால் இந்நாட்டின் இளவரசர்களைவிடச் சிறந்த திறமையை ஒரு தீண்டத்தகாதவனுக்குக் கற்றுக் கொடுத்ததன் மூலம் நீங்கள் எங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளீர்கள்.”

தான் மிகவும் நேசித்த மாணவனின் வார்த்தைகளைக் கேட்ட துரோணர் அதிர்ச்சியில் வாயடைத்துச் சிலையாக நின்றார்.

“அர்ச்சுனா, அவரை மன்னித்துவிடு. அவருக்குக் கூடுதல் பணம் தேவைப்பட்டிருக்கும். நம்முடைய குருவைப் பற்றி இவ்வளவு மரியாதைக் குறைவாகப் பேசாதே,” என்று தர்மன் மெதுவாகக் கூறினான்.

அர்ச்சுனனின் கோப வெளிப்பாட்டைவிட, இவனுடைய வார்த்தைகள் துரோணரை அதிகமாகக் காயப்படுத்தின. அவர்கள் இருவரும் அவருடைய நாணயத்தின்மீது கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தனர். ‘என்னிடம் பல குறைகள் இருக்கின்றன. ஆனால் நேர்மையின்மை என்னிடம் இல்லை,’ என்று துரோணர் நினைத்தார். “கயவனே! நான் எப்போது உனக்குக் கற்றுக் கொடுத்தேன்? நீ ஒரு பொய்யன்,” என்று துரோணர் அந்த வேடுவனைப் பார்த்துக் கத்தினார்.

“ஐயா, நீங்கள் எனக்கு நேரடியாகக் கற்றுக் கொடுக்கவில்லை. நீங்கள் இளவரசர்களுக்குக் கற்றுக் கொடுத்ததை நான் மறைந்திருந்து கவனித்ததன் மூலம் நான் கற்றுக் கொண்டேன்.” தன்னையும் மீறி ஏகலைவனின் கண்களில் கண்ணீர் பெருகியது.

நடுங்கிக் கொண்டிருந்த அந்தத் தீண்டத்தகாதவனை துரோணர் பரிதாபத்தோடும் பீதியோடும் பார்த்தபடி நின்றார். முரணான உணர்ச்சிகளால் அவருடைய மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அவருக்குள் இருந்த வீரன், அந்த இளைஞனைக் கட்டித் தழுவி, எல்லோரையும்விட மிகச் சிறந்த திறமை படைத்த வில்லாளனைத் தான் கண்டுபிடித்திருந்ததாக உலகிற்குப் பிரகடனப்படுத்த விரும்பினான். அவருக்குள் இருந்த மனிதன், அனைத்து முட்டுக்கட்டைகளையும் கடந்து வந்து மிகப் பெரிய அளவில் சாதித்திருந்த ஓர் ஏழை வேடுவனைக் கொண்டாட விரும்பினான். ஆனால் சாதிப் பாரபட்சம்

இப்படிப்பட்ட முட்டாள்தனமான எண்ணங்களை நசுக்கி ஒடுக்கியது. தன்னை இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலைக்கு ஆளாக்கியிருந்த அந்தத் தீண்டத்தகாதவனைக் குறித்து, விவரிக்க முடியாத ஒரு வெறுப்பு அவருக்குள் முளைத்தது.

"இவன் ஒரு திருடன்! இவனைப் போன்றவர்களிடமிருந்து வேறு எதை நம்மால் எதிர்பார்க்க முடியும்?" என்று யாரோ முணுமுணுத்தனர்.

"குருவே, இவன் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறான்." அர்ச்சுனன் பொறாமையாலும் கோபத்தாலும் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தான். "மற்றவர்கள் பயிற்சி செய்வதை வெறுமனே பார்ப்பதன் மூலம் சத்திரியர்களால்கூட இவ்வளவு திறம்படைத்தவர்களாக ஆக முடியாது. இவர் ஓர் அற்ப வேடுவன். நம் அனைவரையும்விடத் தான் அதிக சாமர்த்தியமானவன் என்று நாம் நம்ப வேண்டும் என்று இவன் விரும்புகிறானா?"

"இவன் அசுவத்தாமனைவிடக்கூட அதிக சாமர்த்தியசாலியாக இருக்கக்கூடும்," என்று தர்மன் கூறினான்.

குருவின் மனப் போராட்டத்திற்கு இது ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. வெறுமனே கவனித்துப் பார்ப்பதன் மூலம் ஒருவனால் இத்தகைய திறமையைக் கைவசப்படுத்த முடியும் என்பதை அவரும் நம்பவில்லை. அவருடைய மகன் அசுவத்தாமன் ஒரு நல்ல வீரன், அர்ச்சுனன் அவனைவிடச் சிறந்தவன். ஆனால் அவர்கள் இருவருமே அவரிடமிருந்து போதுமான பயிற்சிப் பெற்றிருந்தனர். இளவரசனைவிடவோ அல்லது தன் சொந்த மகனைவிடவோ இந்தக் கேடு கெட்ட வேடுவனால் அதிகப் புத்திசாலித்தனம் கொண்டவனாக இருக்க முடியாது என்று அவர் நினைத்தார்.

அவர் ஏகலைவனைப் பார்த்து, "நீ கூறுவது உண்மையாக இருந்தால், உண்மையிலேயே அது ஒரு குறிப்பிடத்தக்கச் சாதனைதான். நான் உன்னைக் கண்டு பெருமைப்படுகிறேன். உனக்கு என்னுடைய ஆசீர்வாதங்கள் எப்போதும் உண்டு," என்று கூறினார்.

அங்கிருந்த இளவரசர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மூச்சடைத்து நின்றனர். ஏகலைவனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. தன்னுடைய கடின உழைப்பிற்குக் கடைசியில் நல்ல பலன் கிடைத்துவிட்டிருந்ததாக அவன் நினைத்தான். பசியையும் தாகத்தையும் பொருட்படுத்தாமல் மணிக்கணக்கில் தான் பயிற்சி செய்ததும், எண்ணற்றக் காலை வேளைகளில் குருவின் பயிற்றுவிப்பைக் கவனித்ததும் தனக்கு நல்ல வெகுமதியைப் பெற்றுக் கொடுத்திருந்ததாக அவன் அகமகிழ்ந்தான். உணர்ச்சியில் உடல் நடுங்கியபடியே, அவன் துரோணரின் பாதங்களில் விழுந்தான். அந்த

மாபெரும் மனிதரின் பாதங்களை அவன் முத்தமிட விரும்பினான். ஆனால் அவரைத் தொட்டு மாசுபடுத்த அவன் விரும்பாததால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். மாறாக, அவன் அந்தக் கரிய நிலத்தை முத்தமிட்டான். ஆசீர்வதிக்கப்பட்ட இந்த பூமியில் பிறந்தது தன் அதிர்ஷ்டம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அந்த வேடுவனின் நடத்தை, துரோணரின் மனத்தில் ஓர் ஆறாத வடுவைத் தொட்டது. தன் மகன் அந்த நாய்க்குட்டிக்கு உதவிக் கொண்டிருந்ததைக் கண்ட துரோணர், தன் காலத்திற்குப் பிறகு அவன் எப்படி இவ்வுலகில் சமாளிப்பான் என்று கவலைப்பட்டார். துரோணரிடம் எல்லாத் திறமைகளும் இருந்தும்கூட, அஸ்தினாபுர இளவரசர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கான வேலை அவருக்குக் கிடைக்கும்வரை, ஏழ்மைதான் அவருடைய நிரந்தரத் தோழனாக இருந்து வந்திருந்தது. குந்தியின் பரிவுதான் அவருக்கு இந்தப் பதவியைப் பெற்றுக் கொடுத்திருந்தது. தன் சொந்த மகனுக்கு ஒரு முறையான கல்வியை வழங்குவதற்கு அவருக்கு இதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஆனால் தன் மகன் ஒரு தவறான இளவரசனைத் தன் நண்பனாகத் தேர்ந்தெடுத்திருந்தது அவரைக் கோபப்படுத்தியது. ‘குந்தியின் மகன்கள் என்ன விரும்புகிறார்களோ, அதைச் செய்வதுதான் என் கடமை. ஆனால் ஆயுதக் கலையைப் பொறுத்தவரை, இந்த வேடுவனும் எனக்கு ஒரு மகனைப் போன்றவன்தான்,’ என்று அவர் நினைத்தார். தன் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடந்த அந்தத் தீண்டத்தகாதவன் குறித்துத் தனக்கு பிரமிப்பும் இரக்கமும் ஏற்பட்டதற்காக அவர் தன்னைத் தானே சபித்துக் கொண்டார். தன்னுடைய குருவான பரசுராமனின் கோப முகம் அவருடைய மனத்தில் பளிச்சிட்டது. அலை பாய்ந்து கொண்டிருந்த தன் எண்ணங்களை, பரசுராமன் என்ற அந்தத் திடமான பாறையுடன் அவர் கட்டிப் போட்டார். திடீரென்று எல்லாம் அவருக்குத் தெளிவானது. இந்த வேடுவ குலத்தவன், தன்னுடைய சிறந்த மாணவனுக்கும் தன் மகனுக்கும் மட்டுமன்றி, தர்மம் எனும் ஒட்டுமொத்தக் கோட்பாட்டிற்கும் சவால் விடுத்துக் கொண்டிருந்தான் என்று அவர் நினைத்தார். இப்படிப்பட்ட இறுமாப்புக்காரர்களிடம் தான் இரக்கம் காட்டக்கூடாது என்று அவர் உறுதியாக நம்பினார். பிறகு அவர் ஆழமாக சுவாசித்துவிட்டு, பல வருடங்களுக்கு முன்பு தான் தர்மவீரன் என்ற பட்டத்தைப் பெற்ற அந்தப் புகழ்மிக்க நாளை நினைவுகூர்ந்தார். தர்மத்தையும் பசுக்களையும் பிராமணர்களையும் நிலைபேறு கொண்ட மதத்தையும் பாதுகாக்கப் போவதாகத் தான் அன்று எடுத்திருந்த உறுதிமொழி அவருடைய நினைவிற்கு வந்தது. ஒரு வேடுவனை

ஊக்குவிப்பது பற்றிச் சிந்திக்கும் அளவுக்குத் தன்னால் எப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்ள முடிந்தது என்று அவர் யோசித்தார்.

"குரு சிஷ்யப் பாரம்பரியத்தின்படி, நீ இப்போது என்னுடைய குருதட்சணையைக் கொடுத்தாக வேண்டும்," என்று அவர் ஏகலைவனிடம் கூறினார்.

ஏகலைவன் விறுவிறுவென்று எழுந்து, பணிவாகத் தலை குனிந்து நின்றான். "ஐயா, கட்டளையிடுங்கள்!" என்று அவன் கூறினான். அவனுடைய மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அஸ்தினாபுரத்தின் தலைசிறந்த வீரருடைய ஒரு சீடன் தான் என்பது இப்போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்ததாக அவன் கருதினான். அவனுடைய கனவு நனவாகியிருந்தது. 'சிவபெருமானே, பிரபஞ்சத்தின் நாயகனே, இந்தத் தீண்டத்தகாதவனுக்கு நீ அதிகமாகப் பரிவு காட்டியுள்ளாய். நன்றி,' என்று அவன் தன் மனத்திற்குள் அமைதியாகப் பிரார்த்தித்து நன்றி கூறினான்.

"உன் வலது கைக் கட்டைவிரலை நான் என் காணிக்கையாகப் பெற விரும்புகிறேன்."

துரோணரின் வார்த்தைகளைத் தொடர்ந்து ஓர் ஆழ்ந்த மௌனம் நிலைவியது. ஏகலைவன் அதிர்ச்சியில் உறைந்து நின்றான். துரோணரின் வார்த்தைகளைக் கேட்டு அர்ச்சுனன்கூடத் திடுக்கிட்டான். குழப்பமடைந்ததுபோலக் காணப்பட்ட பீமன் மட்டும், ஒரு கட்டைவிரலை வைத்துக் கொண்டு குருநாதர் என்ன செய்யத் திட்டமிட்டிருந்தார் என்று தன் இரட்டைச் சகோதரர்களிடம் கேட்டான்.

ஏகலைவனின் உலகம் சுக்குநூறாக நொறுங்கியது. அவனுடைய மனமும் உடலும் மரத்துப் போயின. தன் கனவுகளுக்குக் கல்லறை எழுப்பப்பட்டுவிட்டதை அவன் அறிந்தான். இடது கைப் பழக்கம் உடையவன் என்ற முறையில், அவனுடைய வலது கைக் கட்டைவிரல் அவனுக்கு முக்கியமானதாக இருந்தது. அந்த விரல் இல்லாமல் இனி ஒருபோதும் அவனால் தன் வில்லை உறுதியாகப் பிடிக்க முடியாது. அந்தச் சூழ்ச்சிக்கார பிராமணன் ஒரே சொடுக்கில் தனக்குள் இருந்த வில்லாளனைக் கொன்றுவிட்டிருந்தான். ஏகலைவன் தன் தலையை நிமிர்த்தி நேராக நின்றான். அவன் தன்னைச் சுற்றிலும் இருந்த இளவரசர்களின் முகங்களைப் பார்த்துவிட்டு, ஆடம்பரத்திற்குள்ளும் செல்வத்திற்குள்ளும் பிறப்பதில் இருந்த சலுகைகள் குறித்து வியந்தான். பிறகு, கடினமடைந்து போயிருந்த தன்னுடைய கரிய கைகளைப் பார்த்தான். காட்டில் ஒரு விலங்கு பெருங்குரலெடுத்துக் கத்தியது. காடுதான் தனக்குச் சொந்தம் என்பதால், மீண்டும் காட்டிற்கு வருமாறு

அது தன்னை அழைத்ததுபோல ஏகலைவனுக்குத் தோன்றியது. அவன் அர்ச்சுனனைப் பார்த்தான். ஆனால் அர்ச்சுனன் அவனுடைய பார்வையைத் தவிர்த்தான். பிறகு ஏகலைவன் தன் இடைக் கச்சையிலிருந்து ஒரு கூர்மையான வேட்டைக் கத்தியை எடுத்து, அந்த மாபெரும் குருவைப் பார்த்துக் கடைசியாக ஒரு முறை பணிந்து வணங்கிவிட்டு, தன்னுடைய வலது உள்ளங்கையை விரித்து நிலத்தின்மீது உறுதியாகப் பதித்தான்.

அடுத்து நிகழவிருந்ததைப் பார்ப்பது குறித்த எண்ணத்தால் முகம் வெளிறிப் போன தர்மன், வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான். காயப்பட்ட நாய்க்குட்டிக்குத் தேவையானவற்றைச் செய்து கொண்டிருந்த துரியோதனன் தனக்குப் பின்னால் சிறிது தொலைவில் இருந்த இளவரசர்களை நோக்கித் திரும்பினான். அவர்களுடைய திடீர் மௌனம் அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. ஏதோ கொடூரமான ஒன்று நிகழவிருந்தை உணர்ந்த அவன், அந்த நாய்க்குட்டியின் கண்களிலிருந்து தான் வெளியே எடுத்திருந்த அம்புகளைத் தரையின்மீது போட்டுவிட்டு, வேகமாக அவர்களை நோக்கி ஓடினான். அசுவத்தாமனும் துச்சாதனனும் அவனைத் தொடர்ந்து ஓடினர்.

ஒரு கத்தி ஒரு வளைவான கோணத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகக் கீழிறங்கியதைக் கண்ட துரியோதனன் கத்தினான். கூர்மையான அந்த வேட்டைக் கத்தி ஏகலைவனின் கட்டைவிரலைத் துண்டித்தது. அந்தக் காயத்திலிருந்து ரத்தம் பீறிட்டு, துரோணரின் வெள்ளை வேட்டியின்மீது தெறித்தது. துரோணர் அதைக் கண்டுகொள்ளவில்லை. மாறாக, மறைந்து கொண்டிருந்த கதிரவனின்மீது அவருடைய கண்கள் நிலை கொண்டிருந்தன. துரியோதனன் தன் குருவைப் பார்த்துக் கத்தினான். ஆனால் அவனுடைய கோபம் அவரைத் தொடவே இல்லை. மாறாக, பீமன் துரியோதனனை விலக்கித் தள்ளினான். விரைவில், பாண்டவர்களும் கௌரவர்களும் பைத்தியக்கார நாய்களைப்போலத் தங்கள் குருவைச் சுற்றித் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். துரோணர் அது பற்றி அக்கறை கொள்ளவில்லை. அந்த வேடுவ இளைஞன் தன் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடக்க, தன் மாணவர்கள் ஒருவரையொருவர் கொல்ல முயற்சித்துக் கொண்டிருக்க, கற்றறிந்த அந்த நபர், தன் மூளையைக் கசக்கிப் பிழிந்து, தான் செய்திருந்தது சரியான விஷயம்தான் என்பதற்குப் புனித நூல்களில் ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருந்தார்.

அசுவத்தாமனின் கோபமான வார்த்தைகள் இறுதியில் அவருடைய

மனத்தை மரத்துப் போகச் செய்தன. உயர்ந்த மரங்களுக்குப் பின்னால் பகலவன் மறைந்தபோது, ஒரு தீண்டத்தகாதவனின் சிதைந்து போன கனவுகள் போன்ற அற்பமான விஷயங்கள் குறித்து ஒருசில முட்டாள்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை அலட்சியப்படுத்திவிட்டு, துரோணர் தன் கைகளைத் தன் பரந்த மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார். ஒரு கரிய கட்டைவிரல் அவருடைய பாதங்களின் அருகே கிடந்தது. அது அவருடைய அறிவையும் மகத்துவத்தையும் பரிகசித்ததைப்போலத் தோன்றியது. 'அசுவத்தாமா, உன் தந்தையின் அன்பு உன் கண்களுக்குத் தெரியவில்லையா? இவற்றையெல்லாம் நான் உன் எதிர்காலத்திற்காகத்தான் செய்கிறேன் என்பதை ஏன் உன்னால் பார்க்க முடியவில்லை? நான் இதை அர்ச்சுனனுக்காகச் செய்ததாக நீ நினைக்கக்கூடும். ஆனால் உண்மையில் நான் உனக்காகத்தான் இவ்வாறு செய்தேன்,' என்று தன் மனத்திற்குள் புழுங்கிய துரோணர், இறுதியில் தன்னையும் மீறி அழத் துவங்கினார்.

* * *

பிராமண குருவான துரோணரின் பாதங்களில் தன்னினைவின்றி விழுந்து கிடந்த ஏகலைவனுக்கு மெதுவாக நினைவு திரும்பியது. தனக்காகத் தன்னுடைய ஒன்றுவிட்டச் சகோதரர்களுடன் துரியோதனன் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை அவன் கண்டுகொள்ளவில்லை. தன்னுடைய மாபெரும் தந்தையிடம் ஒரு பிராமண இளைஞன் அள்ளி வீசிக் கொண்டிருந்த கோப வார்த்தைகளைச் செவிமடுப்பதிலும் அவன் அக்கறை காட்டவில்லை. அசாதாரணமான எதையும் அவன் நாடியிருக்கவில்லை. தன்னுடைய கடின உழைப்பிற்கும் அர்ப்பணிப்பிற்கும் ஈடாக, தான் வளர்வதற்கு ஒரு சிறிய இடமும், தான் பார்த்து பிரமித்த ஒரு மனிதரிடமிருந்து ஓர் அங்கீகாரமான வார்த்தையும் மட்டுமே அவனுக்குத் தேவைப்பட்டன. ஆனால் அவன் தன் கனவுகளைக் காவு கொடுத்திருந்தான், தான் திருடியிருந்த அறிவிற்கான விலையைக் கொடுத்திருந்தான். அஸ்தினாபுரத்தையும் அதில் வாழ்ந்த புனிதர்களையும் விட்டு விலகி, தன்னை வரவேற்கக் காத்திருந்த காட்டை நோக்கி அவன் ஓடினான். காட்டில் வெகுதூரம் ஓடிய அவன், இயற்கையின் அரவணைப்பில் தான் பாதுகாப்பாக இருந்தோம் என்பதை உறுதியாக உணர்ந்தபோது, அந்த ஈரமான நிலத்தின்மீது நிலைகுலைந்து விழுந்தான். காடு வழக்கத்திற்கு மாறாக வெதுவெதுப்பாகவும் ஈரத்தன்மையோடும் இருந்தது. ஒரு தாயின் கருவறையில் இருந்த ஒரு குழந்தையைப்போல அவன்

உணர்ந்தான். அவன் தன் கட்டைவிரலை வெட்டியெறிந்து, தன் கனவுகளை மண்ணோடு மண்ணாகப் புதைத்தபோது அவன் அழுதிருக்கவில்லை. ஆனால் இப்போது, மரங்கள் மட்டுமே அவனுடைய சாட்சிகளாக இருக்க, வானில் ஒரு பிறை நிலா எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க, காட்டின் மைந்தனான அவன், தன் உடலிலும் மனத்திலும் ஏற்பட்டிருந்த வலியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அலறினான்.

வளைந்து நெளிந்து நின்ற ஒரு மரத்தில் படர்ந்திருந்த சிக்கலான கொடிகளுக்குப் பின்னால் மறைந்திருந்த இரண்டு ஜோடிக் கண்கள், துடிதுடித்துக் கொண்டிருந்த அந்த வேடுவனின் உருவத்தைப் பார்த்தன. வலியில் விம்மிக் கொண்டிருந்த அவன், இப்போது ஒரு விலங்கைப்போல ஊளையிடத் துவங்கினான். கடந்த ஒருசில நாட்களாக அவனைப் பின்தொடர்ந்து வந்திருந்த அந்த இரண்டு நாகர்களும், குரங்குகளைப்போல மரங்களில் வேகமாக ஏறி, தட்சகனுக்கு ஒரு செய்தியைக் கொண்டு சென்றனர். அன்றிரவு வெகுநேரம் கழித்து, புரட்சிக்கான நேரம் நெருங்கிவிட்டதாகத் தட்சகன் தன் நம்பிக்கைக்குரிய உதவியாளனான காளிங்கனிடம் கூறினான். ஒரு கருப்பு மனிதனின் துண்டிக்கப்பட்ட விரல் நிச்சயமாக நெருப்பைத் தூண்டிவிடும் என்று அவன் கூறினான்.

* * *

பயிற்சித் திடலைவிட்டு எல்லோரும் சென்ற பிறகு, துரோணர் நெடுநேரம் தனியாக அங்கேயே தொடர்ந்து நின்று கொண்டிருந்தார். கரிய இரவு அவரைப் போர்த்தியது. ஏகலைவன் அங்கிருந்து போனதை அவர் பார்க்கவில்லை. என்ன குழப்பம் என்று பார்க்க வந்திருந்த விதுரனையும் அவர் கண்டுகொள்ளவில்லை. இளவரசர்களுக்கு இடையே நடந்து கொண்டிருந்த சண்டையைத் தடுத்து நிறுத்தி, அவர்களையும் அசுவத்தாமனையும் அரண்மனைக்கு அவன் ஓட்டிச் சென்றதையும் அவர் பார்க்கவில்லை. தான் செய்துவிட்டிருந்த காரியத்தைப் பற்றிச் சிந்தத்தபடி, கீழே கிடந்த உயிரற்றக் கட்டைவிரலைப் பார்த்தபடி அவர் வெறுமனே நின்றார்.

அவர் பின்னால் திரும்பிப் பார்த்திருந்தால், காயப்படுத்தப்பட்ட அந்த நாய்க்குட்டி மெதுவாக எழுந்து, கொடுமையான விலங்குகள் நிறைந்த காட்டை நம்ப வேண்டுமா அல்லது நகரத்தை நம்ப வேண்டுமா என்று தீர்மானிக்க முடியாததுபோலக் காற்றை மோப்பம் பிடித்ததை அவர் பார்த்திருப்பார். இறுதியில் காட்டு விலங்குகளைவிட மனிதர்கள் அதிக ஆபத்தானவர்கள் அல்ல என்று முட்டாள்தனமாக நம்பிய அந்த

நாய்க்குட்டி, தள்ளாடியபடியே, கூட்டம் மொய்த்த அஸ்தினாபுர வீதிகளை நோக்கி நடந்தது. எந்தவொரு வண்டியும் அதன்மீது ஏறாமல் போனது ஓர் அதிசயம்தான். அவசர அவசரமாகச் சென்று கொண்டிருந்த ஒருசில பாதசாரிகள் அதனை எட்டி உதைத்துத் தள்ளினர், ஆனால் பார்வையிழந்த அந்த நாய்க்குட்டி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. எங்கேனும் உணவின் வாசனை வந்தபோது, அது நின்றது. மனிதக் கை ஒன்று, நல்ல மணமான உணவை அதன் மூக்கின் அருகே நீட்டியது. இந்தத் திடீர்ப் பரிவால் பயந்து போன அந்த நாய்க்குட்டி, சற்றுத் தயங்கியது. ஆனால் பசி அதனை ஆட்கொண்டது. தனக்கு உணவு வழங்கிய கரிய கையிலிருந்து அந்த உணவை அது படக்கென்று பிடுங்கியது.

துரோணர் நள்ளிரவில் வீடு திரும்பினார். நடைபாதையின்மீது படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஜரனையோ அல்லது அவனுடைய கைகளில் சுருண்டு படுத்துக் கிடந்த அந்தக் குருட்டு நாய்க்குட்டியையோ அவர் பார்க்கவில்லை. அப்படிப் பார்த்திருந்தாலும் அவற்றின்மீது அவர் எந்தவிதமான அக்கறையும் காட்டியிருக்க மாட்டார் என்பது வேறு விஷயம். ஆனால் ஒருவேளை அவர் ஜரனைப் பார்த்திருந்தால், வீடுவாசலற்ற அந்த இளைஞனின் அமைதி நிறைந்த முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை அவர் பார்த்திருப்பார்.

15

தர்மன்

அர்ச்சுனன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். அவன் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. வெளியே காரிருளுக்குள் அவன் தன் பார்வையை ஓடவிட்டான். அங்கு ஓர் இலைகூட அசையவில்லை. தன்னுடைய சகோதரர்களும் தாயாரும் மென்மையாக சுவாசித்துக் கொண்டிருந்ததை அவனால் கேட்க முடிந்தது. என்னவொரு கொடுங்கனவு! அவன் அந்த அறைக் கதவை மெதுவாகத் திறந்து, மேன்மாடத்தின் கைப்பிடிச் சுவரை இறுகப் பற்றியபடி நின்றான். ரத்தம் தோய்ந்த அந்தக் கருப்பு விரல் உயிரற்றுத் தரையில் கிடந்த காட்சியை அவன் தன் மனத்திலிருந்து தூக்கியெறிய எவ்வளவு முயற்சித்தும், அது மீண்டும் மீண்டும் திரும்பி வந்து அவனைத் துரத்தியது. தான் என்ன செய்திருந்தோம் என்றும், குருநாதர் ஏன் இப்படிப்பட்ட இழிவான காரியத்தைச் செய்திருந்தார் என்றும் அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அந்த வேடுவனின் முகத்தை அவன் நினைவுகூர முயற்சித்தான். ஆனால் குருவின் பாதங்களருகே கிடந்த துண்டிக்கப்பட்ட விரல்தான் அவன் மனக்கண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தது.

“அர்ச்சுனா, நீ ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறாய்?” அவனுடைய தாயின் குரல் அவனைத் தன் கனவு மயக்கத்திலிருந்து உலுக்கியது. “உனக்கு ஏன் இப்படி வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது? காய்ச்சலடிக்கிறதா?” குந்தி கவலையோடு தன்

மகனை அணுகி, கொதித்துக் கொண்டிருந்த அவனுடைய நெற்றியின்மீது தன் குளுமையான கையை வைத்தாள்.

"அம்மா, நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா? ஒவ்வொரு முறையும் நான்தான் வெற்றி பெற வேண்டும் என்பது அவ்வளவு முக்கியமானதா? நான்தான் தலைசிறந்த வில்லாளனாக இருக்க வேண்டும் என்பது தேவையா?"

"அர்ச்சுனா, நமக்கு தௌமியனைத் தவிர வேறு யாருடைய ஆதரவும் இல்லை. நான் ஒரு விதவை. ஆனால் நான் என் குழந்தைகளுக்கு மிகச் சிறந்தவற்றைக் கொடுக்க விரும்புகிறேன். குந்தி தன் பிள்ளைகளைச் சிறப்பாக வளர்க்கவில்லை என்று யாரும் கூறிவிடக்கூடாது."

"ஆனால் அம்மா, இன்று நடந்த ஒரு கொடூரமான சம்பவத்திற்கு நான் காரணமாகிவிட்டேன். ஒருவன் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் என்பதால் அறிவை அவனுக்கு மறுப்பது சரியான செயலா? ஒரு கணம், என் குரு செய்த காரியத்திற்காக நான் அவரை வெறுத்தேன். அவருடைய செயலுக்கு நான்தான் பொறுப்பு என்பது குறித்து எனக்கு அவமானமாக இருக்கிறது."

"அர்ச்சுனா, ஒரு வேடுவனைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. நடந்த விஷயத்தைப் பற்றி தர்மனிடமிருந்து நான் தெரிந்து கொண்டேன். குருநாதர் துரோணர் அந்த வேடுவனைக் கையாண்ட விதத்தோடு எனக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம், ஆனால் தயவு செய்து இந்த ஒரே ஒரு நிகழ்வின் அடிப்படையில் அவரை எடைபோட்டுப் பார்க்காதே. அவர் உன் நலனில் அக்கறை கொண்டுள்ளார். அந்த வேடுவன் ஒருவேளை தட்சகனின் படையில் ஓர் உறுப்பினராக ஆகியிருக்கக்கூடும். யாருக்குத் தெரியும்? துரோணர் தான் செய்ததை எல்லோருடைய நன்மைக்காகவும்தான் செய்திருக்கிறார். ஒவ்வொருவருக்கும் அவரவருடைய சொந்த தர்மம் இருக்கிறது. ஒரு சத்திரியன் என்ற முறையில், நீ ஒரு மிகச் சிறந்த வீரனாக இருக்க வேண்டும் என்பது உன்னுடைய தர்மம். தர்மனின் சகோதரன் என்ற முறையில், அரியணையை அவன் கைப்பற்றுவதற்கு அவனுக்கு உதவுவதும் உன் தர்மம். அவனுக்கு உன்னுடைய ஆதரவு தேவை. அவனுக்கு மட்டுமல்ல, ஆனால் . . ."

"அம்மா, அதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் அந்த வேடுவனின் கட்டைவிரல் என் மனத்தைவிட்டு அகல மறுக்கிறது. அவன் ஒரு மிகச் சிறந்த வில்லாளன். அவன் என்னைவிடச் சிறந்தவனும்கூட. தர்மம் குறித்த நம்முடைய வரையறைமீது எனக்குச் சந்தேகம் ஏற்படத் துவங்கியுள்ளது."

“மகனே, தர்மத்தின் பாதை ஒருபோதும் சுலபமாக இருக்கப் போவதில்லை. தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நாளை உன் அன்புக்குரியவர்களுக்கு எதிராகக்கூட நீ உன் கையை உயர்த்த வேண்டியிருக்கலாம். தர்மத்திற்கான வெகுமதி தர்மம் மட்டுமே.”

“மனிதத் துயரத்தை அதற்கு விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தாலும்கூடவா? மரணத்தை விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தாலும்கூடவா?”

குந்தி பெருமூச்செறிந்தாள். தனக்கே சரியாகப் புரியாத ஒன்றை எப்படி அவனுக்கு விளக்குவது என்று அவள் யோசித்தாள். அவள் தன் மகனை நோக்கிச் சென்று, அவனுடைய நாடியைப் பிடித்து உயர்த்தினாள். “அர்ச்சுனா, நீ உன் சகோதரனுக்காகவும், தன் வாழ்வில் துயரத்தை மட்டுமே பார்த்துள்ள உன் தாய்க்காகவும் சண்டையிடுவாய் என்று எனக்கு வாக்குக் கொடு. நீ ஒரு சத்திரியனைப்போல நடந்து கொண்டு, காந்தாரியின் அந்தத் தீய மகனைத் தோற்கடிப்பாய் என்று எனக்கு வாக்குக் கொடு.”

அர்ச்சுனன் நீண்டநேரம் மௌனமாக இருந்தான். குந்தி கவலையோடும் பதற்றத்தோடும் காத்திருந்தாள். பிறகு அவன், “தர்மத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் ஒன்றுவிட்டச் சகோதரன் துரியோதனன் தீயவனா என்றுகூட எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் என் தாயாரின் வேண்டுகோளை எப்படி என்னால் மறுக்க முடியும்? நான் என் சொந்த மகிழ்ச்சியை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தாலும்கூட, என் சகோதரனை அரசனாக ஆக்குவதற்கு என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்வேன். நேரம் வரும்போது என் கைகள் தடுமாறாமல் இருக்க வேண்டும் என்று மட்டுமே நான் பிரார்த்திக்கிறேன்,” என்று கூறினான்.

தன் தாயின் நிம்மதிப் பெருமூச்சைக் கேட்பதற்கு அவன் காத்திருக்கவில்லை. அவன் வேகமாக அந்த இருட்டிற்குள் மறைந்தான். குந்தி, தொலைவில் இருந்த ஒரு வீட்டிலிருந்து வந்த ஒரு மங்கலான விளக்கு வெளிச்சத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். ‘பாண்டு மட்டும் திருதராஷ்டிரனுக்கு மூத்தவனாக இருந்திருந்தால் . . .’ என்று அவள் ஏக்கத்துடன் நினைத்தாள். பாண்டு மூத்தவனாக இருந்திருந்தால், தர்மன் அரசனாக ஆவதில் எந்தக் குழப்பமும் இருந்திருக்காது. காந்தாரியுடன் குந்திக்கு இந்தச் சண்டை தேவைப்பட்டிருக்காது. யார் பெரிய துரதிர்ஷ்டசாலி — தானா அல்லது காந்தாரியா என்று அவள் அடிக்கடி வியந்தாள். ‘நான் போதுமான துன்பத்தை அனுபவித்துவிட்டேன். என் மூத்த மகன் இந்நாட்டின் அரசனாக ஆகும்வரை நான் ஓயப் போவதில்லை,’ என்று இரக்கமின்றி அவள்

உறுதி பூண்டாள். தீர்வே இல்லாத, தனக்குப் பரிச்சயமான பழைய வேதனை ஒன்றை அவள் மீண்டும் உணர்ந்தாள். மூத்த மகன்! அவளுடைய மூத்த மகன் எங்கே இருந்தான்? அவன் திரும்பி வந்துவிட்டால் ஒருவேளை எல்லாம் மாறக்கூடும். பிறகு யார் மூத்தவன் என்பதில் எந்தக் கேள்வியும் எழாது. துரியோதனனும் சரி, தர்மனும் சரி, அரசனாவதற்குச் சட்டரீதியான வாரிசாக இருக்க மாட்டார்கள். தன் மூத்த மகன் உயிரோடு இருந்தானா இல்லையா என்றும், அவன் எப்படி இருந்தான் என்றும் அவள் தொடர்ந்து வியந்து கொண்டே இருந்தாள். தொலைவில் தெரிந்த மங்கலான விளக்கொளி ஒரு கணம் பிரகாசித்துவிட்டு, பிறகு அணைந்துவிட்டது. இருள் அவளைச் சூழ்ந்தபோது அவள் தொடர்ந்து அமைதியாக நின்றாள்.

* * *

இருண்டு கிடந்த அந்த வீட்டில், காய்ச்சலில் நடுங்கியபடி ஒரு பிராமணர் படுத்துக் கிடந்தார். அவருடைய உடல் கொதித்தது. "கிருபி, அவன் வந்துவிட்டானா?"

"இன்னும் வரவில்லை." தன் கணவன் வீடு திரும்பியிருந்த நேரத்திலிருந்து இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்த இதே கேள்விக்கு அவள் பல முறை பதிலளித்திருந்தாள்.

திடீரென்று துரோணர் எழுந்து உட்கார்ந்தார். "அவன் வந்துவிட்டான். போய்க் கதவைத் திற."

கிருபி வேகமாக வாசலுக்கு ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். அசுவத்தாமன் உள்ளே நுழைந்து, மௌனமாகத் தன் அறைக்குச் சென்றான். "அசுவத்தாமா, சாப்பிட வா," என்று கிருபி அழைத்தாள். ஆனால் அவளுக்கு பதில் கூறாமல் அவன் தன் அறைக் கதவை ஓங்கி அறைந்தான். கிருபி தன் கணவனைப் பார்த்தாள். அவர் தன் மகனின் அறையை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். அவள் தன் வீட்டு வாசல் கதவை மூடிவிட்டு வந்து, தன் கணவரை மென்மையாகப் படுக்கையின்மீது சாய்த்தாள். பிறகு ஓர் ஈரத் துணியைக் கொண்டு மீண்டும் அவருடைய நெற்றியைத் துடைக்கத் தொடங்கினாள்.

"கிருபி, நாம் திரும்பிப் போய்விடலாமா?" என்று துரோணர் தன் மனைவியிடம் மென்மையாகக் கேட்டார். அவள் பதிலேதும் கூறவில்லை. "எந்தவொரு மனிதனும் செய்திருக்கக்கூடாத ஒரு காரியத்தை நான் இன்று செய்துவிட்டேன்." துரோணர் தன் மனைவியிடமிருந்து தன் தலையைத் திருப்பிக் கொண்டு, வெற்றுச் சுவரை வெறித்துப் பார்த்தார்.

விளக்கைப் பற்ற வைப்பதற்காகக் கிருபி எழுந்தாள். ஆனால்

துரோணர் அவளுடைய கையைப் பிடித்து, அவளைத் தனக்கு அருகில் உட்கார வைத்தார். அந்த ஏழை வேடுவனிடமிருந்து தான் குருதட்சணை வசூலித்த விதத்தை அவர் அவளிடம் விளக்கினார். அதைக் கேட்டுக் கிருபி அதிர்ச்சியடைந்தாள். ஆனால் இருட்டு அவளுடைய முகத்தை மறைத்தது அவளுடைய அதிர்ஷ்டம்.

"கிருபி, நான் அசுவத்தாமனுக்காகத்தான் அதைச் செய்தேன். ஆனால் அவன் என் முகத்தைக்கூடப் பார்க்க மறுக்கிறான். அவன் அந்தத் தீய இளவரசனுடன் நட்புக் கொண்டுள்ளான். அந்த இளவரசன் நம் மகனைப் பாழாக்கிவிட்டான். துரியோதனன் அழியப் போகிறான். நாம் போற்றுகின்ற எல்லாவற்றையும் ஆட்கொண்டு, சமுதாய ஒழுங்கை அழிக்கப் போகின்ற சக்திகளை அவன் கட்டவிழ்த்துவிட்டுள்ளான். வேடுவர்களுக்கு எதிராக எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. யாருக்கு எதிராகவும் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் நம் மூதாதையர் ஒரு குறிக்கோளுக்காக விதிமுறைகளை உருவாக்கினர். தங்களுக்குரிய இடம் எதுவென்று ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். உன் சகோதரன் கிருபனின் போதனை என்ன செய்திருக்கிறது என்று பார். பீஷ்மரின் வினோதமான யோசனைகள் நம் சமுதாயத்திற்குக் கொண்டு வந்துள்ள கேடுகளைப் பார். சூத்திரர்கள் பிரதம மந்திரிகளாக ஆகின்றனர். வேடுவர்கள் சத்திரியர்களாக ஆக விரும்புகின்றனர். சமுதாய ஒழுங்கு சீர்குலைந்து கொண்டிருக்கிறது."

"பிராமணர்கள் என்ற முறையில் நம் தர்மம் எது?" என்று கிருபி கேட்டாள்.

"கற்றுக் கொடுப்பது, உண்மையை அறிந்து கொள்வது, கற்றுக் கொள்வது, சிந்திப்பது, வழிகாட்டுவது . . ." துரோணர் பாதியிலேயே தன் உரையாடலை நிறுத்திவிட்டுத் தன் மனைவியைக் கோபமாகப் பார்த்தார். "நான் என் குல தர்மத்தைக் கடைபிடித்துக் கொண்டிருக்கவில்லை என்று நீ என்மீது குற்றம் சுமத்துகிறாயா?"

"அதை நீங்களே உங்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்," என்று அவள் பதிலளித்துவிட்டு, தண்ணீர் இருந்த கிண்ணத்தையும் கைத்துணியையும் எடுத்துக் கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள்.

பிறை நிலா ஒன்று மேகங்களின் பிடியிலிருந்து தப்பித்து, அந்த இருட்டான வீட்டிற்குள் ரகசியமாகத் தலை காட்டியது. தன் மனைவியின் வார்த்தைகளால் கோபம் கொண்ட துரோணர் எழுந்து நின்று, வழிபாட்டு அறைக்குள் சென்றார். நடனமாடும் நடராஜரின் உருவச்சிலை நிலவொளியில் மின்னிக் கொண்டிருந்ததை அவர் கண்டார். உடனடியாக அவர் அதன் முன்னால் நெடுஞ்சாண்கிடையாக

விழுந்து, கலங்கிப் போயிருந்த தன் மனத்தை அமைதிப்படுத்துவதற்காக சிவனின் 108 பெயர்களைக் கூறத் துவங்கினார். தன் மனம் அமைதியடைந்ததுபோல அவர் உணர்ந்தபோது, அவர் மெதுவாகத் தன் தலையை உயர்த்தி அச்சிலையைப் பார்த்துவிட்டு . . . பீதியில் கூச்சலிட்டார்!

கிருபி சமையலறையில் இருந்து வேகமாக ஓடி வந்ததில் பாத்திரங்கள் உருண்டன. அசுவத்தாமனும் விரைந்து வந்து, தன் தாயின்மீது கிட்டத்தட்ட மோதிவிட்டான்.

"அசுவத்தாமா, அங்கே பார் . . . அங்கே பார் . . . சிவனின் கையில் நான்கு விரல்கள்தான் இருக்கின்றன . . . அவருடைய கட்டைவிரலைக் காணவில்லை . . . அவருடைய முகத்தைப் பார் . . . அது அந்த வேடுவன் . . . அது அவன்தான் . . . கிருபி, நான் என்ன காரியம் செய்துவிட்டேன்?"

தாயும் மகனும் அதிர்ச்சியில் ஒருவரையொருவர் பார்த்தனர். தெற்கிலிருந்து தங்களோடு கொண்டு வந்திருந்த அந்த வெண்கலச் சிலையை அவர்கள் பார்த்தனர். அது கச்சிதமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

"கிருபி, உன்னால் பார்க்க முடியவில்லையா . . . நான் பாவம் செய்துவிட்டேன். கடவுள் என்னைச் சோதிக்க வந்திருக்கிறார். நான் தோற்றுவிட்டேன். ஒரு குருவாகவும் ஒரு பிராமணனாகவும் ஒரு மனிதனாகவும் நான் தோற்றுவிட்டேன் . . . நான் என்ன காரியம் செய்துவிட்டேன்?" என்று அவர் வேதனையில் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

அவர்களுடைய வாசற்கதவு திடீரென்று பலமாகத் தட்டப்பட்டது. அசுவத்தாமன் அதைத் திறப்பதற்காக விரைந்தான். கிருபி தன் கணவரை அமைதிப்படுத்த முயன்றாள்.

"என்ன குழப்பம்?" என்று கேட்டுக் கொண்டே தௌமியனும் ஒருசில பிராமணர்களும் உள்ளே நுழைந்தனர்.

"குருவே, என்னுடன் வாருங்கள். நான் விளக்கமளிக்கிறேன்," என்று கூறிக் கொண்டே, தௌமியன் துரோணருக்கு அருகில் சென்று அமர்ந்தான். துரோணர் இன்னும் தரையின்மீது மண்டியிட்டு அமர்ந்திருந்தார். "இதை நாம் இருவருமாகக் கலந்து பேசினால் விஷயங்கள் தெளிவாகும். இது வருத்தமானதுதான், ஆனால் எது தேவையோ அதைத்தான் நீங்கள் செய்தீர்கள். என்னுடன் வாருங்கள்."

துரோணர் எழுந்து நின்று, அந்தப் புரோகிதனைப் பார்த்துத் தலையசைத்தார்.

"நீங்கள் என் தந்தையை எங்கேயும் அழைத்துச் செல்ல நான் அனுமதிக்க மாட்டேன்," என்று அசுவத்தாமன் அவர்கள் வழியை

மறித்தான். தௌமியனும் அசுவத்தாமனும் ஒருவரையொருவர் கோபமாகப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"மகனே, அவர் போகட்டும்," என்று கிருபி தன் மகனிடம் கூறினாள். அசுவத்தாமன் தயக்கத்தோடு திரும்பிக் கொண்டான். தாயும் மகனும் பார்த்துக் கொண்டிருக்க, துரோணர் தன் சக பிராமணர்கள் பின்தொடர, கங்கைக் கரையை நோக்கி நடந்தார்.

* * *

ஏகலைவனிடமிருந்து ஓடி வந்த பிறகு ஒருசில மாதங்கள் கழித்து, ஜரன், துர்ஜயனின் ஆபத்தான உலகிற்குள் அடியெடுத்து வைத்தான். அவன் அன்று இரவும் முழுதும் நடந்து ராஜ வீதியை வந்தடைந்தான். பொழுது விடிந்தபோது, பசி அவனுடைய வயிற்றைக் கிள்ளியது. அவனுக்குக் கண்டிப்பாக ஓய்வு தேவைப்பட்டது. தெருவில் சென்ற அன்னியர்களின் முறைப்புகளை முதலில் அவன் கண்டுகொள்ளவில்லை. அவன் படிப்பறிவற்றவன், இந்துமத விதிகள் பற்றி அறிவு இல்லாதவன். தன்னைப் போன்ற மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த வீதிகளின் ஊடாக நடந்து கொண்டிருந்ததன் மூலம் சாதி விதிமுறைகளை அவன் மீறிக் கொண்டிருந்தான். வீதிகளில் காவலாளிகள் இருந்ததாலும், தீண்டத்தகாதவர்களுக்கு எதிராக அதிகாரப்பூர்வமான விதிமுறைகள் எதுவும் இருக்கவில்லை என்பதாலும், அவனைத் தடுத்து நிறுத்த யாரும் துணியவில்லை. அளவுக்கதிகமான பாரபட்சம் பீஷ்மரின் கடுஞ்சீற்றத்திற்குத்தான் தங்களை ஆளாக்கும் என்பதைப் புரோகிதர்கள் அறிந்திருந்ததால், அஸ்தினாபுரத்தின் தெருக்களைத் தன் வரவால் மாசுபடுத்திக் கொண்டிருந்த அந்தத் தீண்டத்தகாதவனைப் பார்த்து வெறுமனே கொதித்துக் குமுறிவிட்டு, எழுதப்பட்ட ஒரு சட்ட விதியை அவன் மீறுவதற்காக அவர்கள் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்ததைவிட விரைவாக அந்த வாய்ப்பு வந்தது. பசியோடு இருந்த அச்சிறுவனின் தவிப்பை அந்தப் புரோகிதர்கள் குறைத்து மதிப்பிட்டுவிட்டனர். அவர்களைப் பொறுத்தவரை, பசி என்பது ஒரு திட்டவட்டமான உருவமற்ற ஒரு கோட்பாடு, ஒரு மாயை. ஆனால் ஜரனுக்கு, அது ஒரு கடுமையான யதார்த்தம். தீண்டத்தகாதவனான அவன் ஒரு கோவிலுக்குள் நடந்து சென்றான். புரோகிதர்கள் பீதியில் மூச்சடைத்து நின்றனர். சிவன் தன்னைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகைத்துக் கொண்டிருந்ததை ஜரன் பார்க்கவில்லை. ஏனெனில், அவனுடைய கண்கள், கல்லால் ஆன கடவுள் சாப்பிடுவதற்காக ஒரு வெள்ளித் தட்டில் குவித்து

வைக்கப்பட்டிருந்த இனிப்புகள்மீதே நிலைத்திருந்தன. அவன் அந்த இனிப்புகளைத் தன் இரண்டு கைகளாலும் அள்ளியபோது, தன் முதுகில் சுள்ளென்று ஏதோ ஒன்று விழுந்ததை அவன் உணர்ந்தான். கடுங்கோபத்தில் இருந்த தலைமைப் புரோகிதன் தன் கையில் ஒரு சாட்டையைப் பிடித்திருந்தான். அடுத்த அடி ஜரனின் முகத்தைக் கிழித்தது. ஆனாலும் அவன் தன் கையிலிருந்து இனிப்புகளைக் கீழே போட மறுத்தான். அவன் அவற்றைத் தன் வாய்க்குள் திணித்துவிட்டு, தன் கன்னங்களின்மீது வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைக்கூடத் துடைக்காமல், இன்னும் சிறிது இனிப்புகளை அள்ள முயன்றான். யாரோ அந்தத் தட்டை எட்டி உதைத்தனர். அதிலிருந்த இனிப்புகள் அனைத்தும் அந்தக் கோவில் தரை முழுக்கச் சிதறியது. இனி அது கடவுளுக்குப் படைக்கத் தகுதியான பிரசாதம் அல்ல. அழுக்கான கருப்புக் கைகள் தொட்டு மாசுபடுத்திய குப்பை அது.

ஜரன் தரையில் விழுந்து அந்த இனிப்புகளைப் பொறுக்கினான். அடுத்த உதை அவனுடைய நாடியை நோக்கிக் குறி வைக்கப்பட்டது. “மகா பாவி! நான் சற்று முன்தான் குளித்தேன். இப்போது இன்னொரு முறை நான் குளித்தாக வேண்டும்,” என்று கத்திய ஒரு புரோகிதன், ஜரனை மீண்டும் மீண்டும் எட்டி உதைத்தான். மற்றப் புரோகிதர்கள் ஒதுங்கி நின்றனர். அந்தத் தீண்டத்தகாதவனையும், அவனைத் தொட்டதால் மாசுபட்டிருந்த அந்தக் கோபக்காரப் புரோகிதனையும் அவர்கள் தொட விரும்பவில்லை. தான் இறக்கவிருந்ததாக ஜரன் உறுதியாக நம்பினான். அவர்கள் தன்னைக் கொல்வதற்கு முன், தன்னால் முடிந்த அளவுக்குச் சாப்பிட வேண்டும் என்பதுதான் அவனுடைய ஒரே எண்ணமாக இருந்தது. என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்று பார்ப்பதற்காக அவன் தன் தலையை நிமிர்த்தியபோது, தன்னை அடித்து உதைத்தவன் காற்றின் ஊடாகப் பறந்து சென்று, கடவுளின் திருவுருவச் சிலையின்மீது மோதி, நிலைகுலைந்து ஒரு குவியலாகக் கீழே விழுந்ததைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். பெரிய உருவத்தைக் கொண்ட ஒரு பிராமணர் அவனருகே நின்று கொண்டிருந்தார். அவர் தலைமைப் புரோகிதனின் கையிலிருந்த சாட்டையைப் பிடுங்கினார். அது தன் நோஞ்சான் உடம்பைத் தாக்கும் என்று எதிர்பார்த்து, ஜரன் சுருண்டு கொண்டு, பயத்தில் தன் கண்களை மூடினான். அந்தச் சாட்டையால் ஓர் அடி விழுந்ததையும், ஓர் அலறல் தன் காதுகளைத் துளைத்ததையும் ஜரன் கேட்டான். ஆனால் அவன் எந்த வலியையும் உணரவில்லை. அவன் மெதுவாகத் தன் கண்களைத் திறந்தான். தான் பார்த்துக் கொண்டிருந்ததை அவனால் நம்ப முடியவில்லை.

“அயோக்கியனே, சாட்டையடி எப்படி இருக்கிறது? நல்ல குளுமையாக இருக்கிறதா? ஒரு சிறுவனை அடிக்கிறாயா? நாய்களே, ஒரு சிறுவனை அடிக்கலாம் என்று எந்தப் புனித நூல்களில் கூறப்பட்டுள்ளது?”

சாட்டையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அந்த பிராமணருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. அவர் அதைக் கச்சிதமாகக் கையாண்டார். விளைவுகள் கடுமையாக இருந்தன. சாட்டையடியிலிருந்து தப்பிப்பதற்காக அந்தப் புரோகிதர்கள் அங்குமிங்கும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர். தன்னைக் காப்பாற்றிய அந்தக் கிறுக்கர், கோவில் கதவுகளை மூடிவிட்டு, அந்தப் புரோகிதர்களை உள்ளே சிக்க வைத்துவிட்டிருந்ததை ஜரன் கண்டான். அவனும் சிவனும் மட்டுமே அந்தச் சம்பவத்திற்கான ஒரே சாட்சிகளாக இருந்தனர்.

“கிருபா, நீ நகரத்தில் வேகப் போகிறாய்! நீ பிராமணர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாய் . . . இது பாவம் . . . மகா பாவம்.” வலி பொறுக்காமல் அலறிக் கொண்டிருந்த தலைமைப் புரோகிதன் தன் அலறல்களுக்கு இடையேயும் கிருபரைச் சபிக்க முயன்றான். அவன் உடல் முழுதும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவனுடைய பானை வயிற்றின்மீதும் முதுகின்மீதும் பழுப்புநிறத்தில் தடிப்புகள் உருவாகிக் கொண்டிருந்தன.

கிருபர் சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டே, கதியற்ற அந்தப் புரோகிதர்களை அடித்துத் துவைத்தார். அவர்கள் தங்கள் புலம்பல்களையும் உளறல்களையும் நிறுத்தியபோதுதான் அவரும் நிறுத்தினார். திருப்தியடைந்த கிருபர் தன் சாட்டையைத் தலைமைப் புரோகிதனிடம் எறிந்துவிட்டு, “நீ அந்த முட்டாள் தௌமியனிடமோ அல்லது அந்தக் குந்தியிடமோ சென்று குறை கூறினால், நான் மீண்டும் வருவேன். அடுத்த முறை நான் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன். ஏனென்றால், சாட்டைக்குப் பதிலாக நான் என் வாளைப் பயன்படுத்துவேன். முட்டாள்களே, நான் கூறுவது உங்களுக்குப் புரிகிறதா அல்லது கவித்துவமான சமஸ்கிருதத்தில் அதை நான் உங்களுக்குக் கூற வேண்டுமா?” என்று கேட்டார்.

அந்தப் புரோகிதர்கள் பயத்தில் வாயடைத்து நின்றனர். தரையின்மீது நசுக்கப்பட்டுக் கிடந்த இனிப்புகளை ஜரன் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததைக் கிருபர் பார்த்தார். அவர் அந்தச் சிறுவனைத் தூக்கிக் கொண்டு, கோவில் கதவுகளைத் தன் காலால் எட்டி உதைத்துத் திறந்தார். அவர் வழக்கமாக எந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்தாரோ, அந்த இடத்தை அடைந்தபோதுதான் அவர்

அச்சிறுவனைக் கீழே இறக்கினார். "கோவிலிலிருந்து அந்த இனிப்புகளை எடுப்பதற்கு நீ என்ன முட்டாளா?" என்று அவர் சந்தேகத்தோடு ஜரனிடம் கேட்டார்.

"எனக்குப் பசிக்கிறது," என்று ஜரன் மிகவும் எளிமையாகக் கூறியது கிருபரின் மனத்தைத் தொட்டது.

பல வருடங்களில் முதன்முறையாகத் தன் கண்கள் கண்ணீரால் நிரம்பியதை அவர் கண்டார். "வா, நான் உனக்குச் சாப்பாடு வாங்கித் தருகிறேன்," என்று கூறிவிட்டு, வீதியின் எதிர்ப்புறத்தில், பழுத்த மாம்பழங்களையும் வீட்டில் சமைக்கப்பட்ட உணவையும் விற்றுக் கொண்டிருந்த ஒரு வியாபாரியை நோக்கி அவர் சென்றார்.

ஜரன் அவரைப் பின்தொடர்ந்தான். அவர்கள் அந்த வியாபாரியை நெருங்கியபோது, கிருபர் தன் வேட்டி மடிப்புகளுக்குள் எதையோ தேடிவிட்டுத் தன்னைத் தானே சபித்துக் கொண்டார். அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை. முந்தைய நாள் சூதாட்டத்தில் அவர் தன் பணம் முழுவதையும் இழந்திருந்தார். அவர் தங்களைக் கடந்து சென்ற ஒரு பணக்கார வணிகனை அழைத்து, "ஏய், ஒரு பிராமணன் இங்கே நின்று கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? நீ ஏன் எனக்கு எதுவும் கொடுக்காமல் போய்க் கொண்டிருக்கிறாய்?" என்று கடுமையாகக் கேட்டார்.

அந்த வைசியன் மன்னிப்புக் கோரும் விதத்தில் கிருபரைப் பார்த்துவிட்டு, தன் துணிப்பையைத் தட்டுத்தடுமாறித் திறந்து ஒருசில நாணயங்களை வெளியே எடுத்தான். தன்னை ஏளனப்படுத்திய பிராமணரிடம் அவன் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு, அவருக்கு முன்னால் குனிந்து வணங்கினான். கிருபர் அந்த வணிகனை ஆசீர்வதித்தார். அந்த வணிகனும் மகிழ்ச்சியாக அங்கிருந்து சென்றான்.

"சிறுவனே, என்னை அப்படிப் பார்க்காதே," என்று கூறிய கிருபர், அந்த வேடுவச் சிறுவனைப் பார்த்துக் கண் சிமிட்டிவிட்டு, சில நாணயங்களை அந்த உணவு விற்பனையாளனிடம் கொடுத்தார். "நான் அடிக்கடி இப்படிச் செய்வதில்லை. நான் சொந்தமாக உழைத்துச் சாப்பிடுகிறேன். ஆனால் என் மன உறுதியை உன்னிடம் வெளிப்படுத்துவதற்கான வசதி இன்று எனக்கு இல்லை. நீ மிகுந்த பசியோடு இருக்கிறாய். என்றேனும் ஒருநாள் எல்லாக் கொள்கைகளும் உடைக்கப்படத்தான் செய்யும். அது சரியான காரணத்திற்காகச் செய்யப்பட்டால், அதில் எந்தத் தவறும் இல்லை. உன் பசி எனக்குச் சரியான காரணமாகத் தெரிந்தது. குழப்பமாக இருக்கிறதா? அதைப் பற்றிக் கவலைப்படாதே. வா, வந்து சாப்பிடு."

ஜரன் அமைதியாகச் சாப்பிட்டபோது, கிருபர் அவனையே

பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கோவில் புரோகிதர்களை அடித்துத் துவைக்க வேண்டும் என்று சில நாட்களாக அவர் விரும்பி வந்திருந்தார். ஜரன் அந்த வாய்ப்பைத் தனக்கு வழங்கியிருந்தது குறித்து அவர் நன்றியுணர்வு கொண்டார்.

இங்கு உணவு கிடைப்பது எவ்வளவு சுலபமாக இருந்தது என்று ஜரன் வியந்தான். கேட்டால் கொடுக்கப்பட்டது அவனுக்கு ஆச்சரியமளித்தது. நாணயங்களைக் கொடுத்து உணவைப் பெற முடியும் என்பதையும் அவன் கவனித்தான். அன்றிரவு, கிருபர் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஜரன், பணத்திற்காக அவருடைய வேட்டி மடிப்புகளைத் துழாவினான். பிறகு அவன் அதிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு, நகரின் ஏழ்மையான பகுதிகளுக்கு ஓடிவிட்டான். தன் செயல் குறித்து அவன் எந்தப் பின்வருத்தமோ அல்லது குற்றவுணர்வோ கொள்ளவில்லை. அன்றிலிருந்து, நாணயங்கள் அவனுடைய பசியைப் போக்கின. அவை தீரும்வரை அவன் வயிறார உண்டு களித்தான். தன்னிடமிருந்த பணம் முழுவதும் தீர்ந்தபோது, மக்களிடம் அவன் உணவு கேட்கத் துவங்கினான். ஆனால் அவர்களைத் தங்கள் பணத்தைச் செலவு செய்ய வைப்பது தனக்குக் கடினமாக இருந்ததை அவன் கண்டான். அவர்களை மசிய வைப்பதற்கு அவனுக்கு வேறு ஏதோ தேவைப்பட்டது. கிருபர் தன் பூணூலைப் பயன்படுத்தியிருந்தார். ஆனால் ஜரனுக்கு அந்த வாய்ப்பு இருக்கவில்லை. மாறாக, அவன் ஒரு கத்தியைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தத் துவங்கியிருந்தான். சில சமயங்களில் அவனுக்கு அதில் வெற்றி கிடைத்தது. மற்ற நேரங்களில், அவன் அடி உதைகளை வாங்க வேண்டியிருந்தது. ஆனால் அவன் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டான். இவையனைத்தும் வாழ்வின் ஒரு பகுதி என்று அவன் ஏற்றுக் கொண்டான். அண்டைப் பகுதிகளில் அவன் பிரபலமடைந்து கொண்டிருந்தான். ஒரு நரியைப்போல, பகல் நேரத்தில், ஒரு சிறிய பாலத்திற்கு அடியில் இருந்த தன் மறைவிடத்திற்குள் அவன் பதுங்கிக் கொண்டான். இரவு நேரங்களில் இரை தேடி அவன் வேட்டையாடினான். ஏகலைவன் புரட்டியெடுத்தபோது பிறந்த விலங்கு, இப்போது முழுமையாக வளர்ந்து, நகர்புறக் காடுகளில் பிழைக்கக் கற்றுக் கொண்டிருந்தது.

புரோகிதர்களிடமிருந்து தனக்குக் கிடைத்தச் சாட்டையடிகளை ஜரன் ஒருபோதும் மறக்கவில்லை. எனவே, தன் பலிகடாக்கள் பிராமணர்களாக இருந்தால், அவன் குறிப்பாகக் கடுமையாக நடந்து கொண்டான். அவனுடைய புகழ், கொள்ளைக்கூட்டத் தலைவனான துர்ஜயனின் காதுகளை எட்டியது தவிர்க்க முடியாததாக இருந்தது.

ஜரனைப் போன்ற சிறுவர்களுக்கு அவனிடம் சிறப்புத் தேவைகள் இருந்தன. எனவே ஜரன் துர்ஜயனின் உலகிற்குள் சுலபமாக உறிஞ்சப்பட்டான். அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த மக்கள் அங்கு இருந்தனர். அவர்களிடையே ஒரு வினோதமான சமத்துவமும் மரியாதையும் இருந்தது. அதோடு, பணமும் உணவும் அங்கு அபரிமிதமாக இருந்தன.

அந்த மாபெரும் நகரின் பிற சேரிகளில் வேறு பிற கொள்ளைக் கூட்டங்கள் முளைத்துக் கொண்டிருந்தன. இந்தப் பல்வேறு கொள்ளைக் கூட்டங்களுக்கு இடையே அடிக்கடிச் சண்டைகள் வெடித்தன. அஸ்தினாபுரத்தின் இருண்ட வீதிகளில் இக்கூட்டங்கள் ஆபத்தான கண்ணாமூச்சி விளையாட்டுக்களை விளையாடின. நகரக் காவலர்கள் சில சமயங்களில் இந்தக் குதூகலத்தில் சேர்ந்து கொண்டனர். ஆனால் மற்றவர்கள் சாதாரணக் கொள்ளையர்களாக இருந்தனர். அஸ்தினாபுர எல்லையின் குறுக்கே இருந்து கிடைத்த ஆதரவும் காந்தார இளவரசனின் ஆதரவும்தான் தன் வலிமைக்குக் காரணம் என்பதை துர்ஜயன் அறிந்திருந்தான். இப்படிப்பட்ட ஆதரவை வீணாக்கிவிடாமல் இருப்பதில் அவன் எச்சரிக்கையாக இருந்தான். சாகசங்கள் நிறைந்த தங்கள் குற்ற வாழ்வில் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிப்பதற்கு அவன் அவர்களிடையே போட்டியை உருவாக்கினான். ஆனால் விதி மட்டும் குறுக்கிட்டிருக்காவிட்டால், ஜரன் விரைவில் ஏதோ ஒரு கழிவுநீரோடையில் அடையாளமற்ற ஒரு பிணமாக மிதந்து கொண்டிருந்திருப்பான். பதினேழு வயதில் ஒரு கொள்ளைக்கூட்டச் சண்டையில் ஒரு தியாகியாக ஆவது அவனுடைய விதியாக இருக்கவில்லை. கடவுள்கள் அவனுக்கு வேறு திட்டங்களை வைத்திருந்தனர். அவன் அவ்வளவு சுலபமாக மடிந்து, விரைவாகத் தன் துயரத்திலிருந்து விடுபடுவதற்கு அவர்கள் அவனை அனுமதிக்க மாட்டார்கள்.

ஜரன் கிருபரிடமிருந்து திருடி ஐந்து வருடங்கள் ஓடிப் போயிருந்தன. அவன் இப்போது துடிப்பான ஓர் இளைஞனாக வளர்ந்திருந்தான். நள்ளிரவில் வீடு புகுந்து கொள்ளையடித்தப் பருவ வயதுச் சிறுவர்கள் அடங்கிய ஒரு கும்பலின் துணைத் தலைவனாகவும் அவன் ஆகியிருந்தான். தன் இருபதுகளின் துவக்கத்தில் இருந்த தயன் என்பவன்தான் அவர்களுடைய கும்பலின் தலைவனாக இருந்தான். ஜரனுக்கும் தயனுக்கும் இடையே ஒரு கடுமையான போட்டியை உருவாக்குவதற்காக துர்ஜயன் ஓர் அழகான இளம்பெண்ணைத் தூண்டிலாகப் பயன்படுத்தினான். அவள் அவர்கள் இருவருடனும் காதல் உறவாடி, ஆபத்தான செயல்களைச் செய்வதற்கு அவர்களைத்

தூண்டினாள். அவ்விரு இளைஞர்களும், கொடூரத்திலும் குற்றங்களிலும் ஒருவரோடு ஒருவர் கடுமையாகப் போட்டியிட்டு, அப்பெண்ணையும் தங்கள் தலைவனையும் மகிழ்விக்க முயன்றனர். தயனின் கை மேலோங்கியிருந்ததுபோலத் தெரிந்தது. இது ஜரனைப் பொறாமையாலும் கோபத்தாலும் கொதிக்கச் செய்தது. அவன் தன்னை நிரூபித்துக் காட்ட விரும்பினான்.

கடந்த சில நாட்களாக அவன் ஒரு பிராமணனின் வீட்டை உன்னிப்பாகக் கண்காணித்து வந்திருந்தான். அந்த வீடு அரண்மனைக் கோட்டைக்கு அருகே இருந்தது கூடுதல் ஆபத்தாக அமைந்தது. சிறந்த பாதுக்காப்புடன் இருந்த கோட்டையின் எல்லைகளுக்கு வெகு அருகே அமைந்த ஒரு வீட்டைக் கொள்ளையடிப்பது குதூகலமானதாகவும் சாகசம் நிறைந்ததாகவும் அவனுக்குத் தோன்றியது. அந்த பிராமணன் ஒரு பாடகன்போலத் தெரிந்தான். அவனுடைய பாட்டைக் கேட்பதற்காகப் பல பணக்காரர்கள் அவனுடைய வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றனர். ஆனால் அவன் அவ்வளவு செழிப்பானவனாகத் தோன்றவில்லை. அவன் தன் செல்வத்தை மறைத்து வைக்க விரும்பியது அதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று ஜரன் நினைத்தான். ஆனால் அவன் செல்வந்தனாக இல்லாவிட்டால், தன் வீட்டிற்கு வந்து சென்றவர்களுக்கு எப்படி அவனால் உணவளிக்க முடிந்தது? சில நாட்கள் அவனுடைய வீட்டு வாசலில் ஒரு பெரிய கூட்டம் நின்று கொண்டிருக்கும். மற்ற நாட்களில் ஒருவர்கூட இருக்க மாட்டார்கள். ஜரன் மழைக்காலம் வருவதற்காகக் காத்திருந்தான். மழையின்போது கொள்ளையடிப்பது அதிக சுலபமானதாக இருந்தது. மழைச் சத்தத்தில் தன்னுடைய பலிகடாக்களின் கூக்குரல்களும் அலறல்களும் யாருடைய காதுகளிலும் விழாது என்பதால் ஜரன் அப்பருவத்தைத் தேர்ந்தெடுத்தான்.

மழைக்காலம் வந்தது. அஸ்தினாபுரத்தின் கழிவுநீரோடைகள் நிரம்பி வழிந்தோடத் துவங்கின. மழை பெய்யத் தொடங்கிப் பத்து நாட்களுக்குப் பிறகு, ஜரன் தன் திட்டத்தைத் தன் கும்பலைச் சேர்ந்தவர்களிடம் வெளிப்படுத்தினான். தயனுக்கு அத்திட்டம் உற்சாகமளிக்கவில்லை. உண்மையான செல்வம் பிராமணர்களிடமோ அல்லது சத்திரியர்களிடமோ இல்லை, மாறாக வணிகர்களான வைசியர்களிடமே இருந்தது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அன்றிரவு சூறையாடுவதற்கு அவன் ஒரு பணக்காரப் பட்டு வியாபாரியின் மாளிகையைக் குறி வைத்திருந்தான். ஏதோ ஒரு பிராமணப் பாடகனின் வீட்டைக் கொள்ளையடிப்பது பற்றிய ஜரனின் முட்டாள்தனமாக திட்டத்தைப் பற்றி அவன் கேட்க விரும்பவில்லை.

ஜரனும் தயனும் விரும்பிய அந்த இளம்பெண் நக்கலாகச் சிரித்தாள். ஜரன் கோபத்தில் தன்னுடைய மதுக் குவளையை வேகமாகத் தரையின்மீது வீசியெறிந்தான். பரிகசித்துக் கொண்டிருந்த இந்த முட்டாள்களுக்குத் தான் யாரென்று நிரூபித்துக் காட்டப் போவதாக அவன் தனக்குள் கூறிக் கொண்டான். அந்த ஒட்டுமொத்தக் கும்பலும் நள்ளிரவில் நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றது. அவர்கள் அந்தப் பாடகனின் வீட்டை நெருங்கியபோது ஜரன் மட்டும் அக்கூட்டத்திலிருந்து நழுவினான். தயன் அவனை உதாசீனப்படுத்திவிட்டு, தான் குறி வைத்திருந்த பட்டு வியாபாரியின் மாளிகையை நோக்கி நடந்தான்.

தன் எதிரியின் முகத்தில் ஒளிவீசிய கேலியைக் கண்டு ஜரன் தன் பற்களை நறநறவென்று கடித்தான். அவன் அந்தப் பாடகனுடைய வீட்டின் சிறிய மதில் சுவரைத் தாண்டிக் குதித்தபோது பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. தொலைவில் எங்கோ ஒரு நாய் ஊளையிட்டது. வானில் இடி இடித்தது. அவன் அந்த வீட்டைச் சுற்றி நடந்து, உள்ளே நுழைவதற்காக ஒவ்வொரு சன்னலையும் கதவையும் லேசாகத் தள்ளிப் பார்த்தான். அவை அனைத்தும் மூடப்பட்டிருந்ததைக் கண்ட அவன், ஓலைக்கூரையின்மீது ஏறி உள்ளே குதிப்பதென்று தீர்மானித்தான். அவன் மேலே ஏறிக் கொண்டிருந்தபோது மழையினால் அவனுக்குக் கால் வழுக்கியது. அவனால் வேகமாக ஏற முடியவில்லை. இரண்டு முறை, மின்னல் வெட்டியபோது, கோட்டைச் சுவர்களைக் காவல் காத்து நின்ற காவலர்களின் நிழலுருவங்களை அவன் பார்த்தான். அவன் அக்கூரையில் ஒரு துளையிட்டு உள்ளே எட்டிப் பார்த்தான். சாப்பாட்டு அறையிலிருந்து கிசுகிசுப்பான குரல்கள் வந்து கொண்டிருந்தது அவனுடைய காதுகளுக்குக் கேட்டது. அங்கு ஒரு மங்கலான வெளிச்சத்தைப் பார்த்த அவன், தன் விதியை நொந்து கொண்டான். எல்லோரும் தூங்கியிருப்பார்கள் என்று அவன் எதிர்பார்த்திருந்தான். தான் அங்கு நீண்டநேரம் காத்திருந்தால் கோட்டைக் காவலர்கள் தன்னைப் பார்த்துவிடக்கூடும் என்பதால், அவன் மெதுவாகத் தவழ்ந்து சென்று அந்த ஓட்டையின் வழியாகச் சத்தமின்றி உள்ளே குதித்து மென்மையாகத் தரையிறங்கினான்.

“கிருஷ்ணா, நீதான் எங்களுக்குத் தேவையான ஒரே உணவு. உன்னுடைய பரிவு என் வயிற்றுப் பசிக்கும் என் மனைவி மற்றும் குழந்தைகளின் பசிக்கும் உணவளிக்கிறது. உன்னுடைய நாடகத்தில் நாங்கள் களிப்படைகிறோம், உன்னுடைய வழிகளில் நாங்கள் எங்களைத் தொலைக்கிறோம். அச்சுதா, மாதவா . . .” அந்தப் பாடகனின் குரலில் இருந்த ஏதோ ஒன்று ஜரனைச் சுண்டியிழுத்தது. அவன் தன்

கத்தியை உருவியிருந்தான். சமையலறையைத் தாண்டி இருந்த ஓர் அறையில் நிழல்கள் நடனமாடியதை அவனால் பார்க்க முடிந்தது.

"போதும் உங்கள் பிரார்த்தனை! குழந்தைகள் பட்டினியாக இருக்கிறார்கள். நேற்றிலிருந்து அவர்கள் எதுவும் சாப்பிடவில்லை. நமக்கு உணவளிக்கக்கூடிய முடியவில்லை என்றால், உங்கள் கிருஷ்ணனால் என்ன பயன்?" ஒரு பெண்ணின் எரிச்சலான குரல் மேலோங்கி ஒலித்தது. 'அவர்கள் இரண்டு நாட்களாகச் சாப்பிட்டிருக்கவில்லையா? எல்லோரையும் விட்டுவிட்டு, நான் இந்த வீட்டையா கொள்ளையடிக்க வந்தேன்?' என்று நினைத்த ஜரன் அதிர்ச்சியடைந்தான்.

சுமார் நான்கு வயது நிரம்பிய ஒரு குழந்தை, சமையலறைக்குள் நுழைந்தது. ஜரன் நிழல்களுக்குள் ஒதுங்கி மறைந்து கொள்ள முயன்றான். ஆனால் அக்குழந்தை அவனைப் பார்த்துவிட்டுச் சிரித்தது. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. தன் கையில் இருந்த கத்தியை அவன் மறைக்க முயன்றான். அந்த பிராமணனின் வீட்டில் நிலவிய பசியைப் பற்றிச் சற்று முன் அவன் கேட்டிருக்காவிட்டால், அவன் எந்தத் தயக்கமும் இன்றி அந்தக் கத்தியை அச்சிறுமியின் மென்மையான உடலுக்குள் செருகியிருப்பான். ஆனால் பசி என்றால் என்னவென்று அவன் அறிந்திருந்தான். அதன் வலியும் அவனுக்குத் தெரிந்திருந்தது. பசியோடு இருந்த எவரையும் அவனால் கொல்ல முடியவில்லை.

"பவானி, சாப்பிட வா," என்று அந்த வீட்டுப் பெண்மணி அழைத்தாள். ஆனால் அச்சிறுமி அங்கிருந்து நகராதபோது, அவள் சமையலறைக்குள் வந்தாள். அங்கு ஒருவன் ஒரு கத்தியோடு நின்று கொண்டிருந்ததைக் கண்ட அவள் அப்படியே உறைந்து நின்றாள். பிறகு ஒரு கணத்தில் அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, தன் மகளை வெடுக்கென்று பிடித்து இழுத்துவிட்டு அலறினாள். வெளியே, சிறிதுகூட வேகம் குறையாமல் மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பழைய வீட்டின் கதவுகளையும் சன்னல்களையும் அது உலுக்கியெடுத்தது. அப்பெண் தன் மகளை இழுத்துக் கொண்டு தன்னுடைய இரண்டு மகன்களையும் நோக்கி ஓடிச் சென்று, அவர்களைப் பாதுகாப்பாகத் தன் கைகளால் சுற்றி வளைத்தாள். அச்சிறுவர்கள் இரட்டைப் பிறவிகள், பவானியைவிடச் சிறியவர்கள். அவர்களுக்கு சுமார் மூன்று வயது இருக்கும். அப்பெண் தன் குழந்தைகளை அணைத்துக் கொண்டு, பயத்தில் தன் பற்கள் நடுங்க, ஒரு மூலையில் ஒடுங்கினாள்.

அவளுடைய கணவன் ஜரனை ஏறிட்டுப் பார்த்தான். ஜரன் தன்

கையில் இருந்த கத்தியை இறுக்கிப் பிடித்தான். தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்கு அவன் தயாராக இருந்தான். "கிருஷ்ணா, நீ வந்துவிட்டாயா . . ." என்று அந்த பிராமணன் கூறினான். அவனுடைய குரலில் எந்தவிதமான பயமும் இருக்கவில்லை. அவனுடைய குரலில் மகிழ்ச்சியும் குதூகலமும் பொங்கி வழிந்தன. ஜரன் குழப்பமடைந்தான். தான் ஒரு பைத்தியக்காரனின் வீட்டிற்கு வந்துவிட்டோமோ என்று அவன் நினைத்தான். அந்த பிராமணன் ஜரனைச் சுற்றி ஆனந்த நடனமாடிவிட்டு, அவனுடைய பாதங்களில் விழுந்தான். "கிருஷ்ணா, என் அன்புக்குரியவனே, என்றேனும் ஒருநாள் நீ என் வீட்டிற்கு வருவாய் என்று எனக்குத் தெரியும்," என்று அவன் களிப்போடு கூறினான். பிறகு அவன் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்து, "யார் வந்திருக்கிறார்கள் என்று பார்! வாழை இலையைக் கொண்டு வா. என் கிருஷ்ணனுக்கு உணவு கொடு! பெண்ணே, அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் உனக்கு மறந்துவிட்டனவா?" என்று கேட்டான்.

ஜரன் தன் மூளை மரத்துப் போய், ஒரு சிலைபோல நின்றான். அந்த பிராமணன் தன் மனைவியிடம் மீண்டும் கத்தினான். அவள் ஜரனின் கத்தியைப் பார்த்தாள். அவளுடைய கண்களில் இருந்த பகைமையுணர்வைக் கண்டு ஜரன் நெளிந்தான். பிறகு அவன் தன் கத்தியைத் தரையின்மீது வீசியெறிந்தான். அப்பெண்ணின் வெளிறிப் போன உதடுகளின்மீது ஒரு லேசான புன்னகை தெரிந்தது. கெடுநோக்குடன் தான் அந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்திருந்தது குறித்து ஜரன் அவமானம் கொண்டான். அந்த பிராமணன் இன்னும் உற்சாகமாகத் துள்ளிக் குதித்தபடி, தன் விருந்தினனை உபசரிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். ஜரனின் வாழ்வில் அவனைப் பார்த்து யாரும் ஒருபோதும் இவ்வளவு மகிழ்ச்சியடைந்ததில்லை. மக்கள் அவனை எட்டி உதைத்திருந்தனர், அடித்துத் துவைத்திருந்தனர், கல்லால் அடித்திருந்தனர், ஓங்கிக் குத்தியிருந்தனர், அவனைப் பார்த்துக் கத்தியிருந்தனர், ஆனால் யாரும் ஒருபோதும் அவனை ஒரு மனிதனாகக்கூடக் கருதியிருக்கவில்லை. ஆனால் இந்த பிராமணன் அவனைக் கடவுளாகக் கருதினான். ஒரு கடவுளாகப் பிரபலமடைந்து கொண்டிருந்த கிருஷ்ணனைப் பற்றி அரசல் புரசலாகவே ஜரன் கேள்விப்பட்டிருந்தான். கிருஷ்ணனை அற்புதங்களை நிகழ்த்தியவனாகவும் விஷ்ணுவின் அவதாரமாகவும் பலர் வழிபடத் துவங்கியிருந்ததை அவன் அறிந்திருந்தான். சேரிகளில், வாழ்க்கையின் கொடுமையிலிருந்து தப்பிப்பதற்கு மக்களுக்கு மாயாஜாலம் தேவைப்பட்டது. கிருஷ்ணன் அந்த மாயாஜாலமாக அமைந்தான்.

“கிருஷ்ணா, உன்னுடைய குறும்பு எனக்கு நன்றாகத் தெரியும். உன்னை நான் அடையாளம் காணவில்லை என்பதுபோல நீ நடந்து கொள்கிறாய். தயவு செய்து என் உபசரிப்பையும் காணிக்கைகளையும் ஏற்றுக் கொள். கடவுளே . . .” அந்த பிராமணன் ஜரனின் கைகளைப் பிடித்து, அவனைத் தரையின்மீது அமர வைத்தான். பிறகு ஒரு வாழை இலையை அவன் முன்னால் விரித்து, ஒரு பிசுபிசுப்பான கஞ்சியை அதில் பரிமாறிவிட்டு, “கிருஷ்ணா, சாப்பிடு . . .” என்று ஜரனை வற்புறுத்தினான். பிறகு அவன் ஒரு மகிழ்ச்சியான பாடலைப் பாடத் துவங்கினான்.

அவனுடைய இனிமையான குரல், அந்த வேடுவ இளைஞனின் எரிந்து கொண்டிருந்த மனத்திற்கு இதமளித்தது. அந்தப் பாடல், கிருஷ்ணனின் பரிவைப் பற்றியும், கடவுள் எப்படித் தன் பக்தர்களைச் சோதித்தார் என்பது பற்றியும் அமைந்திருந்தது. கிருஷ்ணன் ஒவ்வோர் ஆன்மாவிலும் ஒளிந்திருந்ததாகவும், உயிரோடு இருக்கின்றவற்றிலும் உயிரற்றவற்றிலும் அவன் இருந்ததாகவும், அன்பிலும் பரிவுடன்கூடிய செயல்களிலும் அவன் மலர்ந்ததாகவும் அந்தப் பாடல் கூறியது. அப்பாடலின் வார்த்தைகளுக்கான பொருளைப் புரிந்து கொள்ளும் அறிவு ஜரனுக்கு இருக்கவில்லை. அது அவனுடைய மூளைக்குப் புரிபடாவிட்டாலும், அப்பாடல் அவனுடைய இதயத்தைத் தொட்டது. அவன் விம்மி அழத் தொடங்கினான். “ஐயா, நான் உங்கள் கிருஷ்ணன் அல்ல. நான் ஒரு தீண்டத்தகாதவன்,” என்று அவன் தன் விம்மல்களுக்கு இடையே கூறினான். அந்த பிராமணன் தன்னை அடிப்பான் அல்லது தன்னைப் பார்த்துக் கத்துவான் என்று ஜரன் எதிர்பார்த்தான். அந்த பிராமணன் அவ்வாறு செய்திருந்தால், ஜரனுக்குள் உறங்கிக் கிடந்த மிருகம் விழித்தெழுந்து, தரையின்மீது கிடந்த கத்தியைத் தன் கையில் எடுத்திருக்கும்.

மாறாக, அந்த பிராமணன், “நீ தீண்டத்தக்கவனும் அல்ல, தீண்டத்தகாதவனும் அல்ல. நீ நீயாக இருக்கிறாய். நீதான் பிரம்மன், நீதான் விஷ்ணு, நீதான் மகேஸ்வரன். நீ என் தந்தை, என் மகன், என் தாய், மற்றும் என் சகோதரன். என் உணவைப் பகிர்ந்து கொள்வதற்காக என் சிறிய வசிப்பிடத்திற்கு நீ வந்திருக்கிறாய். நீ என் விருந்தினன், என் கடவுள். கிருஷ்ணா, தயவு செய்து சாப்பிடு,” என்று மென்மையாகக் கூறினான். அவன் அந்தப் பானையிலிருந்த கஞ்சி முழுவதையும் அந்தத் தீண்டத்தகாதவனின் இலையில் ஊற்றினான்.

ஜரனின் கண்கள் கண்ணீரால் நிரம்பின. தன் கண்ணீருக்கு இடையே அவனால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. ஆனாலும் அவன் தன் கஞ்சியைக் கையால் எடுத்தான். அது அவனுடைய

விரல்களின் ஊடாக ஒழுகி வழிந்தது. திடீரென்று அவனுக்குக் கடுமையாகப் பசித்தது. அவன் வேகவேகமாக அந்தக் கஞ்சியைப் பருகிவிட்டு, இலையைச் சுத்தமாக வழித்துத் துடைத்தான்.

அந்தக் கிறுக்கு பிராமணன் இன்னொரு பாடலைப் பாடத் துவங்கினான். அவன் அப்பாடலைப் பாடி முடித்துவிட்டு, ஜரனின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி, "கிருஷ்ணா, நான் உன்னால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். முதலில், பசியோடு இருந்த ஒருவனின் முன்னால் நீ உணவாக வந்தாய். பிறகு, உணவுக்கான பசியைக் கொண்ட ஒருவனாக வந்திருக்கிறாய்," என்று கூறினான். பிறகு அவன் தன் மனைவியிடம் திரும்பி, தங்கள் விருந்தினன் தன் கைகளைக் கழுவிக் கொள்வதற்குத் தண்ணீர் கொண்டு வருமாறு அவளிடம் கூறினான்.

தூங்கிக் கொண்டிருந்த இரட்டையரைக் கீழே படுக்க வைத்துவிட்டு, அவள் சமயலறையை நோக்கி நடந்தாள். அவள் தண்ணீரை எடுத்துக் கொண்டு வாசற்கதவைத் திறந்தபோது, ஒரு குளிர்ந்த காற்று வேகமாக உள்ளே நுழைந்ததில், வீட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்கு லேசாகப் படபடத்தது. அவள் தண்ணீர்ப் பாத்திரத்தோடு வெளியே காத்திருந்தாள். ஜரன் அந்த இரட்டைச் சிறுவர்களைப் பார்த்துவிட்டு உடல் நடுங்கினான். அவர்கள் இளைத்துப் போயும் வெளிறிப் போயும் இருந்தனர். அவன் தன் கைகளைக் கழுவுவதற்காக வெளியே சென்றபோது, பவானி அவனைப் பின்தொடர்ந்தாள். காலியான கஞ்சிக் கலயத்தை அவள் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததை ஜரன் பார்த்தான். அந்தக் குடும்பத்தின் இரவு உணவு முழுவதையும் தான் சாப்பிட்டு முடித்திருந்தது அவனுக்கு அப்போதுதான் உறைத்தது. இப்போது அக்குடும்பம் பட்டினி கிடைக்கும். அப்பெண்மணி ஒரு வெறுப்பான புன்னகையை அவனை நோக்கி வீசினாள்.

"அம்மா, என்னை மன்னித்துவிடுங்கள் . . ." ஜரனுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. அவனால் அவளை நேராகப் பார்க்கவும் முடியவில்லை.

"அவருடைய கிறுக்குத்தனம் எங்களுக்குப் பழகிப் போய்விட்டது," என்று கூறிவிட்டு, அவள் தன் உதடுகளைச் சுளித்தாள். அது வேதனையாலா அல்லது மகிழ்ச்சியாலா என்பதை ஜரனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நீங்கள் பணக்காரர்கள் என்று நான் நினைத்தேன். பல செல்வந்தர்கள் இந்த வீட்டிற்கு வந்து போவதை நான் பார்த்திருக்கிறேன். அதனால்தான் . . ." ஜரனால் தொடர்ந்து பேச

முடியவில்லை.

"அதனால்தான் நீ எங்களைக் கொள்ளையடிக்க வந்தாயா? நீ என் கணவரிடம் கேட்டிருந்தால், நீ விரும்பியதையெல்லாம் அவர் உனக்குக் கொடுத்திருப்பார் . . . ஆனால், கொடுப்பதற்கு எங்களிடம் அவ்வளவாக எதுவும் இல்லை."

பவானி தன் தாயின் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். அப்பெண் அவளைத் தூக்கி அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டாள். அச்சிறுமி ஒரு தேவதையைப்போலப் புன்னகைத்தாள். "அவர் எல்லா இடங்களிலும் கிருஷ்ணனைப் பார்க்கிறார். அவருக்குத் திறமை இருக்கிறது. அவர் சிறப்பாகப் பாடுகிறார். நல்ல நாட்களின்போது, அவர் பாடுவதைக் கேட்க மக்கள் திரண்டு வருவர். இந்த அறை முழுதும் பரிசுப் பொருட்களாலும் பணத்தாலும் நிரம்பி வழியும். இதுவே வேறொருவனாக இருந்திருந்தால், இந்நேரத்திற்குள் பணக்காரனாக ஆகியிருப்பான். ஆனால் இவரோ, பரிசுகள் தனக்குச் சொந்தமானவையல்ல, அது கடவுளுக்குத்தான் சொந்தம் என்றும், அதில் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் கூறுகிறார். தான் சம்பாதிக்கும் எல்லாவற்றையும் அன்றன்றைக்கே அவர் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார். எதிர்காலத்தில் நம்பிக்கை வைப்பதும், அதற்காகச் சேமிப்பதும் தன் கடவுளை அவமதிப்பதுபோல ஆகும் என்று அவர் கருதுகிறார். நம்மைப் படைத்தவன் நமக்கு உணவளிப்பான் என்று அவர் கூறுகிறார். மாலை நேரத்திற்குள், எங்கள் வீட்டு வாசலுக்கு வருவோருக்கு இந்தப் பொருட்கள் அனைத்தும் தானமாகக் கொடுக்கப்பட்டுவிடும். அனைத்து விதமான சோம்பேறிகளும், பிச்சைக்காரர்களும், துறவிகளும், மேன்மக்களும், பெண்களும், போலி மருத்துவர்களும் தங்கள் பங்கைப் பெற்றுக் கொள்வதற்கு இங்கு படையெடுத்து வருவர். என் கணவர் ஒவ்வோர் ஆன்மாவிலும் கிருஷ்ணனைப் பார்க்கிறார். தன் குடும்பம் பசியால் வாடுவது குறித்து அவர் கவலைப்படுவதில்லை. என் கணவர் அன்னியர்களுக்கும் திருடர்களுக்கும் உணவளித்துக் கொண்டிருக்கும்போது என் குழந்தைகள் பட்டினியால் வாடுவதைப் பார்ப்பது என் தலைவிதி . . ." என்று கூறிவிட்டு, அவள் திடீரென்று தன் பேச்சை நிறுத்தினாள்.

"அம்மா, என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களிடம் கொள்ளையடிக்க வந்தேன்." பவானி தன் கட்டைவிரலைத் தன் வாய்க்குள் நுழைத்ததையும் அவளுடைய தாய் அவள் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டதையும் ஜரன் கண்டான். அவன் உட்கொண்ட உணவு அவனுடைய வயிற்றில் சத்தமிட்டது. கூரையில் தான்

போட்டிருந்த ஓட்டையின் வழியாக உள்ளே சொட்டிக் கொண்டிருந்த மழைநீரால் சமையலறைத் தரையின்மீது ஒரு சிறு குளம் உருவாகியிருந்ததை அவன் பார்த்தான். இன்னோர் அறையில் அந்த பிராமணன் கடவுளின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தது அவர்கள் அனைவருக்கும் கேட்டது. ஜரனின் கண்கள் அப்பெண்ணின் கண்களைச் சந்தித்தன. அவனுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. "அம்மா, நீங்கள் இன்றிரவு பட்டினி கிடக்கப் போவதில்லை. நான் உங்களுக்கு உணவு கொண்டு வருகிறேன்," என்று கூறிய அவனுக்கு வேறு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அப்பெண் வெறுமனே புன்னகைத்தாள். அவளுடைய குழந்தை அமைதியாகத் தூங்கிப் போயிருந்தாள்.

ஜரன் ஒரு கணம் தயங்கிவிட்டு, பிறகு அங்கிருந்து திரும்பி நடந்தான். தெருவிளக்குகள் மழையில் அணைந்து போய் நீண்டநேரம் ஆகியிருந்தது. எல்லா இடமும் இருட்டாக இருந்தது, வீதிகள் ஈரமாக இருந்தன. மழைநீர் வடிகால்களில் நுரைத்துக் கொண்டிருந்த நீரின் சத்தத்தைத் தவிர, அந்த இரவு அமைதியானதாக இருந்தது. இந்நேரத்தில் எங்கேயிருந்து உணவைக் கொண்டு வருவது என்று அவனுக்குத் தெரியவில்லை. எல்லாவற்றையும் மற்றவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு எது மக்களை அவ்வளவு தூரம் கிறுக்கர்களாக ஆக்கியது என்று அவன் தொடர்ந்து வியந்து கொண்டிருந்தான். முன்பு, மக்களிடம் தான் உணவு கேட்டால் அவர்களிடம் அடி வாங்குவது அவனுக்குப் பழகிப் போயிருந்தது. ஆனால் இப்போது அவன் மற்றவர்களை அடிப்பவனாக மாறியிருந்தான். கோவிலின் தலைமைப் புரோகிதனிடம் தான் வாங்கிய சாட்டையடிகள் மனத்தளவில் அவனுக்கு இன்னும் வலித்தன. உலகை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. படிப்பறிவற்ற அந்த வேடுவ இளைஞனை வாழ்க்கை மிகவும் குழப்பியது. மக்களால் எப்படி ஒரே நேரத்தில் காட்டுமிராண்டிகளாகவும் பரிவு கொண்டவர்களாகவும் இருக்க முடிந்தது என்று அவன் வியந்தான். மற்றவர்கள் கொடூரமானவர்கள் என்று நம்புவது அவனுக்கு எளிதாகவும் சௌகரியமாகவும் இருந்தது. கோவில் நிகழ்விற்குப் பிறகு பிராமணர்கள் அனைவரைக் குறித்தும் அவன் ஓர் ஆழமான வெறுப்பை வளர்த்திருந்தான். ஆனால் இன்றிரவு அவன் சந்தித்தப் பாடகனைப் போன்ற கிறுக்கர்கள், அவனுடைய பகைமையுணர்வின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்து, அவனைக் குழப்பினர். அவன் தொடர்ந்து திக்கற்று நடந்து கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, ஜரன் ஒரு கசாப்புக் கடையைப் பார்த்தான். ஓலைக்கூரையுடன் அமைந்த அதன் முற்றத்தில், செம்மறி ஆடு ஒன்று,

ஒரு கயிற்றுக் கட்டிலின் கால்களில் ஒன்றுடன் ஒரு கயிற்றால் கட்டிப் போடப்பட்டிருந்தது. கடை மூடியிருந்தது. கசாப்புக் கடைக்காரன் அந்தக் கட்டிலின்மீது படுத்து, சத்தமாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். 'ஆஹா, சாப்பாடு கிடைத்துவிட்டது! இதைக் கொண்டு அந்தப் பைத்தியக்காரப் பிராமணனுக்கு என் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு, இந்த அளவுக்கதிகமான உணர்ச்சிவசப்படுதலில் இருந்து நான் விடுபட்டு விடலாம்,' என்று ஜரன் நினைத்தான். தான் அந்த பிராமணனுக்குக் கடன்பட்டிருந்ததாக அவன் நினைத்தான். அக்கடனை அவனுக்குத் திருப்பிச் செலுத்தாவிட்டால், இத்தனை வருடங்களாகத் தான் சேகரித்து வந்திருந்த அகங்காரத்தையும் பகைமையுணர்வையும் தான் இழந்துவிடுவோம் என்று ஜரன் பயந்தான். குற்றமும் சாகசமும் நிறைந்த தன்னுடைய இருண்ட உலகிற்கு அவன் திரும்பிச் செல்ல விரும்பினான். ஜரன் அந்த ஆட்டின் கயிற்றை அவிழ்த்து, அந்த ஆட்டை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நடந்தான். அந்த பிராமணனின் வீட்டைக் கண்டுபிடிப்பதற்கு அவனுக்குச் சிறிது நேரம் ஆனது. ஆனால் இறுதியில், அவன் ஒரு துள்ளல் நடையுடன் அந்த வீட்டின் முன்கதவு வழியாக நடந்து சென்றான். அவன் இப்போது ஒரு திருடனாக வரவில்லை, மாறாக, அவர்களுக்கு ஒன்றைக் கொடுக்க வந்திருந்தான். ஒரு வினோதமான மகிழ்ச்சியுணர்வு அவனுடைய இதயத்தை நிரப்பியது. கொடுப்பதில் இருந்த மகிழ்ச்சியைப் பற்றிய முதல் புரிதல் அவனுடைய இருண்ட இதயத்திற்குள் நுழைந்தது. எல்லோருக்கும் எல்லாவற்றையும் தூக்கிக் கொடுத்த அந்த பிராமணன் இப்போது அவ்வளவு பெரிய கிறுக்கனாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஜரன் அந்த வீட்டின் வாசற்கதவைத் தட்டினான். அந்தப் பாடகன் வந்து கதவைத் திறந்தான். ஜரனின் இருண்ட முகம் மகிழ்ச்சியாலும் பெருமிதத்தாலும் ஒளிர்ந்தது. தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்த ஆட்டை அவன் தன்னுடன் இறுக்கிக் கொண்டு, "ஐயா, இது உங்களுக்கு என் பரிசு. அடுத்த ஒருசில நாட்களுக்கு நீங்கள் இதைச் சாப்பிடலாம். அதன் பிறகு நான் மீண்டும் உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வருவேன்," என்று கூறிவிட்டு, ஒப்புதலை எதிர்பார்த்து, அவன் அந்த பிராமணனின் மனைவியின் முகத்தைப் பார்த்தான். ஆனால் அவனுடைய பரிசை ஏற்க முடியாது என்று அவள் வருத்தமாகத் தலையசைத்தாள்.

"கிருஷ்ணா, நீ திரும்பி வந்துவிட்டாய். நீ என்னிடம் மிகவும் அன்பாக நடந்து கொள்கிறாய். உன் குறும்புகளுக்கு அளவே இல்லை. என்னை இப்படிச் சோதிக்காதே." அந்த பிராமணன் ஒரு மயக்க

நிலையில் இருந்ததுபோலப் பேசினான். பிறகு அவன் கீழே மண்டியிட்டு அமர்ந்து, அந்தச் செம்மறியாட்டின் முகத்தை வருடிக் கொடுத்தான். அந்த விலங்கு அசையாமல் நின்றது. அந்த பிராமணனின் செயலில் அது பரிவை உணர்ந்ததுபோலத் தோன்றியது. பிறகு அந்தப் பாடகன் எழுந்து, தன் வீட்டின் கொல்லைப்புறத்திற்குச் சென்றான்.

"அம்மா . . . நீங்கள் என் பரிசை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?" தனக்குள் கோபம் பொங்கிக் கொண்டிருந்ததை ஜரன் உணர்ந்தான். அவர்கள் ஏன் தான் கொடுத்தப் பரிசை ஏற்றுக் கொள்ள மறுத்தனர் என்பது தனக்குத் தெரியும் என்று அவன் நினைத்தான். அந்தப் பெண் மீண்டும் மறுத்துத் தலையாட்டிவிட்டு, உறங்கிக் கொண்டிருந்த தன் குழந்தைகளைப் பார்த்தாள். "நான் ஒரு தீண்டத்தகாதவன் என்பதால்தான் நீங்கள் என் பரிசை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்களா?" என்று அவன் வெறுப்புடன் கேட்டான். அவன் அப்பெண்ணிடமிருந்து தன் பார்வையை விலக்கினான். அவனால் அவளைப் பார்க்க முடியவில்லை.

"இல்லை," என்று அந்தப் பெண் மென்மையாகக் கூறினாள். "கடவுளாகப் பார்த்து மீண்டும் தன் இடத்திற்குத் திருப்பி அழைத்துக் கொள்ளும்வரை, வாழ்வதற்கான உரிமை ஒவ்வோர் உயிரினத்திற்கும் இருப்பதாக என் கணவர் நம்புகிறார். உணவிற்காகவோ அல்லது இன்பத்திற்காகவோ ஓர் உயிரைக் கொல்வதை அவரால் ஒப்புக் கொள்ள முடியாது. உன்னுடைய பரிசும், பசியாற்றப்பட வேண்டிய ஒன்றுதான்."

அந்தப் பாடகன் சிறிதளவு புல்லுடன் திரும்பி வந்து, அதை அந்த ஆட்டின் முன்னால் போட்டான். அது அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததை அவன் பார்த்தான். ஜரனால் அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அது அவனை வதைத்துக் கொண்டிருந்தது. அவன் அந்த பிராமணனை வெறுத்தான். தன் கடனைத் திருப்பிச் செலுத்தும்வரை, இந்தக் குற்றவுணர்வு மற்றும் பகைமையுணர்விலிருந்து தன்னால் ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று அவன் நினைத்தான். அவன் அங்கிருந்து திரும்பி, இருளுக்குள் காட்டுத்தனமாக ஓடினான்.

ஒரு கடையிலிருந்து தான் திருடியிருந்த ஒரு மூட்டை அரிசியுடன் அவன் மீண்டும் திரும்பி வந்தபோது, அந்த வீடு நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது. சிலர் அத்தெருவில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஜரன் தன் கையிலிருந்த அரிசி மூட்டையைக் கீழே போட்டுவிட்டு, காட்டுத்தனமாகக் கூப்பாடு போட்டுக் கொண்டே, எரிந்து கொண்டிருந்த அந்த வீட்டை நோக்கி ஓடினான்.

கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பை நோக்கி ஒரு கருப்பு உருவம் ஓடிக் கொண்டிருந்ததைக் கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் அவனைத் தடுப்பதற்கு முன், அவன் அந்த வீட்டிற்குள் குதித்திருந்தான். அவன் அந்த பிராமணனையும் அவனுடைய குடும்பத்தாரையும் பரிதவிப்போடு தேடினான். உத்தரக்கட்டை ஒன்று கீழே விழுந்து, ஜரனைக் கிட்டத்தட்டத் தரையோடு தரையாகக் கிடத்தியது. அவன் கடுஞ்சீற்றத்துடன் அலறிக் கொண்டு, எல்லாப் பக்கங்களிலும் எரிந்து கொண்டிருந்த நெருப்பிலிருந்து வெளியேற முயற்சித்தான். யாரோ அவனை வெளியே இழுத்து, அவனுடைய உடலின் வலப்பக்கத்தை வெறியோடு விழுங்கிக் கொண்டிருந்த தீயை அணைக்க முயற்சித்தனர். அவர்கள் அவனைத் தரையில் உருட்டி, அவன்மீது தண்ணீரை ஊற்றினர். அவன் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதை அவர்கள் உறுதி செய்து கொண்டபோது, வீட்டிற்குள் இருந்தவர்களை அவர்கள் தேடத் துவங்கினர்.

ஜரன் முனகியபடி தரையில் கிடந்தான். வீட்டிற்குள் எரிந்து கிடந்த உடல்களை ஒவ்வொன்றாக அவர்கள் வெளியே கொண்டு வந்தபோது, அவனால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. சிறுமி பவானி, அந்த இரட்டையர், ஜரன் 'அம்மா' என்று அழைத்த அப்பெண், அந்தப் பைத்தியக்கார பிராமணன் ஆகிய அனைவருமே இறந்து போயிருந்தனர். அந்தச் செம்மறியாடும் இறந்து போனது. ஜரன் உறைந்து போய் ஊமையாக நின்றான். அங்கிருந்தவர்கள் அவனைப் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவனுடைய காயங்களுக்குக் கட்டுப் போட்டுவிட்டு, வாழட்டும் அல்லது சாகட்டும் என்று இலவசப் பிரிவில் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டனர்.

அவன் நலமடைவதற்கு ஆறு மாதங்கள் பிடித்தது. மருத்துவமனைக் குப்பைத் தொட்டிக்குள் யாரோ தூக்கி எறிந்திருந்த ஒரு கண்ணாடித் துண்டில் ஜரன் தன் உருவத்தின் பிரதிபலிப்பைப் பார்த்தபோது, தன் உடலையும் முகத்தையும் கண்டு அதிர்ச்சியடைந்தான். அவனுடைய இடது பக்கம் முழுவதும் எந்தக் காயமும் இன்றி, கரிய தோலுடன் வழுவழுப்பாக இருந்தது. அவனுடைய முகத்தின் ஒரு பகுதி எரிந்து போயிருந்தது. அவனுடைய வலப்பக்க உதடுகள் சுருங்கிப் போயிருந்ததால், அப்பக்கத்தில் பற்கள் வெளியே தெரிந்தன. அவன் விகாரமாகத் தோன்றினான். ஆனால் அவன் அழவில்லை. அவனுடைய கண்ணீர் வற்றிப் போய் நெடுங்காலம் ஆகியிருந்தது. அவன் அந்தக் கண்ணாடித் துண்டை வீசி எறிந்துவிட்டு, மீண்டும் தன் படுக்கைக்குச் சென்றான். தன்னுடைய பிரதிபலிப்புகளால் தனக்கு எந்தப் பயனும் இல்லை என்று அவன் நொந்து கொண்டான்.

* * *

அவனால் பிழைத்துக் கொள்ள முடியும் என்று அந்த மருத்துவமனை ஊழியர்களுக்கு உறுதியாகத் தெரிந்தபோது, அவர்கள் அவனை வெளியே தூக்கி எறிந்தனர். அந்த பிராமணனும் அவனுடைய குடும்பத்தாரும் எப்படி இறந்து போனார்கள் என்பது பற்றிப் பின்னாளில் அவனுக்குத் தெரிய வந்தது. ஜரன் அவர்களுக்காக உணவு தேடிச் சென்றிருந்த நேரத்தில், தயனும் அவனுடைய கும்பலும் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, ஜரனுக்கு என்ன நேர்ந்திருந்தது என்று தெரிந்து கொள்வதென்று முடிவு செய்து அந்த பிராமணனின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்திருந்தனர். அந்த பிராமணனின் பைத்தியக்காரத்தனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத தயன், கோபத்தில் அவனைக் கொன்றுவிட்டிருந்தான். பிறகு, தன் கொலைக்கான சாட்சியங்கள் எதுவும் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்காக, வேறு வழியின்றி, அந்த வீட்டிலிருந்த எல்லோரையும் கொன்றுவிட்டான். பிறகு, அந்தக் கும்பல், தாங்கள் செய்திருந்த காரியத்திற்கு வேறு எந்தவோர் ஆதாரமும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்காக, அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு முன் அந்த வீட்டைக் கொளுத்திவிட்டனர். தயன் ஓரிரு நாட்கள் வருத்தமாக இருந்திருந்தான், ஆனால் விரைவில் அதிலிருந்து மீண்டுவிட்டான். இறந்து போன அந்த பிராமணனின் மடத்தனமான பேச்சை, தங்களுடைய கேளிக்கை விருந்துகளின்போது தயன் அப்படியே பேசிக் காட்டி நையாண்டி செய்து எல்லோரையும் மகிழ்வித்தான். தன் கும்பலுடன் மீண்டும் சேர்ந்து கொள்ளுமாறு துர்ஜயன் ஒரு தூதுவன் மூலமாக ஜரனுக்கு அழைப்பு விடுத்தான். ஆனால் ஜரன் மறுத்துவிட்டான். அவனுள் இருந்த மிருகம் அந்த நெருப்பில் மடிந்துவிட்டிருந்தது. அவனும் அந்த பிராமணனைப்போலப் பைத்தியக்காரத்தனமாக உணர்ந்தான். அந்த பிராமணனின் கடவுள் அவனை அந்தக் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றியிருக்கவில்லை என்பது பற்றி ஜரனுக்கு எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவன் ஏதோ ஒன்றால் ஆட்கொள்ளப்பட்டான். உலகில் வாழ முற்றிலும் தகுதியற்ற ஒரு புதிய ஜரன் அங்கு பிறந்தான்.

அவனால் சிறிது நடக்க முடிந்தபோது, அவன் பிச்சையெடுத்துச் சில நாணயங்களைச் சேமித்திருந்தான். பிறகு அவன் கிருபரைப் பார்க்கச் சென்றான். கோபக்காரப் புரோகிதர்களைத் தவிர்க்கும் எண்ணத்துடன், கோவில் மூடப்பட்டப் பிறகு, இரவில் அவன் கிருபரைத் தேடிச் சென்றான். நெடுங்காலத்திற்கு முன்பு கிருபரிடமிருந்து தான் பணத்தைத் திருடியிருந்தது குறித்து ஜரன் அவரிடம் மன்னிப்புக் கேட்க

விரும்பினான். ஜரன் அந்த ஆலமரத்தை அடைந்தபோது, கிருபர் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். ஜரன் அவரை அழைத்தான். கிருபர் லேசாகக்கூட அசையாததைக் கண்ட அவன், அவருடைய தோள்களைப் பிடித்துக் குலுக்கினான். கிருபர் ஏதோ சபித்துக் கொண்டே கண்விழித்தார். ஜரனுடைய விகாரமான முகத்தைப் பார்த்ததும் அவர் பயந்து பின்னால் துள்ளினார். சில கணங்கள் கழித்து, அவர் அவனை அடையாளம் கண்டுகொண்டு, அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"ஐயா, பல வருடங்களுக்கு முன்பு நான் ஒரு கொடிய தவறு செய்துவிட்டேன். இதை வாங்கிக் கொள்ளுங்கள். இது உங்களிடமிருந்து நான் திருடிய பணம். என்னை மன்னித்துவிடுங்கள்," என்று கூறிய ஜரன், ஒரு பெரிய சுமையிலிருந்து விடுபட்டதுபோல உணர்ந்தான்.

"ஹா ஹா . . . நீ திருடவில்லை. நான்தான் என்னுடைய பூணூலைக் காட்டி ஒரு முட்டாளை அச்சுறுத்தி அவனிடமிருந்து திருடினேன். நீ சாமர்த்தியமாக அதை என்னிடமிருந்து திருடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டாய். நான் ஒரு மணிநேரம் உன்னைத் திட்டித் தீர்த்தேன். பிறகு நான் உனக்காக மகிழ்ச்சியடைந்தேன். என் பணம் காணாமல் போயிருந்ததை நான் கண்டபோது, நீ எப்படியும் பிழைத்துக் கொள்வாய் என்பதை நான் அறிந்தேன். நீ இந்த உலகிற்குப் பொருத்தமானவனாக இருந்தாய். இப்போது உன்னைக் கண்டு எனக்குக் கவலையாக இருக்கிறது. எளிதில் ஏமாறக்கூடிய நபர்களையும் பேராசைக்காரர்களையும் உன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதை நீ உன் தொழிலாக ஆக்கிக் கொள்வதை விடுத்து, ஒரு புனிதனாக இந்த உலகில் உன்னால் பிழைத்திருக்க முடியும் என்று எதை வைத்து நீ நம்புகிறாய்?"

ஜரன் அதற்கு விடையளிக்கவில்லை. ஏனெனில், கிருபரின் தர்க்கத்தின் பொருள் அவனுக்குப் புரியவில்லை. ஆனால் தான் கொண்டு வந்திருந்த பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு ஜரன் அவரிடம் கெஞ்சினான். இறுதியில் அந்த பிராமணன் கோபம் கொண்டு, அவனைக் காரசாரமாகத் திட்டி, தன்னைத் தூங்கவிடுமாறு கூறி அவனை அங்கிருந்து விரட்டிய பிறகே ஜரன் தன் கெஞ்சலை நிறுத்தினான். பிறகு, கிருபர், துறவிகளையும் சாமியார்களையும் பற்றி ஒருசில கெட்ட வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, மீண்டும் உறங்கச் சென்றார்.

அதே நாளன்றுதான், சகுனி பீமனை ஆற்றுக்குள் தள்ளியதை ஜரன் பார்த்தான். இளவரசன் துரியோதனன் தன் ஒன்றுவிட்டச் சகோதரனான பீமனைக் கொலை செய்துவிட்டிருந்ததாகத்

தொடரப்பட்ட வழக்கில் அவன் அரசவைக்கு இழுத்து வரப்பட்டான். அரண்மனையின் சிறப்பையும், அரசனையும், நேராக நின்று பேசுமாறு தன்னைப் பார்த்துக் கத்தியவனையும் பார்த்து ஜரன் முதலில் சிறிது தடுமாறினாலும், இளவரசன் துரியோதனன் அக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டதில் தனக்கு ஒரு கை இருந்திருந்தது குறித்து அவன் மகிழ்ந்தான். காவலாளிகளிடமிருந்து பின்னர் தனக்குக் கிடைத்த அடிகளை, கடவுள் தனக்குக் கொடுத்திருந்த ஒரு சோதனை என்று அவன் எடுத்துக் கொண்டான். தன்னுடைய நோஞ்சான் உடம்பு அடித்து நொறுக்கப்பட்டு, தான் கீழே கிடந்தபோது, இவையனைத்தும் கிருஷ்ணனின் லீலைகள் என்று அந்த வேடுவன் நினைத்துக் கொண்டான்.

கிருஷ்ணனை எங்கே பார்க்கலாம் என்று ஜரன் பலரைக் கேட்டான். கிருஷ்ணன் துவாரகையைச் சேர்ந்த ஒரு யாதவ இளவரசன் என்றும், அவன் தன் ஞானத்தாலும் மாயாஜாலமாகப் பொருட்களை உருவாக்கும் தன் திறனாலும் ஓர் அவதாரமாக ஆகியிருந்தான் என்றும் சிலர் அவனிடம் கூறினர். மற்றவர்கள், இவையெல்லாம் ஓர் ஏய்ப்பு நாடகம் என்றும், அப்படிப்பட்ட சக்திகள் எதுவும் கிருஷ்ணனுக்குக் கிடையாது என்றும், அவனும் மோசமான அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட்ட இன்னொரு சாதாரண இளவரசன்தான் என்றும் கூறினர். இந்த அபிப்பிராயங்களைக் கேட்ட ஜரன் கோபம் கொண்டான். இறந்து போன பிராமணன், கிருஷ்ணனைத் தன் கடவுளாகக் கொண்டாடியிருந்தான். அவனுடைய நம்பிக்கை தவறாக இருந்திருக்காது என்று ஜரன் நினைத்தான். கிருஷ்ணன் எல்லையற்றப் பரிவு கொண்டவன் என்றும், எல்லாம் வல்ல சக்தி என்றும் அந்தத் தீண்டத்தகாதவன் நம்பினான். அவன் தன் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் கிருஷ்ணனை வழிபடுவதில் கழித்தான். தன் ஒவ்வொரு செயலையும் அவன் கிருஷ்ணனுக்குக் காணிக்கையாக்கினான். விரைவில், அஸ்தினாபுரத்தின் குறுகலான வீதிகளில் நிலவிய இரைச்சல்களுக்கு இடையே ஒரு புதிய குரல் கேட்கத் துவங்கியது. ஏழைகளின் கடுமையான வாழ்க்கை, கடவுளின் பெருமையைப் புகழ்ந்து பாடிய ஜரனின் இனிமையான குரலால் மென்மையாக்கப்பட்டது.

இந்த ஜரன்தான் அந்தக் குருட்டு நாய்க்குட்டிக்கு அடைக்கலம் கொடுத்திருந்தான். அவனும் அந்த நாயும் சேர்ந்து படுத்துக் கிடந்தபோது, இன்னொரு வேடுவனின் கட்டைவிரலையும் கனவுகளையும் பறித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த துரோணர், இவர்களைக் கடந்துதான் சென்றார். அடுத்த நாள் காலையில், அந்த நாய்க்குட்டி ஜரனை நக்கி எழுப்பியது. அதன் மென்மையான நாக்கு

தன்னுடைய அழுக்கான முகத்தை வருடிக் கொடுத்தது ஜரனுக்கு சுகமான அனுபவமாக இருந்தது. இந்த அழகான உலகில் தான் உயிரோடு இருந்தது தனக்குக் கிடைத்த ஓர் ஆசீர்வாதம் என்று ஜரன் நினைத்தான். ஜரன் வழக்கம்போல நிலத்தை முத்தமிட்டுவிட்டு, கிருஷ்ணனின் கருணைக்காகவும் பரிவிற்காகவும் அவனுக்கு நன்றி கூறினான். கிருஷ்ணனின் அறிவையும் மாயையும் குறும்பையும் அன்பையும் பற்றி அவன் பாடினான். காய்ந்து போன ரத்தம் தன் பார்வையற்றக் கண்களை மறைத்திருக்க, அந்த நாய்க்குட்டி, தன் வாலை ஆட்டிக் கொண்டே அவனுடைய பாடல்களைக் கவனமாகக் கேட்டது. ஒருசில பாதசாரிகள், அந்தப் பிச்சைக்காரனுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருந்த கந்தல் துணியின்மீது சில நாணயங்களை வீசிச் சென்றனர்.

மதிய வேளை வந்தபோது, ஜரனை ஒரு வினோதமான எண்ணம் ஆட்டிப் படைத்தது. அவன் தன் புதிய செல்லப் பிராணிக்குப் பெயர் சூட்ட விரும்பினான். அவன் பல பெயர்களை நினைத்துப் பார்த்தான், ஆனால் ஒரே ஒரு பெயர்தான் அவனுக்கு நல்ல பெயராகத் தோன்றியது. பல துறவிகள் இந்தப் பெயரைப் பயன்படுத்தி அவன் கேட்டிருந்தான். இது மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது. அந்தப் பெயருக்கான பொருள் அந்த வேடுவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அது அவனுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. அது அவனுடைய நாய், இது ஒரு சுதந்திரமான நாடு. அவன் தன் விருப்பப்படி தன் நாய்க்குப் பெயரிடலாம். ஜரன் அந்தக் குருட்டு நாய்க்குட்டியைக் கதிரவனை நோக்கித் தூக்கிப் பிடித்தான். அது பெரிதாகக் கத்தியது. தன் குழந்தையின் பெயர்சூட்டு விழாவில் ஒரு தந்தை எவ்வாறு தன் குழந்தையைத் தன் மடிமீது வைத்துக் கொள்வாரோ, அதேபோல ஜரன் தன் நாய்க்குட்டியைத் தன் மடிமீது அமர்த்தினான். “தர்மன், தர்மன், தர்மன்,” என்று அவன் மூன்று முறை அதன் காதில் கிசுகிசுத்தான்.

அர்ச்சுனன் மற்றும் ஏகலைவனால் குருடாக்கப்பட்ட அந்த நாய்க்குட்டிக்கு, அந்த அறிவற்றப் பிச்சைக்காரன், குறிப்பிட்ட எந்த நோக்கமும் இல்லாமல் ஒரு சுவாரசியமான பெயரைத் தேர்ந்தெடுத்திருந்தான். தர்மன் என்ற அந்தக் குருட்டுத் தெருநாய், அந்தத் தீண்டத்தகாத வேடுவன் தன் தலையைப் பாசத்தோடு வருடிக் கொடுத்தபோது, மகிழ்ச்சியாகத் தன் வாலை ஆட்டியது. அவர்களைச் சுற்றிலும், வாழ்க்கை துளிகூட அக்கறையின்றித் தொடர்ந்தது.

16

கர்ணனின் மறுபிரவேசம்

அந்த கிரேக்கக் கப்பல், ஒரு பனிமூட்டமான காலை வேளையில் துவாரகையை வந்தடைந்தது. தன் நாட்டிற்குத் தன்னுடன் வந்துவிடுமாறு மீண்டும் தனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்த அந்தக் கப்பற்தலைவனிடம் கர்ணன் நன்றி கூறினான். அவர்கள் இருவரும் கப்பலின் மேற்தளத்தில் நின்று கொண்டிருந்தனர். அங்கிருந்து பார்த்தபோது, பலராமனுடைய அரண்மனையின் பொற்குவிமாடங்களும் நகரின் கோவில் தூபிகளும் தெளிவாகத் தெரிந்தன. கர்ணன் அந்த அந்நிய நாட்டவனைப் பார்த்துப் புன்னகைத்தான். அந்தத் தேரோட்டிகும் அந்த கிரேக்கனுக்கும் இடையே ஒரு நெருக்கமான பிணைப்பு உருவாகியிருந்தது. தர்மவீரன் பட்டத்தோடு சேர்த்துத் தான் வென்றிருந்த பரிசுப் பணத்தில் எஞ்சியிருந்த தொகையில் சிறிது பணத்தை அவன் தன் கப்பல் பயணத்திற்கான கட்டணமாகக் கொடுத்தபோது, கர்ணனைப் போன்ற ஒரு வீரனிடமிருந்து தான் கட்டணம் வசூலித்தால், அது தன் தாய்நாட்டின் பெருமைக்குத் துரோகம் இழைப்பதைப்போல ஆகிவிடும் என்று கூறி, அப்பணத்தை வாங்க அக்கப்பற்தலைவன் மறுத்துவிட்டான். ஒருசில நாட்களுக்கு முன்பு, தன் போராட்டம், லட்சியம், சாதனை, தன் குருவின் சாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய தன் கதையைக் கர்ணன் அந்த கிரேக்கனிடம் கூறியிருந்தான். இது அத்தலைவனின் இதயத்தைத் தொட்டு, அவனுடைய கண்களில்

கண்ணீரை வரவழைத்தது.

அவன் கர்ணனோடு கப்பல் பட்டறைக்குச் சென்றான். மஞ்சள்நிறத் தலைமுடியுடன்கூடிய ஒரு காட்டுமிராண்டியும் ஓர் உயரமான பரதகண்டவாசியும் காட்டுமிராண்டித்தனமான உடைகள் அணிந்து, ஒருவரையொருவர் கட்டியணைத்ததை மக்கள் ஆர்வத்தோடு பார்த்தனர். தாங்கள் இனி ஒருபோதும் ஒருவரையொருவர் சந்திக்க மாட்டோம் என்பதைக் கர்ணனும் அந்த கிரேக்கனும் அறிந்திருந்தனர். இது அவர்களுடைய நட்பை அதிக யதார்த்தமானதாகவும் நிலைபேறு கொண்டதாகவும் ஆக்கியது. கர்ணன் மண்டியிட்டு அமர்ந்து நிலத்தை முத்தமிட்டதை அந்த கிரேக்கன் கவனித்தான். கர்ணனின் நாட்டின்மீது அந்த கிரேக்கனுக்கு உருவான ஒரு பெரும் வெறுப்பு அவனுடைய மனத்தை நிரப்பியது. எவ்வளவு அற்புதமான கோவில்களும் மாபெரும் நகரங்களும் இருந்தாலும்கூட, தவறான சாதிக்குள் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால் மக்களைத் தொடர்ந்து புழுக்களைப்போல நடத்தி வந்தால், அந்நியர்கள் இந்த நாட்டின்மீது படையெடுத்து வருவதை நீண்டகாலம் தடுத்து நிறுத்த முடியாது என்று அவன் நினைத்தான். சுங்க அதிகாரி அவனைச் சந்திக்க வந்தபோது, இந்நாட்டின்மீது படையெடுத்து வருவது பற்றித் தான் கண்டுகொண்டிருந்த கனவுகளிலிருந்து விடுபட்டு, விரைவில், சிக்கலான வர்த்தக உலகின் விவகாரங்களில் அவன் மூழ்கினான்.

கர்ணனிடம் தன் வில்லும், அம்பறாத்தூணி நிறைய அம்புகளும், அவன் தன் இடுப்பைச் சுற்றி ஒரு வாரைப்போல அணிந்திருந்த சாட்டையைப் போன்ற ஓர் உறுமி வாளும், கப்பற்தலைவனிடமிருந்து அவன் கடன் வாங்கியிருந்த சில ஆடைகளும் மட்டுமே அவனுக்குச் சொந்தமான உடமைகளாக இருந்தன. எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் அச்சுறுத்துவதாகவும் தோன்றியது. யாதவத் தலைவனைச் சந்தித்து, அவனிடம் ஒரு வேலை கேட்பது நல்லதாக இருக்கும் என்று கர்ணன் நினைத்தான். ஆனால் அவனுடைய இதயம் அஸ்தினாபுரத்தைச் சுற்றியே வட்டமிட்டது. அவன் தன் பெற்றோரைப் பார்க்க ஏங்கினான். தான் கைவசப்படுத்தியிருந்த திறமைகளைக் கொண்டு தன்னுடைய முன்னாள் விளையாட்டுத் தோழர்களுக்கு அவன் பிரமிப்பூட்ட விரும்பினான். கங்கையின் குளிர்ந்த நீருக்குள் குதித்து, அதன் சக்திவாய்ந்த நீரோட்டத்திற்கு எதிராக அவன் நீந்த விரும்பினான். முசிறியில் இரவு வேளைகளில் தென்னை மரங்களுக்குப் பின்னால் நிலவு கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தபோது, அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்த பூரண நதியில் தான் மிதந்தது நம்புதற்கரிய விதத்தில் அற்புதமான அனுபவமாக இருந்ததாக அவன் நினைத்தான்.

இப்படிப்பட்ட இரவுகளைக் கர்ணன் பொக்கிஷங்களாகக் கருதினான். ஆனால், கங்கையின் முரட்டுத்தனமான பாய்ச்சலை நினைத்து அவன் எப்போதும் ஏங்கினான். இமயமலையிலிருந்து வேகமாகப் பாய்ந்தோடி வந்த நீரும், கங்கைக் கரையின்மீது அமைந்த பல கோவில்கள் மற்றும் அரண்மனைகளின் விளக்குகளின் பிரதிபலிப்பும், மனத்தைக் கொள்ளை கொண்ட ஓர் உலகமாக இருந்தது. உலகில் வேறு எந்த நதியும் கங்கைக்கு ஈடாகாது என்று கர்ணன் நினைத்தான். அவனைப் பொறுத்தவரை, வேறு எந்த நதியாலும் அவனுக்குக் கொடுக்க முடியாத ஒன்று கங்கையிடம் இருந்தது. மங்காத நினைவுகளாக அவனுடைய மனத்தில் பதிந்து கிடந்த நினைவுகள்தான் அவை.

கர்ணன் தன் இதயத்தைத் தொட்டான். அவனுடைய விரல்கள் அவனுடைய மார்புக் கவசத்தின் வழுவழுப்பின்மீது பட்டு, பழைய நினைவுகளைக் கொண்டு வந்தன. அவன் பரசுராமனைச் சந்திக்கச் சென்றபோது, கலிங்கத்து அரசன் அவனுக்கு இந்தக் கவசத்தைப் பரிசாகக் கொடுத்திருந்தான். கர்ணனுடைய திறமையால் கவரப்பட்ட அந்த அரசன், கலிங்கத்தின் காவல் தெய்வமான சூரியனிடமிருந்து வந்த பரிசு அது என்று கூறி, தன்னுடைய சிறந்த கொல்லர்களால் செய்யப்பட்டத் தனித்துவமான அந்தக் கவசத்தைக் கர்ணனுக்குக் கொடுத்திருந்தான். மிக லேசாகவும் மிக வலிமையாகவும் இருந்த அந்த உடற்கவசத்தை, தலைசிறந்த அந்தப் படைப்பை, பல கொல்லர்கள் சேர்ந்து ஏழு நீண்ட வருடங்கள் கடுமையாக உழைத்து உருவாக்கியிருந்தனர். கற்றறிந்த புரோகிதர்கள் அதை சூரியக் கடவுளின் பாதங்களில் வைத்து ஒவ்வொரு நாளும் வழிபட்டனர். கர்ணன் அணிந்திருந்த கவச உடை, எவ்வளவு தொன்மையானது என்று யாருக்கும் தெரியாது. தர்மத்தைப் பாதுகாக்கக்கூடிய, எப்போதும் நன்னெறியைக் கடைபிடிக்கின்ற ஒரு வீரனுக்கு அதை வழங்குவதுதான் மரபாக இருந்தது. ஒவ்வொரு வருடமும், வருடாந்திர சூரியத் திருவிழாவின்போது, யாருக்கு அந்தக் கவச உடையை அணிவிப்பதில் சூரியக் கடவுள் பெரிதும் மகிழ்ந்தார் என்று விண்மீன்களை ஆய்வு செய்து கணிப்பதில் நிமித்தகர்கள் ஈடுபட்டனர். பல ஆண்டுகளாக, சூரியக் கடவுள் மௌனம் சாதித்து வந்திருந்தார். எனவே, திருவிழா முடிந்ததும், புரோகிதர்கள் அந்தக் கவச உடையை மீண்டும் அத்திருவுருவச் சிலையின் பாதங்களில் பணிவோடு வைத்தனர். அந்த உடையை அணியத் தகுதியான ஒரு வீரன் இன்னும் பிறந்திருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு வீரனுக்கு அந்தக் கவசத்தை அணிவிக்கத் தாங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பல தலைமுறைகளாகக் கலிங்க நாட்டு அரசர்கள் ஒவ்வொருவரும் விரும்பி

வந்திருந்தனர்.

சூரியக் கடவுள் தற்போதைய கலிங்க அரசனுக்கு அந்த ஆசீர்வாதத்தை வழங்கியிருந்தார். ஏனெனில், அக்கவசத்தை அணிவிக்கத் தகுதியான ஒரு வீரனை விண்மீன்கள் சுட்டிக்காட்டியிருந்தன. பரசுராமன் தன்னுடைய தலைசிறந்த மாணவனைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, பேராற்றல் வாய்ந்த கலிங்க நாட்டு அரசன், இருபத்தியிரண்டு வயது வீரனான கர்ணனின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான். கர்ணன் ஒரு மாபெரும் வீரன் மட்டுமன்றி, அவன் கற்றறிந்த ஒரு பிராமணனும்கூட என்பதால், அவனுக்கு அக்கவசத்தை அணிவிப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்து, சூரியக் கடவுள் கலிங்க நாட்டு அரசனை உண்மையிலேயே ஆசீர்வதித்திருந்ததாகப் பரசுராமன் கூறினான். முசிறி அரசவையில் எழுந்த உற்சாகக் கைதட்டல்களின் சத்தம் விண்ணை எட்டியது. கர்ணன் மட்டும் உள்ளுக்குள் தர்மசங்கடத்துடன் நெளிந்தான். அரசன் மரியாதை மிக்கவனாக இருந்தான். தான் சேர நாட்டைவிட்டுச் செல்லும்வரை, ஒவ்வொரு நாள் காலையிலும் கர்ணன் தன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவன் கர்ணனிடம் வலியுறுத்தியிருந்தான். இப்போது அதே அரசன் கர்ணனின் பல எதிரிகளில் ஒருவனாக மாறி, கர்ணனின் தலையைக் கொய்து வருமாறு தன் வீரர்களைப் பணித்தான். இப்படிப்பட்ட ஒரு மரியாதையான உறவு, தான் ஒரு தேரோட்டி என்பதால் எப்படி அவ்வளவு சுலபமாக உடைக்கப்பட்டுவிட்டது என்று கர்ணன் வியந்தான். இது கலிங்கத்தின் காவல் தெய்வமான சூரியக் கடவுளின் விருப்பத்தை மறுப்பதுபோல ஆகிவிடாதா என்று அவன் ஆழ்ந்த வருத்தத்தோடு தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

சிந்தனையில் மூழ்கியபடியே, அவன் துவாரகையின் அரண்மனை வாசலை அடைந்தான். முறையான ஆடைகளைத் தான் வாங்கி அணியாமல் விட்டுவிட்டது குறித்து அவன் தன்னை நொந்து கொண்டான். அவன் இன்னும் அந்தக் கப்பற்தலைவனிடம் இருந்து கடன் வாங்கிய ஆடைகளையே அணிந்திருந்தான். அது பல இடங்களில் அவனுக்கு அரிப்பை ஏற்படுத்தியது. அரண்மனைக் காவலாளிகள் அவனை ஆர்வத்தோடும் சந்தேகத்தோடும் பார்த்தனர். தங்கள் சக நாட்டுக்காரன் எவனும் இப்படிப்பட்ட உடைகளை அணிந்து அவர்கள் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. தலைமைக் காவலனின் அலுவலகத்தில் இருந்தவர்களிடம் அவன் தனக்கு ஒரு ஓலைச்சுவடியைக் கேட்டு வாங்கி, அதில் 'வாசுசேனன்' என்று கிறுக்கி, அதை யாதவத் தலைவனிடம் சேர்ப்பித்துவிடுமாறு அவர்களிடம்

கேட்டுக் கொண்டான். அதற்குக் கைக்கூலியாக இரண்டு நாணயங்களை அவன் கீழே வைத்தான். ஆனால் தலைமைக் காவலன் சிரித்துவிட்டு, அவற்றை அவனிடம் பணிவாகத் திருப்பிக் கொடுத்தான். கர்ணனுக்கு இனிமையான ஆச்சரியம் ஏற்பட்டது. வெளியே ஒரு புளிய மர நிழலின்கீழ் அவன் காத்திருந்தான். அவன் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். கடந்த எட்டு வருடங்களில் அந்நகரம் மிகப் பெரிய அளவில் செழிப்படைந்து இருந்ததை அவன் கண்டான். அவன் இதற்கு முன்பு இந்நகரத்திற்கு வந்திருக்கவில்லை என்றாலும்கூட, எதுவுமே வளராத ஒரு தரிசு நிலமாக இது இருந்திருந்தது என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். இதன் மிகச் சிறிய 'மாதிரி வடிவம்' ஒன்றை அவன் பலராமனின் அறையில் பார்த்திருந்தான். அந்த யாதவத் தலைவனின் கண்களில் தெரிந்த ஆழ்விருப்பத்தையும் அவன் பார்த்திருந்தான். அது அத்தலைவனைச் சுற்றி இருந்த அனைவருக்கும் வலுவூட்டியது. ஒன்றுமேயில்லாத நிலையிலிருந்து இந்த நகரத்தை உருவாக்குவதற்கு பலராமன் கடினமாக உழைத்திருப்பான் என்பதைக் கர்ணனால் சுலபமாகக் கற்பனை செய்ய முடிந்தது. பலராமன் குறித்து அவனுக்கு ஏற்பட்டிருந்த பிரமிப்பு மேலும் உயர்ந்தது.

துவாரகை புத்துணர்ச்சியூட்டுவதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் இருந்தது. பளபளப்பான மாட மாளிகைகளும் நவநாகரீகமான கடைகளும் அங்கு இருந்தன. பல்வேறு வகையான அலங்காரங்களுடன் பல வினோதமான வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்த ரதங்கள் வீதிகளில் வேகமாகச் சென்றன. பருவ வயதுச் சிறுவர்கள் குதிரைகளைச் சுற்றி நடனமாடினர். மேட்டுக்குடியினரைச் சுமந்து சென்ற யானைகள், தம் கழுத்துக்களைச் சுற்றி அணிந்திருந்த மணிகள் இனிமையாக ஒலிக்க, வீதிகளில் ஒய்யாரமாக வலம் வந்தன. இந்த நகரம், கதம்பமான குழப்பத்தின் உருவமாக விளங்கிய அஸ்தினாபுரத்தைப்போலவோ, நவநாகரீகத்தில் முத்துக் குளித்திருந்த முசிறியைப்போலவோ இருக்கவில்லை. இது இன்னும் பரதகண்டத்தின் மிகப் பெரிய நகரமாக ஆகியிருக்கவில்லை, ஆனால் அது நிச்சயமாக அந்தப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. காசி மற்றும் காஞ்சிபுரத்தின் கலையும் கலாச்சாரமும் இங்கு இருக்கவில்லை. மதுரா நகரின் மினுமினுப்பும் இங்கு இருக்கவில்லை. ஆனால் இளமையின் வலிமையைக் கொண்டு இது அவற்றை ஈடு கட்டியது. பலராமன் தன் மாயாஜாலத்தைச் செயல்படுத்திக் கொண்டிருந்தான். ஒன்றுமில்லாததிலிருந்து அவன் ஒரு நகரத்தைக் கட்டியெழுப்பியிருந்தான். சுத்தமான தெருக்கள், ஒழுங்கான கழிவுநீரோடைகள், சுகாதாரமான உணவகங்கள், மரங்கள் வரிசையாக

அணிவகுத்து நின்ற நிழற்சாலைகள், பதிகற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகள் ஆகியவற்றைக் கொண்ட, விதிமுறைகளைப் பின்பற்றிய ஒரு நகரத்தைத் தன்னால் உருவாக்க முடியும் என்பதை அவன் உலகிற்குக் காட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு காவலாளி கர்ணனின் ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்தான். அவன் கர்ணன் முன்னால் குனிந்து வணங்கிவிட்டு, தன்னைப் பின்தொடருமாறு அழைப்பு விடுத்தான். கர்ணன் பலராமனின் அறை வாசலுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அவன் அங்கு ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு, யாதவத் தலைவன் தன்னை எவ்வாறு வரவேற்பானோ என்று யோசித்தான். பிறகு அவன் ஆழ்ந்து சுவாசித்துவிட்டு, உள்ளே நுழைந்தான். பலராமன் வயதானவன்போலக் காணப்பட்டான். அவனுடைய முன்தலையில் வழுக்கை ஏற்படத் துவங்கியிருந்தது. எனவே அவனுடைய நெற்றி சற்றுப் பெரிதாகத் தெரிந்தது. தன் மேசையின்மீது இருந்த கட்டுக்கட்டான ஓலைச் சுவடிகளின்மீது அவனுடைய கவனம் குவிந்திருந்தது. ஆனால் அவன் அணிந்திருந்த எளிமையான வெண்ணிற ஆடைதான் கர்ணனின் கவனத்தை உடனடியாகக் கவர்ந்தது. ஒரு வெள்ளை வேட்டியும் ஒரு வெள்ளைத் துண்டும் அணிந்து, அவன் தன்னுடைய மக்களில் ஒருவனாகத் தோன்றினான். அவனிடமிருந்த காந்தசக்தி மட்டும் கண்ணுக்குப் புலப்படாத ஓர் ஆற்றல்போல அவனிடமிருந்து வெளிப்பட்டது. தெற்கத்திய அரசர்களைப்போல, தங்க நகைகள், ஒளிவீசிய வைர அட்டிகைகள், முத்து நகைகள் போன்ற ஏதும் இல்லாமல், பலராமன் கிட்டத்தட்ட நிர்வாணமானவனாகத் தெரிந்தான். பலராமன் தன் தலையை உயர்த்தி ஏதேனும் கூறுவதற்காகக் கர்ணன் காத்திருந்தான். பலராமன் தன்னைக் கண்டுகொள்ளாமல் இருந்தது அவனுக்கு அவமானமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. ஆனால் அந்த உணர்ச்சிகள் தன் முகத்தில் வெளிப்படாமல் இருக்க வேண்டும் என்று அவன் வேண்டிக் கொண்டான். தன் அறிவுரையாளரிடமிருந்து கர்ணன் சற்றுக் கனிவான வரவேற்பை எதிர்பார்த்திருந்தான்.

மிக நீண்ட நேரத்திற்குப் பிறகு பலராமன் தன் தலையை நிமிர்த்தி, கர்ணனைப் பார்த்துப் புன்னகைத்தபோது, கர்ணன் சற்று ஆசுவாசமடைந்தான். “வாசுசேனா, நீ உயரமாகவும் வசீகரமானவனாகவும் வளர்ந்திருக்கிறாய். பல வருடங்களுக்கு முன்பு என் முன்னால் நின்ற சிறுவனின் உருவம்தான் என் மனத்தில் இருந்தது. கர்ணா, உன்னைப் பார்ப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்!” பலராமன் தன் இருக்கைவிட்டு எழுந்து சென்று, விறைப்பாக நின்ற கர்ணனைக் கட்டித் தழுவினான். “நீ உணர்ச்சிகரமான குறும்புக்காரன்.

நீ இங்கு வந்து நின்றதும், நான் ஏதேனும் கூறுவதற்காக நீ காத்திருந்ததும் எனக்குத் தெரியும். நீ மாறியிருந்தாயா என்று நான் பார்க்க விரும்பினேன். ஆனால் நீ மாறவில்லை என்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு மனிதனுக்குரிய உணர்ச்சிகள் இன்னும் உன்னிடம் இருக்கின்றன. உனக்குக் கிடைத்தப் பயிற்சி, உன்னுடைய நல்லிதயத்தைக் கெடுத்து, உன்னை ஒரு சூழ்ச்சிக்காரனாகவும், உன் சுயநலனுக்காக மக்களை ஏய்ப்பவனாகவும், பௌதீக வெற்றிக்கான பசி கொண்டவனாகவும் உன்னை மாற்றியிருக்குமோ என்று நான் பயந்தேன். ஆனால் உன்னிடம் உள்ள நல்லியல்பு உன் முகத்தில் பிரதிபலிக்கிறது. கர்ணா, எனக்கு மிக்க மகிழ்ச்சி."

கர்ணன் தன்னைத் தானே சபித்துக் கொண்டான். தன் எண்ணங்கள் உண்மையிலேயே தன் முகத்தில் வெளிப்பட்டதா? பலராமன் அந்த அறையின் மூலையில் இருந்த ஒரு கட்டிலுக்குக் கர்ணனை அவனுடைய கையைப் பிடித்து அழைத்துச் சென்று, தன் பிடியை விடாமலேயே அவனை அதன்மீது உட்கார வைத்தான். பிறகு அவன் கர்ணனின் கவச உடையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "இந்த அழகான கவசம் உனக்குப் பொருத்தமாக இருக்கிறது. மிகச் சிறந்த கைவேலைப்பாடு இது! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று பிரமிப்புடன் கேட்டான்.

இந்த வார்த்தைகள் கர்ணனின் மௌனத்தைக் கலைத்தன. அவன் தெற்கில் தனக்குக் கிடைத்த சாகச அனுபவங்களை பலராமனிடம் நினைவுகூர்ந்தான். ஒளிவீசிய அசுர சாம்ராஜ்யங்களைப் பற்றியும், பெருமிதம் கொண்ட அசுர அரசர்களையும் பற்றி அவன் பேசினான். அஸ்தினாபுரத்தைவிடப் பல மடங்கு உறுதியாக இருந்த கொடூரமான சாதி அமைப்புமுறையைப் பற்றியும், அதைத் தீவிரமாக முறைப்படுத்திய பிடிவாதக்காரர்களைப் பற்றியும் அவன் பேசினான். பறையர்கள் மற்றும் பிற தீண்டத்தகாதவர்களின் துயரமான மற்றும் அவலமான வாழ்க்கையைப் பற்றி அவன் எடுத்துரைத்தான். அதே நேரத்தில், பணக்கார வர்க்கத்தினரின் ஆசுவாசமான வாழ்க்கையைப் பற்றியும் அவன் எடுத்துக் கூறினான். தெற்கில் இருந்த மாபெரும் நடன வடிவங்கள், அற்புதமான கோவில்கள், கட்டடக்கலை, பொறியியல் திறமைகள், இசை ஆகியவற்றையும், இயற்கையின் கொடைகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த அந்த அழகான நிலங்களையும் அவன் விவரித்தான். ஆனால் புரியாத புதிரான தன் குருநாதர் பரசுராமனைப் பற்றி அவன் குறிப்பிட்டபோது, அவனுக்குத் தொண்டை அடைத்தது. தான் ஒரு பெருமையான வீரன் என்ற உணர்வு அதற்கு மேலும் கர்ணனுக்கு இருக்கவில்லை. மாறாக, தான் செய்யாத ஒரு தவறுக்காகத் தன் தந்தையிடம் திட்டு வாங்கிய ஒரு சிறுவனைப்போல அவன்

உணர்ந்தான்.

பலராமன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். கர்ணன் தன் பேச்சை நிறுத்தியபோது, பலராமன் அவனுடைய தோளை அழுத்தினான். கர்ணன் மறைக்க முயற்சித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகள் அவனுக்குப் புரிந்தன. "பிறகு என்ன நிகழ்ந்தது? பரசுராமனுக்கு உன்மீது ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படும்படி நீ நடந்து கொண்டாயா?" என்று பலராமன் மென்மையாகக் கேட்டான்.

"நான் . . . அவர் . . . அவர் எனக்கு ஒரு தந்தையைப்போல இருந்தார் . . . ஆனால் . . ." கர்ணன் பேச முடியாமல் தன் தலையைத் திருப்பிக் கொண்டான். பிறகு அவன் அந்தக் கட்டிலைவிட்டு எழுந்து, சன்னலை நோக்கி நடந்தான். பலராமன் தன் கண்ணீரைப் பார்ப்பதை அவன் விரும்பவில்லை. 'இப்படிப்பட்ட அற்பமான விஷயங்களுக்காக அழுவதற்கு நான் என்ன ஒரு பெண்ணா?' என்று அவன் நினைத்தான். வெளியே இருந்த தோட்டத்தில், ஓர் அழகான இளம்பெண், ஒரு கற்திண்ணையின்மீது அமர்ந்து ஓர் இனிமையான பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய தோழிகள் ஒருசிலர் அவளுடன் அமர்ந்து, அவள் பாடியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவளுடைய இனிமையான குரல், அங்கிருந்த மலர்களைத் தழுவிச் சென்று, காற்றுக்கு ஒரு சிறப்பு நறுமணத்தைக் கொடுத்தது. அவளுடைய குரல் அவனுடைய மனத்திற்கு இதமளித்து, கற்பனை செய்து பார்க்க முடியாத இன்ப உணர்வுகளை அவனுக்குள் கிளறியது.

"நீ யார் என்பதை அவன் கண்டுபிடித்தானா?"

கர்ணன் வேகமாகத் திரும்பினான். அவனுடைய ஆன்மாவில் இருந்த வேதனை இப்போது அவனுடைய கண்கள் முழுக்க நிரம்பியிருந்தது. ஒரு சிறுவனாகப் பிரபாச நகரின் கரைகளைவிட்டுத் தான் புறப்பட்ட நாளிலிருந்து, எல்லோராலும் பெரிதும் விரும்பப்பட்ட 'தர்மவீரன்' பட்டத்தைத் தான் வென்றதுவரை, தன் கதை முழுவதையும் அவன் பலராமனிடம் கூறினான். ஆனால் அவன் தன் குருவின் சாபத்தைப் பற்றி விவரித்தபோது, அவனுடைய குரல் கிட்டத்தட்ட ஒரு கிசுகிசுப்பு நிலைக்கு இறங்கியது. "நான் இப்போது தப்பியோடிக் கொண்டிருக்கின்ற ஒரு குற்றவாளி. தென்னக அரசர்கள் அனைவரும் என் ரத்தத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். பரசுராமனை நான் ஒரு முட்டாள்போலத் தோன்றச் செய்ததற்காக அவர்கள் என் தலையைக் கொய்ய விரும்புகின்றனர். என் குருவிற்கு என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவரை ஏமாற்றிவிட்டேன். நான் தண்டனைக்குத் தகுதியானவன்தான்போலும்," என்று கூறிவிட்டு, அவன் பலராமனைப் பார்த்து வேதனையுடன் சிரித்தான்.

“பரசுராமன் இன்னும் உணர்விழந்த நிலையில்தான் இருக்கிறான் என்றும், அவனுடைய சீடனாக இருந்த வடக்கத்திய வீரன் ஒருவன் ஏதோ கொடூரமான காரியத்தை அவனுக்குச் செய்துவிட்டிருந்ததாகவும் என் உளவாளிகள் என்னிடம் தெரிவித்ததிலிருந்து, உனக்கு ஏதோ நிகழ்ந்திருந்தது என்பதை நான் அறிந்தேன். கோகர்ண அரசனிடமிருந்து எனக்குத் தகவல் கிடைக்கும்வரை, நீ இறந்து போய்விட்டதாகத்தான் நான் நினைத்தேன்,” என்று கூறிவிட்டு, பலராமன் தன் மேசைக்குச் சென்றான். அவன் அதிலிருந்து ஓர் ஓலைச்சுவடியை எடுத்து, அதைக் கர்ணனிடம் கொடுத்தான். அதைப் படித்தக் கர்ணனின் முகம் இருளடைந்தது.

“கர்ணா, நீ இங்கே தங்குவது எனக்குப் பெரும் மகிழ்ச்சியளிக்கும். ஆனால் துவாரகையில் விஷயங்கள் நீ நினைப்பதுபோல இல்லை. நான் இங்கு பழமைவாதிகளுடன் ஒரு கடுமையான சண்டையில் ஈடுபட்டிருக்கிறேன். உள்நாட்டுக் கலகத்தைத் தவிர்ப்பதற்காக நான் சில விஷயங்களில் விட்டுக்கொடுத்துப் போக வேண்டியுள்ளது. யாதவர்களாகிய நாங்கள், என்றேனும் ஒருநாள் எங்களுக்குள் சண்டையிட்டு ஒருவரையொருவர் கொன்று குவித்து, நான் இதுவரை எதற்காக உழைத்து வந்திருந்தேனோ அதையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிடுவோமோ என்று நான் பயப்படுகிறேன். நீ இன்று இங்கு ஓய்வெடுத்துவிட்டு, நாளை அதிகாலையில் அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டுச் செல். பீஷ்மர் அங்கு எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். மேலும், துரோணருடைய மாணவர்களின் பட்டமளிப்பு விழாவிற்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது. இளவரசன் துரியோதனனிடம் ஓர் அதிகாரியாக வேலை செய்வதற்கு நீ விண்ணப்பிக்கலாம். பட்டம் பெற்றப் பிறகு, நாட்டின் விவகாரங்கள் குறித்து முடிவெடுப்பதில் இளவரசனுக்கு ஓரளவுக்கு சுதந்திரம் கிடைத்துவிடும். உன்னை ஓர் அதிகாரியாக ஆக்குமாறு பரிந்துரைத்து நான் அவனுக்கு ஒரு கடிதம் எழுதப் போகிறேன்,” என்று பலராமன் புன்னகைத்தபடி கூறினான்.

கர்ணன் தோட்டத்தைப் பார்த்தான். அங்கு பாடிக் கொண்டிருந்த பெண் அங்கிருந்து போய்விட்டிருந்தாள். ஒருசில பட்டாம்பூச்சிகளையும் குருவிகளையும் தவிர, அத்தோட்டம் வெறுமையாக இருந்தது. கர்ணனின் மனம் குழப்பத்தில் இருந்தது. எதிர்காலம் உண்மையிலேயே மிகவும் மங்கலானதாகத் தெரிந்தது. கோகர்ண அரசனின் செய்தி மிகத் தெளிவாக இருந்தது. கர்ணன் எல்லோராலும் தேடப்பட்டுக் கொண்டிருந்த ஒரு குற்றவாளி. வடக்கத்திய சாம்ராஜ்யங்களின்

அரசர்கள் அவனைக் கண்டுபிடித்தால், அவனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்து, உடனடியாகத் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பிடம் அவனை ஒப்படைக்க வேண்டும் என்று அந்த அரசர்களுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டிருந்தது. எல்லா இடங்களிலும் ஆபத்து ஒளிந்து கொண்டிருந்தது. ஆனால் இவன் இவை எதையும் அறியாதவனாக, ஒரு முட்டாளைப்போல, துவாரகையின் தெருக்களில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். ஒரு மரத்தின் பின்னாலோ அல்லது ஒரு தூணின் பின்னாலோ ஒளிந்து நின்று கொண்டு எவனோ ஒருவன் எய்யும் அம்பால், தேரோட்டிக் குலத்தோனான இந்த தர்மவீரனின் கதையை ஒரு கணத்தில் முடித்துவிட முடியும்.

"அண்ணா, வணக்கம்."

தனக்குப் பரிச்சயமான அந்தக் குரலைக் கேட்டவுடன் கர்ணனின் வயிற்றில் ஒரு கிலி பிறந்தது. அக்குரல் வந்த திசையில் அவன் திரும்பிப் பார்த்தபோது, தன்னை மிகவும் வெறுத்தத் தன் எதிரி அந்த அறைக் கதவின் அருகே நின்று கொண்டிருந்ததை அவன் பார்த்தான்.

"என்ன கிருஷ்ணா? பூசைக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்துவிட்டாயா?" பலராமன் தன் குரலைச் சாதாரணமாக வைத்துக் கொள்ள முயன்றான். தன் மஞ்சள் நிறப் பட்டு வேட்டி, தன் சுருள்முடியில் ஒரு மயிலிறகு, தன் உடல் நெடுகிலும் பளபளப்பான நகைகள், தன் இடைக்கச்சைக்குள் செருகப்பட்டத் தன் புல்லாங்குழல், தன் கழுத்தைச் சுற்றி மலர்மாலைகள் ஆகியவற்றுடன் கிருஷ்ணன் மிடுக்காகத் தோன்றினான். பலராமன் அணிந்திருந்த எளிய வெள்ளைப் பருத்தி ஆடைக்கும், கிருஷ்ணனின் ஆம்பரமான ஆடை அணிகலன்களுக்கும் இடையே மிகப் பெரிய முரண்பாடு இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. இளைய யாதவ இளவரசன் மிகவும் வசீகரமாக இருந்ததைக் கர்ணனால் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை.

கிருஷ்ணன் கர்ணனைப் பார்த்து, "வணக்கம்," என்று ஒரு புன்னகையுடன் கூறினான். பிறகு அவன் பலராமனைப் பார்த்து, "அண்ணா, இந்த இளைஞனை நான் எங்கோ பார்த்திருக்கிறேன் என்று எனக்குத் தோன்றுகிறது."

"இவன் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த வாசுசேன கர்ணன். இவன் என்னுடைய பழைய நண்பன். பரதகண்டத்தில் இவனைவிடச் சிறந்ததொரு வில்லாளனை உன்னால் பார்க்க முடியாது," என்று பலராமன் பெருமிதத்தோடு பதிலளித்தான். இந்தத் திடீர்ப் பாராட்டால் கர்ணன் கூச்சமடைந்ததுபோலத் தோன்றினான்.

"ஆஹா! இவன் யாரென்று இப்போது என் நினைவிற்கு

வந்துவிட்டது. ஒரு வீரனாக ஆவதற்காகத் தெற்கே சென்ற தேரோட்டிச் சிறுவன்தானே இவன்? அண்ணா, இவன் உன் நண்பனாக இருக்கலாம், ஆனால் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த இவனுடைய முன்னாள் ஆதரவாளர்கள் அனைவரும் இப்போது இவனை வலை வீசித் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இவன் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான்? கூட்டமைப்பின் படைகள் துவாரகைக்குப் படையெடுத்து வந்து, நம் நகரைத் தரைமட்டமாக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? இந்நிலத்திலேயே இவன்தான் மிகச் சிறந்த வில்லாளன் என்று நீ கூறியபோது, இளவரசன் அர்ச்சுனனை நீ மறந்துவிட்டாய் என்று நான் நினைக்கிறேன்," என்று கூறிவிட்டுக் கிருஷ்ணன் புன்னகைத்தான்.

இந்த இகழ்ச்சியைக் கேட்டுக் கர்ணன் கோபத்தால் கொதித்தான். அந்த யாதவ இளவரசன் தன்னை உசுப்பேற்ற முயற்சித்துக் கொண்டிருந்ததைக் கர்ணன் அறிந்திருந்தான். அதனால் அவன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தான் ஏடாகூடமாக நடந்து கொண்டால், கிருஷ்ணன் தன்னைக் கைது செய்வதற்கு அது வசதியாகப் போய்விடும் என்பதை உணர்ந்த கர்ணன் மௌனமாக நின்றான்.

"கிருஷ்ணா, நீ ஏன் அவனை வம்புக்கு இழுக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறாய்? தெற்கத்திய அரசர்களிடம் எனக்குப் போதுமான செல்வாக்கு இருக்கிறது என்பதை நீ உறுதியாக நம்பலாம். நம்முடன் இப்போது ஒரு போரைத் துவக்குவதற்கு அவர்கள் துணிய மாட்டார்கள். கோட்டைச் சுவருடன்கூடிய நம்முடைய நகரத்தைத் தற்காத்துக் கொள்ளும் அளவுக்கு நாம் வலிமையாகத்தான் இருக்கிறோம். தயவு செய்து இப்போது எங்களைத் தனியாக விட்டுவிடு. பூசைக்கான ஏற்பாடுகள் குறித்து நான் பிறகு உன்னுடன் கலந்து பேசுகிறேன்," என்று பலராமன் கூறினான்.

கிருஷ்ணன் கர்ணனைப் பார்த்துத் தொடர்ந்து புன்னகைத்துக் கொண்டிருந்தான். பிறகு, "அண்ணா, உன் விருப்பப்படியே நடக்கட்டும். தென்னகப் படைகளிடமிருந்து நம்முடைய மக்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொள்," என்று கூறி, அவன் பலராமனைப் பார்த்துத் தலைவணங்கிவிட்டு, கர்ணனைப் பார்த்து இருகரம் கூப்பி விடைபெற்றுக் கொண்டு, அந்த அறையிலிருந்து வெளியேறினான். அவன் அங்கிருந்து சென்ற பிறகும்கூட, அவனுடைய புன்னகை தொடர்ந்து கர்ணனின் மனக்கண்ணில் தெரிந்தது.

பலராமன் கர்ணனிடம் திரும்பினான். அவனுடைய நெற்றியில் ஒரு கவலைக் கோடு தென்பட்டது. "கர்ணா, நீ உடனடியாக துவாரகையைவிட்டுக் கிளம்புவது நல்லது. நீ நேராக

அஸ்தினாபுரத்திற்குப் போ, ஆனால் எப்போதும் எச்சரிக்கையாக இரு. மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும்படி நடந்து கொள்ளாதே. நம்மைச் சுற்றிப் பல சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. பரசுராமனின் சக்தியையும் வீச்சையும் குறைவாக மதிப்பிட்டுவிடாதே. அவன் உணர்விழந்து படுத்துக் கிடக்கிறான் என்பது ஒரு பொருட்டல்ல. பொழுது விடிவதற்கு முன் நீ துவாரகையைவிட்டுப் போய்விடு.”

பலராமனின் குரலில் இருந்த சோர்வைக் கேட்டபோது கர்ணனின் முதுகுத்தண்டில் ஒருவிதமான கலக்க உணர்வு ஊடுருவியது. அவன் பலராமனிடம் பல விஷயங்கள் குறித்துக் கேட்க விரும்பினான். ஆனால் அவன் தன் வாயைத் திறப்பதற்கு முன், பலராமன் ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு, கர்ணனை விருந்தினர் அறைக்கு அழைத்துச் செல்லுமாறு அவனிடம் கூறினான். கர்ணன் தலைவணங்கி, அந்த யாதவத் தலைவனின் பாதங்களைத் தொட்டுப் பணிந்துவிட்டு, அங்கிருந்து வெளியேறினான். அவன் மனம் குழப்பத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. தன் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று அவன் பயந்தான். ஒவ்வொரு திருப்பத்திலும் ஆபத்து ஒளிந்து கொண்டிருந்தது என்பது மட்டும்தான் அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. அவன் விருந்தினர் அறையை அடைந்தபோது, அந்தத் தாழ்வாரத்தின் மறுகோடி நிழலில், கிருஷ்ணன் தன் கைகளைத் தன் மார்பின் குறுக்கே கட்டியபடி நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். கர்ணனின் கை, தன்னையும் அறியாமல், கர்ணனின் இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உறுமி வாளுக்குச் சென்றது. அவனுடைய இந்தச் செய்கையைக் கிருஷ்ணன் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பரிகாசச் சிரிப்பு அந்த வெற்றுத் தாழ்வாரத்தை நிறைத்தது. கர்ணன் வேகமாகத் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திவிட்டு, கதவின்மீது தன் முதுகை அழுத்தியபடி நின்றான். அடுத்து என்ன செய்வது என்று படபடப்புடன் யோசித்தபடி, கதவைத் தாளிட்டுவிட்டு, மூலையிலிருந்த ஒரு கட்டிலின்மீது அமர்ந்தான். ஏதேனும் காலடிச் சத்தம் கேட்டதா அல்லது சந்தேகப்படும்படியான அசைவுகள் எதேனும் தெரிந்ததா என்று உன்னிப்பாகக் கவனித்தபடி, நீண்டநேரம் அப்படியே பதற்றத்தோடு அவன் அமர்ந்திருந்தான். இறுதியில் களைப்பு மேலிட, கனவுகளற்ற ஓர் உறக்கத்திற்குள் அவன் மூழ்கிப் போனான். அந்த அரண்மனை அச்சுறுத்தும் விதத்தில் அமைதியாக இருந்தது.

கதவு லேசாகத் தட்டப்பட்டச் சத்தம் கேட்டுக் கர்ணன் திடுக்கிட்டுக் கண்விழித்தான். அப்போது மிகவும் இருட்டாக இருந்தது. அவன் நீண்டநேரம் தூங்கிப் போயிருந்தான். ஒரு கையால் தன் வாளை உறுதியாகப் பிடித்தவாறு, அவன் எச்சரிக்கையோடு கதவைத்

திறந்தான். ஓர் அழகான முகம் அவனுக்கு எதிரே தென்பட்டது. கர்ணனின் இதயம் ஒரு கணம் தன் துடிப்பை நிறுத்தியது. அன்று மதியம் தன் பாடலின் மூலம் அவனுடைய மனத்தைக் கவர்ந்த அதே பெண்தான் இப்போது அவனுடைய அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தாள். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. 'அவளை உள்ளே வரும்படி அழைக்க வேண்டுமா? அவளை வெளியே நிற்க வைத்துக் கொண்டிருப்பது முறையான செயலா?' என்று அவன் குழம்பினான்.

அவளுடைய செவ்விதழ்கள் லேசாகப் பிரிந்து, ஒரு முத்துப் புன்னகையை உதிர்த்துக் கர்ணனைக் குழப்பின. "என் பெயர் சுபத்திரை. உன் நண்பனின் சகோதரி நான்," என்று கூறிவிட்டு, அவள் தன் கைகளைக் கூப்பி அவனுக்கு வணக்கம் தெரிவித்தாள். கர்ணன் தலைவணங்கிவிட்டு வெளியே வந்தான். "இளவரசே, நீங்கள் நாளைக்கு அஸ்தினாபுரத்திற்குப் போகப் போவதாக நான் கேள்விப்பட்டேன். அங்கு நீங்கள் பட்டத்து இளவரசனைச் சந்திப்பீர்களா?" என்று சுபத்திரை கேட்டாள்.

"தேவி, நான் ஓர் இளவரசனல்ல. என் பெயர் கர்ணன். நான் ஒரு தேரோட்டியின் மகன். ஆனால் நாளைக்கு நான் என் சொந்த ஊருக்குப் போகப் போகிறேன் என்பது உண்மை," என்று கர்ணன் பதிலளித்தான். அவனுடைய முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை ஒளிர்ந்தது.

"ஓ! நீங்களும் ஓர் அஸ்தினாபுர இளவரசன் என்று நான் நினைத்தேன் . . . அது போகட்டும், துரியோதனனுக்கு உங்களால் ஒரு செய்தியை எடுத்துச் செல்ல முடியுமா?" என்று கேட்ட அவள், பட்டத்து இளவரசனின் பெயரை மரியாதையின்றி வெறுமனே குறிப்பிட்டத் தன் தவறை உணர்ந்து தன் உதடுகளைக் கடித்தாள்.

கர்ணன் அவளைப் பார்த்தபோது, அவள் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். நாணத்தால் சிவந்திருந்த அவளுடைய கன்னங்களைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, கர்ணன், "என்னைப் போன்ற சாதாரண மக்கள் இளவரசர்களையும் அரசர்களையும் சந்திப்பது அவ்வளவு எளிதானதல்ல," என்று கூறினான்.

"நீங்கள் இளவரசனை நிச்சயமாகச் சந்தித்தாக வேண்டும். நீங்கள் என் பெயரைக் குறிப்பிட்டால், அவர் நிச்சயமாக உங்களுக்கு அனுமதியளிப்பார்," என்று அவள் மகிழ்ச்சியாகக் கூறினாள். "பட்டமளிப்பு விழாவின்போது நான் அங்கு இருப்பேன் என்று அவரிடம் கூறுங்கள் . . . அவரை நினைத்து நான் ஏங்குகிறேன் என்றும் அவரிடம் கூறுங்கள்."

அவளுடைய மினுமினுப்பான கண்களையும் அவளுடைய இடைவரை நீண்டு தவழ்ந்த சுருள்முடியையும் கர்ணன் பார்த்தான்.

‘இளவரசன் அதிர்ஷ்டக்காரன்,’ என்று அவன் நினைத்துக் கொண்டான். அவனுடைய மனம், சிறைப்பிடிக்கப்பட்டப் பட்டாம்பூச்சியைப்போலப் படபடத்துக் கொண்டிருந்தது. அவள்மீது ஏற்கனவே வேறொருவன் உரிமை கொண்டாடிவிட்டதால், இப்படிப்பட்ட எண்ணங்களைத் தான் மறந்துவிட வேண்டும் என்று நினைத்தக் கர்ணன், வருத்தத்துடன் பெருமூச்செறிந்தான். மேட்டுக்குடியில் பிறப்பதற்கும் ஓர் அழகான இளவரசியால் காதலிக்கப்படுவதற்கும் சிலர் அதிர்ஷ்டம் செய்திருந்ததாக அவன் நினைத்துக் கொண்டான்.

“சகோதரி,” என்று கர்ணன் அவளை அழைத்தான். தான் அவ்வாறு அழைத்தது தனக்கு உடனடியாக நிம்மதியைக் கொடுத்ததை அவன் உணர்ந்தான். “இளவரசரிடம் உங்கள் செய்தியைத் தெரிவிக்க நான் நிச்சயமாக முயற்சிப்பேன்.”

“நன்றி,” என்று கூறிவிட்டு, அவள் அவன் முன்னால் தலைவணங்கினாள். பிறகு அங்கிருந்து திரும்பி, தன் பட்டுப் பாவாடை சரசரக்க, கொலுசுகள் கிணுகிணுக்க, இருட்டிற்குள் அவள் ஓடி மறைந்தாள்.

கர்ணன் தன் அறைக் கதவை மென்மையாகத் தாழிட்டான். அவளுடைய நறுமணத்தில் சிறிதளவு அந்த அறைக்குள் நுழைந்திருந்தது. மேகங்களுக்கிடையே தவழ்ந்து கொண்டிருந்த ஒரு பிறைநிலாவைப் பார்த்தபடி, திறந்திருந்த சன்னலோரமாக அவன் உட்கார்ந்தபோது, அவனுடைய எண்ணங்கள் மீண்டும் அலைபாய்ந்தன. வாழ்க்கை எவ்வளவு அழகானதாக இருந்தது! சுபத்திரையின் செய்தியைப் பற்றி அவன் நினைத்துப் பார்த்தான். பட்டத்து இளவரசனைச் சந்திப்பதற்குத் தான் எப்படி அனுமதி வாங்கப் போகிறோம் என்று அவன் யோசித்தான். அவளுடைய காதலின் வெகுளித்தனம் புத்துணர்ச்சியூட்டுவதாக இருந்தது. என்றேனும் ஒருநாள், வாழ்க்கை தனக்கும் இப்படிப்பட்ட ஒரு பரிசுத்தமான காதலை வெகுமதியாக வழங்கும் என்று அவன் நினைத்தான். அவனுடைய எண்ணங்கள் இப்போது தன் வீட்டையும் தன் பெற்றோரையும் நோக்கிச் சென்றன. அவர்களைவிட்டுப் பிரிந்து வந்ததிலிருந்து, இத்தனை வருடங்களாகத் தான் அவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்திருக்காதது குறித்து அவன் குற்றவுணர்வு கொண்டான். அவன் ஒரு புதிய உலகத்தை வெற்றி கொள்ள வேண்டியிருந்தது, ஓர் உற்சாகமான வாழ்க்கையை வாழ வேண்டியிருந்தது. அவர்கள் வெகுதூரத்தில் இருந்தனர். இவன் தன் கனவுகளைத் துரத்திக் கொண்டிருந்தான். ஆனால் துவாரகையில் ஓர் இருட்டான அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, அஸ்தினாபுரத்திலிருந்த தன் சிறிய குடிசை

அவ்வளவு தொலைவில் இருந்ததாகக் கர்ணனுக்குத் தோன்றவில்லை. தான் இல்லாமல் தன் வயதான பெற்றோர் மிகவும் சிரமப்பட்டிருப்பார்கள் என்று அவன் நினைத்தான். அவனால் இப்போது அவர்களை முன்பைவிடச் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அதே வீட்டில் வாழ்ந்து கொண்டு, தன்னுடைய வெற்றுப் படுக்கையையும், தான் வைத்து விளையாடிய உடைந்த பொம்மைகளையும், தான் களைந்துவிட்டிருந்த ஆடைகளையும் பார்த்து, அவர்கள் தன்னைப் பற்றி ஒவ்வொரு நாளும் நினைத்து மனம் வருந்தியிருப்பார்கள் என்ற எண்ணம் அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. கர்ணன் தன் தந்தையின் மென்மையான புன்னகைக்காகவும் தன் தாயாரின் சமையலுக்காகவும் அவருடைய தொடுதலுக்காகவும் ஏங்கினான். அவன் தன் வீட்டிற்குச் செல்லத் துடித்தான்.

வெளியே கேட்டக் காலடிச் சத்தம் அவனுடைய சிந்தனையைக் கலைத்தது. ஒரு சாதாரண மனிதனுக்கு இந்தச் சத்தம் கேட்டிருக்காது. ஆனால் கர்ணன், பரதகண்டத்தின் மிகச் சிறந்த குருவால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு வீரன். அவனுடைய காதுகளுக்கு அந்த மென்மையான காலடியோசை கேட்பதற்கு முன்பாகவே, அவனுடைய உடல் அவனைச் சூழ்ந்திருந்த ஆபத்தை உணர்ந்து கொண்டது. யாரோ வெளியே இருந்தார்கள்! கர்ணனால் அதை உணர முடிந்தது. கதவு லேசாகத் திறந்திருந்தது. அதன் வலிமையைச் சோதிக்க யாரேனும் அதைத் தள்ளியிருந்தார்களா என்று அவன் யோசித்தான். காற்றுக்கூட அதைத் தள்ளியிருக்கக்கூடும், ஆனால் வெளியே ஓர் இலைகூட அசையவில்லை. அக்கணத்தில், வானில் இருந்த நிலவும் ஒரு கரிய மேகத்திற்குப் பின்னால் சென்று மறைந்து கொண்டது. திடீரென்று அந்த இடம் அச்சுறுத்துவதாக இருந்தது.

கர்ணன் தன்னுடைய சிறிய மூட்டையைச் சத்தமின்றிக் கையில் எடுத்துக் கொண்டு, தன் ஆயுதங்களைச் சரிபார்த்துவிட்டு, கூர்ந்து கவனித்தான். சன்னலருகே அவன் மெதுவாக நடந்து சென்று, ‘நான் தேவையில்லாமல் பதற்றமடைந்து கொண்டிருக்கிறேனா?’ என்று யோசித்தான். வெளியே, வானம் மேகமூட்டமாக இருந்தது. அரண்மனையைச் சுற்றிலும் இருந்த தீப்பந்தங்களில் பெரும்பாலானவை அணைந்து போயிருந்தன. கோட்டைக் கதவின் அருகே, விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த ஒரு தீப்பந்தம், தூங்கிக் கொண்டிருந்த ஓரிரு காவலாளிகள்மீது தன் ஒளியைப் பரப்பியது. கர்ணன் தனக்கு இருந்த வாய்ப்புகளைச் சீர்தூக்கிப் பார்த்தான். இந்த இடம் ஆபத்தானதாக இருந்தது. பொழுது விடிவதற்குள்

துவாரகையைவிட்டு வெளியேறிவிடுவதுதான் சிறந்தது என்று அவன் தீர்மானித்தான். துவாரகைக்கும் அஸ்தினாபுரத்திற்கும் இடையே பல மைல்கள் நீளத்திற்குக் காடுகளும் பாலைவனங்களும் இருந்ததால், தன் பயணம் சிக்கலானதாக இருக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான். வழியில் குறுக்கிட்ட வறண்ட நிலங்களிலும் பண்டைய நகரங்களின் சிதைவுகளிலும் தான் சுலபமாகத் தன் வழியைத் தொலைத்துவிடக்கூடும் என்று அவன் நினைத்தான். அவனுக்கு ஒரு குதிரை தேவைப்பட்டது. நடந்து செல்வது என்ற பேச்சுக்கு இடமிருக்கவில்லை. இளவரசர்களுக்கான பட்டமளிப்பு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. அதிகாரம் படைத்த மனிதர்களைக் கவர்ந்து, அரசாங்கத்தில் ஒரு வேலையைப் பெறுவதற்கு அவனிடம் ஒரு திட்டம் இருந்தது. பலராமன் தனக்கு ஒரு குதிரையைக் கடனாகக் கொடுக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். வெளியே இன்னும் இருட்டாக இருந்தது.

இம்முறை அவன் சந்தேகம் சரியென்று நிரூபணமாகியது. அந்த அறைக் கதவு பயங்கரமாகக் குலுங்கியது. அந்தக் கதவுக்கும் கதவின் சட்டத்திற்கும் இடையே இருந்த இடைவெளி வழியாக ஒரு கத்தியின் முனை உள்ளே நுழைக்கப்பட்டது. யாரோ கதவின் கொண்டியை நகர்த்த முயற்சித்துக் கொண்டிருந்தனர். கர்ணனின் இதயம் படபடவென்று துடித்தது. தன்னைப் பிடிப்பதற்காகத் தாழ்வாரத்தில் பல வீரர்கள் காத்திருக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். 'நான் இங்கேயே இருந்து சண்டையிட வேண்டுமா அல்லது தாமதமாவதற்குள் இங்கிருந்து தப்பியோட வேண்டுமா?' என்று அவன் குழம்பினான். யாரோ கதவை எட்டி உதைத்தனர், ஆனால் அது திறக்கவில்லை. கர்ணன் தன் உடமைகளை எடுத்துக் கொண்டு, சன்னல் வழியாக வெளியே குதித்தான். அவனைத் தாக்க வந்தவர்கள், அவன் கோட்டைக் கதவை நோக்கி ஓடுவான் என்றோ, தோட்டத்தில் மறைந்திருப்பான் என்றோ எதிர்பார்ப்பார்கள். எனவே அவன் அவர்களைத் தந்திரமாக ஏமாற்றியாக வேண்டியிருந்தது. எனவே, அவன் சன்னலுக்கு அடியில் பதுங்கி, தன் மூச்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான்.

ஒரு கரிய முகம் சன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்துவிட்டுக் கெட்ட வார்த்தைகளால் திட்டியது. "அந்தக் கேடுகெட்டத் தேரோட்டி எப்படியோ தப்பிவிட்டான்!" என்று கூறிய அவன், ஒரு மேசையை எட்டி உதைத்தான். கண்ணாடி உடைந்து சிதறிய சத்தம் அந்த அரண்மனை நெடுகிலும் எதிரொலித்தது.

"முட்டாள்! நீ எல்லோரையும் எழுப்பிவிட விரும்புகிறாயா?" என்று ஒருவன் வெடுக்கென்று கேட்டான். அதைத் தொடர்ந்து ஒரு கனத்த

மௌனம் நிலவியது.

அவர்கள் எக்கணத்திலும் வரக்கூடும். அரசர்களின் குதிரை லாயங்கள் எங்கே இருந்தன? கிழக்குப் பகுதியில் தான் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு கூரையா என்று அவன் யோசித்தான். அவர்கள் அவனை எக்கணத்திலும் பிடித்துவிடக்கூடும். எந்த நேரத்திலும் தன் தொண்டையை ஓர் அம்பு துளைக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்போடு, அவன் முற்றத்தின் குறுக்கே ஓடினான். அவன் தன் கவச உடையைத் தொட்டுப் பார்த்தான். அதன் கனமும் அது கொடுத்தப் பாதுகாப்பு உணர்வும் அவனைச் சௌகரியமாக உணர வைத்தன. கர்ணன் குதிரை லாயங்களை அடைந்தபோது அவனுக்கு மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியது. நான்கு கரிய உருவங்கள் அரண்மனைத் தோட்டங்களின் ஊடாக நடந்து சென்று, ஒவ்வொரு புதராக, ஒவ்வொரு மரமாகத் தேடிக் கொண்டிருந்ததை அவனால் பார்க்க முடிந்தது. கோட்டை வாசற்கதவின் அருகே இருந்த தீப்பந்தத்தின் மங்கலான ஒளியில், அவர்களுடைய நிழல்கள் பெரிய அரக்கர்களைப்போல வளர்ந்து, அந்த முற்றத்தின் குறுக்கே நகர்ந்து கொண்டிருந்தன. லாயங்களில் இருந்த குதிரைகள் ஓர் அன்னியனின் வரவை உணர்ந்து, நிலைகொள்ளாமல் தவித்தன. அவற்றில் ஏதேனும் ஒன்று கனைத்தாலும், கர்ணனைத் தேடிக் கொண்டிருந்தவர்களின் கவனத்தை அது ஈர்த்துவிடும். பிறகு சண்டையிடுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்காது. ஒன்று அவன் அவர்களைக் கொல்ல வேண்டும், அல்லது அவர்களால் கொல்லப்பட வேண்டும்.

லாயங்களில் நூற்றுக்கணக்கான அருமையான குதிரைகள் இருந்தன. கர்ணன் விரைவாக அவை ஒவ்வொன்றையும் மதிப்பிட்டான். இறுதியில், அவன் ஒரு கருப்புக் குதிரையைத் தேர்ந்தெடுத்தான். அது கனைத்துச் சத்தம் போட்டுவிடக்கூடாது என்று பிரார்த்தித்துக் கொண்டே அவன் அதை நோக்கி நடந்தான். அவன் அதை மிகுந்த எச்சரிக்கையோடு அணுகி, அதனிடம் மென்மையாகப் பேசி, அதை அமைதிப்படுத்தினான். பிறகு, அதன் கயிற்றை அவிழ்த்து, அக்குதிரையை லாயத்திற்கு வெளியே நடத்திக் கூட்டி வந்தான். லாயங்களின் காவலாளிகள், திறந்த வானின்கீழ் கயிற்றுக் கட்டில்களின்மீது படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். கர்ணன் எச்சரிக்கையோடு அவர்களைக் கடந்து சென்று, தடிமனான கோட்டைச் சுவரின் நிழலுடன் ஒட்டிக் கொண்டு, தன் குதிரையுடன் கதவை நோக்கி நடக்கத் துவங்கினான். லாயங்களிலிருந்து தான் போதுமான தொலைவு வந்துவிட்டிருந்ததை உறுதி செய்த பிறகே, அவன் அக்குதிரையின்மீது ஏறினான். பிறகு, அமைதியாக இருக்கும்படி தனக்குத் தானே கூறிக்

கொண்டு, கோட்டைக் கதவை நோக்கி அவன் தன் குதிரையை ஓட்டிச் சென்றான்.

கிழக்கு வானில் செந்நிறக் கீற்றுகள் முளைத்திருந்தன. கர்ணன் தன்னைத் தாக்க வந்தவர்கள்மீது ஒரு கண் வைத்திருந்தான். அவர்கள் இப்போது எரிச்சலுடன் இருந்தனர். அவர்களில் ஒருவன் திடீரென்று கர்ணன் இருந்த திசையில் முறைத்துப் பார்த்தான். கர்ணன் தன் குதிரையைப் பிடித்திழுத்து நிறுத்தினான். துல்லியமாக அக்கணத்தில், நிலவு, கரிய மேகங்களின் மடிப்புகளுக்குப் பின்னாலிருந்து தப்பித்தது. கர்ணனைத் துரத்தி வந்தவர்களில் ஒருவன், குதிரையின்மீது அமர்ந்திருந்த கர்ணனைப் பார்த்துவிட்டு, தன் சகாக்களை எச்சரிப்பதற்காக மெல்லிய ஒலி எழுப்பினான். அவர்கள் உடனடியாகத் திரும்பி அவனைப் பார்த்தனர். பிறகு அவர்கள் அவனை நோக்கி ஓடி வந்தனர். கர்ணன் கோட்டைக் கதவுகளை நோக்கித் தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். தன் எதிரிகள் தன்னை நெருங்குவதற்கு முன், அந்த பிரம்மாண்டமான கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்குக் காவலாளிகளைத் தான் எவ்வாறு மசிய வைக்கப் போகிறோம் என்ற யோசனை அவனுக்குத் துளிகூட இருக்கவில்லை. மேலே தாண்டிக் குதிப்பதற்கு, சுவர்கள் மிகவும் உயரமாக இருந்தன. தன் வழி தடுக்கப்பட்டிருந்ததைக் கண்ட அவனுடைய குதிரை வெறுப்பில் கனைத்தது. தூங்கிக் கொண்டிருந்த காவலாளிகள் இந்தச் சத்தம் கேட்டுக் கண் விழித்து, கர்ணன் தன் குதிரையைக் கட்டுப்படுத்தப் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டனர். கோட்டையின் பல்வேறு பகுதிகளிலிருந்து இன்னும் அதிகமான காவலாளிகள் தன்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்ததைக் கண்ட கர்ணன் தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டான். அவன் சுற்றி வளைக்கப்பட்டிருந்தான்!

தன்னைத் துரத்தி வந்திருந்த நான்கு நபர்களும் ஓசையின்றி அங்கிருந்து நழுவிவிட்டிருந்ததைக் கர்ணன் கண்டான். வாள்களோடும் ஈட்டிகளோடும் தன்னைத் தாக்கத் தயாராகத் தன்னைச் சூழ்ந்து நின்ற வீரர்களுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் அவன் கவனித்தான். அரண்மனையில் தாங்கள் இருந்ததை யாரும் பார்த்துவிடுவதை அவர்கள் விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இது அவர்கள் அதிக ஆபத்தானவர்கள் என்பதைக் கர்ணனுக்கு உணர்த்தியது. காவலாளிகளுடன் தான் எப்படியாவது பேசிச் சமாளித்துக் கோட்டையைவிட்டு வெளியேறிவிட்டாலும்கூட, அஸ்தினாபுரத்திற்கான தன் நீண்ட பயணத்தின்போது அந்த ஆபத்தான நபர்களைத் தான் மீண்டும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதைக் கர்ணன் அறிந்திருந்தான்.

விரைவில் தலைமைக் காவலன் அங்கு வந்தான். தன் வாளைக் கர்ணனை நோக்கி நீட்டியபடி, குதிரையைவிட்டு இறங்குமாறு அவன் கத்தினான். கர்ணன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான். எதிர்ப்பது முட்டாள்தனமானதாக இருந்திருக்கும் என்பதை அவன் அறிந்தான். ஆயுதங்களைத் தாங்கிய நூற்றுக்கணக்கான வீரர்கள் அவனைச் சூழ்ந்திருந்தனர். அரசாங்கத்தின் குதிரை லாயங்களிலிருந்து ஒரு குதிரையைத் திருடியதற்கு எப்படி விளக்கமளிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. பலராமனுக்கு இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டால், அது தனக்கு மிகவும் தர்மசங்கடமாக இருக்கும் என்று அவன் நினைத்தான்.

"இன்று காலையில் எங்கள் யாதவத் தலைவரைச் சந்திக்க அனுமதி கேட்டு வந்த வீரன்தானே நீ?" என்று அந்தத் தலைமைக் காவலன் கேட்டான். அவன் கர்ணனை ஏளனமாகப் பார்த்தான். தான் ஒரு சாதாரணத் திருடனைப்போலப் பிடிக்கப்பட்டிருந்தது குறித்துக் கர்ணனுக்கு அவமானமாக இருந்தது. "இதற்கு நீ ஏதேனும் விளக்கமளிக்க விரும்புகிறாயா?" என்று அந்தத் தலைமைக் காவலன் கேட்டான்.

உண்மையை மறைக்காமல், வேறு எந்த பதிலையும் கர்ணனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. தலைமைக் காவலன் தன் உதவியாளர்களில் ஒருவனை அழைத்து, அவனிடம் ஏதோ மென்மையாகக் கூறினான். அந்த உதவியாளன் அவனுக்குத் தலைவணங்கிவிட்டு, அரண்மனையை நோக்கி ஓடினான். அதற்கு என்ன பொருள் என்று கர்ணனுக்குத் தெரிந்தது. பூமி பிளந்து தன்னை அப்படியே உள்ளே இழுத்துக் கொள்ளாதா என்று அவன் தவித்தான். தலைமைக் காவலன் அனுப்பிய தூதுவன் பலராமனை அழைத்து வரச் சென்றிருந்தான்.

* * *

"தலைமைக் காவலனே, இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது?" பலராமனின் கம்பீரமான குரல் காற்றை நிரப்பியது. காவலாளிகள் உடனே மரியாதையோடு தலைவணங்கினர்.

"மேன்மை பொருந்தியவரே, இவன் நம்முடைய குதிரையைத் திருட முயற்சி . . ." என்று அந்தத் தலைமைக் காவலன் கூறத் துவங்கினான்.

பலராமன் அவனை இடைமறித்தான். "திருட்டா! இவன் யாரென்று உனக்குத் தெரியுமா? இக்குதிரை இவனுக்கு நான் கொடுத்தப் பரிசு. இப்போது நீ என் விருந்தினனை அவமானப்படுத்தியுள்ளாய். இந்த நிகழ்வைப் பற்றிக் கேள்விப்பட்டால், மக்கள் சிரிப்பார்கள். யாதவர்கள்

தங்கள் நண்பர்களையும் விருந்தினர்களையும் இப்படித்தான் நடத்துகின்றனரா? நீ என்ன காரியம் செய்துவிட்டாய்?"

தலைமைக் காவலன் அவமானத்தில் தன் தலையைத் தொங்கப் போட்டு நின்றான். கர்ணன் பலராமனை வியப்போடு பார்த்தான். அவமானத்தில் கொதித்துக் கொண்டிருந்த தலைமைக் காவலன், "ஐயா, என்னுடைய மரியாதையற்ற நடத்தைக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய பணிவான சேவகனைத் தயவு செய்து மன்னித்துவிடுங்கள்," என்று கூறிவிட்டு, கர்ணனைப் பார்த்து அவன் தலைவணங்கினான்.

கர்ணனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை. அந்தத் தலைமைக் காவலன் தன் கடமையைத்தான் செய்திருந்தான். ஆனால் இப்போது தனக்குக் கீழே பணியாற்றியவர்கள் முன்னால் அவமானப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தான். தான் இப்போது என்ன கூறினாலும், அது பொருத்தமற்றதாக இருக்கும் என்பதைக் கர்ணன் அறிந்தான்.

பலராமன் தலைமைக் காவலனின் தோளில் தட்டிக் கொடுத்துவிட்டு, "கவலைப்படாதே, நீ உன் கடமையைச் சிறப்பாகச் செய்திருக்கிறாய். இது என் தவறு. நம்முடைய விருந்தினன் அதிகாலையிலேயே புறப்பட்டுச் சென்றுவிடுவான் என்று நான் முன்பே உன்னிடம் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்," என்று கூறிவிட்டு, தன் காவலர்கள் அனைவரையும் பார்த்து, "நீங்கள் எல்லோரும் துவாரகைக்குச் சிறப்பாகச் சேவை செய்துள்ளீர்கள்," என்று கூறினான். சற்று முன் கவலையோடு இருந்த அவர்களுடைய முகங்களில் இப்போது புன்னகைகள் மலர்ந்தன.

"ஐயா, நீங்கள் மிகவும் அன்பானவர். ஆனால் நாங்கள் எங்கள் கடமையைத் தவிர . . ." தலைமைக் காவலன் தலைவணங்கி நின்றான், ஆனால் அவனுடைய தோள்களின் இறுக்கம் இப்போது தளர்ந்திருந்தது.

கர்ணன் பலராமனின் பாதங்களைத் தொட்டு, நிகழ்ந்திருந்த சம்பவத்திற்காக வருத்தம் தெரிவித்தான். பகலவனின் முதல் கீற்றுகள் பூமியைத் தன் உறக்கத்திலிருந்து எழுப்பிக் கொண்டிருந்தன.

"கர்ணா, எச்சரிக்கையாக இரு! நீ தேர்ந்தெடுத்துள்ள பாதை சுலபமானதல்ல. இவ்வளவு அவசரமாக அவசரமாக இங்கிருந்து புறப்படுவதற்கு எது உன்னைத் தூண்டியது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆபத்து எப்போதும் உன்னை நெருக்கமாகப் பின்தொடரும். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான பாரபட்சங்களுக்கு நீ சவால்விடத் துணிந்துள்ளாய். பரதகண்டம் அவ்வளவு சுலபமாக உன்னை விட்டுவிடாது. கடவுளின்

ஆசீர்வாதங்கள் எப்போதும் உன்னுடன் இருக்கட்டும். என்ன நிகழ்ந்தாலும் சரி, ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்: வாழ்க்கை உனக்கு வழங்கியுள்ள அனைத்திற்கும் நன்றியுடன் இரு. தாராள மனப்பான்மையுடன் இரு. குறிப்பாக, அதிர்ஷ்டம் உன்னைக் கைவிடும்போது, நீ உன் தாராள குணத்தைத் துறந்துவிடாதே. கடவுள் உனக்குத் துணையிருக்கட்டும். அஸ்தினாபுரம் உன்னுடைய சாதியைப் பார்ப்பதற்குப் பதிலாக உன் திறமையைப் பார்ப்பதற்கான கண்களைப் பெற்றிருக்கும் என்று நான் நம்புகிறேன்."

கர்ணன் தன் குதிரையின்மீது ஏறியபோது, இன்னொரு குரல் அவனுக்குக் கேட்டது. அது உடனடியாக அவன் மனத்தை பயத்தால் நிரப்பியது. கர்ணன் வேகமாகத் தன் தலையைத் திருப்பிப் பார்த்தபோது, கிருஷ்ணன் புன்னகையுடன் பலராமனுக்குப் பக்கத்தில் நின்றதைக் கண்டான். பலராமனின் முகத்தில் கவலை தெரிந்தது. கிருஷ்ணனின் புன்னகை மட்டும் அவனுடைய கரிய, வசீகரமான முகத்தைவிட்டு ஒருபோதும் அகலவில்லை. "நண்பனே, அஸ்தினாபுரம் இங்கிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. நீ பயணிக்கவிருக்கின்ற பாதை ஆபத்தானது, கடினமானது. கர்ணா, இந்த ஆபத்துக்களையும் சிரமங்களையும் துணிச்சலாக எதிர்கொண்டு உன் வீட்டிற்குப் போய்ச் சேர்வதற்கான திறன் உன்னிடம் உள்ளதா?" என்று கிருஷ்ணன் சத்தமாகக் கேட்டான்.

இந்தப் பரிகாசத்தால் தன் கோபம் அதிகரித்ததைக் கர்ணன் உணர்ந்தான். ஆனால் அவன் தன்னைத் தானே அமைதிப்படுத்திக் கொண்டான். எதுவும் கூறாமல், அவன் வெறுமனே தன் கைகளைக் கூப்பித் தலைவணங்கினான். பிறகு, உதயமாகிக் கொண்டிருந்த பகலவனை நோக்கித் தன் குதிரையைத் திருப்பி, ஓர் அமைதியான பிரார்த்தனையைக் கூறினான். வீட்டிற்குப் போவதை நினைத்து அவனுடைய இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'அஸ்தினாபுரம் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது,' என்று அவன் நினைத்தான். அவன் தன் கண்களை மூடி, அக்கணத்தில் தான் உணர்ந்த மகிழ்ச்சியைத் தன் மனத்தில் நிலைப்படுத்தினான். வரவிருந்த ஆபத்துக்களைப் பற்றி அவன் நினைக்கவில்லை. வாழ்க்கைக் குறித்து அவன் அதீத நன்றியை மட்டுமே உணர்ந்தான். ஒருவரிடமிருந்து ஒருவர் முற்றிலும் மாறுபட்டிருந்த அந்த யாதவச் சகோதரர்கள், தங்கள் சண்டையைத் தாங்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டு, தன் சொந்த நாட்டை நோக்கி அவன் தன் பயணத்தைத் துவக்கினான். அவன் வடக்குத் திசையில் திரும்பி, தன்னுடைய தலைவிதியையும் தேடல்களையும் பற்றிய அக்கறையற்ற மக்கள் நிரம்பிய துவாரகை நகர

வீதிகளைக் கடந்து சென்றான். இனி வரவிருந்த நாட்களில், வெப்பமான காடுகள், புழுக்கமான பாலைவனங்கள், வறண்ட ஆற்றுப்படுகைகள் ஆகியவற்றின் ஊடாக அவன் பயணிக்க வேண்டியிருக்கும். கனவு காணத் துணிந்திருந்த அந்தத் தேரோட்டியின் வரவை எதிர்பார்த்து அஸ்தினாபுரம் காத்திருந்தது.

கர்ணன் துவாரகையைவிட்டுப் புறப்பட்டுச் சென்ற பிறகு, நான்கு வீரர்கள் அவனைப் பின்தொடர்ந்ததை அவன் அறியவில்லை. அவனைச் சிறைப்பிடிப்பது அல்லது கொல்வதுதான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. ஒரு தூதுவனும் அஸ்தினாபுரத்தை நோக்கிப் பயணித்தான். தௌமியனுக்கு ஒரு செய்தியைச் சுமந்து கொண்டு சென்ற அவன்தான் முதல் ஆளாகச் சென்று கொண்டிருந்தான். கர்ணன் அங்கு போய்ச் சேர்வதற்கு வெகு முன்பாகவே தௌமியனுக்கு அச்செய்தி கிடைக்கவிருந்தது. இதேபோல, பிற தூதுவர்களும் தென்னகத்தின் முக்கியமான நகரங்களுக்குப் பயணித்தனர். அனைவரும் ஒரே செய்தியைத்தான் சுமந்து சென்றனர்: எலி தன் பொறியில் மாட்டிக் கொண்டது.

17

தேடப்பட்டவன்

அந்தப் பெரிய நிகழ்விற்காக அஸ்தினாபுரம் தயாராகிக் கொண்டிருந்தது. பன்னிரண்டு ஆண்டுகாலப் பயிற்சியின் உச்சகட்டம் அது. அரசன் திருதராஷ்டிரனின் நூறு மகன்களும், அவனுடைய சகோதரன் பாண்டுவின் ஐந்து மகன்களும், குருநாதர் துரோணரின்கீழ் எப்பேர்ப்பட்ட அருமையான வீரர்களாகத் தாங்கள் வளர்ந்திருந்தோம் என்பதை உலகிற்குக் காட்டவிருந்த நன்னாள் அது. மேற்கில் காந்தாரத்தில் தொடங்கி, கிழக்கில் காமரூபம், வடக்கில் காஷ்மீரம், தெற்கில் இலங்கை உட்பட, பரதகண்டத்தின் பல ராஜ்யங்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அழைப்பு விடுக்கப்பட்டிருந்தவர்களில் பலர் அடிமை அரசர்கள். நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு, அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மர், பணிவான வார்த்தைகளில் ஓர் ஆணையாகத்தான் அந்த அழைப்பிதழ்களை அந்த அடிமை அரசர்களுக்கு அனுப்பியிருந்தார். மற்றவை, துவாரகை, வங்கம் போன்ற நட்பு நாடுகள். அவற்றின் அரசர்கள் நட்பின் பேரில் பிரம்மாண்டமான அந்த நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.

பீஷ்மரின் ஆணைப்படி விதுரன் அவருடைய அறைக்கு வந்தபோது நள்ளிரவு தாண்டியிருந்தது. "விதுரா, தென்னக அரசுகளைப் பற்றி எனக்குக் கவலையாக இருக்கிறது. நாம் நம்முடைய வீரர்களையும் அவர்களுடைய ஆயுதத் திறமைகளையும் வெளிப்படையாக

இவ்வுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது அவர்களிடம் பாதுகாப்பின்மை உணர்வைத் தோற்றுவித்துவிடக்கூடாது. பரசுராமனைப் பற்றிய வதந்திகளுக்கு அடிப்படை ஆதாரம் ஏதேனும் இருக்கிறதா?" என்று தனக்கு முன்னால் இருந்த ஓலைச்சுவடிக் குவியலிலிருந்து பீஷ்மர் தன் பார்வையை விலக்காமல் கேட்டார்.

"அவருக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை என்று நம் ஒற்றர்கள் கூறுகின்றனர். இது உண்மையாக இல்லாமல் இருந்து, அவர் நலமாக இருந்தால், தென்னக அரசுகளின் கோபத்தைக் கிளறுவது ஆபத்தானதாக இருக்கும்," என்று கூறிய விதுரன், பீஷ்மர் அந்த ஓலைச்சுவடிகளிலிருந்து தன் பார்வையை உயர்த்துவதற்காகக் காத்திருந்தான்.

"விதுரா, மற்றவர்களுடன் போரிடுவதற்கு நான் பயப்படுகிறேன் என்று நீ நினைக்கிறாயா? இருபது ஆண்டுகளாக இருந்து வந்துள்ள அமைதியைத் தகர்த்தெறிவது குறித்து நான் கொண்டுள்ள தயக்கம்தான் மற்றவர்களுடன் போரிடுவதிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்துகிறது. தென்னக அரசாங்கங்கள் வெகுதொலைவில் உள்ளன. ஆனால் காண்டவம் அருகில் இருக்கிறது. தட்சகனின் கும்பல் நம்மை எந்த நேரத்திலும் தாக்கக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்." பீஷ்மர் இன்னோர் ஓலைச்சுவடியைப் படித்துவிட்டு, அதைத் தனக்கு இடப்பக்கமாகக் கீழே வைத்தார்.

"ஐயா, நகரில் சட்ட ஒழுங்குச் சூழ்நிலை மிகவும் மோசமடைந்து வருவதுதான் அதைவிட மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. வளை எலியான துர்ஜயனை நான் அவனுடைய பாதுக்காப்பான இடத்திலிருந்து விரட்டி வெளியே கொண்டு வரட்டுமா? அவன் தன்னுடைய ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளுக்குக் காந்தாரத்தின் சந்தையை ஒரு போர்வையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். அச்சந்தையை முற்றிலுமாகத் தரைமட்டமாக்குவதற்கான வேளை வந்து வெகுகாலம் ஆகிவிட்டது." காந்தார இளவரசனின் பெயர் தன் வாயிலிருந்து வருவதைத் தடுத்துவிட்டு, விதுரன் நெளிந்தான்.

பீஷ்மர் தான் வாசித்துக் கொண்டிருந்த ஓலைச்சுவடியைச் சோர்வுடன் கீழே வைத்துவிட்டு, களைத்துப் போயிருந்த தன் கண்களைத் தன் கைகளால் அழுத்தித் தேய்த்தார். "விதுரா, பல்வேறு இனங்களிடத்திலும் மதங்களிடத்திலும் நாம் சகிப்புத்தன்மையோடு நடந்து கொண்டிருப்பது போன்ற ஒரு பிம்பத்தை வெளிப்படுத்தத்தான் நான் எப்போதுமே முயற்சித்து வந்துள்ளேன். தென்னகக் கூட்டமைப்பின் வடக்கத்திய வடிவமாக ஆக நான் விரும்பவில்லை. காந்தாரச் சந்தையைத் தரைமட்டமாக்குவது சிறுபான்மையினரின்

உரிமைகளை ஒடுக்குவதுபோல ஆகிவிடும். துர்ஜயன் ஒரு சிறு குற்றவாளி. நாம் விரும்பும் நேரத்தில் அவனை நம்மால் தீர்த்துக்கட்ட முடியும். நீ நாகர்களின்மீது கவனம் செலுத்து. தென்னகக் கூட்டமைப்பையும் தீவிரமாகக் கண்காணித்து வா."

தன்னைப் போன்ற பெரும்பான்மையான மக்களுக்கு, அதாவது, சூத்திரர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்களுக்கு, பீமரின் சகிப்புத்தன்மை கொண்ட நாட்டில் எந்த உரிமைகளும் இருக்கவில்லை என்று விதுரன் மறுத்துப் பேச விரும்பினான். ஆனால் அதை அவன் வாய்விட்டுக் கூறவில்லை. எனவே பீஷ்மரின் கோபத்திலிருந்து அவன் தப்பித்துக் கொண்டான். அது ஒரு நியாயமற்றக் குற்றச்சாட்டாக இருந்திருக்கும். அரசாங்கப் பதவிகள் அனைத்தும் பிராமணர்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்று தௌமியன் முன்மொழிந்த ஒரு திட்டத்தை அன்று காலையில்தான் பீஷ்மர் தனிப்பட்ட முறையில் நிராகரித்திருந்தார். இரவு வெகுநேரம் ஆகியிருந்தது. விதுரன் தன் வீட்டிற்குச் சென்று, தன் குழந்தைகளைக் கொஞ்சிவிட்டு, ஒரு மரக்கட்டையைப்போலத் தூங்க விரும்பினான். களைத்துப் போயிருந்த அவன், சன்னலுக்கு வெளியே பார்த்தான். பிரகாசமான நிலவு ஒன்று, பூமியை வெள்ளி ஒளியில் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. அந்த இரவு ஒரு போலியான அமைதியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

"என்ன இது?"

பீஷ்மரின் கேள்வி விதுரனை அவனுடைய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து உலுக்கியது. அவன் பீஷ்மரின் கையிலிருந்த ஓலைச்சுவடியை வாங்கி, அந்த அறையில் இருந்த மங்கலான ஒளியில் அதைப் படித்தான். அவனுடைய முகம் பேயறைந்தாற்போல ஆனது. நடுங்கிய கைகளுடன் அதை அவன் பீஷ்மரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, "ஐயா, இது ஒரு பூதாகாரமான பிரச்சனை," என்று கூறினான்.

"ம்ம்ம் ஞ் இது இன்னும் ஒரு பூதாகாரமான பிரச்சனையாக ஆகவில்லை. ஆனால் அவ்வாறு ஆவதற்கான சாத்தியம் இதில் ஏராளமாக இருக்கிறது. நாம் அவனைத் தடுத்தாக வேண்டும்," என்று பீஷ்மர் கவலையோடு கூறினார். அவர் அச்செய்தியை மீண்டும் ஒருமுறை படித்தார். அது தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் சக்திவாய்ந்த அரசர்களில் ஒருவனான வாதாபி பேரரசனிடமிருந்து வந்திருந்தது. அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த ஒரு சூத்திரச் சிறுவன் தர்மவீரன் பட்டத்தை வென்றதன் மூலம் தென்னக அரசர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்து, அவர்களை அவமானப்படுத்தியிருந்தான். அஸ்தினாபுரம் அந்தக் கயவனைக் கைது

செய்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், அமைதி உடன்படிக்கை செல்லுபடியற்றதாக ஆகிவிடும் என்றும் தென்னகக் குழு அச்சுறுத்தியிருந்தது. இது கிட்டத்தட்டப் போருக்கான ஒரு வெளிப்படையான பிரகடனம்போலத் தோன்றியது.

"அவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குத் திறமையான ஆட்கள் ஒருசிலரை அனுப்பி வை. நகரத்திற்கு இட்டுச் செல்லும் அனைத்துச் சாலைகளையும் மறிப்பதற்கு ஏற்பாடு செய். என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, அவன் பிடிக்கப்பட்டாக வேண்டும்." பீஷ்மர் தன் இருக்கையைவிட்டு எழுந்து, அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் துவங்கினார்.

"ஐயா, அது சாத்தியமில்லை. பிரம்மாண்டமான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக பரதகண்டம் நெடுகிலுமிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் அஸ்தினாபுரத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பிட்ட அந்த நாளில், அரங்கில் 20,000க்கும் அதிகமான மக்கள் இருப்பார்கள். அருகிலுள்ள திடல்களில் இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பர். இது போன்ற எதுவும் இருபது வருடங்களில் நடைபெற்றதில்லை. எல்லோரும் உற்சாகமாக இருக்கின்றனர். நகருக்குள் நுழைவதிலிருந்து ஒரே ஒரு நபரை எவ்வாறு நம்மால் தடுக்க முடியும்?"

அவனுடைய கைகள் நடுங்கின. பட்டமளிப்பு விழாவில் ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறுவது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. விழாவிற்கான பொறுப்பு விதுரனுடையதாக இருந்தது. "மேலும், நாகர்களின் தாக்குதலைத் தவிர்ப்பதற்காகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. இப்போது புதிதாக ஒருவனைத் தேடத் துவங்குவதற்குத் தேவையான ஆட்பலம் நம்மிடம் இல்லை. துர்ஜயனின் கும்பல், சங்கிலிப் பறிப்பு, திருட்டு போன்ற சிறு குற்றங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்குத் தேவைப்படும் காவலர்கள் தனி. ஐயா, இப்போது அந்த இளைஞனைத் தேடி ஆட்களை அனுப்புவது நமக்கு இயலாத செயல்."

"விதுரா, பீதியடையாதே. தெளிவான மனத்துடன் யோசி. என் நினைவு சரியாக இருந்தால், ஒருசில வருடங்களுக்கு முன்பு, நீ அதே சிறுவனைத்தான் துரோணரிடம் அழைத்துச் சென்றாய். உனக்கு அந்தத் தேரோட்டியை நினைவிருக்கிறதா . . . அவன் பெயர் என்ன? அவனுடைய மகன் ஒரு வீரனாக ஆக விரும்பினான். ஆனால் அவன் தேரோட்டி சாதியைச் சேர்ந்தவன் என்பதால் நம் குரு அவனுக்குக் கற்றுக் கொடுத்த மறுத்தார்."

“அதிரதனின் மகன் வாசுசேன கர்ணனா?” என்று விதுரன் அதிர்ச்சியுடன் கேட்டான். அந்தத் தேரோட்டியின் புத்திசாலித்தனமான, உற்சாகமான மகனைப் பற்றிய நல்ல நினைவுகள் அவனுக்கு இருந்தன. அச்சிறுவனின் விஷயத்தில் துரோணரிடம் தான் அனுபவித்திருந்த அவமானம் அவனை இன்னும் வதைத்தது.

“அதே சிறுவன்தான் என்று நான் நினைக்கிறேன். அவனுடைய மன உறுதியும் தன்னம்பிக்கையும் என்னை பிரமிக்க வைக்கின்றன. ஆனால், நாம் ஓர் அற்பமான உலகில் வாழ்கிறோம். ஒரு பயங்கரமான போரையும் உயிர்ச்சேதத்தையும் தவிர்ப்பதற்காக நாம் அவனைத் தியாகம் செய்தாக வேண்டும். அவனை உயிரோடு பிடித்து வா. அவனுடைய ரத்தம் நம் கைகளில் படிவதை நான் விரும்பவில்லை. தவறான சாதிக்குள் பிறந்ததுதான் அவனுடைய ஒரே தவறு. தென்னக வெறியர்களிடம் அவனை ஒப்படைத்துவிட்டு இந்தப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடு. நீ அவனைச் சிறைப்பிடிக்க எப்படியாவது ஒரு வழியைக் கண்டுபிடித்துவிடுவாய் என்று எனக்கு உறுதியாகத் தெரியும். அவன் நாகர்களின் கூட்டத்தில் சேர்ந்து இன்னொரு போராளியாக ஆகிவிடாமல் மட்டும் பார்த்துக் கொள். என்ன செய்ய வேண்டியிருந்தாலும் சரி, அந்தக் கிறுக்கன் கிருபன் அவனை நெருங்காதபடி பார்த்துக் கொள். கிருபனின் கிறுக்குத்தனமான செயல்கள் நமக்கு இப்போது கட்டுப்படியாகாது. விதுரா, நீ இப்போது ஓய்வெடுத்துக் கொள். நாளை அதிகாலையில் என்னை என் அறையில் வந்து பார்.” கவலையோடு இருந்த விதுரனைத் தனியாக விட்டுவிட்டு, பீஷ்மர் தன் தனிப்பட்ட அறைக்குள் சென்று மறைந்தார்.

தாழ்வாரத்தில் விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்கள் ஏற்படுத்திய மங்கலான வெளிச்சத்தில் விதுரன் நின்று கொண்டு, களைத்துப் போயிருந்த தன் மனத்தை வலுக்கட்டாயமாகத் தெளிவாகச் சிந்திக்க வைக்க முயன்றான். அச்சிறுவன் இப்போது ஓர் இளைஞனாக வளர்ந்திருப்பான். விழாவில் கலந்து கொள்வதற்காக நகருக்கு வரவிருக்கும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கிடையே எப்படி ஒருவனால் அவனை அடையாளம் காண முடியும்? விதுரன் சிந்தனையில் மூழ்கியபடி தன் வீட்டை நோக்கி நடந்தான். ‘கர்ணன் நிச்சயமாகத் தன் பெற்றோரைச் சந்திக்க வருவான். ஆம்! அதுதான் சிறந்த வழி. அதிரதனின் வீட்டினருகே காவலர்களை மாறுவேடத்தில் உலவவிட வேண்டும். ஆனால் தன் பெற்றோரைச் சந்திப்பதற்கு முன் விழா அரங்கிற்குப் போவது நல்லது என்று கர்ணன் நினைத்துவிட்டால்? இல்லை, அந்தத் தேரோட்டியின் வீட்டை மட்டும் கண்காணித்தால் போதாது. புறநகர்ப் பகுதியிலேயே அவனைச் சிறைப்பிடித்து, எந்தப்

பிரச்சனையும் இன்றித் தெற்கே அனுப்பிவிடுவதுதான் நல்லது,' என்று விதுரன் நினைத்தான். தட்சகனின் ஆட்களும் கர்ணனும் சந்தித்துக் கொண்டால், அது பெரும் கேடு விளைவித்துவிடும் என்று அவன் பயந்தான்.

'நாளைக்கு அரசவை ஓவியன் ஒருவனை அழைத்துக் கொண்டு அந்தத் தேரோட்டியின் குடிசைக்கு நான் செல்ல வேண்டும்,' என்று விதுரன் தன் மனத்தில் நினைத்துக் கொண்டான். அச்சிறுவன் தன் தந்தையின் சாயலில் இருக்கக்கூடும். அதிரதனை ஒரு 'மாதிரி' உருவமாகப் பயன்படுத்திக் கர்ணனின் உருவத்தை அந்த ஓவியனால் வரைய முடியும். கர்ணன் ஒரு மாபெரும் வீரன் என்று அவர்கள் கூறுவதால், அதிகத் தசைகளுடனும் ஒரு திடகாத்திரமான உடலுடனும் அவன் ஓர் இளம் அதிரதனாக இருக்கக்கூடும் என்று விதுரன் நினைத்தான். அந்த ஓவியத்தின் நகல்களைத் தன் ஒற்றர்களிடம் கொடுத்து, நகரின் மூலை முடுக்களுக்கெல்லாம் அவர்களை அனுப்பி வைத்தால், அவர்கள் அவனைக் கண்டுபிடிக்கக்கூடும் என்றும் அவன் தன் மனத்தில் கணக்குப் போட்டான். கர்ணன் எல்லோராலும் தேடப்பட்டு வந்த ஒரு குற்றவாளி என்றும், அவனை உயிரோடு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10,000 தங்க நாணயங்கள் வழங்கப்படும் என்றும் அறிவித்தால், பலர் அவனைத் தேடப் புறப்பட்டுவிடுவார்கள். அது சிறந்த பலனளிக்கக்கூடும். விதுரன் தன் எளிமையான அறைக்குள் நுழைந்து, கதவை மென்மையாக மூடினான். 'இன்றும் என் குடும்பத்தினர் நான் இல்லாமல் தூங்குவார்கள்,' என்று அவன் வருத்தத்தோடு நினைத்துக் கொண்டான். அலைக்கழிக்கப்பட்ட அஸ்தினாபுரப் பிரதம மந்திரியைத் தூக்கம் தழுவியபோது, கிட்டத்தட்ட விடிந்துவிட்டிருந்தது.

* * *

அரண்மனையின் ஒரு தொலைதூரப் பகுதியில், இன்னோர் ஆன்மா, உற்சாகத்தில் கொட்டக் கொட்ட விழித்திருந்தது. பீஷ்மர் தன் அறைக்குள் நுழைந்த ஒருசில நிமிடங்கள் கழித்து, புரோச்சனன் சகுனியின் அறைக் கதவைத் தட்டினான். சிறிது நேரம் கழித்து, காந்தார இளவரசனின் அறையைவிட்டு அவன் கோபத்துடன் வெளியேறினான். அவன் கொண்டு வந்திருந்த செய்தி குறித்து அந்த அன்னிய நாட்டு இளவரசன் அவ்வளவு உற்சாகம் காட்டியிருக்கவில்லை.

"ஒரு தேரோட்டியின் மகன் பரசுராமனை அவமதித்தால் அதனால் காந்தாரத்திற்கு என்ன நன்மை விளையப் போகிறது?" என்று அவன் புரோச்சனனிடம் கேட்டான். ஒன்றுக்கும் உதவாத இத்தகவலுக்காக,

சகுனி முணுமுணுத்துக் கொண்டே அந்த அதிகாரியின் உள்ளங்கையில் ஒருசில வெள்ளி நாணயங்களைத் தூக்கிப் போட்டான்.

காந்தாரத்தின் ஒட்டுமொத்த வம்சாவழியையும் தன் மனத்திற்குள் திட்டிக் கொண்டே புரோச்சனன் அங்கிருந்து போனான்.

அவன் போன பிறகு, தன் அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு சகுனி புன்னகைத்தான். உண்மையில், அவன் மகிழ்ச்சியில் உற்சாகமாகக் கத்த விரும்பினான். அவன் தன் இடைக்கச்சையிலிருந்து தன் பகடைகளை வெளியே எடுத்து, "பன்னிரண்டு!" என்று கத்திக் கொண்டே, அங்கிருந்த பளிங்கு மேசையின்மீது அவற்றை வீசினான். அவனுடைய பகடைகள் உருண்டு, அவன் அழைத்த அதே எண்களை வெளிப்படுத்தி நின்றபோது, மகிழ்ச்சியில் அவன் தன் உள்ளங்கைகளை ஒன்றோடொன்று அழுத்தித் தேய்த்தான். கொல்லப்பட்டத் தன் தந்தையின் தொடை எலும்பிலிருந்து தான் செதுக்கியிருந்த அந்தப் பகடைகளைப் பார்த்த அவன், விஷமத்தனமாகச் சிரித்தான். "அப்பா, விஷயங்கள் எப்படிச் செல்ல வேண்டும் நீங்கள் விரும்பியிருப்பீர்களோ, அவை அப்படியே சென்று கொண்டிருக்கின்றன. என்னால் ரத்தத்தைப் பார்க்க முடிகிறது. என்னால் மரணத்தை நுகர முடிகிறது. பரதகண்டமே . . . உன் கதை முடிந்துவிட்டது . . . போர் . . . மாபெரும் போர் . . . மோசக்கார பீஷ்மனே. . . காந்தார நாட்டுக்காரன் ஒருவனால் உன் நாட்டிற்கு என்னவெல்லாம் செய்ய முடியும் என்று நான் காட்டுகிறேன்." பிறகு அவன் நீண்டநேரம் சிரித்துவிட்டு, தரையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, மேற்குத் திசையை நோக்கி மீண்டும் மீண்டும் தலைவணங்கினான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, அவன் தன் மயக்கம் தெளிந்து, தன் மேசையை நோக்கி விரைந்தான். அவன் ஓர் அவசரமான வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. அவன் துர்ஜயனுக்கு ஒரு குறிப்பை வேகவேகமாகக் கிறுக்கினான். கொள்ளைக்கூட்டத் தலைவனான துர்ஜயனால் அந்த முட்டாள் தேரோட்டியைப் பிடிக்க முடிந்தால், அஸ்தினாபுரத்திற்கும் தென்னகக் குழுவினருக்கும் இடையே பதற்றமும் இறுக்கமும் வலுக்கும்போது, தன்னால் அவனைப் பணயக் கைதியாக வைத்துக் கொள்ள முடியும்; அல்லது அவனைக் காந்தார நாட்டிற்குக் கடத்திச் சென்று, அங்கிருக்கும் மலைக்குகைகளில் ஏதேனும் ஒன்றில் மறைத்து வைத்துவிடலாம் என்று சகுனி நினைத்தான். பரதகண்டவாசிகள் தங்களுக்குள் சண்டையிட்டு, ஒரு பயங்கரமான போரில் ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளட்டும் என்று அவன் கணக்குப் போட்டான். அகங்காரம் பிடித்தத் தெற்கத்திய முட்டாள்களை ஏளனம் செய்திருந்த கர்ணனை அஸ்தினாபுரம் அவர்களிடமிருந்து

பாதுகாத்துக் கொண்டிருந்தது என்ற ஒரு வதந்தியைப் பரப்புவதுதான தான் செய்ய வேண்டியிருந்த ஒரே விஷயம் என்று அவன் நினைத்தான். விஷயங்கள் தான் எதிர்பார்த்திருந்ததைவிட வேகமாகத் தனக்குச் சாதகமாகச் சென்று கொண்டிருந்ததை அவன் கண்டான்.

* * *

"அந்தக் கேடுகெட்ட அன்னியன் கூறிய எல்லாவற்றையும் நான் செய்துள்ளேன். நகரத்தைப் பாதுகாப்பற்றதாக ஆக்கியிருக்கிறேன், யாரும் அமைதியாகத் தூங்காமல் இருப்பதை உறுதி செய்திருக்கிறேன், சூறையாடல்களுக்கும் தீவைப்புகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். மேற்குத் திசையில் இருக்கும் அவனுடைய நாட்டை நோக்கிப் பிரார்த்தனை செய்யுமாறு என் அடிமைகளுக்கு உத்தரவுகளைக்கூடக் கொடுத்திருக்கிறேன். அது பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை என்பது வேறு விஷயம். ஆனால் இதற்கு மேல் அவன் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறான்?" என்று கத்திய துர்ஜயன், புரோச்சனனைக் கோபத்தோடு பார்த்தான்.

"துர்ஜயா, நீ அருமையாக வேலை செய்திருக்கிறாய். காந்தார இளவரசன் உன்மீது மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆனால் நீ உன்னுடைய நடவடிக்கைகளை, தென்னக நகரங்கள் உட்பட, மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று அவன் விரும்புகிறான். பரதகண்டத்தில் உள்ள ஒவ்வொரு சிறுநகரமும் ஒவ்வொரு பெருநகரமும் பாதுகாப்பற்றதாக இருக்கும்படி உன்னால் செய்ய முடியுமா?" துர்ஜயனுக்குப் பரிசாகத் தான் கொண்டு வந்திருந்த விலையுயர்ந்த மதுவை அவன் ஒரு மடக்குப் பருகினான்.

"பீஷ்மர் மீண்டும் என்னைத் துரத்த வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? உன் இளவரசன் என்னிடம் விட்டெறிகின்ற பிச்சைக் காசுக்கு நான் சிறப்பாகவே சேவை செய்துள்ளேன்."

"பணம் இங்கு ஒரு தடையல்ல. நான் கூறியபடி செய்வதற்கு உனக்குத் திறன் இருக்கிறதா அல்லது நகரிலுள்ள உன்னுடைய போட்டிக் கும்பல்களில் யாரையேனும் நான் முயற்சித்துப் பார்க்க வேண்டுமா?"

"புரோச்சனா, நீ என்னை மிரட்டுகிறாயா?"

"நண்பா, நீ மிரட்டப்பட்டுவதுபோல உனக்குத் தோன்றுகிறதா?"

துர்ஜயன் அந்த சுகாதார ஆய்வாளனை வெறுப்போடு பார்த்தான். புரோச்சனன் அந்த மதுவை மீண்டும் ஒரு மடக்குப் பருகிவிட்டுப் புன்னகைத்தான். துர்ஜயன் இறுதியில், "அவன் இப்போது எனக்கு என்ன தர ஒத்துக் கொண்டிருக்கிறான்?" என்று கேட்டான்.

புரோச்சனன் உற்சாகமாகத் தலையாட்டினான். ஒரு நீண்ட பேரப்பேச்சிற்குப் பிறகு, பரதகண்டத்தை ரத்த வெள்ளத்தில் மிதக்க விடுவதற்கான விலை நிர்ணயிக்கப்பட்டது. சிறிது நேரம் கழித்து, புரோச்சனன், "ஒரு தேரோட்டியைப் பிடித்துத் தரும்படி நான் கேட்டால், அது உனக்கு அதிகத் தொந்தரவாக இருக்குமா?" என்று கேட்டான்.

"புதிர்கள் போட்டுப் பேசுவதை நிறுத்து. விலை என்னவென்று சொல். எந்தத் தேரோட்டி?"

விதுரனின் உத்தரவின் பேரில் அந்நகரம் நெடுகிலும் ஒட்டப்பட்டிருந்த, துணியில் வரையப்பட்டிருந்த ஓவியத்தை எடுத்து, புரோச்சனன், துர்ஜயனின் முன்னால் இருந்த மேசையின்மீது வைத்தான்.

"10,000 நாணயங்களுக்கு நான் இதைச் செய்ய வேண்டுமா? இப்போது அற்பச் சில்லறைகளைக் கொடுத்து நீ என்னை ஏளனப்படுத்திக் கொண்டிருக்கிறாயா?"

"முட்டாள்!" புரோச்சனனிடமிருந்து வந்த அந்த இகழ்ச்சியைக் கேட்டு துர்ஜயன் தன் நெற்றியைச் சுருக்கினான். தான் முதன்முதலாக இங்கு வந்தபோது இருந்த நிலைமை இப்போது எப்படி மாறியிருந்தது என்று நினைத்துப் புரோச்சனன் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான். பிறகு, "அவனைப் பிடித்து இங்கே வைத்திரு. உனக்குக் கட்டளைகள் வரும்போது, அவனைக் காந்தாரத்திற்கு நாடு கடத்திவிடு. பிறகு நீ கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பணக்காரனாக ஆகிவிடுவாய்," என்று கூறினான்.

"யார் அவன்? அவன் ஏன் இவ்வளவு மும்முரமாகத் தேடப்பட்டுக் கொண்டிருக்கிறான்?" என்று துர்ஜயன் சந்தேகத்தோடு கேட்டான்.

"இந்த நாட்டின் ஒட்டுமொத்த வரலாற்றை மாற்றப் போகிறவன் அவன்."

துர்ஜயன் முதலில் புரோச்சனனையும், பிறகு அந்த ஓவியத்தையும் முறைத்துப் பார்த்தான். இறுதியில், "விலை என்னவென்று சொல்," என்று கூறினான்.

* * *

அடுத்த நாள் மாலைக்குள், ஒட்டுமொத்த அஸ்தினாபுர நகரமும் கர்ணனைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக இறங்கியிருந்தது. விதுரனின் ஒற்றர்களும் துர்ஜயனின் அடியாட்களும் தெருக்களில் சுற்றித் திரிந்து, ஒவ்வோர் அன்னியனின் முகத்தையும் கூர்ந்து ஆராய்ந்தனர். அனைத்து முக்கியமான மூலைகளிலும் சந்திப்புகளிலும், ஏழைத் தேரோட்டியான அதிரனின் இளமைக்கால உருவத்தையொத்த

ஓவியங்களைத் தாங்கிய, துணியாலான சுவரொட்டிகள் எல்லோர் பார்வையிலும் படும்படி காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கர்ணனின் தலைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மிகப் பெரிய வெகுமதி, பலர் தங்கள் ஊனுறக்கத்தை மறந்துவிட்டு, தப்பியோடிக் கொண்டிருந்த குற்றவாளிக்கான வேட்டையில் கலந்து கொள்வதற்குப் போதுமானதாக இருந்தது.

ஜரனின் தூக்கம் இரண்டு முறை கலைக்கப்பட்டது. இரவு இன்னும் இளமையாக இருந்தபோது, இரண்டு காலவர்கள் வந்து, ஜரனின் நாயான தர்மனைக் கழிவு ஓடைக்குள் எட்டி உதைத்தனர். பிறகு ஜரனை அடித்து எழுப்பி, தேடப்பட்டுக் கொண்டிருந்தவனின் உருவம் தாங்கிய துணி ஒன்றை அவனுடைய முகத்தின்மீது அழுத்தினர். ஜரனுக்கு அவனை எங்கோ பார்த்ததுபோல இருந்தது, ஆனால் அவன் தன் தோள்களைக் குலுக்கிவிட்டு அவர்களைப் பார்த்துத் தன் பற்கள் தெரியச் சிரித்தான். அவர்கள் அவனை வசை பாடிவிட்டு, அந்த நபரை அவன் எங்கேனும் பார்க்க நேர்ந்தால் தங்களிடம் தெரிவிக்குமாறு அவனிடம் கூறிவிட்டு அங்கிருந்து சென்றனர். ஜரன் மீண்டும் தூங்கப் போய்விட்டான். அந்தக் குருட்டு நாய் மீண்டும் அவனருகில் வந்து சுருண்டு கொண்டது. நள்ளிரவில் துர்ஜயனின் ஆட்கள் அவனுடைய விலாவின்மீது ஓங்கி மிதித்து அவனை மீண்டும் எழுப்பினர். அவர்களும் அதே படத்தை அவனிடம் காட்டி, அதே கேள்விகளைக் கேட்டனர். ஏதோ தீவிரமான ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்ததை ஜரன் உணர்ந்தான்.

அந்த முரடர்கள், காவலர்கள் கொடுத்திருந்த அதே எச்சரிக்கையை அவனுக்குக் கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றனர். அந்தப் படத்தில் இருந்தவன் யாரென்பதை ஜரன் இப்போது உணர்ந்தான். அது அந்தத் தேரோட்டி அதிரதன்தான். ஆனால் அது அவனுடைய இளமைக்கால உருவம்போல இருந்தது. பல வருடங்களுக்கு முன்பு, தட்சகன் அஸ்தினாபுரக் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்ததைத் தானும் ஏகலைவனும் பார்த்திருந்த அதே நாளன்று, தாங்கள் அவனுடைய வீட்டிற்கு ஒருமுறை சென்றிருந்தது அவனுக்கு நினைவுக்கு வந்தது. ஜரன் பல விஷயங்கள் மறந்து போனான், ஆனால் அன்பான செயல்களை அவன் ஒருபோதும் மறக்கவில்லை. ஏனெனில் அவனுடைய வாழ்க்கையில் அவை மிகக் குறைவாகவே இருந்தன. நீண்டகாலத்திற்கு முன்பு அந்தத் தேரோட்டியின் குடும்பத்தினர் தனக்குக் கொடுத்திருந்த உணவிற்காக அவன் கடமைப்பட்டிருந்தான். காவலர்களும் முரடர்களும் அந்தத் தேரோட்டியைத் தேடிக் கொண்டிருக்கவில்லை, மாறாக அவனுடைய மகனைத் தேடிக்

கொண்டிருந்தனர் என்று ஜரன் நினைத்தான். ஒரு தேரோட்டியின் தலைக்கு யார் இவ்வளவு பெரிய வெகுமதியைக் கொடுப்பார்கள்? அந்தத் தேரோட்டியின் மகனுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தது என்றால், தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று ஜரன் நினைத்தான்.

ஜரன் நடைபாதையிலிருந்து எழுந்து, நகரின் தென்பகுதியில் நகர எல்லைக்கு வெளியே இருந்த ஒரு பயணியர் விடுதியை நோக்கி நடக்கத் துவங்கினான். நகருக்குள் வருவதற்குப் பல வழிகள் இருந்தன, ஆனால் ஜரன் தன் உள்ளுணர்வை நம்பினான். தேடப்பட்டுக் கொண்டிருந்த குற்றவாளி நிச்சயமாக இந்த வழியைத் தேர்ந்தெடுப்பான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். தான் அவனுக்காகக் காத்திருந்து, முடிந்தால் அவனை எச்சரிக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

துவக்கத்தில், அந்த விடுதி உரிமையாளன் ஜரனை அங்கிருந்து விரட்ட முயன்றான். ஆனால் அந்தப் பிச்சைக்காரனால் கடவுளின் பெருமைகளைப் பற்றி அழகாகப் பாட முடிந்ததையும், அவனுடைய பாடல்களைக் கேட்பதற்காகப் பயணிகள் தன் விடுதிக்கு வந்ததையும் அவன் கண்டபோது, ஜரன் அங்கு இருந்ததைப் பொறுத்துக் கொள்வதென்று அவன் தீர்மானித்தான். அவனுடைய வியாபாரத்திற்கு அது நல்லதாக இருந்தது. கிருஷ்ணனைப் பற்றிய அப்பாடல்கள், களைத்துப் போயிருந்த பயணிகளின் இதயத்தைத் தொட்டு, அவர்களைக் கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கச் செய்தன. மேலும், பாடுவதன் மூலம் தான் சம்பாதித்திருந்த சில்லறைகளைக் கொண்டு, ஜரன் அந்த விடுதியில் தன் உணவைக் காசு கொடுத்து வாங்கி உண்டான். அந்த விடுதி உரிமையாளனுக்கு இந்த ஏற்பாடு வசதியாக இருந்தது. எனவே, ஜரன் தன் கடவுளைப் பற்றிப் பாடிக் கொண்டு, தன் நாயுடன் அதிரதனின் மகனுக்காகக் காத்திருந்தான்.

* * *

தனக்காகக் காத்திருந்த ஆபத்தைப் பற்றி அறியாத கர்ணன், தன் குதிரையின்மீது அஸ்தினாபுரத்தை நோக்கிப் பயணித்தான். அது ஒரு நீண்ட, கடினமான பயணமாக இருந்திருந்தது. நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு, சரஸ்வதி நதியின் வறண்டு கொண்டிருந்த ஆற்றுப்படுகையின் வழியாகச் செல்லுமாறு அவன் சந்தித்த ஒரு வணிகன் அவனுக்கு அறிவுறுத்தியிருந்தான். கணுக்கால் அளவே தண்ணீரும் நிறைய இடங்களில் மணல்திட்டுகளும் இருந்த அந்த ஆற்றின் ஊடாகக் கர்ணன் தன் குதிரையைச் செலுத்தியபோது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அந்நதியின் கரைகளின்மீது

செழித்தோங்கியிருந்த பிரம்மாண்டமான நாகரீகங்களை அவனால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பரந்து விரிந்த நகரங்களைக் கொண்ட மாபெரும் அசுர நாகரீகத்தின் வரலாறும், அந்த நகரங்களைத் தகர்ந்தெறிந்து பரதகண்டத்திற்கு தேவர்களின் ஆட்சியைக் கொண்டு வந்த முதல் இந்திரனைப் பற்றிய வியப்பூட்டும் கதைகளும் அவன் மனத்தின் ஊடாகப் பளிச்சிட்டன. 'இக்கரைகளின்மீது அமர்ந்துதான் பண்டைய துறவிகள் பிரபஞ்சத்தைப் பற்றியும் வாழ்வின் புதிரைப் பற்றியும் யோசித்தனர்,' என்று கர்ணன் நினைத்தான். அந்தக் கதாநாயகர்கள் எங்கே போனார்கள்? ராமன், ராவணன், மகாபலி, இந்திரன், வாலி ஆகியோர் எங்கே? இந்தப் புனித பூமியில் வாழ்ந்த தேவர்கள், அசுரர்கள், நாகர்கள் மற்றும் பிற பழங்குடியினரின் கதாநாயகர்கள் என்னவானார்கள்? அப்படிப்பட்ட மக்கள் ஏன் இப்போது இல்லை? 'நவீன காலத்தைப் பற்றி நான் சற்றுக் கடுமையாக நடந்து கொள்கிறேன்போலும். சலிப்பூட்டும் விஷயங்கள்மீது தங்கத் துகள்களைத் தூவி அவற்றை மாபெரும் விஷயங்களாகக் தூக்கி நிறுத்துவது வரலாற்றின் இயல்பான போக்குதான். நிஜ வாழ்வில் அந்தக் கதாநாயகர்கள் உண்மையிலேயே எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்று யாருக்குத் தெரியும்? அவர்களில் சிலர் கொடுங்கோலர்களாகவோ அல்லது சர்வாதிகாரிகளாகவோ இருந்திருக்கக்கூடும். கற்பனைக் கதைகளுக்குக் காலப்போக்கில் வண்ணம் தீட்டப்பட்டுவிடுகின்றன. பலராமன் மற்றும் கிருஷ்ணன்கூடக் காலப்போக்கில் கதாநாயகர்களாகவும் கடவுள்களாகவும் ஆகக்கூடும்,' என்று அவன் நினைத்தான்.

அந்த எண்ணம் கர்ணனின் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்தது. கிருஷ்ணன் ஏற்கனவே ஒரு கடவுளாகக் கருதப்பட்டான். தான் விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்ற ஓர் உருவத்தை அவன் கவனமாக உருவாக்கிக் கொண்டிருந்தான். அவன் செய்த ஒவ்வொரு செயலும் ஓர் அதிசயம் என்று மற்றவர்கள் நம்ப வைக்கப்பட்டனர். ஏற்கனவே, ஆடுமாடு மேய்த்தவர்களும் தாழ்ந்த சாதிக்காரர்களும் அவன் ஒரு கடவுள் என்று நினைத்து, அவனை வழிபடத் துவங்கியிருந்தனர். 'கிருஷ்ணன் வழி' சுலபமானதாக இருந்தது. தன்மீது நம்பிக்கை வைத்துப் பிரார்த்தனை செய்தால், தன் பக்தர்களின் வாழ்வில் அதிசயங்கள் நிகழும் என்று மக்களுக்கு அவன் வாக்குறுதி கொடுத்தான். ஆனால் பலராமனோ, கடின உழைப்பையும் தன்னம்பிக்கையையும் தவிர மக்களுக்கு வேறு எந்த அதிசயங்களையும் வழங்கவில்லை. முட்டாள்கள் நிறைந்த ஒரு நாட்டை வழிநடத்திக் கொண்டிருந்த ஓர் அறிவாளி அவன். 'பலராமனைப் போன்ற

ஒருவனைப் பெறுவதற்கு என் நாட்டிற்கு எந்தத் தகுதியும் இல்லை,' என்று கர்ணன் வருத்தத்தோடு நினைத்தான்.

ஓர் அம்பு அவனுடைய கவச உடையின்மீது வந்து மோதி, அவனுடைய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து அவனை உலுக்கியது. அந்த அம்பு எங்கிருந்து வந்தது என்று அவன் ஆச்சரியத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தான். ஆற்றின் இடதுபக்கக் கரையின்மீது இருந்த அடர்த்தியான புதர்களை அவன் உற்றுப் பார்த்துவிட்டு, தன் குதிரையை அப்புதர்களை நோக்கிச் செலுத்தினான். அவன் தன் வில்லை வெளியே எடுத்திருந்தான். அவனுடைய தடுமாற்றமற்ற விரல்களுக்கு இடையே ஓர் அம்பு ஒளிவீசியது. கண்ணுக்குப் புலப்படாத தன் எதிரியின் ஒரே ஓர் அசைவிற்காகக் கர்ணன் காத்திருந்தான். தான் அங்கிருந்து போவதற்கு முன் தன் எதிரியின் கதையை முடித்துவிடுவதில் அவன் உறுதியாக இருந்தான். ஆனால் ஓர் இலைகூட அசையவில்லை. ஆனாலும் தன் எதிரிகள் தனக்கு மிக அருகில்தான் இருந்தனர் என்று அவன் உறுதியாக நம்பினான். அவர்கள் தன்னைச் சூழ்ந்திருந்ததையும், அவர்களுடைய கண்கள் தன் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டிருந்ததையும் அவனால் உணர முடிந்தது. அவன் இப்போது எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் திறந்த வெளியில் இருந்தான். அவனுடைய கவசம் அவனைக் காப்பாற்றியிருந்தது, ஆனால் வெகு விரைவில் தன் எதிரிகள் தன் முகத்திற்குக் குறி வைத்துத் தாக்கக்கூடும் என்று அவன் எதிர்பார்த்தான். அக்கணத்தில் இன்னோர் அம்பு அவனுடைய காதுக்கு மிக அருகில் பாய்ந்து சென்றது. அந்த அம்பு வேறொரு கோணத்திலிருந்து வந்திருந்தது. இன்னோர் அம்பு தன் தொண்டையைத் துளைப்பதற்கு அங்கு காத்திருப்பது முட்டாள்தனம் என்பதை அவன் உணர்ந்தான்.

கர்ணன் தன் குதிரையை வேகமாகத் திருப்பி அங்கிருந்து விரைந்தான். திடீரென்று, அம்புகள் சரமாரியாகப் பாய்ந்து வரத் துவங்கின. காய்ந்த புதர்களுக்கிடையே அவன் குனிந்தும் வளைந்தும் சென்றான், பெரிய பாறைகளைத் தாண்டிச் சென்றான், தண்ணீர்க் குட்டைகளின் ஊடாகத் தன் குதிரையை விரட்டினான். சூரியன் ஒரு நெருப்புப் பந்தைப்போல அவனுடைய தலைக்கு மேலே சுட்டெரித்தான். கர்ணன் பிரார்த்தித்துக் கொண்டே அந்தப் புனித நதியின் ஊடாக வேகம் பிடித்தான். இன்னோர் அம்பு தன்னைத் துளைப்பதற்கு முன்பாக, அவன் ஒரு மறைவிடத்தைக் கண்டுபிடித்துத் திருப்பிச் சண்டையிட வேண்டியிருந்தது. அவன் ஒரு முட்புதரைத் தாண்டிக் குதித்தபோது தன் தலையைத் திருப்பினான். அப்போது அவன் அவர்களைத் தெளிவாகப் பார்த்தான். நான்கு வீரர்கள் அவனை

வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தனர். கர்ணன் மீண்டும் தன் வில்லை எடுத்து, தன் குதிரையின் வேகத்தைக் குறைக்காமல் அவர்களை நோக்கி ஓர் அம்பை எய்தான். அந்த நால்வரில் முன்னணியில் வந்து கொண்டிருந்தவனின் தலையை அவன் குறி பார்த்திருந்தான், ஆனால் அந்த வீரன் சுலபமாகக் குனிந்து அதிலிருந்து தப்பித்து, தொடர்ந்து கர்ணனை வேகமாகத் துரத்தினான். இன்னோர் அம்பு கர்ணின் கவசத்தைத் தாக்கி, கிட்டத்தட்ட அதைத் துளைத்தது. தான் ஓர் அனுகூலமற்ற நிலையில் இருந்ததைக் கர்ணன் அறிந்தான். தன் ஒருவனால் அந்த நான்கு பேரைச் சமாளிப்பது கடினம் என்பதை உணர்ந்த அவன், அவர்களிடமிருந்து வேகமாகத் தப்பியோடிக் கொண்டிருந்தான். அவர்கள் அவனுக்குப் பின்னால் இருந்ததால், தன் உடலைத் திருப்பி அவர்களைக் குறி பார்ப்பதற்கு அவன் சில பொன்னான நொடிகளை இழக்க வேண்டியதாயிற்று. இப்போது கண்மூடித்தனமான துணிச்சலுடன் செயல்படுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

கர்ணன் திடீரென்று தன் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து, அதை நிறுத்தினான். கண்ணிமைக்கும் நேரத்தில் கீழே குதித்து, அவன் தன் எதிரிகளை நோக்கி ஓர் அம்பை எய்தான். அது ஒரு வீரனின் கண்ணைத் துளைத்தது, அவன் தன் குதிரையின்மீது இருந்து கீழே விழுந்தான். ஆனால் மற்ற மூவரும் அவனைக் கண்டுகொள்ளாமல், தொடர்ந்து கர்ணனை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஏராளமான யுத்தங்களைப் பார்த்திருந்ததால், மரணத்தை பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் தன்னை நெருங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட கர்ணன், தன்னுள் அதிகரித்துக் கொண்டிருந்த பீதியை மறைக்க முயன்று, அடுத்த அம்பை எய்தான். இம்முறை அது ஒரு வீரனின் வலது கையைத் தாக்கியது. ஆனால் அந்த வீரன் ஒரு மோசமான வார்த்தையை முணுமுணுத்துவிட்டு, தன் காயத்தைக்கூடப் பார்க்காமல், அந்த அம்பைத் தன் சதையிலிருந்து பிடுங்கி எறிந்தான். தலைமை வீரன் எய்த ஓர் அம்பு, கர்ணனின் கதையைக் கிட்டத்தட்ட முடித்திருந்தது. அது அவனுடைய தொண்டைக்கு வெகு அருகே சென்று மயிரிழையில் அதைத் தவறவிட்டது. ஆனால் அது அவனுக்குப் பின்னால் இருந்த அவனுடைய குதிரையின் வயிற்றைத் துளைத்தது. அக்குதிரை, வலி தாளாமல் பெருங்குரலெடுத்துக் கனைத்துவிட்டு, காட்டுத்தனமாக நடந்து கொள்ளத் துவங்கியது.

வசமாக மாட்டிக் கொண்ட கர்ணனை அந்த வீரர்கள் நெருங்கியபோது, அவர்கள் தங்கள் வில்களையும் அம்புகளையும் வைத்துவிட்டு, தங்களுடைய பளபளப்பான வாள்களை உருவினர்.

கர்ணன் அவர்கள்மீது அம்புகளைச் சரமாரியாக எறிந்தான். அவை பல முறை அவர்களைத் தாக்கின. ஆனால் அவற்றில் ஒன்றுகூட அவர்களைக் கொல்லவோ அல்லது அவர்களுடைய வேகத்தைக் குறைக்கப் போதுமானதாகவோ இருக்கவில்லை. இறுதியில், கர்ணன் தன் வில்லையும் அம்பையும் வீசி எறிந்துவிட்டு, தன்னுடைய இடுப்பைச் சுற்றித் துழாவினான். தலைமை வீரன் ஆபத்தான முறையில் தன்னை நெருங்கிக் கொண்டிருந்ததைக் கர்ணனால் பார்க்க முடிந்தது. கர்ணன் பதற்றத்தோடு தன் வாளை உருவ முயற்சித்துக் கொண்டிருந்தான். அவனுடைய குதிரை கீழே விழுந்து வேதனையில் அங்குமிங்கும் எட்டி உதைத்துக் கொண்டிருந்தது. சரியான நேரத்தில் கர்ணன் தன் வாளை உருவி, சில அங்குல இடைவெளிகளில் தன் மரணத்தைத் தடுத்தான். களைப்பில் மூச்சு வாங்கிக் கொண்டிருந்த அவன்மீது, வாள்களின் உரசல்களில் இருந்து எழுந்த தீப்பொறிகள் தெறித்தன.

மீதமிருந்த மூன்று வீரர்களும் தங்கள் குதிரைகளின்மீது அமர்ந்தபடி கர்ணனைச் சுற்றி வளைத்தபோது, தலைமை வீரன் கர்ணனைப் பார்த்துப் புன்னகைத்தான். பல போர்களில் பங்கு கொண்டு கைதேர்ந்த வீரர்களாக ஆகியிருந்த அவர்களுக்கு, கர்ணனின் மடத்தனமான துணிச்சலுடன்கூடிய எதிர்ப்பு சுவாரசியமூட்டுவதாக இருந்தது. அவர்கள் தங்கள் குதிரைகளின்மீதிருந்து கீழே குதித்து, சண்டைக்குத் தயாராக நின்றனர். அவர்கள் தங்கள் வாள்களை மென்மையாகச் சுழற்றியபடி, கர்ணனுக்குக் கோபமூட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் அவனைப் பல நாட்களாகப் பின்தொடர்ந்து வந்திருந்தனர். இத்தனை நாட்களாகச் சண்டை எதுவும் நிகழாமல் இருந்தது அவர்களுக்குச் சலிப்பூட்டியிருந்தது. கர்ணன் அஸ்தினாபுரத்தைச் சென்றடைவதற்கு இன்னும் ஒரே ஒரு நாள் பயணம் மட்டுமே மிச்சமிருந்தது. கர்ணனின் சாகசத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, ஆள் நடமாட்டம் இல்லாத இப்பகுதியை அவர்கள் தேர்ந்தெடுத்தனர். இன்னும் சிறிது தூரம் சென்றால், இரு பக்கங்களிலும் கிராமங்களுடனும் சிறுநகரங்களுடனும், அஸ்தினாபுரத்திற்கு இட்டுச் சென்ற நெடுஞ்சாலை வந்துவிடும். இந்தக் குற்றத்தைத் தங்கள் எஜமானனுடன் தொடர்புபடுத்துவதற்கு எந்தச் சாட்சியும் இல்லாதவாறு இந்த இறுமாப்புக்கார இளைஞனை அவர்கள் தீர்த்துக்கட்ட வேண்டியிருந்தது. இந்த வேலையைக் கச்சிதமாக முடித்துவிட்டுத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்லும்போது, போதையூட்டிய நாட்டுச் சரக்கையும் அழகான பெண்களையும் வழங்கிய விடுதிகள் தங்களுக்காகக் காத்திருக்கும் என்பதை அறிந்திருந்த தலைமை வீரன், கர்ணனைத் தீர்த்துக்கட்டுமாறு தன் சக வீரன் ஒருவனுக்குச் சைகை காட்டினான்.

கர்ணனைக் கொலை செய்யத் தன் இடத்தைவிட்டு நகர்ந்த வீரன் ஆணவக்காரனாகவும் தன் திறமையின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவனாகவும் இருந்தான். பல போர்களில் பங்கெடுத்திருந்த தன்னைப் போன்ற ஓர் அனுபவசாலியிடம், அப்போதுதான் பருவ வயதைக் கடந்திருந்த ஒரு கத்துக்குட்டியால் என்ன செய்துவிட முடியும் என்று அவன் அகங்காரத்தோடு நினைத்தான். ஆனால் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்த கர்ணனின் திறமையையோ அல்லது கடுமையையோ அவன் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கவில்லை. ஒருசில நொடிகளில், மூலையோடு மூலையாக ஒடுக்கப்பட்ட ஒரு விலங்கைப்போலச் சண்டையிட்ட அந்தத் தேரோட்டியின் வாள் அந்த வீரனின் உடலில் ஏற்படுத்தியிருந்த எண்ணற்றக் காயங்களிலிருந்து ரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. விஷயங்கள் கர்ணனைத் தாக்க வந்த வீரர்களுக்குச் சாதகமாக இருந்ததுபோலத் தோன்றவில்லை. மூன்று வீரர்கள் சேர்ந்து ஓர் இளைஞனை ஒன்றாகத் தாக்கியதைப் பார்ப்பதற்கு அங்கு யாரும் இருக்கவில்லை என்பதால், கர்ணனை ஒரு மூலையில் ஒடுக்குவதற்காக, அந்தத் தலைமை வீரன் அங்கிருந்து வஞ்சகமாக நழுவி, கர்ணனின் பின்பக்கமாக வந்து தாக்குமாறு தன் சக வீரர்களுக்குச் சைகை காட்டினான். அவனுடைய முதுகில் ஒரு வாளை ஆழமாக இறக்குவதுதான் அந்த இறுமாப்புக்காரனுக்குத் தகுதியான ஒரே விஷயம் என்று அவன் நினைத்தான். ஆனால் அது அவன் திட்டமிட்டிருந்தபடி நடக்கவில்லை. மாறாக, அவன் தன் வாளைப் பயன்படுத்துவதற்கு முன்பாகவே கர்ணன் அவனுடைய முழங்காலில் விட்ட ஒரு பலமான உதையில், அவன் துள்ளிப் போய் நிலத்தில் மல்லாக்க விழுந்தான்.

“என்னை ஏன் தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நான் உங்களுக்கு என்ன தவறிழைத்தேன்?” என்று கர்ணன் கோபத்தில் கத்தினான். “என் கண்முன்னாலிருந்து ஓடிப் போய்விடுங்கள்! நான் உங்களைக் கொல்லும்படி செய்துவிடாதீர்கள். இறந்து போன உங்கள் நண்பனைக் குறித்து நான் வருந்துகிறேன்.”

அந்த வீரர்கள் ஆச்சரியத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுடைய தோழனின் மரணம் அவர்கள் யாரையும் பாதித்திருக்கவே இல்லை. மரணம்தான் ஒரு வீரனின் இணை பிரியாத தோழன். ஆனால் தங்கள் எல்லோரையும் கொல்லப் போவதாக ஒரு தேரோட்டி சாதிக்காரன் தங்கள் முகங்களுக்கு நேராகத் துணிச்சலாகக் கூறியதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. “இந்த விளையாட்டுக்கள் போதும். இந்தக் கயவனுக்கு நாம் ஒரு பாடம்

புகட்டலாம்,” என்று அந்தத் தலைமை வீரன் தன் சகாக்களைப் பார்த்துக் கத்தினன்.

அந்த மூன்று வீரர்களும், உருவப்பட்ட வாள்களுடன், கர்ணனின் தாழ்ந்த சாதியைப் பற்றித் தூற்றிக் கொண்டும் அவனைக் கோபப்படுத்திக் கொண்டும் அவனை நோக்கி விரைந்தனர். ஆனால் கர்ணனின் வலது கையில் இருந்த பளபளப்பான, நாடா போன்ற ஓர் ஆயுதத்தைக் கண்டு வியந்து, அவர்கள் திடீரென்று நின்றனர். அவர்கள் அது போன்ற ஒன்றை அதற்கு முன்பு ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. அது ஒரு பாம்பைப்போல நெளிந்தது.

“முட்டாளே, அது என்ன? உன் தாயின் நாடாவா?” என்று அந்தத் தலைமை வீரன் கிண்டலாகக் கேட்டான். மற்றவர்கள் உரக்கச் சிரித்தனர். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த உறுமி வாள் அந்தத் தலைமை வீரனின் கழுத்தைச் சுற்றி வளைத்தபோது, அவர்களுடைய பரிகாசம் உடனடியாக நின்றது. அந்தத் தலைமை வீரனின் முகம் பேயறைந்தாற்போல வெளிறிப் போனது. கர்ணன் கையிலிருந்த ஆயுதம் என்னவென்று அவனுக்கு இப்போது புரிந்தது. அவன் அந்த ஆயுதத்தை அதற்கு முன்பு ஒருபோதும் பார்த்திருக்கவில்லை, ஆனால் அசுர சாம்ராஜ்யத்திற்குப் பயணித்திருந்த மக்களிடமிருந்து அதைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். அந்தத் தீய ஆயுதம் தனக்கென்று ஒரு மனத்தைக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. அதன் கூர்மை தன் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்ததை அந்த வீரனால் உணர முடிந்தது.

“என்னை என் வழியில் போக விட்டுவிடுங்கள். நான் உங்கள் யாரையும் தாக்க மாட்டேன்,” என்று கர்ணன் மீண்டும் கெஞ்சினான்.

அந்தத் தேரோட்டியின் வேண்டுகோளில் இருந்த அறிவுப்பூர்வமான தர்க்கம் அந்தத் தலைமை வீரனுக்குப் புரிந்தது. ஆனால் அவன் தன் வாயைத் திறந்து எதுவும் கூறுவதற்கு முன்பாக, முட்டாள்தனமான அவனுடைய தோழர்கள் தங்கள் வாள்களுடன் கர்ணனை நோக்கி விரைந்தனர். “வேண்டாம்!” என்ற அவனுடைய அலறல் முற்றுப் பெறவே இல்லை. சரஸ்வதி நதியின் புனிதமான ஆற்றுப்படுகை, நாகரீகம் துவங்கிய நாள் முதலாகவே ரத்தத்தால் குளிப்பாட்டப்பட்டு வந்திருந்தது. அந்தத் தலைமை வீரனின் துண்டிக்கப்பட்டத் தலை அந்நதியின் ரத்தம் தோய்ந்த பொக்கிஷங்களுடன் இன்னொரு பொக்கிஷமாகச் சேர்ந்து கொண்டது. மற்ற இரண்டு வீரர்களும் விரைவில் அதே முடிவைச் சந்தித்தனர். இது எல்லாமே, உண்மையில் எதுவும் துவங்குவதற்கு முன்பாகவே முடிந்துவிட்டிருந்தது.

ஒருசில அக்கறையற்றக் காகங்கள், வறண்டு போய்க் கொண்டிருந்த

ஓர் ஆறு, சில பரிதாபகரமான புதர்கள் மட்டுமே ஒரே சாட்சியங்களாக இருந்தன. தான் கொன்றிருந்த உயிர்களைப் பற்றிக் குற்றவுணர்வு கொண்டவாறு, அந்த வறண்ட ஆற்றுப்படுகையின்மீது நீண்டநேரம் உட்கார்ந்திருந்த அந்தப் பைத்தியக்காரத் தேரோட்டியின் செயலை ஒருவரால் வேறு எப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும்? காயப்பட்டிருந்த தன் குதிரையின் இதயத்திற்குள் தன் வாளைச் செருகி அதன் துயரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதிலாக, எந்த முட்டாள் இரண்டு நாட்கள் அந்தப் பாலைவனத்தில் காத்திருந்து, தன் குதிரையின் காயங்களுக்குச் சிகிச்சையளித்தான்? உண்மையான வீரன் என்றால் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் தன் குதிரையைக் கொன்றிருப்பான். இறுதியில் அக்குதிரை இறந்தபோது, சுட்டெரிக்கும் வெயிலின்கீழே எந்த வீரன் அதை முறையாகப் புதைத்தான்? கொல்லப்பட்டத் தன் எதிரிகளை நரிகளுக்கும் ஓநாய்களுக்கும் பிணந்தின்னிக் கழுகுகளுக்கும் விருந்தாகட்டும் என்று விட்டுவிடுவதற்குப் பதிலாக, அவர்களை முறையாகத் தகனம் செய்வதற்கு எந்தச் சத்திரியன் மரக்கட்டைகளைத் தேடி அலைந்தான்? தர்மத்தின் அடிப்படைகளை அந்தத் தேரோட்டி அறிந்திருக்கவில்லை என்பது வெட்கத்திற்குரிய விஷயம். ஒரு வீரன் என்ற முறையில், கொல்வதுதான் அவனுடைய தர்மமே அன்றி, அதன் பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படுவது அல்ல. அவன் அதைக் கற்றுக் கொள்ளும்வரை, அவனால் ஒருபோதும் ஒரு சத்திரியனாக ஆக முடியாது.

இப்படிப்பட்ட முட்டாள்தனமான செயல்கள் கர்ணனை மேலும் இரண்டு நாட்கள் தாமதப்படுத்தின. அவனைத் தாக்க வந்திருந்தவர்களின் குதிரைகள் எங்கோ தப்பி ஓடியிருந்தன. அவன் தன் எஞ்சிய வழி முழுவதையும் நடந்தே கடக்க வேண்டியிருந்தது. தன் முதல் கொலைகளுக்கு பிறகு மூன்றாவது நாளன்று, தான் எதிர்கொண்ட ஆபத்தைப் பற்றி முழுதும் அறியாதவனாக, கர்ணன், அஸ்தினாபுரத்தை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான். அஸ்தினாபுரம் தன் இரைக்காகக் காத்திருந்தது. அஸ்தினாபுரத்தின் சந்துகள், பயணியர் விடுதிகள், முக்கியமான சந்திப்புகள், கடைகள், நூற்றுக்கணக்கான மக்கள் சந்தித்த இடங்கள் போன்ற பல இடங்களில் ஆபத்து அவனுக்காகக் காத்திருந்தது. அந்த இறுமாப்புக்காரத் தேரோட்டியின் தலைவிதியைப் பற்றி மட்டுமே அவர்கள் அனைவரும் பேசினர். விதுரன், துர்ஜயன், தௌமியன் ஆகியோரின் ஆட்கள், நகருக்குள் வந்து கொண்டிருந்த புதிய நபர்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் கூர்ந்து ஆராய்ந்தனர். கர்ணனின் உருவம் என்று தாங்கள் அனுமானித்திருந்த

ஒரு படத்தோடு அவர்கள் அந்த முகங்கள் ஒவ்வொன்றையும் ரகசியமாக ஒப்பிட்டுப் பார்த்தனர். உற்சாகமான இளைஞர்கள் பலர், அவன் தலைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த விலையால் கவரப்பட்டு, பல குழுக்களாக உருவாகி, இரவில் தெருக்களில் வலம் வந்தனர். தங்கள் வழியில் எதிர்ப்பட்ட ஒவ்வோர் அன்னியனையும் நிறுத்தி, அவனைக் குறித்துக் கேள்விகள் கேட்டனர். தேரோட்டியான அதிரதன் தன் இளம்பருவத்தில் எப்படித் தோன்றியிருப்பானோ, அப்படிப்பட்ட உருவத்தைக் கொண்ட ஒருவனுக்காக அவர்கள் அனைவரும் காத்திருந்தனர். கர்ணன் நள்ளிரவில்தான் அந்நகருக்குள் ரகசியமாக நுழைய முயற்சிப்பான் என்று அவர்கள் உறுதியாக நம்பினர்.

அந்த பிரம்மாண்டமான பட்டமளிப்பு விழாவிற்கு முந்தைய நாள் மாலையில், இளவரசர்களின் ஆடம்பர அணிவகுப்பு அஸ்தினாபுரத் தெருக்களை ஒளிரச் செய்தபோது, கர்ணன் எந்தத் தடையுமின்றி அந்நகருக்குள் நுழைந்தான். காதுகளைப் பிளக்கும் அளவுக்குச் சத்தமாக முழங்கப்பட்ட மேளங்கள் மற்றும் கொம்புகளின் தாளங்களுக்கு ஏற்றவாறு மக்கள் கூட்டங்கூட்டமாக நடனமாடிக் கொண்டிருந்தனர். நன்றாகக் குடித்திருந்த ஆண்கள் நடைபாதைகளின்மீது ஒருவர்மீது ஒருவர் மோதி விழுந்தனர். வீதிகளில் நிகழ்ந்து கொண்டிருந்த கொண்டாட்டங்கள் ஒவ்வொரு கண்ணையும் கவர்ந்திழுத்தன. தெருக்களில் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டாட்டங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நகர வாசலில் தங்கள் சலிப்பூட்டும் வேலையைச் செய்ய வேண்டியிருந்தது குறித்து எரிச்சலடைந்திருந்த இரண்டு காவலர்கள், கர்ணனை வழக்கமான சோதனைக்காக நிறுத்தினர். அவர்கள் அவனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்து, எல்லோராலும் தேடப்பட்டுக் கொண்டிருந்தவனின் படத்துடன் அதை ஒப்பிட்டனர். அவ்விரு உருவங்களுக்கும் இடையே எந்த ஒற்றுமையும் இருக்கவில்லை. எனவே அவர்கள் தங்கள் வழக்கமான கைக்கூலியை வாங்கிக் கொண்டு, மீண்டும் நிமிர்ந்துகூடப் பார்க்காமல் அவனை நகருக்குள் அனுமதித்தனர்.

நகர வாசலைக் கடந்து வந்த கர்ணன், அங்கிருந்த பயணியர் விடுதிக்குள் நுழைந்து, அங்கு நிகழ்ந்த வம்புப்பேச்சைக் கவனித்தபோதுதான், தன்னை எல்லோரும் வலை வீசித் தேடிக் கொண்டிருந்ததையும், தன் தலைக்கு ஒரு மிகப் பெரிய விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பதையும் இறுதியில் புரிந்து கொண்டான். அதிர்ஷ்டவசமாக, யாரும் அவனை அடையாளம் காணவில்லை. ஆனால், தன் குழந்தைப்பருவத்தில் தனக்குப் பழக்கமானவர்கள் யாரையேனும் எந்த நேரத்திலும் தான் எதிர்கொள்ளக்கூடும் என்பதை

அவன் அறிந்திருந்தான். அவனுடைய பசி, வந்த வேகத்தில் ஓடி ஒளிந்து கொண்டது. அவனுக்கு வயிற்றைப் புரட்டியது. அவனுடைய தலை கிறுகிறுத்தது. வாழையிலையில் தனக்குப் பரிமாறப்பட்டிருந்த உணவை அவனால் தொடக்கூட முடியவில்லை. அவன் தன் உணவுக்குப் பணம் செலுத்திவிட்டு, இலையை மடக்கினான். உணவை அப்படியே இலையில் விட்டுவிட்டு வருவதை அவன் விரும்பவில்லை. அது யாருக்கேனும் சந்தேகத்தை ஏற்படுத்திவிடக்கூடும் என்று அவன் பயந்தான். எனவே, உணவைத் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்ற பல வாடிக்கையாளர்களைப்போல, அவனும் தன் இலையைக் கையில் எடுத்துக் கொண்டு அங்கிருந்து நிதானமாக வெளியே நடந்தான்.

அன்றிரவு அவன் எங்கேனும் ஒளிந்து கொள்ள வேண்டியிருந்தது. அடுத்த நாள், எப்படியாவது விழா அரங்கிற்குள் நுழைந்து, இளவரசர்களுக்குத் தான் சவால்விட வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். ஒருவேளை, தன் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் தன்னை அனுமதிக்காமல் போகக்கூடும் என்றும், தான் அந்த அரங்கிற்குள் நுழைவதற்கு முன்பாகவே அவர்கள் தன்னைக் கைது செய்யக்கூடும் அல்லது கொல்லக்கூடும் என்றும் அவன் நினைத்தான். அல்லது, தன் திறமைகளை வெளிப்படுத்துவதற்குத் தனக்கு ஒருசில கணங்கள் மட்டுமே கொடுக்கப்படக்கூடும் என்ற எண்ணமும் அவனுடைய மனத்தில் எழுந்தது. தன் சாதி தன் லட்சியத்தின் வழியில் நிற்க அவன் அனுமதிக்காததால், ஒட்டுமொத்த பரதகண்டமும் அவனைத் தேடிக் கொண்டிருந்தது. இந்தப் புனித பூமி எந்தச் சம்பிரதாயங்களைப் புனிதமானவையாகக் கருதியதோ, அவற்றை அவன் அலட்சியப்படுத்தியிருந்தான். தான் அதற்கான விலையைக் கொடுக்கத்தான் போகிறோம் என்று அவன் உறுதியாக நம்பினான். “சிவபெருமானே, இன்னும் ஒரே ஒரு நாள் என்னை வாழவிடு. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் வாய்ப்பில் பாதி வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் ஒரு தேரோட்டியால்கூட என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதை என் மக்களுக்கு நான் காட்ட விரும்புகிறேன்,” என்று கர்ணன் பிரார்த்தனை செய்தான்.

கர்ணன் தன் உணவை ஒரு குப்பைத் தொட்டிக்குள் வீசியெறியவிருந்த நேரத்தில், ஒரு மரத்தின் அடியில் ஒரு பிச்சைக்காரன் உட்காந்திருந்ததைப் பார்த்தான். ஒரு நாய் அந்தப் பிச்சைக்காரனின் மடிமீது தலை வைத்துப் படுத்திருந்தது. கர்ணன் அந்த மரத்தை நோக்கி நடந்து சென்று, தன் கையிலிருந்த உணவை அவன் முன்னால் வைத்தான். அந்தப் பிச்சைக்காரன் நன்றியுடன் கர்ணனைப் பார்த்துப் புன்னகைத்தான். அவன் கண்களில் தென்பட்ட ஏதோ ஒன்று கர்ணனின்

இதயத்தைத் தொட்டது.

அந்தப் பிச்சைக்காரன் தன் கைகளை ஒன்றாகக் குவித்துக் கர்ணனைப் பார்த்து வணங்கிவிட்டு, "ஐயா, நீங்கள் பரிவானவர். எங்கள் பசிக்கு நீங்கள் உணவளித்திருக்கிறீர்கள். எனக்கு உணவு கொண்டு வந்துள்ள நீங்கள்தான் என் கிருஷ்ணன்," என்று கூறினான்.

கிருஷ்ணனின் பெயரைக் கேட்டவுடன் கர்ணனின் உடல் முழுதும் நடுங்கியது. அவனுடைய பயம் திரும்ப வந்தது. தான் எல்லோராலும் தேடப்பட்டுக் கொண்டிருந்த ஒரு குற்றவாளி என்பது இந்தப் பிச்சைக்காரனுக்குத் தெரிந்துவிட்டதா என்று கர்ணன் பயந்தான். காவலர்கள் ஒருவேளை இவனிடம் தன்னைப் பற்றிக் கேட்டால், இவனால் தன் முகத்தை நினைவுகூர முடியும் என்ற எண்ணம் கர்ணனுக்குக் கிலி ஏற்படுத்தியது. அவன் அங்கிருந்து விரைவாகச் சென்றாக வேண்டியிருந்தது.

"ஐயா, நீங்கள் எனக்கு இரண்டாவது முறையாக உணவு கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த நகருக்குள் நுழைந்து கொண்டிருந்ததை நான் பார்த்தக் கணத்தில் நான் உங்களை அடையாளம் கண்டுகொண்டேன். இவர்கள் எல்லோரும் தவறான முகத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். உங்கள் தாயாரின் ருசியான சமையலை என்னால் எவ்வாறு மறக்க முடியும்? நான் சிறுவனாக இருந்தபோது, என் நண்பனுடன் உங்கள் வீட்டிற்கு வந்தேன். தட்சகனை நீங்கள் துணிச்சலாகத் தடுத்து நிறுத்திய இரவன்றுதான் அது நிகழ்ந்தது. ஐயா, உங்களுக்கு என்னை நினைவிருக்கிறதா?"

கர்ணனுக்கு இப்போது அவன் நினைவுக்கு வந்தான். பிரதம மந்திரி விதுரனுடன் அன்றிரவு தன் வீட்டிற்கு வந்திருந்த அதே தீண்டத்தகாத சிறுவன்தான் இவன். 'அடக் கடவுளே, இவனுக்கு என்னைத் தெரிந்திருக்கிறது! என் முடிவு நெருங்கிவிட்டது!' என்று கர்ணன் நினைத்தான். பத்தாயிரம் தங்க நாணயங்கள் இந்தப் பிச்சைக்காரனைத் தன் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பணக்காரனாக ஆக்கிவிடும். தான் அவனுக்கு உணவு கொடுத்ததை நினைத்துக் கர்ணன் தன்னைத் தானே நொந்து கொண்டான். அப்போது ஒருசில காவலர்கள் அந்த உணவு விடுதிக்கு வந்து, ஒவ்வொரு பயணியையும் சோதித்துக் கொண்டிருந்தனர். தான் அங்கிருந்து ஓட வேண்டுமா அல்லது அங்கேயே இருக்க வேண்டுமா என்று தீர்மானிக்க முடியாதவனாக, அவர்கள் தன்னை அடையாளம் காண மாட்டார்கள் என்ற நம்பிக்கையற்ற நம்பிக்கையுடன் கர்ணன் ஆதரவற்று நின்றான்.

"ஐயா, பயப்படாதீர்கள். பகவான் கிருஷ்ணன் எப்போதும் உங்களுடன் இருப்பான். என்னை நம்பி இந்த மரத்தின்மீது ஏறிக்

கொள்ளுங்கள். உங்களால் உள்ளே ஒளிந்து கொள்ள முடியும் அளவுக்கு இம்மரத்தின் மேலே ஒரு பெரிய பொந்து இருக்கிறது. இப்போது வேகமாக மேலே ஏறுங்கள்," என்று ஜரன் ஒரு கிசுகிசுப்பான குரலில் வலியுறுத்தினான்.

கர்ணன் அம்மரத்தின் மறுபக்கத்திற்கு ஓடிச் சென்று, அவசர அவசரமாக மேலே ஏறினான். அவனுடைய இதயம் கிட்டத்தட்ட அவனுடைய வாய்க்கு வந்துவிட்டது. அவர்கள் ஏன் தன்னை ஒரு குற்றவாளியைப்போலத் துரத்திக் கொண்டிருந்தனர் என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, அவன் அந்தப் பொந்திற்குள் நுழைந்து, தன் மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான். கீழே இருந்த நாய் குரைத்தது. அந்த அடர்த்தியான மர உச்சயின் வழியாகக் கர்ணன் கீழே எட்டிப் பார்த்தான். ஓரிரு காவலர்கள் அந்தப் பிச்சைக்காரனிடம் வந்து, ஒரு துணி ஓவியத்தை அவன் முகத்தின்மீது அழுத்தினர். ஜரன் ஏதோ முணுமுணுத்தான். அவர்கள் தங்கள் தடிகளால் அவனை அடிக்கத் துவங்கினர். தர்மனின் குரைப்பையும் அந்தப் பிச்சைக்காரனின் முனகலையும் கேட்டு அங்கு வந்த மக்கள், அவர்களைப் பார்த்து முறைத்துவிட்டு, அங்கிருந்து வேகவேகமாகச் சென்றனர். அந்தப் பிச்சைக்காரனை அடிப்பதிலிருந்து அந்தக் காவலர்களைத் தடுத்து நிறுத்தாதது குறித்துக் கர்ணனுக்குத் தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. 'பட்டமளிப்பு நாள்வரை நான் உயிரோடு இருந்தாக வேண்டும்,' என்று அவன் தனக்குத் தானே மீண்டும் மீண்டும் நினைவூட்டிக் கொண்டான். அந்தக் காவலர்கள் இறுதியில் அங்கிருந்து சென்றபோது, அந்த நாயை எட்டி உதைத்ததில், அது ஓர் ஓரமாகச் சென்று விழுந்து, வலியில் முனகிக் கொண்டு அங்கேயே கிடந்தது. கர்ணன் மீண்டும் மூச்சுவிடத் துவங்கியபோது, ஜரன் கிருஷ்ணனின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

தன் உணவை அவனுக்குக் கொடுத்தது குறித்துச் சிறிது நேரத்திற்கு முன்பு கர்ணன் பெருமைப்பட்டிருந்தான். அந்தப் பிச்சைக்காரனின் நன்றியுணர்வு, கர்ணனைப் பெரியவனாகவும் முக்கியமானவனாகவும் உணரச் செய்திருந்தது. ஆனால் ஜரன் இப்போது கர்ணனுக்குச் செய்திருந்தது, கர்ணனைச் சிறியவனாக உணரச் செய்தது. அவன் வெறுமனே ஒரே ஒரு விரலை மேலே உயர்த்திக் காட்டி, தான் அங்கு இருந்ததை அந்தக் காவலர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தால், அந்தப் பிச்சைக்காரனின் தலையெழுத்தே மாறியிருக்கும். ஆனால் அவன் அவ்வாறு செய்யாமல், இவ்வளவு பெரிய வெகுமதியை விட்டுக்கொடுக்கும் அளவுக்கு எது அவனைத் தூண்டியிருக்கக்கூடும் என்று கர்ணன் வியந்தான். அவனுக்குக் கிடைத்திருந்த சிறிதளவு

சோறா, அல்லது களைத்துப் போயிருந்த கர்ணனின் மனத்தால் புரிந்து கொள்ள முடியாத, விளக்கப்பட முடியாத ஏதோ ஒன்றா?

இரவு செல்லச் செல்ல, வீதிகளில் கூட்டம் குறைந்தது. பயணியர் விடுதியின் கதவுகள் மூடப்பட்டன. வானில் கோடிக்கணக்கான விண்மீன்கள் வெடித்திருந்தன. ஜரன் ஒரு பாடலை முணுமுணுத்தான். அவனுடைய நாய் தன் முனகலை நிறுத்திவிட்டு, அவனுக்கு அருகே சென்று படுத்தது. ஜரனின் சொறி பிடித்தக் கை, அதன் தலையை அன்பாக வருடிக் கொடுத்தது. அந்த இரவு ஏதோ ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல மிகவும் அமைதியாக இருந்தது. ஜரன் ஒரு மகிழ்ச்சியான பாடலைப் பாடத் துவங்கினான். ஓர் இனிமையான தென்றல், அங்கிருந்த மரங்களின் இலைகளுக்குச் சிலிர்ப்பூட்டியது. ஒரு மென்மையான பனிமூட்டத்தைப் போன்ற அமைதி தன்னுள் எழுந்ததைக் கர்ணன் உணர்ந்தான். வாழ்க்கையை மிகவும் அழகானதாக ஆக்கிய கடவுளின் கருணை மற்றும் பரிவைப் பற்றியும், அந்த வாழ்க்கையை சொர்க்கமயமானதாக ஆக்கிய மனிதர்களின் பரிவைப் பற்றியும் ஜரன் பாடியபோது, ஒரு கனவற்றத் தூக்கம் கர்ணனைத் தழுவிக் கொண்டது.

18

பட்டமளிப்பு விழா

துரோணர் அரசவைக்குள் நுழைந்தபோது, ஒட்டுமொத்த அவையும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியது. தன் தந்தையுடன் வந்த அசுவத்தாமன் உடனடியாக துரியோதனை நோக்கிச் சென்றபோது, துரோணர் உள்ளுக்குள் சீறினார். பிறகு அவர் குந்தியிடம் நடந்து சென்றார். அவள் தன் கைகளைக் குவித்து அவரைப் பணிவாக வணங்கினாள். அர்ச்சுனன் அவருடைய பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான். அவனுடைய மற்றச் சகோதரர்கள் குருவின் கடைக்கண் பார்வைக்காக முண்டியடித்தனர்.

தன் பாதங்களில் விழுந்து கிடந்த அர்ச்சுனனை மென்மையாகத் தொட்டுத் தூக்கிவிட்டு, துரோணர் அந்தப் பாண்டவ இளவரசனின் வசீகரமான முகத்தைப் பார்த்தார். எதிர்காலம் பாண்டவர்களுக்குச் சொந்தமானதாக இருந்தது. அதை ஏன் தன் மகனால் பார்க்க முடியவில்லை என்று அவர் வியந்தார். வெற்றி பெற்றுக் கொண்டிருந்த அணியின் பக்கம் சேர்ந்து கொள்வது புத்திசாலித்தனமான செயல். அரசவை கூடியிருந்த விதத்திலிருந்து அது தெளிவாகத் தெரிந்தது. தௌமியனின் தலைமையின்கீழ் அனைத்துப் புரோகிதர்களும் பாண்டவர்களுடன் நின்றனர். கௌரவர்கள் பக்கம் நின்று கொண்டிருந்த ஒரே பிராமணன், அந்தப் பைத்தியக்காரக் கிருபர் மட்டும்தான். அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரின் சிறப்பு அழைப்பின் பேரில் அவர் அங்கு வந்திருந்தார். தௌமியன் சில

சமயங்களில் கூறியதுபோல, பீஷ்மர் முதுமையின் அறிகுறிகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் போலும். கிருபர் அரசவைக்கு வந்திருந்ததற்கு ஒருவரால் வேறு என்ன விளக்கத்தைக் கொடுக்க முடியும்? அந்தக் கோமாளி இப்போது இந்த அரசவையில் நடந்து கொண்டிருந்த விதத்தைப் பார்த்தாலே, அவர் எப்படிப்பட்டக் கிறுக்கன் என்பது ஒருவருக்குப் புரிந்துவிடும். புத்துணர்வூட்டும் சிற்றுண்டிகளையும் பானங்களையும் அவையோருக்குக் கொடுத்துச் சேவை செய்து கொண்டிருந்த அடிமைகளுடன் அரட்டையடித்துக் கொண்டும், நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொண்டும், தன் இளநிலையாளர்களுடன் நையாண்டிப் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டும் இருந்த அவர், அரசவை குறித்தும் தங்கள் வருகையால் அதை அலங்கரித்தவர்கள் குறித்தும் எந்த மரியாதையும் இல்லாமல் நடந்து கொண்டிருந்தார். குந்திக்கு அருகில் நின்று கொண்டிருந்த பிராமணர்களுக்கு எழுந்த கோபத்தை துரோணரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. கிருபர் வெளிப்படையாகக் கட்டுப்பாடுகளை மீறிக் கொண்டிருந்தது அவர்களுடைய கோபத்தைக் கிளறியது. அவர் துரோணரைப் பார்த்தபோது, மிகச் சாதாரணமாகக் கையசைத்தார். பிறகு, நமுட்டுச் சிரிப்புடனும் பொய்யான மரியாதையுடனும் தலைவணங்கி, துரோணரைக் கேலி செய்யவும் அவர் துணிந்தார். கோபத்தில் கிருபரிடம் பொரிந்து தள்ளாமல் இருப்பதற்கு, தன்னுடைய யோகா பயிற்சிகளால் தான் கைவசப்படுத்தியிருந்த சுயகட்டுப்பாடு முழுவதும் துரோணருக்குத் தேவைப்பட்டது.

குந்தி பணிவோடு, "குருவே, பல வருடங்களுக்கு முன்பு, ஓர் ஏழை விதவை தன் மகன்களை உங்களை நம்பி ஒப்படைத்தாள். நீங்கள் அவர்களை மிகச் சிறந்த மேன்மக்களாக உருவாக்கியிருக்கிறீர்கள்," என்று கூறி, துரோணரைப் பாராட்டினாள்.

"தேவி, நல்லியல்பு மற்றும் பெருந்தன்மையின் விதைகள் அவர்களுடைய இதயங்களில் பொதிந்துள்ளன. அந்த விதைகள் வளர்வதற்கு நான் அவ்வப்போது நீரூற்றினேன், அவ்வளவுதான். இன்று, அவர்கள் நம் எல்லோரையும் பெருமைப்படுத்துகின்றனர். இவர்களைப் போன்ற மாணவர்கள் எனக்குக் கிடைத்தது என் அதிர்ஷ்டம்தான்," என்று துரோணர் நேர்த்தியாக பதிலளித்தார். பிறகு அவர் அர்ச்சுனனைத் தன்னை நோக்கி இழுத்து, புன்னகைத்துக் கொண்டிருந்த அவனைப் பெருமையோடு பார்த்தார். அவருடைய இதயத்தை எதுவோ சுண்டி இழுத்தது. தன் மகன் இவனைப்போல இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவர் ஏங்கினார். என்னவொரு பணிவு, என்னவொரு திறமை! அவன் கச்சிதத்தின்

மொத்த உருவமாக இருந்தான். அசுவத்தாமன் ஏன் புனித நூல்களில் எழுதப்பட்டிருந்த அனைத்து விஷயங்களையும் பற்றி எப்போதும் விவாதித்தான் என்றும், துரியோதனனைப் போன்ற உதவாக்கரைகளுடன் அவன் ஏன் நட்புறவாடினான் என்றும் துரோணர் வியந்தார். மறுபுறம், தௌமியனைப் போன்ற அறிவாளிகள் கூறிய எல்லாவற்றையும் எந்தக் கேள்வியும் கேட்காமல் அர்ச்சுனன் ஏற்றுக் கொண்டான். தன்னைவிடச் சிறந்தவர்கள்தான் வேதங்களையும் பிற புனித நூல்களையும் எழுதினர் என்பதையும், அவற்றைப் பின்பற்றுவது மட்டுமே தன்னுடைய கடமை என்பதையும் அறிந்து கொள்ளும் பக்குவமும் அறிவும் அவனுக்கு இருந்தது என்று துரோணர் நினைத்தார்.

"குருவே, அர்ச்சுனனை உலகிலேயே மிகச் சிறந்த வில்லாளனாக ஆக்கப் போவதாக நீங்கள் எனக்கு வாக்குறுதி அளித்தீர்கள். நம் அனைவருடைய நம்பிக்கைகளும் பிரார்த்தனைகளும் பலிக்கவிருக்கின்ற உச்சகட்ட நாள் இது. இந்த ஏழை விதவை என்றென்றைக்கும் உங்களுக்குக் கடன்பட்டிருப்பாள்."

"தேவி, உன் மகன்கள் இன்று மற்ற எல்லோரையும் விஞ்சி நிற்பார்கள் என்பதில் உனக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம். அர்ச்சுனனின் வில் திறமைக்கு சவால்விடக்கூடிய ஒருவன் இந்த பரதகண்டத்தில் எவனும் உண்டா? ஈட்டியைப் பயன்படுத்துவதில் தர்மனைவிட அதிகத் திறமையானவன் எவனும் இருக்கிறானா? வலிமையையும் திறமையையும் எவ்வாறு இணைப்பது என்பதை பீமன் காட்டுவான். பாசத்திற்குரிய அந்தக் குறும்புக்காரன், அகங்காரம் கொண்ட துரியோதனனை ஒரு முட்டாள்போலத் தோன்றச் செய்வான். தண்டாயுதத்தைப் பயன்படுத்துவதில் துரியோதனன் மோசமில்லை என்றாலும்கூட, உன்னுடைய பீமனை யாரால் வீழ்த்த முடியும்? நகுலனும் சகாதேவனும் மிகத் திறமையான வாள்வீரர்கள். அவர்களை எதிர்த்துச் சண்டையிடுவதற்கு எனக்குக்கூட பயமுண்டு. நல்ல மகன்களால் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய். நான் உனக்குக் கொடுத்த வாக்கை நான் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறேன் என்பதை இன்று நீ காண்பாய்," என்று துரோணர் கூறினார்.

பீஷ்மர் அந்த அவைக்குள் நுழைந்து, தன்னை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த இளம் முகங்களைப் பார்த்தபோது, அவருடைய இதயம் பெருமிதத்தால் விரிந்தது. இளவரசர்களின் வாழ்வில் இன்று ஒரு முக்கியமான நாள். அவர்கள் அஸ்தினாபுரத்தின் எதிர்காலப் பிரதிநிதிகள். அவருக்கு வலப்பக்கத்தில் தர்மனும் அவனுடைய சகோதரர்களும் பெருமையோடு நின்றனர். அவருக்கு இடப்பக்கத்தில், பட்டத்து இளவரசன் துரியோதனன் முன்னணி வகிக்க,

திருதராஷ்டிரனின் மகன்கள் நின்றனர். அரசனின் தனிப்பட்ட உதவியாளனும் செயலாளனுமான சஞ்சயன், அந்த அவையின் அற்புதமான காட்சியை, பார்வையற்ற இணையரான அரசனுக்கும் அரசிக்கும் விவரித்துக் கொண்டிருந்தான். குந்தியும் தௌமியனும் துரோணரும் இணைந்து நின்றனர். பீஷ்மர் அவர்களுடைய வணக்கங்களை அங்கீகரித்தார். துரியோதனன் அலட்சியத்துடனும், தன்னைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருந்த நாடகம் குறித்து அக்கறையின்றியும் நின்றதைப் பார்த்த பீஷ்மரால் புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை.

அவையின் முணுமுணுப்பு அடங்கி, அரசரையடுத்து நின்று கொண்டிருந்த பீஷ்மரை நோக்கி அனைவருடைய கண்களும் திரும்பின. அவர் அந்த அவை முழுவதும் தன் பார்வையை ஓடவிட்டுவிட்டு, உற்சாகமும் ஆற்றலும் கொப்பளித்துக் கொண்டிருந்த, பட்டம் பெறவிருந்த இளைஞர்களை நோக்கி, "என் அருமைப் பேரன்களே, இன்று உங்கள் வாழ்வில் ஒரு முக்கியமான நாள். இன்று நீங்கள் உங்கள் குழந்தைப்பருவத்தை உதறிவிட்டு, ஆண்மக்களாக ஆகிறீர்கள். குருநாதர் துரோணரின்கீழ் நீங்கள் உங்கள் பயிற்சியை நிறைவு செய்திருக்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் அவரைப் பெருமைப்படுத்தியிருக்கிறீர்கள். இன்று அஸ்தினாபுரமும் ஒட்டுமொத்த பரதகண்டமும் உங்களை நம்பிக்கையோடு பார்க்கிறது. நீங்கள்தான் நம்முடைய எதிர்காலம். நம் நாடு கடந்தகாலத்தில் பல போராட்டங்களையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ளது. ஆனால் இனி இந்நாடு எந்தப் பாதையில் செல்லும் என்பதை இளைஞர்கள்தான் தேர்ந்தெடுப்பர். நாங்கள் அனைவரும் எங்கள் மனத்தில் நன்னம்பிக்கையுடன் இங்கு கூடியிருக்கிறோம். ஒருநாள், இளவரசன் துரியோதனன் தன் தந்தையைப் பின்பற்றி, நம் பண்டைய சாம்ராஜ்யத்தின் அரசனாக ஆவான். அந்த மாபெரும் பொறுப்பைத் திறம்பட ஏற்று நடத்துவதற்குத் தேவையான அறிவை நம் குருநாதர் துரோணர் அவன் மனத்தில் ஆழமாகப் பதிய வைத்திருப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நீங்கள் அனைவரும் ஆளுனர்களாகவும் மந்திரிகளாகவும் ராணுவ அதிகாரிகளாகவும் நிர்வாகிகளாகவும் இன்னும் பலவாகவும் இந்த அரசாங்கத்தில் முக்கியமான பொறுப்புகளை வகிப்பீர்கள். அறிவுரையைச் செவிமடுக்க வெறுக்கின்ற ஒரு வயதில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அறிவுரை கொடுப்பதை மிகவும் விரும்பி ரசிக்கின்ற ஒரு வயதில் நான் இருக்கிறேன்," என்று கூறினார்.

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். பீஷ்மர் சிறிது நேரம்

மௌனம் காத்தார். பிறகு, அவருடைய கண்டிப்பான முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. "இந்தப் பட்டமளிப்பு நாள் என்பது உங்கள் படிப்பு முடிந்துவிட்டதற்கான ஓர் அடையாளம் அல்ல என்பதுதான் உங்களுக்கான என் முதல் அறிவுரை. கற்றல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி, முடிவற்ற அந்தப் பயணத்திற்காக உங்களை வெறுமனே தயார் செய்துள்ளது. எல்லோரிடமிருந்தும் எல்லா இடங்களிலுமிருந்தும் எல்லாவற்றிலிருந்தும் கற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கணத்தையும் அதற்காகவே பயன்படுத்துங்கள். எங்களைக் கடவுள் தன்னுடன் அழைத்துக் கொள்ளும்போது, உங்களுக்காக நாங்கள் விட்டுச் செல்கின்ற ஒரே சீதனம் அதுதான். உங்களுக்கான இரண்டாவது அறிவுரை இது: நீங்கள் அதிகாரத்துடன்கூடிய பதவிகளில் இருக்கும்போது, அதில் பல சிக்கல்கள் இருக்கும். எனவே, நீங்கள் சரியான தீர்மானத்தை எடுப்பதில் அவை உங்களுக்கு அடிக்கடி இடையூறாக இருக்கும். என்ன செய்ய வேண்டும் என்று உங்கள் மனத்திற்குத் தெரியாமல் போகும்போது, சரி எது, தவறு எது என்பதைப் பிரித்துப் பார்ப்பதற்கான ஒரு மந்திரம் இது — நீங்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானமும் சில மக்களுக்கு அனுகூலமாகவும் சிலருக்கு அனுகூலமற்றதாகவும் இருக்கும். சரியான தீர்மானம் எப்போதும் மாபெரும் பொதுநலனின் அடிப்படையில் அமைந்திருக்குமே தவிர, ஒரு குறிப்பிட்டக் குழுவினருக்குச் சாதகமாக அல்ல."

பீஷ்மர் தன் உரையைச் சற்று நிறுத்திவிட்டு, தௌமியனைப் பார்த்தார். பதிலுக்கு அந்த பிராமணன் அவரைக் கோபமாக முறைத்துப் பார்த்தான். இன்னும் தன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்ற இளைஞர்களிடம், "உங்கள் அனைவருக்கும் வெற்றி உண்டாகட்டும்!" என்று பீஷ்மர் வாழ்த்தினார். அந்த இளவரசர்களிடம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த உற்சாகம் அவரையும் பற்றிக் கொண்டதில், தன் சொந்த இளமை மீண்டும் தன்னிடம் திரும்பி வந்து கொண்டிருந்ததைத் திடீரென்று அவர் உணர்ந்தார். பீஷ்மர் ஒரு பெரும் ஜோடனையுடன் தன் வாளை உருவி, அதை உயர்த்திப் பிடித்தார். "குரு வம்சத்தின் மைந்தர்களே, நம் நாட்டிற்குப் பெருமை தேடித் தாருங்கள். உங்களுடைய திறமையை இவ்வுலகிற்கு வெளிப்படுத்துங்கள். உங்களுடைய சக குடிமக்கள் உங்களுக்காக வெளியரங்கில் காத்திருக்கின்றனர். எதிர்காலத்திற்கு உங்களை நான் வரவேற்கிறேன்!"

பீஷ்மரின் ஆழமான, கம்பீரமான குரல் அந்த அரசவை நெடுகிலும் எதிரொலித்து, அந்த அரங்கை உற்சாக வெள்ளத்தில் மூழ்கடித்தது. சங்குகள், முரசுகள், கொம்புகள் ஆகியவற்றின் சத்தங்கள் ஒரு

மகிழ்ச்சியான இரைச்சலாக ஒலித்தன. அரசன் எழுந்து நின்றான். காவலாளிகள் அந்த அவையின் மாபெரும் கதவுகளைத் தள்ளித் திறந்தனர். பட்டம் பெறவிருந்த இளம் வீரர்கள் வெயிலுக்குள் விரைந்தனர்.

* * *

மேன்மக்களும் இளவரசர்களும் முக்கியக் கனவான்களும் பளபளப்பாக ஒளிவீசிய ரதங்களிலும் அலங்கரிக்கப்பட்ட யானைகள்மீதும் அருமையான குதிரைகள்மீதும் அரங்கை நோக்கி விரைந்து கொண்டிருந்தபோது, ராஜ வீதியின் இரண்டு பக்கங்களிலும் கூடி நின்ற பெருந்திரளான மக்கள் அவர்களை மகிழ்ச்சியாக உற்சாகப்படுத்தினர். அந்த ஊர்வலம் அந்த மாபெரும் அரங்கிற்குள் நுழைந்தபோது, அங்கு குழுமியிருந்த எண்ணற்ற மக்கள் அலையலையாக எழுந்தனர். ஒரு பெரிய அரக்கன் தன் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்ததைப்போல அது இருந்தது. முக்கியக் கனவான்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தபோது, முரசுகள், சங்குகள் ஆகியவற்றின் பெரும் இரைச்சல் காற்றில் எதிரொலித்தது. குதிரைகள்மீது அமர்ந்து வந்த இளவரசர்கள், பார்வையாளர்களை நோக்கித் தங்கள் கைகளை அசைத்தபடி, அந்த அரங்கிற்குள் வேகமாக நுழைந்தனர். அந்த பிரம்மாண்டமான விழா தொடங்கியிருந்தது.

தீண்டத்தகாதவர்களுக்காகவும் தாழ்ந்த சாதிக்காரர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டப் பகுதிகளில், 20,000 நபர்களுக்கு இடையே, ஒரு கருப்பான இளைஞன், எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல், தன் கண்களைக்கூட இமைக்காமல் உட்கார்ந்திருந்தான். அவன் ஒரு சிலைபோல அமர்ந்திருந்த விதம், அவனைச் சுற்றிக் காட்டுத்தனமாக நடனமாடிக் கொண்டிருந்த இளைஞர்களுக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. அவனுடைய வலது கை, அவனுடைய வேட்டி மடிப்புகளுக்குள் மறைந்திருந்தது. தன் குருவின் கட்டளைப்படி அவன் தன் பெருவிரலை வெட்டியபோது ஏற்பட்ட உடல்ரீதியான வலி நீங்கி நெடுங்காலம் ஆகியிருந்தது. ஆனால் அவனுடைய மனத்திலிருந்த காயம் குணமாக மறுத்தது. ஏகலைவன் அந்த நிகழ்வைப் பற்றி நினைத்தபோதெல்லாம், அவன் அந்த வலியை மீண்டும் புதிதாக உணர்ந்தான்.

கர்ணன் அந்த அரங்கின் பிரம்மாண்டமான நுழைவு வாயிலுக்கு வெளியே, பிச்சைக்காரர்கள் மற்றும் சிறு வியாபாரிகளுக்கு இடையே அமர்ந்து, உள்ளே நுழைவதற்கு ஒரு வாய்ப்பிற்காகக் காத்திருந்தான். பார்வையாளர்கள் பகுதிக்குள் அவனால் சுலபமாக நடந்து சென்றிருக்க

முடியும். ஆனால் அவன் தன் ஆயுதங்களை உள்ளே எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது அவனுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுமையாகவும் தீவிரமாகவும் இருந்தன. பார்வையாளர்களிடமிருந்த எல்லா ஆயுதங்களையும் காவலர்கள் பறிமுதல் செய்தனர். இதுதான் தன்னுடைய இறுதி வாய்ப்பு என்பதைக் கர்ணன் அறிந்தான். என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, அவன் தன் வில்லையும் அம்புகள் அடங்கிய அம்பறாத்தூணியையும் அரங்கிற்குள் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. கூட்டத்தினரைப் பார்த்தபடி ஜரன் தன் நாய் தர்மனுடன் மனநிறைவோடு அமர்ந்திருந்தான். அவன் ஒரு பிச்சைக்காரனாக இருந்ததால், உள்ளே நுழைவதற்கு அவனுக்கு அனுமதி இருக்கவில்லை. ஆனால் அது பற்றி அவன் அலட்டிக் கொள்ளவில்லை. அவனைப் பொறுத்தவரை, வாழ்க்கை, அரங்கிற்குள் இருந்ததுபோல வீதிகளிலும் நன்றாகவே இருந்தது. அரங்கிற்குள் இருந்த இளவரசர்கள், புகழுக்காகப் போட்டியிட்டு, எதிர்காலத்தில் தாங்கள் சண்டையிடவிருந்த போர்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். அரங்கினுள்ளிருந்து ஓர் உற்சாகக் கூச்சல் எழுந்தபோதெல்லாம், கர்ணனின் உடல் விறைத்தது. ஜரன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, கடவுளை நம்புமாறு அவனிடம் கூறினான். கடவுள் அவனைக் கைவிட மாட்டார் என்று அவன் கர்ணனுக்கு நம்பிக்கையூட்டினான். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஏற்கனவே பதற்றத்தோடு இருந்த கர்ணனின் மனத்திற்கு, ஜரனின் ஊக்குவிப்பு மேலும் எரிச்சலூட்டியது. எனவே, அமைதியாக இருக்குமாறு கர்ணன் அவனிடம் வெடுக்கென்று கூறினான். ஜரன் அந்த லட்சியவாத இளைஞனைக் கண்டு புன்னகைத்தான்.

அரங்கிற்குள், குருநாதர் துரோணரின் மாணவர்கள், தங்கள் குதிரையேற்றத் திறமையாலும் தற்காப்புத் திறமைகளாலும் பார்வையாளர்களைக் கட்டிப் போட்டனர். ஒவ்வோர் இளவரசனும் தன் திறமையை வெளிப்படுத்தியபோது, பார்வையாளர்கள் உற்சாகமாகக் கைதட்டினர். பார்வையாளர்களின் வியப்பைக் கண்டுகொள்ளாமல் துரோணர் தன் இருக்கையில் அலட்சியமாக அமர்ந்திருந்தார். பிரமிப்பூட்டும் திறமைகளைத் தவிர வேறு எதைத் தன் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும் என்பதுபோல அவர் காணப்பட்டார். பீமன் துரியோதனை எதிர்த்துச் சண்டையிடுவதற்காக அவர் காத்திருந்தார். அதையடுத்து அர்ச்சுனன் தன் வில் திறமையால் மக்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளவிருந்ததைக் காண அவர் மிகுந்த ஆவலுடன் இருந்தார்.

துரோணருக்கு அருகே அசுவத்தாமன் மனச்சோர்வுடன்

அமர்ந்திருந்தான். தன்னுடைய வில்லையும் அம்புகளையும் தன்னுடன் எடுத்து வருவதற்கு அவனுடைய தந்தை அவனுக்குத் தடை விதித்திருந்தார். அந்த மாபெரும் விழாவில் தானும் கலந்து கொண்டு தன்னுடைய திறமையை வெளிக்காட்டுவதற்குத் தன்னை அனுமதிக்குமாறு அசுவத்தாமன் தன் தந்தையிடம் கெஞ்சியிருந்தபோது, அது அஸ்தினாபுரத்தின் இளவரசர்களுக்கு மட்டுமே நடைபெற்ற விழா என்று துரோணர் அவனிடம் கத்தியிருந்தார். துரோணர் தன் சொந்த மகனின் திறமையைக் கழுத்தை நெறித்துக் கொல்வதாக அசுவத்தாமன் அவரை எதிர்த்துப் பேசினான். ஆனால் துரோணர் தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்தார். அர்ச்சுனன் தன்னிடம் தோற்றுப் போய்விடுவான் என்று தன் தந்தை பயந்ததாக அசுவத்தாமன் துரோணரிடம் வெறுப்போடு குறிப்பிட்டான். அதில் தொக்கி நின்ற உண்மை, துரோணரைக் கோபப்படுத்தியது. துரோணர் தன் மகனின் கன்னத்தின்மீது ஓங்கி அறைந்தார். அசுவத்தாமன் மனமுடைந்து அந்த அறையிலிருந்து வெளியேறியபோது, தான் செய்திருந்த செயல் குறித்து அவர் குற்றவுணர்வுடன் அங்கு நின்றார். அவர் இப்போது தன் மகன்மீது ஒரு கண் வைத்திருந்தார். அவன் துரியோதனனுக்குத் துணையாக இருப்பதற்குப் பதிலாக, தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தது குறித்து அவர் ரகசியமாக மகிழ்ச்சியடைந்தார்.

* * *

துரியோதனனுக்கும் பீமனுக்கும் இடையேயான சண்டை துவங்கியபோது, கர்ணனனுக்குத் தன் வாய்ப்புக் கிடைத்தது. காவலர்கள் பீமனையோ அல்லது துரியோதனனையோ உற்சாகப்படுத்துவதில் மும்முரமாக இருந்தபோது, கர்ணன் ஓசையின்றி அந்த அரங்கிற்குள் நுழைந்தான். அந்த அரங்கம் நிரம்பி வழிந்தது. ஆனால் ஒரு கிராமவாசி லேசாக ஒதுங்கி உட்கார்ந்து, கர்ணன் உட்காருவதற்கு இடம் கொடுத்தான். பிறகு அவன் கர்ணனின் வில்லைப் பார்த்து முகஞ்சுளித்தான். துரியோதனனுக்கும் பீமனுக்கும் இடையே நடந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த கர்ணன், தன்னைச் சுற்றி இருந்தவர்களின் முறைப்புகளை உதாசீனப்படுத்திவிட்டு, முடிந்த அளவுக்கு மற்றவர்களின் கவனத்தைக் கவராமல் இருக்க முயற்சித்தான்.

பீமன் துரியோதனனைவிட ஓரடி உயரமாக இருந்தான். வலுவூட்டப்பட்டத் தசைகளுடன்கூடிய திடகாத்திரமான உடலைக் கொண்டிருந்த பீமனின் பெரிய கைகளில், அந்தக் கனமான தண்டாயுதம் வெறுமனே ஒரு குச்சியைப்போலத் தோன்றியது. அவன் தன் கால்களை அகல விரித்து, சண்டைக்குத் தயார் நிலையில் நின்றான். அவன் தன்

தண்டாயுதத்தை மிகச் சுலபமாகக் கையாண்டு, துரியோதனனைப் பார்த்து ஏளன வார்த்தைகளை அள்ளி வீசி, அவனைக் கோபப்படுத்த முயற்சித்தான். தௌமியன் ஒருசில பிராமணர்களைச் சேர்த்துக் கொண்டு பீமனை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். பொதுமக்களில் பெரும்பாலானோருக்குப் பட்டத்து இளவரசன் நன்கு பரிச்சயமாகியிருந்தான். அவன் அடிக்கடி அவர்களுடைய வசிப்பிடங்களுக்குச் சென்று வந்திருந்தான். அவன் அடிக்கடி வீதிகளிலும் காணப்பட்டான். அவர்கள் தங்கள் இளவரசன் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினர். ஆனால், சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களின் உருவ அளவில் இருந்த வேற்றுமையை வைத்துப் பார்த்தபோது, அங்கு ஓர் அசௌகரியமான மௌனம் நிலவியது. பார்வையாளர் பகுதிகளில், அஸ்தினாபுர நகரத்தைச் சேர்ந்தவர்களைவிட கிராமங்களில் இருந்தும் புறநகர்ப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மக்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருந்தது. அவர்கள் பீமனைத் தங்கள் கதாநாயகனாகவும் துரியோதனனை அகங்காரம் பிடித்த இளவரசனாகவும் கருதினர். இசைவாணர்கள் கிராமங்களுக்கும் புறநகர்ப் பகுதிகளுக்கும் சென்று இதைத்தான் பாடி வந்தனர். அவர்களை நம்பாமல் இருப்பதற்கு அம்மக்களுக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. யார் தங்களுக்கு அதிகப் பணம் கொடுத்தார்களோ, அவர்களைப் புகழ்ந்து பாடுவதுதான் அந்தப் பாடகர்களின் வேலை என்பதை அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அம்மக்கள் வெகுளிகளாக இருந்தனர். உண்மை, திரித்துக் கூறப்படக்கூடியதாகவும் விற்பனைக்காகவும் இருந்தது.

துரியோதனன் தன் காதலியின் அழகான கண்களைத் தேடி, முக்கியமான கனவான்கள் அமர்ந்திருந்த பகுதியின்மீது தன் பார்வையை ஓடவிட்டான். அங்கு அவளைப் பார்த்தபோது அவனுடைய இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. அவன் தன் தண்டாயுதத்தை அவளை நோக்கி உயர்த்தினான். சுபத்திரை தன் இருக்கையைவிட்டு எழுந்து நின்று, அவனைப் பார்த்துக் கையசைத்தாள். பீமனிடமிருந்து முதல் அடி தன்மீது விழுந்தபோது, இது வெறும் அலங்காரப் போட்டியல்ல என்பதை துரியோதனன் உணர்ந்தான். துரியோதனனின் ஒவ்வோர் அடியையும் பின்தொடர்ந்த பீமனின் தண்டாயுதத்தில் மரணம் தாண்டவமாடியது. பெரிய உருவத்தைக் கொண்டிருந்த அந்தப் பாண்டவன், மதம் பிடித்த ஒரு யானையைப்போல துரியோதனனைத் தாக்கினான். மேன்மக்களிடமிருந்து எழுந்த உற்சாகக் கத்தல்கள் மற்றும் கைதட்டல்களின் சத்தம் தொடர்ந்து அதிகரித்தது. ஏழைப்

பார்வையாளர்கள் இருந்த பகுதிகளில் துவக்கத்தில் ஓர் அசௌகரியமான அமைதி நிலவியது. ஆனால் இப்போது அவர்களும் பீமனுக்காகக் கைதட்டத் தொடங்கினர். சமுதாயத்தில் மேல்மட்டத்தில் இருந்தவர்கள் செய்ததை அவர்கள் அப்படியே நகலெடுத்தனர். பட்டத்து இளவரசன் தோற்றுவிடுவான் என்று அவர்களும் உறுதியாக நம்பினர். துரியோதனன் தோற்றுக் கொண்டிருந்தான். அவன் தோற்க வேண்டும் என்று ஒட்டுமொத்த உலகமும் விரும்பிக் கொண்டிருந்தபோது, துரியோதனன் தனிமையாக உணர்ந்தான்.

பீமன் கொலை வெறியுடன் துரியோதனனைத் தொடர்ந்து தாக்கினான். பெரியவர்கள் யாரும் குறுக்கிட்டு அதைத் தடுக்க முயற்சிக்கவில்லை. எல்லோரும் துரியோதனனின் வீழ்ச்சியை எதிர்பார்த்தனர். தௌமியனின் பிராமணக் குழுவிற்கு, மகிழ்ச்சியால் பைத்தியமே பிடித்துவிட்டதுபோலத் தோன்றியது. துரியோதனன் எக்கணத்திலும் வீழ்த்தப்பட்டுவிடுவான் என்றும், ஒருவேளை அவன் உயிரோடு தப்பினால்கூட, பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்ந்த இப்படிப்பட்ட ஒரு மோசமான தோல்விக்குப் பிறகு, அஸ்தினாபுரத்தின் அரியணையைக் கைப்பற்றுவதற்கான அவனுடைய உரிமை பலவீனமடையும் என்றும் அவர்கள் நம்பினர். பழமைவாதிகளுக்குப் பிரியமான இளவரசனான தர்மன், அஸ்தினாபுரத்தின் அரியணையை அலங்கரிப்பதற்கான பாதை வேகமாகத் திறந்து கொண்டிருந்தது. தவிர்க்க முடியாததுபோலத் தோன்றிய, பட்டத்து இளவரசனான துரியோதனனின் தோல்விக்காக மேன்மக்களும் காத்திருந்தனர். ஆனால் துரியோதனன் தன் முயற்சியைக் கைவிட மறுத்தான். அவன் உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் பீமனை எதிர்த்துத் தாக்கினான். கண்ணுக்குப் புலப்படாத ஒரு விதத்தில், அலை இப்போது பாண்டவ இளவரசனுக்கு எதிராகத் திரும்பத் துவங்கியிருந்தது. தனிநபரின் அகங்காரத்தைத் திருப்திப்படுத்துவதற்காக இல்லாமல், ஒரு மிகப் பெரிய நோக்கத்திற்காகச் சண்டையிடுவது பற்றி, தன் ஆலோசகரும் அறிவுரையாளருமான பலராமன் கூறிய அறிவுரை இளவரசன் துரியோதனின் நினைவுக்கு வந்தது. இப்போது அவன் கொடுத்த அடிகள் அதிக பயங்கரமானவையாக ஆகத் துவங்கியிருந்தன.

பிராமணர்களின் விருப்பங்களை மறுக்கும் விதமாக, அதிக வலிமை கொண்ட ஒருவனை எதிர்த்து, ஒரு குருடனின் மகன், கொழுந்துவிட்டு எரியும் ஆழ்விருப்பத்தோடு சண்டையிட்டான். விஷயங்கள் திசை திரும்பியிருந்த விதம், துரியோதனனைத் தீமையின் மொத்த உருவமாகச் சித்தரித்திருந்த அந்த பிராமணர்களால் சொரித்துக் கொள்ள முடியாத அளவுக்கு இருந்தது. அவர்கள் முக்கியக் கனவான்களுக்கான பகுதியில்

அமர்ந்திருந்த கிருஷ்ணனை ஆறுதல் வேண்டிப் பார்த்தனர். ஆனால் அந்த யாதவ இளவரசனின் வசீகரமான முகத்தில் வழக்கமான புன்னகை மட்டுமே இருந்தது. மேன்மக்கள் மற்றும் பிராமணர்களிடத்தில் நிலவிய உற்சாகம் குறையத் துவங்கியது. பொதுமக்கள் அமர்ந்திருந்த பகுதி இப்போது களைகட்டத் துவங்கியது. துரியோதனனை உற்சாகப்படுத்துவதற்காக எழுந்த கைதட்டல்களும் கூக்குரல்களும் விரைவில் காதைச் செவிடாக்கும் அளவுக்கு அதிகரித்தன. விழாவைக் காண வந்திருந்த புரோகிதர்களால் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. பட்டத்து இளவரசனைப் பற்றி இத்தனை வருடங்களாகத் தாங்கள் பரப்பி வந்திருந்த பொய்யான கதைகள் வீணாகிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். அவர்களுடைய எதிர்நாயகன் ஒரு கதாநாயகனாக ஆவதற்கு முன் அவர்கள் ஏதேனும் செய்தாக வேண்டியிருந்தது.

துரோணர் இந்தக் காட்சியைத் திகிலோடு பார்த்தபடி அமர்ந்திருந்தார். கோபக் கனல் தெறித்தக் குந்தியின் கண்கள் தன்னுடைய முதுகைத் துளைத்துக் கொண்டிருந்ததை அவரால் உணர முடிந்தது. அவளுடைய பார்வை தன்னைக் குற்றப்படுத்துவதுபோல இருந்ததாக துரோணர் உணர்ந்தார்.

“இதை எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள்,” என்று தௌமியன் துரோணரின் காதுக்குள் சீறினான்.

துரோணர் ஒரு கணம் தயங்கிவிட்டு, வழிகாட்டுதலுக்காகக் கிருஷ்ணனை நோக்கிப் பார்த்தார். பிறகு அவர் தன் இருக்கையைவிட்டு எழுந்து, சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வளையத்தை நோக்கி நடந்து சென்று, சண்டையை நிறுத்துமாறு அந்த இரண்டு இளவரசர்களிடமும் கட்டளையிட்டார். துரியோதனன் அவரை உதாசீனப்படுத்திவிட்டு, தன் அனுகூலமான நிலையை மேலும் தீவிரப்படுத்தினான். “பீமா, உன் தண்டாயுதத்தை வீசி எறி!” என்று துரோணர் கத்தினார்.

உருவத்தில் அரக்கனைப்போல இருந்த அந்தப் பாண்டவன் முதலில் எதுவும் புரியாமல் திருதிருவென்று விழித்தான். குருவின் கட்டளை ஒருவழியாக அவன் மரமண்டைக்கு உறைத்தபோது, அவன் தன் தண்டாயுதத்தை வேகமாக வீசியெறிந்துவிட்டு, கோபத்தோடு இருந்த தன் எதிரியின் முன்னால் நிராயுதபாணியாக நின்றான். துரியோதனனின் தண்டாயுதம் பீமனின் தலைக்கு முன்னால் ஒருசில அங்குலத்தில் நின்றது. துரியோதனனின் நடத்தையை துரோணர் சரியாகக் கணித்திருந்தார். பட்டத்து இளவரசனான அவன், ஆயுதமின்றி நின்ற ஓர் எதிரியை ஒருபோதும் தாக்க மாட்டான் என்பதை அவர்

அறிந்திருந்தார். மேன்மக்களிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. இது ஒரு விளையாட்டுத்தனமான சண்டையே அன்றி, இது ஒரு போர்க்களம் அல்ல என்பதை மறந்துவிட்டதற்காக இளவரசன் துரியோதனனை துரோணர் கடிந்து கொண்டார். தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்துத் தன்னைத் தற்காத்துக் கொள்ள முயற்சிப்பது பயனற்றது என்பதை துரியோதனன் அறிந்தான். நிமிர்ந்த தலையுடன் அவன் வெறுமனே துரோணரை முறைத்துப் பார்த்தபடி நின்றான். துரோணர் தானாகக் களைத்து ஓயும்வரை அவன் மௌனம் காத்தான். இருளடைந்த முகத்துடன் அமர்ந்திருந்த தன் தாயை நோக்கி பீமன் நடந்து சென்றபோது, துரியோதனன் அங்கிருந்து தனியாக நடந்து சென்றதை அந்த ஒட்டுமொத்த அரங்கமும் உன்னிப்பாகப் பார்த்தது.

"கேவலம்!" தீண்டத்தகாதவர்களின் பகுதியிலிருந்து வந்த ஒரு குரல் காற்றைத் துளைத்தது. எல்லாத் தலைகளும் ஏகலைவனை நோக்கித் திரும்பின. நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது — ஒரு தீண்டத்தகாதவன் ஒரு குருநாதரைப் பற்றித் தன் அபிப்பிராயத்தை உரத்தக் குரலில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். பிராமணர்களிடமிருந்து எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. அந்தக் கயவனைப் பிடித்து, அவனுடைய அகங்காரத்திற்காக அவனுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்குமாறு பலர் அரசனையும் அரசாட்சிப் பொறுப்பாளரையும் பார்த்துக் கத்தினர். பீஷ்மரின் முகம் கல்லால் ஆனதுபோலக் கடினமாக இருந்தது. திருதராஷ்டிரன் தன் இருக்கையின்மீது அசையாமல் அமர்ந்திருந்தான். அந்த வேடுவ இளைஞனின் குற்றப் பேச்சைப் பின்தொடர்ந்த கிருபரின் கேலிச் சிரிப்பு, மேன்மக்களுக்கும் புரோகிதர்களுக்கும் விஷயங்களைச் சுலபமாக்கவில்லை. குறிப்பிடத்தக்க ஏதேனும் செய்யப்பட்டாக வேண்டும், இல்லையென்றால் விஷயம் தங்களை மீறிப் போய்விடும் என்பதை அவர்கள் அறிந்தனர்.

"அர்ச்சுனா!" என்று குந்தி கத்தினாள். புரோகிதர்கள் அந்தச் சமிக்கையைப் புரிந்து கொண்டு, அந்தப் பாண்டவ இளவரசனின் பெயரை முழங்கத் துவங்கினர். திடீரென்று, அவர்களுடைய முகங்களில் நம்பிக்கை ஒளிவீசியது. இச்சூழ்நிலையை ஒருவனால் மாற்ற முடியும் என்றால், அது அந்த மாபெரும் வில்லாளன்தான் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

தன் பிரியமான மாணவனைப் பற்றி அறிவிப்பதற்காக துரோணர் எழுந்தார். "அஸ்தினாபுரத்தின் குடிமக்களே, நீங்கள் இதுவரை கண்டு களித்து வந்திருந்தது, இனி நீங்கள் கண்டு மகிழவிருப்பதோடு ஒப்பிடப்படும்போது ஒன்றுமே இல்லை." தன் அறிவிப்பு ஏதேனும்

தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததா என்று தெரிந்து கொள்வதற்காக அவர் தன் பேச்சை ஒரு கணம் நிறுத்துவிட்டுத் தன்னைச் சுற்றிலும் பார்த்தார். பிறகு இடிமுழக்கம் போன்ற ஒரு கணீர்க் குரலில், "உலகின் தலைசிறந்த வில்லாளன் அர்ச்சுனன் இதோ . . ." என்று அவர் அறிவித்தார்.

அருமையான குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தங்க ரதம் அந்த அரங்கிற்குள் நுழைந்து, மிக வேகமாக அந்த அரங்கிற்குள் சுற்றி வந்தது. அர்ச்சுனன் அதில் கம்பீரமாக நின்றான். தன் விலையுயர்ந்த பட்டாடைகள் மற்றும் ஒளிவீசிய அணிகலன்களுடன் அவன் மிகவும் வசீகரமாகவும் மேன்மையானவனாகவும் தோன்றியதைக் கண்ட பல இளம்பெண்கள், அவனைக் காதலோடும் காமத்தோடும் பார்த்து ஏங்கினர். முக்கியக் கனவான்கள் இருந்த பகுதிகளுக்குக் கீழே அவன் தன் ரதத்தில் வேகமாகச் சுற்றி வந்தபோது, அவன் மிகத் திறமையாக எய்த பல அம்புகள் ஒவ்வொன்றும், ஒரு காணிக்கையைப்போல, ஒவ்வொரு கனவானின் பாதங்களருகே சென்று குத்திட்டு நின்றன. அந்த வில்லாளன் இவ்வாறு அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தது பார்வையாளர்களுக்கு பிரமிப்பூட்டியது. ஒரு மலர்மாலையைச் சுமந்து கொண்டிருந்த ஓர் அம்பை அஸ்தினாபுரத்தின் கொடியை நோக்கி அவன் எய்தான். காற்றில் படபடத்துக் கொண்டிருந்த அந்தக் கொடிக்கு அந்த மாலையை அணித்துவிட்டு, அந்த அம்பு அதை வேகமாகக் கடந்து சென்றபோது கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பிறகு, பல்வேறு தூரங்களில் வைக்கப்பட்டிருந்த தன் இலக்குகளை நோக்கி அர்ச்சுனன் நளினமாகவும் நேர்த்தியாகவும் தன் அம்புகளை எய்தான். அவை துல்லியமாகத் தம் இலக்குகளைத் தாக்கியபோது, கூட்டத்தினரின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. துரியோதனனுக்கும் பீமனுக்கும் இடையே நடந்த ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையை அவர்கள் மறந்துவிட்டிருந்தனர். அர்ச்சுனன் அன்று மேன்மக்களின் மானத்தைக் காப்பாற்றியிருந்தான்.

அந்தப் பெருமைமிகு குருநாதர் குந்தியிடம் திரும்பி, "தேவி, நான் என் வாக்கைக் காப்பாற்றியுள்ளேன்," என்று கூறினார். குந்தி தன் நன்றியைத் தெரிவிக்க முற்பட்டபோது, ஓர் அம்பு துரோணரின் பாதங்களருகே வந்து விழுந்தது. ஆச்சரியமடைந்த அவர், தன் பிரியமான மாணவனைப் பார்த்தார். ஆனால் அர்ச்சுனனின் ரதம் அசையாமல் நின்று கொண்டிருந்தது. நாணேற்றப்பட்ட ஒரு வில்லுடன் இன்னோர் இளைஞன் அந்த ரதத்தின் முன்னால் நின்றான். ஆச்சரியமூட்டும் வேகத்தில், துல்லியமாகக் குறி பார்த்துச் சரமாரியாக அம்புகளை எய்து, மிகவும் கடினமான 'வில்லாளனின் வணக்கத்தை' அவன் செய்து காட்டிக் கொண்டிருந்தான். அவன் எய்த அம்புகள்

மேன்மக்களின் பாதங்களருகே சென்று குத்திட்டு நின்றன. அவன் சுலபமாகவும் நேர்த்தியாகவும் அர்ச்சுனனின் சாதனையை எந்த முயற்சியுமின்றி மிகவும் சர்வசாதாரணமாகச் செய்து காட்டியதில் அகங்காரத்தின் லேசான சாயல் தெரிந்தது.

இந்த சவாலால் தூண்டப்பட்ட அர்ச்சுனன், தன் ரதத்திலிருந்து கீழே குதித்து, மிகத் தொலைவிலிருந்த இலக்குகள்மீது அம்புகளை எய்யத் தொடங்கினான். துரதிர்ஷ்டவசமாக, அர்ச்சுனன் தன் வில்லின்மீது தன் அம்பை வைப்பதற்கு முன்பாகவே, அவனுக்குப் போட்டியாக வந்தவன் அந்த இலக்குகள் ஒவ்வொன்றையும் துல்லியமாகத் தாக்கத் துவங்கினான். இதனால் கவரப்பட்டக் கூட்டம், ஊர்பேர் தெரியாத அந்த வில்லாளனை உற்சாகப்படுத்தத் துவங்கியது. இவ்விரு போட்டியாளர்களின் தோற்றம் முற்றிலும் மாறுபட்டிருந்தது. அர்ச்சுனன் மேட்டுக்குடிச் சத்திரியர்களின் அற்புதமான உடையுடனும், ஒளிவீசிய தங்க அணிகலன்களுடனும், வைரங்கள் பதிக்கப்பட்டக் கீரிடத்துடனும், தங்க முலாம் பூசப்பட்டத் தன் வில்லுடனும் கம்பீரமாக நின்றான். அவனுக்கு சவால்விட்டு நின்ற, தாழ்ந்த சாதியைச் சேர்ந்த அந்த இளைஞன், வீதியிலிருந்து வந்து குதித்தவன்போல வெற்றுக் கால்களுடனும் வெற்றுத் தலையுடனும் கந்தலான ஆடைகளில் நின்றான். அவன் அங்கு கூடியிருந்த பொதுமக்களில் ஒருவனாக, முக்கியத்துவமற்ற ஒருவனாக இருந்திருக்கக்கூடும்.

மேட்டுக்குடியினர் மீண்டும் பீதியடைந்தனர். குந்திக்கு மயக்கம் வந்தது. சாதாரணக் குடிமகன் ஒருவன் இவ்வாறு அகங்காரத்துடன் நடந்து கொண்டது மேட்டுக்குடியினரைக் கோபப்படுத்தியது. பிரம்மாண்டமான இந்த விழாவிற்கு இந்தக் குறிப்பிட்ட நாளை முகூர்த்த நாளாகக் குறித்துக் கொடுத்திருந்த நிமித்தகனை நோக்கி அவர்கள் திரும்பினர். ஒட்டுமொத்தப் பிரபஞ்சமும் இளவரசர்களுக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. துரோணர் மீண்டும் அரங்கின் நடுப்பகுதிக்குச் சென்றார். அர்ச்சுனனின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்ததையும், பீதியில் அவன் தவறுகள் செய்து கொண்டிருந்ததையும் அவர் பார்த்தார். உலகின் தலைசிறந்த வில்லாளனான அர்ச்சுனனின் பட்டாடைகள் வியர்வையில் குளித்திருந்தன. ஆனால் அவனுக்கு சவால்விட்டு நின்றவன் அமைதியாகவும் நிதானமாகவும் தன் அம்புகளை ஒன்றன்பின் ஒன்றாக எய்து கொண்டிருந்தான்.

“நிறுத்து!” என்று துரோணர் கத்தினார். அவ்விரு இளைஞர்களும் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டனர். பிறகு அவர்கள் துரோணரை நோக்கித் திரும்பி, தலைவணங்கிப் பணிந்தனர். கந்தலான

உடையணிந்து நின்ற அந்த இளைஞனிடம், ஏளனம் தொனித்தக் குரலில், “இந்த விழா இளவரசர்களுக்கு உரியது. உன் தந்தை எந்த ராஜ்யத்தை ஆண்டு கொண்டிருக்கிறார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று துரோணர் கேட்டார்.

அரங்கில் எழுந்த உரத்தச் சிரிப்புச் சத்தம் அந்த இளம் வீரனின் காதுகளில் இடி முழக்கம்போல எதிரொலித்தது. அர்ச்சுனன் நிம்மதிப் பெருமூச்செறிந்தான். ஆனால் அந்த அன்னியன் தன் வாயைத் திறப்பதற்கு முன்பாக, ஒரு முதியவன், “கர்ணா! என் மகனே! நீ திரும்பி வந்துவிட்டாயா . . .” என்று மகிழ்ச்சியில் கத்திக் கொண்டே அந்தத் திடலுக்குள் ஓடி வந்தான். பல வருடங்களாகத் தான் பார்த்திராத தன் மகனைக் கட்டித் தழுவுவதற்காக விரைந்த அதிரதன், கர்ணனின் முகத்தில் தெரிந்த அவமானத்தைக் கண்டு ஆணியடித்தாற்போல அப்படியே நின்றுவிட்டான். கர்ணன் தன் தந்தையைக் குறித்து வெட்கம் கொண்டிருந்ததை அந்த வயதான தேரோட்டி வேதனையோடு பார்த்தான். தன் மகன் தன் தலையை நிமிர்த்தித் தன்னைப் பார்க்க மாட்டானா என்று அவன் ஏங்கினான். ஒரு சிறுவனாக இருந்தபோது அவன் தன்னை நோக்கி எவ்வாறு மகிழ்ச்சியாக ஓடி வந்திருந்தானோ, அதேபோல இப்போது தன்னிடம் ஓடி வர மாட்டானா என்று அவன் பிரார்த்தித்தான். ஆனால் கர்ணன் நிலத்தின்மீது தன் பார்வையை நிலைப்படுத்தி நின்றான். கண்டிக்கப்பட்ட ஒரு நாயைப்போல, அந்த முதியவன் அந்தக் கூட்டத்திற்குள் நடந்து சென்று மறைந்து போனான்.

“ஒரு தேரோட்டி!” என்று துரோணர் உரக்கச் சிரித்தார்.

மேட்டுக்குடியினர் அமர்ந்திருந்த பகுதி, சிரிப்பால் அதிர்ந்தது. காணாமல் போயிருந்த அர்ச்சுனனின் புன்னகை, மீண்டும் அவனுடைய வசீகரமான முகத்திற்குத் திரும்பியது. அவன் தன் புருவங்களிலிருந்த வியர்வையைத் துடைத்தான்.

தெளமியனும் இப்போது புன்னகைத்தான். இது அவனுடைய ஆடுகளம். அவன் அந்தப் போட்டித் திடலுக்குள் நடந்து சென்று, மிகத் தெளிவாக, “கீழ்ச்சாதிக்காரனே! நீ போய் குதிரை லாயங்களைச் சுத்தம் செய்தால் என்ன?” என்று கேட்டுவிட்டு, மேட்டுக்குடியினர் அமர்ந்திருந்த பகுதியைப் பார்த்தான். அதைப் பின்தொடர்ந்த பரிகாசச் சிரிப்பில் அவனும் சேர்ந்து கொண்டான். “ஒரு தேரோட்டியின் மகன் . . .” என்று கூறிய தெளமியன், திடீரென்று ஏதோ உணர்ந்தவனாக, “அதிரதனின் மகன் . . . உன்னைத்தானே கடந்த சில நாட்களாக இந்த ஒட்டுமொத்த பரதகண்டமும் வலை வீசித் தேடி வந்துள்ளது? ஹா ஹா ஹா! தேரோட்டியே, தர்மத்தின் நீண்ட கை இறுதியில் உன்னைப் பிடித்துவிட்டது. குருநாதர் பரசுராமரை ஏளனப்படுத்திய பிறகு

உன்னால் தப்பித்துவிட முடியும் என்று நீ நினைத்தாயா? உன் கதை முடிந்துவிட்டது," என்று கொக்கரித்தான்.

கர்ணன் யார் என்பதை உணர்ந்து கொண்ட கூட்டத்தினரிடையே ஒரு முணுமுணுப்பு எழுந்தது. முக்கியக் கனவான்களுக்கு இடையே அமர்ந்திருந்த இளவரசன் சகுனி தன்னைத் தானே நொந்து கொண்டான். அந்த உதவாக்கரை துர்ஜயனைக் கொளுத்த வேண்டும் என்று அவன் தன் மனத்திற்குள் சீறினான். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பிற்கும் அஸ்தினாபுரத்திற்கும் இடையே ஒரு போரைத் துவக்குவதற்கான வாய்ப்பை அவன் இழந்திருந்தான். 'நான் ஏன் அந்த முட்டாள்மீது என் பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறேன்?' என்று சகுனி வெறுப்போடு நினைத்தான். இப்போது இந்தத் தேரோட்டியை இவர்கள் தென்னகக் குழுவிடம் ஒப்படைத்துவிடுவர். சக்திவாய்ந்த இவ்விரு ஆற்றல்களுக்கும் இடையேயான உறவு மீண்டும் வலுப்பெற்றுவிடும்.

தன் தந்தை தன்னை நோக்கி ஓடி வந்தபோதே தன் கதை முடிந்துவிட்டிருந்ததைக் கர்ணன் அறிந்தான். 'அவர் ஏன் அப்படி செய்ய வேண்டும்? நிகழ்ச்சி முடிந்து, அர்ச்சுனனைவிட நான் ஒரு சிறந்த வில்லாளன் என்பதை நான் இந்த உலகத்திற்குப் புரிய வைத்தப் பிறகு, நானே அவரிடம் போயிருப்பேன். என் முட்டாள்தனமான தந்தையின் காரணமாக இப்போது நான் எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தப்பட்டு நிற்கிறேன். தான் என் மரண சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளோம் என்பது அவருக்குத் தெரியவில்லை,' என்று கர்ணன் தன் மனத்திற்குள் புழுங்கினான்.

ஒரு வலிமையான கை, கர்ணனின் மணிக்கட்டைப் பற்றியது. கர்ணன் நிமிர்ந்து பார்த்தான். பட்டத்து இளவரசன் துரியோதனன் அங்கு நின்றான். அவன் அந்தத் தேரோட்டியின் மகனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, தன் வாளை அதன் உறையிலிருந்து உருவி விண்ணை நோக்கி உயர்த்திப் பிடித்தான். பிறகு அவன் ஒரு தெளிவான, அமைதியான குரலில் கூட்டத்தினரிடம் பேசினான். "ஒரு வீரனின் சாதியைப் பற்றிக் கேட்பதற்கு நமக்குக் கேவலமாக இல்லையா? நதிகளின் மூலங்களையும் துணிச்சலான நபர்களின் மூலங்களையும் தேடும் மரபா நம்முடையது? கர்ணனின் தந்தை ஒரு தேரோட்டியாக இருந்தால் அது பற்றி நமக்கு என்ன கவலை? அல்லது, தன்னைவிடச் சிறந்த ஒருவனிடம் தோற்றுப் போவதற்கு இளவரசன் அர்ச்சுனன் பயப்படுகிறானா?" துரியோதனன் தன் ஒன்றுவிட்டச் சகோதரனிடம் திரும்பி, "அர்ச்சுனா, நீ உண்மையிலேயே ஓர் ஆண்மகனாகவும் ஒரு வீரனாகவும் இருந்தால், இந்த மூடத்தனமான நம்பிக்கைகளின்

பின்னால் ஒளிந்து கொள்வதற்குப் பதிலாக, இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு இந்தத் தேரோட்டியைத் தோற்கடித்துக் காட்டு," என்று கூறினான்.

துரோணர் துரியோதனனைத் தடுத்தார். "இளவரசே, போதும் உன் அகங்காரம்! ஒழுங்குமுறையின் எல்லைகளை நீ கடந்துவிட்டாய். உன்னை என் மாணவன் என்று அழைப்பதற்கு நான் வெட்கப்படுகிறேன்."

துரியோதனன் துரோணரை அலட்சியப்படுத்திவிட்டு, அர்ச்சுனனைத் தொடர்ந்து முறைத்துப் பார்த்தபடி நின்றான். பார்வையாளர்கள் அரங்கில், ஏகலைவன் தன் மூச்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அர்ச்சுனன் தவிப்போடு தௌமியனைப் பார்த்தான். தௌமியன் குழம்பிப் போயிருந்தான். பிறகு, அர்ச்சுனன் தன் நண்பன் கிருஷ்ணனைப் பார்த்தான். துரியோதனனுக்கு பதிலளிப்பதற்கான துணிவு இப்போது அவனுக்கு வந்தது. "துரியோதனா, தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒரு தேரோட்டியுடன் நான் போட்டியிட மாட்டேன். நான் ஓர் அஸ்தினாபுர இளவரசன்," என்று அவன் செருக்கோடு முழங்கினான்.

"நீ ஓர் இளவரசன் என்றால், இப்போது நீ ஓர் அரசனுடன் சண்டையிடுவாய்," என்று துரியோதனன் வெடுக்கென்று கூறிவிட்டு, கூட்டத்தினரைப் பார்த்து, "என் நாட்டு மக்களே, தனித்துவமான ஒன்றை இப்போது நீங்கள் காணவிருக்கிறீர்கள்," என்று முழங்கினான். பிறகு அவன் அரசாட்சிப் பொறுப்பாளரையும் அரசனையும் நோக்கித் திரும்பினான். "மேன்மை பொருந்தியவரே, மாண்புமிக்க அரசரே, உங்கள் அன்பான அனுமதியுடன் . . . " துரியோதனன் அங்கு கூடியிருந்த பிராமணர்களைப் பார்த்து, "நான் இப்போது செய்யவிருக்கும் செயல், வேதங்களில் மேன்மையாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ள சம்பிரதாயங்களில் இருக்கிறது. புனித நூல்களை உண்மையிலேயே புரிந்துள்ள ஓர் உண்மையான பிராமணனை நான் அழைக்க விரும்புகிறேன்," என்று கூறினான்.

ஒட்டுமொத்தப் புரோகிதர்களும் எழுந்து நின்று, பட்டத்து இளவரசனைப் பார்த்துக் கத்தத் துவங்கினர். அழுத்தத்திற்கு ஆளாகியிருந்த இளவரசனை நோக்கி, கிருபர் சிரித்துக் கொண்டே ஓடினார். தன் மகன் அசுவத்தாமனும் கிருபரைப் பின்தொடர்ந்து ஓடியபோது, துரோணரால் தன் கண்களை நம்ப முடியவில்லை. கிருபர் கர்ணனை இறுக்கமாகக் கட்டி அணைத்ததில், அவனுக்கு மூச்சுத் திணறியது. அசுவத்தாமன் துரியோதனனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, தன் வலிமையான கைகளைத் தன் பரந்த மார்பின்

குறுக்காகக் கட்டிக் கொண்டு, அவனுக்குப் பக்கத்தில் போய் நின்றான். புனித நூல்களையும் பிராமணர்களையும் இழிவுபடுத்துவதில் இருந்து துரியோதனனைத் தடுத்து நிறுத்துமாறு தௌமியன் பீஷ்மரிடம் கெஞ்சினான். ஆனால் பீஷ்மரின் முகம் உணர்ச்சியற்று இருந்தது. பதற்றமடைந்திருந்த விதுரன், கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த பிராமணர்களை அமைதிப்படுத்த முயன்றான். ஆனால் அவர்கள் அவனை உதாசீனப்படுத்தினர். சகுனி உற்சாகத்தில் தன் உள்ளங்கைகளை ஒன்றோடொன்று அழுத்தித் தேய்த்தான். விஷயங்கள் அவன் எதிர்பார்த்திருந்ததைவிட மிகச் சிறப்பாகச் சென்று கொண்டிருந்தன. தன் காய்களைச் சரியாக நகர்த்தினால், இச்சூழ்நிலையை இன்னும் பெரிதாகவும் அதிக வன்முறையானதாகவும் தன்னால் ஆக்க முடியும் என்பதை அவன் அறிந்தான். பெரும்பான்மையான மக்களுக்கு அடிப்படை கண்ணியத்தைக்கூடத் தர மறுத்ததன் மூலம் தங்களுடைய சொந்த நலனைப் பாதுகாக்கத் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருந்த பிராமணர்களைப் பார்த்துவிட்டு அவன் புன்னகைத்தான் . . .

துரியோதனன் மீண்டும் தன் குரலை உயர்த்தினான். இம்முறை, அவன் அங்கு கூடியிருந்த அரசர்களைப் பார்த்துப் பேசினான். “பரதகண்டத்தின் மாபெரும் அரசர்களே, உங்களில் பெரும்பான்மையினர் உங்கள் ராஜ்யங்களை உங்கள் மூதாதையரிடமிருந்து சுவீகரித்துள்ளீர்கள். ஆனால் ஒரு சத்திரியனாக ஆவதற்கு உண்மையிலேயே தகுதியான ஒருவன் இங்கு இருக்கிறான். தயவு செய்து மனமுவந்து முன் வந்து, என் குறிக்கோளை வலிமைப்படுத்துங்கள்.”

அந்த அரசர்கள் வெறுமனே பாறைகளைப்போல வெறித்துப் பார்த்தனர். அதைத் தொடர்ந்து, புரிந்து கொள்ளப்பட முடியாத ஒரு மௌனம் நிலவியது. பிறகு அவர்களில் ஓர் அரசன் மெதுவாக எழுந்தான். அவன் நிதானமாகவும் மிடுக்காகவும் துரியோதனனை நோக்கி நடந்து சென்றான். பிறகு இளவரசனைப் பார்த்துத் தலை வணங்கிவிட்டு, “இளவரசே, என் பெயர் ஜயத்ரதன். சிந்து நாட்டு அரசன் நான். நீங்கள் சரியான செயலைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு என் முழு ஆதரவையும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் என்னை உங்கள் நண்பனாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால், உங்களைப் போன்ற ஒருவருடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதை எனக்குக் கிடைத்தப் பெரும்பேறாக நான் கருதுவேன்,” என்று கூறினான்.

துரியோதனன் தன்னுடைய ஒரே ஆதரவாளனைப் பார்த்துப்

புன்னகைத்துவிட்டு, தன்னை நோக்கி நீட்டப்பட்டிருந்த அவனுடைய கையை உறுதியாகப் பிடித்தான். கூட்டத்தினர் மூச்சுவிட மறந்து நின்றனர். நிரம்பி வழிந்து கொண்டிருந்த பார்வையாளர் பகுதிகளை நோக்கி இளவரசன் துரியோதனன் திரும்பியதைக் கர்ணன் பார்த்தான்.

"என் அருமைக் குடிமக்களே, எனக்கு ஒரு கனவு இருக்கிறது. இது ஒரு சாத்தியமற்றக் கனவு என்று உங்களில் ஒருசிலர் கூறக்கூடும். ஆனாலும் இது ஓர் அழகான கனவு. எல்லாத் தடைகளும் சுக்குநூறாக நொறுங்கி, நாம் ஒரு சுதந்திரமான உலகில் வாழ்கின்ற ஓர் எதிர்காலத்தை நான் பார்க்கிறேன். மக்களிடம் அவர்களுடைய சாதிகளைப் பற்றிக் கேட்பதை நிறுத்திவிட்டு, நாம் ஒருவரையொருவர் சமமாக நடத்துகின்ற ஓர் எதிர்காலத்தை நான் பார்க்கிறேன். மூடநம்பிக்கைகளின் பிடியிலிருந்து என் நாடு விடுபட்டுக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். ஒருவனால் சாதிக்க முடிகின்ற விஷயங்கள்மீது எல்லைகள் வரையறுக்கப்படாத ஓர் எதிர்காலத்தை நான் பார்க்கிறேன். பிறப்பு எனும் தற்செயலான நிகழ்வு, சாதனையின் குறுக்கே நிற்காத ஓர் எதிர்காலத்தை நான் பார்க்கிறேன்.

"திறமைக்கு சாதி வேறுபாடு கிடையாது என்பதற்கு இந்த இளைஞன் ஒரு சாட்சி. எல்லாச் சலுகைகளையும் தாங்களே கைவசப்படுத்திக் கொள்ள விரும்புகின்ற, எல்லாவற்றையும் தாங்களே அபகரித்துக் கொள்ளத் துடிக்கின்ற சில சக்திவாய்ந்த குழுக்கள் நம் சமுதாயத்தில் உள்ளன. இவர்கள் மற்றவர்களைத் தங்கள் பாதங்களின்கீழே உள்ள தூசுபோல நடத்துகின்றனர். இந்த இளைஞனைத் தென்னாட்டைச் சேர்ந்த மாபெரும் சாம்ராஜ்யங்கள் வலை வீசித் தேடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவனுடைய குற்றம் என்ன? இவன் கற்றுக் கொள்ள விரும்பினான். ஒருவன் கனவு காணத் துணிந்ததற்காக, பரசுராமனின் சீடர்கள் அவனைத் தண்டிக்க விரும்புகின்றனர், ஓர் உயர்ந்த சாதிக்குள் பிறக்காததற்காக அவனை அவமானப்படுத்த விரும்புகின்றனர். இது சரியான செயலா? தொடர்ந்து எல்லோருக்கும் அறிவு மறுக்கப்பட்டுக் கொண்டே இருந்தால், இந்நாட்டிற்கு என்ன நிகழும் என்று நாம் எப்போதாவது நிதானமாகச் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? பெரும்பான்மையான மக்கள் அறியாமையிலும் வறுமையிலும் வாழ்கின்றனர். யார் தூய்மையானவர்கள், யார் தூய்மையற்றவர்கள் என்பது ஒருசிலரால் தீர்மானிக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு எந்தப் புனித நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகின்றனர்? வேதங்களைக் கற்றுக் கொள்வதற்கு எல்லோரையும் அனுமதிப்பதற்கு இவர்கள் ஏன் பயப்படுகின்றனர்? அப்படி

அனுமதித்துவிட்டால், இவர்கள் மற்றவர்களுக்கு அறிவுறுத்துகின்ற கட்டுப்பாடுகளுக்கும் மனிதத்தன்மையற்றப் பழக்கவழக்கங்களுக்கும் வேதங்களில் எந்த அனுமதியும் இல்லை என்பதை மக்கள் பார்த்துவிடுவார்கள் என்று அவர்கள் பயப்படுகிறார்களா? இவர்கள் நம் நாட்டை எங்கே வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்? 'போதும்!' என்று கூறுவதற்கான நேரம் இன்னும் வரவில்லையா?"

துரியோதனன் தன் பேச்சை நிறுத்திவிட்டு ஒருமுறை ஆழமாக சுவாசித்தான். அந்த அரங்கம் ஓர் எதிர்பார்ப்புடன் காத்திருந்தது. "அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசன் என்ற முறையில், ஒரே ஒரு வாக்குறுதியை மட்டும் உங்களுக்கு என்னால் கொடுக்க முடியும். பரசுராமனும் அவனுடைய அடிமை அரசர்களும் நம் நிலத்தை வெற்றி கொள்வதற்கு நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். மேலும், தர்மம் என்ற பெயரில் நம் மதத்தையும் கலாச்சாரத்தையும் வேரோடு அழிக்கின்ற நபர்களின் இரும்புப் பிடியிலிருந்து தென்னாட்டு மன்னர்கள் விடுபடுவதைப் பார்க்கவும் நான் விரும்புகிறேன். இன்று, இந்தப் பட்டமளிப்பு நாளன்று, என் அன்புக்குரிய மக்களான உங்களுக்கு நான் அளிக்கும் வாக்குறுதி இதுதான். பசியையும் அறியாமையையும் வலியையும் துடைத்தெறிய என் வாழ்வின் ஒவ்வொரு கணமும் நான் கடுமையாக முயற்சிப்பேன். என் கனவுகளுக்கு நம் புனித நூல்களில் அனுமதி இருக்கிறது. சிவபெருமான் என் கைகளுக்கு வலுவூட்டட்டும். வடக்கில் இமயத்திலிருந்து, தெற்கில் மூன்று நதிகள் ஒன்றுகூடுகின்ற இடம்வரை, பசி, சாதி, சமத்துவமின்மை போன்ற சாபங்களை முற்றிலுமாகக் களைவதற்கு என் கடைசி மூச்சுவரை நான் போராடுவேன். இதுதான் என் கனவு, என் வாக்குறுதி, என் தர்மம்."

20,000க்கும் அதிகமானோர் இருந்த கூட்டத்தில் கனத்த மௌனம் நிலவியது. பிறகு, கண்ணுக்குப் புலப்படாத கை ஒன்று, அவர்களை ஒன்றாக உயர்த்துவதுபோலத் தோன்றியது. கதிரவனின் ஒளி அவர்களுடைய முகங்களுக்குக் காவி வண்ணம் தீட்டிக் கொண்டிருக்க, அவர்களுடைய உற்சாகக் குரல்கள் விண்ணை நோக்கி உயர்ந்தன.

கர்ணன் தன் கண்களில் கண்ணீருடன் துரியோதனனைப் பார்த்தபோது, பட்டத்து இளவரசனான அவன், வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பை வெளியிட்டான். "என் அருமைக் குடிமக்களே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, தகுதியின் அடிப்படையில் மட்டுமே ஒருவன் அரசனாக முடிசூட்டப்படுவதைப் பார்த்து மகிழுங்கள். நம் மாபெரும் நிலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்த, நான் சுவீகாரமாகப் பெற்றுள்ள செழிப்பான அங்க நாட்டை, என் நண்பன்

கர்ணனுக்கு நான் கொடுக்கிறேன். அவன் இனியும் ஒரு தேரோட்டி அல்ல. இன்றிலிருந்து, அவன் அங்க நாட்டு அரசன் என்று அழைக்கப்படுவான். ஒரு வீரன் என்ற முறையில், அவனுடைய தகுதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அங்கீகாரம் இது.”

அதிர்ச்சி கலந்த ஒரு மௌனம் பின்தொடர்ந்தது. பிறகு, அங்கு கூடியிருந்த புரோகிதர்கள் கோபத்தால் கொதித்தனர். ஒருசிலர், தாங்கள் மறைத்து வைத்திருந்த குத்துவாள்களை உருவிக் கொண்டு, அரங்கின் நடுவே இருந்த திடலுக்கு ஓடினர். ஆனால் இளவரசன் துச்சாதனன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். கௌரவச் சகோதரர்கள், பட்டத்து இளவரசனைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தினர். அரங்கில் உற்சாகம் பொங்கி வழிந்தது. கூட்டத்தினரிடமிருந்து பலத்தக் கைதட்டல்கள் எழுந்தன. அங்கிருந்த பழமைவாதிகளுக்கு இது மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

“அங்க நாட்டு அரசனுக்கு முடிசூட்டு விழா தொடங்கட்டும்,” என்று துரியோதனன் கட்டளையிட்டான்.

* * *

பார்வையாளர்கள் பகுதியில், ஏகலைவன் ஒரு கனத்த இதயத்துடன் எழுந்து நின்றான். அவன் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்தப் போராடினான். சாதியின் பலிபீடத்தில் தன் கட்டைவிரலைப் பலி கொடுத்தப் பிறகு, தான் துரதிர்ஷ்டவசமாகப் பிறந்துவிட்டிருந்த நாட்டை அவன் மோசமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்திருந்தான். இப்போது, கர்ணனுக்குக் கிடைத்தத் திடீர் அதிர்ஷ்டத்தைக் கண்டபோது, தன் இழப்புக் குறித்த வெறுப்பு அவனுள் தீவிரமடைந்தது. ‘துரோணர் மட்டும் என் எதிர்காலத்தை நயவஞ்சகமாக என்னிடமிருந்து பறிக்காமல் இருந்திருந்தால், கர்ணனின் இடத்தில் என்னால் இருந்திருக்க முடியும்,’ என்று அந்த வேடுவன் நினைத்தான். கர்ணனுக்கு முடிசூட்டப்பட இருந்ததைக் காண அவனால் முடியவில்லை. எனவே அவன் அந்த அரங்கைவிட்டு வெளியே நடந்தான்.

ஏகலைவன் வெளியே வந்தபோது, ஜரன் அவனைப் பார்த்து, “சகோதரா . . .” என்று கத்தினான். ஆனால் கழிவிரக்கத்தில் மூழ்கிப் போயிருந்த அந்த வேடுவனுக்கு அந்தப் பிச்சைக்காரனின் குரல் கேட்கவில்லை. அவன் ஜரனின் முகத்தை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல், தன்னை மறந்து ஒருசில நாணயங்களை அவனை நோக்கி வீசி எறிந்துவிட்டு, தன் நடையைத் தொடர்ந்தான். அரங்கிலிருந்து வந்த சத்தம் தேய்ந்து கொண்டே போனபோது, ஏகலைவனின் காயப்பட்ட மனத்தில் நம்பிக்கை மீண்டும் துளிர்விட்டது.

ஓர் இளவரசன் தன் சமுதாய அமைப்புமுறைக்குச் சவால்விட்டிருந்தான். எதிர்காலம் ஒருவேளை அவனுக்குச் சொந்தமாகக்கூடும். தன் நாடு துரியோதனனைப் போன்ற ஒருவனைப் பெற்றெடுத்திருந்தது என்றால், தான் நினைத்திருந்த அளவுக்கு அது மோசமானதல்ல என்று ஏகலைவன் நினைத்தான். 'ஒரு கட்டைவிரல் இல்லாதது ஏன் என் கனவுகளின் குறுக்கே நிற்க வேண்டும்?' என்று அந்த வேடுவ இளைஞன் யோசித்தான். பிறகு தன் தலையெழுத்தை மாற்றியமைத்த ஒரு தீர்மானத்தை அவன் எடுத்தான். தான் நெடுநாட்களாகப் பயன்படுத்தாமல் போட்டிருந்ததால் தூசி படிந்து கிடந்த தன் வில்லை நோக்கி ஓடிய அவன், அதை மென்மையாக எடுத்து, மீண்டும் பயிற்சி செய்யத் தொடங்கினான். ஒரு கட்டைவிரல் இல்லாமலேயே தன்னால் அர்ச்சுனனைவிட மிகச் சிறந்த வில்லாளனாக ஆக முடியும் என்று அவன் நினைத்தான்.

* * *

விழா அரங்கிற்குள், விஷயங்கள் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்ததாக அந்தப் புரோகிதர்கள் கருதினர். அடர்த்தியான மேகங்கள் பகலவனை மூடியிருந்தன. ஆங்காங்கே தாறுமாறான வடிவங்களில் மின்னல்கள் வெட்டிக் கொண்டிருந்தன. ஆனால் 20,000 தொண்டைகளிலிருந்து எழுந்த மந்திர உச்சரிப்புக்களை எதுவொன்றாலும் அமைதிப்படுத்த முடியவில்லை. கிருபரும் அசுவத்தாமனும் இந்துமதத்தின் மிகப் புனிதமான விதிமுறைகளை மீறி, நினைத்துப் பார்க்க முடியாத ஒரு செயலைச் செய்து கொண்டிருந்ததைக் கண்ட தௌமியனும் அவனுடைய குழுவினரும் திகிலோடு அதைப் பார்த்தனர். அந்தத் தேரோட்டியின் உடலின்மீது நறுமண நெய் தடவப்பட்டு, அவன் ஓர் அரசனாகவும் ஒரு சத்திரியனாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது சாதி விதிமுறைகளை மீறிய ஒரு கண்டிக்கத்தக்கச் செயல். இது போதாதென்று, கிருபரும் அசுவத்தாமனும், எல்லோர் முன்னிலையிலும், அனைத்து மந்திரங்களிலும் மிகப் புனிதமான காயத்திரி மந்திரத்தை உச்சரித்தது அந்த பிராமணர்களின் ரத்தத்தைக் கொதிக்கச் செய்தது. 'அது ரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஒரு மந்திரம் என்று அந்த முட்டாளுக்குத் தெரியாதா? ஒரு பிராமணனைத் தவிர வேறு யாருடைய காதுகளிலும் அது விழக்கூடாது என்பதை அறியாதவனா அவன்? சூத்திரர்களும் பெண்களும் தற்செயலாக அந்த மந்திரத்தைச் செவிமடுத்தால்கூட, அவர்களுடைய காதுகளில் உருக்கிய ஈயம் ஊற்றப்பட வேண்டும் என்று இந்துமத விதிகளில் கூறப்பட்டுள்ளது

அவனுக்கு மறந்துவிட்டதா? காயத்திரி மந்திரத்தை இப்போது உரத்தக் குரலில் முழங்கி, அங்கிருந்த கூட்டத்தினரையும் அதை உச்சரிக்கும்படி வலியுறுத்திக் கொண்டிருந்த அந்தக் கிறுக்கன் கிருபனையும் குருநாதர் துரோணரின் மூட மகன் அசுவத்தாமனையும் யார் கட்டுப்படுத்துவது?' என்று அவர்கள் தங்களுக்குள் குமுறினர். பல்வேறு சாதிகளையும் சமய நம்பிக்கைகளையும் சேர்ந்த, பல்வேறு நிறங்களைக் கொண்ட ஆயிரக்கணக்கான மக்களால் மீண்டும் மீண்டும் முழங்கப்பட்டுக் கொண்டிருந்த காயத்திரி மந்திரத்தால் அந்த அரங்கமே அதிர்ந்தபோது, தௌமியன் புழுவாக நெளிந்தான்.

கர்ணன் இப்போது அதிகாரப்பூர்வமாக அங்க நாட்டின் அரசனாக ஆனான். பல நூற்றாண்டுகளில், இவ்வாறு பதவி உயர்வு கொடுக்கப்பட்ட முதல் சூத்திரனாக அவன் ஆனான். அந்த ஒரு துணிச்சலான நடவடிக்கையின் மூலம், தன்னையும் பழமைவாதிகளையும் இணைத்தக் கடைசிப் பாலத்தை இளவரசன் துரியோதனன் எரித்துவிட்டிருந்தான். துரியோதனனின் வடிவில் முளைத்தெழுந்திருந்த தீமை, எந்த விலை கொடுத்தாவது களையப்பட்டாக வேண்டும் என்பதில் தௌமியன் உறுதியாக இருந்தான். பரதகண்டத்தின் எதிர்காலமும் தர்மத்தின் பாதுகாப்பும் அதைச் சார்ந்திருந்ததாக அவன் நம்பினான். அவன் ஆறுதல் வேண்டிக் கிருஷ்ணனைப் பார்த்தான், ஆனால் அந்த யாதவன் குந்தியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தன் அத்தையான குந்தி அந்த அரங்கைவிட்டு வெளியேறுவதற்கு அவளுடைய சேவகர்கள் அவளுக்கு உதவிக் கொண்டிருந்ததைக் கண்ட கிருஷ்ணன் ஏதோ யோசித்தபடி தன் தலையை இடமும் வலமுமாக அசைத்தான். தர்மன் ஒரு பொன்னான வாய்ப்பைத் தவறவிட்டிருந்தான். திறமை வாய்ந்த அந்தத் தேரோட்டியைச் சாமர்த்தியமாகத் தன் நண்பனாக ஆக்கியதன் மூலம், துரியோதனன் எல்லோரையும் தோற்கடித்திருந்தான். மூத்தப் பாண்டவனான தர்மனுக்கு ஏதேனும் புத்தி இருந்திருந்தால், துரியோதனன் செய்ததை அவன் செய்திருப்பான், யாராலும் வெல்ல முடியாத ஒரு வீரனைத் தன் நண்பனாக ஆக்கியிருப்பான். 'இந்த மரமண்டைகளுக்கு எப்படி நான் புரிய வைப்பது?' என்று கிருஷ்ணன் யோசித்தான். குந்தி ஏன் மயங்கி விழுந்திருந்தாள்? ஏதோ சரியில்லை என்று அவனுக்குத் தோன்றியது. அந்தத் தேரோட்டியின் முடிசூட்டு விழாவைக் கிருஷ்ணன் ஒரு புன்னகையுடன் பார்த்தான். விளையாட்டு மேலும் கடினமாகிக் கொண்டிருந்தது. அதை மிகவும் ரசித்தக் கிருஷ்ணன், தன் சகோதரி சுபத்திரையைப் பார்த்தான். அவளுடைய பார்வை துரியோதனன்மீது

நிலைத்திருக்கவில்லை. எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு, ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ற அர்ச்சுனனின் உருவத்தைக் கண்டு, புறா போன்ற அவளுடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. இதைக் கவனித்தக் கிருஷ்ணனின் மனத்தில் மெல்ல ஒரு திட்டம் உருவாகத் துவங்கியது.

"துரியோதனன் அர்ச்சுனனை இவ்வாறு இழிவுபடுத்தியிருக்கக்கூடாது. தகுதியற்ற ஒருவனுக்கு ஏன் இளவரசர் இவ்வளவு பெரிய பதவியைக் கொடுத்தார்?" என்று சுபத்திரை தன் சகோதரனிடம் கேட்டாள்.

கிருஷ்ணன் தன் சகோதரியின் கையைப் பிடித்துக் கொண்டு, "வா, நாம் இங்கிருந்து போகலாம்," என்று கூறினான்.

* * *

அரங்கத்திற்கு வெளியே, ஏகலைவன் தன்னை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் போயிருந்தது குறித்த வருத்தத்துடன், அவன் வீசியெறிந்திருந்த செப்புக் காசுகளை ஜரன் உருட்டிக் கொண்டிருந்தான். மனம் சோர்ந்து போயிருந்த அதிரதன் தன் குடிசையை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்ததைக் கண்ட அவன், அதிரதனை அழைத்தான். ஆனால் அந்தத் தேரோட்டி திரும்பிப் பார்க்கவில்லை. தங்கள் மகன் திரும்பி வந்திருந்ததைப் பற்றிய செய்தியைத் தன் மனைவியிடம் எவ்வாறு தெரிவிப்பது என்பது பற்றிய தன் சொந்தக் கவலைகளில் மூழ்கியிருந்த அவனுடைய காதுகளில், அந்தப் பிச்சைக்காரனின் அழைப்பு விழவில்லை. ஒரு தாயிடம், அவளுடைய மகன் ஓர் அரசனாக ஆகிவிட்டான் என்றும், ஆனால் அவன் தன் தந்தையின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட இல்லை என்றும் எப்படிக் கூறுவது என்று அவன் திணறினான். தொலைவில் மறைந்து கொண்டிருந்த அவனுடைய உருவத்தைப் பார்த்து, ஜரன், "ஓ கிருஷ்ணா, ஏழைகளையும் ஆதரவற்றவர்களையும் நீ ஏன் இவ்வாறு சோதிக்கிறாய்?" என்றான். தான் கேள்விப்பட்டிராத ஒரு மந்திர உச்சரிப்பு அந்த அரங்கிலிருந்து வந்து கொண்டிருந்ததை அவன் செவிமடுத்தான். திடீரென்று அவனுக்குப் பசித்தது. சாப்பாடு விற்றுக் கொண்டிருந்த ஒருவனிடம் அவன் ஒரு நாணயத்தைக் கொடுத்தான். அந்த விற்பனையாளன் ஜரனிடம் ஒரு வாழை இலையைக் கொடுத்தான். ஜரன் ஒரு தீண்டத்தகாதவனாக இருந்ததால், அந்த இலையில்தான் அவனுக்கு உணவு பரிமாறப்படும். அந்த இலை முதலில் நிலத்தில் ஒரு குழியில் வைக்கப்படும். ஜரன் தன் சாப்பாட்டிற்காகக் காத்திருந்தான். தர்மனும் தன் வாலை ஆட்டிக் கொண்டு, ஜரனின்

முகத்தை நக்கிக் கொண்டு, பொறுமையாகக் காத்திருந்தது. அப்போது மழை பெய்யத் துவங்கியது. ஆனால் ஜரன் அதைப் பொருட்படுத்தாமல் காத்திருந்தான். நீண்டநேரம் கழித்து, அந்த விற்பனையாளன், ஒரு கரண்டி நிறைய அரிசிச் சோற்றை அந்தக் குழிக்குள் இருந்த இலையில் நிரப்பினான். ஜரன் வழக்கம்போலத் தன் கண்களை மூடி, தன் உணவுக்காகக் கிருஷ்ணனுக்கு நன்றி கூறினான்.

துல்லியமாக அக்கணத்தில், ஒரு ரதம் மிக வேகமாக அவனைக் கடந்து சென்றதில், அருகிலிருந்த ஒரு குழியில் தேங்கியிருந்த அழுக்கு நீர் ஜரனின்மீது தெறித்தது. ஜரன் தன் கண்களைத் திறந்தபோது, அவனுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அவன்மீது தெறித்திருந்த துர்நாற்றம் வீசிய அழுக்கு நீர், அவனுடைய உணவின்மீதும் தெறித்து அதை வீணாக்கியிருந்தது. தன் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்த அந்த ரதத்தின் பின்பக்கத்தையும், ஒரு மயிலிறகைத் தன் தலையில் அணிந்திருந்த ஒருவனின் நிழலுருவத்தையும், அவனருகே ஒரு பெண்ணையும் மட்டுமே அவனால் பார்க்க முடிந்தது. "பசியோடு இருக்கும் ஒருவனுக்கு உணவைக் காட்டிவிட்டு, பிறகு ஏன் அதை அவனிடமிருந்து பறிக்கிறாய்? கடவுளே, உனக்கு இரக்கமே கிடையாதா?" என்று அந்தப் பிச்சைக்காரன் அழுதான்.

சிறிது நேரம் கழித்து, அரங்கிலிருந்து கூட்டம் வெளியேறிய பிறகு, கர்ணன், பட்டத்து இளவரசனோடு ஒன்றாகப் பயணித்துக் கொண்டிருந்ததைக் கண்ட ஜரனுக்கு இனிமையான ஆச்சரியம் ஏற்பட்டது. கர்ணனுக்கு வாய்த்திருந்த அதிர்ஷ்டத்திற்காக அவன் அவனை மனதார வாழ்த்தினான். கடவுள்களின் பூமியில் ஒரு பிச்சைக்காரனின் வாழ்த்துக்களுக்கு என்ன முக்கியத்துவம் இருந்துவிடப் போகிறது என்பதை அவன் அறிந்திருந்தாலும்கூட, அவன் கர்ணனுக்காக மகிழ்ச்சியடைந்தான். தன் சாப்பாட்டின்மீது கொட்டியிருந்த அழுக்கு நீர் வடிந்துவிட்டிருந்ததா என்று பார்ப்பதற்காக அவன் தன் இலையைப் பார்த்தபோது, எறும்புகள் அதன்மீது படையெடுத்திருந்ததை அவன் கண்டான். தன் அன்புக்குரிய கடவுளான கிருஷ்ணன்மீது தான் கோபம் கொண்டது குறித்து அவன் உடனடியாகக் குற்றவுணர்வு கொண்டான். இந்த சிறிய உயிரினங்களின் பசி, தன்னுடைய பசியைவிட அதிகமாக இருந்ததைக் கிருஷ்ணன் அறிந்திருந்தான் என்றும், கிருஷ்ணனைப் பொறுத்தவரை, எறும்பும் தானும் ஒன்றுதான் என்றும் ஜரன் தனக்குள் நினைத்துக் கொண்டான். 'கிருஷ்ணன் என்னிடம் கொடூரமாக நடந்து கொண்டிருந்தாக நினைப்பதற்கு எனக்கு என்ன ஆணவம்! இது அவனுடைய லீலைகளில் ஒன்று. நான் பேராசைக்காரனாக ஆகிக்

கொண்டிருந்ததையும், மற்ற உயிரினங்களைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை என்பதையும் அவன் எனக்குக் காட்டிக் கொண்டிருக்கிறான். நேற்று எனக்கு உணவு கிடைக்கத்தானே செய்தது? மழையில் உணவு தேடுவது இச்சிறு உயிர்களுக்கு எவ்வளவு சிரமமாக இருக்கும்,' என்று நினைத்த ஜரன், தன்னுடைய உணவை அந்த எறும்புகள் சுமந்து செல்வதை மகிழ்ச்சியாகப் பார்த்தான்.

* * *

அரண்மனைக்குள், எதிர்காலத்தைப் பற்றித் தீர்மானிப்பதற்காக தௌமியனும் ஐந்து பாண்டவச் சகோதரர்களும் ஒன்றுகூடியிருந்தனர். துரோணரின் வீட்டில் ஒரே களேபரமாக இருந்தது. அசுவத்தாமன் தன் தந்தையுடன் இன்னொரு விவாதத்தை முடித்துவிட்டு, துரியோதனனைச் சந்திப்பதற்காகத் தன் வீட்டிலிருந்து வெளியேறியிருந்தான். ஜயத்ரதனும் கர்ணனும் துச்சாதனனும் ஒன்றுகூடி அன்றைய நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். துரியோதனன் சிந்து நாட்டு அரசன்மீது ஒரு கண் வைத்திருந்தான். தன் தங்கை துச்சலையின்மீது அவன் காதல் வயப்பட்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. அவனுடைய சகோதர உள்ளுணர்வு எச்சரிக்கையாக இருந்தது. இன்னோர் அறையில், தன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான பல்வேறு திட்டங்களைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக இருந்த சகுனி, கொட்டக் கொட்ட விழித்திருந்தான்.

பீஷ்மரிடம் விடைபெற்றுக் கொள்ள வந்திருந்த விதுரன், தேடப்பட்டவனைத் தென்னக் ராஜ்யங்களின் கூட்டமைப்பிடம் ஒப்படைப்பது பற்றி அவரிடம் மென்மையாகக் கேட்டான். பீஷ்மர் தன் பிரதம மந்திரியை முறைத்துப் பார்த்துவிட்டு, அது இனி சாத்தியமில்லை என்று கூறித் தலையசைத்தார். தென்னக அரசர்களுடன் ஒரு போர் ஏற்படக்கூடும் என்ற தன் பயத்தை விதுரன் வெளிப்படுத்தியபோது, சில போர்கள் சண்டையிடத் தகுந்தவை என்று பீஷ்மர் புதிராக பதிலளித்தார். பீஷ்மரின் பதிலைத் தன் மனத்தில் அசைபோட்டவாறு தன் அறையை நோக்கித் தனியாக நடந்து சென்ற விதுரன் புன்னகைத்தான். இப்படிப்பட்டக் கணங்கள், அந்த மாபெரும் அரசாட்சிப் பொறுப்பாளரின்கீழ் வேலை செய்வதை ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக ஆக்கின.

* * *

காட்டில், தன் வலியையும் பயத்தையும் பொறுத்துக் கொண்டு ஏகலைவன் வில் வித்தையைப் பயிற்சி செய்தான் . . .

தங்கள் குடிசையில், அந்த வயதான தேரோட்டி மிகவும் மனமுடைந்து போயிருந்த தன் மனைவிக்கு ஆறுதலளித்துக் கொண்டிருந்தான். கர்ணன் நிச்சயமாக மறுநாள் அவளை வந்து பார்ப்பான் என்று அவன் அவளிடம் முணுமுணுத்தான். ஆனால் தன் வார்த்தைகள்மீது அவனுக்கே நம்பிக்கை இருக்கவில்லை . . .

துவாரகையை நோக்கி விரைந்து கொண்டிருந்த ஒரு ரதத்தில், சிந்தனையில் மூழ்கியிருந்த ஓர் இளவரசன் தன் குதிரையின் கடிவாளங்களைப் பிடித்திருக்க, ஓர் இளவரசி, அர்ச்சுனனின் நொந்து போன முகத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் மௌனமாகப் பயணித்தனர் . . .

அஸ்தினாபுர வீதிகளில், பசியோடு இருந்த ஜரன் தன்னுடைய குருட்டு நாயுடன் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். தன் பக்தர்களை மட்டுமன்றி, மிகச் சிறிய உயிரினங்களின்மீதுகூட அக்கறை காட்டிய கிருஷ்ணனைப் பற்றி அவன் புகழ்ந்து பாடிய ஒரு பாடல், அஸ்தினாபுரத்தின் பெரிய மற்றும் சிறிய வீடுகளின் மேலாகத் தவழ்ந்து சென்றபோது, பரதகண்டத்தின் அந்த மாபெரும் நகரம் மெல்ல மெல்ல உறக்கத்திற்குள் மூழ்கியது. ஒரு பண்டைய நாட்டின் நீண்ட வரலாற்றில் இன்னொரு நாளின்மீது இரவு தன் போர்வையைப் போர்த்தியிருந்தது.

19

ஒரு பிராமணனின் பழிவாங்கல்

திருதராஷ்டிரன் தன் மகனுக்காகக் கவலையோடு காத்திருந்தான். தன் மனைவியின் மௌனத்தால் அவன் குழம்பிப் போயிருந்தான். “காந்தாரி, அந்தத் தேரோட்டி இளைஞன் அர்ச்சுனனைவிட மிகச் சிறந்த வில்லாளன் என்று நான் கேள்விப்படுகிறேன். அவன் பெயர் என்ன? நம் மகன் செய்தது ஒரு மாபெரும் விஷயம். அதற்கு ஏராளமான துணிச்சல் தேவை. புதிய நண்பனும் அசுவத்தாமனும் அவனுக்கு ஆதரவாக இருப்பர். துரியோதனன் இனி ஒருபோதும் அர்ச்சுனனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. ஆனால் அவன் வர ஏன் இவ்வளவு தாமதமாகிறது? காந்தாரி, நீ ஏன் இப்படி மௌனமாக இருக்கிறாய்? உன் மகனைப் பற்றி உனக்குப் பெருமை இல்லையா? அவன் இன்று செய்த காரியத்தை நம்மில் எத்தனைப் பேரால் செய்திருக்க முடியும்?”

அரசனின் மணிமகுடத்தையும் அணிகலன்களையும் தன் பழக்கப்பட்ட விரல்களால் சரிசெய்துவிட்டு, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்த காந்தாரி, “அவர்கள் வந்துவிட்டார்கள்,” என்று மென்மையாகக் கூறினாள்.

“மாண்புமிகு அரசரே, உங்களைப் பார்க்க யார் வந்திருக்கிறார்கள் என்று பாருங்கள்,” என்று ஒரு பரிச்சயமான குரல் கூறியது.

அந்தக் குரல் வந்த திசையை நோக்கித் தன் தலையைத் திருப்பிய திருதராஷ்டிரன், “ஆஹா, சகுனி! வா, நம் இளவரசன் எங்கே?” என்று கேட்டான்.

சகுனி காந்தாரியை நோக்கி நடந்து கொண்டே, ஒரு கோணல் புன்னகையுடன், "சகோதரி, நீ ஏன் இவ்வளவு தீவிரமான முகத்துடன் இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"சகுனி, உனக்கு இங்கே என்ன வேலை?"

"காந்தாரி, நீ ஏன் உன் சகோதரனிடம் எப்போதும் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்கிறாய்? இன்றைய நாளை அவன் நம்மோடு சேர்ந்து கொண்டாடட்டும். ஆனால் அந்தப் புதிய வில்லாளனும் துரியோதனனும் எங்கே?"

திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருந்த அந்த அறையின் வளைவு விதானத்தின் வழியாகக் கர்ணனோடும் அசுவத்தாமனோடும் நடந்து வந்த துரியோதனன், "தந்தையே, நான் இங்கே இருக்கிறேன்," என்று பதிலளித்தான்.

"ஆஹா, இன்றைய நாளின் கதாநாயகன்!" என்று கூறிய திருதராஷ்டிரன், எழுந்து நின்று தன் மகனைக் கட்டித் தழுவினான். "உன் நண்பன் எங்கே?" என்று கேட்ட அரசன் தன் கைகளை நீட்டினான். கர்ணன் முன்னால் நகர்ந்து வந்து, அரசனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். அரசன் தன் கைகளைக் கர்ணனின் தசைசெறிந்த கைகளின்மீது ஓடவிட்டு, பிறகு புன்னகைத்தான். "ஒரு தலைசிறந்த வில்லாளனுக்குரிய நீண்ட கைகள் உனக்கு இருக்கின்றன," என்று அவன் கூறினான்.

"அரசே, அர்ச்சுனன் போன்ற ஒரு வில்லாளன் இருந்தும்கூட, இவன்தான் உலகிலேயே தலைசிறந்த வில்லாளன் என்று உறுதியாகக் கூறலாம்," என்று சகுனி குறுக்கிட்டான்.

"துரியோதனா, நீ பீமனின் கதையைக் கிட்டத்தட்ட முடித்துவிட்டிருந்ததாக நான் கேள்விப்பட்டேன்," என்று கூறிய அரசன் நமுட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான். "மகனே, நீ இப்போது ஒரு வீரன். போரில் உன்னைக் கைவிட்டுவிட்டுச் செல்லாதவர்களின் ஆதரவு உனக்கு இருக்கிறது. நீ வளர்ந்து வந்த காலம் நெடுகிலும், திறமை வாய்ந்த உன்னுடைய ஒன்றுவிட்டச் சகோதரர்களைக் கண்டு நீ பயந்து வந்திருக்கிறாய். ஆனால் இனி நீ அவர்களைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டியதில்லை." தன்னைத் தடுத்தத் தன் மனைவியின் கையை அரசன் திருதராஷ்டிரன் அலட்சியப்படுத்தினான். "காந்தாரி, என் மகன் எனக்குப் பிறகு அரசனாவதை நான் பார்க்க விரும்புகிறேன். ஒரு வேசி மகன் அஸ்தினாபுரத்தின் அரியணையில் அமர்வதை நான் விரும்பவில்லை. இதில் ஏதாவது தவறு இருக்கிறதா?"

கோபத்தில் சிவந்து கொண்டிருந்த திருதராஷ்டிரனின் முகத்தைப் பார்த்தபடி, "தர்மன் மரண தேவனான எமனின் மகன்," என்று சகுனி

கூறினான்.

திருதராஷ்டிரன் கோபத்தில் தன் கைத்தடியைக் கொண்டு தரையின்மீது ஓங்கிக் குத்தினான். "இல்லை! அவன் ஊர்பேர் தெரியாத ஏதோ ஒரு பிராமணனின் மகன். காந்தாரி, நீ இதில் குறுக்கிடாதே. நான்தான் அரசன். எனக்குப் பிறகு யார் அரசனாக ஆவார்கள் என்பதைத் தீர்மானிப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் போதுமான அளவுக்குத் துன்புற்று வந்துள்ளேன். நான் ஒரு குருடனாகப் பிறந்தது என் தவறா? நான் இளைஞனாக இருந்தபோது, தண்டாயுதத்தால் என்னை எந்தவொரு வீரனாலும் வீழ்த்த முடிந்ததா? துரியோதனா, நான் உனக்கு ஒரு பரிசு கொடுக்க விரும்புகிறேன். காந்தாரி, மணியை ஒலிக்கச் செய்."

ஒரு தண்டாயுதத்தைத் தன் தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்து, சண்டைக்குத் தயார் நிலையில் நின்ற ஒரு வீரனின் ஆளுயர இரும்புச் சிலை ஒன்றை நான்கு காவலர்கள் தட்டுத்தடுமாறி இழுத்து வந்ததை அந்த மூன்று இளைஞர்களும் சகுனியும் பார்த்தனர்.

அந்த அற்புதமான கைவேலைப்பாட்டைக் கண்டு பிரமித்த சகுனி, "இது நம் அனைவருக்கும் தெரிந்த ஒருவனைப்போல உள்ளதே!" என்று உற்சாகமாகக் கூறினான்.

"துரியோதனா, இது உனக்குத்தான். இதை எடுத்துச் சென்று, இதன்மீது பயிற்சி செய்," என்று அரசன் கூறினான்.

"மருமகனே, இந்த பீமனின் தலையை உடைத்துப் பயிற்சி செய். உண்மையான பீமனின் தலையை உடைப்பதற்கான நேரம் விரைவில் வரும்," என்று சகுனி கூறினான்.

நடுங்கிக் கொண்டிருந்த கைகளுடன் காந்தாரி எழுந்து நின்றாள். "சகுனி, தயவு செய்து எங்களை விட்டுவிட்டுப் போய்விடு. நான் எத்தனை முறை உன்னிடம் கூறியுள்ளேன் . . . காந்தாரத்திற்குச் சென்று உன்னுடைய நிலங்களை நிர்வாகம் செய். நீ இங்கு இருப்பதில் எனக்கு விருப்பமில்லை."

"நான் பீஷ்மரிடம் பேசப் போகிறேன். அவர் அனுமதித்தால் . . ."

காந்தாரி இடைமறித்து, "சகுனி, தயவு செய்து இப்போது இங்கிருந்து போ," என்று கட்டளையிட்டாள். "நான் என் மகனுடன் தனியாகப் பேச விரும்புகிறேன்."

கர்ணனும் அசுவத்தாமனும் அந்த தர்மசங்கடமான சூழ்நிலையிலிருந்து தங்களால் தப்பிக்க முடிந்தது குறித்த நன்றியுடன், சகுனியைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறினர்.

அவர்கள் மூவரும் அங்கிருந்து போன பிறகு, காந்தாரி தன் மகனைத் தன் பக்கம் இழுத்து, அவனுடைய முகத்தைத் தன் விரல்களால்

தடவினாள். தன்னால் அவன் முகத்தைப் பார்க்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவள் ஏங்கினாள். அவன் இனியும் தன் தந்தையின் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்ட சிறுவனல்ல. மாறாக, அவன் இப்போது உயரமாக வளர்ந்திருந்தான். "மகனே, நீ ஏன் அப்படிச் செய்தாய்?" என்று அவள் வருத்தத்தோடு கேட்டாள். "ஒரு தேரோட்டியை ஏன் நீ ஓர் அரசனாக ஆக்கினாய்? நீ மேன்மக்களின் ஆதரவை இழக்கும் அபாயத்தில் இருக்கிறாய். இன்று நீ சக்திவாய்ந்த எதிரிகளை உருவாக்கியுள்ளாய். உன் தந்தையின் அரியணையை நீ சுவீகரிப்பதிலிருந்து உன்னைத் தடுப்பதற்கு அவர்கள் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வர். துரியோதனா, நீ ஏன் இப்படிச் செய்தாய்?" தன் மகன் பேசுவதற்காக அவள் காத்திருந்தாள். ஆனால் அவனிடமிருந்து வரக்கூடிய பதிலைக் கேட்க அவள் பயந்தாள்.

"அம்மா, அதுதான் சரியான செயல் என்பதால்தான் நான் அதைச் செய்தேன்."

தன் கண்கட்டில் படர்ந்து கொண்டிருந்த ஈரத்தைத் தன் மகன் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக காந்தாரி வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டாள். அதிர்ஷ்டவசமாக, இளவரசனை துரோணர் தன் அறையில் சந்திக்க விரும்பியதாகக் கூறி ஒரு காவலன் வந்தான். துரியோதனன் தன் தந்தையிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது காந்தாரியின் காதுகளில் விழுந்தது. அவன் தன்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டபோது, அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமல் வெறுமனே தலையசைத்தாள். அவனுடைய காலடிகளின் சத்தம் தேயும்வரை, அவள் அந்த அறையின் சன்னலருகே அசையாமல் நின்றாள். இப்படிப்பட்ட ஒரு மேன்மையான மகனைப் பெற்றதற்காக அவள் பெருமைப்பட்டாள், ஆனால் அவளுக்குள் இருந்த தாய் பயந்து போயிருந்தாள். சரியான செயலைச் செய்வது ஒருபோதும் தண்டிக்கப்படாமல் போனதில்லை என்பதை அவள் அறிந்திருந்தாள்.

* * *

துரியோதனன் துரோணரின் அறைக்குள் நுழைந்தபோது, பாண்டவச் சகோதரர்கள் ஏற்கனவே அங்கு கூடியிருந்தனர். அவர்கள் அவனைப் பார்த்தபோது, அவர்களுடைய உரையாடல் திடுதிப்பென்று நின்றது. துரியோதனன் துரோணரையும் பாண்டவச் சகோதரர்களையும் வணங்கிவிட்டு, துரோணர் பேசுவதற்காகக் காத்திருந்தான்.

துரோணர் துரியோதனனின் கண்களைத் தவிர்த்துவிட்டு, "இளவரசே, நீ உன் குருதட்சணையைச் செலுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. பணத்தின்மீதோ அல்லது நிலத்தின்மீதோ எனக்கு

அக்கறை இல்லை என்பது இப்போது உனக்குப் புரிந்திருக்கும். நான் ஒரு பிராமணன். இப்படிப்பட்ட பௌதீகப் பொருட்கள் என்னை எள்ளளவும் பாதிப்பதில்லை. ஆனால் பல வருடங்களுக்கு முன்பு எனக்கு ஒரு நெருங்கிய நண்பன் இருந்தான். நாங்கள் இருவரும் பரசுராமரின் மாணவர்களாக இருந்தோம். அச்சமயத்தில் அவன் ஒரு பணக்கார இளவரசனாகவும், நான் ஓர் ஏழை பிராமணனாகவும் இருந்தோம். நாங்கள் எங்கள் படிப்பை முடித்துவிட்டு, அங்கிருந்து பிரிந்தபோது, எதிர்காலத்தில் எனக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தான் எனக்கு உதவுவதாக அவன் எனக்கு வாக்களித்தான்," என்று கூறினார்.

அவர் துரியோதனனைப் பார்த்துவிட்டு மேலும் தொடர்ந்தார். "எல்லோரும் பெரிதும் விரும்பிய தர்மவீரன் பட்டத்தை நான் வென்ற பிறகும்கூட, பல வருடங்களாக, என் திறமைகளுக்குப் பொருத்தமான ஒரு வேலையை என்னால் தேடிக் கொள்ள முடியவில்லை. ஏழ்மையும் பசியும் என்னுடைய நிரந்தரத் தோழர்களாக ஆயின. எங்கள் அண்டைவீட்டுச் சிறுவர்கள் சிலர், கரைத்த மாவைப் பால் என்று கூறி என் மகன் அசுவத்தாமனை அதைக் கட்டாயமாகக் குடிக்க வைத்தபோது, என் நண்பனைச் சென்று பார்ப்பதற்கான நேரம் வந்துவிட்டதாக நான் தீர்மானித்தேன். அவன் அப்போது ஓர் அரசனாக ஆகியிருந்தான். நான் அவனிடம் ஒரு யாசகக் கலயத்துடன் சென்றேன். தன்னைப் பார்க்க எனக்கு அனுமதி கொடுப்பதற்கு முன்பு இரண்டு வாரங்களாக அவன் என்னைக் காக்க வைத்தான். நான் கவலையோடு காத்திருந்தேன். ஆனால் அவன் எனக்கு உதவுவதற்குப் பதிலாக, என்னை ஏளனப்படுத்தினான். அந்த அரசன் என்னுடைய நிராதரவான சூழ்நிலை குறித்துப் பரிகசித்தபோது, அவனுடைய அவையினர் என்னைக் கண்டு இகழ்ச்சியாகச் சிரித்ததை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. தனக்குப் புதிதாகக் கிடைத்திருந்த அரச போகங்களில் மும்முரமாக மூழ்கியிருந்த அவன், என்னை அவமதிப்பான முறையில் நடத்தினான். அவன் என்னுடைய கந்தல் ஆடைகளைப் பார்த்து எள்ளி நகையாடிவிட்டு, எனக்கு இவ்வளவு திறமைகள் இருந்தும் என்னால் ஒருபோதும் உருப்பட முடியாது என்பதை எப்போதுமே தான் அறிந்திருந்ததாக என்னிடம் கூறினான். அவன் எனக்கு ஆதரவு காட்டும் பாசாங்குடன், வெகுதொலைவில் இருந்த ஒரு கிராமத்தில் ஓர் இளநிலை ஆசிரியராக எனக்கு ஒரு வேலையைக் கொடுக்க முன்வந்தான். நான் பொறுமையிழந்து, என் முன்னாள் நண்பனான அவனுக்கு, என்னுடன் ஒற்றைக்கு ஒற்றைச் சண்டைக்கு வருமாறு சவால்விட்டேன். ஆனால் அரசர்கள் பிச்சைக்காரர்களோடு சண்டையிடுவதில்லை என்று அவன் கூறினான்.

“அவமானப்படுத்தப்பட்டு, மனமொடிந்து போயிருந்த நான், அன்றே பாஞ்சால நாட்டைவிட்டுப் புறப்பட்டேன். ஆனால் அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற நெருப்பு மட்டும் இன்னும் என் இதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அந்த அரசன் வேறு யாருமல்ல. பாஞ்சால நாட்டு அரசன் துருபதன்தான் அவன். இளவரசே, அந்தக் கயவனை என்னிடம் இழுத்துக் கொண்டு வா. அவன் முகத்தின்மீது நான் காறித் துப்ப வேண்டும். அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசன் என்ற முறையில், உன் குருவிற்காக நீ செய்யக்கூடிய குறைந்தபட்சக் காரியம் இதுதான்.” துரோணர் துரியோதனனைப் பார்த்தார்.

துரியோதனனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை. துரோணர் அவனுடைய தயக்கத்தைப் பார்த்துவிட்டு, எரிச்சலுடன், “நீ தயங்குவாய் என்று எனக்குத் தெரியும். நீ எப்போதுதான் உன் ஆசிரியர்களுக்கும் மூத்தவர்களுக்கும் பிராமணர்களுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கிறாய்? அர்ச்சுனன் கணநேரத்தில் இதைச் செய்துவிடுவான், ஆனால் நாட்டின் பட்டத்து இளவரசன் என்ற முறையில் முதலில் உன்னிடம் கேட்பதுதான் முறையான செயல் என்று தர்மன் கூறினான்,” என்று கூறினார்.

துரியோதனன் தனக்குள் அதிகரித்துக் கொண்டிருந்த கோபத்தை அடக்கக் கடினமாக முயற்சித்தபடி, “முறையான காரணம் இல்லாமல் ஒரு நட்பான அடிமை நாட்டிற்கு எதிராகப் போர் தொடுப்பது சரியான செயல் அல்ல. மேலும், அரசாட்சிப் பொறுப்பாளர் அல்லது அரசரின் அனுமதி இல்லாமல் இப்படிப்பட்ட ஒரு பணியை என்னால் மேற்கொள்ள முடியாது,” என்று பதிலளித்தான்.

“முறையான காரணமா? இளவரசே, ஒரு பிராமணனை ஏளனம் செய்வது உனக்கு ஒரு முறையான காரணமாகத் தோன்றவில்லையா? அரசரின் அனுமதி ஒரு மணிநேரத்திற்குள் உனக்குக் கிடைத்துவிடும். பிறகு நீ என்னுடைய உத்தரவைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில், என் மாணவன் என்ற முறையில் அது உன் கடமை. இதை நீ செய்யத் தவறினால், துருபதனின் சாபக்கேடான நாட்டைச் சீரழிப்பதற்கு நான் அர்ச்சுனனை அனுப்புவேன். போ, போருக்குத் தயாராகு.”

துரியோதனன் அவரை வணங்கிவிட்டு அங்கிருந்து வெளியேறினான். அவன் ஒரு கவலையான மனிதனாகத் தன் அறையை நோக்கி நடந்தான். அசுவத்தாமன், துச்சாதனன், ஜயத்ரதன், புதிதாக முடிசூட்டப்பட்ட அங்க அரசன் கர்ணன் ஆகியோர் அவனுக்காக அங்கே காத்துக் கொண்டிருந்தனர். பட்டத்து இளவரசனைப் பார்த்தபோது கர்ணன் தன் இருக்கையைவிட்டு எழுந்தான். இந்த

மேன்மக்களின் முன்னிலையில் இருந்தது அந்தத் தேரோட்டியின் மகனுக்கு இன்னும் அசௌகரியமாகவும் தர்மசங்கடமாகவும் இருந்தது. தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த ஒருவன் சத்திரியர்களிடத்திலும் பிராமணர்களிடத்திலும் காட்ட வேண்டிய மரியாதையையும் பணிவையும் வெளிப்படுத்தி, தான் இறுக்கமானவன் என்றும் முறைசார்ந்தவன் என்றும் தன் புதிய நண்பர்களால் கருதப்பட வேண்டுமா, அல்லது சாதாரணமாக நடந்து கொள்வதன் மூலம் ஆணவக்காரன் என்று அவர்களிடம் பெயரெடுக்க வேண்டுமா என்று தெரியாமல் அவன் குழம்பினான்.

அவனுடைய தடுமாற்றத்தை உணர்ந்து கொண்ட துரியோதனன், நேராக அவனிடம் சென்று, அவனைத் தன் அருகில் உட்கார வைத்தான். "கர்ணா, நாம் எல்லோரும் நண்பர்கள். நீ எங்களுடன் சாதாரணமாக இருக்கலாம். உண்மையில், உன்னுடைய நட்பு எங்களுக்குக் கிடைத்தது எங்களுக்குக் கிடைத்த மரியாதை. நான் உனக்கு ஓர் உபகாரம் செய்து கொண்டிருப்பதாக ஒரு கணம்கூட நினைக்காதே. உன்னைப் போன்ற ஒரு திறமைசாலிக்கு என்னால் இன்னும் அதிகமாகச் செய்ய முடியாமல் இருப்பது குறித்து நான் வருந்துகிறேன்," என்று கூறினான்.

"தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பையும் மரியாதையையும் சுயமாகச் சம்பாதித்துள்ளவன் நம்மில் இவன் ஒருவன் மட்டும்தான் என்றும், மற்ற அனைவரும் அதிர்ஷ்டவசமாக மேட்டுக்குடியில் பிறந்துள்ளோம் என்றும் இவ்வளவு நேரமும் நான் இவனிடம் கூறி வந்துள்ளேன்," என்று சிந்து நாட்டு அரசன் ஜயத்ரதன் கூறினான்.

"மேன்மை பொருந்திய இளவரசே, எனக்குத் தகுதியில்லாத இத்தகைய நட்பிற்கு என்னால் என்ன கைமாறு செய்ய முடியும்?" என்று கர்ணன் கேட்டான்.

"என்னை துரியோதனன் என்று கூப்பிடத் துவங்கு. அல்லது, நீ விரும்பினால், தௌமியனும் அவனுடைய சீடர்களும் எனக்குக் கொடுத்துள்ள பட்டப்பெயர்களில் ஏதாவது ஒன்றைச் சொல்லிக் கூப்பிடு," என்று துரியோதனன் பரிந்துரைத்தபோது, அங்கு பலத்தச் சிரிப்பு வெடித்தது.

அசுவத்தாமன் துரியோதனனைப் பார்த்து, "அந்தப் பெயர்கள் நிச்சயமாக உனக்குப் பொருந்தும். உன் ஆயுதங்களை எப்படிப் பயன்படுத்துவதென்று உனக்குத் தெரியாது என்று கூறி அவர்கள் அதற்காக ஒரு பெயரை உனக்குக் கொடுத்துள்ளனர். அவர்கள் கூறுவது சரிதான். உன் ஆயுதங்களை எப்படிப் பயன்படுத்துவதென்று உண்மையிலேயே உனக்குத் தெரியவில்லை. இல்லையென்றால், உன் தண்டாயுதத்தைப் பயன்படுத்தி, பீமனின் தடிமனான

மண்டையோட்டை நீ இன்று உடைத்திருப்பாய் . . .” என்று கூறி, அங்கு நிலவிய குதூகலத்தை மேலும் அதிகரித்தான்.

துரியோதனன் தன் மனத்தில் இருந்த இறுக்கம் தளர்ந்ததை உணர்ந்தான். அவன் அசுவத்தாமனை எச்சரிக்கையுணர்வோடு ஓரக்கண்ணால் பார்த்தபடி, “நண்பர்களே, நமக்கு ஒரு பிரச்சனை எழுந்துள்ளது. தனக்கு என் குருதட்சணையாக, நான் பாஞ்சால நாட்டைத் தாக்கி, துருபதனைச் சிறைப்பிடிக்க வேண்டும் என்று குருநாதர் துரோணர் என்னிடம் கேட்டுள்ளார்,” என்று அவன் தன் நண்பர்களிடம் தெரிவித்தான்.

அசுவத்தாமன் புன்னகைத்துவிட்டு, “எனக்குத் தெரியும்! என் தந்தை தன் மனத்தில் நிலைப்படுத்தியுள்ள ஒரு பழைய வெறுப்பு அது. ஒவ்வோர் இரவும், பாஞ்சால அரசனிடம் தனக்கு ஏற்பட்ட இகழ்ச்சியைப் பற்றிப் பேசி அவர் எங்களுக்குச் சலிப்பூட்டியே எங்களைக் கொன்றுவிடுவார்,” என்று கூறினான்.

“துரியோதனா, இது நல்ல விஷயம். ஏதேனும் சண்டை வராதா என்று நான் காத்துக் கொண்டிருந்தேன்,” என்று கூறிய துச்சாதனன், உற்சாகமாகத் தன் இருக்கையிலிருந்து துள்ளிக் குதித்தான்.

“முட்டாளே, உட்கார்!” என்று ஜயத்ரதன் அந்த இளைய கௌரவனை விலக்கித் தள்ளினான். “துரியோதனா, ஒரு நபரின் தனிப்பட்ட நோக்கத்திற்காக ஒரு போரைத் துவக்குவது மதிப்பு வாய்ந்ததுதானா? மேலும், ஒரு நட்பான அடிமை நாட்டிற்கு எதிராகப் போர் தொடுக்க அரசர் அனுமதி கொடுக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன்.”

“ஜயத்ரதா, நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அதோடு, பீஷ்மர் அல்லது அரசரின் அனுமதியின்றி ஒரு போரைத் துவக்க நான் விரும்பவில்லை.”

அதைத் தொடர்ந்து ஓர் அசௌகரியமான மௌனம் நிலவியது. ஒரு காவலாளி அவர்களுடைய அறைக் கதவைத் தட்டி, உள்ளே நுழைந்து, குனிந்து வணங்கிவிட்டு, பட்டத்து இளவரசனிடம் ஒரு செய்தியைக் கொடுத்தான். துரியோதனன் அவனை வெளியேற்றிவிட்டு அச்செய்தியைப் படித்தான். பிறகு ஒரு தீவிரமான முகத்துடன் அதைத் தன் நண்பர்களிடம் கொடுத்தான்.

“என்ன கொடுமை இது!” என்று ஜயத்ரதன் கத்தினான். “குருநாதர் துரோணர் எப்படி இதைச் சாதித்தார்?”

துச்சாதனன் மேலே குதித்து, ஜயத்ரதனின் கைகளிலிருந்த ஓலைச்சுவடியைப் பிடுங்கி, அதை வாய்விட்டு உரக்கப் படித்தான். பாஞ்சால நாட்டின்மீது போர்ப் பிரகடனம் செய்து அரசன்

திருதராஷ்டிரன் கொடுத்திருந்த ஓர் அதிகாரப்பூர்வமான உத்தரவு அது. தாக்குதலை முன்னின்று நடத்துவதற்குப் பட்டத்து இளவரசன் துரியோதனனை அஸ்தினாபுரப் படைகளின் தளபதியாக அரசன் நியமித்திருந்தான்.

"துரியோதனா, இது அக்கிரமம். ஓர் அடிமை நாடு நம்மை எந்த விதத்திலும் தூண்டியிருக்காதபோது, அதன்மீது தாக்குதல் நடத்துமாறு எப்படி ஓர் அரசனால் உத்தரவிட முடியும்? நானும் ஓர் அடிமை நாட்டு அரசன். அஸ்தினாபுரம் தன் அடிமை நாடுகளை இப்படித்தான் நடத்தும் என்றால், அதன் படைகள் சிந்து நாட்டில் தன் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிடக்கூடும் என்பது பற்றி என்னால் எப்படிக் கவலைப்படாமல் இருக்க முடியும்? இரவில் என்னால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடியும்?" என்று கூறிய ஜயத்ரதன், துரியோதனனின் கையிலிருந்து அந்த ஓலைச்சுவடியை வாங்கி, அதை மறுபடியும் படித்துவிட்டு, கோபத்தில் அதைக் கீழே வீசி எறிந்தான்.

எல்லோரும் அசுவத்தாமனைப் பார்த்தனர். இந்தச் சூழ்நிலை குறித்து அவன் எவ்வாறு நடந்து கொண்டான் என்று அவர்கள் அவனைக் கவனமாக எடைபோட்டனர். "ஹே, என்னை அப்படிப் பார்க்காதீர்கள். என் தந்தையின் நல்ல செயல்களுக்கோ அல்லது தவறான செயல்களுக்கோ நான் பொறுப்பாளி அல்ல. நாம் பாஞ்சால நாட்டின் தலைநகரமான கம்பில்யாவிற்குச் சென்று இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணலாம் என்பது என் பரிந்துரை. துரியோதனன் இந்த வேலையைச் செய்ய ஒத்துக் கொள்ளாவிட்டால், தர்மன் நிச்சயமாக இதற்கு ஒத்துக் கொள்வான். அது நமக்குப் பேரழிவாக முடியும். என் தந்தையின் அகங்காரத்தைத் திருப்திப்படுத்துவதற்குத் துருபதன் சற்று விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறானா என்று நாம் பார்க்கலாம்."

"அவன் கூறுவதில் அர்த்தம் இருக்கிறது," என்று கூறிவிட்டுக் கர்ணன் துரியோதனனின் முகத்தைக் கவனித்தான்.

அங்கு ஒரு பெரும் அமைதி சூழ்ந்தது. துரியோதனன் தன் கைகளைத் தன் முதுகிற்குப் பின்னால் கட்டிக் கொண்டு, அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் துவங்கினான். அவனுடைய நண்பர்கள் கவலையோடு காத்திருந்தனர்.

"நமக்கு வேறு வழியில்லை. அரசர் உத்தரவிட்டுள்ளார்," என்று துரியோதனன் கூறினான்.

ஜயத்ரதன் கோபத்தில் அந்த அறையைவிட்டு வெளியேறி, கதவை ஓங்கிச் சாத்தினான்.

* * *

மாலைக்குள், அஸ்தினாபுரத்தின் குதிரைப்படையின் இரண்டு பிரிவுகளும் காலாட்படையின் மூன்று பிரிவுகளும் பாஞ்சாலத்தின் தலைநகரமான கம்பில்யாவை நோக்கிப் புறப்பட்டன. துரியோதனன், துச்சாதனன், கர்ணன், அசுவத்தாமன் ஆகியோர் அப்படைகளை முன்னடத்திச் சென்றனர். ஜயத்ரதன் இந்தத் தாக்குதலில் கலந்து கொள்ள மறுத்துவிட்டு, அஸ்தினாபுரத்திலேயே தங்கிக் கொண்டான். அவன் அவ்வாறு செய்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது. துரியோதனன் அதை அறிந்திருந்தான். ஜயத்ரதன் நன்னடத்தைமிக்க ஒருவன். சிந்து நாட்டு அரசனான அவனைத் தன் சகோதரி துச்சலைக்குப் பிடித்திருந்தால், அவர்கள் இருவருக்குமிடையே திருமணம் செய்து வைப்பதில் துரியோதனனுக்கு எந்த மறுப்பும் இருக்கவில்லை.

மறுநாள் மதிய வேளையில், அஸ்தினாபுரத்தின் படைகள் பாஞ்சாலத்தைச் சென்றடைந்தன. பாஞ்சால எல்லைப் பகுதியில் எழுந்த பலவீனமான எதிர்ப்பை எளிதாகச் சமாளித்துவிட்டு, தலைநகரத்தை நோக்கி அப்படைகள் நகர்ந்தன. பாஞ்சாலத்தின் எஞ்சிய படைகள் கம்பில்ய நகரின் கோட்டைக்குள் நுழைந்து கொண்டு தாக்குதலுக்குத் தயாராக நின்றன. ஆனால் துரியோதன் ஒரு தூதுவன் மூலம், அரசனைச் சந்திப்பதற்கு ஒரு பணிவான வேண்டுகோளை விடுத்து, பாஞ்சாலப் படையின் தளபதிகளை வியப்பில் ஆழ்த்தினான். பட்டத்து இளவரசனை நம்ப வேண்டுமா அல்லது கூடாதா என்பதைத் தீர்மானிப்பதற்குப் பாஞ்சால நாட்டின் மேன்மக்கள் அன்று இரவு முழுதும் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர். படையெடுத்து வந்த ஒருவனிடமிருந்து வந்த, வழக்கத்திற்கு மாறான இந்தக் கோரிக்கையில் ஏதோ சூழ்ச்சி இருந்ததாக அவர்கள் சந்தேகித்தனர். இறுதியில், பாஞ்சால அரசன் தன் சொந்தப் பிள்ளையைப்போல வளர்த்து வந்த அலி சிகண்டி, பாஞ்சாலத்தை முற்றுகையிட வந்தவர்களை வரவேற்கத் தானாக முன்வந்தான்.

துரியோதனன் தன்னிடம் எந்த ஆயுதமுமின்றிக் கர்ணனோடும் அசுவத்தாமனோடும் அந்த அரண்மனைக்குள் நுழைந்தான். ஓரிரு மணிநேரத்தில் தங்களிடமிருந்து தகவல் எதுவும் வராவிட்டால், கோட்டையின்மீது தாக்குதல் நடத்தி அதைக் கைப்பற்றுமாறு துச்சாதனனுக்கு அவன் அறிவுறுத்தியிருந்தான். அரண்மனையின் நுழைவு வாயிலில், மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட ஒருவன் அவர்களை வரவேற்கக் காத்திருந்தான். அவர்கள் அவனை நெருங்கியப்போது, அசுவத்தாமனின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. அது ஓர் ஆணா அல்லது ஒரு பெண்ணா என்று வியந்த அவன்,

கர்ணனின் விலாவில் இடித்தான். வாயிலில் நின்றவன் ஓர் அலி என்று கர்ணன் அசுவத்தாமனின் காதில் கிசுகிசுத்தான். துரியோதனன் அவர்களை நோக்கித் திரும்பி, அமைதியாக இருக்குமாறு சைகை காட்டினான். சிகண்டி துரியோதனனைப் பார்த்துத் தலை வணங்கினான். பிறகு, ஆடம்பரமான அறைகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு பெரிய அரங்கிற்குள் அவர்கள் நுழைந்தனர். அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனை வரவேற்பதற்கு ஒட்டுமொத்தப் பாஞ்சால அரசவையும் எழுந்து நின்றது. பாஞ்சால அரசன் பதற்றத்தோடு காணப்பட்டான். அவனுக்கு அருகே நின்ற ஒரு வசீகரமான இளைஞன், அவனுடைய காதில் எதையோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தான். துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் அந்த அவையின் நடுவே நின்றனர்.

அப்போது அரசன் தன் அரியணையிலிருந்து எழுந்தான். “இளவரசே, நாங்கள் உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறோம். நீங்கள் கட்டளையிட்டிருந்தால், நாங்களே அஸ்தினாபுரத்திற்கு வந்திருப்போம். நாங்கள் உங்கள் அடிமை நாடு, உங்கள் நண்பர்கள். நீங்கள் எங்கள் எதிரிகளிடமிருந்து எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறீர்கள். அதனால்தான் நாங்கள் உங்களுக்குக் கப்பம் கட்டுகிறோம். ஆனால் நீங்களே எங்கள் எதிரியாக மாறினால், சிறிய சாம்ராஜ்யங்களிடம் இருந்து யார் எங்களைப் பாதுகாப்பார்கள்? அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மருக்கு இது பற்றித் தெரியுமா அல்லது இது உங்களுடைய சொந்த சாகச முயற்சியா?” அரசன் முறையற்ற எதையேனும் கூறி நிலைமையை மேலும் மோசமாக்கிவிடாமல் தடுப்பதற்காக, அரியணைக்குப் பக்கத்தில் நின்ற இளைஞன் தன் கையை நீட்டி அரசனைத் தடுத்தான்.

“நாங்கள் உங்களைத் தாக்குபவர்களாக வரவில்லை, மாறாக உங்கள் நண்பர்களாக வந்திருக்கிறோம்,” என்று துரியோதனன் பதிலளித்தான். “உங்களுடைய பழைய நண்பர்களில் ஒருவரின் கட்டளையின்கீழ் நாங்கள் இங்கு வந்துள்ளோம். நெடுங்காலத்திற்கு முன்பு நீங்கள் தன்னை நடத்திய விதம் குறித்து குருநாதர் துரோணர் இன்னும் கோபத்தில் இருக்கிறார்.”

“துரோணனா!” என்று அரசன் துருபதன் ஆச்சரியத்துடன் முழங்கினான். “அன்று நான் ஒரு காட்டானைப்போல நடந்து கொண்டிருந்தது குறித்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் நான் வருந்தி வந்துள்ளேன். அதிகாரம், மது, பெண்கள் போன்றவற்றால் போதை தலைக்கேறி, இளமை வேகத்தில் நான் அவனிடம் மிக மோசமாக நடந்து கொண்டேன். அவனுடைய ஏழ்மை எனக்கு

நகைப்பிற்கிடமானதாகத் தோன்றியது. துரோணன் பல சிறந்த திறமைகள் கைவரப் பெற்றவன். ஆனால் வாழ்க்கையைப் பயனுள்ள முறையில் வாழ்வதற்குப் பதிலாக, அவன் கழிவிரக்கத்திலும் துயரத்திலும் உழன்று கொண்டிருந்தான். நான் அவனையும் அவனுடைய ஏழ்மையையும் அவனுடைய சூழ்நிலையையும் பார்த்துச் சிரித்தேன். அன்று நான் அவனைவிட மேன்மையானவனாக இருந்ததுபோல உணர்ந்தேன். ஆனால் என் தவறை நான் உணர்ந்தபோது, மிகவும் தாமதமாகியிருந்தது. என் பழைய நண்பன் போய்விட்டிருந்தான். நான் என் செயலுக்குப் பரிகாரம் தேடிக் கொண்டு, அவனுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பினேன். ஆனால் அவன் மனமிரங்கவில்லை. இப்போது என் நாட்டைச் சூறையாடுவதற்கு அவன் தன் மாணவனை அனுப்பியுள்ளான்."

"தேவையற்ற ரத்தச் சிதறலை நாங்களும் தவிர்க்க விரும்புகிறோம். இந்தப் பிரச்சனை, பழைய நண்பர்களுக்கு இடையேயான தவறான புரிதல்தானே தவிர வேறு எதுவுமில்லை. இங்கு நிற்கும் இந்த இளைஞன் துரோணரின் மகன் . . ."

துரியோதனன் சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே, அரசன் துருபதன் விரைந்து சென்று அசுவத்தாமனைக் கட்டித் தழுவினான். "உன் தந்தை உன் வயதில் எப்படி இருந்தாரோ, நீ அப்படியே இருக்கிறாய். நான் முதலில் உன்னைப் பார்த்தபோதே எப்படி அதைக் கண்டுபிடிக்காமல் போனேன் என்று நான் வியக்கிறேன். உன் பெயர் என்ன?"

"அரசே, என் பெயர்அசுவத்தாமன். இது கர்ணன், அங்க நாட்டு அரசன்."

துருபதன் தன் இரண்டு கைகளையும் கூப்பி, "கர்ணா, உன் வரவால் நான் கௌரவிக்கப்பட்டுள்ளேன்," என்று கூறினான்.

தன் நண்பனை அரசன் வரவேற்ற விதம் குறித்து துரியோதனன் மகிழ்ச்சியடைந்தான். கர்ணனின் சாதியைக் காரணம் காட்டி அரசன் அவனை முறையாக நடத்த மாட்டான் என்று துரியோதனன் நினைத்திருந்தான். ஆனால் அரசனிடமிருந்து அப்படிப்பட்ட அறிகுறிகள் எதுவும் வெளிப்படவில்லை. நெடுங்காலத்திற்கு முன்பு தான் தத்தெடுத்திருந்த சிகண்டியை அரசன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினான். பிறகு, தனக்கு அருகில் நின்ற இளைஞனைப் பாஞ்சாலத்தின் பட்டத்து இளவரசனான திருஷ்டத்யும்னன் என்று அவன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

இந்த நல விசாரிப்புகளுக்குப் பிறகு, துரியோதனன், சரணடைவு என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல், பாஞ்சாலத்தின் சரணடைவு

பற்றிய பேச்சை மென்மையாகத் தொடங்கினான். துரியோதனனின் இந்தப் பயணத்திற்கான ஒட்டுமொத்தச் செலவையும் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறிய துருபதன், இரண்டு மாட்டு வண்டிகள் நிறைய தங்கம், அதிக மதிப்புவாய்ந்த நவரத்தினக் கற்கள், விலையுயர்ந்த ஆடைகள், ஐம்பது குதிரைகள், நூறு பசுக்கள் ஆகியவற்றை துரோணருக்குக் கொடுக்க முன்வந்தான். அவற்றை துரோணருக்கு அவன் கொடுத்தப் பரிசுகளாக நினைத்துக் கொள்ளுமாறு துரியோதனன் துருபதனிடம் கூறி அவற்றை ஏற்றுக் கொண்டது, தன் கண்ணியத்தைக் காத்துக் கொள்ள துருபதனுக்கு வாய்ப்பளித்தது. விரைவில் தானே அஸ்தினாபுரத்திற்குச் சென்று, துரோணரிடம் நேரில் மன்னிப்புக் கேட்பதாகவும் துருபதன் உறுதியளித்தான். தன் விருந்தினர்கள் கூடுதலாக ஒரு நாள் பாஞ்சாலத்தில் தங்க வேண்டும் என்று அவன் அவர்களிடம் வலியுறுத்தினான். அன்று, இளவரசி திரௌபதி, தன் பதினெட்டாவது வயதிற்குள் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். எனவே பாஞ்சாலத்திற்கு அது ஒரு முக்கியமான நாளாக இருந்தது. அரசனின் விருந்தினர்கள் அனைவரும் அவளுடைய அழகைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்ததால், அவனுடைய அழைப்பை ஏற்று அவளுடைய பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்கு அவர்கள் அளவுக்கதிகமாகவே ஆர்வமாக இருந்தனர். ஒரு சிக்கலான சூழ்நிலையைத் தான் கையாண்டிருந்த விதம் குறித்து துரியோதனன் பெருமிதம் கொண்டான். இதற்காக பீஷ்மர் தன்னை மிகவும் பாராட்டுவார் என்று அவன் உறுதியாக நம்பினான்.

அன்றிரவு, ஆயிரக்கணக்கான எண்ணெய் விளக்குகள் ஏற்றப்பட்டு, அரண்மனை பொன்னிறத்தில் ஒளிர்ந்தது. அந்த மூன்று இளைஞர்களும் அந்தக் கொண்டாட்டங்களில் திளைத்தனர். நாட்டுப்புற இசைக்கலைஞர்கள் பழைய காதல் பாட்டுக்களை ஆத்மார்த்தமாகப் பாடி, அந்த அரண்மனையை இசை வெள்ளத்தில் மூழ்கடித்தனர். துரியோதனனும் துச்சாதனனும் முரசுகளின் உரத்தத் தாளங்களுக்கு ஏற்ப நடனமாடி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினர். கூச்சப்பட்டு நின்று கொண்டிருந்த கர்ணனையும் அவர்கள் தங்களுடன் நடனமாட இழுத்தனர். விரைவில், அசுவத்தாமனும் பாஞ்சால இளவரசன் திருஷ்டத்யும்னனும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். அந்த இளைஞர்கள் அனைவரும் நடனமாடிக் கொண்டிருந்தபோது, கர்ணனின் அசைவுகள் திடீரென்று தடுமாறியதை திருஷ்டத்யும்னன் கவனித்தான். அங்க நாட்டு அரசனின் பார்வையைப் பின்தொடர்ந்த அவன் புன்னகைத்தான். தன் புதிய நண்பன் ஏன் தடுமாறினான் என்பது அவனுக்குப் புரிந்தது. அவர்கள் நடனமாடிக் கொண்டிருந்த

இடத்திலிருந்து சில அடிகள் தள்ளி, விலையுயர்ந்த ஆடை அணிகலன்களுடன், வானுலக மங்கையைப்போல ஜொலித்துக் கொண்டு, அவனுடைய அழகிய சகோதரி திரௌபதி அமர்ந்திருந்தாள். ஒளிவீசிய அவளுடைய கருநிறக் கண்கள், கர்ணனின் செதுக்கப்பட்ட உடலை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை அளந்தன. கர்ணனிடம் ஏற்பட்ட இந்தத் திடீர் மாற்றத்தை அசுவத்தாமனும் கவனித்துவிட்டு, அவனைக் கேலி செய்து சிரித்தான். இதைக் கண்ட துச்சாதனன், நாட்டுப்புற இசைக்கலைஞர்கள் பாடிக் கொண்டிருந்த காதல் பாடல்களுக்கு ஏற்ப, கர்ணனை நோக்கி மிகையான முகபாவங்களைக் காட்டத் துவங்கினான். துரியோதனன் தன் நண்பனைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகைத்தான்.

திருஷ்டத்யும்னன் தன் சகோதரியிடம் ஓடிச் சென்று, அவளைத் தங்கள் குழுவை நோக்கி இழுத்து வந்தான். "இது கர்ணன், அங்க நாட்டு அரசன்," என்று அவன் கர்ணனை முதலில் அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். பிறகு அவன் மற்றவர்களை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தினான்.

திரௌபதி கர்ணனைப் பார்த்து முறையாகத் தலை வணங்கிவிட்டுத் தன் கைகளைக் குவித்து அவனுக்கு வணக்கம் தெரிவித்தாள். கர்ணன் அவளுடைய அழகான முகத்தையும், வழுவழுப்பான கரிய தோலையும், கச்சிதமான வடிவத்தில் இருந்த அவளுடைய செந்நிற இதழ்களையும், முத்துக்களைப் போன்ற வெண்ணிறப் பற்களையும் பார்த்துப் பெருமூச்செறிந்தான். அவளை இவ்வளவு அருகில் தான் பார்ப்போம் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே, அவளிடம் என்ன கூறுவதென்று தெரியாமல் அவன் சங்கடத்தில் நெளிந்தான். தன்னைச் சுற்றி முழங்கப்பட்டுக் கொண்டிருந்த முரசுகளின் தாளத்தைவிட அவனுடைய இதயம் அதிக வேகமாகத் துடித்தது. திரௌபதி அவனுடைய முகத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தாள். அவளுடைய கண்கள் தன்னைத் தொட்ட இடங்களிலெல்லாம் தன் தோல் தகதகவென்று எரிந்தது போன்ற உணர்வு கர்ணனுக்கு ஏற்பட்டது. அவளுடைய முகத்தில் ஒரு லேசான புன்னகை அரும்பியது. அது அவளை மேலும் அழகு வாய்ந்த ஒரு தேவதையைப்போலத் தோன்றச் செய்தது. அவளிடமிருந்து தன் பார்வையை விலக்குவது சாத்தியமற்றதாக இருந்ததைக் கர்ணன் கண்டான். என்ன செய்வதென்று தெரியாமலும், தன் நண்பர்களின் கேலிப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாமலும், அவன் தொடர்ந்து அவளையே பார்த்தபடி நின்றான். அவர்கள் இருவருக்கும் இடையேயான மௌனம் எல்லை கடந்து போனபோது, அவள் மீண்டும் ஒருமுறை அவனை நோக்கித்

தலை வணங்கிவிட்டுத் தன் இருக்கைக்குத் திரும்பினாள். அசுவத்தாமன் கர்ணனை மீண்டும் தங்களுடைய காட்டுத்தனமான நடனத்திற்குள் இழுத்தான்.

விருந்துக் கொண்டாட்டங்கள் முடிந்து இரவு நெடுநேரம் ஆனபோது, "விரைவில் சுயம்வரம் நடைபெறும்," என்று திருஷ்டத்யுமனன் கர்ணனின் காதில் அமைதியாகக் கூறினான். "கர்ணா, உனக்கு அழைப்பிதழ் கிடைப்பதை நான் உறுதி செய்வேன். மீண்டும் இங்கு வந்து, ஓர் உண்மையான வீரனாக என் சகோதரியை வெற்றி கொண்டு மணமுடித்துச் செல்."

அசுவத்தாமன் குறுக்கிட்டு, "அவனோடு போட்டியிடுவதற்கு நான் இங்கு இருக்கும்வரை அவன் வெற்றி பெறுவது சாத்தியமில்லை," என்று கூறினான்.

துச்சாதனன் அந்த பிராமணனின் தலைமீது ஓங்கித் தட்டிவிட்டு, "முட்டாள்! நீ கர்ணனுடன் சண்டையிட விரும்புகிறாயா? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று கேட்டான்.

* * *

மறுநாள் அவர்கள் கம்பில்யாவைவிட்டுப் புறப்பட்டபோது, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். அசுவத்தாமனும் துச்சாதனனும் முந்தைய இரவில் தாங்கள் கற்றுக் கொண்ட காதல் பாடல்களைப் பாடினர். கர்ணனோ, எல்லாம் அழகாகத் தெரிந்த, திரௌபதியின் பெயர் எல்லாவற்றிலும் எழுதப்பட்டிருந்த ஓர் அழகான உலகில் தொலைந்து போயிருந்தான். அஸ்தினாபுரத்திற்குத் திரும்பிச் சென்ற வழியில், புறக்கணிக்கப்பட்ட ஒரு கிராமத்தை அவர்கள் கடந்து சென்றபோது, அங்கு சிறிது நேரம் தங்கள் பயணத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கர்ணன் வற்புறுத்தினான். அங்கு குடிநீர் இல்லாததும், அதில் வாழ்ந்த மக்களின் மோசமான சூழ்நிலையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் போக முடியாததாக இருந்தது. அங்கு ஒரு கிணற்றைத் தோண்டுமாறு துரியோதனன் தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். இந்த வேலையின் காரணமாக, அவர்களுடைய பிரயாணம் நான்கு நாட்கள் தாமதமாகியது. ஆனால் அது வீண்போகவில்லை. அது அவர்களுக்கும் அந்தக் கிராமத்து மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. கொத்தனார்கள் அந்தக் கிணற்றின் சுவரைக் கட்டி முடித்தபோது, அசுவத்தாமன் அதன்மீது 'திரௌபதியின் கிணறு' என்று எழுதிக் கர்ணனைக் கேலி செய்தான். இந்தக் கிறுக்கு நண்பனைக் கடிந்து கொள்வது பயனற்றது என்பதைக் கர்ணன் அறிந்தான். வேறு வழியின்றி, அவனும் அவர்களுடன் சேர்ந்து

சிரித்தான். கர்ணனின் மகிழ்ச்சியைக் கண்டபோது, துரியோதனனுக்குத் தன் காதலியின் நினைவு வந்தது. சுபத்திரையின் தீண்டலுக்காக அவன் ஏங்கினான். அவன் அவளுடைய புன்னகையைப் பற்றி நினைத்தது, களைத்துப் போயிருந்த அவனுடைய உடலுக்கு ஓர் இதமான வருடலைப்போல இருந்தது. அஸ்தினாபுரத்தின் வாயிலைச் சென்றடைவதற்கான தெம்பை அது அவனுக்குக் கொடுத்தது.

வெற்றியோடு திரும்பியிருந்த இளவரசனை வரவேற்பதற்காக மக்கள் அச்சாலையின் இரண்டு பக்கங்களிலும் மொய்த்தனர். மக்களின் உற்சாகக் கூக்குரல்கள் மற்றும் கைதட்டல்களுக்கு இடையே அந்த ஊர்வலம் அரண்மனை வாசலுக்குள் நுழைந்தது. அரண்மனைக்கு இட்டுச் சென்ற படிக்கட்டுகளின் உச்சியில் துரோணர் தன் கைகளைத் தன் இடுப்பின்மீது வைத்தபடி நின்றார். பாண்டவர்களும் தௌமியனின் தலைமையின்கீழ் சில பிராமணர்களும் அவருக்குப் பக்கத்தில் நின்றனர்.

இளவரசன் துரியோதனன் துரோணரிடம் சென்று, தன் குருவின் முன்னால் தலை வணங்கிவிட்டு, "குருவே, பாஞ்சாலம் உங்கள் விருப்பப்படியே தோற்கடிக்கப்பட்டுவிட்டது. உங்களுக்கான பரிசுப் பொருட்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். தான் உங்களுக்குச் செய்துள்ள தவறுகளுக்காகத் துருபதன் வருந்துகிறான் . . ." என்று கூறினான்.

"துருபதன் எங்கே?" என்று துரோணர் கோபத்துடன் கேட்டார்.

"குருவே, அவன் எங்களிடம் சரணடைந்துவிட்டு, இந்தப் பரிசுகளை உங்களுக்காக அனுப்பியிருக்கிறான். தானே நேரில் வந்து அவன் உங்களிடம் மன்னிப்புக் கேட்பான்."

"போதும் நிறுத்து! பரிசுகள்! யாருக்கு வேண்டும் அவனுடைய பரிசுகள்? ஒரு பிராமணனுக்குப் பரிசுகளால் என்ன பயன்? எனக்கு பௌதீகப் பொருட்கள்மீது அக்கறையில்லை என்று நான் ஏற்கனவே உன்னிடம் கூறினேன், இல்லையா? அவன் என்னை ஏளனப்படுத்தினான். எனவே, நீ அவனைச் சிறைப்பிடித்து, சங்கிலிகளால் பிணைத்து, இங்கே கொண்டு வந்து என் பாதங்களில் வீசியெறிய வேண்டும் என்று நான் விரும்பினேன். முட்டாள்! நீ உன் குருவின் மரியாதையை ஒருசில தங்க நாணயங்களுக்காக விற்றுவிட்டு வந்துள்ளாய். அல்லது, நீ பாஞ்சாலப் படையிடம் தோற்றுப் போய், திரும்பி வரும் வழியில் சில கிராமங்களைக் கொள்ளையடித்து இந்தப் 'பரிசுகளை' எனக்குக் கொண்டு வந்திருக்கிறாய். உன் தாமதத்திற்கான காரணத்தை இது நன்றாகவே விளக்குகிறது."

கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த துரோணர், பரிசுகளுடன் நின்ற மாட்டு வண்டிகளை நோக்கி விரைந்து, ஒருசில பானைகளைத்

தன் காலால் எட்டி உதைத்தார். அதிலிருந்த நாணயங்கள் நிலத்தின்மீது உருண்டு ஓடின. துரியோதனன் தனக்குத் துரோகம் இழைத்துவிட்டிருந்ததாகக் கருதிய அவர், கோபம் குறையாமல், அவனிடம் திரும்பி, "ஓர் ஆயுதத்தை முறையாக எப்படிப் பிடிக்க வேண்டும் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா? ஆயுதத்தைப் பிடிக்கத் தெரிந்தால்தானே அதை வைத்துச் சண்டையிடுவதைப் பற்றி யோசிக்க வேண்டும். துரியோதனா, நீ என்னை ஏளனப்படுத்தியுள்ளாய். தர்மத்தைக் கடைபிடிக்கின்ற வீரர்களும், தங்கள் ஆசிரியர்களை மதிக்கின்ற மாணவர்களும் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை நான் உனக்குக் காட்டுகிறேன்," என்று கூறிவிட்டு, "அர்ச்சுனா!" என்று அழைத்தார். அந்தப் பாண்டவ இளவரசன் தன் குருவின் முன்னால் வந்து தலை வணங்கினான். "எளிய அறிவுறுத்தல்களை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதை இந்தக் கோழைக்குக் காட்டு. என் எதிரியை என்னிடம் கொண்டு வந்து நிறுத்து. அவனை என் முன்னால் ஒரு புழுவைப்போல நெளியச் செய்."

"குருவே, உங்கள் விருப்பமே என் கட்டளை," என்று கூறி அர்ச்சுனன் மீண்டும் தலை வணங்கிவிட்டுத் தன் சங்கை முழங்கினான்.

துரியோதனன் எதுவும் கூறுவதற்கு முன்பாக, நூற்றுக்கணக்கான குதிரைப்படை வீரர்கள் தங்கள் குதிரைகளின்மீது அமர்ந்து அங்கு விரைந்து வந்து, சண்டைக்குத் தயார் நிலையில் அணி வகுத்து நின்றனர். ஐந்து பாண்டவச் சகோதரர்களும் தங்கள் குதிரைகளை நோக்கி விரைந்து சென்று, அவற்றின்மீது ஏறிக் கொண்டனர். நூற்றுக்கணக்கான குதிரைப்படையினர், அதிர்ச்சியில் உறைந்து நின்ற துரியோதனன் மற்றும் அவனுடைய நண்பர்களைப் புயல்போலக் கடந்து சென்றனர். மேலும் நூற்றுக்கணக்கான குதிரைப்படை வீரர்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். இப்போது ஆயிரக்கணக்கான குதிரைப்படை வீரர்கள் அடங்கிய பிரம்மாண்டமான அஸ்தினாபுரப் படை, அர்ச்சுனனின் தலைமையின்கீழ், இந்தத் தாக்குதல் பற்றி எதுவும் அறிந்திராத பாஞ்சாலத்தை நோக்கி விரைந்தது.

சாலையின் இருபுறங்களிலும், துரியோதனன் தன் படைகளோடு திரும்பி வந்ததை உற்சாகமாக வரவேற்றுவிட்டுக் கலைந்து சென்று கொண்டிருந்த மக்கள், மீண்டும் அங்கு ஒன்றுகூடி, இப்போது அர்ச்சுனனை உற்சாகப்படுத்தத் துவங்கினர். தௌமியன், நாட்டுப்பற்றை முற்றிலும் புதிய உயரங்களுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தான். தங்கள் நாடு ஓர் அடிமை நாட்டைக் கையாண்டு கொண்டிருந்த விதம் குறித்து மக்கள் அனைவரும் உற்சாகமடைந்தனர். பாஞ்சலம் துரியோதனனைத் தோற்கடித்திருந்ததாகவும், அதனால்

பெருமிதத்தோடு இருந்த பாஞ்சால நாட்டவருக்கு ஒரு படிப்பினையைக் கற்றுக் கொடுப்பதற்காக அர்ச்சுனன் இப்போது ஒரு புதிய படையை முன்னடத்திச் சென்று கொண்டிருந்ததாகவும் ஒரு வதந்தியை, சில மணிநேரத்திற்குள், தௌமியன் வெற்றிகரமாகப் பரப்பியிருந்தான்.

கம்பில்ய நகரம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது அர்ச்சுனனின் படை அங்கு சென்றடைந்தது. இதை எதிர்பார்த்திராத பாஞ்சால மக்கள், என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைப் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே, அர்ச்சுனன் தன் வீரர்களுடன் அந்நகரின் தற்காப்பு ஏற்பாடுகளைத் தரைமட்டமாகி, நகரைத் தீயிட்டுக் கொளுத்தி, அரண்மனைக் கோட்டைக்குள் நுழைந்தான். நகரில் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சூறையாடல்களையும் தீவைப்புகளையும் மேற்பார்வையிடுவதற்காக பீமன் நகரிலேயே தங்கிவிட்டான். போர் விரைவாக முடிந்துவிட்டது. அர்ச்சுனன் அரசனின் அறைக்குள் நுழைந்து, தூங்கிக் கொண்டிருந்த துருபதனுக்கு விழிப்பூட்டி, அவனைக் கைது செய்தான். தர்மன் திருஷ்டத்யும்னனையும் சிகண்டியையும் சிறைப்பிடித்தான். மதியத்திற்குள், அஸ்தினாபுரத்தின் படைகள், எல்லோரும் பார்க்கும்படி அரசன் துருபதனை ஒரு மாட்டு வண்டியுடன் சங்கிலிகளால் பிணைத்து, தங்கள் நாட்டை நோக்கி அணிவகுத்துச் செல்லத் துவங்கியிருந்தனர். திருஷ்டத்யும்னனும் சிகண்டியும்கூட இதே முறையில் இழுத்துச் செல்லப்பட்டனர். அந்த வெற்றி ஊர்வலம் அஸ்தினாபுரத்தை நோக்கி விரைந்தது. அவர்களுக்குப் பின்னால், கம்பில்ய நகரம், கடைகளும் கோவில்களும் தீவைத்துக் கொளுத்தப்பட்டு, முற்றிலும் சீரழிந்து கிடந்தது. துண்டிக்கப்பட்டக் கைகளும் கால்களும் உயிரற்ற உடல்களும் கம்பில்ய நகர வீதிகள் நெடுகிலும் சிதறிக் கிடந்தன. ஆக்கிரமிப்பு மற்றும் தோல்வியின் அடையாளங்கள் துரதிர்ஷ்டவசமான அந்த நிலம் நெடுகிலும் எழுதப்பட்டிருந்தன.

மாலைக்குள், அர்ச்சுனனின் வெற்றிப் படை அஸ்தினாபுரத்திற்குள் நுழைந்தது. சிறைப்பிடிக்கப்பட்டிருந்த பாஞ்சால அரசனைப் பார்ப்பதற்காக ராஜ வீதியில் கூட்டங்கூட்டமாகத் திரண்டு வந்த மக்கள், அவனை மோசமாகத் தூற்றினர். பட்டத்து இளவரசன் செய்யத் தவறியிருந்த ஒன்றை வெற்றிகரமாகச் சாதித்திருந்த அர்ச்சுனனையும் அவனுடைய சகோதரர்களையும் அவர்கள் வானளாவப் புகழ்ந்தனர். உலகின் தலைசிறந்த வில்லாளன் தன் சாம்ராஜ்யத்தின் மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றி, தங்கள் எதிரியை வீதிகளின் ஊடாக இழுத்து வந்து கொண்டிருந்தான். அஸ்தினாபுரத்தின் குடிமக்கள் பெருமிதம் கொண்டனர். சிலர், கைது செய்யப்பட்டு இழுத்து

வரப்பட்டுக் கொண்டிருந்த எதிரிகளின் முகங்களின்மீது வெறுப்போடு உமிழ்ந்து தங்கள் பெருமிதத்தை வெளிப்படுத்தினர். மற்றவர்கள் தங்கள் எதிரிகளை மோசமான வார்த்தைகளால் தூற்றியதன் மூலம் அவ்வாறு செய்தனர். ஒருசில துணிச்சல்காரப் பேர்வழிகள், கைதிகளின் முகங்களின்மீது ஓங்கிக் குத்தினர். ஆடிக் கொண்டிருந்த இளைஞர்களாலும் முரசு கொட்டியவர்களாலும் அந்த ஊர்வலம் பெருகி வழிந்தது. ஒருசில பிராமணர்கள் தர்மத்தின் வெற்றியைப் புகழ்ந்து, அர்ச்சுனன் மற்றும் தர்மனுக்குச் சாதகமாகக் கோஷங்களை எழுப்பினர்.

அரண்மனையின் முக்கிய நுழைவு வாயிலின் அருகே இருந்த தாழ்வாரத்தில் துரோணர் நின்றார். தோட்டங்களுக்கும் புல்வெளிகளுக்கும் இட்டுச் சென்ற பிரம்மாண்டமான படிக்கட்டுகளின்மீது, மலர்களையும் பன்னீரையும் ஏந்தியபடி பல பிராமணர்கள் நின்றனர். அர்ச்சுனனும் அவனுடைய சகோதரர்களும் தங்கள் குதிரைகளைவிட்டுக் கீழே இறங்கி, தங்கள் குருவை நோக்கி நடந்தபோது, அந்த பிராமணர்கள் புனித மந்திரங்களை முழங்கி, அவர்கள்மீது மலர்களைத் தூவினர். தர்மன் முதலில் தன் குருநாதர் துரோணரின் பாதங்களிலும் பிறகு தௌமியனின் பாதங்களிலும் விழுந்து வணங்கினான்.

உணர்ச்சிவசப்பட்டுத் தொண்டையடைத்து நின்ற துரோணரால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. அவர் அர்ச்சுனனைக் கட்டித் தழுவினார். “என் அன்புக்குரிய மாணவனே, ஒரு குருநாதரால் இதைவிட அதிகமாக என்ன கேட்டுவிட முடியும்?” என்று அவர் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டே இருந்தார். அவருடைய கண்களில் இருந்து வழிந்த கண்ணீர், அர்ச்சுனனின் பரந்த தோள்களை நனைத்தது.

தௌமியன் தன் கைகளை உயர்த்தியபோது, முரசுகளின் முழக்கம் நின்றது. பிராமணர்கள் தங்கள் மந்திரங்களைப் பாதியில் மென்று விழுங்கினர். “அஸ்தினாபுரத்தின் வரலாற்றில் இது ஒரு பெருமைமிக்கக் கணம். இன்று, பிராமணர்கள் இகழப்படுவதை நம் ராஜ்யம் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்பதை நம் இளவரசர்கள் இவ்வுலகிற்கு நிரூபித்துள்ளனர். இளவரசன் தர்மன், நிலைபேறுடைய நம் தர்மத்தை நிலைநிறுத்துவதற்குத் தன் முதலடியை எடுத்து வைத்திருக்கிறான். அவன் வெறுமனே ஓர் இளவரசன் மட்டுமல்ல, மாறாக, அவன் தன் பெயருக்கு ஏற்றாற்போல தர்மத்தின் ஒரு மொத்த உருவமாக இருக்கிறான்.”

தௌமியன் மீண்டும் தன் கைகளை உயர்த்தினான். அப்போது புனித மந்திரங்கள் மீண்டும் ஒலிக்கத் துவங்கின. மூத்தப் பாண்டவ இளவரசன் பணிவாகத் தலை வணங்கி நின்றான். அங்கு கூடியிருந்த

கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவர்களில் யாரோ ஒருவன், 'தர்மனுக்கு வெற்றி' என்று கத்தினான். அந்த வார்த்தைகள் இன்னும் ஆயிரக்கணக்கான தொண்டைகளிலிருந்து எதிரொலித்தன. முரசுகள் மீண்டும் முழங்கத் துவங்கின. குந்தி தன் அறையிலிருந்து ஓடி வந்து, தன் மகன்களை நோக்கி விரைந்தாள். பின், அவள் அக்கூட்டத்தினரைப் பார்த்துக் கையசைத்தபோது, கூட்டமும் பதிலுக்கு உற்சாகமாக ஆர்ப்பரித்தது.

"நம் குருவை இகழத் துணிந்த அந்தத் தீயவன் எங்கே?" என்று தௌமியன் கேட்டான்.

துருபதன் சங்கிலிகளால் கட்டப்பட்டு அமர்ந்திருந்த மாட்டு வண்டியை நோக்கி அர்ச்சுனனும் பீமனும் ஓடினர். பீமன், தோற்கடிக்கப்பட்டப் பாஞ்சால அரசனின் கழுத்தைப் பிடித்தான். அர்ச்சுனன் முன்செல்ல, பீமன் துருபதனைத் தரதரவென்று இழுத்துச் சென்றான். நகுலனும் சகாதேவனும் திருஷ்டத்யும்னனையும் சிகண்டியையும் அதேபோல இழுத்து வந்தனர். சிறைப்பிடிக்கப்பட்ட மூவரும் படிகளின்மீது ஏறிச் சென்றபோது, வழியில் நின்ற பிராமணர்கள் அவர்கள்மீது கோபத்தோடு உமிழ்ந்தனர். பீமன் துருபதனை துரோணரின் பாதங்களில் பிடித்துத் தள்ளினான்.

துரோணர் தன் தொடையை பலமாகத் தட்டிச் சத்தமாகச் சிரித்தார். தன் முன்னாள் சக மாணவனும் நண்பனுமான துருபதன் தன் பாதங்களின் அருகே வந்து முகம் குப்புற விழுந்தபோது, துரோணர் அவனை எட்டி உதைத்தார். இதைக் கண்டதும் கூட்டம் ஆர்ப்பரித்தது. "ஹா ஹா . . . அகங்காரம் பிடித்தச் சத்திரியனே, இப்போது யார் யாருடைய பாதங்களில் விழுந்து கிடக்கிறார்கள் பார்த்தாயா? இங்கு யார் கெஞ்சுகிறார்கள் என்று பார்த்தாயா? கயவனே . . . நான் உன்னிடம் உதவி கேட்டு வந்த நாளும், அன்று நீ என்னை நடத்திய விதமும் உனக்கு நினைவிருக்கிறதா? இந்த உதை உன் அகங்காரத்திற்கு, இது உன் கர்வத்திற்கு . . ."

துரியோதனனும் அவனுடைய நண்பர்களும், இறுதியில், அங்கு வழி மறித்து நின்று கொண்டிருந்த பிராமணர்களை விலக்கித் தள்ளிக் கொண்டு, துரோணர் இருந்த இடத்தை வந்தடைந்தபோது, அரசாட்சிப் பொறுப்பாளரின் வரவை அறிவித்த வழக்கமான ஊதுகொம்புச் சத்தம் கேட்டது. பீஷ்மரையும் பிரதம மந்திரியையும் சுமந்து வந்த ரதம் அரண்மனை வாசலுக்குள் நுழைந்தது. இதைக் கண்ட கூட்டத்தினர் திடீரென்று மௌனமாயினர். மக்கள் ஒதுங்கி வழிவிட்டனர். பீஷ்மர் வேகமாகப் படிகளின்மீது ஏறி, துரோணரின் முரட்டுத்தனமான உதைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்

தரையின்மீது சுருண்டு கிடந்த பாஞ்சால அரசனுக்கு அருகே வந்து நின்றார். பீஷ்மரின் இறுக்கமான முகத்தையும் கோபத்தில் எரிந்து கொண்டிருந்த அவருடைய கண்களையும் பார்த்த துரோணரின் முகம் வெளிறியது.

கீழே விழுந்து கிடந்த அரசனைக் கை கொடுத்துத் தூக்கிய பீஷ்மர், அவன் தங்களுடைய முக்கியமான அடிமை நாட்டு அரசர்களில் ஒருவனான துருபதன் என்பதைக் கண்டபோது அதிர்ச்சியடைந்தார். "இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை யாராலேனும் கூற முடியுமா?" என்று கேட்ட பீஷ்மரின் குரல் கண்டிப்பையும் இகழ்ச்சியையும் வெளிப்படுத்தியது. எல்லோரும் பயத்தில் நடுங்கினர். அரசாட்சிப் பொறுப்பாளர் கடுங்கோபத்தில் இருந்தபோது, யாரும் அவரைப் பார்க்கத் துணியவில்லை.

துரோணர் வாயைத் திறந்து பேசுவதற்கான அறிகுறி எதுவும் தென்படாததால், இதற்கு விளக்கம் அளிப்பதற்கான பொறுப்பு தன் தோள்கள்மீது விழுந்திருந்ததை தௌமியன் அறிந்தான். அவன் ஓரடி முன்னால் வந்து, "மேன்மை பொருந்தியவரே, இவன் ஒரு பிராமணனை இழிவுபடுத்தினான். அதற்குத் தகுந்த நியாயமான தண்டனையை நாங்கள் இவனுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்," என்று கூறினான்.

"ஒரு பிராமணனை இழிவுபடுத்தினானா? இவன் யாரென்று உனக்குத் தெரியுமா? இவன் பாஞ்சால நாட்டின் அரசன். நீ இவனை ஒரு குற்றவாளியைப்போல நடத்திக் கொண்டிருக்கிறாய். இவன் யாரை இழிவுபடுத்தினான்? எப்போது இழிவுபடுத்தினான்?" இக்கேள்விக்கு யாரும் பதில் கூறத் துணியவில்லை. பீஷ்மர் தன் வாளை உருவி, துருபதனின் கட்டுக்களை வெட்டியெறிந்தார். சிகண்டியையும் திருஷ்டத்யும்னனையும் விடுவிக்குமாறு அவர் கட்டளையிட்டார். பிறகு அவர் தௌமியனிடம் திரும்பி, "இப்போது கூறு. யார் யாரை இழிவுபடுத்தியது? எங்கே? எப்படி?" என்று கேட்டார்.

"மேன்மை பொருந்தியவரே, இவன் நம் ராஜகுரு துரோணரை இழிவுபடுத்தினான்."

"எப்போது?"

தௌமியன் துரோணரைப் பார்த்தான். ஒருவழியாக துரோணர் முன்வந்தார். "மாட்சிமை பொருந்தியவரே, பதினேழு வருடங்களுக்கு முன்பு நான் இவனிடம் உதவி கேட்டுச் சென்றபோது இவன் என்னை இழிவுபடுத்தினான்."

"என்ன! குருவே, இது என்ன விளையாட்டு? இவன் பதினேழு வருடங்களுக்கு முன்பு உங்களை ஏளனப்படுத்தியதற்காக இப்போது அஸ்தினாபுரத்தின் படையைப் பயன்படுத்தி இவனைச் சிறைப்பிடித்து,

ஓர் அடிமை நாட்டுடனான நம் உறவை அழித்துக் கொண்டிருக்கிறீர்களா? நாம் நட்புறவு கொண்டுள்ள ஓர் அடிமை நாட்டின்மீது தாக்குதல் நடத்துவதற்கு, என் அனுமதி இல்லாமல் யார் உத்தரவிட்டது? துரோணா, நீ பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது."

இதைக் கேட்ட துருபதன் உரக்கச் சிரித்தான். இது அந்த பிராமணர்களுக்கு மேலும் கோபமூட்டியது. "அதர்மம்! அதர்மம்! ஒரு பிராமணனின் பெருமிதத்திற்கு இந்த நாட்டில் எந்த மதிப்பும் கிடையாதா? அஸ்தினாபுரத்திற்கு வந்த வெட்கக்கேடு இது!" என்று கூட்டத்தினரிடையே நின்ற பிராமணர்கள், தாங்கள் கண்டுபிடிக்கப்பட மாட்டோம் என்ற துணிச்சலில் ஒன்றாகக் கத்தினர்.

பீஷ்மர் அவர்களை உதாசீனப்படுத்திவிட்டு, அச்சுறுத்தும் விதத்தில் துரோணரை நோக்கி நடந்தார். பீஷ்மர் தாக்கினால் அவரை எதிர்த்துத் தாக்குவதற்குத் தயாராக துரோணர் தன் வாளை அதன் உறையிலிருந்து உருவினார். தர்மத்திற்காகத் தன் உயிரைப் பலி கொடுக்க அவர் தயாரானார்.

குந்தி அவ்விருவருக்கும் இடையே ஓடினாள். "பிதாமகரே, என் மகன்களின் மதிப்பை ஏன் இப்படிச் சீரழித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பட்டத்து இளவரசனால் செய்ய முடியாததை அவர்கள் செய்துள்ளனர் என்பதுதான் அதற்குக் காரணமா?"

அவளுடைய குதர்க்கப் பேச்சிற்கு பீஷ்மரால் பல சரியான பதிலடிகளைக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர் ஒரு கண்ணியமான மனிதர். பொது இடத்திலும் சரி, தனியாக இருந்தபோதும் சரி, ஒரு பெண்ணிடம் அவர் ஒருபோதும் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ள மாட்டார் என்பதைக் குந்தி நன்றாக அறிந்திருந்தாள். மனம் தளர்ந்து போயிருந்த பீஷ்மர், பாஞ்சால அரசனின் கைகளைப் பிடித்து, "துருபதா, நிகழ்ந்த சம்பவத்திற்காக நான் மிகவும் வருந்துகிறேன். என் வருத்தத்தையும் துக்கத்தையும் விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. தயவு செய்து என்னோடு அரசவைக்கு வா. அஸ்தினாபுரம் செய்த தவறைச் சரி செய்வதற்கு என்னால் என்ன செய்ய முடியும் என்று நான் பார்க்கிறேன்," என்று கூறினார்.

பிறகு, அவர் ஒரு கனத்த இதயத்துடன் அரசவையை நோக்கி நடந்தார். மற்றவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். இறுதிக்கட்ட மோதல் துவங்கியது. துரோணர் தன் பதவியை ராஜினாமா செய்தார். எப்படியிருந்தாலும் அவர் தன் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பார் என்று பீஷ்மர் கோபத்தோடு பதிலளித்தார். அவையில் இருந்த மேன்மக்கள் அனைவரும் எழுந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அஸ்தினாபுரத்தில் அரசாங்கம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த விதத்தைப் பாஞ்சால அரசன் துருபதனும் அவனுடைய மகனும் சிகண்டியும் சுவாரசியமாக வேடிக்கைப் பார்த்தனர். இளவரசன் துரியோதனன் அரசவைக்கு வரவழைக்கப்பட்டான். எந்தவிதத் தூண்டுதலும் இல்லாமல் ஓர் அடிமை நாட்டிற்கு எதிராகத் தங்கள் படைகளை முன்னின்று நடத்திச் சென்று தன் ராஜ தர்மத்தை மறந்ததற்காக, அரசாட்சிப் பொறுப்பாளர் பீஷ்மர், எல்லோர் முன்னிலையிலும் அவனை வார்த்தைகளால் வறுத்தெடுத்தார். அரசன் திருதராஷ்டிரனின் ஆணைப்படிதான் தான் அவ்வாறு நடந்து கொண்டதாகக் கூறி இளவரசன் துரியோதனன் தன்னைத் தற்காத்துக் கொள்ள முயன்றபோது, தான் செவிமடுத்த விஷயத்தை நம்ப முடியாதவராக பீஷ்மர் அரசனைப் பார்த்தார். பிறகு, அரசனே உத்தரவிட்டிருந்தாலும், இளவரசனுக்கு அறிவு எங்கே போயிருந்தது என்று அவர் துரியோதனனைக் கடிந்து கொண்டார். அதோடு, அவனுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவுகள் நெறிமுறைப்படி தவறாக இருக்கும்பட்சத்தில், அவற்றுக்குக் கீழ்ப்படிய மறுப்பது அவனுடைய கடமை என்பதை பீஷ்மர் அவனுக்கு நினைவுபடுத்தினார். துரியோதனன் அமைதியாக இருந்தான். தன் குருவின் உத்தரவுகளைப் பின்பற்றத் தான் மறுத்திருக்க வேண்டும் என்பதை அவன் தன் இதயத்தின் ஆழங்களில் அறிந்திருந்தான். தீர்மானம் எடுப்பதில் தான் தவறு செய்துவிட்டிருந்ததை பீஷ்மரிடம் அவன் ஒத்துக் கொண்டான்.

ஆனால் துரோணர் மிரட்டலுக்கு அடிபணிய மறுத்தார். பிராமணர்களின் ஆதரவு தனக்கு இருந்ததை அவர் கண்டபோது, அவர் தொடர்ந்து பிடிவாதமாகவும் எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டும் இருந்தார். மன்னிப்புக் கேட்க அவர் மறுத்தார். துருபதன் தான் செய்த தவறுக்குத் தன்னுடைய பாணியிலேயே உரிய தண்டனையைப் பெற்றுவிட்டிருந்ததால், அவனை மீண்டும் தன் நண்பனாக ஏற்றுக் கொள்வதைப் பற்றித் தான் யோசித்துச் சொல்வதாக மட்டுமே துரோணர் கூறினார்.

பீஷ்மர் இப்போது இளவரசன் தர்மனை அரசவைக்கு வரவழைத்தார். தான் தர்மத்தை மட்டுமே கடைபிடித்திருந்ததாகவும், பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தன் கடமையை மட்டுமே தான் செய்திருந்ததாகவும் தர்மன் அமைதியாகக் கூறினான். அர்ச்சுனனிடம் இந்தச் சம்பவம் குறித்துக் கேட்கப்பட்டபோது, அவனும் இதையே கூறியதோடு, துரோணரின் மாணவன் என்ற முறையில், மதிப்பிற்குரிய தன் ஆசிரியரின் கட்டளையை நிறைவேற்றுவதும், அவருக்கு உரிய காணிக்கையைக் கொடுப்பதும்தான் தன்னுடைய

முதல் கடமை என்று கூறினான். இவ்விரு பாண்டவ இளவரசர்களின் பதில்களையும் அவையிலிருந்த மேன்மக்கள் கைதட்டி வரவேற்றனர்.

பீஷ்மர் செய்வதறியாது துருபதனைப் பார்த்தார். அந்தப் பாஞ்சால அரசனின் உதடுகளின்மீது ஒரு பரிகாசப் புன்னகை விளையாடியது. அவன் முன்னிலையில் தான் ஒரு முட்டாளைப்போலத் தோன்றியதை பீஷ்மர் அறிந்தார். பாஞ்சால அரசன் துரோணருக்கு அனுப்பியிருந்த பரிசுகளைப் பற்றி விசாரித்த அவர், அவற்றை உடனடியாகத் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிட்டார். தெளமியன் இதில் குறுக்கிட்டு, ஒரு பிராமணனுக்குக் கொடுக்கப்பட்டப் பரிசுகளை யாராலும் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது என்றும், துரோணர் ஒரு துறவியாகவும் பௌதீகப் பொருட்களில் அவருக்கு நாட்டம் இல்லாமல் இருந்ததாலும் அவர் அவற்றை அங்கு கூடியிருந்த பிராமணர்களுக்கிடையே பகிர்ந்து கொடுத்துவிடலாம் என்றும் கூறினான். பீஷ்மர் கோபத்தில் வெடித்து, தன் முஷ்டியைத் தன் இருக்கையின் கைப்பிடியின்மீது ஓங்கிக் குத்தினார். அச்சூழ்நிலை மிக மோசமாக மாறிக் கொண்டிருந்தது.

அப்போது அரசன் துருபதன் எழுந்து நின்று, தான் பரிசாகக் கொடுத்திருந்த எதையும் தான் திரும்ப எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்று கூறினான். அந்த பிராமணர்கள் அதை ஆரவாரத்தோடு வரவேற்று, பாஞ்சால அரசனின் தாராள குணத்தைப் புகழ்ந்தனர். சிறிது நேரத்திற்கு முன்பு தன் முகத்தின்மீது துப்பியிருந்த அந்த பிராமணர்களைப் பார்த்து அவன் தன் கைகளைக் கூப்பி வணங்கினான். அவன் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று அவர்கள் அவனை வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.

தன் முன்னால் நடந்து கொண்டிருந்த கோமாளிக் கூத்தைக் கண்டு பீஷ்மர் விரக்தியடைந்தார். அவர் அரசவையைக் கலைத்துவிட்டு, களைப்புடன் தன் அறையை நோக்கி நடந்தார். துரோணர் துருபதனை அணுகி அவனைக் கட்டித் தழுவியதைப் பார்க்க அவர் காத்திருக்கவில்லை. பீஷ்மர் சிகண்டியைக் கடந்து சென்றபோது, அவன் தன் ஆட்காட்டி விரலால் தன் தொண்டையின் குறுக்காக ஒரு கற்பனையான கோட்டை வரைந்து, ஏளனமாகப் புன்னகைத்தான். தன் சொந்த எண்ணங்களில் மூழ்கிப் போயிருந்த பீஷ்மர், அந்தச் சைகையைப் பார்க்கவில்லை. ஆனால் சிகண்டியின் மினுமினுப்பான கண்களில் தென்பட்ட வெறுப்பைக் கண்ட விதுரன் நடுநடுங்கினான். அவன் அந்த அலிக்கும் அரசாட்சிப் பொறுப்பாளருக்கும் இடையே தன்னை நுழைத்துக் கொண்டு, பீஷ்மர் ஒரு பாதுகாப்பான தூரத்தை அடையும்வரை அங்கேயே நின்றான். பிறகு ஒரு நிம்மதிப் பெருமூச்செறிந்துவிட்டு, பீஷ்மரைப் பின்தொடர்ந்தான். களைத்துப்

போயும் மனம் சோர்ந்து போயும் இருந்த பீஷ்மர், தோல்வியில் தன் தலையைத் தொங்கப் போட்டபடி தன் அறைக்குள் நுழைந்து, விதுரனுக்காகக் காத்திருந்தார்.

* * *

அரசவையில், அந்தப் பாஞ்சால அரசன் துரோணரின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, மீண்டும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நட்பின் பெயரில், உணவருந்துவதற்காகவும் குடித்து மகிழ்வதற்காகவும் எல்லோருடனும் சேர்ந்து விருந்து அரங்கை நோக்கிச் சென்றான். துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் கதவருகே நின்று கொண்டு, நிகழ்ந்து கொண்டிருந்த சம்பவங்களைப் பற்றித் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தபோது, அசுவத்தாமனின் தோளின்மீது யாரோ தட்டினார்கள். அந்த இளம் பிராமணன் திரும்பிப் பார்த்தபோது, திருஷ்டத்யும்னனின் கோபக் கண்கள் தன்னுடைய கண்களுக்குள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கண்டான். திருஷ்டத்யும்னன் தன்னால் முடிந்த அளவுக்கு வெறுப்பை வரவழைத்துக் கொண்டு, "நம்பிக்கைத் துரோகியே, நீ என் நண்பன் என்று சிறிது காலம் நான் நினைத்தேன். ஆனால் நீ என் தந்தையை எவ்வாறு நடத்தியிருக்கிறாய் என்று பார். நாங்கள் உன்னை நம்பினோம். ஒரு போரைத் தவிர்ப்பதற்காக உனக்குப் பரிசுகளைக் கொடுத்தோம். ஆனால் நாங்கள் உனக்குக் கொடுத்த உபசரிப்பை, நீ எங்களைச் சங்கிலிகளால் பிணைத்து, குற்றவாளிகளைப்போல வீதிகளில் இழுத்து வந்ததன் மூலம் திருப்பிக் கொடுத்திருக்கிறாய். கோழைகளே, என் வார்த்தையைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நீயும் உன் தந்தையும் இதற்கான விலையைக் கொடுப்பீர்கள். தன் தலை தன் கழுத்தோடுதான் ஒட்டியிருக்கிறதா என்று ஒவ்வொரு நாளும் சோதித்துக் கொள்ளுமாறு அந்தப் பைத்தியக்காரக் கிழவனிடம் போய்க் கூறு. என்றேனும் ஒருநாள் காலையில் அவன் தலை காணாமல் போயிருக்கும்," என்று சீறினான்.

அசுவத்தாமன் அந்தப் பாஞ்சால இளவரசனின் தொண்டையைப் பிடித்து, "கயவனே, என் தந்தையைப் பற்றி நீ இன்னொரு வார்த்தை பேசினால், நீ உயிரோடு இருக்க மாட்டாய்," என்று கோபத்தில் கத்தினான்.

பதிலுக்கு, திருஷ்டத்யும்னனின் கைகள் அசுவத்தாமனின் தொண்டையைச் சுற்றி வளைத்தன. அவ்விரு இளம் வீரர்களும் ஒருவரையொருவர் கழுத்தை நெறித்துக் கொல்லப் போராடினர். துரியோதனனும் கர்ணனும் விரைந்து அவர்களுக்கு இடையே சென்று,

இருவரையும் விலக்கித் தள்ளக் கடுமையாகப் போராடினர்.

"நண்பனே, நடந்த சம்பவத்திற்காக நான் வருந்துகிறேன். நடந்ததை மறந்துவிடு. கடந்தகாலம் கடந்தகாலமாகவே இருக்கட்டும்," என்று துரியோதனன் திருஷ்டத்யும்னனிடம் கூறினான்.

பதிலுக்கு, அந்தப் பாஞ்சால இளவரசன் வெறுப்புடன் தரையின்மீது காறி உமிழ்ந்துவிட்டு அங்கிருந்து நடந்தான். அசுவத்தாமன் தன் வாளை உருவிக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்து செல்ல முயன்றான், ஆனால் கர்ணனின் வலிமையான கைகள் அவனைத் தடுத்தன. சிகண்டி ஒரு வஞ்சகப் பார்வையுடன் அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு, அந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். திருஷ்டத்யுமனன் அங்கிருந்து வெளியேறிவுடன், சிகண்டி துரியோதனனிடம் சென்றான். அவன் பெண்மைத்தன்மையுடன் பட்டத்து இளவரசனைத் தொட்டு, நாணம் கொண்ட ஒரு பெண்ணைப்போல, "இளவரசே, என் சகோதரனுக்கு துரோணர் வேண்டும். ஆனால் அழகான பெண்ணான எனக்கு யார் வேண்டும்? என் வசீகரமான இளவரசனே, எனக்கு யார் வேண்டும் என்று உனக்குத் தெரியாதா? என்னவொரு துரதிர்ஷ்டம்! எனக்கு உன்னுடைய கொள்ளுத் தாத்தாதான் வேண்டும். பரதகண்டத்திலேயே மிகவும் தகுதி வாய்ந்த, திருமணமாகாத நபருடன் நான் காதல் வயப்பட்டுள்ளேன். நான் பீஷ்மரை அடைவதைப் பொறுத்திருந்து பார்," என்று ஓர் உச்சஸ்தாயிக் குரலில் கூறினான். பிறகு, அவன் துரியோதனனை நோக்கி ஒரு முத்தத்தை ஊதிவிட்டு, கர்ணனைக் கடந்து சென்றபோது அவனுடைய கன்னத்தை வருடிக் கொடுத்துவிட்டு அங்கிருந்து நடந்தான். அவனுடைய தீண்டலால் கர்ணன் திடுக்கிட்டான். துரியோதனன் அதிர்ச்சியில் உறைந்து நின்றான். பகைமை வட்டம் அவர்களைச் சுற்றிப் பெரிதாகிக் கொண்டே போனது.

* * *

பீஷ்மரின் அறையில், இரண்டு கவலையான மனிதர்கள், தாங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்தனர். குந்தியும் அவளுடைய மகன்களும் அஸ்தினாபுரத்தைவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்று பீஷ்மர் விரும்பினார். தான் இல்லாதபோது நடந்தேறியிருந்த சம்பவங்கள் குறித்து அவர் பெருங்கோபத்தில் இருந்தார். அவரை சமாதானப்படுத்துவதற்கு விதுரன் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாகப் போயின. துரோணரின் தவறால் ஏற்படவிருந்த பின்விளைவுகளை விதுரன் புரிந்து கொள்ளவில்லை என்றும்,

பரசுராமன் இல்லாததால் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பு இன்னும் நலிவுற்று இருந்தது அஸ்தினாபுரத்தின் அதிர்ஷ்டம் என்றும், இல்லையென்றால், ஒரு சக்திவாய்ந்த அடிமை நாட்டை ஏளனம் செய்தது தங்கள்மீது படையெடுத்து வருவதற்கு அவர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பைக் கொடுத்திருக்கும் என்றும் பீஷ்மர் விதுரனிடம் கூறினார். வடக்கத்திய ராஜ்யங்களுக்குள் சாதி மெல்ல மெல்ல ஊருவிக் கொண்டிருந்த விதம் குறித்து வருந்திய அவர், தௌமியனின் செல்வாக்கை வேரோடு களைந்தெறிய விரும்பினார். குந்தியும் பாண்டவர்களும் பழமைவாதிகளின் ஆதரவாளர்களாக ஆகியிருந்தனர். இந்த பயங்கரமான போக்கை முறிக்க வேண்டும் என்றால், அவர்கள் அஸ்தினாபுரத்தைவிட்டுப் போயாக வேண்டும் என்பதில் பீஷ்மர் உறுதியாக இருந்தார்.

அந்த வயோதிகரின் கோபம் சற்றுக் குறைந்தபோது, விதுரன் தன் கருத்தை முன்வைத்தான். பாண்டவர்களையும் அவர்களுடைய தாயாரையும், அஸ்தினாபுரத்திலிருந்து போதுமான தொலைவில் இருந்த வாரனவதம் என்ற கிராமத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்று அவன் பரிந்துரைத்தான். பீஷ்மர் அதற்கு ஒத்துக் கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு விதுரனைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்தக் கிராமம் மிகவும் பின்தங்கிய ஒன்று என்றும், அரச குடும்பத்தின் உறுப்பினர்களுக்குப் பொருத்தமான வசிப்பிடங்கள் அங்கு இல்லை என்றும் விதுரன் அவருக்கு நினைவுபடுத்தினான்.

“விதுரா, செலவைப் பற்றிக் கவலைப்படாதே. இல்லையென்றால், நான் தன்னை மோசமாக நடத்தியுள்ளதாகக் குந்தி எல்லோரிடமும் கூறிக் கொண்டிருப்பாள். அங்கு விரைவாக ஓர் அரண்மனையைக் கட்டியெழுப்பு. இந்த வேலையைத் திறமையாகச் செய்வதற்கு யாரை உன்னால் ஏற்பாடு செய்ய முடியும்?”

“அப்படிப்பட்ட ஒருவனை நான் என் மனத்தில் நினைத்துள்ளேன். அவன் மிகவும் திறமையாகவும் வேகமாகவும் செயல்படக்கூடியவன், ஆனால் . . .”

“ஆனால் என்ன? அவனை அழைத்து, வேலையை உடனடியாகத் துவக்கு,” என்று பீஷ்மர் பொறுமையின்றி ஆணையிட்டார்.

“மேன்மை மிக்கவரே, அவன் ஓர் ஊழல் பேர்வழி. அதோடு . . .”

“ஊழல்! இந்த நாட்டில் யார்தான் ஊழல் பேர்வழி இல்லை? அவன் கொஞ்சம் பணத்தைச் சுருட்டிக் கொண்டு உடல் கொழுக்கட்டும். ஆனால் இந்த வேலை இன்றே துவங்கட்டும். போ, அவனை அழைத்து வா!” என்று கூறிவிட்டு, பீஷ்மர் தன் விரல்களைச் சொடுக்கினார்.

விதுரன் அவருக்குத் தலை வணங்கிவிட்டு, அவருடைய உத்தரவை

நிறைவேற்றச் சென்றான்.

* * *

“கிருஷ்ணா, இதில் அவளுடைய பங்கு நிச்சயமாக இருக்கிறது,” என்று குந்தி தன் மருமகனிடம் கூறிவிட்டு, அவனுக்கு ஒரு குவளை நிறைய நீர்மோரைக் கொடுத்தாள். “அரசர் அவ்வளவு மோசமானவர் அல்ல. அவள் மட்டும் கபட நாடகம் ஆடியிருக்காவிட்டால், வாரனவதத்திற்குப் போகும்படி அவர் எங்களிடம் கூறியிருக்க மாட்டார். பிதாமகரும் அவ்வாறு செய்திருக்க மாட்டார். அவளும் அவளுடைய சகோதரனும் எங்கள் நாட்டைச் சீரழிப்பதில் உறுதியாக இருக்கின்றனர்.”

“அத்தை, உனக்கு நிகழும் அனைத்திற்கும் காந்தாரியைக் குறை கூறாதே. நீ சகுனியைப் பற்றிக் கூறுவதை வேண்டுமானால் நான் ஒத்துக் கொள்கிறேன்.” கிருஷ்ணன் சன்னலருகே அமர்ந்து கொண்டு, தன் கைவிரல்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

“இங்கு வருமாறு நீ எனக்கு அழைப்பு விடுத்தபோது, பயங்கரமான ஏதோ ஒன்று நிகழ்ந்திருந்ததாக நினைத்து, துவாரகையிலிருந்து நான் விரைந்து வந்தேன். ஆனால் நீயும் உன் மகன்களும் சிறிது காலம் இங்கிருந்து தள்ளி இருந்தால் எல்லோருக்கும் நல்லது. உன்னை வாரனவதத்திற்கு அனுப்புவதன் மூலம் பீஷ்மர் சரியான தீர்மானத்தைத்தான் எடுத்திருக்கிறார்.”

“கிருஷ்ணா, இதில் ஏதோ ஒரு சதி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் இல்லை. பாஞ்சாலத்தை வென்ற பிறகு அர்ச்சுனன்கூடப் பிதாமகருக்குப் பிடிக்காதவனாக ஆகிவிட்டான். யாரோ அவருடைய மனத்தில் விஷத்தை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அது விதுரனாக இருக்கக்கூடும்.”

“விதுரன் யாருடைய எதிரியும் அல்ல. அதேபோல, அவன் யாருடைய நண்பனும் அல்ல. எந்தவிதமான சுயநல எண்ணமும் இல்லாத ஒரே ஒருவன் அவன் மட்டும்தான்,” என்று கூறிய கிருஷ்ணன், குந்தியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

“அப்படியானால், அர்ச்சுனன் தன் குருவிற்குத் தன் கடமையைத்தான் செய்து கொண்டிருந்தான் என்று அவன் ஏன் பிதாமகரிடம் கூறவில்லை?”

தன் குவளையிலிருந்த நீர்மோரை ஒரு மடக்குப் பருகிவிட்டு, அதைக் கவனமாகக் கீழே வைத்தக் கிருஷ்ணன், குந்தியைப் பார்த்து, “அர்ச்சுனன் எப்போதும் தன் கடமையைச் செய்கிறான். அவனிடம்

எனக்குப் பிடித்தது அதுதான்," என்று ஒரு புன்னகையுடன் கூறினான்.

"காந்தாரி தன் மகன்களை வளர்த்துள்ளதைப்போல நான் என் மகன்களை வளர்க்கவில்லை. துரியோதனன் ஓர் இனிமையான குழந்தையாக இருந்தான். ஆனால் அவன் இப்போது எப்படிப்பட்டவனாக வளர்ந்திருக்கிறான் என்று பார். அவன் பெரியவர்களை மதிப்பதில்லை, புனித நூல்களுக்கும் மரியாதை கொடுப்பதில்லை, சம்பிரதாயங்களுக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை. ஓர் அன்னிய நாட்டுப் பெண்ணிடமிருந்து வேறு எதை நம்மால் எதிர்பார்க்க முடியும்?"

"அத்தை, உத்திரீதியாகப் பார்த்தால், அந்தத் தேரோட்டி இளைஞன் துரியோதனன் பக்கமாகச் சாய்வதற்கு அனுமதித்ததன் மூலம் நீ ஒரு தவறு செய்துவிட்டாய். பட்டத்து இளவரசன் இப்போது ஒரு கதாநாயகனாக ஆகியுள்ளான். அந்த பிரம்மாண்டமான விழாவன்று, ஒன்று, அந்தத் தேரோட்டியைச் சிறைப்பிடித்து, தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பிடம் ஒப்படைத்திருக்க வேண்டும், அல்லது அவனை நம் பக்கம் இழுத்திருக்க வேண்டும். என்னால் எதுவும் செய்ய முடிவதற்கு முன், கர்ணன் அங்க நாட்டின் அரசனாகிவிட்டான். துரியோதனன் இவ்வளவு பெரிய சூழ்ச்சிக்காரனாக இருப்பான் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அவன் தன் காயை மிகத் திறமையாக நகர்த்தியிருக்கிறான் என்பதை நான் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்," என்று கூறிவிட்டு, கிருஷ்ணன் சன்னலுக்கு வெளியே பார்த்தான். தன் சிந்தனையில் மூழ்கியிருந்த அவன், சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு தன் அத்தையைத் திரும்பிப் பார்த்தான். "அத்தை, உனக்கு உடம்பு சரியில்லையா? உன் முகம் ஏன் இவ்வளவு வெளிறிப் போயிருக்கிறது?"

"ஒன்றுமில்லை . . . ஒன்றுமில்லை . . . வெயில் ஒத்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்," என்று பதிலளித்தக் குந்தி, ஒரு பனை விசிறியைக் கொண்டு தன் முகத்தின் அருகே விசிறினாள்.

தன் அத்தையைக் கூர்ந்து பார்த்தக் கிருஷ்ணன், "அந்தத் தேரோட்டி நமக்கு ஒரு பிரச்சனையாக இருக்கப் போகிறான்," என்று கூறினான். அவள் கிருஷ்ணனின் கண்களைத் தவிர்த்துவிட்டு, சன்னலருகே இருந்த குவளையை எடுக்கச் சென்றாள். "அத்தை, நீ எதற்கும் கவலைப்படாதே. உன் மகன்களுக்கு ஒன்றும் நடக்காது. நான் அவர்களுக்காக எப்போதும் இருப்பேன். அர்ச்சுனனைவிட என் மனத்திற்குப் பிரியமானவன் வேறு யாருமில்லை. நேரம் வரும்போது, அவனுடைய கைகள் தடுமாறாமல் நான் பார்த்துக் கொள்வேன். துரியோதனன் நடந்து கொள்ளும் விதத்தை வைத்துப் பார்த்தால், விரைவில் நாம் ஒரு போருக்குள்

தள்ளப்படுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.”

“போர் பற்றிய எண்ணமே எனக்கு வெறுப்பூட்டுகிறது. அது மட்டும் . . .”

“ஒரு போர் அவசியம். நான் ஒரு போர் வெறியன் என்றோ, அதன் கொடுமையான பின்விளைவுகளைப் பற்றி அறியாதவன் என்றோ நீ நினைத்துவிடாதே. ஆனால் துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் இந்தச் சமுதாயத்தின் அடிப்படை அமைப்புமுறையான சாதி அமைப்புமுறையை ஆட்டம் காணச் செய்கின்றனர். ஆனால் அந்த நான்கு குலப் பிரிவுகள்தான் நம் சமுதாயத்திற்கு வலிமையைக் கொடுக்கின்றன. துரியோதனன் முன்மொழியும் திட்டம் குழப்பத்திற்குத்தான் வழி வகுக்கும். எவரொருவராலும் எதுவாக வேண்டுமானாலும் ஆக முடியும் என்றால், நம் சமுதாயத்தில் நிபுணர்களே இருக்க மாட்டார்கள். சமுதாயம் பலவீனமடைந்துவிடும். தங்கள் கடமைகள் எவை என்பது மக்களுக்குத் தெரியாமல் போய்விடும். அதோடு, ஆரோக்கியமற்றப் போட்டி உருவாகும். மனிதனை மனிதனே அடித்துப் பிழைக்கும் நிலை உருவாகிவிடும். நம் சமுதாய ஒழுங்கைப் பாதுகாக்கின்ற ஒரு நோக்கத்துடன் நான் பிறந்திருப்பதாக நான் நம்புகிறேன்.”

“கிருஷ்ணா, உன்னுடைய எண்ணங்களைப் புரிந்து கொள்ளும் அறிவு எனக்கு இல்லை. இன்னும் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் நான் உன்னிடம் முன்வைக்க விரும்புகிறேன். என் மகன்களும் நானும் இவ்வுலகில் தனியாக இருக்கிறோம். எங்கள் எதிரிகள் சக்திவாய்ந்தவர்கள். அரசரும் அரசியும் எங்களை வெறுக்கின்றனர். எங்களை முற்றிலுமாகக் களைந்தெறிவதற்கு துரியோதனன் எவ்வளவு கீழ்த்தரமாக வேண்டுமானாலும் நடந்து கொள்வான். என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, என் மகன் அஸ்தினாபுரத்தின் அரியணையின்மீது உட்கார வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதைச் சாதிக்க நீ எனக்கு உதவுவாயா? அதைவிட முக்கியமாக, நான் உயிரோடு இருக்கும்போது, காந்தாரியின் மகன்களில் எவனும் அரசனாக ஆவதை நான் விரும்பவில்லை. நான் போதுமான அளவு துன்புற்றுவிட்டேன்.”

கிருஷ்ணன் அங்கிருந்து புறப்படுவதற்காக எழுந்து நின்றான். “அத்தை, நான் புறப்படுகிறேன். அரசாட்சிப் பொறுப்பாளருக்கு என் மரியாதையைச் செலுத்திவிட்டு, நாளை அதிகாலையில் நான் துவாரகைக்குப் புறப்பட்டாக வேண்டும். அரசனின் ஆணையை ஏற்றுக் கொண்டு, நீ உன் மகன்களுடன் வாரனவதத்திற்குப் போய்விடுவது நல்லது. உன்னைக் களைவதற்கு ஒரு சூழ்ச்சி நடைபெற்றுக்

கொண்டிருப்பதற்கான சாத்தியக்கூற்றை நான் ஒதுக்கித் தள்ளவில்லை. ஆனால் இதிலிருந்து மீள்வதற்கு நாம் ஒரு வழியைக் கண்டுபிடிக்கலாம். துரியோதனனுடன் சண்டையிடுவதற்கு சக்திவாய்ந்த நண்பர்கள் உனக்குத் தேவை. துரதிர்ஷ்டவசமாக, அர்ச்சுனன் தன் குருவிற்காகத் துருபதனைத் தன் எதிரியாக ஆக்கிக் கொண்டுள்ளான். இவ்விஷயத்தில் என்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று நான் பார்க்கிறேன். நான் துவாரகைக்குத் திரும்பிச் செல்லும் வழியில் பாஞ்சாலத்திற்குச் சென்று, பரிகாரமும் சமரசமும் செய்து கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன். நீ வாரனவதத்திற்குப் போ. இந்த ஆபத்தான விளையாட்டைத் துணிந்து விளையாடு. இதில் ஈவு இரக்கம் காட்டாதே. எதற்கும் தயங்காதே. பிழைத்திருப்பதுதான் மிகப் பெரிய தர்மம். ஆபத்தின்போது எதுவுமே ஒரு பாவமில்லை என்று புனித நூல்கள் கூறுகின்றன. அது 'ஆபத்து தர்மம்' என்று அழைக்கப்படுகிறது. நீ சிந்தித்துப் பார்த்தால், ஒரு வழியை உன்னால் கண்டுபிடிக்க முடியும்."

"கிருஷ்ணா, நீ எப்போதும் எங்களுக்கு ஆதரவாக இரு. எங்களுக்கு வேறு யாரும் இல்லை."

"அத்தை, நான் நிச்சயமாக உன்னோடும் உன் ஐந்து மகன்களோடும் கடைசிவரை இருப்பேன்," என்று கூறிவிட்டு, கிருஷ்ணன் தன் அத்தையின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டுக் கதவை நோக்கி நடந்தான்.

"கிருஷ்ணா, நான் . . . இல்லை, அது ஒன்றுமில்லை . . ."

கிருஷ்ணன் அவளுக்குத் தலை வணங்கிவிட்டு அங்கிருந்து வெளியேறினான். தன் ஐந்து மகன்களையும் தான் நிச்சயமாகப் பாதுகாப்பதாகக் கிருஷ்ணன் கொடுத்த வாக்குறுதி, என்ன காரணத்தாலோ, கடும்புயல் வீசிய குந்தியின் குழப்பமான மனத்தை அமைதிப்படுத்தத் தவறியது.

* * *

ஒருசில நாட்களுக்குப் பிறகு, நள்ளிரவில், சகுனி திடுக்கிட்டு விழித்தான். யாரோ அவனுடைய கதவின்மீது மென்மையாகத் தட்டிக் கொண்டிருந்தனர். தன் தூக்கத்திற்கு நேர்ந்த இடையூறு குறித்துத் திட்டிக் கொண்டே, தட்டுத்தடுமாறித் தன் குத்துவாளை எடுத்துக் கொண்டு, அதைத் தன் வேட்டியின் மடிப்புகளில் மறைத்து வைத்தான். பிறகு ஒரு சிறிய எண்ணெய் விளக்கைத் தன் மேசையின்மீது இருந்து எடுத்துக் கொண்டு, எச்சரிக்கையுடன் கதவைத் திறந்தான். வெளியே புரோச்சனன் நின்று கொண்டிருந்தான். 'இந்த நேரத்தில் இவனுக்கு இங்கே என்ன வேலை?' என்று மீண்டும் தன் மனத்திற்குள் திட்டிய

சகுனி, அவன் தன் கூலியை வசூலிக்க வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

புரோச்சனன் சகுனியின் அறைக்குள் நுழைந்து, அவனுடைய கட்டிலின்மீது அமர்ந்தான். அங்கிருந்த மென்மையான தலையணைகளைத் தொட்டுப் பார்த்த அவன், "அன்னியரே, உங்கள் அறை மிகவும் அருமையாக இருக்கிறது," என்று கூறினான்.

"கோமாளியே, உனக்கு என்ன வேண்டும்?" என்று சகுனி கடுமையான குரலில் கேட்டான்.

"அன்னியரே, இந்தத் தொனியை என்னிடம் வெளிப்படுத்தாதீர்கள். நான் கூற வந்திருக்கும் விஷயத்தை நீங்கள் கேட்டால், நீங்கள் என்னைக் கட்டியணைத்து எனக்கு முத்தமிடுவீர்கள். தயவு செய்து, கடந்த முறைபோல என்னை ஏமாற்றிவிடாதீர்கள். எனக்கு ஆயிரம் பொற்காசுகள் வேண்டும். அதன்மீது எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அதில் மூன்று மடங்கு பொற்காசுகள் எனக்கு வேண்டும். இதற்குச் சம்மதமா?"

புரோச்சனன் கூற வந்திருந்த விஷயம் மிகவும் முக்கியமானது என்பதைக் காந்தார இளவரசன் உள்ளுணர்வுரீதியாக அறிந்து கொண்டான். விஷயம் முக்கியமாக இருக்கவில்லை என்றால், இந்தப் பாம்பு, இரவு இவ்வளவு நேரத்திற்குப் பிறகு தன்னை எழுப்பத் துணிந்திருக்காது என்று அவன் நினைத்தான். "சம்மதம்," என்று கூறிய சகுனி, ஓர் அலமாரியில் இருந்து பொற்காசுகளை எடுத்து, அவற்றை இரண்டு முறை எண்ணிவிட்டு, பிறகு தன் கட்டிலின்மீது அவற்றை வீசியெறிந்தான்.

புரோச்சனன் நிதானமாக அவற்றை எண்ணிக் கொண்டிருந்தபோது, சகுனி இருப்புக் கொள்ளாமல் தவித்தான். பொற்காசுகளை எண்ணி முடித்தப் பிறகு புரோச்சனன் சகுனியிடம் அச்செய்தியைக் கூறினான். பாண்டவர்களுக்கு ஓர் அரண்மனையைக் கட்டும் பொறுப்பை விதுரன் புரோச்சனனுக்குக் கொடுத்திருந்தான். அதன் கட்டுமானத்திற்காகக் கருவூலத்திலிருந்து ஒரு மிகப் பெரிய தொகையை பீஷ்மர் வழங்கியிருந்தார். இதைக் கேட்ட சகுனி, மகிழ்ச்சியில் உற்சாகமாகக் கத்தினான். அக்கணத்தில் அவனுடைய மனத்தில் ஒரு யோசனை பளிச்சிட்டது. அவன் தன் விருப்பத்தைப் புரோச்சனனிடம் கூறினான். ஆனால், அரக்கைக் கொண்டு ஒரு மாளிகையைக் கட்டுவது மிகவும் ஆபத்தானது என்று புரோச்சனன் பதிலளித்தான். சிறிது நேரம் யோசித்துவிட்டு, 10,000 பொற்காசுகள் தருவதாக சகுனி ஒத்துக் கொண்டான். ஒருவழியாகத் தன் அதிர்ஷ்டம் மாறியிருந்த மனநிறைவுடன், வாரனவதத்தில் கட்டுமான வேலையைத்

துவக்குவதற்காகப் புரோச்சனன் விரைந்தான்.

உற்சாக வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த சகுனியால் தூங்க முடியவில்லை. அவன் தன் பகடைகளை எடுத்து, "ஆறு," என்று கூறி அவற்றைத் தன் மேசையின்மீது எறிந்தான். அவை உருண்டு சென்று நின்றபோது, ஒவ்வொன்றின்மீதும் மூன்று புள்ளிகள் தெரிந்தன. அவன் மகிழ்ச்சியில் சிரித்தான். பகடைகள் அருமையாக உருண்டு கொண்டிருந்தன. விஷயங்கள் அவன் திட்டமிட்டபடிச் சென்றால், எளிதில் தீப்பிடித்துக் கொள்ளக்கூடிய அரக்கு மாளிகைக்குள் பாண்டவர்கள் சிக்கிக் கொள்வார்கள். அவர்கள் காயப்படாமல் அங்கிருந்து தப்பிப்பதை அவன் உறுதி செய்வான். அவர்கள் இறந்து போக வேண்டும் என்று அவன் விரும்பவில்லை. ஏனெனில், அவர்கள் இறந்து போனால், உரிய நேரத்தில் துரியோதனன் அரியணை ஏறிவிடுவான். அவனுடைய துரதிர்ஷ்டமான ஒன்றுவிட்டச் சகோதரர்கள் விரைவில் மறக்கப்பட்டுவிடுவார்கள். ஆனால், கௌரவச் சகோதரர்கள் தங்களைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற நினைப்போடு பாண்டவர்கள் அங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்றும், பண்டவர்களைக் கொலை செய்யத் தீட்டப்பட்ட சதித் திட்டம் அந்த முட்டாள் விதுரனின் காதுகளுக்கு எட்ட வேண்டும் என்றும் சகுனி விரும்பினான். தன் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடந்த பிரதம மந்திரி, மீதியைப் பார்த்துக் கொள்வார் என்று அவன் உறுதியாக நம்பினான்.

கிழக்கு வானில் பகலவனின் ஒளிக்கீற்றுகள் மெல்ல மெல்லப் பரவியபோது, சகுனி மேற்குத் திசையை நோக்கித் திரும்பி, தன் காலைநேரப் பிரார்த்தனைகளுக்காகத் தரையின்மீது மண்டியிட்டு அமர்ந்து, தன் தாய்நாட்டின் பெருமைக்காகப் பிரார்த்தனை செய்தான். அவனுடைய திட்டப்படியே அனைத்து விஷயங்களும் மிகச் சிறப்பாகச் சென்று கொண்டிருந்தன.

20

அரக்கு மாளிகை

விதுரன் விடுப்புக் கேட்டு பீஷ்மருக்கு ஒரு தூதுவனை அனுப்பியதைக் கண்ட அவனுடைய மனைவி பார்ஷவி ஆச்சரியமடைந்தாள். தங்கள் வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்த இடத்திற்குத் தாங்கள் சென்று வரப் போவதாக விதுரன் அறிவித்தபோது அவளால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தங்கள் தந்தை தங்களோடு அந்தச் சிற்றுலாவிற்கு வரவிருந்ததைக் கேள்விப்பட்ட அவனுடைய மகன்கள் உற்சாகமடைந்தனர். விதுரனும் அவனுடைய குடும்பத்தாரும் புறப்பட்டு வாசலுக்கு வந்தபோது, பீஷ்மரின் அதிகாரப்பூர்வமான ரதம் அங்கு காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

அந்த ரதத்தின் தேரோட்டி, விதுரனைக் கண்டதும் மரியாதையோடு தலை வணங்கிவிட்டு, "பிரதம மந்திரியாரே, நீங்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக அரசாட்சிப் பொறுப்பாளர் இதை அனுப்பி வைத்துள்ளார்," என்று கூறினான்.

இது தன்னுடைய தனிப்பட்டப் பிரயாணம் என்றும், அதிகாரப்பூர்வமான பயணம் அல்ல என்றும் கூறி விதுரன் மறுப்புத் தெரிவிக்க விரும்பினான். ஆனால் தான் அந்த ரதத்தைத் திருப்பி அனுப்பினால், அது அரசாட்சிப் பொறுப்பாளரின் மனத்தைக் காயப்படுத்தும் என்பதை அறிந்த அவன், பேசாமல் இருந்துவிட்டான். ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த ரதத்திற்குள் பார்ஷவி

முதலில் ஏறிக் கொண்டாள். பிறகு தன் மகன்களை உள்ளே இழுத்தாள். விதுரன் மீண்டும் தயங்கினான். ஆனால் தன் குடும்பத்தினர் ஏற்கனவே ரதத்திற்குள் இருந்ததால், அவனும் ஏறிக் கொண்டான். ரதம் முன்னோக்கி நகர்ந்தது.

பார்ஷவி தன் கணவனிடம், "நீங்கள் ஏன் இப்படி வருத்தமாக இருக்கிறீர்கள்? நீங்கள் எந்தக் குற்றமும் செய்து கொண்டிருக்கவில்லை. இது உங்களுடைய அதிகாரப்பூர்வமான ரதம் அல்ல. அரசாட்சிப் பொறுப்பாளருக்கு உங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால்தான் அவர் தன்னுடைய அதிகாரப்பூர்வமான ரதத்தை அனுப்பி வைத்துள்ளார்," என்று கூறினாள். அவர்கள் ஒருவழியாகத் தங்கள் இடத்தை வந்தடைந்தபோது, பார்ஷவி திடுக்கிட்டாள். "நம் வீட்டை நாம் இந்தக் காட்டிலா கட்டப் போகிறோம்?" என்று அவள் தன் கணவனிடம் கேட்டாள். அவர்களுடைய மகன்கள் ரதத்திலிருந்து கீழே குதித்து, அருகிலிருந்த நீரோடைக்கு ஓடிச் சென்று அதனுள் குதித்தனர். விதுரனையும் பார்ஷவியையும் சுற்றி நூற்றுக்கணக்கான பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. அவர்களுக்கு மேலே எங்கோ குயில்கள் கூவி ஒன்றுக்கொன்று பேசிக் கொண்டன. தன் மகன்களின் உற்சாகக் கத்தல்களையும் தாண்டி, வெட்டுக்கிளிகளின் இசையையும் பறவைகளின் இனிமையான கீச்சொலிகளையும் அவளால் கேட்க முடிந்தது. ஒரு நறுமணத் தென்றல் அவளுடைய தலைமுடியைக் கலைத்துவிட்டு, இலைகளோடு சரசமாடுவதற்காக விரைந்தது.

"உனக்கு இது பிடிக்கவில்லையா?" என்று விதுரன் கேட்டான்.

பார்ஷவிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. காட்டின் இந்தக் குறிப்பிட்ட இடம், அஸ்தினாபுரத்தின் மும்முரமான வீதிகள், கடைகள், மற்றும் சந்தைகளிலிருந்து வெகுதொலைவில் இருந்தது. விதுரன் தங்களை இந்தக் காட்டிற்குக் குடிபெயர்த்துக் கூட்டி வந்தால், எப்படி ஒரு வீட்டை நிர்வகிக்க முடியும் என்று அவள் கவலைப்பட்டாள். ஒரு சிற்றுலாவிற்கு வேண்டுமானால் இந்த இடம் பொருத்தமானதாக இருக்கலாம், ஆனால் . . .

"நானே என் சொந்தக் கைகளால் இந்த வீட்டைக் கட்டியெழுப்பப் போகிறேன்," என்று கூறிய விதுரன், சமையலறை எங்கே இருக்கும், தன்னுடைய அறை எங்கே இருக்கும் என்று ஆர்வத்தோடு அவளுக்குச் சுட்டிக்காட்டத் துவங்கினான்.

பார்ஷவி புன்னகைத்துவிட்டு, உற்சாகமாக இருப்பதுபோல நடித்தாள். மாலைக்குள், விதுரன் தன் மகன்களை அந்தப் பணித்திட்டத்தில் ஈடுபடுத்தியிருந்தான். அன்றைய தினம், அவர்களுடைய வாழ்வில் மிக அழகான நாட்களில் ஒன்றாக அமைந்தது.

வீட்டிற்குத் திரும்பிச் சென்ற வழியில், தங்கள் கனவு வீட்டைப் பற்றி விதுரன் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான். பார்ஷவி அவனுடைய பேச்சில் குறுக்கிடாமல் வெறுமனே காதுகொடுத்துக் கேட்டாள். அவர்களுடைய ரதம் அஸ்தினாபுரத்தின் மும்முரமான வீதிகள் வழியாக விதுரனின் வீட்டை நோக்கி விரைந்தது.

விதுரன் தன் மகன்களைத் தூங்க வைத்துவிட்டு வந்தபோது, "நீங்கள் நகரக் கட்டடக்கலை நிபுணரிடம் பேசி, நம் வீட்டைக் கட்டுவதற்கு அரண்மனைக் கொத்தனார்களைப் பயன்படுத்தினால் என்ன?" என்று பார்ஷவி கேட்டாள்.

"பார்ஷவி, நாம் கட்டிக் கொண்டிருப்பது ஒரு பொதுக் கட்டடம் அல்ல. நாம் நம்முடைய வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். என் பதவியை என் தனிப்பட்ட வேலைகளுக்குப் பயன்படுத்துவது தவறு. மேலும், நம் வீட்டை நான் என் சொந்தக் கைகளால் உருவாக்க விரும்புகிறேன். அது கட்டி முடிக்கப்பட்டவுடன், நாம் எந்தக் கட்டடக்கலை நிபுணரிடமும் போகாமல் இருந்தது குறித்து நீ நன்றியுடன் இருப்பாய்."

தங்கள் புதிய வீடு தன் வாழ்நாளில் ஒருபோதும் கட்டியெழுப்பப்படாது என்பதை அவள் அறிந்தாள். விதுரன் ஒரு நாள் முழுவதையும் தன் குடும்பத்தோடு செலவிட்டது அதுதான் கடைசி முறை. தனக்கு நேரம் கிடைத்தபோதெல்லாம் அவன் அந்தக் காட்டிற்குள் ஓடிச் சென்று, தன் வீட்டைக் கட்டுவதில் ஈடுபட்டான். தன்கீழ் வேலை செய்தவர்களின் உதவியையும் நிபுணர்களின் அறிவுரையையும் அவன் மறுத்தான். வேகாத வெயிலிலும் வாட்டியெடுத்தக் குளிரிலும் அவன் கடுமையாக உழைத்தான். அவனுடைய மகன்கள் ஒருசில முறைகள் அவனோடு சென்று, அந்த வீட்டின் கட்டுமானப் பணியில் உதவினர். பிறகு அவர்கள் ஆர்வம் இழந்தனர். ஒவ்வொரு மழைக்காலத்திலும், அவன் கட்டியிருந்த அனைத்தும் மழையால் தரைமட்டமாக்கப்பட்டன. விதுரன் தனக்கு நேரம் இல்லாதது குறித்து நொந்து கொண்டானே தவிர, தனக்குக் கட்டுமானத் திறமை இல்லை என்பதை ஒருபோதும் உணரவே இல்லை. மழையால் தன் வீடு இடிந்தபோதெல்லாம், அவன் ஒருசில நாட்கள் மனச்சோர்வுடன் இருந்தான். பிறகு மீண்டும் தன் வீட்டைக் கட்டுவதில் மும்முரமடைந்தான். பிரதம மந்திரியின் ஒருபோதும் முற்றுப் பெறாத கட்டுமானப் பணியைப் பற்றி விரைவில் அஸ்தினாபுரத்தில் கேலிப் பேச்சுக்கள் வலம் வரத் துவங்கின.

* * *

ஏகலைவன் ஒரு மோசமான மனநிலையில் இருந்தான். அவனுடைய சித்தி மீண்டும் அவனுடன் சண்டையிட்டிருந்தாள். அவன் தன் வில் பயிற்சியை மீண்டும் துவக்கியதிலிருந்து அவள் அவனை அதிகமாக எரிச்சல்படுத்தி வந்திருந்தாள். அவளையும் அவளுடைய மகன்களையும் தான் கண்டுகொள்ளாமல் இருந்தது குறித்து அவள் தன்மீது குறை கூறிக் கொண்டிருந்தது சரிதான் என்பதை அவன் அறிந்தான். அவன் தன் கட்டைவிரலை இழந்த பிறகு, தன் மனத்தளர்ச்சியிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, ஒரு தோட்டியாக வேலை செய்து தன் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளத் துவங்கியிருந்தான். ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்த அவனைப் போன்றவர்களுக்குக் கிடைத்த ஒரே வேலை வாய்ப்பு அது மட்டுமாகத்தான் இருந்தது. மேன்மக்கள் வீட்டுக் கழிவறைகளையும் கழிவோடைகளையும் சுத்தம் செய்து, மனிதக் கழிவுகளைக் கூடைகளில் தன் தலைமீது சுமந்து சென்று, மேன்மக்களின் ஆடம்பரமான வசிப்பிடங்களிலிருந்து வெகுதொலைவில் இருந்த குழிகளில் அவற்றைக் கொட்டும் வேலையை அவன் அடியோடு வெறுத்தான். அவன் எத்தனை முறை நன்றாகத் தேய்த்துக் குளித்தாலும், தான் எப்போதும் அழுக்காகவே இருந்ததாக அவன் உணர்ந்தான். அவனுடைய கரிய உடலைக் காண்பதே தங்களை மாசுபடுத்திவிடும் என்பதுபோல, மக்கள் அவனைக் கண்டதும் தலைதெறிக்க ஓடினர்.

நாய்களும் பன்றிகளும் தெருக்களில் தாராளமாக வலம் வந்தன, ஆனால் யாரும் அது பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் இதே தெருக்களை ஏகலைவன் கடந்து சென்றபோது, பசுஞ்சாணத்தால் அவை சுத்தப்படுத்தப்பட்டன. அவனுடைய காலடிகள் பட்டாலே அந்த இடம் மாசுபடுட்டுவிடும் என்பதுபோல மக்கள் நடந்து கொண்டனர். அவன் தன் வாழ்க்கையையும் தன் விதியையும் தன் நாட்டையும் தன் வேலையையும் வெறுத்தான். ஆனால் இந்த வேலையும் இல்லை என்றால், பசியால் தான் சாக வேண்டியிருக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான். கர்ணனுக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தைப் பார்க்கும்வரை, நாற்றம் பிடித்தத் தன் வாழ்க்கையை அவன் தன் தலைவிதியென்று ஏற்றுக் கொண்டிருந்தான். இளவரசன் துரியோதனன் போன்ற நபர்கள் இருந்தவரை, கடினமாக உழைத்துத் தங்கள் கனவுகளைப் பின்தொடர்ந்து சென்ற மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருந்தது என்ற நம்பிக்கையை அது அவனுக்குக் கொடுத்தது. அன்றிலிருந்து, வில் வித்தையில் மீண்டும் திறம்படைத்தவனாக ஆவது குறித்தத் தன் கனவை அவன் விடாமுயற்சியுடன் பின்தொடர்ந்தான். தன் சாதியும் தனக்குக் கட்டைவிரல் இல்லாததும் தன் வழியில் குறுக்கிடுவதைத் தான்

ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று அவன் உறுதியாகத் தீர்மானித்தான். விரைவில், அந்த ஏழை வேடுவனின் வீட்டிற்குள் மீண்டும் பசி கோரதாண்டவம் ஆடியது. ஆனால் தன் தலைவிதிக்கு சவால்விட்டுக் கொண்டிருந்த அந்தத் தோட்டியைத் தடுத்து நிறுத்தும் சக்தி அக்குடும்பத்தில் யாருக்கும் இருக்கவில்லை.

ஏகலைவனின் சித்தி, அஸ்தினாபுரத்தைவிட்டு வெளியேறி, தொலைதூரத்தில் இருந்த வாரனவதம் எனும் கிராமத்திற்குக் குடிபெயர விரும்பியதுதான் அன்று காலையில் அவனுக்கும் அவளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலுக்குக் காரணம். ஏகலைவன் தொடர்ந்து அஸ்தினாபுரத்தில் இருக்க விரும்பினான். என்றேனும் ஒருநாள், பட்டத்து இளவரசன் தன்னைக் கவனிப்பதற்கு இங்கு ஒரு வாய்ப்பு இருந்ததாக அவன் கருதினான். அப்போது தன்னாலும் கர்ணனைப்போல ஒரு முக்கியமான நபராக ஆக முடியும் என்று அவன் நினைத்தான். ஆனால் வாரனவதம் போன்ற ஒரு பின்தங்கிய கிராமத்தில் தன்னால் என்ன செய்ய முடியும் என்று அவன் தன் சித்தியிடம் கேட்டான். அவன் தன் ஒன்றுவிட்டச் சகோதரர்கள்மீது அக்கறை கொள்வதை நிறுத்திவிட்டான் என்று ஏகலைவன்மீது குற்றம் சாட்டிய அவள், அவனுக்கு உணவளிக்க முயற்சித்துத் தான் களைத்துப் போயிருந்ததாகக் கூறினாள். வேலைக்குச் செல்வதற்குப் பதிலாக அவன் எப்போதும் தன் வில்லையும் அம்புகளையும் வைத்து விளையாடிக் கொண்டிருந்தது அவளுக்குக் கோபமூட்டியது. ஏகலைவன் ஒரு தோட்டியாக வேலை செய்ததால், ஒரு வேலைக்காரியாக அவளுக்கு வேலை கொடுக்கக்கூட யாரும் விரும்பவில்லை. ஏகலைவன் எப்போதும் தன் கிறுக்குத்தனமான வெறியுடன் அலைந்து கொண்டிருந்தால், தங்கள் குடும்பம் எப்படிப் பிழைத்திருக்கும் என்று கூறி அவள் தன் மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு தன் துயரத்தை வெளிப்படுத்தினாள்.

வருமானத்திற்கும் ஆதரவுக்கும் அவள் தன்னை மட்டுமே சார்ந்திருக்க முயற்சித்துக் கொண்டிருந்ததாக ஏகலைவன் அவளிடம் பொரிந்து தள்ளினான். செல்வந்தர்களின் கழிவுகளைத் தான் சுமந்து கொண்டிருந்தபோது, அவளும் அவளுடைய கொழுத்த மகன்களும் வெட்டியாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்ததாக அவன் கொடூரமாகப் பேசினான். ஆனால் அந்த வார்த்தைகள் தன் வாயிலிருந்து வெளிவந்த உடனேயே, அவன் அதற்காக வருந்தினான். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது. அவனுடைய சித்தி எதுவும் பேசாமல், தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தன்னிடமிருந்த கொஞ்சநஞ்சப் பொருட்களை ஒரு துணிக்குள் வைத்து

ஒரு சிறிய மூட்டையாகக் கட்டிக் கொண்டு, ஏகலைவனின் கெஞ்சல்களையும் மன்னிப்புக் கோரல்களையும் பொருட்படுத்தாமல், தன் மகன்களை அழைத்துக் கொண்டு அந்த ஓலைக் குடிசையிலிருந்து வெளியேறினாள். ஏகலைவன் அவள் பின்னால் ஓடிச் சென்று, அவளைச் சமாதானப்படுத்தி, மீண்டும் அந்தக் குடிசையிலேயே தங்க வைக்க முயற்சித்தான். ஆனால் வாரனவதத்தில் தங்களுக்கு ஏதேனும் நல்லது நடக்குமா என்று தான் பார்க்கப் போவதாக அவள் கூறினாள். ஏகலைவன் அவளுடைய பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

வேலை செய்து காய்த்துப் போன தன் கையால் அவள் அவன் தலையைத் தொட்டு, ஒரு பிரார்த்தனையை முணுமுணுத்தாள். பிறகு, "ஏகலைவா, எனக்கு உன்மீது எந்தக் கோபமும் இல்லை. ஆனால் நாம் பிரிவதற்கான நேரம் வந்துவிட்டதாக நான் உணர்கிறேன். நீ இப்போது ஓர் ஆண்மகனாக வளர்ந்துவிட்டாய். என் கணவனின் சகோதரருக்கு நான் என் கடமையைச் செய்துவிட்டேன். இனி நான் என் மகன்களின் பசியைப் போக்கி, அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும். உன்னுடைய ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு இனிமேலும் ஓர் அட்டைப் பூச்சியாக என்னால் இருக்க முடியாது. நான் உன்னை வளர்த்து வந்தபோது, நான் உன்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இப்போது, உன் லட்சியத்தில் உனக்கு உதவுவதற்கு, பிரார்த்தனை செய்வதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியாது. சிவபெருமான் எப்போதும் உன்னுடன் இருக்கட்டும். உன் கனவுகள் நனவாக வேண்டும் என்று நான் அவரிடம் பிரார்த்திக்கிறேன். நீ என்னையோ அல்லது உன் சகோதரர்களையோ எப்போதாவது பார்க்க விரும்பினால், வாரனவதத்திற்கு நீ தாராளமாக வரலாம். பாண்டவர்களுக்காக அரசாட்சிப் பொறுப்பாளர் அங்கு ஒரு மிகப் பெரிய மாளிகையைக் கட்டியுள்ளதாக நான் கேள்விப்பட்டேன். அந்தக் கிராமம் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. மூத்தப் பாண்டவனான தர்மன்தான் உலகிலேயே மிகவும் உண்மையுள்ள மனிதன் என்று எல்லோரும் கூறுகின்றனர். பாண்டவர்கள், விஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணனின் நண்பர்கள் என்றும் நான் கேள்விப்படுகிறேன். வாரனவதம் எங்களுக்கு அஸ்தினாபுரத்தைவிடச் சிறந்த இடமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அஸ்தினாபுரம் எங்களிடம் கொடூரமாக நடந்து வந்துள்ளது. இங்கு எல்லோரும் எங்களைப் புழுக்களைப்போல நடத்துகின்றனர். தர்மன் ஆட்சி செய்கின்ற ஓர் இடத்தில், கிருஷ்ணனால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில், ஓர் ஏழை வேடுவப் பெண்ணுக்கும் அவளுடைய ஐந்து மகன்களுக்கும் சிறிதளவு இடம் இருக்கும் என்று நான் நம்புகிறேன்,"

என்று கூறினாள்.

ஏகலைவன் தன் சகோதரர்களை ஒவ்வொருவராகக் கட்டியணைத்தான். அச்சிறுவர்களில் மூத்தவன் ஏகலைவனைவிட ஒருசில வருடங்கள் இளையவன். அவன் ஏகலைவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டபோது, தலை நிமிர்ந்து நின்றான். ஆனால் அச்சிறுவர்களில் கடைக்குட்டியை ஏகலைவன் கட்டித் தழுவியபோது, அச்சிறுவன் அழுதான். அவனுக்குக் கிட்டத்தட்டப் பதிமூன்று வயது. ஏகலைவன் அவனுக்கு வில் வித்தையைக் கற்றுத் தரத் தொடங்கியிருந்தான். ஒரு சிறந்த வில்லாளனாக ஆவதற்குரிய அனைத்து அம்சங்களும் அவனிடம் இருந்ததாக ஏகலைவன் நினைத்தான். ஏகலைவனின் சித்தி அங்கிருந்து நடக்கத் துவங்கியபோது, அந்தக் கடைக்குட்டியைத் தவிர மற்ற நால்வரும் தயக்கத்தோடு அவளைப் பின்தொடர்ந்தனர். ஏகலைவன் தன் இடையிலிருந்து ஒரு சிறிய கத்தியை எடுத்து, அதை அந்தக் கடைக்குட்டியிடம் கொடுத்தான். அச்சிறுவன் ஒரு கணம் தயங்கிவிட்டு, பிறகு அதை வாங்கிக் கொண்டு, மற்றவர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டான். உலகில் தனக்கு இருந்தே ஒரே சொந்தங்கள், தொலைவிலிருந்த தொடுவானத்தின்மீது புள்ளிகளாக ஆகி, தன் உலகிலிருந்து மறைந்து போனதைப் பார்த்தபடி ஏகலைவன் நின்று கொண்டிருந்தான்.

* * *

அந்த வேடுவப் பெண்ணும் அவளுடைய மகன்களும் பல நாட்கள் நடந்து, இறுதியில் வாரனவதத்தை அடைந்தனர். அந்தக் கிராமம் ஒரு நகரமாக உருவாகிக் கொண்டிருந்தது. ஆனால் அவள் ஏமாற்றமடைந்தாள். அவள் இதைவிட மிகப் பெரிய ஓர் இடத்தை எதிர்பார்த்திருந்தாள். பாண்டவர்களுக்காகக் கட்டப்பட்ட மிகப் பெரிய மாளிகை மட்டுமே அங்கிருந்த ஒரே குறிப்பிடத்தக்கக் கட்டடமாக இருந்தது. அது புதிதாகவும் ஆடம்பரமானதாகவும் தோன்றியது. அந்த மாளிகையின் குவிமாடம் கதிரவனின் ஒளியால் மினுமினுத்துக் கொண்டிருந்ததைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடி நின்ற அவள், ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் வாழ்வதற்கு எதற்கு இவ்வளவு பெரிய இடம் என்று வியந்தாள். முக்கியச் சாலையின்மீது நடப்பதற்கு அவள் பயந்தாள். தாங்கள் தூய்மையற்றவர்களாகக் கருதப்பட்டு அங்கிருந்து துரத்தப்படுவோம் என்று அவள் உறுதியாக நம்பினாள்.

அந்த மாளிகையை நன்றாகப் பார்க்க விரும்பிய அவளுடைய

கடைசி மகன் அவளுடைய மணிக்கட்டைப் பிடித்து இழுத்தான். "அம்மா, நாம் அந்தச் சாலையின்மீது நடக்கலாம். மாளிகையிலிருந்து நாம் ஏன் இவ்வளவு தள்ளி நடக்கிறோம்? நான் அந்த மாளிகையைப் பார்க்க விரும்புகிறேன்," என்று அவன் கூறினான்.

"நீ உன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? பட்டப்பகலில் அந்த முக்கியச் சாலையில் நடப்பதற்கு நீ ஒரு பிராமணனா அல்லது ஓர் இளவரசனா? நாம் தீண்டத்தகாதவர்கள், நாம் அந்தச் சாலையை மாசுபடுத்திவிடுவோம்."

ஆனால் அச்சிறுவன் விட்டுக்கொடுப்பதாக இல்லை. "அம்மா, நாம் தீண்டத்தகாதவர்கள் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? நாம் இப்போது அஸ்தினாபுரத்தில் இல்லை. இங்கு நம்மை யாருக்கும் தெரியாது."

"மகனே, நம் தோலின் நிறத்தை வைத்து அவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள்."

அச்சிறுவன் தன் கருப்புத் தோலை உற்றுப் பார்த்துவிட்டு, பிறகு மௌனமானான். தன்னால் தன் தோலின் நிறத்தை மாற்ற முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான். என்ன செய்வதென்று அவனுடைய தாயாருக்கும் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் பசியோடு இருந்தனர். ஆறு நாட்களுக்கு முன்பு, நள்ளிரவில், ஒரு கோவிலுக்கு அருகே இருந்த ஒரு குப்பைத் தொட்டியை அவர்கள் வேட்டையாடியிருந்தனர். சமயப் பற்றுக் கொண்ட ஒரு வணிகன் தன் பாவங்களுக்குப் பரிகாரமாக முந்தைய இரவில் பிராமணர்களுக்குக் கொடுத்திருந்த ஒரு விருந்தில் மிச்சமாகிப் போன உணவு அந்தக் குப்பைத் தொட்டியில் ஓரளவுக்கு இருந்தது. தன் சகோதரர்களும் தன் தாயும் உணவைத் தேடி அந்தக் குப்பைத் தொட்டியைக் கிளறியபோது, அவளுடைய மூத்த மகன் தன் கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு, தங்களுக்குப் போட்டியாக வந்த தெரு நாய்களை விரட்டிக் கொண்டிருந்தான். காலைநேரப் பிரார்த்தனைகளுக்காகக் கோவிலைத் திறக்க அர்ச்சகர்கள் வருவதற்குள் அவர்கள் வேகவேகமாகத் தங்கள் வேலையை முடிக்க வேண்டியிருந்தது. கோவில் அருகே அவர்களை யாரேனும் பார்த்துவிட்டால், அவர்கள் அதற்குரிய விலையைக் கொடுத்தாக வேண்டியிருக்கும். அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு அந்த எச்சில் உணவைச் சேகரித்துக் கொண்டனர். இந்தச் சூழ்நிலையிலும், அந்த வேடுவப் பெண், தெரு நாய்களுக்காகச் சிறிதளவு உணவை விட்டுச் சென்றாள். பசியின் கொடுமையை அவள் நன்றாக அறிந்திருந்தாள். அந்த உணவைக் கொண்டு சில நாட்கள் அவர்கள் தாக்குப்பிடித்தனர். ஆனால் கடந்த இரண்டு நாட்களாக, சாப்பிட

அவர்களுக்கு எதுவும் கிடைத்திருக்கவில்லை.

அந்த வேடுவக் குடும்பத்தினர் அந்த பிரம்மாண்டமான மாளிகையைக் கடந்து சென்று, அதன் பின்னால் ஓடிக் கொண்டிருந்த நதியை அடைந்தனர். அவர்கள் அனைவரும் அந்த கங்கை நதிக்குள் இறங்கி, தங்கள் வயிறுகள் வெடிக்கும் அளவுக்குத் தண்ணீரைப் பருகினர். பல வண்ண மீன்கள் அவர்களுடைய கணுக்கால்களைச் சுற்றி நீந்தியதைப் பார்த்த அவர்கள், சிறிது நேரத்தில் தங்கள் பசியை மறந்தனர். மீன்களை விரட்டிக் கொண்டு உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் விளையாடிய தன் மகன்களைப் பார்த்த அந்த வேடுவப் பெண்ணின் கண்களில் கண்ணீர் தளும்பியது. சிறிது நேரம் அவளும் தன் துயரம் அனைத்தையும் மறந்து போனாள்.

"தாயே," என்று யாரோ ஒருவன் அழைத்தான்.

தன்னை இவ்வளவு மரியாதையாக ஒருவன் அழைத்ததைக் கேட்டுத் திடுக்கிட்ட அவள், பின்னால் திரும்பிப் பார்த்தாள். மேட்டுக்குடியைச் சேர்ந்தவன்போலத் தோன்றிய ஒருவன், வணக்கம் தெரிவிக்கும் விதமாகத் தன் கைகளைக் குவித்து நின்று கொண்டிருந்ததை அவள் பார்த்தாள். சாதி விதிமுறைகள் அனுமதித்ததைவிட அவனுக்கு மிக நெருக்கமாகத் தான் நின்று கொண்டிருந்ததை அறிந்த அவள், வெடுக்கென்று பின்னால் விலகிச் சென்றாள். அவளுடைய மகன்களும் ஆற்றிலிருந்து வெளியேறினர். அவளுடைய கடைசி மகன் அவளிடம் ஓடி வந்தான். அவன் முகம் வெளிறிப் போயிருந்தது.

அருமையான பட்டாடைகளும் ஆடம்பரமான அணிகலன்களும் அணிந்திருந்த அந்த அன்னியன், கந்தலான ஆடைகளை அணிந்து நின்ற அந்தத் தீண்டத்தகாதவளை, "தேவி," என்று அழைத்தான். "என் பெயர் தர்மன். அரசன் பாண்டுவின் மூத்த மகன் நான். என் தாயார் குந்தி தேவி உங்களைப் பார்க்க விரும்புகிறார். நீங்கள் உங்கள் மகன்களை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வருவீர்களா?"

"ஐயா, நாங்கள் யார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன். இருப்பதிலேயே மிகவும் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எங்களுடைய பாதங்களால் உங்கள் மாளிகையை எப்படி எங்களால் மாசுபடுத்த முடியும்?" என்று அந்த வேடுவப் பெண் கேட்டாள்.

"அம்மா," என்று அழைத்த அந்தப் பாண்டவன், அவ்வாறு அழைக்கப்பட்டதால் அவளுடைய முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தைக் கண்டுகொள்ளாமல், "ஏழைகளுக்குச் செய்யும் சேவைதான் அனைத்திலும் மிகச் சிறந்த சேவை என்று பகவான் கூறுகிறார். நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்," என்று

கூறினான்.

அவளுடைய மூத்த மகன் தன் தோள்களைக் குலுக்கிவிட்டு, அந்த மாளிகையை நோக்கி நடக்கத் துவங்கினான். அவனுடைய மூன்று சகோதரர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். ஓர் உண்மையான மாளிகையையும் உண்மையான இளவரசர்களையும் பார்ப்பதற்குத் தங்களுக்குக் கிடைத்திருந்த வாய்ப்பைக் கண்டு அவர்கள் உற்சாகம் அடைந்தனர். அப்பெண் தன்னை ஏக்கத்தோடு ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த தன் கடைக்குட்டி மகனைப் பார்த்துவிட்டு, பிறகு அந்த இளவரசனின் முகத்தின்மீது வெளிப்பட்டப் பரிவைப் பார்த்தாள். இறுதியில், அந்த இளவரசனின் அழைப்பிற்கு அவள் சம்மதம் தெரிவித்துத் தலையசைத்தாள். தன் மகனை அழைத்துக் கொண்டு அவள் தர்மனைப் பின்தொடர்ந்தாள். அவளால் தன் அதிர்ஷ்டத்தை நம்ப முடியவில்லை. தன் மகன் உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்ததைக் கண்டு அவள் புன்னகைத்தாள்.

சிறிது தூரம் தள்ளி நின்று இதைக் கவனித்துக் கொண்டிருந்த இடையன் ஒருவன், அவளை நோக்கிச் சென்று, "பெண்ணே, அவனோடு போகாதே. இது ஒரு சூழ்ச்சி. மேட்டுக்குடியினரையும் அதிகாரம் படைத்தவர்களையும் நம்பாதே," என்று அவளுடைய காதில் கிசுகிசுத்தான். பிறகு அவன் திரும்பி அங்கிருந்து நடந்தான்.

அவள் ஒரு கணம் குழம்பிப் போய் நின்றாள். ஆனால் அவளுடைய மகன்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தனர். இறுதியில், அவள் தன் தோள்களைக் குலுக்கிவிட்டுக் கொண்டு, தர்மன் பின்னால் சென்றாள். அவர்கள் அந்த மாளிகை வாசலை நெருங்கியபோது, அதன் காவலாளிகள் அந்த இளவரசனைக் கண்டு பணிவாகத் தலை வணங்கினர். தங்கள் இளவரசனுக்குப் பின்னால் அந்த மாளிகைக்குள் நுழைந்து கொண்டிருந்த அந்தத் தீண்டத்தகாதவர்களின் கும்பலைப் பார்த்த அவர்களுடைய கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அவள் அவர்களைச் சிறிது பெருமிதத்தோடு நிமிர்ந்து பார்த்தாள். ஆனால் இளவரசன் தர்மன் அந்த மாளிகையின் முக்கிய நுழைவு வாயிலுக்கு இட்டுச் சென்ற படிக்கட்டுகளின்மீது ஏறியபோது, அவள் தயங்கினாள். தான் அவனைப் பின்தொடர வேண்டுமா, தாங்கள் தவறுதலாக எதையேனும் தொட்டு மாசுபடுத்திவிட்டு அதற்காகக் கைது செய்யப்பட்டால் என்னவாகும் போன்ற கேள்விகள் அவளுடைய மனத்திற்குள் முளைத்தன. தர்மன் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான். அவனுக்குப் பின்னால், தன் வசீகரமான மகன்களோடு நின்று கொண்டிருந்த அரசி குந்தியின் அழகான முகத்தை அந்த வேடுவப் பெண்ணால் பார்க்க முடிந்தது. குந்தி தன் கைகளைக் குவித்து

அப்பெண்ணுக்கு வணக்கம் தெரிவித்தாள். இளவரசர்கள் அவள் முன்னால் தலை வணங்கினர்.

இளவரசர்கள் தன் முன்னால் தலை வணங்கியதால் ஏற்பட்டிருந்த அதிர்ச்சியிலிருந்து அந்த வேடுவப் பெண் மீள்வதற்கு முன், அர்ச்சுனன் கீழ் நோக்கி ஓடி வந்து, அவளுடைய மூத்த மகனின் மணிக்கட்டைப் பிடித்தான். தன் மகன் ஒரு வேடுவன் என்றும், தாழ்ந்த சாதியினரை மேட்டுக்குடியினர் தொடக்கூடாது என்றும் அந்த வீரனை அவள் எச்சரிக்க விரும்பினாள். ஆனால் அவளுடைய கடைக்குட்டி மகன், உலகின் மிகச் சிறந்த வில்லாளனைப் பார்த்து கம்பீரமாகப் புன்னகைத்துவிட்டு, அவனுக்குப் பின்னால் படிகளின்மீது ஓடிச் சென்றான். அவளுடைய மற்ற மகன்களும் அவனைப் பின்தொடர்ந்து ஓடினர். என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதை அவள் புரிந்து கொள்ளும் முன்பாகவே, அவளுடைய மகன்கள் அந்த இளவரசர்களோடு அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். அவள் மெதுவாக அந்தப் படிகளின்மீது ஏறி, குந்தியின் முன்னால் நின்று, மரியாதையோடு தலை வணங்கி நின்றாள்.

"தேவி, உன் வருகையால் நீ எங்களை ஆசீர்வதித்துள்ளாய். தயவு செய்து உள்ளே வா. உனக்கும் உன் மகன்களுக்கும் ஓர் அறையை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்," என்று கூறிய குந்தி ஒரு பெரிய அறைக்கு அவளை வழிநடத்திச் சென்றாள். அதில் ஒரு பெரிய கட்டிலும், சில கிண்ணங்கள் நிறைய மலர்களும், பழங்கள் மற்றும் இனிப்புகளும் இருந்தன. அந்த வேடுவப் பெண் தன் வாழ்வில் ஒருபோதும் பார்த்திராத அனைத்தும் அங்கு இருந்தன. அவள் மிகுந்த பசியோடு இருந்தும்கூட, தானும் தன் மகன்களும் நூறாண்டுகள் வாழ்ந்தாலும் முழுவதுமாகச் சாப்பிட்டுத் தீர்க்க முடியாத அளவுக்கு அதிகமான உணவு தன் முன்னால் இருந்ததாக அவள் நினைத்தாள்.

"குந்தி தேவியாரே, நீங்கள் இவ்வளவு பரிவு காட்டும் அளவுக்கு நான் அப்படியென்ன செய்துவிட்டேன்?" என்று அந்த வேடுவப் பெண் தன் கண்ணீரின் ஊடாகக் கேட்டாள்.

ஒரு புதிரான புன்னகை குந்தியின் முகத்தின்மீது தோன்றியது. "நீங்கள் ஒரு மாபெரும் நோக்கத்திற்கு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். நீயும் உன் ஐந்து மகன்களும் தர்மத்திற்கு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள்."

"தர்மம் என்றால் என்ன?" ஐந்து மாபெரும் வீரர்களின் தாயிடம், தீண்டத்தகாத அந்த வேடுவப் பெண் கேட்டாள்.

"இப்போது அது உனக்குப் புரியாமல் இருக்கக்கூடும். ஆனால் நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. இப்போது சாப்பிட்டுவிட்டுத் தூங்கு,"

என்று கூறி, குந்தி மீண்டும் புன்னகைத்தாள்.

அக்கணத்தில், அந்த வேடுவப் பெண்ணின் கடைசி மகன் அந்த அறைக்குள் வேகமாக ஓடி வந்தான். அவன் குந்தியைப் பார்த்தபோது ஒரு கணம் தயங்கிவிட்டு, பிறகு தன் தாயை நோக்கி ஓடினான். தன் மகன் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்ததை உணர்ந்த அந்த வேடுவப் பெண், குந்தி தேவியைப் பார்த்து பலவீனமாகப் புன்னகைத்தாள். அச்சிறுவன் நடந்து கொண்ட விதத்தைக் கண்ட குந்தி தன் நெற்றியைச் சுருக்கினாள். தன் மகனின் வினோதமான நடத்தைக்கு ஒரு பொருத்தமான சாக்குப்போக்கைக் கண்டுபிடிக்க அந்த வேடுவப் பெண் தன் மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தபோது, அவளுடைய மற்ற மகன்களின் சிரிப்பு அந்த அறையை நிறைத்தது. அவர்கள் மகிழ்ச்சியாகக் கத்திக் கொண்டு அந்த அறைக்குள் ஓடி வந்தனர். வழியில், அவர்கள் ஒரு மலர்ச்சாடியைத் தவறுதலாகக் கீழே தள்ளிவிட்டனர், விலையுயர்ந்த சிறிய உருவச்சிலைகள் சிலவற்றை உடைத்தனர். இவர்கள் அனைவரையும் பீமன் துரத்திக் கொண்டிருந்தான். அந்த வேடுவப் பெண் பயத்தோடு குந்தியைப் பார்த்தாள். தன் மகன்களின் சேட்டைகளைக் குந்தி தேவியும் ரசித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் நிம்மதியடைந்தாள்.

அந்த அறையில் இருந்த மேசையின்மீது பரப்பி வைக்கப்பட்டிருந்த சுவையான உணவைப் பார்த்தவுடன், கடும்பசியுடன் இருந்த அவளுடைய மகன்கள், வேகமாக ஓடிச் சென்று நன்றாக வெளுத்துக்கட்டத் துவங்கினர். தன்னுடைய புதிய நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, பீமனும் அந்தச் சுவையான உணவை உண்டு களிக்க விரும்பினான். ஆனால் தனக்கு அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டு அவன் கோபத்தில் முணுமுணுத்துவிட்டு, ஒருசில இனிப்புகளைத் திருட்டுத்தனமாக எடுத்துத் தன் வேட்டி மடிப்புகளில் ஒளித்து வைத்தான்.

நன்றியுடன் இருந்த அந்த வேடுவப் பெண்ணிடம், “நன்றாகத் தூங்கி ஓய்வெடு. நாம் நாளை பேசலாம்,” என்று கூறிவிட்டு, குந்தி அங்கிருந்து வெளியேறினாள்.

அந்த வேடுவர்கள், கடும்பசி கொண்ட ஓநாய்களைப்போல உணவை வேட்டையாடிக் கொண்டிருந்தனர். அந்த மேசையின்மீது இருந்த உணவை பீமன் ஏக்கத்தோடு பார்த்தான். விரக்தியில் பெருமுச்செறிந்து கொண்டே, அவன் தன் தாயைத் தொடர்ந்து அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

குந்தி அவனுக்காக வெளியே காத்துக் கொண்டிருந்தாள். “நீ அங்கிருந்து எடுத்த இனிப்புகளைத் தூக்கி எறி.”

“ஆனால் அம்மா . . .” தான் மறைத்து வைத்திருந்த இனிப்புகளை பீமன் தர்மசங்கடத்துடன் வெளியே எடுத்தான்.

“முட்டாள்! அவற்றில் மயக்க மருந்து கலக்கப்பட்டிருப்பது உனக்குத் தெரியாதா? உன் மரமண்டைக்குள் எப்போதுதான் அறிவு பிறக்கும்?” என்று கூறிய குந்தி, அவனிடமிருந்து அந்த இனிப்புகளைப் பிடுங்கி, ஒரு சன்னல் வழியாக வெளியே வீசினாள்.

* * *

குந்திக்கும் பீமனுக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதத்தை அந்த வேடுவப் பெண் கேட்கவில்லை. அவர்கள் அங்கிருந்து வெளியேறும்வரை அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, பிறகு தன் பசியைப் போக்கிக் கொள்வதற்காகத் தன் மகன்களோடு சேர்ந்து கொண்டாள். அந்த உணவில் ஒரு லேசான கசப்புச் சுவை இருந்ததை அவள் உணர்ந்தாள். ஆனால் அவள் அதை உதாசீனப்படுத்தினாள். இதைவிட மோசமான உணவை அவள் சாப்பிட்டிருந்தாள். தன்னுடைய துயரமான வாழ்வில், துர்நாற்றம் வீசிய பழைய உணவுகளை அவள் அடிக்கடிச் சாப்பிட்டிருந்தாள். அவள் இப்போது இந்த உணவிற்காகக் குந்திக்கு மானசீகமாக நன்றி கூறிவிட்டு, குந்திக்கும் அவளுடைய மகன்களுக்கும் நீண்ட ஆயுளையும் மகிழ்ச்சியையும் கொடுக்குமாறு கடவுளிடம் வேண்டினாள். தானும் தன் குழந்தைகளும் அந்த ஆடம்பரமான அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டுக் கொண்டிருந்ததை அவள் கவனிக்கவில்லை. அந்த அறைக் கதவு வெளியே தாழிடப்பட்டுக் கொண்டிருந்த சத்தம் அவளுக்குக் கேட்கவில்லை. இந்த சொர்க்கத்திற்குள் தாங்கள் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தோம் என்பதை அறியாமல், அந்தத் தீண்டத்தகாதவளும் அவளுடைய மகன்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கீழே ஓர் அறையில், குந்தியும் அவளுடைய மகன்களும் தர்மம் குறித்து ஒரு முக்கியமான தீர்மானத்தை மேற்கொண்டனர்.

* * *

“அண்ணா, இது தவறு என்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் அப்பாவிகள் . . .” அர்ச்சுனன் தன் மூத்தச் சகோதரனிடம் அறிவுப்பூர்வமாக விவாதிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

தர்மன் தன் தாயைப் பார்த்தான். அவள் வருத்தத்துடன் தலையைக் குலுக்கினாள். அங்கு நிகழ்ந்து கொண்டிருந்த தீவிரமான விவாதத்தைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், பீமன் உணவைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தான். அவன் ஓர் அதிர்ஷ்டக்காரன். அவன் எதைப்

பற்றியும் அவ்வளவாகச் சிந்திக்கவில்லை. மாறாக, தன் தாயும் சகோதரர்களும் தனக்கு இட்டக் கட்டளைகளை மட்டும் அவன் நிறைவேற்றினான். தர்மத்தைப் பற்றிய இந்த ஒட்டுமொத்த விவாதமும் அவனுக்குச் சலிப்பூட்டியது. ஆனால் அர்ச்சுனன், விவாதிக்காமல் எதுவொன்றையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. நகுலனும் சகாதேவனும் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு, பெண்களையும் மதுவையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய உரையாடல் அதிக சுவாரசியமாக இருந்ததைக் கேட்ட பீமன், அவர்களை நோக்கிச் சென்றான்.

"அர்ச்சுனா, இந்தத் தீண்டத்தகாதவர்கள் ஓர் அவலமான வாழ்க்கையைத்தான் வாழ்கின்றனர். ஒரு மதிப்புவாய்ந்த நோக்கத்திற்காக இவர்கள் இறந்து போக இவர்களை அனுமதிப்பதன் முலம் இவர்களுக்கு ஒரு மிகப் பெரிய நன்மையைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். இதன் மூலம், அடுத்தப் பிறவியில் இவர்கள் பிராமணர்களாகப் பிறப்பார்கள்." தன் பிடிவாதக்காரச் சகோதரனைச் சம்மதிக்க வைப்பதற்கு தர்மன் கடுமையாக முயற்சித்தான்.

"அப்பெண்ணின் கடைக்குட்டி மகன் பதிமூன்று வயதைக்கூடத் தாண்டவில்லை. உணவைக் காட்டி இந்த அப்பாவிகளைச் சிக்க வைப்பது கொடூரமானது," என்று அர்ச்சுனன் வாதிட்டான்.

இறுதியில், குந்தி ஒரு களைப்பான குரலில், "அர்ச்சுனா, துரியோதனன் நம்மை உயிரோடு தீ வைத்துக் கொளுத்தத் திட்டமிட்டுள்ளான் என்ற எச்சரிக்கை நமக்கு முன்கூட்டியே கிடைத்தது நம் அதிர்ஷ்டம்தான். உன் சிற்றப்பா விதுரன் மட்டும் இது பற்றி நமக்குத் தகவல் கொடுத்திருக்காவிட்டால், என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்! நாம் இங்கு இருக்கும் ஒவ்வொரு கணமும் நமக்கு ஆபத்தானது. நான் விதுரனின் தகவலின்படி, இந்த மாளிகையின் சுவர்களைச் சோதனையிட்டேன். இவை அரக்கால் கட்டப்பட்டுள்ளன. ஒரு கட்டு வைக்கோலைவிட மிக வேகமாகத் தீப்பிடித்துக் கொள்ளக்கூடியது இது. விதுரன் நமக்கு எதிரானவன் என்றுதான் நான் எப்போதுமே நினைத்து வந்திருந்தேன். ஆனால் கடவுளின் ஆழமான, மர்மமான வழிகளை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்பதை இது காட்டுகிறது. இந்தப் பெண்ணும் அவளுடைய ஐந்து மகன்களும் இங்கு வந்து, நமக்குப் பதிலாக மரணமடைய வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். மேலும், 'ஆபத்து தர்மம்' பற்றி உன் குருநாதர் துரோணர் உனக்குக் கற்றுக் கொடுத்ததை நினைத்துப் பார். நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் செய்யும் எதுவும் தவறல்ல. கடவுளின் விருப்பத்தைக் கேள்வி கேட்பதற்கு நாம் யார்? ஆற்றங்கரையில்

தெளமியன் ஒரு படகோடு நமக்காகக் காத்துக் கொண்டிருப்பான். நாம் இன்றிரவு இதை நடத்தாவிட்டால், காலம் கடந்துவிடும். நாளைக்கு, துரியோதனனின் ஆட்கள் இந்த இடத்தைக் கொளுத்தி, நம்மை உயிரோடு வறுக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நாம் அவர்களை முந்திக் கொண்டு, இன்றே இந்த மாளிகையைக் கொளுத்திவிட வேண்டும்," என்று கூறினாள்.

அர்ச்சுனனுக்கு அதில் உடன்பாடு இருக்கவில்லை. அவன் தன் தாயின் வார்த்தைகளை உதாசீனப்படுத்திவிட்டு, தர்மனிடம் முறையிட்டான். "அண்ணா, துரியோதனன்தான் இதைத் திட்டமிட்டுள்ளான் என்றால், நாம் அவனுடன் சத்திரியர்களைப்போல முறையாக சண்டையிட்டு அவனைத் தோற்கடிக்கலாம்."

தர்மன் மீண்டும் தன் தாயைப் பார்த்தான். ஒரு நீண்ட மௌனத்திற்குப் பிறகு, அவன் ஒரு மென்மையான குரலில், "சக்திவாய்ந்த நண்பர்கள் சிலரை நாம் நம் வசப்படுத்தும்வரை, நாம் அந்தத் தீயவனைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டுத் தலைமறைவாக இருக்க வேண்டும். அரசாட்சிப் பொறுப்பாளர் பீஷ்மர் நாம் செய்த காரியம் குறித்து மகிழ்ச்சியின்றி இருப்பதால், நம்மால் அஸ்தினாபுரத்திற்குத் திரும்பிப் போக முடியாது. அர்ச்சுனா, நாம் இதைச் செய்துதான் ஆக வேண்டும். நமக்கு வேறு வழி இல்லை. நாம் இறந்துவிட்டதற்கு அடையாளமாக ஆறு கருகிய உடல்கள் இல்லாமல் போனால், துரியோதனனின் ஒற்றர்கள் தொடர்ந்து நம்மை வேட்டையாடிக் கொண்டிருப்பார்கள். அந்த வேடுவப் பெண் மற்றும் அவளுடைய ஐந்து மகன்களின் அடையாளம் காணப்பட முடியாத கருகிய உடல்களைப் பார்த்துவிட்டு, நாம் அனைவரும் இறந்துவிட்டதாக இந்த உலகம் நினைத்துக் கொள்ளட்டும். நீ உன் கடமையை மட்டும் செய். விளைவுகளைப் பற்றி நீ கவலைப்படாதே. அர்ச்சுனா, அவர்கள் ஒரு மாபெரும் நோக்கத்திற்காக இறக்கப் போகின்றனர். நீ தர்மத்தை நிலை நிறுத்துகின்ற ஒருவனாக இருப்பது குறித்துப் பெருமைப்படு," என்று கூறினான்.

"அண்ணா," என்று சகாதேவன் குறுக்கிட்டான். "இங்கு அப்பெண்ணின் உடலைத் தவிர ஐந்து உடல்கள் இருக்கும். ஆனால் அவளுடைய கடைக்குட்டி மகன் மிகவும் சிறியவன். அது சந்தேகத்தைத் தூண்டிவிடும்."

"அவன் கூறுவது சரிதான்," என்று குந்தி கூறினாள். தான் இந்த விபரங்களை முழுமையாகச் சிந்திக்காமல் போனது குறித்து அவள் வருந்தினாள். "தர்மா, வெளியே எத்தனைக் காவலாளிகள் இருக்கின்றனர்?"

“அம்மா, அங்கே ஏழு பேர் இருக்கின்றனர்.”

“அவர்களுக்கு அரண்மனைக்குள் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்,” என்று குந்தி கூறினாள். “இவர்களும் இறந்துவிட்டால், ஒற்றர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமான உடல்கள் இருக்கும்.”

“இது கேட்பதற்கே அருவருப்பூட்டுவதாக இருக்கிறது! அந்தக் காவலாளிகள் நம் பாதுகாப்பிற்காக அரசாட்சிப் பொறுப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டவர்கள்,” என்று அர்ச்சுனன் கோபத்தோடு கூறினான்.

பொறுமையிழந்து கொண்டிருந்த தர்மன், “அர்ச்சுனா, காவலாளிகள் என்ற முறையில் அவர்களுடைய முதன்மையான கடமை எது? நம்மை ஆபத்திலிருந்து காப்பதுதான் அவர்களுடைய தலையாய கடமை. நம் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவானால், தங்கள் உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தாலும்கூட, நம்மைக் காப்பாற்றுவதுதானே அவர்களுடைய தர்மம்? நமக்காக அவர்கள் உயிர் துறப்பதில் என்ன தவறு இருக்கிறது? இதில் என்ன அருவருப்பு இருக்கிறது? நம்முடைய புனித நூல்களில் கூறப்பட்டுள்ளதற்கு ஏற்ப அவர்கள் தங்கள் கடமையைச் செய்வர். ஒருவன் தன் கடமையைச் செய்யும்போது இறப்பதைவிட அதிகப் புனிதமான விஷயம் வேறு எதுவுமில்லை. இப்படிப்பட்ட மக்கள் விஷ்ணு பகவானின் சொர்க்கத்தைச் சென்றடைவார்கள். உண்மையில், இவர்களுடைய ஆன்மாக்கள் இந்த அவலமான உலகைவிட்டு நீங்கி, வைகுண்டத்தைச் சென்றடைவதற்கு நாம் உதவிக் கொண்டிருக்கிறோம்,” என்று கூறினான்.

“ஆனால் . . .”

“போதும், அர்ச்சுனா! நீ துரியோதனனைப்போலப் பேசாதே,” என்று கூறி அந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் குந்தி எழுந்தாள்.

தான் தோற்கடிக்கப்பட்டிருந்ததை அர்ச்சுனன் அறிந்தான். அவன் வெறுமனே ஒரு வீரன் மட்டும்தான், ஆனால் அவனுடைய மூத்தச் சகோதரன், கற்றறிந்த ஓர் அறிஞன். அவன் ஒருபோதும் பொய்யுரைத்ததில்லை. நற்பண்புகள் மற்றும் நன்னெறிகளின் உறைவிடமாக பிராமணர்கள் அவனைக் கொண்டாடினர். தர்மம் எனும் ஒட்டுமொத்தக் கோட்பாட்டைப் பற்றிக் குழம்பிப் போய், அர்ச்சுனன் அந்த அறையைவிட்டு வெளியேறினான். தன் தாயார் பரிந்துரைத்தவற்றைத் தான் செய்யும்போது தன் மனசாட்சி தன்னை உறுத்தாமல் இருக்கும் விதத்தில், என்றேனும் ஒருநாள் யாரேனும் தனக்கு விஷயங்களைத் தெளிவாக எடுத்துரைக்கக்கூடும் என்று அவன்

நினைத்தான். சிறிது நேரத்திற்கு முன்னால்வரை அர்ச்சுனனின் அறையாக இருந்த அந்தப் பெரிய அறையில் அந்த வேடுவப் பெண்மணி மென்மையாகக் குறட்டைவிட்டுக் கொண்டிருந்த சத்தம் அவனுடைய காதுகளில் விழுந்தது. தங்களை நம்பி வந்திருந்த ஓர் ஏழைத் தாயையும் அவளுடைய ஐந்து மகன்களையும் பற்றிய எண்ணத்தை ஒதுக்கித் தள்ள முயற்சித்தவாறு, அர்ச்சுனன், தொலைவில் ஓடிக் கொண்டிருந்த கங்கையை வெறித்தபடி நின்றான். எது தவறு, எது சரி என்ற குழப்பத்தோடு அவன் போராடிக் கொண்டிருந்தான். தன்னுடைய சகோதரன் மற்றும் தாயின் வாதங்கள் அவனுக்கு அர்த்தமற்றவையாகத் தோன்றின. குழம்பிப் போயிருந்த அவனுடைய மனத்தில், அவை ஆழமான வருத்தத்தை மட்டுமே உருவாக்கின.

கங்கையின் புனித நீருக்குள் கதிரவன் மெல்ல மெல்ல மூழ்கினான். தன் காதலனின் தீண்டலால் நாணத்தில் முகம் சிவந்த ஒரு காதலியைப்போல அந்த நதி சிவந்தது. வாரனவதம் இருளில் மூழ்கி, கங்கைக் கரையோரமாக வளர்ந்திருந்த புதர்களைப் பனி மூடியபோது, கரிய உருவத்தைக் கொண்ட ஒருவன், தான் துடுப்புப் போட்டு வந்திருந்த ஒரு சிறிய படகைவிட்டு இறங்கினான். தொலைவில் ஒளிவீசிய பாண்டவர்களின் மாளிகையைப் பார்த்துவிட்டு, அவன் ஒருவிதமான பெருமித உணர்வு கொண்டான். அது அரக்கால் கட்டப்பட்டிருக்கும் என்று யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு அது மிகவும் உறுதியானதாகத் தெரிந்தது. இந்தப் பணித்திட்டம் நிறைவடைந்திருந்ததால், இப்போது தன்னால் நிரந்தரமாகத் தன் வேலையிலிருந்து ஓய்வு பெற முடியும் என்று அவன் நினைத்தான். அஸ்தினாபுரத்தைவிட்டு வெளியேறி, எல்லாவற்றையும்விடப் பணத்தை மேலாக மதித்த ஒரு நகரத்திற்கு அவன் குடிபெயர விரும்பினான். மேற்குக் கடற்கரையோரமாக அமைந்த ஹேஹயத்திற்குச் செல்லலாமா என்று அவன் யோசித்தான். அவன் தன் அசிங்கமான மனைவியைக் கைவிட்டுவிட்டு, வேறோர் இளம்பெண்ணை மணமுடிக்க விரும்பினான். அரசாங்கத்தையும் பொதுமக்களையும் ஏமாற்றித் தான் சம்பாதித்திருந்த பணம் முழுவதையும் ஒரு ரகசியமான இடத்தில் அவன் புதைத்து வைத்திருந்தான். இப்போதுவரை, தானாகவே தன்மீது திணித்துக் கொண்ட ஓர் ஏழ்மையான வாழ்க்கையை அவன் வாழ்ந்து வந்திருந்தான். அரசாங்கத்தில் தனக்கு அவ்வளவு நல்ல பெயர் இல்லை என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் தன்னுடைய தில்லுமுல்லு நடவடிக்கைகள் தொடர்பான எந்த ஆதாரத்தையும் விட்டுவைக்காமல் இருப்பதில் அவன் எச்சரிக்கையாக இருந்தான். இவ்வழியில், பிரதம

மந்திரியின் ஆட்கள் நடத்திய பல விசாரணைகளை அவன் திறமையாகச் சமாளித்திருந்தான். 'இன்னும் ஒரே ஒரு வாரத்தில், நான் ஓய்வு பெற்றுவிட்டு, ஹேஹயத்தில் கடலை நோக்கி அமைந்துள்ள ஒரு மாளிகையில் அழகான பெண்களுடன் ஓர் அற்புதமான வாழ்க்கையை வாழ்வேன்,' என்று புரோச்சனன் நினைத்தான்.

காந்தார இளவரசன் ஒரு வினோதமான மனிதன். பாண்டவர்களுக்கு இந்த அரக்கு மாளிகையை உருவாக்குவதற்குத் தேவையான பணம் முழுவதையும் அவன்தான் கொடுத்திருந்தான். இதன் விளைவாக, அரசாங்கம் அந்த அரண்மனைக்காகக் கொடுத்திருந்த தேக்கு மரங்களைப் புரோச்சனன் கருப்புச் சந்தையில் விற்றுவிட்டு ஒரு பெரும் லாபத்தைச் சம்பாதித்திருந்தான். துவக்கத்தில், பாண்டவர்களைத் தீர்த்துக்கட்டுவதற்கு சகுனி ஒரு திட்டத்தைத் தீட்டியிருந்ததாகவும், ஆனால் ஒருவேளை தன் குட்டு வெளிப்பட்டுவிட்டால் என்னவாகும் என்று அவன் பயந்து போனதாகவும் புரோச்சனன் நினைத்தான். அரக்கு மாளிகையைப் பற்றிய துப்புகளை, சகுனி, அந்த நேர்மையான பிரதம மந்திரிக்கு ரகசியமாகத் தெரியப்படுத்தியிருந்தான் என்பதைக் கேள்விப்பட்டப் புரோச்சனன் பெருங்கோபம் கொண்டிருந்தான். இதில் ஏதோ சூழ்ச்சி இருந்ததைக் கண்டுபிடித்துவிட்டிருந்த விதுரன், எச்சரிக்கையாக இருக்கும்படி பாண்டவர்களிடம் தெரிவித்திருந்தான். கட்டுக்கடங்காத கோபத்தில் இருந்த புரோச்சனனை சமாதானப்படுத்தி, இந்தப் பணித்திட்டத்தின் கடைசி நடவடிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அவனை ஒத்துக் கொள்ள வைப்பதற்குக் காந்தார இளவரசன் ஏகப்பட்டப் பணத்தைச் செலவு செய்திருந்தான்.

அந்தக் கயவனுக்குத் தான் செய்யவிருந்த கடைசி வேலை இதுவாகத்தான் இருக்கும் என்று புரோச்சனன் தனக்குத் தானே உறுதியளித்துக் கொண்டான். சகுனியின் திட்டம் புரோச்சனனுக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது. அந்த மாளிகையின் கதவுகளை வெளியேயிருந்து பூட்டிவிட்டு, அந்த மாளிகையைத் தீ வைத்துக் கொளுத்திவிடுமாறு சகுனி புரோச்சனனுக்கு அறிவுறுத்தியிருந்தான். தான் ஒரு கொலைகாரன் அல்ல என்று கோபமாகக் கூறி, அக்காரியத்தைச் செய்ய புரோச்சனன் மறுத்தபோது, சரியான கணத்தில் அவன் அந்த மாளிகையின் கதவுகளைத் திறந்து பாண்டவர்கள் தப்பித்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று சகுனி வலியுறுத்தினான். இது வெறும் சதித்திட்டமே அன்றி, கொலை அல்ல என்று சகுனி அவனுக்கு உறுதியளித்தபோது, புரோச்சனன் நிம்மதியடைந்தான். இந்தக் காரியம் குறித்த பேரப்பேச்சு முடிந்து, ஓர்

உடன்பாடு எட்டப்பட்டபோது, புரோச்சனன் தன் பணி ஓய்வைப் பற்றிக் கனவு காணத் துவங்கினான். தன்னால் இப்போது ஓர் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ முடியும் என்று அவன் நினைத்தான். இந்த நெருப்பு, பாண்டவர்களை ஒழித்துக்கட்டுவதற்கு இளவரசன் துரியோதனன் செய்த சூழ்ச்சியின் ஒரு பகுதிதான் என்று பாண்டவர்களிடம் கூறுவதற்குப் புரோச்சனன் ஒத்துக் கொண்டால், கூடுதல் வெகுமதி தருவதாக சகுனி அவனுக்கு உறுதியளித்தான். புரோச்சனன் உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்டான். பாண்டவர்கள் இதற்காக நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்றும், தன்னுடைய விசுவாசத்திற்காக அவர்கள் தனக்கு வெகுமதிகூட அளிப்பார்கள் என்றும் புரோச்சனன் உறுதியாக நம்பினான்.

அடுத்த நாள் நள்ளிரவில் அந்த மாளிகைக்கு நெருப்பு வைத்துக் கொளுத்துவதென்று புரோச்சனன் திட்டமிட்டான். ஒரு நாள் மட்டும் அவன் எங்கேனும் மறைந்திருந்து, பாண்டவர்களின் நடமாட்டத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. அவன் பதுங்கிப் பதுங்கி அந்த மாளிகையை நோக்கிச் சென்றான். அங்கு நிலவிய ஒரு மயான அமைதி அவனுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியது. அங்கு ஏதோ பயங்கரமான ஒன்று நிகழவிருந்ததாக அவனுடைய உள்ளுணர்வு அலறியது. அவன் மீண்டும் தன் படகிற்குத் திரும்பிச் சென்று, அங்கிருந்து போய்விட விரும்பினான். ஆனால் இந்த வேலையைச் செய்து முடித்தால் சகுனி தனக்குத் தருவதாக ஒத்துக் கொண்டிருந்த பெரிய வெகுமதியைப் பற்றி அவன் நினைத்தான். மாளிகை வாசலில் காவலாளிகள் யாரும் இல்லாமல் இருந்தது அவனுக்கு வினோதமானதாகத் தோன்றியது. இப்போது அந்த மாளிகையின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்தன. ஒட்டுமொத்த அரண்மனையும் இருளில் மூழ்கியிருந்தது. அப்போது, புரோச்சனனின் தலையருகே ஒரு வெளவால் வேகமாகப் பறந்து சென்று இருட்டிற்குள் ஒன்றரக் கலந்தது. புரோச்சனன் கிட்டத்தட்ட அலறிவிட்டான்.

அவன் தன் கைகளின் நடுக்கத்தைச் சமாளித்துக் கொண்டு, அந்த அன்னியனுக்காக இந்தப் பொறுப்பற்ற வேலையைச் செய்யத் தான் ஒத்துக் கொண்டிருந்தது குறித்துத் தன்னைத் தானே மோசமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டு, எச்சரிக்கையாக அந்த மாளிகையை நோக்கி நடந்தான். அவன் அதை நெருங்கியபோது, ஒரு சன்னலுக்குள்ளிருந்து ஒருசில வார்த்தைகள் அவனுக்குக் கேட்டன. அவன் அங்கு சிறிது நேரம் நின்று உன்னிப்பாகக் கவனித்தான். ஆனால் அஸ்தினாபுரத்தின் தலைமைப் புரோகிதனின் பெயரை யாரோ குறிப்பிட்டதைத் தவிர, அங்கு கூறப்பட்ட வேறு எதையும் அவனால்

புரிந்து கொள்ள முடியவில்லை. புரோச்சனன் தன் கத்தியால் அந்த சன்னலை லேசாக நெம்பித் திறக்க முயன்றான். அப்போது ஒரு கதவு திறக்கும் ஓசை அவனுக்குக் கேட்டது. அவன் வேகமாகப் பின்னால் நகர்ந்து மறைந்து கொண்டான். அப்போது ஒரு பெண் மற்றும் நான்கு ஆண்களின் நிழலுருவங்களை அவன் கண்டான். அவர்கள் ஒருசில நிமிடங்கள் ஒன்றாகக் கூடி நின்றனர். அப்போது ஐந்தாவதாக ஓர் ஆண் அங்கே வந்தான். அவன் கையில் ஒரு சிறிய விளக்கு இருந்தது. அப்பெண் அந்தக் கதவை மூடி, வெளியே தாழிட்டுவிட்டு, அந்த ஐவரில் நான்கு ஆண்களோடு அந்த மாளிகையின் வாசலை நோக்கி விரைந்தாள். கையில் விளக்குடன் இருந்தவன், அவர்கள் அந்த மாளிகையிலிருந்து ஒரு பாதுகாப்பான தூரத்தைச் சென்றடையும்வரை காத்திருந்துவிட்டு, பிறகு சில கந்தல் துணிகளை எடுத்து, அந்த மாளிகையின் தாழ்வாரத்தில் இருந்த சுவர்கள் மற்றும் தூண்களைச் சுற்றிப் பரப்பினான். தான் சுமந்து வந்திருந்த ஒரு பெரிய பாத்திரத்தில் இருந்த எண்ணெய் முழுவதையும் அவன் அந்தத் துணிகளின்மீது ஊற்றினான். பிறகு, பிரார்த்தனை செய்வதுபோல ஒருசில நொடிகள் அங்கே நின்றுவிட்டு, எண்ணெய் தோய்ந்த அந்தத் துணிகளுக்குத் தன் விளக்கில் இருந்த சுடரால் தீ வைத்தான். அடுத்தக் கணம், அவன் அங்கிருந்து திரும்பி தன்னுடைய குழுவினரை நோக்கி ஓடினான்.

அந்த அரண்மனை உடனடியாகத் தீப்பற்றிக் கொண்டு ஒருசில நிமிடங்களில் எரிந்து தரைமட்டமாகும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதைப் புரோச்சனன் ஒரு கணம் மறந்துவிட்டிருந்தான். அப்போது ஏற்பட்ட ஒரு பெரிய வெடி, அவனை ஒருசில அடிகள் தள்ளி வீசி எறிந்தது. அதிர்ச்சியில் அவன் உடல் மரத்துப் போனது. என்ன நிகழ்ந்திருந்தது என்பதை அவன் அறிந்து கொள்ளும் முன்பாகவே, அந்த அரக்கு மாளிகை பெரிதாகக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில், ஆற்றை நோக்கி ஓடிக் கொண்டிருந்த பாண்டவர்களைப் புரோச்சனன் அடையாளம் கண்டான். ஆற்றங்கரையை ஒரு படகு அணுகிக் கொண்டிருந்ததையும் அவன் கண்டான். பாண்டவர்கள் தன்னைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டு அங்கிருந்து தப்பித்திருந்ததை அவன் உணர்ந்தான். காட்டுத்தனமாக எரிந்து கொண்டிருந்த நெருப்பினால் உண்டான அளப்பரிய வெப்பத்தைத் தாங்க முடியாத புரோச்சனன், அங்கிருந்து தூரச் சென்று, என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான். தப்பியோடிக் கொண்டிருந்த பாண்டவர்களைப் பின்தொடர்ந்து செல்வது பற்றி அவன் யோசித்தான். ஆனால் அவர்களைக் கொல்வது தனக்கு இடப்பட்ட வேலை அல்ல

என்பதால், தான் அங்கிருந்து தப்பித்து, தன் வேலையைத் தான் செய்து முடித்துவிட்டதாகக் கூறி, சகுனியிடமிருந்து தனக்குரிய பணத்தை பெற்றுக் கொண்டு மாயமாய் மறைந்துவிடுவது சிறந்தது என்று அவன் நினைத்தான்.

அவன் அங்கிருந்து திரும்பவிருந்த கணத்தில், அந்த மாளிகைக்குள் இருந்து எழுந்த ஒரு பெண்ணின் அலறல் அவனை அப்படியே உறைய வைத்தது. எரிந்து கொண்டிருந்த அரண்மனைக்குள் மக்கள் தீப்பற்றி அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்ததையும், அவர்கள் அந்த மாளிகையைவிட்டு வெளியே வர முயற்சித்துக் கொண்டிருந்ததையும் அவனால் பார்க்க முடிந்தது. 'துரதிர்ஷ்டக்காரப் பாவிகள்,' என்று புரோச்சனன் நினைத்தான். பிறகு அங்கிருந்து தப்பி ஓடுவதற்காக அவன் திரும்பியபோது, ஒரு சிறுவனின் அலறல் எல்லாவற்றையும் மாற்றியது. ஒரு பெண் தன்னுடைய இளம் மகனை ஒரு சன்னல் வழியாக வெளியே தள்ளப் பரிதவிப்புடன் முயற்சித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், புரோச்சனன் ஆடிப் போனான். விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல், அவன் அங்கிருந்து விலகி ஓடுவதற்குப் பதிலாக, எரிந்து கொண்டிருந்த அந்த மாளிகையை நோக்கி ஓடினான்.

"ஐயா, ஐயா . . ." என்று அந்தப் பெண் அவனைப் பார்த்துக் கத்தினாள். அவள் தன் மகனை அந்த சன்னலின் வழியாக வெளியே தள்ளப் போராடிக் கொண்டிருந்தபோது அவளுடைய தலைமுடியில் தீப்பிடித்தது. பயத்தில் அழுது கொண்டிருந்த அச்சிறுவன், தன் கையிலிருந்து ஒரு சிறிய கத்தியைக் கொண்டு அந்த சன்னலின் கம்பிகளை அறுக்க முயற்சித்தான். அப்பெண் ஒரு தீண்டத்தகாதவள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. புரோச்சனன் அதைப் புறக்கணித்துவிட்டு, ஒரு சிறுவன் ஆபத்தில் இருந்தபோது தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற தவிப்போடு, தன்னையும் அறியாமல் அந்த சன்னலை நோக்கி ஓடினான். 'இவனுக்காக நான் ஏன் என் வாழ்க்கையைப் பணயம் வைக்கிறேன்?' என்று அவனுடைய மூளையின் ஒரு பகுதி அலறியது. ஆனால், அவனையும் அறியாமல் அவனுக்குள் இருந்த ஏதோ ஒன்று, அந்த சன்னலுக்கு அடியில் இருந்த இடத்தில் அவனை அப்படியே நிற்கச் செய்தது.

அப்போது ஒரு சுவர் இடிந்து கீழே விழுந்தது. கோபத்தில் மேலேயிருந்து யாரோ அதை வேகமாகக் கிழே தள்ளிவிட்டிருந்ததைப்போல இருந்தது அது. அது நேராகப் புரோச்சனனின்மீது விழுந்து அவனைத் தரையோடு தரையாகச் சாய்த்தது. அந்த நெருப்பு அந்தப் பெண்ணையும் அச்சிறுவனையும்

ஆட்கொண்டதை அவன் திகிலோடு பார்த்தான். அதே நெருப்பு அவனை நோக்கித் தவழ்ந்து வந்து, அவனுடைய கொழுத்த உடலை ருசிக்கத் துவங்கியபோது, தன் வாழ்நாள் முழுதும் தான் ஏய்த்துச் சம்பாத்திருந்த பணத்தைத் தான் எங்கே மறைத்து வைத்திருந்தோம் என்பது தன் மனைவிக்குக்கூடத் தெரியாது என்று புரோச்சனன் வருத்தத்தோடு நினைத்தான். 'நான் என் வாழ்க்கையை வீணாக்கினேன். இப்போது ஒரு பயனற்றக் காரியத்திற்காக நான் செத்துக் கொண்டிருக்கிறேன்,' என்பதுதான் அவனுடைய கடைசி எண்ணமாக இருந்தது.

* * *

தொலைவில், ஒரு படகு, கங்கையின் நீரில் நங்கூரமிடப்பட்டு நின்றது. தௌமியனும், அவனுடைய உதவியார்கள் ஓரிருவரும், குந்தியும், அவளுடைய மகன்களில் நால்வரும், நெருப்புக் கடவுள் அந்த மாளிகையைக் கபளீகரம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தனர். அர்ச்சுனன் மட்டும் தன் பாதங்களை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"நான் செய்த காரியம் என்னைக் கொடுமையாக உணரச் செய்கிறது. தௌமியரே, எங்களுக்கு வேறு என்ன வழி இருந்தது?" என்று குந்தி கேட்டாள். அவள் இன்னும் அந்த மாளிகையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தௌமியன் அவளை நோக்கித் திரும்பினான். "தேவி, உன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்போது எதுவும் தவறாகக் கருதப்படுவதில்லை. ஆனால் இப்போது நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நெருப்புக் கடவுளான அக்னி, அந்த மாளிகையில் உள்ள உடல்களை, அடையாளம் காண முடியாத அளவுக்கு எரித்துவிட்டிருக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன். குந்தி தேவியாரே, அந்த வேடுவக் குடும்பத்தை நீங்கள் அந்த மாளிகைக்குள் வரவழைத்தது ஒரு திறமையான உத்தி. மீதியை என்னிடம் விட்டுவிடுங்கள். பாண்டவர்கள் அந்த நெருப்பில் இறந்துவிட்டதாக நாங்கள் ஒரு வதந்தியைப் பரப்புவோம். சக்திவாய்ந்த நண்பர்களை நீங்கள் உங்கள் வசப்படுத்தும்வரை, யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் மறைவாக இருங்கள். நீங்கள் அனைவரும் பாஞ்சாலத்திற்குச் செல்லுங்கள். அங்கு ஒரு சுயம்வரம் நடக்கவிருக்கிறது. பாஞ்சால அரசன், மிகச் சிறந்த வில்லாளனுக்குத் தன் மகளை மணமுடித்துக் கொடுக்கப் போகிறான். அவனுடைய அழகிய மகளான திரௌபதியை அர்ச்சுனனால் சுலபமாகத் தன் மனைவியாக வெற்றி கொள்ள முடியும்."

தௌமியனின் வார்த்தைகள், வருத்தத்தோடு அமர்ந்திருந்த அர்ச்சுனனிடமிருந்து எந்த பதிலையும் வரவழைக்கவில்லை. குந்தியும் அஸ்தினாபுரத்தின் தலைமைப் புரோகிதனான தௌமியனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தர்மன் விரக்தியில் தன் தலையைக் குலுக்கினான். தர்மம் மற்றும் கர்மாவின் சிக்கல்களை யாரேனும் தன் அப்பாவிச் சகோதரனுக்கு விளக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

தௌமியன் அர்ச்சுனனுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தான். அந்த வசீகரமான இளவரசன் உடனடியாக எழுந்து நின்றபோது, அந்தப் படகு வேகமாக ஆடியது. "நாம் அவர்களை விலங்குகளைப்போலச் சிக்க வைத்துவிட்டோம்," என்று அவன் கோபத்தோடு கூறினான்.

"இளவரசே, நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். ஒரு சாபத்தால் இந்திரனின் அரசவையிலிருந்து பூமிக்கு வந்த தேவலோகத்தினர் அவர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் ஏதோ ஒரு மாபெரும் துறவியை அவமதித்திருந்ததால் தீண்டத்தகாதவர்களாகப் பிறந்தனர். ஆனால் தர்மத்திற்காக அவர்கள் இறந்து போனது, அவர்களைத் தங்களுடைய பாவங்களிலிருந்து இப்போது விடுவித்துள்ளது." தௌமியனின் வார்த்தைகளைக் கேட்டு அர்ச்சுனனைத் தவிர மற்ற அனைவரும் சிரித்தனர்.

"நாங்கள் எந்த மாறுவேடத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்?" என்று தர்மன் தௌமியனிடம் கேட்டான்.

தௌமியன் சிறிதுகூடத் தயங்காமல், "உங்களை பிராமணர்களாகக் காட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பும்போதெல்லாம் உங்களுக்கு உணவும் மரியாதையும் கிடைக்கும்," என்று பதிலளித்தான்.

கதிரவன் கிழக்கு வானில் தலைகாட்டியபோது, அவர்கள் தங்கள் படகை விடுவிடுத்து, பாஞ்சாலத்தை நோக்கி அதைச் செலுத்தத் துவங்கினர். சிறிது நேரம் கழித்து, பயணியரால் நிரம்பி வழிந்த பயணப்படகு ஒன்றை அவர்கள் கடந்து சென்றனர். வாரனவதத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்தப் படகின் முன்பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு கருப்பு இளைஞனை அந்தப் பாண்டவர்கள் பார்க்கவில்லை. ஆனால் அந்த வேடுவனின் கண்கள் அவர்களைவிட்டு ஒருபோதும் அகலவில்லை.

21

சுயம்வரம்

ஆற்றங்கரையில் ஏகலைவன் அந்தப் படகிலிருந்து கீழே இறங்கினான். மற்றப் பயணியரைப்போலவே அவனுடைய கண்களும், புகைந்து கொண்டிருந்த அந்த மாளிகையின் எச்சங்களை நோக்கிச் சென்றன. வாரனவதத்தில் இருந்த பாண்டவ அரண்மனை முந்தைய இரவில் நெருப்புக்கு இரையாகியிருந்ததாகவும், பாண்டவர்களும் அவர்களுடைய தாயும் அந்த அசம்பாவிதத்தில் இறந்துவிட்டிருந்ததாகவும் பயணப்படகில் சில வதந்திகளை ஏகலைவன் செவிமடுத்திருந்தான். விண்ணை நோக்கிப் பாம்புபோல நெளிந்து சென்று கொண்டிருந்த கரும்புகையைச் சுட்டிக்காட்டி மக்கள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பாண்டவர்களின் துரதிர்ஷ்டத்தைப் பற்றி ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். எரிந்து சாம்பலாகிக் கிடந்த அந்த மாளிகையை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு குழுவினரை ஏகலைவன் பின்தொடர்ந்தான். தன்னைக் கடந்து சென்ற படகில் இருந்த புரோகிதனின் அடையாளத்தைப் பற்றி அவன் குழம்பிப் போயிருந்தான். ஆனால் தலை கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தவன் அர்ச்சுனன்தான் என்பதில் அவன் கிட்டத்தட்ட உறுதியாக இருந்தான்.

தன் குடும்பத்தினர் தன்னை விட்டுவிட்டுச் சென்றபோது, ஏகலைவன் அவர்களை நினைத்துப் பெரிதும் ஏங்கினான். அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற தூண்டுதல் எழுந்தபோதெல்லாம், வில்

வித்தையைப் பல மணிநேரம் கடுமையாகப் பயிற்சி செய்து தன்னைத் தண்டித்துக் கொண்டதன் மூலம் அவன் அந்தத் தூண்டுதலை அடக்க முயற்சித்திருந்தான். ஆனால் அந்தக் கடைக்குட்டியின் துடுக்குத்தனமான புன்னகை அவனைத் துரத்திக் கொண்டே இருந்தது. ஏதோ உள்ளுணர்வு உந்தித் தள்ள, நெறிசார்ந்த பாண்டவர்களின் உலகில் தன் குடும்பத்தினர் எப்படி வாழ்ந்து கொண்டிருந்தனர் என்று பார்க்கும் ஆவலுடன் அவன் வாரனவதத்தை நோக்கிப் புறப்பட்டான்.

ஏகலைவன் அந்த மாளிகை இருந்த இடத்தைச் சென்றடைந்தபோது, அந்த மாளிகையில் அவ்வளவாக எதுவும் மிச்சமிருக்கவில்லை. எரிந்து போன சதை மற்றும் தலைமுடியின் கருகிய வாடை, குடலைப் புரட்டுவதாக இருந்தது. ஆங்காங்கே அழுக்கு நீர் தேங்கியிருந்தது. மரணத்தின் துர்நாற்றத்தைத் துரத்துவதற்காக மக்கள் தங்கள் மூக்குகளைப் பொத்திக் கொண்டு பல குழுக்களாக நின்றனர். எரிந்து போன உடல்களை வெளியே எடுத்து வருவதற்காக ஒருசில காவலாளிகள் சில வெட்டியான்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தனர். ஒருசில அடிகள் தள்ளி நின்ற ஒரு மாட்டு வண்டிக்கு ஓர் எரிந்த உடல் எடுத்து வரப்பட்டபோது சில பெண்கள் அலறினர். ஒரு பெண்ணின் உடலை அந்த வெட்டியான்கள் வெளியே கொண்டு வந்தபோது, மக்கள் மூச்சடக்கி நின்றனர். மரணத்தின் அசௌகரியமான மௌனத்தை அவ்வப்போது எழுந்த விம்மல்கள் கலைத்தன. "ராஜமாதா குந்தி," என்று யாரோ முணுமுணுத்தனர். வெட்டியான்கள் அவளுடைய மகன்களின் உடல்களை வெளியே கொண்டு வந்தனர். பாண்டவர்களின் திடகாத்திரமான உடற்கட்டோடு ஒப்பிட்டபோது, எரிந்து போன இந்த உடல்கள் மிகவும் சிறியவையாக இருந்ததாக ஏகலைவன் நினைத்தான். ஆனால் நெருப்பால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று யாருக்குத் தெரியும் என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

"பீமன் எங்கே?" என்று ஏகலைவனின் அருகில் நின்றவன் உரத்தக் குரலில் வியந்தான். புகைந்து கொண்டிருந்த எச்சங்களிலிருந்து அடுத்து வெளியே வரவிருந்த உடல் அவனுடைய கேள்விக்கு விடையளித்தது. "பீமா," என்று அந்தக் கூட்டம் கத்தியது. அவர்களுடைய குரலில் ஒருவித இன்ப உணர்வு வெளிப்பட்டது. ஒருசில பெண்கள் பெருங்குரலில் ஒப்பாரி வைத்தனர். அந்தக் கொழுத்த அரசாங்க அதிகாரி புரோச்சனனின் உடலைச் சுமந்து வந்தவர்களுக்கு மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியது. இறந்து போன அந்த நபரின் எடை அவர்களை அழுத்தியது. அவர்கள் அந்த உடலை அந்த மாட்டு வண்டிக்குள் திணித்து, அதை ஒரு பக்கமாக ஒதுக்கித் தள்ளி, மற்ற உடல்களுக்கு இடம் ஏற்படுத்தினர். அப்போதுதான் ஏகலைவன் அதைப் பார்த்தான்.

ஒரு பிணத்தின் மார்பின்மீது ஏதோ ஒன்று பளபளத்தது. ஏகலைவனின் இதயத்தில் ஒரு நடுக்கம் பரவியது. துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. ஒளிவீசிய அந்தப் பொருள் தான் நினைத்தப் பொருளாக இருக்காது என்று அவன் மறுக்க விரும்பினான், ஆனால் அது தன்னை நன்றாக அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது. ஏகலைவன் பயந்து கொண்டே மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து, இறந்து போனவர்களின் உடல்கள் குவித்து வைக்கப்பட்டிருந்த வண்டியை நோக்கிச் சென்றான்.

புரோச்சனனுக்கு அடுத்துக் கிடந்த அந்தக் கருகிய உடல், ஏகலைவனின் ஒன்றுவிட்டச் சகோதரர்களில் கடைக்குட்டியினுடையது. மரணத்தில்கூட அச்சிறுவன் ஏகலைவன் கொடுத்திருந்த கத்தியைப் பிடித்துக் கொண்டிருந்தான். எரிந்து போன விரல்களுக்கிடையே அது பாதுகாப்பாக இருந்ததைக் கண்டபோது, ஏகலைவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் துவங்கியது. ஏகலைவன் அந்த உடலை அந்த வண்டிக்குள் இருந்து வெளியே இழுக்க முயற்சித்தபோதுதான் அந்த வெட்டியான்கள் அதைக் கவனித்தனர். அவர்கள் அவனை விலக்கித் தள்ளினர். இறந்த உடல்களின்மீது இருந்த எந்தவொரு பொருளும் உரிமைப்படி அவர்களுக்குத்தான் சொந்தம். இந்தக் கடுமையான தொழிலில் வேலை செய்ததற்குக் கிடைத்த ஒருசில வெகுமதிகளில் இதுவும் ஒன்றாக இருந்தது. இளவரசர்கள் மற்றும் ராஜமாதாவின் உடல்கள் விலைமதிப்புக் கொண்ட எதையும் தங்களுக்குக் கொடுத்திராதது குறித்து அவர்கள் ஏற்கனவே எரிச்சலில் இருந்தனர். தங்களுக்கு உரிமையானதை இப்போது இன்னொரு தீண்டத்தகாதவன் தங்களிடமிருந்து பறிப்பதை அவர்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை.

ஏகலைவன் அச்சிறுவனின் உடலை நோக்கி மீண்டும் விரைந்தபோது, அந்த வெட்டியான்களில் ஒருவன் தன் நீண்ட தடியால் அவனை ஓங்கி அடித்தான். விரைவில் மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து, அந்த வேடுவனை ஈவு இரக்கமின்றி அடித்து விளாசினர். ஏகலைவன் எதிர்த்துச் சண்டையிடும் மனநிலையில் இருக்கைவில்லை. அவர்கள் கொடுத்த அடிகள் ஒருவிதத்தில் அவனுக்கு இதமளிப்பவையாக இருந்தன. அவன் தன் இதயத்தின் ஆழத்தில் உணர்ந்த வலியைத் தற்காலிகமாக மறக்க அந்த அடிகள் அவனுக்கு உதவின. அந்த வேடுவன் அவ்வளவு விரைவில் எழுந்திருக்க மாட்டான் என்று அந்த வெட்டியான்களுக்கு உறுதியாகத் தெரிந்தபோது, அவர்கள் அவனை ஒரு சாக்குமூட்டையைப்போல இழுத்துச் சென்று, ஒரு மரத்தின் அடியில் தள்ளினர்.

இறந்தவர்களின் உடல்கள் இருந்த மாட்டு வண்டி ஒரு குலுக்கலோடு புறப்பட்டது. ஆற்றின் அருகே இருந்த சுடுகாட்டை நோக்கி அது பயணித்தது. தலைமை வெட்டியான் அச்சிறுவனின் உடலிலிருந்து அந்தக் கத்தியைப் பிடுங்கினான். அது ஒரு மலிவான கத்திதான், ஆனால் அதைக் கொடுத்து ஒரு கோப்பை நாட்டுச் சாராயத்தைத் தன்னால் வாங்க முடியும் என்று நினைத்தபடியே, அவன் அந்தக் கத்தியைத் தன் இடைக்கச்சைக்குள் செருகினான்.

* * *

ஏகலைவனுக்கு நினைவு திரும்பியபோது, மதியம் வெகுநேரம் ஆகியிருந்தது. சிதைக்கட்டைகள் சிறிது நேரத்திற்கு முன்பு அணைந்து போயிருந்தன. வாரனவத கிராமத்தின் தலைவன் கொடுத்த ஈமச்சடங்கு விருந்திற்குப் பிறகு, ஈமச்சடங்கு நடத்திய புரோகிதர்கள் அங்கிருந்து போய்விட்டிருந்தனர். ஏகலைவன் தன் கைகளிலும் கால்களிலும் உணர்ந்த வலியைவிட, தன் இதயத்தில் உணர்ந்த துயரம், அவனால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது. அவன் எழுந்து கொள்ள முயற்சித்தபோது, இரண்டு வலிமையான கைகள் தனக்கு உதவிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். ஏகலைவன் நிமிர்ந்து பார்த்தபோது, கரிய முகத்தைக் கொண்ட ஓர் இடையன் தன்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்ததைக் கண்டான். ஏகலைவன் அவனை அடையாளம் கண்டுகொண்டபோது, "அசுவசேனா," என்று முணுமுணுத்தான். தட்சகனின் முகாமில் ஏகலைவனுக்கு நண்பனாக ஆன அந்த நாகர் இனத்தவன், ஏகலைவனை இறுக்கமாகக் கட்டியணைத்துக் கொண்டான்.

குழம்பிப் போயிருந்த ஏகலைவனிடம், அசுவசேனன், "நான் அவளை எச்சரித்தேன், ஆனால் அவள் என் பேச்சைக் கேட்கவில்லை," என்று கூறினான். "ஏகலைவா, நீ மீண்டும் உன் வில் வித்தைப் பயிற்சியைத் துவக்கியதிலிருந்து எங்களுடைய ஆட்கள் உன்னைக் கவனித்து வந்துள்ளனர். குருநாதர் துரோணரைத் திருப்திப்படுத்துவதற்காக நீ உன் கட்டைவிரலைக் காவு கொடுத்தபோது, நாகர்களின் மாபெரும் தலைவன் தட்சகன் உன்மீது நம்பிக்கை இழந்திருந்தார். ஆனால் எதிர்த்துச் சண்டையிடுவதற்கு நீ கொண்ட மன உறுதி, தட்சகனை மிகவும் கவர்ந்துள்ளது. அவர் தன்னுடைய அனைத்துச் சொற்பொழிவுகளிலும் உன்னைப் பற்றித்தான் தொடர்ந்து பேசுகிறார். நாகர்கள் முகாமில் உள்ள இளைஞர்கள் அனைவருக்கும் இப்போது நீ ஒரு கதாநாயகன். தட்சகன் உன்னைச் சந்திக்க விரும்புகிறார். நீ எங்கள் முகாமை உதாசீனப்படுத்திவிட்டுச்

சென்றது குறித்து அவருக்கு உன்மீது எந்த வருத்தமும் இல்லை. சாதி அமைப்புமுறையைப் புரட்டிப் போடும்வரை நம்மைப் போன்றவர்களுக்கு இந்த நாட்டில் எந்த எதிர்காலமும் இல்லை என்பதை நீ புரிந்து கொண்டவுடன், என்றேனும் ஒரு நாள் நீ திரும்பி வருவாய் என்று அவர் எப்போதும் கூறினார். உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் ஏற்பட்டது தனித்துவமானது அல்ல. நம் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்படிப்பட்ட அநீதியை அனுபவித்து வந்துள்ளனர். ஏகலைவா, என்னோடு காண்டவக் காட்டிற்கு வா. ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் நம்மைப் போன்றவர்களுக்குமான ஒரே வழி அதுதான். கொலை செய்யப்பட்ட உன் குடும்பத்தினருக்காகவும், வெட்டப்பட்ட உன்னுடைய கட்டைவிரலுக்காகவும், நம்முடைய மகிழ்ச்சியற்ற மக்களுக்காகவும் காண்டவக் காட்டிற்கு என்னோடு திரும்பி வா.”

ஏகலைவன் தன் நண்பனைப் பார்த்தான். “உன்னுடைய அலங்கார வார்த்தைகளையும் உணர்ச்சிகரமான கருத்துக்களையும் கேட்கும்போது தட்சகன் பேசுவதைக் கேட்பதுபோலவே இருக்கிறது.”

“நீ என்னுடன் வருவாயா?”

நான்கு விரல்கள் மட்டுமே இருந்த தன் வலது கையை ஏகலைவன் பார்த்தான். கட்டைவிரல் இருந்த இடம் அவனுக்கு லேசாக அரித்தது. ஒரு கத்தியைப் பிடித்திருந்த தன் ஒன்றுவிட்டச் சகோதரனின் உருவம் அவன் மனத்தில் பளிச்சிட்டது. அவன் தன் உடல் வேதனையைப் பொருட்படுத்தாமல் எழுந்து நின்று, அந்த நாகனின் முகத்தை வெறித்துப் பார்த்துவிட்டு, “வா, போகலாம்,” என்று கூறினான்.

அசுவசேனன் உற்சாகமாகக் கத்திவிட்டுத் தன் நண்பனை ஆரத் தழுவிக் கொண்டான். இரவு வந்தபோது, அவ்விரு நண்பர்களும் காண்டவத்தின் இருண்ட காடுகளை நோக்கித் தங்கள் நீண்ட பயணத்தைத் துவக்கினர்.

* * *

“என் மனம் மகிழ்ச்சியால் துடிக்கிறதா அல்லது பயத்தால் துடிக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.”

தன் கணவனின் குளிர்ந்த விரல்களில் இருந்த நடுக்கத்தைக் காந்தாரியால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவர்களைச் சுற்றி இருந்த உலகம் மிகவும் இருண்டு போயிருந்தது. விதுரன் அப்போதுதான் அவர்களைச் சந்தித்துவிட்டுச் சென்றிருந்தான். விதுரனின் முன்னால் அரசன் திருதராஷ்டிரன் உணர்ச்சியற்றவன்போலத் தோன்ற

முயன்றிருந்தும், அவன் அங்கிருந்து வெளியேறிய சத்தத்தைக் கேட்டவுடன், அரசன் தன் மனைவியை நோக்கித் திரும்பியிருந்தான். அவள் எதுவும் கூறவுமில்லை, எதுவும் கூற விரும்பவுமில்லை. அவள் பிரார்த்தனை செய்ய முயன்றாள், ஆனால் ஆதரவான வார்த்தைகள் எதுவும் அவளுக்குக் கிட்டவில்லை. அவள் மனம் மரத்துப் போயிருந்தது.

விதுரன் அந்தச் செய்தியைத் தங்களிடம் வந்து தெரிவித்தபோது, திருதராஷ்டிரனுக்கு ஏற்பட்டிருந்த அமைதியான மனநிறைவை அவள் உணர்ந்திருந்தாள். ஆனால் ஒரு பேரச்சம் அவளுடைய நாடி நரம்புகளிலெல்லாம் ஊடுவியது. பிரதம மந்திரி சாடைமாடையாக எதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார் என்பதைத் தன் கணவன் புரிந்து கொண்டிருந்தானா என்று அவள் வியந்தாள். ஏதோ மோசமான ஒன்று நடைபெறவிருந்ததை உணர்த்தும் வகையில் விதுரனின் வார்த்தைகள் அந்தக் காற்றில் மிதந்து கொண்டிருக்க, அவன் அங்கிருந்து வெளியேறியபோது, திருதராஷ்டிரன் காந்தாரியிடம், "இப்படிப்பட்ட ஒரு செயலை துரியோதனனால் உண்மையிலேயே செய்ய முடியுமா?" என்று கேட்டிருந்தான்.

தன் மூத்த மகனால் எந்தத் தவறையும் செய்ய முடியாது என்று திருதராஷ்டிரன் மிகவும் உறுதியாக நம்பினான். ஆனால் காந்தாரிக்கு அதில் அவ்வளவு உறுதியான நம்பிக்கை இருக்கவில்லை. அவள் தன் கணவனிடமிருந்து விலகி ஒரு சன்னலருகே சென்றாள். இதமான தென்றல் காற்று அவளுடைய முகத்தை மென்மையாக வருடியது. திருதராஷ்டிரன் மிகுந்த சிரமத்துடன் சுவாசித்துக் கொண்டிருந்ததை அவளால் கேட்க முடிந்தது. பரிதாபமான ஜீவன்! பல வருடங்களுக்கு முன்பு பீஷ்மர் அவளை இந்த அரண்மனைக்குக் கொண்டு வந்திருந்தபோது, தன்னை மணந்து கொள்ளவிருந்த மனிதனைக் கண்டு அவள் அதிர்ச்சி அடைந்திருந்தாள். பீஷ்மர் பல ராஜ்யங்களைச் சூறையாடி, அஸ்தினாபுரத்தின் இளவரசர்களுக்கு மணப்பெண்களைத் திருடிக் கொண்டு வரும் கட்டாயத்திற்கு ஆளாகியிருந்ததில் எந்த வியப்பும் இருக்கவில்லை என்று அவள் அப்போது நினைத்தாள். திருதராஷ்டிரனைத் தான் முதன்முதலாகப் பார்த்தபோது தனக்கு ஏற்பட்ட பயமும், அவனுடைய பார்வையற்றக் கண்களைக் கண்டபோது தனக்கு ஏற்பட்ட நடுக்கமும் காந்தாரிக்கு இன்றும் நன்றாக நினைவிருந்தன. தன்னைச் சுற்றி இருந்த செழிப்பையும் பிரம்மாண்டத்தையும் அவள் பார்வையிட்டபோது, தன் இளம் சகோதரனான சகுனியின் தோளைச் சுற்றித் தன் கையைப் போட்டுக் கொண்டு, தீயவர்களிடமிருந்து அவள் அவனைப் பாதுகாக்க முயன்றாள். அரசவையில் தங்களை ஆர்வத்தோடும்

கேள்விக்குறியோடும் பார்த்த அவையோருக்கு முன்னால் தான் பயமின்றி இருக்கப் போவதாக அவள் தனக்குத் தானே உறுதியளித்துக் கொண்டாள். பீஷ்மர் தன் சகோதரனின் மகனான திருதராஷ்டிரனுக்குக் கொண்டு வந்திருந்த அழகான பரிசைப் பார்ப்பதற்காக அங்கு கூடியிருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களுக்கிடையே கிசுகிசுப்பாகப் பேசிக் கொண்டது அவளுடைய காதுகளில் விழுந்தது. அவர்கள் தங்கள்மீது பரிதாபப்பட்டதையும் அவளால் உணர முடிந்தது. ஒரு பைத்தியக்காரத்தனமான வீராப்புடன் அவள் தன் புடவையிலிருந்து ஒரு துண்டுத் துணியைக் கிழித்துத் தன் கண்களைச் சுற்றிக் கட்டிக் கொண்டாள். அன்றிலிருந்து, அவளும் தன் கணவனின் பார்வையின்மையைப் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

"மகளே, இது என்ன கோலம்?" என்று பீஷ்மர் அதிர்ச்சியில் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவளுக்குத் தெளிவாகக் கேட்டன. அவருடைய வார்த்தைகளில் தொனித்த வேதனையும் குற்றவுணர்வும் அவளுக்குச் சிறிது மனநிறவைக் கொடுத்தன. இத்தனை வருடங்களுக்குப் பிறகும்கூட, அவை அவளுக்குத் மனநிறைவைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அந்த நாளின் காட்சிகள் அவளுடைய நினைவில் மிகத் தெளிவாகப் பதிந்திருந்தன. தன் பார்வையைப் பறித்திருந்த இந்த நாட்டை வேரோடு அழிப்பது என்று தன் சகோதரன் கொண்டிருந்த கனவை ஒரு காலத்தில் அவளும் பகிர்ந்து கொண்டிருந்தாள். ஆனால் இந்த வறண்ட, புழுதியான நிலம் எப்படி அவளுடைய இதயத்திற்குள் மெல்ல மெல்லப் புகுந்தது என்பது வினோதமான ஒன்றாக இருந்தது. மசாலாப் பொருட்களின் வாசனை, கோவில் மணிகளின் ஒலி, சுட்டெரித்தக் கோடை வெயிலில் உடலின் ஒவ்வொரு துளைக்குள்ளும் நுழைந்த மெல்லிய தூசி ஆகியவை அவளுடைய இதயத்தைக் கவர்ந்திருந்தன. அழிவு மற்றும் பழி வாங்கல் குறித்தக் கனவுகள் நெடுங்காலத்திற்கு முன்பே காணாமல் போயிருந்தன. எந்த மனிதனிடமிருந்து அவள் தன்னை விலக்கிக் கொண்டிருந்தாளோ, அவன் அவளுடைய கணவனாக ஆகியிருந்தான். அது காதலா அல்லது பாதுகாப்பின்மை உணர்வு கொண்ட ஒரு பார்வையற்ற மனிதன்மீது ஏற்பட்டப் பச்சாதாபமா? அக்கேள்வியை அவள் தன்னைத் தானே கேட்டுக் கொள்ள மிகவும் பயந்தாள். தன் கண்களைக் கட்டிக் கொள்வதென்ற பயங்கரமான சபதத்தை அவள் மேற்கொண்டபோது, தன் செய்கையால் பீஷ்மருக்கு மனவேதனையைக் கொடுக்க வேண்டும் என்று மட்டும்தான் அவள் விரும்பியிருந்தாள். தன் தந்தைக்கும் தன் தாய்நாட்டிற்கும் அவர் செய்திருந்த கொடுமையான செயல்களுக்காகத் தான் ஒருபோதும் அவரை மன்னிக்கப் போவதில்லை

என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் காலப்போக்கில், அந்த அரசாட்சிப் பொறுப்பாளர்மீதான மரியாதை அவள் மனத்தில் மெல்ல மெல்ல வளர்ந்தது. அவள் எவ்வளவு முயற்சித்தும்கூட, அது அவளுடைய மனத்தைவிட்டுப் போக மறுத்தது.

திருதராஷ்டிரன் தன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு, "முன்பொரு காலத்தில், எனக்கு உரிமையான இந்த அரியணையை அவர்கள் என்னிடமிருந்து பறித்து என் தம்பி பாண்டுவை அதில் அமர வைத்தபோது, நான் அவனுக்குப் பக்கத்தில் ஓர் அடிமைபோல நின்றேன். நான் ஒரு குருடன். இருட்டை மட்டுமே நான் பார்க்கிறேன் . . . நான் என் தலையின்மீது அணிந்திருக்கும் மணிமகுடம்கூட என் சகோதரன் எனக்குக் கொடுத்தப் பரிசுதான் . . . பாண்டு இறந்த பிறகு, எனக்கு ஏதோ உபகாரம் செய்வதைப்போல என் பிறப்புரிமையை அவர்கள் எனக்குக் கொடுத்தனர். ஆனால் பெயரளவில்தான் நான் ஓர் அரசன். பீஷ்மரும் விதுரனும்தான் இந்த ராஜ்யத்தை ஆள்கின்றனர்," என்று தன் மனைவி காந்தாரியிடம் கூறினான்.

அவன் எழுந்து நின்று தன் தண்டாயுதத்தைத் தேடும் சத்தம் காந்தாரிக்குக் கேட்டது. அவள் தன் உள்ளங்கைகளை ஒன்றோடொன்று இறுக்கிப் பிடித்தாள். அவனை பலவீனமானவனாகவும் கையாலாகாதவனாகவும் நினைத்துப் பார்ப்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் அஸ்தினாபுரத்தின் அரசனாக இருந்தும், ஒரு கண்டத்தைப்போலப் பெரிதாக இருந்த ஒரு ராஜ்யத்தை அவன் ஆண்டு கொண்டிருந்தும்கூட, அவன் தன் சொந்த நிழலைக் கண்டு பயந்தான். அவன் எல்லோரிடமும் மரியாதையோடும் பணிவோடும் நடந்து கொண்டான். அவன் யாரிடமும் ஒருபோதும் அதிர்ந்து பேசியதில்லை. ஒன்றைப் பேசுவதற்கு முன், மிகவும் யோசித்தே பேசினான். ஆனால் அவன் அவர்களுடைய தனிப்பட்ட அறையில் இருந்தபோது, மிகவும் வித்தியாசமாக நடந்து கொண்டான். அடுத்து வரவிருந்ததைக் காந்தாரி அறிந்திருந்தாள். அந்தச் சத்தம் அவளுக்கு நன்றாகப் பரிச்சயமாகியிருந்தது. திருதராஷ்டிரன் தன் தண்டாயுதத்தைக் கொண்டு பீமனின் இரும்பு உருவச்சிலையின்மீது தன் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். அந்தச் சிலையை அவன் தன் மூத்த மகனுக்குப் பரிசளித்திருந்தான், ஆனால் துரியோதனன் அதை ஒருபோதும் பயன்படுத்தியிருக்கவில்லை. திருதராஷ்டிரனின் தண்டாயுதம் அந்த இரும்புச் சிலையைப் பெரும் ஆற்றலுடன் தாக்கி ஒரு பயங்கரச் சத்தத்தை ஏற்படுத்தியது.

"தயவு செய்து இதை நிறுத்துகிறீர்களா?" என்று கேட்டக் காந்தாரியின் குரலில் வேதனை நிரம்பி வழிந்தது.

சிறிது நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு, தங்கள் படுக்கையறையிலாவது சிறிது அதிகாரத்தைக் கொண்ட ஓர் அரசன் தான் என்று தனக்குத் தானே நிரூபித்துக் கொள்வதுபோல, அவன் மீண்டும் அந்தச் சிலையின்மீது தன் வெறுப்பைக் கொட்டித் தீர்க்கத் தொடங்கினான். காந்தாரி தன் கணவனின் கையிலிருந்த தண்டாயுதத்தைப் பற்றித் துளிகூட பயப்படாமல், அவனை நோக்கி நடந்தாள். அவள் தன் அருகில் வந்து நின்றதை உணர்ந்த அவன் தன் செய்கையை நிறுத்தினான். காந்தாரி அவனுடைய கைகளிலிருந்த தண்டாயுதத்தைப் பிடுங்கிக் கொண்டு, அவனைத் தங்கள் படுக்கையின்மீது அமரச் செய்தாள். தோல்வியில் அவன் அவளுடைய தோளின்மீது தன் தலையைப் புதைத்தான். ஆனால் காந்தாரி அவனுடைய முகத்தை நிமிர்த்தி, அதைத் தன் விரல்களால் வருடினாள். தன் கைகளில் அவன் மிகவும் பலவீனமாக இருந்ததைக் கண்டு அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஆனால் காந்தார நாட்டின் பெண்கள் ஒருபோதும் அழுததில்லை என்று அவள் தனக்கு நினைவூட்டிக் கொண்டாள். அவள் தன் கணவனின் அடர்த்தியான தலைமுடியை வருடிக் கொடுத்தபடி, அவன் தன் வாழ்நாள் முழுவதும் அனுபவித்து வந்திருந்த அவமதிப்பையும் இகழ்ச்சியையும் நினைத்து வருந்தினாள். தன் கணவனின் தலைமுடி துரியோதனனுடைய தலைமுடியைப்போலவே இருந்ததாக அவள் நினைத்தாள். தன் கணவனுக்கு நரைத்துவிட்டிருக்குமோ என்று வியந்த அவள், தன் மூத்த மகன் இப்போது எப்படிக் காட்சியளித்தான் என்று கற்பனை செய்ய முயன்றாள்.

“இப்போது நம் மகனுக்குத் தனக்கு உரிமையானது கிடைத்துவிடும். காந்தாரி, அவன் நம்மைப்போலப் பார்வையற்றவன் அல்ல. இதை என்னால் வேறு யாரிடமும் கூற முடியாது, ஆனால் நீ புரிந்து கொள்வாய். பாண்டவர்கள் இறந்துவிட்டது எனக்கு நிம்மதியாக இருக்கிறது. அது ஒரு விபத்தாக இருக்க வேண்டும் என்றும், நம் மகனின் சூழ்ச்சியாக இருக்கக்கூடாது என்றும் நான் பிரார்த்திக்கிறேன். துரியோதனன் அப்படிப்பட்ட எதையும் செய்வான் என்று எனக்குத் தோன்றவில்லை. அவன் ஒருபோதும் இரக்கமின்றி நடந்து கொண்டதில்லை. ஆனால் அவன் இந்தக் காரியத்தைச் செய்திருப்பான் என்று நீ நினைக்கிறாயா?”

காந்தாரி பதிலேதும் கூறவில்லை. அவள் தன் கணவனை நம்ப விரும்பினாள். தங்கள் மகன் நிச்சயமாக இப்படியொரு கீழ்த்தரமான செயலை ஒருபோதும் செய்ய மாட்டான் என்று அவள் நினைத்தாள். ‘ஆனால் சகுனி? பாவம் குந்தி! அவள் உண்மையிலேயே

இறந்துவிட்டாளா? அவளுக்கும் அவளுடைய மகன்களுக்கும் என்னவொரு கொடூரமான மரணம். அவள் உண்மையிலேயே இறந்துவிட்டாளா அல்லது இது இன்னொரு தந்திரமா?' காந்தாரியின் மனத்திற்குள் ஏகப்பட்டக் கேள்விகள் தலைதூக்கின. அவள் குந்தியை வெறுத்தாள், ஆனால் குந்தி இறந்துவிட்டிருந்தாள் என்பதை ஏனோ அவளால் நம்ப முடியவில்லை. குந்தி அவ்வளவு சீக்கிரத்தில் இறந்துவிட மாட்டாள் என்று அவள் நினைத்தாள். ஆனால் குந்தியும் அவளுடைய ஐந்து மகன்களும் தங்கள் புதிய மாளிகையில் நெருப்பில் கருகி இறந்துவிட்டிருந்ததாக விதுரன் கூறியிருந்தான். தன் மனத்தை ஆட்டுவித்த எண்ணங்கள் குறித்து காந்தாரி அவமானம் கொண்டாள். தன் மனத்தில் உருவாகியிருந்த மகிழ்ச்சிக் குமிழ் மெல்ல மெல்ல வளர்ந்து அவளுடைய மனத்தை முழுவதுமாக நிரப்பிக் கொண்டிருந்தது அவளைத் தடுமாறச் செய்தது. அப்படிப்பட்ட எண்ணங்களைக் களைவதுபோல அவள் தன் தலையைக் குலுக்கினாள்.

திருதராஷ்டிரன் நிலைகொள்ளாமல் தவித்தான். அவன் தன் படுக்கையைவிட்டு எழுந்து, காந்தாரியின் கைகளை விலக்கித் தள்ளிவிட்டு, தன் தண்டாயுதத்தைத் தேடினான். ஓர் உலோகம் இன்னோர் உலோகத்தின்மீது மோதியதால் ஏற்பட்டச் சத்தம் அந்த அறை முழுதும் மீண்டும் எதிரொலித்தது. திருதராஷ்டிரனின் தண்டாயுதத்திலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த வெறுப்பைச் சகித்துக் கொள்ள முடியாதவளாக, காந்தாரி தன் காதுகளைப் பொத்திக் கொண்டு தன் படுக்கையின்மீது அமர்ந்தாள். ஓர் இனம் புரியாத பயம் அவளுடைய உடலுக்குள் ஊடுருவத் துவங்கியது. அது அவளுடைய ஒவ்வொரு நரம்பின் ஊடாகவும் புகுந்து சென்றது. திடீரென்று, விதுரன் கூறிய செய்தி தவறு என்பதும், தன் மகன் குற்றமற்றவன் என்பதும் அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. குந்தி தன் மகன்களுடன் மீண்டும் திரும்பி வந்து, தங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத ஏதோ ஒன்றுக்குள் தங்கள் அனைவரையும் உள்ளிழுத்துவிடுவாள் என்று காந்தாரி உறுதியாக நம்பினாள். காந்தாரி தன் மகன் துரியோதனனைப் பார்க்க விரும்பினாள், அவனைத் தன் அருகில் வைத்துக் கொள்ள விரும்பினாள். முதன்முறையாக, அவனுடைய முகத்தைத் தன் விரல்களால் உணர்வதற்குப் பதிலாக, அவள் அதைத் தன் கண்களால் பார்க்க விரும்பினாள். சகுனியும் கிருஷ்ணனும் வாழ்ந்த ஓர் உலகில், தன் மகன் தன்னந்தனியாக ஒரு முட்டாள்தனமான போரில் ஈடுபட்டிருந்தான் என்று நினைத்து அவள் வருந்தினாள். இந்தச் சூழ்ச்சிகரமான உலகிலிருந்து அவள் தன் மகனைப் பாதுகாக்க விரும்பினாள்.

* * *

பாண்டவர்களின் மரணம் பற்றிய செய்தி ஒரு காட்டுத்தீயைப்போலப் பரவியது. துரியோதனன் அவர்களைக் கொன்றுவிட்டிருந்ததாக ஒரு வதந்தியை தௌமியனின் ஆட்கள் எல்லா இடங்களிலும் பரப்பினர். வீதிகளில் கோபம் கொப்பளித்தது. துர்ஜயனின் ஆட்கள் அதைப் பயன்படுத்தி, ஒருசில கலவரங்களைத் திறமையாகத் தூண்டினர். ஏராளமான பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. பல இடங்களில் தீ வைப்புச் சம்பவங்களும் கொள்ளைகளும் நிகழ்ந்தன. வீதிகளில் பட்டத்து இளவரசனைப் பற்றி அவதூறான கோஷங்கள் முழங்கின. உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக விதுரன் வாரனவதத்திற்குச் சென்றான். ஆனால் கலவரங்கள் கிராமங்களுக்கும் பரவத் துவங்கியபோது, மீண்டும் தலைநகருக்குத் திரும்பி வருமாறு பீஷ்மர் விதுரனுக்கு உத்தரவிட்டார். விதுரன் தன் வீட்டின் கட்டுமானப் பணியைக் கைவிட வேண்டியதாயிற்று. கலவரங்களை விளைவித்தச் சிலருக்குப் பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனையை நிறைவேற்றியதன் மூலம், பிரதம மந்திரியான விதுரன் ஒரு வாரத்திற்குள் அமைதியையும் ஒழுங்கையும் மீட்டெடுத்து நிலைப்படுத்தினான். துர்ஜயனின் ஆட்கள் ரகசியமாகத் தங்கள் மறைவிடங்களுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

இந்த நிகழ்வுகள் அனைத்தையும் கண்டு துரியோதனன் வெறுப்படைந்தான். அவன் தன் குடிமக்களிடையே இருப்பதைப் பெரிதும் விரும்பினான். என்றேனும் ஒருநாள் தான் ஆளவிருந்த இந்த ராஜ்யத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று மக்களை அடிக்கடிப் பார்த்து வருவதில் அவன் பெருமகிழ்ச்சி கொண்டான். மக்கள் அவன்மீது காட்டிய அன்பும் பாசமும் அவனுக்குப் புத்துணர்வூட்டின. ஆனால் பாண்டவர்களின் மரணம் பற்றிய வதந்திகளுக்குப் பிறகு, விஷயங்கள் மோசமாக ஆயின. தனக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நிலவிய கடும் வெறுப்பை மக்கள் அறிந்திருந்தனர் என்பதை துரியோதனன் அறிந்திருந்தான். ஆனால் தன் ஒன்றுவிட்டச் சகோதரர்களைக் கொல்லும் அளவுக்குத் தான் தரம் தாழ்ந்து போய்விடுவோம் என்று பலர் நினைத்ததை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒருமுறை, வீதியில் ஒரு கும்பல் அவனைச் சூழ்ந்து கொண்டு அவன்மீது முட்டைகளை வீசியது. ஒரு பிச்சைக்காரனும் ஒரு நாயும் திடீரென்று அங்கே வந்து, காவலர்கள் துரியோதனைப் பாதுகாப்பாக அங்கிருந்து கொண்டு செல்லும்வரை, இளவரசனுக்கும் அந்தக் கூட்டத்திற்கும் இடையே

நின்றிருக்காவிட்டால், அக்கூட்டத்தினர் துரியோதனனைக் கல்லால் அடித்துக் கொன்றிருப்பர்.

அந்த நிகழ்விற்குப் பிறகு, அரண்மனையைவிட்டு அவன் வெளியே போகக்கூடாது என்று பீஷ்மர் உத்தரவிட்டிருந்தார். அந்த மோசமான காலகட்டம் கடந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகியிருந்தும்கூட, அதைப் பற்றி நினைத்தபோது துரியோதனனுக்கு அது இன்னும் வேதனையளித்தது. "கொலைகாரன் துரியோதனன்," என்று அந்தக் கூட்டம் உச்சஸ்தாயியில் கோஷமிட்டிருந்தது. கொலைகாரன் என்ற பட்டப்பெயர் அவனைப் பெரிதும் காயப்படுத்தியது. அங்க நாட்டில் தன் வேலையை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்த தன் நண்பனைப் பார்க்க இளவரசன் துரியோதனன் மிகவும் ஏங்கினான். துச்சாதனன் தனக்கென்று ஒரு நண்பர்கள் குழுவை உருவாக்கியிருந்தான். துரியோதனனும் துச்சாதனனும் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகிச் சென்றிருந்தனர். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அவ்வளவாக நேரத்தைச் செலவிடவில்லை. சிந்து நாட்டு அரசன் ஜயத்ரதனுக்கு மணமுடிக்க நிச்சயிக்கப்பட்டிருந்த துச்சலை, தன் சொந்த உலகில் மகிழ்ச்சியாக இருந்தாள். அவளும் துரியோதனனின் அறைக்கு வந்து அவனுடன் பேசுவதில் ஈடுபாடு காட்டவில்லை. அசுவத்தாமன் மட்டுமே அவனுடைய ஒரே தோழனாக நீடித்தான். இந்தத் தனிமையின் காரணமாக, சுபத்திரையைக் குறித்த அவனுடைய ஏக்கம் நாளுக்கு நாள் தீவிரமடைந்தது. பட்டமளிப்பு விழாவிற்குப் பிறகு அவன் அனுப்பியிருந்த செய்திகள் எதற்கும் அவள் பதிலளித்திருக்கவில்லை. அது அவனுக்கு மேலும் கவலையளித்தது. துவாரகை, அஸ்தினாபுரத்தைவிட சிந்து நாட்டிற்கு அதிக அருகில் இருந்ததால், துரியோதனன் ஜயத்ரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அறிவுரை கேட்டு அவன் தன் குரு பலராமனுக்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தான். அந்த யாதவத் தலைவனிடமிருந்து ஒரு பதிலுக்காக அவன் ஆவலுடன் காத்திருந்தான்.

ஒரு காவலாளி துரியோதனனின் அறைக்கு வந்து அவனுக்குத் தலை வணங்கிவிட்டு, முத்திரையிடப்பட்டச் செய்தி ஒன்றை அவனிடம் கொடுத்தான். பாஞ்சால இளவரசியின் சுயம்வரத்திற்கான ஓர் அழைப்பு அது. ஆனால் துரியோதனன் அக்கறையின்றி அதை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, தன் மேசையின்மீது வீசினான். அவனுடைய மனம் மீண்டும் சுபத்திரையிடம் திரும்பியது. அவளுடைய மௌனத்திற்கு என்ன பொருள் என்று அவன் வியந்தான். தானே துவாரகைக்கு நேரில் சென்று அவளைப் பார்த்து வர வேண்டும் என்றும், அவளை முறையாகப் பெண் கேட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்றும் அவன்

நினைத்தான். தங்கள் காதல் உறவைத் திருமண உறவாக மாற்றுவதற்குத் தான் முயற்சி எடுத்திராததால்தான் அவள் தன்னை அலட்சியப்படுத்திக் கொண்டிருந்ததாக அவன் நம்பினான். அவன் உற்சாகமாகத் தன் மேசைக்குச் சென்று, சுபத்திரையைத் தனக்கு மணமுடித்துக் கொடுக்குமாறு கேட்டு, யாதவத் தலைவனான பலராமனுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதைத் தன்னுடைய தனிப்பட்டத் தூதுவன் ஒருவன் மூலம் துவாரகைக்கு அனுப்பிவிட்டு, அவன் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் உணர்ந்தான்.

திரௌபதியின் சுயம்வர அழைப்பிதழை அவன் மீண்டும் ஒருமுறை படித்தான். உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் ஓர் உலோக மீனை, ஒரு சிறிய நீர்க் குளத்தில் அதன் பிரதிபலிப்பைப் பார்த்துத் திறமையாக வீழ்த்துகின்ற வில்லாளனுக்குத் தன் மகள் மணமுடித்துக் கொடுக்கப்படுவாள் என்று அரசன் துருபதன் அறிவித்திருந்தான். மக்கள் தங்கள் மகள்களுக்குப் பொருத்தமான வரன்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பயன்படுத்திய நகைப்பிற்கிடமான வழிகளைப் பார்த்து இளவரசன் துரியோதனன் புன்னகைத்தான். திரௌபதி ஒரு போட்டியில் வெற்றி கொள்ளப்பட வேண்டிய ஒரு பரிசுக் கோப்பையா என்று அவன் வியந்தான். அந்த அழகான இளவரசியை நினைவுகூர்ந்த அவன், மிகத் திறமையான வில்லாளனுக்கு ஏலம் விடப்படும் அளவுக்கு அவள் எந்த விதத்திலும் குறைந்து போய்விடவில்லை என்று நினைத்தான். அவளுடைய புத்திசாலித்தனத்திற்கும் உற்சாகத்திற்கும் அவளுக்கு ஒரு சிறந்த கணவன் வாய்க்க வேண்டும் என்று அவள் விரும்பினான். காதலுக்கு அவள் வாழ்வில் எந்த இடமும் இல்லையா என்று வியந்த துரியோதனனுக்குத் திடீரென்று கர்ணன் நினைவுக்கு வந்தபோது, அவன் தன் நெற்றியின்மீது அடித்துக் கொண்டான். பாஞ்சாலத்தில் தாங்கள் மகிழ்ச்சியாகக் கழித்த இரவின்போது, கர்ணன் மற்றும் திரௌபதியின் கண்களில் தென்பட்டக் காதலையும் ஏக்கத்தையும் தான் மறந்து போனது குறித்து அவன் தன்னை நொந்து கொண்டான். அவன் தன் சோம்பலை உதறிவிட்டு, அசுவத்தாமனுக்கும் துச்சாதனனுக்கும் அழைப்பு விடுத்துவிட்டு, அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். அவர்கள் அங்கு வந்தபோது, அவன் தனக்கு வந்திருந்த அழைப்பிதழை அவர்களிடம் காட்டிவிட்டுக் காத்திருந்தான்.

“இது நம் நண்பனுக்கு மோசமான செய்தி,” என்று அசுவத்தாமன் கூறினான்.

“அசுவத்தாமா, என்ன உளறுகிறாய்?” என்று எரிச்சலோடு கேட்ட துரியோதனன், “கர்ணனைத் தவிர, இந்தப் போட்டியில் வெற்றி பெறக்கூடிய வேறு எந்தவொரு வில்லாளனையாவது உனக்குத்

தெரியுமா? அவனுக்கு ஓரளவுக்கு சவால்விடக்கூடிய தகுதியுள்ளவன் நீ ஒருவன்தான்," என்று கூறினான்.

"கர்ணனிடம் உதை வாங்கும் ஆசை எனக்கு இல்லை. அவனுக்கு இந்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளதா என்பதுதான் இங்குள்ள பிரச்சனை."

"அவனுக்கு ஏன் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருக்காது? அவன் அங்க நாட்டின் அரசன். அவனுடைய சாதியின் காரணமாகப் பாஞ்சாலர்கள் அவனுக்கு அழைப்பு விடுக்க மாட்டார்கள் என்று நீ கூறுகிறாயா?"

அசுவத்தாமன் தன் நண்பனை மௌனமாகப் பார்த்தான். துரியோதனனின் கோபம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டிருந்ததை அவனால் காண முடிந்தது.

"துச்சாதனா, நம்முடையை படைகளைத் தயார் செய். நாம் திரௌபதியின் சுயம்வரத்திற்குப் போகப் போகிறோம். நாம் கர்ணனையும் நம்முடன் அழைத்துச் செல்லப் போகிறோம். நாம் பாஞ்சாலத்திற்குச் செல்லும் வழியில் நம்முடன் வந்து சேர்ந்து கொள்ளுமாறு அவனுக்குச் செய்தி அனுப்பு. ஜயத்ரதனுக்கும் செய்தி அனுப்பு. யாரேனும் கர்ணனை இழிவுபடுத்தினால், அவர்கள் மறக்க முடியாத அளவுக்கு நாம் அவர்களுக்குப் பாடம் புகட்டிவிட்டு வரலாம்."

அன்று மாலைக்குள், பயணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருந்தன. துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் ஒரு பெரும் படையுடன் பாஞ்சாலத்திற்குப் புறப்பட்டனர். வழியில் கர்ணன் அவர்களோடு இணைந்து கொண்டபோது, பாஞ்சால நாட்டு அரசனிடமிருந்து தனக்கு வந்திருந்த சுயம்வர அழைப்பிதழை அவன் அவர்களிடம் காட்டினான். இதைக் கண்டு எல்லோரும் நிம்மதியடைந்தனர். இந்தப் பயணத்தின்போது, அந்த ஐந்து நண்பர்களும் தங்கள் குதிரைகளின்மீது அமர்ந்தபடி ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டும், அருமையான மது வகைகளைப் பருகிக் கொண்டும், மக்களுடன் உரையாடிக் கொண்டும், கிராமங்களுக்கு அருகிலிருந்த முனிவர்களை தரிசித்துக் கொண்டும், காட்டில் விலங்குகளை வேட்டையாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவிட்டனர். துச்சாதனனும் அசுவத்தாமனும் கர்ணனை அடிக்கடிக் கேலி செய்து சீண்டிக் கொண்டே இருந்தனர். அவர்கள் தினமும் காலையில் வில் வித்தையைப் பயிற்சி செய்தது, எப்போதும் கலகத்தனமாகவே இருந்தது. அசுவத்தாமன் கர்ணனுக்கு இணையாகத் தன் திறமையை வெளிப்படுத்தினான். சுயம்வரத்தில் போட்டியிட்டு, மணப்பெண்ணைத் தான் திருடிச்

சென்றுவிடப் போவதாக அவன் கர்ணனை அச்சுறுத்திக் கொண்டிருந்தான். சுபத்திரையைப் பற்றி ஜயத்ரதன் துரியோதனனிடம் ஏதோ கூற விரும்பினான், ஆனால் இது அதற்குத் தகுந்த நேரம் அல்ல என்று அவன் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தபோது, இந்தச் செய்தியைக் கூறி இளவரசனின் குதூகலத்தைக் கெடுக்க அவன் விரும்பவில்லை.

அவர்கள் கம்பில்ய நகருக்குள் நுழைந்தபோது, அந்தப் பாஞ்சாலத் தலைநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் நெடுகிலும் கட்டப்பட்டிருந்த கயிறுகளில் சாமந்திப்பூச்சரங்கள் தொங்கின. கட்டடங்களுக்குப் புதிதாக வண்ணப்பூச்சு செய்யப்பட்டிருந்தது. வீதிகள் சுத்தமாகக் கழுவிவிடப்பட்டிருந்ததால், அவை பளபளத்தன. அழகான ஆடை அணிகலன்களை அணிந்த ஆயிரக்கணக்கான மக்கள் அவ்வீதிகளில் மும்முரமாக வலம் வந்து கொண்டிருந்தனர். நடைபாதைக் கடைக்காரர்களும் தள்ளுவண்டிக்காரர்களும் தங்கள் பொருட்களைக் கூவிக்கூவி விற்றுக் கொண்டிருந்தனர். மாயவித்தைக்காரர்களும் பாம்பாட்டிகளும் தங்கள் வித்தைகளால் கூட்டத்தினரை மகிழ்வித்தனர். தங்க முலாம் பூசப்பட்ட ரதங்களில் பல்வேறு அரசர்கள் அவ்வீதிகள் வழியாக வேகமாகச் சென்றனர். பல்வேறு ராஜ்யங்களின் அரசர்கள் தங்கள் யானைகள்மீது அமர்ந்து மிடுக்காக அணிவகுத்துச் சென்றனர். பல பிராமணக் குழுவினர், பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு நடந்து சென்றனர். அது ஒரு பிரம்மாண்டமான நிகழ்வாக இருந்தது.

துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் அரண்மனையை நெருங்கியபோது, ஒரு நீண்ட ஊர்வலம் அவர்களைக் கடந்து சென்றது. ஒரு மேட்டுக்குடி நபரைப்போலத் தோன்றிய ஒரு வயோதிகன், தன் அம்பாரியின்மீது மிடுக்காக அமர்ந்திருந்தான். அவனுடைய கண்களும் அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனின் கண்களும் சந்தித்துக் கொண்டபோது, அவன் துரியோதனனைப் பார்த்துப் புன்னகைத்தான். துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் அந்த வயோதிகனுக்கு முன்னால் மரியாதையாகத் தலை வணங்கினர். அந்த யானைக்குப் பின்னால், பெரிய உருவத்தைக் கொண்ட, நடுத்தர வயதில் இருந்த, கருப்பு மனிதன் ஒருவன் ஓர் அழகான வெள்ளைக் குதிரையின்மீது அமர்ந்து வந்தான். நிமிர்ந்த தலையுடனும் பெருமிதத்துடனும் அவன் தனக்கு முன்னால் நேராகப் பார்த்தான். அவன் இளவரசன் துரியோதனனைப் பார்த்து லேசாகத் தலையசைத்துவிட்டு, ஒரு கற்சிலைபோல அசைவற்று அமர்ந்து சென்றான்.

“அம்பாரியின்மீது அமர்ந்து செல்பவர் யார்?” என்று கர்ணன் துரியோதனனிடம் கேட்டான்.

“அவர் மகத நாட்டு அரசர் ஜராசந்தன். அவர் ஒரு மாபெரும் மனிதர். நம்முடைய மிகச் சிறந்த நிர்வாகிகளில் ஒருவர். பீஷ்மர் அவர்மீது அளவு கடந்த மரியாதை வைத்திருக்கிறார். மேற்கில் பலராமனும் கிழக்கில் ஜராசந்தனும் இருக்கும்போது, தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பால் பரதகண்டத்தைக் கைப்பற்றிப் பரசுராமனின் கொள்கைகளை ஒருபோதும் திணிக்க முடியாது என்று அவர் அடிக்கடிக் கூறுவார். அரசன் ஜராசந்தனுக்குப் பின்னால் குதிரையின்மீது செல்பவன் இரணியதனுசு. மகதப் படைகளின் தளபதி அவன். அவன் வேடுவர் சாதியைச் சேர்ந்தவன். பரதகண்டத்தின் அருமையான தளபதிகளில் ஒருவன் அவன். அரசர் ஜராசந்தன் அனைத்துச் சாதி விதிமுறைகளையும் உடைத்தெறித்து, அவனை ஒரு முக்கியமான பதவியில் அமர வைத்திருக்கிறார். சாதி விதிமுறைகளை மீறியதற்காகப் பரசுராமன் அவரைக் கடிந்து கொண்டபோது, தான் தன் நாட்டைத் தகுதியின் அடிப்படையில் ஆண்டதாகவும், காலாவதியாகிவிட்டப் புனித நூல்களின் அடிப்படையில் அல்ல என்றும் அவர் பதிலளித்தார். இதனால் கோபம் கொண்ட பரசுராமன், மகத நாட்டின்மீது தாக்குதல் நடத்துமாறு கலிங்க நாட்டிற்கு உத்தரவிட்டான். ஆனால் கலிங்கப் படைகளைத் தோற்கடித்து, அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ததன் மூலம், அந்த வேடுவத் தளபதி, அரசர் ஜராசந்தன் தன்மீது கொண்டிருந்த நம்பிக்கை சரிதான் என்பதை நிரூபித்தான்.”

கர்ணன் தங்களைக் கடந்து சென்று கொண்டிருந்த அந்த ஊர்வலத்தை இப்போது ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்த்தான். சாதி விதிமுறைகளைக் கடந்து ஓர் உயர்ந்த பதவிக்கு வந்த முதல் நபர் தான் அல்ல என்பதை அவன் உணர்ந்தான். தன்னைவிடக் கீழ்நிலையில் இருந்த ஒருவன் ஏற்கனவே அதைச் சாதித்திருந்தான் என்பதையும், சாதி விதிமுறைகளை உடைத்தெறிந்த முதல் நபர் இளவரசன் துரியோதனன் அல்ல என்பதையும் அவன் அறிந்தான். ஆனால் பரசுராமனின் பெயர் தன் காதுகளில் விழுந்தபோது, அது அந்தத் தேரோட்டியின் இதயத்தில் ஒரு வேதனையைத் தோற்றுவித்தது.

“நண்பர்களே, அந்த வேடுவத் தளபதி தன் லட்சியத்தைப் பின்தொடர்ந்து சென்றபோது, தன் மகனைத் தன் சகோதரனுடன் விட்டுச் சென்றது உங்களுக்குத் தெரியுமா?” என்று ஜயத்ரதன் கேட்டான்.

“நானும் அதைக் கேள்விப்பட்டுள்ளேன். அர்ச்சுனனின் நலனுக்காகத் தன் கட்டைவிரலைக் காவு கொடுக்குமாறு என் தந்தை

எந்த இளைஞனுக்குக் கட்டளையிட்டாரோ, அதே இளைஞன்தான் அவன் என்று ஒரு வதந்தி நிலவுகிறது. ஏகலைவன் . . . ஆம், அதுதான் அவன் பெயர். அந்த ஏழை வேடுவனுக்கு என் தந்தை இழைத்த அநீதியை இப்போதுகூட என்னால் சொரித்துக் கொள்ள முடியவில்லை," என்று அசுவத்தாமன் கூறினான்.

இதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல், தர்மசங்கடத்துடன் எல்லோரும் தங்கள் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டனர். சுயம்வரம் நடக்கவிருந்த அந்தப் பெரிய அரங்கிற்குள் அவர்கள் நுழைந்தபோது, பலராமன் ஜராசந்தனிடம் பேசிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். துரியோதனன் தன் குருவை நோக்கி நடந்து சென்று, அவருடைய பாதங்களைத் தொட்டுப் பணிந்தான். அவனுடைய நண்பர்களும் அவ்வாறே செய்தனர். பலராமன் அவர்களை அந்த மகத அரசனுக்கும் அவனுடைய விசுவாசமான வேடுவத் தளபதிக்கும் அறிமுகம் செய்து வைத்தான். அப்போது ஜராசந்தன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைக்குத் தன் தளபதியுடன் சென்றான்.

"துரியோதனா, உன் கடிதம் எனக்குக் கிடைத்தது. நான் உங்கள் இருவருக்காகவும் மிகவும் மகிழ்கிறேன். மழைக்காலத்திற்குப் பிறகு உங்களுடைய நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாம். நீ ஒருபோதும் கேட்காமல் போய், என் சகோதரியை மனமுடையச் செய்துவிடுவாயோ என்று நான் பயந்தேன். நானே அஸ்தினாபுரத்திற்கு வந்து, மாண்புமிகு அரசன் திருதராஷ்டிரனிடமும் அரசாட்சிப் பொறுப்பாளர் பீஷ்மரிடமும் நேரில் அனுமதி பெறுகிறேன். பிறகு இந்த நிச்சயதார்த்தத்தை நாம் முறையாக நிகழ்த்தலாம்," என்று பலராமன் கூறியதைக் கேட்டு இளவரசன் துரியோதனன் பெருமகிழ்ச்சி அடைந்தான். ஆனால் ஜயத்ரதன் அசௌகரியமாகத் தன் கைகளைப் பிசைந்தான். அப்போது பலராமன் கர்ணனைப் பார்த்துவிட்டு, "ஆஹா, அங்க அரசன் . . . கர்ணா, நான் உன்னைக் கண்டு பெருமைப்படுகிறேன். திறமைக்கு எந்தத் தடையும் கிடையாது என்பதை நீ நிரூபித்திருக்கிறாய்," என்று கூறி, கர்ணனின் தோள்களை இறுக்கிப் பிடித்தான்.

கர்ணன் மென்று விழுங்கிவிட்டு, அனைத்து முட்டுக்கட்டைகளையும் எதிர்ப்பதற்குத் தனக்கு உத்வேகமூட்டிய அந்த நபரைப் பார்த்துப் புன்னகைத்தான். பிறகு அவன் சுற்றுமுற்றும் பார்த்தபோது, பளபளப்பான அணிகலன்களை அணிந்து மேடையின்மீது அழகாக வீற்றிருந்த திரௌபதியைக் கண்டான்.

விரைவில் அவர்கள் இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டன. கர்ணனின் இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. அவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்த மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தான் அங்கேயே நிலைகுலைந்து செத்துவிடப் போவதாகக் கர்ணன் நினைத்தான். பிறகு அவன் மீண்டும் பலராமனிடம் திரும்பி, அவன் தன்னிடம் கூறிக் கொண்டிருந்ததில் கவனம் செலுத்த முயற்சித்தான்.

"ஒரு பொருத்தமான வரனை ஏற்பாடு செய்வதற்குரிய நாகரீகமான வழி இதுவல்ல. இது ஒரு பெண்ணின் கண்ணியத்தை இழிவுபடுத்துகிறது. யாதவ இளவரசர்கள் யாரும் இதில் கலந்து கொள்ளக்கூடாது என்பதை உறுதி செய்வதற்காகவே நான் இங்கு வந்தேன். ஒன்று, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் காதல் வயப்பட்டுத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அல்லது, பெரியவர்களாகப் பார்த்து ஒரு பொருத்தமான வாழ்க்கைத் துணையை ஏற்பாடு செய்ய வேண்டும்."

'சுயம்வரம்' என்ற காட்டுமிராண்டித்தனமான வழக்கத்தைப் பற்றி நீளமாக வசைபாடிக் கொண்டிருந்த பலராமனின் பேச்சில் தங்களை மறந்திருந்த கர்ணனும் அவனுடைய நண்பர்களும், கிருஷ்ணன் திரௌபதியை நோக்கிச் சென்றதை கவனிக்கவில்லை. சிகண்டியும் இளவரசன் திருஷ்டத்யும்னனும் பாஞ்சாலத்தின் தலைமைப் புரோகிதனும் அவனுடன் இருந்தனர். கர்ணனும் அவனுடைய நண்பர்களும் பாஞ்சால இளவரசி திரௌபதி அமர்ந்திருந்த மேடையைப் பார்த்திருந்தால், கிருஷ்ணன் அவளை மென்மையாகக் கடிந்து கொண்டிருந்ததையும் திரௌபதியின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியையும் கவனித்திருப்பார்கள். ஆனால் கிருஷ்ணன் கர்ணனைச் சுட்டிக்காட்டி அவளிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்ததை அவர்கள் யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய சகோதரனும் அவளுடைய காதில் எதையோ கிசுகிசுத்தான். திரௌபதி தன் கண்களில் பொங்கிக் கொண்டிருந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முயற்சித்து வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டாள். அப்போது, பிராமணர்கள் குழு ஒன்றைக் கிருஷ்ணன் அவளுக்குச் சுட்டிக்காட்டினான். அவள் அவர்களை நிமிர்ந்து பார்த்தபோது, அவர்களிடையே ஐந்து உயரமான நபர்கள் நின்று கொண்டிருந்ததைக் கண்டாள். ஆனால் அவளுக்கு ஏனோ அவர்கள் புரோகிதர்களைப்போலத் தோன்றவில்லை, மாறாக வீரர்களைப்போலத் தோன்றினர். அந்த ஐவரில் ஒருவன் அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். திரௌபதியின் கண்களும் அவனுடைய கண்களும் சந்தித்துக் கொண்டபோது, அவன்

வெட்கத்துடன் தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான். அவள் எதுவும் கூறுவதற்கு முன்பு, அவளுடைய தந்தையின் வரவை அறிவித்தக் கொம்பொலி முழங்கியது. பாஞ்சால அரசன் துருபதன் தன் அரசியோடு உள்ளே நுழைந்தபோது, அந்த ஒட்டுமொத்த அவையும் எழுந்து நின்றது. உடனடியாக அனைத்து முணுமுணுப்புகளும் அடங்கின. பாஞ்சால அரசன் பேசுவதற்காக எல்லோரும் காத்திருந்தனர்.

"மரியாதைக்குரிய பரதகண்ட அரசர்கள் மற்றும் இளவரசர்களே, உங்களுடைய மதிப்பான வருகையைப் பாஞ்சாலம் பணிவோடு அங்கீகரிக்கிறது. ஒரு பெண் பிறந்த கணத்திலிருந்தே, அவளுடைய பெற்றோர்கள் இந்த மங்களகரமான நாளுக்காகக் காத்திருக்கின்றனர். இன்று, என் பொன்னான மகள், தன் வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிப்பாள். இங்கு கூடியுள்ள அனைத்து இளவரசர்களும் அருமையான வீரர்கள். ஆனால் தன் மகளுடைய நலன் என்று வரும்போது, ஒரு தந்தையின் பேராசைக்கு எந்த எல்லையும் இல்லாமல் போய்விடுகிறது. நம் அனைவரையும் தன் திறமையின் மூலம் மனங்கவரச் செய்கின்ற மிகச் சிறந்த வீரனே என் மகளை வெற்றி கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். போட்டிக்கான விதிமுறைகளை என் பிரதம மந்திரி உங்களுக்கு விளக்குவார்," என்று கூறிவிட்டு, அரசன் துருபதன் ஒரு மகிழ்ச்சியான புன்னகையுடன் தன் அரியணையின்மீது அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து, அவையிலிருந்த மேன்மக்கள் அனைவரும் தத்தம் இருக்கைகளின்மீது அமர்ந்தனர்.

அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளத் துவங்கினர். போட்டி விதிமுறைகளை அறிவிப்பதற்காகப் பாஞ்சாலத்தின் பிரதம மந்திரி எழுந்தபோது, அவையில் அமைதி சூழ்ந்தது. கூரையின்மீது மிக வேகமாக வட்டமடித்துக் கொண்டிருந்த, உலோகத்தால் ஆன ஒரு மீனை அவர் எல்லோருக்கும் சுட்டிக்காட்டினார். விளிம்புவரை நீர் நிரப்பப்பட்ட ஒரு மிகப் பெரிய செப்புப் பாத்திரம் அதற்கு நேர்க்கீழே தரையின்மீது வைக்கப்பட்டிருந்தது. சுற்றிக் கொண்டிருந்த மீனின் லேசான அலை போன்ற பிரதிபலிப்பு அந்த நீரில் தெரிந்தது. ஒவ்வொரு போட்டியாளனும், அந்தப் பாத்திரத்தின்மீது வைக்கப்பட்டிருந்த வில்லை எடுத்து நாணேற்ற வேண்டும். பிறகு, அந்த மீனின் பிரதிபலிப்பை மட்டுமே பார்த்து, அந்த உலோக மீனின் கண்ணைத் தன் அம்பால் தாக்க வேண்டும். இந்த முயற்சிக்கு ஒவ்வொரு போட்டியாளனுக்கும் இரண்டு நிமிடங்களே கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தாங்கள் கலந்து கொண்டிருந்த பிற சுயம்வரங்களின் விதிமுறைகளோடு ஒப்பிட்டபோது, இந்தப் போட்டி மிகவும் எளிமையாக இருந்ததாகப் போட்டியாளர்கள் நினைத்தனர். தன்னுடைய தற்போதைய மனைவியை வெற்றி கொள்வதற்குத் தான் ஒரு புலியை எதிர்த்துச் சண்டையிட்டிருந்ததை ஓர் இளவரசன் தம்பட்டம் அடித்தான். அதோடு ஒப்பிட்டபோது, இந்தச் சவால் அவனுக்கு மிகவும் சாதாரணமானதாக இருந்தது. கர்ணன் தன்னைச் சுற்றி இருந்தவர்களின் முகங்களைப் பார்த்துவிட்டுப் புன்னகைத்தான். அந்தப் போட்டியின் சிரமத்தை அவன் மிகச் சரியாகவும் மிகத் துல்லியமாகவும் கணித்திருந்தான். அவன் திரௌபதியைக் கண்கொட்டாமல் பார்த்தான். அவனுடைய இதயம் படபடத்தது. அவள் ஏன் தன்னைப் பார்க்காமல் இருந்தாள் என்று அவன் யோசித்தான். அவளுடைய அழகான கண்களை ஒருமுறை பார்த்துவிட அவன் துடித்தான். ஆனால் பாஞ்சால இளவரசி தன் பாதங்களை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

பலராமன் பேச எழுந்தபோது, போட்டியாளர்களிடையே கோபமான முணுமுணுப்புகள் எழுந்தன. “மேன்மை பொருந்திய அரசே, நான் கூறுவது மரியாதையற்றதாகத் தெரிந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். ஆனால் உங்கள் மகள் இதைவிடச் சிறந்ததற்குத் தகுதி வாய்ந்தவள். ஏலம் விடப்படுவதற்கு அவள் ஒன்றும் ஒரு பரிசுக் குதிரையல்ல. நாம் இந்த வழக்கத்தை மாற்றுவதற்குரிய நேரம் வந்துவிட்டது. பண்டைய காலங்களில், சுயம்வரங்களில் எந்தப் போட்டியும் இருக்கவில்லை. ஒரு கன்னிப் பெண், தன்னை மணமுடிக்க வந்திருந்தவர்களில் தனக்கு விருப்பமான ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அவனுடைய கழுத்தில் ஒரு மலர்மாலையை அணிவித்தாள். அங்கு அப்பெண்ணின் விருப்பத்தேர்வு மட்டுமே முக்கியமானதாக இருந்தது. ஆனால் இந்தப் போட்டி, அந்தப் பெண்ணை அவமதிக்கும் ஒரு செயலாகும். ஆடுகளையும் மாடுகளையும்போல பேரம் பேசப்படுவதற்கும், விற்கப்படுவதற்கும், வெற்றி கொள்ளப்படுவதற்கும், அல்லது இழக்கப்படுவதற்குமான ஒரு பொருளாக அவள் ஆக்கப்படுவது மிகவும் இழிவான செயலாகும். இளவரசி திரௌபதி தன் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். அவளை மணமுடிப்பதற்கு இங்கு எந்தப் போட்டியையும் நடத்தாதீர்கள்.”

“யாதவத் தலைவரே, உங்கள் பேச்சை நான் மதிக்கிறேன். ஆனால் இது என் மகளின் எதிர்காலம் பற்றியது. மிகச் சிறந்த வீரன் ஒருவன்தான் தன் மகளை மணமுடிக்க வேண்டும் என்று ஒரு தந்தை விரும்புவதில் என்ன தவறு இருக்கிறது? வயதில் அவள் மிகவும்

சிறியவள். அவள் ஓர் அறிவார்ந்த தீர்மானத்தை எடுப்பாள் என்று எதிர்பார்க்க முடியாது. இங்குள்ளவர்களிலேயே மிகவும் வசீகரமான ஒருவனை அவள் தேர்ந்தெடுக்கக்கூடும். அதுதான் இளம்பெண்களின் இயல்பு. நான் என் மகளுக்கு மிகச் சிறந்ததை மட்டுமே விரும்புகிறேன். ஒரு சத்திரியன் என்ற முறையில், ஒரு மாபெரும் வீரன்தான் அவளுடைய கணவனாக வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.” அந்தப் பாஞ்சால அரசன் பலராமனிடம் பணிவோடு பேசினாலும்கூட, அவனுடைய குரலில் இருந்த வெறுப்பை அந்த யாதவத் தலைவன் கவனிக்கத் தவறவில்லை.

“அரசே, அவள் எனக்கும் ஒரு மகளைப் போன்றவள்தான். ஆனால் மிகச் சிறந்த வீரன் மிகச் சிறந்த கணவனாக இருக்க வேண்டியதில்லை. அவளுடைய எதிர்காலத்தின்மீது எனக்கும் அக்கறை இருக்கிறது. தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் ஓர் இளவரசிக்கு இல்லை என்றால், இதை ஏன் ஒரு சுயம்வரம் என்று அழைக்க வேண்டும்? ஆனால் நான் எல்லோருடைய நேரத்தையும் வீணாக்க விரும்பவில்லை. ஒருவேளை, நான் இந்த நவீனப் போக்குகளோடு ஒத்துப் போக முடியாத ஒரு பழமைவாதியாக இருக்கலாம். ஆனால் யாதவர்களின் தலைவன் என்ற முறையில், என் மக்களுக்காக என்னால் பேச முடியும். நாங்கள் இந்த வழக்கத்தை எதிர்க்கிறோம். எந்த யாதவனும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது என்று நான் உத்தரவிடுகிறேன்,” என்று கூறிவிட்டு பலராமன் அமர்ந்தபோது, அவனுடைய முகம் ஒரு கல்லில் வடிக்கப்பட்டிருந்ததைப்போல இறுக்கமாக இருந்தது. அந்த அவையிலிருந்த இளம் யாதவர்களிடமிருந்து ஒரு முனகல் எழுந்தது. தங்கள் தலைவர் நாளுக்கு நாள் மிகவும் எரிச்சலூட்டுபவராக ஆகிக் கொண்டிருந்ததாக அவர்கள் நினைத்தனர்.

கர்ணன் தன் அறிவுரையாளரின் வார்த்தைகளை அரைகுறையாகத்தான் கேட்டான். துரியோதனன் அவனிடம் ஏதோ கூறினான், ஆனால் அதுவும் அந்தத் தேரோட்டியின் தலைக்குள் நுழையவில்லை. அவனுடைய உதடுகள் வறண்டு போயிருந்தன. இளவரசி தன்னை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும் என்று அவன் பிரார்த்தித்தான். போட்டிக்கான மணி ஒலித்து, போட்டி துவங்கிவிட்டிருந்ததை அறிவித்தபோது, அவன் திடுக்கிட்டு, அவளிடமிருந்து தன் பார்வையை விலக்கினான். அப்போது அவனுடைய கண்கள் கிருஷ்ணனின் கண்களைச் சந்தித்தன. கர்ணன் அந்த யாதவனைப் பார்த்துப் புன்னகைத்தான். பதிலுக்குக் கிருஷ்ணனும் புன்னகைத்தான். ‘அவனுக்கு இப்போது என்மீது அவ்வளவு வெறுப்பு இல்லை போலும்,’ என்று நினைத்தக் கர்ணன், தன்

பழைய எதிரியின் முகத்தில் வெளிப்படையாகத் தென்பட்ட இணக்கத்தைக் கண்டு நிம்மதியடைந்தான்.

போட்டி மிகத் தீவிரமாகத் தொடங்கியது. போட்டியாளர்கள் குலுக்கல் முறையில் வரிசையாக அழைக்கப்பட்டனர். பார்ப்பதற்கு எளிதானதாகத் தோன்றிய இப்போட்டி உண்மையிலேயே மிகவும் கடினமானது என்பதை முதலில் முயற்சித்த ஒருசில இளவரசர்கள் விரைவில் கண்டுகொண்டனர். அங்கு வைக்கப்பட்டிருந்த வில் மிகவும் கனமாக இருந்தது. ஒரு போட்டியாளன் ஒருவேளை அதைச் சமாளித்துத் தூக்கிவிட்டால், அந்த அசைவால் ஏற்பட்ட நீரலைகள், நீரில் தெரிந்த மீனின் லேசான பிரதிபலிப்பைக் கலைத்தன. அதன் பிறகு அவர்களால் தங்கள் இலக்கைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவராகத் தோல்வியைத் தழுவினர். மிகக் குறைவான நேரமே கொடுக்கப்பட்டதாகப் பல கோப முணுமுணுப்புகளும் எதிர்ப்புகளும் எழுந்தன. நேரம் செல்லச் செல்ல, பல முகங்கள் சோகத்தில் ஆழ்ந்தன. ஒருசிலரால் அந்த வில்லைத் தூக்க முடிந்தது, ஆனால் அவர்களால் தங்கள் இலக்கைப் பார்க்க முடியாமல் போனது அவர்களை தர்மசங்கடத்திற்கு ஆளாக்கியது. மகத அரசன் ஜராசந்தன் எய்த அம்பு, அந்த உலோக மீனின் கண்ணை மயிரிழையில் தவறவிட்டது. அவன் அந்தப் போட்டியில் வெல்ல விரும்பவில்லை என்பது அவனுடைய புன்னகையிலிருந்து வெளிப்படையாகத் தெரிந்தது. அவன் பலராமனைக் கடந்து சென்றபோது, அவனைப் பார்த்துக் கண்ணடித்தான்.

மகத நாட்டு அரசன் தன் இருக்கைக்குத் திரும்பியபோது, அவனுடைய பழைய நண்பனான பலராமன், "அரசே, அந்த இளவரசியின் தந்தையாக இருப்பதற்குரிய வயதைக் கொண்டவர் நீங்கள்," என்று கூறினான்.

"நான் இங்கு வெற்றி பெறுவதற்காக வரவில்லை. என் ராஜ்யத்திற்கு என் கடமையைச் செய்வதற்காக மட்டுமே நான் இங்கு வந்திருக்கிறேன்," என்று அரசன் ஜராசந்தன் பதிலளித்தான்.

இப்போது கர்ணனின் முறை வந்தது. அசுவத்தாமன் அவனுக்கு வாழ்த்துக் கூறியது அவனுக்குக் கேட்கவில்லை. துரியோதன் தன் தோள்மீது கை வைத்ததை அவன் உணர்ந்தான். ஒருவிதமான மயக்கத்தில் இருந்தவன்போல, அவன் அந்த வில்லை நோக்கி நடந்தான். 'கடவுளே, ஒரே ஒரு முறை அவளை என்னைப் பார்க்க வை,' என்று கர்ணன் பிரார்த்தித்தான். ஆனால் திரௌபதி தன் பாதங்களைப் பார்த்தபடி ஒரு சிலையைப்போல அமர்ந்திருந்தாள். மீண்டும் மணி ஒலித்தது. கர்ணனுக்குள் இருந்த வீரன், அவனுக்குள் இருந்த

காதலனைத் தூரத் தள்ளினான். கர்ணன் அந்த வில்லை நிதானமாகச் சுற்றி வந்து, அதன் தோற்றத்தை வைத்து அதன் எடையை அனுமானித்தான். பிறகு, மேலே சுற்றிக் கொண்டிருந்த மீனைப் பார்த்தான். இறுதியில், அவன் அந்த வில்லிலிருந்து ஒரு குறிப்பிட்டக் கோணத்தில் நின்று கொண்டு, அந்த நீரில் எந்தச் சிற்றலைகளையும் ஏற்படுத்தாமல், அந்த வில்லைச் சுலபமாக எடுத்தான். கர்ணன் அந்த வில்லை நாணேற்றித் தன் தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்தபோது, அவையிலிருந்த மேன்மக்கள் அனைவரும் பதற்றத்தோடு காத்திருந்தனர். நீரில் தெரிந்த தன் இலக்கின் பிரதிபலிப்பைவிட்டுத் தன் கண்களை அகற்றாமல், அவன் தன் அம்பை எடுத்து நாணை இழுத்துப் பிடித்தான்.

"நான் ஒரு தேரோட்டியைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்," என்று திரௌபதி ஒரு மென்மையான, கிசுகிசுப்பான குரலில் கூறினாள். அமைதியுடனும் எதிர்பார்ப்புடனும் இருந்த அந்த அரங்கில் அது ஓர் இடி முழக்கத்தைப்போலக் கேட்டது.

அங்கு ஓர் அதிர்ச்சிகரமான மௌனம் நிலவியது. ஆனால் திரௌபதி கூறியது கர்ணனின் காதுகளில் விழவில்லை. அவனுடைய ஒவ்வோர் உயிரணுவும் அந்த இலக்கின்மீதே கவனமாக இருந்தது. அவன் எய்த அம்பு, மேலே சுற்றிக் கொண்டிருந்த உலோக மீனின் கண்ணை ஓர் உரத்தச் சத்தத்துடன் தாக்கியது. ஒரு பலத்தக் கைதட்டல் அங்கு நிலவிய மௌனத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிந்தது. கர்ணன் வெற்றிக் களிப்போடு திரௌபதியைப் பார்த்தான். ஆனால் அவள் தன் தலையை நிமிர்த்தவே இல்லை. இளவரசன் திருஷ்டத்யும்னன் கர்ணனிடம் சென்று, தன் இருக்கைக்குத் திரும்புமாறு அவனிடம் கூறினான். கர்ணன் குழப்பமடைந்தான். தான் தன் இலக்கைத் தாக்கியிருக்கவில்லையா என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

ஒரு புரோகிதன் கோபமாகக் கத்தினான். "தேரோட்டியே, இளவரசி கூறியது உனக்குக் கேட்கவில்லையா? இளவரசி ஒரு தாழ்ந்த சாதிக்காரனை மணந்து கொள்ள விரும்பவில்லை. உன் தேரோட்டி வேலைக்குத் திரும்பிப் போ."

தன் கண்களில் கோபமும் அவமானமும் கொழுந்துவிட்டு எரிய, கர்ணன், தலை குனிந்து அமர்ந்திருந்த திரௌபதியைப் பார்த்தான். 'என்னை இப்படி ஏளனம் செய்வதற்கு உனக்கு என்ன துணிச்சல்? எனக்கு அழைப்பு வந்ததால் நான் இங்கு வந்தேன். உன்னை நியாயமான முறையில் வெற்றி கொண்டுள்ளேன்,' என்று அவன் அவளைப் பார்த்துக் கத்த விரும்பினான். அப்போது அவள் தன்

தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவளுடைய கரிய கண்களில் தென்பட்ட சோகம் தன் சோகத்தைவிட மிக ஆழமாக இருந்ததைக் கர்ணன் கண்டான். அவளுக்கு அருகே, கிருஷ்ணன் தன் வழக்கமான புன்னகையுடன் நின்றதை அவன் பார்த்தபோது, தான் தோற்றுவிட்டிருந்ததைக் கர்ணன் அறிந்தான்.

துரியோதனனும் அசுவத்தாமனும் தங்கள் வாள்களை உருவிக் கொண்டு அந்த அவைக்கு நடுவில் விரைந்தனர். ஜயத்ரதனும் துச்சாதனனும் அவர்களுக்குப் பின்னால் வந்தனர். சிகண்டியும் திருஷ்டத்யும்னனும் அவர்களைத் தடுப்பதற்காக ஓடினர். விரைவில் பல இளவரசர்கள் அந்த அவைக்கு நடுவே ஓடிச் சென்றனர். சிலர் கர்ணனுக்கு ஆதரவாகவும் மற்றவர்கள் அவனுக்கு எதிரணியுடனும் சேர்ந்து கொண்டனர். அது ஒரு பெரிய சண்டையாக மாறியது. சண்டையை நிறுத்திவிட்டு அமைதி காக்குமாறு சில பெரியவர்கள் ஓடி வந்தனர். இறுதியில், பலராமனும் ஜராசந்தனும் தளபதி இரணியதனுசுவும் துணிச்சலாக அவையின் நடுவே ஓடிச் சென்று, சண்டையிட்டுக் கொண்டிருந்த வீரர்களை விலக்கித் தள்ளினர். அந்த வீரர்கள் அமைதியடைந்திருந்தபோது, பலர் பலத்தக் காயங்களுடன் தரையின்மீது விழுந்து கிடந்தனர், ஒருசிலர் இறந்து கிடந்தனர். மனமுடைந்து போன கர்ணன் அந்த அவையிலிருந்து வெளியேறியதை யாரும் கவனிக்கவில்லை.

கர்ணனின் உலகம் சுக்குநூறாகியிருந்தது. அவன் தன் ரதத்திற்குள் குதித்து, தன் குதிரைகளைச் சாட்டையால் விளாசினான். அந்த ரதம் கம்பில்ய நகரின் மும்முரமான வீதிகள் வழியாக விரைந்தது. மக்கள் பயத்தில் ஒதுங்கி வழிவிட்டனர். தன் இதயத்தில் கோபமும் வெறுப்பும் கொந்தளிக்க, அந்தத் தேரோட்டியின் மகன் ஒரு கடுமையான முகத்துடன் அமர்ந்திருந்தான். 'சாதியைத் தவிர வேறு எதுவும் இங்கு முக்கியமல்ல. இப்படி அவமானப்படுத்தப்படுவதற்கு நான் என்ன தவறு செய்தேன்?' என்று அவன் வெறுப்போடு நினைத்தான். அவன் அஸ்தினாபுரத்தை நோக்கி விரைந்தபோது, தன் கோபத்தை அந்தப் பாவப்பட்டக் குதிரைகள்மீது கொட்டித் தீர்த்தான். நெடுஞ்சாலை வழியாக அவன் ஆபத்தான வேகத்தில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு பிச்சைக்காரனும் ஒரு நாயும் திடீரென்று அந்தச் சாலையின் நடுவே தோன்றினர். கர்ணன் மோசமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டே, தன் குதிரையின் கடிவாளங்களை அவசர அவசரமாக இழுத்துப் பிடித்தான். அவனுடைய ரதம் அந்தப் பிச்சைக்காரனுக்கும் அவனுடைய நாய்க்கும் வெகு அருகில் சென்று ஆபத்தான முறையில் நின்றது. அந்தப் பிச்சைக்காரனை ஏறிட்டுப் பார்த்தக் கணத்தில், கர்ணன் தன் வாயை

மூடிக் கொண்டான். தன் உயிரைக் காப்பாற்றியிருந்த அதே பிச்சைக்காரன்தான் இவன் என்பதைக் கர்ணன் கண்டுகொண்டான்.

"ஐயா, உங்களுக்கு என்னை நினைவிருக்கிறதா? நான் சிறுவனாக இருந்தபோது நீங்கள் எனக்கு உணவு கொடுத்தீர்கள். ஜரன் . . . நான் ஜரன் . . . உங்களுக்கு நினைவிருக்கிறதா? என் கிருஷ்ணன் எப்படி உங்களை ஆசீர்வதித்திருக்கிறான் என்று பாருங்கள். இப்போது நீங்கள் ஓர் அரசர். நல்ல இளவரசரான துரியோதனன் உங்கள் நண்பர். கடந்த முறை நாம் சந்தித்தபோது, பட்டமளிப்பு நாளன்று நீங்கள் அவருடைய ரதத்தில் அவரோடு சென்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஐயா, உங்களுக்கு நினைவிருக்கிறதா?"

மகிழ்ச்சியான முகத்துடன் இருந்த ஜரனையும், வாலாட்டிக் கொண்டிருந்த அந்த நாயையும் கர்ணன் பார்த்தான். அவனுடைய கோபம் முழுதும் கரைந்தோடியது. 'என் உயிரைக் காப்பாற்றியதில் தான் வகித்தப் பங்கைப் பற்றி அந்தப் பிச்சைக்காரன் பேசிக் கொண்டிருக்கவில்லை; பரசுராமனின் மாணவனும் மாபெரும் தர்மவீரனுமான நான் ஒரு கோழையைப்போல ஒரு மரத்தில் ஒளிந்து கொண்டிருந்தபோது எனக்காகத் தான் வாங்கியிருந்த அடிகளைப் பற்றியும் அவன் பேசிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பல வருடங்களுக்கு முன்பு என் தாயார் தனக்குக் கொடுத்திருந்த ஒரு கிண்ணம் சோற்றுக்காக அவன் நன்றியுடன் இருக்கிறான்,' என்று கர்ணன் நினைத்தான்.

"ஐயா, நீங்கள் ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்? நீங்கள் ஓர் அரசராக ஆகியுள்ளீர்கள். ஆனாலும் நீங்கள் ஏன் இன்னும் சோகமாக இருக்கிறீர்கள்?"

"ஜரா, உன் கடவுளை என்னால் எங்கு கண்டுபிடிக்க முடியுமோ, அப்படிப்பட்ட ஓர் இடத்திற்கு என்னை அழைத்துச் செல். என் வாழ்வின் பொருளை நான் முற்றிலுமாக இழந்துவிட்டேன்," என்று கூறிவிட்டு, கர்ணன் அந்தப் பிச்சைக்காரனை நோக்கித் தன் கையை நீட்டினான்.

"என்னுடன் வாருங்கள்," என்று கூறிவிட்டு, ஜரன் அந்தச் சாலையின் ஓரமாக ஓடத் துவங்கினான்.

ரதத்திற்குள் ஏறுமாறு கர்ணன் அவனைப் பார்த்துக் கத்தினான், ஆனால் ஜரன் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருந்தான். அவனுடைய நாய் அவன் பின்னால் ஓடியது. கர்ணன் தன் ரதத்தில் அவர்களைப் பின்தொடர்ந்தான். விரைவில், தொழுநோயாளிகளும் நோயுற்றவர்களும் இருந்த ஒரு பகுதியை அவர்கள் வந்தடைந்தனர். கர்ணனுக்கு எல்லாம் தெளிவாகியது. இந்நாட்டின் ஒவ்வொரு புல்லுக்கும் தான் எவ்வாறு கடமைப்பட்டிருந்தோம் என்பது பற்றி

பலராமன் கூறிய வார்த்தைகள் அவன் மனத்திற்குள் வேகமாகப் பாய்ந்தோடி வந்தன. நாள் முழுதும் யாசித்துத் தான் சம்பாதித்திருந்த சில்லறைகளைத் தன்னைவிட அதிக துரதிர்ஷ்டமான நிலைமையில் இருந்தவர்களுடன் ஜரன் பகிர்ந்து கொண்டிருந்ததைக் கண்ட கர்ணன் குற்றவுணர்வு கொண்டான். 'ஒரு சாதாரணத் தேரோட்டியான என்னை என் நண்பன் ஓர் அரசனாக ஆக்கினான். என்னிடம் எல்லாம் இருந்தும்கூட, சாதியைத் தாண்டி எதையும் சிந்திக்க முடியாத ஒரு பெண் என்னை உதாசீனப்படுத்திவிட்டாள் என்பதற்காக நான் வெறுப்போடு இருக்கிறேன்,' என்று அவன் நினைத்தான்.

ஏதோ ஒன்றால் உந்தப்பட்டவன்போல, கர்ணன் உடனடியாகத் தன் அணிகலன்களை ஒவ்வொன்றாகக் கழற்றி அங்கிருந்தவர்களுக்குக் கொடுக்கத் துவங்கினான். பிறகு அவன் தன் தங்க ரதத்திலிருந்து பொன்னிழைகளை உரித்து, அவற்றையும் தானமாகக் கொடுத்தான். விரைவில், இன்னும் அதிகமாகக் கேட்டு ஒரு பெரிய கூட்டம் அவனை மொய்த்தது. அவன் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்தான். ஜரன் ஒரு மூலையில் அமர்ந்து, கிருஷ்ணனின் அன்பைப் பற்றிப் பாடினான். பொழுது சாய்ந்தபோது, அந்தத் தேரோட்டியிடமிருந்து பெற்றுச் செல்வதற்காக இன்னும் ஏராளமான மக்கள் அங்கு வந்தனர். கர்ணனின் நண்பர்களும் அங்கு வந்தனர். பாஞ்சாலத்துடன் சண்டையிட்டு திரௌபதியை மீண்டும் வெற்றி கொள்ளுமாறு கூறி, அசுவத்தாமன் கர்ணனை இழுத்துச் செல்ல முயன்றான். ஆனால் கர்ணன் அந்த இடத்தைவிட்டு அசைய மறுத்தான். துரியோதனன் தன் நண்பனைப் புரிந்து கொண்டான். அமைதியாக இருக்கும்படி அவன் அசுவத்தாமனிடம் கூறிவிட்டு, தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு அவனுக்குச் சைகை காட்டினான். பிறகு அவன் கர்ணனை நோக்கி நடந்தான்.

கர்ணனிடம் அவனுடைய கவச உடையும், காதணிகளும், அவன் அணிந்திருந்த ஆடைகளும் மட்டுமே எஞ்சியிருந்தபோது, துரியோதனன் தன் விலையுயர்ந்த அட்டிகைகளைக் கழற்றித் தன் நண்பனிடம் கொடுத்தான். கர்ணன் அவற்றையும் தானம் கொடுத்தான். கிருஷ்ணன்மீது ராதை கொண்டிருந்த காதலை ஜரன் உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தான். கர்ணன் எவ்வளவு முயன்றும்கூட, 'நான் ஒரு தேரோட்டியைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்,' என்ற திரௌபதியின் வார்த்தைகள் அவனுடைய காயப்பட்ட இதயத்தைவிட்டு அகல மறுத்தன.

* * *

இறந்து போனவர்களையும் காயப்பட்டவர்களையும் காவலாளிகள்

அந்த அவையிலிருந்து அகற்றியபோது, பலராமன் எழுந்து பாஞ்சால அரசனைப் பார்த்து, "அரசே, இப்படிப்பட்டத் தரக்குறைவான நாடகம் கண்டிக்கத்தக்கது. எந்தக் காரணமும் இன்றி, ஒரு துணிச்சலான வீரனான அங்க அரசனை நீங்கள் இழிவுபடுத்தியிருக்கிறீர்கள். அவனுக்கு உங்கள் மகளை மணமுடித்துக் கொடுக்க உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால், நீங்கள் முதலில் அவனுக்கு அழைப்பு விடுத்திருக்கவே கூடாது," என்று கூறினான்.

கிருஷ்ணன் எழுந்து நின்று, ஓர் ஆறுதலான புன்னகையுடன், "அண்ணா, கர்ணனுக்கு எதிராகவோ அல்லது அவனுடைய சாதிக்கு எதிராகவோ பாஞ்சால அரசர் ஒரு வார்த்தைகூடப் பேசியிருக்கவில்லை. ஒரு தாழ்ந்த சாதிக்காரனை மணமுடிக்கத் தனக்கு விருப்பமில்லை என்று இளவரசியே கூறினாள். தங்கள் கணவன்மார்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் பெண்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று நீங்கள்தானே சிறிது நேரத்திற்கு முன்பு கூறினீர்கள்? பாஞ்சால இளவரசிக்கு மட்டும் அந்த சுதந்திரத்தை நாம் ஏன் மறுக்க வேண்டும்?" என்று கேட்டான்.

பலராமன் தன் சகோதரனைக் கடுஞ்சீற்றத்துடன் முறைத்தான். தன் சொந்த வார்த்தைகளைக் கொண்டே கிருஷ்ணன் தன்னை மடக்கியிருந்ததை பலராமன் அறிந்தான். எப்பேர்ப்பட்டக் கெட்டிக்காரன்!

ஜராசந்தன் தன் நண்பன் பலராமனின் தோளை ஆறுதலாகத் தொட்டு, "பலராமா, இதை விட்டுத் தள்ளு," என்று அவனுடைய காதில் கிசுகிசுத்தான். பலராமன் தன் நண்பனின் கண்களுக்குள் ஒரு கணம் பார்த்துவிட்டு, பிறகு சோகமாகத் தலையசைத்தான். ஜராசந்தன் அவனுடைய தோளை அழுத்தி, அவனைக் கட்டாயப்படுத்தி உட்கார வைத்தான். கிருஷ்ணன் திருஷ்டத்யும்னனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அங்கு கூடியிருந்த அனைத்து இளவரசர்களும் தங்கள் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்த்தனர். ஆனால் யாரும் அந்தப் போட்டியில் வெற்றி பெறவில்லை. எந்தவித முடிவும் இன்றி அந்த நாள் மெல்ல மெல்லத் தேய்ந்தபோது, பாஞ்சால அரசனின் கவலை அதிகரித்துக் கொண்டே போனது. கர்ணன் மட்டுமே திரௌபதியை முறையாக வெற்றி கொண்டிருந்தும்கூட, கிருஷ்ணனின் அறிவுரைப்படி, திரௌபதி அவனுடைய சாதியைக் காரணம் காட்டி அவனை நிராகரித்திருந்தாள். இப்போது, அங்கிருந்த சத்திரியர்கள் யாராலும் அந்த வில்லைத் தூக்கக்கூட முடியவில்லை. பாஞ்சால அரசன் தன் பார்வையால் கிருஷ்ணனிடம் கெஞ்சினான். கிருஷ்ணன்

புன்னகைத்துவிட்டு, அமைதியாக இருக்கும்படி அவனுக்குச் சைகை காட்டினான். இறுதியில், எல்லா இளவரசர்களும் போட்டியில் கலந்து கொண்டு தோற்றுப் போன பிறகு, வலிமையான தசைகளுடன்கூடிய ஓர் உயரமான பிராமணன் அந்த அரங்கின் நடுவில் வந்து நின்று, அரசனைப் பார்த்துத் தலை வணங்கினான். அந்த அவையிலிருந்த புரோகிதர்களிடமிருந்து பலத்தக் கைதட்டல்கள் எழுந்தன. ஆனால் மற்றவர்கள் அந்த பிராமணன்மீது அவ்வளவு அக்கறை காட்டவில்லை. மனம் தளர்ந்து போயிருந்த அரசன், தன் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்ப்பதற்கு அந்த பிராமணனுக்கு அனுமதியளித்தான். அந்த பிராமணன் கிருஷ்ணனைப் பார்த்தான். கிருஷ்ணன் தன் கை முஷ்டியை மடக்கித் தன் இதயத்தின்மீது வைத்துக் காட்டித் தலையசைத்தான்.

அந்த பிராமணன் அந்த வில்லை நோக்கி நடந்து சென்று, அதைக் கூர்ந்து ஆய்வு செய்தான். ஒருசில மணிநேரத்திற்கு முன்பு அந்தப் போட்டியை வென்றிருந்த அந்தத் தேரோட்டி செய்ததைப்போலவே, அவனும் அதை நேர்த்தியாக எடுத்தான். அவையில் இருந்த முணுமுணுப்புகள் திடீரென்று அடங்கின. ஒருசிலர் எழுந்து நின்று அக்காட்சியை உற்றுக் கவனித்தனர். அந்த அவை முழுதும் எதிர்பார்ப்புடன்கூடிய பதற்றம் நிலவியது. பரதகண்டத்தின் மாபெரும் இளவரசர்கள் அனைவரும் தோற்றிருந்தபோது, இந்த பிராமணன் இப்போட்டியை வென்றுவிடுவானா என்ற கேள்வி எல்லோருடைய மனத்திலும் முளைத்தது. நேரத்தைத் தன் முரசுக் கொட்டுகளால் கணக்கு வைத்துக் கொண்டிருந்த முரசுக்காரன், கடைசி மூன்று கொட்டுகளை அடைந்தான். பார்வையாளர்கள் பதற்றத்தில் உறைந்து போய் அமர்ந்திருந்தனர். தன் கையில் வில்லுடன் நின்ற அந்த பிராமணனின் உடலின் ஒவ்வோர் அங்குலமும் எச்சரிக்கையாக இருந்தது, அவனுடைய மனம் அந்த இலக்கை மட்டுமே பார்த்தது. அந்த பிராமணன் எய்த அம்பு, கடைசி முரசுக் கொட்டலுக்குக் கண நேரத்திற்கு முன்பு, வட்டமிட்டுக் கொண்டிருந்த அந்த மீனை நோக்கிப் பறந்தது. கடைசி முறையாக முரசு கொட்டப்பட்டதுபோது, துல்லியமாக அக்கணத்தில், அந்த அம்பு தன் இலக்கைத் தாக்கியது. இதைக் கண்டு ஒட்டுமொத்த அவையும் அதிர்ச்சியடைந்தது. சாத்தியமற்ற ஒன்றை அந்த பிராமணன் நிகழ்த்திக் காட்டியிருந்தான்.

கிருஷ்ணன் வேகமாக அவையின் நடுப்பகுதிக்கு ஓடிச் சென்று, அந்த வெற்றியாளனைக் கட்டியணைத்தான். பிறகு அவன் அரசனை நோக்கித் திரும்பி, பெருமிதத்துடன், "அரசே, இவன் பாண்டவ இளவரசன் அர்ச்சுனன். திரௌபதியின் கணவனாக இருப்பதற்குத் தகுதியான ஒரே ஆண்மகன்," என்று அறிவித்தான்.

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து அதிர்ச்சி கலந்த ஒரு மௌனம் நிலவியது. வாரனவதத்தில் ஏற்பட்ட நெருப்பில் பாண்டவர்கள் இறந்து போயிருந்ததாக அவர்கள் நம்பியிருந்தனர். பாண்டவச் சகோதரர்கள் ஒவ்வொருவராக அர்ச்சுனனையும், பிறகு கிருஷ்ணனையும் ஆரத் தழுவினர். அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த அவையினரிடம் கிருஷ்ணன் தொடர்ந்து பேசியபோது, பாண்டவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து நின்றனர்.

"கெடு நோக்குக் கொண்ட துரியோதனனும் அவனுடைய தோழர்களும் மூட்டிய நெருப்பில் பாண்டவர்கள் இறந்துவிடவில்லை என்பது இப்போது உங்களுக்குக் கண்கூடாகத் தெரிகிறது, இல்லையா? பாண்டவர்கள் சாதாரணப் பிறவிகள் அல்ல, அவர்கள் தெய்வீகப் பிறவிகள். அதனால்தான் அவர்களால் எந்தத் தீங்கும் நேராமல் தப்பிக்க முடிந்தது. இவன் தர்மன், மரண தேவனின் மகன். இவன் பீமன், வாயு பகவானின் மகன். இவன் அர்ச்சுனன், கடவுள்களின் அரசனான இந்திரனின் மகன். இவர்கள் நகுலன் மற்றும் சகாதேவன். தெய்வீகப் பிறவிகளான அசுவினி சகோதரர்களின் மகன்கள்." அவையோரின் முகபாவங்களைப் பார்ப்பதற்காகக் கிருஷ்ணன் தன் பேச்சைச் சற்று நிறுத்தினான். அவன் தன் சகோதரனைப் பார்ப்பதைத் தவிர்த்தான். தனக்கும் தன் சகோதரனுக்கும் இடையே பல கருத்து வேறுபாடுகளும் அதிகாரப் போட்டிகளும் இருந்தாலும்கூட, பலராமன் தன்னை நேசித்தான் என்பதைக் கிருஷ்ணன் அறிந்திருந்தான். யாதவத் தலைவன் பலராமன் சூதுவாது அறியாதவனாகவும், மென்மையான இதயம் கொண்டவனாகவும் இருந்தான். அவனை சாந்தப்படுத்துவதற்குப் பின்னர் தனக்கு ஏகப்பட்ட நேரம் இருந்ததைக் கிருஷ்ணன் அறிந்திருந்தான். ஆனால் ஜராசந்தனின் உதடுகளில் தவழ்ந்த பரிகாசப் புன்னகையும், அவனுடைய வேடுவத் தளபதியின் ஊடுருவும் பார்வையும் அவனுக்குக் கவலையளித்தன. மற்றவர்கள் தான் கூறியதை ஏற்றுக் கொண்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. கிருஷ்ணன் தன் பேச்சுத் திறமையின்மீதும், மற்றவர்களைத் தன் கருத்தை ஒப்புக் கொள்ள வைப்பதற்கான தன் திறனின்மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்தான்.

கிருஷ்ணன் மேலும் இவ்வாறு தொடர்ந்தான். "பாண்டவ இளவரசர்கள் அரசன் பாண்டுவின் உண்மையான மகன்கள் அல்ல என்பதால் அஸ்தினாபுரத்தின்மீது அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று கௌரவர்களைப் போன்ற தீயவர்கள் கூறும் விவாதங்களைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். பாண்டு ஆண்மைத்தன்மையற்றவனாக இருந்தான் என்று கௌரவர்கள்

கூறுகின்றனர். இதைவிடப் பெரிய பொய் வேறு எதுவும் இல்லை. பாண்டு இளைஞனாக இருந்தபோது, ஒரு பிராமணனை இழிவு செய்து தவறிழைத்தான். எனவே, அவன் ஒரு பெண்ணுடன் உடல்ரீதியான உறவு கொண்டால் அவன் இறந்துவிடுவான் என்று அந்த பிராமணன் அவனுக்குச் சாபமிட்டான். அதுதான் உண்மை. இந்நாட்டிலுள்ள கற்றறிந்தவர்கள் அனைவருக்கும் இது தெரியும். நம்முடைய புனித நூல்களில்படி, தன் கணவனின் அனுமதியுடன், ஒரு பிராமணன் மூலமாகவோ அல்லது கடவுள் மூலமாகவோ எந்தவொரு பெண்ணும் ஆண்குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படிப்பட்டப் பெண்கள் தூய்மையானவர்கள் என்று நாம் கருதுகிறோம். இந்த அதிர்ஷ்டசாலிப் பெண்களுக்குக் குழந்தை வரம் கொடுக்கின்ற பிராமணர்களுக்கும் கடவுள்களுக்கும் தங்கள் வாரிசுகள்மீது எந்த உரிமையோ அல்லது அவர்கள் குறித்து எந்தப் பொறுப்போ இல்லை என்றும் கற்றறிந்தவர்கள் கூறுகின்றனர். இப்பெண்களின் கணவன்மார்களும் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். இத்தகைய தெய்வீக உறவுகளின் மூலம் பிறக்கின்ற ஆண்குழந்தைகள் அக்கணவன்மார்களின் வாரிசுகளாகவே கருதப்படுகின்றனர். பாண்டவர்கள் வேசி மகன்கள் என்ற அவதூறான பேச்சைப் பரப்ப துரியோதனன் விரும்புகிறான். அதிகாரம் குறித்த அவனுடைய பேராசை, அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனாக ஆவதற்குரிய உரிமை தர்மனுக்குத்தான் இருக்கிறதேயன்றித் தனக்கு அல்ல என்ற உண்மையை அவனுடைய பார்வையிலிருந்து மறைத்துள்ளது. அகங்காரம் அவனுடைய கண்களை மறைத்துள்ளது. அவன் தர்மத்தை மதிப்பதில்லை.

“என் சகோதர்கள் மற்றும் சகோதரிகளே, இப்படிப்பட்டத் தீயவர்களின் தாக்குதலின்கீழ் தர்மம் தேய்ந்து கொண்டிருக்கிறது. துரியோதனன் ஒரு தேரோட்டியை அங்க அரசனாக ஆக்கியுள்ளான். இப்படிப்பட்டச் செயல்களை நாம் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். ஏனெனில், நம் பாரம்பரியம் இவ்வாறு வெளிப்படையாக அத்துமீறப்படுவது, நம்முடைய மாபெரும் நாகரீகத்தின் அழிவுக்கு மட்டுமே வழி வகுக்கும். அந்தத் தேரோட்டி தன் அம்பால் அந்த இலக்கைத் துல்லியமாகத் தாக்கியது வெறும் அதிர்ஷ்டத்தால் மட்டுமே. நான் ஒரு கணம் பதறினேன், ஆனால் திரௌபதி அறிவுப்பூர்வமாக அவனை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டாள். தன் காதல் தன் அறிவை வெற்றி கொள்ள அனுமதிக்காததன் மூலம் அவள் வெளிப்படுத்தியுள்ள துணிச்சலை நான் பாராட்டுகிறேன். கர்ணனால் மனம் கவரப்படுவது மிகவும் சுலபம். அவன் வசீகரமானவன். அவன்

ஓரளவுக்குத் திறமை படைத்த வில்லாளனும்கூட. ஆனால் அவனுக்கு இருக்கும் இந்தக் கொஞ்சநஞ்ச அறிவும், மாபெரும் குருவான பரசுராமரை ஏமாற்றியதன் மூலம் அவன் பெற்றதுதான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒரு கதாநாயகனைப்போலத் தோன்றுகின்ற அவன், ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஏமாற்றுக்காரனே தவிர வேறு யாருமில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு மாபெரும் மனிதரிடம் பொய்யுரைத்தவன் அவன். இந்த நயவஞ்சகனை ஒரு பிராமணன் என்று நினைத்து, பரசுராமர் அவனைத் தன் சொந்த மகனைப்போல நேசித்தார். ஆனால் உண்மை அவருக்குத் தெரிய வந்தபோது, அவன் தன் சுயநினைவை இழந்தார். இப்போதுகூட அவர் தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பின் சக்திவாய்ந்த அரசர்கள் இந்தப் பித்தலாட்டக்காரனை வலை வீசித் தேடிக் கொண்டிருக்கின்றனர்."

அந்தத் தேரோட்டியின்மீது அவையோருக்கு இருந்த கொஞ்சநஞ்ச அனுதாபத்தையும் வெற்றிகரமாக அழித்துவிட்ட மகிழ்ச்சியில் கிருஷ்ணன் தன் பேச்சைச் சற்று நிறுத்தினான். ஜராசந்தனோ அல்லது பலராமனோ இதற்கு முரணாக எதையும் கூறுவதற்கு முன்பாக, அவன் திரௌபதியின் அருகே சென்றான். அவள் இன்னும் நிலத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவள் முகத்திலிருந்து மகிழ்ச்சி முற்றிலும் துடைக்கப்பட்டிருந்தது. "இளவரசி திரௌபதி, நாங்கள் உன்னைக் கண்டு பெருமைப்படுகிறோம். அர்ச்சுனனைவிடச் சிறந்த ஒருவன் உனக்குக் கணவனாகக் கிடைத்திருக்க மாட்டான். நீ எப்போதும் மகிழ்ச்சியாக இருந்து, நூறு மகன்களைப் பெற்றெடுக்க வேண்டும் என்று உன்னை மனதார வாழ்த்துகிறேன்," என்று கிருஷ்ணன் கூறினான்.

புன்னகைத்துக் கொண்டிருந்த கிருஷ்ணனை ஜராசந்தன் பார்த்துவிட்டு ஏளனச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான். பிறகு பலராமனிடம் ஒரு மென்மையான குரலில், "இந்தப் போலி நாடகத்தை இனிமேலும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது. நான் இங்கிருந்து புறப்படுகிறேன்," என்று கூறி, தன் நண்பனின் கைகளைப் பிடித்துத் தன் இதயத்தின் அருகே வைத்தான். பிறகு அவன் தன் விசுவாசமான தளபதி பின்தொடர, அந்த அவையிலிருந்து வெளியேறினான். அவர்களுக்குப் பிறகு பலராமனும் அங்கிருந்து வெளியேறினான். மரியாதைக்குரிய மகத நாட்டு அரசன் தன் யானையின்மீது ஏறிக் கொண்டிருந்தபோது, பலராமன் அவனை நெருங்கினான். "பலராமா, இந்த நாடு சீரழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. உன்னுடைய சாதுரியமான சகோதரனுக்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன், " என்று

ஜராசந்தன் கூறினான்.

அப்போது, அரசவையில் புரோகிதர்கள் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்த சத்தம் அவர்களுக்குக் கேட்டது. பாரம்பரியச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின்படி திரௌபதி அர்ச்சுனனுக்கு முறையாக மணமுடித்துக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தன் சகோதரன் கிருஷ்ணனைப் பற்றிய மோசமான அபிப்பிராயத்துடன் ஜராசந்தன் அங்கிருந்து செல்ல அனுமதிக்க விரும்பாத பலராமன், "அவன் பழமைவாதக் கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கிறான். மக்கள் தர்மத்தின் பாதையிலிருந்து விலகிச் சென்றுள்ளதாக அவன் நினைக்கிறான். வித்தியாசமாகச் சிந்திக்கின்ற மனிதர்களிடமிருந்து இந்த உலகத்தைக் காக்கும் பொறுப்பை அவன் தன்மீது சுமத்திக் கொண்டுள்ளான், அவ்வளவுதான். தர்மத்தை மீட்டெடுப்பதற்காகத் தான் இவ்வுலகிற்கு வந்திருப்பதாக அவன் கூறுகிறான்," என்று அந்த வயோதிகனிடம் கூறினான்.

"பலராமா, உன் சகோதரன் ஆபத்தானவனாக ஆகிவிடாமல் இருக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். அவன் வெறுமனே ஒரு பழமைவாதி என்று நான் நம்ப வேண்டும் என்று நீ நினைக்கிறாய். அவன் அப்படியே இருக்கட்டும். ஆனால் பழமைவாதத்தின்மீது அவன் கொண்டுள்ள வெறி, மக்களை இரண்டு எதிரெதிரான குழுக்களாகப் பிரித்துவிடும் என்று நான் பயப்படுகிறேன். முழுமையான தர்மம் என்று எதுவும் கிடையாது என்ற ஞானத்தை அவன் பெறவில்லை என்றால், ஒரு கொடூரமான போர் நிச்சயமாக நிகழும் என்பதை நீ உறுதியாக நம்பலாம். ஒட்டுமொத்த பரதகண்டமும் அந்தச் சுழலுக்குள் உறிஞ்சப்பட்டுவிடும். அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தில், வெற்றியாளர்கள் என்று யாரும் இருக்க மாட்டார்கள். ஒருசில புரோகிதர்கள் மட்டுமே அதில் தப்பிப் பிழைத்துச் செழிப்புறுவார்கள்," என்று ஜராசந்தன் வருத்தத்தோடு கூறினான். தன் வசீகரமான சகோதரன்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த பலராமனின் மனத்தைப் புண்படுத்திவிடாமல் இருப்பதற்காக, கிருஷ்ணனைப் பற்றி அதிகக் கடுமையான விமர்சிப்பதற்குத் தனக்குள் எழுந்த ஆவேசத் தூண்டுதலை ஜராசந்தன் அடக்கிக் கொண்டான்.

"கிருஷ்ணனுக்குப் புரிய வைக்க நான் முயற்சிக்கிறேன். ஆனால் நீங்கள் கூறுவதுபோல, இன்றைய காலகட்டம் நிலையற்றதாக உள்ளது. பரதகண்டத்தின் தீய அரசர்களில் நீங்களும் ஒருவர் என்று நம்புவதற்குப் பல மக்கள் தயாராக உள்ளனர். தவறாக வழிநடத்தப்பட்டுள்ள நாகர்களைப் போன்ற இளைஞர்கள் குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். உங்களை ஒழித்துக் கட்டுவதில் அவர்கள் பெருமகிழ்ச்சி

கொள்வர்,” என்று பலராமன் தன் நண்பனிடம் கூறிவிட்டு, அவனுடைய அகங்காரம் பிடித்த வேடுவத் தளபதியை ஓரக்கண்ணால் பார்த்தான்.

“பலராமா, நான் என் எழுபது வருடங்களையும் ஒரு கோழையாக வாழவில்லை. என்னைத் தீர்த்துக் கட்ட விரும்புவது தட்சகன் அல்ல என்று எனக்கு உறுதியாகத் தெரியும். நீ கவலைப்படாதே. என் தளபதி இரணியதனுசுவைப் போன்ற விசுவாசமான நபர்கள் என்னிடம் இருக்கும்வரை, நாகர்கள் குறித்தோ அல்லது நமக்கு முக்தி அளிப்பதற்காக இந்தப் பரிதாபகரமான பூமியில் வலம் வருகின்ற ‘அவதாரங்கள்’ குறித்தோ எனக்கு எந்த பயமும் இல்லை. சரி, நான் இப்போது உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். விரைவில் உன்னை எங்கள் நாட்டில் சந்திக்க நான் ஆவலாக இருக்கிறேன்,” என்று கூறிவிட்டு, மகத அரசன் தன் மாவுத்தனுக்குக் கட்டளையிட்டான். அவன் அமர்ந்திருந்த யானை மெல்ல அசைந்து முன்னோக்கி அடியெடுத்து வைத்தது. தளபதி இரணியதனுசு பலராமனைப் பார்த்துத் தலை வணங்கினான். அந்த யாதவத் தலைவனும் அதே அளவு மரியாதையுடன் பதிலுக்குத் தலை வணங்கினான்.

ஜராசந்தனும் அவனுடைய குழுவினரும் பாஞ்சாலத்தைவிட்டுப் புறப்பட்டுச் செல்வதைப் பார்த்தபடி நின்ற பலராமன், அந்த வேடுவத் தளபதியைப் போன்ற ஒருவன் அவனுக்குத் துணையாக இருக்கும்வரை, ஜராசந்தன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்று நினைத்தான். ஜராசந்தன் பலராமனின் மிகப் பெரிய எதிரியாக இருந்திருந்த ஒரு காலகட்டமும் இருந்தது. கிருஷ்ணனும் பலராமனும் சேர்ந்து, அப்போது மதுராவின் அரசனாக இருந்த தங்கள் மாமன் கம்சனைக் கொன்றிருந்தபோது, அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காக, அவனுடைய மாமனாரான ஜராசந்தன் மதுராவை முற்றுகையிட்டிருந்தான். அவை மிகவும் கடினமான நாட்களாக இருந்தன. பலராமன் இளைஞனாகவும் முன்பின் யோசிக்காமல் நடந்து கொள்பவனாகவும் இருந்தான். ஜராசந்தனும் அவனுடைய வேடுவத் தளபதியும் பதினேழு முறை மதுராவின்மீது தாக்குதல் நடத்தி, அதன் தலைநகரைச் சூறையாடினர். ஜராசந்தனை எப்படியாவது ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்று கிருஷ்ணன் விரும்பினான். மகத நாட்டின் தலைநகரான பாடலிபுத்திரத்திற்கு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி ஜராசந்தனிடமிருந்து வந்த ஓர் அழைப்பின் வடிவில் கிருஷ்ணனுக்கு அதற்கான வாய்ப்பு வந்தது. அவன் அந்தப் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது ஜராசந்தனைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டான். இந்தச் சூழ்ச்சியில் பலராமனையும் அவன் சேர்த்துக் கொண்டான். ஆனால் மகத நாட்டில் பலராமன் பார்த்த

விஷயங்கள் அவனுடைய கண்ணோட்டத்திலும் அவனுடைய வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தின. தன் மனம் முழுக்கப் பகைமையுணர்வோடு அவன் பாடலிபுத்திரத்திற்கு வந்திருந்தான், ஆனால் ஜராசந்தன் குறித்து ஆழ்ந்த மரியாதையுடன் அவன் அங்கிருந்து திரும்பிச் சென்றான். கிருஷ்ணனின் சூழ்ச்சித் திட்டத்தை நிராகரித்த அவன், யாதவகுல மக்களை பரதகண்டத்தின் மேற்குக் கடற்கரைக்குக் குடிபெயர்த்து, துவாரகை எனும் ஒரு கனவு நகரத்தை உருவாக்குவதென்று தீர்மானித்தான். இது கிருஷ்ணனுக்குக் கடுஞ்சீற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் அன்றிலிருந்து ஜராசந்தன் பலராமனின் அன்புக்குரிய நண்பர்களில் ஒருவனாக ஆனான்.

* * *

விரைவில், மகிழ்ச்சியில் திளைத்த ஒரு கூட்டம், புதுமண இணையர் அமர்ந்திருந்த பல்லக்கைச் சுமந்து கொண்டு பாண்டவர்களின் வீட்டை நோக்கிச் சென்றது. அவர்கள் அர்ச்சுனனையும் திரௌபதியையும் சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சியாக ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சென்றனர். திரௌபதியின் கண்களில் தெரிந்த சோகத்தை பலராமன் பார்த்தான். ‘மகளே, கர்ணனுடைய சாதியைக் காரணம் காட்டி நீ அவனை நிராகரித்ததன் மூலம் நீ எதை இழந்துள்ளாய் என்று உனக்குத் தெரியாது. அர்ச்சுனன் உன்னை மகிழ்ச்சியாக வைக்கட்டும்,’ என்று அவன் தன் மனத்தில் பிரார்த்தித்தான். அந்தப் பல்லக்கு அங்கிருந்து விரைந்தது. அந்தத் திருமண ஊர்வலம் குந்தியின் வீட்டு வாசலை அடைந்தபோது, வரலாற்றையே மாற்றியமைத்த ஒரு தீர்மானத்தைக் குந்தி எடுப்பாள் என்பதை அப்போது அவன் அறியவில்லை.

22

திருமணம்

அந்தத் திருமண ஊர்வலம் பாண்டவர்களின் எளிமையான குடிலை அடைந்தபோது, குந்தி அதிர்ச்சியில் சிலையாக நின்றாள். ஒரு காட்டுப் பகுதியில் அமைந்திருந்த அக்குடில் சிறியதாகவும் சுத்தமாகவும் இருந்தது. அதே போன்ற குடில்களில் பல முனிவர்களும் பிராமணர்களும் அங்கு வாழ்ந்து வந்தனர். தங்கள் தாயார் தங்கள் குடிலின் கதவைத் திறந்து தங்களை உள்ளே வரவேற்பதற்காக அந்தப் பாண்டவச் சகோதரர்கள் பொறுமையாகக் காத்திருந்தனர். பெண்களுக்கே உரிய உள்ளுணர்வு, பதற்றத்தில் உடல் நடுங்க நின்று கொண்டிருந்த திரௌபதியை அசௌகரியமாக உணரச் செய்தது. அர்ச்சுனனின் நான்கு சகோதரர்களும் அவளுக்குப் பின்னால் நின்றனர். அவர்கள் கண்களில் இருந்த வெப்பத்தை அவள் தன் முதுகில் உணர்ந்தாள். தங்களுடைய வெற்றிகரமான சகோதரன் குறித்து அவர்கள் நால்வரும் கொண்டிருந்த பொறாமையையும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

“அம்மா, அர்ச்சுனன் உங்களுக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறான்,” என்று தர்மன் கூறினான்.

கதவில் இருந்த கீறலின் ஊடாக இரண்டு கண்கள் தன்னைத் துளைத்துக் கொண்டிருந்ததை திரௌபதியால் பார்க்க முடிந்தது. இறுதியில், இருட்டாக இருந்த அந்தக் குடிலுக்குள்ளிருந்து, “அர்ச்சுனா, நீ கொண்டு வந்துள்ள பரிசு எதுவாக இருந்தாலும் அதை உன்

சகோதரர்களோடு பகிர்ந்து கொள்,” என்று குந்தி கூறினாள்.

‘உன் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள் என்றா அவள் கூறினாள்?’ என்று தனக்குள் கேட்டுக் கொண்ட திரௌபதி அதிர்ச்சியடைந்தாள். தன் மாமியார் தன் மகனுக்குக் கொடுத்தக் கட்டளை அவளுக்குக் கடுங்கோபத்தை ஏற்படுத்தியது. குந்தியின் ஒவ்வொரு வார்த்தையும் அவளுடைய ஆன்மாவை ஓர் ஊசியால் துளைத்துக் கொண்டிருந்ததுபோல இருந்தது. இனி வரவிருந்த வருடங்களில், அந்த வார்த்தைகள் தனக்குள் ஏற்படுத்திய நடுக்கத்தையும், பாண்டவர்களின் கண்களில் இருந்த காம வெறியையும் திரௌபதி அடிக்கடி நினைத்துப் பார்க்கவிருந்தாள். தன்னை வெற்றி கொண்ட தலைசிறந்த வில்லாளனும் மிகச் சிறந்த வீரனுமான தன் கணவன் நிராதரவாக நின்று கொண்டிருந்ததைக் கண்ட அவள் வேதனையில் உள்ளுக்குள் குமுறினாள்.

“அம்மா, அது சரியான செயலா?” என்று அர்ச்சுனன் கேட்டான். அவனுடைய குரல், தனக்குப் பிரியமான ஒரு விளையாட்டுப் பொருளைத் தன் சகோதர சகோதரிகள் தன்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டிருந்ததால் கோபமடைந்திருந்த ஒரு குழந்தையின் குரலைப்போல ஒலித்தது.

திரௌபதி கடுஞ்சினத்தால் கொதித்தாள். அவர்கள் அனைவரும் அவளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர், ஆனால் தன் எதிர்காலத்தைப் பற்றித் தீர்மானிப்பதற்கு அவளுக்கு எந்த உரிமையும் இருக்கவில்லை. இதயமும் உணர்ச்சிகளும் அற்ற ஓர் உயிரற்றப் பொருளைப்போல அவர்கள் அவளைக் கருதினர். ஆனாலும், முதலில் தான் பாஞ்சாலத்தின் ஓர் இளவரசி என்பதையும், ஓர் அரசனின் மகள் என்பதையும் தனக்குத் தானே நினைவுபடுத்திக் கொண்டு, அவள் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்தி நின்றாள்.

குந்தி தன் குடிலின் கதவைத் திறந்து வெளியே வந்து, “கிருஷ்ணா,” என்று அழைத்துத் தன் விருந்தினனை வரவேற்றாள். பிறகு, “கர்மா என்றால் என்ன, தர்மம் என்றால் என்ன என்று அர்ச்சுனனுக்கு விளக்கிக் கூறு. அவன் ஏன் இவ்வளவு கோபப்படுகிறான்? துரியோதனனை வீழ்த்துவதற்குத் தாங்கள் ஐந்து சகோதரர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாதா? இந்தப் பெண்ணுக்காக அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதை நான் விரும்பவில்லை. ஒப்பிடற்கரிய என் ஐந்து மகன்களும் தன்னைப் பகிர்ந்து கொள்வது குறித்து அவள் பெருமிதம் கொள்ள வேண்டும். நானும் என் காலத்தில் அதைச் செய்திருக்கிறேன். என் கணவனின் இரண்டாவது மனைவி மாதுரியும் அதைச் செய்திருக்கிறாள். இவர்கள்

ஐவரும் அவ்வாறுதான் பிறந்தனர் என்று அவளிடம் கூறு," என்று கூறினாள்.

"உங்கள் மகன்கள் அனைவருடனும் படுக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் என்ன ஒரு வேசியா?" என்று திரௌபதி கடுஞ்சீற்றத்தில் வெடித்தாள். இப்படிப்பட்ட அவமானத்தைத் தாங்கிக் கொண்டு இனிமேலும அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை. "அர்ச்சுனா, நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? நீங்கள் என்னை வெற்றி கொண்டீர்கள். இப்போது நான் உங்கள் மனைவி. உங்கள் சகோதரர்களுடன் நான் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு சத்திரியன் இல்லையா?"

கிருஷ்ணன் முன்னால் வந்து, "அத்தை, இதை நான் கையாள்கிறேன்," என்று கூறிவிட்டு, திரௌபதியின் கையைப் பிடித்து அவளை அவர்களிடமிருந்து தனியாக அழைத்துச் சென்றான். அர்ச்சுனன் அவர்கள் இருவரையும் பின்தொடர்ந்தான்.

தர்மன் ஒரு பாயை எடுத்துத் தரையின்மீது விரித்து, அதன்மீது அமர்ந்து நிம்மதியுடன் தன் கண்களை மூடிக் கொண்டான். பீமன் சாப்பாட்டைத் தேடுவதற்காக சமையலறைக்குள் மாயமாய் மறைந்தான். நகுலனும் சகாதேவனும் திரௌபதியைப் பார்த்து வாயைப் பிளந்து நின்றனர். குந்தி தன் மூத்த மகனின் அமைதி தவழ்ந்த முகத்தைப் பார்த்தாள். ஆபத்தும் சவாலும் நிறைந்த ஒரு காரியத்தை அவள் தன் கையில் எடுத்திருந்தாள். கிருஷ்ணன் அந்தக் கோபக்காரப் பெண்ணை சமாதானப்படுத்தி ஒப்புக் கொள்ள வைப்பான் என்று அவள் நம்பினாள். காந்தாரியின் மகன்கள் தங்கள் ஒற்றுமையால் வலிமையானவர்களாக இருந்தனர். இப்பெண் இந்த வீட்டில் ஐந்து இளைஞர்களுடன் வாழ்ந்தால், எல்லோருக்கும் பிரச்சனையையும் விரக்தியையும் உருவாக்கும் அளவுக்கு இவள் மிகவும் அழகாக இருந்ததாகக் குந்தி நினைத்தாள். தன் மகன்கள் அனைவருமே இவள்மீது ரகசியமாக மோகம் கொண்டிருந்ததை அவள் அறிந்தாள்.

கிருஷ்ணன் திரும்பி வந்தபோது, விஷயத்தை அவன் ஒருவழியாகச் சமாளித்திருந்ததுபோலத் தோன்றியது. திரௌபதியின் பார்வை நிலத்தை நோக்கியே இருந்தது. அவள் நாணத்தால் அப்படி நடந்து கொண்டாளா அல்லது எரிச்சலில் அப்படி நடந்து கொண்டாளா என்பதைக் குந்தியால் கண்டுபிடிக்க முடியவில்லை. எது எப்படியோ, பரதகண்டத்தில் வாழ்ந்த மற்ற அனைத்துப் மனைவியரையும்போலவே, திரௌபதி தன் தலைவிதியை ஏற்றுக் கொண்டதுபோலத் தோன்றியது. தன் தாயையும் தன் சகோதரர்களையும் தன் மனைவியையும்

எதிர்கொள்ளத் தயாராக இல்லாத அர்ச்சுனன், வேறு எங்கோ வெறித்துப் பார்த்தான். கிருஷ்ணன் தர்மனின் தோளின்மீது தட்டியபோது, அவன் தன் தியானத்தைவிட்டு வெளியே வந்தான். கிருஷ்ணன் குந்தியைப் பார்த்து, "நிலைமை அவளுக்குப் புரிகிறது. இத்தகைய ஏற்பாட்டிற்கு நம் புனித நூல்களில் அனுமதி இருப்பது உட்பட, எல்லாவற்றையும் நான் அவளுக்கு விளக்கியிருக்கிறேன். அர்ச்சுனன் இதை ஏற்றுக் கொள்வானா என்று அவள் அவனிடம் கேட்டாள். நான் என்ன தீர்மானித்தேனோ, அதைப் பின்பற்றத் தான் தயாராக இருந்ததாக அர்ச்சுனன் கூறினான். எனவே, எது சரி என்பதை நான் அவனுக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். எல்லாம் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. முதலில் தர்மன் அவளை ஒரு வருடம் தன்னோடு வைத்துக் கொள்வான். அதற்கடுத்த வருடம் பீமனுடன் அவள் இருப்பாள். மூன்றாவது வருடம் அர்ச்சுனன் அவளை வைத்திருப்பான். நான்காவது மற்றும் ஐந்தாவது வருடங்கள் அந்த இரட்டையர்களுக்கு. இந்தச் சுழற்சி இதே வழியில் தொடரும். ஒவ்வொரு சுழற்சிக்கும் இடையே ஒரு மாதம் இடைவெளி இருக்கும். இவ்வழியில், திரௌபதி ஐந்து சகோதரர்களுக்கும் மனைவியாக இருப்பாள்," என்று கூறினான்.

தர்மன் தன் பூரிப்பை மறைப்பதற்காக வேகமாகத் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டு நிலத்தைப் பார்த்தான். மூத்தவன் என்ற முறையில், திரௌபதி முதலில் அவனுடன் இருப்பாள். தர்மன் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா, தியானம் மற்றும் பிரார்த்தனையின் சக்தி ஆயுதங்களைக் கையாள்வதில் உள்ள திறமையைவிட அதிக சக்தி வாய்ந்தது. அர்ச்சுனன் அவளை வெற்றி கொண்டான், ஆனால் அவனுக்குத் தன் கடமை என்னவென்று தெரியும். எங்கள் ஐவரில் யார் எதை வென்றாலும் அதை நாங்கள் எங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாததல்ல," என்று கூறிவிட்டு, திரௌபதியை நோக்கி நடந்தான். "இனி நீ கவலைப்படாதே. உன்னை எங்கள் ஒவ்வொருவருக்கும் மணமுடிப்பதற்காகத் திருமணச் சடங்குகள் உடனடியாக நடத்தப்படும். நீ இப்போது எங்களுடையவள். மரணம் எங்கள் அனைவரையும் தழுவும்வரை நாங்கள் உன்னைப் பாதுகாப்போம்," என்று அவன் அவளிடம் கூறினான்.

"ஆனால் அர்ச்சுனன்தான் என் கணவர். உங்கள் சொந்தச் சகோதரன் . . ." திரௌபதியால் தொடர்ந்து பேச முடியவில்லை. அவள் அர்ச்சுனனைக் கெஞ்சுவதுபோலப் பார்த்தாள். அவன் வாய் திறந்து பேச வேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் பேராற்றல் வாய்ந்த அந்த வீரன், அவளுடைய கண்களைச் சந்திக்கத் துணிவின்றி, வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டான். அவன் இதயம் சொல்லொணா

அவமானத்தால் நிரம்பி வழிந்தது. ஆனால் அவன் தர்மத்தைதானே பின்பற்றிக் கொண்டிருந்தான்?

திரௌபதி தன் மாமியாரைப் பார்த்து, "அம்மா, உங்களுக்கு இத்தனை மகன்கள் மட்டும்தானா, அல்லது இன்னும் வேறு யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

"ஏன் . . . நீ ஏனம்மா இப்படிக் கேட்கிறாய்?" என்று கேட்டக் குந்தியின் குரலில் வழக்கமான அதிகாரம் காணாமல் போயிருந்தது. தன் முன்னே பெருமிதத்தோடு நின்று கொண்டிருந்த இளம் இளவரசியைப் பார்க்க முடியாமல் குந்தி தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

"நான் ஏன் கேட்கிறேன் என்றால், என்றேனும் ஒருநாள் நான் காலையில் கண்விழிக்கும்போது, நான் ஆறு பேருக்கு மனைவி என்று திடீரென்று எனக்குத் தெரிய வந்து நான் அதிர்ச்சியடையாமல் இருப்பதற்காகத்தான். அதுவும் என் தர்மம்தான் என்று நிரூபிப்பதற்குப் போதுமான அதிகாரப்பூர்வமான அனுமதிகள் புனித நூல்களில் இருக்கும் என்று நம்புகிறேன், சரிதானே?"

தர்மன் தன் தாயின் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. வேதச் சடங்குகளின்படி திருமணங்களை நடத்துவதற்குப் புரோகிதர்களை அழைத்து வருவதற்காக சகாதேவன் ஓடினான். மற்றவர்கள் தர்மனைப் பின்தொடர்ந்து குடிலுக்குள் சென்றனர். அர்ச்சுனன் மட்டும் வெளியே நின்றான்.

* * *

சிறிது நேரத்திற்குப் பிறகு, திரௌபதி ஒரு மரக்கட்டையைப்போலத் தன் படுக்கையின்மீது கிடந்தாள். தன்னை வெற்றி கொண்டிருந்த மாபெரும் வீரனான அர்ச்சுனனைப் பற்றியோ, அல்லது தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த தர்மனைப் பற்றியோ பற்றி அவள் நினைக்கவில்லை. கண்டிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட ஒரு நாயைப்போலத் தலைகுனிந்து தயங்கியபடியே தன் தந்தையின் ஆடம்பரமான அரசவையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த ஒருவனுடைய உருவம்தான் அவளுடைய கண்களில் நிரம்பியிருந்தது. தன் மனமும் உடலும் அத்துமீறப்பட்டிருந்ததாகவும் தோற்கடிக்கப்பட்டிருந்ததாகவும் மரத்துப் போயிருந்ததாகவும் அவள் உணர்ந்தாள். 'நான் ஒரு தேரோட்டியைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்,' என்ற அவளுடைய சொந்த வார்த்தைகள், காதைச் செவிடாக்கும் மௌனத்தில், இடைவிடாமல் அவளைப் பார்த்துத் திருப்பிக் கத்தி அவளைத் துன்புறுத்தின.

* * *

அர்ச்சுனன் தன்னைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த மின்மினிப் பூச்சிகளைப் பார்த்தபடி வருத்தத்தோடு மௌனமாக அமர்ந்திருந்தான். பாண்டவர்களின் திருமணங்களைக் கொண்டாடுவதற்காக நூறு பிராமணர்களுக்கு உணவளிக்க மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளால் அங்கிருந்த குடில்களில் பல நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. கிருஷ்ணன் தன் நண்பன் அர்ச்சுனனின் பக்கத்தில் வந்து அமர்ந்து, தன் புல்லாங்குழலை எடுத்து வாசிக்கத் துவங்கினான். விரைவில், ஒரு மாயாஜால உலகம் அவர்களை ஆட்கொண்டது. மனத்தை மயங்கச் செய்த அந்தப் புல்லாங்குழலிசை அர்ச்சுனனின் காயப்பட்ட ஆன்மாவிற்கு மருந்திட்டது. வானின் கருநிற மேகங்களுக்குப் பின்னாலிருந்து ஒரு பிறை நிலா எட்டிப் பார்த்து, பூமியை வெள்ளி ஒளியால் குளிப்பாட்டியது. எங்கோ அசைந்தாடிக் கொண்டிருந்த மரம் ஒன்றிலிருந்து வந்த ஒரு வானம்பாடியின் இனிமையான இசை, கிருஷ்ணனின் தேன்மதுர இசையோடு சேர்ந்து கொண்டது. அர்ச்சுனன் தன் கண்களை மூடி அந்த இசையில் தன்னைத் தொலைத்தான்.

அந்த இசை, அங்கு சூழ்ந்திருந்த பனிமூட்டத்திற்குள் மெல்ல மெல்லக் கரைந்து தேய்ந்தபோது, கிருஷ்ணன் நன் நண்பனிடம் ஒரு மென்மையான குரலில், "யாரோ ஒருத்தி உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள் . . . அவள் உன்னைப் பெரிதும் நேசிக்கிறாள். நாம் இன்றிரவே துவாரகைக்குப் புறப்படலாம்," என்று கூறினான். அர்ச்சுனன் தன் மயக்கத்திலிருந்து மெல்ல வெளிவந்து, கேள்வி கேட்கும் விதத்தில் தன் புருவங்களை உயர்த்திக் கிருஷ்ணனைப் பார்த்தான். "அர்ச்சுனா, திரௌபதியை மறந்துவிடு. அரசியல் காரணங்களுக்காக நீ அவளை மணமுடித்தாய். பாஞ்சால இளவரசியை மணந்து கொண்டதன் மூலம், பாண்டவர்கள் துரியோதனனுக்குச் சவால்விடும் அளவுக்கு வலிமையானவர்களாக ஆகியுள்ளனர். இப்போது காதலுக்கான நேரம் வந்துவிட்டது. நீ என்னோடு துவாரகைக்கு வா. திரௌபதியைவிட அழகான ஓர் இளவரசி உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். அர்ச்சுனா, நீ என்னைப் பின்தொடர்ந்து வந்தால், என் சகோதரி சுபத்திரையின் இதயத்தைக் கொள்ளை கொண்டுவிடலாம்."

"சுபத்திரையா? ஆனால் அவள் துரியோதனனுக்காக நிச்சயிக்கப்பட்டிருக்கிறாள், இல்லையா? என்னால் எப்படி இத்தகைய கீழ்த்தரமான ஒரு செயலைச் செய்ய முடியும்?"

"என் சகோதரியைப் பற்றி மற்ற எவரையும்விட எனக்கு நன்றாகத் தெரியும். அவளுக்கு இப்போது துரியோதனன்மீது எந்தக் காதலும்

இல்லை. அவள் உன்னைப் பெரிதும் நேசிக்கிறாள். துரியோதனன் அந்தத் தேரோட்டியின் மகனை ஓர் அரசனாக்கி உன்னை ஏளனம் செய்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? அன்று எல்லோருடைய கண்களும் அந்த ஆணவக்காரக் கர்ணனின்மீதே இருந்தன, ஆனால் என் சகோதரியின் கண்கள் மட்டும் உன்மீது நிலைத்திருந்தன. அவள் மட்டுமே உனக்காக வருந்தினாள். இளவரசே, அந்தத் தேரோட்டி அன்று உன்னுடைய பெருமையைத் திருடினான், ஆனால் அதைவிட மிகப் பெரிய பொக்கிஷமான என் சகோதரியின் இதயத்தை நீ திருடிவிட்டாய். நண்பனே, அவள் துரியோதனனை மணந்து கொள்ள நான் அனுமதிப்பேன் என்று நீ நினைக்கிறாயா?"

"இத்தகைய மதிப்புக்கேடான ஒரு செயலை நான் எவ்வாறு செய்வேன்? அவள் துரியோதனனுக்கு . . ." அர்ச்சுனன் தன் பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, புன்னகை தவழ்ந்து கொண்டிருந்த கிருஷ்ணனின் முகத்தைப் பார்த்தான். திடீரென்று, கடுஞ்சீற்றம் அவனை ஓர் இடியெனத் தாக்கியது. 'மதிப்பாவது மண்ணாங்கட்டியாவது! தர்மம் என்ற பெயரில் என் சொந்தச் சகோதரனே என் மனைவியை என்னிடமிருந்து திருடியிருக்கிறான். தர்மனால் இதை எனக்குச் செய்ய முடியும் என்றால், இதையே நான் ஏன் துரியோதனனுக்குச் செய்யக்கூடாது?' என்று நினைத்த அர்ச்சுனன், தன் நண்பனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, அவனுடன் கை கோர்த்துக் கொண்டான்.

* * *

கிருஷ்ணனையும் அர்ச்சுனனையும் சுமந்து சென்ற ரதம் துவாரகையை நோக்கி விரைந்தது. வழியில், உணவருந்துவதற்காக அவர்கள் ஓர் உணவு விடுதியின் அருகே தங்கள் ரதத்தை நிறுத்தினர். ஒருசில பயணிகள் ஓரிடத்தில் நெருப்பு மூட்டி அதைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் தாங்கள் வந்த வேலையை முடித்துவிட்டு அங்கிருந்து புறப்படவிருந்த நேரத்தில், ஒரு பக்திப் பாடலைப் பாடிக் கொண்டிருந்த ஓர் அழகான குரல் அர்ச்சுனனின் மனத்தைக் கவர்ந்தது. அதைக் கேட்பதற்காக அவன் அந்த நெருப்பை நோக்கிச் சென்றான். கிருஷ்ணன் பொறுமையின்றித் தன் ரதத்தின் அருகே காத்திருந்தான். அவனுடைய கரிய உருவம் அந்த இரவின் இருளோடு ஒன்றரக் கலந்து, அவனைக் கண்ணுக்குப் புலப்படாதவனாக ஆக்கியது.

மிகக் கொடூரமான தழும்புகளுடன்கூடிய ஒரு முகத்தைக் கொண்ட ஒரு பிச்சைக்காரன் பாடிக் கொண்டே அந்த நெருப்பின் அருகே

நடனமாடிக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பாடலுக்கு ஏற்றவாறு தன் கைகளைத் தட்டிக் கொண்டே ஆடினான். ஒரு நாய் அந்தப் பாடலின் தாளத்திற்கு ஏற்றாற்போலத் தன் வாலை ஆட்டிக் கொண்டு, நட்சத்திரங்கள் தூவப்பட்ட வானத்தைத் தன் பார்வையற்றக் கண்களால் பார்த்தபடி அந்த நெருப்பின் அருகே படுத்துக் கிடந்தது. அனைத்து உயிர்களிடத்திலும் கடவுள் கொண்டுள்ள அன்பைப் பற்றியும், வாழ்வின் ஆசீர்வாதங்கள் குறித்து மனிதன் கொண்டுள்ள நன்றியின்மையைப் பற்றியும் அந்தப் பிச்சைக்காரன் உரத்தக் குரலில் பாடினான். வாழ்வின் ஒவ்வொரு கணமும் கொண்டாடப்படுவதற்கான ஒன்றுதான் என்றும், ஒவ்வொரு சுவாசமும் ஒரு மகிழ்ச்சியான மெல்லிசை என்றும், ஒவ்வொரு செயலும் ஒரு பிரார்த்தனை என்றும், ஒவ்வோர் எண்ணமும் கிருஷ்ணனின் தெய்வீகப் பாதங்களில் ஒரு காணிக்கை என்றும் அவன் பாடினான். அந்தப் பிச்சைக்காரனின் பாடல் ஏன் தன்னை மிகவும் பாதித்தது என்று அர்ச்சுனனால் புரிந்து கொள்ள முடியவில்லை. தான் ஏதோ பாவம் செய்து கொண்டிருந்ததாகவும், ஏதோ தவறு இழைத்துக் கொண்டிருந்ததாகவும் அவன் உணர்ந்தான். ஒருசில இளைஞர்கள் தங்கள் கைகளில் உணவை ஏந்தியபடி அந்த விடுதிக்குள்ளிருந்து வெளியே வந்து, எல்லோருக்கும் அதை வினியோகிக்கத் துவங்கினர். அந்த உணவைப் பெற்றுக் கொண்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள் மற்றும் தீண்டத்தகாதவர்கள். காற்றில் அந்த நெருப்பு சீறி எழுந்தபோது, அங்கிருந்தவர்களில் ஒருவனுடைய முகத்தை அர்ச்சுனன் தெளிவாகப் பார்த்தான். அதைக் கண்டதும் அவன் அதிர்ச்சியடைந்தான். கர்ணன்! அந்தக் குருட்டு நாயுடன் விளையாடிக் கொண்டிருந்தவனையும் அர்ச்சுனன் அடையாளம் கண்டுகொண்டான். அது அசுவத்தாமன். அங்கிருந்தவர்களுக்கு உணவைப் பரிமாறிக் கொண்டிருந்த இளைஞர்கள் வேறு யாருமல்ல — துரியோதனன், துச்சாதனன், மற்றும் ஜயத்ரதன்தான்.

அர்ச்சுனன் திடீரென்று அவமானமாக உணர்ந்தான். இன்று அவனுடைய முதலிரவு. தான் இங்கு இருந்ததைத் தன்னால் எப்படி அவர்களுக்கு விளக்க முடியும் என்று கவலைப்பட்ட அவன், வேகமாகத் தன் ரதத்திற்குத் திரும்பிச் சென்று, அதில் ஏறி அமர்ந்து கொண்டான். கிருஷ்ணன் தன் குதிரைகளைச் சாட்டையால் அடித்தபோது, அர்ச்சுனன் அவனிடம், “அந்தப் பிச்சைக்காரன் உன்னைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். அவனைப் போன்ற ஏழைகளிடத்தில் விசுவாசத்தை ஊக்குவிக்கும் அளவுக்கு நீ உண்மையிலேயே ஒரு கடவுளா?” என்று கேட்டான்.

கிருஷ்ணன் புன்னகைத்துவிட்டுத் தன் ரதத்தை விரைவுபடுத்தினான். தீயவர்கள் என்று கூறப்பட்ட மக்கள் ஏழைகளுடன் இரவைக் கழித்துக் கொண்டிருந்ததைப் பற்றியும், தர்மத்தின் உறைவிடம் என்று கூறப்பட்டத் தன் மூத்தச் சகோதரன் தன்னிடமிருந்து திருடிய தன் மனைவியுடன் அன்றைய இரவைக் கழித்துக் கொண்டிருந்ததைப் பற்றியும் நினைத்துக் குழம்பியவாறு அர்ச்சுனன் மௌனமாகப் பயணித்தான். கடவுளால் மட்டுமே இத்தகைய மர்மங்களுக்கு விடையளிக்க முடியும் என்று அவன் நினைத்துக் கொண்டான். அந்தப் பிச்சைக்காரனின் பாடலும், அவன் அங்கு கண்டிருந்த காட்சியும், அந்தப் பயணம் நெடுகிலும் அர்ச்சுனனைத் துரத்தின.

* * *

தன் வருங்கால மனைவியை அஸ்தினாபுரத்திற்கு அழைத்து வரவிருந்த திருமண ஊர்வலத்தின் வருகைக்காக இளவரசன் துரியோதனன் பொறுமையின்றிக் காத்திருந்தான். பட்டத்து இளவரசனுக்கும் துவாரகை இளவரசி சுபத்திரைக்கும் திருமணம் நடைபெறுவதற்கு இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே மிச்சமிருந்ததால், அரண்மனை பல்வேறு நடவடிக்கைகளால் களை கட்டியிருந்தது. அஸ்தினாபுரத்தின் கொண்டாட்டத்திற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இளவரசி துச்சலைக்கும் சிந்து நாட்டு அரசன் ஜயத்ரதனுக்கும் இடையேயான திருமணமும் அதே நேரத்தில் அதே இடத்தில் நடைபெறவிருந்தது.

அர்ச்சுனன் திரௌபதியை சுயம்வரத்தில் வெற்றி கொண்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் கடந்திருந்தது. பாண்டவச் சகோதரர்கள் ஐவரும் அர்ச்சுனனின் மனைவியைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் என்ற செய்தி எல்லோருக்கும் அதிர்ச்சியளித்தது. ஆனால் மெல்ல மெல்ல அது ஒரு நகைப்பிற்கிடமான விஷயமாக ஆகியது. ஆறு மாதங்களுக்கு முன்பு, துரியோதனனுக்குத் தன் சகோதரியை மணமுடிக்க ஏற்பாடு செய்வதற்காக பலராமன் அஸ்தினாபுரத்திற்கு வந்திருந்தான். கிருஷ்ணன் அவனுடன் வரவில்லை. சுபத்திரை தன் சகோதரன் பலராமனோடு வருவதற்குப் பதிலாக, துவாரகையிலேயே இருந்து கொள்ள விரும்பியிருந்தது குறித்து துரியோதனன் ஏமாற்றமடைந்தான். ஆனால் விஷயங்கள் சென்று கொண்டிருந்த விதம் அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சுபத்திரை அர்ச்சுனன்மீது நேசம் கொள்ளத் துவங்கியிருந்ததாக ஜயத்ரதன் துரியோதனனிடம் எச்சரித்தபோது, அவன் அதை நம்ப மறுத்தான். இருந்தாலும், அர்ச்சுனனின்

நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அவன் தன் ஒற்றர்களை ஏற்பாடு செய்தான். திரௌபதியைத் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து அவன் தலைமறைவாகி இருந்ததாகவும், திரௌபதி தர்மனின் மனைவியாகத் தன் கடமையைச் செய்து கொண்டிருந்ததாகவும், பீமன் தன்னுடைய முறை வருவதற்காக நாட்களை எண்ணிக் கொண்டிருந்ததாகவும் துரியோதனனின் ஒற்றர்கள் அவனிடம் தெரிவித்தனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் கிருஷ்ணனின் ரதத்தில் துவாரகையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்ததை யாரோ பார்த்திருந்ததாக அஸ்தினாபுரத்தில் ஒரு வதந்தி நிலவியது. ஆனால் துவாரகை அரண்மனைக்குக் கிருஷ்ணன் தனியாகத் திரும்பியிருந்தான். யாரும் அங்கு அர்ச்சுனனைப் பார்த்திருக்கவில்லை. அது துரியோதனனின் மனத்தை அமைதிப்படுத்தியது. ஜயத்ரதனின் தகவல்கள் அனைத்தும் தவறு என்று அவன் நினைத்தான்.

யாதவ இளவரசியை இளவரசன் துரியோதனனுக்கு மணமுடிக்க அரசாட்சிப் பொறுப்பாளரான பீஷ்மரும் அரசன் திருதராஷ்டிரனும் தங்கள் சம்மதத்தைக் கொடுத்தவுடன், திருமணத்திற்கு நாள் குறிப்பது பற்றி துரியோதனன் பலராமனிடம் பேசியிருந்தான். ஜயத்ரதனின் எச்சரிக்கையை அவன் தன் மனத்தின் ஆழத்தில் புதைத்துவிட்டான். தன்னுடைய மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவனைத் தன் சகோதரி திருமணம் செய்து கொள்ளவிருந்தது குறித்து அவன் பெரும் மகிழ்ச்சி கொண்டான். இவ்விரு திருமணங்களையும் ஒன்றாக நடத்துவது குறித்த யோசனையை இளவரசன் துரியோதனன்தான் முன்மொழிந்திருந்தான். சிந்து நாட்டிலிருந்து திருமணக் கோஷ்டி ஏற்கனவே வந்துவிட்டிருந்தது. அரண்மனை நெடுகிலும் ஒருவர்மீது ஒருவர் இடித்துக் கொள்ளாமல் செல்வது கடினமாக இருக்கும் அளவுக்கு அங்கு ஏராளமான உறவினர்களும் விருந்தினர்களும் சேவகர்களும் பணியாட்களும் நிரம்பி வழிந்தனர்.

அசுவத்தாமன் துரியோதனனின் அறைக்குள் புயல் வேகத்தில் நுழைந்து அவனுடைய தோள்களைப் பற்றி இழுத்தான். “இளவரசே, உண்மையான காதலைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? இதயத்தில் எழுதப்பட்டுள்ள அன்பு . . . இது போன்ற உளறல்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”

அந்தத் துடுக்குத்தனமான பிராமணனின் முதுகிற்குப் பின்னால் தெரிந்த கர்ணனின் முகம் வெட்கத்தால் சிவந்திருந்ததைக் கண்டு துரியோதனன் ஆச்சரியம் அடைந்தான். “என்ன நிகழ்ந்தது? திரௌபதி கர்ணனைத் தன் ஆறாவது கணவனாக ஏற்றுக் கொள்ள ஒத்துக் கொண்டுவிட்டாளா?” என்று கேட்ட துரியோதனன், கர்ணனின் முகம்

வாடியதைக் கண்டதும், தன் நாக்கைக் கடித்துக் கொண்டான். முந்தைய வருடம் கம்பில்ய நகரத்தில் தனக்கு ஏற்பட்டத் தோல்வியைக் கர்ணன் மறந்திருக்கவில்லை என்று அவன் நினைத்தான்.

அசுவத்தாமன் பெரிதாகச் சிரித்துவிட்டு, "இல்லையில்லை! அந்தப் பேரழிவு இதுவரை நிகழவில்லை. ஆனால் திரௌபதியின் ஆறாவது கணவனாக இருப்பதற்கு நம் நண்பன் நிச்சயமாகத் தயாராக இருப்பான் என்று எனக்கு உறுதியாகத் தெரியும். ஆனால் இது வேறு ஒரு காதல் கதை. இந்தக் கதையில் வரும் கதாநாயகன் தன் காதலி தன்னை ஏமாற்றியதைத் தொடர்ந்து ஒரு துறவியாக ஆகிறான். திரௌபதி கர்ணனைத் திருமணம் செய்து கொள்ள மறுத்தப் பிறகு, அவனைத் தேடி நாம் துருபதனின் அரண்மனையைவிட்டுப் புயலென வெளியேறிய நாள் உனக்கு நினைவிருக்கிறதா? நாம் அவனை எங்கே கண்டுபிடித்தோம் என்பதும் உனக்கு நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

"எல்லோர் முன்னிலையிலும் அவள் என்னை அவமானப்படுத்தினாள். என்னை மணந்து கொள்வதைவிட ஐந்து பேருடன் வாழ்வது அதிகச் சிறப்பானதா? இப்போது அவள்மீது அருவருப்பு மட்டுமே என்னிடம் எஞ்சியிருக்கிறது. ஆனால் அன்றிரவு நீங்கள் என்னை எங்கே கண்டுபிடித்தீர்களோ, அதற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அந்த நோயாளிகள் மற்றும் தீண்டத்தகாதவர்களின் நிலைமையைக் கண்டு நான் உண்மையிலேயே மனம் வருந்தினேன். அவர்களுக்கும் எனக்கும் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை," என்று கர்ணன் வேறு எங்கோ வெறித்தபடி கூறினான்.

அசுவத்தாமன் பெரிதாகப் புன்னகைத்தபடி, கர்ணனைக் கேலி செய்யும் விதத்தில், "ஆமாம், அது ஒரு தன்னிச்சையான பதில்நடவடிக்கை. நாங்கள் உன்னை நிச்சயமாக நம்புகிறோம்," என்று கூறி, கர்ணனுக்கு மேலும் எரிச்சலூட்டினான். ஆனால் கர்ணன் எதுவும் கூறுவதற்கு முன்னால், அசுவத்தாமன் துரியோதனனிடம் திரும்பி, "இளவரசே, அன்றைய காட்சி உனக்கு நினைவிருக்கிறதா? இவனை நாம் சில பிச்சைக்காரர்களுக்கு இடையே கண்டுபிடித்தோம். இவன் தன் பார்வையில் பட்ட அனைத்துப் பண்டங்களையும் வாங்கி அவர்களுக்குக் கொடுத்து, ஒரு பைத்தியக்காரனைப்போலத் தன் பணத்தை செலவழித்துக் கொண்டிருந்தான். நாம் துருபதனின் அரண்மனைக்குத் திரும்பிச் சென்று, திரௌபதியை வலுக்கட்டாயமாகத் தூக்கி வர விரும்பியபோது, இவன் நம்முடன் வர மறுத்தான். அந்த இரவு உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு குருட்டு நாயுடன் இருந்த அந்தப் பிச்சைக்காரன் கிருஷ்ணனைப் பற்றிப் புகழ்ந்து பாடிக் கொண்டே இருந்தான். கர்ணன் தன் கவசத்தையும் காதணிகளையும் தவிர, அங்க

நாட்டிலிருந்து தான் கொண்டு வந்திருந்த அனைத்தையும் அவர்களுக்கு தானமாகக் கொடுத்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு, பிச்சைக்காரர்கள் மட்டுமன்றி, பிராமணர்களும் கர்ணனிடமிருந்து தங்கள் பங்கைப் பெறுவதற்கு வரிசையில் நின்றனர். நாமும் எல்லாவற்றையும் தானம் கொடுக்க வேண்டும் என்று அவன் நம்மைக் கட்டாயப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டான். கொடுமைக்காரன்! இந்த முட்டாள் தன் பைத்தியக்காரத்தனத்திலிருந்து மீள்வதற்குள், நானும் அந்தத் தொழுநோயாளிகளைப்போல ஏழையாகிவிட்டேன். பாஞ்சாலத்தில் ஏற்பட்டத் தோல்விக்கு அவன் அவ்வாறு வினோதமாக நடந்து கொண்டதாக நாம் அப்போது நினைத்தோம். ஆனால் இந்தக் கிறுக்கனுக்கு அது இப்போது ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது."

"முட்டாள்களே! என் நடவடிக்கைகளுக்கும் நான் திரௌபதியைக் குறித்து உணர்ந்த விதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று எத்தனை முறை நான் உங்களிடம் கூற வேண்டும்? உண்மையில், அன்று அவள் என் கண்களைத் திறந்தாள். நான் தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்தவன். நான் ஒரு சத்திரியனாக நடித்துக் கொண்டிருந்தேன். இளவரசன் துரியோதனனின் பெருந்தன்மை மட்டும் இல்லாமல் போயிருந்தால், நான் தொடர்ந்து ஒரு தேரோட்டியாகவே இருந்திருப்பேன். அவள் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தது, நான் யார் என்பதை எனக்கு நினைவுபடுத்தியது. நான் அந்த அவையிலிருந்து வெளியேறி, அந்தப் பிச்சைக்காரகளைப் பார்த்தபோது, என் வாழ்வில் எனக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதங்கள் குறித்து நான் நன்றியுணர்வு கொண்டிருக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். எனக்காகத் தன் ஒட்டுமொத்த ராஜ்யத்தையும் பணயம் வைத்து, சக்திவாய்ந்த எதிரிகளை இளவரசன் துரியோதனனால் தனக்கு எதிராக உருவாக்கிக் கொள்ள முடியும் என்றால், நான் குறைந்தபட்சம் என்னுடைய சொத்துக்களை என்னைவிடக் கீழ்நிலையில் இருந்த மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன்," என்று கூறிய கர்ணன், தன் சொந்த உணர்ச்சிகளைக் கண்டு பயந்தபடி, தன் நண்பர்களின் பார்வையைத் தவிர்த்தான்.

"அசுவத்தாமா, அவன் நம்மைத் திசை திருப்ப முயற்சித்துக் கொண்டிருக்கிறான். நீ துரியோதனனிடம் எதைக் கூறுவதற்காக இங்கே ஓடி வந்தாயோ, முதலில் அதை அவனிடம் கூறு," என்று கூறிய துச்சாதனன் தன் சகோதரனின் அருகில் சென்று அமர்ந்தான்.

"கர்ண முனிவருக்கு ஒரு புதிய காதலி கிடைத்திருக்கிறாள். தன் திருமணத்தை அறிவிப்பதற்கு முன்பு உன் திருமணம் நடைபெறுவதற்காக அவன் காத்துக் கொண்டிருக்கிறான்," என்று

அசுவத்தாமன் பெரிதாகப் புன்னகைத்தபடி கூறினான்.

துரியோதனன் கர்ணனை நோக்கி விரைந்து சென்று, அவனை ஆரத் தழுவி, "நண்பா, யார் அந்த அதிர்ஷ்டக்கார இளவரசி?" என்று கேட்டான்.

கர்ணன் தன் நண்பனின் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான். பிறகு, "அவள் ஓர் இளவரசி அல்ல. அவளும் தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்தவள். அவளுடைய பெயர் விருஷாலி. நான் அங்க நாட்டில் இருக்கும் பெரும்பாலான நாட்களில், இரவில் மாறுவேடத்தில் நகர்வலம் வருவது என் வழக்கம். அப்படிப்பட்ட ஓர் இரவில்தான் நான் அவளைச் சந்தித்தேன். நாங்கள் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்று எங்களுக்கு விதிக்கப்பட்டிருந்து என்று நினைக்கிறேன். அவள் தன் தாயுடன் வாழ்கிறாள். அவளுடைய தந்தை ஓர் அரசாங்க ஊழியராக இருந்து இறந்துவிட்டார். தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டைப் பெறுவதற்காக அவள் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். நம் அதிகாரவர்க்கத்தினரைப் பற்றி நான் கூறி நீ தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. நான் அவளுக்குப் பணத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டு, அவளை அலையவிட்ட ஒருசில நேர்மையற்ற அதிகாரிகளைத் தண்டித்தேன். பிறகு நானும் அவளும் காதல் வயப்பட்டோம். இப்போதுகூட, நான் அங்க நாட்டின் அரசன் என்று அவளுக்குத் தெரியாது. நான் ஒரு குதிரை வியாபாரி என்றும், என் தொழிலின் காரணமாக அரசாங்கத்தில் எனக்குச் சிறிதளவு செல்வாக்கு இருக்கிறது என்றும் அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். உன்னைச் சந்திப்பதற்கு நான் அவளை அழைத்து வந்திருப்பேன், ஆனால் அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனின் முன்னால் வருவது குறித்து அவள் சங்கோஜப்படக்கூடும். நீ என்னுடைய மிகச் சிறந்த நண்பன் என்று நான் பல முறை அவளிடம் கூறியுள்ளபோதிலும், அவள் அதை நம்ப மறுக்கிறாள். அவளைக் கவர்வதற்காக நான் பொய்யாகப் பெருமையடித்துக் கொண்டிருப்பதாக அவள் நினைக்கிறாள்," என்று கூறினான்.

இதைக் கேட்டு எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அசுவத்தாமன் அந்த அறையில் துள்ளல் நடை போட்டுக் கொண்டே கர்ணனைக் கேலி செய்தான். "கர்ணா, நான் அவளைப் பார்க்க ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் அவளைச் சந்திக்கும்போது, சில கதைகளை நான் அவளிடம் கூற வேண்டியுள்ளது . . . கம்பில்ய நகருக்கு அருகே உள்ள திரௌபதி கிணறு . . . அங்க நாட்டு அரசனைப் பாஞ்சால இளவரசி தூக்கியெறிந்த நாளன்று பிச்சைக்காரர்களுக்கு அவன் கொடுத்த விருந்து . . . பார்ப்பதற்கு எப்படி

அவன் ஓர் அறிவு கெட்டக் கழுதையைப்போல இருக்கிறானோ, உண்மையிலேயே தான் அப்படித்தான் என்பதை அவன் நிரூபித்தக் களியாட்டங்கள் பலவற்றையும் நான் அவளிடம் கூறுவேன் . . . ஐயோ!”

கர்ணன் அசுவத்தாமனைத் தரையின்மீது தள்ளி ஓங்கி மிதித்திருந்தான். விரைவில் மற்றவர்களும் அவன்மீது விழுந்து அவனை அடிக்கத் தொடங்கினர். அப்போது அந்த அறைக் கதவு தட்டப்பட்டது. அவர்கள் அனைவரும் அவசர அவசரமாக எழுந்து தங்கள் ஆடைகளையும் தலைமுடியையும் சரிசெய்து கொண்டு, முடிந்த அளவுக்கு மதிப்பாகத் தோற்றமளிக்க முயன்றனர். அப்போது விதுரன் அந்த அறைக்குள் நுழைந்தான். அவர்கள் அனைவரும் அவனுக்கு மரியாதையாகத் தலை வணங்கினர். அந்த அறை அலங்கோலமாகக் கிடந்ததை விதுரன் பார்வையிட்டான். அந்த இளைஞர்களின் முகங்களில் வெளிப்பட்ட தர்மசங்கடமான புன்னகைகளை அவன் அலட்சியப்படுத்திவிட்டு, துரியோதனனின் பக்கம் திரும்பி, அரசாட்சிப் பொறுப்பாளர் உடனடியாக அவனைப் பார்க்க விரும்பியதாக ஒரு தீவிரமான முகத்துடன் கூறினான்.

விதுரனின் குரலின் தொனியைக் கேட்டு இளவரசன் துரியோதனன் உடனடியாக எச்சரிக்கையானான். மிக முக்கியமான விஷயமாக இருந்தால் தவிர, தன் சிற்றப்பா விதுரன் தானே நேரில் வந்திருக்க மாட்டார் என்று அவன் நினைத்தான். தான் மிகவும் நேசித்த யாரோ ஒருவருக்கு ஏதோ மோசமானது நிகழ்ந்திருந்ததாக பயந்த அவன், பதற்றமடைந்தான். அரசவையை அடையும்வரை விதுரன் வேறு எதுவும் பேசவில்லை. பிறகு அவன் துரியோதனனின் தோளை லேசாக அழுத்திவிட்டு, வழக்கம்போல பீஷ்மரின் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டான். பிரகாசமாக ஒளியூட்டப்பட்ட அந்த அறையில், தன் தாயும் தந்தையும் பீஷ்மருக்கு அடுத்து அமர்ந்திருந்ததை அவன் கண்டான். தனக்குப் பரிச்சயமான ஓர் உருவம் அந்த அறையின் நிழல்களில் நின்று கொண்டிருந்ததையும் அவன் கவனித்தான். ஆனால் அந்த நபர் தன்னை நோக்கி வரத் தொடங்கியவரை அவனால் அந்த நபரை அடையாளம் காண முடியவில்லை. பலராமன்! அந்த யாதவத் தலைவன் பெருமளவு மனம் தளர்ந்து காணப்பட்டதால், அவனை அடையாளம் கண்டு கொள்வதற்கு துரியோதனனுக்கு ஒரு கணம் பிடித்தது. கடந்த முறை துரியோதனன் அவனைப் பார்த்திருந்ததிலிருந்து பலராமனுக்கு மிகவும் வயதாகியிருந்ததுபோலத் தெரிந்தது. அந்த யாதவத் தலைவன் தரையின்மீது மண்டியிட்டு அமர்ந்தான். துரியோதனன் மட்டும் அவனுடைய தோள்களைப் பிடித்திருக்காவிட்டால், அவன் நிச்சயமாக இளவரசனின் பாதங்களில் விழுந்திருப்பான். துரியோதனனுக்கு

அதிர்ச்சியில் வார்த்தைகள் வரவில்லை. அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "யாதவத் தலைவரே, நீங்கள் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூறிப் பணிவாகக் குனிந்து தன் குருவின் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

"இளவரசே, என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன். உங்களுக்கும் உங்கள் ராஜ்யத்திற்கும் நான் அவமானத்தைத் தேடிக் கொடுத்துவிட்டேன். நீங்கள் உங்கள் விருப்பம்போல எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்," என்று பலராமன் கூறினான்.

துரியோதனன் குழப்பத்தில் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த ஒட்டுமொத்த அரசவையும் அமைதியாக இருந்தது. துரியோதனின் இதயத்தில் ஒரு சந்தேகப் புழு தொந்தரவு செய்யத் துவங்கியது.

"துரியோதனா!" என்று அழைத்த பீஷ்மரின் கனத்தக் குரல் அங்கு நிலவிய அசௌகரியமான மௌனத்தைத் துளைத்தபோது, அடுத்து வரவிருந்தது துரியோதனனுக்குக் கிட்டத்தட்டத் தெரிந்தது. "தன் சகோதரி சுபத்திரைக்கும் உன் ஒன்றுவிட்டச் சகோதரன் அர்ச்சுனனுக்கும் இடையேயான திருமணத்தைப் பற்றி அறிவிப்பதற்காக பலராமன் இங்கே வந்திருக்கிறான். ஒருசில மாதங்களுக்கு முன்பு, தன் சகோதரிக்கும் உனக்கும் திருமணத்தைப் பேசி முடிப்பதற்காக அவன் இங்கு வந்தான். உனக்கு அதில் விருப்பம் இருந்ததால் நாங்கள் அனைவரும் ஒப்புக் கொண்டோம். இப்போது யாதவர்களின் திட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதுபோலத் தெரிகிறது. அவனுடைய சகோதரி, கிருஷ்ணனின் உதவியுடன், துவாரகை அரண்மனையிலிருந்து அர்ச்சுனனோடு ஓடிப் போயிருக்கிறாள்."

"துரியோதனா, என்னை மன்னித்துவிடு . . . எனக்கு இது பற்றித் தெரியாது . . ." பலராமனின் நெற்றியின்மீது இருந்த கவலை வரிகள் மேலும் ஆழமடையத் துவங்கின.

துரியோதனின் உலகம் முற்றிலும் நிலைகுலைந்து அவன்மீது விழுந்து நொறுங்கியது. அவனுடைய உடலின் ஓவ்வோர் உயிரணுவிலும் கோபம் தலைதூக்கியது. அவன் ரத்தம் கொதித்தது. தனக்கு நிச்சயிக்கப்பட்டப் பெண்ணை அந்த வேசி மகன் அர்ச்சுனன் எப்படித் தொடத் துணிந்தான் என்று அவன் குமுறினான்.

"துரியோதனா, இது அஸ்தினாபுரத்திற்கு ஒரு மிகப் பெரிய இழிவு என்பதில் சந்தேகமில்லை. விந்திய மலைக்கு வடக்கே உள்ள பரதகண்டப் பகுதியின் ஒட்டுமொத்தத் தலைமைத்துவமும் நம் கையில் உள்ளது. ஆனால் நம் அடிமை நாடு ஒன்று நம்மை ஏளனப்படுத்தத்

துணிந்துள்ளது. நம்முடைய பரம எதிரிகளான தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்புக்கூட இந்த அளவு தரம் தாழ்ந்து போனதில்லை. நான் என் சொந்தச் சகோதரனாகக் கருதிய ஒருவனிடமிருந்து இதை நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. துரியோதனா, இப்போது நீ தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன — ஒன்று, நீ யாதவர்களின் சிறிய ராஜ்யத்தைச் சூறையாடி, அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கலாம், அல்லது அர்ச்சுனனை எதிர்த்துச் சண்டையிட்டு உன் காதலியை மீண்டும் வெற்றி கொள்ளலாம். இது பற்றி நான் உன்னுடன் கலந்து பேச விரும்புகிறேன்.” துரியோதனன் அதற்கு மறுப்புத் தெரிவிப்பதுபோல மெதுவாகத் தலையசைத்ததைக் கண்ட பீஷ்மர், பிறகு எதுவும் பேசாமல் இருந்துவிட்டார்.

துரியோதனன் சிறிது நேரம் எதுவும் பேசாமல் தன் குருவையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் இளவரசனின் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாத பலராமன், தன்னுடைய பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான். இறுதியில், “குருவே, அவர்கள் இருவரும் அரண்மனையைவிட்டு ரதத்தில் ஓடிப் போனபோது, ரதத்தைச் செலுத்தியது யார் என்று தயவு செய்து எனக்குக் கூறுங்கள். அர்ச்சுனனா அல்லது . . .”

அதைக் கூறுவது பலராமனுக்கு வேதனையளிப்பதாக இருந்தது. அவன் தன் சகோதரியின்மீது ஒரு தந்தையைப்போலப் பாசம் கொண்டிருந்தான். ஆனால் அவள் அவனை அவமானப்படுத்தியதன் மூலம் தன் நன்றிக்கடனைத் திருப்பிச் செலுத்தியிருந்தாள். பலராமன் துரியோதனை வருத்தத்தோடு பார்த்துவிட்டு, “மகனே, ரதத்தைச் செலுத்தியது அர்ச்சுனன் அல்ல, என் சகோதரி சுபத்திரைதான்,” என்று கூறினான்.

இதைக் கேட்டதும், துரியோதனன் அவையோருக்குத் தலை வணங்கிவிட்டு அங்கிருந்து நடக்கத் துவங்கினான்.

அப்போது பீஷ்மர் தன் இருக்கையைவிட்டு எழுந்து, “துரியோதனா! எனக்கு ஒரு பதில் கூறிவிட்டுப் போ. நீ சண்டையிட்டு உனக்குரியவளை வெற்றி கொள்ள விரும்பினால், அஸ்தினாபுரத்தின் ஒட்டுமொத்தப் படையையும் நான் உனக்குத் தருகிறேன். நீ ஒரு சத்திரியனுக்குரிய கடமையிலிருந்து ஓடிப் போகாதே. உன் காதலிக்காகவும் உன் ராஜ்யத்திற்காகவும் உன் கௌரவத்திற்காகவும் சண்டையிடு,” என்று கூறினார்.

இதைக் கேட்ட இளவரசன் துரியோதனன், அப்படியே நின்றுவிட்டு, பீஷ்மரை நோக்கித் திரும்பினான். “பிதாமகரே, இளவரசி சுபத்திரை என் ஒன்றுவிட்டச் சகோதரன் அர்ச்சுனனைத்

தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நான் அவளுக்காகச் சண்டையிட விரும்பவில்லை. அதோடு, என் சொந்த விஷயத்தைத் தீர்ப்பதற்காக என் ராஜாங்கத்தின் வளவசதிகளையும் நான் பயன்படுத்த விரும்பவில்லை."

"துரியோதனா, மக்கள் அனைவரும் உன்னை எள்ளி நகையாடுவர். நீ கோழை என்று உன்மீது குற்றம் சாட்டுவர்," என்று பீஷ்மர் கண்டிப்போடும் தன் வார்த்தைகளைத் தேனில் குழைக்காமலும் நேரடியாகக் கூறினார்.

"அர்ச்சுனனும் இளவரசி சுபத்திரையும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். என்னுடைய தனிப்பட்ட விவகாரங்கள் நம் ராஜ்யத்தின் கொள்கைகளை பாதிப்பதற்கு அனுமதித்துவிடாதீர்கள். இச்செய்தியை இங்கு நேரில் வந்து நம்மிடம் கூறுவதற்கான துணிச்சலைக் கொண்டிருந்ததற்காக என் குருநாதர் பலராமனை நான் இன்னும் அதிகமாக மதிக்கிறேன். இச்சிறிய நிகழ்வின் காரணமாக துவாரகையுடனான நம் உறவு பாதிக்கப்பட வேண்டாம்," என்று கூறிவிட்டு, துரியோதனன் வாசலை நோக்கி நடந்தான். அது நெடுந்தூரத்தில் இருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது.

"துரியோதனா!" பீஷ்மரின் குரலில் இருந்த ஏதோ ஒன்று இளவரசனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. பீஷ்மரின் ஆழமான கண்களில் கண்ணீர் மினுமினுத்துக் கொண்டிருந்ததைக் கண்ட அவன், அவர் பேசுவதற்காகக் காத்திருந்தான். "மகனே, உன்னை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்," என்று பீஷ்மர் கூறினார்.

துரியோதனன் மீண்டும் தலை வணங்கிவிட்டு, தன்னால் இயன்ற அளவுக்கு அங்கிருந்து வேகமாக வெளியேறினான். வாசலருகே நின்ற காவலாளிகள் தனக்குத் தலை வணங்கியபோது பதிலுக்கு அவர்களை வணங்க அவன் மறக்கவில்லை. அவன் அந்த அரசவையிலிருந்து போதுமான தூரம் சென்று, ஓர் அமைதியான, ஒதுக்குப்புறமான இடத்தைக் கண்டவுடன், தன் முகத்தை அந்தக் குளிரான பளிங்குச் சுவரின்மீது அழுத்தி நின்றான். அவன் அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் அனைத்தும், மடை திறந்த வெள்ளம்போல அவனுள்ளிருந்து பீறிட்டுக் கிளம்பி வெடித்தன. அவன் வெட்கமின்றி அழுதான். அர்ச்சுனன்மீது தான் கொண்ட வெறுப்பை அவன் கட்டுப்படுத்த முயன்றான், ஆனால் சுபத்திரையின் அழகான முகம் அவனை ஏளனமாகப் பார்த்து, அவனுடைய அப்பாவித்தனத்தையும் முட்டாள்தனத்தையும் பரிகசித்தது. தன்னுடைய நிலைமையைக் கண்டு அர்ச்சுனன் உரக்கச் சிரித்ததுபோல அவன் உணர்ந்தான். தனக்கு

நேர்ந்த அவமானத்தை அந்தப் புரோகிதர்கள் வெகுவாக ரசிப்பார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். தான் மதிப்பற்றவன் என்ற உணர்வும், மற்றவர்கள் தங்கள் சுயநலனுக்காகத் தன்னைப் பயன்படுத்தியிருந்தனர் என்ற உணர்வும் அவனுக்கு ஏற்பட்டது. கொதித்துக் கொண்டிருந்த தன் முகத்தை அவன் அந்தக் குளிரான கல்லின்மீது அழுத்தியவாறு, "பார்வையற்றப் பெற்றோரின் மகனான எனக்கும் சுபத்திரை என்னுடைய காதலைக் கேலி செய்து கொண்டிருந்தாள் என்பதைப் பார்ப்பதற்கான திறன் இருக்கவில்லை," என்று நினைத்தான்.

ஒரு மணிநேரத்திற்குப் பிறகு, அசுவத்தாமன் அவனை அதே நிலையில் கண்டான். துவக்கத்தில், தன் துயரத்திற்கான காரணத்தைத் தன் நண்பனிடம் கூறுவதற்கு இளவரசன் மறுத்தான். பிறகு, நடந்த சம்பவத்தை அவன் விலாவாரியாக விளக்கி, சுபத்திரை அர்ச்சுனனை ஏற்கனவே திருமணம் செய்துவிட்டாள் என்ற செய்தியை அவன் தெரிவித்தபோது, அவனுடைய நண்பர்கள் கொதித்தெழுந்தனர். அர்ச்சுனனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அங்கிருந்து கோபத்துடன் வேகமாக வெளியேறிய அசுவத்தாமனை, ஜயத்ரதனும் கர்ணனும் மிகவும் சிரமப்பட்டுத் தடுத்து நிறுத்தினர். முதலில் திரௌபதியையும், இப்போது சுபத்திரையையும் மணமுடித்ததன் மூலம், தன் நண்பர்களில் இருவருடைய மணப்பெண்களைத் திருடியதற்காக அவனைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு அசுவத்தாமன் உறுதி பூண்டான். இதற்கிடையே, நன்றாகக் குடித்திருந்த துச்சாதனன், அங்கிருந்து வெளியேறி, பலராமனை மோசமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தான். அந்த யாதவத் தலைவன் தன் தலையைக்கூட நிமிர்த்தாமல், துச்சாதனனின் ஏளனப் பேச்சுக்களைப் பொறுத்துக் கொண்டான். இதைப் பற்றி யாரோ பீஷ்மருக்குத் தகவல் தெரிவித்தபோது, இளவரசி துச்சலையின் திருமணத்தன்று காலைவரை துச்சாதனனை வீட்டுக் காவலில் வைக்க அவர் உத்தரவிட்டார். பிறகு, அஸ்தினாபுரத்தின் சார்பில் விதுரன் பலராமனிடம் ஆத்மார்த்தமாக மன்னிப்புக் கேட்டான்.

* * *

இளவரசி துச்சலையின் திருமண நாளன்று பல சுவாரசியமான சம்பவங்கள் நிகழ்ந்தன. இளவரசன் துரியோதனன், தான் திருமணம் செய்து கொள்வதாக இருந்த அதே இடத்தில், தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த இருவருக்குத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்திருந்தது தௌமியனைப் பெரிதும் கோபப்படுத்தியது. "தன் மனைவியைத் தன் ஒன்றுவிட்டச் சகோதரனிடம் தொலைத்த ஒரு முட்டாளாக ஆக்கியதன்

மூலம் கடவுள்கள் துரியோதனனுக்கு அவனுடைய இடம் எது என்பதைக் காட்டியுள்ளனர். ஆனாலும் அந்த ஆணவக்காரன் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள மறுக்கிறான்," என்று அங்கிருந்த புரோகிதர்கள் ஒருவருக்கொருவர் கிசுகிசுத்துக் கொண்டனர். தௌமியனின்கீழ் இருந்த புரோகிதர்கள் கர்ணனை விருஷாலிக்குத் திருமணம் செய்து வைக்க மறுத்தனர். ஆனால் கிருபரும் அசுவத்தாமனும் அந்தத் திருமணத்தை நடத்தி வைக்க முன்வந்தனர். இளவரசி துச்சலையின் திருமணமும் கர்ணனின் திருமணமும் அருகருகே நடைபெற்றன. தௌமியனின் சீடர்கள் கர்ணனையும் விருஷாலியையும் ரகசியமாக ஆசீர்வதித்திருந்ததும், கர்ணன் கொடுத்தப் பரிசுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்ததும் தௌமியனுக்குத் தெரிய வந்தபோது, கர்ணனின் புகழ்பெற்றப் பெருந்தன்மை அவனை மேலும் கோபப்படுத்தியது. கர்ணனைப் போன்ற தீயவர்கள் இந்தப் புனித பூமியில் தழைப்பதற்குக் கடவுளர் ஏன் அனுமதித்தனர் என்று அவன் வியந்தான். ஒருவேளை இது கலியின் துவக்கமாக இருக்கும் என்றும், அதர்மத்தின் காலகட்டமாக இருக்கும் என்றும் அவன் நினைத்தான். தௌமியன் அந்தப் புரோகிதர்களைத் தன் வீட்டிற்கு வரவழைத்து, துரியோதனன் மற்றும் அவனுடைய நண்பர்களைப் போன்ற தீயவர்களிடமிருந்து தங்களுக்கு விமோசனம் கிடைப்பதற்காக உண்மையாகப் பிரார்த்தித்தான். முன்பொரு காலத்தில், மகாபலி, ராவணன் போன்ற அசுரர்களிடமிருந்து கடவுள் தங்களைக் காப்பாற்றியிருக்கவில்லையா என்று அவன் தன் சீடர்களிடம் கேட்டான். கடவுளின் தெய்வீக ஞானத்தின்மீது விசுவாசம் கொள்வதுதான் மிக முக்கியம் என்று, மனம் தளர்ந்து போயிருந்த தன்னுடைய சீடர்களிடம் தௌமியன் கூறினான். தலைமைப் புரோகிதனின் வார்த்தைகளைத் தவிர வேறு எந்தப் பற்றுக்கோளும் அவர்களுக்கு இல்லாமல் போனதால், துரியோதனையும் அவனுடைய நண்பர்களையும் கடவுள்கள் பார்த்துக் கொள்வர் என்று அந்தப் புரோகிதர்கள் காத்திருந்தனர்.

* * *

ஏகலைவன் தன் நண்பன் அசுவசேனனுடன் அமர்ந்து, அஸ்தினாபுரத்தின்மீது தட்சகன் மேற்கொள்ளவிருந்த தாக்குதலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான். காண்டவக் காட்டின் நெடிய மரங்கள் அவர்களைச் சுற்றிக் காவலாளிகளைப்போல நின்றன. ஏகலைவன் நாகர்களின் முகாமிற்குத் திரும்பி சுமார் ஒரு வருடம் ஆகியிருந்தது. தட்சகன் அவனுக்கு ஒரு கதாநாயகனுக்குரிய வரவேற்பைக் கொடுத்து,

மறைந்திருந்து தாக்குகின்ற கொரில்லா படையின் தளபதியாக அவனை நியமித்தான். ஆனால், நாகர் முகாமிற்குத் திரும்பி வந்ததன் மூலம் ஏகலைவன் ஒரு பெரும் தவறைச் செய்திருந்ததாக அந்த முதியவன் வாசுகி தொடர்ந்து கூறி வந்தான். தட்சகன் உருவாக்கிக் கொண்டிருந்த பைத்தியக்கார உலகிலிருந்து ஏகலைவன் தப்பிச் செல்ல வேண்டும் என்றும் அந்த முதியவன் அவனிடம் வலியுறுத்தினான்.

பறவைகளின் பாடல் ஒலியையும், காய்ந்த சருகுகள் அவ்வப்போது காற்றில் சரசரத்த ஓசையையும் தவிர, அந்த இடத்தில் ஓர் அச்சுறுத்தும் அமைதி நிலைகொண்டிருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சுட்டெரித்தக் கோடையிலிருந்து விமோசனத்தை எதிர்பார்த்து அக்காடு ஆவலோடு காத்திருந்தது. மயாசுரன் என்ற ஓர் அசுரன் ஏகலைவனோடும் அசுவசேனனோடும் அமர்ந்து கொண்டு, மணலின்மீது, அருமையான அரண்மனைகள் மற்றும் கோவில்களின் படங்களை வரைந்து கொண்டிருந்தான். அசுரர்களின் மாபெரும் கட்டடக்கலைப் பள்ளியில் அவன் அந்தக் கலையைப் பயின்றிருந்தான். பரதகண்டத்தின் தென்கிழக்குக் கடற்கரையின்மீது செழித்துத் தழைத்தோங்கியிருந்த அப்பள்ளி, கடைசி அசுரப் பேரரசனான ராவணனின் வீழ்ச்சிக்குப் பிறகு தன் வசீகரத்தை இழந்திருந்தது. ஆனால் அதன் பாரம்பரியங்கள் ரகசியமாகத் தொடர்ந்து கொண்டிருந்தன. மயன் கட்டடக்கலை மற்றும் அறிவியல் பள்ளி எவற்றுக்குப் புகழ்பெற்றிருந்ததோ, அந்த அரண்மனைகளுக்கும் கோவில்களுக்கும் மக்களிடையே இப்போது எந்தக் கிராக்கியும் இல்லாததால், அப்பள்ளியின் பல மாணவர்கள், களிமண்ணால் ஆன மாதிரிகளை மட்டுமே உருவாக்கினர். அவர்களுடைய கலை மடிந்து கொண்டிருந்தது. அக்கலையைப் பயின்றவர்கள் கைவிடப்பட்டனர், தீண்டத்தகாதவர்கள் அல்லது பறையர்கள் என்ற பிரிவுக்குள் தள்ளப்பட்டனர். இப்போது விசுவகர்மா பள்ளி பிரபலமடைந்து கொண்டிருந்தது. இந்தச் சமூக மாற்றத்திற்குப் பலியான மயாசுரன், தட்சகனின் போராளிப் படைக்குள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் ஒருவனாக ஆனான்.

காண்டவக் காட்டில் ரகசியமாக இருந்த நாகர்கள் முகாமை, கைவிடப்பட்டுவிட்ட மற்றும் மறக்கப்பட்டுவிட்ட கீழ்ச்சாதியினர் மொய்த்தனர். இக்காடு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்திரர்களின் முதல் அரசன் ஆட்சி செய்திருந்த பண்டைய நகரத்தைச் சூழ்ந்திருந்தது. பின்னாளில், அதிகாரம் பிராமணர்களிடம் கைமாறியபோது, இந்திரர்கள் போன்ற பண்டைய ஆளும் குலங்கள் அழிந்து போயின. தற்போது இந்திர குலத்தின் தலைவனாக இருந்தவன்,

மிகவும் நொடிந்து போய், காட்டினுள் வெகுதொலைவில் இருந்த, சிதிலடைந்து கொண்டிருந்த தன் அரண்மனையில் வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் மூலமாகத்தான் குந்தி அர்ச்சுனனைப் பெற்றிருந்தாள் என்றும், அந்தச் சேவைக்காக அவனுக்குச் சில செப்புக் காசுகள் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் ஒரு வதந்தி நிலவியது. தன்னுடைய புகழ்மிக்க மூதாதையரின் இழந்த பெருமையில் சிறிதளவை மீட்டெடுக்கும் நம்பிக்கையில், வெறுப்போடும் கோபத்தோடும் அவன் நாகர்களுடன் கூட்டு சேர்ந்திருந்தான். தட்சகன் இதைத் தந்திரமாகத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தன்னுடைய படையை இந்திரன் ஆண்ட காடுகளுக்குள் இடம்பெயர்த்தான். அஸ்தினாபுரம் காண்டவக் காட்டிலிருந்து ஓரிரு நாட்கள் பயண தூரத்தில்தான் இருந்தது. தட்சகன் மேற்கொண்டிருந்த போர்முறைக்கு இந்தக் காடு கச்சிதமானதாக இருந்தது.

இப்போது, தட்சகனும் காளிங்கனும் ஏகலைவன் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தனர். புரட்சிப் படையின் மேன்மையான தலைவன் முன்னால் ஏகலைவன் மரியதையோடு எழுந்து நின்றான். தன்னைப் பகட்டான பெயர்களால் குறிப்பிடுவதில் தட்சகன் தீவிர ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தான். அவன் ஏகலைவனைக் கட்டியணைத்து, "நீ எங்களுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருவாய் என்று எனக்குத் தெரியும். ஒரு சக்திவாய்ந்த கூட்டாளிக்காக நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம். இப்போது தளபதி இரணியதனுசுவின் மகனே எங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறான்," என்று கூறினான்.

குழப்பமடைந்த ஏகலைவனைக் கண்டு காளிங்கன் தன் புன்னகையை மறைத்துக் கொண்டு, "ஏகலைவா, நீ ஏன் குழப்பமாகக் காணப்படுகிறாய்?" என்று கேட்டான். பிறகு, "மகத நாட்டின் மாபெரும் தளபதி நம் தலைவருக்கு இக்கடிதத்தை அனுப்பியுள்ளார். இதைப் படித்துப் பார்," என்று கூறினான்.

ஏகலைவன், நடுங்கிக் கொண்டிருந்த கைகளுடன், காளிங்கனிடமிருந்து அந்த ஓலைச் சுவடியை வாங்கினான். தன் தந்தை உயிரோடு இருந்தார் என்ற செய்தி அவனுக்கு அதிர்ச்சியளித்தது. மகத நாட்டின் அரசு முத்திரை பொறிக்கப்பட்ட அந்தக் கடிதத்தை அவன் ஆவலுடன் ஆராய்ந்தான். அதில் வெறுமனே 'திரு தட்சகன்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஏகலைவன் நெடுங்காலத்திற்கு முன்பு தான் தொலைத்துவிட்டிருந்த தன் மகன் என்றும், தட்சகன் அவனைப் பாதுகாப்பாக மகத நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று தாம் விரும்பியதாகவும் தளபதி இரணியதனுசு அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தான்.

தட்சகன் இன்னொரு செய்தியையும் ஏகலைவனிடம் கொடுத்தான். அது தளபதி இரணியதனுசு தன் மகன் ஏகலைவனுக்கு எழுதிய ஒரு தனிப்பட்டக் கடிதம். ஏகலைவன் ஒரு குழந்தையாக இருந்தபோது தான் அவனைக் கைவிட்டுவிட்டுச் சென்றதற்காகத் தளபதி இரணியதனுசு அக்கடிதத்தில் அவனிடம் மன்னிப்புக் கோரியிருந்தான். இரணியதனுசு தன் மனைவியின் மரணத்தைத் தொடர்ந்து, தன் கைக்குழந்தையைத் தன் சகோதரனிடம் ஒப்படைத்துவிட்டு, தன்னுடைய அதிர்ஷ்டத்தைத் தேடிச் சென்றிருந்தான். அவன் ஒரு தனித்துவமான வீரனாக ஆகியிருந்தான். தன் நல்லதிர்ஷ்டத்தின் காரணமாக, சாதியைவிடத் தகுதி அதிக முக்கியம் என்று கருதித் தன்மீது நம்பிக்கை வைத்த ஓர் அரசனை அவன் சந்தித்திருந்தான். காலப்போக்கில், அவன் மகதப் படையின் தளபதியாக உயர்ந்திருந்தான். அவன் தன் மகன் ஏகலைவனைத் தொடர்பு கொள்ளப் பல முறை முயன்றிருந்தும்கூட, அவன் எப்போதும் அதில் தோல்வியையே தழுவியிருந்தான். தன் சகோதரனின் மனைவிக்கும் அவளுடைய குழந்தைகளுக்கும் நேர்ந்த கொடுமையைப் பற்றி அத்தளபதி கேள்விப்பட்டிருந்தான். அதோடு, ஏகலைவன் உயிருடன் இருந்தான் என்றும், அவன் தட்சகனின் புரட்சிப் படையில் சேர்ந்திருந்தான் என்றும் நிலவிய வதந்திகளும் அவனை எட்டியிருந்தன. தளபதி இரணியகசிபு தன் மகனைச் சந்தித்து, மகத நாட்டின் தலைநகரான பாடலிபுத்திரத்திற்கு வருமாறு அவனிடம் கோரிக்கை விடுக்க விரும்பினான்.

வெறுப்பும் கோபமும் கொண்ட ஏகலைவன் அக்கடிதத்தை வீசியெறிந்தான். தான் உயிர்பிழைத்திருப்பதற்குப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் இந்த மனிதன் எங்கே போயிருந்தான் என்று ஏகலைவன் கடுஞ்சீற்றத்தில் குமுறினான். தன் ஏழ்மை, மதிப்பான ஒன்றைக் கற்றுக் கொள்வதற்குத் தான் எதிர்கொண்ட போராட்டம், தனக்குக் கிடைத்த அவமானங்கள், தன் மக்கள் நடத்தப்பட்ட விதம், தன் சித்தி மற்றும் அவளுடைய மகன்களின் மரணம் ஆகியவற்றைப் பற்றிய நினைவுகள் ஏகலைவனின் மனத்திற்குள் பாய்ந்தோடி வந்தன. அவன் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டு புதர்களை வெறித்துப் பார்த்தான்.

“எனக்குத் தகப்பன் யாரும் கிடையாது. இந்த மாபெரும் மனிதன் எக்கேடும் கெட்டுப் போகட்டும் . . .” என்று கூறிவிட்டு, ஏகலைவன் அங்கிருந்த ஆற்றை நோக்கி ஓடினான். அந்த யமுனை நதி, தன் இருண்ட ஆழங்களுக்குள் வருமாறு ஏகலைவனை அழைத்ததுபோலத் தோன்றியது. தன் தந்தை உயிருடன்தான் இருந்தார் என்ற அறிதல் ஏற்படுத்திய அதிர்ச்சி, மிகவும் காயப்பட்டுப் போயிருந்த அவனுடைய மனத்தினால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது.

தட்சகன் ஏகலைவனைப் பின்தொடர்ந்து சென்று, அவனுடைய தோளைத் தொட்டான், ஆனால் ஏகலைவன் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஏகலைவன் தன் கைகளால் தன் கரிய முகத்தை மூடிக் கொண்டு, சீற்றத்துடன் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த அந்த நதியின் அருகே மிகவும் ஆபத்தான நிலையில் நின்றான். அவன் தன் அமைதியைத் திரும்பக் கண்டுபிடிப்பதற்கு அவனைத் தனியாக விட்டுவிடுவது நல்லது என்பதை அந்த நாகர் தலைவன் உணர்ந்தான். சிறிது நேரம் கழித்து, மிகவும் சக்திவாய்ந்த நபராக இருந்த அவனுடைய தந்தை இரணியகசிபுவை நேரில் சென்று பார்த்து வருவதற்கு ஏகலைவனை ஒப்புக் கொள்ள வைப்பதற்குத் தட்சகனும் வாசுகியும் முயன்றனர். புரட்சிப் படையின் நலனுக்கு எதிராக அவன் நடந்து கொண்டால் அவன் தீவிரமான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று தட்சகன் தன் பதவியையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி அவனை அச்சுறுத்திக்கூடப் பார்த்தான். ஆனால் ஏகலைவன் அவர்களுடைய வற்புறுத்தலுக்கு அடிபணிய மறுத்துவிட்டான். தட்சகன் கோபத்துடன் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டு, புரட்சிப் படையின் நோக்கத்திற்குத் துரோகம் இழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் குறிப்பால் உணர்த்தினான்.

இறுதியில், ஏகலைவனின் உறைந்து போன இதயத்தை உருக்குவதில் வாசுகி வெற்றி பெற்றான். ஏகலைவனின் கோபம் மெல்ல மெல்ல ஆர்வத்திற்கும், பிறகு பெருமிதத்திற்கும் வழி வகுத்தன. தன் புகழ்மிக்கத் தந்தையைச் சந்திப்பதற்கான பயணத்தை மேற்கொள்வதென்று அவன் தீர்மானித்தான். அஸ்தினாபுரம் கர்ணனின் திருமணத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த நாளன்று, சமுதாய விதிமுறைகளின்மீது அக்கறையற்ற ஓர் அரசன் ஆண்டு கொண்டிருந்த, ஒரு தீண்டத்தகாதவனைத் தன் படைத்தளபதியாகக் கொண்ட, கிழக்கில் அமைந்திருந்த மகத நாட்டை நோக்கி ஏகலைவன் புறப்பட்டான். தன் தந்தையைச் சந்திப்பது குறித்த யோசனையை அவன் விரும்பத் துவங்கியிருந்தான். இளம் கட்டடக் கலைஞனான மயாசுரன், அப்பயணத்தில் தானும் உடன் வரலாமா என்று ஏகலைவனிடம் கேட்டான். புகழ்பெற்றப் பாடலிபுத்திர நகரை அவன் பார்க்க விரும்பினான். ஆனால், “மயா, வேறொரு சமயத்தில் பார்த்துக் கொள்ளலாம்,” என்று ஏகலைவன் பதிலளித்தான். இத்தனை வருடங்களுக்குப் பிறகு தான் தன் தந்தையை முதன்முறையாகப் பார்க்கும்போது தான் எவ்வாறு நடந்து கொள்வோம் என்று அவனுக்கே உறுதியாகத் தெரிந்திருக்காததால், தன்னுடன் யாரையும் சாட்சிக்கு

வைத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

அந்த வேடுவனின் கரிய உருவத்தைச் சுமந்து சென்று கொண்டிருந்த குதிரை, தொடுவானிற்குள் சென்று மறைந்தபோது, அந்தக் கட்டடக் கலைஞன் ஏமாற்றத்தில் பெருமூச்செறிந்தான். கட்டடக்கலை பற்றிய கோட்பாட்டை மட்டுமே அவன் கற்றிருந்தான். அவன் எந்தவொரு முக்கியமான நகரத்தையும் ஒருபோதும் பார்த்திருக்கக்கூட இல்லை. எனவே அவன் ஏதேனும் கட்டடத்தை வடிவமைத்தானா அல்லது உருவாக்கினானா என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. ஒரு தீண்டத்தகாதவன் என்ற முறையில், அரண்மனைகள் மற்றும் கோவில்களின் அருகே நடந்து செல்வதற்கு அவன் அனுமதிக்கப்படவில்லை. மாபெரும் கட்டடங்களைக் காணவும், தன் கைகளால் அவற்றின் கற்களையும் சிற்பங்களையும் தொட்டுப் பார்க்கவும், அழகாக அமைக்கப்பட்ட வீதிகள் வழியாக நடந்து செல்லவும் அவன் ஏங்கினான். அவன் தன் இதயத்தில் ஒரு ரகசியமான லட்சியத்தை வளர்த்துக் கொண்டிருந்தான். ஒரே ஓர் அழகான எண்ணம் அவனுடைய தூக்கத்தை அவனிடமிருந்து பறித்தது; ஒவ்வோர் இரவும் ஒரே ஒரு கனவு மீண்டும் மீண்டும் அவனுக்கு வந்தது; ஒரே ஒரு பிரார்த்தனை அவனுடைய உதடுகளுக்கு எழுந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு பரதகண்டத்தின் மாபெரும் கோவில்களை வடிவமைத்திருந்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்த மயாசுரன், இப்போது மண்டியிட்டு அமர்ந்து, தன் கைகளைக் குவித்து, தன் மனமாரப் பிரார்த்தனை செய்தான்: “மகாதேவா, நான் பெறத் தகுதியற்ற ஒன்றை நான் உன்னிடம் கேட்பதற்காக என்னை மன்னித்துவிடு. இரக்க குணம் படைத்தவனே, இந்த ஒரே ஒரு வரத்தை மட்டும் எனக்குக் கொடு. உலகிலேயே மிக அழகான நகரத்தை நான் உருவாக்க விரும்புகிறேன். நான் உருவாக்கும் நகரம் என்றென்றும் நிலைத்திருக்க அருள் புரி. புனிதமான என் தாய்த்திருநாட்டின் இதயமாக என் நகரம் விளங்கட்டும்.”

அவனுக்கு விடையளிப்பதுபோல, வானில் பேரிடிகள் முழங்கின. மண்டியிட்டு அமர்ந்திருந்த மயாசுரனுக்கு அருகே இருந்த ஒரு மரத்தை ஒரு மின்னல் தாக்கி, அதை எரித்துக் கருக்கியது. அந்த இருண்ட வானில் மேகங்கள் ஒன்றோடொன்று மோதி மின்னல்களை உருவாக்கியதைக் கண்டு அந்த இளம் கட்டடக் கலைஞன் பயந்து நடுங்கினான். தன்னைப் போன்ற ஒரு தீண்டத்தகாதவனின் பிரம்மாண்டமான கனவுகளால் சொர்க்கத்தில் இருந்த கடவுள்களுக்குக் கடுங்கோபம் ஏற்பட்டிருந்ததாக அவன் நினைத்தான். அவன் தன் கழுத்தைச் சுற்றி அணிந்திருந்த ஒரு நூலில் தொங்கிய மிகச் சிறிய சிவலிங்கத்தைத் தன் கைகளால் இறுக்கிப்

பிடித்தபடி, தன் குடிசையை நோக்கி ஓடிச் சென்று, இயற்கையின் சீற்றத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உடைசலாக இருந்த தன் குடிசைக் கதவை மூடினான். கடவுள்களின் கோபம் தணிவதற்கு மிக நீண்ட நேரம் ஆனது.

23

நாகரீகத்தின் பிரவேசம்

“விதுரா, நமக்கு வேறு வழியில்லை. காண்டவத்தின் ஆட்சிப் பொறுப்பைப் பாண்டவர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்,” என்று பீஷ்மர் தன் பிரதம மந்திரியிடம் கூறினார்.

“மேன்மை மிக்கவரே, அந்த மாவட்டத்தின் பெரும்பகுதி வெறும் காடு. அங்கு ஓடும் ஆற்றின் போக்கு ஒருபோதும் கணிக்கப்பட முடியாதது. கோடைக்காலத்தில்கூட அது சமவெளிகளை வெள்ளக்காடாக ஆக்கிவிடும். மேலும், தட்சகனின் தலைமையின்கீழ் எண்ணற்றக் கலகக்காரர்கள் அக்காட்டில் முகாமிட்டுள்ளதாக அறிக்கைகள் உணர்த்துகின்றன,” என்று விதுரன் கூறினான். பீஷ்மரின் தீர்மானம் அவனுக்கு ஓர் அசௌகரியமான உணர்வை ஏற்படுத்தியது.

“விதுரா, இதைவிட மேலான பரிந்துரை ஏதும் உன்னிடம் உள்ளதா? பாண்டவர்கள் வாரனவத நெருப்பில் பலியாகவில்லை என்பது எல்லோருக்கும் இப்போது தெரிந்துவிட்டதால், குந்தி தன் மகன்களோடும் மருமகளோடும் நம் அரண்மனைக்குத் திரும்பி வந்துவிட்டாள். அரசன் அவளைப் பாரபட்சமாக நடத்துவதாக அவளைச் சுற்றி இருக்கும் அவளுடைய பிரதிநிதிகள் வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். காந்தாரிக்கும் குந்திக்கும் இடையேயான பனிப் போரை நான் வெறுக்கிறேன். மேலும், தட்சகன் காண்டவத்தில் இருப்பது பற்றிய தகவல்கள் உண்மை என்றால், பாண்டவர்கள் அவனை எவ்வாறு கையாள்கின்றனர் என்று பார்க்க

நான் விரும்புகிறேன். அவர்களுக்கு உதவி செய்ய எப்போதும் நாம் உயிரோடு இருக்கப் போவதில்லை. இப்புதிய தலைமுறையினர் இப்பிரச்சனைகளை எவ்வாறு சமாளிக்கின்றனர் என்று நாம் பார்க்கலாம். ஆட்சி செய்வதில் அவர்களுக்கு அனுபவம் தேவை. பாண்டவர்கள் காண்டவத்தைத் தங்கள் தலைமைச் செயலகமாக ஆக்கிக் கொண்டு, அங்கிருந்து பாதி ராஜ்யத்தை ஆண்டால், அது எல்லோருக்கும் நல்லதாக அமையும். நான் துரியோதனனிடம் இந்த யோசனை குறித்துப் பேசினேன். அதில் எந்தப் பிரச்சனையும் இருப்பதாக அவன் நினைக்கவில்லை. தனக்கு நிச்சயிக்கப்பட்டவளை அர்ச்சுனனிடம் இழந்ததால் ஏற்பட்ட மனத்தளர்ச்சியிலிருந்து அவன் இன்னும் வெளிவர வேண்டியுள்ளது. ஆனால் தனிப்பட்ட விவகாரங்களைப் பொதுநலனோடு போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் இருப்பதற்குப் போதுமான பக்குவம் அவனுக்கு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்," என்று பீஷ்மர் கூறினார்.

"துரியோதனனின் நோக்கம் என்னவென்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. வாரனவதத்தின் அரக்கு மாளிகை . . ."

விதுரன் தன் வாக்கியத்தை நிறைவு செய்வதற்கு பீஷ்மர் அனுமதிக்கவில்லை. "விதுரா, வாரனவதத்தைப் பற்றி நாம் எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ, அவ்வளவு நல்லது. நீ தனிப்பட்ட முறையில் இந்த விவகாரத்தை விசாரித்தாய். உனக்கு இது குறித்த விபரங்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். வாரனவதத்தில் கட்டப்பட்ட மாளிகை எளிதில் தீப்பிடித்துக் கொள்ளக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டது என்பதுதான் இங்கு ஒரு சூழ்ச்சி நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரே விஷயம். அந்த மாளிகையைக் கட்டிய புரோச்சனனும் அந்த துரதிர்ஷ்டவசமான விபத்தில் இறந்துவிட்டான். பாண்டவர்கள்தான் அந்த நெருப்பில் இறந்து போயிருந்ததாக முதலில் நாம் நினைத்தோம். ஆனால் அந்த ஏழை வேடுவப் பெண்ணும் அவளுடைய ஐந்து மகன்களும்தான் அதில் பலியானார்கள் என்று உன்னுடைய விசாரணைகள் வெளிப்படுத்தின. அவர்களுடைய கொலைக்கு யார் காரணம்? துரியோதனனா அல்லது பாண்டவர்களா? புரோச்சனன் ஓர் ஊழல் பேர்வழி என்று நாம் நினைத்தோம். ஆனால் நாம் அவனுடைய மரணத்திற்குப் பிறகு அவன் வீட்டிற்குச் சென்றபோது, அது மிக ஏழ்மையான நிலையில் இருந்ததைப் பார்த்தோம். நான் நிர்ணயித்துள்ள சிறிய ஓய்வூதியத் தொகையைக் கொண்டுதான் அவனுடைய மனைவி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள். புரோச்சனனைப் போன்ற ஒருவன் ஏன் ஒரு தீண்டத்தகாதவளைக் காப்பாற்ற முயற்சித்துத் தன் உயிரைக் கொடுக்க

வேண்டும்? குந்தியையும் அவளுடைய மகன்களையும் தீர்த்துக்கட்டுவதற்கு ஒரு சூழ்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றால், நிச்சயமாக துரியோதனன் அதற்குப் பொறுப்பு அல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். பீமனைக் கொலை செய்துவிட்டதாகக் குந்தி நம் பட்டத்து இளவரசன்மீது வீணாகப் பழி சுமத்தியதால், அது குறித்து விசாரணை நடத்துவதில் நாம் நம் அரசவை நேரத்தைக் வீணாக்கியபோது நிகழ்ந்த கேலிக்கூத்தை நாம் மறந்துவிட்டோமா?"

"மேன்மை பொருந்தியவரே! உங்கள் ஆணைப்படியே நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிடுகிறேன். இன்னொரு முக்கியமான விஷயம் — கிருஷ்ணன் பீமனையும் அர்ச்சுனனையும் அழைத்துக் கொண்டு மகத நாட்டிற்குச் சென்றுள்ளன். ஏனென்று எனக்குத் தெரியவில்லை." வாரனவத விவகாரத்தில் தன் அபிப்பிராயங்களைக் கொடுத்து அனுபவப்பட்டிருந்த விதுரன், இந்த விவகாரத்தைப் பற்றி அரசாட்சிப் பொறுப்பாளரிடம் பேசுவது குறித்து தர்மசங்கடமாக உணர்ந்தான்.

"இந்த விவகாரம் குறித்து நானும் கேள்விப்பட்டேன். இம்முறை கிருஷ்ணன் என்ன செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் என்று எனக்குத் தெரியவில்லை. கடந்த முறை அவன் அர்ச்சுனனைத் தன்னுடன் கூட்டிச் சென்றபோது, சுபத்திரையின் விஷயத்தில் என்ன நிகழ்ந்தது என்று நமக்குத் தெரியும். அவனுடைய நோக்கம் என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை," என்று கூறிய பீஷ்மர், "பீமன் ஓர் அசுரப் பழங்குடிப் பெண்ணுடன் உறவு கொண்டு ஒரு மகனைப் பெற்றுள்ளது உண்மையா?" என்று கேட்டார்.

"ஆமாம். அவள் பெயர் இடும்பி. குடி போதையில் ஏற்பட்ட ஒரு சண்டையில் பீமன் அவளுடைய சகோதரனைக் கொன்றுவிட்டான். அந்த நேரத்தில் திரௌபதி ஒரு வருடம் தர்மனுடன் இருந்ததால், பீமன் இடும்பியை மணந்து கொள்வதற்குக் குந்தி அவனை அனுமதித்தாள். பீமனின் மகனின் பெயர் கடோத்கஜன்," என்று விதுரன் உணர்ச்சியின்றிக் கூறினான்.

"குந்தி மற்றும் அவளுடைய மகன்களின் நடவடிக்கைகளால் சில சமயங்களில் நான் தர்மசங்கடமாக உணர்கிறேன். நெறிமுறைகள் மற்றும் தர்மத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் எந்த நூலைப் படிக்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை. பீமனும் அர்ச்சுனனும் கிருஷ்ணனோடு மகத நாட்டிற்குச் சென்றிருப்பது ஏதேனும் நல்ல காரணத்திற்காக இருக்க வேண்டும் என்று நாம் பிரார்த்தித்துக் கொள்ளலாம். விதுரா, காண்டவத்தைப் பற்றிய தீர்மானத்தை அரசனிடம் தெரிவித்து, அவருடைய அதிகாரப்பூர்வமான

அனுமதியைக் கோரு. எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று நாம் நம்புவோம்," என்று கூறிய பீஷ்மர் சோர்வாகப் பெருமூச்செறிந்தார். நாட்டை ஆள்வது குறித்து அவர் சலிப்படைந்து கொண்டிருந்தார். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அமைதியையும் கடவுளையும் தேடி இமயமலைக்குச் சென்று வாழ்வது பற்றிய யோசனை அவரை மிகவும் கவர்ந்தது.

விதுரன் அவர் முன்னால் தலை வணங்கிவிட்டு, அவர் கூறிய ஏற்பாடுகளைப் பற்றி அரசன் திருதராஷ்டிரனிடம் பேசுவதற்காக அங்கிருந்து வெளியேறினான்.

* * *

அரசனிடமிருந்து வந்த ஆணையைப் படித்த நகுலன், கடுங்கோபத்துடன், "காண்டவம்! யாருக்கு வேண்டும் அந்தப் படுபயங்கரமான நரகம்? அம்மா, அவர்கள் மீண்டும் நம்மை ஏமாற்றியுள்ளனர்," என்று பொரிந்து தள்ளினான்.

"காட்டு விலங்குகளும் கொரில்லா போராளிகளும் பரவியுள்ள சதுப்பு நிலக் காடுகளைத் தவிர அங்கு வேறு எதுவும் கிடையாது," என்று சகாதேவன் எரிச்சலுடன் கூறினான்.

"வீணாகப் பதற்றப்படாதே. கிருஷ்ணன் மகத நாட்டிலிருந்து திரும்பி வரும்வரை நாம் காத்திருக்கலாம். என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்," என்று கூறிய தர்மன், மீண்டும் தன் தியானத்தில் மூழ்கினான்.

எனவே, அந்த மூன்று சகோதரர்களும், எதிலும் ஆர்வமற்று இருந்த ஒரு மனைவியும், கவலையோடு இருந்த ஒரு தாயும், அர்ச்சுனனும் பீமனும் தங்கள் வேலையை முடித்துவிட்டுத் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தனர். அவர்கள் ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது.

* * *

இதற்கிடையே, கிருஷ்ணனும் அர்ச்சுனனும் பீமனும் மகத நாட்டை அடைந்திருந்தனர். அவர்கள் நகர வாசலுக்குச் சென்று, அரசன் ஜராசந்தனைப் பார்ப்பதற்கு அனுமதி கேட்டனர். அவர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. சிவபெருமானின் மிகப் பெரிய பக்தனான அரசன் ஜராசந்தன் தங்களை உபசரித்த விதத்தைக் கண்டு கிருஷ்ணன் ஆச்சரியமடைந்தான். அரண்மனையில் இருந்த பிரம்மாண்டமான சிவன் கோவிலின் முற்றத்தில், கிருஷ்ணனுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில், இரவு விருந்து ஒன்றிற்கு ஜராசந்தன்

ஏற்பாடு செய்தான். தன் திட்டம் வேலை செய்வதற்கு, அரசனுக்குக் கோபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு தூண்டுதல் கிருஷ்ணனுக்குத் தேவைப்பட்டது. எனவே அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அர்ச்சுனன் ஜராசந்தனோடு ஒரு பணிவான உரையாடலில் ஈடுபட்டிருந்தான். பீமனின் பக்கத்தில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த தளபதி இரணியதனுசுவைப் பார்த்ததும் கிருஷ்ணனின் பார்வை அப்படியே நிலைத்தது. ஜராசந்தனின் மகத நாட்டைத் தவிர, பரதகண்டத்தில் வேறு எங்கும் ஒரு தீண்டத்தகாதவன் ஓர் அரசனோடு சமமாக அமர்ந்திருக்க மாட்டான், அவனோடு சேர்ந்து உணவருந்தியிருக்க மாட்டான் என்று கிருஷ்ணன் நினைத்தான். தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த புகழ்பெற்றத் தளபதியைப் பொருட்படுத்தாமல், பீமன், பல நாட்களாகப் பட்டினி கிடந்திருந்தவனைப்போல வயிறு புடைக்கத் தின்று கொண்டிருந்தான். கிருஷ்ணனுக்கு பீமனின் கடைக்கண் பார்வை கிடைப்பதற்குச் சிறிது நேரம் ஆனது. சம்பிரதாயப்படி அவனுடைய வாழையிலைக்கு இடப்பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த நீர்க்குவளையை மகத நாட்டுத் தளபதியின் இலையில் கவிழ்த்துவிடுமாறு கிருஷ்ணன் அவனுக்குச் சைகை காட்டினான். இந்த வினோதமான கோரிக்கையை பீமனால் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆனால் காரணங்களோ அல்லது சந்தேகங்களோ அவனை ஒருபோதும் தொந்தரவு செய்ததில்லை. கிருஷ்ணன் என்ன கூறினாலும், அவன் தயக்கமின்றி எப்போதும் அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தான். எனவே, தவறுதலாக நிகழ்ந்ததுபோல, பீமன் தன் நீர்க்குவளையைக் கவிழ்த்தான். அதிலிருந்த தண்ணீர் இரணியதனுசுவின் இலைக்கு வழிந்தோடியது. அத்தளபதி தன்னிச்சையாக அந்தத் தண்ணீரைத் தன் இலையிலிருந்து தள்ள முயன்றபோது, ஒருசில துளிகள் பீமன்மீது தெறித்துவிட்டன.

“ஏய், இது ஓர் அவமரியாதை!” என்று கத்திக் கொண்டே கிருஷ்ணன் மேலும் கீழும் குதித்தான். சாப்பிடுவதை நிறுத்திவிட்டு எல்லோரும் ஆச்சரியத்தில் நிமிர்ந்து பார்த்தனர்.

பீமன் கிருஷ்ணனின் குறிப்பைப் புரிந்து கொண்டான். “தீண்டத்தகாதவனே, ஒரு சத்திரியனின்மீது அழுக்குத் தண்ணீரைக் கொட்டுவதற்கு உனக்கு எவ்வளவு துணிச்சல்?” என்று கூறி, அவன் தன் முஷ்டியை அந்த மேசையின்மீது ஓங்கிக் குத்தினான்.

மகத நாட்டுத் தளபதியிடம் இத்தகைய முறையில் பேசுவதற்கு யாரும் துணிந்ததில்லை. ஜராசந்தன் கோபத்தோடு எழுந்து, “இளவரசே, தயவு செய்து தளபதி இரணியதனுசுவிடம் உடனடியாக மன்னிப்புக் கேட்டுவிடுங்கள். என் விருந்தோம்பலுக்கும் எல்லைகள் உண்டு. நீங்கள் என் அரண்மனைக்கு வந்து என் நண்பனையும் தளபதியையும்

அவமானப்படுத்திவிட்டு, இங்கிருந்து தப்பிச் சென்றுவிடலாம் என்று நினைத்துவிடாதீர்கள்," என்று கூறினான்.

கோபம் தலைக்கேறியிருந்த அரசனைப் பார்த்து, தளபதி இரணியதனுசு, "மேன்மை மிக்கவரே, இது ஒன்றுமில்லை," என்று அமைதியான கண்ணியத்தோடு கூறினான். பிறகு பீமனை நோக்கித் திரும்பி, "இளவரசே, இது என் தவறு! தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்," என்று கூறினான்.

"நீ ஒரு சத்திரியனை ஏளனப்படுத்திவிட்டாய். ஒரு வீரனின் கோபத்தை விரைவில் நீ தெரிந்து கொள்வாய். என்னுடன் ஒற்றைக்கு ஒற்றச் சண்டைக்கு வருமாறு நான் உனக்குச் சவால்விடுகிறேன்," என்று கூறிய பீமன், தன் காலால் நிலத்தின்மீது ஓங்கி மிதித்தான்.

அந்தப் பாண்டவனின் வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்த இரணியதனுசு தயங்கினான்.

"வேண்டாம் பீமா, விட்டுவிடு. உன்னுடைய சவாலை ஏற்றுக் கொள்வதற்குத் தளபதிக்கு விருப்பமில்லை என்பதுபோலத் தெரிகிறது. அரசனின் அவையில் அவன் ஓர் அலங்காரப் பொருள் மட்டுமே. தகுதியற்ற ஒருவனை ஜராசந்தன் தன் படைத்தளபதியாக நியமித்திருப்பதால்தான் இவன் இப்பதவியில் இருக்கிறான்," என்று கிருஷ்ணன் கூறினான். அவனுடைய புன்னகை மட்டும் அவனுடைய உதடுகளைவிட்டு ஒருபோதும் அகலவில்லை.

மகத நாட்டின் தளபதிக்கு வேறு வழி இருக்கவில்லை. அவனுடைய கீழ்நிலை அதிகாரிகள் மற்றும் வீரர்களின் கண்கள் அவன்மீது பதிந்திருந்தன. பீமனின் சவாலில் இருந்து அவன் பின்வாங்கினால், அவர்களுடைய மதிப்பை அவன் இழந்துவிடுவான். அவன் தன் வாழ்நாள் முழுதும் மரியாதையோடு வாழ்ந்திருந்தான், தன் அரசனுக்கும் தன் நாட்டிற்கும் சிறப்பாகச் சேவை செய்திருந்தான். அவன் நிமிர்ந்த தலையுடன் இறக்க விரும்பினான். தன்னைவிட முப்பது வயது குறைந்தவனான அந்த இளம் பாண்டவனுக்குத் தான் இணையானவன் அல்ல என்பதை அவன் அறிந்திருந்தபோதும், அவன் பீமனின் சவாலை ஏற்றுக் கொண்டு, தன் கைகளைக் கழுவிவிட்டு வந்தான். பிறகு, அங்கிருந்த ஒரு சிவலிங்கத்தின் முன்னால் குனிந்து தலை வணங்கினான். அவன் தன் நெற்றியையும் மார்பையும் தொட்டு, கடவுளின் விருப்பத்திடம் தன்னை ஒப்படைத்துவிட்டு, அமைதியாகத் தன் இறுதிப் பிரார்த்தனைகளைக் கூறினான். சிவபெருமான் அவனிடம் மிகவும் அன்போடு இருந்து வந்திருந்தார். எந்தவொரு தாழ்ந்த சாதிக்காரனாலும் கனவில்கூட நினைத்துப் பார்த்திர முடியாத ஒரு நிலையை அவன் அடைந்திருந்தான். தன் மகன் ஏகலைவனைத் தான்

பார்க்க மாட்டோம் என்பது மட்டும்தான் அவனுடைய ஒரே வருத்தமாக இருந்தது. "கடவுளே, என் மகனைப் பார்த்துக் கொள்," என்று அவன் வேண்டிவிட்டு, தன்னை நிமிர்த்திக் கொண்டு ஜராசந்தனை நோக்கி நடந்தான்.

பழமைவாதத்தைத் துணிச்சலோடு எதிர்த்து, மகத நாட்டின் படையைத் தன்னை நம்பித் தன்னிடம் ஒப்படைத்து, இத்தனைக் காலமும் தனக்கு ஆதரவாக இருந்து வந்திருந்த அரசன் ஜராசந்தனை அவனுடைய தளபதி இரணியதனுசன் பார்த்தான். ஜராசந்தன் அவனைக் கட்டியணைத்து, "இரணியா, இவன் நம்மைச் சிக்க வைத்துள்ளான். அவர்கள் யாரும் மகதத்திலிருந்து உயிரோடு திரும்பிப் போக மாட்டார்கள். உனக்கு ஏதேனும் நிகழ்ந்தால், என் வெற்றுக் கைகளாலேயே நான் அவர்களைக் கொன்றுவிடுவேன்," என்று அவனுடைய காதில் கிசுகிசுத்தான்.

தளபதி இரணியதனுசு அதை ஆமோதிக்கும் விதமாகத் தலையசைத்துவிட்டு, "மேன்மை மிக்கவரே, நான் விடைபெற்றுக் கொள்கிறேன். என் இதயம் என்றென்றும் உங்கள் பாதங்களிலேயே இருக்கும்," என்று கூறினான்.

பீமனுக்கும் தளபதிக்கும் இடையேயான சண்டை துவங்கியபோது, ஒருசில நிமிடங்களில் அந்த வயோதிகனின் கதையைத் தான் முடித்துவிடப் போவதாக பீமன் நினைத்தான். ஆனால், பல போர்களைச் சந்தித்திருந்த அந்தத் தளபதி, அவ்வளவு எளிதில் வெற்றி கொள்ளப்படக்கூடியவன் அல்ல என்பதை அந்தப் பாண்டவன் விரைவில் உணர்ந்தான். இரணியதனுசு மன உறுதியோடு பீமனை எதிர்த்துச் சண்டையிட்டான். பீமனின் பெரிய உருவத்தை அவன் தன் திறமையாலும் அனுபவத்தாலும் கையாண்டான். இரண்டு மணிநேரத்திற்குப் பிறகும்கூட அந்தச் சண்டை தொடர்ந்தது. இரணியதனுசு பீமனை இரண்டு முறை தரையோடு தரையாகச் சாய்த்திருந்தான். ஆனால் வீரர்களின் விதிமுறையை மதித்து, பீமன் எழுவதற்காக அந்த இரண்டு முறையும் அவன் பொறுமையாகக் காத்திருந்தான். ஆனால் முதுமைக்குச் சில குறைபாடுகளும் இருந்தன. நேரம் செல்லச் செல்ல, மகதத் தளபதி களைத்துப் போயிருந்ததற்கான அறிகுறிகள் அவனிடமிருந்து வெளிப்படத் துவங்கின. தன் எதிராளி களைத்துக் கொண்டிருந்ததை உணர்ந்த பீமனுக்கு, இரணியதனுசு இடறி விழுந்தபோது ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஒருவன் தன் கர்மாவைச் செய்யும்போது, எந்தவிதமான மரியாதை நெறிமுறையும் பொருந்தாது என்று பீமனுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, கீழே விழுந்த முதியவனின்மீது அவன் வேகமாகப் பாய்ந்து,

அவனைத் தரையோடு தரையாகக் கிடத்தினான். பிறகு, கண்ணிமைக்கும் நேரத்தில், பரதகண்டத்தின் முதல் வேடுவத் தளபதியின் கழுத்தை அவன் உடைத்தான்.

தன் நண்பன் இறந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த ஜராசந்தன் தன் கட்டுப்பாட்டை இழந்து, உளக்கொதிப்போடும் கடுஞ்சீற்றத்தோடும் அந்தச் சண்டைக்குள் குதித்தான். மகத அரசனின் எதிர்நடவடிக்கையைக் கண்டு கிருஷ்ணன் புன்னகைத்தான். இதைத்தான் அவன் துல்லியமாக எதிர்பார்த்திருந்தான். பற்றுதான் அனைத்துத் துயரங்களுக்கும் மகிழ்ச்சியின்மைக்குமான மூல காரணம் என்றும், பற்றற்றத் தன்மைதான் முக்திக்கு வழி வகுக்கும் பண்புநலன் என்றும் கிருஷ்ணன் தன் அறிவுரையைக் கேட்கத் தயாராக இருந்த எவரொருவரிடமும் எப்போதுமே கூறி வந்தான். ஆனால் அந்த மூட அரசன், தன் நண்பன் இறந்ததைக் கண்டதும் தன் கட்டுப்பாட்டை இழந்திருந்தான். எனவே, ஜராசந்தன், தன் மாயை உலகில் தன்னைத் தொலைத்திருந்த ஓர் அறிவிலி என்று அர்த்தமாகும். அவன் தன் நண்பன்மீது அளப்பரிய ஒட்டுதலைக் கொண்டிருந்ததால், ஆன்மாவிற்கு ஒருபோதும் அழிவில்லை என்பதையும், மரணம் என்பது ஒரு மாயை மட்டுமே என்பதையும் புரிந்து கொள்வதற்கான ஞானம் அவனிடம் இருக்கவில்லை. தன் நண்பன் வெறுமனே தன் உடையை மாற்றியிருந்தான் என்பதையும், அவனுடைய ஆன்மா தான் வாசம் செய்வதற்கு வேறோர் உடலைத் தேடிச் சென்றிருந்தது என்பதையும் அவன் அறியவில்லை. பீமன் அந்தத் தளபதியின் ஆன்மாவைக் கொன்றிருக்கவில்லை. எனவே, அத்தளபதி பீமனின் கைகளால் இறந்திருக்கவில்லை. இவை அனைத்தும் மாயைதான்.

பீமன் தன் எழுபது வயது எதிரியின் உடலைப் பார்த்துவிட்டுச் சத்தம் போட்டுச் சிரித்தான். அவன் அந்த உடலை ஒரு பக்கமாக எட்டி உதைத்துவிட்டு, ஜராசந்தனைத் தன்னுடைய பெரிய கைகளால் பிடிக்கச் சென்றான். ஜராசந்தன் பீமனின் வழியிலிருந்து திறமையாக விலகி, அவனுடைய கழுத்தைத் தன் இடது கையால் பிடித்தான். பிறகு, பலம் வாய்ந்த தன் வலது கையால், அந்தக் காட்டுமிராண்டியை நையப் புடைக்கத் துவங்கினான். பீமன் போராடினான், ஆனால் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் கெஞ்சும் விதமாகத் தன்னுடைய மீட்பனைப் பார்த்தான். கிருஷ்ணனின் கண்களிலிருந்து ஒரு குறிப்பைப் பெற்றுக் கொண்ட அவன், ஜராசந்தனின் தொடைகளுக்கு இடையே ஓங்கிக் குத்தினான். அது ஜராசந்தனின் மரணப் பிடியிலிருந்து அவனை விடுவித்தது. ஜராசந்தன் வலியிலும் கோபத்திலும் சுருண்டு, தன் எதிராளியின்மீது காறித் துப்பினான். போர்களில் சாதாரண

வீரர்கள்கூட இடுப்பிற்குக் கீழே தாக்கியதில்லை. ஆனால் ஒருபோதும் கேள்வி கேட்காத பீமன், வழக்கம்போலக் கிருஷ்ணனின் அறிவுறுத்தல்களை வெறுமனே பின்பற்றிக் கொண்டிருந்தான். அவன் தன் எதிரியை நோக்கி விரைந்து சென்று, அவனைத் தரையின்மீது சாய்த்தான். இரணியதனுசுவின் மார்பின்மீது குதித்ததைப்போலவே ஜராசந்தனின்மீதும் அவன் குதிக்க முயற்சித்தான். ஆனால் அந்த அரசனிடம் இன்னும் ஒருசில தந்திரங்கள் இருந்ததால், கடைசிக் கணத்தில் அவன் அந்த இடத்திலிருந்து உருண்டு சென்றான். இதனால் பீமன் முகம் குப்புறக் கீழே விழுந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஜராசந்தன் அவன்மீது ஏறி அமர்ந்து, பீமனின் கழுத்தைத் திருக முயற்சித்தான். ஆனால் அந்தப் பாண்டவன் எப்படியோ தன்னை விடுவித்துக் கொண்டான். தன்னுடைய நேரம் வேகமாகக் கரைந்து கொண்டிருந்ததை ஜராசந்தன் உணர்ந்தான். சண்டை அதிக நேரம் நீடித்தால், தன் நண்பனுக்கு நேர்ந்த அதே நிலைமையைத்தான் தானும் எதிர்கொள்ள நேரிடும் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது.

கிருஷ்ணன் அந்தப் போட்டியை ஆர்வத்தோடு பார்த்தான். தன் தத்துவத்திற்கு உண்மையாக நடந்து கொண்ட அவன், தனக்காக வாழ்வும் சாகவும் தயாராக இருந்த பீமனைக் குறித்தோ அல்லது அவனுடைய சகோதரர்களைக் குறித்தோ எந்தப் பற்றும் கொண்டிருக்கவில்லை. அவன் அவற்றையெல்லாம் கடந்த ஞானத்தைப் பெற்றிருந்தான். ஒரு பீமனோ அல்லது அர்ச்சுனனோ இறந்து போனால், அவர்களுடைய இடத்தை ஆக்கிரமிப்பதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் இருந்தனர். ஆனால் ஜராசந்தனின் வெற்றி, தான் எதை நம்பினோமோ, எதற்காக வாழ்ந்தோமோ, அதற்கு எதிராகப் போகும் என்பதைக் கிருஷ்ணன் அறிந்தான். எப்போதும் அசௌகரியமூட்டிய கேள்விகளைக் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்த அர்ச்சுனனைவிட, கிருஷ்ணனுக்கு பீமன் அதிகப் பயன் கொண்டவனாக இருந்தான். பெரிய் உருவத்தைக் கொண்ட அந்தப் பாண்டவன் வெறுமனே கீழ்ப்படிந்து நடந்தான். பீமனுக்காக மிகப் பெரிய திட்டங்களும் பயன்பாடுகளும் கிருஷ்ணனிடம் இருந்தன. ஆனால் ஜராசந்தன் கிருஷ்ணனின் சதுரங்கப் பலகையில் ஒரு சாதாரணச் சிப்பாயாக மட்டுமே இருந்தான். ஒரு சிப்பாய்க்காகத் தன் யானையைப் பறி கொடுப்பது அவனுக்குக் கட்டுப்படியாகவில்லை. கிருஷ்ணன் ஒரு வெற்றிலையை எடுத்து, பீமன் தன்னைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தான். பீமன் அவனுடைய கண்களைப் பார்த்தபோது, கிருஷ்ணன் அந்த வெற்றிலையை இரண்டாகக் கிழித்து, ஒரு துண்டைத் தன் இடப்பக்கத்திலும் இன்னொன்றைத் தன்

வலப்பக்கத்திலும் எறிந்தான். பீமன் அதைப் புரிந்து கொண்டு தலையாட்டினான்.

ஜராசந்தன் மீண்டும் கீழே விழுந்தபோது, பீமன் தன்னை நோக்கி விரைந்து வந்து தன்னுடைய கழுத்தைப் பிடிப்பான் என்று எதிர்பார்த்து, அதை எதிர்கொள்ளத் தயாராக இருந்தான். ஆனால் அவனை ஆச்சரியப்படுத்தும் விதத்தில், பீமன் அவனுடைய வலது காலைப் பிடித்துக் கொண்டு, தன்னுடைய பெரிய பாதத்தை ஜராசந்தனின் இடது காலின்மீது வைத்து, அவனைத் தரையோடு தரையாக அழுத்தினான். பிறகு, தன் அளப்பரிய வலிமையைப் பயன்படுத்தி, இடுப்பின்கீழ் இருந்த பகுதியிலிருந்து ஜராசந்தனை இரண்டாகக் கிழிக்கத் துவங்கினான். பீமன் அவனை அங்குலம் அங்குலமாகக் கிழித்துக் கொண்டிருந்தபோது, ஜராசந்தன் வேதனையில் அலறினான். மதுராவைப் பதினேழு முறை தாக்கி, கிருஷ்ணனையும் பலராமனையும் துவாரகைக்கு ஓடச் செய்திருந்தவன் அவன். சாதியின் அடிப்படையில் அன்றி, தகுதியின் அடிப்படையில் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி நடத்திக் கொண்டிருந்ததன் மூலம் பழமைவாதத்திற்கும் புனித நூல்களுக்கும் சவால்விடத் துணிந்திருந்தவன் அவன். அந்த மாபெரும் அரசன் ஜராசந்தன் தன்னுடைய அனைத்துப் பாவங்களுக்காகவும் இப்போது வேதனையோடு மெல்ல மெல்ல இறந்து கொண்டிருந்தான்.

பீமன் தன் முஷ்டிகளைத் தன் பரந்த மார்பின்மீது அடித்துக் கொண்டதன் மூலம் தன் வெற்றியைக் கொண்டாடினான். கிருஷ்ணன் புத்திசாலி. தங்கள் தளபதியும் தங்கள் அரசனும் இறந்ததைப் பார்த்த வீரர்களிடையே நிலவிய பதற்றத்தை அவன் பார்த்தான். அங்கு ஒரு கலவரம் வெடிப்பதை அவன் விரும்பவில்லை. மாறாக, நகரச் சிறைச்சாலை இருந்த இடத்தை நோக்கி அவன் ஓடினான். ஆபத்தை உணர்ந்த பீமன், கிருஷ்ணனைப் பின்தொடர்ந்தான். கொதித்துப் போயிருந்த வீரர்களை எப்படியாவது சமாளிக்குமாறு கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் கூறிவிட்டு அங்கிருந்து ஓடினான். ஜராசந்தனின் அரண்மனையில் இருந்த கிருஷ்ணனின் ஒற்றர்கள், கிருஷ்ணனின் திட்டப்படி அவனுடன் சேர்ந்து கொண்டனர். பல வருடங்களுக்கு முன்பு ஜரசாந்தனுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தொண்ணூற்று ஐந்து அடிமை அரசர்களை விடுவிப்பதுதான் அவனுடைய நோக்கமாக இருந்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு நேரத்தில் அவனுடைய தாராளக் கொள்கைகளை எதிர்த்திருந்தனர். ஜராசந்தனின் மகன் சுதேவனும் அவர்களில் ஒருவன். ஒரு தீண்டத்தகாதவனை மகத நாட்டின் தளபதியாகத் தன் தந்தை நியமித்திருந்தபோது அவன் ஓர் அரசியல் புரட்சிக்கு முயற்சித்திருந்தான்.

கிருஷ்ணன் சிறைக் கதவுகளைத் திறந்து அக்கைதிகளை விரைவாக விடுவித்தான். அர்ச்சுனனும் அவனுக்குப் புதிதாகக் கிடைத்திருந்த ஒருசில ஆதரவாளர்களும் கொதிப்படைந்திருந்த வீரர்களை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் ஓடினர். மகத நாட்டின் பட்டத்து இளவரசன் அங்கு வந்தது அச்சூழ்நிலையை ஓரளவு அமைதிப்படுத்தியது. தளபதி இரணியதனுசுவும் அரசன் ஜராசந்தனும் சத்திரியர்களைப்போலச் சண்டையிட்டு இறந்திருந்தனர் என்றும், சண்டையிடுவதுதான் ஒரு சத்திரியனின் தர்மம் என்றும், அவர்கள் இருவரும் தங்கள் தர்மத்தைச் செய்ததன் மூலம் மோட்சத்தை அடைந்திருந்தனர் என்றும் கிருஷ்ணன் அவ்வீரர்களிடம் கூறினான். அவன் தன்னுடைய சிறந்த பேச்சுத் திறமையாலும் அடுத்தவரைத் தன் கருத்தை ஒப்புக் கொள்ள வைக்கும் திறனாலும் அந்த வீரர்களை அமைதிப்படுத்தினான். பழமைவாதிகளுக்குப் பிரியமான சுதேவன், தன் தந்தை மற்றும் தளபதியின் சிதைகள் அணைந்து சூடு தணிவதற்கு முன்பாகவே மகத நாட்டின் புதிய அரசனாக ஆகியிருந்தான்.

கிருஷ்ணனும் அவனுடைய நண்பர்களும் ஒருவழியாக மகத நாட்டைவிட்டுப் புறப்பட்டபோது, இறந்து போன அரசனுக்கும் தளபதிக்கும் விசுவாசமாக இருந்த மகதப் படையின் ஒரு சிறு பகுதியினர், அப்படையிலிருந்து விலகி, அடைக்கலம் தேடி அடிமை ராஜ்யமான சேதி நாட்டுக்குத் தப்பியோடினர். அந்த ராஜ்யத்தின் அரசனான சிசுபாலன், ஜராசந்தனின் பழைய நண்பன். சேதி நாட்டுக்குத் தப்பிச் சென்ற வழியில், அவ்வீரர்கள், இறந்து போன தங்கள் தளபதி இரணியதனுசுவின் மகனைச் சந்தித்தனர். தன் தந்தையைப் பார்க்க மிகவும் ஆர்வமாக இருந்திருந்த ஏகலைவன், அவனுடைய மரணச் செய்தியைக் கேட்டுப் பேரதிர்ச்சி அடைந்தான்.

அஸ்தினாபுரத்திற்குத் திரும்பிச் செல்லும் வழியில், கலகக்காரர்களைப் பற்றிக் கிருஷ்ணன் கேள்விப்பட்டான். அது ஒரு சிறிய பிரச்சனை என்றும், நேரம் வரும்போது அதைத் தான் சமாளித்துக் கொள்ளலாம் என்றும் அவன் நினைத்துக் கொண்டான். அது, தலைசிறந்த வியூகவாதியான அவனுக்குப் பின்னாளில் பெரும் பிரச்சனையாக ஆனது.

* * *

“இதை ஒரு பிரச்சனையாகப் பார்க்காமல் ஒரு வாய்ப்பாகக் கருதிக் கொள்,” என்று கிருஷ்ணன் தர்மனிடம் கூறினான்.

“ஆனால் காண்டவம் யாராலும் ஊடுருவ முடியாத ஒரு காடு.

அனைத்து விதமான விலங்குகளும் ஆக்ரோஷமான பழங்குடியினரும் நிரம்பி வழியும் ஓரிடம் அது என்று நான் கேள்விப்படுகிறேன். அங்கு எப்படி நான் ஒரு நகரத்தை உருவாக்குவது? எங்கள்மீது வஞ்சம் தீர்ப்பதற்காகவே எங்கள் பெரியப்பா திருதராஷ்டிரன் இவ்வாறு செய்துள்ளார்," என்று பதிலளித்த தர்மன் அமைதியாக இருக்க முயன்றான். ஆனால் அவன் அந்த அநீதியைப் பற்றி எவ்வளவு அதிகமாக நினைத்துப் பார்த்தானோ, அவனுக்கு அவ்வளவு அதிகக் கோபம் ஏற்பட்டது.

"நண்பா, நான் இங்கு இருக்கும்போது நீ ஏன் கவலைப்படுகிறாய்? அர்ச்சுனனும் நானும் இன்னொரு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இம்முறை நாங்கள் காண்டவத்திற்குச் செல்ல வேண்டும்," என்று கூறிய கிருஷ்ணன் அர்ச்சுனனைப் பார்த்துப் புன்னகைத்தான். ஆனால் அந்த மாபெரும் வீரன், பதிலுக்குத் தடுமாற்றத்துடன் புன்னகைத்தான்.

ஒரு வாரத்திற்குள், கிருஷ்ணனும் அர்ச்சுனனும் தங்கள் படையுடன் காண்டவக் காட்டை நோக்கிப் பயணித்தனர். வழியில், அந்தக் காட்டிற்கு உண்மையான சொந்தக்காரனான கடைசி இந்திரனின் பரிதாபக் கதையைக் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கூறினான். காண்டவத்தின் தாழ்வான குன்றுகளை அவர்கள் நெருங்கியபோது, கிருஷ்ணன் கூறிய ஒரு விஷயத்தைக் கேட்டு, அர்ச்சுனன் தன் குதிரையின்மீதிருந்து கிட்டத்தட்டத் தடுமாறிக் கீழே விழுந்தான்.

அதிர்ச்சியடைந்த அர்ச்சுனன், கோபத்தால் உடல் நடுங்கியவாறு, "கிருஷ்ணா, நீ என்ன கூறுகிறாய்? என்னுடைய மிக மோசமான சந்தேகங்களை நீ உறுதிப்படுத்துகிறாய். துரியோதனன் எங்களை வேசி மகன்கள் என்று அழைத்தது சரிதான் என்று நீ கூறுகிறாயா? நாங்கள் கடவுள்களின் மகன்களாக இருப்பது பற்றிய கதை வெறும் பிரச்சாரம் என்று நான் நினைத்தேன். ஆனால் இப்போது, என் தந்தை உயிரோடு இருக்கிறார் என்றும், வீழ்த்தப்பட்டுவிட்ட தேவ சாம்ராஜ்யத்தின் ஓர் இளவரசர் அவர் என்றும் நீ கூறிக் கொண்டிருக்கிறாய்," என்று கூறினான்.

கிருஷ்ணன் ஒரு மர்மப் புன்னகையை வெளிப்படுத்தினான். "அது இப்போது முக்கியமல்ல. உன் தாயிடம் சென்று கேள். அல்லது நீ இந்திரனைச் சந்தித்தால், அவனிடமே கேள். அர்ச்சுனா, நீதான் இந்திரனின் கடைசி மகன். அது குறித்து நீ பெருமைப்பட வேண்டும். இப்போதைய இந்திரன் ஒரு தகுதியற்ற மனிதனாக இருக்கலாம், ஆனால் உன்னுடைய புகழ்மிக்க மூதாதையரின் ரத்தம் உன் நாளங்களில் ஓடிக் கொண்டிருக்கிறது."

“அப்படியென்றால், அஸ்தினாபுரத்தின் அரியணைக்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று பொருளாகிறது. துரியோதனன்தான் அந்த ராஜ்யத்தை சுவீகரிக்க வேண்டும். நாங்கள் வேசி மகன்கள். ஆனால் அவன் தற்போதைய அரசரின் மூத்த மகன். அது மட்டுமன்றி, என் பெரியப்பா திருதராஷ்டிரன்தான் மூத்தவர், உரிமைமிக்க வாரிசு அவர்தான். என் தந்தை பாண்டு . . . அரியணைக்கு அவருக்கு எந்தத் தகுதியும் இருக்கவில்லை. கிருஷ்ணா, இதற்கு என்ன பொருள்? நீ ஏன் என்னை இவற்றையெல்லாம் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறாய்?” என்று அர்ச்சுனன் குழப்பத்தோடு கிருஷ்ணனிடம் கேட்டான்.

“என் இனிய நண்பனே, இப்படிப்பட்டச் சிறிய விவகாரங்களைப் பற்றிக் கவலைப்படாதே. உன் சகோதரன் தர்மன் ஒருவனால்தான் இந்த நாட்டை அதர்மத்திலிருந்து காப்பாற்ற முடியும். துரியோதனன் அரசனாக ஆவது இப்புனித பூமிக்குப் பேரழிவைக் கொண்டு வரும். அவன் யாருடன் நட்புறவாடிக் கொண்டிருக்கிறான் என்று பார் — தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த கர்ணன், பாதை தவறிப் போன அசுவத்தாமன், பைத்தியக்காரக் கிருபன், சமய நம்பிக்கையற்றச் சார்வகன். இந்தப் பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே போகிறது. இப்படிப்பட்டவன் ஆட்சி செய்வதைக் கற்பனை செய்து பார். நம் மூதாதையர் நன்றாகச் சிந்தித்து உருவாக்கியுள்ள இந்த அமைப்புமுறைக்கு என்ன நிகழும் என்று கற்பனை செய்து பார். நம் சமுதாய ஒழுங்குமுறைக்கு என்ன நேரும்? துரியோதனன் தற்போதைய அரசனின் மூத்த மகனாக இருப்பது வெறும் சம்பிரதாயம் மட்டுமே. இவற்றைப் பற்றி நீ அலட்டிக் கொள்ளாதே. நேரம் வரும்போது நாம் பார்த்துக் கொள்ளலாம். இப்போது ஒரு சத்திரியன் என்ற முறையில் உன் கடமையைச் செய். காண்டவத்தை அழிப்பதன்மீதுதான் உன் ஒட்டுமொத்தக் கவனமும் இருக்க வேண்டும்.”

கிருஷ்ணன் அந்த இளம் வீரனின் கண்களில் சந்தேகத்தைப் பார்த்தான். “அர்ச்சுனா, என்றேனும் ஒருநாள் இந்த விஷயங்களையெல்லாம் நான் உனக்கு விளக்குவேன். நேரம் வரும்போது உன்னுடைய சந்தேகங்கள் அனைத்தையும் நான் தெளிவுபடுத்துவேன். உன் கர்மா எது, உன் தர்மம் எது என்று நான் உனக்குக் கற்றுக் கொடுப்பேன். இப்போதைக்கு, நமக்கு முன்னால் உள்ள பணியில் நாம் கவனம் செலுத்தலாம். துரியோதனனின் படையை எதிர்த்துச் சண்டையிடுவதற்கு, பாண்டவர்களான உங்களுக்கென்று சொந்தமாக ஒரு ராஜ்யம் வேண்டும். உன் மனைவியரை நிரந்தரமாக ஒரு குடிசையிலேயே வைத்திருக்க நீ விரும்புகிறாயா? ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு இளவரசிகளுக்குத் தகுதி இல்லையா? உன்

தாயின் நலனுக்காகவும் உன் சகோதரர்களின் நலனுக்காகவும் நீ சண்டையிட்டுத்தான் ஆக வேண்டும்.”

கிருஷ்ணனின் வார்த்தைகள் அர்ச்சுனனுக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்தின. அவனுடைய தாயும் சகோதரர்களும் இதைவிடச் சிறந்த வாழ்க்கை வாழ்வதற்குத் தகுதியானவர்கள். தன் திறமையின் மூலம் தான் வெற்றி கொண்டிருந்த இளவரசி திரௌபதியும், தன் சொந்த வாழ்க்கையைவிட அதிகமாகத் தான் நேசித்த சுபத்திரையும் ஒரு சிறப்பான வாழ்க்கைக்குத் தகுதியானவர்கள். முன்னேற்றம் மற்றும் நாகரீகத்திற்கான பாதையைக் கிருஷ்ணன் அவனுக்குக் காட்டிக் கொண்டிருந்தான். ஒரு காடு என்பது சில மரங்கள் மற்றும் புதர்களைத் தவிர வேறு எதுவுமில்லை. அது சில பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் வசிப்பிடமாக இருந்தது. ஒருசில நாகரீகமற்றப் பழங்குடி இனத்தவரின் இருப்பிடமாக இருந்தது. அவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுவது தன் கடமை என்று அர்ச்சுனன் நினைத்தான். கிருஷ்ணன் கூறியது சரிதான். அந்தக் காடு முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். அதனிடத்தில், ஒரு நகரம் உருவாக்கப்பட வேண்டும். அதன் குன்றுகள் நின்ற இடத்தில், உயர்ந்த கோபுரங்கள் கட்டியெழுப்பப்படும். நெடிய மரங்கள் வெட்டப்பட்டு, அங்கு கடைகளுக்கும் இடம் ஒதுக்கப்பட வேண்டும். புலிகள் வலம் வந்த இடத்தில், ரதங்கள் வேகம் பிடிக்கும். மலை நீரோடைகள் ஓடிய இடங்களில் கழிவுநீர் ஓடைகள் ஓடும்.

கிழக்கில் பரந்து விரிந்து கிடந்த பசுமையான குன்றுகளை அர்ச்சுனன் பார்த்தான். யமுனை ஆறு அந்தக் காட்டின் ஊடாக வளைந்து நெளிந்து ஓடி, மரங்களுக்கிடையே கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. அதன் கரிய நீர், அதன் இரு கரைகளின்மீதும் இருந்த செழிப்பான பசுமையுடன் முரண்பட்டு இருந்தது. பறவைகள் கூட்டம் ஒன்று வானின் ஊடாகப் பறந்து சென்று, காரசாரமான கூக்குரல்களுடன், நெடிதுயர்ந்த மரங்களின் உச்சிக்குள் மறைந்து போனது. மலர்களின் நறுமணம் காற்றை நிரப்பியது. அர்ச்சுனனைச் சுற்றிப் பல பட்டாம்பூச்சிகள் படபடத்தன. மழை வருவதற்கான அறிகுறி தென்பட்டது. காட்டின் எங்கோ ஓர் ஆழத்தில், காதலை எதிர்பார்த்து மயில் ஒன்று கூச்சலிட்டது. ஈரமான தென்றல் ஒன்று இலைகளை உரசிச் சென்று, அர்ச்சுனனின் ஆடைகளோடு ஒட்டிக் கொண்டு, அவனுடைய வசீகரமான முகத்தை வருடிவிட்டு, பிறகு ஒரு பெருமூச்சோடு அவனைக் கடந்து போனது. லேசாக மழை தூறத் துவங்கியது. அந்தப் பசுமையான காட்டின் மேலாக ஒரு வானவில் ஒரு வளைவான விதானத்தைப்போலத் தோன்றியது. வானிலிருந்து பொழிந்த மழை பூமியின்மீது மென்மையாக விழுந்தபோது,

தவளைகளின் ஒலியும் வெட்டுக்கிளிகளின் சத்தமும் இணைந்து ஓர் இனிய இசைக் கச்சேரியை நடத்தின. அர்ச்சுனனின் கால்கள் நடுங்கின. தன் வில்லைப் பிடித்திருந்த அவனுடைய வலிமையான கைகளும் நடுங்கின. "கிருஷ்ணா . . ." என்று அவன் கெஞ்சினான்.

ஆனால் கிருஷ்ணனின் முகம் உணர்ச்சியற்று இருந்தது. வானின் கண்ணீர் வற்றியபோது, தான் ஒரு கடவுள் என்று நம்பிக் கொண்டிருந்த ஒருவன், அர்ச்சுனனின் கைகளை ஸ்திரப்படுத்தி, ஓர் அமைதியான குரலில், "அம்பைத் தொடு!" என்று கட்டளையிட்டான்.

முனையில் நெருப்புப் பற்ற வைக்கப்பட்ட அம்பு ஒன்று அர்ச்சுனனின் வில்லிலிருந்து புறப்பட்டு, மர உச்சிகளுக்கு மேலாக வேகமாகப் பாய்ந்து சென்று, காட்டின் மையத்திற்குள் சென்று நிலைகுத்தி நின்றது. அர்ச்சுனனுடன் வந்திருந்த வீரர்கள் அக்காட்டைப் பெரும் உற்சாகத்துடன் அழிக்கத் துவங்கினர். விரைவில், பசியோடு இருந்த நெருப்பு, அந்தக் காட்டைப் பெருமகிழ்ச்சியுடன் கபளீகரம் செய்யத் துவங்கியது. அக்காட்டில் வாழ்ந்த விலங்குகளும் மனிதர்களும் அந்த நெருப்பிலிருந்து தப்பி ஓடுவதைத் தடுப்பதற்காக அர்ச்சுனனின் படையினர் அந்தக் காட்டைச் சுற்றி வளைத்து நின்றனர். பீதியில் ஒரு மான் அந்தக் காட்டைவிட்டுத் துள்ளி வெளியே குதித்தபோது, கிருஷ்ணன் அர்ச்சுனனிடம், "அதோ!" என்று கத்தினான். அர்ச்சுனன் ஓர் அம்பை எய்து அந்த மானின் இதயத்தைத் துளைத்தான். அது கீழே விழுந்து, ஒருசில நிமிடங்கள் துடித்துவிட்டு, பிறகு ஓசையின்றி இறந்து போனது. அதன் கண்ணாடி போன்ற கண்கள் அர்ச்சுனன்மீது நிலைத்திருந்தன. அந்த மென்மையான கண்கள் தன்மீது குற்றம் சாட்டுவதுபோல அர்ச்சுனனுக்குத் தோன்றியது. அந்த மாவீரனை ஒரு வினோதமான பயம் கவ்வியது.

"அர்ச்சுனா, நீ உன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறாய். அந்தப் பரிதாப விலங்கை, எண்ணற்றப் பிறப்புகள் மற்றும் இறப்புகள் மூலமாக ஏற்படக்கூடிய துயரம் எனும் முடிவற்றச் சுழற்சியிலிருந்து நீ விடுவித்திருக்கிறாய். நான் அதற்கு முக்தி அளித்துள்ளேன். தயங்காதே . . . அதோ . . . அந்தப் பறவைகளைப் பார் . . . அம்பைத் தொடு!" என்று கிருஷ்ணன் மீண்டும் கத்தினான், அந்த மாவீரன் அதற்குக் கீழ்ப்படிந்தான்.

அக்காட்டில் வாழ்ந்த விலங்குகளும் பறவைகளும் பீதியடைந்து, கடுஞ்சீற்றத்துடன் எரியத் துவங்கியிருந்த அந்த நெருப்பிலிருந்து தப்பிச் செல்லத் தொடங்கின. அர்ச்சுனனும் அவனுடைய வீரர்களும் இரக்கமின்றி அவற்றைக் கொன்று குவித்தனர். அவர்கள் எதையேனும் தவறவிட்டிருந்தால், அவர்களுடைய கடவுள் அவற்றைச்

சுட்டிக்காட்டினான். அவர்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டனர். "ஓர் உயிரினம்கூட இங்கிருந்து தப்பிச் செல்லக்கூடாது. எதனிடமும் இரக்கம் காட்டாதீர்கள். நாம் இங்கு ஒரு மாபெரும் நகரத்தைக் கட்டியெழுப்பப் போகிறோம். நாம் புதிதாக எதையேனும் துவக்குவதற்கு முன்பு இந்த இடத்தை முறையாகச் சுத்தப்படுத்தியாக வேண்டும். ஊர்வன, பறப்பன, நகர்வன என்று, ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் கொன்றுவிடுங்கள்," என்று கிருஷ்ணன் தன் வார்த்தைகளால் தன் வீரர்களை ஊக்கப்படுத்தினான்.

விரைவில், விலங்குகள், பறவைகள், ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் ஆகியவற்றின் உயிரற்ற உடல்கள் அந்த இடம் முழுதும் சிதறிக் கிடந்தன. தம் உயிருக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தை உணர்ந்த சில உயிரினங்கள், மனிதனைவிட அதிக இரக்கத்தை நெருப்பிடமிருந்து எதிர்பார்த்து, மீண்டும் நெருப்புக்குள் ஓடின. அந்த நெருப்பு அவற்றை வரவேற்று, இந்த மதிப்பற்ற வாழ்விலிருந்து அவற்றுக்கு முக்தி வழங்கியது. எரிந்து கொண்டிருந்த உடல்களின் துர்நாற்றத்தால் அந்தக் காற்று கனத்தது.

காட்டிற்குள், போராளிகளின் முகாமில் 2,000க்கும் அதிகமான நாகர்கள் இருந்தனர். தட்சகன் தன்னுடைய வீரர்களில் பெரும்பாலானோரை, தெற்கிலிருந்த தண்டகாரணியத்திற்குக் கூட்டிச் சென்றிருந்ததால், அந்த முகாமில் பெரும்பாலும் வயதான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இருந்தனர். போராளிகள் படை தெற்கில் ஊடுருவிக் கொண்டிருந்தது. தென்னக நாகர்களைச் சந்தித்து, எக்கணமும் நிகழவிருந்த புரட்சிக்கு அவர்களைத் தயார் செய்வது புத்திசாலித்தனமான செயலாக இருக்கும் என்று தட்சகன் நினைத்திருந்தான். காண்டவத்தின்மீதான தாக்குதலை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே அவன் அதன் பாதுகாப்பை இளைஞனான அசுவசேனனின் கைகளில் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தான்.

முதல் அம்பு அந்த ஓலைக்கூரையின்மீது சீறி வந்து விழுந்தபோது, கட்டடக் கலைஞனான மயாசுரன், தன் குடிசையின் சிறிய தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு, வானவில்லின் அழகான காட்சியை ரசித்துக் கொண்டிருந்தான். நெருப்பு முனைகளுடன்கூடிய எண்ணற்ற அம்புகள் அவனுடைய தலைக்கு மேலாகப் பறந்து சென்றபோது, அவன் ஆச்சரியத்தில் நிமிர்ந்து பார்த்தான். இன்னும் ஒருசில ஆண்களும் தங்கள் குடிசைகளைவிட்டு வெளியே வந்து, வானத்தை ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும் பார்த்தபடி நின்றனர். அவர்கள் எதுவும் செய்வதற்கு முன்பாகவே, அவர்களுடைய குடிசைகள்

தீப்பிடித்து எரியத் துவங்கின. பெண்களும் குழந்தைகளும் பீதியடைந்து அலறிய சத்தம் திகிலூட்டுவதாக இருந்தது.

"முட்டாள்களே, வாய் பிளந்து எதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? பெண்களையும் குழந்தைகளையும் குடிசைகளிலிருந்து வெளியே கொண்டு வாருங்கள்," என்று முதியவன் வாசுகி இரைச்சலுக்கு நடுவே கத்தினான்.

மயாசுரன் அந்த முதியவனை நோக்கி ஓடினான். ஒருசில இளம் நாகர்கள் அந்த முன்னாள் தலைவனைச் சுற்றிக் குழுமியிருந்தனர். மீட்பு நடவடிக்கைகளில் அவன் அவர்களை வழிநடத்திக் கொண்டிருந்தான். மயாசுரன் அவனை அடைந்தபோது. அசுவசேனன் கோபமாக அந்த முதியவனுடன் விவாதித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். வாசுகி அசுவசேனனைப் பார்த்து, உரத்தக் குரலில், "கருத்து வேறுபாடுகளுக்கான நேரம் இதுவல்ல. நீ கூறுவது சரியாக இருக்கக்கூடும். அஸ்தினாபுரத்து இளவரசன் இந்த நெருப்பை மூட்டியிருக்கக்கூடும். நாம் நம் உயிர்களைப் பாதுகாத்துக் கொண்ட பிறகு இதைப் பற்றிக் கலந்து பேசலாம். முதலில், ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இருக்கும் ஆண்கள் அனைவரையும் அழைத்து, பலவீனமானவர்களைக் காப்பாற்றுவதற்கு ஏற்பாடு செய்," என்று கத்தினான்.

"முட்டாளே! நெருப்பை எதிர்த்துச் சண்டையிடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. நெருப்பு முனையுடன்கூடிய அம்புகள் நம்மீது சரமாரியாக வந்து விழுந்து கொண்டிருப்பதைப் பார். நாம் அவர்களோடு நேருக்கு நேர் சண்டையிட வேண்டும். நம்முடைய குதிரைகளையும் ஆயுதங்களையும் நாம் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால், நம் தலைவர் திரும்பி வரும்போது, அவர் நம்மைக் காய்ச்சி எடுத்துவிடுவார்," என்று அசுவசேனன் பதிலுக்குக் கத்தினான். அக்கணத்தில் அவனுக்குப் பின்னால் இன்னொரு குடிசை நொறுங்கி விழுந்தது.

அவர்களைச் சூழ்ந்திருந்த உயரமான மரங்களில் நெருப்புப் பற்றியது. அதனால் உருவான வெப்பம் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்றுதான் மயாசுரனின் உள்ளுணர்வு முதலில் அவனிடம் கூறியது. ஆனால் வாசுகியின் அமைதியான துணிச்சல் அவனை இழுத்துப் பிடித்தது. நெருப்பில் சிக்கி இறந்து கொண்டிருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளின் அலறல்கள் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதாக இருந்தன.

அந்த ஒட்டுமொத்தக் காடும் ஒரு தீக்காடாக மாறியிருந்தபோது, அசுவசேனனும் வாசுகியும் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்தனர். "மகனே, நீ போய் உன்னுடைய முட்டாள்களின் போரில் சண்டையிடு.

ஒருசில குதிரைகளையும் வாள்களையும் காப்பாற்றுவதைவிட, என் மக்களைக் காப்பாற்றுவதுதான் என் முதல் கடமை," என்று கூறிய வாசுகி, நிலத்தின்மீது காறி உமிழ்ந்துவிட்டு, அங்கிருந்து திரும்பினான்.

அசுவசேனன் தன் தோள்களைக் குலுக்கிவிட்டு, "நரகத்தில் வெந்து மடி," என்று கத்திவிட்டு, குதிரை லாயங்களை நோக்கி ஓடினான். தம்மை நோக்கி விரைந்து கொண்டிருந்த நெருப்பைக் கண்டு பயந்த குதிரைகள் பெருங்குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்தன. பெரும்பாலான இளைஞர்கள் வாசுகியைக் கைவிட்டுவிட்டு, அசுவசேனனைப் பின்தொடர்ந்தனர். எரிந்து கொண்டிருந்த குதிரை லாயங்களுக்குள் நூற்றுக்கணக்கான ஆண்கள் நுழைந்ததைக் கண்ட மயாசுரன் பீதியடைந்து அஞ்சி நடுங்கினான்.

"இங்கு என்ன வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? போய் உன்னுடைய அன்னையரையும் சகோதரிகளையும் காப்பாற்று," என்று வாசுகி அந்த இளம் கட்டடக் கலைஞனிடம் கத்தினான்.

மயாசுரன் அந்தக் குடிசைகளை நோக்கி ஓடினான். ஒருசில ஆண்கள் அவனைப் பின்தொடர்ந்து ஓடினர். வெப்பம் தீவிரமடைந்து கொண்டிருந்தது. வெற்றிடத்தின் விளிம்பின் அருகே இருந்த பல குடிசைகளை நெருப்பு விழுங்கியிருந்தது. எரிந்து கொண்டிருந்த சதையின் துர்நாற்றம் குடலைப் புரட்டுவதாக இருந்தது. ஒருசில பெண்களும் குழந்தைகளும் அடங்கிய குழு ஒன்று, ஒரு வெற்றிடத்தின் தென்மூலையில் சேர்ந்து ஒடுங்கியிருந்ததை மயாசுரன் பார்த்தான். ஆனால் அந்தக் காட்டுத்தீ அவர்களை நிதானமாகச் சூழ்ந்து கொண்டிருந்தது. அவன் அந்த நெருப்பைச் சுற்றிச் செல்ல முயன்று, காட்டை நோக்கி ஓடினான். காட்டின் மையத்திலிருந்த குடிசைகளை அந்த நெருப்பைவிட வேகமாகத் தன்னால் சென்றடைய முடிந்தால், அந்த மக்களைத் தன்னால் காப்பாற்ற முடியும் என்று அவன் நினைத்தான். அவன் அந்தக் காட்டை நோக்கி ஓடியபோது, நாகர்களின் குதிரைப்படை அவனைக் கடந்து விரைந்தது. அவனுடைய கண்கள் அசுவசேனனின் கண்களைக் கண நேரம் சந்தித்தன. அந்தப் படைத்தலைவன் மயாசுரனை வெறுப்போடு பார்த்துவிட்டு விரைந்தான். மயாசுரனைப் போன்றவர்கள் சண்டையை இகழ்ந்துவிட்டு, தங்கள் புத்தகங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்ட கோழைகள் என்று அசுவசேனன் கருதினான். இத்தகைய ஆண்மையற்றப் பேடிகளுடன் அவன் தன் நேரத்தை விரயம் செய்ய விரும்பவில்லை. அர்ச்சுனனைப் பழி வாங்கி, தன் தலைவனின் நன்மதிப்பைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பை அவன் விரும்பினான்.

எரிந்து கொண்டிருந்த மரங்களுக்கும் அடர்த்தியான புகைக்கும்

பின்னால் அவர்கள் வேகமாக மறைந்ததை மயாசுரன் பார்த்தான். அர்ச்சுனனின் படையுடன் நேருக்கு நேர் மோதுவதற்காக அவர்கள் விரைந்து கொண்டிருந்தனர். ஒரு பெரிய மரம் முறிந்து விழுந்ததால் ஏற்பட்டக் காதைப் பிளக்கும் சத்தத்தைக் கேட்டு மயாசுரன் திடுக்கிட்டுப் பின்னால் துள்ளினான். அவனுடன் இருந்தவர்கள் அசுவசேனனின் குதிரைப்படை மறைந்து கொண்டிருந்ததைக் கவனித்தனர். தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு மயாசுரன் அவர்களிடம் கத்தினான். கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பைச் சுற்றிச் சென்று, அந்தப் பெண்களும் குழந்தைகளும் இருந்த இடத்திற்கு அவர்கள் வேகமாக ஓடினர். அங்கு நிலவிய அதீத வெப்பத்தால் தன் விழிக்கோளங்கள் வெந்துவிடும் என்று மயாசுரன் நினைத்தான். காற்றில் கோரதாண்டவம் ஆடிய நெருப்பையும், வானத்தை நோக்கிச் சீறிக் கொண்டிருந்த புகையையும் கண்ட குழந்தைகளின் திகிலடைந்த முகங்களை அவனால் பார்க்க முடிந்தது. பயத்தில் அவர்கள் அழுது கொண்டிருந்தனர். மயாசுரன் அந்த நெருப்பின் குறுக்காகத் துள்ளிப் பாய்ந்து, அந்தக் குழுவினருக்கும், விரைவாக முன்னேறிக் கொண்டிருந்த நெருப்பிற்கும் இடையே நின்ற குடிசைகளை நோக்கி ஓடினான். அவனுடன் வந்தவர்கள் அவனைப் பின்தொடர்ந்து ஓடினர். சிலர் தங்கள் உடைகளில் பற்றிய நெருப்பை அவசர அவசரமாகத் தட்டிவிட்டபடி, புகையால் இருமிக் கொண்டு வேறு பக்கத்திலிருந்து வந்தனர். மயாசுரன் அந்தக் குடிசைகளுக்குத் தீ வைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகக் கூறி ஒருசிலர் அலறினர். ஆனால் அவன் அவர்களுடைய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், எஞ்சியிருந்த குடிசைகளின் ஓலைக்கூரைகளின்மீது, எரிந்து கொண்டிருந்த மரக்கட்டைகளை வீசி அவற்றுக்குத் தீ வைத்தான். அந்தக் கட்டடக் கலைஞன் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தான் என்பது ஒருசிலருக்குப் புரிந்தது. முன்னேறிக் கொண்டிருந்த நெருப்பை மேலும் முன்னேறவிடாமல் தடுப்பதற்காக, குடிசைகளை எரித்து அங்கு ஓர் இடைவெளியை அவன் உருவாக்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு உதவி செய்ய மற்றவர்கள் விரைந்தனர். இப்போது நெருப்பிற்கும் அவர்களுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி உருவானது. அப்பெண்களும் குழந்தைகளும் இப்போதைக்குப் பாதுகாப்பாக இருந்தனர். அவர்களைச் சுற்றி நெருப்பு மிகவும் பேய்த்தனமாக எரிந்து கொண்டிருந்தபோதும், மயாசுரன் ஒரு பாதுகாப்புத் தீவை எப்படியோ உருவாக்கியிருந்தான்.

வாசுகி அவர்களை நோக்கி நடந்தான். அவ்வளவு முதுமையிலும்,

மெதுவாக அணைந்து கொண்டிருந்த நெருப்பை அவன் லாவகமாகத் தாண்டிக் குதித்த விதம், எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியது. அவன் மயாசுரனிடம் சென்று அவனைக் கட்டி அணைத்தான். உயிர் பிழைத்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதிர்ந்து பேசாத, பணிவான அந்தக் கட்டடக் கலைஞன் அவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றியிருந்தான்.

வாசுகி தன் கைத்தடியை மேலே உயர்த்தி, அமைதியாக இருக்குமாறு கத்தினான். அப்போது அவர்களுக்கு அச்சத்தம் கேட்டது. தங்கள் பாதங்களுக்குக் கீழே பூமி அதிர்ந்து கொண்டிருந்ததை அவர்களால் உணர முடிந்தது. பெண்கள் மனம் தளர்ந்து உரத்தக் குரலில் ஒப்பாரி வைத்தனர். பயந்து போன குழந்தைகள் தங்கள் அன்னையருடன் உடும்புபோல ஒட்டிக் கொண்டனர்.

“எனக்கு வலப்பக்கமும் இடப்பக்கமுமாக ஒதுங்கிச் செல்லுங்கள் . . . ஒதுங்குங்கள்!” என்று வாசுகி தன் தொண்டை கிழியக் கத்தினான். கூட்டம் இரண்டாகப் பிரிந்தது.

தன் வாழ்வின் பெரும்பான்மைக் காலத்தைத் தென்னக நகரங்களின் எல்லைகளுக்கு வெளியே கழித்திருந்த மயாசுரனுக்கு, அந்தச் சத்தம் எதற்கான அறிகுறி என்பது புரியவில்லை. கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பிலிருந்து தப்பியிருந்த தன் சக காட்டுவாசிகள் ஏன் இவ்வளவு பீதியடைந்து கொண்டிருந்தனர் என்று அவன் வியந்தான். அதற்கான காரணம் விரைவில் அவனுக்குப் புரிந்தது. நெருப்பில் கருகிய மரங்கள் நடுங்கத் துவங்கின. பூமி மேலும் அதிகத் தீவிரமாக அதிர்ந்து கொண்டிருந்ததை மயாசுரனால் உணர முடிந்தது. திடீரென்று, யானைகள் கூட்டம் ஒன்று, காட்டைப் பிளந்து கொண்டு தங்களை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்ததை அவன் கண்டான். தூரத்தில், நெருப்பு அந்த யானைகளை வேகமாகத் துரத்திக் கொண்டிருந்தது. அவை தம் வழியில் இருந்த அனைத்தையும் மிதித்துத் துவம்சம் செய்து கொண்டும், பாதி எரிந்து போயிருந்த மரங்களை வேரோடு சாய்த்துக் கொண்டும், அசுவசேனனின் குதிரைப் படையினர் சென்றிருந்த அதே பாதையில் சத்தமாகப் பிளிறிக் கொண்டே மிரண்டு ஓடின. காட்டெருமை, காண்டாமிருகம், மற்றும் பிற காட்டு விலங்குகள் அந்த யானைகளைப் பின்தொடர்ந்து வந்தன. அவ்வப்போது, புலிகளும் சிங்கங்களும் பாய்ந்து சென்று அங்கிருந்தவர்களுக்குப் பீதியை ஏற்படுத்தின. அற்புதமான பறவைகள் வானில் வெகு உயரத்தில் கீச்சிட்டன. விலங்குகள் தம் வழியில் இருந்த எல்லாவற்றையும் மிதித்துக் கொண்டு சென்ற காட்சி, அவர்களை பயத்தால் உறைய வைத்தது.

கடைசி விலங்குகள் அந்த இடத்தைக் கடந்து சென்றிருந்தபோது, வாசுகி உரத்தக் குரலில், "இப்போது அவற்றைப் பின்தொடர்ந்து செல்லுங்கள். காட்டுத் தீயிலிருந்து வெளியேறுவதற்கான வழி அவற்றுக்குத் தெரியும்," என்று கூறினான்.

மேலும் எந்த அறிவுறுத்தல்களுக்காகவும் காத்திருக்காமல், அந்த நாகர்கள், தப்பி ஓடிக் கொண்டிருந்த விலங்குகளோடு சேர்ந்து கொண்டனர். மிகக் கொடூரமான நெருப்பிலிருந்து தாங்கள் தப்பித்துக் கொண்டிருந்ததாக அவர்கள் நினைத்தனர். ஆனால் காட்டின் மறுமுனையில் அந்த மாபெரும் வில்லாளனும் அவனுடைய நண்பனும் அவர்களுக்காகக் காத்திருந்தனர். அவ்விருவரும் அங்கு ஒரு நகரத்தை உருவாக்க வேண்டியிருந்தது. எனவே, அந்தக் காட்டை அவர்கள் வெறுமையாக்க வேண்டியிருந்தது. நெருப்பு வேகமாக முன்னேறி, தப்பியோடிக் கொண்டிருந்த விலங்குகளையும் மனிதர்களையும் பற்றிக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தது. விலங்குகளும் மனிதர்களும் அடங்கிய அக்கூட்டம் அந்தக் காட்டின் எல்லையை நெருங்கியபோது, அவர்கள்மீது அம்பு மழை பொழிந்து, மேலும் அதிகமான பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. யானைகளும் காட்டெருமைகளும் காண்டாமிருகங்களும் தலைதெறிக்க ஓடத் துவங்கின. அவற்றில் சில விலங்குகள் பின்னோக்கித் திரும்பி, துரத்தி வந்து கொண்டிருந்த நெருப்பை நோக்கி ஓடி, எதிரே வந்த விலங்குக் கூட்டத்தோடு ஆக்ரோஷமாக முட்டி மோதின. சில விலங்குகள், தமக்கு எதிரே வந்த விலங்குகளின் ஊடாக எப்படியோ ஓடிச் சென்று, பின்னால் ஓடி வந்து கொண்டிருந்த நாகர்களை அடைந்தன. பெண்களும் குழந்தைகளும் பயத்தில் சிதறி ஓடினர். பலர், பயந்து போன யானைகளின் கால்களுக்குக் கீழே மிதிபட்டு இறந்தனர். முன்னேறி வந்து கொண்டிருந்த நெருப்பை அந்த விலங்குகள் எதிர்கொண்டபோது, அவை மீண்டும் திரும்பி, நாகர்கள் கூட்டத்தின் ஊடாக ஓடிச் சென்று, வழியில் இன்னும் சிலரை மிதித்துக் கொன்றன. ஒருசில யானைகள் அர்ச்சுனனின் வீரர்களைத் தாக்கி, அவர்களைக் கொன்றன. ஆனால் விரைவில் மற்ற வீரர்கள் அவ்விலங்குகளைத் தங்கள் வாள்கள், எறிவேல்கள், மற்றும் விஷ அம்புகளைக் கொண்டு வீழ்த்தினர்.

"அதோ! அதோ!" என்று கிருஷ்ணன் பல திசைகளில் சுட்டிக்காட்டிக் கொண்டேயிருக்க, அர்ச்சுனன் தன் இலக்குகளைத் தன் அம்புகளால் துல்லியமாக வீழ்த்திக் கொண்டே இருந்தான்.

தப்பிப் பிழைத்த நாகர்கள் எப்படியோ சமாளித்து அந்தக் காட்டின் எல்லையை வந்தடைந்தபோது, நிலத்தின்மீது சிதறிக் கிடந்த எண்ணற்ற விலங்குகள் மற்றும் மனிதர்களின் சடலங்கள் அவர்களை

அதிர்ச்சிக்குள்ளாக்கின. இறந்து கிடந்தவர்கள் மற்றும் இறந்து கொண்டிருந்தவர்களின் அருகே அவர்கள் பாய்ந்தோடிச் சென்றபோது, நிலத்தின்மீது பரவியிருந்த ரத்தத்தின்மீதும் சதையின்மீது ஒருசிலர் வழுக்கி விழுந்து கொண்டிருந்தபோது, துணிச்சலான அசுவசேனனும் அவனுடைய வீரர்களும் உயிருடன் இல்லை என்பதை மயாசுரன் உணர்ந்தான். தன் சொந்தக் குழுவில் எத்தனைப் பேர் இறந்து போயிருந்தனர் என்று அவனுக்குத் தெரியவில்லை. மரணம் அவர்களைச் சுற்றிக் கோர தாண்டவமாடிக் கொண்டிருந்தது. மரணம் தங்களை வந்து ஆட்கொள்ளும்வரை என்ன செய்வதென்று தெரியாமல் பல நாகர்கள் பயத்தில் உறைந்து நின்றனர். எக்கணத்திலும் தான் இறந்து போகக்கூடும் என்பது மயாசுரனுக்கும் உறுதியாகத் தெரிந்தது. அந்த முதியவன் வாசுகி, மக்களின் பீதியைக் கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்ததை மயாசுரன் பார்த்தான். பயங்கரமான குருதி வெள்ளத்திற்கு நடுவே, தடுமாற்றமற்றத் துணிச்சலுடன் அவன் நின்று கொண்டிருந்த காட்சி, வியப்பும் உத்வேகமும் ஊட்டுவதாக இருந்தது.

“மயாசுரா . . . தேவ அரசனைக் காப்பாற்று . . .” என்று வாசுகி கத்தினான்.

வாசுகி எங்கே சுட்டிக்காட்டினான் என்று மயாசுரன் சுற்றுமுற்றும் பார்த்தபோது ஒரு யானை, கடுஞ்சீற்றத்துடன் இந்திரனை மிதிக்கத் தயாராக நின்று கொண்டிருந்ததைக் கண்டான். அந்த வயதான தேவ அரசன் தன்னுடைய நிச்சயமான மரணத்தை வெறித்தபடி நின்றான். மிக ஆபத்தான விதத்தில் தன்னை ஒட்டிப் பறந்து கொண்டிருந்த அம்புகளைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முயற்சித்தபடி, மயாசுரன் இந்திரனை நோக்கி ஓடினான். அந்த யானை இந்திரனைத் தன் தும்பிக்கையால் கீழே தள்ளி, ஒரு பாதத்தை உயர்த்தி அந்த முதியவனின் தலையை மிதித்து நொறுக்கத் தயாராக நின்றது. மயாசுரன் சிறிதுகூட யோசிக்காமல் இந்திரனை நோக்கிப் பாய்ந்து, அவனைப் பிடித்து இழுத்து, தன் இடதுபக்கமாக உருண்டான். அந்த யானையின் கனத்தப் பாதம் நிலத்தைப் பிளக்கும் ஆற்றலோடு கீழிறங்கியது. இன்னும் இரண்டு அங்குலங்கள் தள்ளி அது தன் பாதத்தைப் பதித்திருந்தால், அந்த முதிய அரசன் கூழாகிப் போயிருப்பான். பயத்தில் நடுநடுங்கிக் கொண்டிருந்த அவன் எழுந்திருப்பதற்கு மயாசுரன் உதவிக் கொண்டிருந்தபோது, அந்த யானை ஆடியசைந்து வேறு வழியாகச் சென்றது. வாசுகி தன்னைப் பாராட்டித் தலையசைத்ததைக் கண்ட மயாசுரனின் இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. தன்னிடம் இவ்வளவு துணிச்சல் இருந்ததென்று அவன் ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. ஒரு கணம், தான் எங்கே இருந்தோம் என்பதை

மறந்துவிட்டு, அவன் தன்னைக் குறித்துப் பெருமிதம் கொண்டான்.

இந்திரன் மயாசுரனின் மணிக்கட்டை வேதனையூட்டும் அளவுக்கு அழுத்திப் பிடித்தது அவனை உலுக்கியது, சுயபாராட்டு எண்ணங்களிலிருந்து அவனை வெளிக் கொணர்ந்தது. அந்த முதியவனின் முகத்தில் தெரிந்த சவக்களையைப் பார்த்த மயாசுரன், எது அவனை இந்த அளவுக்கு பயமுறுத்திக் கொண்டிருந்தது என்று பார்ப்பதற்காகத் திரும்பினான். அவன் கண்ட காட்சி அவனுடைய ரத்தத்தை உறைய வைத்தது. அவனுடைய துணிச்சல் முழுதும் ஓடிப் போயிருந்தது. அந்த யானை மீண்டும் அவர்களை நோக்கி மிக அதிக வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. அந்த இளம் அசுரனும் அந்த முதியவனும் சிலைபோல அசையாமல் நின்றனர். அந்த யானையின் பாதையிலிருந்து விலகுமாறு வாசுகி உச்சஸ்தாயியில் கத்தியது அவர்களுடைய காதுகளில் லேசாக விழுந்தது, ஆனால் அவர்களுடைய கால்கள் அசைய மறுத்தன. புழுதியைக் கிளப்பிக் கொண்டு தங்களை நெருங்கிக் கொண்டிருந்த அந்த யானையின் கண்களை அந்தப் புழுதி மண்டலத்தின் ஊடாக அவர்களால் பார்க்க முடிந்தது. அந்த யானை தங்களிடமிருந்து ஆறடி தூரத்தில் இருந்தபோது, அவர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டனர். அது தன் தும்பிக்கையால் மயாசுரனின் இடுப்பை வளைத்துப் பிடிக்க முயன்றபோது, அது திடீரென்று நிலைகுலைந்து கீழே விழுந்ததில் பூமி அதிர்ந்தது. புழுதி அடங்கி, அவர்களுடைய இதயத்துடிப்புகள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியபோது, ஓர் அம்பு அந்த யானையின் மூளைக்குள் மூன்றடி துளைத்திருந்ததை அவர்கள் பார்த்தனர். அந்த யானை ஒருசில நொடிகள் துடிதுடித்து மடிந்தது.

அந்த அம்பு எங்கேயிருந்து வந்தது என்று பார்ப்பதற்காக மயாசுரன் திரும்பிப் பார்த்தபோது, அர்ச்சுனன் தன் தொண்டைக்குக் குறி வைத்து நிமிர்ந்து கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ந்தான். பிறகு இந்திரனின் பிடியிலிருந்து தன் மணிக்கட்டை விடுவித்துக் கொண்டு அவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். ஓர் அம்பு அவனுடைய வலது காதைக் கடந்து சீறிப் பாய்ந்தது. திடீரென்று தூண்டப்பட்டவனாக, அவன் அப்படியே திரும்பி, தான் சரணடைய விரும்பியதை உணர்த்தும் விதத்தில், தன் இரண்டு கைகளையும் தன் தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டு, “ஐயா . . . ஐயா . . .” என்று உரக்கக் கத்திக் கொண்டே அர்ச்சுனனை நோக்கி ஓடினான்.

கிருஷ்ணன் அவனைப் பார்த்துவிட்டு, அவன் கதையை முடிக்குமாறு அர்ச்சுனனுக்குச் சுட்டிக்காட்டினான். அர்ச்சுனன் தன் அம்பை மயாசுரனை நோக்கிக் குறி வைத்தான். ஆனால் அந்த

இளைஞனின் கண்களில் தென்பட்ட ஏதோ ஒன்று, அவனைத் தயங்கச் செய்தது. மயாசுரன் அர்ச்சுனனை நெருங்கியபோது தடுமாறிக் கீழே விழுந்தான், ஆனால் மீண்டும் எழுந்து ஓடினான். பிறகு அவன் அர்ச்சுனனின் பாதங்களில் விழுந்து, தன் மக்களுக்கு உயிர்ப்பிச்சை தருமாறு கெஞ்சினான். "ஐயா . . . ஐயா . . . எங்கள்மீது கருணை காட்டுங்கள். நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுதும் உங்கள் அடிமைகளாக இருப்போம். இங்கு சிறு குழந்தைகளும் பெண்களும் மட்டுமே இருக்கின்றனர். எல்லா வீரர்களும் இறந்துவிட்டனர். நாங்கள் செய்துள்ளவற்றுக்காக தயவு செய்து எங்களை மன்னித்துவிடுங்கள்," என்று அவன் இறைஞ்சினான். பிறகு அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுதான்.

அர்ச்சுனன் அறிவுரை வேண்டித் தன் கடவுளைப் பார்த்தான். "ம்ம்ம் . . . ஒருவேளை இவர்கள் நமக்குச் சிறிது பயன்படக்கூடும். அவனால் என்ன வேலை செய்ய முடியும் என்று அவனிடம் கேள்," என்று கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் கூறினான்.

மயாசுரனின் அழுகை திடீரென்று நின்றது. அவன் ஒரு கட்டடக் கலைஞனாகவும் ஒரு சிற்பியாகவும் ஒரு பொறியாளனாகவும் இருந்தான். இப்போது அவன் ஓர் அடிமை. இந்த மாபெரும் மனிதர்களுக்கு முன்னால் தன் திறமைகளைப் பற்றி வெளிப்படையாகக் கூறுவதற்கு முதலில் அவன் தயங்கினாலும்கூட, பிறகு மெதுவாக எழுந்து நின்றான். தன்னால் என்ன செய்ய முடியும் என்பதைக் கூறுவதற்கு வெறும் வார்த்தைகள் மட்டும் போதுமானவையாக இருக்காது என்று அவன் நினைத்தான். அதைத் தன் விரல்களால் எடுத்துக்கூறுவதற்கு அவனுக்குச் சிறிதளவு ஈர மண் தேவைப்பட்டது. அவன் தனக்குத் தேவைப்பட்டதைக் கண்டுபிடித்து, தன் விரல்களால் அந்த ஈர மண்ணைக் கூட்டிப் பிடித்து வடிவமைக்கத் துவங்கினான். தன்னுடைய மக்களின் ரத்தமும் பல விலங்குகளின் ரத்தமும் அந்த மண்ணை நனைத்திருந்ததைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. தன்னைச் சுற்றிலும் கிடந்த சடலங்கள்மீதும் அவன் அக்கறை காட்டவில்லை. மனிதர்களும் விலங்குகளும் மடிந்து கொண்டிருந்த சத்தம் அவனுக்குக் கேட்கவில்லை. ஒருசில நிமிடங்களுக்கு முன்பு தான் கிட்டத்தட்ட மடிந்துவிட்டிருந்ததைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்க்க விரும்பவில்லை. அவன் தன் படைப்புடன் ஒன்றரக் கலந்தான். அவனுடைய விரல்கள் அந்தச் செந்நிற ஈர மண்ணைத் தொட்டுக் கொண்டும் வருடிக் கொண்டும் தட்டிக் கொண்டும் இருந்தபோது அவன் தன்னை மறந்த நிலையில் இருந்தான். அந்த ஈர மண்ணிலிருந்து மாயாஜாலம்போல ஒரு நகரம் உருவாகத் துவங்கியது.

இதைக் கண்டு பிரமித்த அர்ச்சுனன், படுகொலையை நிறுத்துமாறு தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் அந்த அசுரன் உருவாக்கிக் கொண்டிருந்த மணல் நகரத்தைப் பார்க்கத் திரண்டனர். அங்கு நடந்த படுகொலையில் நாகர்களில் பாதிப் பேர் இறந்துவிட்டிருந்தனர். காண்டவக் காடு முற்றிலும் தரைமட்டமாகியிருந்தது. ஒரு கனவு தங்கள் கண்முன்னே நனவாகிக் கொண்டிருந்ததைக் காண்பதில் அந்த வீரர்கள் மெய்மறந்து இருந்தபோது, ஒருசில விலங்குகள் அவசர அவசரமாக அங்கிருந்து எப்படியோ தப்பித்தன. உயிர் பிழைத்திருந்த குழந்தைகளும் பெண்களும் மயாசுரனைச் சூழ்ந்திருந்த கூட்டத்தினருடன் சேர்ந்து கொண்டனர். அந்த இளம் கட்டடக் கலைஞனுக்குத் தன் சுற்றுப்புறம் குறித்தப் பிரக்ஞையே இருக்கவில்லை. தன்னுடைய திறமை தன் மக்களின் உயிர்களை மீண்டும் காப்பாற்றியிருந்தது என்பதையும் அவன் அறியவில்லை. அவனுடைய விரல்களிலிருந்து ஒரு 'மாதிரி நகரம்' எழுந்தது. அழகிய அரண்மனைகளையும் வானளாவ உயர்ந்த பிரம்மாண்டமான கோவில் கோபுரங்களையும் அவன் உருவாக்கினான். வீதிகள், நீரூற்றுகள், நடைபாதைகள், தோட்டங்கள், சந்தைகள், அழகிய ஏரிகள் போன்றவற்றை அவன் உருவாக்கியதை அக்கூட்டத்தினர் ஆர்வத்தோடு பார்த்தனர்.

அவன் தன் 'மாதிரி நகரத்தை' உருவாக்கி முடித்தபோது, அர்ச்சுனன் தன்னை மறந்து அந்தத் தீண்டத்தகாதவனை இறுகத் தழுவினான். பிறகு, "இந்த நகரத்தை உன்னால் கல்லில் வடிவமைக்க முடியுமா?" என்று அந்த வீரன் அந்த அசுரனிடம் கேட்டான்.

மயாசுரன் நிலத்தின்மீது விழுந்து, நன்றியுடன் அர்ச்சுனனின் பாதங்களின்மீது முத்தமிட்டான். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மயாசுரனின் கனவு நனவாவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

24

சபிக்கப்பட்ட நகரம்

சுபத்திரையை இழந்த துயரத்தை, இன்னும் அதிக ஈடுபாட்டோடு வேலை செய்ததன் மூலம் துரியோதன் களைந்தெறிய முயன்றான். ராஜ்யத்தை ஆள்வதற்கு பீஷ்மர் அவனைப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். ஆனால் பாண்டவர்கள் அஸ்தினாபுர அரண்மனைக்குத் திரும்பி வந்தபோது, சுபத்திரையை அவளுடைய கணவனோடு தான் எங்கேனும் சந்திக்க நேர்ந்துவிடுமோ என்று பயந்த துரியோதனன், தன்னால் இயன்ற அளவுக்கு அஸ்தினாபுரத்திலிருந்து தள்ளியிருக்க முயன்றான். ராஜ்யத்தின் தொலைதூரத்தில் இருந்த பகுதிகளுக்குப் பயணித்து, சாதாரணமான கிராமங்களுக்கும் எல்லை நகரங்களுக்கும் அவன் சென்று வந்தான். இத்தகைய பயணங்களின்போது அசுவத்தாமன்தான் அவனுடைய நிரந்தரத் தோழனாக இருந்தான். விதுரனின் அதிகாரப்பூர்வமான பிரயாணங்களின்போது துரியோதனன் அவனுடன் பயணித்தான். விதுரனுடனான ஒவ்வொரு பயணத்திற்குப் பிறகும், அஸ்தினாபுரத்தின் பிரதம மந்திரியின்மீது துரியோதனன் கொண்டிருந்த பிரமிப்பு அதிகரித்தது. துரியோதனன் சில சமயங்களில் சிந்து நாட்டிற்குச் சென்று தன் தங்கை துச்சலையையும் பார்த்து வந்தான். அச்சமயங்களில் கர்ணனும் அங்கு சென்றான். பிறகு நண்பர்கள் அனைவருமாகக் கூடி இனிமையாகப் பொழுதைக் கழித்தனர். சிந்து நாட்டு விஜயங்களின்போது, சில சமயங்களில், அவர்கள் துவாரகைக்குச்

சென்று பலராமனைப் பார்த்தனர். கிருஷ்ணன் எந்தெந்த நாட்களிலெல்லாம் அங்கு இருப்பான் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்ததோ, அப்போதெல்லாம் துவாரகைக்குச் செல்வதை அவர்கள் தவிர்த்தனர். பெரும்பாலான நாட்களில் கிருஷ்ணன் பாண்டவர்களோடு காண்டவத்தில் இருந்து அவர்களுடைய புதிய நகரத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது இந்த நண்பர்களுக்கு உதவியது. சுபத்திரை அர்ச்சுனனைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு அவளுக்கும் பலராமனுக்கும் இடையே இருந்த உறவு பெரிதும் மாறியிருந்தது. அவள் இப்போது தன்னுடைய இன்னொரு சகோதரன் கிருஷ்ணனுக்கு அதிக நெருக்கமாக இருந்தாள்.

அப்படிப்பட்ட ஒரு பயணத்தின்போது, காசிக்குப் புனித யாத்திரை சென்று வரலாம் என்று பலராமன் முன்மொழிந்தான். எல்லோருமாகச் சேர்ந்து பயணிப்பது குறித்த யோசனை அவர்கள் அனைவருக்கும் பிடித்துப் போனதால், எல்லோரும் அதற்கு ஒப்புக் கொண்டனர். பலராமனின் வழிகாட்டுதலின் கீழ், ஒரு பெரிய பட்டாளம் காசியை நோக்கிப் புறப்பட்டது. ஜயத்ரதனும் துச்சலையும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். திருமணமாகி இரண்டு வருடங்களுக்குப் பிறகும் அவர்களுக்குக் குழந்தை எதுவும் பிறந்திருக்காததால், காசி விசுவநாதர் கோவிலுக்குச் சென்று வழிபட அவர்கள் விரும்பினர். கர்ணன் தன் குடும்பத்தையும் உடனழைத்து வருவதற்காக அங்க நாட்டிற்கு விரைந்தான். அவன் தன் மனைவியுடனும் தன் கைக்குழந்தையுடனும் காசியில் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

காசிக்குச் சென்ற வழியில், அவர்களுக்கு இன்னோர் இனிமையான ஆச்சரியம் காத்திருந்தது. புனித யாத்திரையில் கலந்து கொள்வதற்காக விதுரன் திருதராஷ்டிரனையும் காந்தாரியையும் அழைத்து வந்தான். அவனுடைய மனைவியும் மகன்களும்கூட அவனுடன் வந்தனர். விதுரன் தன் இடைவிடாத பணியிலிருந்து சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொள்வதற்காக அரசனையும் அரசியையும் ஏதோ சாக்குப்போக்குகளைக் கூறி இப்பிரயாணத்திற்குச் சம்மதிக்க வைத்திருந்தான் என்று எல்லோரும் அவனைக் கேலி செய்தனர். விதுரன் அதை மறுத்தாலும், அவன் இந்த விடுமுறையை மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டிருந்தான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

அவர்களுடைய குழு அந்தப் பண்டைய நகருக்குள் நுழைந்த உடனேயே, அஸ்தினாபுர அரசனும் துவாரகை அரசனும் அங்க அரசனும் சிந்து அரசனும் புனித யாத்திரையாகக் காசிக்கு வந்திருந்தனர் என்ற செய்தி காட்டுத்தீயைப்போலப் பரவியது. வியாபாரிகளும் புரோகிதர்களும் அவர்களைச் சூழ்ந்தனர். அந்நகரில்

சிந்தனையாளர்களோ அல்லது தத்துவவியலாளர்களோ இருக்கவில்லை, மாறாக, தங்கள் கடவுளைக் காசுக்காக விற்ற அற்ப வியாபாரிகள் மட்டுமே இருந்தனர். விதுரனும் கர்ணனும் சூத்திரர்கள் என்று கூறி, கர்ப்பகிரகத்தில் அவர்கள் நுழைவதற்கு, அர்ச்சகர்கள் என்ற பெயரில் இருந்த அந்த வியாபாரிகள் அனுமதி மறுத்தனர். ஆனால் அவர்கள் தங்கள் வெள்ளிக் காசுகளை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட பிறகு, ஓசைபடாமல் ஒதுங்கிக் கொண்டனர். மந்திரங்களின் பொருள் என்னவென்று தெரியாமலேயே அவர்கள் மந்திரங்களைக் கூறினர். தங்கள் செயல்களை நியாயப்படுத்துவதற்கு அவர்கள் புதுப்புதுக் கதைகளை உருவாக்கி, அவற்றைப் புராணக் கதைகள் என்று கூறினர். சடங்குத் தூய்மை, தங்கள் சொந்த மேன்மை ஆகியவை குறித்து அவர்கள் வெறியர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுடைய நகரமும் நதியும் குப்பைகளாலும் கழிவுப் பொருட்களாலும் நிரம்பி வழிந்தன. பிணந்தின்னிக் கழுகுகளைப்போல மரணத்தின்மீது அவர்கள் தழைத்தனர். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்திருந்தவர்களின் குற்றவுணர்வைப் பயன்படுத்தி இவர்கள் கொழுத்தனர். கங்கை நதியின் நீர், இமயத்திலிருந்து தென்கடல்கள்வரை எல்லா இனத்தவருக்கும் எல்லாச் சாதியினருக்கும் புனிதமாக இருந்தும்கூட, விறகை மிச்சப்படுத்துவதற்காகவும் லாபத்தை அதிகரிப்பதற்காகவும், பாதி எரிந்த உடல்களை அவர்கள் கங்கைக்குள் எரிந்தனர். பரதகண்டத்தின் மிகப் புனிதமான நகரத்தில், மரணம் ஒரு செழிப்பான தொழிற்துறையாக உருவெடுத்திருந்தது.

காசியின் அடிமை அரசன், திருதராஷ்டிரனுக்குத் தன் மரியாதையைச் செலுத்த வந்தான். தன் அரண்மனைக்கு வந்து தங்குமாறு அவன் விடுத்த அழைப்பை அரசன் திருதராஷ்டிரன் ஏற்றுக் கொண்டான். அவர்கள் கங்கை நதியின் அருகே காத்திருந்தபோது, நூற்றுக்கணக்கான பெண்கள் தங்கள் கைகளில் எண்ணெய் விளக்குகளை ஏந்தியபடி படிகளிலிருந்து இறங்கி வந்தனர். மாலைக் கதிரொளியில் கங்கை நீர் காவி நிறத்திற்கு மாறியபோது, அவர்கள் பாசுரங்களைப் பாடத் துவங்கினர். அவர்கள் தங்கள் எண்ணெய் விளக்குகளை ஒரு வட்டத்தில் சுற்றியபோது, காற்றில் அவை பொன்னிற வளைவுகளை உருவாக்கின. மிகவும் புகழ்பெற்ற மாலைநேர கங்கை ஆரத்தியை முதன்முறையாகப் பார்த்துக் கொண்டிருந்த துரியோதனன் மெய்மறந்து போனான். அவர்கள் பாடிய பாசுரங்கள், ஒரு பண்டைய நாகரீகம் ஒரு மாபெரும் நதிக்கு வழங்கிய ஒரு பணிவான புகழுரையாகும். கங்கை தன் புனித நீரால் நிலத்தை வருடிச் சென்று அமைதியாகப் பாய்ந்தாள். கங்கோத்திரியின்

பனியாற்றில் தொடங்கி, வங்கத்தின் கதகதப்பான கடல்கள்வரை, அவள் தன் குழந்தைகளின் பிரார்த்தனைகளையும் நிந்தனைகளையும் சமமாக ஏற்றுக் கொண்டாள். மரணத்தை அவள் எடுத்துக் கொண்டு, பரதகண்டத்திற்கு வாழ்க்கையைத் திருப்பிக் கொடுத்தாள்.

அரசர்கள் அடங்கிய குழு இந்த மாலைநேர கங்கை ஆரத்தியைத் தன்னிலை மறந்து பார்த்துக் கொண்டிருந்தபோது, அப்பெண்கள் தங்கள் எண்ணெய் விளக்குகளை கங்கைக்குள் மிதக்கவிட்டனர். அந்தப் பரந்த இருளில் அவை பல சிறிய வெளிச்சத் தீவுகளை உருவாக்கின. அப்பெண்கள் கடைசியாகப் பாடிய பாடல், கங்கை, சிந்து, யமுனை, பிரம்மபுத்திரா, நர்மதை, காவேரி ஆகிய அனைத்துப் புனித நதிகளுக்கும் அவற்றின் தாராள குணத்திற்காக அவர்கள் கூறிய நன்றிப் பிரார்த்தனையாகும். நதிகளைப் புனிதமானவையாக மதித்த ஒரு கலாச்சாரத்தால் எப்படி இரக்கமின்றி அவற்றைத் தவறான முறையில் பயன்படுத்திச் சீரழிக்க முடிந்தது என்று துரியோதனன் வியந்தான்.

சேவகர்கள் அரசக் குழுவினருக்கும் எண்ணெய் விளக்குகளை வினியோகித்தனர். விளையாட்டுத்தனமான காற்றில் விட்டுவிட்டு எரிந்த எண்ணெய் விளக்கு அணையாதவாறு பார்த்துக் கொண்டு, துரியோதனன் மெதுவாக அந்தப் படிகள் வழியாகக் கீழே இறங்கி, ஆற்றங்கரையை நோக்கி நடந்தான். அவன் தன் பாதத்தை அந்த நீருக்குள் வைக்கவிருந்த நேரத்தில், அவனுக்குப் பின்னால் இருந்து வந்த ஒரு மென்மையான குரல், "வேண்டாம், புனித அன்னையை முதலில் உங்கள் பாதத்தால் தொடாதீர்கள். அது ஒரு மாபெரும் பாவம்," என்று கூறியது. துரியோதனன் ஆச்சரியத்தில் திரும்பிப் பார்த்தபோது, அவனுடைய இதயம் ஒரு கணம் தன் துடிப்பை நிறுத்தியது. தான் பார்த்தக் காட்சியிலிருந்து தன் கண்களைத் தான் விலக்கிக் கொள்ளவிட்டால், தன் இதயத்தை மீண்டும் தொலைத்துவிடுவோம் என்று அவன் பயந்தான். சுபத்திரை அவனுடைய இதயத்தினுள் ஏற்படுத்தியிருந்த காயங்கள் இன்னும் ஆறியிருக்கவில்லை. அவன் காதலைக் கண்டு பயந்தான். எனவே அவன் தொலைவில் எங்கோ பார்த்தபடி நின்றான். அங்கு ஒரு வளைவில், ஆற்றங்கரையில் ஒருசில சிதைகள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. பாதி எரிந்திருந்த ஒரு சடலத்தை ஆற்றுக்குள் தூக்கிப் போடுமாறு ஒரு வெட்டியானுக்கு ஒரு புரோகிதன் சைகை காட்டியதை இளவரசன் துரியோதனன் பார்த்தான். அது சுரீரென்ற சத்தத்துடன் ஆற்றுக்குள் விழுந்து, அங்கு மிதந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்குகளுக்கு இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்ததை அவனால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது.

பின்னால் திரும்பாமலேயே, துரியோதனன், "தேவி, இந்த ஆற்றின்

நீருக்குள் ஒருவன் முதலில் தன் பாதத்தை வைக்கக்கூடாது என்ற அளவுக்கு இந்நதி மிகவும் புனிதமானது என்று நீங்கள் கூறுகிறீர்கள். கங்கை நீரில் மிதந்து கொண்டிருக்கின்ற பாதி எரிந்த உடல்களும் குப்பைகளும் கழிவுகளும் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டான். தான் ஒரு விவாதத்தைத் தூண்டியிருந்தோம் என்பதை அறிந்த அவன், அவள் விவாதிப்பாள் அல்லது அங்கிருந்து போய்விடுவாள் என்று நினைத்தான். அவளுடைய கரிய கண்களின் ஆழங்களுக்குள் அவன் பார்க்க விரும்பவில்லை. அவள் தன் கைகளில் ஏந்தியிருந்த எண்ணெய் விளக்கின் பொன்னிற ஒளியைப் பிரதிபலித்துக் கொண்டிருந்த அவளுடைய அழகான இதழ்களையும் அவன் காண விரும்பவில்லை. எனவே, அவளிடமிருந்து எந்த பதிலையும் எதிர்பார்க்காமல் அவன் அப்படியே நின்றான்.

அவளுடைய பாவாடை சரசரத்த ஓசையைக் கேட்டு அவன் திரும்பியபோது, அவள் அந்த ஆற்றை நோக்கிக் குனிந்து, ஒரு கிண்ணக்குழியைப்போலத் தன் கைகளைக் குவித்து, சிறிதளவு நீரை வாரியெடுத்ததைக் கண்டான். அவள் மிதக்கவிட்டிருந்த எண்ணெய் விளக்கு வட்டமிட்டபடி மிதந்து சென்றது. தொலைதூரக் கடலை நோக்கிய தன் பயணத்தை அது துவக்கியிருந்தது. கங்கை நீர் அவளுடைய விரல்களின் ஊடாக நுழைந்து சென்று கொண்டிருக்க, அவள் தன் கண்களை மூடி தியானம் செய்தாள். அவனால் அவள்மீதிருந்து தன் பார்வையை அகற்ற முடியவில்லை. அவன் எதிர்பார்க்காத நேரத்தில் அவள் தன் கண்களைத் திறந்து, அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டாள். அவன் தடுமாறியதைக் கண்டு அவள் புன்னகைத்தாள்.

அவன் அவளருகே மண்டியிட்டு அமர்ந்து, தன்னுடைய எண்ணெய் விளக்கை நீரின்மீது மென்மையாக வைத்தான். அது அழகாக மிதந்து சென்றதை இருவரும் சேர்ந்து பார்த்தனர். துரியோதனன் தன் வயிற்றில் படபடத்துக் கொண்டிருந்த பட்டாம்பூச்சிகளை அடக்க முயற்சித்தபடி, "தேவி, உங்கள் பெயர் என்னவென்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று அவளிடம் கேட்டான். அவள் உடனடியாக பதில் கூறாதபோது அவனுடைய வாய் உலர்ந்து போனது.

இறுதியில், "என் பெயர் பானுமதி. பிரஜ்யோதிஷ நாட்டு அரசன் பாகதத்தனின் மகள் நான்," என்று அவள் கூறினாள்.

"என் பெயர் துரியோதனன். அரசன் திருதராஷ்டிரனின் மூத்த மகன் நான்."

"எனக்குத் தெரியும். நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்."

“அவை நல்ல விஷயங்கள் மட்டுமே என்று நான் நம்புகிறேன்,” என்று துரியோதனன் புன்னகைத்தவாறு கூறினான்.

“எப்போதும் அப்படியல்ல,” என்று கூறிய பானுமதியின் உதடுகளில் ஒரு குறும்புத்தனமான புன்னகை விளையாடியது.

“தேவி, என்னைத் திருமணம் செய்து கொள்வீர்களா?” என்று கேட்டு இளவரசன் துரியோதனன் தன்னைத் தானே ஆச்சரியப்படுத்திக் கொண்டான். அவ்வார்த்தைகள் அவன் வாயைவிட்டு வெளிவந்த மறுகணம், தான் அவ்வாறு கேட்டது குறித்து அவன் வருந்தினான்.

பானுமதி வெட்கத்துடன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, “என்னிடம் இவ்வாறு கேட்பது உங்களுக்கு அபத்தமாகத் தெரியவில்லையா?” என்று கேட்டாள்.

துரியோதனனும் வெட்கப்பட்டான். தானே உருவாக்கிக் கொண்ட இச்சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. ‘என்னைப்போல ஒரு முட்டாள் உண்டா? எனக்கு என்னவாயிற்று?’ என்று அவன் வியந்தபோது, அவனுடைய இதயம் படபடவென்று துடித்தது.

“ஆனால் அபத்தமான விஷயங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். என் தந்தை அந்தக் கோவிலில் இருக்கிறார்,” என்று கூறிய பானுமதி, தன் புன்னகையை மறைத்துக் கொண்டே படிகளின்மீது வேகமாக ஏறிச் சென்றாள். அவர்களுக்கு ஒருசில படிகள் மேலே நின்று கொண்டிருந்த விதுரன்மீது அவள் கிட்டத்தட்ட மோதிவிட்டாள். பிறகு அவள் அவனிடம் வருத்தம் தெரிவித்துவிட்டு, தன் தோழியருடன் போய்ச் சேர்ந்து கொண்டாள்.

தன்னை மணந்து கொள்ள அவள் சம்மதித்திருந்தாள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு இளவரசன் துரியோதனனுக்குச் சிறிது நேரம் ஆனது. தான் சற்று முன் சந்தித்திருந்த ஒரு பெண்ணிடம், தன்னை மணந்து கொள்ளச் சம்மதமா என்று தான் ஏன் கேட்டோம் என்று அவனுக்குத் தெரியவில்லை. சுபத்திரையின்மீதான தன் காதல் அவ்வளவு ஆழமாக இருக்கவில்லையா என்று அவன் வியந்தான்.

விதுரன் துரியோதனனிடம் வந்து, தன் கண்களில் ஒளிவீச, “இது பற்றி நான் உன் தந்தையிடம் பேசலாமா?” என்று கேட்டான். விதுரனின் கண்களில் தெரிந்த குறும்புத்தனமான புன்னகையைக் கண்டு துரியோதனன் வெட்கத்தில் முகம் சிவந்தான்.

“தாராளமாகப் பேசுங்கள். இவன் பொறுப்பின்றி எதையேனும் செய்வதற்கு முன்பு இதைப் பேசி முடித்துவிடுங்கள்,” என்று இருட்டிலிருந்து ஒரு குரல் கேட்டது.

அதைக் கேட்டவுடன், துரியோதனனுக்கு அந்த ஆற்றங்கரையின்

கற்படிகள்மீது தன் தலையை முட்டிக் கொள்ள வேண்டும்போல இருந்தது. தன் நண்பன் அசுவத்தாமன் அங்கு இருந்ததை அவன் முற்றிலும் மறந்து போயிருந்தான். அசுவத்தாமன் இந்த ஒட்டுமொத்த நாடகத்தையும் மற்ற அனைவரிடமும் நிச்சயமாக நடித்துக் காட்டுவான் என்று துரியோதனன் உறுதியாக நம்பினான். அந்தக் கிறுக்கன் தியானத்தில் இருந்திருக்க வேண்டிய நேரம் இது என்று அவன் நொந்து கொண்டான்.

அசுவத்தாமன் அவர்கள் அருகே வந்து, "என்னைத் திருமணம் செய்து கொள்வீர்களா?" என்று கூறி, துரியோதனனின் ஆழமான குரலை அப்படியே நகலெடுத்தான். துரியோதனன் அந்தக் குறும்புக்கார பிராமணனின் முகத்தின்மீது ஓங்கிக் குத்த முயன்றபோது, அசுவத்தாமன் லாவகமாகக் குனிந்து கொண்டு, ஒரு பெண்ணின் குரலில், "என்னிடம் இவ்வாறு கேட்பது உங்களுக்கு அபத்தமாகத் தெரியவில்லையா? ஆனால் அபத்தமான விஷயங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும் . . ." என்று கூறினான். துரியோதனன் அவன்மீது பாய்ந்து, அவன் அதற்கு மேல் எதுவும் கூறாமல் தடுத்தான். ஆனால் அசுவத்தாமன் அவனிடமிருந்து நழுவிக் கொண்டு, "கர்ணா . . . கர்ணா . . . அபத்தமான ஒன்றை நீ கேட்க விரும்புகிறாயா? என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" என்று கத்திக் கொண்டே ஓடினான்.

துரியோதனன் அசுவத்தாமனைத் துரத்தினான். ஆனால் அசுவத்தாமன் அங்கிருந்த கூட்டத்தின் ஊடாக லாவகமாகப் புகுந்து வளைந்து சென்றான். மக்கள் அவர்கள் இருவரையும் முறைத்துப் பார்த்தனர். தாங்கள் முட்டாள்களைப்போல நடந்து கொண்டிருந்ததை துரியோதனன் அறிந்தான். தங்கள் மகிழ்ச்சியும் சிரிப்பும், சம்பிரதாயத்தையும் சடங்குகளையும் தாங்கள் பரிகாசம் செய்ததைப்போல சமயப்பற்று மிக்கவர்களுக்குத் தோன்றும் என்று அவன் நினைத்தான். உயிர் துறப்பதற்காக மக்கள் பரதகண்டம் நெடுகிலுமிருந்து காசிக்கு வந்தனர். ஆனால் இந்த இளைஞர்களோ, உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகச் சிரித்துக் கொண்டும் இருந்தனர். ஏற்கனவே கறை படிந்திருந்த தன் நற்பெயருக்கு இது எந்த விதத்திலும் உதவப் போவதில்லை என்பதை துரியோதனன் உணர்ந்தான். ஆனால் அசுவத்தாமன் தன்னைப் பற்றிக் கர்ணனிடம் கூறுவதைத் தடுத்து நிறுத்துவதுதான் அவனுடைய முன்னுரிமையாக இருந்தது. அன்றிரவு முழுவதையும் அவர்களுடைய கேலிப் பொருளாகச் செலவிட அவன் விரும்பவில்லை.

அசுவத்தாமனைத் துரத்திக் கொண்டு ஓடி மறைந்து கொண்டிருந்த துரியோதனனிடம், ஆற்றங்கரையில் இருந்தபடியே, "இதை நான் உன்

ஒப்புதலாக எடுத்துக் கொள்ளலாமா?" என்று விதுரன் கத்தினான். ஆனால் துரியோதனனிடமிருந்து அவனுக்கு எந்த பதிலும் வரவில்லை.

* * *

துரியோதனனும் பானுமதியும் சந்தித்துப் பதினான்கு நாட்களுக்குப் பிறகு, காசி விசுவநாதர் கோவிலில் ஓர் எளிய விழாவில் அவர்கள் திருமணம் நடைபெற்றது. சாதி, மொழி, நிறம் என்ற எந்தப் பாகுபாடும் இன்றி, கர்ணன் அந்த ஒட்டுமொத்த நகருக்கும் உணவளித்து, கொடை வள்ளல் என்ற தன் பெயருக்கு மேலும் மதிப்புக் கூட்டிக் கொண்டான். தன் மனைவியை ஒரு போட்டியில் ஒரு பரிசுப் பொருளாகத் தான் வென்றிருக்காதது குறித்து துரியோதனன் மிகவும் மகிழ்ந்தான். அவர்கள் அஸ்தினாபுரத்தைச் சென்றடைந்தபோது, ஒரு மாபெரும் கொண்டாட்டத்திற்காக மேன்மக்களுக்கும் அடிமை நாட்டு அரசர்களுக்கும் பீஷ்மர் அழைப்பு விடுத்தார். தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பிற்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அது ஓர் அரசாங்க நிகழ்ச்சியாக இருந்ததால், காசியில் நடைபெற்ற எளிய விழாவைப் போலன்றி, பட்டத்து இளவரசனின் திருமணம் மிக ஆடம்பரமாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்பட்டது. அந்த விழாவிற்கு வருகை தந்தவர்களில் கிருஷ்ணனும் ஒருவன். புதிதாகத் திருமணமான இணையரை ஆசீர்வதிப்பதற்காக அவன் அங்கு வந்திருந்தான். பாண்டவர்களும் தங்கள் ஒன்றுவிட்டச் சகோதரர்களோடு சேர்ந்து அந்த நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக வந்தனர். குரு வம்சத்தின் சக்திவாய்ந்த இரண்டு பெண்களும் அருகருகே நின்று கொண்டு தங்கள் விருந்தினர்களை வரவேற்றுக் கொண்டிருந்தனர். குரு வம்சத்தினர் அனைவரும் ஒன்றாகக் கூடியிருந்ததைக் கண்ட தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், குரு வம்சத்தில் பிளவு ஏற்பட்டிருந்ததாகத் தங்களுக்குக் கிடைத்தத் தகவல் தங்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகத் தங்களுடைய ஒற்றர்கள் மிகைப்படுத்திக் கூறிய ஒரு கதையா என்று வியந்தனர்.

"காந்தாரி, விஷயங்கள் நீ நினைத்ததுபோல நடைபெறவில்லை," என்று குந்தி தன் புன்னகை மாறாமல் காந்தாரியின் காதில் கிசுகிசுத்தாள்.

"குந்தி, நீ என்ன கூறுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை," என்று காந்தாரி பதிலளித்தாள். குந்தியின் வார்த்தைகளில் இருந்த மகிழ்ச்சியைக் காந்தாரியால் உணர்ந்து கொள்ள முடிந்தது. தன் கணவன் திருதராஷ்டிரன் தங்கள் உரையாடலை ஒட்டுக் கேட்டுவிட்டு மோசமாக எதையும் கூறிவிடக்கூடாது என்று அவள் பிரார்த்தித்தாள்.

“நாங்கள் வாரனவதச் சம்பவத்தில் தப்பிப் பிழைத்துவிட்டோம். உன் மகனின் கடுமையான முயற்சிகளையும் மீறி, என் மகன்கள் பாஞ்சால இளவரசியை வெற்றி கொண்டனர்.”

“துரியோதனனுக்கும் அந்த நிகழ்வுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நீ ஏன் எப்போதும் அவன்மீது சந்தேகப்படுகிறாய்?”

“சந்தேகமா? நான் உறுதியாக நம்புகிறேன். அவன் ஏன் எங்களுக்காக அந்த அரக்கு மாளிகையைக் கட்டினான் என்று அவனிடம் கேள். அல்லது உன் கணவர்தான் அதைச் செய்தாரா?”

“குந்தி, இது ஒரு மகிழ்ச்சியான தருணம். இப்படிப்பட்ட எண்ணங்களால் அதைப் பாழாக்கிவிடாதே. அந்த அரக்கு மாளிகையை யார் உருவாக்கியிருந்தாலும் சரி, இறந்து போனது ஓர் ஏழை வேடுவப் பெண்ணும் அவளுடைய ஐந்து குழந்தைகளும்தானே அன்றி, நீயும் உன் மகன்களும் அல்ல.”

பரதகண்டத்தின் கிழக்குக் கடற்கரையில் அமைந்த ஒரு சிறிய ராஜ்யத்தின் இளவரசனை கைகூப்பி வரவேற்றபடியே, “அது நாங்களாக இருந்திருக்க வேண்டும் என்று நீ விரும்பியிருப்பாய், இல்லையா?” என்று குந்தி கேட்டாள்.

காந்தாரி அதற்கு பதில் கூறவில்லை. குடும்பத்திற்குள் தவறான புரிதல்களும் பகைமையும் வளர்ந்து கொண்டிருந்த விதம் குறித்து அவள் மிகவும் அசௌகரியமாக உணர்ந்தாள். “குந்தி, இதைப் பற்றி நாம் பிறகு பேசலாம். இன்று ஒரு மங்களகரமான நாள். பட்டத்து இளவரசனுக்குத் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது,” என்று காந்தாரி கூறினாள்.

“பட்டத்து இளவரசன்! காந்தாரி, உனக்கு எங்கிருந்து இப்படிப்பட்ட யோசனைகள் வருகின்றன? பல வருடங்களுக்கு முன்பே தர்மனுக்குத் திருமணமாகிவிட்டது.”

“நீ அந்த விவகாரத்தை ஒருபோதும் விட மாட்டாய், இல்லையா? துரியோதனன்தான் தற்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசரின் மூத்த மகன்.”

“காந்தாரி, இறுதியில் அஸ்தினாபுரத்தின் அரியணைமீது யார் அமருகிறார்கள் என்று நாம் பார்க்கலாம். நாங்கள் பலவீனமானவர்கள் அல்ல.”

காந்தாரி தன் முகத்தில் ஒரு கொடிய புன்னகையுடன் குந்தியை நோக்கித் திரும்பி, “குந்தி, அதை நாம் பார்த்துவிடலாம். துரியோதனன் என்னுடைய முறையான மகனாக இருப்பதால், அவன்தான் இந்த நாட்டை ஆள்வான்,” என்று கூறினாள்.

குந்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு முன், பாண்டவர்களும்

திரௌபதியும் அங்கு வந்தனர். “உங்கள் பெரியப்பா மற்றும் பெரியம்மாவிடம் ஆசி பெற்றுக் கொள்ளுங்கள்,” என்று குந்தி தன் மகன்களிடம் கூறினாள். அவளுடைய குரல் உணர்ச்சியற்றுப் போயிருந்தது. திரௌபதியும் அவளுடைய ஐந்து கணவன்மார்களும் திருதராஷ்டிரன் மற்றும் காந்தாரியின் பாதங்களைத் தொட்டுப் பணிந்தனர். காந்தாரி திரௌபதியைக் கட்டியணைத்தாள். திரௌபதியின் பெருமிதமான, மிடுக்கான தோரணை அவளை ஆச்சரியப்படுத்தியது. இந்த இளம்பெண் கூச்ச சுபாவம் கொண்டவள் அல்ல என்று காந்தாரி நினைத்தாள். திரௌபதி மிகவும் அழகானவள் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். இவ்வளவு துணிச்சலான, அழகான இளவரசி, ஐந்து பேருக்கு மனைவியாக இருக்க எப்படி ஒத்துக் கொண்டாள் என்று அவள் வியந்தாள். இந்தக் கேள்வி காந்தாரியை மிகவும் தொந்தரவு செய்தது. சிறிது நேரம் கழித்து, பாஞ்சால இளவரசியும் அரசி காந்தாரியும் ஒன்றாக அமர்ந்திருந்தபோது, திரௌபதியிடம் அதைக் கேட்பதற்கான வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது.

“அத்தை, இக்கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. அரசாட்சிப் பொறுப்பாளர் பீஷ்மர் உங்களை இங்கே கொண்டு வந்தபோது நீங்கள் ஏன் உங்கள் கண்களைக் கட்டிக் கொண்டு பார்வையற்று இருப்பதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?” என்று திரௌபதி கேட்டாள். பிறகு, தன் கேள்வியில் இருந்த கூர்மையைச் சற்று மழுங்கச் செய்வதற்காக, “எனக்காகத் தன் மகன்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளக்கூடாது என்று என் மாமியார் பயந்திருக்கக்கூடும். பாண்டவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்,” என்று கூறினாள்.

அப்போது அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்ட திருதராஷ்டிரன், “மகளே, எனக்கு நூறு மகன்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்கு ஒரே பெண்ணை அவர்கள் மணமுடிக்க வேண்டியதில்லை. தங்கள் சகோதரனின் மனைவி குறித்துச் சண்டையிடும் அளவுக்கு மிகக் குறைவான சுயகட்டுப்பாட்டுடன்தான் குந்தி அவர்களை வளர்த்திருக்கிறாளா?” என்று கேட்டான்.

திரௌபதி அரசனுக்குத் தலை வணங்கியதன் மூலம் தன் தடுமாற்றத்தை மறைத்தாள். தன் கணவனின் துடுக்குத்தனமான பேச்சு குந்தியின் காதுகளில் விழக்கூடும் என்று பயந்த காந்தாரி தன் உதட்டைக் கடித்தாள். அவள் பயந்த விஷயம் சில நொடிகளுக்குள் நிகழ்ந்தது. குந்தி மிகக் கடுமையான குரலில், “தர்மன் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறான். நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?”

என்று திரௌபதியிடம் கேட்டாள்.

திரௌபதி அங்கிருந்து நடந்து சென்ற ஓசை காந்தாரிக்குக் கேட்டது. தன் கணவன் தர்மசங்கடத்தில் இருமிய சத்தமும் அவள் காதுகளில் விழுந்தது. குந்தி தங்களுக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தாள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக, அடிமை நாட்டு அரசர்கள் தங்கள் வாழ்த்துக்களைக் கூற அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததாக விதுரன் வந்து கூறினான். குந்தி தன்னிடம் கோபமாக எதையேனும் கூறிவிடுவாளோ என்று பயந்த திருதராஷ்டிரன், சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றித் தன் பிரதம மந்திரியிடம் பேசிக் கொண்டே அங்கிருந்து நடந்து சென்றது காந்தாரிக்குக் கேட்டது. குந்தி திருதராஷ்டிரனிடம் அப்படி நடந்து கொள்ள மாட்டாள் என்பதைக் காந்தாரி அறிந்திருந்தாள். அடுத்து வரவிருந்த சூறாவளிக்காக அவள் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்.

“காந்தாரி, என்னையோ அல்லது என் மகன்களையோ ஏளனப்படுத்துவதற்கு எந்தவொரு வாய்ப்பையும் நீ தவறவிடுவதில்லை,” என்று குந்தி அவளுடைய காதிற்குள் கிசுகிசுத்தாள். காந்தாரி அதற்கு பதிலேதும் கூறவில்லை, எந்த வருத்தமும் தெரிவிக்கவில்லை. அவள் குந்தியையும் அவளுடைய வார்த்தைகளையும் உதாசீனப்படுத்திவிட்டு, அலட்சியமான அமைதியுடன் எழுந்து நின்றாள். குந்தி கோபத்தால் நடுங்கியவாறு அங்கிருந்து வேகமாக வெளியேறியபோது, தன் மாமியார் தன்னுடைய அரசியல் விளையாட்டை விளையாடுவதற்காக ஐந்து ஆண்களுடன் தன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்த அந்த இளம்பெண்ணுக்காகக் காந்தாரி வருந்தினாள். ‘திரௌபதியும் கிட்டத்தட்ட என்னைப்போலத்தான் இருக்கிறாள். இந்த நாட்டில், ஆண்கள் பெண்களைத் தங்கள் சுயநலனுக்கான கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர்,’ என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

* * *

துரியோதனன் எது குறித்து அஞ்சினானோ, அது, அந்த பிரம்மாண்டமான இரவு விருந்திற்கு மறுநாள் காலையில் நிகழ்ந்தது. சுபத்திரை அர்ச்சுனனைத் திருமணம் செய்து கொண்ட பிறகு, அப்போதுதான் முதன்முறையாக துரியோதனன் அவளை நேருக்கு நேர் பார்த்தான். அவள் பானுமதியுடன் வந்தாள். சுபத்திரை தன் ஆண்குழந்தையைத் தன் கைகளில் ஏந்தியிருந்தாள். அவள் தன் கைக்குழந்தையை துரியோதனனின் கைகளுக்குள் அமைதியாக

வைத்தாள். அவளுடைய விரல்கள் துரியோதனனை உரசியபோது, அவன் அவளுடைய அழகிய முகத்திலிருந்து தன் கண்களைத் திருப்பிக் கொண்டான். தன் கைகளிலிருந்த குழந்தை தன் பொக்கை வாய் தெரியச் சிரித்துக் கொஞ்சியபோது, பட்டத்து இளவரசன் கரைந்து போனான். தான் அணிந்திருந்த நீளமான முத்து மாலையைப் பிடித்து அக்குழந்தை விளையாடியபோது, அவன் பேசாமல் நின்றான். முன்பொரு காலத்தில் தான் பெரிதும் நேசித்திருந்தவள், நீண்டகாலம் சந்தித்திராத தோழிகளைப்போலத் தன் மனைவியுடன் அளவளாவிக் கொண்டிருந்ததை துரியோதனன் பார்த்தான். 'அவர்களால் எப்படி இப்படி இருக்க முடிகிறது? என் காதல் சுபத்திரையை எள்ளளவும் பாதிக்கவில்லையா?' என்று அவன் வியந்தான்.

சுபத்திரையின் குழந்தை துரியோதனன்மீது சிறுநீர் கழித்து அழத் தொடங்கியபோது, அவளும் பானுமதியும் துரியோதனனை நோக்கித் திரும்பிச் சிரித்தனர். சுபத்திரை அவனுடைய கைகளிலிருந்து தன் குழந்தையை எடுத்துக் கொண்டு, பெண்களும் குழந்தைகளும் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் அதனுடன் பேசினாள். அக்குழந்தை உடனடியாகத் தன் அழுகையை நிறுத்திவிட்டுப் புன்னகைத்தது. "இவன் தன் தந்தையைப்போலவே இருக்கிறான், இல்லையா?" என்று துரியோதனனிடம் கேட்டுவிட்டுத் தன் மகனைக் கொஞ்சத் துவங்கிய சுபத்திரை, துரியோதனனின் முகத்தில் தெரிந்த வேதனையைக் கவனிக்கவில்லை. அக்குழந்தை துரியோதனனை நோக்கித் தன் கையை நீட்டியது. அவன் அதைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, தன் கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி நான்கு வளையங்களாக மடித்து அக்குழந்தையின் கழுத்தைச் சுற்றி அணிவித்துவிட்டு, அதன் கள்ளங்கபடமற்றச் சிரிப்பில் தன்னை மறந்தான்.

அப்போது அந்த அறைக்குள் வந்த அர்ச்சுனன், அவர்கள் அனைவரையும் ஒன்றாகப் பார்த்துவிட்டு அப்படியே நின்றான். சுபத்திரை அவனைக் கண்டதும், "துரியோதனன் இவனுக்குக் கொடுத்திருக்கும் பரிசைப் பாருங்கள்," என்று கூறிவிட்டு, துரியோதனன் தன் குழந்தைக்குக் கொடுத்திருந்த விலையுயர்ந்த பரிசை அர்ச்சுனனிடம் பெருமிதத்துடன் காட்டினாள்.

அர்ச்சுனன் துரியோதனனின் பாதங்களையும் அவனுடைய மனைவி பானுமதியின் பாதங்களையும் தொட்டுப் பணிந்தான். என்ன இருந்தாலும் அவர்கள் தனக்கு மூத்தவர்கள் என்று அவன் நினைத்தான். திருமணக் கொண்டாட்டங்களைப் பற்றியும் பல பரிச்சயமான முகங்களைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருந்தது பற்றியும் அவர்கள்

சிறிது நேரம் பேசினர். அப்போது, அர்ச்சுனனும் அவனுடைய மனைவியும் அங்கிருந்து புறப்படத் திரும்பியபோது, துரியோதனன் அர்ச்சுனனை அழைத்து, "அர்ச்சுனா, அவன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"அபிமன்யு," என்று சுபத்திரை அவனுக்கு பதிலளித்தாள்.

அன்றிரவு, பானுமதியின் தந்தை அவளுக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்திருந்த பிரம்மாண்டமான கட்டிலின்மீது துரியோதனனும் அவனுடைய மனைவியும் படுத்திருந்தபோது, பானுமதி அவனுடைய இதழ்களின்மீது முத்தமிட்டுவிட்டு, "சுபத்திரை அதிர்ஷ்டசாலி. அபிமன்யுவைப் போன்ற ஒரு மகன் எனக்கு இருந்தால் நான் பெரிதும் மகிழ்வேன்," என்று கூறினாள். துரியோதனன் எதுவும் பேசாமல், அவளுடைய தலையை வருடிக் கொடுத்தான். முன்பொரு காலத்தில் சுபத்திரையை அவன் எவ்வளவு ஆழமாகக் காதலித்திருந்தானோ, தன் கைகளில் தவழ்ந்த பெண்ணை அதே அளவு ஆழமாக நேசிக்க அவன் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்தான்.

* * *

இதற்கிடையே, முன்பொரு காலத்தில் யாராலும் எளிதில் ஊடுருவ முடியாத காண்டவக் காடு இருந்த இடத்தில், இப்போது ஒரு மாபெரும் நகரம் உருவாகிக் கொண்டிருந்தது. அந்த மூன்று வருடங்களும் மயாசுரனின் வாழ்வில் மிகச் சிறந்த வருடங்களாக அமைந்தன. எல்லாவற்றையும் கச்சிதமாகச் செய்வதில் அவன் குறியாக இருந்தான். மற்றவர்களைக் கடினமாக வேலை வாங்குவதில் அவன் கைதேர்ந்தவன். உயிர் பிழைத்த நாகர் குலப் பெண்களும் குழந்தைகளும் அந்த மாபெரும் நகரத்தின் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். கோடையின் சுட்டெரித்த வெப்பத்திலும், மாரிக்காலத்தின் கடும் மழையிலும், குளிர்காலத்தின் உறைய வைத்தக் குளிரிலும் மயாசுரன் கடுமையாக உழைத்தான். நலிவுற்றத் தோற்றத்துடன் இருந்த நாகர் குலப் பெண்களும், இளைத்துப் போயிருந்த அவர்களுடைய குழந்தைகளும், பாண்டவர்களுக்கான இந்த அழகிய நகரத்தைக் கட்டியெழுப்புவதற்காக மயாசுரனுடன் சேர்ந்து ஓய்வின்றி வேலை செய்தனர். ஒரு பிடிச் சோற்றுக்காகவும் தலைக்கு மேலே ஒரு சிறிய கூரைக்காகவும், பாண்டவச் சகோதரர்களுக்கு ஓர் அற்புதமான மாளிகையை உருவாக்குவதற்காக இந்த தினக்கூலித் தொழிலாளிகள் தங்கள் உடல்களை வருத்திக் கடினமாக உழைத்தனர். அந்த இளம் அசுரன் அவர்களைத் தொடர்ந்து விரட்டி வேலை வாங்கினான். நாகர்கள் அருமையான சந்தைப் பகுதிகளை நிர்மாணித்தனர், சீரான சாலைகளை

அமைத்தனர், அழகான தோட்டங்களை உருவாக்கினர், நேர்த்தியான வீடுகளைக் கட்டியெழுப்பினர். பரதகண்டம் அதுவரை ஒருபோதும் பார்த்திராத ஒரு மாபெரும் நகரத்தை அவர்கள் ஒவ்வொரு கல்லாக உருவாக்கினர். துவாரகையைவிடப் பெரிதாக இருந்த அது, அஸ்தினாபுரத்தைவிட அதிக உன்னிப்பாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டிருந்தது. ஹேஹயம் மற்றும் முசிறியின் நகரக் குழப்பங்கள் எதுவும் இல்லாமல் இருந்த இப்புதிய நகரம், பல்வேறு வகையான கட்டடக் கலையின் அழகிய ஒருங்கிணைப்பாக இருந்தது. மயாசுரன் அசுரர்கள் பாணியில் கோவில்களை வடிவமைத்தான். கச்சிதமான ஒலியியலுடன்கூடிய இசை அரங்குகள் காந்தர்வர்களின் பாணியில் இருந்தன. சந்தைகள் மேற்குக் கடற்கரையோர நகரமான ஹேயயத்தின் பாணியைத் தழுவி அமைக்கப்பட்டன. பயணியருக்கான உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் காந்தாரத்தின் பாணியில் வடிவமைக்கப்பட்டன. மயாசுரனின் கைவண்ணத்தில் உருவான இந்நகரம் பரதகண்டத்தின் ஆன்மாவை உள்ளடக்கியிருந்தது. இந்நகரம் முழுமையடைவதற்கு முன்பே இதன் புகழ் எட்டுத் திக்கும் பரவியது.

நகரின் கட்டுமானத்தைப் பார்வையிடுவதற்காகப் பாண்டவர்கள் யமுனை நதிக்கரையின்மீது முகாமிட்டனர். தங்களுடைய ஆடம்பரமான நகரை உருவாக்குவதற்கு அவர்களுக்குப் பணப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, அவர்கள் வரிகளை அதிகரித்தனர் அல்லது புறநகர்ப் பகுதிகளைச் சூறையாடினர். தங்களுடைய அற்புதமான நகரம் அழகாக உருவாகிக் கொண்டிருந்ததை அவர்கள் கர்வத்தோடும் மனநிறைவோடும் கவனித்தனர். இந்நகரின் பெருமையைப் புகழ்ந்து பாடப்பட்டப் பாடல்களை அவர்கள் மகிழ்ச்சியாகக் கேட்டு ரசித்தனர். கடவுள்கள் அவர்களிடம் அன்பாக இருந்தனர். ஆனால் இதில் அவர்களுக்கு எந்த ஆச்சரியமும் இருக்கவில்லை. தாங்கள் எப்போதும் கடவுளின் வார்த்தையைப் பின்பற்றி நடந்திருந்ததாலும், தாங்கள் தர்மத்தின் பாதையில் பயணித்திருந்ததாலும் கடவுள்கள் தங்கள்மீது கருணை காட்டியதாகவும், இதற்குத் தாங்கள் தகுதியானவர்கள்தான் என்றும் அவர்கள் கருதினர். அந்நகரத்தின் உருவாக்கம் முற்றுப் பெறும் நிலையை நெருங்கியபோது, அவர்களுடைய புரோகிதனும் அறிவுரையாளனுமான தௌமியன் அஸ்தினாபுரத்திலிருந்து தன் சீடர்களோடு வந்து, தர்மன் நெறி தவறாமல் நடந்து கொண்டிருந்தானா என்று பார்த்தான்.

அப்புதிய நகருக்கான முதல் கல்லை மயாசுரன் பதித்த ஒருசில நாட்களுக்குப் பிறகு, வாசுகி தான் தேர்ந்தெடுத்திருந்த சில நபர்களுடன் அந்த இடத்திலிருந்து போய்விட்டிருந்தான். தான் உருவாக்கத் துடித்துக்

கொண்டிருந்த ஒரு நகரத்திடம் இருந்து மயாசுரனைப் பிரிக்க முடியாததை அறிந்திருந்த வாசுகி, தன்னுடன் வந்துவிடுமாறு அவனை வற்புறுத்தவில்லை. ஆனால் வாசுகிக்கு ஓர் அவசரமான வேலை இருந்தது. காண்டவத்தில் நடந்த படுகொலைகளுக்குப் பிறகு, அஸ்தினாபுரத்தின்மீது பல தொடர்ச்சியான தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி, அஸ்தினாபுரத்தைப் பழி வாங்க நாகர்களின் தலைவன் தட்சகன் முயற்சித்திருந்தான். ஆனால் பீஷ்மர் ஈவு இரக்கமின்றி அந்தக் கிளர்ச்சியை ஒடுக்கியிருந்தார். தட்சகன் தற்போது எங்கு இருந்தான் என்பது பற்றி யாருக்கும் தெரியவில்லை. அஸ்தினாபுரத்தின் ஏழ்மையான பகுதிகள்மீது அவனுக்கு இருந்த செல்வாக்கு, துர்ஜயனின் சாம்ராஜ்யத்தை விதுரன் வேரோடு அறுத்து எறிந்திருந்த பிறகு குறிப்பிடத்தக்க அளவு பலவீனமடைந்திருந்தது. துர்ஜயன் போன்ற நெறிமுறையற்ற நபர்களோடு தங்களுக்கு இருந்த தொடர்பு குறித்து வாசுகிக்கு ஓர் அசௌகரியமான உணர்வு ஏற்பட்டது. ஈவு இரக்கமற்ற, சக்திவாய்ந்த ஒரு கொடியவன், நிழல்களுக்குப் பின்னாலிருந்து தங்களைத் தன்னுடைய சுயநலனிற்காகப் பயன்படுத்திக் கொண்டிருந்ததாகவும், அதன் விளைவாக ஏற்பட்டக் குழப்பத்தில் அவன் களித்திருந்ததாகவும் வாசுகி சந்தேகித்தான். இந்தப் புனிதமற்றக் கூட்டணியிலிருந்து நன்மை எதுவும் பிறக்காது என்பதைத் தன் அனுபவத்திலிருந்து அவன் அறிந்திருந்தான்.

தளபதி இரணியதனுசு மற்றும் பேரரசன் ஜராசந்தனின் மரணம் பற்றிய வதந்திகள் வாசுகியின் காதுகளையும் வந்தடைந்திருந்தன. ஏகலைவன் முட்டாள்தனமாக எதையேனும் செய்வதற்கு முன்பு தான் அவனைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்று வாசுகி நினைத்தான். சீரழிந்து போயிருந்த தன்னுடைய மக்களுக்கு ஏகலைவன்தான் கடைசி நம்பிக்கை என்று அவன் நம்பினான். வாசுகிக்கு வயதாகிக் கொண்டிருந்தது. பூமியில் அவனுடைய நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. அகங்காரமும் அதிகாரப் பசியும் கொண்டு திரிந்த தட்சகனுக்குப் பதிலாக ஏகலைவனையோ அல்லது தன்னையோ நாகர்களின் தலைவனாகத் தன்னால் ஆக்க முடிந்தால், தன் மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்ததாக வாசுகி நினைத்தான். மிகவும் கவலைப்பட்ட அவன், மயாசுரனை விட்டுவிட்டு ஏகலைவனைத் தேடிப் புறப்பட்டான்.

நாகர்கள் கூட்டத்தில் இருந்த இன்னொரு முதியவன் அவர்களுடனேயே தங்கிவிடுவதைத் தேர்ந்தெடுத்தான். அவனுக்கும் நாகர்களுக்கும் இடையே பொதுவான எதுவும் இருக்கவில்லை. நாகர்களுடனான அவனுடைய கூட்டு அவனுடைய பரிதாபகரமான

சூழ்நிலையின் விளைவால் உருவான ஒன்றுதான். வேறொரு காலகட்டமாக இருந்திருந்தால், அவன் பரதகண்டத்தின் அரியணையின்மீது அமர்ந்து, தட்சகன் போன்ற கீழ்மையானவர்கள்மீதும் பீஷ்மர்மீதும்கூட அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்திருப்பான். முதல் இந்திரனுக்கும் தற்போதைய இந்திரனுக்கும் இடையேயான முரண்பாடு வெளிப்படையானதாகவும் பரிதாபகரமானதாகவும் இருந்தது. முதல் இந்திரன், பண்டைய அசுர சாம்ராஜ்யங்களை ஈவு இரக்கமின்றித் துவம்சம் செய்து, தேவ ஆட்சியையும் தங்கள் வம்சத்தையும் அங்கு நிலைப்படுத்தியிருந்தான். ஆனால் தற்போதைய இந்திரன், ஒரு சுண்டெலியைப்போல அங்குமிங்கும் ஓடித் திரிந்து, தட்சகனைப் போன்றவர்கள் வீசி எறிந்த அற்பக் காசுகளைக் கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். இந்த இந்திரன் இளைஞனாக இருந்தபோது, தன் சாம்ராஜ்யத்தை மீட்டெடுப்பது குறித்த ஒரு மாபெரும் கனவைக் கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு வயது ஏற ஏற, அக்கனவு அவனுக்குப் புளித்துப் போனது. அவனுடைய மனத்தில் வெறுப்பும் விரக்தியும் குடியேறின.

பல வருடங்களுக்கு முன்பு, குந்தி ஒருசில நாட்களுக்கு அவனைத் தன் படுக்கைக்கு அழைத்திருந்தது அவனுடைய வாழ்வில் ஒரு குறிப்பிடத்தக்கச் சம்பவமாக இருந்தது. அவன் காண்டவக் காட்டிலிருந்த தன் சிதிலமடைந்த அரண்மனையிலிருந்து புறப்பட்டு, அஸ்தினாபுரத்திற்குக் கால்நடையாகவே சென்று, அதன் புறநகரிலிருந்த குந்தியின் சௌகரியமான வசிப்பிடத்தின் வாசலில் ஒரு சாதாரண கிராமவாசியைப்போலக் கவலையோடு காத்திருந்தான். அவன் உள்ளே வர அவள் ஒருவழியாக அவனுக்கு அனுமதி வழங்கியபோது, அவளுடைய கண்களில் கடும் வெறுப்பை அவனால் உணர முடிந்தது. புரோகிதனான தௌமியனும் அங்கே இருந்தான். அவன்தான் தனக்கு அழைப்பு விடுப்பதற்குக் குந்தியையும் அவளுடைய ஆண்மையற்றக் கணவனையும் ஒப்புக் கொள்ள வைத்திருக்க வேண்டும் என்று இந்திரன் நினைத்தான். அவன் தன் விதியைப் பற்றி யோசித்தான். அவன் இன்னொருவனின் மனைவியின் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளவிருந்தான். அவளுக்கு ஏற்கனவே இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களும் அவளுடைய கணவனுக்குப் பிறந்திருந்தவர்கள் அல்ல. தான் அரசக் கருப்பையைச் சினைப்படுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு பரிசுக் காளை என்பதுபோல இந்திரன் உணர்ந்தான். அவனுக்குப் பணம் மட்டும் தேவைப்பட்டிருக்காவிட்டால், அவர்கள் அனைவரையும் மோசமான வார்த்தைகளால் திட்டிவிட்டு அவன் அங்கிருந்து வேகமாக வெளியேறியிருப்பான்.

புரோகிதர்கள் அந்த வசிப்பிடத்தின் வாசலில் அமர்ந்து தத்துவத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, உள்ளே ஒரு புழுக்கமான அறையில் அவன் குந்தியுடன் தடுமாறிக் கொண்டிருந்தான். அவளுடைய ஏளனப் பார்வையைக் கண்டு அவன் கொதித்தான். முதல் இரண்டு நாட்களுக்கு, தன் சொந்த ஆண்மையற்றத் தன்மையை நினைத்து அவன் அவமானத்தால் வெந்து போயிருந்தான். இறுதியில் ஒருவழியாக அவன் தன்னுடைய முயற்சியில் வெற்றி பெற்றபோது, இன்பத்தைவிட, அதிக நிம்மதியை அவன் அனுபவித்தான். பிறகு அவன் தன் பணத்தையும் பரிசுப் பொருட்களையும் பெற்றுக் கொண்டபோது, ஒரு வேசியைப்போல உணர்ந்தான். இந்த வினோதமான உலகத்தைப் பற்றியும், அதன் ஒழுக்கப் பண்பைப் பற்றியும் அவன் வியந்தான்.

இந்திரன் மயாசுரனின் குடிசையில் அடைக்கலம் புகுந்திருந்தான். ஆனால் எப்போதும் கனவுலகில் இருந்த அந்தக் கட்டடக் கலைஞனைக் கண்டாலே அவனுக்கு எரிச்சல் வந்தது. தன் உயிரைக் காப்பாற்றியதற்காக இந்த அசுரனுக்குத் தான் கடன்பட்டிருந்தோம் என்ற எண்ணமே இந்திரனுக்கு வெறுப்பூட்டியது. தனக்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அந்த அசுரனை இகழ்ந்ததன் மூலம் அவன் தன் விரக்தியை வெளிப்படுத்தினான. தன் கனவுலகில் தொலைந்து போன மயாசுரன், இந்த முதியவனின் பிதற்றல்களை உதாசீனப்படுத்தினான். அவனுடைய வேலை அவனை எப்போதும் மும்முரமாக வைத்திருந்ததால், இந்திரனை அலட்சியப்படுத்துவது அவனுக்கு மிகவும் சுலபமாக இருந்தது. இந்திரன் காலையில் கண்விழிப்பதற்கு முன்பாகவே வேலைக்குச் சென்றுவிட்டு, இரவில் அவன் தூங்கிய பிறகு வீட்டிற்கு வரும் வழக்கத்தை மயாசுரன் ஏற்படுத்திக் கொண்டான். ஆனாலும் அவ்வப்போது அவர்களுக்கிடையே வார்த்தை மோதல்கள் ஏற்படத்தான் செய்தன. மயாசுரனின் வேடிக்கைச் சிரிப்பு இந்திரனுக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்தது. அப்படிப்பட்ட ஒரு விவாதத்தின்போது, அர்ச்சுனன் உண்மையில் தன்னுடைய மகன் என்று இந்திரன் தன்னையும் மீறித் திடீரென்று கூறினான். இந்த முட்டாள்தனமான பேச்சைக் கேட்டு மயாசுரன் விழுந்து விழுந்து சிரித்தான். இதைக் கண்ட இந்திரன், அந்தத் தீண்டத்தகாதவனை வாய்க்கு வந்தபடி வசைபாடிவிட்டு, அந்தக் குடிசையைவிட்டுப் புயலென வெளியேறி, பாண்டவர்களின் முகாமை நோக்கி நடந்தான். அவன் அந்த முகாமை நெருங்கியபோது, அவனுடைய துணிச்சல் மாயமாய் மறைந்தது. அவன் அந்த முகாமிற்கு வெளியே அமைதியாக நின்றான். சில நிமிடங்கள் கழித்து அவன் அங்கிருந்து திரும்பிச் செல்ல முயன்றபோது, கழுகுக் கண்களைக் கொண்ட தௌமியன் அவனைப் பார்த்துவிட்டு, தன்

பாண்டவ நண்பர்களைப் பார்க்க வந்திருந்த கிருஷ்ணனின் காதில் எதையோ முணுமுணுத்தான். என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதை இந்திரன் அறியும் முன்பாகவே, அவர்கள் அனைவரும் அவனை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தனர்.

கிருஷ்ணன் இந்திரனுக்கு முன்னால் தலை வணங்கி, அவனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, "மேன்மை மிக்கவரே, பாண்டவர்களின் இந்த எளிய குடிலுக்கு உங்களை வரவேற்கிறேன்," என்று கூறினான்.

அப்போது தர்மன் முன்னால் வந்து, இந்திரனின் பாதங்களைத் தொட்டுப் பணிந்தான். கிருஷ்ணன் தன்னை இவ்வளவு மரியாதையாக அழைத்ததையும், தர்மன் தனக்குக் காட்டிய மரியாதையையும் கண்ட இந்திரன் அதிர்ச்சி அடைந்தான். 'மேன்மை மிக்கவரே' என்று மக்கள் அவனை அழைத்து நெடுங்காலம் ஆகியிருந்தது. இப்போது அந்த வார்த்தைகளைக் கேட்டது அவனுடைய காதுகளுக்கு வினோதமாக இருந்தது. அவர்களுடைய புன்னகைகளில் ஏளனம் தெரிந்ததா என்று அவன் தேடினான். ஆனால் இந்திரன் பரதகண்டத்தின் அரியணையின்மீது அதன் உரிமையான பேரரசனாக வீற்றிருந்ததுபோல அவர்கள் மரியாதையாகத் தலை வணங்கி நின்றனர்.

புன்னகையோடு நின்ற கிருஷ்ணன், தயக்கத்தோடு நின்ற அர்ச்சுனனை முன்னால் தள்ளிவிட்டு, "மேன்மை பொருந்தியவரே, இதோ உங்கள் மகன்," என்று இந்திரனிடம் கூறினான்.

இந்திரன் உணர்ச்சிவசப்பட்டான். தன் வளர்ந்த மகனிடம் தான் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது, திடீரென்று பழைய இருண்ட நினைவுகளை அவனுக்குக் கொண்டு வந்தது. இந்திர வம்சத்தின் கடைசி இந்திரனான அவனுக்கு, வாழ்வில் தான் தோல்வியடைந்துவிட்டோம் என்ற கடுமையான உண்மையை அது நினைவுபடுத்தியது. தன் பாதங்களில் பணிந்திருந்த தன் மகனை இந்திரன் தொட்டுத் தூக்கியபோது, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழத் தொடங்கினான். இந்திர வம்சம் தன்னோடு அழிந்துவிடாது, இந்தப் பாண்டவனின் மூலமாக அது தொடர்ந்து தழைக்கும் என்று அவன் நினைத்தான். தன் வாழ்க்கைக்கு இறுதியில் சிறிது அர்த்தமும் குறிக்கோளும் இருந்ததாக அந்த முதிய அரசன் உணர்ந்தான். விறைப்பாக இருந்த அர்ச்சுனனை அவன் கட்டித் தழுவிக் கொண்டு, தன் கண்ணீரின் ஊடாக, "மகனே . . . மகனே," என்று முணுமுணுத்தான்.

தாங்கள் கட்டிக் கொண்டிருந்த அற்புதமான நகரத்தை இந்திரனுக்கு அவர்கள் சுற்றிக் காட்டினர். அந்நகரின் ஒவ்வோர் அம்சத்தையும் கண்ட இந்திரன் பெருமகிழ்ச்சி அடைந்தான். காண்டவம் எரிந்து தரைமட்டமானபோது, தன்னைத் துரத்தி வந்த யானையைக் கொன்று

தன்னைக் காப்பாற்றியது அர்ச்சுனன்தான் என்பதை இந்திரன் உணர்ந்தானா என்று கிருஷ்ணன் அவனிடம் கேட்டான். இந்திரன் தன் மகனைப் பெருமிதத்துடன் பார்த்தான். தான் அந்த அசுரனுக்குக் கடன்பட்டிருக்கவில்லை என்பதை உணர்ந்த இந்திரன் நிம்மதியடைந்தான். தன் மகன்தான் தன்னைக் காப்பாற்றியிருந்தானே தவிர, அந்தத் தீண்டத்தகாதவன் அல்ல என்று அவனுக்குத் தெரிய வந்தபோது, மயாசுரன் குறித்து அவன் கொண்டிருந்த பகைமையுணர்வு முற்றிலுமாகக் கரைந்து போனது. இந்திரன் மயாசுரனின் பல திறமைகளைப் பற்றி அவர்களிடம் கூறி, அந்தக் கட்டடக் கலைஞனை வாயாரப் புகழ்ந்தான். ஆனால் மயாசுரனின் எஜமானர்களான பாண்டவர்கள், இந்திரனின் வார்த்தைகளைக் கண்டுகொள்ளவில்லை. கிருஷ்ணன் அந்த முன்னாள் அரசனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, மயாசுரன் வெறுமனே தன் கடமையைத்தான் செய்து கொண்டிருந்தானே தவிர, அசாதாரணமான எதையும் செய்துவிடவில்லை என்று கூறினான். மேலும், அந்த அசுரனின் உயிரையும் அர்ச்சுனன்தான் காப்பாற்றியிருந்தான் என்றும், அவன் வெறுமனே தன் நன்றிக்கடனைத் திருப்பிச் செலுத்திக் கொண்டிருந்தான் என்றும் கிருஷ்ணன் கூறினான்.

கிருஷ்ணனின் வார்த்தைகள் இந்திரனை மௌனமாக்கின. சக்திவாய்ந்த இந்த மனிதனுடன் வாக்குவாதம் செய்து, இறுதியாகத் தான் கண்டுபிடித்திருந்த மகிழ்ச்சியை அவன் இழக்க விரும்பவில்லை. எனவே பேச்சை மாற்றுவதற்காக, பாண்டவர்கள் தங்கள் புதிய நகரத்திற்கு ஏதேனும் பெயரைத் தேர்ந்தெடுத்திருந்தனரா என்று அவன் அவர்களிடம் கேட்டான்.

“மேன்மை மிக்கவரே, நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள பெயர் உங்களை கௌரவப்படுத்துகிறது,” என்று தர்மன் கூறினான். வழக்கமாக அமைதி தவழ்ந்த அவனுடைய முகத்தின்மீது ஒரு புன்னகை அரும்பியது. “இந்நகரத்தின் பெயர் . . .” என்று தொடங்கிய தர்மன், பெருமையால் பூரித்து நின்ற தன் சகோதரர்களைப் பார்த்துவிட்டு, “அர்ச்சுனா, நாம் என்ன பெயரைத் தீர்மானித்துள்ளோம் என்று அவரிடம் நீயே கூறு,” என்று கூறினான்.

அர்ச்சுனன் அதை ஒப்புக் கொண்டதுபோலத் தலையசைத்து, “இந்திரனின் நகரம் — இந்திரப்பிரஸ்தம்,” என்று மிக மென்மையாகக் கூறினான்.

இதைக் கேட்டதும் அந்தக் கடைசி இந்திரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். அவனுடைய கண்கள் கண்ணீரால் நிரம்பின. தன் வாழ்வின் இலையுதிர் பருவத்தில், கடவுள்கள் தன்னை

மறந்துவிட்டிருக்கவில்லை என்பதை இறுதியில் அவன் தெரிந்து கொண்டான். பரதகண்டத்தின் மாபெரும் நகரத்திற்குத் தன்னுடைய பெயர் சூட்டப்பட இருந்ததையும், தன் மகன் தன் வம்சத்தைத் தொடர்வான் என்பதையும் நினைத்து அவன் பூரித்துப் போனான். தன் வாழ்க்கை வீணாகிவிடவில்லை என்பதை உணர்ந்த அவன், மகிழ்ச்சியில் வாயடைத்து நின்றான்.

"முதலாம் இந்திரனான புரேந்திரனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக நாங்கள் இந்த நகரத்திற்கு இந்திரப்பிரஸ்தம் என்று பெயரிட்டிருக்கிறோம்," என்று கிருஷ்ணன் கூறினான்.

அந்த வார்த்தைகள் அந்த முதியவனின் தலையின்மீது இடியாக இறங்கின. புரேந்திரனை அவர்கள் நினைவுபடுத்தியது மிகவும் கொடுமையானது என்று அவன் நினைத்தான். வாழ்வில் தன் பிடிமானத்தை இழந்திருந்த அந்த முதியவனுக்கு, தனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்வதற்குத் தன் மூதாதையரின் பெருமை மட்டும்தான் எஞ்சியிருந்தது. அவனுடைய இதயம் வேதனையால் கனத்தது.

"மேன்மை மிக்கவரே, உங்களை இழிவுபடுத்துவது எங்கள் நோக்கமல்ல. உண்மையில், மாபெரும் புரேந்திரனின் ரத்தம் உங்கள் மூலமாக என் சகோதரனின் நாளங்களில் ஓடிக் கொண்டிருப்பது குறித்து நாங்கள் அனைவரும் பெருமிதம் கொண்டிருக்கிறோம்," என்று தர்மன் இந்திரனிடம் கூறினான்.

ஆனால் இந்திரனின் மனம் மீண்டும் ஒர் இருண்ட பகுதிக்குத் திரும்பியிருந்தது. பாண்டவர்களின் புதிய மாளிகையும் அந்த நகரமும் அவனுடைய கண்களில் இனியும் அழகாகத் தெரியவில்லை. அவன் அங்கிருந்து ஒடிச் சென்று, தன் குடிசைக்குள் ஒளிந்து கொள்ள விரும்பினான். தன் உயிரைக் காப்பாற்றியதற்காக மயாசுரனுக்குத் தான் கடன்பட்டிருந்ததால் அவனைக் குறித்து இந்திரன் கொண்டிருந்த வெறுப்பு, இப்போது அர்ச்சுனனை நோக்கித் திரும்பியது. கடவுளின் அருள் இருந்தால், என் மகனுக்கு நான் பட்டக் கடனை எப்படியாவது நான் திருப்பிச் செலுத்துவேன், என்று அவன் தனக்குள் உறுதி பூண்டான். அதை எப்படிச் சாதிப்பது என்பதும் அவனுக்குத் தெரிந்தது. அர்ச்சுனனுக்கு ஒரு வலிமையான எதிரியாக உருவாகிக் கொண்டிருந்த, தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த கர்ணன் என்ற ஒரு மாபெரும் வீரனைப் பற்றிய வதந்திகளை அவன் கேள்விப்பட்டிருந்தான். சாதாரண அம்புகளால் துளைக்க முடியாத ஒரு மார்புக் கவசத்தைக் கர்ணன் அணிந்ததையும் அவன் கேள்விப்பட்டிருந்தான். ஒரு வைர முனையைக் கொண்ட, உடைக்கப்பட முடியாத இரும்பு அம்பு ஒன்றை

உருவாக்குவதற்கான ரகசியச் சூத்திரம் இந்திரனுக்கு இன்னும் நினைவிருந்தது. கர்ணனின் சிறப்புக் கவசம் உட்பட, எதை வேண்டுமானாலும் துளைக்கக்கூடிய சக்தி அந்த ஆயுதத்திற்கு இருந்தது. வஜ்ரம் என்று அழைக்கப்பட்ட அந்த ஆயுதத்தை முதலாம் இந்திரன்தான் உருவாக்கியிருந்தான். இந்த ரகசியம் இந்திர வம்சத்தில் தந்தையிடமிருந்து மகனுக்கு வழிவழியாகத் தெரிவிக்கப்பட்டு வந்திருந்தது. ஆனால் அதைச் செய்யக்கூடிய இரும்புக் கொல்லர்கள் நெடுங்காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டிருந்தனர்

ஒருவேளை மயாசுரனால் அதை மீண்டும் உருவாக்க முடியும் என்று நினைத்த இந்திரன் பெரும் உற்சாகமடைந்தான். பேராற்றல் வாய்ந்த கர்ணனை எதிர்த்துச் சண்டையிடுவதற்கு நான் அந்த வஜ்ரத்தை என் மகனுக்குக் கொடுப்பேன். இதன் மூலம், நான் அவனுக்குப் பட்டுள்ள கடனைத் தீர்த்துவிட்டு, சுதந்திர மனிதனாக ஆகிவிடுவேன். கடைசி இந்திரன் முழுமையாகத் தோல்வியடைந்துவிடவில்லை என்பதை உலகம் அப்போது தெரிந்து கொள்ளும், என்று அவன் நினைத்தான். அவன் கிருஷ்ணனிடமும் பாண்டவர்களிடமும் இருந்து அவரச அவசரமாக விடைபெற்றுக் கொண்டான். தங்களுடனேயே தங்கிவிடுமாறு அவர்கள் விடுத்த அழைப்பைத் தான் மறுத்தது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால், அவனுடைய குடிசைக்கு அவனை அழைத்துச் செல்வதற்கு தர்மன் முன்வந்தபோது, அதை அவன் ஏற்றுக் கொண்டான். தினக்கூலிப் பட்டாளத்தில் இருந்த தன்னுடைய அண்டைக் குடிசையினர் அரச ரதத்திலிருந்து தான் கீழே இறங்குவதைப் பார்க்க வேண்டும் என்று அவன் விரும்பினான். ஆனால், அதைவிட அதிகமாக, தன் வெற்றியை மயாசுரன் பார்க்க வேண்டும் என்று அவன் விரும்பினான்.

* * *

மயாசுரன் அன்று தன் குடிசைக்கு முன்னதாகவே வந்துவிட்டான். தன் எஜமானனின் ரதம் தன் குடிசையின் வாசலில் வந்து நின்றதைக் கண்டு குழப்பமடைந்த அவன், தன் மரியாதையைச் செலுத்துவதற்காக வாசலுக்கு விரைந்தான். ஆனால் ஓர் அற்பப் புன்னகையோடு அந்த முதிய இந்திரன் அதிலிருந்து இறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது அவன் அதிர்ச்சி அடைந்தான். அர்ச்சுனனின் தந்தையை அவருக்குரிய மரியாதையுடன் நடத்துமாறு தர்மன் மயாசுரனை எச்சரித்தான். ஒரு துறவி என்ற முறையில், இந்திரனுக்கு பௌதீகப் பொருட்கள்மீது நாட்டம் இருக்கவில்லை என்பதால், அரண்மனையில் வாழ்வதைவிட இந்தக் குடிசையில் வாழ்வதையே அவர் விரும்பினார்

என்றும் தர்மன் விளக்கினான். அந்த இளம் கட்டடக் கலைஞன் மௌனமாகத் தலை வணங்கினான்.

அந்த முதியவனை அந்தத் தீண்டத்தகாதவனின் குடிசைக்குக் கொண்டு போய் விட்டுவிட்டுத் திரும்பி வந்த தர்மன், வெறுப்பில் தலையசைத்தான். நாற்றம் பிடித்தப் பணியாளர் பகுதிக்குச் செல்வதை அவன் வெறுத்தான். தான் இப்போது குளித்தாக வேண்டும் என்று அவன் நினைத்தான். தௌமியனுடன் நடைபெறவிருந்த சந்திப்புக் குறித்தும் அவன் அவ்வளவு ஆர்வமாக இருக்கவில்லை. ஏனெனில், உடலையும் ஆன்மாவையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவன் நிச்சயமாகத் தனக்குச் சொற்பொழிவாற்றுவான் என்பதை அவன் அறிந்திருந்தான். பிராமணர்களுக்கு ஒருசில பரிசுகளைக் கொடுத்துவிட்டால் அந்தக் குறிப்பிட்டப் பாவத்திலிருந்து அவனுக்கு விமோசனம் கிடைத்துவிடும் என்றாலும், அரண்மனை அவன் கற்பனை செய்திருந்ததைவிட அதிக பிரம்மாண்டமானதாக இருந்ததால், கருவூலமும் கிட்டத்தட்டக் காலியாக இருந்தது. எனவே, வரிகளை மீண்டும் உயர்த்த வேண்டியிருக்கும் என்று தர்மன் நினைத்தான்.

தௌமியனைப் போன்றவர்களை எதிர்த்து நிற்பதற்கான துணிச்சல் துரியோதனனிடம் இருந்தது குறித்து, தர்மன் ஒரு கணம் அவனை நினைத்துப் பொறாமைப்பட்டான். 'துரியோதனன்! இவன் ஏன் எப்போதும் என்னை ஒரு பலவீனமான முட்டாள்போலத் தோன்றச் செய்கிறான்?' என்று தர்மன் வியந்தான். தர்மத்தின் பாதை கடினமாக இருந்தது. அவன் ஒவ்வோர் அடியையும் பயத்துடன் எடுத்து வைக்க வேண்டியிருந்தது. அவன் அறியாமல் ஏதேனும் பாவம் செய்துவிட்டால், பிராமணர்களின் கோபத்தையும் கடவுள்களின் தண்டனையையும் அவன் அனுபவிக்க வேண்டியிருக்கும். அவன் தன் அறையில் தனியாக இருந்தபோது, ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவுவரை தான் அணிய வேண்டியிருந்த நெறிமுறை எனும் கனமான போர்வையிலிருந்து விடுபட்டு, கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்க்க மிகவும் பயந்தான். அவனுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் ஒரு பொய்யாக இருந்தது. அவன் பயத்திலேயே வாழ்ந்தான். அஸ்தினாபுரத்தின் அரியணையில் ஏறுவதற்குத் தனக்கு உரிமையில்லை என்பதை அவன் தன் இதயத்தின் ஆழத்தில் அறிந்திருந்தான். அவன் தனக்கு உரிமை இருந்ததாக நியாயப்படுத்துவதற்கு, தெளிவற்ற இந்துமத விதிகளின் ஆதரவும், ஒழுக்கமற்ற அறிஞர்களின் அலங்காரமான பொருள் விளக்கங்களும் அவனுக்குத் தேவைப்பட்டன. ஆனால் அவனுக்கு வேறு வழி

இருக்கவில்லை. தௌமியனைப் போன்றவர்களுக்கு அவன் எவ்வளவு தேவைப்பட்டனோ, அவனுக்கும் அவனைப் போன்றவர்கள் அவ்வளவு தேவைப்பட்டனர்.

தர்மன் தன் மனைவியையும் தாயையும் அலட்சியப்படுத்திவிட்டுத் தங்கள் முகாமிற்குள் நுழைந்து குளிக்கச் சென்றான். திரௌபதியின் ஏளனப் புன்னகையைத் தவிர, அவனால் எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ள முடிந்தது. தன் மனைவியைத் தங்களுடைய தனிப்பட்ட அறையில் எதிர்கொள்வதற்கு அவன் பயந்த அளவுக்கு, என்றேனும் ஒரு நாள் போர்க்களத்தில் துரியோதனனையோ அல்லது கர்ணனையோ எதிர்கொள்வதற்கு அவன் பயப்படவில்லை. தன்னைப் பற்றித் தனக்குத் தெரிந்திருந்ததைவிட அவளுக்குத் அதிகமாகத் தெரிந்திருந்ததோ என்று அவன் சந்தேகப்பட்டான். அளவுக்கதிகமாகப் புகழப்பட்டத் தன் நேர்மைக்குக் கீழே ஒளிந்திருந்த கொந்தளிப்பான இருளை அவள் ஏற்கனவே கண்டுபிடித்திருந்தாளோ என்று அவன் பயந்தான். அவளுடைய அழகிய கண்களுக்குள் உற்றுப் பார்த்து, அதன் கரிய ஆழங்களில் தன் பிரதிபலிப்பைப் பார்க்க அவன் விரும்பவில்லை.

* * *

அன்றைய தினத்திற்குப் பிறகு, இந்திரனுக்கும் மயாசுரனுக்கும் இடையேயான உறவு மாறியது. அந்த முதியவன் மயாசுரனைக் கடுமையாக விமர்சிப்பதைக் குறைத்துக் கொண்டான். பதிலுக்கு மயாசுரனும் அந்த முன்னாள் தேவ அரசனிடம் அதிக மரியாதையோடு நடந்து கொண்டான். நகரப் பணித்திட்டம் தன் இறுதிக் கட்டங்களில் இருந்தது. அஸ்தினாபுரத்தில் இருந்தும் நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் அங்கு வரத் துவங்கினர். பல்வேறு இடங்களில் நாகர்களின் நடமாட்டங்கள்மீது உயர்ச்சாதியினர் விதித்துக் கொண்டிருந்த கட்டுப்பாடுகளைப் பற்றிய புகார்களை மயாசுரன் கேள்விப்பட்டான். ஆனால் தான் மேற்கொண்டிருந்த கோவில் கட்டுமானப் பணியை முழுமையாக நிறைவேற்றுவதில் தீவிரமான ஈடுப்பாட்டுடனும் வெறியோடும் இருந்த அவன், முன்னதாக வந்த எச்சரிக்கைச் சமிக்கைகளை அலட்சியப்படுத்தினான்.

விஷயங்கள் விரைவில் மோசமாக மாறின. ஒருநாள் அவன் தன் வேலையிலிருந்து சீக்கிரமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, சேரியின் வாசலில் பலர் கூடியிருந்ததை அவன் கண்டான். அப்போது கிட்டத்தட்ட நள்ளிரவு நேரம். அந்த நேரத்தில் பல பெண்கள் சாலையில் இருந்தது வழக்கத்திற்கு மாறாக இருந்தது. தன் மனத்திற்குள் எழுந்த இனம் புரியாத பயத்தை அடக்க முயற்சித்தபடி, அவன் தன் குடிசையை

நோக்கி வேகமாக நடந்தான். அவன் அவர்களைக் கடந்து சென்றபோது, ஒருசிலர் அவன்மீது குற்றம் சுமத்துவதுபோல அவனை முறைத்துப் பார்த்தனர். அவர்கள் அவனுடைய கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்தனர். சில பெண்கள் தங்களிடமிருந்த சொற்பப் பொருட்களை அவசர அவசரமாக மூட்டையாகக் கட்டிக் கொண்டு, அங்கிருந்து வெளியேறத் தயாராகிக் கொண்டிருந்தனர். இந்திரன் தங்கள் குடிசையின் முற்றத்தில் தளர்ந்த மனத்துடன் அமர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்த மயாசுரன், அவனை நோக்கி விரைந்தான்.

"இந்தக் குடியிருப்பை இடித்துத் தரைமட்டமாக்கப் போவதாக அரசனின் ஆட்கள் அறிவித்துள்ளனர். யமுனையின் மறுபக்கத்தில் தீண்டத்தகாதவர்களுக்காகவும் தாழ்ந்த சாதியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு இடம்பெயருமாறு நம் எல்லோருக்கும் அவர்கள் உத்தரவிட்டுள்ளனர். இந்த இடத்தில் ஒரு பொதுப் பூங்காவை உருவாக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்."

மயாசுரன் தன் குடிசையின் களிமண் படிகளின்மீது அமர்ந்து, காய்த்துப் போன தன் கைகளால் தன் முகத்தை மூடிக் கொண்டான். தன் கண்களிலிருந்து கண்ணீர் வருவதற்காக அவன் காத்திருந்தான், ஆனால் அவனுடைய கண்ணீர் வற்றிப் போய் நெடுங்காலம் ஆகியிருந்தது. அவன் தனக்குக் கோபம் வருவதற்காக காத்திருந்தான், ஆனால் அதுவும் மறைந்து போயிருந்தது. அந்த இரவு வானிற்குள் வைகறை மெல்ல மெல்ல ஊடுருவிக் கொண்டிருந்தபோது, யானைகள் வந்து அந்தக் குடிசைகளை இடித்துத் தள்ளத் துவங்கியிருந்தன. மக்கள் அமைதியாக யமுனை நதியை நோக்கி நடந்து சென்று, தங்களை மறுகரைக்குக் கூட்டிச் செல்வதற்கான பயணப்படகிற்காகக் காத்திருக்கத் துவங்கினர். அந்த நகரத்திற்கு அவர்கள் அதற்கு மேல் தேவைப்படவில்லை. அவர்கள் மீண்டும் வேண்டப்படாதவர்களாக ஆயினர். அந்த முதிய தேவ அரசனும் அந்த இளம் அசுரனும் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளாமல் ஒன்றாக அமர்ந்திருந்தனர். தங்களுடைய எளிய குடிசைகளைத் தரைமட்டமாக்குவதற்காக யானைகள் வந்தபோது, அவர்கள் எழுந்து நின்று, வெற்றிடத்திலிருந்து சிறிது தள்ளிச் சென்று, தங்கள் வீடு இழுத்துச் சாய்க்கப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டனர்.

பொழுது விடிந்தபோது, முற்றிலும் தரைமட்டமாக்கப்பட்டிருந்த சேரியின்மீது லேசான மழை பெய்து கொண்டிருந்தது. யானைகள் தாம் வந்த வேலையைச் செய்து முடித்தபோது, யானைப் பாகன்கள் அவற்றை அங்கிருந்து கூட்டிச் சென்றிருந்தனர். மூன்று வருடங்களாக நாகர்கள் வாழ்ந்திருந்த அந்த இடம் இப்போது ஒரு குப்பைக் குவியலாக இருந்தது. முந்தைய இரவில் குழந்தைகளின் சிரிப்பாலும் குதூகலத்தாலும்

களைகட்டியிருந்த சந்துகள், இப்போது எந்தச் சுவடுமின்றிக் காணாமல் போயிருந்தன. அரசாங்கம் அவர்களுடைய வாழ்வின் மூன்று வருடங்களை முற்றிலும் துடைத்துவிட்டிருந்ததுபோல இருந்தது அது.

அந்தக் கடைசி இந்திரன் மயாசுரனின் தோளின்மீது சாய்ந்து கொண்டு, குட்டைகளுக்குள் தவளைகள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். "இந்த அநியாயம் கடவுளின் கண்களுக்குத் தெரியவில்லையா?" என்று அவன் ஒரு மென்மையான குரலில் கேட்டான்.

ஒரு கேள்விபோல ஒலித்த அந்தப் புலம்பல், மயாசுரனை உலுக்கியது. "ஐயோ கடவுளே, நான் அதை எப்படி மறந்தேன்?" என்று அவன் சத்தமாகக் கத்தினான். இந்திரனின் கையைத் தன் தோளின்மீதிருந்து உதறிவிட்டு, கோவிலை நோக்கி அவன் ஓடினான். இதைக் கண்ட இந்திரன் குழம்பிப் போனான்.

அவனும் மூச்சிறைக்க அந்த அசுரனின் பின்னால் ராஜ வீதியை நோக்கி ஓடினான். அங்கு ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. வீதியின் இரண்டு பக்கங்களும் சாமந்திகளாலும் மல்லிகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. மந்திரங்களின் சீரான முழக்கம் விண்ணை நோக்கி உயர்ந்தது. பின்னணியில், சங்குகள் மற்றும் பித்தளை மணிகளிலிருந்து எழும்பிய மங்களகரமான ஒலி கேட்டது. தூரத்தில், புதிய கோவிலின் உயரமான சங்குப்புரிகள் கதிரவனின் ஒளியில் மினுமினுத்தன. அந்த ஊர்வலம் ஒரு மைல் நீளத்திற்கும் அதிகமாக இருந்தது. இளைஞர்களும் இளம்பெண்களும் மகிழ்ச்சியாக உடன் நடந்து சென்றனர். மயாசுரன் அந்தக் கோவிலை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தபோது, அவர்கள் ஆச்சரியமடைந்தனர். "அவன் ஒரு தீண்டத்தகாதவன். புனிதமான எதையும் அவன் அசுத்தப்படுத்துவதற்கு முன்பு அவனைத் தடுத்து நிறுத்துங்கள்," என்று யாரோ ஒருவன் கத்தினான். அந்த அசுரக் கட்டடக் கலைஞனுக்கு ஏதோ ஒரு தொற்றுநோய் இருந்ததுபோல, கூட்டம் பீதியில் இரண்டாகப் பிரிந்தது.

ஊர்வலத்தின் முன்னணியில், தர்மன் தன் மனைவியோடு அமர்ந்திருந்த ரதம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. தாங்கள் உருவாக்கியிருந்த பிரம்மாண்டமான நகரத்தைப் பெருமையோடு பார்த்தபடி அவனுடைய சகோதரர்கள் அவனுக்குப் பின்னால் நின்றனர். கிருஷ்ணன் அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தான். மயாசுரன் அந்த ரதத்திற்குப் பக்கவாட்டில் ஓடிச் சென்று, தன்னால் முடிந்த அளவுக்கு உரத்தக் குரலில் கத்தினான். ரதத்தை நிறுத்தும்படி தர்மன் தன் தேரோட்டிக்கு உத்தரவிட்டான். இசையும் மந்திர முழக்கங்களும்

திடுதிப்பென்று நின்றன.

அந்த ரதத்திற்குப் பின்னால் வந்து கொண்டிருந்த இன்னொரு ரதத்தில் இருந்த தௌமியனும் குந்தியும், ஏன் திடீரென்று எல்லாம் நின்று போனது என்று விசாரிப்பதற்காகத் தங்கள் ரதத்தைவிட்டுக் கீழே இறங்கினர். மயாசுரன் அரச ரதத்திற்கு அருகே நின்று கொண்டிருந்ததைக் கவனித்த தௌமியன், "அழுக்குப் பன்றியே, எங்களைத் தொட்டு அசுத்தப்படுத்திவிடாதே," என்று கத்தினான்.

மயாசுரன் பயத்திலும் அதிர்ச்சியிலும் பின்னால் துள்ளினான். அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வர மறுத்தன. அவனுடைய துணிச்சலும் அவனைவிட்டு ஓடிப் போயிருந்தது. அவன் அர்ச்சுனனைப் பார்த்தபோது, அர்ச்சுனனின் கண்களில் இரக்கத்தின் சாயல் தெரிந்ததை அவன் கவனித்தான். மூன்று வருடங்களுக்கு முன்பு தன் உயிரைக் காப்பாற்றியிருந்த அந்த மாவீரனைப் பார்த்து, மயாசுரன், "ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள். கடவுளின் கண்கள் மூடியுள்ளன. அவற்றைத் திறப்பதற்கு தயவு செய்து எனக்கு அனுமதி கொடுங்கள்," என்று கெஞ்சி, தான் செதுக்கியிருந்த கோவிலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த, சிவன் மற்றும் பார்வதியின் மாபெரும் கற்சிலைகளைச் சுட்டிக்காட்டினான். அவற்றின் கண்களைத் தவிர, அச்சிலைகள் மிக அழகான கலைப் படைப்புகளாகவும் அவற்றின் மற்ற ஒவ்வோர் அம்சமும் கச்சிதமாகவும் இருந்தன. அக்காட்சி, மனிதனின் அட்டகாசங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கடவுள்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. தன் வேலையை முடிப்பதற்காக மயாசுரன் அச்சிலைகளை நோக்கி நடந்தான்.

"நில்!" என்று தௌமியன் கத்தினான். இரண்டு காவலாளிகள் உடனடியாக மயாசுரனின் பாதையை மறித்தனர்.

இந்திரன் எப்படியோ சமாளித்து அந்த அரச ரதத்தை வந்தடைந்திருந்தான். மயாசுரன் அந்தக் காவலாளிகளைத் தாண்டிச் செல்ல முயன்று கொண்டிருந்ததை அவன் பார்த்தான். அங்கு நிகழ்ந்து கொண்டிருந்ததைக் கண்ட அவன் திகைத்துப் போனான்.

"அச்சிலைகளின் கண்களைத் திறக்க என்னை அனுமதியுங்கள் . . . தயவு செய்து அவற்றைத் திறக்க எனக்கு அனுமதி கொடுங்கள் . . ." என்று அழுத மயாசுரன், அச்சிலைகளை நெருங்கப் போராடினான்.

"அவன் எதையாவது மாசுபடுத்துவதற்கு முன்பு அவனை இங்கிருந்து இழுத்துச் செல்லுங்கள்," என்று தௌமியன் கட்டளையிட்டான்.

தர்மன் அக்கட்டளையை உறுதிப்படுத்துவதற்காகக் காவலாளிகள் தர்மனைப் பார்த்தனர். அவன் தன் ஒப்புதலைத் தெரிவித்துத்

தலையசைத்தான். மயாசுரன் மூன்று வருடங்களாக இரவு பகலாக உழைத்து உருவாக்கியிருந்த அந்தக் கோவிலிருந்து அக்காவலர்கள் அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்றனர். அவன் எந்தப் படிக்கட்டுகளை அழகாகப் பளிச்சூட்டியிருந்தானோ, அந்தப் படிக்கட்டுகளின்மீது அவர்கள் அவனை இரக்கமின்றி இழுத்துச் சென்றனர். தன் சொந்தக் கைகளால் தான் செதுக்கியிருந்த தூண்களை அவன் பற்றிக் கொள்ள முயன்றபோது, அவன் அவற்றை அசுத்தப்படுத்திவிடாமல் இருப்பதற்காக அவர்கள் அவனை எட்டி மிதித்தனர். கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருந்தது. எனவே, அதைக் கட்டியிருந்தவனால் இனி அவர்களுக்கு எந்தப் பயனும் இருக்கவில்லை. கடவுள்கள் இப்போது தங்களுடைய புதிய சொந்தக்காரர்களின் பக்கம் சேர்ந்து கொண்டிருந்தனர். மயாசுரனைப் போன்றவர்களுக்கு அவர்களுடைய வசிப்பிடத்தில் இடமிருக்கவில்லை.

“அண்ணா, சிலைகள் பார்வையற்று இருப்பது தீய சகுனமல்லவா?” என்று அர்ச்சுனன் தர்மனிடம் கேட்டான்.

“அர்ச்சுனா, கோவில்கள் அறிவாளிகளுக்குத் தேவையில்லை என்பதை நீ இன்னும் சிறிதளவு ஞானம் பெற்றவுடன் புரிந்து கொள்வாய். அவை உலக மாயையில் சிக்கிக் கொண்டுள்ள பொதுமக்களுக்கான காட்சிப் பொருட்களே. அந்த அசுரனைப் பற்றிக் கவலைப்படாதே. அவனுடைய உயிரை நீ காப்பாற்றினாய், அவன் தன் திறமைகளால் அதற்கு நன்றிக்கடன் செலுத்தினான். நீங்கள் இருவரும் உங்கள் கடமைகளைச் செய்திருக்கிறீர்கள், தர்மத்தின்படி நடந்திருக்கிறீர்கள்.”

அப்போது இந்திரன் தங்கள் ரதத்தின் அருகே நின்று கொண்டிருந்ததைப் பார்த்த அர்ச்சுனன், கீழே இறங்கி வந்து, தங்கள் விருந்தினராக இருக்குமாறு இந்திரனுக்கு அழைப்பு விடுத்தான். ஆனால் இந்திரன் ஓர் ஏளனப் புன்னகையை வீசிவிட்டு, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அங்கிருந்து நடந்தான். மயாசுரனை இழுத்துச் சென்று கொண்டிருந்த காவலாளிகளை அவன் பின்தொடர்ந்ததை அர்ச்சுனன் கண்டான். “கடவுள்களின் கண்கள் மூடியுள்ளன . . . அவர்களுடைய கண்களைத் திறக்க எனக்கு அனுமதி கொடுங்கள் . . . கடவுள்கள் குருடர்களாக உள்ளனர் . . . அவர்களுக்குப் பார்வை கொடுக்க என்னை அனுமதியுங்கள் . . .” என்ற மயாசுரனின் தொடர்ச்சியான கெஞ்சல்கள் அவனுடைய இதயத்தில் ஒரு வினோதமான பயத்தை உருவாக்கின. கிருஷ்ணனின் பார்வை தன்மீது நிலைத்திருந்ததுபோல உணர்ந்த அர்ச்சுனன், பின்னால் திரும்பினான். கிருஷ்ணன், கீழே நின்ற தன் நண்பனுக்குக் கை கொடுத்து, அவனை மேலே இழுத்தான். ஊர்வலம்

மீண்டும் தன் பயணத்தைத் துவக்கியது.

* * *

காவலாளிகள் மயாசுரனை ஆற்றங்கரையின்மீது தள்ளிவிட்டு, அவனைத் தொட்டதால் தங்களுக்கு ஏற்பட்ட அசுத்தத்தைக் கழுவுவதற்காகக் குளிக்கச் சென்றனர். இந்திரன் அந்தக் கட்டடக் கலைஞனுக்கு அருகில் அமர்ந்து, அவனுடைய கரிய தலையை மென்மையாகத் தடவிக் கொடுத்தான். மயாசுரனின் உடல் காய்ச்சலாலும் இகழ்ச்சியாலும் கொதித்துக் கொண்டிருந்தது. கோவிலில் ஒலிக்கப்பட்டப் புனித மந்திரங்களின் ஒலியும், கற்பூரம் மற்றும் நறுமணப் பத்திகளின் லேசான வாசனையும் காற்றில் மிதந்து வந்தன. இந்திரன் தன் அங்கவஸ்திரத்தை ஆற்று நீரில் நனைத்தெடுத்து, மயாசுரனின் நெற்றியைத் துடைத்தான். ஒருசில மைல்கள் தள்ளி, பிராமணர்களும் புரோகிதர்களும் பரதகண்டத்தின் மாபெரும் நகரத்திற்குத் திறப்பு விழா நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் அந்நகரத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டிருந்ததோ, அவன் அந்நகரத்தை உருவாக்கியிருந்தவனோடு உட்கார்ந்து கொண்டிருந்தான். அவர்கள் இருவரையும் பற்றி யாரும் கண்டுகொள்ளவில்லை. இந்திரப்பிரஸ்தம் அதிகாரப்பூர்வமாக இயங்கத் துவங்கி, என்றேனும் ஒருநாள் அந்நகரம் பரதகண்டத்தின் தலைநகரமாக ஆகும் என்று புரோகிதர்கள் கணித்துக் கொண்டிருந்தபோது, அந்த தேவ அரசன் ஓர் அசுரனின் நெற்றியைத் துடைத்தபடி அமர்ந்திருந்தான். சிறிது நேரத்தில் மயாசுரன் தன் முணுமுணுப்பை நிறுத்திவிட்டு, அந்த முதியவனின் மடிமீது தலை வைத்துத் தூங்கினான். அவனை எழுப்பிவிடக்கூடாது என்பதற்காக இந்திரன் அசையாமல் உட்கார்ந்திருந்தான். உலகம் காத்திருக்கட்டும் என்று அவன் நினைத்தான்.

பொழுது சாய்ந்தபோது மயாசுரன் கண்விழித்தான். அவனுடைய கைகள் தாமாக அவனுடைய கருவிகளைத் தேடின. தான் அதிக நேரம் தூங்கிவிட்டோமோ என்று அவன் பதறி எழுந்தான். வேலைக்குத் தாமதமாகிவிடுமோ என்று அவன் பயந்தான். அவன் தன் கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்தபோது, யதார்த்தம் அவனைப் பற்றிக் கொண்டது. தான் படைத்திருந்தவற்றை மீண்டும் பார்க்க அவனுக்கு அதற்கு மேல் அனுமதி இருக்கவில்லை. தான் செதுக்கியிருந்த சிற்பங்களிடம் தன் ரகசியங்களையும் கனவுகளையும் பற்றிக் கிசுகிசுப்பதற்கு அதற்கு மேல் அவனுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. சிவனின் வழுவழுப்பான கால்களை அவனால் இனி ஒருபோதும் வருடிக்

கொடுக்க முடியாது. அந்தக் கடவுள் இனி அவனுக்குச் சொந்தமல்ல. கொழுத்த அர்ச்சகர்கள் தன் பாதுகாவலர்களாக இருக்க, ஒரு கோவிலில் சிறை வைக்கப்பட்டு, பணக்காரர்களுக்கும் சிறப்புரிமை கொண்டவர்களுக்கும் மட்டுமே அவர் சொந்தமாகிவிட்டார். அவனுடைய கடவுள் பார்வையற்றவர்! அவன் கடுப்போடு துள்ளி எழுந்து, தொலைவில் பெருமையோடு ஒளிர்ந்து கொண்டிருந்த நகரத்தைப் பார்த்துவிட்டு, நிலத்தின்மீது காறி உமிழ்ந்தான். பிறகு, தான் படைத்த அந்நகரத்தை அவன் ஒரு பெரும் பகைமையுணர்வோடு சபிக்கத் துவங்கினான். பரதகண்டம் இருக்கும்வரை அந்தச் சாபம் அந்நகரைப் பீடித்திருக்குமோ என்று இந்திரன் பயப்படும் அளவுக்கு மயாசுரன் தன் வெறுப்பையெல்லாம் கொட்டிச் சபித்தான். வாழ்வின் பொருளைத் தொலைத்துவிட்டிருந்த ஒரு மனிதனின் இதயத்திலிருந்து வெளிவந்த கொடூரமான வார்த்தைகள் அவை. தான் பேசிய ஒவ்வொரு வாக்கியத்தோடும் கூடவே, அந்த அசுரன் அந்த நிலத்தைத் தன் இரண்டு உள்ளங்கைகளாலும் ஓங்கி அடித்தான்.

“குருட்டுக் கடவுள்களே! என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். என் கலையில் உண்மை உள்ளது என்றால், நான் இப்போது கூறும் அனைத்தும் என்றென்றும் உண்மையாக இருக்கட்டும். நாகர் குலப் பெண்களின் வியர்வையும் ரத்தமும்தான் இந்த நகரத்தை உருவாக்கின, ஆனால் நீங்கள் அவர்களை நாடு கடத்திவிட்டீர்கள். இன்றிலிருந்து, இந்நகரில் எந்தவொரு பெண்ணும் பாதுகாப்பாக இல்லாமல் போகட்டும். மதிப்பற்ற இந்த இடத்தை நேர்மையற்றத் தீய மனிதர்கள் என்றென்றும் ஆளட்டும். ஒவ்வோர் ஆணும் பெண்கள்மீதும், பணம், பதவி, அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றின்மீதும் வெறி பிடித்து அலையட்டும். மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளட்டும். சகோதரர்கள் கசாப்புக்காரர்களாக மாறி, தங்கள் சொந்தச் சகோதரிகளைக் கற்பழிக்கட்டும். ஒவ்வொரு பெண்ணும் தன் வீட்டைவிட்டு வெளியே காலெடுத்து வைக்கும் ஒவ்வொரு முறையும், தான் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டுவிடுவோமோ என்ற பயத்துடனேயே செல்லட்டும். இந்த இடம் தீயவர்களின் அடைக்கல பூமியாக இருக்கட்டும். செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள் எப்போதும் தங்கள் உயிருக்கு பயந்து கொண்டு, தங்கள் பாதுகாப்பிற்காகத் தாங்களே தங்களுக்கு உருவாக்கிக் கொண்ட சிறைகளில் வசிக்கட்டும். ஆளப்படுபவர்கள் தங்கள் ஆட்சியாளர்களை வெறுக்கட்டும். ஆட்சியாளர்கள் தங்களால் ஆளப்படுபவர்களைக் கண்டு பயப்படட்டும். இந்நகரம் மயானபூமிகளின் நகரமாக இருக்கட்டும். எல்லைகளுக்கு அப்பால்

உள்ளவர்கள் இங்கு படையெடுத்து வந்து இந்நகரை மீண்டும் மீண்டும் சூறையாடட்டும். இந்நகரின்மீது படையெடுத்து வருபவர்கள் இதன் செல்வத்தை மீண்டும் மீண்டும் கொள்ளையடித்துச் செல்லட்டும். இந்நகரம் நம்பகத்தன்மையற்ற, கோபமும் வெறித்தனமான ஆசைகளும் கொண்ட ஒரு நகரமாக ஆகட்டும். துறவிகளின் ரத்தம் இந்நகரத்தை நனைக்கட்டும். இதன் குடிமக்கள் இந்தப் புனித நீரை மாசுபடுத்தி, இதை ஒரு கழிவுநீரோடையாக மாற்றட்டும். இங்குள்ள காற்று விஷத்தன்மை கொண்டதாக ஆகட்டும். வீதிகளில் குப்பைகளும் கூட்டமும் நிரம்பி வழியட்டும். இந்நகரம் என்றென்றும் ஒரு கொடூரமான நரகமாக இருக்கட்டும்."

மயாசுரன் இவ்வாறு சபித்துவிட்டு, அந்த ஈர நிலத்தின்மீது கிடந்து தேம்பினான். நெடுநேரத்திற்குப் பிறகு, இந்திரன் ஒருவழியாக அவனை சமாதானப்படுத்தியிருந்தபோது, தான் உருவாக்கியிருந்த நகரத்தைப் பற்றித் தான் கூறிய கடுமையான வார்த்தைகளை நினைத்து மயாசுரன் வருந்தினான். சாபங்கள் வெறும் வார்த்தைகளே என்றும், அவற்றை நம்புவது மூடத்தனம் என்றும் இந்திரன் கூறினான். அது அந்த அசுரனின் மனத்திற்கு நிம்மதி அளித்தது. அப்போது வஜ்ராயுதத்தை உருவாக்குவதைப் பற்றி இந்திரன் அவனிடம் பேசினான். அசுரனின் கவனம் முழுதும் இப்போது இந்திரன் கூறிக் கொண்டிருந்த விஷயத்திற்குத் திரும்பியது. அந்த ரகசிய ஆயுதத்தைத் தான் உருவாக்கிக் தருவதாக மயாசுரன் வாக்குறுதி அளித்தான்.

அவர்கள் இருவரும் படகில் யமுனையின் மறுகரைக்குச் சென்றுவிட்டிருந்ததை உறுதி செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த காவலாளி, மயாசுரனின் சாபத்தை தர்மனிடம் தெரிவிப்பதற்காக விரைந்தான். அவனுடைய இதயத்தை பயம் கவ்வியது. ஒரு ரகசிய ஆயுதத்தை உருவாக்குவது பற்றிய திட்டங்களைச் செவிமடுக்க அவன் காத்திருக்கவில்லை. அவன் தர்மனிடம் ஒருவழியாக இவ்விஷயத்தை எடுத்துரைத்தபோது, தர்மனின் கண்களில் கவலை தெரிந்தது.

"தர்மா, ஒரு தீண்டத்தகாதவனின் சாபத்திற்கு நீ ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாய்?" என்று கிருஷ்ணன் கேட்டான். பிறகு, "இந்திரப்பிரஸ்தத்தின் பெருமைக்கு இவ்வுலகிலுள்ள வேறு எந்த நகரின் பெருமையும் ஈடாகாது. இந்நகரை ஆள்பவர்கள் சிறப்பாகவும் செழிப்பாகவும் வாழ்வார்கள். அதிகாரிகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் செல்வங்களையும் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பாதுகாப்பதற்குப் பாதுகாப்புக் காவலர்கள் இருப்பார்கள். சட்டங்களை உருவாக்குவது ஆட்சியாளர்களின் கடமை, அவற்றை உடைப்பது

அவர்களுக்கு இருக்கும் சிறப்புரிமை. ஆட்சியாளர்களை மக்கள் தனிப்பட்ட இடங்களில் சபிப்பார்கள், ஆனால் பொது இடங்களில் அவர்களை மதிப்பார்கள், அவர்கள்மீது பொறாமை கொள்வார்கள், அவர்களைக் கண்டு பயப்படுவார்கள். கடவுள்கள் இந்நகரின் ஆட்சியாளர்கள்மீது தங்கள் ஆசீர்வாதங்களைப் பொழிவார்கள். இது நான் உனக்குக் கொடுக்கும் வாக்குறுதி," என்று அவன் கூறினான்.

கிருஷ்ணனின் வார்த்தைகளைக் கேட்ட தர்மன் நிம்மதிப் பெருமூச்செறிந்தான். பொருத்தமற்றக் கணங்களில் அசௌகரியமான கேள்விகளைக் கேட்பதில் திறமை பெற்ற அர்ச்சுனன், "கிருஷ்ணா, நீ ஆட்சியாளர்களைப் பற்றி மட்டும்தான் பேசியுள்ளாய். பொது மக்கள் நிலை என்ன? மயாசுரனின் சாபம் அவர்களை பாதிக்குமா?" என்று கேட்டான்.

கிருஷ்ணன் அதற்கு பதிலளிக்காமல், இப்புதிய நகரில் குடிபுகுவதற்காக மற்ற இடங்களிலிருந்து வந்திருந்த மக்கள் அந்நகர வாசலில் நீண்ட வரிசைகளில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். அவர்களுடைய அடையாளத்திற்காக அதிகாரிகள் அவர்களுக்குச் செப்பு வில்லைகளை வினியோகித்துக் கொண்டிருந்தனர். நுழைவு வாயிலிலிருந்து சிறிது தள்ளி ஒரு பிச்சைக்காரன் தன் நாயுடன் அமர்ந்திருந்ததைக் கிருஷ்ணன் பார்த்தான். அவனுடைய பாடலைக் கேட்பதற்காக மக்கள் அவனைச் சுற்றிக் கூடினர். அந்தப் பிச்சைக்காரனின் பாடலைக் காற்று கிருஷ்ணனிடம் சுமந்து வந்தது. அந்த இனிய இசையைக் கேட்டக் கிருஷ்ணன், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், தன் புல்லாங்குழலை எடுத்து அதே பாடலை வாசிக்கத் துவங்கினான். கிருஷ்ணனின் புல்லாங்குழலும் அந்தப் பிச்சைக்காரனின் குரலும் சேர்ந்து உருவாக்கிய தெய்வீக இசையால் எல்லோரும் ஆட்கொள்ளப்பட்டதில், அர்ச்சுனனின் சந்தேகங்களை அவர்கள் மறந்துவிட்டனர். சில கேள்விகளுக்கு விடையளிக்கப்படாமல் இருப்பதே மேல்.

25

ராஜசூய யாகம்

ஜராசந்தனின் படையிலிருந்து விலகி, சேதி நாட்டை நோக்கித் தப்பிச் சென்று கொண்டிருந்த ஒரு குழுவினர், மதுரா நகருக்கு வெளியே ஏகலைவனைச் சந்தித்தனர். துவக்கத்தில், மகத நாட்டுப் படையில் ஒரு பதவியைத் தேடி அந்நாட்டிற்குப் பயணித்துக் கொண்டிருந்த இன்னொரு வேடுவன் அவன் என்றுதான் அவர்கள் நினைத்தனர். வேடுவர்கள் வீரர்களாக ஆவதற்கான வாய்ப்பு, கிருஷ்ணனும் அவனுடைய கைக்கூலியும் அரசன் ஜராசந்தனையும் தளபதி இரணியதனுசுவையும் கொன்றதோடு காணாமல் போயிருந்ததாக அவர்கள் அவனிடம் கூறினர். தன் தந்தையின் மரணத்தைக் கேள்விப்பட்ட ஏகலைவனின் மனம் சுக்குநூறாகியது. தான் மறந்து போயிருந்த தன் தந்தையைக் காண அவன் மிகவும் ஆவலாக இருந்திருந்தான். தன் வாழ்நாளில் ஒரு மாபெரும் வீரனாகவும் மகத நாட்டின் தளபதியாகவும் உருவாகியிருந்த அந்த நபருடன் சேர்ந்து இருப்பது பற்றி ஏகலைவன் ஒரு கனவுக் கோட்டையைக் கட்டியிருந்தான். இனி தன் தந்தையையோ அல்லது அரசன் ஜராசந்தனையோ தன்னால் ஒருபோதும் பார்க்க முடியாது என்பதை அவன் அறிந்தபோது, அவன் மனம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தது. தான் ஓர் அனாதை என்ற எண்ணமும், உயிர் பிழைத்திருப்பதற்கு மீண்டும் தான் தனியாகப் போராட வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்தோம் என்ற எண்ணமும் சேர்ந்து அவனுள்

மீண்டும் வெறுப்பை ஏற்படுத்தின.

ஏகலைவனிடம் வெளிப்படையாகத் தெரிந்த வருத்தத்தைக் கண்டதும், அக்குழுவின் தலைவன் அதற்கான காரணத்தை அவனிடம் விசாரித்தான். அவன் தளபதி இரணியதனுசுவின் மகன் என்பது அவர்களுக்குத் தெரிய வந்தபோது, அவர்களிடையே ஓர் உற்சாகம் உருவானது. அவர்கள் அச்செய்தியைப் பற்றி மும்முரமாகப் பேசத் துவங்கினர். அக்குழுவின் தலைவன் ஏகலைவனிடம் சென்று, "எங்கள் மாபெரும் தளபதியின் மகனான உன்னைச் சந்திப்பதில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. என் பெயர் சால்வன். முன்பொரு காலத்தில் ஜராசந்தனின் அடிமை அரசர்களில் ஒருவனாக நான் இருந்தேன். இப்போது கிருஷ்ணனின் பரம எதிரி நான். உன்னைப்போலவே, அவனை எப்படியாவது கொல்ல வேண்டும் என்று நாங்கள் துடித்துக் கொண்டிருக்கிறோம். அவன் எங்கள் நாட்டின் பரம எதிரி. அவன் ஒரு சக்திவாய்ந்த அரசனாக இல்லாமல் போகலாம், ஆனால் அவன் ஓர் ஏமாற்றுக்காரன், சூழ்ச்சிக்காரன். தான் விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்றும், தர்மத்தை, அதாவது அவனுடைய 'தர்மத்தை'க் காப்பதற்காக இவ்வுலகிற்குத் தான் வந்திருப்பதாகவும் சாதாரண மக்கள் பலரை அவன் வஞ்சகமாக நம்ப வைத்திருக்கிறான்," என்று கூறினான். எங்கள் அரசர் எதையெல்லாம் மதித்தாரோ, அவற்றுக்கு எதிரானவன் அவன். தன்னை விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்று கூறிக் கொள்ளும் இன்னொருவன் பரசுராமன். நர்மதைக்குத் தெற்கே உள்ள ராஜ்யங்களைச் சேர்ந்த பொதுமக்களின் வாழ்க்கையை அவன் ஏற்கனவே நரகமாக்கிவிட்டான். கிருஷ்ணனும் பரசுராமனும் சேர்ந்து இந்த ஒட்டுமொத்த பரதகண்டத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதை உறுதி செய்வார்கள். நாம் எப்பாடு பட்டாவது அதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். பணத்திற்காகவும் அற்ப வெகுமதிகளுக்காகவும் மகதப் படையில் உள்ள பெரும்பான்மையினர் எங்களைக் கைவிட்டுவிட்டு, புதிய அரசனை ஆதரிப்பதைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆனால் கிருஷ்ணனின் கைப்பாவையாக இருப்பவனை மகத நாட்டின் புதிய அரசனாக ஏற்றுக் கொள்ள நாங்கள் மறுத்துள்ளோம். அதிர்ஷ்டவசமாக, தீவினைக்கு அஞ்சாத அந்த யாதவர்களுக்கு எதிரான போரில் நாங்கள் தனியாக இல்லை. தந்தவக்கிரன், சிசுபாலன் ஆகிய இரண்டு சக்திவாய்ந்த அரசர்களால் எங்களுக்கு உதவ முடியும். அரசன் சிசுபாலனைச் சந்தித்து அவருடைய உதவியைக் கேட்பதற்காக இப்போது நாங்கள் சேடிக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்," என்று கூறிவிட்டு, "உனக்கு எங்களுடன் வர விருப்பமா?" என்று கேட்டான்.

தான் உண்மையிலேயே எப்படிப்பட்டவன் என்று எடைபோட முயற்சித்தபடி, தன்னை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வீரர்களை ஏகலைவன் பார்த்தான். இந்திரப்பிரஸ்தத்திற்கோ அல்லது துவாரகைக்கோ ரகசியமாகச் சென்று, தான் மிகவும் வெறுத்தக் கிருஷ்ணனைக் கொல்ல அவன் ஏற்கனவே திட்டமிட்டிருந்தான். ஆனால் சால்வன் அவனிடம் கூறிய திட்டம் தன்னுடையதைவிட அதிகச் சிறப்பானதாக இருந்ததாக ஏகலைவன் நினைத்தான். கிருஷ்ணன்மீதும் அவனுடைய நண்பன் அர்ச்சுனன்மீதும் அவன் மட்டற்ற வெறுப்புக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் இறந்து போவதைப் பார்க்க அவன் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தான். "ஐயா, உங்கள் படையின் ஒரு பகுதியாக இருப்பதை நான் எனக்குக் கிடைத்த மரியாதையாகக் கருதுகிறேன்," என்று கூறிய ஏகலைவன், சால்வனின் முன்னால் தலை வணங்கிப் பணிந்தபோது, மற்ற வீரர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

* * *

அவர்கள் சேடியை நோக்கி விரைந்தனர். வழியில், ஜராசந்தனின் கொள்கைப்படி அனைத்து வீரர்களும் படைத்தலைவர்களும் தகுதியின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதையும், யாரும் எந்தவொரு பதவியையும் சுவீகரிக்கவில்லை என்பதையும் ஏகலைவன் தெரிந்து கொண்டான். பிராமணர்கள், வேடுவர்கள், கிரேக்கர்கள், வெட்டியான்கள், அசுரர்கள், நாகர்கள், வைசியர்கள், சத்திரியர்கள், மற்றும் பல சாதியினர் மகதப் படையில் இருந்தனர். ஆனால் அவர்களுடைய பதவிகளுக்கும் அவர்களுடைய சாதி அடுக்குமுறை அமைப்பிற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. படைகளுக்குத் தலைவர்களாக இருந்த பிராமணர்கள், தங்களுடைய மேலதிகாரிகளாக இருந்த வேடுவர்களின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்தனர். அதேபோல, படைகளுக்குத் தலைவர்களாக இருந்த வேடுவர்கள், தங்களுடைய மேலதிகாரிகளாக இருந்த பிராமணர்களின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்தனர். அரசாங்கப் பதவிகளாக இருந்தாலும் சரி, ராணுவப் பதவிகளாக இருந்தாலும் சரி, மகத நாட்டில் எல்லாப் பதவிகளும் தகுதியின் அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டதாகவும், தேர்ந்தெடுப்புச் செயல்முறை அந்த ஒட்டுமொத்த நாட்டிலும் மிகக் கடினமான செயல்முறைகளில் ஒன்று என்றும் சால்வன் தெரிவித்தான். யாதவர்கள் துவாரகைக்குத் தப்பியோடுவதற்கு முன்பு ஜராசந்தனால் எப்படிப் பதினேழு முறை மகத

நாட்டை வெற்றிகரமாகச் சூறையாட முடிந்திருந்தது என்பது ஏகலைவனுக்கு இப்போது புரிந்தது. தகுதியான நபர்களைப் பல்வேறு பதவிகளில் கொண்ட ஒரு கச்சிதமான படை அரசன் ஜராசந்தனிடம் இருந்திருந்தது.

அவர்கள் சேடிக்குள் நுழைவதற்குச் சிறிது முன்பாக, வாசுகியையும் அவனுடைய ஆட்களையும் அவர்கள் சந்தித்தனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் சேர்ந்து காண்டவத்தில் கட்டவிழ்த்துவிட்டிருந்த படுகொலைகளைப் பற்றி நாகர்களின் முன்னாள் தலைவனான வாசுகி அவர்களிடம் கூறினான். காண்டவக் காட்டின் சாம்பல்களிலிருந்து அந்தப் பாண்டவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த புதிய நகரத்தைப் பற்றியும் அவன் கூறினான். எரிகின்ற கொள்ளியில் எண்ணெயை ஊற்றியபோல இது இருந்தது. அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் எதிர்த்து உடனடியாகச் சண்டையிடப் பலர் துடித்தனர். ஆனால், எச்சரிக்கையாக இருக்கும்படி வாசுகி அவர்களுக்கு அறிவுறுத்தினான். முறையான தயாரிப்பு ஏற்பாடுகள் ஏதும் இல்லாமல் ஒரு சக்திவாய்ந்த எதிரியை எதிர்த்துச் சண்டையிட முயற்சிப்பது தற்கொலைக்குச் சமம் என்று அவன் கூறினான்.

அவர்கள் அனைவரும் அரசன் சிசுபாலனைச் சந்தித்தபோது, அரசன் ஜராசந்தனைக் கொல்வதற்கு பீமனைக் கிருஷ்ணன் தூண்டியிருந்த வித்தைப் பற்றி அவர்கள் விவரித்ததைக் கேட்ட அவன் பெருங்கோபம் கொண்டான். அடுத்து எடுக்க வேண்டிய சிறந்த நடவடிக்கை பற்றி அரசன் தந்தவக்கிரனின் அபிப்பிராயத்தைக் கேட்பதென்று அவர்கள் தீர்மானித்தனர். தந்தவக்கிரன் சேடிக்கு வந்து சேர்வதற்கு ஒரு மாதகாலம் ஆனது. வாசுகியின் அதே கருத்தைத்தான் அவனும் கொண்டிருந்தான். விரைவில், சிசுபாலன், தந்தவக்கிரன், சால்வன், ஏகலைவன் ஆகியோரின் கீழ், கிருஷ்ணனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் எதிரான பெரிய யுத்தத்திற்காக அந்த ஒட்டுமொத்தப் படையும் பயிற்சி செய்யத் துவங்கியது. தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் வெவ்வேறு உத்திகளை முன்மொழிந்தனர். அவர்களுக்கிடையே கடுமையான வாக்குவாதங்கள் எழுந்தன. கிருஷ்ணனையும் அவனுடைய வழிமுறைகளையும் ஒத்துக் கொள்ளாத, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சிறு குழுக்களின் தலைவர்கள், விரைவில், சிசுபாலனுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளத் துவங்கினர். மற்றவர்கள் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தடுமாறினர். கிருஷ்ணனின் தெய்வீக அம்சத்தைப் பற்றிப் பேசியதன் மூலம் புரோகிதர்கள் மேட்டுக்குடியினரிடையே பயத்தை உருவாக்கினர். கிருஷ்ணனை விஷ்ணுவின் ஓர் அவதாரமாக வழிபடுகின்ற ஒரு முறை,

பொதுமக்களிடையே வேர் பிடித்துக் கொண்டிருந்தது.

தர்மனின் ராஜசூய யாகத்திற்கான அழைப்பிதழ் வந்தபோது, கிருஷ்ணனின் எதிரிகள், அவனையும் பாண்டவர்களையும் எவ்வாறு வீழ்த்துவது என்பது குறித்து எந்தத் தீர்மானத்திற்கும் வராமல் இருந்தனர். ராஜசூய யாகத்தை நடத்திக் கொண்டிருந்ததன் மூலம், தன்னை ஒரு பேரரசனாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது தன்னை எதிர்த்துச் சண்டையிடவோ தர்மன் அவர்களுக்கு சவால்விட்டுக் கொண்டிருந்தான். இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருந்ததாக உணர்ந்த வாசுகி, இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று அவர்களை எச்சரித்தான். ஆனால் தன்மானம் கொண்ட எந்த அரசனாலும் இப்படிப்பட்ட வெளிப்படையான ஒரு சவாலை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. எனவே, சிசுபாலன் ஏகலைவனைத் தன்னுடன் இந்திரப்பிரஸ்தத்திற்கு அழைத்துச் செல்வதென்றும், மற்ற இருவரும் நகரின் எல்லையில் தங்கள் படைகளுடன் காத்திருக்க வேண்டும் என்றும் தீர்மானித்தான். ஏகலைவனை தர்மனின் அரசவைக்கு அழைத்துச் செல்வதென்று அவன் எடுத்த முடிவு அவன் வேண்டுமென்றே எடுத்த ஒன்று. பாண்டவர்களையும் அங்கிருந்த மற்றவர்களையும் தூண்டுவதற்காக அவன் எடுத்த முடிவு அது. மதிப்பிற்குரியவர்கள் இருந்த அவையில் ஒரு வேடுவன் கால் வைப்பதைப் பாண்டவர்களும் பழமைவாதப் புரோகிதர்களும் எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள் என்று அவன் பார்க்க விரும்பினான்.

* * *

முந்தைய வருடம், பானுமதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருந்தன. அதில் ஒன்று ஆண், மற்றொன்று பெண். துரியோதனன் ஒரு பாசமான தந்தை என்பதை அவள் விரைவில் கண்டறிந்தாள். அவன் எப்போதும் அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்ததையும், அல்லது அவர்கள் தூங்கியபோது அவர்களை அவன் மனநிறைவோடு பார்த்துக் கொண்டிருந்ததையும் அவள் அடிக்கடிக் கண்டாள். சுபத்திரை அவர்களுடைய அரண்மனைக்கு வந்தபோதெல்லாம், அபிமன்யுவையும் தன்னுடன் அழைத்து வந்தாள். அச்சிறுவனுக்கும் அவனுடைய பெரியப்பாவிற்கும் இடையே ஓர் ஆழமான பிணைப்பு உருவானது. அபிமன்யு அடிக்கடி துரியோதனனுக்கு அருகில் உட்கார்ந்து, தங்கள் தந்தையின் மடிமீது படுத்துக் கிடந்த அந்த இரட்டையரை ஆர்வமாகப் பார்த்தான். துரியோதனன் ஏன் தன் மகனுக்கு லட்சுமணகுமாரன் என்றும், தன் மகளுக்கு லட்சுமணன் என்றும் பெயர் சூட்டியிருந்தான் என்று அபிமன்யு அவனிடம் கேட்டான். ஆனால் துரியோதனன் ஒரு

தெளிவான பதிலை ஒருபோதும் அவனுக்குக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு முறையும், ஆன்மாக்கள், தேவதைகள், காந்தர்வர்கள், விலங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய புதிய கதைகளை அவன் கற்பனை செய்து கூறினான். தன் குழந்தைகள் துரியோதனனைப் பார்த்துப் புன்னகைத்ததையும், தங்கள் தள்ளாட்ட நடையுடன் அவர்கள் அபிமன்யுவைப் பின்தொடர்ந்ததையும் பானுமதி பெரிதும் ரசித்தாள்.

சுபத்திரை துரியோதனனின் முதல் காதலியாக இருந்திருந்தாள் என்பது பானுமதிக்குத் தெரிந்திருந்தும்கூட, அவளுக்கும் சுபத்திரைக்கும் இடையே ஓர் ஆழமான நட்புணர்வு உருவானது. பானுமதி தன் கணவனை முற்றிலுமாக நம்பினாள். அவன் ஒருபோதும் வழி தவறிச் செல்ல மாட்டான் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஒருவருக்கொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு தங்கள் அந்தரப்புரத்தை அழகான பெண்களால் நிறைத்த மற்ற இளவரசர்களையும் அரசர்களையும் போன்றவன் அல்ல அவன் என்பதை அவள் அறிந்திருந்தாள். தன் அந்தப்புரத்தில் 16,0008 'மனைவியரை' வைத்திருந்ததற்காகக் கிருஷ்ணனைப் பெரிதும் விரும்பிய ஒரு கலாச்சாரத்தில் தன் மனைவிக்கு விசுவாசமாக நடந்து கொண்ட துரியோதனன் நகைப்பிற்குரியவனாகக் கருதப்பட்டான். தங்கள் திருமண வாழ்வில் நிறைந்திருந்த அமைதியை பானுமதி மிகவும் போற்றினாள். இயற்கை, கலை, இசை போன்றவற்றில் துரியோதனனுக்கு இருந்த ஆர்வத்தை அவளும் பகிர்ந்து கொண்டாள். பொதுமக்கள்மீது அவன் காட்டிய பரிவிற்காகவும், தன்னை இகழ்ந்தவர்கள் குறித்து அவன் கொண்டிருந்த அகங்காரத்திற்காகவும், உண்மையைப் பட்டென்று அவன் பேசிய விதத்திற்காகவும் அவள் அவனை நேசித்தாள். தண்டாயுதத்தைக் கையாள்வதில் அவனுக்கு இருந்த திறமைக்காகவும், அவனுடைய பெருமிதத்திற்காகவும் நேர்மைக்காகவும் அவள் அவனை மிகவும் நேசித்தாள். அவள் அவனை ஆயிரக்கணக்கான வழிகளில் நேசித்தாள். ஆனால் எல்லாவற்றையும்விட அதிகமாக, அவன் தன் நண்பர்கள்மீது வைத்திருந்த ஆழமான நம்பிக்கைக்காக அவள் அவனை நேசித்தாள்.

துரியோதனின் நண்பர்கள் அவன்மீது கொண்டிருந்த நேசத்தைவிட, அவன் அவர்கள்மீது அதிக நேசம் கொண்டிருந்ததாக பானுமதி நினைத்தாள். அவன் பட்டத்து இளவரசன். ஒரு பரந்த சாம்ராஜ்யத்தை அவன் சுவீகரிக்கவிருந்தான். ஒரு தேரோட்டியுடனோ அல்லது ஓர் ஏழை பிராமணனுடனோ நட்புறவாடுவதால் அவனுக்கு எந்த லாபமும் இருக்கவில்லை. ஆனால் துரியோதனனின் நண்பர்களாக இருந்ததில் அவர்களுக்கு ஏகப்பட்ட நன்மைகள் இருந்தன. ஆனால் வேறு யாராலும் அவர்களிடம் துரியோதனனைவிட அதிக

விசுவாசத்துடன் நடந்து கொள்ள முடியாது. ஒரு தேரோட்டியை ஓர் அடிமை நாட்டு அரசனாக ஆக்கியதில் துரியோதனன் கொண்டிருந்த துணிச்சலுக்காகவும் உறுதியான நம்பிக்கைக்காகவும் பானுமதி அவனை மனதார நேசித்தாள். ஆனாலும் அவளுடைய மனத்தில் ஒரு லேசான பொறாமை முளைவிடத் துவங்கியிருந்தது. வில் வித்தையில் இளவரசன் அர்ச்சுனனுக்கு மிகப் பெரிய சவாலாக உருவாகியிருந்ததற்காகக் கர்ணனை அவள் மதித்தாள். ஓர் ஏழைத் தேரோட்டியாகப் பிறந்த ஒருவனுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனைதான். கர்ணன் இதயத்தால் உன்னதமானவன் என்பதிலும், அவன் தன் கணவனின் விசுவாசமான நண்பன் என்பதிலும் அவளுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. கர்ணனின் கொடைச் செயல்கள் பரதகண்டம் முழுதும் அவனுடைய புகழைப் பரப்பிக் கொண்டிருந்தன. ஆனாலும், தன் நண்பர்களின் நலனுக்கும் தன்னுடைய புகழுக்கும் இடையே ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தால், தன் கணவன் சிறிதுகூடத் தயங்காமல் தன் நண்பர்களின் நலனைத் தேர்ந்தெடுப்பான் என்றும், கர்ணனுக்கு அப்படிப்பட்ட ஒரு சூழல் எழுந்தால், அவன் தன் பெருமையையும் புகழையும்தான் தேர்ந்தெடுப்பான் என்றும் ஒரு சந்தேக எண்ணம் பானுமதியின் மனத்தை நச்சரித்துக் கொண்டிருந்தது. பானுமதியின் திருமண வாழ்க்கையின் துவக்கத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

தன் இரட்டைக் குழந்தைகளை உண்டாகியிருந்த பானுமதி, அந்தப் பருவத்திற்கே உரிய தளர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந்த ஒரு சமயத்தில், எதிர்பாராத விதமாகக் கர்ணன் அவர்களுடைய மாளிகைக்கு வந்தான். பீஷ்மரைச் சந்திக்கச் சென்றிருந்த துரியோதனனின் வரவிற்காகக் காத்திருந்த பானுமதி, அவன் வரும்வரை தன்னுடன் சொக்கட்டான் விளையாட வருமாறு கர்ணனை அழைத்தான். கர்ணன் மகிழ்ச்சியாக அதற்கு ஒப்புக் கொண்டான். ஒரு சாதாரணத் தேரோட்டிக் குலத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு இவ்விளையாட்டில் அவ்வளவு அனுபவம் இருக்காது என்பதால் அவனை எளிதாகத் தோற்கடித்துவிடலாம் என்று நினைத்த பானுமதி, இளவரசர்களும் அரசர்களும் மட்டுமே விளையாடிய அந்த விளையாட்டை அவன் சிறப்பாக விளையாடிய விதத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். யுத்தத்தைப்போலவே, இந்த விளையாட்டிலும் அவன் எளிதில் தோற்கடிக்கப்பட முடியாத ஓர் எதிரி என்பதை விரைவிலேயே அவள் கண்டாள். பானுமதி தோற்பதை வெறுத்தாள். கர்ணனின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக அவனைப் பார்த்து விளையாட்டுத்தனமாகவும்

அலட்சியமாகவும் புன்னகைத்தபடியே, அவனுடைய வெற்றிக் காய்களில் ஒன்றை அவள் திருடினாள். பதிலுக்குக் கர்ணன் அவளைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, அந்தக் காயை மீண்டும் கீழே வைக்குமாறு அவளிடம் கூறினான். அவன் தன்னைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டிருந்தது குறித்துக் கோபம் கொண்ட அவள், தன் உதட்டைச் சுளித்தபடி, சதுரங்கப் பலகையை விலக்கித் தள்ளிவிட்டு அந்த இடத்தைவிட்டு வெளியேற முயன்றாள்.

கர்ணனும் வெற்றி பெறவே விளையாடினான். எனவே, அவள் அங்கிருந்து போவதைத் தடுக்கும் விதத்தில், அவன் அவளுடைய மணிக்கட்டைப் பிடித்து அவளை மீண்டும் அவளுடைய இருக்கைக்குள் தள்ளினான். அவள் அவனுடைய பிடியிலிருந்து நழுவி, அந்த அறையைவிட்டு ஓட முயன்றாள். கர்ணன் துள்ளி எழுந்து, அவளுடைய இடையைப் பற்றினான். துல்லியமாக அக்கணத்தில் துரியோதனன் அங்கு வந்தான். அவர்கள் மூவரும் ஒருசில கணங்கள் சிலையாக நின்றனர். தன் நண்பன் தன் மனைவியின் இடையைப் பிடித்துக் கொண்டிருந்த காட்சியை இளவரசன் துரியோதனன் பார்த்தான். பானுமதி முதலில் சுதாரித்துக் கொண்டு, கர்ணனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அவளுடைய மெல்லிய இடையை இறுக்கமாகப் பற்றியிருந்த அவனுடைய வலிமையான கைகள் அவளை விடுவிக்க மறுத்தன. அவள் அவனைத் தள்ள முயன்றாள். திடீரென்று, அவன் தன் பிடியை விடுவித்தான். அவள் தன் இடையைச் சுற்றி அணிந்திருந்த முத்துச்சரம் அறுந்து, நூற்றுக்கணக்கான முத்துக்கள் அவர்களைச் சுற்றித் தரையின்மீது உருண்டோடி, அங்கு நிலவிய மௌனத்தை மேலும் ஆழப்படுத்தின.

“இந்த முத்துக்களை நான் தனியாகத் தேட வேண்டுமா அல்லது நீங்கள் இருவரும் உங்கள் மயக்கத்திலிருந்து விடுபட்டு எனக்கு உதவ வருவீர்களா?” என்று துரியோதனன் தன் நண்பனிடமும் மனைவியிடமும் ஒரு புன்னகையோடு கேட்டுவிட்டு, கீழே மண்டியிட்டு அமர்ந்து, அறைகலன்களுக்கு அடியில் உருண்டோடிய முத்துக்களைத் தேடத் துவங்கினான். பானுமதி தன் கட்டிலின்மீது அமர்ந்து, தன் முகத்தைத் தன் நீண்ட விரல்களால் மூடிக் கொண்டு அழத் தொடங்கினாள். கர்ணன் தன் நண்பனோடு சேர்ந்து முத்துக்களைச் சேகரிக்கத் துவங்கினான்.

“இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? தரையின்மீது தவழ்ந்து கொண்டிருக்கும் அளவுக்கு நீங்கள் இருவரும் மூக்கு முட்டக் குடித்திருக்கிறீர்களா?” என்று கேட்டபடியே அசுவத்தாமன் அங்கே வந்தான். வழக்கம்போல அவன் அவர்களைச் சிரிக்க வைத்தான்.

அவனும் முத்து வேட்டையில் சேர்ந்து கொண்டான். எல்லா முத்துக்களையும் கண்டுபிடித்து, மீண்டும் அவற்றைச் சரமாகத் தொடுத்துவிட்டு, விரைவில் அந்த மூன்று நண்பர்களும் அந்த அறையைவிட்டு வெளியேறினர். அவர்களுடைய சிரிப்புச் சத்தம் மறைந்தபோது, பானுமதி மெதுவாக எழுந்து நின்றாள். தாங்கள் தனியாக இருக்கும்போது துரியோதனன் இந்த நிகழ்வைப் பற்றித் தன்னுடன் விவாதிப்பானோ என்று அவள் பயந்தாள். தன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே அன்றைய நாள் முழுவதையும் அவள் கழித்தாள். அன்றிரவு துரியோதனன் தங்களுடைய அறைக்கு வர மிகவும் தாமதமானபோது, காலையில் தான் பொறுப்பற்று நடந்து கொண்ட விதத்திற்காகத் தன் கணவன் தன்னைத் தண்டித்துக் கொண்டிருந்தானோ என்று பானுமதி கவலைப்பட்டாள். அவன் ஒருவழியாக அவர்களுடைய அறைக்கு வந்து சேர்ந்தபோது, அவன் மெதுவாக அவளுடைய இதழ்களில் முத்தமிட்டுவிட்டு, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் படுக்கையின்மீது படுத்தான். பானுமதி பயந்து கொண்டே அவனுடைய பரந்த மார்பின்மீது தன் கைகளை வைத்தாள். அவனுடைய சுவாசத்தில் மாற்றம் ஏற்பட்டதை அவளால் உணர முடிந்தது. அன்று காலையில் கர்ணனுக்கும் தனக்கும் இடையே நடந்த அந்த நிகழ்வைப் பற்றி அவன் ஏதேனும் கூற வேண்டும் என்று அவள் விரும்பினாள். அவனிடம் திட்டு வாங்குவதற்கு அவள் தயாராகவும் இருந்தாள். ஆனால் துரியோதனன் அமைதியாக அவளுடைய தலைமுடியை வருடிக் கொடுத்தான். இதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள முடியாத பானுமதி, ஒரு மெல்லிய குரலில், "நீங்கள் சந்தேகிப்பதுபோல எங்களுக்கிடையே எதுவும் நடக்கவில்லை . . . " என்று கூறினாள்.

"சந்தேகப்படுவதற்கு இதில் எதுவும் இல்லை," என்று அவன் அவளுடைய காதிற்குள் கிசுகிசுத்தபோது, அவளுடைய இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. அவள் அவனைக் காதலோடு முத்தமிட்டாள். அப்போது அவன் கூறிய ஒரு விஷயத்தை அவள் தன் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டாள். "கர்ணன்மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. கீழ்த்தரமான எந்தவொரு காரியத்தையும் அவன் ஒருபோதும் செய்ய மாட்டான்," என்று துரியோதனன் கூறினான்.

இதைக் கேட்டதும் பானுமதிக்குச் சுரீரென்றது. அவளுடைய உடல் இறுக்கமடைந்தது. அவன் அவ்வாறு கூறாமல் இருந்திருக்கலாம் என்று அவள் நினைத்தாள். அவன் தன் மனைவியைவிடத் தன் நண்பன்மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தான் என்று அது அவளுக்கு உணர்த்துவதாக இருந்தது. பானுமதிக்கும் துரியோதனனுக்கும்

இடையே அப்போது எழுந்து கொண்டிருந்த காதல் உணர்வு அப்படியே மாயமாய் மறைந்தது. அவள் நடந்து கொண்ட விதத்திலிருந்து அதை உணர்ந்த துரியோதனன், அவள்மீதான தன் காதலை அவளிடம் கிசுகிசுத்ததன் மூலம் அவளை சமாதானப்படுத்த முயன்றான். ஆனால் பாதிப்பு ஏற்கனவே நிகழ்ந்திருந்தது. சிறிது நேரம் கழித்து, அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது, அவள் அவன் முகத்தையே நெடுநேரம் பார்த்தாள். அவன் தன் நண்பர்களை இப்படிக் கண்மூடித்தனமாக நம்புவது சரியான செயல்தானா என்று வியந்த அவள், தன் கைகளை அவனைச் சுற்றிப் பாதுகாப்பாகப் போட்டாள். நிலவு வெளிச்சம் அந்த அறையின் சன்னல் வழியாக வந்து, தூக்கத்தில் புன்னகைத்துக் கொண்டிருந்த அவனுடைய வசீகரமான முகத்தை ஒளிரச் செய்தது. பானுமதியின் இதயம் காதலில் கரைந்தது. ஏதோ மோசமான ஒன்று நடைபெறவிருந்ததாகத் தனக்குள் எழுந்த ஒரு வலிமையான உணர்வை அடக்கிக் கொள்ளக் கடுமையாக முயற்சித்தபடி, அவள் அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

ராஜசூய யாகத்திற்காக அழைப்பு வந்தபோது, துரியோதனன் அங்கு செல்வதை பானுமதி விரும்பவில்லை. கிருஷ்ணனையும் தர்மனையும் நினைத்து அவள் பயந்தாள். அவர்கள் தன் கணவனை ஏதேனும் ஒரு சிக்கலில் மாட்டிவிடக்கூடும் என்று அவள் உறுதியாக நம்பினாள். அங்கு போகாமல் இருக்குமாறு அவள் துரியோதனனுக்கு அறிவுறுத்தினாள். ஆனால் அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசன் என்ற முறையில் தனக்கு வேறு வழி இல்லை என்று அவன் கூறினான். இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்வதற்காகக் கர்ணன் ஆவலோடு அஸ்தினாபுரத்திற்கு வந்தான். ஜயத்ரதனும் சிந்து நாட்டிலிருந்து வந்தான். துரியோதனன் அங்கு கண்டிப்பாகப் போயாக வேண்டும் என்று அவன் கருத்துத் தெரிவித்தான். அசுவத்தாமன் மட்டும்தான் பானுமதிக்கு ஆதரவாகப் பேசினான். ராஜசூய யாகம் துரியோதனனைச் சிக்க வைப்பதற்கான ஒரு பொறி என்றும், அதை ஒதுக்கித் தள்ளுவதுதான் நல்லது என்றும் அவன் கூறினான். இறுதியில், அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது கோழைத்தனம் என்றும், ஒரு சத்திரியனுக்கு அது அழகல்ல என்றும் விவாதித்து, துரியோதனன் அங்கு போவதற்கு அவனுடைய மாமன் சகுனி அவனை ஒப்புக் கொள்ள வைத்தான். அந்தக் காந்தார இளவரசனை பானுமதி மிகவும் வெறுத்தாள். ஆனால் வேறு வழியின்றி, அஸ்தினாபுரத்தில் அமைந்த கோவிலுக்கு அவள் தன் கணவனுடன் சென்றாள். துரியோதனனும் மற்றவர்களும் அங்கிருந்து இந்திரப்பிரஸ்தத்திற்குத் தங்கள் பயணத்தைத் துவக்கவிருந்தனர். அவர்கள் அக்கோவிலைவிட்டு

வெளியே வந்தபோது, அருகிலிருந்த ஆலமரத்தின் கீழே தன் வழக்கமான இடத்தில் கிருபர் உட்கார்ந்திருந்தார். துரியோதனன் அவரிடம் ஆசி பெறச் சென்றான். அவன் கிருபரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு திரும்பவிருந்த நேரத்தில், "துரியோதனா, எக்காரணம் கொண்டும் அவர்கள் உன்னைத் தூண்டுவதற்கு இடம் கொடுத்துவிடாதே," என்று கிருபர் கூறினார்.

சகுனி கிண்டலாகச் சிரித்தான். துரியோதனன் ஒரு கணம் தயங்கினான். கிருபரின் வார்த்தைகளைக் கேட்டு பானுமதி நடுங்கினாள். அவை அவளுடைய சொந்த பயத்தை எதிரொலித்தன. அவள் தன் கணவனின் கையை இறுக்கமாகப் பிடித்தாள். தங்கள் இளவரசன் இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்வதைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் அவனைப் போற்றியபோது, அவன் தன் மனைவியிடமிருந்து தன் கையை மென்மையாக விடுவித்துக் கொண்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். பிறகு அவன் தன் குழந்தைகளிடம் விடைபெற்றுக் கொண்டான். ஒருசில நிமிடங்களில், அவர்களுடைய ஊர்வலம் பாண்டவர்களின் தலைநகரை நோக்கிப் புறப்பட்டது.

அசுவத்தாமன் பின்னால் திரும்பி பானுமதியைப் பார்த்தான். தன் நண்பனுக்குத் துணையாகத் தான் இருப்பதாக அவன் அவளுக்குச் சைகை காட்டித் தலையசைத்தான். அவள் தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு, தனக்காகக் காத்துக் கொண்டிருந்த பல்லக்கை நோக்கி மெதுவாக நடந்து சென்று, அதனுள் ஏறி அமர்ந்தாள். தன் இதயத்தைக் கவ்விப் பிடித்திருந்த பயத்தை மறப்பதற்காக அவள் தன் குழந்தைகளுடன் விளையாட முயற்சித்தாள். கிருபரின் எச்சரிக்கை வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளுடைய மனத்தில் பளிச்சிட்டு அவளை அச்சுறுத்தின. தொலைவில் ஒரு கொடூரமான யுத்தத்தின் சத்தம் தன் காதுகளில் விழுந்ததாக நினைத்து, பயத்தில் அவள் தன் குழந்தைகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

* * *

விகாரமாகத் தெரிந்த அந்தப் பிச்சைக்காரனையும் அவனுடைய குருட்டு நாயையும் அங்கு கண்ட பிராமணர்கள் கடுங்கோபம் கொண்டனர். யாகம் நடைபெறவிருந்த புனிதமான இடத்தை அவன் தன் வரவால் மாசுபடுத்தத் துணிந்திருந்தது குறித்து அவர்கள் தங்களுக்கிடையே விவாதித்தனர். தர்மன் சங்கடத்தில் நெளிந்தான். அவன் அப்போதுதான் பிராமணர்களுக்கு ஏகப்பட்ட செல்வத்தையும் ஆடைகளையும் பசுக்களையும் தானமாக வழங்கி, அவர்களுடைய

பாராட்டு மழையில் குளித்துக் கொண்டிருந்தான். எங்கிருந்தோ வந்த அந்தத் தீண்டத்தகாதவன், அந்த இடத்திற்குள் நுழைந்து பாடத் துவங்கியிருந்தான். தர்மன் அவனுக்கு மரண தண்டனை வழங்கியிருப்பான், ஆனால் அந்தப் பிச்சைக்காரன் தன் கடவுளான கிருஷ்ணனின் அன்பைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். தெளமியனைச் சுற்றி இருந்த புரோகிதர்களைத் தவிர, மற்றவர்கள் அவனுடைய பாடல்களைக் கேட்டு மனம் மயங்கி நின்றனர். தான் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பு அர்ச்சுனனும் கிருஷ்ணனும் அங்கு வர வேண்டும் என்று தர்மன் விரும்பினான். அந்தப் பிச்சைக்காரனை அங்கிருந்து வெளியேற்றுமாறும், அல்லது அவனைக் கொன்றுவிடுமாறும் தெளமியனின் புரோகிதர்கள் கூட்டம் கத்தத் துவங்கியது. தர்மன் அந்த விகாரமான பிச்சைக்காரனையும், அவனுக்கு அருகில் தன் வாலை ஆட்டிக் கொண்டு நின்ற அவனுடைய குருட்டு நாயையும் நெடுநேரம் பார்த்தான்.

தெளமியனிடமிருந்து வந்த ஒரு திடீர்க் கூப்பாடு தர்மனை எழுந்து நிற்கச் செய்தது. "மேன்மை பொருந்தியவரே, இந்தக் கயவனைக் கொல்லுங்கள்! இவன் என்ன பாடிக் கொண்டிருக்கிறான் என்பது உங்களுக்குக் கேட்கவில்லையா?"

அந்தப் பிச்சைக்காரனின் பாடலை தர்மன் இப்போது அதிக உன்னிப்பாகக் கவனித்தபோது, அவன் முகம் வெளிறியது. ஜரனின் பாடல் தர்மனையும், கற்றறிந்த புரோகிதர்களையும், தர்மன் நடத்திக் கொண்டிருந்த ராஜசூய யாகத்திற்கு அனுமதி கொடுத்த வேதங்களையும்கூட இகழ்ந்து கொண்டிருந்தது. அன்பு இல்லையென்றால், கற்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும், தூய்மையான இதயம் இல்லை என்றால் இப்படிப்பட்ட யாகங்களுக்கு எந்தப் பொருளும் இல்லை என்றும், தகுதியற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் பரிசுகள் மதிப்பற்றவை என்றும் அந்தப் பிச்சைக்காரன் பாடினான். ராஜசூய யாகம் ஒருவன் தன் புகழுக்காக நடத்திய ஒரு போலி நாடகம் என்றும், அது ஒரு யாகமே அல்ல என்றும் அவன் பாடினான். உண்மையான யாகங்கள் யாருக்கும் தெரியாமல், யாருக்கும் விளம்பரப்படுத்தப்படாமல், புகழ், செல்வம், சொர்க்கம், முக்தி போன்ற எதையும் எதிர்பார்க்காத மக்களால் கொடுக்கப்படுகின்றன என்றும், அப்படிப்பட்ட யாகங்களுக்குத்தான் கடவுளின் அருள் கிடைக்கின்றது என்றும் அவன் பாடினான்.

தர்மன் கோபத்தில் நடுங்கினான். யாகம் நடக்கவிருந்த இடத்தை மாசுபடுத்தத் துணிந்ததோடு மட்டுமல்லாமல், அரசனையும் கற்றறிந்த பிராமணர்களையும்கூட இழிவுபடுத்தத் துணிந்த அந்தத்

தீண்டத்தகாதவனைக் கண்டு அவன் கடுஞ்சீற்றம் கொண்டான். "அவனைக் கைது செய்யுங்கள்!" என்று தர்மன் கட்டளையிட்டான். வீரர்கள் அந்தப் பிச்சைக்காரனை நோக்கி விரைந்தனர்.

"அண்ணா, என்ன நடந்தது? பாட்டுச் சத்தம் ஏன் நின்றுவிட்டது? நான் அந்தப் பாடலைக் கேட்பதற்குத்தான் வந்தேன். அவனுடைய குரலில் ஒரு மாயாஜாலம் இருக்கிறது," என்று கேட்டபடி அர்ச்சுனன் திரௌபதியோடு அங்கு வந்தான். திரௌபதி ஒரு நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தாள். தர்மன் எரிச்சலோடு அவளைத் திரும்பிப் பார்த்து, "நாம் புனிதமாகக் கருதும் எல்லாவற்றையும் அவன் இழிவுபடுத்திக் கொண்டிருந்தான். நீ சிரித்துக் கொண்டிருக்கிறாயா?" என்று கோபமாகக் கேட்டான்.

அர்ச்சுனன் தன் சகோதரனை அமைதிப்படுத்தும் முயற்சியில், "எந்தவொரு சாதாரண மனிதனும் இங்கே வந்து உங்களை இழிவுபடுத்தத் துணிய மாட்டான். ஒன்று, அவன் ஒரு பைத்தியக்காரனாக இருக்க வேண்டும், அல்லது அவன் ஒரு துறவியாக இருக்க வேண்டும். அவன் ஏன் அப்படிப் பாடிக் கொண்டிருந்தான் என்று நீங்கள் ஏன் அவனிடம் விசாரிக்கக்கூடாது?" என்று தர்மனிடம் கேட்டான்.

திரௌபதி அர்ச்சுனனைப் பார்த்து, அவனோடு உடன்படுவதுபோலப் புன்னகைத்தாள். தர்மன் தன் கையை உயர்த்தி, "அவனை விடுவியுங்கள். அவன் என்ன விளக்கம் கூறுகிறான் என்று நாம் கேட்கலாம்," என்று கட்டளையிட்டான்.

தாங்கள் அந்தப் பிச்சைக்காரனைத் தொட்டுத் தங்களை மாசுபடுத்திக் கொள்வதற்கு முன்பாகவே அரசனிடமிருந்து வந்த அந்தக் கட்டளையைக் கேட்டு, அவனைப் பிடிக்கச் சென்ற வீரர்கள் நிம்மதியடைந்து விலகி நின்றனர். "மாபெரும் பாவம் . . . மாபெரும் பாவம் . . ." என்ற முணுமுணுப்பு அங்கிருந்த புரோகிதர்களிடமிருந்து எழுந்தது. அந்தப் பிச்சைக்காரன் சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் தன்னைக் கைது செய்யப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்ட அவன், மீண்டும் பாடத் துவங்கினான். இம்முறை அவன் பாடிய பாடல் ஒரு நிகழ்வை எடுத்துரைத்தது. முன்பொரு காலத்தில், தான் ஓர் ஏழை பிராமணனைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் அவனுடைய குடிசைக்குள் நுழைந்திருந்ததைப் பற்றியும், தான் அங்கு பார்த்திருந்தவற்றைப் பற்றியும், தன்னைப் போன்ற ஒரு தீண்டத்தகாதவனின் பசியைப் போக்குவதற்காக அந்த பிராமணன் எப்படித் தன் குடும்பத்தையும் தன் வீட்டையும் தன் வாழ்க்கையையும் தியாகம் செய்தான் என்பதைப் பற்றியும் அந்தப் பாடலில் அவன்

எடுத்துரைத்தான். தன்னிடம் எதுவுமில்லாத ஒருவன், தன்னிடம் எதுவும் இல்லாத இன்னொருவனுக்குச் செய்த தியாகம்தான் உண்மையான தியாகம் என்றும், அப்படிப்பட்ட இடங்கள்தான் புனிதமானவையே தவிர, பேராசையும் தணியாத பொன்னாசையும் கோலோச்சிய இந்த இடம் புனிதமானதல்ல என்றும் அவன் பாடினான். குடிசைகளில்தான் கிருஷ்ணன் வாழ்ந்தான் என்றும், தூய்மையான இதயத்தைக் கொண்டவர்களால்தான் அவனுடைய புல்லாங்குழலின் தெய்வீக இசையைக் கேட்க முடியும் என்றும் அவன் பாடினான். இறுதியில், "அரசே, அந்த இசையை நீங்கள் கேட்க வேண்டும் என்றால், புரோகிதர்களின் கொக்கரிப்புகளை அமைதிப்படுத்துங்கள். அவர்களுடைய புனித நூல்களை நெருப்பிலிட்டுக் கொளுத்துங்கள், அர்த்தமற்றச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்," என்று அவன் பாடி முடித்தான்.

இதைக் கேட்டு தெளமியனும் அவனுடைய புரோகிதர்களும் பெருங்கூச்சலிட்டனர்.

"யார் நீ?" என்று திரௌபதி கேட்டாள்.

"நான் யாருமில்லை. மக்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதோ இல்லையோ, நான் ஒவ்வொருவரையும் சந்திக்கிறேன். என் பெயர் ஜரன். இது என்னுடைய விசுவாசமான நாய். என் வாழ்க்கைக்காகவும் அதன் ஆசீர்வாதங்களுக்காகவும் நான் நன்றியுடன் இருக்க வேண்டும் என்பதை இது எனக்கு நினைவுபடுத்துகிறது. நாங்கள் வீதிகளில் வாழ்கிறோம், கோவில்கள் மற்றும் ஆடம்பரமான வீடுகளிலிருந்து நாங்கள் விரட்டப்படுகிறோம். ஆனாலும், நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறோம். வாழ்க்கை எனும் ஆசீர்வாதத்தில் நாங்கள் உண்மையிலேயே களித்திருக்கிறோம். எங்களுக்கு எந்தப் பற்றாக்குறையும் இல்லை. கடவுள் எங்கள்மீது காட்டும் கருணைக்காக நாங்கள் தினமும் அவருக்கு நன்றி கூறுகிறோம்," என்று அந்தப் பிச்சைக்காரன் பதிலளித்தான்.

அர்ச்சுனன் தர்மசங்கடமாக உணர்ந்தான். ஒரு நாயைத் தன் அம்பால் குருடாக்கிய நாளைப் பற்றிய பழைய நினைவுகள் அவன் மனத்திற்குள் வேகமாகப் பாய்ந்து வந்தன. மேலும், ஒரு வேடுவனின் துண்டிக்கப்பட்டக் கட்டைவிரல் நிலத்தின்மீது விழுந்து கிடந்ததை குருநாதர் துரோணர் உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டு நின்ற காட்சியும் அவனுடைய நினைவிற்கு வந்தது. இவை அவனுடைய மனசாட்சியைத் துளைத்தன. தான் குருடாக்கிய நாயின் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஓர் அர்த்தமற்றத் தூண்டுதல் அவனுக்குள் எழுந்தது. "உன் நாயின் பெயர் என்ன?" என்று அவன்

ஜரனிடம் கேட்டான்.

ஜரன் அங்கிருந்த புரோகிதர்களின் கோபமான முகங்களைப் பார்த்தான். அவனுடைய கண்கள் தௌமியனின் கண்களைச் சந்தித்தன. தீண்டத்தகாத அந்தப் பிச்சைக்காரன் தன் கண்களாலேயே தன்னை மாசுபடுத்திவிடுவான் என்று பயந்ததுபோல, தௌமியன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அப்போது, "அதன் பெயர் தர்மன்," என்று ஜரன் கூறினான். அந்தக் குருட்டு நாய் தன் வாலை ஆட்டியது.

அங்கு ஓர் அதிர்ச்சி கலந்த மௌனம் நிலைவியது. பிறகு அந்தப் புரோகிதர்கள் கோபத்தில் கொதித்தெழுந்தனர். "ஒரு நாயை தர்மன் என்று அழைப்பது மிகப் பெரிய பாவம்! அவன் நம் மதத்தையும் புனித நூல்களையும் ஏளனப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவனைக் கொல்லுங்கள்! அவனைக் கொல்லுங்கள்!" என்று அவர்கள் கத்தினர். தர்மன் தன் உறையிலிருந்து தன் வாளை உருவியபோதுதான் அவர்கள் அமைதியடைந்தனர்.

திரௌபதி தன் கணவனின் கையை இறுகப் பிடித்து, "அவனை விட்டுவிடுங்கள். அவன் ஒரு துறவி," என்று கூறினாள்.

தர்மன் தயங்கியதைக் கண்ட தௌமியன் ஓர் அதிகாரமான குரலில், "தன் தர்மத்தைச் செய்வதிலிருந்து ஓர் அரசனைத் தடுக்காதே. அதைவிட ஒரு மிகப் பெரிய பாவம் வேறு எதுவுமில்லை. அதற்கு நீ ஒரு விலையைக் கொடுத்தாக வேண்டியிருக்கும்," என்று கத்தினான்.

தர்மன் திரௌபதியின் கண்களுக்குள் பார்த்தான். அவனுடைய அனைத்து பயங்களும் மீண்டும் அவனிடம் விரைந்தோடி வந்தன. அவளுடைய பார்வைக்கு முன்னால் அவன் நிர்வாணமாக உணர்ந்தான். அவன் கையிலிருந்த வாள் நழுவி நிலத்தின்மீது விழுந்தது.

அகங்காரம் கொண்ட அந்தப் பிச்சைக்காரன் தண்டனையின்றித் தப்பிவிடுவானோ என்று பயந்த தௌமியன், "தர்மா, நீ உன் தர்மத்தைக் கைவிட்டுவிட்டாய். அதே தர்மம் உன்னைக் கைவிடும். நீ இந்தப் பாவத்திற்கு ஒரு விலையைக் கொடுக்கப் போகிறாய். ஒரு தீண்டத்தகாதவன் பிராமணர்களையும் வேதங்களையும் அவமதிக்க நீ அனுமதித்துவிட்டாய்," என்று கூப்பாடு போட்டான்.

கிருஷ்ணன் அங்கு நிலவிய குழப்பத்திற்குள் நுழைந்து, தர்மனுக்கு மேலும் எந்த ஏளனமும் ஏற்படாமல் பாதுகாத்தான். தன் கண்கண்ட தெய்வம் தன் முன்னால் நின்று கொண்டிருந்ததைக் கண்ட ஜரன், ஆனந்தக் கண்ணீர் வடித்தபடி கிருஷ்ணனை நோக்கி விரைந்தான். தர்மன் அவனைப் பின்தொடர்ந்து ஓடியது. ஆனால் ஒரு பெரிய புரோகிதர்கள் கூட்டம் கிருஷ்ணனைச் சூழ்ந்து கொண்டு, தர்மனும் அவனுடைய மனைவியும் தங்களை நடத்திக் கொண்டிருந்த விதத்தைப்

பற்றிப் புகார் கூறிக் கொண்டிருந்தனர். கிருஷ்ணன் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, எப்போதேனும் புதிய யோசனைகளைக் காது கொடுத்துக் கேட்பது நல்லது என்று கூறினான். கிருஷ்ணன் தன்னைக் கண்டிப்பதற்குப் பதிலாக, அந்த நிகழ்வைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டு தர்மன் நிம்மதியடைந்தான். ஆனால் தௌமியனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

ஜரன் காத்திருந்தான், ஆனால் கிருஷ்ணனைச் சுற்றி இருந்த கூட்டம் மேலும் மேலும் விரிந்து கொண்டே போனது. "அவன் புரோகிதர்களின் ஒரு கைதியாகிவிட்டான்," என்று ஜரன் தன் நாயிடம் கூறினான். அது ஜரனின் கையை நக்கியது. ஜரன் அங்கிருந்து மெதுவாக வெளியேறினான். அவன் ஒரு தெரு முனையில் திரும்பிக் கொண்டிருந்தபோது, இரண்டு குதிரைகள் அத்தெருவின் வழியாக விரைந்தன. ஏகலைவனும் சிசுபாலனும் தர்மனின் ராஜசூய யாகத்திற்கு விரைந்து கொண்டிருந்ததை ஜரன் பார்த்தான்.

சிசுபாலனும் ஏகலைவனும் அந்த இடத்திற்குள் நுழைந்தபோது, ஜரனால் ஏற்பட்டிருந்த குழப்பம் ஒருவழியாக நீங்கியிருந்தது. பலிபீடத்திற்குப் பக்கத்தில் இருந்த இருக்கைக்குச் சென்று சிசுபாலன் துணிச்சலோடு அமர்ந்து கொண்டான். பிறகு தன்னருகில் வந்து உட்காருமாறு ஏகலைவனை அழைத்தான். வேண்டுமென்றே அவன் இவ்வாறு நடந்து கொண்டதைக் கண்டதும் கூட்டத்தினரிடையே கோப முணுமுணுப்புகள் எழுந்தன. ஒரு வேடுவனைப் புனிதமான பலிபீடத்தின் அருகே உட்கார வைத்ததன் மூலம், தர்மனுக்கும் அங்கிருந்த புரோகிதர்களுக்கும் சேடி அரசன் வெளிப்படையாக சவால்விட்டுக் கொண்டிருந்தான். தர்மன் தன் இருக்கையைவிட்டு எழுந்தான், ஆனால் கிருஷ்ணன் அவனைத் தடுத்தான். பிறகு அந்த விழா தொடர்ந்தது.

சிசுபாலனும் ஏகலைவனும் அந்த விழா நடவடிக்கைகளை வெளிப்படையான வெறுப்புடன் கவனித்தனர். கிருஷ்ணனைச் சிறப்பு விருந்தினராக தௌமியன் அறிவித்தபோது, ஆங்காங்கே லேசான கைதட்டல் எழுந்தது. அங்கு கூடியிருந்த அரசர்கள் மற்றும் இளவரசர்களிடையே முணுமுணுப்புகள் எழுந்தன. ஆனால் அந்த யாதவன், தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த சிறப்பு இருக்கையை நோக்கி மிடுக்காக நடந்து சென்றான்.

"நில்!" என்று கத்திய சிசுபாலன், தன் உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்தான். எல்லோருடைய கண்களும் அவனைப் பார்த்தன.

பரதகண்டம் நெடுகிலுமிருந்து வந்து அங்கு கூடியிருந்த அரசர்களையும் மேட்டுக்குடியினரையும் அவன் திரும்பிப் பார்த்துவிட்டு,

அவர்களிடம் சுருக்கமாக ஓர் உரையாற்றினான். "மதிப்பிற்குரிய அரசர் பெருமக்களே, இது நம் அனைவருக்கும் ஒரு மாபெரும் அவமானம். இந்திரப்பிரஸ்தத்தின் அரசன் ஒரு சத்திரியனை விட்டுவிட்டு ஒரு சாதாரணமான இடையனைத் தன் சிறப்பு விருந்தினனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான். இந்த மரியாதைக்குத் தகுதி பெறுவதற்கு அந்த மாடு மேய்ப்பவன் அப்படியென்ன பெரிதாகச் செய்துவிட்டான்? அவன் ஒரு திருடன், ஓர் அயோக்கியன். இவனைப் பற்றிப் போதுமான கதைகளை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய மக்கள் கூடியிருக்கின்ற ஓர் இடத்தில் அவற்றில் ஒன்றைக்கூடப் பகிர்ந்து கொள்ள முடியாது. இவன் செய்யாமல் விட்டு வைத்துள்ள குற்றம் ஏதாவது இருக்கிறதா? இவன் நயவஞ்சகமாகக் கொலை செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. இவன் ஒருபோதும் ஓர் ஆண்மகனைப்போலச் சண்டையிடுவதில்லை. இவன் தன் மாமனை ஏமாற்றிக் கொன்றான். இப்போது, நம் நாட்டின் மாபெரும் அரசர்களில் ஒருவனைக் கொன்றுவிட்டு இங்கு வந்திருக்கிறான். அரசன் ஜராசந்தனைக் கண்டு இவன் பயந்தான். அந்த மாபெரும் மனிதனுக்குத் தான் இணையானவன் அல்ல என்பது இவனுக்குத் தெரியும். எனவே தன்னைப் பதினேழு முறை தோற்கடித்த எதிரியான அரசன் ஜராசந்தனை இவன் ஓர் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்க வைத்து, பீமனைப் பயன்படுத்திக் களைந்துவிட்டான். இதோ, இங்கே அமர்ந்திருக்கும் இளைஞனின் தந்தையான தளபதி இரணியதனுசுவையும் அவன் திட்டமிட்டுக் கொலை செய்தான்." கூட்டத்தினர் தன்னுடைய பேச்சை எப்படி எடுத்துக் கொண்டனர் என்று பார்ப்பதற்காக சிசுபாலன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான்.

அங்கிருந்த புரோகிதர்கள் கத்திக் கொண்டிருந்தனர், ஆனால் அங்கு கூடியிருந்த அரசர்கள் மற்றும் இளவரசர்களின் கவனத்தை அவன் கவர்ந்திருந்தான். இது கொடுத்த நம்பிக்கையில், சேடி அரசன் தன் வாதத்தைத் தொடர்ந்தான். "சிறப்பு விருந்தினராக இருப்பதற்கான மரியாதை இவனுக்கு ஏன் கொடுக்கப்பட வேண்டும்? தர்ம ராஜா, தர்மத்தைத் தடுமாற்றமின்றிப் பின்பற்றும் ஒருவனுக்கு நீங்கள் மரியாதை செலுத்த விரும்பினால், இவனுக்கு பதிலாக மாபெரும் பீஷ்மரைத் தேர்ந்தெடுங்கள். ஒரு மிகச் சிறந்த வீரனை நீங்கள் கௌரவப்படுத்த விரும்பினால், துரோணரைத் தேர்ந்தெடுங்கள். அறிவும் ஞானமும் கொண்ட ஒருவனை நீங்கள் பெருமைப்படுத்த விரும்பினால், விதுரனைத் தேர்ந்தெடுங்கள். பரிவும் நேர்மையும் கொண்ட ஒருவனுக்கு நீங்கள் மரியாதை செலுத்த விரும்பினால், உங்கள் ஒன்றுவிட்டச் சகோதரன் துரியோதனனைத் தேர்ந்தெடுங்கள்.

புத்திக்கூர்மை கொண்ட ஒருவனை நீங்கள் விரும்பினால், கிருபரைத் தேர்ந்தெடுங்கள். பகுத்தறியும் திறனைக் கொண்ட ஒருவனை நீங்கள் விரும்பினால், சார்வகனைத் தேர்ந்தெடுங்கள். தடுமாற்றமற்ற விசுவாசம் கொண்ட ஒருவனை நீங்கள் கௌரவப்படுத்த விரும்பினால், அசுவத்தாமனைத் தேர்ந்தெடுங்கள். எல்லாத் தடைகளையும் எதிர்த்துப் போராடி, இறுதியில் வெற்றி வாகை சூடியுள்ள ஒருவனுக்கு நீங்கள் மரியாதை கொடுக்க விரும்பினால், அதற்குரிய நபரைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்கு ஓரளவு சிரமம் இருக்கக்கூடும். ஏனெனில், பரந்த இதயத்தைக் கொண்ட அங்க அரசனான கர்ணனுக்கும், இந்த இளைஞன் ஏகலைவனுக்கும் அந்த விவரிப்பு மிகவும் கச்சிதமாகப் பொருந்தும். இவர்கள் இருவரில் ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுப்பது கடினமாகத்தான் இருக்கும். இந்த அனைத்துப் பண்புநலன்களோடு கூடவே, இன்னும் பல மேன்மையான பண்புநலன்களைக் கொண்ட ஒருவரை நீங்கள் விரும்பினால், முனிவர் வேதவியாசரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு மரியாதை செய்யுங்கள். ஆனால் மனிதகுலத்தின் ஒட்டுமொத்த நலனிற்காக, அதர்மத்தின் அடையாளச் சின்னமான இவனை தயவு செய்து தேர்ந்தெடுக்காதீர்கள்."

கிருஷ்ணன் சிசுபாலனிடம் நடந்து சென்று, அவன் முன்னால் மரியாதையோடு தலை வணங்கினான். பிறகு தன் பரிகாசப் புன்னகையுடன், "மேன்மை பொருந்தியவரே, நீங்கள் ஏன் என்னை ஒழுக்கமற்றவற்றன் என்று அழைக்கிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

ஏகலைவன் தன் இருக்கையில் பதற்றத்தோடு அமர்ந்திருந்தான், ஆனால் சிசுபாலன் தன் பரம எதிரியின் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான். அவர்கள் இருவரும் ஒரு கணம் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்தனர். பிறகு சிசுபாலன் அவையோரை நோக்கித் திரும்பி, ஒரு தெளிவான குரலில் பேசினான். "மரியாதைக்குரிய அரசர்கள் கூடியிருக்கும் இந்த இடத்தில் நம் சிறப்பு விருந்தினரின் தில்லுமுல்லுகளைப் பற்றிப் பேச எனக்குத் தயக்கமாக இருக்கிறது. ஆனால் அவன் எனக்கு வேறு வழியை விட்டுவைக்கவில்லை. என்னுடைய கடுமையான வார்த்தைகளுக்காக தயவு செய்து நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஆனால் இவ்வுலகில் பிறந்துள்ள மிகவும் ஆபத்தான மனிதன் இவன்தான். பேரழிவிற்கும் போருக்குமான பாதையில் இவன் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறான். ஒருசிலருக்கு மட்டும் சிறப்பு உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கிவிட்டு, மற்ற அனைவருக்கும் நரக வாழ்க்கையை வழங்குகின்ற

ஒரு சமுதாய ஒழுங்குமுறையை இவன் பாதுகாக்க விரும்புகிறான். இவன் விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்று தன்னைப் பற்றிப் பிரகடனம் செய்வதை தௌமியனைப் போன்றவர்கள் ஆதரிப்பதில் எந்த வியப்பும் இல்லை. இந்தப் புரோகிதர்கள் இவனுடைய தெய்வீகத்தைப் பற்றி மக்களிடம் மும்முரமாகப் பரப்பி வருகின்றனர். ஏனெனில், இந்தத் தத்துவம் இந்தப் புரோகிதர்களுக்குத்தான் பெரும் லாபங்களைக் கொடுக்கும். துரதிர்ஷ்டவசமாக, ஏழைகளும் அதை நம்பத் துவங்கியுள்ளனர்.

"இவனுடைய தெய்வீகச் செயல்கள் எவை? இவன் தன் எட்டாவது வயதிலிருந்தே கொலை பாதகங்களைச் செய்யத் துவங்கிவிட்டான். தன் கிராமத்தில் வாழ்ந்த சக இடையர்களிடமிருந்து இவன் திருடினான். காளிங்கன் போன்ற நாகர்களிடமிருந்து அவர்களுடைய நிலங்களை அபகரித்துக் கொண்டு, அவர்களைத் தங்கள் கிராமத்திலிருந்து வெளியே துரத்தினான். இவன் தன் மாமனைக் கொலை செய்தான். பெண்கள் குளித்துக் கொண்டிருந்தபோது இவன் அவர்களுடைய ஆடைகளைத் திருடி வைத்துக் கொண்டு, அவர்களைத் தன் முன் நிர்வாணமாக நடந்து வரச் செய்தான். இவன் ஜராசந்தனுக்கு பயந்து கொண்டு துவாரகைக்கு ஓடியபோது, தன் காதலியான ராதையைத் திடீரென்று கைவிட்டான். வயது செல்லச் செல்ல இவனுக்குப் பக்குவம் ஏற்படும் என்று அறிவார்ந்தவர்கள் நினைத்தனர். ஆனால் இவன் நன்னடத்தையற்றவன். இவன் தன் அந்தப்புரத்தில் 16,008 கன்னியரை வைத்திருக்கிறான். ஆனால் ராதைக்கு அங்கு இடமில்லை. ஆனாலும் தான் விஷ்ணுவின் அவதாரம் என்று இவன் கூறிக் கொள்கிறான். இதைவிட அதிக வேடிக்கையான விஷயம் இருக்க முடியுமா?"

"ஐயோ . . .!" என்று ஏகலைவன் கத்தினான். தன் தொண்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கிளம்ப, அரசன் சிசுபாலன் நிலைகுலைந்து நிலத்தில் விழுந்ததை அவன் கண்டான். சேடி அரசனின் உடல் ஆடி அடங்கி ஒடுங்கியது.

கிருஷ்ணன் தன் எதிரியின் கழுத்திலிருந்து தன் சக்ராயுதத்தை உருவி எடுத்து, அதிலிருந்த ரத்தத்தைத் துடைத்தான்.

"இது ஓர் உணர்ச்சியற்றக் கொலை," என்று யாரோ ஒருவன் கத்தினான். ஒருசில அரசர்கள் தங்கள் வாள்களை உருவிக் கொண்டு கிருஷ்ணனைத் தாக்க விரைந்தனர். பாண்டவர்கள் தங்கள் நண்பனும் வழிகாட்டியுமான கிருஷ்ணனைப் பாதுகாக்க ஓடி வந்தனர். ராஜசூய யாகம் நடக்கவிருந்த இடம் ஒரு போர்க்களமாக மாறியது. சிசுபாலனைக் கொன்றவனை எதிர்த்துச் சண்டையிடத்தான் ஏகலைவன் முதலில் நினைத்தான். ஆனால் எச்சரிக்கையுணர்வு அவனுடைய உள்ளுணர்வை

வெற்றி கொண்டது. கொல்லப்பட்ட அரசனைவிடக் கிருஷ்ணனுக்கு அதிக ஆதரவாளர்கள் இருந்ததை அவன் அறிந்தான். கிருஷ்ணனும் பாண்டவர்களும் தங்களை விமர்சித்தவர்களை இரக்கமின்றிக் கண்டதுண்டமாக வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர். சால்வனும் தந்தவக்கிரனும் ஒரு படையோடு இந்திரப்பிரஸ்தத்தின் எல்லைக்கருகே காத்துக் கொண்டிருந்தனர். தன்னால் எப்படியாவது அவர்களைச் சென்றடைய முடிந்தால், நிலைமையைத் தலைகீழாக ஆக்கிவிட முடியும் என்று நினைத்த ஏகலைவன், அங்கிருந்து ஓடத் துவங்கினான். தன்னைத் தடுத்து நிறுத்த வந்த வீரர்களை வெட்டி வீழ்த்தியபடி அவன் தன் குதிரையை நோக்கி விரைந்தான். அந்தச் சண்டையில் கலந்து கொள்ள இப்போது அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் வேகமாக வந்து கொண்டிருந்தனர். ஏகலைவன் தன் குதிரையின்மீது ஏறியபோது, அங்கிருந்த பிராமணர்கள் அமைதியாக அங்கிருந்து நழுவினர். ஏகலைவன் இந்திரப்பிரஸ்தத்தின் வீதிகள் வழியாகத் தன் நண்பர்களை நோக்கி விரைந்தபோது, கூட்டத்தினர் திசைக்கொருவராகத் தலைதெறிக்க ஓடினர். ஏகலைவன் தன் வழியில் நின்ற ஒரு பிச்சைக்காரனைக் காலால் எட்டி உதைத்தான். அந்தப் பிச்சைக்காரன் சுருண்டு நடைபாதையின்மீது முகம் குப்புற விழுந்ததை ஏகலைவன் பார்த்தான். ஒரு நாய் மிகவும் கோபமாக அவனுடைய குதிரையைச் சிறிது நேரம் துரத்தி வந்தது. பிறகு, வலியில் துடித்துக் கொண்டிருந்த தன் எஜமானனிடம் அது திரும்பி ஓடியது. ஏகலைவன் அவர்கள் இருவரையும் மனத்திற்குள் திட்டிவிட்டு, அந்த மாபெரும் நகரின் புழுதி படிந்த வீதிகளின் வழியாக வேகமாகத் தன் குதிரையைச் செலுத்தினான். மற்றவர்களின் வழியில் நின்ற சோம்பேறிகளை அவன் மிகவும் வெறுத்தான்.

தந்தவக்கிரனும் சால்வனும் இருந்த இடத்தை அவன் வந்தடைந்தபோது, அவனுக்கு மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியது. கிருஷ்ணன் சிசுபாலனைக் கொன்றிருந்ததைப் பற்றியும், அதற்காகத் தாங்கள் கிருஷ்ணனைப் பழி வாங்க வேண்டும் என்றும் அவன் அவர்களிடம் கோபத்தோடு கூறினான். கடுஞ்சீற்றமடைந்த அவனுடைய நண்பர்கள், யாதவர்களைத் தூற்றிச் சபித்தனர். இந்திரப்பிரஸ்தத்தை நோக்கிச் செல்லத் தங்கள் படையினருக்கு அவர்கள் கட்டளையிட்டனர். ஆனால் அவர்கள் முன்னோக்கிச் செல்லத் துவங்கியபோது, வாசுகி அவர்கள் வழியை மறித்தான். அந்த வயதான நாகர் தலைவன் தன் கைத்தடியை உயர்த்தி, அமைதியாக இருக்கும்படி எல்லோருக்கும் கட்டளையிட்டான். குழப்பமடைந்த படைவீரர்கள் அப்படியே நின்றனர். தம் கடிவாளங்கள் திடீரென்று பிடித்து

இழுக்கப்பட்டதால், குதிரைகள் பயத்திலும் எரிச்சலிலும் கனைத்துக் கொண்டிருந்தன.

"கிழட்டு முட்டாளே, வழியை விட்டு விலகு. இல்லையென்றால், எங்கள் குதிரைகளின் குளம்புகளுக்கு அடியில் நசுங்கி நீ மண்ணோடு மண்ணாகிவிடுவாய்," என்று தந்தவக்கிரன் கத்தினான்.

வாசுகி அவனை ஒரு வெறுப்பான புன்னகையுடன் பார்த்தான். பிறகு அவன் ஏகலைவனைப் பார்த்துப் பேசினான். "இச்சிறிய படையைக் கொண்டு இந்திரப்பிரஸ்தத்தை எதிர்த்து உன்னால் சண்டையிட முடியாது. மேலும், இந்திரப்பிரஸ்தத்தின்மீது மேற்கொள்ளப்படும் எந்தவொரு தாக்குதலும் பீஷ்மருக்குக் கோபத்தை உண்டாக்கும். பிறகு ஒட்டுமொத்த அஸ்தினாபுரப் படையும் கண நேரத்தில் நம் கதையை முடித்துவிடும். ஒரு முறையான படையை உருவாக்குவதற்கு நமக்குப் பணம் தேவை. ஒரு வலிமையான கோட்டையுடன்கூடிய ஒரு நகரம் நமக்கு வேண்டும். கிருஷ்ணன் இங்கு விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்கிறான். துவாரகையை அவன் தன் சகோதரன் பலராமனிடம் விட்டுவிட்டு வந்திருக்கிறான். பலராமன் ஓர் அமைதி விரும்பி. நாம் அவர்களுடைய நகரை முற்றுகையிட்டு, யாதவர்களை வெளியே தூக்கியெறிய வேண்டும். துவாரகை வீழ்ந்துவிட்டால், தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பையும் அஸ்தினாபுரத்தையும் நம்மால் கட்டுப்படுத்த முடியும். பெரிய, முக்கியமான ராஜ்யங்களுக்கு இடையேயான நிலம் மற்றும் கடல்வழி வாணிக வழித்தடங்களை நம்மால் இறுக்கிவிட முடியும். துவாரகை இங்கிருந்து வெகுதூரத்தில் உள்ளது. ஆனால், ஏகலைவா, காடுகள் மற்றும் பாலைவனத்தின் ஊடான வழி உனக்கு நன்றாகத் தெரியும். நாம் விரைந்து சென்று கிருஷ்ணனின் நகரை முற்றுகையிடலாம். நான் எப்படியாவது தட்சகனைச் சந்திக்கிறேன். தன் நகரைக் காப்பாற்றுவதற்குக் கிருஷ்ணன் உன்னைப் பின்தொடர்ந்தால், மறைந்திருந்து அவனைத் தாக்குவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம். நீ துவாரகைக்குப் போ . . . இப்போதே புறப்படு!" என்று கூறிய வாசுகி, தன் கைத்தடியை அசைத்தபடி நின்றான்.

ஏகலைவனும் சால்வனும் ஒருவரையொருவர் வியப்போடு பார்த்தனர். அந்த முதியவனின் உத்தி ஆபத்தானதாக இருந்தாலும், அறிவார்ந்ததாக இருந்தது. பலராமன் ஓர் அமைதி விரும்பியாக இருந்ததால், அவன் சண்டையிட மாட்டான். கிருஷ்ணனின் நகரத்தை அவனிடமிருந்து அவர்களால் சுலபமாகக் கைப்பற்றிவிட முடியும். தந்தவக்கிரன் தன் சங்கை எடுத்து முழங்கினான். ஒட்டுமொத்தப் படையும் தென்மேற்குத் திசையை நோக்கித் திரும்பி, புயல் வேகத்தில்

பாய்ந்தது. வாசுகி ஒரு திருப்தியான புன்னகையுடன் அதைப் பார்த்தபடி நின்றான். துவாரகையை அவர்கள் வெற்றிகரமாகக் கைப்பற்றிவிட்டால், நாகர்களின் தலைமைத்துவமும் புரட்சியும் அந்த ஆணவக்காரன் தட்சகனிடமிருந்து மீண்டும் தன் வசம் வந்துவிடும் என்று அவன் நினைத்தான். ஆனால் கிருஷ்ணனை மறைந்திருந்து தாக்குவதற்கு உடனடியாக அவன் தட்சகனைக் கண்டுபிடித்தாக வேண்டியிருந்தது. எனவே தட்சகனைத் தேடி அவன் தன்னால் இயன்ற அளவுக்கு வேகமாகக் காட்டை நோக்கி நடந்தான்.

* * *

துரியோதனனும் அவனுடைய படையினரும் யமுனைக்கு மேலாக இருந்த மலைமுகட்டை நெருங்கிக் கொண்டிருந்தபோது, தென்மேற்குத் தொடுவானில் எழுந்த ஒரு புழுதி மண்டலத்தை அசுவத்தாமன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினான். பாலைவனத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த ஒரு குதிரைப்படையை அவர்கள் கண்டனர்.

"யார் அது?" என்று துரியோதனன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

திடீரென்று, அவர்களுக்குப் பின்னாலிருந்து அதிகமான குதிரைப்படையினர் தோன்றி, ஒரு வெறித்தனமான வேகத்தில் அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். கிருஷ்ணன் அப்படைக்குத் தலைமை வகித்தான். அவனுடைய முகத்தில் கவலையும் கடுமையும் குடிகொண்டிருந்தன. துச்சாதனன் லேசாகப் பக்கவாட்டில் சாய்ந்து, தன்னருகே சென்று கொண்டிருந்த ஒரு குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அதன்மீது இருந்த வீரனைக் கீழே தள்ளினான். பயத்தில் அக்குதிரை கனைக்கத் துவங்கியது. மற்ற வீரர்கள் தங்கள் வேகத்தைக் குறைக்காமல், போராடிக் கொண்டிருந்த அக்குதிரையின்மீது தாவிச் சென்றனர். கீழே விழுந்து கிடந்த வீரனை மற்றக் குதிரைகளின் பாதையிலிருந்து துச்சாதனன் பிடித்து இழுத்தான். அப்படையின் கடைசிக் குதிரை அவர்கள் பார்வையைவிட்டு மறைந்தபோது, தாங்கள் கைப்பற்றியிருந்த வீரனிடம், குழப்பத்திற்கான காரணத்தை அவர்கள் கேட்டனர். சிசுபாலனின் கொலையைப் பற்றியும், தந்தவக்கிரனும் ஒரு வேடுவனும் தங்கள் நண்பனின் மரணத்திற்குப் பழி வாங்குவதற்காக துவாரகையைத் தாக்குவதற்கு ஒரு படையுடன் சென்று கொண்டிருந்தது பற்றிய செய்தியையும் அவன் அவர்களிடம் கூறினான்.

ராஜசூய யாகத்திற்குத் தன் மருமகன் துரியோதனனுடன் வந்திருந்த சகுனி, கிருஷ்ணன் இந்திரப்பிரஸ்தத்தைவிட்டுச் சென்று கொண்டிருந்த செய்தியைக் கேட்டு, தன் வேட்டி மடிப்புகளில் தான் மறைத்து

வைத்திருந்த பகடைகளை ஆர்வத்தோடு தடவிக் கொடுத்தான். விளையாட்டு மேன்மேலும் சூடு பிடித்துக் கொண்டிருந்தது. இதுதான் பரதகண்டத்தின் முடிவின் துவக்கம் என்று சகுனி தனக்குள் கூறிக் கொண்டான். அவனால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. காந்தார இளவரசனின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி, வந்த வேகத்தில் காணாமல் போனது. அடுத்தக் காயை நகர்த்துவது குறித்த ஒரு திட்டம் அந்தப் பகடைக்காரனின் மனத்தில் உருவாகியிருந்தது.

26

வீழ்ச்சி

அவர்கள் இந்திரப்பிரஸ்தத்தை நெருங்கியபோது, "என்னவொரு பிரம்மாண்டம்!" என்று துரியோதனன் வியந்தான்.

அசுவத்தாமனும் கர்ணனும் அந்த அரண்மனையின் தங்கத் தூபிகளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். மதிய வெயிலில் அவை தகதகத்துக் கொண்டிருந்தன. "இப்படிப்பட்ட ஓர் அதிசயத்தை உருவாக்குவதற்கு அவர்கள் எவ்வளவு பணத்தைச் செலவிட்டார்களோ!" என்று கூறிய அசுவத்தாமன், அந்நகரின் அழகான தோட்டங்களை ரசித்து மென்மையாக விசிலடித்தான். ஒவ்வொரு புதிய அதிசயத்தைக் கண்டு வியந்தவாறும், ஒவ்வொரு சந்திப்பிலும் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களையும் நீரூற்றுக்களையும் சுட்டிக்காட்டிக் கொண்டும், அவற்றின் அழகை ரசித்தவாறும், இந்திரப்பிரஸ்தத்தின் அகன்ற நிழற்சாலைகள் வழியாக அவர்கள் மெதுவாகச் சென்றனர். அரண்மனையை அவர்கள் உற்சாகமாக நெருங்கிக் கொண்டிருந்தனர்.

"நம் நாட்டை ஆட்கொண்டுள்ள மிகப் பெரிய பிரச்சனையை தர்மன் எவ்வாறு வெற்றிகரமாகத் தீர்த்தான் என்று நான் வியக்கிறேன். தெருக்களில் ஏழைகளே இல்லை என்பதை நீங்கள் யாராவது கவனித்தீர்களா? அரண்மனை ஆடம்பரமாகவும் செழிப்பாகவும் தோன்றுகிறது," என்று கூறிய துரியோதனன், தனக்குள் எழுந்த பொறாமையைக் கட்டுப்படுத்தக் கடினமாக முயற்சித்தான்.

கர்ணன் தன் குதிரையைப் பட்டத்து இளவரசனின் குதிரையின் வேகத்திற்குச் செலுத்தி, “துரியோதனா, நகர வீதிகளில் ஒருசில மக்கள் மட்டுமே இருப்பதும், அவர்கள் அனைவருமே முக்கியமானவர்கள்போலத் தெரிவதும் வினோதமாக இருக்கிறது, இல்லையா? இந்நகரில் ஏன் சாதாரணமான மக்கள் யாருமே இல்லை? இந்த அளவு மிகப் பெரிய நகரத்தில் மக்கள் நடமாட்டம் பெருமளவில் இருக்க வேண்டும். அதுவும் ராஜசூய யாகம் நடந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் இந்நகரம் இவ்வளவு அமைதியாக இருப்பது வியப்பாக இருக்கிறது,” என்று கூறினான்.

“நகர வீதிகளில் ஒருபோதும் ஒரு சண்டையோ அல்லது கலவரமோ நடந்துள்ளதற்கான சுவடே இல்லை. எல்லாமே ஒழுங்குமுறையுடன் இருக்கிறது. ஒருவேளை குடிமக்கள் அனைவரும் ராஜசூய யாகம் நடைபெறும் இடத்தில் கூடியிருக்கிறார்களோ என்னவோ,” என்று துரியோதனன் அமைதியாகக் கூறினான். ஆனால் இந்நகரில் நிலவிய அசாதாரணமான அமைதியைக் கண்டு அவனும் கவலைப்படத் துவங்கியிருந்தான். நகரை வலம் வந்து கொண்டிருந்த காவலர்களுடைய ரதங்களின் மணியோசை அவர்களுக்குக் கேட்டது. ஆனால் அந்த மணியோசை அங்கு நிலவிய அசௌகரியமான மௌனத்தைப் பல மடங்கு அதிகரிக்க மட்டுமே செய்தது.

“அங்கே பாருங்கள்!” என்று கத்தியபடி கர்ணன் தன் குதிரையின்மீது இருந்து கீழே இறங்கி, நடைபாதையை நோக்கி ஓடினான். மூடியிருந்த ஒரு கடையின் வாசலில் கிடந்த ஒரு பெரிய துணி மூட்டையை நோக்கி அவன் குனிந்ததை துரியோதனன் பார்த்தான். அப்போது திடீரென்று ஒரு நாய் குரைத்தது. அது கர்ணனின்மீது பாய்ந்து அவனைக் கடித்தது.

அப்போது அந்தத் துணி மூட்டை லேசாக அசைந்தது. “அந்த மூட்டைக்குள் யாரோ ஒருவன் உயிரோடு இருக்கிறான்!” என்று கத்தியபடி துரியோதனன் தன் குதிரையைவிட்டுக் கீழே இறங்கி, கர்ணனை நோக்கி ஓடினான்.

அசுவத்தாமன் தன் நண்பர்களைப் பின்தொடர்ந்தான். அந்த நாய் அவர்கள் யாரையும் அந்த நபரின் அருகே நெருங்கவிடாமல் பார்த்துக் கொண்டது. கிழிந்த போர்வைக்குள் இருந்த அந்த மனிதன் தண்ணீருக்காக முனகினான். கர்ணன் ஓரடி முன்னால் எடுத்து வைத்தான், ஆனால் அந்த நாய் மீண்டும் அவன்மீது பாய்ந்தது. அவன் விரைவாக ஒதுங்கிக் கொண்டதில் அது தரையின்மீது விழுந்து வலியில் ஊளையிட்டது.

கர்ணன் அந்தக் கந்தலான போர்வையை எச்சரிக்கையோடு

விலக்கினான். துரியோதனன் பயத்தில் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். படுத்துக் கிடந்தவனின் விகாரமான முகத்தின்மீது பழுப்பு நிறத்தில் ஆழமான காயங்கள் இருந்தன. அவனைப் போர்த்தியிருந்த போர்வை ரத்தத்தில் குளித்திருந்தது. தண்ணீர் கொண்டு வருமாறு கர்ணன் கத்தினான். உடனடியாக ஒரு வீரன் ஒரு தண்ணீர் ஜாடியுடன் வந்தான். அவன் அந்தப் பிச்சைக்காரனின் வாய்க்குள் தண்ணீரை ஊற்றியபோது, அவன் அதை வேகவேகமாகக் குடித்தான். பிறகு, வலியால் நடுங்கியபடியே அவன் எழுந்து நிற்க முயன்றான், ஆனால் நிலை குலைந்து மீண்டும் கீழே விழுந்தான்.

துரியோதனன் அவனுக்குக் கை கொடுத்து அவனைத் தூக்கிவிட்டு, "உனக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டான்.

"என் பகவானின் வசிப்பிடத்தை அவசரமாகச் சென்றடைய வேண்டியிருந்த யாரோ ஒருவன் என்னைத் தன் வழியிலிருந்து விலக்கித் தள்ளினான். பிறகு நான் என் பகவானின் வழித்தடமாக மாறினேன். அவர் என்னை மிதித்துச் சென்றார்," என்று ஏதோ புதிராகக் கூறினான்.

"அவன் என்ன பிதற்றிக் கொண்டிருக்கிறான்?" என்று அசுவத்தாமன் கேட்டான்.

"முதலில் ஏகலைவன் இவனைக் கீழே தள்ளிவிட்டுச் சென்றிருக்கிறான், பிறகு ஏகலைவனைத் துரத்திச் சென்ற கிருஷ்ணனின் படையினர் இவன்மீது தங்கள் குதிரைகளை ஏற்றிச் சென்றிருக்கிறார்கள் என்பதுபோலத் தெரிகிறது," என்று துரியோதனன் விளக்கினான்.

"துரியோதனா, உன் கேள்விக்கான ஒரு விடை இப்போது உன் கண் முன்னால் இருக்கிறது. இந்திரப்பிரஸ்தத்தில் உள்ள ஓர் ஏழை மனிதன் இவன்," என்று கூறிய கர்ணன், 'ஜரா, நீ ஏன் எப்போதும் என் வழியில் வந்து என் இதயத்தை நொறுக்குகிறாய்?' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

"எனக்கு இவனைத் தெரியும் . . ."

துரியோதனன் தன் வாக்கியத்தை முடிப்பதற்கு முன்பே, ஜரன் அவனிடம், "இந்நகரின் ஏழைகளை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? ஏழைகள்தான் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில், அவர்கள்தான் என் பகவானின் உண்மையான பக்தர்கள். ஒருவன் என் கடவுள்மீது உண்மையிலேயே அன்பு செலுத்தும்போது, பதிலுக்கு அவர் அவன்மீது பன்மடங்கில் அன்பு செலுத்துகிறார். அவர் செய்யும் முதல் வேலை, அவனிடமிருந்து செல்வம் முழுவதையும் பறித்துவிடுகிறார். அவர் தன் பக்தர்களுக்கு வருத்தத்தையும் துயரத்தையும் கொடுக்கிறார். ஏனெனில், துயரத்தில்தான் கடவுளுடைய பெருமையை மனிதனால் நினைத்துப்

பார்க்க முடியும் என்பது அவருக்குத் தெரியும். நம்மிடம் செல்வமும் மகிழ்ச்சியும் இருந்தால், அவரைப் பற்றி நாம் நினைக்க மாட்டோம். மாறாக, இந்த உலக சுகங்களில் நாம் மூழ்கிக் கிடப்போம். நாம் இந்த மாயையான உலகை வெறுத்துவிட்டு, முக்தி பெறுவதை நோக்கிக் கடினமாக முயற்சிக்க வேண்டும் என்பதற்காக அவர் நமக்குத் துன்பங்களைக் கொடுக்கிறார். அவர் கருணை மிக்கவர். என் கிருஷ்ணனின் மக்களை நீங்கள் பார்க்க விரும்பினால் என்னுடன் வாருங்கள். சொர்க்கம் என்றால் என்னவென்று அப்போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்," என்று கூறினான்.

"இவனுடைய கடவுள் யாராக இருந்தாலும் சரி, அவன் ஒரு பாதுகாப்பு உணர்வற்றவன் என்பதுபோலத் தெரிகிறது. எல்லோரும் தன்னைப் புகழ்ந்து பாட வேண்டும் என்ற வெறி பிடித்தவன் அவன் என்று எனக்குத் தோன்றுகிறது," என்று அசுவத்தாமன் பரிகசித்தான். ஜரனையும் துரியோதனனையும் தவிர மற்ற எல்லோரும் சிரித்தனர்.

"கிருஷ்ணா, கிருஷ்ணா . . ." என்று தன் கடவுளின் பெயரை ஆனந்தத்தில் கத்திக் கொண்டே ஜரன் அந்த ஆற்றை நோக்கி ஓடினான்.

தர்மன் அசுவத்தாமனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, தன் எஜமானனைப் பின்தொடர்ந்து ஓடியது. அவர்கள் அனைவரும் அந்த ஆற்றங்கரையை அடைந்தபோது, தங்களை மறுகரைக்குக் கூட்டிச் செல்லுமாறு ஜரன் அந்தப் படகோட்டியிடம் கெஞ்சிக் கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தனர். அந்தப் படகோட்டி எரிச்சலடைந்ததுபோலத் தெரிந்தது, ஆனால் அவன் துரியோதனனையும் அவனுடைய தோழர்களையும் பார்த்தபோது, அவனுடைய மனப்போக்கு உடனடியாக மாறியது. அவன் ஓர் அடிமையின் ஆர்வத்தோடு தன் படகை விடுவிக்க ஓடினான்.

அவர்கள் தங்கள் படையினரை ஆற்றங்கரையிலேயே விட்டுவிட்டு, அந்தப் பிச்சைக்காரனுடனும் அவனுடைய நாயுடனும் யமுனையின் மறுகரைக்குப் பயணித்தனர். ஏழைகளும் தீண்டத்தகாதவர்களும் வாழ்ந்த பகுதியை நோக்கி அந்தப் படகு பயணித்தபோது, மெல்ல மெல்ல அந்தி சாய்ந்தது. அவசர அவசரமாகத் தம் கூட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பறவைகள் தூரத்துத் தொடுவானில் புள்ளிகளாகத் தெரிந்தன. அன்றைய நாள் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது குறித்துக் காகங்கள் புலம்பின. ஜரன் தன் கடவுளின் பெருமையைப் பாடத் தொடங்கினான். துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் யமுனையின் அழகால் கவரப்பட்டு மெய்மறந்தனர். அந்தப் பிச்சைக்காரனின் வளமான குரல், படகின் துடுப்பு ஆற்றுநீரைத் தொட்டச் சத்தம், தங்கள் படகைத் தழுவிச் சென்ற ஆற்றுநீர்

ஆகியவற்றைத் தவிர அவர்கள் மற்ற எல்லாவற்றையும் மறந்தனர். படகு மறுகரையை நெருங்கியபோது, கிழக்கு வானில் தோன்றியிருந்த வெள்ளிப் பிறைநிலா ஒன்று நீரில் தன் பிரதிபலிப்பைக் கண்டது. கண நேரத்தில் அது லட்சக்கணக்கான சிற்றலைகளாக உடைந்தது.

அவர்கள் அந்தக் கரையின்மீது கால் வைத்தபோது, ஒரு கருப்பு மனிதன் அவர்கள் முன்னால் வந்து குதித்தான். அவன் திடீரென்று அவ்வாறு தோன்றியதைக் கண்டு திகைத்த துரியோதனன், தன் வாளை உருவ முனைந்தான். ஆனால் அந்த மனிதன் துரியோதனனின் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு சம்பந்தமில்லாமல் உளறத் துவங்கினான். "நீங்கள் ஓர் இளவரசனா? ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும். உங்களைப் பார்த்தால் ஒரு பணக்காரனைப்போலத் தோன்றுகிறது. ஆனால் ஓர் இளவரசன் ஏன் எங்களைப் பார்க்க வர வேண்டும்? நாங்கள் தீண்டத்தகாதவர்கள். யாரும் இங்கு வருவதில்லை. குறிப்பாக, உங்களைப் போன்றவர்கள் யாரும் இங்கு ஒருபோதும் வருவதில்லை. நீங்கள் மாசுபட்டுவிடுவீர்கள். உங்களுடைய உயர்ந்த சாதியிலிருந்து நீங்கள் ஒதுக்கி வைக்கப்படுவீர்கள். நீங்கள் என்னைத் தேடி வந்திருக்கிறீர்களா? உங்கள் ராஜ்யத்தில் ஒரு நகரத்தை உருவாக்க உங்களுக்கு ஒரு கட்டடக் கலைஞன் வேண்டுமா? என்னால் உங்களுக்கு ஒரு நகரத்தைக் கட்டித் தர முடியும். என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். சபிக்கப்பட்ட இந்த நகரம் வெறுமனே ஒரு குழந்தையின் மணல்மாளிகைபோலத் தோன்றும் அளவுக்கு ஒரு பிரம்மாண்டமான நகரை நான் உருவாக்கித் தருகிறேன். நான் அவர்களுக்காக அந்நகரை நிர்மாணித்துக் கொடுத்தேன், ஆனால் அவர்கள் என்னை அங்கிருந்து வெளியேற்றிவிட்டனர். நான் உங்களுக்கு ஒரு நகரத்தைக் கட்டிக் கொடுத்தால், எனக்கும் என் மக்களுக்கும் ஒரு மூலையில் சிறிதளவு இடத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். நாங்கள் உங்களை மாசுபடுத்த மாட்டோம் என்று நான் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன். சிறிது இடம் . . . நாங்கள் கேட்பதெல்லாம் அதுதான் . . . சிறிது மரியாதை . . . சிறிதளவு பரிவு. நாங்களும் மனிதர்கள்தான். நாங்கள் கருப்புத் தோலுடன் பிறந்தது எங்கள் குற்றமல்ல. ஒரு மாபெரும் நகரத்தை நான் உங்களுக்குக் கட்டித் தருகிறேன் என்று நான் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன். நீங்கள் இந்திரப்பிரஸ்தத்தைப் பார்த்திருக்கிறீர்களா? நான்தான் அதை உருவாக்கினேன் . . . நாங்கள் அனைவருமாகச் சேர்ந்து அதைக் கட்டினோம் . . . வெயிலில் . . . மழையில் . . . தகதகவென்று ஜொலிக்கும் அந்தத் தங்க நகரத்தை இந்தக் கிராமத்தில் உள்ள பெண்களும் குழந்தைகளும்தான் கட்டினர் . . . அந்தக் கோவிலில் உள்ள கடவுளை நான்தான் செதுக்கினேன் . . . ஆனால் அவருக்குப்

பார்வை இல்லை . . . என் வேலையை முழுமையாக நிறைவேற்ற அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை. நான் இதைவிடப் பெரிய கோவில் ஒன்றை உங்களுக்குக் கட்டிக் கொடுத்தால், கடவுள்களுக்குக் கண்களைக் கொடுக்க என்னை நீங்கள் அனுமதிப்பீர்களா?"

துரியோதனன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக அசுவத்தாமனின் கைகளைப் பிடித்தான். கர்ணன் தன் பற்களை நறநறவென்று கடித்தான். உளறிக் கொண்டிருந்த அந்தக் கிறுக்கன் யார் என்பது அவர்களுக்குப் புரிந்தது. அசுர சாம்ராஜ்யத்தின் புகழ்பெற்றக் கட்டடக் கலைஞனான மயாசுரன் அவன். மயாசுரனைப் போன்றவர்களைப் பாண்டவர்கள் யமுனைக்கு அப்பாலிருந்த இந்த இரக்கமற்ற உலகிற்கு நாடு கடத்தியிருந்தனர். சிறுநீர் மற்றும் மனிதக் கழிவின் நாற்றம் அவர்களுடைய குடலைப் புரட்டியது. அவர்களுடைய கண்கள் அந்த மங்கலான வெளிச்சத்திற்குப் பழக்கப்பட்டபோது, எண்ணற்றக் குடிசைகளை அவர்களால் பார்க்க முடிந்தது. சிறிய எண்ணெய் விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னிக் கொண்டிருந்தன. குடி போதையில் நடந்து கொண்டிருந்த சண்டைகளும் கத்தல்களும் அவர்களுக்குக் கேட்டன. இவ்வுலக வாழ்வை வெறுத்து, முக்திக்காகப் பிரார்த்திப்பதற்குப் போதுமான துயரம் இங்கு எல்லோருக்கும் இருந்தது. பகவானின் கருணை திக்குமுக்காட வைப்பதாக இருந்தது!

"மயாசுரா, நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே ஒரு முதியவன் அங்கு வந்து, அந்தக் கட்டடக் கலைஞனின் கையைப் பிடித்தான். ஆனால் அவன் கர்ணனைப் பார்த்தபோது அப்படியே மௌனமானான். அவனுடைய கண்கள் கர்ணனின் கவசத்தை அளந்தன. அந்த வீரனின் கரிய கண்கள் தன்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததை அந்த முதியவன் கண்டபோது, "இவனுக்கு உடல்நிலை சரியில்லை. இவன் வேலை செய்யாதபோது, சில சமயங்களில், தன்னிலை மறந்து இதுபோல எதையாவது உளறுவான். இவன் ஒரு பைத்தியக்காரன் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் உண்மையில் இவன் ஒரு மேதை," என்று கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

மயாசுரன் கர்ணனின் கவசத்தைக் கவனித்தபோது, அந்த முதியவனைப் பார்த்து, "நம்முடைய கவசம் இவருடைய கவசம் அளவுக்கு வலிமையானதா? அப்படியென்றால் நாம் நம் வடிவமைப்பை மாற்ற வேண்டியிருக்கும்," என்று கூறினான்.

அந்த முதியவனின் முகம் பயத்தால் வெளிறியது. மயாசுரன் ஏதேனும் கூறித் தங்கள் இருவருடைய உயிருக்கும் ஆபத்தை

உண்டாக்குவதற்கு முன், அந்த முதியவன் அவனை அங்கிருந்து இழுத்துச் செல்ல முயன்றான். இந்தக் காட்சியைக் காண அங்கு கூடியவர்களில் ஒருசிலர் மயாசுரனின் மனநலம் பற்றிக் கேள்வி எழுப்பத் துவங்கினர்.

மயாசுரனும் அந்த முதியவனும் இருட்டிற்குள் மறைந்து போனபோது, அசுவத்தாமன் உரத்தக் குரலில், "மயாசுரா, இவனுடைய கவசத்தைப் பற்றி நீ ஏன் கேட்டாய்?" என்று கத்தினான்.

அந்தக் கட்டடக் கலைஞன் சற்று நிதானித்து, "கர்ணனின் கவசத்தைத் துளைக்கக்கூடிய ஓர் ஆயுதத்தை நாங்கள் வடிவமைத்துக் கொண்டிருக்கிறோம். கர்ணனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவன் அர்ச்சுனனின் மாபெரும் எதிரி. நாங்கள் தயாரிக்கும் ஆயுதத்தை நாங்கள் அர்ச்சுனனிடம் கொடுக்கப் போகிறோம். அவன் அதைக் கொண்டு கர்ணனைக் கொல்வான். அது இளவரசர் தர்மனை மகிழ்விக்கும். அப்போது அந்தக் கோவிலில் உள்ள கடவுளின் கண்களைத் திறப்பதற்கு அவர் எனக்கு அனுமதி கொடுப்பார்," என்று திருப்பிக் கத்தினான். கர்ணனோ அல்லது துரியோதனனோ தன்னைத் துரத்தி வரக்கூடும் என்ற பயத்தில் இந்திரன் மயாசுரனை அங்கிருந்து வேகமாக இழுத்துச் சென்றான்.

இருட்டிற்குள் மறைந்து கொண்டிருந்த அவ்விருவரையும் பார்த்தபடி, "அந்த முதியவனை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன்," என்று கர்ணன் கூறினான்.

"அவன் இந்திரன். தேவ வம்சாவழியினரின் கடைசி அரசன். அவனை நீ எங்கோ பார்த்திருப்பதுபோல உனக்குத் தோன்றுவதற்குக் காரணம், அவன்தான் அர்ச்சுனனின் உண்மையான தந்தை," என்று துரியோதனன் தன் நண்பனிடம் கூறினான்.

"அவன் ஏன் என்னைத் துரத்திக் கொண்டிருக்கிறான் என்று இப்போது எனக்குப் புரிகிறது," என்று கர்ணன் ஒரு கோணல் புன்னகையுடன் கூறினான்.

மற்றவர்கள் இது குறித்து விவாதிப்பதற்கு முன்பு, அந்தச் சேரியைச் சுற்றிப் பார்த்து, அங்குள்ள மக்களைச் சந்திக்க வருமாறு ஜரன் அவர்களை அழைத்தான். அவர்கள் அந்த நரகக்குழிக்குள் எவ்வளவு அதிக ஆழமாகச் சென்றனரோ, அது அவர்களுக்கு அவ்வளவு அதிக மனச்சோர்வை ஏற்படுத்தியது. அவர்களுடன் அமைதியாக வந்து கொண்டிருந்த சகுனியின் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. இந்த மூட பரதகண்டவாசிகளும் அவர்களுடைய கடவுள்களும் துறவிகளும் புரோகிதர்களும் அவனுடைய வேலையை நாளுக்கு நாள் சுலபமானதாக ஆக்கிக் கொண்டிருந்தனர். தட்சகன் தன்னுடைய

புரட்சிப் படைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தர்மன் ஒரு மிகப் பெரிய வாய்ப்பை உருவாக்கியிருந்தான். 'இதை நான் துர்ஜயனின் கவனத்திற்குக் கொண்டு வந்தாக வேண்டும்,' என்று சகுனி நினைத்துக் கொண்டான். ஈவு இரக்கமற்ற இப்படிப்பட்ட ஒரு சாதி அமைப்புமுறையோடும், பயனற்றச் சடங்குகளோடும், நேர்மையற்ற ஆட்சியாளர்களோடும், பொறுப்பற்றக் குடிமக்களோடும், கற்பனையான மகிழ்ச்சிக்காக உண்மையான உலகை மறுத்த ஒரு மதத்தோடும் பரதகண்டத்தால் எவ்வளவு காலம் தன் எதிரிகளைத் தாக்குப்பிடிக்க முடியும் என்று அவன் வியந்தான். 'ஆயிரக்கணக்கான இடங்களில் வெட்டுப்பட்டு நீ ரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய வீழ்ச்சிக்கான நேரம் நெருங்கிவிட்டது,' என்று அந்த அன்னியன் கெடுநோக்குடன் நினைத்தான். எல்லாவற்றையும் ஆட்கொள்கின்ற, எல்லாவற்றையும் சீரழிக்கின்ற, அனைத்து சாம்ராஜ்யங்களும் ஒன்றோடொன்று சண்டையிட்டு ஒன்றையொன்று அழித்துக் கொள்கின்ற ஒரு கடுமையான போர் வரவிருந்ததை சகுனி அறிந்திருந்தான். ரத்த வாடையை அவனால் உணர முடிந்தது. காற்றில் மரணத்தை அவனால் உணர முடிந்தது. முடிவு நெருங்கிக் கொண்டிருந்தது. போர் முரசுகளின் சத்தம் காதைச் செவிடாக்குவதாக இருந்தது.

"என்னால் இதை இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது. தர்மன் எப்படிப்பட்ட உலகத்தை உருவாக்கி வைத்திருக்கிறான்? இது ஒரு சபிக்கப்பட்ட நகரம். பாண்டவர்கள் ஆயிரக்கணக்கான மக்களையும் விலங்குகளையும் படுகொலை செய்து, அதன்மீது இந்நகரத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். காண்டவக் காட்டை அழித்து, அதிலிருந்த அனைத்தையும் அவர்கள் கொன்றுவிட்டனர். ஒருசில புரோகிதர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக, பெரும்பான்மையான மக்களை அவர்கள் புழுக்களைப்போல நடத்துகின்றனர். நாம் தர்மனின் அருமையான அரண்மனைக்குச் சென்று, தர்மத்தின் உறைவிடமான அவனிடம் ஒருசில பொருத்தமான கேள்விகளைக் கேட்டுவிட்டு வரலாம்," என்று துரியோதனன் கூறினான். தான் பார்த்திருந்தவற்றால் அவனுடைய மனமும் இதயமும் வெறுப்படைந்திருந்தன.

துரியோதனன் ஆற்றங்கரைக்கு விரைந்து சென்று, மீண்டும் தங்களை இந்திரப்பிரஸ்தத்திற்குக் கூட்டிச் செல்லுமாறு அந்தப் படகோட்டிக்குக் கட்டளையிட்டான். அவனுடைய நண்பர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். ஜரனும் அவர்களோடு நதிக் கரைக்கு வந்தான். யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பெரும்பான்மை நேரம் துரியோதனன் நிதானமாக இருந்தாலும்கூட, அவனுடைய

கோபம் ஒருமுறை தூண்டப்பட்டுவிட்டால், அதன் விளைவுகள் மிகக் கடுமையாக இருந்தன. அவன் ஓர் எச்சரிக்கையான குரலில், "முதலில் அவர்கள் வாரனவதத்தில் ஒரு வேடுவப் பெண்ணையும் அவளுடைய ஐந்து மகன்களையும் கொன்றனர். பிறகு கிருஷ்ணனும் அர்ச்சுனனும் காண்டவத்தில் எண்ணற்றோரைக் கொன்று குவித்தனர். பிறகு அரசன் ஜராசந்தனையும் அவனுடைய வேடுவத் தளபதியையும் கிருஷ்ணன் சூழ்ச்சிகரமாகக் கொன்றான். சிசுபாலன் படுகொலை செய்யப்பட்டான். பாண்டவர்களின் லட்சியத்திற்காக இன்னும் எத்தனைப் பேர் மடிய வேண்டும்? தர்மம் என்ற பெயரில் அவர்கள் இன்னும் எத்தனை உயிர்களைப் பலி வாங்குவார்கள்? கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு மற்றும் பல குற்றங்களுக்கு ஒருசில புரோகிதர்கள் விளக்கமளிக்கின்றனர் அல்லது அவற்றை நியாயப்படுத்துகின்றனர். இந்தப் போலித்தனம் என் ரத்தத்தைக் கொதிக்கச் செய்கிறது. மயாசுரனை அவர்கள் நடத்தியுள்ள விதத்தைப் பாருங்கள். இதுவே வேறொரு சாம்ராஜ்யமாக இருந்திருந்தால், மூலைக்கு மூலை அவனுக்குச் சிலை வைத்து மரியாதை செய்திருப்பார்கள். அரசர்கள் அவனுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ளத் தங்களுக்குள் போட்டிப் போடுவார்கள். ஆனால் இங்கு, அவன் ஒரு தீண்டத்தகாதவனாகப் பிறந்துவிட்டான் என்ற ஒரே காரணத்திற்காக, இந்த நாற்றம் பிடித்த உலகிற்கு அவன் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறான். ஏகப்பட்ட மக்கள் மிகக் கொடூரமான ஏழ்மையில் பன்றிகளைப்போல வாழ்ந்து கொண்டிருக்கும்போது, செல்வச் செழிப்பான ஒரு நகரத்தை உருவாக்குவதில் அந்தப் பாண்டவர்கள் பெருமிதத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட நடவடிக்கைகள்தான் தட்சகன், துர்ஜயன் ஆகியோர் உருவாவதற்கு வழி வகுத்துள்ளன. கண்மூடித்தனமான விசுவாசமும் கள்ளங்கபடமற்ற மனத்தையும் கொண்ட அந்தப் பிச்சைக்கார ஜரனைப் போன்ற மக்களுக்காக நான் பயப்படுகிறேன். தர்மனைப் போன்றவர்களின் லட்சிய வெறிக்கு அவர்கள் இரையாகின்றனர்," என்று கூறினான்.

துரியோதனனின் நண்பர்கள் அவன் கூறியதைப் பொறுமையாகக் கேட்டனர். அவன் அவர்களுடைய எண்ணத்தை எதிரொலித்துக் கொண்டிருந்தான். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த சகுனி, தன் வலது கையால் தன் பகடைகளை ஒன்றோடொன்று உரசிக் கொண்டு, தன் இடது கையால் தன் நரைத்தத் தாடியைத் தடவிக் கொண்டிருந்தான். பொன்னிற ஒளியில் குளித்திருந்த அந்த அரண்மனையும், யமுனையின் மறுபுறம் நிலவிய இருளோடு அது முரண்பட்டு நின்றதும் துரியோதனனின் கோபத்தை அதிகரித்தன. ஜரனின் இசை யமுனையின்

மறுகரையிலிருந்து காற்றில் மிதந்து வந்தது. ஜரனைப் பொறுத்தவரை, தன் பாடல்தான் அவனுடைய பிரார்த்தனை. ஆனால் துரியோதனனையும் அவனுடைய நண்பர்களையும் பொறுத்தவரை, இந்தக் கொந்தளிப்பான உலகில் உயிரோடு இருப்பதற்கான கடைசிச் சொட்டு நம்பிக்கையை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்த, நொடிந்து போன மக்களின் புலம்பலைப்போல அப்பாடல் ஒலித்தது.

* * *

துரியோதனனும் அவனுடைய நண்பர்களும் அந்த அரண்மனைக்குள் புயலென நுழைந்தபோது, இந்திரப்பிரஸ்தத்தின் அரசன், இசை மற்றும் நடனத்துடன்கூடிய ஒரு மாலைப் பொழுதை அனுபவித்துக் கொண்டிருந்தான். அரசவை மங்கையர், மேட்டுக்குடியினர், புரோகிதர்கள், தர்மனின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட அரசர்கள் மற்றும் இளவரசர்கள் ஆகியோரால் அந்த அரசவை நிரம்பி வழிந்தது. சிசுபாலனின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்டக் கைகலப்பில் பல வீரர்களும் இளவரசர்களும் இறந்து போயிருந்தனர். ஆனால் அது அன்றைய கொண்டாட்டங்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. தர்மனின் சகோதரர்களும் திரௌபதியும் புரோகிதர்களும் தர்மனுக்கு அருகில் உட்கார்ந்திருந்தனர். துரியோதனன் அந்த அவைக்குள் வேகமாக நுழைந்தபோது, அரசவை உடனடியாக அமைதியானது, ஒவ்வொரு தலையும் அவனை நோக்கித் திரும்பியது. சுற்றிச் சூழத் தென்பட்ட ஆடம்பரத்தை வெறுப்போடு பார்த்தபடி அவன் நின்றான். அவனுக்குப் பின்னால் கர்ணனும் துச்சாதனனும் அசுவத்தாமனும் நின்றனர். அவர்களுடைய முகங்களிலும் துரியோதனனின் முகத்தில் பிரதிபலித்த அதே ஏளனம் தென்பட்டது. சகுனி ஒரு புன்னகையுடன் நின்றான். துரியோதனனின் பார்வை தர்மனின்மீது நிலைத்தது.

தர்மன் தன் இருக்கையிலிருந்து எழுந்து, “துரியோதனா, இந்திரப்பிரஸ்தத்திற்கு உன்னை வரவேற்கிறோம்,” என்று தன் ஒன்றுவிட்டச் சகோதரனை வரவேற்றான்.

“ஆக, ஆயிரக்கணக்கானோரின் சடலங்கள்மீது கட்டப்பட்ட அரண்மனை இதுதானா? சேடி அரசன் படுகொலை செய்யப்பட்ட இடம் இதுதானா? தர்மா, உன் நகரிலிருந்து பாதிப் பேரை நீ வெளியே விரட்டிவிட்டிருக்கிறாய். இந்திரப்பிரஸ்தத்தை உருவாக்கிய மக்களை நீ நடத்தியுள்ள விதம் குறித்து அவமானத்தில் நீ உன் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டும்,” என்று துரியோதனன் கோபமாகக் கூறினான்.

“துரியோதனா, போதும்!” என்று தௌமியன் இடைமறித்தான். “இந்த ‘மாதிரி நகரம்’ எப்போதும் புனித வேதங்களால் ஆளப்படும். நீ இங்கு வந்து, தர்மத்தின் மொத்த உருவமான அரசனை இகழ்வதற்கு உனக்கு என்ன துணிச்சல்? தர்மத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? தாழ்ந்த சாதிக்காரனான ஒரு தேரோட்டியோடு நட்புறவு கொண்டு, அவனை ஓர் அரசனாக ஆக்கியதற்கு நீதான் அவமானம் கொள்ள வேண்டும். பிராமண குலத்திற்கே அவப்பெயரைத் தேடிக் கொடுத்த அசுவத்தாமனை உன் நண்பனாக வைத்திருப்பதற்கு நீதான் அவமானத்தால் தலை கவிழ்ந்து நிற்க வேண்டும். நீ நம் சமுதாயத்தை அழிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் நான் உயிரோடு இருக்கும்வரை நீ ஒருபோதும் வெற்றி பெற மாட்டாய்,” என்று கூறிய தௌமியன், துரியோதனன் தன் வாளை உருவிக் கொண்டு தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் தன் பிரசங்கத்தை நிறுத்தினான். அவனுடைய சீடர்கள் அவசர அவசரமாக வழிவிட்டு ஒதுங்கினர். “ஐயோ . . . அவன் என்னைக் கொல்லப் போகிறான்! இந்த ராஜ்யத்தில் ஓர் ஏழை பிராமணனுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லையா? அர்ச்சுனா, பீமா, எனக்கு உதவுங்கள் . . .” என்று தௌமியன் கத்தினான்.

ஆனால் என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைப் பாண்டவர்கள் புரிந்து கொள்வதற்கு முன்பு, துரியோதனன் அந்தப் புரோகிதர்கள் கூட்டத்தை நெருங்கியிருந்தான். பூனையைக் கண்ட எலிகளைப்போல அவர்கள் தலைதெறிக்க ஓடத் துவங்கினர். தௌமியன் தர்மனை நோக்கி ஓடினான். துரியோதனன் தன் வழியில் நின்றவர்களை வேகமாக விலக்கித் தள்ளியபடி தௌமியனைத் துரத்திச் சென்றான். கர்ணனும் அசுவத்தாமனும் துரியோதனனைத் தடுத்து நிறுத்த முயன்றனர், ஆனால் அவனுக்குக் கோபம் வந்தபோது, அவனுடைய குறிக்கோளிலிருந்து அவனைத் திசை திருப்புவது யாருக்கும் இயலாத காரியமாக இருந்தது. ஆனாலும், விதி பல சுவாரசியமான வழிகளில் குறுக்கிடுகிறது. கண்மூடித்தனமான கோபத்துடன் இருந்த துரியோதனன், தரையில் அமைக்கப்பட்டிருந்த குளத்தைக் கவனிக்கவில்லை. ஓரடி ஆழமும் மூன்றடி அகலமும் கொண்ட அக்குளம், அவையின் ஒரு சுவரிலிருந்து மறுசுவர்வரை ஓடியது. அக்குளத்தில் பதிக்கப்பட்டிருந்த பதிகற்களைத் தவிர, அது அந்த அரசவையோடு அழகாக ஒன்றரக் கலந்திருந்ததால், சுலபமாகப் பிரித்துப் பார்க்க முடியாதபடி இருந்தது. குளத்திலிருந்த நீர் எவ்வளவு வெளிச்சத்தைப் பிரதிபலித்ததோ, பளிச்சூட்டப்பட்டத் தரையும் அவ்வளவு வெளிச்சத்தைப் பிரதிபலித்தது. உள்ளுணர்வு உந்தித் தள்ள,

தௌமியன் அந்தக் குறுகலான குளத்தை வேகமாகத் தாண்டிக் குதித்தான். ஆனால் துரியோதனன் தெரியாத்தனமாக அக்குளத்திற்குள் தன் காலை வைத்து, முகம் குப்புறக் கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் அவன் கையிலிருந்த வாள் எகிறிச் சென்று, தர்மனின் பாதங்கள் அருகே ஒரு பெரும் சத்தத்துடன் தரையின்மீது விழுந்தது.

ஒரு கணம் அங்கு மௌனம் நிலவியது. துரியோதனனுக்கு உதவுவதற்காக அவனுடைய நண்பர்கள் விரைந்தனர். ஆனால் அவர்கள் அவனை நெருங்குவதற்கு முன்பாகவே அவன் எழுந்து நின்றான். அவனுடைய வேட்டி அவனுடைய இடுப்பிலிருந்து நழுவி, அக்குளத்திற்குள் விழுந்தது. அங்கு அரங்கேறிக் கொண்டிருந்த நாடகத்தை எல்லோரும் அதிர்ச்சியுடன் பார்த்தனர். அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசன், வலியிலும் கோபத்திலும் முகஞ்சுளித்தவாறு, அந்த மாபெரும் சபையின் முன்னால் வெறும் இடுப்புக் கச்சையோடு நிர்வாணமாக நின்றான். யாரும் தங்கள் வாயைத் திறக்கத் துணியவில்லை.

துரியோதனனின் வேட்டியைத் தண்ணீரிலிருந்து எடுப்பதற்காகக் கர்ணன் கீழே குனிந்தபோது, அவையில் எழுந்த சிரிப்பு அந்த ஒட்டுமொத்த அரங்கம் நெடுகிலும் எதிரொலித்தது.

நிர்வாணமாக நின்ற துரியோதனனைச் சுட்டிக்காட்டி, “குருடன்! தந்தையைப்போலவே தனயன்,” என்று திரௌபதி ஏளனமாகக் கூறினாள். தன் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அவள் தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அங்கு எழுந்த சிரிப்புச் சத்தத்தில் அந்த ஒட்டுமொத்த அரங்கமும் அதிர்ந்தது. ஒருசில கணங்களுக்கு முன் பயத்தில் ஓடி ஒளிந்திருந்த புரோகிதர்கள் அங்கு துணிச்சலோடு திரும்பி வந்து, துரியோதனனைத் தூற்றத் துவங்கியபோது, சிரிப்புச் சத்தமும் பரிகாசப் பேச்சுகளும் தன் காதுகளை எரிக்க, கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கான அவமானத்தாலும் இகழ்ச்சியாலும் துரியோதனன் அந்த அவையின் நடுவே நிர்வாணமாக நின்றான். தன் நண்பனிடமிருந்து தன் வேட்டியை எடுத்துக் கொள்ளவோ அல்லது தன்னுடைய கணுக்கால் அளவு மட்டுமே நீர் நிரம்பியிருந்த அந்தக் குளத்திற்குள் இருந்து வெளியே வரவோ துரியோதனன் மறுத்துவிட்டான். அரசவையின் அனைத்துப் பக்கங்களில் இருந்தும் இகழ்ச்சிகளும் பரிகாசங்களும் வந்து கொண்டிருக்க, துரியோதனன் துணிச்சலோடு பிடிவாதமாக அங்கேயே நின்றான்.

“குருடனின் மகனே, இதுதான் உனக்குச் சரியான பாடம்,” என்று தௌமியன் துரியோதனனைப் பார்த்துக் கத்தினான். பிறகு அவன்

அங்கு கூடியிருந்த மேட்டுக்குடியினரையும் அடிமை அரசர்களையும் பார்த்து, "இங்கு கூடியிருக்கும் அரசர் பெருமக்களே, சத்திரியர்களே, இந்தக் காட்சியைப் பாருங்கள். இது எல்லோருக்கும் ஒரு படிப்பினை. ஒரு பிராமணனை ஏளனம் செய்ததற்காகக் கடவுளாகப் பார்த்துக் கொடுத்த தண்டனை இது. ஒரு தேரோட்டியை அரசனாக ஆக்கியதற்கான விலை இது. நம்முடைய புனித நூல்களுக்கு எதிராகப் பேசியதற்கான தண்டனை இது. ஆனால் இது துவக்கம் மட்டும்தான். இந்தத் தீயவன் தன் பாவங்களுக்காக இன்னும் ஏராளமானவற்றை அனுபவிக்கப் போகிறான். ஒரு சாதாரண அடிமையைப்போல அவன் எப்படி நிர்வாணமாக நின்று கொண்டிருக்கிறான் என்று பாருங்கள்," என்று கூறினான்.

"குருடன், குருடன் . . ." என்று அங்கிருந்த புரோகிதர்கள் அனைவரும் ஒன்றாகக் கோஷமிட்டனர். அர்ச்சுனன் மட்டும் ஒரு தீவிரமான முகத்துடன், தன் கைகளைத் தன் மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு, தலை குனிந்தபடி நின்றான். திரௌபதி தன் மகிழ்ச்சியை மறைக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தன் நண்பனுக்கு நிகழ்ந்து கொண்டிருந்த அவமானத்தால் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த கர்ணனின் கண்களை திரௌபதியின் கண்கள் சந்தித்தன. தான் ரகசியமாகக் காதலித்தவனைப் பார்த்ததும், தான் ஐந்து நபர்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருந்தது குறித்த அவமானம், வேதனைமிக்க அவளுடைய இதயத்தை நிரப்பியது. தன் சொந்த ஏக்கத்தை மறைக்க முயற்சிக்கின்ற ஒரு பெண்ணால் மட்டுமே வெளிப்படுத்த முடிகின்ற ஒரு கொடூரத்துடன், திரௌபதி கர்ணனைப் பார்த்து, "தேரோட்டியே, உன் நண்பன் தன் இடுப்புக் கச்சையையும் இழக்கும் முன்பாக அவனை உன் ரதத்தில் இங்கிருந்து கூட்டிக் கொண்டு ஓடிவிடு," என்று கூறினாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் கர்ணனின் வாள் தன் உறையைவிட்டு வெளியே வந்தது, ஆனால் அசுவத்தாமன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"அர்ச்சுனா, தன்னால் சண்டையிட முடியும் என்று அந்தத் தேரோட்டிக்கு நினைப்பா? நல்ல நகைச்சுவைதான்!" என்று தௌமியன் கொக்கரித்தபோது, அதிகமான சிரிப்பும் சீட்டிகளும் அந்த அரங்கை நிரப்பின.

சகுனி தன்னைச் சுற்றிச் சிரித்துக் கொண்டிருந்த முட்டாள்களைப் பார்த்து, தன் அதிர்ஷ்டத்திற்கு நன்றி கூறினான். பானை வயிற்றைக் கொண்ட ஒரு புரோகிதனுக்கு துரியோதனனைப் பிடிக்கவில்லை என்ற காரணத்திற்காக, பரதகண்டத்தின் பேராற்றல் வாய்ந்த சாம்ராஜ்யத்தின்

பட்டத்து இளவரசனை அவர்கள் அனைவரும் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தனர். ஒரு தாழ்ந்த குலத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக, பரதகண்டத்தின் மிகச் சிறந்த வில்லாளனை அவர்கள் ஏளனப்படுத்திக் கொண்டிருந்தனர். காந்தார இளவரசனான சகுனி, மேற்குத் திசையை நோக்கி மண்டியிட்டு அமர்ந்து, எதிர்பாராத இந்த அதிர்ஷ்டத்திற்காகக் கடவுளுக்கு நன்றி கூற விரும்பினான். ஆனால் தன் மருமகன் பரிகசிக்கப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தபடி நின்ற அவன் தனக்குள் உணர்ந்த மகிழ்ச்சிக் களிப்பு முழுதும், அவனுடைய முகத்தின்மீது தென்பட்டத் தீவிரத்திற்குப் பின்னால் ஒளிந்திருந்தது.

துரியோதனன் தன் தலையை நிமிர்த்தி, தன் கண்களுக்குள் விழுந்த தன்னுடைய கரிய தலைமுடியைப் பின்னால் ஒதுக்கித் தள்ளினான். பிறகு அவன் தன் தலையைச் சிலுப்பி அதிலிருந்த நீரை உதறிவிட்டு, தர்மனை முறைத்துப் பார்த்தான். இந்திரப்பிரஸ்தத்தின் அரசன் விரைவாக மூச்சு வாங்கினான். பிறகு துரியோதனன் திரௌபதியை நோக்கித் திரும்பினான். அவளுடைய சிரிப்பு உடனடியாக நின்றது. அவள் அவனை எதிர்கொள்ள விருப்பமின்றித் தன் பாதங்களை நோக்கிக் குனிந்தாள். துரியோதனன் அக்குளத்தைவிட்டு ஓரடி வெளியே எடுத்து வைத்தான். தௌமியன் சற்றுப் பின்வாங்கி, மற்றப் புரோகிதர்களுக்குப் பின்னால் சென்று மறைந்தான். அசுவத்தாமன் துரியோதனனிடம் அவனுடைய வேட்டியைக் கொடுத்தான், ஆனால் துரியோதனன் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, அதைத் தன் கையால் உதறிவிட்டான். அந்த ஒட்டுமொத்த அவையும் மீண்டும் மௌனமானது. ஒரு வார்த்தைகூடப் பேசாமல், தன் நிர்வாணத்தை மறைக்க முயற்சிக்காமல், அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசன் அந்த அரங்கைவிட்டு வெளியே நடந்தான். அவனுடைய நண்பர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். அவையோருக்கு இடையே அவன் ஓர் இடுப்புக் கச்சையுடனும் நிமிர்ந்த தலையுடனும் நடந்தபோது, அரசர்களும் இளவரசர்களும் பயத்திலும் மரியாதையிலும் தலை வணங்கிப் பணிந்தனர். தங்கள் நடத்தை குறித்து அவர்கள் அவமானம் கொண்டனர், ஆனால் ஒரு முக்கியமான மனிதன் இப்படி முகம் குப்புற விழுந்தது குறித்துச் சிரிப்பதற்குத் தங்களுக்கு ஏற்பட்டத் தூண்டுதலை ஒரு கணம் அவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விட்டது. துரியோதனன் அவர்கள் செலுத்திய மரியாதையைத் தன் தலையை லேசாக அசைத்து அங்கீகரித்துவிட்டு, நிமிர்ந்த நடையுடனும் நேர் கொண்ட பார்வையுடனும் அந்த இருட்டிற்குள் நடந்தான். ஒரு சமாதியின் அமைதி தர்மனின் அரண்மனையை ஆட்கொண்டது.

* * *

அந்தச் சம்பவம் நிகழ்ந்து மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பகல் வேளையில், துரியோதனனின் தனிப்பட்ட அறையில் வைத்து, இந்திரப்பிரஸ்தத்தின்மீது போர் தொடுக்குமாறு அசுவத்தாமனும் கர்ணனும் துச்சாதனனும் துரியோதனனை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். எந்தவோர் ஆண்மகனாலும் அப்படிப்பட்ட ஓர் அவமானத்தைச் சொரித்துக் கொள்ள முடியாது. ஆராயாமல் செய்த தன் செயலுக்கு இந்திரப்பிரஸ்தம் தகுந்த விலை கொடுத்தாக வேண்டும் என்று அவர்கள் துரியோதனனிடம் கூறினர். தங்கள் கோரிக்கையில் இருந்த நியாயத்தை அரசாட்சிப் பொறுப்பாளர் பீஷ்மரிடம் எடுத்துரைத்து, அவர் அதற்குத் தன் ஒப்புதலைத் தரும்படி தங்களால் செய்ய முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்பினர். அஸ்தினாபுரத்தின் பேராற்றலுக்கு முன்னால் இந்திரப்பிரஸ்தத்தைப் போன்ற மிகச் சிறிய ராஜ்யத்தால் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும்? மேலும், கிருஷ்ணன் துவாரகையில் அந்த வேடுவனை எதிர்த்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்தான், அவன் அங்கு சென்றடைந்திருக்கும் பட்சத்தில். இன்னும் உணர்விழந்த நிலையில் கிடந்த பரசுராமனின் தலைமைத்துவம் இல்லாமல் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பும் குழப்பத்தில் இருந்தது. பாண்டவர்களைத் தீர்த்துக்கட்டுவதற்கு இதுதான் சரியான நேரம் என்று அவர்கள் கருதினர். எந்தப் புனித நூல்களின் அடிப்படையிலும் அமையாத, எல்லா மதங்களையும் சமமாக மதித்த, சாதியின் அடிப்படையில் சலுகைகளை வழங்காத, எல்லோரையும் சமமாக நடத்திய, அதிக மனிதாபிமானத்துடன்கூடிய சட்டங்களை நடைமுறைப்படுத்த அவர்கள் விரும்பினர். தட்சகனைப் போன்றவர்கள் எதிர்பார்த்திருந்த இந்த ஆட்சிக் குலைவிலிருந்தும், கடவுளின் பெயரைச் சொல்லி ஆதிக்கம் செலுத்திய தௌமியன் மற்றும் பரசுராமனைப் போன்றோரிடமிருந்தும் நாட்டைக் காப்பாற்றுவதற்கான சரியான தருணம் இதுதான் என்று அவர்கள் உறுதியாக நம்பினர்.

துரியோதனன் தயங்கினான். அவனும் தன் நண்பர்கள் பரிந்துரைத்ததைச் செய்ய விரும்பினான். தனக்கு நேர்ந்த அவமானத்தை விழுங்கிக் கொள்வது அவனுக்குக் கடினமானதாக இருந்தது. அவனால் அதை மன்னிக்கவோ அல்லது மறக்கவோ முடியவில்லை. 'நான் ஒரு சத்திரியனேயன்றி, ஒரு துறவியல்ல,' என்று அவன் தொடர்ந்து தனக்குத் தானே கூறிக் கொண்டான். ஆனால் அவன் போரைப் பற்றி நினைத்த ஒவ்வொரு முறையும், தான் சென்று வந்திருந்த சேரிகளின் காட்சி அவன் மனத்தில் தோன்றியது. ஜரன் மற்றும் அவனுடைய குருட்டு நாயின் உருவங்கள் அவனுடைய கண்களுக்கு முன்னால் நடனமாடின. அந்த

அழகான இந்திரப்பிரஸ்த நகரை உருவாக்குவதற்குத் தங்களை வருத்திக் கொண்டு கடுமையாக உழைத்திருந்த மயாசுரனையையும் அப்பெண்களையும் குழந்தைகளையும் பற்றிய எண்ணம் சரிவின் விளிம்பிலிருந்து அவனை இழுத்துப் பிடித்தது. நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தபோது, தான் ஏளனப்படுத்தப்பட்டது அவ்வளவு பெரிய விஷயமல்ல என்று அவனுக்குத் தோன்றியது. தன் கௌரவத்திற்காக எத்தனை உயிர்கள் இழக்கப்படக்கூடும் என்று அவன் யோசித்தான். ஏழைகள்தான் அதற்கான விலையைக் கொடுப்பர். அந்த எண்ணம் அவனை பலவீனமாக்கியது. ஆனால் திரௌபதியின் சிரிப்பு அவனுடைய காதுகளில் இன்னும் நாராசமாக ஒலித்தது. 'அவர்கள் எப்படி என்னை அப்படி இகழலாம்?' என்று அவன் கொதித்தான். தர்மனின் அரசவையின் நடுவே தான் நிர்வாணமாக நின்று கொண்டிருந்ததை அவன் நினைவுபடுத்திப் பார்த்தபோதெல்லாம், அவன் அவமானத்தால் எரிந்தான். போர் தொடுக்காமல் பாண்டவர்களைப் பழி வாங்குவதற்கு ஏதேனும் வழி இருந்ததா என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

சகுனி துரியோதனனை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். இந்திரப்பிரஸ்தத்தில் நடந்த சம்பவத்தைக் கண்டு அவன் முதலில் மகிழ்ச்சி அடைந்திருந்தான். எக்கணத்திலும் நிகழக்கூடிய சாத்தியமிருந்த போரையும் தன் எதிரிகளின் அழிவையும் அவன் ஆர்வமாக எதிர்பார்த்தான். ஆனால் இடைப்பட்ட இந்த மூன்று நாட்களும், சூழ்நிலையை அறிவுப்பூர்வமாக ஆய்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பை அவனுக்குக் கொடுத்தன. துவக்கத்தில் ஏற்பட்டக் கைகலப்பிற்குப் பிறகு, பீஷ்மர் குறுக்கிட்டுப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே ஒரு சமரசத்திற்கு ஏற்பாடு செய்வார் என்றும், பேரழிவான யுத்தம் பற்றிய தன் கனவுகள் கரைந்து போய்விடும் என்றும் சகுனி பயந்தான். மேலும், கிருஷ்ணன் இந்திரப்பிரஸ்தத்திலிருந்து வெகுதூரத்தில் இருந்தான். ஒரு யுத்தம் நிகழ வேண்டும் என்று தன் அளவுக்கு விரும்பியவன் கிருஷ்ணன் ஒருவன்தான் என்பதை சகுனி அறிந்திருந்தான். தென்னக ராஜ்யங்கள் இந்த யுத்தத்தில் பங்கு கொள்வது சந்தேகமாக இருந்தது. துவாரகையும் தன் சொந்தச் சண்டைகளில் மும்முரமாக இருந்தது. 'இல்லை, இந்த நேரத்தில் ஒரு போர் நடப்பது என் லட்சியத்திற்குப் பொருந்தாது,' என்று சகுனி நினைத்தான். கிழக்கில் பிரக்ஜோதிஷம், அங்கம், வங்கம் போன்ற ராஜ்யங்களில் தொடங்கி, மேற்கில் துவாரகை, சிந்து, காந்தாரம் போன்ற ராஜ்யங்கள்வரையிலும், இமயமலையில் அமைந்த மலை ராஜ்யங்களிலிருந்து தொடங்கி, தெற்கில் சேரர்கள் மற்றும்

பாண்டியர்கள் உட்பட அனைத்து அசுர ராஜ்யங்கள்வரையிலும் உள்ளடக்கிய ஒரு மாபெரும் போர் நடைபெற வேண்டும் என்று சகுனி விரும்பினான். இறுதி யுத்தம் பரதகண்டத்தின் ஒரு ராஜ்யத்தைக்கூட விட்டு வைக்கக்கூடாது என்பதில் அவன் வெறியாக இருந்தான். சபிக்கப்பட்ட இந்த நிலமும் அதன் துயரமும் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும் என்று அவன் ஏங்கினான்.

சகுனி தன் மருமகன் துரியோதனனின் மனத்தில் ஓடிக் கொண்டிருந்த கேள்வியை உணர்ந்து கொண்டவன்போல், "இளவரசே, ஓர் அம்பைக்கூடத் தொடுக்காமல், ஒரு துளி ரத்தத்தைக்கூடச் சிந்தாமல், பாண்டவர்களைப் பழி வாங்குவதற்கும் வெற்றி கொள்வதற்கும் இன்னொரு வழி இருக்கிறது," என்று துரியோதனனிடம் கூறினான். எல்லோரும் அந்த அன்னியனை ஆர்வத்தோடு பார்த்தனர். "உன் புனித நூல்களில் . . . அதாவது நம்முடைய புனித நூல்களில் . . . அதற்கு அனுமதி இருக்கிறது. திருமணம், போர், பணம், அல்லது பகடைகளின் மூலம் ஓர் அரசனால் இன்னொரு ராஜ்யத்தை வெற்றி கொள்ள முடியும். தர்மனை நீ ஒரு பகடை விளையாட்டிற்கு அழைத்தால் என்ன?" என்று சகுனி ஒரு புன்னகையோடு கேட்டான்.

அவர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அப்போது அசுவத்தாமன், "பகடை விளையாட்டு என்பது அதிர்ஷ்டம் தொடர்பானது. அதில் தர்மன் வெற்றி பெற மாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?" என்று கேட்டான்.

சகுனி தன் வேட்டி மடிப்புகளிலிருந்து தன் பகடைகளை வெளியே எடுத்து, அமைதியாகப் பிரார்த்தனை செய்தான். பிறகு தன் கண்களை மூடிக் கொண்டு, "பன்னிரண்டு!" என்று கத்தியபடி தன் கையிலிருந்த பகடைகளைக் கீழே உருட்டினான்.

அவை அத்தரையின்மீது உருண்டோடி, ஒன்றோடொன்று வேகமாக மோதி, பிறகு எதிர்த்திசையில் ஒரு கணம் உருண்டு சென்று, இறுதியில் நின்றன. ஒவ்வொரு பகடையும் ஆறு புள்ளிகளைக் காட்டின — சகுனி கேட்டபடி அவனுடைய பகடைகள் அவனுக்குப் பன்னிரண்டைக் கொடுத்தன.

"எட்டு," என்று அந்தக் காந்தார இளவரசன் கத்திவிட்டு, மீண்டும் தன் பகடைகளை உருட்டினான். அவை உருண்டு சென்று எட்டுப் புள்ளிகளைக் காட்டி நின்றன. "ஆறு," என்று அவன் அழைத்தான், இம்முறையும் அவை அவனுக்குக் கீழ்ப்படிந்தன. அவன் தன் பகடைகளை நூறு முறை உருட்டினான். ஒவ்வொரு முறையும் அவன் கூறியபடியே அவனுடைய பகடைகள் நடந்து கொண்டன.

கர்ணன், துரியோதனன், துச்சாதனன், மற்றும் அசுவத்தாமன்

விடுத்த சவால்களை ஏற்றுக் கொண்டு, ஒவ்வோர் எண்ணாக சகுனி அழைத்தான். முப்பது வருடப் பழக்கம் கொடுத்த லாவகத்தோடு, அந்த அன்னியன் தன் பகடைகளை உருட்டினான்.

நிகழ்ச்சி முடிந்து, சகுனி தன் பார்வையாளர்கள் அனைவருக்கு முன்னாலும் தலை வணங்கியபோது, துரியோதனன் எழுந்து நின்று, "சரி, நாம் இந்தப் பகடைகளை உருட்டலாம். தர்மனால் மறுக்க முடியாத ஓர் அழைப்பை நாம் அவனுக்கு அனுப்பலாம். அவனுடைய சொந்த தர்மத்தைக் கொண்டே அவன் தொண்டையை நெரித்துவிடலாம். நம்மாலும் விளையாட்டுக்களை விளையாட முடியும் என்பதை அவன் தெரிந்து கொள்ளட்டும்," என்று கூறினான்.

இதைக் கேட்டு அவனுடைய நண்பர்கள் உற்சாகமாகக் கத்தியபடி ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டனர். சகுனி அந்தக் காட்சியை ரசித்துப் பார்த்தான். அவன் நூற்றியோராவது முறையாகத் தன் பகடைகளை உருட்டி, பன்னிரண்டு என்று அழைத்தான். அந்த உருட்டல், பரதகண்டத்தை ஆண்டு கொண்டிருந்த முட்டாள்களுக்கு, அதன் எல்லையில் அமைந்த ஒரு சின்னஞ்சிறிய மலை ராஜ்யத்திடமிருந்து விடுக்கப்பட்ட ஒரு துணிகரமான சவாலாகும். மொழி, சாதி, மதம், இனம், அற்ப அகங்காரம் ஆகியவற்றுக்காக எப்போதும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்த பரதகண்டத்தினர், தங்கள் புனித பூமியின்மீது பகடைகள் உருண்டதைப் பார்க்கவுமில்லை, அந்தச் சத்தத்தைக் கேட்கவுமில்லை, உணரவுமில்லை. அந்தப் பகடைகள் வழக்கம்போல அந்த அன்னியனின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தன.

27

உருண்டன பகடைகள்

சற்று எரிச்சலான மனநிலையில் இருந்த துரியோதனனிடம், “தர்மனை ஒரு பகடை விளையாட்டிற்கு நீங்கள் அழைத்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன்,” என்று பானுமதி நயமாகவும் மென்மையாகவும் கேட்டாள். அவன் வெறுமனே உறுமினான். அவள் அவனிடம் மீண்டும் கேட்டபோது, அவன் அந்த அறையைவிட்டு மௌனமாக வெளியேறினான். அவன் புண்பட்டிருந்தான் என்பதை அவள் அறிந்திருந்தாள், ஆனால் அந்தப் புண், சீழொழுகும் ஒன்றாக ஆவதை அவள் விரும்பவில்லை. அவர்களைச் சுற்றிப் போதுமான பகைமையுணர்வு இருந்தது. துரியோதனன் தன் நேரத்தின் பெரும்பகுதியைத் தன் மாமன் சகுனியுடனேயே செலவிட்டதால், அவள் அவனை அரிதாகவே பார்த்தாள். தன் கணவன் கோபத்தாலும் வெறுப்பாலும் நிரம்பி வழிந்ததைக் கண்ட அவளுடைய இதயம் அழுதது. தாராள மனம் படைத்தத் தன் கணவனை அவள் திரும்பப் பெற ஏங்கினாள்.

பகடை விளையாட்டு நடைபெறுவதற்கு ஒருசில நாட்களுக்கு முன்பு, பானுமதி தன் கணவனை நேரடியாக எதிர்கொண்டு அவனிடம் ஒருசில கேள்விகள் கேட்பதற்காகத் தங்கள் அறையில் அவனுக்காகக் காத்திருந்தாள். ஒருவழியாக அவன் அங்கு வந்தபோது, அவர்களுடைய இரண்டு குழந்தைகளும் அயர்ந்து தூங்கியிருந்தனர். அவன் ஒரு கணம் கதவருகிலேயே தயங்கி நின்றான். பிறகு தன் குழந்தைகள்

தூங்கிவிட்டனரா என்று அவன் எட்டிப் பார்த்ததை பானுமதி கண்டாள். தானும் தூங்குவதுபோல அவள் பாசாங்கு செய்தாள். துரியோதனன் விளக்கை அணைத்துவிட்டுத் தன் படுக்கையின்மீது படுத்தான். அவள் மெதுவாகத் திரும்பி, அவனுடைய தோளைத் தொட்டாள். உடனடியாக அவன் உடல் விறைப்படைந்ததை அவள் உணர்ந்தாள். தன் கணவனிடம் விவாதிப்பதற்கு அவளுக்கு பயமாக இருந்தது, ஆனால் அவனுடன் பேசியே ஆக வேண்டும் என்பதில் அவள் உறுதியாக இருந்தாள். அவளால் அதற்கு மேலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. "நாம் இந்த விஷயத்தை இவ்வளவு பெரிய விவகாரமாக ஆக்கத்தான் வேண்டுமா?" என்று அவள் மெதுவாகத் தொடங்கினாள்.

அவனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அவள் மெதுவாக, "அது ஒரு தற்செயலான நிகழ்வு . . ." என்று கூறினாள்.

"பானு! நீ இதில் தலையிடாதே!" என்று கத்திவிட்டு, துரியோதனன் தன் படுக்கையைவிட்டுக் குதித்தான். அவன் குதித்த வேகத்தில், அருகிலிருந்த ஒரு முக்காலி அவன் கால் பட்டு எகிறியது. "இது வெறுமனே என்னையும் தர்மனையும் பற்றியது அல்ல. இது இந்நாட்டையும் அதன் மக்களின் எதிர்காலத்தையும் பற்றியது. நீ இந்திரப்பிரஸ்தத்தைப் பார்க்கவில்லை. பாண்டவர்களின் 'மாதிரி நகரத்தில்' ஏழைகள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நீ பார்க்கவில்லை. நீ . . ."

"உங்கள் சொற்பொழிவை உங்கள் நண்பர்களோடு நிறுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பார்த்த விஷயங்கள் உங்கள் கோபத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இந்தப் பகடை விளையாட்டு உங்கள் அகங்காரத்தைத் திருப்திப்படுத்துவதற்கான செயல்போலத் தோன்றுகிறது . . ."

"அவர்கள் என்னை மட்டும் இழிவுபடுத்தவில்லை. கர்ணனும் அவர்களிடம் அவமானப்பட்டான். என்னைத் தன் தேரில் கூட்டிக் கொண்டு அங்கிருந்து ஓடிப் போகுமாறு திரௌபதி அவனிடம் கூறினாள் . . ."

"ஆக, இது உங்களைப் பற்றியது அல்ல என்றால், இது உங்கள் நண்பன் கர்ணனைப் பற்றியது, இல்லையா?"

"போதும்!" துரியோதனனின் குரலில் அப்படி ஒரு கடுமையை அவள் அதற்கு முன்பு ஒருபோதும் கேட்டிருக்கவில்லை. "ஆமாம், அது என் அகங்காரம்தான். அவர்கள் என்னை அவமானப்படுத்தினர். இப்படிப்பட்ட இகழ்ச்சிகளை நான் என் கைகளைக் கட்டிக் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? நான் ஒரு

சத்திரியன். நான் பீஷ்மரின் பேரன். நான் வெறுமனே பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயா? மயாசுரனைப் போன்ற மனிதர்களை அவர்கள் ஒரு புழுவைவிடக் கேவலமாக நடத்தும்போது நான் அமைதியாக இருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாயா?"

"அப்படியென்றால் அவர்களோடு சண்டையிடுங்கள், அவர்களைச் சூழ்ச்சிகரமாக ஏமாற்றாதீர்கள்," என்று கூறிவிட்டு பானுமதி நடுங்கினாள்.

"அவர்களுடன் சண்டையிட்டு ஆயிரக்கணக்கான மரணங்களுக்கு நான் பொறுப்பாளியாக வேண்டுமா? எல்லாவற்றையும் அழிக்கக்கூடிய ஒரு பேரழிவான யுத்தத்திற்கு நான் காரணமாக ஆக வேண்டுமா? பகடை விளையாட்டின் மூலம், என்னால் ஒரு போரைத் தவிர்க்க முடியும்."

"நானறிந்த துரியோதனன் அப்படிப்பட்டவர் அல்ல. இப்போது பேசிக் கொண்டிருப்பது என் கணவரல்ல. காந்தார இளவரசன் உங்கள் மூலமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்."

"நான் அவனுடைய கைகளில் ஒரு பொம்மை என்று நீ நினைக்கிறாயா? என்னால் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது."

பட்டுத் திரைச்சீலைகளின் ஊடாகத் தெரிந்த மங்கலான வெளிச்சத்தில், துரியோதனனின் கண்களில் பைத்தியக்காரத்தனமும் பகைமையுணர்வும் நிரம்பி வழிந்ததை பானுமதி கண்டாள். அவள் உடல் பயத்தில் நடுங்கியது. லேசாக அசைந்த தன் மகளை நோக்கிச் சென்ற பானுமதி, அவளை மென்மையாகத் தட்டிக் கொடுத்து மீண்டும் தூங்கச் செய்தாள். பானுமதி தன் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ள மிகவும் போராட வேண்டியிருந்தது. அவள் தன் கணவனை நோக்கித் திரும்பாமலேயே, "நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள பாதை நம் எல்லோரையும் பேரழிவிற்கு இட்டுச் செல்லும். திரௌபதியின் பொறுப்பற்ற வார்த்தைகளுக்காக அவளை மன்னித்துவிடுங்கள். அவளுடைய முட்டாள்தனமான கணவன்மார்களையும் மன்னித்துவிடுங்கள். உயர்ந்த பண்புகள் இல்லாதவர்களின் தவறுகளை மன்னிப்பதற்கான பெருந்தன்மை உங்களுக்கு இருக்கிறது," என்று கூறினாள்.

அவள் திரும்பியபோது, அங்கு திரைச்சீலைகள் மட்டுமே காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்ததை அவள் கண்டாள். துரியோதனன் ஏற்கனவே இருட்டிற்குள் மறைந்து போயிருந்தான். வெளியே தோட்டத்தில் கத்திக் கொண்டிருந்த ஆந்தையின் சத்தம் தன் குழந்தைகளைத் தொந்தரவு செய்யாமல் இருப்பதற்காக அவள்

அவர்களை இறுக்கமாகக் கட்டியணைத்துக் கொண்டாள். அக்கணத்தில் அவள் திரௌபதியை மனதார வெறுத்தாள்.

* * *

"பானு!" என்று உற்சாகமாகக் குரல் கொடுத்தபடி மேல்மாடத்திலிருந்து சுபத்திரை விரைந்து வந்தாள். பீஷ்மர் அபிமன்யுவைப் பார்க்க விரும்பியதால் அவள் தன் மகனை அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரத்திற்கு வந்திருந்தாள். பீஷ்மர் தன் கைப்பட அவர்களுக்குக் கடிதம் எழுதி அவர்களை வரவழைத்திருந்தார். ஒரு சங்கு முழங்கி, இந்திரப்பிரஸ்தத்தின் அரசன் தர்மன் மற்றும் அவனுடைய சகோதரர்களின் வருகையை அறிவித்தது. "நான் போய் அவளை அழைத்து வருகிறேன்," என்று கூறிவிட்டு, சுபத்திரை தன் மகன் அபிமன்யுவுடன் அங்கிருந்து வெளியேறினாள். தன் தந்தையைச் சந்திப்பதற்கு அபிமன்யு ஆவலோடு ஓடினான்.

பானுமதி தன் இருக்கையில் அமர்ந்திருந்தாள். பாண்டவர்களைச் சுமந்து வந்த ரதம், சரளைக் கற்களால் ஆன வாகனப் பாதையில் வந்து நின்ற சத்தமும், சிறிது நேரத்தில், அர்ச்சுனன் அபிமன்யுவை மீண்டும் மீண்டும் உயரே தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடி அவனைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்த சத்தமும் அவளுக்குக் கேட்டது. தன் கணவன் தன் ஒன்றுவிட்டச் சகோதரர்களை வரவேற்றுக் கொண்டிருந்த சத்தத்தையும் அவள் செவிமடுத்தாள். அபிமன்பு தன் தந்தையிடமிருந்து தன் பெரியப்பாவிடம் தாவிக் குதித்ததும், அதைத் தொடர்ந்து எழுந்த சிரிப்பும் அவளுக்குக் கேட்டது. அபிமன்யுவைத் தன் இன்னொரு மகனாகக் கருதிய துரியோதனன், அவனுக்குச் சிரிப்பு மூட்டிக் கொண்டிருந்தான். சுபத்திரையும் அவர்களோடு சேர்ந்து சிரித்தாள். தன் மகன் தன்னைவிட துரியோதனன்மீது அதிகப் பிரியம் கொண்டிருந்ததாக அர்ச்சுனன் கூறியது பானுமதியின் காதுகளில் விழுந்தது. அவளுக்குத் தொண்டை அடைத்தது. தர்மன் பானுமதியைப் பற்றி விசாரித்தான். பானுமதி தன் மனம் முழுக்க பயத்துடன், கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தான் வெறுத்தப் பெண்ணை எக்கணத்திலும் தான் நேருக்கு நேர் சந்திப்போம் என்று அவள் அஞ்சினாள்.

"பானு, உன்னைப் பார்க்க யார் வந்திருக்கிறார்கள் என்று பார்!" சுபத்திரையின் உற்சாகக் குரல் காற்றில் மிதந்து வந்தபோது, பானுமதியின் முகம் வெளிறியது. சுபத்திரை புன்னகைத்தபடி கதவருகில் நின்றாள். அவளுடைய புன்னகை அந்த ஒட்டுமொத்த அறையையும் ஒளிரச் செய்தது. அவளுக்குப் பின்னால் திரௌபதி ஒரு

புன்னகையுடன் பானுமதியைப் பார்த்தபடி நின்றாள்.

பானுமதி தன் கைகளை விறைப்பாகக் கூப்பி திரௌபதியை வரவேற்றுவிட்டு, எப்படியோ சமாளித்து, "ஏன் வெளியே நிற்கிறாய்? உள்ளே வா," என்று அழைத்தாள்.

திரௌபதி அவசர அவசரமாக உள்ளே வந்து, பானுமதியின் கைகளை அழுத்திப் பிடித்துக் கொண்டு, "நான் உன்னிடமும் உன் கணவரிடமும் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் செய்தது தவறு. ஆனால் நான் எந்தத் தீங்கும் நினைத்து அப்படிச் செய்யவில்லை. பானுமதி, என்னை மன்னித்துவிடு. துரியோதனன் என் சகோதரர்கள் திருஷ்டத்யும்னன் மற்றும் சிகண்டியைப் போன்றவர். நான் என் சகோதரர்களை எப்போதும் கேலி செய்வேன். ஆனால் அதை அவர்கள் வெறும் நகைச்சுவையாக எடுத்துக் கொள்வார்கள். அன்று நிகழ்ந்ததும் அப்படிப்பட்ட ஒன்றுதான்," என்று கூறினாள்.

பானுமதியின் இதயம் நெகிழ்ந்தது. இது அவள் எதிர்பார்த்திருந்ததற்கு முற்றிலும் மாறாக இருந்தது. திரௌபதி தன்னுடைய வழக்கமான அலட்சியப் போக்குடன் நடந்து கொள்வாள் என்று எதிர்பார்த்து, அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அவளை ஏளனப்படுத்துவதற்குக் கடுமையான வார்த்தைகளையும் கோபமான வாதங்களையும் பானுமதி பல முறை பேசிப் பழகியிருந்தாள். ஆனால் திரௌபதி மன்னிப்புக் கேட்டதன் மூலம் பானுமதியைக் கட்டிப் போட்டாள்.

திரௌபதி மேலும் தொடர்ந்தாள். "துரியோதனன் நல்லவர் என்று எனக்குத் தெரியும். இந்திரப்பிரஸ்தத்தில் தனக்கு நேர்ந்ததை அவர் தீவிரமாக எடுத்துக் கொண்டிருந்தால், எங்கள் அனைவரையும் இந்தப் பகடை விளையாட்டிற்கு அவர் அழைத்திருக்க மாட்டார். அவர் எங்களை மன்னித்துவிட்டார் என்பதைத்தான் இது காட்டுகிறது. தர்மனுக்குப் பகடை விளையாட்டு மிகவும் பிடிக்கும் என்று துரியோதனனுக்குத் தெரியும். உன் கணவர் தன் சகோதரியின் தவறை மன்னித்திருப்பது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது."

"திரௌபதி, நீ உண்மையிலேயே யாரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாய் என்று எனக்குத் தெரியும்," என்று சுபத்திரை அவளை வேடிக்கையாகச் சீண்டினாள். திரௌபதியின் அழகிய முகத்தின்மீது ஒரு புன்னகை மலர்ந்ததை பானுமதி பார்த்தாள். "அவனுக்கு உன் இதயத்தில் இன்னும் இடம் கொடுத்து வைத்திருக்கிறாயா? அவனை இவ்வளவு தூரம் நீ காயப்படுத்தித்தான் ஆக வேண்டுமா?" என்று சுபத்திரை தன் முகத்தில் குறும்பு கொப்பளிக்கக் கேட்டாள்.

திரௌபதி வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டாள். “சுபத்திரா, நீ எந்தத் தேரோட்டியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை,” என்று அவள் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் பதிலளித்தாள்.

“தேரோட்டி என்று நான் ஒருபோதும் குறிப்பிடவே இல்லையே,” என்று சுபத்திரை சிரித்துக் கொண்டே கூறினாள்.

திரௌபதியின் முகம் நாணத்தால் சிவந்தது. அவள் தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பிறகு சுபத்திரையும் திரௌபதியும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரிக்கத் துவங்கினர். அவர்கள் இருவரையும் பார்த்த பானுமதிக்கு லேசான நம்பிக்கை துளிர்த்தது. திரௌபதி தன்னிடம் கூறியவற்றில் பாதியையாவது துரியோதனனிடம் கூறினால், பிரச்சனை சுமூகமாகத் தீர்ந்துவிடும் என்று அவள் நினைத்தாள். துரியோதனன் அப்போது அந்த அறைக்குள் வர வேண்டும் என்று அவள் பிரார்த்தித்தாள்.

தான் மாதவிடாய்ப் பிரச்சனையால் அவதிக்கு ஆளாகியிருந்ததாகவும், ஆனால் அஸ்தினாபுரத்திற்குத் தன்னுடன் வர வேண்டும் என்று தர்மன் தன்னை வற்புறுத்தியிருந்ததாகவும் திரௌபதி மற்ற இருவரிடமும் கூறினாள். தர்மனுக்கு அன்று ஒரு முக்கியமான நாள் என்பதால், தான் அவனுக்குத் துணையாக வந்தே ஆக வேண்டும் என்று அவன் விரும்பினான் என்று அவள் கூறினாள். தான் பொறுப்பின்றி நடந்து கொண்ட விதத்திற்காக பானுமதியிடமும் துரியோதனனிடமும் நேரில் வந்து மன்னிப்புக் கேட்பதற்கு அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நினைப்பில் திரௌபதி அதற்கு ஒத்துக் கொண்டிருந்தாள்.

* * *

அஸ்தினாபுர அரசவையில் கூடியிருந்த மேன்மக்களை தர்மன் பார்த்தான். துரியோதனனின் அழைப்பை மறுக்குமாறு அர்ச்சுனன் தர்மனுக்கு அறிவுறுத்தியிருந்தான். அஸ்தினாபுரத்திற்குச் செல்லும் வழியில், கௌரவர்கள் மறைந்திருந்து தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறு இருந்ததைப் பற்றிக் குந்தி அவர்களை எச்சரித்திருந்தாள். இறுதியில், தர்மன் தௌமியனிடம் அறிவுரை கேட்கச் சென்றான். அந்தப் புரோகிதன் தன் சீடர்களுடனும் பிற அறிஞர்களுடனும் நீண்டநேரம் கலந்து பேசிவிட்டு, பகடை விளையாட்டில் ஈடுபடுவது ஒரு சத்திரியனின் தர்மம் என்று கூறினான். அதைக் கேட்டு தர்மன் புன்னகைத்தான். ஏனெனில், பகடை விளையாட்டிற்கு தர்மன் அடிமையாகியிருந்தான், அதன்மீது அவன் தீராத காதல்

கொண்டிருந்தான். வேறு எதுவொன்றைவிடவும் பகடை விளையாட்டு அவனை அதிகமாக உற்சாகப்படுத்தியது. மேலும், தர்மன் இந்திரப்பிரஸ்தத்தைப் பணயம் வைத்தால், பட்டத்து இளவரசன் பதவியைத் தான் பணயம் வைப்பதாக துரியோதனன் தர்மனிடம் கூறியிருந்தான். பகடை விளையாட்டில் தன் சார்பாகத் தன் மாமனான காந்தார இளவரசன் சகுனி விளையாடுவான் என்றும் துரியோதனன் கூறினான்.

இதில் வெற்றி பெற்றுவிட்டால், பேராற்றல் வாய்ந்த அஸ்தினாபுரம் தர்மனின் கைக்கு வந்துவிடும். புரோகிதர் குலத்தோரிடையே ஏற்கனவே தனக்கு நல்ல ஆதரவு இருந்ததால், இமயத்திலிருந்து தொடங்கி தென்கடல்கள் வரையிலான ஒட்டுமொத்த பரதகண்டத்திற்கும் தன்னைப் பேரரசனாக ஆக்கி, தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்குத் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பை அந்தப் புரோகிதர்களால் ஒப்புக் கொள்ள வைக்க முடியும் என்று தர்மன் நம்பினான். தர்மன் எப்போதும் தர்மத்தைக் கடைபிடித்து வந்ததால், அவன் சுலபமாக வெற்றி பெற்றுவிடுவான் என்று தௌமியன் கணித்தான். ஒரு கூடுதல் உத்தரவாதத்திற்காக, அவர்கள் ஒரு நிமித்தகனையும் சந்தித்தனர். அவன் சில சோழிகளைத் தரையின்மீது எறிந்து, ஏதோ கணக்குப் போட்டு, ஒருசில சோழிகளை ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு நகர்த்திவிட்டு, எல்லாக் கோள்களும் தர்மனுக்குச் சாதகமாக இருந்ததால், தர்மனின் வெற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதாகக் கூறினான். இறுதியில், தௌமியன் தர்மனிடம் ஒரு தாயத்தைக் கொடுத்து, அதை அணிந்து கொள்ளுமாறு அவனிடம் கூறினான். தர்மன் தன் சகோதரர்களுடன் அஸ்தினாபுர அரண்மனைக்குள் நுழைந்தபோது, அவன் அணிந்திருந்த முத்து நகைகள் மற்றும் வைர நகைகளுக்கு இடையே தலைநீட்டிக் கொண்டிருந்த அந்த தாயத்தைப் பற்றி ஒருசிலர் முணுமுணுத்தனர்.

* * *

பகடை விளையாட்டு துவங்குவதற்கு முன்பு தர்மனும் சகுனியும் வெள்ளோட்டம் பார்த்தனர். சகுனியைவிட தர்மன் அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருந்தான். பிறகு உண்மையான ஆட்டம் துவங்கியது.

சகுனி தன் முகத்தில் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல், “இளவரசே, விளையாட்டு இப்போது துவங்குகிறது. இப்போது நாம் பணயத்தை நிர்ணயிக்கலாம்,” என்று துரியோதனனைப் பார்த்துக் கூறினான்.

“நான் என் முத்து அட்டிகையைப் பணயம் வைக்கிறேன்,” என்று தர்மன் கூறினான். கர்ணன் ஏளனமாகப் புன்னகைத்து மற்றப் பாண்டவர்களுக்கு எரிச்சலூட்டினான்.

“நானும் என் முத்து அட்டிகையைப் பணயம் வைக்கிறேன்,” என்று துரியோதனன் அமைதியாகக் கூறிவிட்டுத் தன் கழுத்திலிருந்து முத்து மாலையைக் கழற்றிப் பலகையின் அருகே வைத்தான்.

பகடைகள் உருளத் துவங்கின.

* * *

அரசன் திருதராஷ்டிரனின் தனிப்பட்டச் செயலாளனான சஞ்சயன், அரசவையில் நடைபெற்றுக் கொண்டிருந்த விளையாட்டை அரசனுக்கு வர்ணனை செய்து கொண்டிருந்தான். தன் மகன் வெற்றி பெற வேண்டும் என்று அரசன் விரும்பினான். காந்தாரி இன்னும் அரசவைக்கு வந்திருக்காதது குறித்து அவன் நிம்மதியாக இருந்தான். அவள் எப்போதுமே இந்த விளையாட்டை எதிர்த்து வந்திருந்தாள். இந்த விளையாட்டில் திறமை பெற்றிருப்பது ஒரு சத்திரியனுக்குத் தேவை என்று கூறி திருதராஷ்டிரன்தான் இதை விளையாடுவதற்குத் தன் மகனை ஊக்குவித்திருந்தான். காந்தாரி ஏழைகளுக்கு உணவளிப்பதற்காகக் கோவிலுக்குப் போயிருந்தாள். அவளுக்குப் போட்டியாக, குந்தியும் அவளோடு போயிருந்தாள். விளையாட்டு முடியும்வரை அவர்கள் இருவரும் அங்கேயே இருக்கட்டும் என்று அரசன் நினைத்தான். எப்படிப் பார்த்தாலும், அரசவையில் பெண்களுக்கு எந்த வேலையும் இல்லை என்று அவன் கருதினான். அது ஆண்களின் ஆடுகளம்.

பகடைகளை முதலில் எறிந்த சகுனி, “ஆஹா, வெற்றி எனக்கு!” என்று உற்சாகமாகக் கத்தினான். அவன் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது. அங்கு கூடியிருந்தவர்கள் தங்கள் கழுத்துக்களை நீட்டிப் பகடைகளைப் பார்த்தனர்.

திருதராஷ்டிரன் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான். ‘காந்தாரி, பகடை விளையாட்டை நீ எதிர்த்தாய். ஆனால் இப்போது நம் மகன் துரியோதனன் தர்மனை எவ்வாறு சுலபமாகத் தோற்கடித்துக் கொண்டிருக்கிறான் என்று பார்.’ சகுனி ஒரு திறமைசாலி என்று அவன் நினைத்தான். அரசவையில் அப்போது அதிகக் கைதட்டல் எழுந்தது. பகடைகள் காந்தார இளவரசனுக்கு மீண்டும் கீழ்ப்படிந்து நடந்தன. தன் மனைவி ஏன் தன் சகோதரனை இவ்வளவு கடுமையாக வெறுத்தாள் என்று ஆயிரமாவது முறையாக அவன் வியந்தான். அஸ்தினாபுரத்தை ஒரு தாம்பாளத்தில் வைத்து அவன் துரியோதனனிடம் கொடுத்துக்

கொண்டிருந்தான் என்று நினைத்த திருதராஷ்டிரன், பகடைகள் சகுனிக்குச் சாதகமாக உருள வேண்டும் என்று விரும்பியபடி மௌனமாக அமர்ந்திருந்தான்.

* * *

பனிமூட்டம் சூழ்ந்திருந்த மரங்களுக்கு மேலாக சூரியன் சோம்பல் முறித்து எழுந்தபோது, சிந்து நாட்டின் தலைநகரை நோக்கி ஒருவன் தன் குதிரையின்மீது பயணித்தான். அவன் சிறிது நேரம்கூட ஓய்வெடுக்காமல் இரண்டு நாட்களாகப் பயணம் செய்திருந்தான். அவனுடைய முதுகு புண்பட்டிருந்தது, அவனுடைய மூட்டுக்கள் வலித்தன. ஆனால் அரசனிடம் இந்தச் செய்தியை விரைவாகக் கொண்டு சேர்த்தாக வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் தலைநகர வாசலை அடைந்தபோது, மற்றவர்களின் கவனத்தைக் கவராமல் இருப்பதற்காகத் தன் குதிரையின் வேகத்தை வெகுவாகக் குறைத்து, அதை நடக்கச் செய்தான். பிறகு அதன்மீதிருந்து கீழே இறங்கி, அந்நகரின் மும்முரமான வீதிகள் வழியாகத் தன் குதிரையை இழுத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடக்கத் துவங்கினான். அவன் தன் தலைப்பாகையின் முனையைக் கொண்டு தன் முகத்திலிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, நடைபாதையை ஒட்டி அமைந்திருந்த பயணியர் சாவடிகளில் மரங்களின் கீழே கயிற்றுக் கட்டில்கள்மீது ஓய்வாகப் படுத்துக் கொண்டு, பாலையோ அல்லது மதுவையோ பருகிக் கொண்டிருந்தவர்களை ஏக்கத்தோடு பார்த்தான். முற்றிலும் களைத்துப் போயிருந்த அவன், நல்ல தூக்கத்திற்காக ஏங்கினான். ஆனால் அவன் சுமந்து வந்து கொண்டிருந்த தகவல், பரதகண்டத்தின் பல முக்கியமான நபர்களின் தூக்கத்தை முற்றிலுமாக அழிக்கும் அளவுக்கு ஆபத்தானதாக இருந்தது.

அவன் கோட்டை வாசலை அடைந்தபோது, காவலாளிகள் அவனை நீண்ட நேரம் காக்க வைத்துவிட்டு, பல ஏடுகளில் பலவற்றைக் குறித்தனர். பிறகு, பொருத்தமில்லாத பல கேள்விகளை அவர்கள் அவனிடம் கேட்டனர். ஆனால் அவனுடைய கண்கள் அரண்மனையின் தோட்டங்களைத் துழாவின. அங்கு யாரும் காணப்படவில்லை. இறுதியில், "அரசர் இங்கு இல்லையா?" என்று அவன் அக்காவலாளிகளிடம் கேட்டான்.

அவர்கள் தங்கள் தலைகளை நிமிர்த்தி ஒருவரையொருவர் பார்த்தனர். அவர்களில் ஒருவன், "உனக்கு விஷயம் தெரியாதா? அரசன் ஜயத்ரதன் அஸ்தினாபுரத்திற்குப் போயிருக்கிறார்," என்று கூறினான்.

"அஸ்தினாபுரமா? அவர் ஏன் அங்கு . . ." என்று துவக்கிய அவன்,

அவர்களுடைய அரசனைப் பற்றி அவதூறாக ஏதேனும் பேசிவிடக்கூடாது என்பதற்காகத் தன் வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

"அரசனின் தீர்மானங்களைப் பற்றிக் கேள்வி கேட்பதற்கு நாம் யார்? அவர் ஒரு பகடை விளையாட்டிற்காகப் போயிருக்கிறார் என்று நினைக்கிறேன். அரசரிடம் தெரிவிப்பதற்கு நீ ஏதேனும் செய்தி கொண்டு வந்திருந்தால், அதை நீ எங்களிடம் கொடுக்கலாம். அவர் திரும்பி வந்தவுடன் நாங்கள் அவரிடம் அதை நிச்சயமாகக் கொடுத்துவிடுகிறோம். ஆனால் அதற்கு உனக்கு இரண்டு வெள்ளி நாணயங்கள் செலவாகும்," என்று அவர்களில் இளையவன் அதிகாரமாகக் கூறினான். ஆனால் அந்தத் தூதுவன் முடியாது என்று கூறும் விதமாகத் தன் தலையை ஆட்டிவிட்டு, அங்கிருந்து வெளியே நடக்கத் துவங்கினான்.

"ஏய், அரசனுக்கு நீ ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறினாயே. ஒரு நாணயத்திற்கு நான் அவரிடம் தெரிவித்துவிடுகிறேன்," என்று ஒரு காவலாளி கத்தினான். ஆனால் அத்தூதுவன் ஏற்கனவே தன் குதிரையின்மீது ஏறியிருந்தான்.

'முட்டாள்! துர்ஜயன் தன் நூற்றுக்கணக்கான ஆட்களுடன் காந்தாரத்திற்கு ரகசியமாகச் சென்றுள்ளான் என்பதையும், நம் நகரங்களின்மீது பெரும் சீரழிவுகளை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் என்னால் ஒரு காவலாளியிடம் கூற முடியுமா?' என்று நினைத்து எரிச்சலடைந்த அந்த ஒற்றன், வடகிழக்குத் திசையில் திரும்பி, அஸ்தினாபுரத்தை நோக்கிப் பயணித்தான். 'நாடு எரிந்து சாம்பலாகவிருக்கும் நேரத்தில், ஆட்சியாளர்கள் பகடை விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்,' என்று நொந்து கொண்ட அவன், தன்னை யார் கவனித்தாலும் தனக்குக் கவலையில்லை என்று தனக்குள் கூறிக் கொண்டு, ஒரு வெறியோடு தன் குதிரையை விரைவாகச் செலுத்தினான். வாயிலிருந்து நுரை தள்ளிக் கொண்டிருந்த அந்தக் குதிரையின்மீது களைப்போடும் வெறுப்போடும் அமர்ந்து கொண்டு வெறித்தனமான வேகத்தில் வந்து கொண்டிருந்தவனிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக வீதிகளில் நடமாடிக் கொண்டிருந்த மக்கள், பாதுகாப்பைத் தேடித் தலைதெறிக்க அங்குமிங்கும் ஓடினர். அந்த ஒற்றன் அஸ்தினாபுரத்தை நோக்கிப் புயல் வேகத்தில் சென்றான்.

* * *

தர்மன் தன் கழுத்திலிருந்த தாயத்தைத் தொட்டான். விளையாட்டின்

துவக்கத்தில், அந்த அன்னியன், தர்மனுக்கு அவ்வளவு திறமையானவனாகத் தெரியவில்லை. சகுனிக்குக் கிடைத்த வெற்றிப் புள்ளிகள் அனைத்தும் வெறும் அதிர்ஷ்டத்தால் கிடைத்தவையே என்று நினைத்த தர்மன், தன் தலையை நிமிர்த்தி, "நான் என் தங்க ரதங்களைப் பணயம் வைக்கிறேன்," என்று கூறினான்.

சகுனி தன் பகடைகளை ஒன்றோடொன்று தேய்த்தான். "அரசே, தங்க ரதங்களா? அது அவ்வளவு நியாயமான பந்தயம் அல்ல. இந்திரப்பிரஸ்தத்தைவிட அஸ்தினாபுரத்தில் அதிகமான தங்க ரதங்கள் இருக்கின்றன."

"சரி, நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள என் யானைகளை நான் பணயம் வைக்கிறேன்," என்று தர்மன் உடனடியாகக் கூறினான். தன் இதயம் தன் நெஞ்சுக்குழிக்குள் படபடத்துக் கொண்டிருந்ததை அவன் வெளிக்காட்டிக் கொள்ளாமல் விளையாடினான்.

பகடைகள் மீண்டும் உருண்டன.

"அரசே, உங்களுக்கு நேரம் சரியில்லை! உங்கள் யானைகளும் ரதங்களும் இப்போது துரியோதனனுக்குச் சொந்தம்," என்று சகுனி ஒரு புன்னகையுடன் கூறினான்.

தர்மன் தனக்குள் சபித்துக் கொண்டே, 'அது எப்படிச் சாத்தியம்? பகடை விளையாட்டில் யாரும் இதுவரை என்னை இவ்வளவு மோசமாகத் தோற்கடித்ததில்லை,' என்று நினைத்தான். விளையாட்டை நிறுத்துமாறு அர்ச்சுனன் தன் சகோதரனிடம் கிசுகிசுத்தான். அவர்கள் ஏற்கனவே தங்கள் படையின் ஒரு பெரும்பகுதியை இழந்திருந்தனர். ஆனால் கௌரவர்களின் முகங்கள்மீது தெரிந்த பரிகாசத்தைக் கண்டு கொதித்த தர்மன், தன் வழக்கமான சாந்தத்தை இழந்து, தன் மாளிகைகள், குதிரைகள், தங்க நகைகள், வைரங்கள், கருவூலம், பசுக்கள், தன் ராஜ்யத்தில் இருந்த அனைத்துக் கிராமங்கள், தன் படைக்கலன்கள், தன் வணிகர்களின் சொத்துக்கள் ஆகியவற்றைப் பணயம் வைத்தான்.

பகடைகள் மீண்டும் உருண்டு, அடுத்தடுத்தப் பத்து உருட்டல்களில், தர்மனிடமிருந்து எல்லாவற்றையும் பறித்தன.

"இளவரசே, ஒரு நேரத்தில் ஒரு குதிரையையோ அல்லது ஒரு பசுவையோ பணயம் வைப்பதற்குப் பதிலாக, மதிப்புவாய்ந்த எதையாவது பந்தயம் கட்டுங்கள். அப்போது உங்களுக்குப் பெரும் வெற்றி கிடைக்கும். தன் பட்டத்து இளவரசன் பதவியை துரியாதனன் பணயம் வைக்கிறான். அவன் தோற்றால், நீங்கள் அஸ்தினாபுரத்தின் பட்டத்து இளவரசனாக ஆகிவிடுவீர்கள். பிறகு நேரம் வரும்போது அஸ்தினாபுரத்தின் அரசனாக ஆவீர்கள். துரியோதனன் ஓர் ஆண்டியாக

இங்கிருந்து போய்விடுவான். உங்களுக்குத் துணிச்சல் இருந்தால், துரியோதனனின் பணயத்திற்கு இணையான எதையேனும் பணயம் வையுங்கள். நீங்கள் வெற்றி பெற்றால், ஒரு சாம்ராஜ்யம் உங்கள் வசமாகும். ஆனால் நீங்கள் தோற்றுவிட்டால் . . .?"

சகுனியின் புன்னகையுடன்கூடிய வார்த்தைகள், தர்மனுக்குள் இருந்த சூதாடியைத் தூண்டிவிட்டன. அவன் தன் தாயத்தை மீண்டும் தொட்டுவிட்டு, ஆழமாக சுவாசித்தான். பிறகு, "நான் இந்திரப்பிரஸ்தத்திலுள்ள என் அரண்மனையைப் பணயம் வைக்கிறேன்," என்று அவன் கூறினான்.

பதினோராவது முறையாகப் பகடைகள் உருண்டன.

"ஓ! மேன்மை பொருந்தியவரே, இன்று உங்களுக்கு ராசியான நாள் இல்லைபோலும் . . . நீங்கள் மீண்டும் தோற்றுவிட்டீர்கள்!" என்று கூறி, சகுனி தான் அதிர்ச்சியடைந்ததுபோலப் பாசாங்கு செய்து தர்மனைப் பரிகசித்தான்.

அர்ச்சுனனின் முகம் தீவிரமாக ஆகத் துவங்கியது. பீமன், நகுலன், சகாதேவன் ஆகியோரின் முகங்களிலிருந்த புன்னகைகள் மறைந்துவிட்டிருந்தன. தர்மன் வெளிறிய முகத்துடன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். ஓர் ஊசி விழுந்தால்கூடக் கேட்கும் அளவுக்கு அந்த அரசவையில் ஒரு கனத்த அமைதி நிலவியது. துரியோதனனுக்குத் திடீரென்று தர்மன்மீது பரிதாபம் ஏற்பட்டது. தான் தர்மனைப் பழி வாங்கிவிட்டோம் என்று அவன் நினைத்தான். பாண்டவர்களிடம் இப்போது எதுவும் எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் தான் கொடுக்கும் யாசகத்தில்தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும். ஒரு துளி ரத்தம்கூடச் சிந்தாமல் அவன் தன் ஒன்றுவிட்டச் சகோதரர்களைக் கையாலாகாத இளவரசர்களாக ஆக்கியிருந்தான். எனவே விளையாட்டை முடிப்பதற்காக அவன் எழுந்து நின்றான்.

சகுனி அதைப் பார்த்துவிட்டுப் பதற்றமடைந்தான். அந்த முட்டாள் தன் திட்டங்கள் அனைத்தையும் பாழாக்கவிருந்ததாக சகுனி பயந்தான். ஆனால் அந்த அன்னியனுக்கு, அதிர்ஷ்டவசமாக, தர்மன் தன் தலையை நிமிர்த்தி, மிகத் தெளிவாக, "துரியோதனா, இக்கணத்தில் விளையாட்டை நிறுத்தி என்னை அவமானப்படுத்தாதே. இறுதியில் நான் வென்றுவிடுவேன் என்று எனக்கு உறுதியாகத் தெரியும்," என்று கூறினான். தர்மனுக்குள் இருந்த சூதாடி அவனை முழுவதுமாக ஆட்டுவித்துக் கொண்டிருந்தான். பகடைகள் அடுத்து உருள்வதைத் தவிர அவனுக்கு வேறு எதுவும் முக்கியமாகப் படவில்லை. தன் அதிர்ஷ்டம் தன்னிடம் திரும்பி வந்துவிடும் என்று அவன் மிகவும் உறுதியாக நம்பினான்.

தர்மனின் இயல்பிற்குப் புறம்பான வார்த்தைகளாலும் அவனுடைய அசட்டுத் துணிச்சலாலும் ஆச்சரியமடைந்த துரியோதனன், தன் இடத்தில் அமர்ந்தான். பகடை விளையாட்டில் தர்மன் எவ்வளவு திறமையானவனாக இருந்தாலும், அன்று பாண்டவர்களுக்கு எந்த வெற்றியும் கிட்டப் போவதில்லை என்பதை துரியோதனன் அறிந்திருந்தான்.

"நீ ஏன் இப்போது விளையாட்டை நிறுத்த விரும்புகிறாய்? நாம் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறோம்," என்று துச்சாதனன் அவனிடம் கிசுகிசுத்தான்.

துரியோதனன் தன் சகோதரனைப் பார்த்தான். துச்சாதனன் ஒவ்வொரு முறை வெளியே சென்று வந்தபோதும், சிறிதளவு மதுபானத்தை அருந்திவிட்டு வந்திருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. எனவே துரியோதனன் அவனிடம் அமைதியாக, "போய் உன் அறையில் படுத்துத் தூங்கு. இங்கே ஏடாகூடமாக ஏதாவது செய்துவிடாதே," என்று கூறினான். ஆனால் துச்சாதனன் துரியோதனனைப் பார்த்துக் கோணலாகப் புன்னகைத்துவிட்டுத் தொடர்ந்து அங்கேயே இருந்தான்.

"நான் என் சகோதரன் நகுலனைப் பணயம் வைக்கிறேன்." தர்மனின் வார்த்தைகளால் அந்த அரங்கம் அதிர்ந்தது.

ஒரு கணம் அங்கு அதிர்ச்சி கலந்த அமைதி குடிகொண்டது. பிறகு அவையிலிருந்த எல்லோரும் தங்களுக்கிடையே பேசிக் கொள்ளத் துவங்கினர். அப்போது பகடைகள் மீண்டும் உருண்டன. தர்மன் மீண்டும் தோற்றபோது துச்சாதனன் வாய்விட்டுச் சிரித்தான்.

"இன்னும் ஒரே ஒரு முறை பகடைகளை வீசினால், நீங்கள் இதுவரை இழந்துள்ள எல்லாவற்றையும் மீட்டுவிட்டு, அஸ்தினாபுரத்தின் அரியணையையும் உங்கள் வசமாக்கிக் கொள்ள முடியும். அதற்கு உங்களுக்குத் துணிச்சல் இருக்கிறதா?" என்று சகுனி தர்மனிடம் சாதாரணமாகக் கேட்டான்.

அர்ச்சுனன் தன் சகோதரனின் தோள்மீது கை வைத்து அவனைத் தடுத்து, "போதும். நாம் இங்கிருந்து போகலாம்," என்று கூறினான்.

"முடியாது. நகுலனை எப்படி துரியோதனனிடம் ஓர் அடிமையாக விட்டுவிட்டு என்னால் இங்கிருந்து போக முடியும்? நாம் அவனை திரும்பப் பெற்றாக வேண்டும்," என்று தர்மன் பதிலளித்தான். அந்த விளையாட்டின்மீது அவனுக்கு இருந்த போதை அவனுடைய கண்களில் மின்னியது. அவனுடைய கைகள் நடுங்கின. ஆனால் தர்மன் இப்போது யாருடைய அறிவுரையையும் செவிமடுக்க முடியாத நிலையை எட்டியிருந்தான். அவன், "நான் இப்போது சகாதேவனைப் பணயம்

வைக்கிறேன்,” என்று கூறியபடியே பகடைகளை உருட்டினான். அதில் சகாதேவனையும் அவன் இழந்தான்.

அந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த கிருபர், அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், “முட்டாள்களே! ஓர் அன்னியன் பகடைகளை உருட்டிக் கொண்டிருக்கிறான். பரதகண்டத்தின் ஆட்சியாளர்களான நீங்கள் உங்கள் நாட்டை வைத்துச் சூதாடித் தோற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அபத்தத்தை உடனடியாக நிறுத்துங்கள்!” என்று கத்தினார்.

“சூதாடுவதில் எந்தத் தவறும் இல்லை. நம்முடைய புனித நூல்களில் அதற்கு அனுமதி இருக்கிறது. பகடை விளையாட்டில் ஈடுபடுவது ஓர் அரசனின் தர்மம்,” என்று தௌமியன் கூறினான். புனித நூல்களில் தனக்கு இருந்த மேன்மையான அறிவைத் தம்பட்டம் அடித்துக் கொள்வதிலிருந்து அவனைத் தன்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. கிருபரை எதிர்ப்பதற்கு அவனுக்கு அரிதாகவே வாய்ப்புக் கிடைத்தது. அவனும் கிருபரும் ஒருவரையொருவர் பார்த்து முறைத்தனர்.

கிருபர் சிரித்தார். பகடைகள் மீண்டும் மீண்டும் உருட்டப்பட்டபோது, “முட்டாள்களே! கிறுக்கர்களே!” என்று அவர் தொடர்ந்து முணுமுணுத்துக் கொண்டே இருந்தார். பகடைகள் அதற்குப் பிறகு ஒவ்வொரு முறை உருண்டபோதும் தர்மன் அர்ச்சுனனையும் பீமனையும் ஒவ்வொருவராகத் தொலைத்தான். பிறகு அவன் தன்னையும் இழந்தான். அவனும் அவனுடைய சகோதரர்களும் இப்போது துரியோதனனின் அடிமைகளாக ஆனார்கள்.

சகுனி தௌமியனை நோக்கித் திரும்பி, “மாபெரும் அறிஞரே, இந்துமத விதிகளின்படி, தன் அடிமைகள் என்ன ஆடைகளை அணிய வேண்டும் என்று தீர்மானிப்பதற்கான உரிமை ஓர் எஜமானனுக்கு இருக்கிறதா?” என்று கேட்டான்.

தௌமியன் நெளிந்தான், ஆனால் அவன் பதில் கூறியாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தான். “ஓர் எஜமானன் எதை விரும்புகிறானோ, அதைத்தான் அவனுடைய அடிமைகள் அணிய வேண்டும். ஆனால் . . .”

“நன்றி,” என்று கூறி, சகுனி தௌமியனை இடைமறித்தான். பிறகு அவன் துரியோதனனைப் பார்த்தான். பாண்டவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு அவன் வெளிப்படையாக துரியோதனனுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தான்.

ஒருசில நாட்களுக்கு முன்பு, தர்மனின் அரசவையில் துரியோதனன் கிட்டத்தட்ட நிர்வாணமாக நின்றபோது, ஒட்டுமொத்த உலகமும் அவனைப் பார்த்துச் சிரித்தது. இப்போது நிலைமை மாறியிருந்தது.

பாண்டவர்கள் அவனுடைய அடிமைகளாக ஆகியிருந்தனர். அவர்களை அவனால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். "உங்கள் ஆடைகளைக் களைந்துவிட்டு அங்கே போய் நில்லுங்கள்," என்று அவன் பாண்டவர்களுக்கு உத்தரவிட்டான். ஒட்டுமொத்த அவையும் அதிர்ச்சியில் உறைந்து போனது.

பாண்டவர்கள் தயங்கினர், ஆனால் தாங்கள் கீழ்ப்படிந்தாக வேண்டும் என்பதை அவர்கள் அறிந்தனர். ஒவ்வொருவராக, அவர்கள் தங்கள் ஆடைகளையும் அணிகலன்களையும் கழற்றினர். இறுதியில், அவர்கள் தங்கள் இடுப்புக் கச்சைகளுடன் நின்றனர். அவமானத்தால் அவர்கள் கூனிக் குறுகி நின்றனர். முன்பு அவர்களுடைய மகிழ்ச்சி எப்படி துரியோதனனைக் கொதிப்படையச் செய்திருந்ததோ, அதேபோல இப்போது கர்ணன் மற்றும் அசுவத்தாமனின் பரிகாசச் சிரிப்பு அவர்களுடைய காதுகளை நிரப்பியது. கர்ணனையும் அசுவத்தாமனையும் தொடர்ந்து கௌரவச் சகோதரர்கள் அனைவரும் உரக்கச் சிரிக்கத் தொடங்கினர்.

சகுனி துரியோதனனைப் பதற்றத்தோடு கவனித்துக் கொண்டிருந்தான். தன் மருமகன் இப்போது பாண்டவர்களைப் பழி வாங்கியிருந்ததால், அதில் திருப்தியடைந்து, அவர்கள் இழந்திருந்த எல்லாவற்றையும் பெருந்தன்மையுடன் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவானோ என்று சகுனி பயந்தான். எனவே அவன் விரைவாகத் தன் முக்கியக் காயை நகர்த்தினான். "தர்மா, கடைசி முறையாக உன் பகடைகளை வீசி, வேறு எதையேனும் நீ பணயம் வைக்க விரும்புகிறயா?" என்று அவன் கேட்டான்.

காந்தார இளவரசன் இப்போது தன்னைத் தன் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டிருந்ததை தர்மன் கவனிக்கத் தவறவில்லை. அவன் இப்போது ஓர் அடிமை. மக்கள் தங்கள் விருப்பம்போல அவனை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். சோதிடம் எப்படித் தவறாகப் போகும் என்று அவன் வியந்தான். தௌமியனும் மற்றப் புரோகிதர்களும் கூறியிருந்த அனைத்தையும் தான் ஒழுங்காகக் கடைபிடித்திருந்தும்கூட, துரியோதனன் எப்படி வெற்றி பெற்றான் என்று தர்மன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். "பணயம் வைப்பதற்கு என்னிடம் ஏதுமில்லை," என்று அவன் கூறியபோது, அவனுக்குத் தொண்டை அடைத்தது.

"தர்மா, நீ மிக உயர்வாக மதிக்கின்ற ஒரு பொக்கிஷம் உன்னிடம் இருப்பதை நீ மறந்துவிட்டாயா?" என்று கேட்ட சகுனி, தன் எதிரியை ஆச்சரியத்தோடு பார்த்தான். "அவளைப் பணயம் வைப்பதன் மூலம், நீ இழந்த எல்லாவற்றையும் உன்னால் வெற்றி கொள்ள முடியும். அவள்

உன்னுடைய அதிர்ஷ்ட தேவதை, இல்லையா? உன்னுடைய நிமித்தகர்களின் கணிப்பு ஒருநாளும் தவறாக இருக்க முடியாது. என்ன இருந்தாலும், சோதிடம் என்பது ஓர் அறிவியல். அதிர்ஷ்டம் இதுவரை உனக்குச் சாதகமாக அமையவில்லை. ஆனால் ஒரே முறை நீ சரியாக வீசினால், நீ இழந்தவற்றைத் திரும்பப் பெறுவதோடு மட்டுமன்றி, அஸ்தினாபுர சாம்ராஜ்யத்தையும் உன்னால் வெற்றி கொள்ள முடியும். அடுத்த முறை பகடைகள் எப்படி உருளும் என்று யாரால் கணிக்க முடியும்?"

"மாமா, அவன் பயப்படுகிறான்," என்று துச்சாதனன் கூறினான். குடி போதையில் இருந்த அவனுக்கு நாக்குக் குழறியது. அவன் ஏதோ யோசித்தவனாக, "பரிதாபமான அடிமை," என்று சேர்த்துக் கூறினான்.

தர்மனால் அந்த இகழ்ச்சியை அதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "நான் என் மனைவியைப் பணயம் வைக்கிறேன்," என்று அவன் மென்மையாகக் கூறினான். ஆனால் அவனுடைய இதயம் அவன் மார்பில் இடைவிடாது குத்திக் கொண்டிருந்தது.

அந்த வார்த்தைகள் அர்ச்சுனனை பயங்கரமாகத் தாக்கின. யாரோ தன் முகத்தின்மீது ஓங்கிக் குத்தியதுபோல் அவன் உணர்ந்தான். இவ்வாறு செய்வதற்கு தர்மனுக்கு என்ன துணிச்சல்? தன் திறமையாலும் வீரத்தாலும் திரௌபதியை வெற்றி கொண்டவன் தான்தான் என்று அர்ச்சுனன் தன் தொண்டை கிழியக் கத்த விரும்பினான். தர்மன் தன் நடவடிக்கையைப் பலருக்குப் புரியாத புனித நூல்களின் அடிப்படையில் நியாயப்படுத்தி, வெறுமனே அவர்களுடைய தாயின் விருப்பத்தை நிறைவேற்றியிருந்தான். திரௌபதியைப் பணயம் வைத்து இத்தகைய ஆபத்தான விளையாட்டுக்களை விளையாடுவதற்கு அவனுக்கு என்ன உரிமை இருந்தது என்று அர்ச்சுனன் தன் சகோதரனிடம் கேட்கத் துடித்தான். ஆனால், தன் முன்னால் மனமொடிந்து நின்ற தன் சகோதரனைப் பார்த்தபோது, அந்தக் கொடூரமான கேள்வியை அர்ச்சுனனால் அவனிடம் கேட்க முடியவில்லை.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப்போல, "தர்மா, உங்கள் ஐவருக்கும் பொதுவான மனைவியைத்தானே நீ பணயம் வைக்கிறாய்?" என்று சகுனி மென்மையாகக் கேட்டான். பாண்டவர்கள் யாரும் இதற்கு பதில் கூறவில்லை.

அரசவையில் நடந்து கொண்டிருந்ததை விதுரனால் அதற்கு மேலும் மௌனமாக வேடிக்கைப் பார்க்க முடியவில்லை. அவன் பீஷ்மரிடம், "மேன்மை பொருந்தியவரே, நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன் தயவு செய்து இந்த ஆட்டத்தை நிறுத்துங்கள்," என்று கூறினான்.

ஆனால் முடியாது என்று கூறும் விதமாக பீஷ்மர் தன் தலையை

ஆட்டிவிட்டு, "ஒருவன் முட்டாளாக இருந்தால், கடவுளால்கூட அவனைக் காப்பாற்ற முடியாது. ஒரு சூதாடியை நம்பி ஒரு சாம்ராஜ்யத்தை எப்படி நம்மால் ஒப்படைக்க முடியும்? இந்த விளையாட்டில் கலந்து கொள்ள வேண்டும் யாரும் அவனைக் கட்டாயப்படுத்தவில்லை. அவன் தன் பேராசையால் விளையாடினான். அதற்கான விலையை அவன் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறான். தகுதியற்றவர்களைக் களையெடுப்பதற்கு இயற்கை பயன்படுத்தும் வழி அது. இதில் நீ குறுக்கிடாதே," என்று கூறினார்.

"குருவே," என்று சகுனி தௌமியனை மீண்டும் அழைத்தான். "இந்த அடிமை தன் மனைவியைப் பணயம் வைக்க விரும்புகிறான். அவள் அவனுடைய தம்பிமார்களின் மனைவியும்கூட. ஒருவனால் தன் மனைவியைப் பணயம் வைக்க முடியுமா? புனித நூல்கள் இது பற்றி என்ன கூறுகின்றன?"

சபிக்கப்பட்ட அந்த இடத்திலிருந்து தௌமியன் தப்பி ஓடிவிட விரும்பினான். ஆனால் சகுனியின் கேள்விக்குத் தான் விடையளிக்காவிட்டால், தன் மரியாதையை இழக்க நேரிடும் என்பதை அவன் அறிந்திருந்தான். "ம்ம்ம் . . . ஒருவன் மிக அவலமான சூழ்நிலையில் இருந்தால், அவன் தன் வீட்டையும் மனைவியையும் குழந்தைகளையும் பசுக்களையும் அந்த வரிசைப்படி விற்கலாம், அடகு வைக்கலாம், அல்லது பணயம் வைக்கலாம். சுதந்திரத்திற்கான உரிமை ஒரு பெண்ணுக்குக் கிடையாது. ஏனெனில், அவள் தன் கணவனின் சொத்து. ஆனால் . . ."

"நன்றி," என்று கூறிவிட்டு, சகுனி தௌமியனுக்குத் தலை வணங்கினான்.

தர்மன் தன் மணிமுடியை இழந்தது குறித்து தௌமியனுக்கு எந்த அக்கறையும் இருக்கவில்லை. அது ஒரு தற்காலிகப் பின்னடைவுதான். ஓர் ஆட்சியாளன் போனால், இன்னொருவன் அவனுடைய இடத்தை நிரப்புவான். அரசர்கள் புரோகிதர்களின் கைகளில் வெறும் பொம்மைகளே. இப்போது தௌமியனின் கைப்பாவை பயனற்றதாக ஆகியிருந்தான். அரசியல் விளையாட்டைத் தொடர்வதற்கு இன்னொரு கைப்பாவையைக் கண்டுபிடிப்பதற்கான நேரம் வந்துவிட்டிருந்ததாக தௌமியன் கருதினான். எனவே, தன்னிடம் மேலும் அதிகமான விளக்கங்கள் எதையும் யாரும் கேட்டுவிடக்கூடாது என்று பிரார்த்தித்தபடியே, அங்கு நடந்தேறிக் கொண்டிருந்த நாடகத்தை அவன் தொடர்ந்து ஆர்வத்தோடு பார்த்தான். மௌனம் காப்பதுதான் தனக்கு நல்லது என்று அவன் கருதினான்.

“நாங்கள் உன்னுடைய பணயத்தை ஏற்றுக் கொள்கிறோம்,” என்று சகுனி கூறினான்.

கிருபர் மீண்டும் சிரித்து எல்லோருக்கும் எரிச்சலூட்டினார். உண்மையில் ஒரு முட்டாளை யாராலும் காப்பாற்ற முடியாது என்று அவர் நினைத்தார்.

“பன்னிரண்டு!” என்று சகுனி உரத்தக் குரலில் அழைத்தான்.

“எட்டு,” என்று தர்மன் ஒரு நடுக்கமான குரலில் கூறினான்.

அந்தப் பகடைகள் காட்டுமிராண்டித்தனமாக உருண்டபோது தர்மன் மனதாரப் பிரார்த்தித்தான். ஆனால் அவனுடைய வார்த்தைகள் வீணாயின. அவனுடைய கழுத்தில் இருந்த மந்திரத் தாயத்திற்கும், சகுனி முப்பது வருடங்களாக அர்ப்பணிப்புடன் வளர்த்து வந்திருந்த திறமைக்கும் இடையேயான போட்டியில், திறமை மாபெரும் வெற்றி பெற்றது.

“ஆஹா, திரௌபதி இப்போது எங்களுக்குச் சொந்தம்,” என்று சகுனி வெற்றிக் களிப்புடன் கூறினான். துச்சாதனன் ஆர்வத்தோடு எழுந்தான், ஆனால் குடி போதையால் அவனுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது.

“குருவே, ஓர் அடிமை எந்த சாதியைச் சேர்ந்தவன்? தேரோட்டிக் குலத்தோரைவிட அவர்கள் மேலானவர்களா?” என்று சகுனி ஒரு போலிப் பணிவுடன் கேட்டான்.

தௌமியன் காந்தார இளவரசனைப் பார்த்து, “அடிமைகளுக்கு எந்தச் சாதியும் கிடையாது. அவர்கள் தீண்டத்தகாதவர்கள்,” என்று சோர்வாகக் கூறினான்.

“உண்மையாகவா!” என்று தௌமியனின் அறிவைப் புகழ்வதுபோலப் பாசாங்கு செய்த சகுனி, “அப்படியென்றால், இவர்கள் இப்போது தீண்டத்தகாதவர்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள், இல்லையா? அர்ச்சுனனும், பானை வயிறு கொண்ட பீமனும், அந்த வசீகரமான இரட்டையர்களும் அடிமைகள் என்று நீங்கள் கூறுகிறீர்கள், அப்படித்தானே? ஓ, தர்மனும் இப்போது ஒரு தீண்டத்தகாதவன்தான், இல்லையா? நாங்கள் இந்த இடத்தைப் பசுஞ்சாணத்தைக் கொண்டு சுத்தப்படுத்த வேண்டுமா? இப்போது இந்தப் பாண்டவர்களில் யாரேனும் கர்ணனைத் தொட்டுவிட்டால், அவன் நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டியிருக்கும்,” என்று கூறினான்.

தான் நேசித்த ஒரு பெண்ணால் அவமதிக்கப்பட்ட ஓர் ஆணால் மட்டுமே உணர முடிகின்ற வெறுப்போடும் வேதனையோடும், கர்ணன், “ஐந்து ஆண்களோடு தன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் அந்தப் பெண்ணை இங்கே இழுத்து வாருங்கள். நம்முடைய அடிமை

எப்படிப்பட்டத் தோற்றத்தைக் கொண்டவள் என்பதை நாம் பார்த்துவிடலாம்," என்று கூறினான். 'நான் ஒரு தேரோட்டியைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்,' என்ற திரௌபதியின் வார்த்தைகளும், அன்றொரு நாள் இந்திரப்பிரஸ்தத்தில் தர்மனின் அரண்மனையில் நிர்வாணமாக நின்ற துரியோதனனைத் தன் தேரில் வைத்து அங்கிருந்து கூட்டிச் சென்றுவிடுமாறு கூறி அவள் தன்னைக் கோபமூட்டியதும் கர்ணனின் நினைவுக்கு வந்தன.

துரியோதனன் கர்ணனை ஆச்சரியத்தோடு பார்த்தான். அவன் கர்ணனுக்காக வருந்தினான். கர்ணன் தன் இயல்புக்கு மாறாக இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டதற்கு, அவன் எவ்வளவு தூரம் துன்புற்றிருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். அப்போது துரியோதனன் அசுவத்தாமனின் கண்களைப் பார்த்தான். தாங்கள் எல்லை மீறிச் சென்றிருந்ததை உணர்த்தும் வகையில் அந்த பிராமணன் தன் தலையை ஆட்டினான்.

"மருமகனே, அவளுடைய பரிகாசச் சிரிப்பு உனக்கு மறந்துவிட்டதா? அன்று நீ நிர்வாணமாக நின்றதும், எல்லோரும் உன்னைப் பார்த்து எள்ளி நகையாடியதும் உனக்கு நினைவில்லையா?" என்று சகுனி துரியோதனனிடம் கிசுகிசுத்தான்.

சகுனியின் வார்த்தைகள் துரியோதனனின் மனத்தில் இருந்த நெருப்புக் கனல்களின்மீது எண்ணெயை ஊற்றின. அவை மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் துவங்கின. "திரௌபதியை இங்கே அழைத்து வாருங்கள்," என்று அவன் கட்டளையிட்டாள்.

இந்தப் பைத்தியக்காரத்தனத்தை உடனே தடுத்து நிறுத்துமாறு விதுரன் பீஷ்மரிடம் மீண்டும் மன்றாடினான். ஆனால் அவர் அசைந்து கொடுக்காமல் மௌனமாக அமர்ந்திருந்தார்.

* * *

திருதராஷ்டிரன் தன் செயலாளனின் மணிக்கைட்டை இறுக்கிப் பிடித்து, "சஞ்சயா, துரியோதனன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?" என்று கேட்டான்.

சஞ்சயன் எந்தவிதமான அபிப்பிராயத்தையும் வழங்காமல், வெறுமனே, "அரசே, உங்கள் மகன் உங்கள் தம்பி மகனின் மனைவியை அரசவைக்கு இழுத்து வர விரும்புகிறார்," என்று தன் வழக்கமான உணர்ச்சியற்றக் குரலில் கூறினான். தான் பார்த்ததை அப்படியே அந்தப் பார்வையற்ற அரசனிடம் விவரிப்பதுதான் அவன் வேலையே தவிர, நாட்டு விவகாரங்கள் குறித்தோ அல்லது தன்னைவிட அதிக முக்கியமானவர்களின் நடவடிக்கைகள் குறித்தோ தன் கருத்துக்களைத்

தெரிவிப்பது அல்ல.

அரசன் குழம்பிப் போனான். 'காந்தாரி எங்கே போய்விட்டாள்? அவள் இங்கே இருப்பது அவசியமாக இருக்கும்போது, கோவிலில் அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? துரியோதனன் ஏன் இதைச் செய்து கொண்டிருக்கிறான்? நிச்சயமாக அவனுடைய சகவாசம்தான் இதற்குக் காரணம். அவன் அந்தத் தேரோட்டிக்காக இதைச் செய்து கொண்டிருக்கிறான். அல்லது அந்த பிராமண இளைஞனுக்காக அவன் இதைச் செய்து கொண்டிருக்கக்கூடும். நான் இந்தக் கேலிக்கூத்தைத் தடுத்து நிறுத்தி, சகுனி என் மகனுக்காக வென்று கொடுத்துள்ள எல்லாவற்றையும் இழக்க வேண்டுமா? எல்லாம் தெரிந்தவரும், அறிவில் முதிர்ந்தவருமான பீஷ்மர் ஏன் மௌனமாக இருக்கிறார்?' என்று அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அவன் சஞ்யனின் மணிக்கட்டை மேலும் அதிகமாக இறுக்கிப் பிடித்து, பார்வையற்றத் தன் கண்களால் அந்த அரசவையை அளந்தான்.

* * *

காட்டின் எல்லையில் இருந்த ஓர் உயரமான பாறையின்மீது நின்று, தொலைவில் மறைந்து கொண்டிருந்த ஒரு புழுதி மண்டலத்தைப் பார்த்தபடி, "ஏகலைவனின் பாணியே தனி. துவாரகை எந்நேரத்திலும் வீழ்ந்துவிடும்," என்று தட்சகன் கூறினான். காளிங்கன் வழக்கம்போலத் தன் தலைவனுடன் ஒத்துப் போனன். ஏகலைவன், சால்வன், தந்தவக்கிரன் ஆகியோர் வழிநடத்திச் சென்ற படை துவாரகையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

அருகில் தன் கைத்தடியின்மீது சாய்ந்து நின்று கொண்டிருந்த வாசுகி, அந்தி சாய்ந்து கொண்டிருந்த அந்நேரத்தில், தன்னுடைய கிட்டப் பார்வைக் கண்களை இடுக்கிக் கொண்டு, தொடுவானத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான். அங்கு நிலவிய வெப்பம் வாட்டியெடுப்பதாக இருந்தது. வாசுகியின் கரடுமுரடான முகத்தின்மீது வியர்வை வழிந்தோடியது. "அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்," என்று அவன் திடீரென்று கத்தினான். வாசுகி சுட்டிக்காட்டிய திசையை நோக்கித் தட்சகனும் காளிங்கனும் திரும்பினர்.

தாங்கள் இருந்த திசையை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த ஒரு படையை மிக உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த வாசுகி, நாகர் தலைவனின் மகிழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. கிழக்குத் தொடுவானில் ஒரு புள்ளிபோலத் தோன்றிய அப்படை, விரைவில் ஒரு பெரிய குதிரைப் படையாக உருவெடுத்தது. தட்சகன் தன் வாளைக் காற்றில் மேலே உயர்த்திப் பிடித்தான். மறைந்து கொண்டிருந்த

கதிரவனின் செந்நிறக் கதிர்கள் அதன் முனையின்மீது பட்டு அதை ஒளிரச் செய்தன. அருகிலிருந்த புதர்களிலும் பாறைகளுக்குப் பின்னாலும் மறைந்திருந்த அவனுடைய ஆட்கள், அந்தச் சமிக்கையைப் புரிந்து கொண்டு எச்சரிக்கை அடைந்தனர். அவர்கள் தயாராகிக் கொண்டிருந்தது அவன் காதுகளில் விழுந்தது. தட்சகன் தன் வாளை உயர்த்திய நிலையில் அசையாமல் அப்படியே இருந்தான். தன் ஆட்கள் தன்னுடைய ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டிருந்ததை அவன் அறிந்தான். வாசுகியும் காளிங்கனும் அந்தப் பாறையிலிருந்து கீழே இறங்கினர்.

வேகமாகப் பாய்ந்து வந்து கொண்டிருந்த குதிரைப் படையைத் தன் வாளால் சுட்டிக்காட்டி, "காண்டவம் நினைவிருக்கிறதா?" என்று தட்சகன் கத்தினான். தன்னுடைய புரட்சிப் படையினரிடம் தான் உருவாக்கியிருந்த கோபத்தை நினைத்து அவன் புன்னகைத்தான். பிறகு அவன் ஜோடனையாகத் தன் இரண்டு கைகளையும் உயர்த்தி, "நம் புரட்சி வெல்க!" என்று உரக்கக் கத்திவிட்டு, அப்பாறையிலிருந்து கீழே குதித்துத் தன் மறைவிடத்திற்குள் உருண்டான். நூற்றுக்கணக்கான குரல்கள் அவனுடைய போர் முழக்கத்தை முழங்கின.

இருள் சூழத் துவங்கியபோது, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வில்லை நாணேற்றி, கிருஷ்ணனும் அவனுடைய ஆட்களும் தங்கள் இடத்தை நெருங்குவதற்காகக் காத்திருந்தனர்.

* * *

பலராமன் தன் பூசை அறையில் சம்மணமிட்டு அமர்ந்திருந்தான். அவனுடைய மனைவி ரேவதி, தன் இரண்டு வயது மகள் வல்சலையின் கூக்குரலைக் கண்டுகொள்ளாமல், மூடியிருந்த பூசை அறைக் கதவுக்கு வெளியே நின்றாள். 'கிருஷ்ணன் எங்கே போனான்? அவன் இங்கு இருந்திருந்தால் இந்த இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது,' என்று அவள் நினைத்தாள். தங்கள் தனிப்பட்ட அறைக்கு வெளியே யாதவ மன்ற உறுப்பினர்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்ததை அவளால் கேட்க முடிந்தது. பலராமன் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்காக அவர்கள் காலையிலிருந்து அங்கு காத்திருந்தனர். தன் கணவன் மனரீதியான சித்தரவதைக்கு ஆளாகியிருந்ததை அவள் அறிந்தாள். அகிம்சையில் நம்பிக்கை கொண்ட, இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும்விடத் தன் மக்களை அதிகமாக நேசித்த பலராமனுக்கு, அத்தீர்மானத்தை மேற்கொள்வது மிகக் கடினமானதாக இருந்தது.

ரேவதி தன் மகளைத் தூக்கி, அவளை சமாதானப்படுத்த முயன்றாள். ஒரு சாதாரண நாளாக இருந்திருந்தால், அவள் தன்

குழந்தையைத் தூக்கிக் கொண்டு, சன்னலருகே சென்று, வெளியே தெரிந்த நகரக் காட்சிகளாலும் சத்தங்களாலும் அவளுடைய கவனத்தைத் திசை திருப்பியிருப்பாள். ஆனால் இன்று ஒரு சாதாரண நாளால்ல. காற்றில் ஏதோ ஒரு தீய அறிகுறி இருந்ததுபோலத் தெரிந்தது. வழக்கமாக மக்களின் நடவடிக்கைகளால் மும்முரமாக இருந்த வீதிகள் இப்போது வெறிச்சோடிக் கிடந்தன. துவாரகை முற்றுகையிடப்பட்டிருந்தது. ரேவதி தன் மகளுக்கு முத்தமிட்டுவிட்டு, அவளுடைய சிறிய விரல்களை மென்மையாக இழுத்து அவளைச் சிரிக்க வைக்க முயன்று கொண்டிருந்தாள். கோட்டையின் மறுமுனையில் ஒரு யானை பிளிறியது. இன்னொன்று அதற்கு பதிலளித்தது. வல்சலை தன் தாயின் கைகளிலிருந்து நழுவ முயன்றாள். அவளுக்கு யானைகள் என்றால் கொள்ளைப் பிரியம். யானைப் பாகன்கள் போருக்காகத் தங்கள் யானைகளைத் தயார்படுத்திக் கொண்டிருப்பர் என்று ரேவதி நினைத்தாள். போர் பற்றிய எண்ணமே அவளுடைய இதயத்தைச் சுக்குநூறாக்கியது.

அப்போது திடீரென்று பூசை அறையின் கதவு திறந்தது. தன் தண்டாயுதத்தைத் தன் தோளின்மீது தாங்கிப் பிடித்தபடி நின்று கொண்டிருந்த தன் கணவனைக் கண்டு ரேவதிக்கு ஒரு கணம் மூச்சுத் திணறியது. அவள் தன் கண்கள் முழுக்கக் கண்ணீருடன் அவனை நோக்கி ஓடினாள். “நீங்கள் அகிம்சையில் நம்பிக்கைக் கொண்டிருந்ததாகக் கூறினீர்கள். நீங்கள் எந்தவோர் ஆயுதத்தையும் இனி ஒருபோதும் தொடப் போவதில்லை என்று கூறினீர்கள். பிறகு ஏன் நீங்கள் இதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கூறி அவள் அழுதாள்.

பலராமன் தன் தண்டாயுதத்தைக் கீழே போட்டுவிட்டு, தன் மகளைத் தூக்கி அவளுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டான். வல்சலை அவனுடைய காதணிகளைப் பிடித்து இழுத்து மகிழ்ச்சியாக விளையாடினாள். பலராமன் தன் மனைவியைப் பார்த்து, “ரேவதி, மரியாதையான ஒரு மனிதனுக்கு வேறு என்ன வழி இருக்கிறது?” என்று கேட்டான்.

ரேவதி வல்சலையைத் தன் கணவனிடமிருந்து தூக்கிக் கொண்டாள். அவள் தன் கணவனின் பரந்த மார்பின்மீது தன் தலையைச் சாய்த்தபோது, அவன் அவளை இறுகத் தழுவிக் கொண்டான். பலராமனைத் தன் நோக்கத்திலிருந்து இப்போது எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை அவள் அறிந்தாள்.

“ரேவதி, நான் சண்டையிடவில்லை என்றால், அவர்கள் இந்நகரத்தை அழித்துவிடுவர். நான் ஒரு போரை விரும்பவில்லை,

ஆனால் யாதவர்களின் தலைவன் என்ற முறையில், என் மக்களை அந்த வேடுவனின் படையின் தயவில் என்னால் விட்டு வைக்க முடியாது. நான் போரையும் வன்முறையையும் வெறுக்கிறேன். ஆனால் நான் ஒரு கோழை அல்ல. அகிம்சை என்பது ஒரு வலிமைமிக்க நிலையாக இருக்க வேண்டும். அது கோழைத்தனத்தின் மானத்தை மறைப்பதற்கான ஒரு கந்தல் துணியாக இருக்கக்கூடாது. நாம் வெற்றி பெறக்கூடிய ஒரு நிலையை நாம் எட்டும்வரை, அமைதிப் பேச்சுவார்த்தைகளில் நான் ஈடுபட மாட்டேன். தனிப்பட்ட முறையில் நான் அகிம்சையை நம்புகிறேன். ஆனால் என் மக்களுடைய நலனில் அது குறுக்கிடக்கூடாது. ரேவதி, கடவுள் நம் எல்லோரையும் காப்பாற்றட்டும்."

அவன் அங்கிருந்து நடந்து சென்றதை அவள் கண்டாள். வல்சலை அவளிடமிருந்து நழுவித் தன் தந்தையின் பின்னால் ஓடினாள். அவன் குனிந்து, புன்னகை தவழ்ந்த அவளுடைய முகத்தின்மீது முத்தமிட்டான்.

"நீங்கள் ஏன் உங்கள் கவசத்தை அணியாமல் போகிறீர்கள்?" என்று கேட்டு ரேவதி அழுதாள். அவளுடைய இதயம் அவளுடைய நெஞ்சில் ஒரு கனமான கல்லைப்போல உணர்ந்தது.

"பொய்யான பாதுகாப்பில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் என்னுடைய நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்திருந்தால், என் மக்களை நான் உண்மையிலேயே நேசித்திருந்தால், நம் கோட்டைக் கதவுகளுக்கு வெளியே நின்று நம் ரத்தத்தைக் குடிப்பதற்கு வெறியோடு காத்து நிற்கின்ற அந்த வீரர்களின் கோபத்தைச் சம்பாதிப்பதற்கு நான் ஒருபோதும் எதுவும் செய்திருக்காவிட்டால், நான் உயிரோடும் வெற்றிகரமாகவும் திரும்பி வருவேன். எதுவும் என்னைத் தொடாது."

ரேவதி பலவீனமாக உணர்ந்தாள். தன் கண்ணீரின் ஊடாக அவளுக்கு எல்லாமே கலங்கலாகத் தெரிந்தது. 'கிருஷ்ணா, நீ எங்கே இருக்கிறாய்? நீ இங்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் ஏன் உன் சகோதரனைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டாய்?' என்று அவள் மௌனமாக அழுதாள்.

"வல்சலை, உன் தாயையும் உன் அகங்காரச் சகோதரர்களையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்," என்று பலராமன் வல்சலையிடம் கூறியதை ரேவதி கேட்டாள். தன் மகள் தன்னிடம் ஓடி வந்தபோது, அவன் அந்த அறையின் கதவு வழியாக மறைந்ததை அவள் பார்த்தாள். அன்றைய காலைப் பொழுது முழுவதையும் தன் கணவன் எங்கே கழித்திருந்தானோ, இப்போது அதே பூசை அறைக்குள் அவள் நுழைந்து, அதன் கதவைத் தாழிட்டாள். அவளுடைய மகள் ஓடிச் சென்று பூசை மணியை எடுத்து விளையாடத் தொடங்கினாள். அதன் ஒலி

பொருத்தமற்றதாக அவளுடைய காதுகளுக்குக் கேட்டது. வெளியே உற்சாகக் குரல்களும் போர் முழக்கங்களும் அவளுக்குக் கேட்டன. துவாரகைக்கு ஏன் யுத்தம் வந்தது என்று அவள் யோசித்தாள். அவர்கள் அனைவரும் பிருந்தாவனத்தைவிட்டு வெளியேறியிருந்த பிறகு, இந்தக் கடற்கரையோர நகரில், வாழ்க்கை அமைதியானதாகவும் அருமையானதாகவும் இருந்திருந்தது. அவளுடைய கணவன் அரசியலுக்குள் நுழைந்து, யாதவர்களின் தலைவனாக ஆகும்வரை பிருந்தாவனத்திலும் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகத்தான் இருந்திருந்தது. தன் நாட்டிற்குச் சேவை செய்வதற்காகவும், ஒரு கச்சிதமான நகரத்தை உருவாக்குவதற்காகவும் தனக்கு அழைப்பு வந்தது என்ற வினோதமான யோசனை அவனுக்கு எங்கிருந்து வந்தது என்று அவள் வியந்தாள். 'ஆண்கள் ஏன் இப்படிப்பட்ட சாத்தியமற்றக் கனவுகளைக் கொண்டுள்ளனர்? அவர்களால் ஏன் தங்கள் குடும்பங்களோடு வெறுமனே அமைதியாக இருக்க முடியவில்லை? அவர்கள் ஆபத்தான விளையாட்டுக்களை விளையாடி, தங்கள் வீட்டிற்குத் துயரத்தையும் கண்ணீரையும் ஏன் கொண்டு வருகின்றனர்?' என்று அவள் தன் மனத்திற்குள் துடித்தாள்.

தரையின்மீது அவள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தாள். அந்த அறையில் இருந்த ராமன் மற்றும் அவனுடைய மனைவி சீதையின் சிலைகளின் முகங்களை அவள் ஏறிட்டுப் பார்க்க விரும்பவில்லை. ராமனும் அவனுடைய சகோதரனும் சீதைக்காகப் பல நகரங்களை அழித்திருந்தனர், பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்றிருந்தனர் என்பதை அவள் நினைத்துப் பார்த்தாள். ராமனின் சிலை ஆபத்தான முறையில் அவளுக்குத் தன் மைத்துனன் கிருஷ்ணனைப்போலவே தோன்றியது. 'வேடுவர்கள் ஏன் துவாரகையை அழித்துக் கொண்டிருந்தனர்? வேடுவர்கள் மற்றும் பிற துரதிர்ஷ்டசாலிகளின் நிலைமை குறித்து ஏதேனும் ஓர் ஆட்சியாளன் அக்கறை கொண்டிருந்தான் என்றால், அது பலராமன்தான். அவன் ஒருவன்தான் அவர்கள்மீது உண்மையிலேயே கரிசனம் கொண்டிருந்தான். ஆனால் பதிலுக்கு அவர்கள் அவனுடைய நகரத்தின்மீது போர் தொடுத்துக் கொண்டிருக்கின்றனர்,' என்று அவள் விரக்தியடைந்தாள். ரத்தச் சிதறலைத் தன் வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்திருந்த அந்த வேடுவத் தலைவனை அவள் வெறுத்தாள், அவனைச் சபித்தாள். கிருஷ்ணன் விரைவில் வராவிட்டால், எல்லாம் அழிந்துவிடும் என்பதை அவள் அறிந்தாள்.

கோட்டையின் பிரம்மாண்டமான கதவுகள் கிரீச்சொலியுடன் திறந்ததும், தன் கணவனின் படையினரிடமிருந்து 'ஹர ஹர மகாதேவா'

என்ற உரத்த முழக்கங்கள் எழுந்ததும் அவளுடைய காதுகளில் விழுந்தபோது, அவள் தன் கண்களை மூடிக் கொண்டு, குளிரான பளிங்குத் தரையின்மீது தன் கன்னத்தைப் பதித்தாள். அவளுடைய குழந்தை கள்ளங்கபடமின்றி இன்னும் அந்த மணியோடு விளையாடிக் கொண்டிருந்தாள். அக்குழந்தை, சிலைகளுக்கு முன்னால் இருந்த மலர்களை எடுத்து, பூசை செய்வதுபோல அவற்றின் பாதங்களில் ஒவ்வொன்றாக எறிந்தாள். குரங்குக் கடவுளான அனுமான் அவளைப் பெரிதும் கவர்ந்தான். எனவே, சிறந்த மலர்களை அவள் அவனுடைய பாதங்களில் எறிந்து கொண்டிருந்தாள். சன்னலுக்கு வெளியே எழுந்த போர் முழக்கங்கள் உச்சஸ்தாயியை எட்டி, பிறகு மெல்ல மெல்லத் தேய்ந்தன . . .

* * *

தெற்கில், தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசர்கள், மெலிந்து போயிருந்த ஒரு முதியவனின் படுக்கையைச் சுற்றி நின்றனர். கர்ணனின் பழைய எதிரியான உதயன் இப்போது சேர நாட்டின் அரசனாக இருந்தான். அவனுடைய முடிசூட்டு விழாவிற்குத்தான் சக்திவாய்ந்த அசுர அரசர்கள் அனைவரும் முசிறியில் கூடியிருந்தனர். அவர்களுடைய குரு பரசுராமன் இன்னும் தன் நீண்ட உணர்விழந்த நிலையிலிருந்து முற்றிலுமாக மீள வேண்டியிருந்தது. ஆனால் பரசுராமன் கண்விழித்துவிட்டிருந்ததாகவும், உயிர் வாழ்வதற்குரிய அடையாளங்கள் அவனிடம் தென்பட்டதாகவும் மருத்துவர்கள் கூறியபோது, தென்னக அரசர்கள் அவனுடைய படுக்கைக்கு விரைந்திருந்தனர்.

பரசுராமன் வலியோடு தன் கண்களைத் திறந்தான். அரசர்கள் அனைவரும் நிம்மதிப் பெருமூச்செறிந்தனர். உதயன் பரசுராமனை நோக்கி முன்னால் வந்தான். பரசுராமனின் கண்ணாடி போன்ற கண்கள் அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தன. பரசுராமன் எதையோ கூற முயற்சித்துக் கொண்டிருந்தான். புதிதாக முடிசூட்டப்பட்டிருந்த அரசன் உதயன், தன் இதயத்தில் மகிழ்ச்சி பொங்கத் தன் குருநாதரின் அருகில் சென்றான். 'இங்கு இருக்கும் எல்லா அரசர்களையும் விட்டுவிட்டு, தன்னுடன் பேசுவதற்கு அவர் முதலில் என்னைத் தேர்ந்தெடுத்திருப்பது எனக்குக் கிடைத்த ஆசீர்வாதம்,' என்று உதயன் நினைத்தான். தன் குருநாதர் என்ன கூற முயற்சித்துக் கொண்டிருந்தார் என்று கேட்பதற்கு அவன் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. ஆனால் பரசுராமன் கிசுகிசுப்பான குரலில் கூறிய வார்த்தைகளை அவன் புரிந்து கொண்டபோது, அவனுடைய முகம் நள்ளிரவைப்போல இருண்டது.

“கர்ணா . . . என் கர்ணன் எங்கே? நான் என் கர்ணனைப் பார்க்க விரும்புகிறேன்,” என்று பரசுராமன் முணுமுணுத்தான்.

அங்கிருந்த அரசர்கள் அனைவரும் பெருங்கோபம் கொண்டனர். தென்னகத்தின் மாபெரும் அரசர்கள் பரசுராமனுடைய படுக்கையைச் சுற்றி நின்றபோது, குருவின் வார்த்தைகள், தங்கள் அனைவரையும் ஏளனப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்த அந்தத் தேரோட்டியைப் பற்றியதாக இருந்தது அவர்கள் அனைவரையும் கேலிக்குரியவர்களாக ஆக்கியது. தங்கள் மருந்துகள் மூலம் தங்கள் குருவைப் பைத்தியக்காரனாக ஆக்கியிருந்த மருத்துவர்களைத் திட்டிக் கொண்டே அவர்கள் அந்த அறையைவிட்டு வெளியேறினர்.

“கர்ணனை நாம் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று குருநாதர் விரும்புகிறார் போலும். அந்தக் கயவன் கர்ணனுக்கு நாம் ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்,” என்று வாதாபி அரசன் கூறினான்.

இந்த யோசனை காட்டுத்தீயைப்போலப் பரவியது. தங்கள் குருநாதர் பழி வாங்க விரும்பியதாக அவர்கள் நினைத்தனர். அந்தத் தாழ்ந்த சாதிக்காரனை, அந்த ஆள்மாறாட்டக்காரனைத் தெற்கே இழுத்து வந்து, அவனை ஓர் எடுத்துக்காட்டாக ஆக்க வேண்டும் என்று அவர்கள் துடித்தனர். அவர்களிடையே இருந்த வயதான கலிங்க அரசன், எச்சரிக்கையாகச் செயல்படும்படி எல்லோருக்கும் அறிவுறுத்தினான். ஆனால் தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசர்களிடையே இளைஞர்கள் ஏராளமானோர் இருந்தனர். யாரும் கலிங்க அரசனின் சுவாரசியமற்ற அறிவுரையைச் செவிமடுக்க விரும்பவில்லை.

“அந்தத் தேரோட்டியைக் கண்டோ, அல்லது அவனுடைய நண்பன் துரியோதனனைக் கண்டோ, அல்லது அந்தக் கிழவன் பீஷ்மனைக் கண்டோ உங்களில் யார் பயப்படுகிறீர்கள்?” என்று உதயன் கேட்டான். பெருமிதம் கொண்ட அந்த அரசர்களின் பலவீனமான அகங்காரத்தைத் தூண்டுவதற்கு அது போதுமானதாக இருந்தது. அரசவையில் கோப முணுமுணுப்புகள் எழுந்தன.

“அஸ்தினாபுரம் வெகுதொலைவில் உள்ளது. இத்தகைய நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்வதைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் அளவுக்கு நம் கருவூலங்கள் நிரம்பி வழிகின்றனவா?” என்று கலிங்க அரசன் கேட்டான். கலிங்க சாம்ராஜ்யமானது கூட்டமைப்பின் வடகோடியில் இருந்ததால், ஏதேனும் தவறாகப் போனால், தன் நாடும் தன் மக்களும்தான் முதலில் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று அவன் கவலைப்பட்டான்.

அரசனின் எச்சரிக்கைக்கான காரணங்கள் உதயனுக்குப் புரிந்தன. அவன் கலிங்க அரசனுக்கு அருகில் நகர்ந்து, "மேன்மை பொருந்தியவரே, அதற்குத்தான் நாம் வரிகளை வைத்திருக்கிறோம். தர்மத்திற்காக மக்கள் அதிகமான வரிகளைச் செலுத்தத் தயாராக இருப்பார்கள். நம் குருவிற்கு நாம் அதையாவது செய்ய வேண்டாமா? சரி எது, தவறு எது என்று நமக்குக் கற்றுக் கொடுத்த அவருக்குச் சேவை செய்வதற்கு இது நாம் கொடுக்கின்ற மிகச் சிறிய விலைதான். அந்தத் தேரோட்டி நம் எல்லோரையும் அவமானப்படுத்தினான், ஆனால் நாம் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டோம். இப்போது நம் குரு அவனைக் கொண்டு வரும்படி நம்மிடம் கேட்கிறார். அகங்காரம் கொண்ட அந்தத் தேரோட்டியை நாம் எப்படியாவது பிடித்தே தீருவோம் என்று விஷ்ணுவின்மீது நான் சத்தியம் செய்கிறேன்," என்று முழங்கினான்.

கலிங்க அரசன் தயங்கினான். உதயன் அவனைத் தீவிரமாகப் பார்த்தான். கர்ணனுக்குத் தான் கொடுத்திருந்த கவசத்தைப் பற்றி அந்த முதியவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததை உதயனால் பார்க்க முடிந்தது. கர்ணனின் தகுதியை சூரியக் கடவுள் தவறாகக் கணித்திருந்தாரோ என்று அவன் வியந்து கொண்டிருக்கக்கூடும் என்று உதயன் நினைத்தான். உடனடியாகச் செயலில் இறங்காவிட்டால், அந்த ஆணவக்காரக் கர்ணனைப் பழி வாங்குவதற்கான வாய்ப்பைத் தான் இழந்துவிடுவோம் என்பதை உதயன் உணர்ந்தான். கர்ணன் பல வருடங்களுக்கு முன்பு உதயனின் மனத்தில் பற்ற வைத்திருந்த பழி எனும் நெருப்பு இன்னும் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது.

"வாமனமூர்த்தி பகவான் கோவிலில் இருந்து புனித விளக்கை எடுத்து வாருங்கள்," என்று உதயன் உத்தரவிட்டான். சேவகர்கள் அதைக் கொண்டு வர உடனடியாக அங்கிருந்து ஓடினர். அவர்கள் அந்த விளக்கைக் கொண்டு வந்தபோது, உதயன் அதை அந்த அரசவையின் நடுவே வைத்து, அதை ஏற்றினான்.

புரோகிதர்கள் புனித மந்திரங்களை உச்சரித்தபோது, தென்னக ராஜ்யங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசர்கள் ஒவ்வொருவராக முன்னால் வந்து, தங்கள் உள்ளங்கைகளை அந்த விளக்கின் மேலாக வைத்து, கர்ணனைச் சிறைப்பிடித்து அவனைத் தரதரவென்று இழுத்து வந்து பரசுராமனின் பாதங்களில் போடுவதாக மதத்தின் பெயரிலும் தர்மத்தின் பெயரிலும் ஒரு சபதம் செய்தனர். கூட்டமைப்பின் மாபெரும் நகரங்களுக்குத் தூதுவர்கள் தங்கள் குதிரைகளின்மீது விரைந்தனர். அவர்கள் எல்லோரும் ஒரே ஒரு செய்தியைத்தான் சுமந்து சென்றனர்: தென்னகக் கூட்டமைப்பில் உள்ள அரசுகள் தம் படைகளைக் கூட்டமைப்பின் அரசர்கள் குழுவின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று

பரசுராமர் கட்டளையிட்டுள்ளார். அஸ்தினாபுரத்தின்மீது படையெடுப்பது, வடக்கத்திய அரசுகளை நிர்மூலமாக்குவது, தேரோட்டிக் குலத்தவனான கர்ணனைச் சிறைப்பிடித்து இழுத்து வந்து நம் குருவான பரசுராமரின் காலடியில் தள்ளுவது ஆகியவையே இந்தச் சிறப்புக் குழுவின் நோக்கம்.

உதயன் சேரக் கோட்டையின் அருகே அணிவகுத்துக் கொண்டிருந்த வீரர்களைப் பார்த்தபடி, "கர்ணா, இப்போது உன்னால் எங்கே ஓட முடியும் என்று நான் பார்த்துவிடுகிறேன்," என்று தனக்குள் சிரித்துக் கொண்டான். அவனைச் சுற்றிச் செண்டைகள் பலத்தச் சத்தத்துடன் முழங்கி, அவன் நின்ற இடத்தை அதிர வைத்தன. இந்த நாளைப் பார்ப்பதற்குத் தன் தந்தை இல்லாமல் போனது குறித்து அவன் மகிழ்ந்தான். அந்த வயதான கலிங்க அரசனைப்போலவே, எச்சரிக்கையாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்குமாறு அவரும் அறிவுறுத்தியிருப்பார் என்று உதயன் நினைத்தான். அந்தத் தேரோட்டியை எதிர்த்துச் சண்டையிடுவதற்கான நேரம் அவனுக்கு இப்போது வாய்த்திருந்தது. தன்னைத் தடுத்து நிறுத்த எதையும் தான் அனுமதிக்கப் போவதில்லை என்று அவன் உறுதி பூண்டான்.

* * *

அரசவையில் பகடையாட்டத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது என்று புரிந்து கொள்ள முயற்சித்தபடி, பானுமதி, சுபத்திரையுடனும் திரௌபதியுடனும் தங்கள் குழந்தைகளுடனும் தன் அறையில் அமர்ந்திருந்தாள். உற்சாகக் கைதட்டல்கள் மற்றும் வருத்தமான குரல்களின் லேசான ஒலிகள் அவள் காதுகளை எட்டின. கீழே அரங்கேறிக் கொண்டிருந்த நாடகத்தைப் பற்றி எதுவும் தெரியாமல், திரௌபதியும் சுபத்திரையும் ஒருவரோடு ஒருவர் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். தங்கள் குடும்பத்து ஆண்களைப் பற்றி எப்படி அவர்களால் இவ்வளவு சாதாரணமாகப் பேசிக் கொள்ள முடிந்தது என்று பானுமதி வியந்தாள். தர்மன் மிகவும் சலிப்பூட்டுபவன் என்றும், நகுலனும் சகாதேவனும் மிகவும் வசீகரமானவர்கள் என்றும், பீமனை ஏவி எந்த வேலையையும் தன்னால் சாதித்துக் கொள்ள முடியும் என்றும் திரௌபதி விவரித்துக் கொண்டிருந்தாள். கர்ணனைப் பற்றியும் அவர்கள் பேசினர். அவன் மட்டும் ஒரு சத்திரியனாக இருந்திருந்தால், அவனைத்தான் தாங்கள் இருவரும் தேர்ந்தெடுத்திருப்போம் என்று அப்பெண்கள் தங்களுக்கிடையே கூறிக் கொண்டனர். தங்களுடைய பொதுக் கணவனான அர்ச்சுனனைப் பற்றி விவாதிப்பதை மட்டும் அவர்கள் தவிர்த்துவிட்டனர். ஒரே ஆண்மகனைப் பகிர்ந்து

கொண்டிருந்த இவ்விருவருக்கும் இடையே இருந்த தோழமையைக் கண்டு பானுமதி ஆச்சரியமடைந்தாள். பானுமதி துரியோதனனைத் திருமணம் செய்து இத்தனை வருடங்கள் ஆகியிருந்தும், தன் கணவன் விசுவாசமானவன் என்று அவளுக்குத் தெரிந்திருந்தும்கூட, துரியோதனன் சுபத்திரையைப் பார்த்தபோதெல்லாம் அவளால் தன் இதயத்தின் படபடப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

'அரசவை ஏன் திடீரென்று அமைதியாகிவிட்டது? அந்தக் கிறுக்கு பிராமணர் கிருபர் ஏன் இவ்வளவு சத்தமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார்?' என்று பானுமதி யோசித்தாள். அப்போது திடீரென்று அவளுக்குக் கேட்ட ஏதோ ஒரு சத்தம் அவளுடைய இதயத்தை உறைய வைத்தது. அவள் அதிர்ச்சியோடு திரௌபதியைப் பார்த்தாள். திரௌபதி இன்னும் சுபத்திரையுடன் மகிழ்ச்சியாக அரட்டையடித்துக் கொண்டிருந்தாள். மரப் படிக்கட்டுகள் கிரீச்சிட்டச் சத்தம் பானுமதிக்கு இப்போது தெளிவாகக் கேட்டது. யாரோ தன் அறையை நெருங்கிக் கொண்டிருந்த சத்தம் அவள் காதுகளுக்குக் கேட்டது. அப்போது அவளுடைய அறைக் கதவுக்கு வெளியே காலடிச் சத்தங்கள் திடீரென்று நின்றுவிட்டன. பானுமதி நிம்மதிப் பெருமூச்செறியவிருந்த நேரத்தில், யாரோ அக்கதவை மென்மையாகத் தட்டினார்கள். திடீரென்று ஏற்பட்ட பயத்தில் அவள் நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ கொடுமையான ஒன்று நிகழவிருந்ததாக அவளுடைய இதயம் அவளிடம் கூறியது. இப்போது அந்த அறைக் கதவு பலமாகத் தட்டப்பட்டது. பானுமதி தன் கண்களை மூடிக் கொண்டு, தன் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள். வெளியில் இருந்தவர்கள் இப்போது அக்கதவை மீண்டும் மீண்டும் ஓங்கி இடித்தனர். இந்த பலத்தச் சத்தத்தைக் கேட்டு வீதியில் ஒரு குதிரை கனைத்தது. பானுமதியின் கண்களிலிருந்து முதல் கண்ணீர்ச் சொட்டுக்கள் அவள் மடிமீது விழுந்தன.

* * *

தன் மனைவி உட்பட, எல்லாவற்றையும் சூதாடி இழந்திருந்த முட்டாளைக் காந்தார இளவரசன் சகுனி பார்த்தான். தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பட்டத்து இளவரசனையும் அவன் பார்த்தான். இளவரசனின் முகம் வெளிறிப் போயும் கவலை தோய்ந்தும் இருந்தது. தான் எதிர்கொண்டிருந்த ஒவ்வோர் அவமானத்தையும் இரண்டு மடங்காகத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருந்த அந்தத் தேரோட்டியின் பக்கம் சகுனி திரும்பி, அவனுடைய முகத்தைப் பார்த்தான். அங்கு நடந்து கொண்டிருந்த எதிலும் குறுக்கிட மறுத்து,

உணர்ச்சியற்ற முகத்துடன் கல்லாக அமர்ந்திருந்த அரசாட்சிப் பொறுப்பாளரை அவன் பார்த்தான். பரதகண்டத்தை ஆள்வதாகப் பாசாங்கு செய்து கொண்டு, அஸ்தினாபுரத்தின் அரியணைமீது ஊமையாக அமர்ந்திருந்த தன் மாமனை அவன் பார்த்தான். திரௌபதியின் அலறலைக் கண்டுகொள்ளாமல் அவளுடைய தலைமுடியைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு எக்கணத்திலும் அந்த அவைக்குள் நுழையவிருந்த துச்சாதனனை எதிர்பார்த்து, அந்த அன்னியன், அரசவையின் வாயிலைப் பார்த்தான். தங்கள் ஐவருக்கும் பொதுவான மனைவி எல்லோர் முன்னிலையிலும் துகிலுறிக்கப்படுவதைக் காணக் காத்துக் கொண்டிருந்த, ஆண்மையற்ற ஐந்து கணவன்மார்களையும் பார்த்து அவன் சிரிக்க விரும்பினான். நிகழ்ந்து கொண்டிருந்த சம்பவம் குறித்து எது சரி, எது தவறு என்று விவாதித்தபடி அமர்ந்திருந்த புரோகிதர்களை அவன் பார்த்தான்.

‘அப்பா, காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது,’ என்று சகுனி அற்பப் பெருமையுடன் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான். நெடுங்காலத்திற்கு முன்பு மாண்டுவிட்டிருந்த காந்தார அரசனின் எலும்புகளிலிருந்து செதுக்கப்பட்டப் பகடைகள், இன்னும் நீண்ட காலம் உருளவிருந்தன. விரைந்து வந்து கொண்டிருந்த பேரழிவை சகுனியால் தன் மனத்தில் காட்சிப்படுத்திப் பார்க்க முடிந்தது. அவனால் ரத்தத்தை நுகர முடிந்தது, மரணத்தையும் அழிவையும் பார்க்க முடிந்தது. மாபெரும் யுத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. சகுனி மகிழ்ச்சியில் தன் உள்ளங்கைகளை ஒன்றோடொன்று தேய்த்தான்.

அரசவையில் மயான அமைதி நிலவியது. எல்லோருக்கும் எரிச்சலூட்டும் வகையில் அரண்மனைக்கு வெளியே எங்கோ ஒரு தெருநாய் ஊளையிட்டுக் கொண்டிருந்த சத்தத்தையும், நாட்டின் தலைவிதியைப் பற்றித் தன் பாடல் மூலம் புலம்பிக் கொண்டிருந்த அந்த விகாரமான பிச்சைக்காரனின் பாட்டுச் சத்தத்தையும் தவிர, அங்கு வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. எல்லாமே கச்சிதமாக இருந்ததுபோலக் காந்தார இளவரசனுக்குத் தோன்றியது. இந்த நாட்டின் கதை முடிந்துவிட்டது என்று அவன் நினைத்தான். கொல்லப்பட்டத் தன் நாட்டு மக்களின் குரல்கள் தன்னைச் சுற்றி எதிரொலித்துக் கொண்டிருந்ததை சகுனியால் கிட்டத்தட்டக் கேட்க முடிந்தது. அவன் தன் நாட்டு மக்களோடு சேர்ந்து உரக்கக் கத்த விரும்பினான். ஆனால் வெற்றிக் களிப்பில் மிதப்பதற்கான தருணம் இதுவல்ல என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான். செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைகள் இன்னும் ஏராளமாக இருந்தன. நிச்சயமாக நடந்தே தீரக்கூடிய ஒன்றுக்காக அவன் காத்திருந்தான்.

பகடைகள் ஏற்கனவே உருட்டப்பட்டிருந்தன.

முதல் பாகம் நிறைவுற்றது